நாட்டுக்கோட்டை

வைசியம்

1915 ௵

நாட்டுக்கோட்டை வைசியரும்.

நான்முகமும் ஓர்வேண்டுகோளும்.

நெடிய கடலாலே சூழப்பட்ட மிக பெரிதான இப் பூமண்டலத்தின்கண் ாய கண்டங்களுள் நம்முடைய ஆசியா -த்தின் தென் திசையில், கிழக்கில் வங் ் குடாக் கடலையும், மேற்கில் அரபிக் லயும், வடக்கில் இமய மலையையும் கில் இந்து மகா சமுத்திரத்தையும் களாக உடையதும், எக்காலத்திலும் ுபடாத நீர்வள முள்ளதும், உருவத் மியதும் பெரியதுமான கங்கை, சிந்து, முதலிய பல நதிகளை யுடையதாயும், ்த சித்தாந்த சமரச நன்னிலைபெற்ற ச் சித்தர்கள் சூழாங் ...ங்களாய் செய்யப்படுவதாயும், அழகு வாய்ந்த ன் நெருங்கிய பூஞ் சோலைகளடர்ந்த , எத்தனை யாண்டுகள் வற்கடம் நிக என்றைக்கும் வற்றாத அருவிகளை தாயும், "அளக்கலாகா வளவும் ளுந் துளக்கலாகா நிலையுந்தோற்ற றப்பினும் வளந்தரும் வண்மையு கே" என்ற மாட்சியுட் பட்டதாயும் த்தான பருத்து நீண்டு உயர்ந்த மலைத் ர்களை யுடையதாயும், பூசார முள்ள , வாழை, பலா, மா, தெங்கு, கமுகு, முதலிய பலனுள்ள பெருந் தோப்பு சண்பகம், சந்தனம், பாதிரி முத நக்ஷங்களை நெருங்கி வண்டுகள் பல மலர்ச் சோலைகளையும், நறு மணமும் அழகிய நானாவித மலர்கள் ருக்குஞ் செடிகளிலும் கொடிகளி ம்மலர்களுக்கேற்ற பலவித வரு யுடைய சிறிய புள்ளினங்களையும். ா ரெவருங் களிக்கும்படி அம்மலர்க லூறும் மதுரத்தை யருந்த அருகே தயங்களில் மலர்கடோறும் பரந்து திரியும் வண்டினங்களையு முடைய அநேக நந்தன வனங்களையும், தாமரைத் தடாகங்களையும், நீர் நிறைந்த அல்லி, நீல முதலிய புட்பங் கள் மலர்கின்ற வோடைகளையும், ஏரி குள முதலிய பலநீர் நிலைகளையும், செந்நெல் முதலிய பலவிதப் பயிர்கண்மாறாது முப் போகமும் விளைகின்ற குறைவற்ற புலன் களை யுடையதாயும், மானிட தேகத்திற்கு மிகு அனுகூலித்த சீதோஷ்ணங்களை யுடைய தாயும், கனிவர்க்கங்களையும், தான்ய வகை யராக்களையும் ஏராளமாக வுடையதாயும், அரச மண்டபங்கள், விசித்திர மண்டபங் கள், விநோத மண்டபங்கள், சித்திரமண்ட பங்கள், நியாயஸ் தலங்கள், கல்விச் சாலை கள், ஆயுதச் சாலைகள், சிலம்பக் கூடங்கள் முதலிய பலவித நாகரீகங்க ளமைந்த வேலைப் பாடுகளுடைய பெரிது பெரிதான அநேக கட்டிடங்களையு முடைத்தான பல தலை நகரங்களையும், ஏனைய நாடு நகரங் களையு முடையதாயும், ஏராளமான மனிதர் கள் வசிக்கப்படுவதாயு முடைத்தான நமது இவ்விந்தியதேயத்துண் மிக்கப் பழமையும், மிக்கச் செல்வமும், மிக்கக் கீர்த்தியும், மிக் கத் தெய்வத் தன்மையும், மிக்க அலங்காரமு முடையதான பல நாடு நகரங்களை யுடைய தாயும், பாண்டியர்களாலும், உமா தேவியா ரது திருவவதாரமாகிய தடாதகைப் பிராட் டியாராலும், சோமசுந்தர மூர்த்தியாலும், உக்கிரப் பெருவழுதியாகிய குமாரக் கடவு ளாலும், உண்மையாகத் திருமுடிசூடி அர சாளப் பட்டதாயும், பல்லாயிரம் வருஷங் களாகப் பல்லாயிரம் புலவர் சிகாமணிக ளிருந்து பல்லாயிர நூல்களை யியற்றியும்

22159
Y5925-NWN17 N15

நான்முகமும் ஓர்வேண்டுகோளும்.

நாட்டுக்கோட்டை வைசியம்.

...யாயிருந்தும் ...மொழியான தமிழ்ப்
பாஷையை வளர்க்கப் பட்டதாயும், "சந்த
னப் பொதியச் செந்தமிழ் முனிவனுஞ்
சௌந்தர பாண்டியனெனுந் தமிழ் நாட
னுஞ் சங்கப்பலகையுந் தழைத்தினி தோ
ங்கு மங்கலப் பாண்டி வளநா டென்ப"
எனப் புகழப்பட்டதாயு முடைத்தான எம்
பாண்டி வளநாட்டின் கண்ணே மிகுந்த சிற்
றிறப்போடு, அறம், பொருள், இன்பம்,
வீடு என்னும் நான்கு புருஷார்த்தங்களோ
டும்பொருந்தி, பற்பல சீர் திருத்தங்களினும்
நானாவித நாகரீகங்களினும் முச்சகங்களும்
மெச்சத் தகுந்த வியாபார முறைமைகளினு
மளவிலாத் தேர்ச்சியடைந்தும், காலத்துக்
கேற்ப வியவுமாற்றலில் மீசுரமான ஆண்ட
வையுட் டங்கியும், தேசாபிமானம், பாஷாபி
மானம், மதாபி மானம், ஜனாபி மானம்,
ஜாதிய ஐக்கிய உணர்ச்சி, பொதுக் காரியத்
திலக்கரை, அடக்கமுள்ள நன் னடக்கை,
விடாமுயற்சி, தளர்ச்சியின்மை, மனோதைரி
யம், அன்பு, தயை, பொறை, ஆண்மை,
அடைந்தோரைக் காத்தல், இந்திய தேயத்
துட் பிறந்த எந்த மனிதரும் நம்மோடுடன்
பிறந்த நம் சகோதரரே யாமென்னும் உண்
மை யுணர்ச்சி, நம் நகரத்தாரெல்லாம் ஏகா
ங்கமான ஒரே குடும்பமாக வாழ்தல் வே
ண்டுமென்ற ஞாபக சக்தி, இன்னும் இவை
போன்ற பல விதமான நற்குணங்க ளாலே
யும் நிறையப்பெற்று அளவில்லாத வொண்
டு பூட்டித் தண்புகழ் நிறீஇ வாழ் நருமாயு
ம் நாட்டுக் கோட்டை வைசிய நகர கனதன
வான்களே! முத்தமிழானுஞ்சிறந்த வல்லு
நர்களே! ஆரியஞ் செந்தமிழாங்கில முதலிய
பல பாஷைகளினுந் தேர்ந்த சர்வ கலா
நிபுணர்களே! எந்நூலுந்தேர்ந்த மகா

இந்நூல் வரையப் புகுந்ததன்று. ...
வைதவரானும் பல சீர் திருத்த நாகரீ...
ரானும் யாமொரு தேர்ந்த வல்லேமு...
று என்றால் 1898-லிருந்து 1907-வ...
யாஞ்செய்த சில தேச யாத்திரையிலிரு...
நம்முடைய வகுப்பின் மாட்சிபற்றியே
சில விஷயங்களை நன்கு ஞாபகப் படு...
தல் வேண்டுமென்ற ஞாபக மொன்று...
பட்டது அதி னின்றும் இந் "நாட்டுக்கோ
ட்டை வைசியம்" என, எந்தவாற்...
சிறந்து நிறைந்த பெருந்தகையவர்க...
முடைய வகுப்பின் பொது மருட...
ந்து, அதற்குத்தக்கவாறு வேண்டும் அ...
யான பல பெரிய விஷயங்களை யெல்...
ஏதோ அடியே முடைய நுண்ணறி...
எட்டிய ஒருவாறு பாகு படுத்தி, இந்...
கேறக் குறைய ஒரு நாலைந்து வருஷ...
ளாய், முதியாக இடையேவிட்டு விடா...
னம் மூபன்று 120-அங்கங்களாக வ...
நம்முடைய வகுப்பின் பொதுவிற்கு இ...
யமையாது வேண்டுந் தக்க வோர் ...
லாக வரைந்து முடித்தேம். ...
பெற வேண்டு வனவும் 50-60-அங்...
வரை பாக்கி யிருக்கிறது. என்றால்,
துணைப் பெருது லொன்றை ஏககால...
அச்சேற்றிப் புத்தகங்க ளாக்கி வெ...
வதற்குப் போதிய கூடு ஷலிமை
யில்லை யாதல் பற்றி, மாதமொரு...
லாக வெளியிடக் கருதினேம், ஆ...
இதனைப் பார்வையிடும் நமது ...
கோட்டை வைசிய சிகாமணிகளா...
தன்பார்ந்த ஒவ்வொரு சகோதர...
"செய்யாமற் செய்த வுதவிக்கு வை...
வானகமு மாற்றலரிது" என்ற ...
திருவாக்கின்படி வருஷம் ஒன்று...
...வாயிய ... இரண்டு அ...

இந்நூல் பூர்த்தியாய் வெளிவருமாறு செய்
தருளல்வேண்டும். என தங்களின் மேலா
ன கனத்தைப் பிரார்த்திக்கின்றேம். நிற்க
சகோதரர்களே இந்நூல் முடிந்திருக்கிற
வரை எழுத்துக் குற்றம் சொற் குற்றம்
பொருட்குற்ற முதலியன வின்றித்தெளிவு
முதாரம், செறிவு முதலிய நற்குணங்களை
யமைத்து யாவர்க்கும் சுவை பயக்குமாறு
அணிபெறச் செய்து முடித் திருக்கிறே
மென்பதே அடியே முடைய கருத்தாம்.
எனினும் பொதுவாக மனித வர்க்கத்தா
ரெல்லாம் முக்குணவயத்த ரென்பது ஓர்
புறமிருப்பக் (கூடாவொழுக்கம்)அஃதாவது
கோபம், சோம்பல், நெடுந்துயில், பேரு
ண்டி, பொய் மறதி முதலியன வெல்லா மட
யேம்பால் நிறைந்துள்ளன வென்பதையும்.
செல்வத்தானும், கல்வியானும், அறிவா
னும், அனுபவத்தானும், நல்லார் கூட்டுற
வானும் மிகச் சிறியே மென்பதையும் எம்
மைத் தெரிந்தார் பலரும் ஒப்பத்தக்கதே
யாம் மீண்டும் "முற்று முணர்ந்தவ ரிலலை
மூழுவதூஉங் கற்றனுமென்று களியற்க"
என்ற ஞானவாக்கொன்று எம்முடைய
பெருக்கத்தை ஒருதலையாகக் கீழிருத்து
கிறது மீண்டுஞ் சற்றுக் கவனிக்கப் புகின்
எத்தனையோ தூரங் கற்றுத்தேர்ந்த வல்
லுநர்களாலே செய்யப்படும் நூற்களிடத்
துங் கூடச் சிற் சில பிழைகள் நிகழ்வது
இயற்கையாகவும் காணப்படுகிறது. ஆக
லின் எந்நூலும் ஒளியேமால் வரையப்
படுகிற இந்நூன்மிசை எத்தனையோ பிழை

கள் நிகழக்கூடும் அஃதொரு போர்சரியு
மும் ஆகாது ஆனால் அப்பிழைகள் ஒருங்
கும் பிறருக்கே விரைந்து புலப்படும். அதற்
காக எந்த மேதாவிகளையும் சித்தலைத்
காத்தனர் தன்மையை வகித்துக் கோடல்
வேண்டுமோயக் கேட்கவில்லை பின்னரென்
னையோவெனின்? அவ்வனம் புலப்படும்
பிழைகளை எடுத்துக் காட்டி அடியேற்கு
நேரிலோ அல்லது எழுத்து மூலமாயோ,
தெரிவித்தல் வேண்டுமாய் மனப்பூர்வமான
அஞ்சலியோடு மிகத்தாழ்மையாய்க் கேட்
டுக்கொள்கிறேம். அடுத்த பிரசுரத்தில் அப்
பிழைகளைத் திருத்தியும் இன்ன, இன்ன
பிழைகள் இன்னார் இன்னரால் காணப்பட்
டதென்பதையும் மிகத்தெளிவாய் அவர்க
ளுக்கும் தெற்றெனத் தெரிய... ...
சாஞ் செய்யப்படும் இயற்றுவிக்க லெ...
நது போற்றலென்னும் உத்தியின் பற்று...
கோடாத இந்நூன்மிசை வரும் விஷயங்கள்
அறம், பொருள், இன்பம் வீடென்னும்
நான்குமேயாம் இதுகாறும் அறமும் பொரு
ளுமாக அங்கம் 120-வரை பூர்த்தியாயிருக்
கிறது இயல் அங்கம் முதலியன வரவர
காணலாம் ஒருங்கே பூர்த்தியாய் வெளிவரு
மாறு எல்லாம்வல்ல இறைவனும் இதனைப்
பார்வையிடும் ஒவ்வொரு சகோதரர்களும்
திருவருள்புரிதல் வேண்டும்.

இங்ஙனம்,

நகரத்தார் அடிமை
ப. சோ. ஆண்டியப்பன்.

உ சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

நாட்டுக்கோட்டை வைசியம்.

முதலாவது அறப்பால். இறையியல் ௧-வது அங்கம் கடவுள்.

அகண்டாகார நித்த வியாபக சச்சிதானந்தப் பழம்பொருளெதுவோ? அதனையே அடியே முளத்திடை யிருத்தி இங்ஙனம், கடவுளென்னு மங்கலத்தை வரையத்தொடங்குவாம். அஃதாவது பகுபத வுறுப்புகளானுள் இடைநிலை, சாரியை, சந்தி, விகாரமாகிய நான்கு மின்றி, பகுதி, விகுதியென்னு மிரண் டுறுப்புகளானே முடிந்த பகுபதமென்றும், செய்தலென்னுந் தொழிற் பெயரடியாகப் பிறந்த செய் என்னும் பகுதியானது உள் என்னுந் தொழிற்பெயர் விகுதிபெற்று செய்யு ளென்றாயினாற்போல, கடத்த லென்னுந் தொழிற்பெயரடியாகப் பிறந்த கட என்னும் பகுதியானது உள் என்னுந் தொழிற் பெயர் விகுதிபெற்று கடவுள் என்றாயிற்றென்றும். ஆகவே கடவுள் என்பதன் பொருள் கடத்தலுடையதே அல்லது கடத்தலுடையவரே என்றும் அங்ஙனமாயின் அவர் தாம் எவரைக் கடந்தவர்? எவைகளைக் கடந்தவர்? என்றால் அவரோ! தேவரையுங் கடந்தவர், முனிவரையுங் கடந்தவர், உலகிலுள்ள யாவரையுங் கடந்தவர், அருவையுங் கடந்தவர், உருவையுங் கடந்தவர், ஊரையுங்கடந்தவர், பேரையுங் கடந்தவர், சிந்தையையுங் கடந்தவர், செயலையுங் கடந்தவர், வாக்கையுங் கடந்தவர், போக்கையுங் கடந்தவர், வரவையுங் கடந்தவர், குணத்தையுங் கடந்தவர், குறியையுங் கடந்தவர், ஒப்பையுங் கடந்தவர், உயர்வையுங் கடந்தவர், துன்பமுங் கடந்தவர், இன்பமுங் கடந்தவர், வேதங்களையுங் கடந்தவர், பூதங்களையுங் கடந்தவர், ஆதியையுங் கடந்தவர், அந்தத்தையுங் கடந்தவர். இங்ஙனமே கடவுள் எவரையும் எவைகளையுமே கடந்தவரெனச் சில மேதாவிகளும்,

2. உலகமாவது சித்தும் அசித்துமென இருவகைப் படும் பிரபஞ்சமாம். சித்து அறிவுடைய பொருள் அசித்து அறிவில்லாத பொருள் அசித்தென்றாலுஞ் சடமென்றாலும் பொருந்தும். உலகந்தோன்றி நின்று அழியுங் காரியமா யுள்ளது ஆகலின் உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தலென்னும் மூன்று தொழில்களையுஞ் செய்தற்கு ஒருகடவுள் இருக்கிறாரென்பது நன்றாக நிச்சயிக்கப் படுமென்றும் அக்கடவுள் என்று முள்ளவர், அவருக்குப் பிறப்புமில்லை, இறப்பு மில்லை அவரெங்கும் நிறைந்தவர், அவர் இல்லாத விடமு மில்லை, அவர் இருக்கு மோரிடமு மில்லை. அவரெல்லா மறிபவர், அவரறியாத தொன்று மில்லை, அவருடைய அறிவு இயற்கையறிவு ஒருவ ரறிவிக்க அறிபவ ரல்லர், அவர் எல்லாம் வல்லவர், அவரால் இயலாத கருமமொன்று மில்லை, அவர் அளவிடப்படாத ஆனந்த முடையவர், அவர் தம்முடைய அநுபவத்தின் பொருட்டு வேறொன்றையும் வேண்டுபவ ரல்லர், அவர் தம்வய முடையவர் ,பிறர்வயப் படுபவரல்லர், அவர் ஒப்பும் உயர்வு மில்லாதவர், அவரின் மேலானவரு மில்லை, அவருக்குச் சமானரு மில்லை, அவர் சகல லோகங்களுக்கும் சகல சமயங்களுக்கும் சகல ஆன்மகோடிகளுக்கும் ஒரே நாயகர் அவர் செய்யுந் தொழில்களு ளொன்றாயினு மவருடைய பிரயோசனத்தைக் குறித்ததன்று எல்லாம் ஆன்மகோடிகளுடைய பிரயோசனத்தைக் குறித்தவைகளேயாம் அவர் ஆன்மாக்களிடத்துள்ள கைமாறில்லாத அளவு கடந்த திருவருளே திருமேனியாக் உடையவர், அவர் பாண்மிசை நெய்யும் ஊன்மிசை யுயிரும், எண்மிசை எண்ணெயுமே, கதிர் மிசை யொளியும், எரிமிசைச் சூடும், மலர் மிசை நாற்றமும் போன்று இலகுவிலே விளங்கியும் விளங்காதும் நிற்பர் அவர் காமரூபமற்றவர், அவர் புண்ணியஞ்செய்த ஆன்மாக்களுக்கு இன்பத்தையும், பாவஞ் செய்த ஆன்மாக்களுக்குத் துன்பத்தையுங் கொடுப்பார். துன்பத்தைக் கொடுத்தலினவரை வன்கண்ணரென்று கொள்ளலாகாது தீமையைச் செய்த பிள்ளைகளை மாதாபிதாக்கள் தண்டித்தலும். சில வியாதிகாரர்களுக்கு வைத்தியர்கள் சத்திரமிட்டறுத்தலும் இருப்புக் கோல்காய்ச்சிச் சுடுதலும் கண்ணிற் படலத்தை யுரித்தலும் அவர்களிடத்துள்ள இரக்கத்தினாலன்றி வன்கண்மையினாலல்லவே? அதுபோல் கடவுள் பாவஞ்செய்தவான்மாக்களைத் தண்டித்தல் அவர் பாவத்தை யொழித்து மேலே பாவஞ் செய்யாவண்ணம் தடுத்து அவர்களை நல்வழியிலே செலுத்தி உய்வித்தற்கே ஆகலினால் அவர் எந்தவிதமான வான்மாக்களிடத்தும் ஒரே விதமான கருணை யுடையரேயாம். அவர் எவராலு மறியப்படாதவர் அவர் இரவும் பகலுமற்ற இருவெளிப் பராபரரெனச் சில மேதாவிகளும்.

3. மூன்று பக்கம் சமுத்திரங்களாலும ஓர் பக்கம் மகோன்னதமான பருவதங்களாலுஞ் சூழப்பட்டு கல்பகதருவைப் போன்று விளக்கப்படுகிற எம் இந்திய தேயத்து நண்பர்காள்! தோற்றப்படுகிற மூவுலகங்களையும் அதற்கு ஆதார பூதங்களாயுள்ள பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்று சொல்லப்படுகிற பஞ்சபூதங்களையும் பகலவன் மதியம் என்று சொல்லப்படுகிற இரண்டுபகரணங்களையுமே தெய்வமல்லது கடவுள் வடிவங்களெனச் சில மேதாவிகளும்.

4. ஏதோ மிருக வர்க்கங்களாகத் தோற்றப்பட்ட மனித வர்க்கங்களை அலைகளினின்றும் மேம்பாடெய்த பிளவுப் படுத்தி இலைகளினுள்ளே காய் மறைந்து கொண்டிருந்ததைப்போன்று நம் மனிதச் சரீரகத்தினுள்ளே மறைந்து கொண்டிருந்த அறிவினை விளக்குதற்குப் பாஷை யென்றும், கல்வி யென்றும், சயமென்றும், ஞான மென்றும் பூர்வம் முதன் முதலாக வகுத்துக் காட்டப்பட்ட சில மெய்ஞ்ஞானவான்களையே தெய்வமல்லது கடவுளெனச் சில மேதாவிகளும்.

5. இருந்தவங்களை யுஞற்றித் தங்களின் தூல சரீரங்களோடு சூக்கும சரீரங்களையும் பெற்று மூச்சகங்களினும் அரிய திரு விளையாடல்களைப் புரிந்து பிரமிக்கச் செய்தும் விளக்கப்பட்டு வருகிற சில அருந்தவ மகத்துக்களையே தெய்வம் அல்லது கடவுளெனச் சில மேதாவிகளும்,

6. கடவுளைப் பற்றிய வியவகாரங்களையே யெனினும், கலிகால நாகரீகங்களைப் பற்றிய வியவகாரங்களையே யெனினும், தோற்றப்படுகிற எந்தத் தத்துவங்களைப் பற்றிய வியவகாரங்களையே யெனினும், அரசியற் சட்டங்களைப் பற்றிய வியவகாரங்களையே யெனினும், அருந்தவங்களை யுருத்திற்சார வேண்டும் பல ஞான நூற்களைப் பற்றிய வியவகாரங்களையே யெனினும், இன்னும் ஏனைய எந்த வியவகாரங்களையே யெனினும் செவ்வையாகத் தேர்ந்து தெளிவதற்கும், அவைகளின் உட்பொருள்களையும், அதன் அதன் கருத்துக்களையுங் கண்டு ஆராய்ந்திதற்கும் மீண்டும் மீண்டும் முறைவாகக் கற்றற்கும் முதற் கருவியாயுள்ளது நம்மனித வர்க்கமே யாகலின் அம்மனித வர்க்கங்களை ஈனுந் தாய் தந்தையர்களையே "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" மென்பது போன்றும், "ஆதிபகவன் முதற்றே யுல" கென்பதைப் போன்றும் தெய்வ மல்லது கடவுளெனச் சில மேதாவிகளும்.

7. பெரும்பான்மையும் விக்கிரகங்களையே தெய்வ வடிவங்களா மெனச் சில மேதாவிகளும்.

8. ஆய்ந்து நோக்குமிடத்து எந்த அண்டங்களும் எந்தப் பொருள்களும், எந்தத் தத்துவ வர்க்கங்களும், தொன்று தொட்டு என்றைக்கு மியல்பாகவே உள்ளது தானே யென்றும், தோற்றப் படுகிறதும் அப்படித் தோற்றப்பட்டது தோற்றுமத் தோற்றப் படுகிறதும் எஞ்ஞான்றும் இயற்கையே யென்றும். அதற்காக நம்மை யல்லது வேறொரு கர்த்தா வல்லது கடவுள் தெய்வம் என்பதொன் றில்லவே யில்லை யெனச் சில மேதாவிகளும் கருதப் படுகிறார்கள்.

9. மீண்டும் கவனிக்கப்புகின் சிலர் அக்கினி பகவானையும், இன்னும் சிலர் வாயு பகவானையும், இன்னும் சிலர் சமுத்திர தேவியையும், இன்னும் சிலர் பூமா தேவியையும் தனித் தனியாகத் தெய்வ மல்லது கடவுளென்வுங் கருதப்படுகிறார்கள்.

10. இன்னும் சில மேதாவிகள் வெட்ட வெறும் வெளியை யல்லது வேறொரு தெய்வம் அல்லது கடவுள் என்பது ஒன்றில்லவே யில்லை யெனவுங் கருதப்படுகிறார்கள்.

11. ஆனால் நேயர்காள்! மேலே கூறப்பட்ட எந்தக் கட்சியைச் சார்ந்த எந்த மேதாவிகளிடத்தே யெனினும் அவர்கள் எதனைத் தெய்வ மல்லது கடவுளெனக் கருதப் படுகிறார்களோ அதனைப் பற்றி ஏனைய வேறொருவர் வினவப் புகின் அந்த அதற்குத்தக்க விடை யளிப்பார்களே யல்லது விழிக்க மாட்டார்கள் ஒருங்கே நியாயச்சட்டமாகவுந்தான் விளக்கக்கூடு ஆயினும் பொதுவாக நமது பரத கண்டத்திலே கடவுள் இலக்கணங்களைப் பற்றிக் கூறும் தத்துவ ஞான நூற்கள் வரைகடவாகத் தோற்றப் படுகிற வாகலானும் புல்லறிவுடைய யாமும் அவ்வாறு மிக்க விரிந்த அநேக நூற்களின் கருத்துக்களையே மேற்கோளாக எடுத்துக்காட்டி கடவுளின் [illegible] கண மிஃது இன்ன வடிவந்தானென [illegible] தில் ஏனைய யாவருக்கும் புலப்படு மா[illegible]ண்டு கற்பூர தீபம்போன்று காட்டுவதற்கு என்னு மெண்ணமான்று ஆய்ந்து நோக்குழிக் கடவுளைப்பற்றி யாகலானும் நிறைவுறு மாறு மிக்கக் கடினமேயாயினும் எந்த வியவகாரங்களைப்பற்றியே எனினும் நூற்கப்படு மொருநூலிற்கு ஆசிரியனாகவிருந்து உரையைப்படுவோன் யாவனே யெனினும், அவனும் அந்த வியவகாரங்களைப் பற்றி யதனதன் இலக்கணங்களையும், தம்முடைய அபிப்பிராயங்களையும், கொள்கைகளையுமிகச் செவ்வையாகவும், மிகச் செறிவாகவும் நிறைந்த திட்ப நுட்பங்க ளாகவும், ஏனைய யாவரு மெளிதி லுணருப்படிக்கான வெளிப்படையாகவும் அதனது உண்மைகளை விளக்கிக் காட்டப் போதிய உதாரணங்க ளோடுங் கூடக் கூறு மதொழிலது எக்காலத்தும் நாகரீக நூனூற்கு மாற்றிற்கு நேர் சட்ட விரோத மாகலான் நேயர்களே கடவுளைப் பற்றி யாமும் எவ்வாறு கூறுகிறே மென்பதை நன்கு செவ்வையாகவுங் கவனியுங்கள். எம்முடைய சிற்றறிவிற் கெட்டிய வரை மிகவும் தேர்ந்து தெளிந்தே கூறப் படுகிறேம். ஆனால் கடவுளைப்பற்றி மெய்ஞ்ஞான வான்களாகிய வான்றோர்களாலே ஆர்ந்து பேசிக்கொள்ளும் வார்த்தைகளைக் கூட எஞ் செவிகளிரண்டும் பூர்த்தியாகவுங் கேட்டிரா. மிக்க மிக்கச் சிறந்து நிறைந்து விளக்கும் தெய்வ வடிவங்களான தத்துவ ஞானிகளாலே நமது வர்க்கங்களுக்குத் தந்தருளப் பெற்ற மெய்ஞ்ஞான நூற்கள் பல்லாயிரத் தோற்றப் படினும் அவைகளில் ஒரு சிறிய நூலின்பாலுள்ள பாயிரத்தி னுயிரத் தோர் பகுதியின் இயல்பினைக்கூடச் சரிவரக்கற் கூறேனும் பூர்த்தியாக வெம்மது கண்களுங்கண்டிரா. மனித வர்க்கங்களாகத் தோற்றப்படுகிறப் பெரும்பான்மை எந்தப் பகுதியார்க ளியற்கைகளை நோக்கினுந் தெய்வம் அல்லது கடவுளென்று சொல்லப்படுகிற ஒருவித மங்களகரமான வார்த்தையின் அடிமைகளாக இயங்கப்படுகிறார்கள் அதனை மாத்திரம் யாம் நன்கு செவ்வையாகத்தெரிந்து கொண்டிருக்கிறேம்.

12. ஆனால் இந்த ஞாலத்தைப் படைத்தல், காத்தல், அழித்தலென்ற மூத்தொழில்களையுஞ் செய்யத் தகுந்த வொப்புயர்வற்ற வொரு தலைவனை யுடைத்தாகப் பெற்றே யுலகம் தோன்றி மறைந்து கொண்டிருக்கிறதெனவும், அதற்காகவே ஒரு கடவுளிருக்கிறா ரெனவும் சில மேதாவிகளாலே நிச்சயிக்கப் படுகிற தெனின் அன்னவர்களின் புறச்சரீர வுறுப்புகளாலே நிச்சயிக்கப் பட்டதோ? அகச்சரீர உறுப்புகளின் றலையான அறிவாலே நிச்சயிக்கப்பட்டதோ? நேயர்காள் அவ்வாறு நிச்சயிக்கப் பட்டதும் அன்னவர்களின் அறிவு நன்றாலேயே யல்லவோ? இன்னும் அக்கடவுளானவர் எங்கும் நிறைந்தவரென்வும், அவர் இறப்பும் பிறப்பும் அற்றவரெனவும், அவரில்லாத விடமுமில்லை, இருக்கு மோரிடமுமில்லை யெனவும், அவர் பான்மிசை நெய்யும் ஊன்மிசை யுயிரும் என்மிசை யெண்ணெயும் கதிர் மிசை யொளியும் எரி மிசைச் சூடும் மலர்மிசை நாற்றமும் போன்றுள்ளவ ரெனவும், அவர் எந்த விதமான ஆன்மாக்களிடத்தும் ஓரே விதமான கிருபையுடையவ ரெனவும், அவர் எவராலும் அறியப்படாதவ ரெனவும், அவர் இரவும் பகலு மற்ற இருவெளிப் பராபர ரெனவும், அவர் எவைகளையுங் கடந்தவ ரெனவும் எந்த மேதாவிகளாலே நிச்சயிக்கப் படுகிறதோ? அவ்வாறு நிச்சயிக்கப்பட்டதும் அவ்வவர்களின் மிகத் தூய்மையான அறிவுதா னென்பதையும் நாம் நன்குணருதல் வேண்டும்.

13. இன்னும், தோற்றப் படுகிற மூச்சகங்களையும் ஐந்து பூதங்களையும் இரண்டு உபகரணங்களையுந் தெய்வ வடிவங்களென நிச்சயிக்கப் பட்டதும் யாது? சில மெய்ஞ்ஞான வான்களையே கடவுளென நிச்சயிக்கப்பட்டதும் யாது? சில வருந்தவ மகத்துக்களையே கடவுளென நிச்சயிக்கப் பட்டதும் யாது? நமது தாய் தந்தையர்களையே கடவுளென நிச்சயிக்கப் பட்டதும் யாது? நம்மை யல்லது கடவுள் வேறொரு கர்த்தா என்பதொன்று இல்லவே இல்லையென நிச்சயிக்கப்பட்டதும் யாது? ஒவ்வொரு பூதங்களையுந் தனித் தனியாகத் தெய்வ வடிவங்களென நிச்சயிக்கப் பட்டதும் யாது? பெரும்பான்மையும் விக்கிரகங்களையே தெய்வ வடிவங்களென நிச்சயிக்கப் பட்டதும் யாது? நேயர்காள் அவ்வவர்களின் தூய்மையான அறிவு வொன்றுலேயே யல்லவோ?

14. "உள்ளமே பீட முணர்வே சிவலிங்கம் தெள்ளியர் அர்ச்சித்துமாறு.

தன்னை யறியு மறிவுதனைப் பெறின் பின்னைப் பிறப்பில்லை வீடு"

"ஆதியாய் நின்ற வறிவு முதலெழுத் தோதிய நூலின் பயன்"

"அறிந்தடங்கி நிற்து மந் நாடிக டோறுஞ் செறிந்தடங்கி நிற்துஞ் சிவம்"

"தூண்டுஞ் சுடரைத் துளங்காமற் றூண்டுக்கில் வேண்டுந்துறை முடிக்கலாம்"

"ஆதியோ டொன்று மறிவைப் பெறுவதுதான் நீதியாற் செய்த தவம்"

"மிக்கமனத்தால் மி. நினைந்து சித்திக்கில் ஒக்கச் சிவ னுருவமாம்"

"உண்டில்லை யென்னு முணர்வை யறிந்தக்காற் கண்டில்லையாதுஞ் சிவம்"

"அனைத் துருவமாய வறிவை யகலில் நினைத்துணையு மில்லை சிவம்"

"அறம் பாவமாயு மறிவுதனைக் கண்டால் பிறந்துழல வேண்டா பெயர்ந்து"

"பத்துத் திசையும் பரந்தகடலுலகும் ஒத்தெங்கும் நிற்துஞ் சிவம்"

"எண்ணிறந்த யோனி பல வாய்ப் பரந்தெங்கும் உண்ணிறைந்து நிற்தும் சிவம்"

"அஞ்சுமடக்கி யறிவோ டிருந்தபின் துஞ்சுவ தில்லை யுடம்பு எனவும்" கண்டுணர்ந்து நிச்சயிக்கப் பட்டதும் மிகத்தூய்மையான நம்முடைய ஔவையம் பிராட்டியின் அறிவுதா னென்பதையும் நாம் நன்குணர்தல் வேண்டும்.

மாடத்துளானலன் மண்டபத்தானலன். கூடத்துளானலன் கோயிலுள்ளானலன். வேடத்துளானலன் வேட்கைவிட்டார் நெஞ்சின். மூடத்துளே நின்று முத்தி தந்தானே.

எனக் கண்டுணர்ந்து நிச்சயிக்கப் பட்டதும் திருமூல தேவரின் மிகத் தூய்மையான அறிவுதா னென்பதையும் நாம் நன்குணர்தல் வேண்டும்.

15. நண்பர்காள் நம்முடைய மனமானது மிகவுந்தூய்மையான நம்மறிவினைப் பின்பற்றி யொழுகுமே யாயின் இந்த ஞாலத்தில் நம்மா லுஞற்ற முடியாத காரியம் ஒன்றுமே இல்லை யென்பதாகத்தான் முடியும். எந்த விதமானசக்திகளும் மனத்தாலுங் கூடிய அறிவி னிடத்தே யிருந்துதான் தோற்றப்படல்வேண்டும். ஆகலின் என் சகோதரர்களே கடவு ளிலக்கணங்களைப் பற்றியும் அன்னவர் இயற்கை குணந் தொழிலாதிகளைப் பற்றியும் கருதப்படுவீர் ஒவ்வொரு நண்பர்களும் முதன் முதலாக அவ்வாறு கருதப்படுகிற மனத்தாலுங் கூடிய அறிவினது இலக்கணத்தையும் அதன் குணத்தையும் கருதி யஃதென நுங்களின் மனனென்னுங் கண்ணிற்குத்தெற்றென விளங்குமாயின் அதன்பின்னரே கடவுளைக்காணக் கருதுவீர்க ளாயின் ஐயீர்! மிக உத்தமமாக முடியும். பெரும்பான்மை எம்முடைய தூய்மையான மனத்தோடுங் கூடிய அறிவினைப் பின்பற்றி யாம் ஒழுகுமாற்றிலே வழுவுற்றேமாகத் தானிருக்கிறேம். ஆகவே யிம்மட்டாக நீயிர் கூறிவந்த கூற்றுகளானே அறிவையோ கடவுளென்கின்றீர்? ஆம் அறிவையோ அல்லது அதனோடுஞ்சார்ந்த மனத்தையோ அல்லது மேலே காட்டியவாறுகளையெல்லா மொருங்கே நிச்சயிக்கப்பட்ட ஒரு தலையாய கருவியையோ எனினும் ஆம்! ஆம்! ஆம்! ஆம்! எவ் வாறெனின் கடவுளென்பா ரொருவர் நம்மினின்றும் வேறொன்றாகவிருந்து மூச்சகங்களையும் ஐந்து பெரும்பூதங்களையும் இரண்டு உபகரணங்களையும் இயக்கவைத்துக் கொண்டிருக்கிறாரென்பது யாவர்களு முணர்ந்த நிச்சயமேயெனினும் அவரைக்காணுவதற்காக வேண்டும் ஒருமனம் அல்லது உணர்வு ஒருதலையாய கருவியே முதன் முதற் சக்தியாக விளங்குகிற தென்பதை எவராலு மறுக்க முடியாவாகலின் ஆம்! ஆம்! ஆம்.!

16. ஓ பிரம்மஞானிகளே! ஓ யோகீஸ்வரர்களே! ஓ நாவல்லவர்களே! ஓ சகலாகம பண்டிதன்மார்களே! ஓ சர்வ கலா நிபுணர்களே! எம் சைவசமய சாராம்சங்களைப் பருகும்மெதாப்த நண்பர்களே! ஓ நாட்டுக்கோட்டை நகரத்து எம் செல்வச்சிரேஷ்டர்களே! இங்ஙன முணருங்கள். கடவு ளிலக்கணங்களைப்பற்றி யிவ்வாறாகத்தான் கூறத்தெரிந்தே மல்லது வேறாக ஒன்றுமே தோற்றப்படவில்லை. சமுசாரம் சமுசாரமென்று கூறப்படுகிற பெரிய சாகரத்தினுள்ளே மூழ்குத்துக்கிடக்கும் நம்முடைய சரீர மென்னுஞ் சிப்பியினுள்ளே கோடி சூரியப் பிரகாசம் போன்றுள்ள ஒளிமயமான அறிவென்னும் தெய்வ முத்தானது எவ்வாறிருக்கிற தென்பதை நாம் நன்குணர்தல்வேண்டும். இறந்த கால வியற்கைக ளென்னுங் குளிரானே முக்காடிட்டுத் தூங்கிக்கொண்டிருக்குந் தூக்கத்தை யொழித்து விழித்தெழுதல் வேண்டும். நிகழ்கால வருங்காலவியற்கைகளடங்கி நிகழும் நூன்முறைச் சட்டங்களை நோக்குதலென்னுங் குடி நீரைப்பருகி யக்குளிரினை யொழித்தல்வேண்டும். உலக வியற்கைகளையும் நன்குபற்றி யெண்ணி நோக்குதலும் நாளை நாளை என்பது நமனுடைய நாளாமென்பதையும் தெளிதலும் வேண்டும். அறிவென்னுங் கதிரவனை யுதயமாக்குவதற்காக வேண்டுமாற்றைத்தேடி முயலுதல்வேண்டும். அறியாமை எனக் கூறப்படுகிற இருளினை யொழிக்குமாறு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராக, இவ்வங்கம் முதன் முதலாகத்தொடர்ந்து இந்நூன்மிசை வரும்.

நாட்டுக்கோட்டை வைசியம்.

பல அங்கங்களும் எவ்வகைத்தானும் எழுத்துச்சொற்பொருள் முதலியன வெல்லாம் ஒருங்கே யழகாகவும் நினைத்தவாறு ஒழுங்காகவும் நிறைபெறும் பொருட்டு எல்லாம் வல்ல (நம்முடைய பழய காலத்துப்) பாசிவப்பெருமான் திருவருள் புரிவாராகுக சயம்! சயம்!! சயம்.!!!

உ-வது அங்கம் மாநிலமாட்சி.

எல்லையுந்தாங்குமுவப்புறுந்தொல்சீர் மாநிலத்தன்னவாம்பொறையாளர் நீந்திருவடிபா லியாந்தலைசாய்த்து. எம்மனப்பூர்வமான வஞ்சலியாற்றி நண்பர்காள்! இவ்வனம் மாநிலமாட்சி யென்னுமங்கத்தை வரையத்தொடங்குவாம். அஃதாவது பிருதிவி, அப்புத், தேயு, வாயு, ஆகாயமெனக் கூறப்படுகிற பஞ்சபூதங்களிலே யொன்றாகிய மிகவும்பெரிதான விப்பூமியின் சிறப்பைப்பற்றிக்கூறுதலாம். இப்பூமியென்னும் மொழியை பூ. வேறாகவும் மகர வொற்று வேறாகவும் இகரம் வேறாகவும் பிரித்துக் கவனிக்கப்புகின் மிக மேலான பொருள்களடங்கிக் கிடக்கின்றன வென்பதை யெவர்களுந் தெளிவார்கள். யாங்கனமெனின் முதன் முதலாக பூ என்பதைப்பற்றிக் கவனிப்பாம். "அவனியும் வனப்பு மல. நுங் கூர்மையும் பொலிவும் பிறப்பும் பூ வெனலாகும்" என்பது பிங்கலந்தைச் சூத்திரம் அ. ஆ. என்ன அருமை. என்ன அடக்கம். என்ன இனிமை. நம் செந்தமிழ் இலக்கிய கர்த்தர்களின் கருத்தே கருத்து. எத்துணை தூரமாழ்ந்த தத்துவார்த்தங்களைக் கொணர்ந்து புணர்த்தி யிருக்கிறார்களென்பதைப் பாருங்கள். பூ வென்னுஞ்சொல்லே இம் மாநிலமாட்சியை இஃதென மிகத் தெளிவா யுணர்த்துங்கால் மகரவொற்றையும் இகரத்தையும் எதற்காகக் கொணர்ந்து புணர்த்தி யிருக்கிறார்களென்பதைக் கவனியுங்கள். ஈங்கு தோற்றப் படுகிற எந்தப் பொருள்களையும் பெரும்பான்மை தன் வயப்படுத்திக்கொள்ளுஞ் சக்தியையுடையதாகலின் ஆதனையோர்ந்த நம் முனிவர்கள். எந்தச் சாஸ்திரங்களாலும் இஃதென வெடுத்துக் கூறற்கியலாத அரும்பொருட்டன்மைவாய்ந்த பிரணவத்தின் ஈற்றெழுத்தாய மகரவொற்றை யீங்கு மெடுத்துக்கொண்டார்கள். இனி இகர மெதற்காகவோ வெனின்? இம்மாநிலமானது இத்தன்மையை யுடையதாமெனச் சுட்டிக் காட்டுவதற்கே யாமென்க. ஆகலின் பூ வென்பதற்கு பூமி யெனவோர் அர்த்தமும் ஆய்ந்து நோக்குமிடத்து பல நாடு நகரங்களையும், நதிகளையும், குன்றங்களையும் பல்வேறு வகைப்பட்ட பொருட் கூட்டங்களையு முடைத்தாகப்பெற்று மிகவலங்காரமாக விருத்தல்பற்றி வனப்பென்றும், நுண்மையான பேரறிவுடையமாக்கள் பலரையுந் தமதுழியுடைத்தாகப்பெறுதலாற் கூர்மையென்றும், விரிந்த இடமாக விருத்தல்பற்றி மலர் என்றும், நாளுக்கு நாள் மிகுதியும் வளர்ந்தோங்குந் தன்மைபற்றிப்பொலிவென்றும், பெரும்பான்மை யெல்லாப் பொருள்களும் இதனிடமாக வுற்பத்தியாதல்பற்றிப் பிறப்பென்றும் பலபொருள் குறிக்குமொரு சொல்லாயிருந்தும் இம் மாநிலமாட்சியைக் கவனிக்குமிடத்து இவ்வாறு புலப்படுத்துகின்றது. இனி மகரவொற்றையும் இகரத்

தையும் பொருத்ததாற் பரியத்தையும் மேற்கண்டவாற்றானே யுணர்க. நிலம் என்பதற்கு இடம். கன்னி. தேயம் எனக் காணப்படுகிறதையுந் தெளிக.

சகோதரர்காள்! இதன்கீழ்வரும் விஷயங்களைச் சற்று நன்றாகக் கவனித்தல் வேண்டும். பொதுவாக விதன்பொறுமை, பெருந்தன்மை, அடைந்தோரைக்காத்தல், ஏனையவைந்தப்பூதங்களானும் எந்தக் கருவிகளானும் எந்த மகா வல்லுநர்களானுந் தாங்கற்கியலாத பெரும்பாரந்தாங்கு மாண்மை, எந்த உடல்களோடுங்கூடி நிற்குஞ் சக்தியுடைமை, எவராலு மளவிட்டுக்காணுதற்கருமையான பேருருவத்தன்மை முதலாய பற்பல குணகுணங்களையும் பற்றிக் கவனிக்கப்புகுந்தால் எந்த மெய்ஞ்ஞானிகளேயெனினும் மிகவும் வியப்படையத்தக்கதேயாம். இத்துணை மாட்சியுடையதென எவரானும் வரையறுத்துக்கூற முடியாததேயாம். இப்பூமாது என்னும் நம்முடைய வுண்மைத் தாயானவள் நம்மை ஈன்று வளர்த்து வோம்பாதொழிவளேல் நாமெங்கே? நம்முடைய வாழ்நாளெங்கே? நம்முடைய செல்வமெங்கே? நம்முடைய மனைவி மக்களெங்கே? நாம் வணங்குந் தெய்வமெங்கே? நம்முடைய சமயமெங்கே? நம்முடைய வருணாச்சிரம தருமமெங்கே? நாம் நித்தியமாக வடைய விரும்புஞ் சுவர்க்காதி போகமெங்கே? நம்முடைய வாண்மையெங்கே? நம்முடைய சரீரமெங்கே? அந்தோ! ஏனைய பூதங்களானும் கடவுளானுந்தான் என் செயக்கூடும். இச்சரீரமானது வோரரைக் கணப்போழ்துந் தாங்க நிலையுளதாகுமோ வென்பதை யெட்பிளவுங்கூடத் தம்மனத்திடை யெண்ணி நோக்காது நாட்டவரூழற் பெரும்போர் விளைத்து காவிரியாறு கரைபுரண்டாற்போல இரத்தவெள்ளம் பெருகியோட எண்ணிலடங்காத வுடற்கூட்டங்களைப் பதைக்கத்துடிக்கப் பலியாக்கிச் செங்கோல் நடாத்து மன்னுநிமன்னர்களுந்தான் யாங்கேகுவராயிருப்பர். ஐயீர்! ஆய்ந்துநோக்குமிடத்துப் பலவேறு வகைப்பட்ட எந்தவிதமானசகல வியவகாரங்களுக்கும் ஆதாரபூதமாயுள்ளது இம் மாநிலமேயாமன்றோ? இதனையல்லது ஏனையவெதுவுமே இல்லையே. இதனையே உண்மைத் தெய்வமென்பதை மிகச்செவ்வையாய்த் தம்மனத்திடைத் தெற்றெனத் தெளிந்து வணங்குவார் அந்தோ! எத்துணைச் சிறுபான்மை. நாமெடுத்துக்கொண்ட முயற்சிக்கும், பிரயாசைக்கும், வணக்கத்திற்குந் தக்கவாறு பெறும் பிரயோசனம் கைமேலிருக்கச்செய்யும் இதனைத் தெய்வமென்றுணராதார் உணர்வென்னை? நம்முடைய சக்தியின் அம்சமுமிதுவன்றோ? நம் உடன்மிசையுடைத்தானமாமிசத்தன்மையு மிதுவன்றோ? நாமுண்ணுமுணவுப்பொருள்களு மிதுவன்றோ? நம்மை மிகச் செவ்வையாய் வசிக்கச்செய்யுமிடமுமிதுவன்றோ? பெருஞ்செல்வவந்தர்களெனச்செய்வதுமிதுவன்றோ? எவரையு மீற்றிலேற்றுக்கொள்வது மிதுவன்றோ? இவைகளையெல்லா மிகச்செவ்வையாய்த் தெரிந்துதான் மண்ணாதி, விண்ணாதி, மலையுமாதி என நம் சமயகுரவரு ளொருவர் இம் மாநிலத்தை முதன்முதலாகவைத்துக் கூறினாரமென்க. ஒன்றுமில்லாதவழி கடவுளெனக் கைகூப்புந் தன்மையால் யாதுபயன் பெறக்கூடும். நம்முடைய பாசிவப்பெருமானு மவரைச் சார்ந்த வநேக தேவர்குழாங்களும் வசிக்கப்படுகிற கயிலையங்கிரியும், நம்மகத்திய முனிவருமவரைச்சார்ந்த வநேக சித்தர் குழாங்களும் வசிக்கப்படுகிற சந்தனப்பொதிகையு

மிதன்மிசையன்றோ காணப்படுகிறது அந்தரமாகவில்லையேஅன்பர்காள்!ஆய்ந்து நோக்குங்கள் இம் மாநிலமாட்சி யித்துணைதானோ? "இன்னாச் செய்தாரை யொறுத்தலவர் நாண நன்னயஞ் செய்து விடல்" என்ற தேவர் வாக்கின்படி யியலுதல் மாந்தர்களிடத்துக் காண்பது பெரும்பான்மையபூர்வமேயாம். நமது உண்மைத்தாயான இப்பூமாதிடம் சாதாரணமா யெவர்களுங் காணலாம். அஃதாவது எத்துணை ஆரம் வெட்டிக்கொத்தி யம்மாதின் சரீரத்தைப் புண்படுத்தினு மதனையும் பொறுத்து அவ்வாறு செய்தவர்களுக்குத் தக்க பலன்களைக் கொடுத்து அவர்களை யானந்தமாக மகிழச் செய்தும் கொஞ்சமாழமாக வெட்டியோர்க்கு அருந்த தண்ணீரைத் தாகந்தீரக்கொடுத்தும் பல நன்மைகளைச் செய்துவிடுகிறது. அருந்த தண்ணீர் நிலைகளுக்கும் இடமாகிறது. இத்தகைய பெருந்தன்மை வேனைய எந்தப் பூதங்களிடத்துங் கிடையாவாம். இம்மட்டோ? மீண்டுங் கவனிக்கப்புகின் எத்துணையோ மன்னாதி மன்னர்களைக் கண்டுகழித்து உண்டு செழித்ததுமாம். மாந்தராய்ப்பிறந்தா ரொவ்வொருவரும் எம்முடையது எம்முடையது எனச்சொல்லி விரும்பி மாயக்காட்டும் ஓர்வித மாயாசக்தியுமாம். நம்முடைய பரசிவப்பெருமான் மனைவி யென்பதை யெவர்களுந் தெற்றெனத் தெளிதற்பொருட்டு பார்வதியெனப் பெயர்பெற்றதுமாம். நியாயத்தில் தராசு நுனியை யொத்ததேயாகும். பொதுவாகச் சிறுபான்மை எந்த மனிதர்களையுந்தாங்கி அவர்களுக்காக வேண்டுஞ் சௌகரியங்களையும் உணவுப் பொருள்களையும் ஏனைய செல்வங்களையுங் கொடுத்து நிற்பினும் பூமாதேவியும் மூன்று பிழை பொறுப்பாளென்ற பழமொழிப்படியான் பெருந்தன்மையே யல்லது இயற்கையிற் பொறுக்குந் தன்மையை யுடையதாகாது. அதர்ம சண்டாளர்கள் எந்தப்பாகத்தில் சாஸ்தியாக வசிக்கப்படுகிறார்களோ அங்குதான் பூகம்பம் அடிக்கடியுண்டாவது வழக்கம். நல்லமழைபொழியினும் விளைவு குறைவுபடுகிறது மியற்கை. மிகக்கெட்ட வியாதிக ளுண்டாவது மியற்கை. பண்ணிய பயிரிற் புண்ணியந் தெரியும் பையச்சென்றால் வையந் தாங்கும் என்ற வேதவாக்குகளும் வீண்போகுமா?

ஆம்! ஆம்! போகாது நியாயந்தான் அதற்காக நாமெவன் செய்தல் வேண்டுமெனின்? நண்பர்காள்! எந்தப்பூதங்களுமே யெனினும், எந்தப்பூதங்களுக்கும், எந்தக் கருவிகளுக்கும், எந்த உலகங்களுக்கும் அதிபதியான கடவுளேயெனினும் ஆன்றோராணையிலடங்கி யியலுந்தன்மையை யுடையதாகலின் அவ்வான்றோர்களாலே நமது வர்க்கத்தாருக்குத் தந்தருளப்பட்ட நீதி மார்க்கங்களெதுவோ அதன்பிரகாரமே நாமியறல்வேண்டும். அவ்வாறியறலே நம்முடைய வுண்மைத்தாயான விப்பூமாதுக்கு நாம் நம்முடைய மனப்பூர்வமான வந்தன வழிபாடுகளோடு பெரியவோர் தெய்வமென மதித்து வணங்கும் பெரியவோர் வணக்கமுமாகும். இதுவே அப்பூமாதின் மனத்தை யானந்தமாக மகிழச்செய்யுமோர் கருவியுமாகும். ஆகலின் ஐயீர்! நமது வகுப்பைச் சார்ந்த எந்தச் சகோதர சகோதரிகளையும் எந்தச்சிறுவர் சிறுமிகளையும் நியாயம் என்னும் பாலத்தினின்றும் எவ்விதமுகாந்திரங்களைக்கொண்டும் நழுவி விடாத வண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் சுரப்பானாக. சுபம்! சுபம்! சுபம்!

௫-வது அங்கம் மாநீர்மாட்சி.

எந்நீர்மையாளும் நன்னீர்மைகுன்றாத் தன்னீர்மையாளர் மன்னியவிரண்டு திருத்தாள்களுக்கும் அடியேம் மனப்பூர்வமான வஞ்சலியாற்றி இங்ஙனம் மாநீர்மாட்சி யென்னு மங்கத்தை வரையத் தொடங்குவாம். அஃதாவது சாதாரணமா யெவர்களுந் தெரிந்த தண்ணீரின் சிறப்பைப்பற்றிக்கூறுதலாம். பொதுவாக விதன்மாட்சி யெவராலு மளவிடற்கரிதாம். எனினுமெடுத்துக்கொண்ட வரை எதோ கொஞ்சம் வரைந்து நிறுத்துகிறேம்.

ஆலமுஞ் சலமு மம்மு மறலும்
பாணியு மப்பும் பயமு முதகமும்
வயமு மயமும் வாரியும் விகடியும்
புனலுஞ் சலிலமும் புவனமு மளகமும்
சீவனமும் பானீயமுஞ் சிந்து மாங்குசமும்
வருணமு மம்பு மழையுங் கவந்தமும்
கீலாலமு மேகமு மகிலமுந் தடியும்
நீரமுந் தோயமும் வாரும் பதமும்
ஆர மாரியுங் கமலமும் பயசும்
கயமுஞ் சம்பரமுங் கம்மும் புட்கரமும்
சீதமும் வசியுங் கோவுங் காண்டமும்
கனவிரதமுஞ் சீவனீயமு மலரும்
ஆரமு மமுதமு நீரென லாகும்.

என்பது பிங்கலந்தைச்சூத்திரம் இதன் பொருள் ஆலம், சலம், அம், அறல், பாணி, அப்பு, பயம், உதகம், வயம், அயம், வாரி, விகடி, புனல், சலிலம், புவனம், அளகம், சீவனம், பானீயம், சிந்து, ஆம், குசம், வருணம், அம்பு, மழை, கவந்தம், கிலாலம், மேகம், அகிலம், தடி, நீரம், தோயம், வார், பதம், கார், மாரி, கமலம், பயசு, கயம், சம்பரம், கம், புட்கரம், சீதம், வசி, கோ, காண்டம், கனவிரதம், சீவனீயம், அலர், ஆரம், அமுது என்பன.

இங்ஙனம், காணப்படும் இவ்வைம்பது பெயர்களும் இந்நீர்தோன்றிய வந்தக்கணமே எற்பட்டாதாயிருக்குமோ? வல்லது நாளாரம்பத்தி லேற்றுக்கொண்டதா யிருக்குமோ? வென்பதைப் பற்றிக்கவனிக்கப் புகுந்தால் ஒரு மனிதனின் நல்லியற்கைகளும், கல்வித்திறனும், பரோபகாரத் தன்மையும், உலகத்திற் குழைக்குமாற்றலும், மன்னுயிரெல்லாந் தன்னுயிரேயென்ற வுண்மையுணர்ந்த ஞானமும், எஞ்ஞான்றும் தோற்றப்படுகிற முச்சக்கங்களுக்குமே இவனொருவனுக்குக் காணப்பட்ட புகழும், நாளாரம்பத்தில் வெளியாக வெளியாக உயர்தரப்பட்டம் வாய்ந்த பல நாமங்கள் தானே நிகழ்வதுபோன்று நாளாரம்பத்தி லேற்றுக் கொண்டனவாகவே காணப்படும். இம்மாநீர்மாட்சியை இஃதெனப் புலப்படுத்துவதற்கு இஃதேசாலும். எனினும்ஐயீர்! சற்று நன்றாக வேறொன்றிற் கவனத்தைச் செலுத்தாமற் கவனியுங்கள். "நீரின்றமையாதுலகம்" என்ற நம் தேவர் பெருமான் திருவாக்குப் போன்று இந்நீரையல்லது யாமெவன் செய்வது. நமதரும்பொருளானவிச் சரீரமும் ஓரரைக்கணப் போழ்துந்தான் சகிக்குமா? நம்மைத்தாங்கு மாநிலத் தன்மை எத்துணை யுயர்ந்ததாக விருப்பினும் இந்நீர் இன்றேல் யாதுபயனளிக்கும் நீர்மிசை மிதக்கும் நிலவுலகேன்றன்றோ வான்றோர்வாக்கு. மாதமும் மாரி யல்லது வருஷமும்மாரி யாங்ஙனம் பொழியும்? நெடுங்கடலானது எத்தன்மையதென்பதை நாம் நன்குணர்தல் வேண்

௩-வது அங்கம் மாசீர்மாட்சி.

டும். இந்நீர் பொங்குங் காலமன்றோ
கேட்கவும், பார்க்கவும் மிகப்பயங்கர
மான பிரளயகால மெனப்படுகிறது. ஆ!
ஆ!! எத்துணையாழம்வாய்ந்தது எத்துணைப்
பயங்கரம் வாய்ந்ததாய்க் காணப்படுகிறது
இதன்பேருருவத் தன்மையை நினைக்குந்
தோறும் நெஞ்சமஞ்சப்படுகிறதே. வேறு
பட்ட வியப்பன்றோ காணப்படுகிறது.
வடவைத்தீத்திரளும் இதன்மிசையன்றோ
வீற்றிருக்கப்படுகிறதாம். அந்தோ! என்னே?
ஆச்சரியகரமான கொடியமா பூதங்கள்
இவைகள் எதற்காகத் தோன்றிக் கொண்டி
ருக்கிறதென நமக்குப் புலப்படவில்லையே
இதன் குண குணங்களை யெல்லாமிகச்
செவ்வையாய்த் தேர்ந்து தெளிந்தன்றோ
நம் மான்றோர்கள் இவைகளுக்குப் பூத
மெனப் பெயர் வைத்திருக்கிறார்கள் போ
லும். காணப்படுகிற வுலகத்தையாக்கவு
மழிக்கவு மன்றோ வுரித்தாயிருக்கிறது.
வேண்டுதல் வேண்டாமை ஆகிய விரண்
டிற்குமன்றோ பொருந்தி நிற்கிறது. நமக்
கும் நமக் குதவியாயிருக்கும் பலவேறு
வகைப்பட்ட எந்தப் பொருள்களுக்கும்
இந்நீர் அன்றோ ஆதாரபூதமாயிருக்கிறது
எத்துணை மரக்கலங்களை மோசஞ்செய்து
விடுகிறது. எத்துணையருமையான பொருள்
களைத் தன் வயத்துடையதாய் காணப்படு
கிறது. என்னே? ஆச்சரியம் தூரைக்கண
மும் நம்மை விட்டகலாது நம் வாயிடத்
தூறிக்கொண்டேயு மிருக்கிறது. இன்
னும் நம்மூனோடு தோய்ந்துகொண்டேயு
மிருக்கிறது. எட்டுணைக்காலம் வற்றினும்
நாமிருப்பது நமனுலகத்தான். ஆனல்
இங்கு கூறப்பட்ட மாசீர்மாட்சி என்பது
கடனீரையுஞ் சார்த்தியே என்பதை எந்தச்
சகோதரர்களு முணர்தல் வேண்டும்.
பிரத்தியக்ஷத் தெய்வ வடிவங்கள் இப்பஞ்ச
பூதங்களாகத்தான் காணப்படுகிறது.
ஆனல் இவைகளெல்லாம் ஆன்றோரானை
யிலடங்கி யொழுகு மாற்ற லுடையவைக
ளேயாம். கொடிய மாபாதகங்கள் யாங்கு
தோன்றி வளர்தோங்குகிறதோ வாங்கு
தான் இவைகளாலும் பெருங் கஷ்டங்கள்
நிகழும். எந்த மாந்தர்களிடத்தும் அந்த
ரங்க பக்தியான தெய்வ வணக்க மொழிந்த
பாகத்திற்றான் இம் மாசீராற் பெருங் கஷ்ட
கஷ்டமுண்டாவ தியற்கை. இவைகளெல்
லாம் நம்மனதில் ஞான்றும் ஞாபகமிருத்தல்
வேண்டும். எற்றையுங் கடந்தவோர் காட்டு
வம்பன் செய்வம் யாங்குளதெனக் கேட்பி
னும் இக்கொடிய மாபூதங்களை யாங்குள
தெனக் கேட்க முடியாது. ஆகவே நமக்கு
முக்கியமாக நாம் தெரிந்துகொள்ளவேண்
டியதென்னை யெனின்? ஆன்றோர்களாலே
வகுத்துக்கிடக்கும் நியாயச் சட்டங்களென்
னும் தோணியினின்று மறந்தேயும் முன்
பின் காலெடுத்து வைத்தல் கூடாதென்ப
தேயாம். எல்லாம் வல்ல இறைவன் திரு
வருள் புரிவானாக. சுபம்! சுபம்! சுபம்!

௪-வது அங்கம்
முப்பொருண்மாட்சி.

"எப்பொருள் யார் யார் வாய்க்
கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொ
ருள் காண்பதறிவு" என்றார் செய்ப்புதம்
போற்றி. அன்பர்காள்! ஈங்ஙனம் முப்
பொருண்மாட்சி யென்னு மங்கத்தை வகு
யத்தொடங்குவாம். அஃதாவது தேயு,
வாயு, ஆகாயமெனக் கூறப்படுகிற மூன்று
பெரிய பொருள்களின் சிறப்பைப்பற்றிக்
கூறுதலாம். முதன் முதலாகத் (தேயு)

அஃதாவது தீ யென்பதைப்பற்றிக் கவனிப்
பாம். தன்வயப்பட்டதெதனையுந் தீயச்செய்
யுந் தன்மைபற்றி யிதற்குத் தீயெனப்பெயர்
வந்ததுபோலும். எத்துணையோதூரங் கெட்
டவோர் பொருளாகத் தோற்றப்படினும்
இதன் மாட்சி யளவிறந்ததேயாம். நம்மு
டன்மிசை யிஃதில்லையாயின் எற்றும்
பயன்படமாட்டோ மென்பது யாவருமு
ணர்ந்ததே. தோற்றப்படுகிற எந்தப்பொ
ருள்களோடு மிஃது தோய்ந்துகொண்டிருக்
கிறதாமென்க. அந்தரத் தகிலகோடி
தாழாது நிலைநிற்ப தெல்லா மிதன் மாட்சி
யேயா மென்க. எந்தத் தத்துவ ஞானிக
ளுங் கடவுளை அழலுருவெனக் கூறப்படுகிற
தையுந் தெளிக. ஆன்றோர்கள் சூக்கும
சரீரம் பெற்ற சித்திரமெல்லா மிதன் மாட்
சியேயாமென்க. இஃதை யல்லாதவெளிச்
சம் எதுவுமே இல்லையாமென்க. ஆகாயத்
தில் அக்கினிக்குன்றமொன்று சதாகாலமு
மெரிந்துகொண் டிருக்கிறதையு முணர்க.
உயர்தரமான எந்த யந்திரங்களு மிதனை
யல்லது வியலாதாமென்க. இத்தீயல்லது
முத்தி பெறுதற் கெவராலு மியலாதா
மென்க. இஃதுண்மையாற்றான் ஆன்றோர்
களாலே ஞானக்கினி யெனவுங் கருதப்படு
கிறதா மென்க. எதனையுஞ் சுத்தப்படுத்
துஞ் சக்தி யிதற்கல்லது ஏனைய வெதற்கு
மில்லையாம். இனி (வாயு) அஃதாவது
காற்றைப்பற்றிக் கவனிப்பாம். பொது
வாகக் காற்றென்பது எந்தச் சிறுவர் சிறுமி
களுக்குங் கூடத் தெற்றெனத் தெரிந்ததே.
தோற்றப்படுகிற எந்த வர்க்கங்களுக்கும்
உயிர் அல்லது ஆவி யென்பது இதுதான்.
ஆய்ந்து நோக்குமிடத்து ஐயீர்! ஏனைய
வெந்தப் பூதங்களுக்கும், எந்தக்கருவிகளுக்
கும், எந்தப் பொருள்களுக்கும் இதுவே
தலையாயதெனக் காணப்படுகிறது எதற்கு
மிதனுதவி யல்லாம லியல முடியாது.
ஏனைய எந்தப் பொருள்களின் சகாயமு
மின்றி யிஃது தானே யியலுதல் கூடும்.
மேலும்,

இருதய மண்டலத்தியங்கும் பிராணன் 1

உச்சத்தலத்திடை நிற்பதபானன் 2

நாபியினின்றங் கோவாதத்துதானன் 3

வியானனெங்கும் வியாபியா நிற்கும் 4

கந்தரசக்குழியிற் சந்திடைச் சமானன் 5

முடக்கலு நீட்டலுங் கிளப்பது நாகன் 6

உரோமம் புளகித்திமைப்பது கூர்மன் 7

கிருகரனென்பது முகத்திடைக் கெழுமித்
தும்மலுஞ் சினமும் வெம்மையும் விளைக்
கும் 8

ஒட்டமுமிளைப்பும் வியர்ப்புந் தேவதத்
தன் 9

ஒல்கர்வன்பி னல்லவர் கேண்மையி னுயி
ருடல் விடினுந்தானுடல் விடாஅ தோக்க
நின்றங் குடலினை வீக்கித் தலைகிழித்
தகல்வது தனஞ்சயனாகும். 10

என்பனவாய பத்துப் பிரிவுகளான்
வாயுக்களின் சக்தியே நாமாயிருக்கிறோ
மென்பது எவர்களுங் கவனிக்கத்தக்கதே.
பிருதிவி, அப்புத், தேயு வென்னும் பூதங்

முப்பொருண்மாட்சி.

களுக்குமிதுவே உயிர்நிலை யென்னலும் பொருந்தும். இக்காற்றில்லா தொழியின் நீர்வளம், நிலவளம், மழைவளம், ஏனைய பல்வகைச் செல்வங்கள் முதலியன யாங்கணம் நிகழும். ஒருவாறு நிகழினு மவைகளால் யாது பிரயோசனம். உயிர் நிலைத்திருந்தாலன்றோ வதனோடுகூடிய வுடற்கும் பலவித இன்பாதி போகங்களும் இன்பாதி யோகங்களெனப்படும். இக்காற்றென்னும் பூதமானது ஞான்றுஞ் சாந்தமாகவே நிகழின் தோற்றப்படுகிறஎந்த வுலகங்களுக்கும், எந்த நாநகரங்களுக்கும், நின்ற நின்றவாக்கில் யாங்ஙனம் பெருங்கேடுகள் நேரிடக்கூடும். இக்காற்றினுதவி யன்றி நீருந்தான் பொங்குமோ? நெரிப்புந்தான் பற்றுமோ? பூமாதுந்தான் அசைவளோ? எந்த யந்திராதிகளுந்தான் மாறுபடக்கூடுமோ? இதனுடைய வசங்காரமிருந்தாலன்றி யெவ்விதத் தீங்குகளும் நேரிடமாட்டாது. மேலுந்தான் உயிர்க்கு மேலாயவொண் பொருள்யாங்கோ? உளது.

வாயுப்பழக்க மறிந்து செறிந்தடங்கின்
ஆயுட்பெருக்க முண்டாம்.

என்ற நமதௌவ்வையம் பிராட்டியார் திருவாக்கே இதன்மாட்சியைத் துலக்குவதற்குப்போதிய சான்றாமே. பிரமனெழுத்தும் பெயர்த்தோடிப் போமே. இதன் நயமுமாத்திர மொருவற் குளதாயின் எத்துணை கல்பகோடி காலமும் ஈங்குவசிக்கவுங்கூடுமே. எவராலுமறுக்கக் கூடாத இருவினைப் பாசக்கொடிகளை யெட்டியறுத்தலுங்கூடுமே. கடவுளின் றன்மை யிஃதெனக்காணலுங்கூடுமே, அவரோடு நாவாறப் பேசலுங்கூடுமே. அவர்தம்மழகு வாய்ந்த இரண்டு திருத்தாள்களினு மடியற்ற கொன்மரம்போன்று சாய்ந்து நெஞ்சாற வஞ்சலியாற்றலுங் கூடுமே. அப்பாவெழுந்திருவென அவர்தம் இன்குரல் கேள்க்கவுங் கூடுமே. ஆன்மாவே நாமாயறிதலுங் கூடுமே.

ஆனகலசத் தமிர்தையறிந்துண்ணிற்
போனகம் வேண்டாமற் போம்.

என்றவாறு பொருந்த அமிர்த மருந்தலுங் கூடுமே. ஆனந்தக்கூத்தாடலுங் கூடுமே. நித்தியானந்தப் பாக்கள்பல பாடவுங் கூடுமே. திருத்தொண்டர் பலரோடு கூடலுங் கூடுமே. தோற்றப்படுகிற மூவுலகங்களினுமுடைத்தாய திரிகால வர்த்தமானங்களையுங்கூடத் தெளிதலுங்கூடுமே. அட்டமாசித்துக்களை யடிமையாக்கிக் கோடலுங் கூடுமே. ஓ அம்மவோ! இதன்மாட்சி இத்துணைத்தானோ? எற்றானுஞ் சிற்றறிவுடைய வெம்மால் வரையறுத்துக்கூற முடியாததேயாம். ஏதோசற்றுச் சினங்கொளுமாயின் எதுவுமே யல்லோல கல்லோலமாய்விடுமே யன்றி பிறிதெவன் சொல்லோ நிகழ்வது. ஆகலின் ஓ எமதன்பார்ந்த நண்பர்காள்! நாமெந்தவாற்றானு மான்றோர் ஆணையைக் கடத்தல் கூடவே கூடாது. அவர்களின் மறைமொழியிலேதான் இஃது கட்டுப்பட்டு நிற்கிறது. ஏனைய வொன்றிற்கு இஃதடங்குந் தன்மை யுடைய தன்று. இனி ஆகாய மென்பதைப் பற்றிக் கவனிப்பாம். அஃதாவது பரவெளியின் சிறப்பைப்பற்றிக் கூறுதலாம் எந்தப் பூதங்களும் எந்தக் கருவிகளும், எந்தவுலகங்களும், இதனிடத்திருந்தே உற்பத்தியாகி தோற்றப்படுகிறதாகலினும், எற்றானும் ஒப்புயர்வற்ற தலையாயதாகலினும் எம்மால் வரையறுத்துக் கூறற்கியலாதாமென்க. சுபம்!

கதிர்மதி மாட்சி.

இருந்தமிழ்க் கடவுள் அருந்தமிழாயும் பெருந்தகவாய நண்பர்காள்! நுங்களின் மரைமலர் போன்ற இரண்டு திருவடிகளுக்கும் அஞ்சலியாற்றி யிங்ஙனம் கதிர்மதி மாட்சி யென்னு மங்கத்தை வரையத் தொடங்குவாம்.

அஃதாவது பகலென்றும், இரவென்றும், விநாடியென்றும், நாழிகையென்றும், நாளென்றும், வார மென்றும், மாத மென்றும், வருஷமென்றும், யுகமென்றும், இறந்தகாலம், நிகழ்காலம், வருங்காலமென்றுங் கணக்குகளிட்டு வகுக்கவும். நிறைந்த புறவிருளையகற்றித் தோற்றப்படுகிற வொவ்வொரு பொருள்களையுஞ் செவ்வையாக விளக்கிக் காட்டுவதற்கும் எல்லாம் வல்ல இறைவனாலே வகுக்கப்பட்டு ஆகாயத்தின்கட் டோற்றப்படுகிற வொளிமயமான (இரண்டு கருவிகளின்) அஃதாவது சூரிய சந்திரர்களின் சிறப்பினைப் பற்றிக் கூறுதலாம்.

ஐயீர்! ஆய்ந்து நோக்குமிடத்து இவ்விரண்டு கருவிகளின் மாட்சியை மாட்சிமைப்படுத்திக் கூறற்கு வான சாஸ்திரிகளே உரியவராவர் எம்முடைய கல்வித்திறன் யாதாவெனினும் நூன் முறைக்காக வெடுத்துக் கொண்டதா மென்க.

தோற்றப்படுகிற தேவர், மனிதர், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரமென்று கூறப்படுகிற எழுவகைத்தோற்றங்களுடல்களின் மீதும் உயிர்களின்மீதும் பஞ்சபூதங்களின் மீதும் இக் கருவிகளின் கிரணங்கள் தோய்ந்து கொண்டிருக்கிறதென்றும், தோற்றப்படுகிற எந்த வுலகங்களுக்கும் இக் கிரணங்களை யல்லாமல் ஏனைய சுகாதாரப் பொருள்கள் தங்களின் குணத்தைச் செய்யமாட்டாதென்றும் நம்முடைய பரசிவப்பெருமான் ஆக்கப்படு கர்த்தாவும் அழிக்கப்படு கர்த்தாவும் ஆனதற்கு காரணமே இவ் விரண்டு கருவிகளுமேயாமென்றும், இவ் விரண்டு கருவிகளுமே இல்லையாயின் எல்லாம் வல்ல இறைவனாலும் பஞ்ச பூதங்களாலும் காணப் படுகிற எந்தப் பொருள்களாலும் யாதொரு பிரயோசனமும் ஏற்பட மாட்டாதென்றும், எந்தத் தொழில்களு மியலமாட்டா தென்றும், இவ் விரண்டு கருவிகளின் கவர்ச்சியானே தோற்றப்படுகிற பழமையான மூவுலகங்களும் நடைபெற்று வருகிறதென்றும் ஆன்றோர்களாலே கூறப்படுகிறது.

இவ்விரண்டு கருவிகளையும் நம்முடைய வேதாகம புராணேதி காசங்களிலெல்லாம் நம்முடைய பரசிவப் பெருமானின் திரு நேத்திரங்களாகச் சொல்லப் படுகிறதென்பதை எவர்கள்தா னுணரார்கள். இன்னும் நம் மிந்து மதத்தைச் சார்ந்த ஒவ்வொரு பிரம்ம ஞானிகளும் அவ்வாறுதான் கூறப்படுகிறார்கள். ஆய்ந்து நோக்குமிடத்து அஃதும் வாய்மையே யாம் இக் கவர்ச்சி அல்லது நம்முடைய பரசிவப்பெருமான் திருஷ்டியானே ஆண் பெண் அலியெனத் தோற்றப் படுகிறதா மென்க நம்மிரண்டு கண்ணொளிகளும் இக்கதிர் மதியொளிகளும் ஒன்றே யாமென்பதுயாவருந் தெரிந்ததே. இரண்டு கண்ணொளியு மற்றவொருவனுக்கு அவனெதிராகத் தோற்றப்படும் இக்கதிர்மதி யொளிகளு மவனுக்குத் தெரியாததே போதியசான்றாம். இக்கருவிகளின் சாஸ்திரங்களை நமது வகுப்பைச்

கதிர்மதிர் மாட்சி.

சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும் மிகச்
செவ்வையாய்த் தெரிந்துகொள்ள வேண்டு
வதும் ஆவசியகமே யாமென்க இங்ஙனம்
கூறப்படுகிற இவ்விஷயங்க ளொருங்கும்
சிறு ஷபயன்கள் முதற் சகலமானவர்களுக்
குத் தெற்றெனத் தெரிந்தது தானே. நீ
யிரும் வேலையற்றுப்போயெதற்காக வரை
ந்துவைக்கிறீர் எனின் சகோதரர்களே இவ்
விரண்டு சக்திகளும் நம்முடைய பரசிவப்
பெருமான் திரு நேத்திரங்க ளாதல்பற்றி
இவ்விரண்டு கண்களையும் இந்நூன்மிசை
யோரங்கமாக வமைத்தல் வேண்டு மென்
னும் பேராவாவே முன்னிலையா மென்க.
இவ்விரண்டு கண்களினு லல்லவோ நாம்
பலநூற்களையும் ஆராச்சி செய்கிறோம் கண்
களை யல்லது ஆக்ஷையென் பிரயோசனம்.
இவ்விரண்டு திருவருட் சக்திகளுமே இந்
நூற் பூர்த்தியாகுமாறு திருவருள் புரியுமா
மென்க. ஆன்றோர்களாலே வகுத்துக்காட்
டப்படும் நீதி மார்க்கங்களில் எற்றும் வழு
வாதியலுவோர் மீது வரைகடந்த பேரன்
புடையதா மென்க சுபம்! சுபம்! சுபம்!!!

வான்சிறப்பு.

எல்லாம் வல்ல நல்லவர்களின் இர
ண்டு திருத்தாள்களுக்கும் அஞ்சலியாற்றி
நண்பர்காள்! இங்ஙனம் வான் சிறப்பென்
னும் அங்கத்தை வரையத்தொடங்கு
வாம். கவனியுங்கள் அஃதாவது கட
வுளின் ஆஞ்ஞையாற் றோற்றப்படுகிற
எந்த வுலகங்களுக்கும் அவ்வவ்வுலகங்
களுக்காகவேண்டும் ஒவ்வோருணவுப்
பொருள்களாதிய வஸ்துக்களையும், அறம்,

ண்டு நடாத்துவதற்கும் ஏதுவாகிய மழையி
னது மாட்சியேயாம். "வானின்றுலகம்வழ
ங்கி வருதலாற் றனமிழ்த மென்றுணரற்
பாற்று." என்ற நம் தேவர் திருவாக்கின்
படி நண்பர்காள் எந்த வுலகங்களும் இம்
மழையை அமிழ்தமென் றுணருந் தன்மையை
யுடைத்தா மென்பது எவர்களும் எளிதிற்
றெரிந்துகொண்ட விஷயமேயாம். இன்
னும் இம்மழை பெய்தலினது வரன் முறை
யான இயற்கைகள் மிகினும் அல்லது குறை
யினும் தோற்றப்படுகிற ஞாலங்களுக்கு
நன்மையுண்டாக மாட்டாவென்பதும் பா
வரு முணர்ந்த விஷயமே. ஒரு வருஷத்
தைப் போன்று மற்றொரு வருஷமும் இம்
மழை பெய்தலில்லையேல் செங்கோன்
முறைகளெல்லாங் கொடுங்கோன் முறை
களாகும். எவ்விதத் தொழிலாளர்களுக்கும்
பயன் குன்றும். எவ்வகைத்தான மேம்பா
டுடையவர்களுக்கும்செல்வவந்தர்களுக்குங்
கூட மனவருத்தமுண்டாம். நீர்வளம் நில
வளம் பூசார முதலிய பலவகைப்பட்ட வள
ங்களுங்குன்றும். நடுநிலையான நீதிமார்க்க
ங்களெல்லாம் அநீதிமார்க்கங்களாக முடியு
"வடகோ டுயர்ந்தென்ன தென்கோடுசாய்
ந்தென்ன வான் பிறைக்கே" யென்று
விதமான வுலக வியவகாரங்களையுங்கடந்
மேனிலை கைவந்தொடுங்கி நி
கு மான்றோர்களுஞ் சற்று விழிக்க நே
டும், தேவாலயங்களில் நடைபெறும் ந
வோ ரியற்கைகளும், திருவிழாக்களும்,
ன, தருமங்களும் ஏனைய பற்பல வறச்செ
களுங் குன்றும், சுகாதார முறைகளுங்கு
றும் நாகரீகங்களெல்லாம் அநாகரீகங்க
கவுங்கூடும் பஞ்சம் பஞ்சமென்று ஏ
ளுங் கூக்குரலிட்டுப் புலம்பும் ஏனைய ப
களுக்குஞ் சில செல்லும். யந்திரங்க

நாட்டுக்கோட்டை வைசியம்.

வான்சிறப்பு.

கொண்டு நடைபெறும் ஒவ்வொரு தொழிற்
சாலைகளினும் நின்ற நின்றவாக்கில் நெறிப்
புப்பற்றிக் கொள்ளவுங்கூடும். ஆ! ஆ!
உலகம் படும்பாட்டை யிற்றெனக்கூறற்
கெவராலும் முடியாதா மென்க. எந்தத்
தத்துவ சாஸ்திரிகள் தாம் யாது செய்யக்
கூடும், ஆனது பற்றியே யான்றோர்களாலே
அமிழ்தமெனக்கூறப்படுகிறது. எவ்வகைத்
தான முயற்சிகளுக்குஞ் சற்று இடையூறு
கள் தான் விளையக்கூடும், விவசாயத்தொழி
லாளர்களெல்லாம் ஒருங்கே அங்கள் தங்க
ளின் ஆயுதங்களை ஏறக்கட்டி வைத்து விடு
வார்களென்பது எவர்களுக்குந் தெற்றென
விளங்கும், கால் நடைகளெல்லாம் மிகுதி
யும் கஷ்டமேயடையும், நெடிதான கடல்
வளங்களுங்குன்றும், எந்த விதமான விளை
பொருள்களும் அபூர்வமாய்விடும், தோற்றப்
படுகிற வுலகங்களுக்கு காற்றானும், எழிலி
யானுங்கூடிய மழையென்ப தொன்றில்
லாவிட்டால் ஏனைய பஞ்ச பூதங்களானும்
இரண்டு உபகரணங்களானும் கஷ்டமும்
நஷ்டமும் விளையக்கூடுமே யல்லது அ
வைகளாலே யாதொரு பிரயோசனமும்
இடையாவாம். கடவுளே யெனினும் கை
கட்டி யிருத்தல் வேண்டியதுதான், ஆய்ந்து
நோக்குமிடத்து அஃது நமதுழிக் கைமாறு
கொள்ளநக் கடப்பாடுடையதேயாம்.
ஞாலங்களின்மீது பெருங்கருணையுடைய
தேயாம். உண்பவர்களுக்காக வேண்டும் ஒவ்
வொரு நன்மையாகிய உணவுகளையும் உண்
டாக்கி யவ்வுணவுகளை யுண்பவர்களுக்குத்
தானுமோ ருணவாக நிற்பதைக் கவனிக்
கப் புகுந்தால் அப்பேருதவியான பெருங்
கருணை வள்ளற் றன்மையினும் வள்ளற்றன்
மையான மாட்சியைப்பற்றி யெவராலும்
வரையறுத்துக் கூறமுடியாதா மென்க. அக

வே எவ்வகைத்தானு மெண்ணி நோக்குங்
கால் தோற்றப்படுகிற எந்த வுலகங்களுக்
கும் இஃதே யின்றியமையாத வேண்டு
முதன் முதற் கருவியாமென்க. இம்மழை
யென்னுங் கருவியை நிதான மாகப்பெய்
யச் செய்ய வேண்டுங் கர்த்தா நீதியே. அந்
தியென்னுங் கருவியானது சிதையுமாயின்
மழை யென்னுங் கருவியானது நினைத்த
நினைத்த வாறெல்லாங் கொட்டவுஞ்செய்
யும்; கொட்டா தொழியினும் ஒழியும். அத
னைக் கேட்டுத் தண்டித்தற் குரிய அதி
காரம் ஏனைய கடவுள் அல்லது எந்தக் க
து வாதிகளுக்கு மின்றாம். நண்பர்காள்
ஆலைகளுக்காக வேண்டும் யாகாதிசுலை
முறையே வருஷா வருஷம் ஆலயாதிக
ளின் திருவிழாக்களைப் போன்று நட
பாக நடத்தி வருதலும் வேண்டும். ந
நிலைக் கோடென்பது எற்றும் நம்முடைய
வகுப்பினுள் வந்து நுழைய விடாத வ
ணம் நீதி நெறிக ளமைந்த மேன்மை
யான குணங்களோடுங் கூடி இ எந்த ஞா
றும் ஒழுகுதலும் வேண்டும். "நேருநரு
ஞெருவ னின்றில்லை யென்னும் பெருமை
யுடைத்திவ் வுலகு" என்னு முலக விய
காரங்களையே தேவாதி சுவர்க்க போகங்
ளாகக் கருதி யநீதியான வியவகாரங்க
லே மூழ்கி வானம் பொழியாத வண்ண
கோடுதலாக வொழுகு மாற்றிலே எவ்வி
முகாந்திரங்களைக் கொண்டும் புகுதல்
டாது. "மாரியல்லதுகாரியமில்லை" யெ
ற வேத வாக்கியத்தை மறத்தல் கூடா
மழை பெய்யா தொழியின் கட்டு நீர்க்
ளங்களுந் தான் எத்தனை வருஷத்திற்
தண்ணீரைக் கொடுக்கும். பெரிது பெ
தான பட்டினங்களில் ஸ்தாபித்திருக்
குழாய்களாலுந் தான் யாது பிரயோசன

ல்லாவற்றையுங் கவனித்து மாதமும்மாரி
பொழியும் பொருட்டு தற்கால வியவகார
தி நெறிகளிலே யொட்டி யொழுகுமாறு
ல்லாம்வல்ல இறைவன் திருவருள் புரி
ாராகுகசுபம்! சுபம்! சுபம்!

நீத்தார்மாட்சி.

நீத்தார் திருவடி நினைவின்கண் நிற்றீஇ
யீர்! இங்ஙனம் நீத்தார் மாட்சி யென்னு
ங்கத்தை வரையத்தொடங்குவாம். அஃ
ாவது தம்முடைய சரீரகத்தின்கணுள்ள
ஞ்சமா பூதங்களையும் அதனைச்சார்ந்த யே
ளய ஒவ்வொரு தத்துவங்களையு மறுத்து
ானக்கினியின்கட் கொட்டிச் சுட்டுச் சாம்
ராக்கி நீட்டைகூடித் தன்னைத் தானே
ணர்ந்து ஆன்மசொரூபியாய் சூக்கும சரீர
தையும்பெற்றுத் தோற்றப்படுகிற மூவுல
ங்களிலேயு முடைத்தான எந்த வியவகா
ங்களும் தம்மனத்திடை யெற்றும் பற்றாத
ண்ணம் முற்றத்துறந்த முனிவர்களின்
பருமையைக் கூறுதலாம்.

அன்பிற் சிறந்த ஐயன்மீர்! அவ்
ாறு நீத்தவர்களுக்கு நல்வினை தீவினை
யன்பது கிடையாது, நரை திரை மூப்புக்
டையாது, எமதர்ம விராஜன் எப்படிப்பட்
வனோ, அவர்களுக்குத் தெரியாது, எந்
ான்று மழிவில்லாத சிரஞ்சீவிப் பட்டம்
பற்றவர்களே யாம், திரிலோக வர்த்தமா
ங்களும், அவர்களுக்குத் தானே விளங்
ம். தோற்றப் படுகிற எந்தப் பொருள்
ினு மவர்கள் பற்றற்றவர்களா மென்க,
க்கினியிலும் ஸ்நானஞ்செய்வார்கள், சமு
ிரத்துள்ளே யெத்தனை கல்ப கோடி

காலமே யென்கினுஞ் சமுசார சகிதமாய்க்
குடியிருக்கவுஞ் செய்வார்கள். வாயுவையே
போஜனமுஞ்செய்வார்கள். மாலைப்பொழ்தி
லாகாயத்திலே சென்று மூலாவுவார்கள்.
அவர்களின் சரீரத்தைப் பூமியினுள்ளே
புதைத்துவிட்டாலுங்கூடப் பாதுகாத்துக்
கொள்வார்கள். ஒரு சரீரத்தை விட்டு மற்
றொரு சரீரத்தில் நுழைந்துந் திரிவார்கள்.
பஞ்சபூதக்களும், சூரிய சந்திராதிகளும்,
கடவுளுமவர்களின் எவலாளர்களாய் வேண்
டுமாயினும் நிற்பார்கள். தோற்றப்படுகிற
முச்சகங்களுக்கும் ஏகச் சக்கராதிபதியா
யிருத்தல் வேண்டுமென, எண்ணினு மவ்
வாறிருப்பார்கள்.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை
விழுப்பத்து வேண்டும் பனுவற்றுணிவு"

"துறந்தார் பெருமை துணைக்கூறின்
வையத் திறந்தாரை யெண்ணிக்கொண்
டற்று"

"இருமை வகை தெரிந் தீண்டறம்
பூண்டார் பெருமை பிறங்கிற்றுலகு"

"உரனென்னுந்தோட்டியா னோரைந்
துங்காப்பான் வரனென்னும் வைப்புக்
கோர்வித்து"

"ஐந்தவித்தானாற்ற லகல்விசும்புளார்
கோமா னிந்திரனேசாலுங்கரி"

"நிறைமொழிமாந்தர் பெருமை
நிலத்து மறைமொழி காட்டிவிடும்"

"சுவையொளி யூறோசைநாற்ற
மென்றைந்தின் வகை தெரிவான்கட்டே
யுலகு"

நாட்டுக்கோட்டை வைசியம்

நீத்தார்மாட்சி

"செயற்கரிய செய்வார் பெரியர்
சிறியர் செயற்கரிய செய்கலாதார்"

"குணமென்னுங் குன்றேறி நின்றார்
வெகுளி கணமேயுங் காத்தலரிது"

"அந்தணரென்போ ரறவோர் மற்
றெவ்வுயிர்க்குஞ் செந்தண்மைபூண்டொ
ழுகலான்"

"நடந்தாலு மிருந்தாலுங் கிடந்தாலு நின்றா
லுந் துயில்கொண்டு கிடந்தாலும் விழித்
தாலுங் கிளர் முடிமன்னவர் முதலோர்
தொடர்ந்தாலுந் தொழுதாலுந் துதித்தாலு
மவமதித்துக் கடந்தாலு மெய்ஞ்ஞானிக்
கமலவிலைப் புனல்போல்வான்"

"மன்னனை மனிதரெல்லா மரிமாஞா
சனத்தில் வைத்து மன்னிய உபசாரத்
தால் வந்தனை செய்யுமா போல் பன்னரு
மறையின்றம்பயின்ற மெய்ஞ்ஞானி தன்
னைப் பொன்னுலகதனிற்றேவ ரிருடிகள்
பூசை செய்வார்" என்பனவாதிய செய்
யுட்களையு முணர்க.

அட்டமாசித்துக்களுக்கு மதிகாரி
யவர்களேயாம். விதிவழி யெற்றுமின்றித்
தங்களின் மதிவழி நிற்கு மாண்புடைய
வர்களேயாம். பெரிது பெரிதான வேத
நூற்களையும், இலக்கண விலக் கியங்களை
யும், நீதி நூன்முறைச் சட்டங்களையும்,
ஒவ்வொரு தத்துவ சாஸ்திரங்களையும்
வகுத்த ஒவ்வொரு சமயங்களின் முதலாசி
ரியன்மார்களு மவர்களேயாம். அவர்களின்
ஆக்ஞையின் பிரகாரமே மேற்கண்ட பூதங்
களெல்லா மொடுங்கி நிற்கிறதாமென்க.

மளவு படுத்திக் கூறமுடியாதா மென்க.
அவர்களையே கடவுளாமெனச் சிற்சிலபகு
தியார்கள் வழி படுகிறார்களா மென்க.
பெரும்பான்மையுமிவர்கள் மலைவாசிகளாக
வேயிருப்பார்கள். ஏனைய தேயங்களை விட
நம்முடைய விந்தியதேயத்துள் நீத்தவர்க
ளின்கூட்டமே மிகுதியாமென்க. அவர்கள்
இஞ்ஞாலத்திலுலாவ வேண்டுமாயின்பேயர்
களைப்போலவும் பித்தர்களைப்போலவும்குழ
ந்தைகளைப் போலவும் "சென்றது கருதார்
நாளைச்சேர்வது நினையார் கண்முன் நின்
றது புசிப்பார்" யென்பது போன்றுமே
உலாவுவார்கள். ஒழுங்காக தத்தஞ்சமய
நூன்முறைகளின் பிரகாரம் நீத்தவர்களைப்
பார்க்க வேண்டுமாயின் ஒரு கோடித் தீ
வர்த்திகளைக் கொளுத்திக் கொண்டு தேடி
னும் நம் போல்வார்கண்களுக்குத் தெரியர்
தாமென்க. அவர்கள் யெந்தவிதமான உயிர்
களிடத்தும் ஒரேவிதமான கருணையுடை
யவர்களா மென்க. உலக வியவகாரங்க
ளிலே யெற்றுந் தலையிட்டுக் கொள்வதற்கு
பெரும்பான்மை பிரிய மற்றவர்களா மென்
க. அவர்களின் சரீரமே நம்முடைய
பரசிவப் பெருமானின் திருவடிவமாமென்
க. "துறவிக்கு வேந்தன் துரும்பு" என்
னுங் கியாதி பெற்றவர்களா மென்க. அவர்
கள் காரணம் பற்றியே மழைவளம், நீர்வ
ளம், நிலவளங்கள் முதலிய வற்று லுலகங்க
ளெல்லாஞ் செழிப் புள்ளனவா மென்க.
அவர்களுக்கு எல்லாச் சமயங்களும் எல்
லாச் சாதிகளும் எல்லா மனிதவர்க்கங்களு
மொன்றேயா மென்க. அவர்கள் எந்தச்சம
யங்களினும் எந்தச் சாதிகளினும் எந்த நக
ரங்களினும் அல்லது எந்தச் சிறிய வூர்களி
னுங் கூட விருப்பார்களாமென்க. அவர்க

சித்தார்மாட்சி.

கிடைபதா மென்க. அவர்க ளெந்த ஞான மும் பசியாப்பழம் புசித்தவர்களா மென்க. அவர்களின் சரீரங் கோடி சூரியப் பிரகாசம் போன்றுள்ளதா மென்க. அவர்கள் ஒவ்வோருலக வியவகாரங்களையும் நன்ருகத் தெளிந்து ஒழித்தவர்களா மென்க. பதினையாயிரம் பால்ய பெண் மக்களோடு கூடிவாழ்ந்தாலும் நித்திய பிரமச்சாரிகளா மென்க. பஞ்ச மூர்த்திகளின் தத்துவங்களு மவர்களுக்கு ண்டோமா மென்க. ஞாலத்தை யிவ்வளவு தூரம் நாகரீக நிலையத்திற்கு கொணர்ந்ததும் அவர்கள் வர்க்கத்தாரேயாமென்க. வர்த்தகஞ்செய்யினுஞ் செய்வார்கள் உத்தியோகஞ் செய்யினுஞ் செய்வார்கள் கூலிவேலை செய்யினுஞ் செய்வார்கள் உடையோடே யிருப்பினு மிருப் பார்கள் நிருவாணமா யிருப்பினு மிருப்பார்கள் இல்லோடேன் கூடி வாழ்ந்தாலும் வாழ்வார்கள் சந்நியாசியாய் யிருப்பினு மிருப்பார்கள் இச்சித்துங் கிடையாதவர்களைப் போன்று யெச்சில் இலைகளிலுள்ளதைப் பொருக்கிக் கொண்டுந் திரிவார்கள் இருந்த விடத்திலே யிருந்தாலு மிருப்பார்கள். கிடந்த விடத்திலே கிடந்தாலுங் கிடப்பார்கள் ஊரெல்லாஞ் சுற்றியலைந்தாலு மலைவார்கள், பூவலஞ் செய்யினுஞ் செய்வார்கள் குட்டிச் சுவர்களினும் படுத்துக் கொண்டிருப்பார்கள், ஆலயவாயல்களிலே தூங்கினுந் தூங்குவார்கள் பேசினும் பேசுவார்கள், பேசாதிருந்தாலுமிருப்பார்கள், திருவிளையாட்டுக்கள் செய்யினுஞ் செய்வார்கள், அயோக்கியர்களைப் போன்றுங் குடிகாரர்களைப் போன்றுந் திரிவார்கள், அவ்வாறு திரிதலினுலேயெவர்களுக்குமே யென்கினுந் தீங்குகள் நேரிடவு மாட்டாவாம். இன்னும் அம்மகான்களைப் பற்றிக் கூறுங்கால் மிக்க விரியுமாதல் பற்றி இம்மட்டோடுநிறுத்துகிறேம். அவர்களுக்கு ஆற்றும் வந்தன் வழிபாடுகளாலே பெரும் பயனடைதலா மென்பது உம் வாய்மையே. சுபம்! சுபம்!! சுபம்!!

அரசியற் சட்டங்களின் மாட்சியும் அடங்கியொழுகுதலும்.

எல்லாம் வல்ல நம்முடைய ஜர்தாவது ஜார்ஜ் சக்கரவர்த்தியின் இரண்டு திருத்தாள்களுக்கும் அஞ்சலியாற்றி இங்ஙனம் அரசியற் சட்டங்களின் மாட்சியும், அடங்கியொழுகுதலும் என்னும் அங்கத்தை வரையத் தொடங்குவாம்.

அன்பர்காள்! அரசியற் சட்டங்களாவது தோற்றப்படுகிற மனிதவர்க்கங்களையெல்லாம் ஒருங்கே சகோதர, பான்மையாயும் பல்வாய நல்லொழுக்கங்களடங்கிய நியாய வழியிலே நின்றியலவும், அல்லாதவர்களையடக்கி யவ்வழிகளிலே நின்று வாழ்விக்கச்செய்யவுஞ்செய்யும் ஓர் அரசன் அல்லது அவ்வரச வகுப்பாரால் நியமிக்கப் பட்டுக்கிடக்கும் ஓர்வகைக் காவற்கருவிகளேயாம் என்பது உம்., மாட்சி யவைகளின் பெருமையேயாமென்பது உம், அடங்கியொழுகுதலாவது அவ்வரசியற் சட்டங்களுக்கு எவ்வகைத்தானும் மீறியியலாத ஓர் இயற்கையேயாமென்பது உம், நம்முடைய வகுப்பு ஒவ்வொரு நண்பர்களும் நன்குணர்ந்த விஷயமேயாம்.

"தத்தஞ் சமயத்தகுதி நில்லாதாரை
அத்தன் சிவன் சொன்ன வாகம நூல்நெறி
யெத்தண்டமுஞ்செயுமம்மையி லிப்புமத்
தே, மெய்த்தண்டஞ் செய்வதவ்வேந்தன்
கடனே"

என்னுந் திருமூலர் வாக்கினை யுற்றுநோக்குழி யிக்காலத்திய வரசியற் சட்டங்களைவிட அக்காலத்திய வரசியற் சட்டங்கள் எத்துணையோ பன்மடங்கு மிகுதியான் நீதியுட்டங்கிக் கிடந்தனவென்பது தெற்றென விளக்குகிறது. ஆயினு மிக்காலத்திய நம்முடைய வக்லோ வகுப்பாரின் அரசியற் சட்டங்களின் வலியான திட்பநுட்பங்களையும், நடுநிலை கோடாத பெருந்தகையான நீதிமார்க்கங்களையும் பற்றிச் சிறப்பித்துக் கூறுவதற்கு யாம் வலியமல்லேம். பெருந்திறனுனே கட்டாயமின்னனங் கூறித் தீரவேண்டியதற் காவசியகமுமின்றும். எனினும்,

"நலமகட்குத் தெய்வங் கொழுநனே
மன்ற புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்
அறவோர்க்கடிகளே தெய்வ மனைவோர்க்
கு, தெய்வமிலழகப் பைம்பூணிறை"
என்றும்,

"மழைவளஞ் சுரக்குமாறும் [illegible]
னிலம் விளையுமாறும் விண்டிழவறம் வளரு
மாறும் வேதநூல் விளங்குமாறும் தழை
போநளிட்டுமாறும் சமரிடை வெல்லுமா
றும் பிழைதப வாழுமாறும் பிறழ்தராக்
கோலினுதூய்",

என்றும்; "முறை செய்து காப்
பாற்று மன்னவன் மக்கட் கிறை யென்று
வைக்கப்படும்".

என்றும் கூறியவான்றோர் வாக்குகளின்படித்தாக நாமெல்லாம் தற்கால வரசியற் சட்டங்களையே தெய்வ வடிவங்களாகவும் அதனைக்கொண்டு நடாத்துஞ் சிறந்த வதிகாரிகளையே அவ்வடிவங்களினுள்ள [illegible] விளங்குந் தெய்வங்களெனவுமதித்[illegible] தேர்ந்து தெளிந்து தெரிந்து எஞ்ஞான்றும் அச்சட்டங்களின் வரம்புகளை விட்டெவ்வாற்றானும்,

அரசியற் சட்டங்களின் மாட்சியும் அடங்கியொழுகுதலும்.

"சக்கரநெறிநில்". "யாண்டுசென் றியாண்டு முளராகார் வேந்துப்பின் வேந் துசேறப்பட்டவர்".

யென்னுமான்றோர் வாக்குகளை மனத் திடை விளங்கச் செய்துகொண்டு யெட்பிள வேனுந் தவறி யியலக்கூடாத வாற்றையே நாம் நன்கு உணர்ந்துகொள்ளல்வேண்டும்.

"அறிவுடை முதியரென்று மாண்டினை யோர்கரோன்றும் சிறியவர் பெரியரென் றுந் திருந்தத வளத்தரென்றும், வறியவ ரென்றும் வீரர் மதிக்கிலர் யாவரேனும் விரல்வலி படைத்து நேரின் வெஞ்சமர் விளைப்பரன்றே".

"யென்றும் முந்துறு மாற்றலர் முனை யினும் போரிடைத் தந்தையர் விளியினுந் தமையனார் மாயினு மைந்தர்கள் விளியினு மான வீரர்கள் சிந்தைகோள் வன்மை யிற் சிறிதுந் தீர்வரோ".

"என்றும், செருவி னேட்டலரைக் கொன்று திரைகொண்டு நாடுகாத்துப் பொருளினை யீட்டிக் கள்வர் புல்லலர் குற்றமாதி பந்தத விலாமைக் காத்துப் பயிலறமாதி முன்றின், மருவுற விடுத்துச் செங்கோல் வளர்ப்பது மாட்சியாமே". என்றும், கூறப்படுகிற மாட்சியின்கட் டங் கிக்கிடக்கும் நம்மிறையின் வடிவங்களான நான்முறை யங்கச் சட்டங்களையு மதனது விலக்கணங்களையும் பற்றி யெந்த ஞான்று களிலேனும் பகர நேர்ந்தக்கால் புகழ்ந்து கூறுமாற்றிலே நின்றுகோடலும் வேண் டும். மறந்தேயு மிகழ்ந்து கூறற்க.

"அரண்மனைக் கோழிமுட்டை யம் மியை யுடைக்கும்"

என்பதையும் நினைந்தொழுக.

"செங்கோலுக்கு மிஞ்சிய சங்கீதமா" என்பதையுமுணர்க.

"வானோக்கி வாழுமுலகெல்லா மன்னவன் கோனோக்கி வாழுங்குடி"

என்பதையு முணர்க. நிற்க. நம் முடைய வரசியன் வகுப்பாரை நவீனக் கல்வி முதலிய நாகரீகங்களையும், நம்மு டைய பாரத மாதாவின் புத்திரர்களாகிய நாமெல்லா மொருங்கே ஒரே சகோத ரர்கள் தான், ஒரே சமயத்தவர்கள் தான், ஒரே ஜாதியத்தவர்கள் தானென்னு மொற் றுமையையும், யந்திராதிமுதலிய கைத்தொ ழில்களையும், இன்னும் ஏனைய தொழில் களையும், இராச்சிய தந்திரமுதலியபல விஷ யங்களையும், கற்க வேண்டும் ஒவ்வொரு நான் முறைச் சட்டங்களையும், வரன் முறைகளான நான்முறைச் சட்டங்களோடு மிக்க நுட்பமா யாற்றவேண்டும் பல முறை மைகளையும் மிக்வுந் தெற்றெனத் தானே யெவர் யார்க்கும் விளங்கும்படித் தான் வெளிப்படையாக நம்முடைய பரத கண் டத்துக்கு முதன்முதலாக உபதேசஞ் செய் யவந்த முதலாசிரியன்மார்களென்றேதான் ஆய்ந்து நோக்குழி, கருதுதல் வேண்டும். அவர்கள் வாயிலாக நாமெல்லாமொருங்கே அடங்கக்கிடக்குமச்சட்டங்களை நம்முடைய பரதகண்டத்துக்கே ஏகாங்கமாக விளக்கு மிந்துமத சித்தாந்த வேதங்களென்றேதான் பகர்தல் வேண்டிற்றே யல்லது வேறு யாது கூறக்கிடக்கிறது. நம்முடைய வரசியன் வகுப்பார்கள் யிற்றைய ஞான்றுவரை யின் றேற்றத் தங்களின் செம்மக்கொடியை நாட் டிச் செங்கோன் மரீஇ நடக்கு வேண்டு

நாட்டுக்கோட்டை வைசியம்.

சேர்திருத்தங்களைச் செய்யா தொழிந்திருப் பார்களாயின் தற்கால வரை நம்முடைய பாரதகண்டமானது யெந்த நிலையிற் றுஞ்சிக் கிடக்குமோ வென்பதையு முணருங்கள். நம்முடைய வரசியன் உல்லோராகிய அங் க்லோ வகுப்பார் மாட்சிமை தங்கிய தங்க ளின் வெண்டிரு வடிகளைக் கொணர்ந்து கல்பக தருவைப் போன்ற நம்முடைய பாரத மாதாவின் தேகத் தோர் பகுதியி லூன்றியதுமே அம்மாது சிரோன் மணி யின் சரீத்திலுள்ள அறச் செயல்களை யெல் லாம் கீழ்மேலாக மாற்றியும், தேவாலயங் களை யெல்லாமிடித்துத் தகர்த்தும், நம்மு டைய பரசிவப்பெருமானின் பிரதிமாரூபங் களாகிய விக்கிரகங்களை யெல்லாம் பிடுங் கிப் புதைத்தும், ஆங்குள்ள வாபரணாதிகளை யெல்லாங் கொள்ளையடித்துக் கொண்டும், அழகானே மிக்கச் சிறந்த மாதுசிரோன் மணியின் கற்பு நிலைமைகளை யெல்லாங் குலைத்து மின்னு மிவைபோன்ற பற்பலவ ரேக கொடுஞ் செயல்களையே செங்கோன் முறைகளாமென்னத் தங்களின் மனம்போ னவாறெல்லாம் கொடுங்கோல் புரிந்து வந்த "உழக்கினுள்ளே கிழக்குமேற்காம்" என்றதுபோன்ற சிற்சில குறுநிலக்கோக் களெனுஞ் சன்னியும்,

பற்பல மதங்களாயும், பற்பல ஜாதி களாயும் பிளவு பட்டுக்கொண்டுஞ் சண் டை யிட்டுக்கொண்டுங் கிடந்த வாத சுர மும்,

தோற்றப்படுகிற ஒவ்வொரு நம் சகோதரர்களும் நம்முடைய பரத கண் டத்துப் பூர்வீக நிலைமை யிஃதென உணர்ந்துகொள்ளாத பக்கவாதமும்,

செல்வப் பொருள்களினும் பற்பல பதவைகளாலேயுந் தேர்ச்சியடைந்த கல் விப்பொருளே மிக்கச் சிறந்ததா மெனத் தெரிந்துகொள்ளாத குன்மமும்,

அங்க்லோ பாஷையைப் போன்று நம்முடைய பரத கண்டத்துக்கு ஏகாங் கமான சுதேச பாஷை யொன்று வேண்டு மென நினையாத குட்டமும்,

இன்னு மிவைபோன்ற பற்பல நோய் களும் நீங்கி நம்முடைய திருஞானசம்பந்த மூர்த்திகளின் திருக்கரங்களாற் றாவப் பட்ட திருவாலவாயின் திருநீற்றாலே நின் டப்பெற்ற பாண்டியனின் தேகம்போன்று பரிசுத்தமாயிற்றென்க.

ஆய்ந்து நோக்குழி புத்தேளுலகத்தவர் வேறெனக் கூறுவார் கூற்றுந் துச்சமாயிற் றென்பவும்பொருந்துவாம். மாந்தருட்டேவ ருடைத்தென்பதூஉம் நம்முடையவரசியன் வகுப்பாரை நினையுங்கால் தெற்றென விளங்கும்.

அன்னோ! ஓ! பரசிவப்பெருமானே! யத்தேவருலகத்தார் நீடூழி வாழ்க. இன்னும் அவ்வங்க்லோ வகுப்பார்களின் கல்வியின் பாகுபாடுகளையும், அன்னவர்களுக்குச் சுதேச பாஷையாயும் விளங்கப்படுகிற அவ் வங்க்லோ பாஷையின் சிறப்பு மாட்சியை யும் பற்றி யெற்றுங் கவனித்து வரையப் புகுவோமாயின் நான்கு கரங்களும், எட்டுத் தோள்களும், மூன்று கண்களுமே யுடைத் தாகப் பெற்ற நம்முடைய பரசிவப்பெரு மானே யெழுந்து ஆகாயத்தையே தம திருப்பிடமாக்கிக்கொண்டும், பூமியைக் கடி தமாக்கியும், சமுத்திரத்தையே மைக்கூடாக் கியும், இமோத்கிரி பருவதத்தையே யெழு துங்கோலாக்கியு மூட்கார்ந்து கொண்டு வரையப்புகுவாரென்கினு முடியுமாறு மிது தியுந்துர்லபம். எனின் கேவல மெம்போலி

அரசியற் சட்டங்களின் மாட்சியும் அடங்கியொழுகுதலும்.

யெற்றெனக் கூறுவாம். ஆயினும் நம்முடைய பரதகண்டத்து ஜனத்தொகையினும் பத்திலொரு பகுதி கூட வல்லாத வோர் சிறிய ஜனத்தொகையினுள்ளே தோன்றி நம்முடைய பரத கண்டத்துக்குங் கூடப் பொதுவாக வேண்டும் நம்முடைய சுதேச பாஷையாகிய பெருந்தகையான மேனிலையிலே நின்று விளங்குவதோடும் தற்காலத் தோற்றப்படுகிற வொவ்வொரு கண்டங்களுக்குமே பொதுவாக வேண்டு மேகாங்கமான ஒரு சுதேசபாஷையாக மலர் தலையுலகின் மல்கிருளகல விலகொளி பரப்பி யாவையும் விளக்கும் பரிதியிலொரு தானாகி விளங்கிக்கொண்டு நிற்குந் திறனென்றே மாந்தராய்ப் பிறந்தா ரெவரேயெனினும் வியக்கற்பாலதே. ஆகவே யிவ்வாறு அளவு கடந்த மாட்சி, யளவு கடந்த நீதி, யளவு கடந்த கருணை, யளவுகடந்த கல்வித் திறன், அளவு கடந்த ராச்சிய தந்திரம், அளவு கடந்த வாண்டிறன் இன்னு மிவை போன்று மாநிலங் காத்தற்காகவுஞ் செங்கோன் மரீஇச் சீர்வழி நிற்றற்கும் வேண்டு மொவ்வோருறுப்புகளும் ஒருங்கேவளர்ந்து நிறைந்து கிடக்கும் நம்முடைய வரசியற் சட்டங்களோடு மெவரே யென்னினு மீறியியன்று பிழையா ரென்பதே திண்ணமயாம். இன்னும்,

"நாடோறு மன்னவ னாட்டிற் றவநெறி
நாடோறு நாடி யவனெறி நாடானே
னாடோறு நாடு கெடுமுட னண்ணுமா
னாடோறுஞ் செல்வ நரபதி குன்றுமே"

என்பதுபோன்றும்,

"முறைமை முட்டாதுசெய்து முழுநிலங்
காப்பினந்த விறைவனைச் செங்கோல்
காக்க மெளிய செவ்வியனு மாகான்
துறைவளர் குற்றமோரான் றுணைத்தோடு
முறை செய்யானை நீரை தரு பாவந்
தேய்த்து நெடும்பகை யின்றமேனும்"

என்பது போன்றும்,

"அறுதொழி லாளர் நூல்க ளயர்ப்ப
ரான் பயனின்றது முறைபெய லொழியுங்
கூழுங் குடிகளு மொருங்கு நீங்கும் பேறு
பய னாட்டிற்றுன்றும் பிறங்கொளி நிலை
பெறாது கறையின் மேற் பொருள்கைக்
கொண்டு காவலை விடுப்பின் மைந்தா"

என்பது போன்றும்,

"வேந்தன்முறை திறம்பின் வேதவிதி
திறம்பு மேந்திழையார் தங்கற்பு மில்லற
மும் நில்லாவாம் மாந்தர்பசி யாலுணங்க
மழை வறந்து பார்தண் முடி கிடந்த
பாரின் விளை வஃகு மால்"

என்பது போன்றும்,

"நிறந்தலை மயங்க வெய்யி னெடுங்
கடல் சுடுவதாயி னிறந்தலை பெருநீர்வா
ழுயிர்க்கிட செல்லையுண்டோ மறந்தலை
மயங்கு செவ்வேன் மன்னவன் வெய்ய
னாயி னிறந்தலை மயங்கி வையம் வரும்படா
நுழுக்கு மன்றே"

என்பது போன்றும்,

"கோணிலை திரிந்து நாழி குறைபட
பகல் கண் மிஞ்சி நீணில மாரி யின்றி
விளை வஃகிப் பசியுநீடிப் பூண்முலை மக
ளிற் பொற்பிற் கற்பழிந் தறங்கண்மாறி
யானையிவ் வுலகு கோடா மரசு கோல்
கோடி னென்றன்"

"கோணிலை திரிந்திடிற் கோணிலை திரி
யுங் கோணிலை திரிந்திடின் மாரி வறங்
கூறும் மாரிவறங்கூறின் மன்னுயிரில்லை

நாட்டுக்கோட்டை வைசியம்.

மன்னுயி ரெல்லா மன்னுஞ் வேந்தன்
தன்னுயி ரென்னுந் தகுதி யின்றதும்."

என்பது போன்றும்,

பொதுவாகச் செங்கோன் முறைகளுக்கு வேண்டு மிலக்கணங்க ளெல்லாம் நம்முடைய நூன்முறைச்சட்டங்களில் ஆன்றோர்களின் வாக்குகளாகவே தோன்றுகிறதைவிட வெத்துணையோ பன்மடங்கு நம்முடைய வரசியன் வகுப்பார்களின் நடுநிலைக்கோடில்லாத நீதியான நூன்முறைச் சட்டங்களினு மவ்வான்றோர்களாலேயுந் தோன்றிக்கிடக்கு மென்பதையு மாங்கில மறியாத சிலரும் நன்குணர்தல் வேண்டும். எந்த நூற்கள் அல்லது எந்தப் பத்திரிகைகள் அல்லது எந்த வியவகாரங்களை நம்முடைய வரசியன் வகுப்பார் இராஜத் துவேஷமெனக் குறிப்பிடுகிறார்களோ வதனை நாமே நம்முடைய பகுதியாரை யெந்தவாற்றானும் நோக்கவிடாதும் எந்தவாற்றானும் நம்முடைய பகுதி நாடு நகரங்களினுள்ளே யவைகளை வந்து நுழைய விடாதும் பாதுகாத்துக் கொள்ளலும் வேண்டும். நம்முடைய வகுப்பாருள் ஒவ்வொரு நண்பர்களும் முனிசிபல் சட்டங்களையும், போலீஸ் டிப்பார்ட்மெண்டின் சட்டங்களையும் கட்டாயந் தெரிந்துகொண்டிருத்தலும் வேண்டும். ஏனைய வொவ்வொரு டிப்பார்ட்மெண்டு சட்டங்களும் சிவில் கிரிமினல் சட்டங்களும் தெரிந்து கொண்டிருந்தாலும் மிக நன்றுதான். தற்காலம் அங்கிலோ பாஷையாலே யெழுதப் படிக்கவுங்கூடத் தெரிந்துகொண்டிராத வொருவன் ஏனையவெந்தப் பாஷைகளிலே நிபுணனாயிருப்பினு மவைகளாலே யாதொரு பயனுந் தோன்றாத இரண்டு கண்களுங் குருடானவனைப் போன்றே தோற்றப்படுகிறானென்பதையும் நாம் நன்குணர்தல் வேண்டும். ஆனால் நம்முடைய வகுப்பார்கள் பெரும் பான்மையும் நமக்கு உத்தியோக முறைகள் நன்றல்ல வென்றுங் கூறுகிறார்கள். ஆய்ந்து நோக்குமிடத்து தற்காலவியற்கையை யொட்டி யொழுகுதலே நமது கடமையாம். ஆகவின் நம் மாங்கிலோ பாஷையின் மாட்சி யிற்றெனத் தெரிந்து பற்பல வேறுபாடுகளாக நிறைந்துகிடக்குந் தற்கால நாகரீகங்களோடும் இன்பாதிபோகங்களையனுபவிக்கப் பொருந்தியிருந்தால வழக்கியல்களென்று கூறப்படுகிற நாகரீகங்களை யொதுக்கிநவீனக்கல்வி முதலிய நாகரீகங்களை யெல்லா மொருங்கே கற்பிக்கு மாங்கிலோ பாஷையானு முறையே வரைவரையாகக் கற்றுத்தேர்ந்து நிபுணர்களாய் நம்முடைய கவர்ன்மெண்டின் உத்தியோகங்களையும் பெற்றுக்கொள்ளற்கு வேண்டுமாற்றினும் உழைத்தலும் வேண்டும்.

1. எந்தெந்தச் சமயங்களுக்கு மந்தந்தச் சமய குரவர்கள் அல்லது அந்தந்தச் சமயங்களின் முதலாசிரியன் மார்களாலே வகுத்துத் தொகுத்து மாநில மெங்கணும் நிறைந்து கிடக்கும் அகவிறையின் ஆஞ்ஞைகளான வேதாகம புராணேதிகாசங்களென்னு நூன்முறைச் சட்டங்களின் அரிய வான்முறையான வொழுக்கங்களையெல்லா மொருங்கே மாற்றி யியலினு மதற்காக வவ்வக விறையென்னுங் கடவுளாலே யளிக்கப்படுந் தண்ட மிம்மையிலோ வல்லது மறுமையிலோ நமது வர்க்கங்கள் பெற்றுக்கொள்வது நிச்சயமே யெனினும் அவ்வறநெறிகளை மாற்றி யொழுகிய வங்ஙனே திடீரெனக் கிடைக்கப்பெறுந் தண்டமல்ல வாகையானும் புறவிறையி னரசியற் சட்டங்களிலோ வெட்பினவர் கதியியலு

அரசியற் சட்டங்களின் மாட்சியும் அடங்கியொழுகுதலும்.

வோமாயி னங்ஙனே யதற்கதற்குத் தக்க தண்டங் கிடைக்கப்பெற்றுக் கொள்கிறோ மாகையால் அவ்வகைவிறை அரசியற் சட்டங் களினும் புறவிறை யரசியற் சட்டங்களே யெந்தவாற்றானு முயர்ந்த தென்பது திண் ணமாம்.

2. ஆனதுபற்றி யெந்தவாற்றானுமவ் வரசியற் சட்டங்களை நம்முடைய வேதாகம புராணேதிகாசங்களென உள்ளன்போடு மதித்து வியன்று கோடலும் வேண்டும்.

3. அவ்வழி நிற்றலே நம்முடைய முதற் கடைமையா மென்பதை யுணர்தலும் வேண்டும்.

4. நம்முடைய கவர்ன்மெண்டின் உத்தியோகஸ்தர்களைத் தேவர்களா மென்ன மதித்து வியன்றுகோடலும் வேண்டும்.

5. ஆங்கிலோ பாஷையைக் கட்டா யங் கற்றுக்கோடலும் வேண்டும்.

6. நம்முடைய வரசியன் வகுப்பார் தலைகரங்களை யெல்லாங் கட்டாய மோர் முறை எந்த வாற்றானும் பார்த்துத் திரும்பு தலும்வேண்டும்.

7. எந்த வாற்றானு மனப்பூர்வமாக நம்முடைய வரசியற் சட்டங்களைக் கடந்து வியலலுங் கூடாவாம்.

8 எந்த விதமான துரோகங்களினு மிராஜத் துரோகமே உயர்ந்த தென்பதை நன்குணர்ந்து கொண்டிருத்தலும் வேண் டும்.

9. கால வியற்கையால் கொடுங்கோன் முறைகளே செங்கோன் முறைகளாமெனக் வியலினும் நாமு மஃதினைப் பின்பற்றியே யொழுகுதல் வெண்டும்.

10. அரசியற் சட்டங்களை மீறிநடந் தா லெந்தவாற்றானு மெவரே யென்கினுங் கெடுவ ரென்பதை மறத்தலுங் கூடாவாம். எந்தவாற்றானு மரசியற் சட்டங்களுக்கும் நமக்கும் யாதொரு ஊடல்களு மின்றி நீடூழி வாழ்க. நம்முடைய பரசிவப்பெரும் மான் பேரருள் புரிவாராக சுபம்! சுபம்! சுபம்!

உ-சமய வியல்.

௰-வது அங்கம், சமயம்.

ஓ! என்னுடைய ஆப்த நண்பர்காள்! எல்லாம் வல்லவன் யாவன்? எல்லா மறிப வன் யாவன்? எங்கும் நிறைந்தவன் யாவன்? என்றுமுள்ளவன் யாவன்? அவன் றன் இரண்டு திருத்தாள்களையும் அடியேமுளத் திடை யிருத்தி இங்ஙனம் சமயமென்னு மங்கத்தை வரையத் தொடங்குவாம்.

1. நண்பர்காள்! மனித வர்க்கமாகத் தோற்றப்படுகிற நமக்கு நல்வினை தீவினை, பாவ புண்ணியம், சுவர்க்க நரகம், கடவுளி லக்கணம், அறம் பொரு ளின்பம் வீடு, உல கத்தோற்ற முதலிய வியற்கைகள், இன்னு மிவை போன்ற பலவாய வுண்மைகளை யெல்லாம் மிகத்தெளிவாக விளங்கக் காட்டி, நரக வாதனையில் நின்றும் விடு பட்டுச் சுவர்க்காதி போகங்களைத் துய்த்தற் காக வேண்டும் ஒருவித பக்தி மார்க்கங்களை யே தமதங்கத்தின் சிரமாகக்கொண்டு, ஏனைய வர்க்கங்களுக்கும் நம் மனித வர்க் கத்திற்குமுள்ள பேதத்தையும், நமது வர்க்

நாட்டுக்கோட்டை வைசியம்.

கத்தின் மாட்சியையும், தாய், தந்தை, தாரம், சகோதரன், சகோதரி, பந்து மித்தி ராதிகளென்னு மொருவித பந்தத்தாலே யார்க்கப்படு மின்பங்களையும், கல்வி முத லிய நானாவிதமான நாகரீகங்களையும், நிலை யான நீதி மார்க்கங்களையும் மிகுந்த வன் போடும் போதனை செய்யக்கூடிய ஓர்வித நான்முறைச் சட்டங்களையே சமயம் அல் லது (மதம்) என்று சொல்லப்படுகிறது.

2. இன்னும் ஆய்ந்துநோக்குமிடத்து ஐயீர்! மனித வர்க்கங்களெல்லா மொருங்கே மனிதத்தன்மை யெய்தி, ஆங்காங்கு நிக ழும் புதிய நாகரீகங்களாய ஆசாரச் சீர் திருத்தமான நான்முறைச் சட்டங்களுக் குட்பட்டும், ஒருங்கே யமைதியோடு மொ ருமைப்பா டெய்தி யியலவும், "முறை செய்து காப்பாற்று மன்னவன் மக்கட் கிறை யென்று வைக்கப்படும்". என்றாற் போன்று மன்னவர்களின் செங்கோன் முறைகளை யெல்லாம் ஒருங்கே நடுநிலைக் கோடின்றிச் சிற்சில வாண்டாண்டுதோ றும் புதிய புதியனவாக நிகழுங் காலாதிக ளுக்கேற்ப விதிவிலக்குகளைச் சீர்திருத்தஞ் செய்யவும், மனித வர்க்கத்தின் சுதந்தரங்க ளைற்றையு மொருங்கே பாதுகாக்கவும், சித்தாந்தம்; வேதாந்தம்; தத்துவ ஞான முதலிய பலவாய இகபர வியவகாரங்களை யெல்லாம் நன்கு செவ்வையாய்ப் பகுதி பகுதிகளாகத் தொகுத்துக் காட்டவும், பாவஞ் செய்தற்கஞ்சியும் புண்ணியஞ்செய் தற்கஞ்சாதும் நின்று தோற்றப்படுகிற எந்த வுயிர்களும் ஒருங்கே தன்னுயிர்தா னென்னும் உண்மையை மிகச்செவ்வை யாய்த் தெளியவும், அதன்படி நம்போல் வார் ஒவ்வொரு சகோதரர்களும் இயலவும், கட்டப்படுகிற மிகத்தூய்மையான ஒருவித் நான்முறைச் சட்டங்களையே சமயம் அல் லது (மதம்) என்று சொல்லப்படுகிறது.

3. இன்னும் இச்சமய விலக்கணங்களை யெல்லா மொருங்கே வான்முறைகளாக வும், மிகச்செவ்வையாகவும். மிகத்தெளிவா கவும், எவர்களுக்குந் தெற்றென விளங்கு மாறுன வெளிப்படையாகவும் விரித்துக் கூறுவதற்கான தற்கால வரை நிகழும் நவீன நாகரீகங்களுக்குத் தக்கவாறு ஏற்ப வந்தியநாட்டுக் கல்விப்பயிற்சி யெமதறி வெட்டுணையுமின்றி யெமக்குச் சொந்த மான செந்தமிழ்ப் பாஷையினும் வந்தவாற் றைச் சிந்திக்கின் மிகச்சிறியேமெனினும் சகோதரர்காள்! தற்கால வரை நிகழும் நம தனுபவச் சம்பவங்களைப்பற்றிச் சற்றுக்கவ னிப்போமாகில், சமயம் அல்லது (மதம்) இஃதென மிகத்தெளிவாய்ப் புலப்படும். அஃதாவது எதோ முன்னரும் பின்னரு முணராத வயனகரங்களிலே யெனினும் தந்நகரத்திலே யெனினும் ஒருவரையொரு வர் சந்திக்க நேரிடின் சந்திப்பார் வறி யோராயினும் செல்வராயினும் அங்ஙனம் அவ்விருவர்களின் சம்பவங்களை யொருவ ருக்கொருவர் பகர்ந்து பேசிக்கொள்ள நேர்ந்த காலத்தில் உரையின் மாத்திரையா லோ சரீரத்தின் மீதுடைத்தான குறி யின் மாத்திரையாலோ ஒருவருக்கொருவர் தங்களிருவரும் ஒரே சமயத்தவர்கள் தா னென்னு முண்மையை நன்கு செவ்வையா கத் தெரிந்துகொண்டதின் பின்னர் அவ் விருவர்களின் இடையேயுண்டான பாங்கிற் கும் ஓர்வித பாசத்திற்குங் காரணமியாதோ? அதனையே வெம்போலுஞ் சிற்றறி வாளர் களுங்கூட சமயம் அல்லது (மதம்) என்று சொல்லப்படுகிறார்கள்.

ம்-வது அங்கம் சமயம்.

4. இன்னும் சமயமென்பதற்கு
அடையாளம் உடம்படிக்கை, எல்லை,
காலம், சமயமதம், தருணம், நியாயத்
தீர்ப்பு, மார்க்கம் என்றும்; மதம் என்ப
தற்கு அறிவு, கருத்து, கொழுப்பு, சந்தோ
ஷம், சமயம், சம்மதம், செருக்கு,
பெருமை, நோக்கம், பைத்தியம், போதனை,
மதாளிப்பு, மஸ்துள்ளது, வலி, விருப்பம்,
வெறி என்றும் இன்னுஞ் சில பொருணிலை
யோடும் பொருள்படுதலால் இங்ஙனம் பொ
ருள்படும் ஒவ்வொரு மொழிகளையும் நன்கு
சீர்தூக்கி யாய்ந்து நோக்குமிடத்து ஈண்டு
தோற்றப்படுகிற எந்தச் சமயத்தவர்களை
நோக்கினும் ஒவ்வொரு சமயத்தவர்களின்
சரீரங்களினும் அவ்வவ் சமயங்களுக்குரித்
தாய சின்னங்களை யுடைத்தாகக் காணப்படு
கிறதாகலின் அடையாளமென்றும்; ஒரு சம
யத்திலுள்ளவர்கள் ஏனைய வேறோர் சமயத்தி
னுள் நுழைவதற்கு எவ்வகைத்தானும் நியாய
வாயிலாகச் சட்டமின்மையால் உடம்படிக்
கையென்றும்; சமய நூற்களிலே காணப்
படுமெந்த வியவகாரங்களும் ஓரளவுபட்டு
நிற்றலால் எல்லையென்றும்; ஒவ்வொரு
பொருள்களையும் அறிவதற்குத் தக்க பருவ
காலம் இஃதாம் இஃதாம் என்று செவ்வை
யாகக் காட்டுந்தன்மையால் காலமென்றும்;
மிகுதியுஞ் சத்துள்ளதாகையாற் சமயமத
மென்றும்; மோக்ஷத்தின் இலக்கணம் முற்
றுறக் காணுதலால் தருணமென்றும்; மகா
ஞான யோகிகள் அல்லது பெருந்தகவாய
மேதாவிகளாலே வகுக்கப்பட்டமையால்
நியாயத்தீர்ப்பென்றும்; எந்தப்பொருள்
களை யறிவதற்குந் தக்க வழிகளை யுடைத்
தாகலின் மார்க்கமென்றும்; சமயநூல்களைக்
கற்றுக்கொள்வதால் புத்திவிசாலமும்,
உண்மையுணர்ச்சியும், கல்வித்தேர்ச்சியும்,
உலக வியவகாரங்களிலே தக்க பயிற்சியும்
ஏற்படுதலால் அறிவு என்றும்; ஆழ்ந்த கலை
னமும் தேர்ந்த சிந்தையும் எந்த வியவகா
ரங்களிலேயெனினும் பல்லோருமொப்பத்
தகுந்த அபிப்பிராயங்களும், பரிசுத்தமான
மனமும், நல்ல விவேகமும் மதநூற்களைக்
கற்பாரொருவனுக்கு இயற்கையிலேயே
யமைதலாற் கருத்தென்றும்; சமயத்தைக்
காட்டுமெந்த நூற்களும் மிகச்செழுமையா
யிருத்தலாற் கொழுப்பென்றும்; கற்பவர்க
ளுக்கு வரை கடந்த வானந்தந் தருதலாலே
சந்தோஷமென்றும்; எல்லாம் வல்ல முழு
முதற் கடவுளைக் காண்பதற்குத் தக்க சம
யங் காட்டுவதால் சமயமென்றும்; உலகத்
திற் றோற்றப்படுகிற பல மதங்களும் ஒன்
றேயாமென்பது எவ்வகைத்தானும் நிறைந்
தவர்களின் கொள்கையாதலாற் சம்மத
மென்றும்; தன் தெய்வம் என் தெய்வ
மென்று எங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிட
வுஞ் செய்யுமாண்மை யுடைத்தாகலின்
செருக்கென்றும்; கடவுளிலக்கணங்களை
யும், நீதி மார்க்கங்களையும், நல்லொழுக்கங்
களையுமே மிகுதியும் விளக்கிக் காட்டப்படு
தலாற் பெருமையென்றும்; சமய நூற்க
ளிலே தேர்ந்த வல்லுநர்களுக்கு எந்த
வுயிர்களிடத்தும் பெருந்தகவாய கண்
ணோட்ட மொன்றுளதாகலின் நோக்கமென்
றும்; சமயநூற்களிலே கூறப்படுகிற வுண்
மைப் பொருள்களை யிஃதெனத் தெற்றெனத்
தெளிந்து கண்டுகொண்டவர்கள் எவ்வித
மான வுலகப்பற்றுக்களையு மொழித்து நம்
போல்வார் வூனக்கண்களுக்குப் பித்தர்க
ளைப்போன்றுந் திரிகிறார்களாகலின் பைத்
தியமென்றும்; அறியாதவர்களுக்கு அறிந்
தார் பலரையுங்கொண்டு போதிக்கச் செய்
யும் சக்தியுள்ளதாகலின் போதனையென்
றும்; நாடோறும் வளர்ந்தோங்கி வருகிற
தாகலின் மதாளிப்பென்றும்; ஒருவ்ரா

நாட்டுக்கோட்டை வைசியம்.

ற்றற்கூடாத வேர்வித பெருமயக்கந்
தருதலால் மஸ்துள்ளதென்றும்; எவரானு
முள்ளியதொன்றைத் தெள்ளறக்காட்டும்
ஆற்ற லுடையதாகலின் வலியென்றும்;
பெரிதாகிய விந் நிலவுலகத்தின்கண்ணே
தோற்றப்படுகிற வொவ்வொரு மாந்தரை
யும் தன்வயப்படுத்தி யளவுகடந்த வானந்
தத்தைக் கொடுக்கும் பேராவலுடையதாக
லின் விருப்பென்றும்; மதத்துவேஷியா
யியல்பவர்களிடத்து மிகுந்த கோபமுடைய
தாகலின் அதற்கு வெறியென்றும் விளங்
கப்படுவதையுங் காண்க.

5: விசாலமான இந்நில வுலகத்தின்
கண்ணே பற்பல வேறுபாடுகளான அநேக
சமயங்கள் அல்லது (மதங்கள்) உள்ளன.
சமயமென்னு மாடையாலே போர்த்தப்பட்
டாமிந்த வுலகம், ஞாலவாழ்க்கை யென்
னுஞ் சரீரிக்குச் சமயமென்னு மாடையா
னது இன்றியமையாது வேண்டியற்கை
யுடையதாம். பொதுவாகச் சில காட்டு
வர்க்கங்களைத்தவிர ஏனைய மனித வர்க்கங்
கள் ஒருங்கும் சமயமல்லது (மதம்) என்று
சொல்லப்படுகிற கற்பகதருவின் கருணை
வடிவங்களான அக்கிழல்மிசை வாழுமியல்
பினையுடையனவர்களேயாம். சமயக்கோட்
பாடுகளிலே யடங்கியொழுகாத மனிதவர்க்
கங்கள் எந்தப் பகுதிகளினுமின்றாம்.

6: ஒவ்வொரு சமயங்களுக்கு மாங்காங்
குடைத்தாய மெய்யறிவாளர்கள் மெய்ஞ்
ஞானிகள் முதலிய பெருந்தகவாய அருந்த
வச்சிரேஷ்டர்களாலே வகுக்கப்பட்டவைக
ளாம். பின்னர் வருங்காலங்களிலே யவ்
வவ் காலங்களுக்கேற்பச் சீர்திருத்தஞ்
செய்து கொணர்ந்தவர்களும் பெருந்தக
வாய மேதாவிகளேயாம்.

7: தற்காலவரை நிகழும் ஒவ்வொரு
மதங்களினும் பௌத்தமதமும், நம்மிந்து
மதமும், கிறிஸ்தவ மதமுமே ஒருதலை சிறந்
ததாம். அதினும் பௌத்த மதமானது தம
தகத்தின்மீது சிலவர்நியகாட்டு மதங்க
ளைச் சற்று வரவேற்றுக்கொண்டதாயினுந்
தம்து பெருமையிற் குன்றாது பெரிதாயும்
சுமார் 40 கோடி ஜனங்களுக்கு மிகுதியான
ஜனத்தொகைகளை யுடைத்தாகப்பெற்றும்
விளங்கப்படுகிறது. அதற்கடுத்தாற்போல
நம்மிந்து மதமும், அதற்கடுத்தாற்போல
கிறிஸ்தவ மதமும் ஆம். ஏனைய ஒவ்வொரு
மதங்களும் மேற்கூறப்பட்டுள்ள மூன்று
மதங்களினும் எந்தவாற்றானுங் கீழ்ப்படிந்த
னவாகவேதான் காணப்படுகிறது. தத்துவ
வியவகாரங்களையும், சிவஞானயோக மார்க்
கங்களையும், கடவுளிலக்கணங்களையும் பற்
றிப் பேசப்புகுவோமாயின் பௌத்தமதத்தி
னும் நம்முடைய விந்துமதமே பெரும்பான்
மை மேம்பாடுடையதாகுமென்பதை யெவ
ராலு மறுக்கமுடியாது. ஆனால் நம்மு
டைய மதத்தைப்பற்றி நாமே புகழ்ந்து
பேசிக்கொள்ளுதலால்து; புகழ்படுமாறு
ஏதேனுமொன்றில் வரைதலாவது
"உன்னை யாவரும் வியக்கக் கருதி நீயே
உன்னைப் புகழ்தல் விளக்கைப்பிரகாசிப்
பிக்கக் கருதி யதனைத் தகழியில் நீரை
வார்த்தல் போலும்" என்ற நாவலர் நீதி
வாக்கிய உதாரணமாகவே முடியும். உல
கத்திலே தோற்றப்படுகிற ஒவ்வொரு சம
யங்களும் சமத்துவமுடையதே யாகும்.
'அவனவன் இல்லத்திற்கு அவனவன் அர
சன்' என்னும் பழமொழியைப்போல் எந்
தச் சமயங்களுக்கும் அந்தந்தச் சமயங்கள்
மிகவும் உயர்தரமான மேம்பாடுடையது
தான். உதகம், பாணி, வாட்டர்; வெள்

ணம், நீழு, தண்ணீர் என நாமனுபவிக்கப் படுகிற ஒரே வஸ்துவிற்குப் பலநாமங்க ளேற்பட்டு இஞ்ஞாலத்தில் வழங்குமியல் பினைப்போன்று எல்லாம் வல்லவொரே கடவு ளைப்பற்றிப் பலநாமங்களாகவும், பலவேறு வழிபாடுகளாகவும், பலவேறு நூன்முறைச் சட்டங்களாகவும் அமைந்து விளங்குகிற தென்பதைப்பற்றிப்பெரும்பான்மை நம்மு டையவருட்பட ஒவ்வொரு நண்பர்களும் நன் குணர்வார்கள்.

8. பொதுவாக வாய்ந்து நோக்குமி டத்து 'பெருக்கா றொத்தது செல்வம், பெருக்காற்றினிடிகரையொத்த திளமை, இடிகரை வாழ்மரமொத்தது வாழ்நாள்" என்று வருதலால் நம்முடைய சரீரங்களை யும், நம்முடைய செல்வங்களையும் நம்மு டைய வாணாட்களையும் நீடுழிகாலம் நிலை பெற்று நிற்குமோர் பெரும்பொருளாக மதித்து அறிவின் விளக்கத்தைக் குறைக்கு மாறுகளிலே புகவி ஐயீர்! ஏமாந்துபோகாத வண்ணம் நம்முடைய சமயத்திற்கும் நம்மு டைய சமயத்தைச்சார்ந்த சகோதரர்களுக் கும், நம்மிந்திய நாட்டிற்கும் நம்முடைய உடல் பொருளாவி வாணாள் முதலியவை களை யெல்லாமொருங்கே தாரை வார்த்து வேண்டுஞ் சீர்திருத்தங்களை யெல்லா மின் னே முன்னிய மாத்திரத்திலேயே செய்து முடித்து விடுவோமாக. சுபம்! சுபம்! சுபம்!!!

சமயாபிமானம்.

சமயாபிமானிகளின் சரணம் புகுந்து ஓ! நண்பர்காள்! இன்னம் சமயாபிமான மென்னு மங்கத்தை வரையத் தொடங்கு வாம்:—

1. அஃதாவது மனிதயாக்கையைப் பெற்ற நம்போன்ற ஒவ்வொரு சகோதரர் களும் அவ்வவர்களுக்குரிய சமயமெது வோ? அவ்வச் சமயங்களின் ஆசாரச் சீர் திருத்தப் பழக்கவழக்க வியற்கையிலே மிகுதியு மன்னன்போடு நேசப்பட்டு அவை களைப் பெருமைப்படுத்தி கோடிசூரியப் பிரகாசம்போன்று தோற்றப்படுகிற மூர்ச் சகங்களுக்கும் இஃதெனப் புகழொலி முழங் குமாறு வேண்டுந் தோற்றத்திற்கு மேன் மேலுங் கொணர்ந்து விடல் வேண்டுமென் னும் பேரவா வுடைமையையே எவ்வகைத் தானுஞ் சிறந்த மேதாவிகளாலே சமயாபி மானமெனக் கருதப்படுகிறது.

2. உலகத்தில் அநேகமாய் எல்லாத் தேசங்களினுஞ் சமயாபிமானத்தை யாதா ரமாகக்கொண்டே பலவாய நல்லொழுக் கங்களை யெல்லாம் ஸ்தாபிக்கப் பட்டிருக் கிறதென்றும்; அதனாலேயே யவைகள் நீடுழிகாலம் நிலைபெற்று நிற்கின்றனவென் றும்; அலங்கார சாஸ்திரங்களுக் கெல் லாம் சமயாபிமானமே தூண்டுகோலாயிற் றென்றும்; புதிய புதியனவாக விசேஷ மான கிரந்தங்கள் நிகழ்கால நாகரீகங் களுக்கேற்றவாறு உண்டாவதற்கும் சமயா பிமானமே யாவசியக மென்றும்; உங்களு டைய கிரந்தங்களைச் சோதித்துப் பாருங்க ளென்றும்; தேசாபிமானங் கொண்ட ஒவ்வொரு தேசங்களும் எந்தக்காலத்தில் சமயாபிமானங் கொண்டதாயிருந்ததோ அந்தக் காலத்திற்றான் ஆங்காங்கு விசேஷ மான நூல்களேற்பட்டிருக்கின்றன வென் றும்; வேதங்களும் உபநிஷத்துக்களும் இந்து மதத்திலிருந்தே பிறந்தனவென்றும்; புராணங்களெல்லா மதன் பலத்தினாலே எழுதப்பட்டனவென்றும்; ராமாயணம்,

சமயாபிமானம்.

மகாபாரதம் முதலிய காவியங்கள் அழியாத புகழ்ப்படைந்தது இந்த மதத்தினா லென்றும்; பின்னு மதன் வயிற்றிலிருந்து ஆறு பெரிய மதவேறுபாடுகளும், யோகத் தைப்பற்றிய சாஸ்திரமும், வைத்தியநூல், இலக்கணம், ஞானசாஸ்திர முதலியன வுற் பத்தியா யிருக்கின்றனவென்றும்; தற்கா லத்தில் முதன்மையுள்ள தேசத்தாரெல் லாம் இந்த நூல்களின் ஆழ்ந்த வபூர்வமான கருத்துக்களையும், வாசகாலங்காரங்களின் சிறப்பையும் கண்டு அதிசயித்தவர்களாய் அவைகளை விசுவாசத்துடன் படித்துவருகி றார்களென்றும்; இப்படிப்பட்ட திவ்யமான நூல்களெல்லாம் இந்தியாவின் மதவிரு க்ஷத்தின்கண்ணே மலர்ந்த பூக்களே தவிர வேறல்லவென்றும்; அப்பால் மதாபிமா னஞ் சற்றுத் தணிய வாரம்பிக்கவே அதன் பயனாக விரண்டாந்தரமான வியாக்கி யான கர்த்தர்களும், இலக்கண வாசிரியர்க ளும், பாஷா நிபுணர்களு முண்டானார்க ளென்றும்; ஆனால், ஒரு தேசத்தின் கல்வி யோக்யதையை யுன்னதமான பதவிக்கு உயர்த்தக்கூடியவர்க ளல்லவென்றும்; வியாக்கியானஞ் செய்யுந்திறமையும், பூர்வ நூலொன்றைப் பார்த்து அதுபோலெ ழுதுந் திறமையுமன்றி புதிதாகவுண்டாக்கு கிற கற்பனாசக்தியென்பது தற்காலம் இந் தியாவில் துளிகூடவில்லையென்றும்; தற் காலவரை நம்மிந்திய தேயங்களில் சமயாபி மானங்கொண்டவர்கள் இல்லையென்னுங் கருத்து விளங்குமாறு நகைத்துப் பேசிய வேனைய நாட்டுக் கிழவியின் அஃதாவது (மிஸ்ஸஸ் அன்னிபெஸண்டின்) வாக்குக ளையும் நாம் நன்கு கவனிக்கத்தக்கதே.

3. சமுசாரமென்னுமொரு சரீரக்கு சமயாபிமானமென்னு மாடையில்லாதொ ழியுமேல், ஒருவனின் ஞாலவாழ்க்கையின் நூன்முறைகளைப்பற்றிக் கூறுவதற்குச் சற்று மிடமில்லை. தற்காலவரை யாய்ந்து நோக் குமிடத்து நம் செந்தமிழ் நாடு நகரங்களுள் ளும் சமயாபிமானம் பெரும்பான்மை குறைந்துவருகிறதென்றே சொல்லலாம். சமய நூன்முறைகளை யொட்டியியலவேண் டியவற்றையெல்லாம் எங்கெங்கோவோடி யொழிந்துகொண்டன. மேதாவிகளெ னப் பெயரேற்றுக்கொண்ட சிலருக்கும் சமயானுசாரப் பழக்கவழக்க வொழுக்கங் கள் காலக்கிரமத்தில் எற்றும் பிரயோசன மில்லையெனத் தோற்றி யனுட்டிப்பதற்கு அவர்களே நாணுகிறார்களென்றால் நாமெ வன் செய்வது. அந்தோ! யுகதர்மம் போலு ம்! நடையுடைபாவனை முதலிய பழக்க வழக்கங்களெல்லாம் தலைகீழுமான்மேறு மாக மாறிக்கொண்டதென்றால் சமயாபிமா னம் யாண்ணமுடையதோ? என்பதிலுஞ் சந்தேகமென்னை? சகோதரர்காள்! நன்கு ணர்தல் வேண்டும். சமயாபிமானம் எங்க ளும் நிலைநாட்டவேண்டும் விஷயத்தைப் பற்றி நன்றாகக் கவனித்தலும் வேண்டும். எல்லாம் வல்ல இறைவனுந் திருவருள் புரி வாராக. சுபம்! சுபம்!! சுபம்!!!

சமயக்கல்வியும், அதற்காக வேண்டும் வித்தியாசாலைகளும்.

எந்நாட்டினுஞ் சிறந்த தன்றென்று எவராலும் புகழப்படுகிற நம்முடைய தென்னாட்டு மன்னர்காள்! "பெண்ணாகி யாணா யலியாய்ப் பிறங்கொளிசேர் விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக் கண்ணா ரமுதமுமாய் நிற்பவன் யாவனோ" அவன் தன் இரண்டு திருவடிகளையும் வணங்குவதற்கு உறுப்புகளாக நம்முடைய சைவசமயத்தின்கண்ணே அமைந்து விளக்கும் "சிவாயநம" என்னும் எவ்வகைத்தானு மோரொப்புயர்வற்ற ஐந்தெழுத்தினையு மடியே முன்னெஞ்சிறுத்தி இங்ஙனஞ் சமயக்கல்வியும் அதற்காகவேண்டும் வித்தியாசாலைகளுமென்னும் அங்கத்தை வரையத் தொடங்குவாம்.

1. சமயக்கல்வியாவது சமயம் அல்லது (மத) இலக்கணங்களைத் தெரிவிக்குங் கல்வியாம். அதற்காக வேண்டும் வித்தியாசாலைகளாவது அக்கல்வியைப் பலமாணவர்களுக்கும் எந்த ஞான்றும் போதித்து வருவதற்காக வேண்டும் பலவிலக்கணங்களையுமுடையனவாகப்பெற்ற இடங்களென்பதாகத்தானே பொருள்படும்.

2. சகோதரர்காள்! ஆய்ந்து நோக்குமிடத்து நம்முடைய வகுப்புக்கே மதக்கல்விகளைப் பயில்விக்கும் ஒரு வரன்முறையான வித்தியாசாலைகள் இரண்டொன்றை வேண்டும் நிலைமையிலிருக்கிறோம். வேதநூற்களைப் பயிலவேண்டுவது வேதியர்களே என்னும் சட்டமானது நிகழ்கால நூன்முறைகளால் முற்று மாறுபட்டுவிட்டன. ஆதலின் அவைகளையெல்லா மொருங்கேயொழித்து "மனிதன் விலைமதியாத முத்தென்னும்" பொதுவான பழமொழியைக் கருதி ஜாதி வேற்றுமையை யொழித்துச் சில ஏழைச் சிறுவர்களுங்கூடச் சேர்ந்து பயிலவேண்டுவதற்கான நூன்முறைச் சட்டங்களையு மமைத்து நம்முடைய வகுப்பாருக்கே உரியதென்னுஞ் சட்டத்தைப் பூர்த்திசெய்து அதற்குத்தக்க விருத்தியு மழகான நாமம் புனைந்து; கூடுமானால் கருணைதங்கிய நமது கவர்ன்மெண்டாரவர்களின் பொருளுதவியோடுஞ் சார்ந்த "யூனிவர்சிட்டி" யோடுங் கூடச் சம்பந்தப்படுத்தி நம்முடைய செந்தமிழ்ப்பாஷையோடுங்கூட ஆரியம், ஆங்கிலம், இந்தி-யெனக் கூறப்படுகிற மூன்று பாஷைகளையுஞ் சேர்த்து ஆக நான்கு பாஷைகளாலேயும் நமது இந்துமதக்கல்விகளைப் பயில்விக்கக்கூடிய வித்தியாசாலைகளை ஸ்தாபிப்பதற்காக வேண்டும் சபைகளைக்கூட்டி ஆங்கிலம், செந்தமிழ், ஆரியம் முதலிய சில முதன்மையான பாஷைகளானுந் தேர்ந்த சர்வகலா நிபுணர்களினுதவியோடுங்கூடி நம்முடைய நகரத்து மேதாவிகளெல்லா மொன்றாகப் பகர்ந்துபேசி

"நாளை நாளை யென்பீராயின் நம்முடைய முறை நாளாவது மறியீர் நமனுடைய முறை நாளாவது மறியீர்."

"எப்போதாயினுங் கூற்றுவன் வருவான்"

"அப்போதந்தக் கூற்றுவன்றன்னைப் போற்றவும் போகான் பொருதோடும் போகான் காற்றவும் போகான் றமரோடும் போகான் நல்லாரென்னான் நல்குரவறியாரென்னான் தீயரென்னான் செல்வரென்னான் றமியரென்னான் றகையான்"

"உயிர் கோடே போவான் உடல் கோடும் போவான்".

என்னுங் கருத்தினைக் கல்விமேலெழுந்தாக நம் மனத்தின்கண் பதியவைத்து; அதற்காகவேண்டு முடிவான சட்டங்களைத் தீர்மானித்து; மேற்கண்ட வித்தியாசாலைகளைக் கட்டித்தீர்ந்து; தற்காலவரை நம்முடைய வாணாட்களெல்லா மொருவாறாக முடிந்தது முந்து நம் சந்ததியார்களின் வாணாட்களேனும் நவீனக்கல்வி முதலிய நாகரீகங்களாலே முன்வரல் வேண்டுமோற்றையாவது அன்னவர்களுக்கு யாமாற்றி வைத்தல் வேண்டுமென்னுங் கருத்தினைக் கருதி நம்முடைய வகுப்பு ஒவ்வொரு மாணவர்களையும் சர்வகலாசாலையென்னு மங்கத்திற் காணுகிறபடி கட்டாயமாக மதக்கல்விகளையும் பயிலச்செய்தல் வேண்டும்.

3. கேயர்காள்! அவ்வாறு கட்டப்படும் வித்தியாசாலைகளும் நம்முடைய வகுப்பு நகரங்களுக்கெல்லாம் கண்டநடுமத்தியாக வொன்றும், மற்றையச் சுற்றுப்புறங்களிலே புதன் கிளைகளாக வொன்றிரண்டும், நீர்வளம், நிலவளம் முதலிய சௌகரியங்களெல்லா மொருங்கே அமையப் பெற்றனவாயும், அதற்குத் தனியாக இரண்டொரு மீட்டிங்குகளைக் கூட்டித் தகுந்த கல்விமான்களின் அபிப்பிராயங்களையுங் கூடக்கலந்து சற்று பெரியநகரங்களையடுத்த சமீபத்தில் தற்கால வழக்கியல்களுக்கு நேரொப்பச் சீர்தூக்கி நல்லபிளான்களாக வமைத்தலும் வேண்டும்.

அவ்வாறமைத்தலும் பெரும்பான்மையோரின் அபிப்பிராயங்களையே ஏனையரெவருங் கருதியதாயிருத்தலும் வேண்டும். அவ் வித்தியாசாலைகளுக்கு ஏற்படுத்தும் நிபந்தனைகளெல்லாம் ஒருங்கே புதியகால நூன்முறைச் சட்டங்களாகவேதானிருத்தலும் வேண்டும்.

தற்காலவரை வேதியச் சிறுவர்களுக்காக ஆங்காங்கு வேதபாடசாலைகளை ஏற்படுத்தியிருக்குங் கட்டிடங்களைப்போன்றிருத்தலுங் கூடாவாம்.

அக் கம்பௌண்டிற்குள் அயனகரங்களிலிருந்து கற்க வந்திருக்கும் மாணவர்களுக்கு போஜனசாலை சாய்கை முதலிய சௌகரியங்களும் விருத்தியு மழமல்லாத குளம் அல்லது போதியவரையான பைப்புக்களு மமைந்திருத்தலும் வேண்டும். ஒரு மயிற் சுற்றளவுக்குக் குறையாதிருத்தலும் வேண்டும். தேகப்பயிற்சிக்கும் மிக வழகான காலியிடமும் அமைந்திருத்தலும் வேண்டும்.

தற்கால வரை நடைபெற்று வரும் கோயிலூர் நமது வேதாந்த பாடசாலையானது ஏதோ நம்முடைய பூர்வகால நல்வினைப்பயனாலமைந்துகொண்டன. ஆனால் நிகழ்கால நாகரீகங்களின் முறையான சட்டங்களாற் சீர்தூக்கிப்பார்க்குங்கால் சில ஆவசியகமான சீர்திருத்தங்களை வேண்டி நிற்கிறது. அதனைப்பற்றி ஈண்டு விரித்தல் நியாயமாகாது ஆன்றோர் கவனிப்பாராக.

4. நம்முடைய மதக்கல்விகளைப் பயில்விக்கும் வித்தியாசாலைகளில் மதக்கல்விகளைத் தவிர மற்றைய எவ்விதக்கல்விகளையு முதிற் கலத்தல் கூடாவாம்.

நம்முடைய பரதகண்டத்தின் முதன் முதலாகத் தோற்றப்பட்ட நம்மிந்து மதமென்னு மேகத்தையே ஒருதலையன்கமாகக்கொண்டும். அதனுட்பிரிவுகளாக விளங்கும் ஏனைய வொவ்வொரு மதங்களோடும்

பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்து மதக் கல்விகளையுங் கூடச்சேர்த்து, பாடமாக வமைத்தலும் வேண்டும். அது, ஒவ்வொரு மதங்களையும் (ஆதி) முதன்முதலாக அவ்வப்பகுதியார்க்கு ஈந்திய ஒவ்வொரு கர்த்தர்களின் அபிப்பிராயங்களையும், அவ்வவர்களின் சரித்திரங்களையும், அவர்கள் ஜெனித்த நாடுநகரங்களின் தற்கால முற்கால நிலைமைகளையும் மிகச்செவ்வையாய்க் கற்பிக்கப்படவும் வேண்டும். இதில் மகம்மதிய மதத்தையும் இயேசு மதத்தையுங் கூட்டி யமைத்தலாற் கற்கப்படும் நமது மாணவர்களுக்கும் நம்முடைய நாடுநகரங்களுக்கும் பெரும்பான்மை நன்மைகளைப் பயக்குமோ வெனச் சில ரன்பர்கள் நினைக்கக்கூடும். அருளுமி யதற்குச் சமாதானங் கூறவேண்டுவது கடமைதான். அவ்வாறு நினைக்கும் நினைப்பானது சிறுபான்மை யறியாதார் நினைப்பேயாகும். எண்ணி நோக்குங்கால் இந்த ஞாலத்திலுள்ள ஒவ்வொரு மதங்களையுமே பாடமாக வமைத்தலு மாவசியகமெனப்படும். அஃதாவது ஏனைய ஒவ்வொரு மதங்களையும், அதன்பாலுண்டாய கடவுளிலக்கணங்களையும், அதனது நான்முறைச் சட்டங்களின் விதிவிலக்குகளையும், நம்மிந்து மதத்தின் கொள்கைகளையும் இதனது நான்முறைச் சட்டங்களின் விதிவிலக்குகளையும், கடவுளிலக்கணங்களையும், நன்கு செவ்வையாகத் தேர்ந்து தெளிவதிலிருந்தும் நம்முடைய ஒவ்வொரு மாணவர்களும் திடஞான சித்தமுடையவர்களாவதோடுகூட நம்முடைய இந்துமதத்திற்கும், நம்முடைய இந்திய நாட்டிற்கும் நன்மைகளைப் பயக்குமென்பதை யுணராதார் யாவர்? அவ்வாறுணருமுணர்ச்சியானது நம்முடைய இந்து மதத்திற்கே ஓராளுதவுமென்பர் மேலோர். இன்னுமொருங்கே சகோதர பான்மையாக ஒன்றுபட்டு வாழ்வதற்கு மோர் சட்டமாம். மீண்டும் கவனிக்கப் புகின் ஒரு மாணவன் தன்மதப் பயிர்ச்சியோடு ஏனைய பன்மதங்களையும் கற்றுத்தேர்ந்து மிகுதப் பவாராய்ச்சிசெய்து வருவானேயாயின் அன்னவன் ஒருங்கே வரன்முறையாக ஒவ்வொரு சட்டங்களினுந் தேர்ந்து வெளிவருங்காலத்தில் தன்னுடைய மதத்திற்கு யாதானுமோர் குறையுளதாயின் அதனைப்பூர்த்தி செய்வதோடுகூட அன்னவன் தானே பழுத்த பழம்போன்றதோர் மெய்ஞ்ஞானியாவானென்பதிலும் எட்டுணையேனுஞ் சந்தேகமின்றாம். அன்னவனுல் நம்மிந்திய நாட்டிற்கு மட்டுமேயன்றி, "தாமின்புறுவதுலக மின்புறக்கண்டு காமுறுவர் கற்றறிந்தார்" என்னுந்தேவர் கருத்தின்படி உலகமொருங்கிருந்தே பலவிதமான இன்பங்களையும், நன்மைகளையும் பயக்குமென்பதிலும் பயப்படத் தருக்கவோர் மகத்தான அவதார புருஷனாகவும் விளங்கப்படுவானென்பதிலும் எட்டுணையேனுஞ் சந்தேகமின்றாம். இன்னும் அவ்வாறு ஏனைய மதக் கொள்கைகளையும், அதன் நான்முறைச் சட்டங்களையும், அதனதன் உட்கருத்துக்களையும் ஆராய்ச்சி செய்வதிலிருந்தும், கள்ளமனவுள்ளத்தைக் கண்டோர் யாவரும் வெள்ளையென வெண்ணுமாறு வெளிமயக்கமான சிலவேடப் போர்வைகளைப் போர்த்துக்கொண்டும், ஒருவிதக் குருட்டு நம்பிக்கையோடும், மதவியாபாரங்களையே தங்களின் சீவனமாகவேற்றுக் கொண்டும், சண்டைச் சச்சரவுகளை யுண்-

டாக்கும் சில காட்டுவேர்களைச் செவ்வனே சீர்திருத்தத்திற்குக் கொண்டு வருவதற்கும் பெரியோர் கர்த்தாவாக விளங்கப்படுவானென்பதிலுஞ் சந்தேகமின்றாம். ஒவ்வொரு மதங்களினுந் தோற்றப்படுகிற தர்க்க நூற்களெதுவோ அவைகளையும் அவ்வப்பாஷைகளினாலேயும் பாடமாக வமைத்தலும் வேண்டும்.

5. என்னருமைச் சகோதரர்களே! நம்முடைய சைவசமயத்தின் மாட்சிகளைப் பற்றியும், அதன்பாலுடைத்தாய பொருள் வாய்ந்த அற்புத மூர்த்திகளின் மாட்சிகளைப் பற்றியும் நம்முடைய செந்தமிழ் நாடுநகரங்களினுள்ளே நாம்நாமே புகழ்ந்து பேசிக்கொள்வதால் யாது பயனுடைத்தோ? பன்மதப்பயிர்ச்சியும் பற்பலபாஷாக்கியானமும் ஒருவர்க்குளதாயி னன்றோ நம்முடைய சைவசமயத்திற்கே உரித்தாய இடபக்கொடியினைப் பற்பலசமயங்களாலேயுஞ் சூழ்ந்து வொலிக்கப்படுகிற இங்கிலவுலகெங்கணும் நாட்டி நம்முடைய சைவசமயக் கோட்பாடுகளையும், மாட்சிகளையும் ஆங்காங்கு பரக்கக்காட்டி எச்சமயங்களினுமுயர்தரமான மெய்ச்சமய மெங்களின் சைவ சமயமேயாமென்பதை மிகவுந் தாட்டிகமாகத் திட்டிச் சுவர்க்காதி போகங்களையெல்லாம் மனிதர்க்கெளிதாகப் பிறந்தாக் ஒவ்வொருவரும் நன்கு தேர்ந்து தெளிந்து நன்கு நித்தியானந்தமயமாக அநுபவித்துக் கொள்வதற்காக வேண்டும் மீட்டிங்குகளை யாங்காங்கு கூட்டி அதற்காக வேண்டும் பலவாய நல்லொழுக்கங்களை மிகவுஞ் செவ்வையாகப் பூட்டி அறியாமை யென்னும் இருளை யறிவென்னுங் கதிரவனாலே யோட்டி அதினின்று மயிலிர்த்தியாக வேண்டும் மெய்ஞ்ஞானபோதக் கல்விமுறைகளை வெகு சோட்டியாக ஆக்கிநிற்றினிடைநும் வானுலகத்தவர்களுங்கூட இஃதென்னே முழக்கமோவென்று வியப்படையுமாறு வேண்டும் போட்டியாகப் பெரும்புகழீட்டி வாழ்ந்து வருவதற்கும் ஏதுவாயிருக்குமென்பதை நம் வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும் நன்குணர்தல் வேண்டும்.

6. தற்காலம் உலகத்தில் யாங்கு நோக்கினும் சிந்தனை செய்யத்தகுந்த பிரபலமான மகா மேதாவிகளெல்லாம் ஒரு விஷயத்தில் மிகவுந் தங்களின் கவனத்தைச் செலுத்தி வருகிறார்கள் அஃதாவது நம்முடைய மதக்கல்விகளையெவ்வித வுபாயங்களாலே மிகவுஞ் சீர்திருத்தமாக மகோன்னதமான நிலைமையில் இந்த ஞாலமெங்கணும் பரந்து நீடுழிகாலம் நிலைநிற்குமாறு வெளிப்படுத்தலா மென்பதிலேயேயாம்.

ஆய்ந்து நோக்குமிடத்து தற்கால வரை மகோன்னத பதவியிலிருந்துவரும் ஒவ்வொரு பெரிய தேசத்தவர்களும் தங்கள் தங்களுக்கு மென்மேலும் பயன்படுமாறு ஒவ்வொரு கல்வி முறைகளையும் வெகு தீர்க்காலோசனையுடன் சீர்படுத்து மாவசியகத்தால் புதிது புதிதாக யூனிவர்சிட்டிகள் ஏற்படுத்திக்கொள்கிறார்களென்றால் கருணை தங்கிய நம்முடைய வங்கோலகவர்ன்மெண்டா ரவர்களின் திருவருட் பெருக்கால் தேசப் பொதுவுணர்ச்சியும், மதப் பொதுவுணர்ச்சியும் மேலிட்டுவரும் நம் செந்தமிழ் நாட்டார்களும் ஏனைய கல்விமுறைகளுக்கெல்லாம் உயர்தரமான மதக்கல்விகளையும் அதற்காக வேண்டும் வித்தியாசாலைகளையும் சீர்திருத்தஞ் செய்யவிருந்த சிறந்ததையோடுகூட முற்படுவது எத்துணை அவசியமென்பதை நம்

சமயக்கல்வியும், அதற்காகவேண்டும் வித்தியாசாலைகளும்.

வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும் நன்கு கவனித்தல் வேண்டும். நம் செந்தமிழுலகத்துப் பிற்கால வாழ்க்கைக்கும் பிற்கால நன்மைக்கும் நம்முடைய சமயக்கல்விகள் இன்றியமையாத வேண்டும் முதற் கருவியாமென்பதை நாம் நன்றாக வுணர்ந்துகொண்டிருத்தல் வேண்டும். இஃதே மாதிரியாக வித்தியாசாலைகளு மமைந்துகொண்டிருத்தல் வேண்டுமென்பதையும் நாம் மறந்துவிடுதல் கூடாதாம். நம்முடைய செந்தமிழ் நாட்டிற்கும், செந்தமிழ்ப்பாஷைக்கும் நம் சைவ சமயத்திற்கும் நம்முடைய வகுப்பானது அந்நாள் முதற்தொட்டுக்கூடிய சிரம்போன்று விளக்கப்பின் தன்மைபற்றி மீண்டுஞ் சற்று வற்புறுத்திக் கூறத்துணிகிறோம்.

7. ஓ! நாட்டுக்கோட்டை நகரத்து நண்பர்கள்! பைந்தமிழ்ப்புலவர் அந்தமிழ் கடலுமிழச் சந்தமபாடும் செந்தமிழ் நாட்டுச் செல்வர்கள்! அருந்தவச் சிரேஷ்டர்களான ஓ! அன்பர்கள்! எவ்வகைத்தாலுஞ் சிற்றறிவுடையேமாகிய எம்மையும் நுங்களோடும் பிறந்த நுங்களின் சகோதரருளொருவனாக நினையுங்கள். இவ் வங்கத்திற் காணப்படுகிற இரண்டு விஷயங்களையும் நன்றாகக் கவனியுங்கள். ஏதோ வேலையற்றவன் புலம்பிக்கொண்டிருக்கிறனென நுங்களின் ஒருவனுக்கூட நினையாதேயுங்கள். ஏதோ ஒருவர் செய்துகொண்டிருக்கும் நற்செய்கையே வேறு வொருவரும் போட்டிபோட்டுச் செய்யத்துணிவது அத்துணை உசிதமாகாது. நம்முடையதாம் நாட்டுக்கோட்டை ஒவ்வொரு சிறிரு நகரங்களும் இவ்வாறு இவ்வாறு அமைத்தல் வேண்டுமென ஆன்றோர்களாலே கூறப்படுகிற ஒவ்வொரு நூற்களையும் கவனித்துப் பார்த்தல் வேண்டும், வித்தியாசாலைகளுக்காக வேண்டும் ஒரு மொத்தத்துகையைச் சேர்த்து ஒரு பெரும் பண்டாரம் வைத்தலும் வேண்டும். நகரத்துக்குநகரம் வேறுவேறு தனித்தனியாகக் கல்வி விஷயத்திற்குச் செலவாகுந் தொகைகளையெல்லாம் ஒரு பெருந் தொகையாகக் கூட்டி ஒரே டிப்பார்ட்மெண்டிற்குள் அடங்கும் கணக்கு முறைகளையும் வகுத்து மதக்கல்வியென்றால் மேற்கூறியவாறு ஒரேதன்மையதாகக் காணுமாறு செய்தலும் வேண்டும். நம் மதக்கல்வியையும் நம் செந்தமிழ்ப்பாஷையையும், எந்நன்றும் விளக்கச்செய்தலும் வேண்டும். நம் மதக்கல்விகளை மிகச் செவ்வையாக வாராச்சிசெய்து புதியகால நூன்முறைப்பாடங்களாக வமைப்பதற்காக வேண்டும் நிபுணர்களை இந்தக்கணமே நியமனஞ் செய்தலும் வேண்டும். பெரிது பெரிதான ஒவ்வொரு மீட்டிங்குகளிலும் இவ் விஷயத்தைப்பற்றிக் கலந்து பேசுதலும் வேண்டும்.

முதன்முதலாக நம்மதக் கல்விச்சாலைகள் எந்த எந்த நகரங்களி லாவசியகமாக ஏற்படுத்துதல் வேண்டுமென்பதைக் கணக்கெடுத்தல் வேண்டும். இவைச் சோதிப்பவர்களையும் நியமித்தல் எந்நன்றும் நியாயமானதே. சமயக்கல்வியு மதற்காகவேண்டும் வித்தியாசாலைகளும் நாளுக்கு நாள் காலத்துக்கேற்ப முறையாக வளர்ந்துவருமாயின் அன்றே தேவாலய முதலிய திருப்பணிகளாலும் பெரும்பயனுண்டாமென்பதையும் நாம் கவனித்தல் வேண்டும். சமயக்கல்வியாலல்லது நம் பரசிவப்பெருமானை யாங்ஙனங் காணக்கூடும்? நமக்குப்பின்வரும் நம்மிளைய சகோதரர்களுக்கும் நல்வழியைக் காட்டிவிட்டன்றோ நாம் செல்லுதல் வேண்டும். அவர்களெல்லாம் நம்மை நினைந்து பேரானந்தமடையுமாறு வேண்டும் எந்த வேலைகளையும் நாளைச் செய்வோமென்று நினையாமல் இந்தக்கணமே செய்து முடித்துவிடுவோமாகுக. நம்முடைய சமயமும் சமயக்கல்வியும் அதனைப்போதிக்கும் வித்தியாசாலைகளும் நீடூழிகாலம் நிலைபெற்று வாழ்ந்துவருமாறு எல்லாம் வல்ல இறைவனை நாமெல்லா மனப்பூர்வமாக வணங்குவோமாகுக. சுபம்! சுபம்!! சுபம்!!!

சமயாபிவிர்த்தியும், சமயநூற்களும்.

ஓ! சமதன்பார்ந்த ஐயீர்! எல்லாம் வல்ல நம்முடைய செல்வவிநாயகன் திருவருள் விலாசப் பெருக்கத்தால் இங்ஙனம் சமயாபிவிர்த்தியும் சமயநூற்களும் என்னும் அங்கத்தை வரையத்தொடங்குவாம்:

1. அஃதாவது ஒருசமயம் எந்நாளும் ஒரே தன்மையதாக இராமல் தனது பற்பல அங்கங்களும் நாளுக்கு நாள் மிகுதியும் பெருக்கமாக வளர்ந்து வருதலே சமயாபிவிர்த்தியென்றும், சமய இலக்கணங்களையெல்லாம் மிகத்தெளிவாகப் போதித்து வருகிற கல்வி அல்லது அக்கல்வியை யுடைத்தாகப்பெற்ற புத்தகங்கள் (நூற்கள்) என்றும் நம்போல்வார் ஒவ்வொரு நண்பர்களும் நன்குணர்வார்கள்.

2. நம்முடைய சைவ சமயமானது நாளுக்குநாள் அபிவிர்த்தியாக வேண்டும் பல அரிய விஷயங்களைப்பற்றியும், நம் சமயநூற்களைப்பற்றிய பல அரிய விஷயங்களைப்பற்றியும் நம் பரத கண்டத்துள் வழங்கும் பல பாஷைகளினும், பற்பல மதப்பயிர்ச்சிகளினும் தேர்ந்த வல்லுநர்களாயும் கோடி சூரியப்பிரகாசம் போன்ற பேரறிவுள்ளவர்களாயுமுள்ள நம் சமயத்தைச் சார்ந்த பல மேதாவிகளாலேயும் கவனிக்கப்பட்டே வருகிறதெனினும் அவர்களின் இரண்டு திருவடிகளையும் அடியேஞ் சிரமேற்கொண்டு எவ்வகைத்தாலும் சிற்றறிவுடையேமும், சிற்சில நூற்களிலே சின்னாட்பயிர்ச்சி யுடையேமுமாகிய எம்முடைய கவனத்தையும் அதனாலேயுண்டாம் அபிப்பிராயங்களையும் வெளியிடக்கருதி ஏதோ தெரிந்த ஒருவாறு வரையத்துணிவாம்.

3. சகோதரர்களே! நம்முடைய சைவசமயத்திற்கே யுரித்தாய்தற்காலவரையி லியன்றுவரும் ஒவ்வொரு நூன்முறைச் சட்டங்களையும் ஒருங்கே நம்முடைய மகா சங்க சர்வகலா நிபுணர்களைக்கொண்டு வரன்முறையாக வாராச்சி செய்யுமாறு செய்து, இறந்தது விலக்கல், எதிரதுபோற்றல் என்னும் உத்தியின்படி வழிநூல் சார்பு நூற்களாகவோ எனினும் அல்லது முதனூலாகவே ஒரு தனிநூலாகவோ எனினும் ஓர் நூல் செய்யப்புகுவோமாயின் பழைய காலத்து நூன்முறைகளாம், பழையகாலத்து நூன்முறைகளாமென மயங்கி நிற்குமாண்டன்மையையொழித்து நிகழ்காலத்திற்கும், வருங்காலத்திற்கு மொப்புமாறேயே நூன்முறையங்கச் சட்டங்களாகவமைத்து நூன்முடித்துக்கோடலும் வேண்டும்.

4. வருங்கால வியற்கைகளை யொட்டிய நிகழ்கால வியற்கைகளுக்கேற்ப விய

னும் இயற்கையே உலக வியற்கையாம். கால வியற்கைகளைச் செயிக்கு மாண்டன்மை தேவர்க்கங்களுக்குங்கூட வின்றும் பெரும்பான்மையும் அறிவுடையாராகவே நிறையப்பெற்ற பெரிதான இந்த நிலவுலகத்திலே தோற்றப்படுகிற பலவேறுவகைகளான ஒவ்வொரு சமயமும், மனப்பூர்வமான ஆவலோடும், திருப்தியோடும், சிற்சில வுபகாரவீறுகளோடும் ஏனைய சமயத்து அந்த வருணத்தவர்களையும், எந்த ஏழைமாந்தர்களையும் வரவேற்றுக் கொள்வதற்கும், நம்முடைய சைவ சமயமாத்திரம் தற்காலம் அவ்வாறு வரவேற்றுக்கொள்ளாமலும்; அதற்காக வேண்டும் ஒரு வழியான ஏற்பாடுகளொன்றும் செய்யாமலும் நித்திரை புரிந்துகொண்டிருப்பதற்கும் காரணம் யாதோ? முன்னைய ஞான்றுகளிலேயுடைத்தாயிருந்த நம் சமயகுரவர்களைப்போன்றும் இந்த ஞான்றுகளிலில்லையென்பதுதானோ? கவனிக்குமிடத்து அன்னவர்களைப் போன்ற தற்காலத்திற்கு வேண்டுஞ் சமயகுரவர்களை யுண்டாக்கிக்கொள்வதற்கு முதற்கருவியும் யாமேயாம். அங்ஙனமாயின் அந்த ஞான்றுகளி லுடைத்தான நம்போல்வார் அன்னவர்களை யெவ்வாறுண்டாக்கிக் கொண்டார்களென நினையுங்கால் பாவமற்ற வியற்கைகளாலே யுண்டாக்கிக்கொண்டார்களேயல்லது வேறு எவ்வித காரணத்தாலுமன்றும். அங்ஙனமாயின் தற்காலத்திலுள்ள நாமெல்லாம் பாவஞ்செய் இநவர்களென்பதுதான் கருத்தோ எனின்? காலத்திற்கேற்ப வியலு மியற்கைகளே பாவமற்ற வியற்கைகளாம். தற்காலக் கிரமங்களுக்கேற்ப புதியநூன்முறைச் சட்டங்களின்படி யியலுவதற்கு என்று முதன்முதலாகத் தொடங்கப்படுகின்றேமோ அன்றைய ஞான்று முதன்முதலாகவே முன்னைய சமய குரவர்களினும் பதின்மடங்கு மிகுதியான மெய்ஞ்ஞானபோதக் கல்வியாதியறிவுகளோடும் பிறப்பதற்காக நம்முடைய பாரதமாதாவின் உதிரத்திலே நம்முடைய பரசிவப்பெருமானின் போகத்தாலே கருவாகத் தரித்துவிடுவார்கள். அவ்வாறு தரித்து நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகக் கருக்கட்டி புருக்கூடிக் கருப்பையினில் யாதொருவிதமான இடையூறுகளுமின்றி நிறைந்து உள்ளகாளொருங்கும் முறையாக வளர்ந்து பிறந்த இரண்டு மூன்று பிராயமுதற்கொண்டே இறந்தகால சமய குரவர்களைப்போன்று நம் சைவ சமயத்திற்குரிய தொண்டுகளை யெல்லாம் முறையாகச்செய்து வருவதோடுங்கூடத் தோற்றப்படுகிற மூச்சகங்களையுமே நம்முடைய சைவ சமயமாக்கியும் பார்ப்பார்களென்பதிற் சந்தேகமுமில்லை.

5. சகோதரர்காள்! நாமெல்லாம் அறிவற்றவர்களோ? ஆண்மையற்றவர்களோ? ஞானமற்றவர்களோ? கல்வியற்றவர்களோ? உலக வியவகாரங்களற்றவர்களோ? சமயாபிமானமற்றவர்களோ? ஆய்ந்துநோக்குமிடத்து ஒருங்கே யாவுமுற்றவர்களாகத் தானே காணப்படுகிறேம். நம்முடைய சமயாபிவிர்த்தியைப்பற்றி யெற்றும் நம்முடைய கவனத்திலேற்றாது நம் சமயத்தவர்களையும் நம் சகோதரர்களையும் நம் நாட்டவர்களையும் உள்ள கோடிக்கணக்கான மாந்தர்களையும் பஞ்சமரெனவோரிழிவான நாமஞ்சாற்றியும், எத்துணையோதூர முயர்தர நாகரீகத்தில் இயல்பவர்களாயிருப்பினும் உடனிருந்து போஜனஞ்செய்வதற்கொ[illegible]யும், நம்மீது அன்னவர்களின் நிழற்படினுங்கூட ஸ்நானஞ்செய்தல் வேண்டுமெனவும், தேவார திருவாசகாதிய திருமந்திர

கள் முதலிய பெரிய வேதநூற்களை யவர்கள் வோதக்கூடாதெனவும், அன்னவர்களைப் பழையகாலத்துவழக்கமாமென்றுதற்காலத்தும் பிளவுபடுத்திவைத்தும், ஏனைய மதங்களிற் போய்நுழைவதற்கு இடங்கொடுத்து நிற்பதும் யாங்ஙனம் நியாயம்? இப்படிப்பட்ட நம்முடைய இயற்கைகளினுந்தான் பழையகாலத்துச் சமயகுரவர்களைப் போன்றுதற்காலத்துஞ் சமய குரவர்கள் வந்துதோன்றிவிடுவார்கள்போலும்! ஆ! ஆ! இஃதென்னை யாச்சரியம்! நம்முடைய விபூதி ருத்திராக்கங்களைத் தீண்டிவிட்டாலுங்கூட நம் சமயத்தாருட் சிலர் கோர்ட்டில் வியாச்சியம் போடவிடுவார்கள் போலுமன்றோ காணப்படுகிறது. அந்தோ! இஃதென்னை கருணையற்ற வைதிகம். நியாயமற்ற நூன்முறைச்சட்டங்கள். இக் கொடியதோர் பழக்கவழக்கங்களொழிந்தாலன்றோ சமயமபிவிர்த்தியாகும்.

இஞ்ஞால மொருங்கிற்கு மோர்விதம் நமக்குமாத்திர மோர்விதமாமோ? எங்கெங்கோ பிறந்து வளர்ந்தவைகளாயிருந்துந் தற்காலம் மிகச்சிறந்த நம்மிந்துமதமென்னு மில்லத்தில் வந்து நுழைந்துகொண்ட ஏனைய மதங்களையும் அதன் குரவர்களையும் நன்றாகக் கவனிப்போமாகுக. ஆனாலென் சகோதரர்களே! காலங்களுக்கேற்ப ஒவ்வொரு நூன்முறைச்சட்டங்களையும், புதிய புதியனவாக ஆக்கற்கும், அழித்தற்கும், போதிய சக்திகள் நம்போன்ற மனித வர்க்கங்களுக்கு முண்டோயில்லையோ வென்பது நன்கு எண்ணி நோக்குதல் வேண்டும். [illegible]தவ் வர்க்கங்களாலே முடிதல்வேண்டுமென்பதூஉம் வாய்மைதான். எனின் தெய்வத்தன்மை பொருந்தியவர்களைத்தானே தேவர்க்கமெனப்படுகிறது. எனின் மனித வர்க்கங்களுந் தெய்வத்தன்மை பொருந்தியவர்களன்றோ? அன்றெனின் "தெய்வம் மனுஷிய ரூபேணும்" என்ற மகாவாக்கியத்தை யாங்ஙனமொழித்தல் சாத்தியம். எவ்வகைத்தான வலிகளும், மாட்சிகளும் தங்கிய நம் கவர்ன்மெண்டார் அஃதாவது நம் அங்கிலோ வருப்பார் தங்களின் சமயாபிவிர்த்திக்காக எத்துணைதூரம் சிரத்தையோடும், முழுமனவலியோடும், மிகுந்த பரபரப்போடும் கவனித்து வேண்டும் வேலைகளைச்செய்து வருகிறார்களென்பதை நாமும் நன்கு கவனித்தல் வேண்டும். ஏதோ இவன் சற்றுக் கொவங்கொண்டவன்போற் றெரிகிறது. ஆகலினுற்றான் இவ்வாறு மனத்துணிவோடு மொழிகிறானென்னும், வியவகார நிலைமைகளறியாத சிலரின் பயனிற்கூற்றையுஞ் செவிக்கேற்றுக்கொள்ளாமற் றள்ளுதலும் வேண்டும்.

6. எத்துணைதூரம் தாழ்ந்தவகுப்பார்களேயாயினும், ஏனைய எந்தச் சமயத்துள்ளவர்களேயாயினும் தங்களின் சமயக்கோட்பாடுகளை யொழித்து நம்முடைய சமயக் கோட்பாடுகளைச் சார்ந்து ஒழுகுவதற்கு வருவார்களேயாயின், அன்னவர்களை மனப்பூர்வமான ஆவலோடும், அன்னவர்களுக்காக வேண்டுஞ் சில வுபகாரவீற்றோடும் ஏனைய சமயங்களைப்போன்று நம்முடைய சமயமும் வரவேற்றுக்கொள்வதற்கான ஒவ்வொரு நூன்முறைச் சட்டங்களையும் இந்தக்கணமே பூர்த்தியாக்குதலும் வேண்டும். நம்முடைய சமயத்திற்கு நாமாற்ற வேண்டும் கடமைகள் இன்ன இன்னவென்பதையும் நாம் நன்குணர்தல் வேண்டும். யாவருடைய நெற்றியிலே திருநீற்றைக் காணுகிறேமோ அவரையெல்லாம் நம் சமயத்தவரே யெனவும், நம் சைவசமயத்தி

குரிய எந்தப் பாத்திரைகளுக்கும் நம்போன்ற சுதந்தரமுடையவரே எனவும், நம்மோடுங்கூடச் சமபோஜனஞ் செய்வதற்கு அருகராவாரெனவும் நாம் நன்குணர்தல் வேண்டும். இதற்காக வேண்டுஞ் சட்டத்தை முதன் முதலாக இன்னவகுப்பாரே உண்டாக்கினார்களெனவும், இன்ன வகுப்பாரே நம்முடைய சைவ சமயத்தை அபிவிருத்தி செய்வதில் மிகுந்த விருப்பமுடையவர்களெனவும், பற்பல வகுப்பாராலும் புகழப்படுகிற புகழையுந் தேடுவோமாக. பெரிதான மீட்டிங்குகள் கூடிச் சேர்ந்து பேசித் தெளிவோமாக. இச்சிறியோமாற் கூறற் கொழிந்து மறைந்து கிடக்கும் ஏனைய ஒவ்வொரு நூன்முறைச் சட்டங்களையும் கூட முற்றுங் கற்றுத் தேர்ந்த நாவல்லவர்களோடுங் கூடி நன்கு சூழ்ச்சியாக ஆலோசனை செய்து தற்கால நாகரீகங்களுக்குத் தக்க தக்கவாறு விதி விலக்குகளைக் கவனித்து விலக்குவனவற்றை விலக்கியும் விதிப்பனவற்றை விதித்தும் நம்முடைய சமயம் வேண்டி நிற்கும் ஒவ்வொரு முறைகளையும் ஆன்றோர்கள் நிரம்பச்செய்வார்களாக.

7. சகோதரர்களே! நாமெல்லாம் பேரறிவுடையவர்களா சிற்றறிவுடையவர்களா வென்பதைக் கவனிப்போமாயின் பேரறிவுடையவர்களே யாவோமென்பது மிகச் செவ்வையாய் நன்குவிளங்குகிறது ஆதலின் கீழ்வரும்விஷயங்களை வேறொன்றில் கவனத்தைச் செலுத்தாதவண்ணம் கவனித்தல் வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேம். அஃதாவது நம்மவர்களுக்காக வேண்டும் திருமணச்சடங்கு சாச்சடங்கு சிரார்த்த முதலிய கருமாதி வகையராக்களைச் செய்துவைப்பவர்கள். ஏனைய வகுப்பார்களுக்கு ஏற்பட்டிருக்கும் குருக்கண்மாரைப்போன்று நம்முடைய வகுப்பாருட் டோற்றி நம்மோடும் உடனிருந்து சமபோஜனஞ் செய்யக்கூடியவர்களாகத்தானிருத்தல் நியாயம் என்பது ஓர் புறமிருப்பினும், அன்னவர்களாலே அச்சடங்குகளைச் செய்துவைத்தற்கு வேண்டு முதற்கருவியாயுள்ள மறைமொழிகளான சுலோகங்களெல்லாம் எந்தப்பாஷையிலே யுடைத்தாயிருக்கிறதென்பதையாவது நாம் கவனித்தல் வேண்டாமோ? ஆம்!ஆம்! கவனித்தோமே. நம்முடைய பாஷையினின்று மேற்றனு முயர்ந்த பாஷையென்பது நம்முடையவகுப்பின் சிற்சிலோர் மனத்திடையெழுவது ஓர்புறம் நிற்பினும் அந்நிய பாஷைதானென்பதை நன்றாகக் கவனித்துத் தெரிந்து கொண்டிருக்கிறேம். அப்பாஷையினின்றும் வெளிவருஞ் சுலோகங்களாலே செய்விக்கப்படும் எந்தச் சடங்குகளாலேயும் செய்து வைப்பவர்களாவ செய்யப்பெறுகிறவர்கள் என்னை தெரிந்து கொண்டார்களென்பதை நாம் கவனித்தல் வேண்டாவோ? அவ்வாறு கவனிப்போமாயின் பெரும்பான்மையோர் சித்திரப் பாவையைப் போன்றே யங்ஙனங் காணப்படுகிறார்கள். ஏனைய சிலர் அவர் அரைகாலாக முண முண வென்பதைக்கேட்டு அரைக்கால் வீசமாக முண முண வென்கிறார்கள், இன்னுஞ் சிலர் அவ்வாறு முணமுணவென்பதற்கு நாணி என்சொல்லினும் மௌனமாயிருந்து விடுகிறார்கள். ஐயீர்! அழகான நம்செந்தமிழ்ப்பாஷையாயின் இத்துணை தொந்தரை வேண்டுவதில்லையே! இன்னுஞ்சிலர் அங்ஙனம் கேட்கும் சுலோகங்களாலே இன்ன இன்ன விதமான நூன்முறைச்சட்டங்கள் தான் அமைந்து விளங்குவதென்பதை யெற்றுத் தெரிந்து கொள்ளாத நிலைமையைத்தான் தெரிந்துகொண்டார்களே யல்லது பிறிதின்றாம்.

8. நண்பர்காள்! நன்றாக வாய்ந்து நோக்குதல் வேண்டும். முதன் முதலாக ஒரு மணமகனும் மணமகளும் ஆகிய தாங்களிருவரும் செய்துகொண்ட திருமாங்கலிய தாரணத்தன்று அவர்களிருவரு மனனஞ் செய்துமுடித்துக் கொண்ட உடம்படிக்கையின் கருத்துக்களை மட்டுமாவது இன்னதுதானென்பதையவர்கள் தெரிந்து கொண்டிருத்தல் வேண்டாமோ? அவ்வாறு தெரிந்து கொள்ளாதிருத்தல் இனி வருங் காலங்களுக்கு நியாயமாகாதாகலின் அவ்விவாக முதலிய சடங்குகளைச் செய்து வைப்பவர்கள் எவர்களே யெனினும் அவர்கள் கூறுஞ் சுலோகங்களை மட்டுமாவது நம்முடைய இனிதான செந்தமிழ் பாஷையிலே மொழிபெயர்த்து அங்ஙனமுடைத்தாயிருக்கும் ஒவ்வொரு நண்பர்களுக்கும் மணமக்களிருவருக்குந் தெற்றென விளங்குமாறு சொல்லிச் செய்விக்கும்படி சகல கிரியைகளையும் முடிவுபெறச் செய்தலும் வேண்டும்.

9. நம்முடைய செந்தமிழ் வாக்கியங்களையல்லது வேறு எந்தப்பாஷையின் வாக்கியங்களேயாயினும் அல்லது அஃது புத்தேளுலகத் திருந்து புதிதாக இதற்கெனத் தானே யெழுந்து வந்த பாஷையின் வாக்கியங்களேயாயினும் நம்முடைய வகுப்பாருக்குரிய எந்தவிதமான சடங்குகளினும் உபயோகப்படுத்துதல் கூடவே கூடாது. ஒவ்வொரு விதமான சடங்குகளுக்கும் ஆக வேண்டும் ஒவ்வொரு சுலோகங்களையும் ஒருங்கேயொன்றுகூட்டி நம் செந்தமிழாக மொழிபெயர்த்துத் தனியான ஒரு தமிழ்ப் புத்தகமாக்குவதே உத்தமம். நம்முடைய வகுப்பின் ஒவ்வொரு குருக்கண்மாரையுந் தெளிவாகக் கற்றுக்கொள்ளச்செய்தலும் வேண்டும். தமிழ் வாக்கியங்களாலே எந்தக் கிரியைகளைச்செய்யினும் அந்தக் கிரியைகளுக்குரிய ஒவ்வொரு பயனிலைகளும் இல்லையென வொழிந்துபோகவுமாட்டாது. எத்துணை தூரம் கரடுமுரடுகளான சுலோகங்களாயிருப்பினும், எத்துணை தூரம் உயர்ந்த பாஷைகளிலே புள்ளவைகளாயிருப்பினும் அவ்வப்பாஷைகளினும், நம் தமிழ்ப் பாஷையினும் இலக்கண இலக்கியங்களோடுமொருங்கே வரன்முறையாகக் கற்றுத்தேர்ந்த நிபுணர்களாலே மொழிபெயர்க்க முடியாதென்பதுமில்லை. சாச்சடங்குகள் விவாகாதி முதலிய காலங்களில் சும்மா வெறுமையாய் வாயை மென்னிக்கொண்டும் பரக்கப்பரக்க விழித்துக்கொண்டும் இருத்தல் எற்றானும் உசிதமாகாது. இதற்காக நாமெல்லாமொருங்கே வடமொழிப்பாஷைக் குரியவர்களாய்விடவுமுடியாது. காலதர்மமோ அங்ஙனே பாஷைக் குரியனவாகக் காணப்படுகிறது. ஒருவாறு நமது வித்தியாசாலைகளிலெல்லாம் வடமொழி நூற்களையும் ஒரு கட்டாயப்பாடமாக வமைத்துவிட்டாலும் மிகுந்த உத்தமந்தான். எந்தவாற்றானும் நம்முடைய கருத்தாவது ஒவ்வொரு சடங்குகளுக்குரித்தாய ஒவ்வொரு நூன்முறைச்சட்டங்களுஞ் செவ்வையாக ஒவ்வொரு நண்பர்களும் மிகத் தெளிவாகத் தெரிந்துகொண்டிருத்தல் வேண்டுமென்பதேயாம்.

10. என் அருமைச் சகோதரர்களே! எம் சைவ சமயத்தைச் சார்ந்தோ! செல்வந்தர்களே! ஓ! சமய குரவர்களே! ஓ! சமயாபிமானிகளே! சமயநூற்களை யெல்லா

சமயாபிவிர்த்தியும், சமய நூற்களும்.

...ளொருங்கே கற்றுத்தேர்ந்த வல்லுநர்களை. நம் சைவசமயமானது நாளுக்குநாள் தேய்வுற்று போகாதவண்ணம் வேண்டுமோர் புத்தியான்முறைச் சட்டத்தை வகுக்குமாற்றிலே நம்முடைய தூய்மையான அறிவைச் செலுத்துதல் வேண்டும்.

11. நம் சைவசமயத்தைச்சார்ந்த எந்தச் சகோதரர்களையும் ஏனைய மதங்களிற் போய் நுழையாதவண்ணம் ஓம்புதல் வேண்டும்.

12. சைவசமயத்தைச்சார்ந்த எந்தச் சகோதரர்களோடும் சமபோஜனம் நடப்பதற்காக வேண்டும் ஏற்பாடுகளை யிந்தக் கணமே பூர்த்தியாக்குதலும் வேண்டும்

13. நம் சைவ சமயத்தைச் சார்ந்த உயர்தரமான பலவிஷயங்களு மாங்காங்குடைத்தான எந்த மாந்தர்களுக்குந் தெற்றெனவிளங்கி நம்முடைய பரசிவப்பெருமான் பேரிலக்கண மிஃதெனத்தேர்ந்து தற்காலவரை யனுபவித்துவரும் நரகவாதனையினின்றும் விலகிச் சுவர்க்காதி போகங்களைத் துய்ப்பதற்காகவேண்டும் உபந்நியாசங்களைச்செய்வதற்குத்தகுந்த சித்தாந்த சபைகளை நகரத்துக்குநகரம் ஸ்தாபித்தலும் வேண்டும்.

14. இறந்த காலங்களிலே யுடைத்தாயிருந்த நம் சமய குரவர்கள் நால்வரைப் போன்றும் இனிவரும் ஞான்றுகளினு மற்புத மூர்த்திகள் உற்பவமாவதற்காக வேண்டும் நற்றவங்களை யிவ்வணம் உள்ளன்போடு மூளுற்றுதலும் வேண்டும்.

15. மெய்யறிவாளர்களுக்கு அருவருப்பைத் தரத்தக்க சிலவேடப்போர்வைகள் நமது நாடுநகரங்களிலும் வந்துநுழையவிடாதவண்ணம் பாதுகாத்துக்கோடலும் வேண்டும்.

16. அந்நிய சமயங்கள் ஏனைய சமயத்தவர்களை வரவேற்றுக்கொள்ளுகிறதைப்போன்று நம் சைவசமயமும் வரவேற்றுக்கொள்ளத்தக்க புதிய மார்க்கங்களை யிந்தக்கணமே பூர்த்தியாக்குதலும் வேண்டும்..

17. வடமொழிப் பாஷையிலே யுடைத்தான நம் சைவ சமயத்திற்குரிய ஆகமாதி முதலிய எந்த நூற்களையும் நமது தாய் மொழியான தமிழ்ப் பாஷையிலே மொழிபெயர்த்து வைத்தலும் வேண்டும்.

18. நம்முடைய சைவ சமயமானது நாளுக்குநாள் விர்த்தியாக வேண்டும் பல முக்கிய விஷயங்களும் நமது வகுப்பைச் சார்ந்த எந்தச் சகோதரர்களின் அறிவை விட்டும் நீங்காதவண்ணம் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராகுக.

19 சமயாபிவிர்த்தியும் சமய நூற்களின் சீர்திருத்தங்களும் நாளுக்குநாள் விருத்தியடைந்துவந்தாலே நம்முடைய நாடுநகரங்களெல்லாம் தற்காலவரை யுடைத்தாயிருக்கும் யோக க்ஷேமங்களைவிட, எத்துணையோ பன்மடங்கு மிகையான யோக க்ஷேமங்களோடுங்கூடிச் செழிப்பாக வாழ்ந்து வருமென்பதில் எட்டுணையேனுஞ் சந்தேகமின்றாம்.

20. சமயாபிவிர்த்தியை முன்னிட்டு நாம் செய்யவேண்டும் எந்த வேலைகளையும் நாளைச்செய்வோமென்று எண்ணும் எண்ணத்தை யொழித்து நினைத்த வண்ணமே செய்துமுடிக்குமாற்றலையும் எல்லாம் வல்ல நம்முடைய இறைவன் தந்தருளுவாராகுக.

சுபம்! சுபம்!! சுபம்!!

பிறசமயம் புகாமையும், அதனை நாமிகழாமையும்.

நிறைமொழி பலவும் முறைமுறையாக நம்
இறைமகனடிதொழ நியம்பிடவருமே.

சகோதரர்களே! இவ்வனம் பிறசமயம் புகாமையும் அதனை நாமிகழாமையும் என்றும் அங்கத்தை வரையத் தொடங்குவாம். அஃதாவது பெரும்பான்மை யவர்களுக்குந் தெற்றெனவிளங்குமாதல்பற்றி வரையாது விடுத்து விஷயத்தின்மேற் செல்லுவாம்:—

1. இயல்பாகவே தமக்குக்கிடைத்த ஒரு சமயத்தினின்றும், அதனைச்சார்ந்த நடையுடை பாவனை முதலிய கோட்பாடுகளினின்றும் விலகி ஏனைய ஒரு சமயக் கோட்பாடுகளான வேடங்களைத் தமதங்கத்தின்மீது புனைந்துகொள்ளுமாற்றில் எட்டுணையானும் நாணமின்றிப் புகூஉம் சில ஏழை மாந்தர்களின் தன்மையைப்பற்றிச் சற்றுக் கவனிப்பாம். ஆய்ந்து நோக்குமிடத்துச் சகோதரர்காள் பெரும்பான்மை கல்வியறிவுசெல்வமுதலியவற்றால் தாழ்ந்த வகுப்பாரே எற்றானும் எற்றும் முன்பின் யோசனையின்றி ஒருச்சாண் கும்பியை நிழுங்காக வளர்க்கு மாண்மையுமின்றி மானத்தையுமொழித்து ஈனத்தையுஞ் சிரமேலேற்று ஏனைய மதங்களிற்போய் நுழைந்துகொள்ளுகிறார்களென்பது தற்கால வரை யெப்பாலவருந் தெற்றெனத்தெரிந்த விஷயமேயாம். அன்னவர்கள் எதனிமித்தமாக ஏனைய மதங்களிற் போய் நுழைகிறார்களென்பதைப் பற்றிச் சற்றுச் சீர்தூக்கிப் பார்த்தல் வேண்டுவது மாவசியகந்தான். நம்மைப்போன்ற உயர்ந்த நாகரீகங்களையும் நானாவிதமான கல்விப் பயிற்சிகளையும் அடையத்தகுந்த அறிவினையோடுங் கூடி நம்மோடும் பிறந்த நம் சகோதரர்களை ஏதோ பூர்வம் சில காலங்களுக்கு முன்னர் அக்காலத்திய இயற்கைகளுக்கும், நாகரீகங்களுக்கும், நேரொப்பப் பகுதி பகுதிகளாகப் பிளவுபடுத்தியும், சில நூல் வல்லோர் தங்களின் பகுதியார்களுக்கு அடிமைகளாக்கியும், சிலவஞ்சமான நான்முறைச் சட்டங்களினாலே அன்னவர்களைச் செய்வினை, உணவு, கல்வி முதலிய ஆசாரச் சீர்திருத்தங்களாலேயும், நடையுடை பாவனை முதலிய சுகாதார முறைகளினாலேயும், செல்வப் பேறுகளின்றி வருந்திக் கொண்டிருந்ததினாலேயும்; அறிவின் விளக்கம் மிகுதியுங் குறைவுபட்டிருந்ததினாலேயும், அடிமைகளாக வியங்க வேண்டுவதற்குரிய பலகாரணங்களையே அன்னவர்களுக்கு முக்கிய நல்லொழுக்கங்களாகக்காட்டி யேமாற்றி பலவித நியாயங்களாலோ அல்லது அநியாயங்களாலோ ஆடுமாடுகளைக் கிரயங் கொடுத்து வாங்குவதைப் போன்று வாங்குவதற்குரிய பல வியற்கைகளும் நாளாரம்பத்தில் வளர்ந்தோங்குமாறு செய்தும் ஆண்டாரடிமைகளாக வாழ்ந்துவந்தார்கள் எனினும் தற்காலவரை நிகழும் நவீன நாகரீகங்களைப் பின்பற்றி யொழுக முன் வந்திருக்கும் நம்மவர்களின் இக்கால நிலைமையும் அன்னவர்களைப் பண்டைய ஞான்றைய நிலைமைகளிலேயே வைத்து அடக்க முயலும் நம்மறிவின் நிமித்தமேயாம்.

பிரசமயம் புகாமையும், அதனை நாமிகழாமையும்.

1. நேயர்காள்! நேர்செங்கோடித்து விலைக் கொள்ளாதென்பதை நாம் நன்குணர்ந் தெரிந்துகொண்டிருக்கிறோம். பெரிதாயே எண்பத்து நான்கு நூறாயிர யோனி பேதங்களையுங் கடந்து தெய்வவயத்தாலே நாமித்த மனிதச் சரீரத்தை எய்துகொண்டதின் வியப்பை நன்கு எண்ணி நோக்கித் தெளிதலும் வேண்டும். பூரண சக்தியோடு புதிய நாகரீகங்களிலே யொட்டி யொழுகுதலும் வேண்டும். நம்முடைய சகோதரர்களை யினிமேலாயினும் நம்முடைய சைவ சமய மென்னுங் குடும்பத்தை விட்டு நீங்காது நம்மோடுகூடி யொருமைப்பட்டு வாழ்வதற்காக வேண்டும் அறிவினை அன்னவர்கள் உணருமாறு நாம் புகட்டுதல் வேண்டும். ஏதோ ஒரு குடும்பத்தில் 5, 6, சகோதரர்களுளராயின் அவர்களிற் கற்றுக்கொண்ட சகோதரர்களாலே கற்றுக் கொள்ளத் தயாராயிருக்கும் தங்களின் இளைய சகோதரர்களும் வேண்டு முபகார விதங்களை அவர்களாலே முன்னக்கூட்டி வலிதாகக் கொடுக்கப்பெற்று அன்னவர்களைப்போன்று ஒருங்கே ஒரன்முறையான சட்டப்படங் கொய்தக்கூடுமானவரை கற்றுத்தேர்ந்து ஏகக்குடும்பமாக வாழ்ந்து வருவதையும், இன்னும் நம்முடைய வகுப்பின் அநேக குடும்பங்களிலே மூத்தாராயுள்ளாரொருவர் தம்முடைய மனைவி மக்கள் முதலிய பந்துமித்திரர்களையும், தக்கராத்திலே யுடைத்தான இன்பாதி போகங்களையுந் துறந்து கடல் யாத்திரை புரிந்து பெரும்பொருளீட்டிக்கொணர்ந்து தங்களின் இளைய சகோதரர்களுக்கும் பாகித்துக்கொடுத்து ஒரே குடும்பமாக வாழ்ந்து வருவதையும் நமது இரண்டு கண்களாலவுங் காணவில்லையா? ஒரேவிதமான மனிதவர்க்கத்துள் தாழ்ந்த வருணமென்றும் உயர்ந்த வருணமென்றுங் காணப்படுவதற்கு வெளிப்படையாகத் தோற்றப்படுகிற குறிகளாவது என்னை? பொதுவாக நம் பாதகண்டத்துள் கிறிஸ்தவ மார்க்கமும் மகம்மதிய மார்க்கமும் எவ்வாறு வரவேற்றுக்கொள்கிறதென்பதையும், எவ்வாறு உலாவித்திரிகிறதென்பதையும் நாம் நன்குகக் கவனித்தல் வேண்டும். ஆனால் செல்வமுங் கல்வியும் பெற்ற வொருவன் தேவருலகங்களுக்கே சென்று ஆங்கு சிலகாலம் யாத்திரை செய்யவேண்டுமென எண்ணினும் அவ்வெண்ணமானது அந்தக்கணமே பூர்த்தியாகி யாத்திரை செய்வானென்பதிற் சந்தேகமென்னை? நம்முடைய இந்து மதமானது செல்வம், கல்வி, அறிவு, ஞான முதலியவைகளாலேயுஞ் சிறந்து நிறைந்த ஏனைய மாகாண நம் சகோதரர்களாலே ஏனைய கண்டங்களினுஞ் சென்று மிகு சீர் சிறப்போடும் உலாவித்திரியினும் நம்முடைய சென்னை மாகாணத்தில் கல்வி, அறிவு, ஞானம், பெருந்தகை, கருணை, செல்வம் முதலிய செல்வப்பேறுகளெல்லாம் ஒருங்கே சிறந்து நிறையப்பெற்ற தலையானவோர் வகுப்பாராய் நாமுந் தோற்றப்படுகிறோமாகலின் நம்முடைய செந்தமிழ் நாட்டுக்குள்ளே மட்டுமாவது நம்முடைய சைவ சமயத்திற்குச் செய்யவேண்டும் பல நன்மைகளாவது யாதெனக்கவனித்தல் வேண்டாவோ? நேயர்காள்! நம்முடைய சகோதரர்களையெல்லாம் நம்மறிவின் விளக்கத்தால் ஒருங்கே அயல்மதங்களுக்குப் பறிகொடுத்துவிட்டு வெறுங் கட்டாந்தரைகளிலெல்லாம் கிருங்கல்லுகளாலே ஆலயங்களை

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
2? ... 1914
MADRAS

உ

சிவமயம்.

மரகத விநாயகர் துணை.

நாட்டுக்கோட்டை வைசியம்.

எமது அன்பார்ந்த ஐயா!

இந் நாட்டுக்கோட்டை வைசியம் என்னும் மாதாந்தத் தமிழ் நூலானது நாளிது ௵ தைமீ முதற்கொண்டு வெளியாகி வருகிறது. இலக்கிய இலக்கணப் பிழையின்றி மிக உயர்வான காகிதத்தில் அச்சிட்டும், உயர்ந்த கலர்க்காகிதங்களாலே பயிண்டிங்கு செய்யப்பட்டும், "இறந்தது விலக்கல் எதிரது போற்றல்" என்னும் உத்தியைத் தழுவி அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பகுதியையும் மிக இனிதான தமிழ் நடையிலே பல மேற்கோள்களுடனே மிகவும் செவ்வையாக வரன் முறைப் படுத்தி வரையப்பெறுகிறது.

☞ எமக்குக் கையொப்பம் தந்த கனவான்கள் பலர் வி. பி. யைத் திருப்பிவிட்டார்கள். காரணம் இரண்டேகால் ரூபாயைப் பெரிதாக நினைத்தோ? அல்லது நாட்டுக்கோட்டை வைசியம் என்ற பெயர் மாத்திரைக்குத் தகுந்த பொருட் பயப்பன வல்லவென்பதை யுணர்ந்தோ? விளங்கவில்லை. நிற்க,

"இம்மை யம்மை வீடென மறைபுலங்கொள வியப்பும்
மும்மையுந்தரு முறையுடைத்தேனு நிலை முரணி
யெம்மையாழ் வயிற்றடக்கி மீட்டுமிழ்கிலா வேரிவாய்
வெம்மைகூர் நரகுய்க்கினு மெய்மையை விடேமால்."

என்ற பெரும் புகழ் வாய்ந்த அரிச்சந்திரன் என்னும் சத்தியங் காத்த உத்தமக் கோமகன் சரிதத்தை யுணராதார் யாவர்? நாடக வாயிலாகக் கண்டுங் கேட்டும் அந்தோ! அந்தோ! என இரங்கி வியப்படையாதார் யாவர்? தாம் சொல்லிய ஒரு வார்த்தையின்

முறைபிறழாது அதனை நிலை நிறுத்தும்பொருட்டு அக்கோமகன் எத்துணைப் பாடுபட்டான் என்பது தோற்றப்படுகிற முச்சகங்களும் தெற்றெனத் தெரிந்ததே! ஆம் அன்றே? அத்தகைய புண்ணிய சீலர்கள் உதயமான நம் பாரதமாதாவின் கருப்பத்தில் உதித்த நம்மனோர் யாங் கொடுத்த பத்திரிகையை மிகச் செவ்வையாய்ப் படித்துப்பார்த்தும், தங்களின் மனப்பூர்வமாய்க் கையொப்பந்தந்தும், தற்காலவரை நம் பரதகண்டத்துள் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டு ஒழுகுவோர் நாட்டுக்கோட்டை நகரத்தார் என்ற ஒரு வகுப்பாரே என ஏனைய வகுப்பார் கூறும் புகழையும் மறந்து வி. பி. யைத் திருப்பியதை நோக்க அஃது எம்முடைய ஊழ்வினைப்பயனே போலும். நிற்க, நண்பர்காள்! அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயனே என்பதையும் நாம் கவனிக்கத்தக்கதுதான்.

☞ பொருட்பாலில் மரபியல் என்னுமங்கத்தில் நம் மாட்சி தங்கிய மரபிலக்கணம் ஒருங்கும் மிகச் சிறப்பாக வரையப்பெற்றிருக்கிறது. மேலும் நமது வகுப்பின் மாட்சி மிகச் செவ்வையாய் மலிந்து காணப்பெறும். எம்முடைய தன்மையையும் யாம் எழுதப்படுகிற இந் நூலின் தன்மையையும்பற்றி மிகப்புகழ்ந்து யாமே வரைவது எற்றும் நியாயமாகாது. நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும் இந் நூலைப் பார்த்துவருதல் வேண்டுவது தான் ஆவசியகம். ஆகலின் தங்கள் ஆர்டரைத் தந்தும் பெருந்தயை கூர்ந்து வி. பி. யைப் பெற்றும் உதவிசெய்தல்வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

சந்தா விவரம்.

தபால் செலவுள்பட வருஷ சந்தா ரூ 2—4—0.

பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்குத் தபால் செலவுள்பட வருஷ சந்தா ரூ 4—0—0.

இங்ஙனம்,

☞ ப. சோ. ஆண்டியப்பன்,

பாளையங்கோட்டை.

மட்டும் கட்டுவிப்பதினாலே பயன் என்னை? நம்முடைய சைவசமயமானது நாளுக்கு நாள் தேய்ந்துபோகாதவண்ணம் வளர்ந்து வந்தாலன்றோ நாம் அன்போடும் பெரும் பொருள்களை அழித்துக் கட்டுவிக்கப்படும் ஆலயங்களும் எற்றானுஞ் சீர்சிறப்படையும். ஆகலின் எம்அருமைச்சகோதரர்களே! எவ்விதமான முகாந்தரங்களைக்கொண்டும் நாம் ஏனைய மதங்களிற் புகுதாது நம்மை நாமே பாதுகாத்துக்கொள்வதோடும், ஏனைய நம் சகோதரர்களையும் அந்நிய மதங்களிற் புகுதாமல் அறிவென்னுங் கல்வியையும், கல்வியென்னுஞ் செல்வத்தையுங் கொடுத்து,

" அன்பிலா ரெல்லாந் தமக்குரியர்
அன்புடையா ரென்பு முரியர் பிறர்க்கு "

"அன்பீனு மார்வமுடைமை யதுவீனு
நண்பென்னு நாடாச் சிறப்பு"

என்ற தேவர்கருத்தின்படி, அன்பென்னுஞ் சாட்டையாலே அன்னவர்களின் அறிவென்னும் அங்கத்தின்மீது, நீதிஎன்னும் இரத்தமானது காவிரியாறு கரைபுரண்டோடியது போன்று ஓடஅடித்து, அடக்கி அன்னவர்களையும் நம்மோடும் ஒருமைப்படுத்தி, அவர்களும் நம்மைப்போன்று மிகச்செவ்வனே வாழ்வதற்காகவேண்டும் நன்னெறியொன்றைமட்டுமாவது நாம் ஏற்றுக்கொள்ள வேண்டாவோ? நமதுழியிருக்கும் பெரும் பொருளுக்கும். பெருங் கருணைக்கும், பேரறிவாண்மைக்கும். ஏனைய பேரறச்செயல்களுக்கும் உரித்தாய நற்பயன் காமலீலாமிர்தமான இன்பாதிபோகங்கள் என்னும் ஆனந்த சாகரத்தில் அமிழ்ந்து கிடப்பது தானோ? நண்பர்காள்! நன்றாகக்கவனித்தல் வேண்டும்.

3. பொதுவாக உலகத்தில் பலதிறப்பட்ட ஒவ்வொரு மதங்களும் பெரும்பான்மை மனிதன் கடவுளைத் தேடிச்செல்லுகின்ற பலவகைப்பட்ட மார்க்கங்களையே முதன் முதலாக மிகச் செவ்வையாய் வகுத்துக் காட்டப்படுகிறதாகலின் எல்லா மதங்களும் ஒன்றுதானே? எந்தமதத்திலுள்ளவன் எந்த மதத்திற்புகுந்தால் நமக்கென்னை என்று வாளாவுட்கார்ந்து கொண்டிருப்பதினும் பயனில்லை. அங்ஙனமாயின் நமக்கு இஞ்ஞாலவாழ்க்கையே வேண்டியிராது. இமாலயம், பொதியை முதலிய பருவதங்களைத் தேடித்தான் செல்லுதல்வேண்டும். கல்வி அறிவு, ஞானம், பொறை, கருணைமுதலிய நல்லொழுக்கங்களே நம் மனித வர்க்கங்களுக்கு இன்றியமையாது வேண்டும் முதற் சாதனங்களாம் என்று ஒவ்வொரு மதங்களும் நம் செவியார்ப்ப ஓலமிடுவதை யாவரும் அறிந்தவிஷயந்தானே? அப்படியாயின் ஒருவன் வழியே சென்றுகொண்டிருக்குங்கால் ஒரு கட்குடி வெறியனும் அவனோடு பின்சென்று சில குறும்புகள் செய்ய ஆரம்பஞ் செய்வானேயாயின் இயல்பாகவே மேற்கண்ட ஒருவன் பொறையுடையவனாக இருந்து ஒன்றும் பேசாது சும்மாசெல்லுவானே ஆயின் ஏதோ அங்ஙனம் சிறிதுதூரஞ்செல்லுவதற்குள் அவ்வெறியன் முழுப்பைத்தியகாரனாகச் செய்துவிடுவானென்பதிற் சந்தேகமென்னை? மிகுதியும் பொறையுடைய அவனின்கதி ஒருவாறு பக்கத்தார் நோக்க எவ்வாறாகும்? என்பதையும் நாம் கவனித்தல் வேண்டும்.

4. பொதுவாக நாம் எங்களுடைய மதம் இத்தன்மையதென ஏனைய எந்தச்சமயத்தவர்களிடமோ எனினும் [illegible]

பிரசமயம் புகாமையும், அதனை நாமிகழாமையும்.

போதனைசெய்யவும் வேண்டாம். எங்களுடைய மதத்திற்கு வம்மின் வேண்டுஞ் செல்வங்களும், வேண்டியமாதிரி நல்லஅழகான பெண்களும், நவீன நாகரீகங்களும் தருகிறோம் என,

“ வாதுமுற் கூறேல்” “ கூரம்பாயினும் வீரியம் பேசேல்”

என்ற நம் மூதாதையின் வாக்கின்படி நாமாக முற்பட எந்தவியவகாரங்களையும் கூறவும் வேண்டாம். ஏனைய எந்தமதங்களையும் இகழவும் வேண்டாம்.

5. இன்னும் தாய், தமக்கை, தாரம், தங்கை ஆகிய இந்நால்வரும் ஒரேசாதியான பெண் வர்க்கந்தானென்பதிற் சந்தேகம் என்னை? அங்ஙனமாயின் தாயினோடும், தமக்கை, தங்கையோடும் புணர்தல் யாங்ஙனம் நீதியெனப்படும்? அவ்வாறுபுணர்தல் ஏககாலத்தில் ஒருவனுக்கு நீதியாகத்தோற்றப் படினும் அன்னவர்களைச் சட்டப்படி புணர்தற்குரிய ஆண் மக்களும் இருக்கத்தானே செய்வார்கள். அன்னவர்கள்தான் இலகுவிலே விட்டுவிடவுங் கூடுமோ? ஆனால் நண்பர்காள்! தாரத்திற்கும், தாய், தமக்கை, தங்கைக்கும் சரீராதியுறுப்புகளில் எந்தவாற்றானும் யாதொருவேறுபாடுகளும் இல்லாதிருக்கிறதென்பதையும், அந்நால்வகையோரும் ஒரே பெண் வர்க்கந்தானென்பதையும் நாம் சந்தேகமறத் தெரிந்தவர்களாயிருந்தும், அன்போடு இன்பாதி போகத்தைத் துய்க்குமாற்றிலே மாத்திரம் எவ்வாறு நம்முடைய தாரத்தைமட்டும் விரும்பப்படுகிறோமோ அம்மாதிரியாக நம் [illegible] தோற்றப்படுகிற ஒவ்வொரு மதங்களையும் நம்முடைய ஒரே இந்துமதமாக நாம் சந்தேகமற நன்குதெரிந்துகொண்டிருக்கிறோமாயினும், மதக்கோட்பாடுகளான நான்முறைச் சட்டங்களையநுட்டிக்கும் முறைகளிலே மாத்திரம் இயல்பாகவே தங்கள் தங்களுக்குக் கிடைத்த மதக்கோட்பாடுகளிலேநின்றும் விலகி, கற்புடை மகளிர் ஒருத்தி பரபுருஷன் ஒருவனைத் தன் கடைக்கண்கொண்டு நோக்கலும், ஏதோ அங்ஙனம் சற்றுமயங்கித் தம் மனத்திடை உள்ளலும், அவள் தன் கற்பழிந்து, மிக மேலான அவள் தன் செந்நெறி குலைந்து, அவள் தன் யோக்கிதைகள் ஒருங்கும் பாழ்படுதலை யோர்ந்து எற்றானும் உயர்தரத் தன்மைவாய்ந்த நம் சைவசமயமென்னும் இல்லத்தின் படிகடவாதும் நமக்குப் பரமபதியாயும் மேற்கண்ட நம்மில்லத்திற்கு அதிபதியாயுங்காணப்படுகிற நம் பரசிவப்பெருமான்மீதுள்ள பேரன்பு எற்றானும், எவ்வகை முகாந்தரங்களைக் கொண்டும் குலையாதும், நம் நிறைகளை மிகச் செவ்வனே நாம் நாமே முழுமனவலியோடும் ஓம்பிப்பாதுகாத்துக்கோடலே நம் போல்வார் ஒவ்வொரு சகோதரர்களுக்கும் மிக மேலான தகுதியாம் என்பதைக் கவனித்து ஏனைய மதக் கோட்பாடுகளிலே யொட்டி யொழுகுதலாவது, ஏனைய மதங்களிலே நுழைதலாவது, ஏனைய மதங்களுக்குரித்தாய தெய்வத் தன்மைகளைப்பற்றி எற்றும் தம் மனத்திடையுள்ளலாவது, மறந்தேயும் அம் முறைகளிற் சிறிய தொன்றையே எனினும் அநுட்டித்தலாவது கூடவே கூடாது. தனக்கெனக் கிடைத்த ஒரு மகளிரோடே எந்த ஞான்றும் கூடியின்பாதி போகங்களைத் துய்த்து வாழ்வது

நாட்டுக்கோட்டை வைசியம்.

தான் உத்தம சீலர்களின் கொள்கையாம். ஒருவனுக்குச் சொந்தமான தன் தாரமென்னும் ஒரு மகளிரோடுந் துய்க்கும் காமாதி போகவின்பங்களில் நின்றும் விலகி ஏனைய பிறன் தாரம் அல்லது தாய், தமக்கை, தங்கை முதலியவர்களையாவது புணர்தற்குரிய அவாவோடும் விரும்பப்படுவான் கதியைப்பற்றி ஈங்கு விவரித்து உதாரணப்படுத்தி வரைவதென்றால் மிக விரியுமாதல் பற்றி விடுத்தாம். மேலும் தோற்றப்படுகிற மிகப்பெரிதான இந்தவுலகமே பெரிய அறிவாளிகளின் அங்கையினுள்ளேதான் அடங்கிக்கிடக்கிறதென்பதையும் நாம் நன்றாகத் தெளிதல்வேண்டும். பலவாய நல்லொழுக்கங்களெல்லாம் சிறந்து நிறைந்து தகுந்த மேதாவிகளாலே நமக்குத் தந்தருளப்பெற்ற விதிவிலக்குகளிலே எந்தஞான்றும் நாம் தவறின்றி இயலுதலும் வேண்டும்.

6. ஆனால் இயல்பாகவே தன்னைப் பெற்ற ஒரு மதமானது பெருந்தகையான நான்முறைச் சட்டங்களையும், கடவுள் இலக்கணங்களையும் ஒருங்கே வரன்முறையாகக் கூறுமாற்றில் போதிய சக்தியற்றனவாகக் காணப்பெறினும் அதனையோர்ந்து தெளிந்த ஒருவன் நல்லவிவேகசாலியாயும், பலவிதமான உலக வியவகாரங்களையும் நன்கு தேர்ந்து தெளிந்த ஒரு மேதாவியாயும் இருப்பானேயாயின், பாலோடுங்கூடிய நீரினை யொழித்து அதனது சத்தி [illegible]பருகிச் செல்லும் அன்னப்பட்சியைப் போன்றும், மிகுந்த பேரறிவோடுங்கூடி [illegible]னத்திம்புகளைக்கொணர்ந்து தங்களுக்கென ஓர்வித இல்லத்தை யார்க்கும் சிட்[illegible]ப்பட்சியைப்போன்றும், ஒரு கிண்ணத்தின்மீது தேனுள்ளதாயின் அதனுள்ளே தவறி வீழாது அக்கிண்ணத்தின் புறத்தே ஒருவித தந்திரமாகவுட்கார்ந்து சிறகச் சிறகப் பருகிச்செல்லும் தூர்வித ஈயைப் போன்றும் அவன் ஏனைய மதக்கோட்பாடுகளான வேடவலைகளினுள்ளே சிக்கிக்கொள்ளாது அதன். உட்கருத்துக்களான சில விதிவிலக்குகளையெல்லாம் நன்கு தெரிந்து தன் மதத்தையும் ஏனைய பெருந்தகவாய மதங்களை நேரொப்பவேண்டுஞ் சீர்திருத்தங்களை யாற்றற்குரிய ஒரு அவதார புருஷனை விளங்க முன்வருவானேயன்றி ஏனைய புல்லறிவாளர்களைப் போன்று அவ்வலையினுள்ளே சிக்கித் தன்னுடைய பந்து மித்திராதிகளெல்லாம் வருந்தவும், சிலர் கருமமாதிய முதலிய கிரியைகளைச் செய்யவும் உயிர் அற்ற கொன்கட்டையாமென்க வேறுபடமாட்டான்.

7. ஆகவே எமதன்பார்ந்த நண்பர்காள்! எந்தவாற்றானும் நம்முடைய சைவசமயத்தைச் சார்ந்த எத்துணையோ தூரம் தாழ்ந்தவொரு எந்த வகுப்பானும், எந்தவொரு புல்லறிவாளனும், நம்முடைய சைவசமயத்தின் மாட்சியை இற்றெனத் தெரிந்துகொள்ளாமல் ஏனைய ஒரு சமயத்திற்குப்போய்ப் புகுதாமலும், எத்துணையோ தூரம் தாழ்ந்தவொரு எந்தச் சமயத்தையும் நம் சமயத்தைச் சார்ந்த யாவரேயெனினும் இகழாமலும் ஒரே வரன்முறையாகக்கட்டுப்பாடு ஆமாறு வேண்டும் சீர்திருத்தமான பல மார்க்கங்களையும் இந்தக்கணமே செய்து முடிக்கவேண்டுவது நம்முடைய வகுப்பின் முதற்கடமையேயாம். ஏனைய வகுப்பார்களுக்கு நம் சைவசமயத்தின் மீதுண்டாம் ஆர்வம் மிகுதியும் குறைவுபட்டு வகு

பிறசமயம் புகாமையும், அதனை நாமிகழாமையும்.

இருதாமென்க. இதற்காக நாலைந்து கற்றறிந்தோரைக்கொண்டு பல பாஷைகளாலேயும் நம் இந்திய நாடெங்கணும் ஓ! ஓ! மிக்கச்சரி. சரியென்று தெளியுமாறு ஆங்காங்கு பிரசங்கிக்கச் செய்வித்தலும் வேண்டும். இவைகளையெல்லாம்பற்றி நம்முடைய மகா சங்கத்திலே பகர்ந்து பேசுதலும் வேண்டும். எந்தச்சமயத்தால் பிறசமயங்கள் இகழப்படுகிறதோ அந்தச்சமயம், சமயம் அல்லது மதம் யென்று சொல்லப்படுவதற்குரிய இலக்கணங்கள் ஒன்றுமே இல்லாதனவென்று உலகம் ஒருங்காலும் கருதப்படுமென நம் சைவசமயத்தைச் சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும் நன்றாகக் கருதுதல்வேண்டும். ஒரு சமயத்தைவிட்டு மற்றொரு சமயத்திற் புகுவதாலும், ஒரு சமயமானது மற்றொரு சமயத்தை இகழ்வதாலும், யாதொரு புகழும், யாதொரு பெருமையும். ஏனைய எந்தவிதமான யாதொருபயனும் நிகழமாட்டாவென்பதை நாம் நன்குணர்தல்வேண்டும். எந்தவிதமான வரன்முறைகளை நிலைநிறுத்துதல் வேண்டுமாயினும் காலவியற்கைகளுக்குத் தக்கதக்கவாறு கல்விமுறைகள் மிகச் செவ்வையாய் எங்கணும் பரவுதல்வேண்டும். இவ்வங்கத்திற்காக இங்ஙனம் வரைதற்கொழிந்திடக்கும் ஏனைய பல விஷயங்களையும் அறிவாலும், கல்வியாலும், செல்வத்தாலும் உயர்ந்த ஆன்றோர்கள் இதிற்கண்ட விஷயஞாபகமாக ஆராய்ந்துணர்ந்து தாங்கள் தெளிந்துகொள்வதோடுங்கூட ஏனைய நம் சகோதரர்களுக்கும் சந்தித்தவண்ணம் ஞாபகப்படுத்தல் வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கிறேம். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராகுக. சுபம்! சுபம்!! சுபம்!!!

நம் பரதகண்டத்துள் தோற்றப்படுகிற பல சமயங்களையும், ஆன்றோர்களாலே எவ்வாறு கருதப்படுகிறது.

அக்கரவார்த்தோன் அடிதொழுதெழுந்து, நண்பர்காள்! இங்ஙனம் நம் பரதகண்டத்துள் தோற்றப்படுகிற பல சமயங்களையும் ஆன்றோர்களாலே எவ்வாறு கருதப்படுகிறது என்னும் அங்கத்தை வரையப்புகுவாம். சகோதரர்களே! பொதுவாக ஆய்ந்து நோக்குமிடத்து ஒரு மனிதச்சரீரமானது மிக்க அழகாயும், காந்தியாயும் மனிதத்தன்மையோடுங்கூடி இயங்கவேண்டுவதும் ஆவசியகமாயின் அதனது மெய், வாய், கண், மூக்குச், செவி முதலாக உரோமக்கால் வரையுள்ள ஒவ்வோருறுப்புகளும் அதனது அகமும் புறமும் ஒருங்கே மேற்கூறியவாறு மிக்க அழகாயும், காந்தியாயும், செழுமையாயும் இருத்தல் வேண்டுவதும் ஆவசியகந்தானே யென்றும்; அங்ஙனமாயின் அஃதே தன்மையதாக மிக்கயௌவனமாயும், காந்தியாயும், அழகாயும், செழு[illegible] விளங்கப்படுகிற இந்தியா இந்தியா வென்னும் மிகவும் மகோன்னதமான

நம்முடைய பாரத மாதாவின் சரீரத்தினிடத்து அவயவங்களாகத் தோற்றப்படுகிற வொவ்வொரு சமயங்களும் அதனைச் சார்ந்த ஒவ்வொரு பகுதிகளான ஜன சமூகங்களும், அதனைச்சார்ந்த வொவ்வொரு நூன்முறைச் சட்டங்களும் ஒரு சரீரத்தினிடத்துண்டான கண்களிரண்டும் ஒருவிதமான குணமும், ஒருவிதமான இயற்கையமைப்பும், ஒருவிதமான வடிவமும் செவிகளிரண்டும் ஒருவிதமான குணமும், ஒருவிதமான இயற்கையமைப்பும் ஒருவிதமான வடிவமுமாக எப்படித் தோற்றப்படுகிறதோ அதேபோன்று வேறு வேறான பேதங்களாகத் தோற்றவேண்டுவதோடுங்கூட மிக்க அழகாயும், காந்தியாயும், மிக்கச் செழுமையாயும் இயங்கவேண்டுவதும் ஆவசியகமல்லவாயென்றும்; பொதுவாக ஒரு சரீரத்தினிடத்துண்டான அவயவங்களெல்லாம் வேறு வேறாகத் தோற்றப்படினும் அவைகளை யெல்லாமொருங்கே யுடைத்தாகப்பெற்ற அச்சரீரமானது ஒன்றுதானென்பதிலெற்றேனுஞ் சந்தேகமுளதோ [illegible]றும்; அதனோடும் அதனை யாண்டுறு[illegible]முதலாய தத்துவ வர்க்கங்களும் அச்[illegible]ரமென்னும் அக்கூடொன்றினுள்ளா[illegible]வே வமைந்து ஒரே மனிதனென்பதாகத் தானே யியக்கப்படுவதினும் எற்றேனுஞ் சந்தேகமுளதோவென்றும்; ஆகவே நம் பரதகண்டத்துள் தோற்றப்படுகிற பல [illegible]று சமயங்களான ஒவ்வொரு சமயங்களும், அதனைச்சார்ந்த ஒவ்வொரு பகுதிகளான ஜன சமூகங்களு மதனைச்சார்ந்த வொவ்வொரு நூன்முறைச் சட்டங்களும் ஒன்றாகூடியே இந்தியாவென்றும் அதன் காரணம்பற்றியே இந்துமதமாமென ஓரங்கத் தோற்றப்படுகிறதென்றும்; ஆகவே நம் பாரதகண்டத்துள் தோற்றப்படுகிற ஒவ்வொரு சமயத்தவர்களும் ஏனைய ஒவ்வொரு சமயங்களையும் தங்கள் தங்களின் சொந்தச் சமயங்களாகவே கருதப்படல் வேண்டும் என்றும்; தற்காலவரை எதோ உழக்கினுள் கிழக்கு மேக்கு என்னும் பழமொழியை நேரொப்ப நிகழ்ந்துவரும் சில வேறுபாடுகளான சமயத் துவேஷங்களையொழித்து, ஜாதி வேற்றுமைமுதலிய சில கெட்ட வரன்முறைகளை விடுத்து நமது இந்திய நாட்டெட்பிறந்த ஒருவன் எந்தச்சமயம், எந்த வருணம், எந்தப்பாஷையையுடைத்தாகத் தோற்றப்படினும் இந்தியாவுட் பிறந்தவன் இந்து, இந்துமதத்தவனே என்னு முண்மையை நன்றாக உணர்தல் வேண்டும் என்றும்; நிகழ்கால நாகரீகங்களிலே சிறந்தும், நிறைந்தும், தருந்த பல மேதாவிகளாலேயும், பல ஆன்றோர்களாலேயும், பல சர்வகலா நிபுணர்களாலேயும், பல சிவஞானயோகச் செல்வர்களாலேயும் “சுடர் விளக்காயினும் நன்றாய் விளங்கிடத் தூண்டுகோலொன்று வேண்டும்” என்பதை யோர்ந்து அண்டப் பெற்று நம் பாரதகண்டத்துள் தோற்றப்படுகிற பற்பல சமயங்களும் ஒருமைப்பாடெய்து, சகோதரபான்மையாய் ஒழுகுமாறு வேண்டும் சீர்திருத்தங்களை ஆங்காங்கு மிகச் சீர்திருத்தமாக ஆற்றியும், பெரும்பான்மை எம்போன்ற சிற்றறிவாளர்களுக்குங்கூட ஒரே இந்துமதமாகத்தான் நம் மிந்திய தேயத்துள் பெருந்தகவாய பல மேதாவிகளாலும் கருதப்படுகிறதென்னும் உணர்ச்சியை மூட்டியும் கருதப்படுகிறது.

யாக இவ்விந்திய தேய பூர்வ குடிகளையா மென்று எனைய பல தேயத்தவர்களாலும் ஒப்பத்தக்கவாறு நம் மிந்திய தேயத்தின் வாழ்ந்து வருபவர்கள் எவர்களோ? அவர்களே இந்துக்கள் என்றும்; அவர்களால் கொண்டாடப்படுகிற மதங்கள் எவைகளோ? அவைகளெல்லா மொன்றுகூடிய ஓர் பொதுவாய நாமமே நம் மிந்து மதமாமென்றுங் கருதப்படுகிறது.

3. என்னையோய் ஐயீர்! நீயிர் கூறுவது மிகவும் வியப்பாகவன்றோ காணப்படுகிறது. சில நூற்றாண்டுகளுக்கு முன்னதாகவே நம்மில் நின்றும் வேறுபட்ட மகமதிய மார்க்கத்தையும், கிறிஸ்தவமார்க்கத்தையுங் கூடவா அவ்வாறு சேர்த்து ஒரே இந்துமதமாகக் கருதப்படுகிறதென நம்முட் சில நண்பர்கள் கேள்விகள் கேள்க்கவுங்கூடும். ஆம். ஆம். ஆம். அம்மார்க்கங்களையுங் கூடத்தான், என்னையோய் அதற்குக் காரணம்? அம்மார்க்கங்கள் மிகவுங் கொடிதான கொலை பாதகங்களுக்கெல்லாம் கோ நிலையமாயிற்றே அவைகளையுங்கூட கருணைக்கடல் போன்ற எனைய மதங்களோடுங்கூடச் சேர்த்தி எவ்வாறு ஐயீர்! கருதப்படும்? இனிமேல் வரும் ஞான்றுகளிலும் எந்த வாற்றாற் கருதப்படலாம்? யுக தர்மத்திற்குத் தக்கவாறு நீயிரும் உலகத்தைப் புரட்டிவிடப் பார்க்கின்றீர்போலும்! இயல்பாகவுள்ள யோக்கிதைகள் எற்றும் மாறுபடாதவண்ணம் பாதுகாத்துக்கொண்டாற் போதாதோ? அதிகப் பிரசங்கியார் போன்று என்ன வெவ்வாமோ உரையக் கணிகின்றீரே! [illegible] விளக்கப்படுகிற இந்தியா இந்தியா வென்னும [illegible]

எம்மாலே கருதப்படுகிறதென்றுவது கூறித் தொலையாது ஆன்றோர்களின் மீதும் தாக்கல் செய்கின்றீரே என்னையோய் நியாயம் எனின்? நண்பர்காள்! பொறுமின். கடுஞ்சினங் கொள்ளன்மின். ஆறிய சிந்தையோடும் மிகச் செவ்வையாக ஆய்ந்தோய்ந்து பார்மின். மிகத் தெளிவாயுணர்மின். நம் மிந்திய தேயத்தேயுள்ள அம்மார்க்கத்தவர்களெல்லா மொருங்கே நம்மோடும் பிறந்த நம் சகோதரர்களே ஆவார்கள். இந்த ஞான்றும் நமது வர்க்கத்தைச்சார்ந்த சிலர் மண், பெண், பொன் முதலிய ஏதேனுமோராவலுட் சிக்கி அதன் காரணமாக நாம் அநுட்டித்து வருகி[illegible] அநுட்டானங்களை யெல்லா மொழித்து[illegible] நம்மில் நின்றும் விலகிக் கிறிஸ்தவர்களாகியும் இன்னும் சிலர் நம்மில் நின்றும் விலகி மகமதியர்களாகியும் நம் எதிராலேயே நாம் காண நடிக்கிறார்களல்லவா? இஃதே மாதிரியாக இதன் முன்னதாகவும் நாங்கள் தொன்றுதொட்டு இன்ன மார்க்க[illegible] ரென நமது இந்திய தேயத்துள் தே[illegible] றப்படுகிற ஒவ்வொரு மகம்மதியக் குடு[illegible] பங்களும், ஒவ்வொரு கிறிஸ்தவக் குடு[illegible] பங்களும், இன்னும் எனைய எந்தச் சமயங்களைச் சார்ந்த எந்தக் குடும்பங்களு[illegible] நமது செந்தமிழ் குடும்பங்களில் நின்று[illegible] நமது பூர்வீக சைவ சமயத்தில் நின்று[illegible] பிளவுபட்டது தான் என்பதிற் சந்தேக[illegible] என்னை? நம்மில் நின்றும் பிளவுபட்டு[illegible] 7, 8, 10, தலைமுறை கழித்தவர்களு[illegible] கூடத் தங்கள் தங்களின் பூர்வகால அநுட்டானங்களையும் சில நடையுடை[illegible] பாவனைகளையும் வெளிப்படையாக[illegible]

தோற்றவிடாமல் அந்தரங்க விசுவாசிகளாய் அநுட்டித்து வருகிறார்கள், அவைகளைப்பற்றி நம்முட் பல நேயர்கள் நன்குணர்வார்கள். இன்னும் தோற்றப்படுகிற பல பெரிய ஒவ்வொரு மதங்களும் நம்முடைய ஆசியாக் கண்டத்திலேயே தோற்றியு மிருக்கிறது. இன்னும் நம்முடைய தாய்நாடு எதுவோ? அதுவே அவர்களுக்குந் தாய்நாடாயும், நமக்குத் தாய் மொழிப்பாஷை எதுவோ? அதுவே அவர்களுக்குந் தாய்மொழிப் பாஷையாயுங் காணப்படுகிறது. கருணையே திருவுருக்கொண்ட நம் பாரதமாதாவின் [illegible]தில், நம்மோடும் பிறந்த நம் சகோதரர்களை [illegible] [illegible]ல் நின்றும் பிளவுபடுத்தி, நாமே அவர்[illegible] களைக் கீழ்மைப்படுத்தியும், ஒதுக்கியும் வைப்போமாயின் இயல்பாகவும், உண்மையாகவும் தங்களின் சுயசாதியும், தங்களின் சுயநாட்டுப்பிறவியும், தங்களின் சுய பாஷைகளிலே கல்வி, அறிவு, ஞான முதலிய நாளுக்குநாள் தமான நாகரீகங்களில் உணர்[illegible] மில்லாத மேற்கண்ட நம் சகோதரர்[illegible] நேரே மாற்றமான அந்நியநாட்டுவர்க்கங்கள் எப்படி ஏற்றுக்கொள்வார்கள். அவர்களோடும் இவர்கள் எவ்வாறு ஒருமைப்பாடெய்தும் வாழ்வார்கள். அவர்[illegible] களின் கதி எவ்வாறாயிற்றென்பதைப்பற்றி நாம் நன்றாக ஆழ்ந்து கவனிக்கப் புகின் [illegible]குதியும் பெரும் பரிதாபமேயாகும். [illegible]னதுபற்றியே நேயர்காள்! நம் பரதகண்டத்துள் கருணையங்கடல் போன்று சிறந்த பல மேதாவிகளும் தங்கள் தங்களின் சமயங்களென்னும் தீபங்களைத் [illegible]ண்டிச் சுடர்விட்டுக் கோடி சூரியப்பிரகாசம்போல விளங்கச்செய்யப் புகுந்த [illegible]க்காலத்திலே எல்லார் [illegible]

மாகக் கருதப்படுகிறார்கள். இன்னும் ஆராய்ந் துணர்ந்த சில மேதாவிகள் நம் பரதகண்டத்தையும் அதன்பால் தோற்றப்படுகிற பலசமயங்களையும் எவ்வாறு கருதப்படுகிறார்கள் எனின் முறையே சகோதர பான்மையாயும் புத்திர பான்மையாயுமே ஆம்.

4. சகோதரர்களே! ஆய்ந்து நோக்குமிடத்து தோற்றப்படுகிற எந்தச் சமயத்தவர்களுக்கும், பெருந்தகவாய எந்த வலகத்தவர்களுக்கும், எத்துணையோ தூரம் பெரும் பிரயாசைப்பட்டுக் கடந்த மெய்ஞ்ஞானவான்களுக்கும், இன்னும் தோற்றப்படுகிற எந்த மனிதவர்க்கங்களுக்கும் கடவுளிலக்கணம் ஒன்றாகவும்; பிருதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்று சொல்லப்படுகிற பஞ்சபூத இலக்கணம் ஒன்றாகவும்; ஆன்ம இலக்கணம் ஒன்றாகவும்; சுவர்க்க நரக இலக்கணம் ஒன்றாகவும்; சூரிய சந்திராதிகளொன்றாகவும்;

"வானின்றுலகம் வழங்கி வருதலாற்றான்
மிழ்தமென் றுணரற் பாற்று"

"கைமாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு"

எனச் சிறந்த மாரி இலக்கணம் ஒன்றாகவும்; மனித விலக்கணம் ஒன்றாகவுமே காணப்படுகிறதல்லவா? இதனை நாம் நன்கு தெரிந்துகொண்டிருக்கிறோமல்லவா? ஆகலின் எந்த எந்தச் சமயங்கள் ஒன்றுக்கொன்று எத்துணை எத்துணை தூரம் மாறுபட்டுக்கொண்டியக்கினும் அவை நமக்காவதென்னை? அதனாலேயுண் [illegible] உளவென்று சொல்லப்படுகிற [illegible]

னித்தல் வேண்டும்? மிகவும் பெரிதான இந்த நிலவுலகத்தின்கண்ணே பல பாஷைகளையும், பலவேறு வகைகளான சமயங்களையும், பலவேறு வகைகளான வழிபாடுகளையும், பலவேறு வகைகளான நடையுடை பாவனைகளையும் இயக்கப்படுவதும் இயற்கையே. இஃதொரு வியப்புமல்லவே என்பதன் மேலோர் கருத்துக்களையும் நாம் நன்றாக உணர்தல் வேண்டாவோ? ‘சமய கோடிகளெல்லாந் தன் தெய்வம் என்தெய்வம் என்று எங்கும் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது எங்கணும் பெருவழக்காய் யாதினும் வல்லவொரு சித்தாகியின்பமாய் யென்றைக்கும் உள்ளதெதுவோ கங்குல் பகலற நின்ற எல்லையுளவெது அது கருத்திற் கிசைந்தது பொருளாம் கண்டன வெலா மோன உரு வெளியதாகவும் கருதியஞ்சலி செய்குவாம்.” என்ற நம் தாயுமானார் திருவாக்கினை ஆய்தல் வேண்டாவோ? தோற்றப்படுகிற எந்தச் சமயங்களும் நன்றுக்கொன்று தாழ்மையுடையதல்ல வென்பதை நம்முடைய வகுப்பு ஒவ்வொரு நண்பர்களும் நன்றாக வுணர்தல்வேண்டும். ஒவ்வொரு சமயங்களும் கடவுளைக் காட்டும் பூரண சக்தியுள் எற்றும் குறைவற்றதாம் என்பதை நாம் எந்த ஞான்றும் மறத்தல் கூடாது. ஆகவே எம் அருமைச் சகோதரர்களே! இங்ஙனம் முக்கியமாக யாம் கூறவேண்டும் பெரிய ஓர் விஷயமாவது யாதெனின்? நம் பாதகண்டத்துள் தோற்றப்படுகிற பல சமயங்களையும் ஆன்றோர்களாலே எவ்வாறு ஒரே இந்துமதமாகக் கருதப்படுகிறதோ அஃதே மாதிரியாக நாமும் கருதப்படல் வேண்டும் என்பதேயாம். நம் இந்திய தேயத்துள் பிறந்த எந்த ஒருவனும் நம் சகோதரனாகவே கருதுதலும் வேண்டும்.

5. மதத்துவேஷமென்பது நம்மவர்களின் அடியை மிதித்தவர்களுக்குங்கூட ஏற்படுதல் கூடாது. எந்தச் சாதியைச் சார்ந்த எந்த மதஸ்தனோடும் இனிய வார்த்தைகளையே உபயோகித்தல் வேண்டும். ஒவ்வொரு மதங்களினும் உடைத்தாய மேலான உண்மைப்பொருள்களெல்லாம் தோற்றப்படுகிற மூவுலகங்களுக்கும் பொதுச் சொத்துக்களே ஆம். இதனை நாம் நன்றாக உணர்தல் வேண்டும். மத சம்பந்தமாக எவர்களோடே யெனினும் சண்டை சச்சரவுகளுக்குப் போதல் கூடவே கூடாது. மதத் துவேஷங்களுக்கு உரிய எந்த விஷயங்களையும் சபையேறிப் பேசுதலாவது பத்திரிகை அல்லது புத்தகங்களாக வரைதலாவது எற்றும் கூடவே கூடாது. இனி, ஏனைய ஒரு மதஸ்தன் நம் மதத்தைப் பற்றித் தூஷிப்பானேயாயின் அவனுக்குத் தக்கவாறு அமைதியோடும், சமாதானத்தோடும், பெருந்தகவாய நியாயத்தோடும், எவர்களும் மயங்கத் தகுந்த இனியவார்த்தைகளோடும், நம் மதக்கோட்பாடுகளும், பேரறிவாண்மையும் அவனோடுஞ் சார்ந்த ஏனைய எவர்களுக்கும் தெற்றென இலகுவிலே புலப்படுமாறு வேண்டும் நூன்முறைச் சட்டங்களோடும் நல்லறிவைக் கொடுத்தலும் வேண்டும்., கோர்ட்டு ஏறித் தீர்ப்புகள் கேட்கும் வழிகளில் நுழைதல் கூடவே கூடாது. இன்னும்,

விளக்கப்படுகிற இந்தியா இந்தியர்

“தம்மை யிகழ்ந்தமை தாம்
பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்
பயத்தா-லும்மை
யெரிவாய் நிரையத்து வீழ்வர்
கொலென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்”

என்பதுபோன்று அவனின் அறியாமையினாலே அவன் அனுபவிக்கக் கிடக்கும் துன்பத்தைக்கருதி அவனிடத்து இரக்கங் கொள்ளவேண்டுவதும் நம்முடைய கடமையாம்.

6. சகோதரர்களே! நம் பரத கண்டத்துள் தோற்றப்படுகிற பல சமயங்களையும் எதற்காக ஒரே இந்துமதமாகக் கருதுதல் வேண்டும்? அவ்வாறு ஒரே இந்துமதமாகக் கருதப்படுவதினால், உண்டாம் பயனிலைகள் என்னை? அவ்வாறு கருதப்படுவதினாலே தங்கள் தங்களின் மதக் கோட்பாடுகளிலே எற்றும் வழுவாதவண்ணம் நின்று அநுட்டிக்கவேண்டும் முறைகளுக்கு ஏதேனும் ஓர் இடையூறுகள் நிகழக்கூடுமோ என்பது முதலிய பல விஷயங்களையும்பற்றிச் சற்றுக் கவனிப்பாம். மதத்தின் அமைப்பும், அதன் இயற்கையும், அநுட்டிக்கும் ஆற்றால் நிகழும் பயனிலைகளும் இற்றெனத் தெரிந்தாலொழிய சர்வமத சகோதரத்வம் ஒருவர்பால் பொருந்தாவாகலின் மதத்தின் இயற்கையமைப்புகளை நன்றாகத் தெரிந்த ஒரு மெய்ஞ்ஞானியாமென்னும் வாய்மையை இந்த ஞாலமெங்கணும் உணர்த்துவதற்காகவே பல சமயங்களையும் ஒரே இந்துமதமாகக் கருதப்படல் வேண்டும். அவ்வாறு நம் நாடுநகரங்களெல்லாம் ஒருங்கே கருதப்படுமாயின் அவ்வாறு கருதப்படும் நம் நாடுநகரங்களெல்லாம் மிகவும் மகோன்னதமான நாகரீக நன்னிலயத்திலே தியங்கிக் கொண்டிருக்கும் என்பதே அதன் பயனிலைகளாம். மேன்மேலும் புகழ் நிலையத்தில் தியங்கிக் கொண்டிருத்தலும் ஆம். சமயாபிமானத்தில் பழுத்த பழம் போன்றனவாயும் விளங்கும். மதத்தைவிட்டு மதம் மாறுவதால் யாதொரு பயனும் புகழும் இல்லை யென்பதை நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கும். பொதுவாக மதத்தின் இயற்கையமைப்புகள் இற்றெனத் தெரிந்து கொண்டிருப்பானொருவன் தன் மதக் கோட்பாடுகளிலே தவறி யொழுகுதலால் யாதொரு பிரயோசனமும் இல்லையென்பதையும் நன்கு செவ்வையாகத் தெளிந்து கொண்டிருப்பான். ஆகலின், நம் பரத கண்டத்துள் தோற்றப்படுகிற பல சமயங்களையும் நம்முடைய ஒரே இந்துமதமாகக் கருதப்படுவதினால் தன் மதக்கோட்பாடுகளை அநுட்டிக்க வேண்டும் முறைகளுக்கு எந்தவாற்றானும் எற்றும் இடையூறுகள் நிகழமாட்டாதா மென்க. ஆகலின், இதனைக் கண்ணுறும் ஒவ்வொரு சகோதரர்களும் நம் பாத கண்டத்துள் தோற்றப்படுகிற பல சமயங்களையும் நம்முடைய ஒரே இந்துமதமாகக் கருதி ஒழுகுதல் வேண்டுமாய்க்கேட்டுக் கொள்கிறோம். எல்லாம் வல்ல இறைவனும் திருவருள் புரிவாராகுக. சுபம்! சுபம்!! சுபம்!!!

வருணபேதம்.

அருமறையங்கட் டேனியமர்ந்தோன் திருவடிவணங்கற் குற்றப்பெனும் புலவர் ஓரைந்தெழுத்தினை உண்ணெஞ் சிருத்தி நண்பர்காள்! இங்ஙனம் வருணபேத மென்னும் அங்கத்தை வரையத் தொடங்குவாம்:—

வருணபேத மென்னும் தொடர்மொழியின் பொருளாவது இன்னதென்பது பொதுவாக எந்த நண்பர்களுக்கும் ஒருவர் சொல்லாமலே நன்குவிளங்கும். இந் நூன்மிசை புடைத்தான ஒவ்வோரங்கங்களினும் காணப்படுகிற ஒவ்வோரபிப்பிராயங்களும். ஒவ்வொரு மேதாவிகளின் அபிப்பிராயங்களென்றே கருதுதல் வேண்டும். நம் இந்திய தேயத்தின் ஆறு அல்லது ஏழு கோடியிருக்க நம் சகோதரர்களைத் தாழ்ந்த வகுப்பாரென்று கல்வி, அறிவு, ஞானம் முதலிய பல உயர்தர விஷயங்களினும், பலவிதமான உயர்தர நாகரீகங்களினும் மேலுருவண்ணம் ஒதுக்கி வைக்கப்பட்டிருப்பது பற்றியும், பெரும்பான்மையும் நம்முடைய சைவ சமயத்தின் தன்மை இத்தகையதென கற்றுத்தேர்ந்து நண்ணி நோக்காது ஏனைய மதக்கோட்பாடுகளின்மேல் அன்னவர்கள் நுழைந்து அதோகதியாகப் படுகிறார்களென்பது பற்றியும், வருணபேதம்உண்டென்னும்கோட்பாடுகள் வருங்கால இயற்கைகளுக்கு எற்றும் பொருந்தா வென்பதுபற்றியும், நம் பாரதகண்டமெல்லாம் ஒருங்கே ஒரே வருணமாகத்தான் இருத்தல் வேண்டுமென்றும்; பேதமென்பது இருத்தல் கூடாதென்றும்; இயற்கையிலே பேத [illegible] இல்லையில்லையென்றும் நம் [illegible] விளக்கப்படுகிற இந்தியா

வருமாறு பல மேதாவிகளாலே யூகிக்கப்படுகிறது.

2. பிரம்மாவின் முகத்தினின்று பிராமணரும், புஜத்தினின்று க்ஷத்திரியரும், தொடையினின்று வைசியரும், பாதத்தினின்று சூத்திரரும் உதித்தார்களாமே யெனின்; பிரம்மாவுக்கு எந்த எந்தப் பக்கங்களிலெல்லாம் யோனித்துவாரங்கள் உள்ளது? அவரின் சொரூபம் எத்தன்மையது? அவருடைய அம்சம் ஸ்திரீயினுடைய அம்சமா? அங்ஙனமாயின் அவருக்குப் புருஷன் யாவர்? ஆதி முதன்முதலாகப் படைத்தது மட்டுந்தான் அவர்; அதற்குப்பிந்திய காலங்களில் படைப்பாளி அவ்வவர்களின் தாய்தந்தையர்களே யென எவரேனும் ஒருவர் கூறவருவாரேயாயின் இந்த ஞாலத்தை இன்ன யுகத்தில் அல்லது இன்னகாலத்திற்றான் பிரம்மாவால் ஆதி முதன்முதலாகப் படைக்கப்பட்டதென்பதற்கு எப்பாலவராலும் ஒப்பத்தக்கவாறு ஒருவரையறையான கணக்குண்டா? அக்கணக்குகள் எந்த நூற்களிலேஉள்ளது? அந்த ஞான்று படைத்த பிரம்மாவானவர் இந்த ஞான்று யாங்ஙனம் உள்ளார்? முக்கொம்பு முளைத்தவர்களின் கண்ணுக்குத்தான் புலப்படுவாரோ? அல்லது அவர் தேக வியோகமாய் விட்டாரோ? இக்கற்பனைகளுக்கெல்லாம் தத்துவார்த்தமான சூக்குமார்த்தங்கள் வேறு ரகசியமாக உள்ளதாயின் அஃது மனித வர்க்கமாய்ப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உடன்பாடன்றே என்றும்; பூர்வகாலத்தில் நம் தேயத்தவர்கள் அனைவரும் யானை, பாம்பு, ஆடு, மாடு- இந்தியா வென்னும் [illegible]

மீன், ஆமை முதலிய மாமிசங்களையே புசித்துவந்தார்களென்றும்; அக்காலத்தில் பட்டினமாவது, கிராமமாவது, பாட்டையாவது, வீடாவது ஒன்றுமிடையாதென்றும்; இங்கும் அங்கும் சில காட்டுமனிதர்கள் காடிகளைப்போல குகைகளிலே வசித்து வந்தனரென்றும்; சிலர் குரங்குகளைப் போன்று மரங்களிலே படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தனரென்றும்; அவர்கள் மிகக் குள்ளமாகவும், கருப்பாகவும், விகாரமாகவும், நிருவாணமாகவும் அழுக்குப் பிடித்திருந்தன ரென்றும்; அவர்கள் காய், கனி, கிழங்குகளையும் மான், பன்றி மாமிசங்களையுங்கூடத் தின்று வந்தார்களென்றும், அக்காலத்தில் கத்தி, கோடறி, மண்வெட்டி முதலிய ஆயுதங்களில்லையென்றும், அவைகளைச் செய்யத்தெரியாதென்றும்; கூர்மையாயுள்ள சக்கிமுக்கிக் கற்களால் நெருப்பினையுண்டாக்கிக் கொள்வதென்றும், அவைகளாலேயே அறுத்தல் வெட்டுதல் முதலிய தொழில்களைச் செய்வார்களென்றும்; இன்னும் இவைபோன்ற பலவிதமான கீழ்த்தர நாகரீகங்களிலேயே நம்முடைய நாடுகள் இருந்தனவென்றும்; நம் தேசச் சரித்திரங்களால் காணப்படுகிறதாகலின் அக்காலத்தில் பிரம்மாவானவர் எங்கிருந்தார்? அவர் பிறந்திருந்தாரா இல்லையா? மேற்கூறிய நான்கு வருணத்தவர்களையும் பூர்வம் முதன்முதலாகப் பிறப்பித்தா ரென்பது யாங்ஙனம் பொருந்தும்? அங்ஙனமே ஒருவாறு இந்த ஞாலத்தை முதன்முதலாகப்படைத்தவர் அவரே யென வைத்துக்கொள்வோமாயினும்; மேற்கூறிய நான்கு வருணத்துள்ளும் சூத்திரரெனப் படுவோர் யாவர்? [illegible] சூத்திரர் [illegible] யென மேலே

வர்? வேளாளரென்றும் சைவரென்றும் விளங்கப்படும் ஒருவகுப்பாரும் அச்சூத்திர வகுப்பிற் சேர்ந்தவர்கள் தானோ? இன்னும் கவறை, படையாச்சி, சான்றார், குறவர், மறவர், வேடர், வில்லியர், பள்ளர், பறையர், புலையர், இருளர், தொம்பரவர், சக்கிலியர், இட்டியர் முதலியவகுப்பாரும் சூத்திரரென்னும் வகுப்பில் அடங்கியவர்கள் தானோ? அடங்கியவர்கள் தான் என்பதற்கு எந்த நூல்களிலேனும் ஆதாரம் உளதோ? ஒருவாறு இவைகளுக்கெல்லாம் விதி ஆகமாதி புராணங்களில் உள்ளனவாகக் காணப்படினும் அவைகளுக்கு எற்றேனும் நடுநிலை கோடாத நியாயநூல் என்பதும் பொருந்துமோ? அல்லாதவரை பிரம்மதேகத்தின் எப் பகுதியில் நின்றும் உதித்தவர்களென்றும்; செங்கோல் நடாத்துபவர்களெல்லாம் க்ஷத்திரியர்களா வென்றும்; வேதமோதுபவர்களெல்லாம் வேதியர்களா வென்றும், செட்டுச் செய்பவர்களெல்லாம் செட்டிமார்களா வென்றும்; வருணபேத முண்டென்னும் கோட்பாடு கடுவாந்தரத்தில் செய்யப்பட்ட மனுநூலிற் கூறியிருப்பதுவும் அந்த அந்தக் காலங்களுக்கேற்ப அந்த அந்தக் காலங்களிலே உடைத்தாயிருந்த நம் முன்னையவர்களின் நன்மைக்காக ஆக்கப்பட்டதோர் வரன் முறைச் சட்டமே; அல்லது அதனை மெய்ப்படுத்தத்தக்க யாதொரு சாட்சியும் இல்லையென்றும், நிகழ்கால நாகரீக வழக்கியல்களுக்குத் தக்கவாறாக அதனை அங்கீகரிக்கப்படத்தக்கதல்லவென்றும், அக்கோட்பாடு கடவுளாலே யாக்கப்பட்டதெனின், மற்றைய தேசத்தவர்களின் சமய நூற்களில் அதனைப்பற்றி ஓர் வாக்கியமாவது [illegible] தவியென்று சொல்லப்படுகிற சக்தி

இந்தேயத்தவர்களின் குலாசாரம் மதாசாரங்களின் பேதாபேதங்களையும், உத்தியோகத் தொழில்களையும் காட்டும் வருணமென்னும் வடமொழி விதம், வகை, இனம், குலம், ஜாதி, வர்க்கமென்னும் பல பொருள் கொள்ளும் ஒரு மொழியென்றும், இது பூலோகத்தில் எத்தேசத்தவராலும் வழங்கப்படாமல் இவ்விந்து தேசத்தாரால் மட்டும் வழங்கப்படுவதற்குக் காரணம் பண்டையரான்று மேதாவிகளாயிருந்த நம் ஆரிய சகோதரர்களே யென்றும்; அவ்வாரியர் பூர்வ அரசர்களிடத்தில் மந்திரிகளாகவும், கல்விச்சங்கத்தாராகவும் அமர்ந்து இதிகாசம் எழுதியவரால் எழுதப்பட்ட சரித்திரங்கள் அரசர் முன்பாகக் கொண்டுவரப்பட்டு அரங்கேற்றல் செய்விக்கப்படல் வேண்டுமென நியமித்தும்; முறையே கொண்டுவரப்பட்ட இதிகாசங்களில் தங்களைப் புகழ்ந்திருப்பவைகளை அங்கீகரிக்கச்செய்தும்; தங்கள் பூர்வோத்தரங்களில் உள்ளதை உள்ளபடி எழுதியிருப்பனவற்றை அழிக்கச் செய்ததினாலும்; தங்களுக்கு முன்னிருந்த பூர்வ சரித்திரங்களையொழிக்கச்செய்ததினாலும்; இப் பரியாய நிபத்தின் பூர்வச் சரித்திரம் இல்லாது போயிற்றென்றும்; தற்காலத்திய நவீன மேதாவிகளுட் சிலர் அன்னவர்களின்மீது பெருங்குறை பகர்ந்தும், உள்ளியும் வருந்துகிறார்கள்.

8. சகோதரர்களே! "சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்முன் நின்றது புசிப்பார்"

என்ற ஆன்றோர் வாக்கின்படி இற்றைய நூன்றின் வியவகாரங்களை யெண்ணி நோக்குவோமாயின், (அன்னவர்களே) அஃதாவது நம் ஆரிய சகோதரர்களே வருணமென்னும் வார்த்தையை நம் மிந்தியதேயத்து எந்தப் பாஷைகளிலேயெனினும் எந்தவாற்றானும் உலவவிடாமல் பெயர்த்தெடுத்து எறிந்துவிட வேண்டுமோற்றில் முன்னிற்கிறார்களென்பதூஉம் நமக்கு நன்றாகத் தெரிந்த விஷயமேயாமென்றும்; இன்னும் ஆய்ந்து நோக்குமிடத்து ஓர் ஆலமரத்தின் அடி, நடு, முடியாகிய பலவிடங்களிற் கனிக்கும் பல கனிகளுக்குள்ளும் யாதேனும் பேதமுண்டா? இல்லையே அதுபோன்று மாந்தர் பிரம்ம தேகத்தின் பலவிடங்களில் ஜனித்திருப்பினும் வருணபேதமில்லாதிருக்க வேண்டுமே யானை, குதிரை, மாடு, புலி முதலியவற்றின் சப்தமும், சிரசும், பாதங்களும் ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருப்பது போல உயர்ந்த வருணத்தவர்களுக்கும் தாழ்ந்த வருணத்தவர்களுக்கும் ஏதேனும் பேதா பேதக்குறிகள் காணப்படுகின்றனவா இல்லையேயென்றும்; ஒருக்கால் வருணபேதத்தைக் கடவுளே வகுக்கப் பட்டாரெனின் கடவுளின் அபிமான புத்திரர்களாகிய உயர்ந்த வருணத்தவர்களைத் தீச்சுடாமலும், சர்ப்பங்கடியாமலும், சூரிய வெப்பம் முதலியவைகள் அவர்கள்மேற் படாமலும், மரணமும், வியாதியும் அவர்களை அணுகாமலும் அன்றோ இருத்தல் வேண்டுமென்றும்; அவ்வாறின்றி இவையனைத்தும் மற்றைய தாழ்ந்த வருணத்தாருக்கு அமைந்து நடந்தேறுவதுபோல உயர்ந்த வருணத்தாருக்கும் அமைந்து நடந்தேறிவந்தும், பிராமணர் முதலிய மூன்று வகுப்பாரையும் உயர்ந்த வருணத்தாரென்று சாதிப்பதெங்

ஙனம் என்றும்; அன்றியும், மானோடு நாயும், புலியுடன் பூனையும், பன்றியுடன் குதிரையும் சேருமோ? ஒருவாறு காலநதியாற் சேரினும் குலாகுமோ? ஆகாதே என்றும்; ஆகவே, ஜென்மத்தினால் வருணபேதம் தோன்றியதெனின், ஒரு ஜாதிப் பெண்பாலுடன் மற்றொரு ஜாதி ஆண்பால் சேராமலும் சேர்ந்தால் கருப்பமாகாமலும் அன்றோ யிருத்தல் வேண்டும் என்றும்; உயர்ந்த வருணத்தவராயிருக்கும் வசிஷ்டர் தாழ்ந்தஜாதி ஸ்திரியின் வயிற்றினின்றும்; விஸ்வாமித்திரர் சண்டாளிச்சி கருப்பத்தினின்றும் உதித்தார்களே அஃதென்னை யென்றும்;

"திருவும் வறுமையும் செய்தவப் பேறும்
சாவதும் வேறிலைத்தரணியோர்க்கே தல
முமொன்றே குடியும் ஒன்றே இறப்பும்
ஒன்றே பிறப்பும் ஒன்றே வழிபடு தெய்
வமும் ஒன்றே"

என்ற கபிலமுனியின் வாக்கையுணராதார் யாவரென்றும்; ஜாதி இரண்டொழியவேறில்லை யென்றநமது ஒளவைப் பிராட்டியின் வாக்கையுணராதார் யாவரென்றும்; நிற்க, அவ்வவர்களின் தொழிற் காரணம் பற்றி வருணபேதம் வந்ததென்றால் தற்காலத்திய வேதிய நண்பர்கள் வேதமோதுதலை முற்றும் துறந்துவிட்டார்களென்றும்; அஃதா எஞ்சிச் சில வயோதிகத் தாத்தாக்கள் அஃதினையே பாராயணம் செய்துகொண்டிருப்பதையும், அன்னவர்கள்செல்வப் பேறுள்ள இல்லத்தையே தமதில்லமாகப் பெற்றிருந்தும், பிண்டம், பெருங்காயம், அன்னம், வில்வாதியாமென்க ஒருண்டை அன்னத்திற்கு மாலை ஐந்து மணி வரை வெறுந்திண்ணையின் மேலேயிலே குந்திக்கொண்டு நித்திரை போவதையும் நாம் நேரில் அநேகமுறை காணப்படுகிறோ மென்றும்; நிற்க க்ஷத்திரியரென்பார் யாவரோ? யாம் தெரியாம். தற்காலவரை நம் சக்கரவர்த்தி னம் மாட்சிமை தங்கிய அங்கிலேய மன்மகன் என்பதாகத்தான் உணர்வேம் என்றும்; இனி, வைசியரென்பார் யாவரெனக் கவனிக்கப் புகுந்தால் வரைபொரு ளீட்டாதவர்களும், செட்டுச்செய்யாதவர்களும், இந் ஞாலத்தில் எவர்களுமே இல்லை யென்பதாகத்தான் முடிகிறது என்றும்; இனிச் சூத்திரரென்பார் யாவரோ எனின் இந்த ஞாலமுழுவதுமே சூத்திரராகத்தான் தோற்றப்படுகிறார்கள் என்றும்; ஒரு ஆண்பால் காரணமாக ஒரு பெண்பாலானவள் ஒரு மனிதச் சிசுவைப் பிறப்பிக்கும் சூத்திரமே சூத்திரம். அச் சூத்திரமே பிரம்மச் சூத்திரமாம் என்றும்;

"ஒரு மடமாது ஒருவனுமாகி இன்ப சுகந்
தரும் அன்பு பொருந்தி உணர்வு கலங்கி
ஒழுகிய விந்து ஊறு சுரோணிதமீது
கலந்து பனியிலோர் பாதி சிறுதுளி"

எனப் பட்டினத்து முனிவர் கூறியது போன்று ஒரு சிறுதுளியளவான வித்தினையெய்து அறிதற்கறிதாயும் தேவர்களுங் காண வியப்பத்தக்கதாயும் உள்ள ஒரு மனிதச் சரீரத்தைப்பயக்கும், அப்பெண்பால்களின் சரீரகத்தின் உள்ளன்றோ; பிரம்மம் வீற்றிருக்கிறது. அப் பிரமத்தின் சொரூபம் இத் தகையதென யாவரோ காணவல்லாரென்று; அவரானே வகுக்கப்படுகிற வருணம் மூன்றொழிய வேறின்றும் என்றும்; அஃதாவது ஆண், பெண், அலியென்று சொல்லப்படுகிற சக்திரி

பிள்ளையுடையனவேயா மென்றும்; சில மெய்ஞ்ஞானவான்களாலேயும் கருதப்படுகிறது.

4. ஆனால் ஐயன்மீர்! மேற்கூறிய நியமங்களெல்லாம் எந்த வாற்றானும் ஒருங்கே நடுநிலைக் கோடின்மையால் எப்பகுதியாரும் ஒப்பத்தக்கதேயாயினும் இந்த ஞாலவாழ்க்கைக்கு இன்றியமையாதுவேண்டும் முதற் சாதனமானது ஒருவருக்கொருவர் அடங்கி யொழுகுவதற்காக வேண்டும் ஒருவித வான்முறைகளன்றோ? அவ்வான்முறைகளான ஜாதியக் கோட்பாடுகளெல்லாம் ஒருங்கே ஒருமைப் படுமாயின் வேறு எவ்வித வான்முறைகளாலே இந்த நிலவுலகமானது இயங்கக்கூடு மெனச்சில மேதாவிகள் வினவுதல் கூடுமென்றும்; அவ்வினாவிற்கு மிக்கச்சரியான விடையளிக்க வேண்டுவதும் ஆவசியகந்தா னென்றும்; ஆனால் பொருட் செல்வமுடையவர்களுக்கு அஃதல்லாத ஏனையவறியோர்கள் அடங்கி யொழுகுதலும், கல்விச்செல்வமுடையவர்களுக்கு இந்த ஞாலம் ஒருங்குமே அடங்கி யொழுகுதலும் பங்குனி, சித்திரை மாதங்களின் பூர்வபக்கத்தின் வெண்மதிர்நன்மதி போன்று ஆய்ந்து நோக்குந்தோறும் தெற்றெனவிளக்கும் உலக வியற்கையேயாகும் என்றும்; இதனையுணராத நவீன மேதாவிகளில் எவருமே இல்லையென மனப்பூர்வமாக நிச்சமாற்றிக் கூறலாமென்றும்; ஆனால் அமற்றி எமது சகோதரர்களே! நம்முன்னையவர்களாலே தாழ்ந்த வருணத்தாரென நம்மினின்றும் ஒதுக்கிவைக்கப் பட்டிருக்கிற நம்இளைய சகோதரர்களுக்கும் நம்முடைய சைவசமயத்தின் நூல்களையும், அதன் ... உதனதுஉண்மை

களையும், நன்றாக விளக்கச்செய்து எந்த வாற்றானும் அன்னவர்களை ஏனையமதங்களிற் புகுதாமல் நிற்க வேண்டுமொற்றை இத் தக்கணமே செய்துமுடிப்பதற்காக வருணபேத முண்டென்னும் கோட்பாடுகளை இத்தக்கணமே ஒழித்துவிட வேண்டுமென்றும்; அன்னவர்களும் நம்மைப்போல் உண்ணவும், உடுக்கவும், இன்பாதிபோகங்களைத் துய்க்கவும் வேண்டுமாறுகளை மிகவும் நம்மனப் பூர்வமாய்க்காட்டுதல் வேண்டுமென்றும்;

தூடிக்கு மாட்டின் வாய்கட்டலாகா தென்னும் பழமொழியை ஆய்ந்து நோக்குதல் வேண்டுமென்றும்; அன்னவர்களுக்கு நம்போன்ற மேல் வருணத்தார் செய்யும் கட்ட நிட்டூரங்களெல்லாம் பெரிதான பாவ மூட்டையேயாமென்றும்; சில மேதாவிகள் போதிக்கவருகிறார்கள்.

5. ஆகவே, நண்பர்காள்!, நாமும் வருண பேதத்தின் இயற்கைகள் இற்றென்றும், வருணபேதத்தை வைத்துக் கொள்வதா லுண்டாம் நன்மை தீமைகளையும் வருணபேதத்தை ஒழித்துவிடுவதா லுண்டாம் நன்மை தீமைகளையும் நிகழ்கால வருங்கால வியற்கைகளையும் தெற்றென ஆராய்ந்து நோக்கித் தெளிதல் வேண்டுவதும் ஆவசியகந்தான். எந்த விதமான வியவகாரங்களையும் நம்முடைய மகா சங்கத்திலே பல வேதாவிகளுங்கூடிப் பகர்ந்துபேசி பெரும்பான்மையோரின் அபிப்பிராயப்படி நிச்சயித்துக் சேர்டலும் வேண்டும். உலகத்திலுள்ள மனிதவர்க்கங்களெல்லாம் ஆண் பெண் என இரண்டுவகையாகத் தான்.

உ

கடவுள் துணை.

நாட்டுக்கோட்டை வைசியம்.

தமிழ் இலக்கண வினா விடை.

——:○○○:——

க. தமிழ் என்பது என்னை? அஃதாவது

மலர்தலை யுலகத்து, நம் ஆசியா கண்டத்தின் தென் திசையிலே கிழக்கில் வங்காளக்குடாக்கடலையும், மேற்கில் அரபிக்கடலையும், வடக்கில் இமயமலையையும், தெற்கில் இந்துமகா சமுத்திரத்தையும், எல்லைகளாகப்பெற்ற இப் பரத கண்டத்தின் தென் பகுதியிலே ஏனைய எவராலும் தமிழ் நாட்டார் எனப் பேசப்படுகிற ஒரு பெருந்தன்மை வாய்ந்த ஏறக்குறைய சுமார் இரண்டு கோடி மக்கட் கூட்டத்தாராகிய நமது வகுப்பாருக்கே பொதுவாக உரியதும், நம்மோராற் பேசப்படுவதும், தற்காலம் சிறுபான்மை பல பகுதியார்களாலேயும் பகர்ந்துபேசி மகிழப்படுவதுஉம், அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் நான்கு புருடார்த்த இலக்கணங்களையும் மிகச் செவ்வையாய் விளக்கிக்காட்டப்படுவதும் மிக மேலான இனிமையும், நல்ல முறைகளும், தன்னை அடைந்தோர் எவருக்கும் பேரின்பம் கொடுக்கும் பெரிய ஓர் வன்மையும், தெய்வத்தன்மை வாய்ந்ததும் ஆன பல மொழிகளுக்கும், பல நூற்களுக்கும், அவைகளிலே உடைத்தான பல இலக்கணங்களுக்கும் பொதுவான ஓர் தலைமகுடமே ஆம்.

உ. இத் தமிழ் யாவராலே எக்காலத்தில் செய்யப்பட்டது?

சுருதி, உத்தி, அநுபவம் என்ற மூன்றற்கும் ஒப்ப ஆதியில் வரிவடிவின்றி (அஃதாவது எழுதப்படுவதற்குரிய உருவமின்றி) கேட்கப்படுவதற்குரிய ஒலிவடிவாய் இருந்த இத் தமிழ் இன்னகாலத்தில் இன்னாராற்றான் செய்யப்பட்டதென எவரா

௩. இஃதென்னை? அவ இலக்கணமான கூற்று "இரு மொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர்" என்றபடி அவன், அவள், அது என்னும் மூவகைப் பொருட்கும் முந்திய முழுமுதற் கடவுளான நம் பரசிவப்பெருமானாலே செய்யப்பட்டதென என் சொல்லுதல் கூடாது?

ஆம்! மெய்மைதான். அவ்வாறுதான் சொல்லுதல் வேண்டும். அஃதாவது நமது பரசிவப்பெருமானாலே,

"மேலை நிலத்தில் மேதகு பெண்ணை
மூல நிலத்தில் முளைத்தெழுஞ் சோதியே
ஏல வெழுப்பி இசைந்து சந்திக்கப்
பாலரு மாவர் பார் நந்தியாணையே"

"செல்லல் நிகழல் வருங்கால மூன்றுஞ்
சொல்லு மௌனத் தொழில்"

"ஓங்காரமான கலசத் தமிர் துண்ணிற்
போங்கால மில்லை புரிந்து."

என்றவாற்றின் முறைகளை யெல்லாம் மிகச் செவ்வையாக ஆசிரியன் குறிப்புகளாலே தேர்ந்து தெளிந்து தன்னுள்ளே தன்னை யோர்ந்து அமிழ்த வெள்ளத்தைப் பருகி சூக்கும சரீரத்தையும் பெற்று நரை திரை மூப்பின்றி எத்துணையோ கோடி சதுர் யுகங்களையுங் கண்டு கழித்த சிவஞான யோகச் செல்வச் சிரஞ்சீவிகளாலும், மூன்று கால வர்த்தமானங்களையும் உள்ளதை யுள்ளவாறு சொல்லத்தகுந்த உத்தம சீல மௌனிகளாலும் வரையறுத்துக் கூறற்கியலாத முந்திய ஓர் காலத்திலே செய்யப்பட்டதாம்.

குமாரக்கடவுளால் செய்யப்பட்டதெனச் சொல்வாரு முளர்.

௪. ஆனால் எற்றானும் காலத்தை வரையறுக்க முடியாதோ?

ஆம்! ஆம்! எற்றானும் எவரானும் காலத்தை வரையறுக்க முடியாது. யாங்ஙனம் எனின் இற்றைக்கு ஏறக்குறைய ௰௲௩-வருடங்களுக்கு முன்னரே அகத்திய மகா முனிவர் வடநாட்டிலிருந்து தென் நாட்டிற்கு வரநேர்ந்த ஒரு காலத்தில் செந்தமிழ் தெரியாதே என விழித்து எத்துணையோ தவங்கிடந்து பரசிவப்பெருமானிடத்தும் குமாரக்கடவுளிடத்தும் பாடங்கேட்டுச் சிந்தித்துக் கற்கத்தகுந்த பூரணத் தன்மைவாய்ந்து வளர்ந்தோங்கி இருந்ததென்றால் இத் தமிழ் மொழி பிறந்த ஓர் காலத்தைக்கண்டு வரையறை செய்யத்தகுந்த வல்லுநர் யாவரே யாவர்? அஃது எவரானும் முடியாத தொன்றேயாம்.

௫. பரசிவப்பெருமான் ஒருவராலேதான் செய்திருக்கக் கூடுமோ?

ஆம். ஒருவாறு அவர் தம் மாணவர்களாகிய அமரர் குழாங்களின் அபிப்பிராயங்களையுங் கூடக் கலந்துஞ் செய்திருக்கக் கூடும்.

௬. இத் தமிழ் மொழியைத் தேவ பாஷை எனச்சொல்லவுங் கூடுமோ?

ஆம். ஆம். சொல்லவுங் கூடும். திருவாசகம் என்னுந் தமிழை மணிவாசகப்பெருமான் சொல்ல அமரர் குழாங்களும் கண்டு வியப்படையுமாறு நடேசப்பெருமானே மிக்க ஆர்வத்தோடும் வரைந்து வைத்ததென்றால் தேவ பாஷை எனச் சொல்வதற்கு என்னை சந்தேகம்? சந்தேகமறச் சொல்லலாம்.

இன்னும் அகத்தியர் முதலிய பல முனிவர்களாலும், குமாரக்கடவுளாலும், எல்லார்க்கும் வல்ல இறைவன் றன்னாலுமே மிக இனிமையான பல [illegible]

தேவர்களாலேயும் தங்களின் சிரமேலேற்றிப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடக் கிடந்து நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த மாட்சியைக் கவனிக்கப்புகின், எற்றனும் எட்பிளவே எனினும் சந்தேகமறத் தேவ பாஷை என எவர்களுமே சொல்லலாம்.

எ. ஆனால் இத் தமிழ்மொழி மாட்சியில் மிகச் சிறந்தது தானோ?

ஆ! ஆ!! என்னே? இதற்கொரு கேள்வியும் உண்டோ? இற்றைக்கு ஏறக்குறைய ஓர் ரு-கூ-வருஷங்களுக்கு முன் மதுரையிலிருந்து வெளிவந்து கொண்டிருந்த "விவேக பாநு" என்னும் மாதாந்தப் பத்திரிகையில் ஆரியஞ் செந்தமிழாங்கிலத்தானுஞ் சீரிய நாவலர் பாவலர் சிலரும் போற்றத்தகுந்த பேரருந் தன்மை வாய்ந்த ஸ்ரீமான் ம. கோபால கிருஷ்ணையர் அவர்களால் வரையப்பெற்ற தமிழ் முதுமொழியின் தளர்ச்சியும் வளர்ச்சியும் என்ற அங்கத்திலுள்ள இரண்டொரு விஷயங்களை ஈங்கெடுத்து வரைகிறோம். கவனித்துக் கொள்க.

"விவேக பாநு."

தற்காலம் தென்னாட்டிற்குத் திலகம்போன்றிலகும் தமிழ்மொழியின் அருமை பெருமை அறையப்புகுவாம்: தமிழின் தொன்மையும் கடவுட்டன்மையுமே அதன் அருமைக்கும் பெருமைக்கும் காரணமாக இருக்கின்றன.

"ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழ விளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்---ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னேரிலாத தமிழ்."

(இ—ள்) ஓங்கல் இடைவந்து-மலையினிடத்தே தோன்றி, உயர்ந்தோர் தொழ விளங்கி-அறிவு ஒழுக்கங்களில் உயர்ந்தோர் வணங்க விளங்கி, ஏங்கு ஞாலத்து-ஓயாதொலிக்கும் கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்

தின்கண் உள்ள, இருள் அகற்றும் அவற்றுள்-இருளை நீக்கும் இரண்டினுள் மின் நேர்-மின்னலைப்போன்று ஒளி வீசும், தனி ஆழி-ஒற்றைச் சக்கரத் தேர்மேல் செல்லும், வெம் கதிர் ஒன்று-வெப்பத்தைத் தரும சூரியன் ஒன்று. ஏனையது-மற்றது யாதெனின், தன் நேர் இல்லாத-இணையற்ற, தமிழ் தமிழ்மொழி ஆகும். இதனால்,

உதயகிரியினிடத்தே சூரியன் தோன்றுதல்போல் இமோத்கிரிபால் தமிழ் தோன்றிற்றென்றும், சூரியன் புறத்திருள் நீக்கல்போல் செந்தமிழ், மாந்தரது அகத்திருளை நீக்குகிறதென்றும் பெறப்பட்டது. பலர் எண்ணுகிறபடி தமிழின் பிறப்பிடம் பொதியமலை என்னாது இமயமலை எனக் கொண்டதற்குக் காரணம் பிறிதோரிடத்திற் காணலாகும்.

(2) *எல்லாம் வல்ல இறைவரே தம் பெயரால் ஓரிலக்கணம் இயற்றியும் சங்கப்பலகை ஏறியும் தமிழ் வளர்த்ததால் அப்பொன்னார் செஞ்சடைத் தென்னவர் பிரார்க்கும்,*

சைவசமய குரவர்கள் இறைவனைத் துதித்ததும் பல அற்புதங்களைக் காட்டியதும் தமிழ்ப் பனுவல்களால் ஆதலின், உண்மைச் சைவர்க்கும்,

திருமழிசை ஆழ்வார் தமிழ் மொழியிற் சொன்னவண்ணம் ஸ்ரீதரக் கடவுள் செய்தருளியதால் அவர்க்கும்,

ஆழ்வாராதிகள் பாடி, விஷ்ணுவைத் துதித்ததால் வைணவர்கட்கும்,

மறையவனே செந்நாப் போதராய் அவதரித்துத் தமிழ்வேதம் இயற்றி இறுமாப்புற்ற கடைச்சங்கப் புலவரின் கர்வம் அடக்கியதால் பிரமனுக்கும்,

நக்கீரர், பொய்யாமொழிப்புலவர் முதலியோரிடமிருந்து தமிழ்க் கவிபெற முருகக்கடவுள் வலிய விரும்பியதால் அவர்க்கும், அவரது திருத்தொண்டர்க்கும், தமிழிடத்து ஆர்வம் மிகுதி என்பது புராண வாயிலாற் றெள்ளிதிற் புலப்படும்.

(3) "ஆரியமும் செந்தமிழும் ஆராய்ந்து இதனின் இது சீரிய தென்றெண்ணறச் செப்பரிது" எனக் கடைச்சங்கப் புலவரும், இருமொழியும் நிகர் என்னும் இதற்கையம் உளதேயோ? என்று காஞ்சிப் புராணமுடையாரும், இன்னவைபோன்று ஏனைபிறரும், கூறியிருந்தபோதிலும், சிற்சில காரணங்களால் வடமொழியினும் தென்மொழி சிறந்ததென்போம். எங்ஙனமெனில், தென்மொழிக்குக் கடவுளார் சம்பந்தமும் திருத்தொண்டர் சம்பந்தமும் ஏற்பட்டுள்ளனபோல் வடமொழிக்கில்லை. அன்றியும், வடமொழியில் இல்லாப்புணர்ச்சி இலக்கணங்களும், சொல் இலக்கணங்களும், செய்யுள் இலக்கணங்களும், ஏனைய பிறவும் ஆதி இலக்கணமாகிய அகத்தியத்திலேயே கூறப்பட்டுள்ளன எனத்தெரிகிறது.

(4) ஸ்ரீ-வரதஞ்சையபிள்ளை போல்வார் கூறுகிறபடி "சிந்தாமணியின் சுந்தர பெருமையும், மணிமேகலையின் அணிகெழுபோக்கும், சிலப்பதிகாரத்திலக்கியச் செல்வமும், திருவள்ளுவரின் ஒருமொழி நயமும், கம்பன் கவியின் செம்பொருள் இன்பமும், பத்துப்பாட்டின் வித்தக நடையும், கல்லாடத்தின் எல்லாச் சிறப்பும், தேவாரத்தின் மூவாப்பெருமையும், திருவாசகத்தின் ஒருவா அன்பும், இன்னோரன்னப் பன்னூல் மாண்பும் பிற பாஷையில் இருக்கின்றனவென யாரே துணிந்துகூற முற்படுவர்?

(5) நான் இவ்வளவு பெருமையாகக் கூறியது அபிமானம்பற்றி என்றெண்ணற்க. இது உண்மை என்பதற்கு அந்நியநாட்டுப் பண்டிதர்களையே சான்றாகக் குறிக்கிறேன்.

தமது ஆயுள் காலமுழுமையையும் தமிழ் கற்பதிலேயே செலவழித்துத்தற்காலம் தமிழ் அகராதி எழுதத் தொடங்கியிருக்கும் ரெவரண்ட் டாக்டர் G. U. போப்பையும்,

தமிழைத் தம்மாலியன்ற அளவு கற்றுணர்ந்து, அகராதி எழுதித் "தமிழ் கிரேக்க பாஷையினும் நயமான செய்யுள் நடையுடையது லத்தீன் பாஷையிலும் பூரணமானது" என்ற வின்ஸ்லோ பண்டிதரையும்,

"மனிதரால் பேசப்படுகின்ற மிகப் பொலிவும் திருத்தமும் சீருமுடைய பாஷைகளில் தமிழும் ஒன்று" என்று கண்டறிந்த டேய்லர் பண்

"ஸம்ஸ்கிருதத்தோடு போட்டிபோட்டு, அதனினும் மேம்பாடடைந்த இந்திய பாஷைகளில் தலை சிறந்தது தமிழ் ஒன்றே ஆகும்" என்ற கால்ட்வெல் பாதிரியாரையும் கேட்டால் அன்னோர் தமிழ்ப் பெருமை இன்னவென நன்கெடுத்துக் காட்டுவர்.

(6) தமிழ் நெடுங்கணக்கின் உருவ அமைப்பும் முறைச்சிறப்பும் போல வேறு எப் பாஷையில் காணலாம்? உயிரெழுத்திலும் உயிர்மெய்யெழுத்திலும் குறிலுக்கப்புறம் நெடிலிருத்தலையும் அவை ஒன்றிலொன்று உருவத்தில் ஒத்திருப்பதும்,

வலியோர் மெலியோர்க்கு முன் நிற்றல் வல்லெழுத்துக்கள் யாவும் மெல்லெழுத்துக்கள் முன் நிற்பதும், தமிழ் பாஷையிலின்றி வேறெப் பாஷையிலும் இல்லையே.

(7) கற்பனைச் சிறப்பைத்தான் என்னென்பது?

"நன்னகர் நோக்கினான் நோக்கினான்" என்பது, கம்பராமாயணச் செய்யுள் ஒன்றின் நாலாம் அடியாகும். இச்சிறுவரி, அனுமார் எரிகொளுத்தி இலங்கையைச் சுட்டகாலத்தில் இராவணன் இருந்த நிலையைப்பற்றிக் கூறியது. இதற்கு ஒன்றினொன்று பெருமையில் தாழாத எட்டர்த்தங்கள் இருக்கின்றன என்று யார்க்குத் தெரியும். நிற்க.

இனி, இத்தமிழ் மூல பாஷையா அல்லது கிளைப்பாஷையா? என்று ஆராயத்தக்கது: கல்விகேள்விகளில் தேர்ச்சிபெற்ற மொழிநூல் வல்லோர், உலகின்கண் வழங்கும் மொழிகளை 'ஆரிய' மொழிகள் என்றும் 'திராவிட' மொழிகள் என்றும் இருவகையாகப் பிரித்து "ஆரிய மொழிகள் பலவற்றுள்ளும் ஸம்ஸ்கிருதம் தலை சிறந்ததொன்றாம். அவ்வாறே திராவிட மொழிகளுள் அடங்குவன பலவற்றுள்ளும் தமிழ்மொழி தலைசிறந்ததொன்றாம்" எனக் கூறியிருக்கின்றார்கள். ஆகவே, ஸம்ஸ்கிருதமும் தமிழும் வெவ்வேறு பாஷைகள் என்பது வெள்ளிடைமலைபோல் தெள்ளிதிற் புலப்படும் அன்றோ? என இதுகாறும் ஐயரவர்கள் கூறிவந்ததே இத்தமிழ் மொழி மாட்சியை மிகச் செவ்வையாய் விளக்குகிறதாகலின் இஃதே சாலும்.

தமிழ் இலக்கண வினா விடை.

அ. இத் தமிழ்மொழி உற்பத்தி ஆரிய மொழிக்கு முந்தியா? அல்லது பிந்தியா? அல்லது ஒரே காலத்திலா?

ஆரியத்திற்கு முந்தியாயிருப்பின் நமக்கென்னை ?

பிந்தியாயிருப்பின் நமக்கென்னை ?

ஒரே காலத்தவையாயிருப்பின் நமக்கென்னை?

இக்கேள்வி அவசியம் இல்லாதனவே ஆகும். முந்தியா பிந்தியாவென நாமேன் கவனித்தல் வேண்டும். வல்லமை உளதாயின் அம் மொழிகளிலே உடைத்தான பொருள் நிலையங்களை மட்டும் மிகச் செவ்வையாய்க் கவனித்து கண்டுணர்ந்து பேரானந்தமாக நாம் அனுபவிக்க கருதுதல் வேண்டுமே ஒழிய இஞ் ஞாலத்திலுள்ள மொழிகளை யெல்லாங் கற்றுத் தேர்ந்து இது முந்தியா அது முந்தியா வென ஆராய்ந்து தீர்மானிப்பதென்றல் அஃது பெரும்பான்மை எவருக்கும் சாத்தியமாகாத ஒரு வேலையே ஆம்.

எனினும் ஒருவாறு சற்று கவனிப்பாம்

அஃதாவது ஸம்ஸ்கிருதத்தினின்றும் பல நூற்களும் அவற்றோடு பல்லாயிர மொழிகளும் தமிழில் வந்ததைக்கொண்டு தமிழ் ஆரியத்திற்குப் பிற்பட்ட தென்று ஊகித்தலும் நியாயமாகாது. வடமொழி என்றும் தென்மொழி என்றும் வழங்கும் சாதாரண வழக்கத்தை ஊகித்துணரப்புகின் தெற்கேற்படுவதன் முன் வடக்கு இருந்திருக்குமேல் தென்மொழியாகிய தமிழ் வடமொழியாகிய ஸம்ஸ்கிருதத்திற்கு பிந்தியதெனக் கொள்ளல் பொருத்த முடைத்தே. ஆதலின் தமிழும் ஆரியமும் ஏககாலத்தவை என்று கொள்ளவுங் கிடக்கிறது.

கூ. வடமொழி என்பதனாலும் தென்மொழி என்பதனாலும் ஒரே காலத்தவை என்னலாவது அல்லது பிந்தியதென்னலாவது அல்லது முந்தியதென்னலாவது பொருந்துமா?

ஒரே காலத்தவை என்னலும் பொருந்தும்.

முந்தியதென்னலும் பொருந்தும்.

பிந்தியதென்னலும் பொருந்தும்.

யாங்ஙனமெனின் ஒரே காலத்தவை என்பதற்கு எட்டாவது வினவுக்குரிய விடையே சாலும். மற்றைய இரண்டிற்கும் யாவர்க்கும் அநுபவத்தில் விளங்கக்கூடிய

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மரகதவிநாயகர் துணை

நாட்டுக்கோட்டை வைசியம்.

வருணபேதம்

முன் 3-வது புத்தகம் 61-வது பக்கத்தொடர்ச்சி.

இயங்கப்படுகிறதென்பதை நம்முடைய வகுப்பு ஒவ்வொரு நண்பர்களும் நன்கு செவ்வையாக உணர்ந்து கொண்டிருந்தாலுங்கூட நம்முடையஜாதியக் கட்டுப்பாடுகளை யெல்லாம் நன்கு செவ்வையாகச் சீர்தூக்கி எற்றானும் முதன்மையான தான் முறைச் சட்டங்களை எற்றும் நழுவவிடாதவண்ணம் காப்பாற்றிக்கொள்ள வேண்டுவதும் ஆவசியகமே.

6. நம் இந்திய தேயமெல்லாம் ஒன்றுகூடி முதலியாரென்றும் பிள்ளையாரென்றும்; நாயுடுகாரென்றும்; செட்டியாரென்றும்; ஆசாரியாரென்றும்; அவ்வவர்களின் வருணத்தைக் காட்டக்கூடிய குறிகளை யொழித்து இராமன், கிருஷ்ணன், கோவிந்தன், அழகப்பன், சிதம்பரம், நாச்சியப்பன், கிட்டாணி, கருப்பன் என்றுதா னிருத்தல்வேண்டுமென்னும் ஒருசட்டத்தை நாளாரம்பத்திலோ அல்லது திடீரென்றோ உண்டுபண்ணி விடுமானால் அப்பொழுது நம்முடைய பகுதியும் கூடச் சேர்ந்துகொள்வதில் எற்றும் சந்தேகமிரா தென்பதையும் நாம் நன்றாகக் கவனித்துக் கொள்ளல் வேண்டும். எல்லாம் வல்லஇறைவனும் திருவருள் புரிவாராகுக. சுபம் ! சுபம் ! சுபம் !!!

நாட்டுக்கோட்டை வைசியம்.

நம் சமய குரவர்களும் நாமும்.

அன்பாலும், அறிவாலும் சிறந்த நண்பர்காள்! நம் சமயகுரவர்களின் பாதம்பணிந்து நம் சமய குரவர்களும், நாமும் என்னும் அங்கத்தை வரையத் தொடங்குவாம். அஃதாவது நம்முடைய வகுப்பாருக்கு வேண்டும் தீக்ஷை முதலிய உபதேசங்களைச்செய்து வைப்பவர்களும், இருவகைப்பட்ட சடங்குகளைச் செய்துவைப்பவர்களும், நம் சைவசமயத்தை வளர்த்துவருபவர்களும் சமயநூன்முறைகளைச் சித்தாந்த விலக்கண வரன்முறை தவறாது மிகுதியும் உள்ளன்போடும் பக்தி சிரத்தையோடும், போதனைசெய்து வருபவர்களுமே சமய குரவர்கள் எனப்படுவோர்கள் என்பது நம் போல்வார் பலரும் நன்குணர்ந்த விஷயமே. இவர்களைப்பற்றிச் சிறிது கவனிப்பாம். நிற்க. நம் சமயத்தினின்றும் துறவு பூண்டவர்களும், அவர்களோடும் சார்ந்த மடாதிபதிகளும், நம் சமய குரவர்களே ஆவார்கள் எனினும், இங்ஙனம் கூறப்படுகிற சமயகுரவர்களோடும் கூட்டி அன்றும்: அன்னவர்களைப்பற்றி இங்ஙனம் எடுத்துக் கூறற்கு எவ்வித காரணமும் இன்றாம். துறவு பூண்டவர்களாவது, மடாதிபதிகளாவது, இல்லோடும் கூடிவாழும் நம்முடைய வகுப்பார்கள் யாவருக்கே எனினும் நம் சைவசமய தீக்ஷை முதலியவைகளை உபதேசம் செய்வதற்கு அருகராகவுமாட்டார்கள். வேதாகம புராணேதிகாசங்களெல்லாம் எவ்வாறு இயம்பினும் அன்னவர்களின்பால் உபதேசம் பெற்றுக்கொள்வதும் கூடாவாம். ஆய்ந்து நோக்குமிடத்து அஃது சட்டமாகவும் மாட்டாவாம்.

2. ஆரியர்களாலும், ஆதிசைவர்களாலும், செய்விக்கப்படுகிற விவாஹம், தீக்ஷை முதலிய நற்கருமமாதிகளும், சாச்சடங்கு முதலிய தீயகருமமாதிகளும், நிகழ்கால வழக்கியல்களோடும் ஒட்டி வருங்கால வழக்கியல்களுக்கு இறந்தகால வழக்கியல்களாகி நேர் விரோதம் ஆகிறதாகலின், அதனையும் ஒழித்தல் வேண்டும். அஃதாவது, ஆரியர்களாலும், ஆதிசைவர்களாலும், மேற்கண்ட கருமமாதிகளைச் செய்விக்கப்படுகிறது எவ்வாறு எதிர்கால வழக்கியல்களுக்கு இறந்தகால வழக்கியல்களாகி விரோதமாகிறதெனின்? நம்முடைய செந்தமிழ் ஞாலத்தில் தோற்றப் படுகிற ஒவ்வொரு வகுப்பார்களும் சில ஞான்றுகளுக்கு முன்னர் மேற்கண்ட கருமமாதிகளையெல்லாம் ஆரியர்களாலும், ஆதிசைவர்களாலும், செய்வித்துக்கொள்ளப்பட்டுவந்ததை தற்கால நாகரீக வழக்கியல்களை மேற்கொண்டு வருங்கால வழக்கியல்களோடும் ஒட்டி ஒழுகுவதற்காகத் தங்கள் தங்களின் வகுப்பாருக்குள்ளாகவே மேற்கண்ட ஒவ்வொரு கருமமாதிகளையும் செய்வித்துக்கொள்வதற்காக எவ்வகைத்தாலும் தேர்ந்த உயர்தரப் படிப்பாளிகளையே தங்களுக்கு வேண்டும் ஆசிரியர்களாகத் தெரிந்தெடுத்து நேமித்துக்கொண்டார்களாதலின், நம்முடைய வகுப்பாரும் அவ்வாறு செய்துகொள்ள வேண்டுமென்பதே எம்முடைய கருத்தாகும்.

3. இன்னும், பிராமணர்களுக்கு ஆசாரியர் அல்லது குரவர்களாயிருப்பவர்கள் அவர்களின் சுய ஜாதியாயும், உடனிருந்து சமபோஜனம் செய்யக்கூடியவர்களாயும், சைவ வேளாளர்களுக்கு ஆசாரி

யர்களாயிருப்பவர்கள் அவர்களின் சுய ஜாதியாயும், உடனிருந்து சமபோஜனம் செய்யக்கூடியவர்களாயும் இருப்பதைப் பற்றியும், இன்னும் வேளாள வைசியவகுப்பாரென்னை? தேசிக வகுப்பாரென்னை? கம்மிய வகுப்பாரென்னை? இப்படிப்பட்ட ஒவ்வொரு வகுப்பார்களையும் பற்றி நாம் நன்றாகக் கவனிக்கப் புகுந்தால் அவ்வவர்களின் சுய சாதியாயும் உடனிருந்து சமபோஜனஞ் செய்யக்கூடியவர்களாயுமே காணப்படுகிறார்கள். இன்னும்,

'ஒத்ததறிவான் உயிர்வாழ்வான், மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்.'

'உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலாதார்"

என்ற ஆன்றோர் வாக்குகளை நாமென்னை உணராதவர்களோ? நம்முடைய வகுப்பிற்குமட்டும் எதற்காக இவ்விஷயம் மாறுபட்டிருத்தல் வேண்டும்? இறந்தகாலவழக்கியல்களுக்கு நிகழ்கால வழக்கியல்கள் வேறுபட்டும், நிகழ்கால வழக்கியல்களுக்கு இனி வருங்கால வழக்கியல்கள் வேறுபடக்கூடுமென்பதும் நம்முடைய உணர்ச்சியுள் அகப்படாததோ? உலகமானது எந்த வியவகாரங்களிலே நுழைந்து தலையிட்டுக் கொள்ளினும் மெஜாரிட்டியின் பக்கமே நின்று சாதனைசெய்யும் என்பதையும் நாம் மறத்தல் கூடுமோ?

4. ஆனதுபற்றி எம் அருமைச் சகோதரர்களே! நம்முடைய வகுப்பிற்கு வேண்டும் ஒவ்வொரு நற்கருமமாதிகளையும், தீய கருமமாதிகளையும், செய்வித்துக் கொள்வதற்கு நம்முடைய வகுப்பிற் பிறந்து நம்முடும் ஒரே பந்தியில் சமபோஜனம் செய்யக் கூடியவர்களுமான நம்முடைய நாட்டுக்கோட்டை வைசியரென்னும் நம்முடைய சகோதரர்களின் உள்ளாகவே வேத ஆகம புராண இதிகாசங்களினும் நம்முடைய சைவசமய நூன்முறைச் சட்டக்கோட்பாடுகளினும் கற்றுத்தேர்ந்த நிபுணர்களாயும் இல்லற ஒழுக்கங்களில் சிறந்து எட்டுணையாலும் எவ்வித காரணங்களைக்கொண்டும் தவறி இயலக்கூடாத ஆற்றலுடையவர்களாயும், சற்றேறக்குறையப் பரம்பரையிலே குடும்ப விசேஷமுள்ளவர்களாயும் இன்னும் ஏனைய ஒவ்வொரு நல்லொழுக்கங்களினும் மிகச் சிறந்தவர்களாயும் ஆராய்ந்து ஒரைந்தாறு குடும்பக்காரர்களைத் தேர்ந்து தெரிந்தெடுத்து அன்னவர்களை மேற்கண்ட ஆசாரியர்கள் அல்லது குரவர்களாக்கற்குவேண்டும் முறையான அபிஷேகாதி கிரியைகளை எல்லாம் ஒருங்கே நம்முடைய சைவசமய தீக்ஷகர்களாலேயே செய்விக்கச் செய்து அதன் பின்னரே அன்னவர்களுக்கு வேண்டும் மா மகுடஞ் சாற்றி பக்தி பூர்வகமான அன்போடும் அன்னவர்களை நம்மவர்களின் இடை இடையே நாலா பக்கங்களினும் இல்லற ஒழுக்கங்களோடும் தங்கச்செய்து நம்மவர்களுக்காக வேண்டும் ஒவ்வொரு கிரியையாதிகளையும் நம்முடைய செந்தமிழ் மொழிகளாலே பெரும்பான்மையுஞ் செய்விக்கும்படி வேண்டும் மீட்டிங்குகள்கூடி கூடிய கூட்டத்தாருள், கூடிய பக்கத்தாரின் அபிப்பிராயம் போன்றே நீடூழி காலம் நிலைபெறுவதற்கான நூன்முறைத் திருத்தச் செவ்விய கோட்பாடுகளுடனே நியமனஞ் செய்து கோடல் வேண்டும்.

5. எந்த எந்தக் காலங்களில் அன்னவர்கள் தங்கள் தங்களின் நன் நிலைமைகளை விட்டுத் தவறுவார்களோ அங்ஙனே அன்னவர்களை மேற்கண்ட ஆசாரிய பதவியில் நின்றும் விலக்கிவிட்டு ஏனைய ஒரு குடும்பத்தாருக்கு அப்பதவியைக் கொடுக்குந் தத்துவத்தையும் நம்முடைய மகா சங்கத்தவர்கள் தங்கள் தங்களின் கரங்களிற் கங்கணமாக ஆர்த்துக் கொண்டிருத்தலும் வேண்டும். நமது வகுப்புள்ளே நம்முடைய ஆசிரிய குடும்பத்தாரெனக் கூடிய சீக்கிரம் பெருகச்செய்தலும் வேண்டும். ஏனைய ஒரு வகுப்பாரின் கால்களிலே போய் வேண்டும்பொருள்களையுங் கொட்டி அடியற்ற கொன்மரம் போன்று வீழ்ந்து அஞ்சலிசெய்வதையும்பற்றிக் கவனித்தல் வேண்டும். நம்முடைய வகுப்பினுள்ளாகவே நம்முடைய வகுப்பிற்கு வேண்டும் ஆசிரியன்மார்களைத் தெரிந்தெடுத்து நியமனஞ் செய்துகொள்வதற்குக் கூடிய கூட்டத்துள் கூடிய பக்கத்தாரின் அபிப்பிராயமின்றி குறைந்த பக்கத்தாரினபிப்பிராயங்களே இருக்குமாயின் நம்முடைய நாடு நகரங்கள் எங்கணும் இவ்விஷயம் பரவுகிறவரை ஆரியர்களாயும் ஆதி சைவர்களாயுமல்லாத நம்முடைய சைவசமய தீக்ஷகர்களான தேசிகரென்னும் ஒரு வகுப்பாரையே மேற்கண்ட இருவகைப்பட்ட கருமாதிகளையும் செய்துகொள்வதற்காக வேண்டும், ஆசிரியர்களாக நியமித்துக் கோடலும் வேண்டும். பிரமச்சாரி அல்லது சந்நியாசி வர்க்கத்தாராலே எவ்வித உபதேசங்களும் பெற்றுக்கொள்வது எற்றும் நியாயமாகாது. அவ்வழக்கியல் தற்காலவரையுளதாயிருப்பின் அடியோடே வேரறத் தொலைத்து விடுதலும் வேண்டும். அன்னவர்களை நம்மவர்களின் தலைவாயிலிற்கூட நுழைய விடுதலுங் கூடாவாம். எத்துணையோ பிரமச்சாரிகளும், சந்நியாசிகளும், காமக்குரோதாதி மோகங்களென்னும் வலையினுள்ளே சிக்கி இஞ்ஞாலததில் செய்யத்தகாத செயல்களையெல்லாம் தாறுமாறுமாகத் தெரிந்தோ தெரியாமலோ செய்துவிட்டுப் பின்னர் தற்கொலை செய்துகொண்டவர் அநேகருள்ளனவென்பதையும் நாம் நன்றாகக் கவனித்தல் வேண்டும். நம்மிலும் பிரமச்சாரியாயும், சந்நியாசியாயும், சாகிற நாள் வரை காலத்தையோட்ட வேண்டுமென்ற எண்ணமுடையவர்கள் அவர்கள்பா லுபதேசம் பெற்றுக்கொள்ளவுஞ் செய்யலாம்.

6. அகப்பற்று புறப்பற்றுகளையெல்லாம் ஒழித்து முற்றத் துறந்த முனிவர்களும் நம் செந்தமிழ் ஞாலத்துள் இல்லையென்பதூஉமில்லை. ஒவ்வொரு பட்டிதொட்டிகளினும், சந்து பொந்துகளினுங் கூட உள்ளாரென்பதூஉம் நிச்சயமே எனினும், கேவலம் கருமமாண்டிகளான நம்மையோ ஒரு பொருட்படுத்தி அன்னவர்கள் தங்களின் நிஷ்டையை ஒழித்துக் கொன்னே எழுந்துவந்து நமக்கு உபதேசஞ் செய்யப்போகிறார்கள்? அல்லது நாமே தேடிப்பெற்றுக்கொள்ள வேண்டுமாயினும் ஆயிரக்கணக்கான தீவர்த்திகளைக் கொளுத்திக்கொண்டு மாந்த ருலகமாகிய நகரு பகலும் இரவுமாக எங்கணும் எத்துணை கற்பகோடிகாலம் தேடினும் நம்முடைய கட்புலனுக்குப் புலப்படவு மாட்டார்கள். ஆனதுபற்றி என் சகோதரர்களே! கிரஹஸ்தர்களுக்கு உபதேசஞ் செய்யவேண்டும் ஆசிரியர்களும் கிரஹஸ்தர்களாகவே

தான் இருத்தல் வேண்டுமென்பதே எம்முடைய கருத்து. "புலியின் றோல் போர்த்திய பசுக்களைப் போன்றுள்ள" வேடதாரிகளை நம்பும் பழக்க வழக்கங்கள் என்றைக்கும் கெடுதலையே கொடுக்குமென்பதை நாம் நன்றாகத் தெளிதல் வேண்டும். எத்துணை தூரம் கற்றுத்தேர்ந்த நாவலர்களாயிருப்பினும், சமய நூற்களைப் போதனை செய்கிறவர்களாயிருப்பினும், தேவார திருவாசகங்களையே சதா பாராயணஞ் செய்பவர்களாயிருப்பினும், உத்தமத் தன்மை வாய்ந்த சந்நியாசிகளைப் போன்றே தோற்றப்படினும், அவர்கள்பால் ஏதேனும் கெட்ட இயற்கைகள் காணப்படுமாயின் அவர்களுக்கு யாதொரு தொந்தரவையுங் கொடுக்காமல் அடுத்த ஒரு நகருக்குப் போகும்படி செய்துவிடுதலும் வேண்டும். பழைய காலத்து வழக்கம், பழைய காலத்து வழக்கம் எனப் பார்த்துக்கொண்டேயிருந்து அஞ்சுவோமாயின் மனித யாக்கையோடு பிறந்தும், வளர்ந்தும், இருந்தும், பெரும்பொருள் சிறந்தும் பிரயோஜனமற்றனவாகவே முடியும். காலத்துக்கேற்ப இயல்தலை நிறைந்த பேரறிவாளர்களுக்கு பேரானந்தமாக முடியும். இன்னும் காலங்களுக்கேற்ப நாடு நகரங்களைச் சீர்திருத்தத்திற்குக் கொண்டுவருவதே பிரஹ்மஞ்ஞானிகளுக்கு சுவர்க்காதி போகமாகவு முடியும். நம் வகுப்பைச் சார்ந்த ஒவ்வொரு நாமும் தற்காலவரை நம்முடைய வகுப்புக்கு சமயாச்சாரியர்களாயிருப்பவர்களைப்பற்றியும், புதிதாயமைத்துக்கொள்ள வேண்டும் முறைகளைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யவேண்டும் பல விஷயங்களையும் நம்முடைய தூய்மையான அறிவிற் கெடுத்து நன்றாகச் சீர்தூக்கிப் பார்த்தலும் வேண்டும். அவ்வாறு சீர்தூக்கிப்பார்த்து கால வியற்கைகளுக்கேற்ப நடுநிலை கோடாது தீர்மானித்துக் கண்ட அபிப்பிராயங்களைப் பேப்பர்களுக்கு வரைதலும் வேண்டும். நம் சமயாச்சாரியர்களுக்காக நாம் நாம் செய்யவேண்டும் பல கடமைகளையும் நன்றாக யிற்றெனத் தெரிந்துகொண்டிருத்தலும் வேண்டும். நம்முடைய வகுப்புக்கெல்லாம் ஒருங்கே ஒன்றாக வேண்டும் ஒரு பொதுக்காரியத்தில் இரண்டு மூன்று கட்சிகளாக நம் நாடு நகரங்கள் பிளவுபடுமே ஆயின், அவ்வாறு பிளவுபட்டதனாலுண்டாயது நன்மையோ அல்லது தீமையோ அதனை எவ்வகைத்தானும் சிறந்த மேதாவிகள் தான் ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். ஆய்ந்து நோக்குமிடத்து பெண் மக்களுக்கு உபதேசஞ் செய்யவேண்டியவர்கள் பெண் மக்களாயும், ஆண் மக்களுக்கு உபதேசஞ் செய்யவேண்டியவர்கள் ஆண் மக்களாயுமே இருத்தல் வேண்டும். தற்காலவரை யுடைத்தாய ஆசிரியன்மார்களால் நம் நாடு நகரங்கள் இரண்டு மூன்று கட்சிகளாகியதற்காக வேண்டும் ஒரு பொதுவான சமாதானத்தைப்பற்றி எல்லா நகரத்துப் பல மேதாவிகளும் ஒன்றுகூடிப் பகர்ந்து கலந்து கட்டிப்பேசி ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படாமலிருப்பதைக் கவனிக்கப்புகின் மிகவும் விசனிக்கத்தக்கதே ஆகிறது. ஆன்றோர்கள் கவனிப்பாராகுக.

7. சகோதரர்களே! மனிதவர்க்கமாய்ப் பிறந்தால் கருணை வேண்டுமென்பதைப்பற்றியும்,

"இணரூழ்த்து நாறுமலரனையர் கற்றது
உணர விரித் துரையாதார்"

என்பது பற்றியுமே இங்ஙனம் எம்முடைய சிற்றறிவிற்கு எட்டிய ஒருவாறு கூறினும். பின்னர் நுங்களின் இஷ்டம். எந்த விதமான வியவகாரங்களுக்கும் நடுநிலை கோடாத கல்வியே காரணமென்பதையும் நாம் நன்குணரத் தெளிதல் வேண்டும். நம் சமய நூற்களைப் போதனைசெய்வதில் எந்த வகுப்பார்களாயிருப்பினும் சரிதான் பெரும்பான்மை நம்முடைய சகோதரர்களுள்ளும் பலர் அமைந்திருத்தல் வேண்டுவதும் ஆவசியகமே ஆம். சமயோஜிதமாக அவர்களுக்காக வேண்டுஞ் சில உபகாரவீறுகளும் நம்மைப் பொறுத்து நிற்குமென்பதை நாம் மறந்துவிடுதல் கூடாது. அவர்கள்பால் பெருந்தன்மையாகவும் நல்ல அந்தஸ்தான நிலையத்திலே வைத்துந்தான் ஒழுகுதல் வேண்டும்.

8. இனிச், சமயத்தை வளர்ப்பவர்கள்தான் முதன்முதல்ச் சமயாச்சாரிகளாவார்கள். அவர்கள் நம் சைவ சமயத்தைச் சார்ந்த எந்த வகுப்பிலே உதயமானவர்களானாலும் சரியே. அவர்கள் இன்ன வகுப்பாராய்த்தானிருத்தல் வேண்டுமென்பது கூடாது. அவர்கள் பெரும் பான்மையும் அவதார புருஷர்களாகவே விளங்க வருவார்கள். அற்புத மூர்த்திகளாயுமிருப்பார்கள். அவர்களுக்காக நாம் செய்ய வேண்டும் பல கடமைகளும் அவர்களைக் காணில் நமக்குத் தெரிந்தோ தெரியாமலோ ஒருங்குஞ் செவ்வையாகவே நடைபெறும். அவர்கள் அப்பர், சுந்தரர், மணிவாசகர், சம்பந்தர் முதலிய குரவர்களைப் போன்றவர்களே ஆம்.

9. பொதுவாக நம் செந்தமிழ் நாடு வேரறத் தொலைத்து விடுதலும் வேண

மடம் அல்லது குளக்கரை அல்லது ஆலயங்களிலே உடைத்தாய ஒரு மண்டப முதலிய இடங்களில் எவனேனும் ஒரு வேடதாரி வந்து உட்காருவானேயானால் அவனைப் பார்த்த அளவிலே அவன் இன்னானெனத் தெரிந்துகொள்ள எற்றுஞ் சக்தியற்ற பல பெண் மக்களும், சில ஆண் மக்களும், பழம், கற்கண்டு, பலகாரம், முதலிய தின்பண்டங்களுடன் சென்று அவன் கான்மாட்டு அடித்துப் புரண்டு விழுந்து அஞ்சலி செய்கின்றார்கள். அந்தோ! இஃதென்னை வியப்பு? சில ஆண் மக்கள் தாங்கள் ஆண்மக்களென்பதையு மறந்து நம் சமய உத்தம குரவர்களென அவன் வேடமான பழக்க வழக்கங்களைக் கண்டு அவன்பான்மயங்கி ரூபாய் அல்லது பவுன் அல்லது உண்டியலையும் யெழுதிக் கொடுக்கின்றார்கள். ஆய்ந்து நோக்குமிடத்து ஐயீர்! இஃது எத்துணை தூரம் தாழ்ந்த ஒரு அநாகரீகமான செய்கை? எத்துணை தூரங் கடந்த ஒரு மெய்ஞ்ஞானியாகவிருப்பினும் அவனுக்கும் வாழ்வினையைப்போக்க முடியாதே. உலகத்தில் தோற்றப்படுகிற சமயங்கள் பலவற்றுள்ளும் உயர்தரமான நம் சைவ சமயத்தின் அருங்கருத்துக்களை உணர்ந்த நம் செந்தமிழ் நாடு நகரங்கள் படும் இப்பாட்டின் தன்மையை யாவர் தலையின்மேலேற்றிவைத்துக் கூறுகிறது? அடடா! என்னை மோசம்! இவைகளையெல்லாம் ஆங்காங்கு ஞாபகப்படுத்த வேண்டுங் கடப்பாடுடைய பல மேதாவிகளும் தங்கலங்களை ஓர்ந்து கவனித்து அதன்பால்மயங்கித் துஞ்சிக்கிடப்பதூஉம் நம்முடைய நாடு நகரங்களின் வாழ்வினைப் பயனே போலும். வேடதாரிகளான சில [illegible] செய்யும் கொடு

செயல்களைப்பற்றி ஈங்கு வரைதல் வேண்டுமோயின் மிக விரியும். ஆதல்பற்றி இம்மட்டோடு நிறுத்தி விஷயத்தைச் சுருக்குவாம்.

10. ஒவ்வொரு நாடு நகரங்களினும் ஆங்காங்கு உடைத்தாய பல மேதாவிகளும், ஆங்காங்கு போலிச் சந்நியாசி இலக்கணங்களையும், போலிச் சமய குரவர் இலக்கணங்களையும், அவர்கள்பாற் செல்வதாலுண்டாம் தீங்குகளையும், பகிரங்கமாக உபந்யோசங்கள் புரிந்து உயர்தரமான எந்தத் துறவிகளே வந்து உட்கார்ந்துகொண்டிருப்பினும் எந்தப் பெண் மக்களும், எந்த ஆண்மக்களும், அறிவை இழக்குந் தன்மையையுடையவர்கள் ஆங்கு செல்லாதவண்ணம் ஓம்பவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேம். நண்பர்காள்! இவ்வங்கத்திற்காக வேண்டும் இன்னும் பல விஷயங்கள் இதன்பால் காணுதொழிந்து கிடப்பினும் அதனைச் செவ்வையாகத் தாங்களோர்ந்துகொள்வதோடுங் கூடத் தங்கள் நண்பர்களுக்கும் ஞாபகப்படுத்த வேண்டுமாயும் கேட்டுக் கொள்கிறேம். சுபம்! சுபம்!! சுபம்!!!

நம், சைவசமயத்தை ஏனைய தேயங்களினும் ஸ்தாபித்தல்.

பவமின்மை; இறவின்மை, பற்றின்மை, பெயரின்மை, உவமை இன்மை, ஒருவினையின்மை, குறைவிலறிவுடைமை, கோத்திரமின்மை என்று கூறப்படுகிற எண்குணங்களோடு பொருந்தி நிற்பவன் யாவனோ? அவன்தன் இரண்டு திருவடிகளுக்கும் அஞ்சலி ஆற்றி இங்ஙனம் நம் சைவசமயத்தை ஏனைய தேயங்களினும் ஸ்தாபித்தல், என்னும் அங்கத்தை வரையத் தொடங்குவாம். ஆய்ந்து நோக்குமிடத்து, நம் சைவசமயக் கோட்பாடுகளானது நம் பரதகண்டத்துச் செந்தமிழ் வழங்கும் ஒவ்வொரு பகுதிகளினும் இன்னுமேனைய ஒவ்வொரு பகுதிகளினும் நம்மவர்களாலேயே தலையெடுத்து மிகு சீர்சிறப்புற்று நம்மவர்களின் பெயர்ச்சுட்டாக ஆலயங்களென்றும், திருப்பணிகளென்றும், வேதபாடசாலைகள் தேவார பாடசாலைகளென்றும், புகழொலி முழக்கந் தருவதுபோன்று இலங்கை, பர்மா, மலாய் முதலிய அயல்நாடுகளினும் நம்மவர்களாலே நம் சைவசமயப் புகழொலி முழங்க வெள்ளி ரதங்கள், தங்க விக்கிரகங்கள், தேவாரக் கச்சேரிகள், கதாப் பிரசங்கங்கள், முதலிய அறிகுறிகளோடும் நம் சைவசமயத்தின் இடபக்கொடியினை நம் அரசியன் வகுப்பார் சிம்மக்கொடி போன்று பரந்து விளங்கச் செய்கிறோமென்பது உலகப் பிரசித்தமேயாம்.

நாட்டுக்கோட்டை வைசியம்.

2. இன்னும் நம் அரசியன் வகுப்பார் தங்கள் தங்களின் பால்
மணம் மாருப்பாலர் முதலாய மனைவி மக்களோடுங்கூட ஆயிரக்கணக்கான
மயிற்றூரங்களையும் கடல்யாத்திரை புரிந்து ஏனைய பல கண்டங்களினு
முடைத்தாய பல தேயங்களுக்குஞ் சென்று உத்தியோகங்கள் முதலிய
வர்த்தக விஷயங்களோடுங்கூடித் தங்களின் மதக்கோட்பாடுகளை ஆங்காங்கு
ஸ்தாபனஞ் செய்து பெரிது பெரிதான ஆலயங்களையுங் கட்டித்தீர்ந்து
அவர்களின் வேத நூற்களை ஆங்காங்கு உடைத்தாய அவ்வவ் பாஷைகளா
லேயும் புத்தகங்களாகப் பரவச்செய்து பெரும்புகழ் நாட்டிக் கோடிக்
கணக்குகளாகத் திரண்ட பெரும் பொருளீட்டிப் பலவிதமான நாகரீகங்க
ளாலும் சீர்சிறப்பெய்து வாழ்ந்துவருவதைப்போன்று நம்முடைய ஆசி
யாக் கண்டத்தின் பல பாகங்களுக்கும் ஐரோப்பா, ஆபிரிக்கா, அமெரிக்கா,
ஒஸ்ற்றிரேலியா, முதலிய ஏனைய கண்டங்களினு முடைத்தாய பற்பல
தேயங்களுக்குந் தங்கள் தங்களின் பால்மணம் மாருப்பாலர் முதலாய
மனைவிமக்களோடுங்கூடக் கடல் யாத்திரை புரிந்து ஆங்காங்கு சென்று
மிகுதியும் பெரும் பொரு ளீட்டுவதற்கான வர்த்தக விஷயங்களை நிலை நாட்
டுவதோடுங்கூட நம்முடைய சைவசமயக் கோட்பாடுகளையும், நான்முறை
விதிகளையும், பழக்க வழக்க ஒழுக்கங்களையும் மிகு சீர்திருத்தமாக ஸ்தா
பனஞ்செய்வதற்குத் தகுந்த பேரறிவாண்மையும், மதாபிமானமும், பரோ
பகாரச் சிந்தையும், நாகரீகங்களமைந்த பெருந்தன்மையும் ஏராளமான
செல்வப்பேறுகளும் உடைத்தானவர்கள் நம் பரதகண்டத்துள் நாட்டுக்
கோட்டை வைசியர் என்னும் ஒரு வகுப்பாரேயென்றும்; அவர்களே நம்
அரசியல் வகுப்பாரைப் போன்று வாழ்ந்து வருகிறார்களென்றும்; நம் இந்
திய தேயத்து ஏனைய பகுதிப் பிரபுக்களாலும், பற்பல சர்வகலா சாலைப் பட்டதாரிக
ளாலும் பிரஹ்மஞானபோத முதலிய கல்வியாதிகளாற் சிறந்து நிறைந்த
பல மேதாவிகளாலும் உணரப்படுகிறது.

3. ஆனதுபற்றி, என் சகோதரர்களே! நம்முடைய வகுப்பாரும்
நாமும் பன் மொழிகளாலும் கற்றுத்தேர்ந்த ஒரு தகுந்த மேதாவியே
வந்து நம்முடைய செயல்களையும் இயற்கைகளையும், நடை, உடை, பாவனை
முதலிய பல ஆசாரச் சீர்திருத்தங்களையும்பற்றி ஒரு தக்க சரித்திரமாக
எழுதப்புகுவானே ஆயினும், அதற்குத்தகுந்த உயர்தர நிலைகளிலே தோற்
றப்படுகிறோ மாதலின், இறந்தகாலச் செயல்களினும், இயற்கைகளினும்,

நம் சைவசமயத்தை ஏனைய தேயங்களினும் ஸ்தாபித்தல்.

நடை, உடை, பாவனை முதலிய சுகாதாரங்களினும், தற்காலத்திற்கு வழுங்
களாகத் தோற்றப்படுகிற ஒவ்வொரு விதிகளையும் விலக்கி எதிர்காலங்
களுக்காகவேண்டும் விதிகளிலே ஒட்டி ஒழுகவேண்டுவதே நம்முடைய
முதற்கடமையா மென்பதைப்பற்றி நன்றாகக் கவனித்து, இங்ஙன முடைத்
தாய சிறிய சந்துக்களைப்போன்ற இலங்கை, பர்மா, மலாய் முதலாய இடங்
களில், நம் சைவசமயத்தின் கோட்பாடுகளையுஞ், மாட்சிகளையும் விளங்கச்
செய்துவருகிறதைப்போன்று நம்முடைய இந்தியநாட்டிற்கும், நம்முடைய
வகுப்பின் பொதுவிற்கும், நம்முடைய சைவசமயத்திற்கும், இடைபெறாத்
தொடர்ச்சியோடுங்கூடிய முயற்சியால், உழைத்தலே நல்ல ஆண்மக்களின்
கடமையாம் என ஒவ்வொரு சகோதரர்களும் நன்கு எண்ணிநோக்கித் தீர்
மானஞ்செய்துகொண்டு ஒருங்கே தங்களின் முழுவலிமனத்தோடுங்கூடி
நம்முடைய ஒவ்வொரு நகரங்களுக்கும் விளம்பரங்கொட்டி, நம்முடைய
மித்திரன் முதலாய பெரிய-பேப்பர்களுக்கும் வரைந்து பெரிது-பெரிதான
ஏனைய செல்வ வந்தர்களுக்கும், மேதாவிகளுக்கும், திருமுகங்களனுப்பி
இன்ன-தேதியில் இன்ன-விஷயத்தைப்பற்றி மிகவும் பெரிதான மீட்டிங்
கொன்று கூடப்போகிறதென்பதை அறிவித்து ஒவ்வொரு பிரபுக்களையும்
ஒவ்வொரு மேதாவிகளையுந்தருவித்து நமக்கு முதன்மையான ஒருதலை
நகரத்தின்கண்ணே தக்க அந்தஸ்தும் பொருட்செல்வமும் நிறையப்பெற்று
ஆங்கில முதலிய கல்விச் செல்வங்களினும், நானாவிதமான உலகவியவகாரங்
களினுந்தேர்ந்த இருபது ஆண்டுகளுக்குமேல் ஐம்பதாண்டுகளுக்குட்
பட்ட நம்முடைய வகுப்பைச்சார்ந்த ஒரு தலைவரின் அக்கிராசனத்தின்
கீழ் கூடிப்பகர்ந்துபேசி நம்முடைய மதத்திற்காக இலக்ஷக்கணக்குகளாக
வேண்டுந் தொகைகளைச்சேர்த்து, வர்த்தகவிஷயங்காரணமாக மேலே கூறப்
பட்டுள்ள ஒவ்வொரு தேயங்களுக்கும், நம்முடைய வகுப்பின் சகோதரர்
களிலேயே பதின்மர் இருபதின்மர்களாகப் பொருக்கித் தெரிந்தெடுத்து
அன்னவர்கள் மனைவிமக்களோடுங் கூடச்செல்வதற்குப் போதிய வரைக
ளான் மாதவேதனம் அல்லது பாகங்களெனத் தீர்மானங்கள்செய்து ஆங்
காங்கனுப்பித் தங்களின் வர்த்தக விஷயங்களை முறையே நடைபெறச்செய்
வதோடுங்கூட நம் சைவசமயக்கொடியையும் ஆங்காங்கு புகழொலி முழக்
கப்பறையொலிகளோடும் பரக்கச்செய்விக்கவேண்டுவதும் நாம் செய்யக்

முதற்கடமையே யாம்.

4. வடமொழியிலும், தென்மொழியிலுமாகக்கிடக்கும் நம் சைவசமயத்திற்குரிய ஒவ்வொரு நூற்களையும், ஆங்கில முதலிய முதன்மையான பல பாஷையிலும் மொழிபெயர்த்து அஃதினை விரும்பப்படுகிறவர்களுக்கு இலாப மெய்து கொள்ளாமல் செலவடங்கிய முதலுக்கே சுற்றிலங்கணும் பரவச்செய்தலும் வேண்டும். பின்னர் மேலே கூறப்பட்டுள்ள ஒவ்வொருதேயங்களினும் நம்முடைய சகோதரர்கள் சென்று நிலைபெற்றதின் பின்னர் ஆங்காங்கு வேண்டும் அவ்வப்பாஷைகளிலேயும் மேற்கண்ட ஒவ்வொரு நூல்களையும் மொழிபெயர்த்து ஏனைய எவர்களுக்கும் எளிதிற் கிடைக்கத்தகுந்த விலை விகிதங்களையுந்தாக்கி ஆங்காங்கு அனுப்பிக்கொடுத்தலும் வேண்டும். பொதுவாக ஏனைய மதங்களெல்லாம் தாங்கள் தோன்றிய பதிகளில் நின்றும் அன்னிய பதிகளினுஞ்சென்று வேண்டுஞ் சிறப்பினை எய்துகொண்டனவாக நன்கு விளங்குகிறதன்றே? நம்முடைய சைவசமயமோ அவ்வாறு அன்னிய பதிகளுக்கெல்லாஞ்சென்று போதிய சிறப்பினை எய்துகொள்ளாதொழியினும் நம்முடைய சைவசமயத்திற்குறிய பதிகளில் மட்டுமேயாவது தன்னைத்தவிர ஏனைய ஒரு மதத்தினை எந்தவாற்றானும் வந்து நுழைய விடாது பாதுகாத்துக்கொள்ளுஞ் சக்தியைக்கூட இழந்தனவாகத் தேய்ந்து போயிற்றென்பதை நமது வகுப்பு ஒவ்வொரு நண்பர்களும் நன்றாக உணர்தல் வேண்டும். ஆரியம், செந்தமிழ், ஆங்கில முதலிய நாலைந்து பாஷைகளினுந் தேர்ந்த வல்லுநர்கள் சிலரைத் தெரிந்தெடுத்துத் தக்கவாறு பொதுப்பணச் சாலையிலிருந்து மாதவேதனங் கொடுத்துப் பற்பல தேயங்களுக்கு மனுப்பி நம்முடைய சைவசமயத்தைப் பற்றிய பல விஷயங்களையும், அதனது மகத்துவங்களையும், ஆங்காங்கு செவ்வையாக அவ்வப்பாஷைகளாலேயும் பிரசங்கிக்கச் செய்தலும் வேண்டும்.

"கொல்லா விரதங் குவலயமெல்லா மோங்க
எல்லார்க்குஞ் சொல்வதென் இச்சை பராபரமே."

என்றவாறு, அருங்கருத்துக்கள் அமைந்த வேதவாக்குகளை ஏனைய தேயத்தவர்களுக்குங் காட்டி அக் கொலைத்தொழில்களைவிட்டு மீட்டுந்தன்மையில் நாம் மிகுதியுங் கருணையுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

5. நிற்க, நம் சைவசமயத்தை ஏனையதேயங்களுக்குங் கொண்டுபோய் ஸ்தாபனஞ்செய்வதால் நமக்குண்டாம் பயனிலைகளாவ தென்னை என்பதைப் பற்றிக் கவனிப்போமாயின் முதன்முதலாக நம் சைவசமயத்தை வளர்க்குந் தன்

மீட்போமாகலின், மிகுதியான புண்ணியப்பேற்றையும் அடைவோம். அடிக்கடி பெரிது பெரிதான தேய சஞ்சாரஞ் செய்வோமாகலின். மேன்மேலும் உயர்தரமான நாகரீகம் உடையவர்களாவோம். ஆங்காங்கு எங்கணும் வேத சீர் சிறப்பான ஆடம்பரங்களோடு நமது குமாரக்கடவுளின் பிரதிமாரூபங்களையுங்கொண்டு போய் ஸ்தாபனஞ் செய்வோமாகலின், இஞ்ஞாலத்தில் நமக்கு மிஞ்சிய பணக்காரர்கள் இல்லையா மென்கக் கோடீஸ்வரர்களுமாவோம். தோற்றப்படுகிற முச்சகங்களுக்கும் நம்மை இன்னாரெனக் காட்டும் பெரும்புகழையும் அடைவோம்.'

"செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்."

என்ற தேவர் கருத்திற்கும் இலக்காவோம். ஐயன்மீர்! இவைகளை எல்லாம் மிகச் செவ்வையாக வுணர்தல் வேண்டும். இன்னும்,

"பெருக்காறொத்தது செல்வம்—பெருக்காற்றின்
இடிகரை யொத்ததிளமை—இடிகரை
வாழ்மரமொத்தது வாழ்நாள்—ஆதலால்,
ஒன்றேசெய்யவும் வேண்டும்—அவ்வொன்றும்
நன்றேசெய்யவும் வேண்டும்—அந்நன்றும்
இன்றேசெய்யவும் வேண்டும்—அவ்வின்றும்
இன்னேசெய்யவும் வேண்டும்—அவ்வின்னும்,
நாளைநாளை என்பீராயின்
நம்முடைய முறை நாளாவது—மறியீர்
நமனுடையமுறை நாளாவது—மறியீர்."

என்றபடி, இனிவரும்நாட்களை நம்முடைய முறைநாள்தானென்று சாதிப்பதற்கு யாதொரு ஆதாரமு மில்லையாகலின், இங்ஙனம் எடுத்துக்கொண்ட நன்றான ஒரு விஷயத்தை இப்பொழுதே செய்துமுடித்துவிடவேண்டுவதும் நம்போன்ற பேரறிவாளர்களின் கடமையாம் என்பதை நாம் எற்றானும் மறந்து விடுதல் கூடாது.

6. நண்பர்காள்! பொதுவாக நம் செந்தமிழ் நாட்டாரின் இயற்கையான பழக்கவழக்கங்களைப்பற்றிக்கவனிக்கப்புகுந்தால் மிகுதியும் அபாரமாகவே காணப்படுகிறது. அதனை ஓரளவுபடுத்திக் கூறுவதெனினும், எம்போலிகளால்

அளவிலே இரண்டொன்றைச் சுருக்கமாகவாவது சொல்லாதொழிவது எற்றும் நியாயமில்லையாகலின், நண்பர்காள்! நன்கு கவனித்தல் வேண்டும். நம் சைவ சமயத்தை ஏனைய தேயங்களினும் ஸ்தாபித்தல் என்னும் வரையப்படுகிற இவ்வங்கம் மிகப்பெரியதேயாம். இதற்காக வேண்டும் பல விஷயங்களையுங் கவனிக்கப்புகுந்த தன்மையில் நம் செந்தமிழ் நாட்டாரின் இயற்கையான பழக்கவழக்கங்களைப்பற்றிக் கவனிக்கவேண்டுவதும் ஆவசியகமே ஆம் அன்றே? ஆகலின், ஆய்ந்து நோக்குமிடத்து எத்துணையோ தூரம் வளர்ந்த ஒரு பெரிய வியவகாரங்களையெல்லாம் கொண்டுமுடிக்கத்தகுந்த அபாரசக்திவாய்ந்த மகா மேதாவிகளெல்லாம்,

"ஆங்கார முள்ளடக்கி யைம்புலனைச் சுட்டறுத்துத்
தூங்காமற் றூங்கிச் சுகம்பெறுவ தெக்காலம்."

என்றதையோர்ந்து தூங்காமற் றூங்கும் இயற்கையான மயக்கத்திலேயே தூங்கிக்கொண்டு மிருக்கிறார்கள். இவர்கள் இந்நிலவுலகத்தைத் தங்களின் கடைக்கண்களாலுங்கூட விழித்துப்பார்க்க விருப்பப்படுகிறவர்களல்லர். இவர்களுக்குச் சமயம் அல்லது மதமென்பதேகிடையாது இவர்களுட் சிலர் தாங்களடைந்து கொண்டபெரிய ஓர் சக்திக்குச் சமயம் அல்லவா காரணம் என்பதை முற்றும் மறந்தவர்களாய்ச் சமயத்தையும் சமயப்பற்றுடையவர்களையும் தூஷணை செய்யவும்புகுகிறார்கள். தோற்றப்படுகிற முச்சகங்களையும் பித்துடையதென்றும், அறியாமை என்னும் அறிவையே பொருளாகவுடையதென்றும், குழந்தைகளின் தன்மையையே உடையதென்றும், நினைப்பதே இவர்களின் இயற்கையாம். இவர்களுக்குச் சமய முதலிய உலக வியவகாரங்களெல்லாம் எவ்வாறு கெட்டொழிந்துபோயினும் அவைகளைப்பற்றிக் கவலையென்பதே எற்றுங்கிடையா. தேச நன்மைகளைக்குறித்து நினைக்குந் தன்மையுங்கூடக் கிடையா. ஆனால், இவர்கள் தங்களைப்போன்று ஏனைய உலகத்தவர்களெல்லாம் ஆய்விடவேண்டுமென்னும் அரிய கருத்தொன்று மட்டும் உடைத்தானவர்கள் என்பதை எவர்களும் மறுத்தல்கூடாது பெரும்பான்மையும் இவர்களின் இயற்கை

தமிழ் நாடு நகரங்கள். இவர்களால் செய்து வைக்கப்பட்டிருக்கிற சில வேதாந்த நூற்களைப்பார்த்த அளவிலேயே மயங்கி வெறுந் தூக்கந்தூங்கித் துஞ்சுவாருஞ் சிலர். இன்னுஞ் சிலர் சென்ற காலத்தியற்கைகளையும், அதனது மகத்துவங்களையும்பற்றிப்புகழ்ந்து பேசுவதிலும், அவ்வியற்கைகளை விட்டு எற்றும் வழுவாதியலுவதே தங்கள் தங்களின் பிறப்பின் பயனு மென்பதிலுமே பொழுதுபோக்குகிறார்கள். இன்னுஞ் சிலர் ஏதேனும் ஒரு பெரிய காரியங்களிலே தலையிட்டுப் பின்னர் முடிப்பதில் சற்றுக்கஷ்டமுறுமாயின் அதனைத் தாங்குஞ் சக்தியற்றவர்களாய் உள்ளதுபோல் நடக்குமென்றும், ஊழ்வினையை மாற்ற எவர்களுக்குத்தான் முடியுமென்றும்; "இராமராண்டாலென்னே? இராவணன் ஆண்டா லென்னே?" என்றும்; இவைபோன்ற பல சோம்பற்

சோர்ந்து எடுத்த வியவகாரங்களை ஒழுங்காகப் பூர்த்திசெய்யாமலும், ஆண்தன்மையை இழந்த இயற்கைகளையும் உடைத்தான பழக்க வழக்கங்களையே தமதங்கங்களாகப் பெற்றவர்களாயுமே இருக்கிறார்கள். இன்னுஞ் சிலர் தங்களுக்குக் கிடைத்த உத்தியோக மார்க்கங்களைப் பாதுகாத்துக்கொள்ளற்கே பொழுதுபோதாதென் விழிக்கிறார்கள். இன்னும் சிலர் தங்களின் மனைவி மக்களைப் பக்கமிருந்து பார்த்துக்கொண்டிருப்பதே சுவர்க்காதிபோகமெனக் கருதப்படுகிறார்கள். இன்னுஞ் சிலர் வீண்கதை பேசிப் பொழுதுபோக்குகிறார்கள். இன்னுஞ் சிலர் எற்றும் அறியாதவர்களாகவே காணப்படுகிறார்கள். ஆய்ந்து நோக்குமிடத்துச் சிலரே உழைப்பாளிகளாய்க் காணப்படுகிறார்கள். ஆனால், வரவரச் சிறுபான்மை இவ்வியற்கைகளும், இதனைச் சார்ந்த பழக்கவழக்கங்களும், காலவியற்கையால் மாறுதலடைந்துவருகிறது. பெரிய யோகீஸ்வரர்களாலேயும் சமய வியவகாரங்கள் முதலிய பல வுலகவியவகாரங்களும் கவனிக்கப்பட்டும் வருகிறது. நாம் யோகியாயிருந்தாலும், ஞானியாயிருந்தாலும், பெரிய உத்தியோகபதவியிலிருந்தாலும், செல்வவந்தராயிருந்தாலும், என்னை? நம்முடைய சமயத்திற்கும் அதனைச்சார்ந்த நம்முடைய நாடுநகரங்களுக்கும் வேண்டும் நன்மைகளையும், சீர்திருத்தங்களையும் செய்யவேண்டுவதும் ஆவசியகமே. மனித வர்க்கமாய்ப் பிறந்தவர்களை எல்லாம் நன்றாக நாகரீகமடைந்து வாழச்செய்யவேண்டுவதும் நம்முடைய பொறுப்பே என்றும்; உலகத்தில் தோற்றப்படுகிற ஒவ்வொரு மனிதர்களும்

களையுமாய்விட மாட்டார்கள் என்றும்; உணர்ந்து வருகிறார்கள்.

7. ஆனதுபற்றி, என் அருமைச்சகோதரர்களே! இனி ஒரு பிறப்பில் நாம் நாட்டுக்கோட்டை வைசிய வகுப்பாராக வந்து தோற்றி நம்முடைய சைவசமயத்திற்காக வேண்டும் பல நன்மைகளையும் செய்யப் போகிறோமென்பது எந்தவாற்றானும் நிச்சயமில்லையாகலின், மதத்தாலும், வருணத்தாலும், செல்வத்தாலும், கல்வியாலும், அறிவாலும், நாகரீகத்தாலும், வர்க்கத்தாலும் உயர்ந்த நிலையிற் தோற்றக்கிடைத்திருக்கிற இந்த ஞான்றே இதனை வாசித்துப்பார்த்த அளவோடே மறந்துவிடாமல் நம் சைவசமயத்தை ஏனைய பல தேயங்களினும் ஸ்தாபிப்பதற்காக வேண்டும் பல மார்க்கங்களையும் நமது வகுப்பைச்சார்ந்த பல மேதாவிகளோடுங் கூடிக்கலந்து ஒரு தொகையான பொருட்குவியலையுஞ் சேர்த்து அதற்கு மூலதனமாகவைத்துவேண்டுங் காரியங்களை ஒழுங்காகவும், சீர்திருத்தமாகவும் தீர்மானித்து இந்தக்கணமே பூர்த்தியாக்குமாறு வேண்டுகிறேம்.

8. மனிதராய்ப் பிறந்தார் செய்ய வேண்டும் பல பெரும் அரியசெயல்களுள் இதுவே வுயர்ந்ததாமென உணர்க. இவை போன்ற பெரிய வியவகாரங்களை எல்லாங் கொண்டு முடிப்பதற்கு நம் சகோதரர்களெல்லாம் ஒருமைப்பட்டு வாழ்வதே பெரியவோர் யந்திரமாமென்க. பெரிது-பெரிதான மீட்டிக்குகளே இன்றியமையாத சாதனமா மென்க. தோற்றப்படுகிற எந்த வியவகாரங்க[illegible]

மென்க. நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும் ஏதேனும் ஒரு பெரிய விஷயத்தைச்செய்து முடித்தல்வேண்டுமெனத் தக்க ஆலோசனையின் பேரில் ஆரம்பஞ்செய்துவிட்டால் அதிலிருந்தும் எத்துணை தூரம்பிரயாசைப்பட வேண்டுவதுநிகழினும் முன்வைத்தகாலைப் பின் எடுக்காமற் செய்துமுடித்தல் வேண்டும் பழக்க வழக்கங்களிலே பழகிவருதலும் வேண்டும். எல்லாம் வல்ல இறைவனுந்துணை நிற்பானாகுக. சுபம்! சுபம்!! சுபம்!!!

தன் மதக்கோட்பாடுகளிலே தவறின்றி யொழுகுதலும், சீர்திருத்திக்கோடலும்.

அன்பார்ந்த நண்பர்காள்! ஸ்ரீ அகண்ட பரிபூரண சச்சிதானந்தப் பழம்பொருள் எதுவோ? அதனையே அடியேமுளத்திடையிருத்தி இங்ஙனம் தன் மதக்கோட்பாடுகளிலே தவறின்றி யொழுகுதலும், சீர்திருத்திக்கோடலும் என்னும் அங்கத்தை வரையப்புகுவாம். அஃதாவது தங்கள் தங்களுக்கே உரியதாக விளங்குஞ் சமய நூன்முறைச் சட்டங்களிலே சொல்லப்படுகிற விதிவிலக்குகளை எல்லாம் நன்றாகத் தெரிந்து நாடோறு மநுஷ்டித்து ஒழுகவேண்டுமாறுகளிலே எற்றுந்தவறின்றி யியல்தலாமென்பதூஉம்; சீர்திருத்திக்கோடலாவது நிகழ்கால வியற்கைகளுக்கு முரண்படக் கூடிய விதிவிலக்குகள் உளதாயின் அதனை மாற்றாமல் மாற்றிச் செவ்வையாக்கிக் கொள்ளுதலென்பதூஉம் எவர்களுந் தெற்றெனத் தெளிந்த விஷயமேயாம். பொதுவாக இங்ஙனங் கூறப்படுகிற ஒவ்வொரு விஷயங்களையும் நம் சைவசமயத்தைச்சார்ந்த ஒவ்வொரு நண்பர்களும் நன்றாகக் கவனித்தல்வேண்டும். எந்தச் சமயத்தை நாம் தாழ்ந்தனவாகவும், கெட்டனவாகவும் கருந்த ஒவ்வொரு நண்பர்களும் அவ்வவர்களுக்குரிய நித்தியகருமம், ஆலயதரிசனம், விரதமுதலாய பல வியற்கைகளினும் ஒவ்வொரு நாளும் தவறின்றி யியலப்படுகிறார்களென்பதை நம்முடைய மனமே நமக்குச்சொல்லுகிறது. பொதுவாக ஆய்ந்துநோக்குமிடத்து நம் சைவசமயத்தைச்சார்ந்த பெரும்பான்மையோர்களுக்குக் காலையிலெழுந்த உடன் விபூதி தரித்தல்வேண்டும் என்ற ஞாபகமே கிடையாது. இன்னும், அநேகர்களுக்கு விபூதியை இன்ன திக்குமுகமாகத் தான் நின்று இன்னவாறாகத்தான் தரித்தல்வேண்டுமென்பதூஉங்கூடத் தெரியாது. இன்னும், அநேகர்களுக்கு நாடோறும் ஸ்நானமாவது செய்தல்வேண்டுமே என்ற எண்ணமுங்கூடக் கிடையாது. இப்படிப் பட்டவர்கள்தான் நாங்கள் பரம்பரையிலே சைவர்களாக்குமென்று குருபூசை மடங்களுக்குப் ''பந்திக்கு முந்து படைக்குப் பிந்து'' என்ற பழமொழியோடு செல்லுகிறவர்கள். இன்னும், சைவசமயத்தைச் சார்ந்த பெரும்பான்மையோர்கள்பானிகழ்ந்துவருங் குற்றங் குறைகளைப்பற்றிக் கவ

யாகும். மேலும் நம்மை நாமே யிகழ்ந்து கூறிக்கொண்டதாகவு முடியும்.

2. பொதுவாக நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு நண்பர்களுக்கும் நாடோறு மனுஷ்டிக்கவேண்டும் ஒவ்வொரு முறைகளும் நன்றாகத் தெரிந்திருத்தல் வேண்டும். ஆலயகைங்கர்யம், ஆலயதரிசனம், நித்தியவனுஷ்டானமுறை இவைகளுக்கும் நாம் நடத்தவேண்டுந் தொழில் முறைகளுக்கும் செவ்வையாகக் காலத்தை யளவுபடுத்திக் கொள்ளல்வேண்டும். நம் சைவசமயத்தைச் சார்ந்த நாம் நாடோறுமனுஷ்டிக்க வேண்டிய ஒவ்வொரு முறையான விதிகளையும் பற்றி யொழுங்காகவும், நியாயவாயிலாகவும் கவனிக்கப்புகுந்தால் ஒரு பகலோடு அந்த இரவையும் இரவல்வாங்கிக்கொண்டாலும் நம்முடைய நித்தியவநுஷ்டானகருமங்கள் பூர்த்தியாகமாட்டாவாம். எங்ஙனமெனின், ஒரு மனிதனுக்கு நாடோறுஞ் செய்யாமற் தீராத அவசியகருமம் மலசலங் கழித்தலல்லவா? அஃதாவது மலசலங் கழித்த உடன் எழுந்து புண்ணியதீர்த்தமல்லாத சலக்கரையை அடைந்து சலத்துக்கு ஒரு சாணுக்கு இப்பாலிருந்து கொண்டு மூன்று விரலால் அள்ளிய மண்ணுஞ் சலமுங்கொண்டு இடக்கையினாலே குறியையொருதரமும், குதத்தை ஐந்துதரத்துக்கு மேலும், இடக்கையை இடையேயொவ்வொரு தரமும், பின்னு மிடக்கையைப் பத்துத் தரமும், இரண்டு கையையுஞ்சேர்த்து ஏழு தரமும் சுத்திசெய்து சகனத்தைத் துடைத்து கால்களை முழங்கால்வரையும், கைகளை முழங்கைவரையும், ஒவ்வொருதரமும் நைச் சலத்தினால் அலம்பிவிட்டு அவ்விடத்தினின்றும் நீங்கி வேறொரு துறையிலே போய் வாயையும், கண்களையும், நாசியையும், காதுகளையும் கைகால்களிலுள்ள நகங்களையும் சுத்திசெய்து எட்டுத்தரம் சலம் வாயிற்கொண்டு இடப்புறத்திலே கொப்பளித்து தலைக்கட்டு இல்லாமற் குடுமியை முடித்து மந்திரங்கள் உச்சரியாது ஒருதரமும், மந்திரங்கள் உச்சரித்து ஒருதரமுமாக இரண்டுதரம் ஆசமனம் பண்ணல்வேண்டுமென நம் தமிழுலகமெங்கணும் பிரசித்திபெற்ற நாவலரவர்களால் செய்யப்பட்ட சைவ வினாவிடையிற் சௌசஞ்செய்தற்கு மட்டுமிவ்விதி கூறப்படுமாயின் இன்னும் ஏனைய கருமமாதிகளையும்பற்றிய விதிகளையும் அதற்காகவேண்டுங் காலத்தையும் அளவுபடுத்திப் பார்த்தால் நன்றாக விளங்கும். மிகுதியுஞ் செவ்வையான மூளையையல்லாத சில நண்பர்கள் பித்தம்பிடித்தவர்களைப்போன்றுந் திரிகிறார்கள். ஆனது பற்றி யெமதன்பார்ந்த நண்பர்காள்! புதிய நாகரீகங்களினும், உலக வியவகாரங்களினும், இறந்ததுவிலக்கி யெதிரதுபோற்றியொரு நூலைப்பூர்த்திசெய்யுமாற்றலினும், பற்பல சமய நூலாராய்ச்சியிலும், வரையான தேர்ச்சியும், பல தேயத்தார்களின் பழக்க வழக்கங்களிலே தக்க உணர்ச்சியும், லௌகீக வைதீகங்களிலே சமபற்றுடைமையும். வயோதிகமின்மையுமுடைத்தான ஒவ்வொரு தக்கமேதாவியைக்கொண்டு, நம் சைவசமயத்தைச் சார்ந்த பல நூற்களையுமாராய்ச்சிசெய்து, நிகழ்கால வியவகாரங்களுக்குத்தக்கவாறும் லௌகிக விஷயமான தொழின்முறைகளைக்கொண்டு நடாத்துவ

மக்களெல்லாம் ஒவ்வொருநாளும் எந்த நண்பர்களுக்கு மிலகுவிலே பூர்த்தியாமாறும் வேண்டுஞ் சீர்திருத்தங்களோடு புதிய நூலொன்றைப் பூர்த்தியாக்கும்படி செய்தும், நம்முடைய மகா சங்கத்திலே அரங்கேற்றச்செய்தும், நம் செந்தமிழ் நாடெங்கணும் பாவச்செய்து கோடலும்வேண்டும். எவ்வகைத்தானும் நம் மதக்கோட்பாடுகளிலே நின்றும் எற்றுந்தவறின்றி யொழுகுவதினும் நாம் கவனமுடையவர்களாயிருத்தல் வேண்டுவதோடுங்கூட நம்சைவசமயத்தைச் சார்ந்த ஒவ்வொரு பகுதியார்களையும் நம் மதக்கோட்பாடுகளிலே எற்றுந் தவறின்றி யொழுகுவதற்காக வேண்டும், பல வழிகளையும் பூர்த்தியாக்கி வைத்தலும்வேண்டும்.

3. நம்முடைய ஒவ்வொரு நாடுநகரங்களினும், ஒவ்வொரு தொலை நகரங்களினும், சிவாலயங்களுக்குப் போம்பொழுது ஈரவேட்டியோடு போதல் கூடவே கூடாது. நாடோறும் போகவேண்டுமென்ற நியமம் பெரும்பான்மையோர்களுக்கு இயலாதாகவின், வாரத்திற் கொருநாள் அஃதாவது நம்முடைய மகா சங்கத்திற்பகர்ந்துபேசிக் கூடிய பக்கத்தார் மனேபீட்டம் போன்று தீர்மானிக்கப்படுகிற ஒருகிழமையில் நகரத்தாராய்ப் பிறந்த ஒவ்வொரு குடும்பத்தாருந் தங்கள் தங்களின் மனைவி மக்களோடுங்கூடி, உயர்ந்த பட்டாடைகளை யார்த்துக்கொண்டும், ஆபரணங்களை யணிந்துகொண்டும், கட்டாயமாகப்போய் ஸ்வாமி தரிசனம் செய்துவருதல்வேண்டு மென்றும், அல்லாதவர்களுக்கு நகரக்கூட்டத்திலிருந்து அபராதம் விதிக்கிறதென்றும்; ஒரு கட்டாயச் சட்டமொன்று ஏற்படுத்த வழிதேண்டும். அலயங்களுக்கு வாகனமேறிப்போதலும், கோட்டு, சர்ட்டுகள், நடையன்போட்டுக்கொண்டு போதலுங் கூடாதென்றிருக்குமாயின், அவ்வாறு போதல் கூடுமென்ற சட்டத்தையும் ஏற்படுத்தல் வேண்டும். கண்டகண்டபடி யெல்லாஞ் சில வேளைய நண்பர்கள் வெண்ணீற்றாலும், உத்திராக்ஷங்களாலும், பகல்வேடம்போட்டுக்கொள்வதைப்போன்று நாமும் போட்டுக்கொள்ளுதல் கூடாது. கால வியற்கைகளுக்குத் தக்கவாறு நம் மதக்கோட்பாடுகளைச் சீர்திருத்திக்கொள்வதில் எற்றுனும் மறதியுடையவர்களாயிருத்தல்கூடாது. அவ்வாறு சீர்திருத்திக்கொண்டாலே எந்த நண்பர்களாலும், எந்த வாற்றானுந் தவறின்றி யொழுகுவதற்கு முடியுமா மென்பதை நாம் நன்றாக உணர்தல் வேண்டும். இன்னும் நாகரீகமான நடையுடைபாவனை முதலிய ஒவ்வொரு சுகாதார முறைகளினும் பிரவேசிப்போமாயின் கட்டாயமாகச் சீர்திருத்திக்கோடலும் வேண்டும். அவ்வாறு சீர்திருத்திக் கொள்வதில் மிகவும் பிராசீனமான கொள்கைகளாயிற்றே நாம் எவ்வாறு சில மாறுதல்களுடனே திருத்தஞ்செய்து கொவது என்ற சவலைப்புத்தியையும் உயர்ந்த பேரறிவாண்மையோர்கள் கலத்தல் கூடாது. எம்மதத்தவர்களாலும் நம்மதக் கோட்பாடுகளையே மிக்க உயர்ந்தனவா மென்றும்; மிகு சீர்திருத்தமுடையனவா மென்றும்; சுவர்க்காதி போகங்களை யிலகுவிலே காட்டத்தகுந்த நல்லமார்க்கங்களா மென்றும்; மிகுதியும் நாகரீக முடையனவாக விளங்கப்படுகிற தென்றும்; போலியான சட்டங்கள் அம்மதத்தின்கண் ஒன்றுமே யில்லையாமென்றும்; நாவாரப்புகழப் படுமாறு செய்துகொள்ள வேண்டுவதும்

தன் மதக்கோட்பாடுகளிலே தவறின்றி யொழுகுதலும் சீர்திருத்திக்கோடலும்.

நம்முடைய வகுப்பாரின் முதற்கடமையேயாம். அபாரமான கிரியைகளை யெல்லாம் நித்திய கருமமாக நாடோறுஞ் செய்து முடித்தல் வேண்டுமென அமைத்துவைத்துக்கொண்டு நித்திய கரும அநுட்டானங்களை நழுவ விட்டவர்கள் இன்னபயனை அநுபவிப்பார்களென்றும், இன்ன நரகத்திலே யழுந்துவார்களென்றும், கூறும் நூற்களைப்பற்றியும், கூறும் ஆசிரியர்களைப் பற்றியும், ஒவ்வொரு நண்பர்களும் நன்றாகக் கவனித்தல் வேண்டும். நடுநிலையான வியற்கையா என்பதையும் ஆய்ந்து தெளிதல்வேண்டும். தற்காலவரையுடைத்தாய நம் மதக்கோட்பாடுகளிலே பூரண நம்பிக்கை யுடையவர்களாயும், முறையே ஒவ்வொருநாளும் சரிவர வநுஷ்டிக்கப்படுகிறவர்களாயுமுள்ளார் சிலரனைய எந்தவிதமான தொழின்முறைகளுக்குமுதவாமல் பைத்தியம்பிடித்தவர்களைப் போன்றுந்திரிகிறார்களென்றால் எவ்வகைத்தானுந் தேர்ந்த சில மேதாவிகள் இதனைப் பற்றிக்கவனித்தல் வேண்டாவோ? பூரண நம்பிக்கையும், சரிவர அநுஷ்டிக்கும் வலியுடையவர்கள் பலருக்கும் தொழின்முறைகளிலே பற்றின்மையும், அஃதா எஞ்சிப் பற்றுடையவர்களாயின் அதனைச் செய்ய வேண்டு முறைகள்தெரியாமலும், அஃதா எஞ்சி அம்முறை தெரிந்தவர்களாயின் பொழுதுகாணமற்போவதும், தொழின் முறைகளைச் சரிவரக் கற்றுத்தேர்ந்துகொண்டு நடாத்தும் பெரும்பான்மையோர்களுக்குச் சமயக்கோட்பாடுகளிலே நூற்றிலொருபங்கேனுந் தெரிந்துகொள்ளாதும், தெரிந்துகொள்வதற்குப் பொழுது காணாமலும்போ மியற்கையிலும் நம்மதக்கோட்பாடுகளுளதாயின் அந்தோ! நம்மதத்தவர்களுக்கு நம்மதக்கோட்பாடுகளா லுண்டாம் நன்மைகள் யாதோ? அறிவாலுங், கல்வியாலும், ஆத்மஞானத்தாலும், தெளிந்த ஓ! மகா மேதாவிகாள்! நன்றாகத்தெளிந்து நோக்குங்கள். செவ்வையாகப் பகுத்துப் பாருங்கள். நம் மதத்தைச்சார்ந்த எந்தப் பகுதியார்களுக்கும் எந்த ஏழைச்சகோதரர்களுக்கு முரித்தாய நன்மையை நாடுங்கள். ஒருங்கே யாவருக்கு மொப்பத்தகுந்த சீர்திருத்தங்களை இந்தக்கணமே செய்ய முயலுங்கள். வருணபேதத்தை மேற்கொண்டு வஞ்சமான சீர்திருத்தங்களைச் செய்யமுயலாதேயுங்கள். வைதிக பார்க்கங்களும், லௌகிகமார்க்கங்களும், எந்த ஞான்றும் ஒரேவான்முறையாக நடைபெறுமாறுசெய்யுங்கள்.

4. இனி, தன்மதக் கோட்பாடுகளிலே தவறின்றி யொழுகுதலாலும், சீர்திருத்திக்கோடலாலு முண்டாம் நன்மைகளைப்பற்றிக் கவனிக்குமிடத்து எவ்வகைத்தானும் நிகழாத இன்பம் ஒன்று நிகழும். அஃதாவது தன் மதக்கோட்பாடுகளிலே தவறின்றி யொழுகப்படுகிறவர்களுக்குத்தான் தெரியும். பலவிதமான நல்லொழுக்கங்களும் தானே இயங்கும். எந்தவிதமான தொழின்முறைகளும் நன்றாகச்செழித்தோங்கி வளரும். எவ்வகைத்

றும் அவ்வவர்களின் முகங்களிலேதோன்றும். பேரறிவாண்மையும், கருணையும் நிறைந்து விளங்கும். இல்லறவாழ்க்கையே உயர்ந்தனவாகமுடியும். எல்லாம் வல்ல இறைவனின் இயற்கை செவ்வையாக விளங்கும். ஒருமைப்பாடியங்கும். மாதமும்மாரி நன்றாகப்பொழியும். எந்தவிதமான நோய்களும் அணுகமாட்டாவாம். நாடுநகரங்களெல்லாம் ஒருங்கே வளப்பமாகவிளங்கும். செங்கோன் முறைகளும் வெகு சீர்திருத்தமாக நடைபெறும். சுவர்க்காதிபோகங்களெல்லா மிலகுவிலேகிட்டும். பழயசமயகுரவர்கள் எல்லாருந்தானே இக்கால வியற்கைகளுக்குத்தக்கவாறு வந்துதோன்றுவார்கள். இன்னு மிவைபோன்ற பிற நன்மையான பல விஷயங்களும் நன்கமைந்து விளங்கும்.

5. ஆனதுபற்றி, பெம தன்பார்ந்த நண்பர்காள்! நமது மதக்கோட்பாடுகளான பல விஷயங்களையுஞ் செவ்வையாகச் சீர்தூக்கி நித்திய கருமமாகும் பல முக்கிய விஷயங்களையும் ஒரு வரன்முறைச்சட்டமாக்கி 5, 7-வயது முதற்கொண்டே கற்றுக்கொள்ளுமாறு போதிக்கக்கூடிய நமது வகுப்பாருக்குரிய ஒவ்வொரு கலாசாலையிலும் பாடமாக வமைத்துவிடலும் வேண்டும். 5, 7-வயது முதற்கொண்டே நித்திய வநுஷ்டான கருமங்களை அநுஷ்டித்துவரும் பழக்கவழக்கங்களிலே நம்மருமையான பெண்மக்களையும், ஆண்மக்களையும், பழக்கிக் கொணர்தலும் வேண்டும். தன்மதக்கோட்பாடுகளிலே தவறின்றி யொழுகுவதற்கு எஞ்சியவோர் கல்வியற்கையானது தோற்றப்படுகிற மூன்றுலகங்களினும் இல்லையென்பதாக நமது வகுப்பைச் சேர்ந்த ஒவ்வொரு நண்பர்களும் நன்றாக உணர்தல்வேண்டும். மதக்கோட்பாடுகளுக்கு அடங்கி யொழுகாத மனிதவர்க்கங்கள் எந்தப்பகுதிகளுள்ளும் இல்லையென்பதையுஞ் செவ்வையாகத் தெரிந்துகொண்டிருத்தல் வேண்டும். மதக்கோட்பாடுகளைச்சார்ந்து அவைகளிலே எற்றுந்தவறின்றி யொழுகுவதுதான் பெருந்தகவாய மகா மேதாவிகளின் தன்மையாமென்பதையும் நாம் நன்றாக உணர்தல்வேண்டும்.

6. மதக்கோட்பாடுகளிலே தவறி யொழுகுவா னொருவனைப்பற்றி யிங்ஙனம் கவனிக்கப்புகின், மனிதவர்க்கமாய்ப் பிறந்தும், மனித சென்மமல்லாத தொன்றென்று பல்லோராலும் எள்ளப்படுகிற தொன்றே யவனுக்குச்சாலும். அவனின் இயற்கைகளைப்பற்றி இங்ஙனம் விரிப்பதென்றால்,

குச் சமயக் கோட்பாடுகளானது இன்றியமையாது வேண்டும் முதற்கருவியே யாகலின், எந்த எந்த விஷயங்கள் எவ்வாறெவ்வா றொழியினும், எந்த எந்த நன்மை தீமைகள் எவ்வாறெவ்வாறு உருண்டு திரண்டு புரண்டு போயினும், கிழக்கெழுவேண்டுங் கதிரவன் மேற்கெழுந்தாலும் நமக்காக வேண்டுவதொன்றுமில்லையாமென்று பூரணசித்தத்தோடு மனங்கலங்காத வண்ணம் நின்று ஒவ்வொருநாளும் காலையில் ஒரு மணிக்காலமும், மாலையில் ஒரு மணிக்காலமும், நம் மதக்கோட்பாடுகளான நித்திய கரும வநுஷ்டானங்களை எற்றுந் தவறின்றிச்செய்து முடிந்ததின் பின்னரே ஏனைய எந்த விதமான தொழின்முறைகளையும் பார்த்தல் அல்லது செய்தல்வேண்டும் என்ற கட்டாயச்சட்டத்தை இதனைப் பார்வையிடும் ஒவ்வொரு சகோதரர்களும் நம்முடைய வகுப்பின் மகா சங்கத்திலே பகர்ந்து ஒற்று வாழ்தல் என்னும் பட்டாப் புத்தகத்திலே ரிஜிஸ்டர்செய்து கோடலும் வேண்டும்.

7 எந்த நூற்களைப் பார்த்தும் அதன்படி யியலுதல் இல்லையேல் யாது பிரயோசனம்? ஒன்றுமில்லையென்பதையும் நம் ஞாபகத்தில்வைத்துக் கொண்டிருத்தலும் வேண்டும்.

“கற்கக் கசடற கற்பவை கற்றபின்
நிற்க வதற்குத் தக”

என்ற தேவர் வாக்கையும் மறந்து விடுதல் கூடாது. நம்முடைய பலவிதமான தொழின் முறைகளோடு நாடோறும் பல புத்தகங்களையும் வாசிப்பதற்காக ஒருகாலத்தை பளவுசெய்துவைத்து அதன்படி பார்த்துவருதலும் வேண்டும். எத்துணை தூரங் கடந்த மகா மேதாவிகளாயிருப்பினும் கடந்தவொருகாலத்தை நிகழ்காலமாக்கிக்கொள்ள முடியாதாமென்க. இவ்வங்கத்திற்காகவேண்டும் இன்னும் பல விஷயங்கள் இங்ஙனம் வாராது மறைபட்டுக்கிடப்பினும் நண்பர்கள் ஆய்ந்து வோர்ந்து கொள்ளுக. மிகுதியும் வளர்தலுக்கூறுவது அத்துணை தூரம் நியாயமில்லையென்றுணர்ந்து எமது அடியேமுடைய சிற்றறிவுக்கு எட்டியவரை கூறிமுடித்தேம். ஆகவே முடிவுரையாகக்கூறயிடத்து நம் சைவசமயத்தைச்சார்ந்த எந்த நண்பர்களும் நம்மதக்கோட்பாடுகளில் எற்றுந்தவறின்றி யொழுகுதல் வேண்டுமென்பதும், சீர்திருத்தவேண்டும் விஷயங்களில் எவர்களு முரண்படுதல் கூடாதென்பதூஉமேயாம். எல்லாம் வல்ல [illegible]

தமிழ் இலக்கண வினா விடை.

நண்பர்காள்! தெற்கு ஊர் என்றும், வடக்கு ஊர் என்றும் வழங்கி வருவதை எங்கேனும் பார்த்திருக்கிறீர்களா? அநேக நண்பர்கள் பார்த்திருக்கக்கூடும். ஆனால் அவ்விரண்டு ஊர்களும் ஏககாலத்தில் ஒருவராலேயோ அல்லது பலராலேயோ அமைக்கப்பட்டதையாவது, அல்லது இயற்கையில் அமைந்ததையாவது பார்த்திருக்கிறீர்களா? எவர்களும் பார்த்திருக்கமாட்டார்கள். என்? காரணம் என்னை? அவ்வாறு அமைவதற்கு ஆய்ந்து நோக்குமிடத்து இயற்கையில் யாதொருகாரணமும் நிகழமாட்டா. சிறுபான்மை ஏதோ அபூர்வமாய் நிகழக்கூடும் ஆகலின் என்க. உதாரணமாக திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிக்குப் போகும் ஒருபெரும் பாட்டையின் மத்தியில் மேற்கே இருந்து கிழக்காக ஒரு சிறு நதி ஒன்று ஓடுகிறது. அந்நதிக்கு வடபுறம் இயற்கையில் ஊரொன்று உள்ளது. அதன் தென்புறம் சத்திரம் ஒன்றும், ஆலயம் ஒன்றும், மனை எடுப்பதற்குத்தகுந்த அச்சத்திரத்தைச்சார்ந்த காலி இடங்களும் இயற்கையில் அமைந்திருந்தன. பின்னர் அக்காலி இடங்களில் சிலர் குடியேறவே அஃதும் ஒரு சிற்றூராயிற்று. அப்பால் வர வர ஆங்குள்ள பலராலும், இயற்கையில் பூர்விகமாய் அந்நதிக்கு வடபுறத்துள்ள ஊரார் பலராலும் அந்நதிக்கு தென்புறத்துள்ளதைத் தெற்குஊர் என்றும், வடபுறத்துள்ளதை வடக்குஊர் என்றும் சொல்லிக்கொள்ள வழங்கி வருவதை யாம் நேரிற்பார்த்திருக்கிறேம். இன்னுஞ் சில காலஞ்சென்றால் உணர்வதற்குத்தகுந்த சரித்திரமகப்படாதொழியின் அக்காலத்துள்ளார் யாதானும் ஒரு சந்தர்ப்பம் நிகழின் எதனை முந்தியது பிந்தியது என நிச்சயித்துக்கொள்வார்கள் என்பது எமக்கு விளங்கவில்லை. இவைபோன்று அநேக நண்பர்கள் தம் அநுபவத்தில் பார்த்திருக்கவும் கூடும். இஃதே மாதிரியாக தென்புறத்து பூர்விகமாயுள்ள ஊரொன்றிருக்க வடபுறத்துப் புதிதாக ஏற்படினும் தெற்கு ஊர் வடக்கு ஊர் என வழங்கவும் கூடும். அஃதும் இயற்கையே. ஆகலின் வடமொழி என்றதனையும், தென்மொழி என்றதனையும் பிந்தியதாயிருப்பினும் இருக்கக்கூடும். முந்தியதாயிருப்பினும் இருக்கக்கூடும். அபிமானத்தைப் பொறுத்து யாவர் எவ்வாறு நிச்சயித்துக் கொள்ளினுங் கொள்ளலாம்.

10. இத்தமிழ் என்னும் பதத்தை திமிளம் என்பதன் திரிபு எனச் சிலரும்; தென்மொழி என்பதன் திரிபு எனச் சிலரும், ஒரே நாட்டில், வடக்கிலும் தெற்கிலும்

தமிழ் இலக்கண வினா விடை.

என்னப்பட்டன ஆகலின், தமிழ் ஓர் தென்மொழியேயன்றி, தென்மொழி என்பதன் திரிபு எனக்கொள்ளுதல் பொருந்தாது எனச் சிலரும், "இனிமையும் நீர்மையும் தமிழ் எனலாகும்" என்ற பிங்கலந்தைச் சூத்திரத்தை ஆதாரமாகக்கொண்டு தமிழ் என்பதற்கு இனிமைஎனப் பொருள் என்றும், அது பண்பாகுபெயராய் இனிய தமிழ்ப் பாஷையை உணர்த்திற்றென்றும், இத்தமிழ் இனிமைப்பொருளில் வருதற்கு காரணம் சீவகசிந்தாமணி, கம்பராமாயணம், புறநானூறு, பெருந்திரட்டு முதலியவற்றிற் காணலாமெனச் சிலரும், முதநூலாசிரியர் பாஷை சம்பந்தப்பட்டமட்டில் தமிழ் என்னும் பதத்தைப்பற்றிய எவ்வாறாயும் கூறினர் அல்லராதலின் தமிழ் காரணப்பெயராகாது அப்பாஷையை உணர்த்தும் ஓர் இடுகுறிப்பெயரே எனச்சிலரும், இன்னும் இவைபோன்று பலவேறு வழிகளாகச்சிலரும் கருதப்படுகிறார்களே! இதன் விவரம் என்னை?

ஆ! ஆ!! தொன்று தொட்டுச் சீரும் சிறப்பும்பெற்று, அறம், பொருள், இன்பம், வீடு என்று ஆன்றோரால் மேலாகக்கூறப்பட்ட நாற்பொருள்களையும் அடைதற்கேதுவாய் சிந்தைக்கினிய செவிக்கினிய வாய்க்கினியனவாய் உடைத்தான உயர்தர இத்தேவபாஷைக்கு தலைமகுடம்பெற்று விளங்கும் இத்தமிழ் என்ற பதத்திற்கே மேற்கண்டவாறு ஒரு தக்கசரித்திரம் உளதெனின் இப்பாஷையின் சிறப்பை என்னென்று எடுத்துரைப்பது? இதன் காரணத்தானே மிகப் பழமையானதென்பது தெற்றென விளங்குகிறதன்றோ? மிகப் பழமையான ஒரு பொருள் வந்த வாற்றைச் சிந்திக்கப்புகின் அஃது யாவருக்குத்தான் சாத்தியமாகும். இத்தமிழ் என்னும் பதத்தை திமிளம் என்பதன் திரிபென்றும், தென்மொழி என்பதன் திரிபென்றும் கருதுவார் கருத்து ஐரோப்பிய தத்துவசாஸ்திரிகளுட் சிலர் எற்றானுஞ் சிறந்த மனிதவர்க்கத்தார் ஒருங்கும் பூர்வம் முதன்முதலாக மந்திவர்க்கமாயிருந்துதான் தற்காலவரை மனிதவர்க்கத்தாராகத் திருந்தி வந்திருக்கிறார்கள் எனக்கருதும் கருத்துப்போலன்றே காணப்படுகிறது.

ஆ! ஆ!! இவர்களின் அறிவே அறிவு. இவர்களின் ஆராய்ச்சியே ஆராய்ச்சி. நம் தமிழ்மொழி மிகப்பழமையும், தெய்வத்தன்மை பொருந்தியதும் ஆனதுபற்றியன்றோ இவர்களின் மிகத்தூய்மையான அறிவை மயக்கி கண்ட கண்டபடி புலம்பச்செய்தது. இதனையுணராதார்க்கு யாமென் செய்வது? ஐயீர்! ஆய்ந்து நோக்குங்கள். இத்தமிழ் என்னுஞ்சொல் இல்லாத இத்தமிழ்ப் பாஷையிலுள்ள ஓர் தமிழ்நூலை எவர்களேனும் பார்த்ததுண்டா? எத்துணைச் சிறந்த மகா வித்வான்களை எனினும் அப்படிப்பட்ட ஒரு நூலைக்கண்டு தேடிப்பிடித்துக் காட்டக்கூடுமா? பெரும்பான்மை எல்லாப் பெரிய வித்வான்களுக்குந் தெரியாத தமிழ் [illegible]

"வடவேங் கடந்தென் குமரியா யிடைத்தமிழ் கூறு நல்லுலகத்து
வழக்குஞ் செய்யுளுமா யிருமுதலின்
எழுத்துஞ் சொல்லும் பொருளுநாடிச்
செந்தமிழியற்கை சிவணிய நிலத்தொடு"

என இற்றைக்கு ஏறக்குறைய ஒரு 10,000 வருஷங்களுக்கு முன் தொல்காப்பியரோடு ஒருங்கு கற்ற பனம்பாரனார் என்பார் தொல்காப்பியத்திற்குச் சிறப்பாகக் கூறிய ஓர் கவியினுட் கூடவன்றோ தமிழ் என்றும், செந்தமிழ் என்றுங் காணப்படுகிறது. இன்னும், அதற்கொத்தாற்போல்

"ஐம்பது விரட்டி யவனச்சேரியும்
எண்பது விரட்டி எதிபடைப் பாடியும்
மன்பெருஞ் சிறப்பின் ஆயிரமாகிய
தலைப்பெருஞ்சேனை தமிழச்சேரியும்
கோலைப்படுங் கடுந்திறற் கொல்லச் சேரியும்
மிலைச்சச் சேரியுந் தலைத்தலைச் சிறந்து"

என்ற உதயணன் காவியத்திலுள்ள அரண்மனைச் சிறப்புச்செய்யுளொன்றை நோக்க அக்காலத்தில் தமிழ் தமிழ் என்று சாவாரப்பகர்ந்து பாடிப்படித்துப் போற்றிப் புகழ்ந்து கொண்டாடக்கிடந்த நாடுநகரங்களுங் கூடவன்றோ ஆயிரக்கணக்கில் இருந்திருக்கின்றன. திமிளம் என்பதன் திரிபென்றும், தென்மொழி என்பதன் திரிபென்றும் ஊகித்துணர்ந்தார் உணர்ச்சியானது இவைகளுக்கெல்லா முந்திய வோர்காலத்துஞ் சென்றோடித் திரிந்து திகைத்துப்பார்த்ததுபோலும்! மேலும் குமாரக்கடவுள், அகத்தியர், தொல்காப்பியர் முதலிய தெய்வத்தன்மைபொருந்திய உத்தமப்புலவர் பெருமக்கள் காலத்திலேயே தமிழ் என்னுஞ் சொல் மிகச்செவ்வையாய் வழங்கியதெனக் காணப்படுகிறதன்றோ? ஒருவாறு ஒலிவடிவாய்மட்டும் நிகழ்ந்த ஒருகாலத்தில் எப்பெயருடையதாய் நிகழ்ந்ததென்பதை இஞ்ஞான்று கவனிப்பதில் யாது பயனுடைத்தோ? அன்பர்காள்! ஆய்ந்துநோக்குமிடத்து உலகவழக்கை யொட்டியே நூனூற் குந்தன்மை நம் செந்தமிழ்நாட்டுப்புலவர் பெருமக்களின்தொன்மையான பழக்கவழக்கமாதலால் இப்பாஷை வரிவடிவாவதற்கு நெடுங்காலத்துக்கு முன்னருங்கூடத் தமிழ் என்றேதான் வழங்கியிருத்தல்வேண்டும். ஆகலின் இப்பாஷை உண்டான ஓர் காலத்தே இதனையாக்கியோன் அஃதாவது நம் பரசிவப்பெருமானாலே இதற்கிடப்பெற்றதோர் இடுகுறிப்பெயர் என்பதே மிகப்பொருந்தும். பின்னர் வரவர இப்பாஷையின் தெய்வத்தன்மையையும் செவ்விய குணகுணங்களையுங் கண்டுணர்ந்தார் சிலர் இனி

பாஷை பிரிந்ததென்றுவது எவருமே சொல்லமுடியாது. ஒருவாறு சொல்லினும் அஃது எந்தவாற்றானும் நியாயமாகவுமாட்டாது.

கக. இத் தமிழ் எத்தனை வகைப் படும்?

இயல், இசை, நாடகம் என மூவகைப் படும்.

கஉ. இம் மூவகைத் தமிழுள் ஈங்கு நீயிர் கூறிவருகிற தமிழின்பெயர் என்னை?

இயற்றமிழே ஆம்.

கங. இவ்வியற்றமிழ் எத்தனை வகைப் படும்?

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐவகைப் படும்.

கச. இம் மூவகைத் தமிழுக்கும் எழுத்துக்கள் வெவ்வேறோ?

ஆ! ஆ!! இஃதென்னை வியப்பு. வெவ்வேறு அன்று ஒரே தமிழ் எழுத்துக்கள் தான்.

கரு. இசைத்தமிழ் இலக்கணத்தையும், நாடகத்தமிழ் இலக்கணத்தையும் இதன்பின் சொல்வீரா?

இவ் வியற்றமிழ் இலக்கணத்தின் ஐந்து பகுதியையும் மிகச் செவ்வையாய் "இறந்தது விலக்கல் எதிரது போற்றல்" என்னும் உத்தியைத்தழுவி வரன் முறையாகச் சொல்லி வரைந்து முடிந்ததின் பின்னரே கவனிப்போம்.

கசு. இத் தமிழ் மொழி நன்னூலார் கூறியது போன்று குணகடல், குமரி, குடகம், வேங்கடம் என்னும் நான்கெல்லைக் குட்பட்ட நாடு நகரங்களிலே மட்டுந்தான் வழங்கப்படுகிறதோ?

தமிழ் இலக்கண வினா விடை.

அன்றியும் தற்காலவரை ஆராய்ந்துநோக்குமிடத்து அஃதோடு, நமது ஆசியா கண்டத்துப் பல பாகங்களிலும் வழங்கப்படுகிறது.

யஎ. அதன் விவரமாவ தென்னை?

(1) நமது பரதகண்டத்தைச் சார்ந்த எந்த ஒரு சிறிய நாடு நகரங்களைச் சென்று நோக்கினும், அங்கும் சமசாரசத்தமாய் வாழ்ந்துவரும் நம் செந்தமிழ் சகோதர சகோதரிகளைக் காணலாம்.

(2) பர்மாவைச் சார்ந்த ஒவ்வொரு நாடு நகரங்களும் நம் செந்தமிழ்ச் சகோதர சகோதரிகளுக்கு மிகச் சொந்தமானதென்பது பெரும்பான்மை எவர்களுக்குமே தெரியும்.

(3) இலங்கையைச் சார்ந்த எந்த நாடு நகரங்களுமே நமது செந்தமிழ் நாடு நகரங்களே என்பது இரவலர் முதற்கொண்டு புரவலர்வரை மிகத் தெளிவாய்த் தெரிந்த விஷயமே ஆம்.

அதினும், யாழ்ப்பாணம் என்னும் நகரத்தில் நம் செந்தமிழ் அன்னை மிகச்செழிப்பாக வாழ்ந்து வருகிறாள் என்பது எவர்களுந் தெரிந்ததே.

(4) பினங்கு, சிங்கப்பூர், மலாக்கா முதலிய பல நாடு நகரங்களும், நம் செந்தமிழ் வழங்கும் நாடு நகரங்களே ஆம்.

(5) சைனா. ஜப்பானைச் சார்ந்த சில இடங்களினும், நம் செந்தமிழ் சிலர் பால் வசிக்கப்படுகிறது. நமது ஆசியா கண்டத்து எமது உணர்ச்சிக்கு எட்டாத சில நாடு நகரங்களினும் வழங்கக்கூடும். அஃது பல பாஷாவிற்பன்னர்களுக்கே மிகச்செவ்வையாக விளங்கும்.

யஅ. ஆபிரிக்காக் கண்டத்தும் வழங்கப்படுகிறதோ?

ஆம். தென் ஆபிரிக்காவைச்சார்ந்த கேப்காலனி, நட்டால் முதலிய இடங்களினும் மிகச் சிறப்பாக வழங்கப்படுகிறது.

யகூ. இனி, ஐரோப்பாக் கண்டத்தும் வழங்கப்படுகிறதோ?

ஆம். இதற்கென்ன சந்தேகமா? ஆங்குதான் நமது செந்தமிழ் அணங்கின் மகத்துவம் பூர்த்தியாக விளங்கப்படுகிறது. ஐரோப்பிய பண்டிதர்கள் பலர் தமிழிலும் பூரணபாண்டித்தியம் உடையவர்களாகக் காணப்படுகிறார்கள். நம் செந்தமிழ் மாட்சி ஆங்குடைத்தான பலருக்குந் தெற்றென விளங்குமாறு அநேக நூல்களை அவர்களின் சுதேய பாஷையிற் மொழிபெயர்த்துமிருக்கிறார்கள். அகராதியும் எழுதி முடித்திருக்கிறார்கள். மேலும், ஆங்குடைத்தான சில பாகங்களிலே நமது சகோதரர்கள் பலர் வசிக்கப்படுகிறார்கள். இங்ஙனமாகவே ஐரோப்பா கண்டத்தும் நமது செந்தமிழ் வழங்கப்படுகிறதே ஆம்.

உய. ஏனைய கண்டங்களினும் வழங்கப்படுகிறதோ?

சகோதரர்காள்! ஸ்டீமர்களாலும், ரெயில்வேக்களாலும். தந்திகளாலும் பிணைக்கப்பட்டு, உலகமொருங்குப் ஒரே நகரம் போன்று தோற்றப்படுகிறதாகலின், உலக முழுவதிலுமே நமது செந்தமிழ் பாஷை வழங்கப்படுகிறதென்றுஞ் சொல்லலாம். ஆனால் ஏனைய கண்டங்களில் வழங்கப்படுகிற இடங்களை மட்டு மிகச் செவ்வையாய்க் குறிப்பிட்டுச்சொல்வதற்கு எமக்குத் தெரியவில்லை.

தெரிந்தோர் கவனித்துக்கொள்க.

விக்கிர காராதனம்.

"விக்கிர காராதனம்" என்னும் இந்நூல் பேட்டை மகாவித்வான் ஸ்ரீமத் த. ஆறுமுகநயினார்பிள்ளை அவர்களால் வரையப்பெற்றது.

அவர்களின் உத்தரவின்பேரிற்றான் இதினும் வரையப்பட்டிருக்கிறது.

வெண்பா.

சொக்க ரநுளார்ந்த சுருதி வல்லார்
போற்றுகின்ற விக்கிர காராதனத்தின்
மெய்மை சொல்வேன்-தக்கவினை
தீர்த்த விநாயகர்க்குச்
சிந்தைதளி யாக்கொடுத்தம்
மூர்த்தியருள் கொண்டுவந்து முன்.

விக்கிரகாராதனம் என்றபதம் வி + கிரகம் + ஆராதனம் எனப்பிரிந்து வி = கண், கிரகம் = கிரகணம் (கிரகித்தல்), ஆராதனம் = ஆர்ச்சனம், எனப்பொருள்தரலானே, கண்களால் கிரகிக்கப்படுகிற ஆர்ச்சனம் அல்லது, கண்களால் கிரகித்து ஆர்ச்சிக்கப்படுவது என்று பொருள்படும். அதுவுமன்றி வி = விசேஷம், கிரகம் = கிரகணம் (கிரகித்தல்), ஆராதனம் = சாதனம், எனவும் பொருள்படுதலால் அதற்கு விசேஷக்கிரகண சாதனம் என்றொரு பொருள்கோடலுமாம். ஆகவே விக்கிர காராதன மென்ற பதத்திற்கு

விலோசனக் கிரகணார்ச்சனம்
விசேஷக் கிரகண சாதனம்-
என்பன பிரதி பதங்களாதலறிக.

இவ்விரண்டு பதங்களுளொன்றாகிய-விலோசனக்கிரகணார்ச்சனம் என்றபதம் கண்களாற் கிரகித்து ஆர்ச்சிக்கப்படுவது என்றர்த்தமாதலால் காதுகளாற் கிரகித்து ஆர்ச்சிக்கப்படுவதொன்றனுண்மையுஞ் சூசிப்பிக்கப்பட்டது. அது (காதுகளாற் கிரகித்து ஆர்ச்சிக்கப்படுவது) சாமான்யக்கிரகணசாதனமெனப்படும். அதனை வலியுறுத்துவானே விக்கிரகாராதனம் விசேஷக்கிரகண சாதன மெனப்பட்டதாம். அதுகொண்டு காதுகளைக்காட்டிலும் கண்களே விசேஷக்கருவியாதல் ஸ்பஷ்டமாம். அந்தவுண்மை:—

"சர்வேந்திரியாணும் நயனம் பிரதானம்"
"கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை"

என்ற சுருதிபோதங்களாற்போதரும். இங்கே கண்களாற் கிரகிக்கப்படுவது தான் ஆலயசேவையால் வருந்திருவருட்பேறும். ஆகவே சுருதி விசாரத்தால் வரும் அறிவின் விசேஷமே காதுகளாற் கிரகிக்கப்படுவதென்பார் பெரியோர். ஆதலால், சுருதி விசாரமும் ஆலயசேவையும் நாமமும் உருவமும்போல அனன்னியபாவமுடையனவாக் காண்க. நாமமும் உருவமுங்கூடியே ஒரு பொருளாம். நாமமோ ஒலிமயமாயிருத்தலால் அது காதுக்கே விஷயமாம். அது (நாமம்) பொருளின் பெயரே யல்லாமற் பொருளாகமாட்டாது. மெய் பொய் என

மனவும் எது? என்னும் வினாவாற் பொருளின்மேற்றேயாம்.

ஆதலின் நாமம் (பெயர்) பொருளினதேயாம் என்பார் பெரியோர். நாமமில்லாத ஒருபொருளுமுலகத்திலுண்டாயிருக்கவில்லை. உருவமில்லாத ஒருபொருளுக்கேனும் நாமமுண்டாயிருக்கவுமில்லை. ஆதலின் நாமமும் உருவமுங்கூடியே ஒருபொருளென்ரும். ஆகவே நாம மாத்திரத்தில் ஒரு பொருளறிவுண்டாமென்ன எவராலுமுடியாது அப்படியே ஒரு பொருளின துருவவுணர்ச்சியும் நாமத்தைவிட்டுண்டாயிருப்பதாகக் காட்டுவாருமிலர். உருவமெல்லாம் கட்புலனுக்கே விஷயமாம். ஆனபடியால் மனுடரனைவரும் காதுங்கண்ணுங்கொண்டேபொருளையறிகிறவராயிருக்கின்றனர். இருந்தாலும் உருவத்தைக்காட்டியே நாமம் படிப்பிக்கவேண்டியதாயிருக்கிறது. ஆதலின் உருவவுணர்ச்சியே முந்தியதாம். அந்தவுண்மைபற்றியே "சர்வேந்திரியாணும் நயனம் பிரதானம்" என்ற சுருதியெழுந்தது. ஆதலின் நாமமும் உருவமுங்கொண்டே எந்தப் பொருளுமுண்டாயிருத்தல் ஸ்பஷ்டமாதலால் நாமமுமுருவமும் அனன்னியபாவமுடையவேயாயிற்று. அதுபோலவே சுருதிவிசாரத்திற்கும் ஆலயசேவைக்கும் அனன்னிய சம்பந்தஞ்சித்தித்திருப்பது முண்மையேயாம்.

சுருதிவிசாரம்என்ருல், எல்லாம்வல்ல இறைவரின் இயற்கை, குணம், தொழில்களின் பெயர்களை மாத்திரம் தொகைவகை, விரியிற்கேட்டறிதலாம். ஆகவே அந்தப் பரமேசுவரருடைய திருவருட்காட்சி வடிவத்தையும், அவரது திருமுன்பில் நடையும், காண்டலே ஆலயசேவையெனப்படுகிறது. இவ்விரண்டனுலுமே அறிவுடையோருக்குக் கடவுளுண்மையில் நம்பிக்கை (ஆஸ்திகத்துவம்) நிலைபெற்றதென்னலாம். சுருதிவிசாரம் ஒன்றனுலேயே ஒருவனுக்கு ஆஸ்திகத்துவம் பூரணமாகிறதில்லை. அதுபோலவே ஆலயசேவைமாத்திரத்தால் ஒருவனுக்கு ஆஸ்திகத்துவம் நிலைபெறுதலும் ஸ்திரமாகாது. ஆதலின், ஆலயசேவையும் சுருதிவிசாரமும் ஆகிய இரண்டுமுடையவரே ஆஸ்திகராயினர். ஆஸ்திகரென்ருல் கடவுளுண்மையைச் சம்மதித்தவராவார். அதினுந்தெரிந்து சம்மதிக்கிற ஆஸ்திகத்துவந்தான் விலையேறப்பெற்றதாம். தெரியாது சம்மதிக்கிற மூடக்கொள்கை சந்திரனுண்மையைச் சம்மதிக்கும் அந்தகன்கொள்கையைப்போன்றிருக்கும். இருந்தாலும் அவன் கண்ணுடையார்வாக்கை நம்புவோர் விசுவாசியேயாவன். அதனுல் மேலோர் வாக்கை விசுவாசிக்கிற அவன் ஐதிகன் எனப்படுகிருன். அவனுக்கு விசுவாசத்தனவில் இரட்சிப்புண்மையும்கேட்கப்படுகிறது. அத்தகைய ஐதிகன்மார்க்கு உண்மைபோதிப்பவரே வைதீகரெனப்படுகிருர். அவர்தாமே ஆஸ்திகரெனப்பட்டார். வைதீகமென்ருல் வேதசம்மந்தமென்பது பொருளாம். வேதமென்பது வரிவடிவெழுத்துக்களாலமைத்திருக்கப்பட்ட புத்தகமல்ல. அப்புத்தகத்தையருளிய ஆசிரியன் வாக்கினின்றுண்டாகும் ஒலிவடிவெழுத்துக்களிலாய பதங்களேயாகும். ஆகவே வேதம் ஆசிரியவசனமாயிற்று. ஆசிரியருள் மூலவாசிரியரே கடவுளெனப்படுகிருர் அந்தவுண்மை. "ஆரணஆகமங்க ளருளினுநவு

என்றதாதிய சுருதிபோதங்களாற்போரும். அங்ஙனம் பெருங்கருணைத்தடங்கடலாகிய பரமேசுரர் வெளிப்படுத்தியருளிய வேதமானது அவரது (கடவுளது) இயற்கைகுணம் தொழில்களின் விசேஷங்களைச் சொன்மாத்திரத்தாற்செவிவழியறிவுறுத்தற்கருவியாமென்பதே ஆன்றோர் கொள்கையாம்.

அந்தவேதத்திற் கேட்கப்படும் பொருளினது சுரூப உண்மையை உருவடி வெழுதிலமைக்கப்பட்டிருப்பதே ஆலயமாம். அது மாத்திரமன்று எல்லாம் வல்ல இறைவருடைய பஞ்சகிருத்திய விசேஷங்களையும் ஆலயத்திற்காணலாம். அங்கே காணப்படுகிற உருவங்களெல்லாம் பிரதிரூபங்களாதலால் சித்திரிக்கப்பட்டவை தாம் உருவடிவெழுத்துக்களென்ரும். ஏதாவது ஒரு பொருளின் வடிவத்தைப்போலவே வடிவமைத்திருப்பதுதான் உருவடிவெழுத்தெனப்படும். படவே ஒரு பொருளின் இயற்கை குணம்தொழில்களை எழுதி வைத்திருப்பதுதான் வரிவடிவெழுத்தாயிற்று. அவ்வரிவடிவெழுத்தும் அவ்வெழுத்தமைத்திருக்கப்பட்ட புத்தகமும் புத்தகத்தில் கேட்கப்படும் பொருளாகிறதில்லை. அதுபோலவே உருவடிவெழுத்தாகிய பிரதிமாரூபமும அஃதமைத்திருக்கப்பட்ட ஆலயமும் கடவுளாகமாட்டாது. ஆயினும் சுருதிவிசாரத்தால் கடவுளினிலக்கணங்கள் செவிவழிமனசிலாவதுபோல், ஆலயசேவையால் கடவுளின் அருட்டிருமேனியினுண்மையும் நேத்திரேந்திரியத்தின் வழியால் மனசிற்பதிந்துவிடுகின்றது. அதுகொண்டு அறிவாளியான ஒருவன் அறிதல், தியானித்தல், சமாதித்தல், சாட்சாத்கரித்தல் என்னுஞ் சோபனக்கிரமத்தால் ஈசுரசாட்சாத்காரம் பெறுவானருகனுகின்ருன். அவன் பொருட்டே ஈசுவரனும் வெளிப்பட்டனுக்கிரகிக்கின்ருர். அவ்வனுக்கிரகம் பெறுதலைத்தானிங்கே விக்கிரகாராதனமென்றது.

அங்ஙனம் ஈசுவரசாட்சாதி (சமுகத்தி) லாகவும் வணக்கமுடைத்தாத (தற்போதமுனைப்படங்கிநிற்ற) ல் பற்றி விக்கிரகாராதனம்என்றபதத்திற்கு சுரூபவழிபாடென்றதோர் அர்த்தமுங்கேட்கப்படுகிறது. சுரூபவழிபாடு என்றது-சு-ரூபம். வழிபாடு, எனப் பிரிந்து சு = நன்மையேவடிவாயகடவுளின், ரூபம்-திருமேனியை, வழிபாடு-வழிபடல், என்றபொருடராலானே கடவுட்டிருமேனியை வழிபடுதல், அல்லது கடவுட்டிருமேனி வணக்கம் என்று பொருள்படும். படலான் ஈண்டு, முறையே அறிவுறுக்கப்பட்ட

(a) விக்கிரகாராதனம்,

(b) விலோசனக்கிரகணர்ச்சனம்,

(c) விசேஷக்கிரகணசாதனம்,

(d) சுரூபவழிபாடு.

என்றபதங்களின் முடிவில்ஆராதனம், ஆர்ச்சனம், சாதனம், வழிபாடு என்று சூட்டப்பட்ட மகுடவாசகங்களால் ஆலயங்களிலே ஈசுவரப் பிரதிமாரூப வுண்மையுடன் பஞ்சகிருத்திய விசேஷங்களுண்மையையும் கண்டுணர்கோடலே விக்கிரகாராதனமாக் காண்க.

ஈண்டுப் பிரஸ்தாபிக்கப்பட்ட கிரமங்களிலிருந்து வேதத்திற் பிரதிபாதிக்கவும், ஆலயங்களிற் பிரதிமாரூபமாக அமைத்து வைக்கவும், யோக்கியமாகவுள்ள அப்பொ

ருள் "கடவுள்" என்று கேட்கப்படுதலால்.

1. அவர் எப்படிப்பட்டவர்?

2. எவ்விடத்திலிருக்கிறார்?

3. ஏனையோர் (நாஸ்திகர்) ஏன் அவரை ஒப்புக்கொள்கின்றிலர்?

4. ஒரு பொருளை அறிதற்கு ஆலயசேவையும், சுருதி விசாரமும் ஆவசியகர்தானோ?

5. அப்படியானால் பெரியோர் ஏன் விக்கிரகாராதனத்தை மறுத்திருக்கிறார்கள்?

6. சுருதிகளிலே விக்கிரகாரர்தனம் மூடருக்கு உரியதென்று சொல்வானேன்?

7. அங்ஙனம் கேட்கப்படும் சுருதிகளால் பிரதிமாரூபமன்றோ விக்கிரகமெனப்படும்?

8. சுருதிவிசாரஞ் சாமான்யமென்றால் வேதாந்திகள் சம்மதிப்பார்களா?

என்பனவாதிய ஐயவினாக்கள் கிளம்புவது திண்ணமாம். ஆகவே அவ்வினாக்களுக்குத் தக்க சமாதானங்களளித்து எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சாரசப்படுத்த வேண்டியதென்னுடைய கடமையேயாயிற்று. ஆதலின் அதன்மேற் போகின்றேன்.

1-வது வினா
கடவுள் எப்படிப்பட்டவர்?

விடை—அவர் அளவிடப் படாதவர். அது அவரது பெயர்ப்பொருள் விசாரத்தானே நன்குபோதரும். அதனை விசாரிப்பாம். கடவுள் என்ற பதம், கடத்தல் என ஆகவே தொழிற்பெயரே கர்த்தாவுக்குத் தொழிலாகு பெயராயிற்றென்னலாம். ஆதலின் கடத்தலென்னுந் தொழிற்பெயரடியாய்ப் பிறந்த (கட) என்னும் பகுதியாயது (உள்) என்னுந் தொழிற்பெயர் விகுதிபெற்றுக் கடவுள் என்றாயிற்றென்பார் பெரியோர். அந்த உண்மை, செய்தலென்னுந் தொழிற் பெயரினடியாய்ப் பிறந்த செய் என்னும் பகுதியாயது. உள் என்னும் தொழிற்பெயர் விகுதிபெற்றுச் 'செய்யுள்' என்றாயவாறு போலவாம். ஆகவே, கடவுளானவர் மனத்தால் இத்தன்மையரென நினைத்தற்கும், வாக்கால் இன்னாரென வுரைத்தற்கும், காயத்தாலடுத்துப் பற்றற்கும், இலையாதவண்ணம் அதீதராய் நிற்பவராகின்றார். அவ்வுண்மையை வலியுறுத்துவானே, எமது தாயுமானாரும்,

"புகலக் கருதவெட்டிடா நிறைபொருளளவையார் காண்பார்"

எனத் திருவாய் மலர்ந்தருளினர். ஆனபடியால் மனம் (மானதக்காட்சி யளவைக்கும்), வாக்கு (வேதாதிகளாகிய வுரையளவைக்கும்), காயம் (நேர் பார்வைக்கும்) ஆகிய மூன்றனுக்கும் அப்பாற்பட்டவராயிருக்கிற அவரை (கடவுளை) அளவிடப்படாதவரென்று தானே அறிஞர் கூறுவர்.

உண்மை யங்ஙனமாகவும், கடவுள் என்ற பதத்தை கடம்-உள் எனப் பிரித்து, கடத்தினுள்ளால் நிற்கும் பொருளே கடவுள் எனப்படுவரென்று சிலர் பேசிக்கொண்டிருக்கின்றனர். அதனைச், சிர்தூக்குமிடத்து சைவபுராணம் வித்தியேசர சங்கிதையில்

"அநாத்ம நப்பரே சர்வே சீவா
...ஸ்ம நதம்சுய"

அதாவது தேகாதிக்கு மேலுள்ளனவெல்லாம் சீவர்களே சந்தேகிக்கவேண்டாம் என்றுகேட்கப்படுகிற சத்போதத்தோடு அது முரணுறுகின்றது. ஆதலால் அவர் கூற்றுத்துச்சமேயாயிற்று. 'மேலும் பசுபதி என்னப்பட்ட நிமலராகிய அவர் (கடவுள்) கடத்தினுட் பந்திக்கப்பட்ட பொருளாயினாரென்பது உலகம் பரிகசிக்கத்தக்கது மொன்றாம். அவ்வியற்கையையுணராதே ஆன்றோராட்சியினின்றும் வழீ இயினரை மேலோர் (கடத்துட்படுவது சிவப்பிரமமாகாத சீவப் பிரமமேயாமென்னுமுண்மை புணர்ந்தோர்) என்ன சொல்லுவரோ அதெம் பொறுப்பன்று அதிருக்கட்டும். வாஸ்தவத்தில் யாதொரு களங்காகிதராய் விளங்குகின்ற பரம்பொருளெதுவோ அதுவே தம்மால் வெளிப்படுத்தப்பட்ட ஆன்மதத்துவ மிருபத்துநான்கும் பிரகிருதியிலொடுங்கவும், புருடதத்துவ முதலியன விந்துவிலொடுக்கவும், சத்தி சிவங்களின் கூறாகிய அபரவிந்து அபர நாதங்கள் சுத்தமாயையிலொடுக்கவும், இவையெல்லாங் கடந்து நின்ற தோரதீதவஸ்துவாம். அந்த வஸ்துவே சர்வமுங் கடந்துநிற்குமோர் காரணத்தாற் கடவுள் என்றாயிற்று. ஆதலின், சுத்தசிவமாகிய முழுமுதற்பொருளை (கடவுளை) அளவிடப்படாதவரென்றும்.

இனி 2-வது வினா கடவுள்
எவ்விடத்திலிருக்கிறார்?

விடை. அவர் எங்கும் எவற்றினுமிருக்கிறார். அந்த உண்மையை சர்வவியாபகர் (பரிபூரணர்) என்கிற அவருடைய திருநாமமேவலியுறுத்திற்று. அங்ஙனம் நிறைவுற்றிருப்பதும், முன்னரளவிடப்படாதவரென்றறிவுறுத்த வுண்மையுடன் விரோதமில்லாத நிலைமையில் (சாமானியரறிபொருளதவிதத்தில்) மறைவாயே நிறைவுற்றிருக்கிறார். இங்கே மறைவுற்றிருக்கிறாரென்பதற்கு சுவர் முதலியவைகளான் மறைபட்ட ஸ்தலம்போன்றதோரிடத்தில் அல்லது தூரதேயத்தில், இருக்கிறாரென்று பொருள்கொள்ளப்படாது. அதுபோலவே, நிறைவுற்றிருக்கிறாரென்பதற்குக் குடத்தினுள்ளால் ஜலம் நிறைவுற்றிருந்தவாறு ஒன்றனுள் அல்லது பலவினுள் மாத்திரம் நிறைவுற்றிருக்கிறார் என்று கருதுவதும் தவறாம். பின்னை? எப்படியென்றால் அங்குமிங்குமெங்கும் எவற்றினும் நிறைவுற்றிருத்தலால் அவர் அண்டசராசரங்களினுள் மறைவாகி யெவற்றும் நிறைவாகியிருக்கிறாரென்றுணர்க. ஆதலின் அவர் (கடவுள்) எங்குமெவற்றினு மிருக்கிறாரென்ற பெரியோர் பக்ஷமே எமது பக்ஷமாக்கொண்டாம். இனி,

3-வது வினா ஏனையோர் ஏன்
அவரை ஒப்புக்கொள்கின்றிலர்

விடை. அளவிடப்படாதவராயும் சர்வவியாபகராயுமுள்ள கடவுளை அறிந்து கொள்ளும் வழியைக் கண்டுபிடித்து, அவ்வழியைப் பின்பற்றியொழுகி அறிந்துகொள்ளும் வலியின்மையாலும் அவராயினும் (கடவுளாயினும்) அபக்குவிகளாகிய ஏனையோருக்கு (அந்நியருக்கு) வலிதே வெளிப்பட்டுத் தாமுண்மையை அறிவுறுத்தாமையாலும், ஏனையோர் (நாஸ்திகர்) தாம் அணைப்பெறாத கடவுளுண்மையை அங்கீகரிக்கின்றிலரென்றறிக.

அன்னோர்கொள்கையை ஆராயும்

து, கண்டுகொள்ளாத ஒரு பொருளை ண்டுமென்னாத அவர்களை மெய்யர்களெ னாதானே சொல்லவேண்டும். அங்ஙனஞ் த்தியமே பேசுகிற அவர்களிடத்தில் என் றக்கும் நமக்கு யாதொரு விரோதமுமில் . ஆயினும், அவர்கள் (உலோகாயதன் ர்)ஆன்மலாபத்தை இழந்துபோகின்றார் ளே என்ற பரிதாபமாத்திரம் நம்மிடத்தி ண்மையேயாம். அதுகொண்டு ஆவதொ றுமில்லையாதலின் அன்னோரை (நிரீச் வாதிகளை) நம்மவர் அதிகமாக நேசிக்க பாட்டார்கள். அந்த உண்மையை விசா ருங்கால் சாவகாசதோஷத்தால் தொத் வியாதிபோன்று அவர்களுடைய வாத னது நம்மவரையும் பற்றிக்கொள்ளு ன்ற பயமொன்றேயல்லாமல் வேறொ றுமில்லை. நேசிக்கவொட்டார்க ளென் ஆன்மார்த்த விஷயத்தில் அவர்களுப சங்கட்குச் செவிசாய்க்க வொட்டார்க ன்பதேயாம். அந்தக் கட்டாயமும், சவ புத்தியுடையவர்களைக் குறித்துமாத்தி ண்டாய தாதலின் என்போலிகட் கன்.

இதனாலே நாஸ்திகரையும் நல்லவ கிவிடும் ஆஸ்திகப்போலிகளை நேசித் யுங்கூட என்போலிகள் கெட்டுப்போக டார்களென்பதும் குறிப்பிக்கப்பட்ட இங்கே, ஏனையோர் கடவுளுண்மையை க்கொள்ளாததற்குக் காரணமும், அவ ரியராகக் கருதப்படுவத னுண்மையும், டத்தில் நமக்கு விரோதமில்லை யென் , நிச்சயப்படுத்திவிட்டாம். இனி,

வது வினா ஒரு பொருளையறி டு ஆலயசேவையும், சுருதி விசாரமும் ஆவசியகந்தானா?

விடை. ஒரு பொருள் விஷயத்தில், அதினும் கடவுள் விஷயத்தில் அங்ஙனமில் லையெனின் அறிய முடியாதானபடியால் ஆலயசேவையும், சுருதிவிசாரமும், கட வுளை யறிதற்கு ஆவசியகமேயாம். அந்த வுண்மை மனுடரியற்கை விவேசனத்தா லன்றிப் புலப்படமாட்டாது. ஆதலின் தலைவனைக்கிரகித்தற்கு (அறிந்துகொள்ளு தற்கு) அருகராயிருக்கிற மனிதரியற்கை யை, ஈண்டுச் சிறிதெடுத்துப் பேசுவாம்

மனிதர் அசுத்தரென்றும், சுத்தரென் று மிருதிறப்படுவர். அவ்விருதிறத்தருள் மனம் போன போக்கிலே சென்று ஹிதத் தை நாடி நிற்கிற மனிதரே அசுத்தராயி னார். ஆகவே மனம்போனபோக்கிற் றாம் போகாமல், மனதைத் தம்வசத்திலாக்கிக் கோடலால் புண்ணியபாவங்க ளற்றுப்புநித ரெனப்படுவோர் தாம் சுத்தராகின்றனர், இவ்விருதிறத்தரும், பிரமசிருஷ்டியிலேயே வேறுவேறாகப்படைக்கப்பட்ட வருமல்லர். பின்னை? தாயுமானார்,

“சித்திநெறி கேட்டல் சேகமயக்கஞ்சன்ம
மற, முத்திநெறிகேட்டல் முறைகாண்
பரா பரமே”?

என்றபடி உலகவாழ்வினிச்சை மே லிட்டு சித்திநெறிகேட்டு நிற்றலான் அவ ரது கன்மகாரணமாகப் பிறப்புக்களிற் பட்டுழலுவோரையேஅசுத்தரென்றும், அங் ஙனமுண்டாம் பிறப்புக்களான்வரும் துன் பத்திற்கு அச்சுற்று சகமயக்கத்தி னீங்கு வான் முத்திநெறிகேட்டற்கு வந்தோரை

யே சுத்தரென்றும் கேட்கப்படுதலான் மனி தர் தாமே மனிதராயும் புனிதராயும் இருக் கின்றாரெனவறிக.

அவ்விருவருள், இறைவனருள்வழி, விடயமறைப்பு நீங்கப்பெற்று அழிதலையே சகசமாகவுடைய உலகப்பொருள்களை (சட பதார்த்தங்களை) மாத்திரமே காணுகின்ற மனிதர்கட்கு, சத்தாயுள்ள சித்துப்பொரு ளாந்தன்னையுந் தலைவனையும் அறிய ஒட் டாதுள்ள சொரூப மறைப்பொன்றனுண் மையும் பிரத்தியட்சமாதலால் அது கார ணமாகவே மனிதர் அசுத்தரெனப்பட்டார். ஆதலான், அத்தகைய சொரூபமறைப்பும் நீங்கப்பெற்றுத் தன்னையுந் தலைவனையும் அறிந்துகொண்டவரைத் தாம் சுத்தரென் பார் பெரியோர். அத்தகை சுத்தரது நிலை யோ!

“அத்துவிதமான வயிக்கிய வநுபவமே
சுத்தநிலை யந்நிலையார் சொல்வார்
பரா பரமே”

என் -படி சொல்லமுடியாததாயிற்று. [illegible]ன், சொல்லமுடியாத அந்தமேனிலை கைவந்த புனிதரது முந்திய நிலையாயும் மனிதரிடத்து மீண்டுங் காணப்படுவதாயு முள்ள நிலையே மனிதரியற்கையாம். அது (மனிதரியற்கை) அறிவிக்க அறியுமுண்மை யொன்றேயாமென்பது சுருதி யுக்தி அநு பவம் மூன்றனாலும் நிச்சயிக்கப்பட்ட அறி ஞர் கொள்கையாம். அந்த வுண்மைக்கு,

சுருதி

“அறியாமை சாரி னதுவாயறிவாம்
விதமுற்றறிவெனும் பேர் மெய்.”

“அறியாமை மேலிட்டறிவின்றி நீர்தூங்
குறியேற் கறிவென்ற கோலம்-வறிதேயாய்
நீயுணர்த்த நானுணரும் நேசத்தாலே
வறிவென்றே யெனக்கோர்நாமமிட்டதே”

என்பனவாம் தாயுமானார் திருவாக்கு களே போதியவாறாதலறிக. மேல் விரிவஞ் சிவிடுத்தாம். இனி யுக்தியை நோக்குங் கால், யுக்தி—இப்போதுவிடய மறைப் பினின்றும் (உலகப்பொருளையு முணராது கிடந்த உணராமையினின்றும்) நீங்கியிருக் கின்றோமே? அதுபோல ஒவ்வொரு சரீ ரத்தினுமுள்ள அறிவைப் பிரகாசிப்பிப் பான் அருள் கனிந்தோங்கும் பசுபதியை யும், அறிகின்ற தன்னையும் உணராதுகிடக் கின்ற சொரூபமறைப்பினின்றும் நாம் நீங்கப்பெறவில்லையன்றோ? அந்தச் சொரூ பமறைப்பை இப்போது நீக்கிக்கொள்ள நம்மால் முடியுமேயானால் திருவருளுண் மையை நாம் ஒப்புக்கொள்ளவேண்டிய தவ சரமே யில்லை. அங்ஙனமாக்கிக்கொள்ள அசக்தராகிய நாம் திருவருளை மறந்தோ மானால் கடைத்தேற மாட்டோமென்பதும் நமக்கு நிச்சயமேயாயிற்று. ஆயினும் மனு டப்பிரயத்தனத்தாலுமது கூடுமென்பார் சிலருண்டாயிருக்கலாம். அவர் கூற்று

அநாதலேவையும்பா ரென்றன்-
அந்தை, யறியாதே யென்றனறிவாலே
பார்த்தேன். இநாதனபொருள்கண்ட
தல்லால்-கண்ட, என்னையுங் கண்டில
னென்னேடி தோழி.

என்ற அநுபவஞானிகளின் சம்மத

டப்பிரயத்தனமென்றது சாஸ்திரங்களிற்
கேட்கப்படுவானேன்? எனின் அது அருள்
வழிச்செல்லும் புருஷப் பிரயத்தனமேயா
மென்க. அருளையன்றி ஆன்ம வறிவேதலை
யெடுக்கிலேயாதலின் சுதந்தரமான புருடப்
பிரயத்தனமுமுண்டென்பார் கூற்று அஸ்
திரமாதலறிக. நமக்குண்டாயிருக்கிற விஷ
யஞானம் எந்த சரீரத்தினின்றுந் தலைகாட்டு
கின்றதோ, அந்த சரீரத்திலுள்ளபோது
தானே சொருபஞானம் நம்மிடத்திலில்லை
என்பதும், நமக்குத் தோன்றுகிறது. அந்
தச் சரீரந் தந்தவனெவனோ அவனே இந்த
வுலகத்தையும் நமக்கு அறிவிப்போனுகின்
றான். அவன் எதனுற்றந்தானோ அந்தப்
பெருங்கருணையினாலேயே. ஒவ்வொரு அறி
வாளியுந் தன்னையும் தலைவனையு முண்மை
யாக் கருதுகின்றான். அவன் எதற்காகக்
கொடுத்தானோஅந்த நித்திய ஞானானந்தானு
பவத்தை யனுக்கிரகிக்கப் பெறுவானுள்ள
முன்னேற்றமும் நம்மிடத்திலேயே கா
ணப்படுகிறது அந்தவுண்மை யான் முழு
வதும் அசத்தாகிய எல்லாமனிதரும் தலை
வன் றிருவருளாலேயே அறிவாளிகளாக்
காணப்படுகின்றனர்.

ஆதலான் மனிதரனைவரும் அறிவிக்க
அறிவோரேயாயிருக்கின்றனரென்பதேயுக்
தமாம். யுக்தியிவ்வாறாகவும், அநுபவத்தை
யாராயுங்கால் தன்னையின் கருப்பத்தினின்
றும்வெளிப்பட்ட பிள்ளையானவன் சில நா
ளிற்றன்னையின் முகம்பார்க்கத் தொடங்கு
கின்றான். அது அடிக்கடி பிள்ளையின் முக
த்தையுற்றுற்றுப்பார்க்கிற தன்னையின் பார்
வையினின்று முண்டாயதோர் பழக்கமாம்.
யா? என்னப்பனே. என்னடா பார்க்கி
றாய்? எடா! துரையே! சுவாமி உன் கண்
ணைத்திறந்துவிட்டாரா? என்பனவாதிய
விடை வேண்டா வினாக்களுடன் பிள்ளை
யின் முகத்தைப் பார்த்துப்பார்த்துக் களிக்
கின்றனள் அதுகண்ட பிள்ளையுங் களிக்
கத் தொடங்குகின்றான். கண்டுகளிக்கும்
பிள்ளையின் முகத்தைக்கண்டு களிக்கின்ற
அன்னையானவள் பிள்ளைபாற்பழக்கம்பேசு
கிறப்போலத் தன்னிற்றானே பலவும் பே
சிக்கொஞ்சி மகிழ்கின்றனள். அதுகண்டு
பிள்ளையும் அன்னையிடத்திற் பேசத்தொட
ங்குகின்றான். அப்போது அவனுக்குப்
பேசும்படியான சக்தி யுண்டாயிட்டில்லை
யாயினும் மாதா வினங்காத்தலி (வாய்திற
த்தலி) னின்றே பேச்சுண்டாகிறதென்று
மாத்திரம் தெரிந்துகொள்கின்றான். அப்
பால் தானுமங்காத்தற்கு முயலுகின்றான்.
அந்த முயற்சியினின்றும் அங்காத்தலுண்
டாய் விடுகின்றது.. அவ்வங்காத்தலால்,
அ-அ. என்னும் அகரோச்சாரணங் கேட்
கப்படுகிறது அது சமையத்தில் அன்னை
யும் பயிற்றுதலால் வாயமுக்தலுடன் மூடு
தற்பழக்கமும் வந்து விடுகிறது. அவர
வே அம் என்னுஞ் சப்தம் தோன்றுகிறது.
அது முதிர்ந்தவெல்லையில் வாய்திறந்து
மூடினவுடன் திறக்கவும் பழகுகின்றான்
அங்ஙனம் வாயைத்திறந்து, மூடி, திறக்
கும் பழக்கமுண்டாயபோதுதான் "அம்ம"
என்றவாக்கு சரியாய் வெளிப்படுகிறது.
அந்த வாக்கின் பொருளே தாயென்று
தெரிந்துகொள்கின்றான். அதன்பிறகு தா
யுடன் தன்னிடத்துப் பேரருள் கனிந்து
நிற்கும் அப்பனையும் அம்மையே அறிவிக்க

றெடிய நாயகனை மகவுக்கு அறிவிப்பாளாகி
ஒலித்துச்சரிக்கப் பயிற்றுகின்றாள். அப்
பயிற்சியிலிருந்து "அப்ப" என்ற சப்த
முண்டாய்விடுகிறது. அவ்வப்ப வென்ற
பதப்பொருளாந்தந்தையையும் நன்றுதெரி
ந்துகொள்கின்றான். அதுபோலவே அக
ரத்தை முதலாகவுடைய அக்காள், அத்
தான், அண்ணி, அண்ணன், அத்தை, அம்
மான். ஆத்தன். ஆத்தாள். (ஆச்சி) முதலி
யோரையுங் காண்பித்துப் படிப்பிக்கின்ற
னர். அங்ஙனம் படிப்பிக்கின்றவர் ஈண்
டுக் கூறப்பட்ட சொந்த ஜனங்களே யாவா
ர். ஆதலின் இவரனைவரும் தாய்தந்தைய
ரென்றே யுபசரிக்கப்படுகின்றனர். இவ
ரயலாராற் பிள்ளையைத் தீண்டவும் சம்ம
திக்கின்றிலர்-தீண்டினுஞ் சீர்தட்டிவிடுமா
ம்-அதுமட்டுமா! பார்க்கவுங்கூட இடங்
கொடுக்கின்றிலர் பார்த்தாற் கண்ணேறு
படுமாம்-வெளியேயுங் கொண்டுவர மாட்
டார். வெளிக்கொணர்ந்தாற் பக்ஷிதோஷ
முண்டாய்விடுமாம். இத்தகைய தோஷங்
கட்கு ஆளாக்காமல் ஒருவர்மாற்றி ஒருவர்
சுமந்துகொண்டு வீட்டினுள் வைத்தே ஒரு
வருஷம்வரை வளர்க்கின்றார்கள். அந்த வரு
ஷக்கடைசியில் ஜன்ம நக்ஷத்திரதினத்தன்
று கோயிலுக்கு எடுத்துக்கொண்டுபோய்ச்
சுவாமியைத் தரிசிப்பித்து நசுர காமோச்
சாரணங்களைப்படிப்பிப்பர். இனிமேல் நட
மாடித் திரியும் பழக்கமுண்டாய் விடுதலா
னே ஓடித்திரிந்து எல்லா விஷயங்களையும்
அவன் படிப்படியாகவே யறிந்துகொள்ளு
கின்றான். அத்தகைய மைந்தனின் எல்
லாப் பயிற்சிகளும் பெற்றோராலும், பெரி
யோராலும், உபாத்தியாயராலும், சகபாடி
களாலும் மற்றும் பிறராலுமே. அவனுக்கு
ண்டாயதென்பார்பெரியோர், இது நம்ம
னோ நுபவத்திலுள்ளதாம். ஆகையால் ஒவ்
வொரு மனிதனும், தாம் தெரிந்துகொண்
ட எல்லா விஷயங்களும் அறிவிக்க அறிந்
துகொண்டதாகவே ஒப்புக்கொள்ளக் கட
மைப்பட்டிருக்கிறான். அங்ஙனம் சம்மதிப்
போனே மெய்யனாத லறிக. இங்ஙனம்
சுருதி, யுக்தி, அநுபவங்களாலேயும், மனி
தரனைவரும் அறிவிக்க அறியும் இயற்கை
யுளாரென்றே போதரல் கண்டாம்.

ஆதலின், கடவுளுண்மையைச் சம்ம
திக்கிற ஆஸ்திகத் தலைவன்மாரனைவருக்
கும் எவராவது ஒருவர் பிரதமையில் அறி
வித்தன்றி ஆஸ்திக ஞானமுண்டாக எது
வில்லை. அங்ஙனம் அறிவித்தற் கர்த்தா
வுங் கடவுளையன்றி வேறொருவருண்டா
யிருந்ததாகவுஞ் சொல்லுவாரிலர். ஆன
படியால் கடவுளுண்மையை அறிவித்தற்கு
அவரே கர்த்தாவாயிருந்தனர் என்பதும்
நிச்சயமாம். அந்தவுண்மை,

"மைப்படிந்த கண்ணாளும் தானுங்கச்சி,
மயானத்தான் வார்சடையான் மாசொன்
றில்லான், ஒப்புடையனல்லன் ஒருவன்
அல்லன். ஒருரன் அல்லன் உவமன் இல்லி,
அப்படியன் அவ்வுருவன் அவ்வண்ணத்
தன். அவனருளே கண்ணாகக் காண்பதல்
லால். இப்படியன் இவ்வுருவன் இவ்வண்
ணத்தன், இவனிறைவன் என்றெழுதிக்
காட்டொண்ணாதே." என்ற சுருதி போத
த்தால் இனிது விளங்கும்.

எல்லாம் வல்ல இறைவர் தாமே தம
துண்மையை வெளிப்படுத்தும் அறிஞரைத்
தடுத்தாட் கொள்ளுவான்கொண்ட அனுக்
கிரகத்திருமேனியின் பிரதிமாரூபமே ஆல
யங்களிற் காணப்படுவதாம். அத்திருமே

னியின் வர்ணனைகளும், அத்திருமேனி கொண்டருளிய இறைவன் அருட்டிருவிளையாடற் சரித்திரங்களுமே வேதங்களிற் பிரதிபாதிக்கப்படுகின்றன. அவ்வேதத்திற் பிரஸ்தாபிக்கப்பட்ட சரித்திரங்களுண்மையை ஆலயத்தில் நடக்கிற நித்தியநைமித்தியமகோற்சவங்களிலேயும் ஸ்பஷ்டமாக் காணலாம். ஆகவே, கடவுளினது நாமரூபக்கிரியைகளைச் செவிப்புலன் வழி அறிவுறுத்துகிற வேதங்களும், கட்புலன் வழி யறிவுறுத்துகிற ஆலயங்களும், கடவுளுண்மையை யறிவுறுத்தற் கருவியாதல் மறுக்கமுடியாத வுண்மையேயாயிற்று. அந்தவுண்மையைத் தற்காலம் வித்தியார்த்திகளுக்கு உபாத்தியாயன்மார் கற்பிக்கும் புஸ்த்தகங்களில் படமும் சரித்திரங்களுமாய் அமைக்கப்பட்டிருத்தலைக் கொண்டுந் தெரிந்துகொள்ளலாம். இருந்தாலும், அவ்வுண்மையை அறிவுறுத்தற்கு பிரதிமாரூபமேசிறந்தகருவியென்பார் பெரியோர். அதனை,

"Drawing is the only language without words.

சித்திரந் தொழிலொன்றே வார்த்தைகளில்லாத பாஷை."

"Drawing is the only language which can express all things. சித்திரந் தொழிலொன்றே எல்லாப் பொருள்களையும் விளங்கக்காட்டக்கூடிய பாஷை."

என்ற உணர்ச்சியின் மிக்க மேல்நாட்டாரும் சம்மதிக்கின்றனர். இத்தமட்டில்

5-வினா அப்படியானால் பெரியோர் ஏன் விக்கிர காராதனத்தை மறுத்திருக்கிறார்கள்?

விடை. அறிவிற் பெரியோர் ஒருவரென்கிலும் அங்ஙனம் மறுத்திருப்பதாக யாண்டும் காண்கின்றிலம். அப்படியிருக்கவும்.

"குருவினிடத் துபதேசங் கேளாதானுண் கோழி, பன்றி, நாய், வயிறு வளர்த்தலொக்கும், மருவி யவன் றிருக்கோயில் தொழச்சென்றாலுமாபாவியென்று தெய்வ மறைந்துகொள்ளும், உருகி யவன்சிவஞானகளோதலாகா தோதுகினு மவனுரையைக் கேட்கின்றோர்கள், வருபிறப்பில் வேடனுமவன் பின்னே சுவானங்களாயலைவர் மாநிலத்தைக்கே",

என்ற வாக்கியத்திற் கேட்கப்படுகிறபடி சற்குருவினனுக்கிரகத்தைப் பெற்றுக் கொள்ளாததாற் கொடிய கொலைத்தொழிலையே சீவனமாக் கொள்ளுகிற வேடர் பதவியைப் பெறத்தக்க தான் தோன்றிப்பண்டிதன்மார் சிலரும், அவருரைக்குச் செவி கொடுத்தலால் அவருக்கோர் சகாய பூதராயெழுஞ் சுவானபதவியைப் பெறுதற்கு யோக்கியராகியசிஷியன்மாரும், ஆன்றோர் வாக்கியங்களில் ஒன்றிரண்டை மனப்பாடம் பண்ணிவைத்துக்கொண்டு பெரியோர் விக்கிரகாராதனத்தை மறுத்திருக்கின்றாரென்று பேசித்திரிகின்றனர்.

அவர்பொருட்டு விடையிறுக்கவேண்டிய தாவசியகமேயாயினும், அன்னோருண்

மையை யறிவுறுத்தவேண்டியதாவசியகமேயாயிற்று. ஆதலாற் கூறுதும்;

விக்கிர காராதனத்தைப் பெரியோர் மறுத்திருக்கின்றனரென்னும் "பேதைமையிற் பேதைமையில்" என்பதே எமதுவிடையாம். அந்த உண்மைக்குத்தான் றோன்றிகள் பாடம்பண்ணிக்கொள்ளுகிற ஒன்றிரண்டு செய்யுள்களைமாத்திரம் ஈண்டு விவரித்து அச்செய்யுள்களில் அவர் கருத்துக் காணப்படாமல் விக்கிர காராதனஸ்தாபகமே உள்ளமையைக் காட்டுகின்றாம்.

பட்டினத்தார்.

"சொல்லினுஞ் சொல்லின் முடிவினும் வேதச்சுருதியினு மல்லினுமாசற்றவாகாயந் தன்னினுமாய்ந்து விட்டோ, ரில்லினுமன்பரிடத்தினு மீசனிருப்பதல்லாற், கல்லினுஞ் செம்பினுமோவிருப்பானெங்கள்கண்ணுதலே"

(இதன் பொருள்) எங்கள் கண்ணுதல்-எமது பரமேசுவரர் சொல்லினும்(எவராலும் புகழப்படுஞ் சிவத்) துதியிலும்? சொல்லின் முடிவிலும்=வாக்கினதீதத்திலும், வேதச் சுருதியினும்-ஆரணங்களிலே பிரதிபாதிக்கப்படுகிற (சப்தகோடிமகா) மந்திரங்களிலும். அல்லினும்=இரவிலும், ஆசற்ற ஆகாயந்தன்னிலும், = இலக்கற்ற பரவெளியிலும், ஆய்ந்து விட்டோரில்லினும்=(சிதசித்துக்களினுண்மை) உணர்ந்து முற்றத்துறந்த முனிவருளத்திலும், அன்பரிடத்தினும்=(தமது உடல், பொருள், ஆவிகள் மூன்றனையும் ஆசிரியன் வழியிறைவனுக்கு ஒப்புக்கொடுத்து அனைவரையும் பேணிக்கொண்டு திருவருள் வழிப்பட்டு நிற்கும்) மகேசரத் திருமேனிகளிடத்திலும்? இருப்பதல்லால்=விளக்கமுறுவதல்லாமல், கல்லினுஞ் செம்பினுமோ!=சிலை தாமிரங்களிலேயுமோ!, இருப்பான்=எழுந்தருளியிருப்பர் (என்றவாறு)

இதுகொண்டு இறைவன் ஆன்மகோடிகட்கருள்செய்யும் பொருட்டு மேலே சொல்லிய தானங்களில் விளக்கமுற்றிருப்பதுமல்லாமல் அகௌரஸ்தானங்களாய பிரதிமாரூபங்களிலேயுமா! எழுந்தருளியிருப்பனென்று வியந்து கூறியதாமென்பர் பெரியோர். ஈண்டுப்பொருள்கோடலே இறைவன் பெருங்கருணையை வலியுறுத்திற்றெனலாம்.

இவ்வுண்மையை அறியாதே, அதிசயக்குறிப்புப் பொருடந்து நிற்கும் ஓகாரத்திற்கு எதிர்மறைப்பொருள் கொண்டு இறைவன் கல்லினுஞ் செம்பினுமிருக்கமாட்டானென்று. தான்தோன்றிகள் கூறுகின்றனர். இறைவனில்லா விடத்தையுங் கண்டு பிடித்துக்கொண்ட அவர் கூற்றிற்குச் செவிகொடுப்போரும் அவரைப்போலவே இறைவனுக்கு அபரிபூரணத்துவங் கற்பிப்போராய் விடுகின்றனர். அது நம்மவர்க்கு உடன்பாடாதலில்லை ஆதலின் இறைவனுக்குச் சர்வ வியாபகத்துவ முண்மையைச் சம்மதித்திருக்கிற நம்மவர்க்கே இதோபதேசஞ் செய்யுஞ் சிவாநுபூதிப்பெருஞ் செல்வராகிய பட்டினத்து அடிகள் அங்ஙனம் கூறினாரென்று கொள்ளற்க. அந்தவுண்மைக்கு,

"நல்லாயெனக்கு மனுவொன்று தந்தருள் ஞானமில்லாப், பொல்லா வெனைக் கொன்று போடப்பொழுதியல் பூசைகொளுஞ், சொல்லார் நற்கோயினியமம் பலவகைத் தோத்திரமு மெல்லா முடிந்தபின் கோலுவகண்டாய் கச்சியேகம்பனே"

"தொக்கிட்டரன்மனைபுக் குட்டிநுடியதுட்டர் வந்து, திக்குற்றமன்னரைக் கேட்பது போற் சிவசிந்தை செய்து, மிக்குக்குருலிங்க சங்கமம் நிந்தித்து விடிச்சிக்கு. மெத்தப் பெருத்தவர்க்கென் சொல்லுவேன் கச்சியேகம்பனே"

என்பனவாதிய அவரது திருவாக்குகளே போதிய சான்றாயிருத்தலறிக. அப்பாலும்:

"நட்டகல்லைத் தெய்வமென்று நாலுபுட்பஞ்சாத்தியே, சுட்டிவந்து முணுமுணென்று சொல்லுமந்திர மேதுவடா, நட்டகல்லும் பேசுமோ நாதனுள்ளிருக்கையில், சுட்ட சட்டி சட்டுவங் கறிச்சுவையறியுமோ"

என்றதோர் கவியும், ஆசானநுக்கிரகம் பெறாததான் தோன்றிகட்குப் பாடமுண்டு. இதன்கண்ணுமவர் மயங்கிக்கிடக்கின்றன ரென்பது வருமாறு:

(இதன்பொருள்) (அடா! = ஆலயவழிபாட்டினுண்மையை அறியாது *மயங்குகின்ற) பயலே, சுட்டசட்டி = (பதார்த்தங்களை வேகச் செய்தற்கருவியாயிருந்து) வேகவைத்த சட்டியும், சட்டுவம் = கிண்டிப்பக்குவப்படுத்தற் கருவியாயிருந்த) அகப்பையும், கறி = (அறுசுவையொடுகூடிய) கறியினது, சுவை = மதுரத்தை? அறியுமோ? அறியமாட்டாது. (ஆதலின், எவர்பொருட்டுக் கறியாக்கப்பட்டதோ அவரே அதாவது கறியை உண்ணுகிறவரே கறியினது சுவையையறிவர் என்பது தாற்பரியம். அதுபோலவே, எவர்பொருட்டு ஈசுவரத்தியான மாத்திரைக்காகப் பிரதிமாரூபம் பிரதிஷ்—இருதயத்திலே. நாதன் = ஈசுவரன் இருக்கையில் = இருக்கிறதினாலே, நட்டகல்லும் = பிரதிஷ்டிக்கப்பட்ட சிலாரூபமும், பேசுமோ? பேசமாட்டாது. (ஆதலின், ஆலயசேவைசெய்யும் பேரன்பினரே ஈசுவரனுடைய மகிமாதிசயங்களை யறிந்துபேசுவ ரென்பது தாற்பரியம்: பின்னை வழிபாடுதானென்னை? எனில் ஆலயங்களிலே. நட்டகல்லை = பிரதிஷ்டிக்கப்பட்ட சிலாரூபத்தை தெய்வமென்று = கடவுளெனச்சொல்லி, நாலுபுட்பஞ்சாத்தி = தொங்குகின்ற பூமாலையணிவித்து, சுட்டிவந்து = குறிக்கொண்டுவந்து, முணுமுணென்று = முணுமுணுப்பாக. சொல்லு மந்திரம் = உச்சரிக்கு மந்திரம், ஏதுவடா = (ஈசுவரத்தியானம் நிலைபெறுதற்கோ ருபகரணமென்கிற) துணைக்காரணமட்டே (என்றவாறு) ஏ-அசை. ஓகாரங்கள்-எதிர்மறை.

இதனுண்மையை நோக்குங்கால், கறிசமைத்தற்கருவியாயுள்ள சட்டி சட்டுவங்கள் கறியினது உருசியை அறியமாட்டாதவாறுபோல, ஈசுவரத்தியான நிலைபெற்றிற்கோர் கருவியாகவுள்ள சிலைதாமிராதிகள் ஈசுவரனுடைய மகிமாதிசயங்களை யறிந்து பேசமாட்டாது என்றும்; சமைக்கப்பட்ட கறியை சிகுவேந்திரியத்தின் வழியாக உட்கொண்டவரே அதன் சுவையையறிந்து பேசுதல்போல பிரதிமாரூபத்திற் காணப்படும் மான்மழு, அபயவரதம், சதுர்புஜம், காளகண்டம், திரிநேத்திரம், சடாதாரம், கங்காதரம், சந்திரசேகரம், அரவாபரணம், யக்ஞோபவீதபஸ் மருத்திராட்ச தாரணங்களோடு கூடியவராய், ஸ்ரீ பார்ப்பதி சமேதராய், அருட்டிருமேனி தரித்துக் கொண்ட சாக்ஷாத் பரமேசுவரரை நேத்தி

அவரது மகிமாதிசயங்களையறிந்து பேசுவர் என்றும், அறுசுவையொடுகூடிய கறிசமைக்கும் அடுக்களைத் தொழில்போலவே, ஈசுவரக்கிரகணத்தின் பொருட்டுச் செய்யப்படுவதுதான் ஆலயவழிபாடா மென்றும் புலப்படுதல் கண்டாம்.

ஆகவே சட்டியும் சட்டுவமுமில்லாதபோது கறியென்றசப்தமே பிறவாது. கறியாகாதபோது சுவையுண்டாதலு மில்லை சுவை யுண்டாக்கி யனுபவியாதவனைப் பொறுத்தே.

"மதுரை பாராதவன் கழுதை
கழுதைக்குத் தெரியுமோ கருப்பு ருசி"

என்பனவாதிய முதுமொழிகள் கேட்கப்படுகின்றன. அதுபோலவே-பிரதிமாரூபமில்லாதபோது தெய்வக்காட்சியே யுண்மையாதலில்லை. அப்படியானால் அறிதல், தியானித்தல், சமாதித்தல், சாட்சாத்கரித்தல்களும், பொய்மையேயாய்ப் போகும். ஆதலால் பிரதிமாரூபமும், வழிபாடும். ஈசுவரக்கிரகணத்திற்கோர் உபகரணமென்கிற துணைக்காரணமட்டே என்ற வுண்மைபற்றி வேண்டற்பாலதேயா மென்பார் பெரியோர்.

ஆனால்-கறிசமைத்தற் கருவியாயிருந்த சட்டியிற் பதார்த்தங்களுண்மையால், ஈசுவரக்கிரகணத்திற்கோர் கருவியாயுள்ள சிலைதாமிராதிகளி லுள்ளமையாது? எனின்:— ஈசுவரக்காட்சி வடிவமேயாமென்க.

இது [illegible] ஆலயவழிபாட்டைப் பரிகசித்து நிற்குமோர் [illegible]ிதரனை வாதத்தில் மடக்கி அவனுக்கு [illegible]றிவுச் சுடர்கொளுத்துமாறு யங்களோடு கூடிய ஒரு மகானுடைய அருள்வாக்கென்று கேட்கப்படுகிறது சிவ இதனை சிவவாக்கியர் திருவாக்கென்றுங் கூறுகின்றனர். அவரது திருவாக்குகளாகக் (ா) பாடல்கள் மாத்திரங் காணப்படுகின்றன. அவற்றுளிக்கவி காணப்படாமையால் மூந்திய கேள்விதானே நம்பத்தக்கதாம். அதுநிற்க,

ஈண்டறிவுறுத்தப்பட்டபடி ஆன்றோர் திருவாக்குகளொன்றாயினும், ஆலய வழிபாட்டை மறுக்கவில்லையென்பது அறிஞரனைவருக்கும் ஒப்ப முடிந்த துணிபாம். அந்தவுண்மை:—

"ஆலயந்தொழுவது சாலவும் நன்று"

'குருவிலிங்க சங்கமங்கள் கூத்தனுருவென்றே. மருவிடுவே நல்லமருந்து"

'குருவிலிங்க சங்கமமாக் கொண்டதிருமேனி. கருவொன்றுமேனி கம்பார்காட்டா-அருளென்று, கண்டவர்க்கேயானந்தங்கண்டு கொள்ளலா மலதுக்கோர், கொண்டவர்க்கிங்கென்ன கிடைக்கும்."

'மூர்த்திதலந் தீர்த்தம் முறையாற் தொடங்கினர், வார்த்தை சொலச்சற்குருவும் வாய்க்கும் பராபரமே"

"வன்றொண்டர் சம்பந்தர் வாகீசர் மற்றுமுனோர், பொன்றரியஞானம் புகுந் திருக்கச்-சென்று, பதிதோறும் பாடிப்பணிந்தவதென்மாட, மதிதோயருட் டுறையாய் வந்து"

"பெரியவிம்மானிட யாக்கை பெற்றவர், சரியையுங் கிரியையுந்தான் செய்கின்றிலர், சரியையுங் கிரியையுந்தான் செய்யாவிடில்,

என்பனவாதிய பெரியாயரருண் மொழிகளால் நன்கு போதரல்காண்க இனி:— .

6-வது வினு:— சுருதிகளிலே விக்கிரகாராதனம் மூடருக்கு உரியதென்று சொல்வானேன்?

விடை—அது விரிந்த ஞானமுணர்த்துவான் றுணிந்த ஆசிரியன் அதிகாரிகளின் பக்குவம் நோக்கி சோபானக் கிரமத்திலுணர்த்துமா றுணர்த்துதனுதலிற்று, அது கொண்டு விக்கிரகாராதனத்தை இழித்து கூறுவதாகக் காண்பதறியாமையே யாம், அந்தவுண்மை:—

ஈசுர கீதை.

"கருத்திலாமூடர் காட்டமாதிகளிற் காண்பர்மற்றவர்களாகாயத், தருக்களிற்புனலிற் காண்பராகுதியி லருச்சனை செய்யுமந்தணரவ், வெரிக்கணே காண்பரெகுமாய் நின்ற வெனதிலிங்கத்தினை நேரே. யொருக்கிய பரமயோகியென்றுமொழிவறக்காண்பர்த முளத்தே"

என்ற சுருதிபோதத்தால் விளங்கும்.

இக்கவியிற் பரமாசிரியராகிய பரமேசுவரரின் திருவாக்குகளே யடங்கியிருக்கின்றமையால் இது-ஆசிரியவசன (வேத)மேயாயிற்று.

(இதன் பொருள்) எங்குமாய் நின்ற எனது லிங்கத்தினை =(மெய்ஞ்ஞானிகளுடைய காட்சியில்) எவ்விடம் (எப்பொருள்) களிலும் உண்மையாகி நிற்கிற எமது குறி (அடையாளத்தி)னை, நேரே யொருக்கிய பரமயோகி யென்று மொழிவதக் காண்பர் தம்முளத்தே=கிரமமாக (விஷயவாசனைகளைக் கிரகித்தலிலேயே பொழுதோட்டாதபடி) இந்திரியங்களை நிக்கிரகஞ் செய்துகொண்ட மேலான யோகீசுவர்கள் (இடைவிடாது தியானித்து நிற்றலால்) தமதுள்ளத்தின் கண்ணே தானேயாண்டும் பிரிவின்றிக் கண்டு கொள்வார்கள். கருத்திலாமூடர் காட்டமாதிகளில் காண்டர் = அகத்துட் கோடலெனப்படும் எண்ணம் அல்லது சிந்தனை செய்யாதஜனங்கள் தாருவாதிய விம்பங்களிலே தெரிசித்துக்கொள்வார்கள். மற்றவர்களாகாயத்து அருக்களிற்புனலிற்காண்பர் = மற்ற அசை அவர்கள் = அவ்வாலய வழிபாடுடையவர்கள். (அவ்வழிபாட்டுடன் நித்திய கர்மாநுஷ்டானங்களாகிய காயத்திரி ஜெபமுதலியவைக் கொண்டு நிற்கின் அவர்களாற் பிரார்த்திக்கப்படும்) சேட்பிரதேசத்திலுள்ள சூரிய பிம்பத்திலும். வாருணகும்பத்திலும் கண்டு கொள்வார்கள். ஆகுதியிலருச்சனை செய்யுமந்தணரால் வெரிக்கணே காண்பர் =(அவ்விரண்டுவழிபாடுகளுடன்) அக்கினியில்வழிபாடியற்றும் அறவோர்கள் அந்த அக்கினியிற்றானுகண்டு கொள்வார்கள், (என்றவாறு) இதனுலே, இறைவனை, எவரெவரெவ்வெவ்விடங்களில் வழிபடினும் அவரவருக்கு இறைவன் அங்கங்கே நின்றநுக் கிரகிப்பன். எனப்போதரல் கண்டாம் ஆகவே,

(a) மெய்ஞ்ஞானிகள்— எவ்விடம் (எப்பொருள்)களிலும், நீக்கமி)லாத பரிபூரணனுகவும்,

(b) யோகிகள்— கல்வி[illegible]கள்விகள[illegible] லுண்மை புணர்ச்சிகை வந்து பு[illegible]ரத்தேயும் வழிபடுதலுடன் அகத்தேயும் இடை[illegible]விடாது [illegible]யும்மெய் தியானித்துக்கொண்டிருத்தலால்

யன்பரது இருதயகமலத்திலே அவர் நினைத்த ஸ்வரூபனுகவும்,

(c) கருத்திலா மூடர்கள்— அநிச்சயமாகிய விடயபதார்த்தங்களைக் கிரகித்தலன்றி ஈசுவாக்கிரகணத்தில் இணங்காத மனத்தோடுகூடிப் புறவழிபாட்டளவில் நிற்கும் பேதையர், தம்மால் வழிபடப்படும் பிரதிமாரூபங்களிலேயும், சூரியவிம்பம் வாருண கும்பங்களிலேயும், யாகாக்கினியிலேயும், அவரவர் எணப்பட்ட அந்தந்த ஸ்வரூபனுகவும், கண்டுகொள்வார்களென்பது வலியுறுத்தப்பட்டது. அந்தவுண்மை,

"உறைவாய் நன்மனத்தன்ப ருடல்தோறுமுயிராகி, நிறைவா யெவ்வுலகினைத்தும் நீக்கமிலா துணர்ந்தோர்க்கு, மறைவாயுய்த்துணர்வார்க்கு மறைபயிலுங் கருவையில் வாழ், இறைவாநின் றிருவிளையாட்டியான் வழுத்தவடங்காதே."

என்றறிவுறுத் தருளிய அதிவீரராம பாண்டிய மகாராஜாவின் திருவாக்காலும் போதரல் காண்க. இதுதானே சுருதியாம். சுருதி இங்ஙனமாகவும், யுக்தியை நோக்குங்கால்,

யுக்தி—பொதுவாக ஜீவகோடிகளுக்குக் கேவலம், சகலம், சுத்தம், அதீதம், என்று நான்கு நிலைகளுண்மையாக அறிஞரனைவராலுஞ் சம்மதிக்கப் பட்டிருக்கின்றன. அவற்றுள் இறைவனுல் தேகபோகங் களளிக்கப் படுதற்கு முன்னரேயுள்ள ஆணவக்கிடையே கேவலாவஸ்தையாம். அதனைப்பற்றி பேசுவது ஆவசியகமில்லை யாதலின் சகலர், சுத்தர், அதீதர், ஆகிய மூவகுப்பினரே ஈண்டெடுத்துக் கொள்ளப் பட்டனர். அம்முத்திறத்தாருள்ளும்,

ஞனை, யங்கந்திரன் கருவியாணவமரம் = பொங்குமிருள், மைசெய்த மாமாயை மாயைவினை மற்றனைத்தும், பொய் பொய் பொய் பொய்பொய்பொய்பொய்."

என்றபடி சிவத்தை யொழிய வேறொன்றனையுங்காணாத அதீத நிலையினரைப் பற்றிப் பேசுதற்காவது, பேச்சளவிலறிதற்காவது, எவருமருகரலர். ஆதலின் இறைவனிக்கவியில் அவ்வதீதரைச் சூசிப்பித்துத் தோன்றா நிலையில் வைத்தனர். இவ்விருதிறத்தரும்போக நின்றவரோ சகலர், சுத்தர், என இருதிறத்தரே யாவார். இவ்விருதிறத்தருள் சகலருக்கு விரிந்த ஞானமுணர்த்துவா னெழுந்ததே இக்கவியாம். இதில் சகலரைக் கருத்திலா மூடரென்றதினுல் சுத்தர் கருத்துடைய ரென்றாயிற்று. ஆயினும், அவர் மெய்ஞ்ஞானியல்லர் என்பதை வலியுறுத்துவானே பரமயோகிகளென்றாரிறைவர். யோகிகள் அகத்துட்பிரிவின்றி இறைவனைக் காணுகின்றனரன்றி இறைவனுடைய பரிபூரணநிலையைக் காணுகின்றாரிலர். ஆதலின் அவர் [யோகிகள்] அபரஞானிகளே யாயினர். அவ்வபரஞானந்தானுகைவரப் பெறாதவிடய ஞானிகளைக் கருத்திலா மூடரென்று தானே சொல்லவேண்டும். நமது அருமைப்பிள்ளைகளாகிய வித்தியார்த்திகள் உள்ள ஞானவும் பூமிசாஸ்திரமும் பூமிப்படமும் கைகளிலேயே வைத்திருக்கட்டும். அதுகொண்டு பரீட்சகரின் முன்புக்கு உத்தரஞ் சொல்லும் நேரத்திலும் எமக்குப் புத்தகமும், படமும் பார்த்துத்தான் படிக்கத் தெரியுமென்பரேல் அவர்பாற் கொடுத்த கற்பலகை வெறும்பலகை யாகத்தானே யிருக்கும். அவர்கதியென்னும். படமும் புத்தக

னது கண்டுங்கேட்டுமுள்ள வுண்மையைக் கருத்துட் கோடற்காகவன்றே! அங்ஙனஞ் செய்யாத மடமக்களை கருத்திலா மூடரென் பதிற்றடையென்னை? அதுபோலவே,

புரஹ ஆறும் அத்தியாயம் பிராமணம் 5-வாக்கியம் 6-ல் “பரமாத்மாவி [சிவபிரா] னது தரிசனமும். சிரவணமும்”, மனனமும், நிதித்தியாசனமும், செய்தல்வேண்டும்,, என்றபடி ஆலயசேவையும், சுருதிவிசாரமும், கைவந்த ஒருவன் அதன் மேற்படியாகிற மனனஞ்செய் (தியானித்)தலிற் பிரவேசிக்கவேண்டு மன்றோ? அங்ஙனம் பிரவேசியாதிருப்பவரை (விடய ஞானிகளை) சொரூப ஞானத்தைக் கருதாதிருப்பதுபற்றிக் கருத்திலா மூடரென்றார் போலும். அது சகல வர்க்கத்தாரை சுத்தா வஸ்தைக் கேட்டற்றுவான் கருதிய ஆசிரியர் கருணைத் திருவாக்கேயாம். அதுவே, பிள்ளைகளுக்குப் பெற்றோர் அறிவுறுத்தும் போது, எடா! மூடா! உன்னுடன் படித்தவன் உயர்ந்த வுத்தியோகத்திலிருந்து எல்லாராலும் நன்குமதிக்கப் படுகிறானே! நீ காளுங்கற்றுக்குட்டியேயாகிக்காலங் கடத்திக்கொண்டிருக்கிறாய். நானோ உன்னுடைய வாழ்க்கையிலும் பிரீதிகரமாயுனக்குஞ் சோறு போடுகிறேன் என்பதுபோலுமாம். இது கொண்டு ஆலயவழிபாட்டாலடையும் பெரும்பேற்றை மறந்துகிடக்கிற அறிவீனரை கருத்திலா மூடரென்றதா மென்னலாமேயன்றி ஆலயவழிபாடு மூடர்கொள்கையென்று பேசியதாகப் பெரியோர் கருதுகின்றிலர். ஆகவே மந்தமதியினர்க்கு அறிவெழுப்புவான் இறைவன் முன்னிலைப்படவேண்டிய தவசியமாதலினது யுக்திக்குப் பொருத்தமேயாயிற்று! ஆகவும் அநுபவத்தை நோக்குங்கால்

அநுபவம்—ஸ்மார்த்த சிகாமணிகளனைவரும் மற்றும் பிறரும், ஆலயவழிபாட்டை ஒரு சிறிதும் புறக்கணியாமல் பின்பற்றி நின்றுய்வதே குன்றின்மேலிட்ட தீபமாயிருக்கிறது. அத்துடன் காயத்திரியாதி செபாநுஷ்டானங்களாகிய நித்திய கருமங்களில் வழுவா தொழுகுவோர்களும், அவ்விரண்டு (ஆலயசேவை நித்தியகர்ம; வழிபாடுகளையும் புறக்கணியாதவர்களாயிருந்து கொண்டே அநேக வேள்விகள் செய்த அந்தணோத்தமர்களுமே ஸ்மார்த்த, மாத்துவ, வைணவ, சைவசதாசாரசத்சமயிகளென்று மதிக்கப்படுகிறார்கள். எந்த ஆலயத்திற் பார்த்தாலும் அவ்வந்தணோத்தமர் தொகையேஅதிகமாகக்காணப்படுகின்றன. ஆதலின் ஆலயவழிபாடு அறிஞரனைவரும் சம்மதித்த தென்று உலகாநுபவத்திலுங் கண்டதாம். இங்ஙனமாகவும்,

உத்தர கீதையில்.

“துவிஜர்களுக்குத் தெய்வம் அக்கினியில், முனிவர்களுக்குத் தெய்வம் இருதயத்தில், புத்திகுன்றியவர்களுக்குத் தெய்வம் விக்கிரகத்தில் சமதிருஷ்டியுடையவர்களுக்குத் தெய்வம் எங்கும். என்றும்,”

சாதாதபவசனத்தில்,

சாதாரண மனுஷர்களுக்குத்தெய்வம் நீரில் சற்றுத் தெரிந்தவர்களுக்குத் தெய்வம் ஆகாசத்தில் (சூரியனில்), மூடர்களுக்குத் தெய்வம் கல்லிலும் கட்டையிலும், யோகிகளுக்குத் தெய்வம் அவர்களுக்குள்ளே.” என்றும் கேட்கப்படுகிறது கொண்டு ஈண்டு,

“கருத்திலா மூடரென்றது—முழுமூடரையும், மற்றவர்களென்றது-முக்கால் மூடரையும், அந்தணரென்றது-அரைமூடரையும்,

யோகிகளென்றது—கால்மூடரையும், குறித்து நிற்பது போலவுங், அதுவே மூட முழுவதும் நீங்கப்பெற்றவர் தாம் ஞானிகளென்று சூசிப்பிக்கிறதெனவும், அதிசமீபத்தில் காஷ்டமாதிய தாபரக்குறிகளாகிய அகௌரவஸ்தானங்களில் இறைவனைக் காணுதலால் இறைவனெளிய பொருளேயாய்ப் போவனுதலின் அவரை (ஆலயவழிபாட்டினரை)க்காட்டிலும், தூரத்திலுள்ள விண்டலத்துப் பொருளிற் காணுவானுக் கிரகித்துக் கௌரவமுள்ள சங்கமக்குறிகளாகிய சூரியபிம்பத்திலும், வாருணகும்பத்திலும், இறைவனைக் காணுகிறவர் மேலானவரேயாவர். அவரைக்காட்டிலும், பஞ்சபூதங்களிலே நடுநாயகமாகிய தேயு பூதத்திற் காண்பவ ருயர்ந்தவரே யாவார். இவ்வாறு சோபானக்கிரமத்தின் வைத்துப்பார்க்கின் ஆலயவழிபாடுகீழ்ப்படியே யாமெனவும், பேசுவாரு மிருக்கின்றனர். இவர் கொள்கை எம துபந்நியாசத்திற்கண்ட விக்கிரகாராதனத்தை மறுத்திட்டில்லை யாயினும், தாரதம்மியப் பேதங்கள் கற்பிக்கின்றது. அது சரிதானுவென்பதை மாத்திரம் ஈண்டு விசாரிக்கவேண்டிய தவசியமாதலின் விசாரிப்பாம்.

பொதுவாக ஈசுரவழிபாடு எத்துணையுமுயர்ந்த சூரிய பிம்பத்திற் செய்வதனுல் ஒரு விலையேறப்பெற்ற மாணிக்கத்தாலாய சுயம்புலிங்கத்தி லருச்சிப்பதுபோலாகட்டுமே. அது கொண்டென்னை? ஓடும்பொன்னும் ஒப்பநோக்கும், சீவன்முத்தர் முன்னிலையில் எத்துணையுந் தாழ்ந்தபொருளாகிய காஷ்டாதிகளும், உயர்வாய சூரியனும், தாரதம்மியப் படுவதின்றே? அக்கினிக்கென்றோர் விசேஷமுண்டாவதின்றே? அத்தகைய சமதிருஷ்டிவாய்ந்த சிவாநுபூதிப் பெருஞ்செல்வருங் கைக்கொண்டுள்ளது, ஆலயவழிபாடன்றே! அவ்வாலய வழிபாடு கைக்கொண்ட பெரியாரும்,

‘அருக்கன்பாதம் வணங்குவரந்தியில்
அருக்கனு வானரனுருவல்லனே
இருக்கு நான்மறை யீசனையேதொழும்
கருத்தினை நினைவார்கன் மனவரே’

‘எரிபெருக்குவ ரவ்வெரியீசன
துருவருக்கமதாவ துணர்கிலார்
அரியயற்கரியானை யயர்த்துப்போய்
நரிவிருத்தமதாகுவர் நாடரே’

என்ற சுருதிவழி சூரிய நமஸ்காரம், யாகாக்கினிபூஜை முதலியவைகளை இகழ்க்திட்டிலர். அப்படியிருக்கவும் மேலான ஆலயவழிபாட்டைக் கீழானபடி யென்கிற இவரது காயத்திரியாவது:—

இருக்குவேதத்தில் விசுவாமித்திரரால் தோதுக்கப்பட்ட 3-வது மண்டிலத்தில்.

“அன்பினுற் செய்யப்படும் எம் வேள்வி முறைகளை நடைபெறுவிக்குந் தெய்வத்தன்மையுடைய சாவித்திரியின் விழையத்தக்க ஒழியை யாம் சிந்திக்கின்றோம்” என்பதாம். இதுவே சிறந்ததோர் காயத்திரி மந்திரமாம். இதுபோலவே,

பிராதக்கால பிராசனமந்திரத்தின் கருத்து.

“பிரேரகனுகிய பரமாத்மாவே! குரோதாபிஷ்டனுகிய எனது சர்வ இந்திரியங்களால் செய்யலான பாவங்களை நசிக்கச்

செய்வதற்காக (எனது) ஆத்மாவை சமர்ப்பணஞ்செய்து எனது பாவத்தை (உனது பகவத்தேஜசுமுன், ஹோமம் செய்கின்றேன்.”

மாத்தியான பிராசன மந்திரத்தின் கருத்து.

‘பகவத் கருணாரசம் எனது சரீரத்தைப் பவித்திரமாக்கி எனது பாவங்களைப் போக்கி என்னை ரட்சிப்பாராக.’

சாயங்கால பிராசன மந்திரத்தின் கருத்து.

‘அக்கினி நாமத்தால் பிரகாசிக்கும் பரமாத்மாவே! குரோதங்களால் நிறைந்த எனது சர்வ இந்திரியங்களாற் செய்த பாவங்களைப் பகவத் தேஜசின்முன் ஹோமமாகச்செய்கின்றேன்.” என்பன பிராசன மந்திரங்களாம். இவையனைத்தும் காரிய சித்தியின்பொருட்டும், பாவநிவாரணார்த்தமுமாகவே குறையிரத்தல்களாகத்தானே காணப்படுகின்றன. அப்படித்தானே இவரது யாக கர்மங்களும் புலப்படுதல் வருமாறு:—

நரமேதம், கோமேதம், அஸ்வமேதம், அஜமேதம், முதலிய யாகங்களிலே மாமிச பக்ஷணமும், சௌத்திராமணி யாகத்திலே மதுபானமும், இரகிக்கத்தக்கதென்றதோர் நியமனமிருத்தலால் அவைகொண்டும் சரீர பலமுண்டாதலொன்றனையன்றி ஆன்ம லாபமணுவளவென்கிலுமில்லை யென்பது பிரத்தியட்சமாம். அந்தவுண்மை, “கள்ளுமூனும் விரும்பினால் மகங்கள் செய்” என்ற சுருதியாற் போதரல் கண்டாம். அல்லா

சோதிஷ்டோம முதலியன சுவர்க்காதிபோகங்களைத் தருவனவா மென்றொரு கேள்வியுமுண்டு. நூறு அஸ்வமேத யாகங்கள் முற்றுப்பெற்றால் இந்திரப்பட்டத்திற் கருகமாகலா மென்றோர் கணக்கு மேற்பட்டிருக்கிறது. அதுகொண்டென்னை? இறப்பும் பிறப்புங்கண்டால் ஒழிவதுண்டோ? ஒருக்காலும் சென்ம சாபல்லியங் கிடைக்கப்போகிறதில்லை. அந்தவுண்மை,

‘துடுமியங்கிரி யோப்பக் குவித்தபுல்
சுடுதல்கொண்டு பிறவி சுடப்படாது
அடுபுலன்க ளறிவெனு மங்கியில்
சுடுதல்கொண்டு பிறவி சுடப்படும்.”

என்ற சுருதியாலும் போதரல்காண்க. அந்த வுண்மையால் தானே, ஸ்காந்தபுராணம் ஞான யோக கண்டம் நாடி சக்கிராத்தியாயத்தில்,

“மூடாத்மாக்கள் தீர்த்தத்திலும், ஸ்நானத்திலும், தபசிலும், யக்கியத்திலும், கட்டையிலும், கல்லிலும், சிவனிருப்பதாக நினைக்கிறார்கள். ஓ! முனியே! ஞானக்கண்ணில்லாமையினாலும்; மாயையின் பலத்தாலும், (அல்லவா) எங்கும் வசிக்கும் சாந்த மூர்த்தியாகிய சங்கரனைக் காண்கிறதில்லை. தனக்குள்ளேயிருக்குஞ் சிவனை விட்டு விட்டு சிவன் வெளியிலிருப்பதாகப் பூசிப்பவன் உள்ளங்கையிலுள்ள சோற்றை யெறிந்து விட்டு புறங்கையை நக்குவான் போல்வன். யோகிகள் சிவனைத்தமக்குள்ளே காண்பார்களேயன்றி பிரதிமைகளிற் காணார். அஞ்ஞானிகளுக்குப் பாவனார்த்தம் பிரதிமைகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன” என்ற போதமு மெழுந்ததாம்.

தண்ணீர் முதலியவைகளில், அக்கினியில், பிறவெவற்றில் பூசித்தாலும் அப்பூஜை இறைவன் வழிபாடேயானாலும், புறவழிபாட்டளவிலாகும் பட்சத்தில் அவ்வழிபாட்டாளர் அனைவரும் கருத்திலாமூடர் என்பது மறுக்க வொண்ணாத வுண்மையேயாதலறிக. அதுகொண்டு ஆலயவழிபாடு மூடர் கொள்கையென்னும் ‘பேதமையிற்பேதமையில்” என்பது வலியுறுத்தப் பட்டது. ஆதலின் அகத்தும் புறத்தும் பூசிக்கவேண்டுமென்றும், அதுவும் இறைவன் வழிபாடாயே யிருக்கவேண்டுமென்றும், அது தானே விக்கிரகாராதனமா மென்றும் கூறுவர் பெரியோர். அப்படியிருக்க,

சுவேதாசுவதரம் 4—18-ல்

‘எப்பொழுது (சங்காரகாலமாகிய) இருட்டோ அப்பொழுது பகலில்லை, இரவில்லை, சத்து வில்லை, அசத்து இல்லை. சிவன் தனித்துளன். அவன் அக்ஷரன். அவன் கதிரவனுக்குப் பரம்பொருள் என்ற சுருதிவழி கதிரவனுக்குப் பரம்பொருளாகிய பரமேசுவராராதனத்தைவிட்டுக் கதிரவனை நோக்கிச்செய்யும் பிரார்த்தனைகள் போலியாராதனையேயாம், அதுபோலவே,

சாமம் ஆக்நேயகண்டம்
6-ம் சாமத்தில்,

“வேள்விக்கு அரசனாகிய உருத்திரனை அணுவோமாக’

என்ற சுருதியை மறந்தும்,

“அவிசொரிந்தாயிரம் வேட்டலினொன்றன் உயிர்செகுத்துண்ணாமை நன்

‘அஹிம்ஸா பரமோ தர்ம:’ என்பனவாதிய போதத்தின் வழியேயுள்ள தர்மத்தைக் கைவிட்டும்,

‘தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க
தான்பிறி, தின்னுயிர் நீக்கும் வினை’

என்ற ஈசுவரகட்டளையை மீறியும்,

‘தன்னூன் பெருக்கற்குத் தான்பிறிதூ
னுண்பானை, யெங்ஙனம் ஆளும் அருள்’

என்றபடி தன் உடம்பு கொழுமைபெறுதல் வேண்டிப் பிறிதொன்றனுடம்பைச் சிதைத்து அதனூனை யுண்ணுவானுக் கிரகித்து நின்று திருவருளுக்குப் புறம்பாயொழிவோரின் கொலை வேள்விச் செயல்களும் போலியாராதனையே யாகுமென்பதும் வலியுறுத்தப்பட்டது. அப்படியானால் உத்தரகீதையும், சாதாதபவசனமும் கூறிற்றுள்ளது பொய்யாமோ? எனிற் கூறுதும்.

இங்கே ஒவ்வொரு சமயத்தாரும், தம் முட்டாமே முரணிக்கூறும், தேவர் தம்மை வணங்குகவென்று விதித்தல் செய்யாது அவர் தமக்கெல்லாம் ஒப்பமுடிந்த ஒரு முழுமுதற்கடவுளை வணங்குகவென விதித்தனர். அப்படி யிருக்கவும்,

பிறதேயங்களிலுள்ள சாதியாரெல்லாம் விரிந்தவுணர்ச்சிப்பேறின்றி அநாகரீகமுற்றுத் தோப்புகளில் மரங்களையும், வானிற்றோன்றும் ஞாயிறு முதலியவற்றையும், 2,200 வருடங்களுக்கு முன்னரே வரையும்வணங்கிக்கொண்டிருந்தனர். அவர் வணங்கும் வழிபாட்டைநோக்கி அவ்வாக்கியங்களுண்டாயிருக்கலாமென்று அறிஞர்

ஆங்கிலநாட்டுப் பிரதம பண்டிதரா
யிருந்த மாக்ஸ்மூலர் ஜர்மானிய தொழிற்
சாலை சிதர் துண்டுகள் முதற் புத்தகம்
(Chips from a German Work-shop
Vol. I) முகவுரையில் பாதகண்டத்துள்
தழுவப்படும் விக்கிரகாராதனையும் வேறே.
ரோம் முதலிய தேசங்களில் தழுவப்படும்
விக்கிரகாராதனையும் வேறே. முன்னைய
திற் பரமான்மாவின் சரீரங்களாக வணங்
கப்படுகின்றன. பின்னை யதில் விக்கிரகங்
களே அவ்வாறு வணங்கப்படுகின்றன, இ
ங்ஙனமாயின் இந்து மககளை நாம் குறை
கூறுதலென்னை? என்னும் பொருள் தரு
மாறு எழுதுவாராயினர். இவர்போன்ற
பலரு மிங்ஙனமெழுதியிருக்கின்றனர். அவ்
விதாருடைய ஆராய்ச்சியே போதிய சான்
ருயிருத்தலறிக. அங்ஙனமாயின் அவ்வாக்
கியங்கள் அபத்தமாதலில்லை. அவ்வொழு
ங்கைவிட்டு அவ்வாக்கியங்களை யோ ராதர
வாக்கொண்டு ஆலயவழிபாட்டைப் போலி
யாராதனைகளுக்குந் தாழ்ந்தபடியாமென்று
சொல்லி இடர்ப்படத் தலைநீட்டுவது மாத்
திரம் இங்கே அறியாமையா மென்றும்.
இனி ஆலயவழிபாடு மகான்மார் கொள்கை
யேயா மென்பதைச் சுருதிமுகத்தால் நிரு
பிப்பாம்.

இருக்குவேதத்தில்.

உருத்திரனே, உன்னுடைய அதிரமணீ
யமான இலிங்கத்தை சம்பத்தின்பொருட்டு
விஷ்ணுவாதி தேவர்கள் அபிஷேகஞ்செய்
கிருர்கள். அந்தப்பூஜா விசேஷத்தினால்
விஷ்ணுவானவர் வைகுண்டாதி பதிபம்
பெற்ருர்., என்றும்.

பாரசுபுராணத்தில்.

தாயும் சுத்தமாயுமிருக்கிற சிலாமயமான
சிவலிங்கத்தை அர்ச்சனைசெய்து பரமபதத்
தையடைந்தார்; என்றும்,

காசிகண்டம் கேசவவசனம்.

'ஹே! ஆதித்திய! சிவலிங்கார்ச்சனத்
தினாலே என்னதானுண்டாகாது, (அனைத்
துமுண்டாகும்) அஃதென்னை, புத்திரர்கள்,
களத்திரம், பூமிகள், சுவர்க்கம், மோக்ஷம்,
இவையனைத்து முண்டாகும். சம்சயமில்லை.
மூன்று லோகங்களினுடைய ஐசுவரிய சம்
பத்துக்களும் என்னாலேயே அடையப்பட்
டன். பரமேசுவரன்பொருட்டு எவராலே
ஒரு பொழுதிற் சிவலிங்கத்தைப் பூசித்தா
லும், (அவர்கள்) துக்கமநுபவிக்கக் கூடிய
சமுசாரத்தி லிருந்தாலும், அவர்களுக்குச்
சென்மபயமேது. (இல்லவேயில்லை) மூன்
று லோகங்களிலும் சிவலிங்காராதனத்
தைக்காட்டிலும் இதரமான புண்ணியமில்
லை. ஆகையினாலே நீ பரமேசுவரனுடைய
சிவலிங்கத்தை யருச்சிக்கக்கடவாய்., என்
றும்,

அதிவீரராமபாண்டிய மகாராஜா

'தொண்டுசெய்து வழிபட்டுச் சுருதிபுகழ்கற
ளாவீசன், புண்டரிகமலர்த்தாளைப் போற்
றி முதற்பேறுபெற்ருர், அண்டர்பிரான்
நான்முகத்தோன் ஆழியான் இவரென்ருல்,
மண்டனின் ஞாலத்தெளிய மானுடரோ
வழுத்துவார்'

என்றும், முழக்குவது போதாதோ
சுருதிகளீண்டு முழங்காநிற்கவும் விக்கிரகா
ராதனம் மூடர்கட்கு உரியதெனசசுருதி
ளிற் கூறுகிறதென்று பேசுவோர் கதி என்

லிய பெருந்தேவர்களையும் மூடர் கொள்
கையைப் பின் பற்றினவரென்று தானே
இவர் சொல்லத்துணிவர். அந்தோபாவம்.
இவர் இந்த அநந்தசயன க்ஷேத்திரத்திலே
அறிதுயில் (யோகநித்திரை) கொண்டிருந்
தும் சிவார்ச்சனையை மறவாதுள்ள உண்
மையை நாமனைவரு முணர்ந்துய்யுமாறு
ஸ்ரீபத்மநாபேசுவரர் திருக்கோயில் கொண்
டெழுந்தருளியிரா நின்ற வுண்மையை யா
திலுங் கேட்டிலர்போலும். இவரென்செய்
வர்.

கேனோபநிடத தாற்பரியம்.

ஆரணத்தன்னிய மில்லாச் சிவன்றன்பா
லும், அத்துவிதவேதனத்துமடைதற்குள்ள,
காரணமாஞ் சிவலிங்கார்ச்சனத்துஞ்சாலக்,
காய்வதுமே யன்றியுருத்திராக்க,

தாரணத்துந் திரிபுண்டர தாரணத்துஞ்,
சருவாங்கோத் தூளனத்துந் தாழ்மகாவீர்
சிரிணக்குஞ் சிவனென்னு [illegible] தங்
கள், செவியாலுங் கேளார் செய் வினையாற்
றீயோர்.

என்றபடி தீவினையாளராதலின் ஆலயவழி
பாட்டி னருமை பெருமைகள் அன்னோருக்
குப் புலப்படுத லின்ருயிற்று. அது கொ
ண்டு இவர்,

கூர்மபுராணத்தில்

'எவனொருவன் அஞ்ஞானத்தினாலே
ஈசுவராராதனை செய்யாது சாப்பிடுகிரு
னோஅவன் நரகங்களையடைகிருன். புழுவா
கப் பிறக்கிருன்'' என்றபடி நரகமாக்களே
யாயினர். இவர் எப்படிப்போனாலென்னை?
இங்கே சுருதிகளில் விக்கிரகாராதனம் மூ
டர்கொள்கையென்று கூறிற்றில்லை யென்

டியது. அ[illegible]ம். ஆத
லின்,

மோட்ச இச்சைமாத்திரமுடைய மகா
ன்மாருக்கு ஆலயவழிபாடொன்றேபோது
மானதாம். அதுதானே எளியார் வலியார்,
அனைவருக்கும் வழிபட்டுய்தற்கோர் சாதன
மாக இறைவனாற் கற்பிக்கப்பட்டிருக்கின்
றது. அவ்விசேஷக் கிரகணசாதனமாகிய
ஆலயவழிபாடொன்றனைத்தானே புத்திமா
ன்கள் கைக்கொண்டு நின்றீடேற்றமுறுகி
ன்றனர். பிரமவிஷ்ணுவாதி பெருந்தேவ
ர்களும், அவ்விக்கிரகாராதனத் தாற்ருனே
பெரும்பேறுபெற்றனரென்று வேதங்களு
முழங்குகின்றன. ஆனபடியால் ஆலயசே
வையும், சுருதிவிசாரமும், வலதுபுஜமும்,
இடதுபுஜமும்போல சிவப்பெருஞ் செல்
வத்தை ஆர்ச்சித்தற்கு ஓர் கருவியாகக்கொ
ள்ளவேண்டுமென்பார் பெரியோர். அந்த
வுண்மை,

சிவர[illegible]ம் ஆரும் அம்சத்தி
லு[illegible]ள ரிபுகீதை

அத்தியாயம் 3.

'பரிவுபனி[illegible]நிடத பாடத்தாலும்,
பரமசிவப[illegible]ர்க்கே தானத்தாலும்,
புரையு[illegible]வதிவ்யமா மிலிங்கத்தின்கண்,
பூரணமாம் பரமசிவ பூசையாலும்,
பரவுசிவதலங்களிலே வாசத்தாலும்,
பலவிதமாம்மற்றுமுறு நியமத்தாலும்,
பிரமமதாம் பரசிவத்தினருளுண்டாகிப்
பின்னமிலா அகண்டான்மபோதமுண்டாம்

என்ற போதத்தாற் போதரல்காண்க.
அப்படியானல் ஆலயவழிபாட்டிற்குப்போ
ல சுருதிவிசாரத்திற்கும் சொல்லியிருக்க

சிவவாக்கியதேவர்

"சாமநாலுவேதமுஞ் சகலசாத்திரங்களும், சேமநாலையோதினுஞ் சிவனைநீ ரறிந்திலீர் காமநோயை விட்டிடாக் கருத்தொடுக்க வல்லிரேல், ஊமமற்ற நும்மிடத்திருப்ப னெங்களீசனே" என்றும்,

அகத்தீசர்

'சாத்திரம் வேதம் சமயம் வண்ணாத்தி தண்ணீரில்விட்ட, மூத்திரம்போம் படி போமனமே யந்த மூத்திரமோர். பாத்திரப்கோள்ளப் பலனுண்டதிலோரு பாழுமில்லைக். கோத்திரமுங் குலமுங் குடிபோய் நின்னைக் கூடினர்க்கே' என்றும்

ஔவைப்பிராட்டியார்

நல்லன நூல் பலகப்பினுங் காண்பரிதே எல்லையில்லாத சிவம்" என்றும்,

இவ்வாறே பிறவுங் கேட்கப்படுகின்றன. இவற்றால், சுருதி விசாரத்தினாலே இறைவனை யறியப்போகிறதில்லை. சுருதியை வண்ணாத்தி தண்ணீரில் விட்ட மூத்திரத்திற்கு ஒப்பிடலாம். அந்த மூத்திரமாவது ஒரு பாத்திரத்திற் கொள்ளப்பலனுண்டு. அதில் (வேதத்தில்) ஒரு பாழுமில்லை. என்றதாய பழிப்புரைகள் கேட்கப்படுகின்றன. அவைகொண்டு வேதவிசாரம் அநாவசியகமென்பரேல். ஆலயவழிபாடும் அநாவசியக மென்னலாம். அங்ஙனம் புத்திமான்கள் கூறத்துணியார். ஆதலின் ஆலயசேவையும் சுருதிவிசாரமும். இரண்டு புஜங்களே யாக்கொள்ளவேண்டியதே யறிஞர் கடமையாம். புஜங்களில்லாதவ னுடைய ஆண்மை ஆண்மையன்று, அவனொன்று சாதிக்கமுடியாது. அப்படிப்போலவே சுருதியாகிய [illegible]

கொள்ளாத ஒருவனுக்கு சிவாநுபூதிப்பெருஞ் செல்வத்தைச் சம்பாதிக்கமுடியாதென்பதும் நிச்சயமேயாம். ஒருக்கால் சுருதிவிசாரமில்லாதே போனாலும், ஆலயவழிபாடொன்றனைக்கொண்டாவது முத்திபெறுதல் கூடும். அதற்கு மெய்யடியார் சரித்திரங்களே போதிய சாட்சியாயிருக்கின்றன. அந்த வுண்மை,

முண்டகோபநிடதம்
1-வது முண்டகம் 1-வது கண்டம்
5-வது வாக்கியம்.

'இருக்குவேதம், யசுர்வேதம், சாமவேதம், அதர்வணவேதம், சிக்ஷை, கல்பம், வியாகரணம், நிருக்தம், சந்தஸு, சோதிடம் இவை சிறந்த வித்தியைகளன்று. அழிவற்றபொருளை யெதனா லறிகிறார்களோ? அதுவே சிறந்த வித்தை' என்றபோதத்தால் நன்குவிளங்கும். இதனாலே அழிவற்ற பொருளை (பரமேசுவரனை) எளிதிலறிவுறுத்தற் கருவியாயிருக்கிற ஆலயவழிபாடே பரவித்தையென்று கேட்கப்படுகிறது. அந்த வுண்மையாற்றான்.

"வேதமொடாகமம் மெய்யா மிறைவனூல், ஓதும்பொதுவும் சிறப்புமென் றுன்னுக, நாதனுரையிவைநாடி லிரண்டந்தம், பேதமதென்பர் பெரியோர்க்கபேதமே' என்றதில்

ஆலயவழிபாட்டைப் பரிஷ்காரமாகப் பிரதிபாதிக்கிற ஆகமஞ் சிறப்பு நூலென்னப்பட்டது. அதனை,

சதுர்வேத தாற்பரிய சங்கிரகத்தில்

'வேதத்தைப் பிரமாணமாகச் சொல் [illegible] வைகள் காலே உன்னுடைய இவ்

வியாகமங்களையும் பிரமாண மென்றறிகிறார்கள் எதனால்? என்றால், உன்னுடைய தியாநத்தைக் கூறியது வேதம். அதனைச் செய்வதற்கு வேண்டப்படுவதாகிய சொருப லக்ஷணத்தை ஆகமம் கூறியிருத்தலால்' என்று ஸ்ரீ ஹரதத்தாசார்ய சுவாமிகளும் நன்கு வலியுறுத்தருளினர் ஆதலின்,

சிவரகசியம் ஆறும் அம்சத்திலுள்ள ரிபுகீதை
34-ம் அத்தியாயம்.

"பரமான அன்புடனே பரசிவத்தைப் பரங்காக ஆராதித் தருள்பெற்றோர்க்கே, உரமான அகம்பிரம நிச்சயந்தான், ஊனமற்ற வுள்ளத்தி லுதியா நிற்கும், திரமான அகம்பிரம நிச்சயத்தைத், தியக்கமறச் செறிந்தவரே முத்தராவார், வரமான பரமசிவப்பதந்தன்னை, வகுத்ததிலோ ரையமில்லைவாய்மைதானே"

என்றபடி அகம்பிரம நிச்சயங் கைவருதற்குப் பேரன்பினுடன் பரமேசுரவழிபாடு செய்யவேண்டுமென்றும், அங்ஙனஞ் செய்யாதவர்க்கு அவ் வத்வைதபேறு சித்திக்க மாட்டா தென்றும், பரமேசுவரருடைய பாதந்தொட்டுச் சத்தியம் பண்ணியிருக்கிறதையாயினும் மறக்கொணாதன்றோ?

கொங்கணர்கடைக்காண்டம் ஐநூறில்

"பூசிப்பார் பொற்றகட்டில் விக்கிரகத்தில், பூமேருகொண்டகையில் சாளக்கிராமம், 'பூசிப்பார் இதற்கெல்லாம் மனமுறைத்தால், புகட்டலாம்புருவமை

என்றபடி புறப்பூசையில் மனநிலை கைவந்தவர்க்கே அகப்பூசையையறிவுறுத்தலாமென்ற சித்தபுருஷரன் வாக்கியத்தையாவது நம்பவேண்டு மன்றோ? ஆதலின்,

அன்பார்ந்த நண்பர்காள்! அறிவீனர் ஏமாற்றி லகப்படாதபடி வேதோக்தமாகிய விக்கிரகாராதனத்தை நம்மவரே கைக்கொண்டு நின்றீடேற்ற முறுகின்றனர். ஏனையோர் கதியை

"பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார். நாக்கைக் கொண்டரன் நாமம் நவிற்றிலார், ஆக்கைக்கே யிரை தேடியலமந்து, காக்கைக்கே யிரையாகிக் கழிவரே."

என்ற சுருதிபோதத்தாலுணர்க. இம்மட்டில் விக்கிரகாராதனம் வேத சம்மதமுடையதேயா மென்பது வலியுறுத்தப்பட்டது: இனி,

7-வது வினா. அங்ஙனங்கேட்கப்படுஞ் சுருதிகளால் பிரதிமாரூப மன்றோ விக்கிரகமெனப்படுமென்பதாம்.

இதற்கு விடைகூறப்புகின், சுருதிகளில் விக்கிரகாராதனம் மூடாகட்குரியதென்று சொல்லவில்லையென்ற வொன்றுதானே போதுமான விடையாம். ஆயினும் பிரதிமாரூபம் விக்கிரகமாகமாட்டாது. அது தியானமாத்திரைக்காக வைக்கப்பட்ட முன்னிலை லட்சியமேயாம். அந்தவழியே இறைவனது திருவருட்காட்சிவடிவத்தைக் கிரகித்து (உட்கொண்டு) தியானித்தலே விக்கிரகமா மென்னுமோர் விடையுமிறுத்

அந்தவுண்மை (பிரதிமாரூபம் விக்கிரகாரமாட்டாதென்பது—அந்த) விக்கிரகமென்னும் பெயர்ப்பொருள் விசாரத்தானே நன்குபோதரும். அதுவருமாறு:—

விக்கிரகமென்பது—உடல், கருங்கல்லு, பங்கு, போர், விரிவு, விகுதி, சாயல் என்னும் பலபொருளுணர்த்தி நிற்குமோர் பெயர்ச்சொல்லேயாம். ஆகவே 'பெயர்ச்சொல்லனைத்துங் காரணச்சொல்லே' என்னுஞ்சூத்திரவிதியால் எவ்வக்காரணம்பற்றி இவ்வொருபதம் (விக்கிரகமென்பது) பல பொருள்கட்குப் பெயரா யமைந்திருக்கிறதென்பதை இங்கே விசாரிக்குமிடத்து,

1. உடல்: விகற்பவடிவாய சகலாவஸ்தையிலுள்ள ஒரு சரீரியானவனுக்கு; பலவேறு வித்தியாச வடிவபதார்த்தங்களைக் கிரகித்தற் கருவியாயிருத்தலால் அந்த சரீரம் விக்கிரகமென்னப்பட்டது.

2. கருங்கல்லு: விகிருதியெனப்பட்ட கல்விற்பிறந்த பொருளுக்கோராகரமாயிருத்தலால் அந்தக் கருங்கல்லும் விக்கிரகமெனப்பட்டது.

3. பங்கு: விகிர்தமெனப்பட்ட அங்கபங்க முண்மைபற்றிப் பங்கு (முடமு)ம் விக்கிரகமெனப்பட்டது.

4. போர்: உயுத்தகளத்திலே பராக்கிரமம் (மிகுபலம்) எனப்படுகிற விக்கிரமங்காட்டுதல்பற்றியோ, அல்லது விக்கிரமமெனப்படுகிற சிங்கம்போலும் வீரங்காட்டுதல்பற்றியோ போரும் விக்கிரகமெனப்பட்

5. விரிவு. அதிகமாகிய இடத்தையோ இடத்துநிகழ் பொருள்களையோ பற்றி நிற்றலால் விரிவும் (விசாலமும்) விக்கிரகமெனப்பட்டது.

6 விகுதி: ஜீவபோதத்தைத் தம்பாவிழுத்துக்கோடலால் பிரகிருதிமாயை யெனப்பட்ட விகுதி (விகிருதி)யும் விக்கிரகமெனப்பட்டது.

7. சாயல்: விகாரமெனப்பட்ட தற்சுபாவப்பிரதிவிம்பத்தைத் தம்மிற்கொண்டு நிற்றலால் சாயலும் விக்கிரகமெனப்பட்டது. இது, போட்டோக்களிலும், சித்திரிகன் கைத்தொழிலாலான படங்களிலும், பிரத்தியக்ஷமாம்.

என்று கேட்கப்படுதலால், விக்கிரகமென்ற பதம் கடவுட்டிருமேனியைச் சூசிப்பித்திட்டில்லை. அங்ஙனமாகவும், கருங்கல்லுவிக்கிரகமெனப்படுதலால் அக்கல்லலான சுரூபங்களும் விக்கிரகங்களெனப்படுகின்றன, என்பாருமுலகத்திலேயுண்டாயிருக்கலாம். அவர் கூற்று வாஸ்தவமாகவேண்டுமானல், கருங்கல்லானே மாத்திரஞ் சுரூபங்களுண்டா யிருக்கவேண்டும். அங்ஙனங் காணப்படவில்லை. பின்னை? தாரு, தாமிரம், வேறுசிலை, முதலியவைகளினுலே யும் சுரூபங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. சுவர்களில் வரைந்துள்ள படங்களையுங்கூடச் சேவிக்கிற வழக்கமுண்டு சிலாரூபங்களிலே கருங்கல்லின் மாத்திரமல்லாமே பால்வண்ணலிங்கம், ஸ்படிகலிங்கம், மரகதலிங்கம், முதலியவையும் உண்மையாகக் கண்டாம். ஆதலின் அவர் கூற்று அபத்தமேயாதலறிக.

படுகிற ஒவ்வொரு உருவங்களும் மனுடாது வடிவங்களைப்போலவே அமைக்கப்பட்டிருத்தலான் அவை விக்கிரகங்களெனப்பட்டன, என்பாருஞ் சிலருண்டாயிருக்கின்றனர். அவர் சொல்லியபடி யென்கிலுமிருக்குமோவென்று பார்த்தால், ஒவ்வோராலயங்களிலுமுள்ள மெய்யடியாரது திருமேனிகளே மனுடவடிவம் போன்றனவல்லாமல் கடவுட்டிருமேனி யங்ஙனங் காணப்பட்டில. பின்னை?

"அவ்வியத்தம் பீடலிங்கம் அங்கமனைத்தும்விளங்கும், அவ்விலிங்கமே வியத்தமாம்"

"விளங்கின் முகமே வியத்தாவ் வியத்தம், இலிங்கந் தனிலென்றே யெண்"

(a) என்ற சுருதிபோதத்தால் உறுப்புகளொன்றேனும் வெளிப்படாது பீடமும், சிவலிங்கமுமாயிருக்கும் அவ்வியத்தலிங்கமும்,—

(b) எல்லாவுறுப்புகளும் வெளிப்பட்டுள்ளதெனப்படும் சுகாசனமுதலியவைகளோடு கூடிய சந்திரசேகராதி இருபத்தைந்து விக்கிரக பேதங்களும் பிறவுமாகிய வியத்தலிங்கமும்,

(c) முகமும், தோள்களுமாகிய சில வுறுப்புகள் வெளிப்பட்டும், மற்றவை வெளிப்படாமலுமிருக்கும், வியத்தாவ்வியத்தலிங்கமும்,

ஆகவே காணப்படுகின்றன. இம்மூவகைத்திருமேனிகளும் மானிட வடிவத்தினின்றும் விலட்சணமுடையவேயாமென்பது குன்றின்மேலிட்ட தீபமாம். அன்றியும், விகற்பவடிவ பதார்த்தங்களைக் கிரகித்தற் கருவியாக்கொண்ட உயிருள்ள உடலிற்கே விக்கிரகமென்று சொல்லப்படுதலால் அவ்விதத்திற் காணப்படாத பிரதிமாரூபங்கட்கும் விக்கிரகமென்பது பொருந்தாவுரைகோளாம். ஆதலின், அவருரையும் அசத்தேயாதலுணர்க.

அப்பால்—சாயலென்பதற்கு விக்கிரகமென்ற பொருளுண்மை கேட்கப்படுதலால் பிரதிபிம்பங்களாயமைக்கப்பட்டிருக்கிற சுரூபங்களையே விக்கிரகமென்றுமென்பாருஞ் சிலரிருக்கலாம். அவர் கூற்று ஒருவாறு பொருந்துமெனினும், அவர்பால் யாருடைய பிரதிமாரூபங்கள் ஆலயங்களிற் காணப்படுகின்றன? என்றொரு கேள்வி கேட்கநேரிடும். அப்போது அவர் கடவுட்பிரதிமாரூபமும், அவரது மெய்யடியார்களின் பிரதிமாரூபங்களுமாமென்பரேல் அதனை ஒருவாறு சம்மதிக்கவுங்கூடும். அப்படிச்சொல்வது,

"மேலுலகத்திலும், பக்கமாகிய லோகத்திலும், இடையிலுள்ள லோகத்திலும், இவரை (கடவுளை) க்கிரகித்து முடியாது. இவருக்குப் பிரதிமையில்லை. இவர் பெரும் புகழினர்.' என்ற,

நாராயணோபநிஷத்து—முதலநுவாகம், ஒன்பதாவது வாக்கியோபதேசத்தின் உண்மையை யுணர்ந்துகொள்ளாமல், ஈசுவரனுக்குப் பிரதிமாரூபங்கற்பிப்பது அறியாமையேயாமென்று சில வுபநிஷத்து வாக்கியங்களைப் படிக்கத்தெரிந்த மாத்திரத்திலார்ப்பரிக்கிற கூட்டத்திற் சேர்ந்தவருக்கே நல்லறிவுச் சுடர்கொளுத்துதற்கொருபகார

மாயிருக்கும். அந்தமட்டி லிது பொருத்த
மாமென்பதன்றி விசேஷமாக்கோடற் கிட
னின்றென்பார் பெரியோர். ஏன்? எனில்:-

கடவுட் காட்சிவடிவத்தின் சாய
லமைப்புப்பற்றிமாத்திரம் கடவுட் பிரதிமா
ரூபம் விக்கிரகமெனப்படு மென்னுமிடத்து
ஆண்டுவழிபாடு (ஆராதனம்) ஐதீகன்மார்
கொள்கையேயாய் முடியும். ஆகலின் அஃ
து அத்துணைச்சிறப்பிற்றன்றாதலாலென்க.
பின்னை?—

கடோபநிஷத்து 2-வது வல்லி, 2-வது
வாக்கியம். "சிரேயமும், பிரேயமும், மனி
தனையடைகின்றன. விவேகி அவை யிரண்
டையும் நன்றாக ஆராய்ந்து வேறு வேறா
கப் பிரிக்கிறான். அவைகளுக்குள் சிரே
யத்தைக் கிரகிக்கிறவனுக்கு நன்மையுண்
டாகிறது. யார் பிரேயத்தைக் கிரகிக்கி
றானோ அவன் பரமார்த்தத்தைவிட்டுப் பிர
ஷ்டனாகிறான்." என்றபடி,

சிரேயம், பிரேயம் என்னுங் கிரகிக்கத்
தக்க விஷயங்கள் இரண்டனுண்மை கேட்
கப்படுகின்றன. அவ்விரண்டனுள் கடவுளை
யறிந்து கோடலே சிரேயமாம். அந்தப்பே
ரின்பானுபவத்தைவிட்டு சிற்றின்பமெனப்
படும் சம்சாரசுகத்தையறிந்து கோடலாகிற
பிரேயத்தால் துன்பமேயுண்டாமென்பது,
சிரேயத்தைக் கிரகிக்கிறவனுக்கு நன்மை
யுண்டாகிறது" என்னும் போதத்தாற்
சிப்பிக்கப்பட்டது. படவே, அறிஞரனை
வரும் பேரின்பத்திற் பற்றுடையராகி ஈசு
ரனை யறிந்து கோடலெனப்படும். சிரே
க்கிரகண சாதனத்தை விரும்பி நன்மை
பெறுகின்றார்கள். அது (சிரேயம்) கேள்வி
ளவிற்பற்றி நிற்றலாகிற சாமான்யக் கிர

கணமெனவும், கேள்வியுடன் பார்வையானு
ம்பற்றி நிற்கிற விசேஷக்கிரகணமெனவும்,
இரண்டு படித்தாக்காணப்படுகிறது. அவ்
விரண்டனுளொன்றாகிய விசேஷக் கிர
கணமே ஈசுவரக்காட்சி வடிவத்தையும், அ
வரது பஞ்சகிருத்திய விசேஷங்களையும்,
கேத்திரேந்திரியத்தின்வழிக்கிரகித்து அகத்
துட் கொண்டானந்தித்து நிற்றலாம். ஆத
லின், அந்த விசேஷக்கிரகணத்தைத் தான்
விக்கிரகமென்பார் பெரியோர்.

இங்ஙே பிரதிமாரூபத்தை விக்கிரக
மென்பது ஒருவாறு பொருந்துமாயினும்,
அது அத்துணைச் சிறப்பிற்றன்றென்பது
வலியுறுத்தப்பட்டது. படவே விசேஷக்
கிரகணமெனப்படும் ஆலயசேவையால் எம்
மவர் அகத்துட்கோடலே விக்கிரகாராதன
மென்பதும் ஸ்பஷ்டமாயிற்று. அந்த
வுண்மை,

"முகத்துக்கண்கொண்டு பார்க்கின்றமூடர்
காள்! அகத்துக்கண்கொண்டு பார்ப்ப
தேயானந்தம்"

என்ற சுருதிபோதத்தால் நன்கு விள
க்கும். இந்த சுருதியில் "முகத்துக்கண் ...
கொண்டு பார்க்கின்ற" தென்பது புறத்தேயுள்ள
யுள்ள ஒரு பதார்த்தத்தைக் கண்கொண்டாரு,
கண்டாலும் அப்பதார்த்தத்தி னுண்மையே
கருத்துட் பதிதலின்றிப் புறத்தேயாகக் ...
கழியவிடுதலைச் சூசிப்பித்ததாம். அது மூ
டர்கொள்கையேயாதலின் "மூடர்காள்!"
என்ற விளியுமேற்பட்டது. படலானே,
அறிஞராவார். கண்ணாற்கண்ட ஒன்றனைக்
கருத்துட்பதியக் கோடல்போல நீங்கள் ...
ஆலயத்திற் காணப்பட்ட ஈசுவரக்காட்சி ...
வடிவத்தை யகத்துட்கொண்டு யாண்டு

மொழிவரக்காண்பதால் ஆனந்தம்பெறுவீர்
களென்றதோர் போதமே இதனது தாற்
பரியமாம். அவ்வானந்த மெத்தன்மைத்
தென்பாரை நோக்கியே,

"மகட்கு நாயி தன்மணாளனோ டாடிய
சுகத்தைச் சொல்லென்றாற் சொல்லுமா
றெங்ஙனே"

என்றபடி ஒவ்வொருவரும் தத்த மநு
பவத்தி லறிந்துகொள்ளத்தக்கதென்பதும்
நன்கு வலியுறுத்தப்பட்டது. இவ்வுண்மை
யறியாமல் இந்த சுருதியும் விக்கிரகாரா
தனத்தை மறுத்து நிற்பதாக்காண்பதும்
மடமையேயாம். அது நிற்க,

"இவரைக் கிரகித்து முடியாது இவ
ரு (கடவுளு)க்குப் பிரதிமையில்லை" என்ற
உபநிஷத் வாக்கியத்தின் கதிதானென்னை?
எனின்;—

இவ்வாக்கியத்தில் கிரகிக்கவேண்டு
மானால், பிரதிமை வேண்டுமென்பது சொ
ல்லாமே போதரல் கண்டாம். கிரகித்த
லென்றால் அறிந்துகோடலென்பதே தாற்
பரியமாம். கடந்து நிற்கும் பொருளெனப்
படும் கடவுளோ அறியப்படும் பொருளா
யிருக்கவில்லையென்பதறிஞரனைவருஞ் சம்
மதித்துள்ள தாம் அங்ஙனமாகவே,

கேனோபநிஷத்து

1-வது கண்டம் 3, 4-வது வாக்கியங்களில்

"அவர் (கடவுள்) கண்ணிற்கும், வாக்
கிற்கும், மனத்திற்கும், விஷயமாகார். அவ
ரைப்பற்றி நமக்கு ஒன்றும் விசேஷமாகத்
தெரியமாட்டாது. அவரைப்பற்றி இவ்வித

மாக வுபதேசிக்கிறதென்றும் நமக்குத்தெரி
யவில்லை. அவர் தெரிந்த பொருளுக்கும்
தெரியாத பொருளுக்கும் வேறானவரா
வேயிருக்கிறார். பிரமவிஷயமாக நமக்கு
உபதேசித்த பூர்வாசார்யர்களால் இவ்வி
மாகத்தான் கேள்வியுற்றோம்" என்றதா
ய சுருதிபோதங்களைக்கொண்டுகடவுளுண்
மை சொல்லமுடியாத நிலையதென்று கண்
ட கௌதமரிஷிபால் ஸ்தாபித்துள்ள பு
தமதத்தில் தெய்வத்தைப்பற்றி ஒரு வார்
த்தைதானுஞ் சொல்லப்படவில்லை. அ
பால்,

புரஹதாரணியோபநிஷத்து

அத்தியாயம் 6, பிராமணம் 4, வாக்யம் 22-ல்

"அப்பரமாத்துமாவை(கடவுளை) இ
வன்று. இதுவன்று, என்று நிர்த்தேசித்த
வேண்டும். அவர் ஒரு இந்திரியத்தினுல்
கிரகிக்கப்படத்தக்கவரன்று. அவர் ஒ
இந்திரியத்தினுலும் கிரகிக்கப்படமாட்
ர்" என்றதாதிய சுருதி போதத்தால்,

கட்புலனுக்கு விஷயமாகும் ஒவ்வொ
ரு பொருளையும் நேரிற்றான், அல்லா
தாரிருஷ்டி—அணுதர்சினி முதலிய க
விகளினுதவியினாற்றான், அல்லது வே
பிரகாரத்தினாற்றான், உய்த்துணர்ந்து
வொரு பொருளினிடத்தும், சர்வஞான
முதலிய கடவுட்டன்மை காணப்படா
னலும், அவையனைத்திற்கும் தோற்ற
நிலை, யிறுதி, யுண்மையாதலினாலும், அ
வை முத்தொழிற் படுத்தவல்லவராய்,
நித்தியானந்தராய், அழிவற்றவராய், சுதந்
திரராய், அமலராய், சர்வக்ஞராய், உள்ளே

பொருளே கடவுளென்னப்படுமென்று சில அறிஞர்களாற் றீர்மானிக்கப்பட்டது. அத்தீர்மானமான வாக்கு (கடவுளுண்டென்ற சொல்லு) க்குப் பிரதிவிம்பமுண்டாயிட்டில்லையென்பது திண்ணமே. அது அறிஞரனைவருக்குமொப்பமுடிந்ததுணிபுதானே. அதுகொண்டிடன்றோ?

அங்ஙனம் எவ்வாற்றானும் அறியப்படாத ஒரு பொருளை (கடவுளை) க்கண்டுகொள்ளாதவ ருண்டுமென்றதனால் அவர் (கடவுள்) உள்பொருளாய்விட்டாரோ? கண்டுகொள்ளாத கடவுளை உண்டுமென்றுதநாஸ்திகருரைகொண்டு கடவுளுமில்பொருளாய்ப் போய்விட்டாரோ? அவர் (கடவுள்) இருப்புக்குமில்லாமைக்கும் இவ்விருதிறத்தரும் காரணரல்லர். 'கண்டார் கண்ட காட்சியும் நீ, காணார்காணுக் கள்வனும் நீ'' என்றபடி இறைவன் மெய்யடியாருக்கு வெளிப்படையாயும், இதரருக்கு மறைவேயாயும், நின்றருளுபோ ரருட் றிருவிளையாட்டே அவனது சர்வ சக்தித்துவத்தைப் பொறுத்த மகியாதிசயங்களாயிருக்கும். அப்படியிருக்க இவர் தத்தமறிவுக்கெட்டியவாறு பேசுகின்றவரா யிருக்கின்றனர். இருந்தாலும், அறிஞர் முன்பில் இவ்விருவர் (ஆஸ்திகப்போலிகள்-நாஸ்திகர்) கூற்றுக்களும் மணம் பெருதொழிதலுண்மையேயாம். அந்தவுண்மை இவ்விருதிறத்தாரையும், நியாயஸ்தலத்திற்குவரித்து மொழி வாங்கினால் வெளியாகப்போகும். எப்படி? எனில்:—

ஒரு கட்சியார் (நாஸ்திகர்) கடவுளில்லையென்று வாய்கூசாமற் சொல்லிவிடுவர். அவரைப்போல மற்றொரு பட்சத்தார் (ஆஸ்திகப்போலிகள்) கூசாமல் கடவுளுண்டுமென்னத்துணிகின்றிலர். ஒருவாறு துணிந்திட்டாரேல் கடவுளுண்டு; அவர் கண்ணிற்கும், வாக்கிற்கும், மனத்திற்கும். விஷயமாகாதவராயேயிருக்கிறார்; அவரைப்பற்றி நமக்கு ஒன்றும் விசேஷமாகத் தெரியமாட்டாதென்று ஏதாசிரியரே கூறியிருக்கின்றனர். ஆதலின்,

எம்மால் காணப்பட்ட பொருளுக்கு அப்பாலோர் கடவுளிருக்கிறதாக நிச்சயிக்கப்பட்டது என்றுதானே கூறுவர். இவ்விருகட்சிகளையுஞ் சீர்தூக்கும் நியாயாதிபதி திருமுன்பில்,

1. நாஸ்திகர் சொல்லுகிறது அவரது ஆராய்ச்சியைப்பொறுத்து மெய்மையேயாகும். ஆனாலும் அது ஆன்றோ ரா[illegible]திற்கு ஒத்திட்டில்லை. ஆதலின் அது மறுக்கப்பட்டது என்றும்,

2. ஆஸ்திகப்போலிகள் சொல்லுகிறது அவரது அறிவுகொண் டுகிக்கப்பட்டதொன்றேயல்லாமல் அவரதாசிரி[illegible] கண்டுகொள்ளாத ஒரு பொருளை உ[illegible]மென்பது பொய்ம்மையேயாகும். அது ஆன்றோர் சந்நிதான விசேஷத்தால் வந்ததோர் நம்பிக்கையேயாமாதலின் கனவுபோலுமல்லமன்றி நிலைபெறத்தக்க வாஸ்தவமானது, யல்லவென்றொதுக்கப்பட்டது என்றும்,

விதியெழுதி முடிக்கப்படுமன்றோ? அதனால், நாஸ்திகர் தாமே நல்லவராகின்றார். ஆதலின், இறைவனருளால் இவ்வாஸ்திகப் போலிகளைச் செயித்தற்காகத்தான் நாஸ்திகருண்டாயிருக்கின்றனரென்பதே வெள்ளிடைமலையாம். இதன்மே[illegible]

ருக்வேதம் 2. 3,—2½, 46 ல்

"ஈசுவரனை இந்திரனென்றும், மித்திரனென்றும், வருணனென்றும், அக்கினியென்றும் சொல்லுகிறார்கள். மேலும் அவர் அற்புதனும், சுந்தரனும், கம்பீரனுமிருக்கிறார். அவர் ஒருவர். ஆனால், புத்திமான்கள் அவரை அக்கினியென்றும், யமனென்றும், மாதரிசுவாவென்றும் அநேகவிதமாகச்சொல்லுகின்றார்கள்" என்றபடி ஈசுவரனொருவனைத் தானே, பல நாமங்களால் வழங்கிவந்தனர் பழையோர். அப்பண்டைக்காலத்து வழக்கினின்றும் வழீஇப்போய் அந்த நாமங்களின் ஒவ்வொன்றைப் பற்றிக்கொண்டு சிலர் ஒவ்வொரு தேவதையை ஈசுவரனாகப் பூசித்துவரத் தொடங்கிய ஒரு காலமுமிடையிலுண்டாயிற்று அக்கால (மாறுதலடைந்த சமய) த்தும், அவரதன் பின்வழி,

"யாதொரு தெய்வங் கொண்டீரத்தெய்வமாகி யாங்கே, மாதொரு பாகனார்தாம் வருவர் மற்றந் தெய்வங்கள், வேதனைப் படுமிறக்கும் பிறக்குமேல்வினையுஞ் செய்யும். மாதலா லிவையிலாதா னறிந்தருள் செய்வ னன்றே"

என்ற சுருதிபோதத்தால்இறைவனே அவ்வத்தேவதையே போலும் வெளிப்பட்டநுக்கிரகியா நிற்பர். அதுகொண்டொவ்வொரு தேவதையின்பேரால் ஒவ்வொரு மதங்களுண்டாகி அவர்பால்ஆஸ்திகம் நிலைபெறத்தொடங்கிற்று. இவ்வாஸ்திக மதங்களை நாஸ்திகத் தலையெடுப்பை யடக்கிற்றென்னலாம். இதன்பிறகு,

சுவேதாசுவதரம் 6-ம் அத்தியாயம் 14-ம் வாக்கியம்,

"பிரமத்தைச் சூரியபிம்பம் விளங்க செய்யமாட்டாது. சந்திர நட்சத்திரங்களாலுமாகாது. இந்த மின்னலும் விளங்க செய்யமாட்டாது. இந்தத்தீ எப்படி விளங்கச்செய்யும், தாமாக விளங்குகிற அவரைப் பற்றிக்கொண்டே யாவும் விளங்குகின்றன, இவை யாவும் அவரது விளக்கினாலேயே விளங்குகின்றன." என்றதாதிய போதங்களால்,

சூரியவிம்பமாதிய எந்தப் பதார்த்தங்களும் கடவுளன்று. அவை கடவுளினின்றும் வேறானவைகளாகி அவரது ஆதாரத்திலுள்ள பதார்த்தங்களென்றுந் தெரிந்துகொண்டனரறிஞர். அவ்வறிஞரது போதம் பிறங்கிப் பரமேசுவரர்தாமே,

முண்டகோபநிஷத்து

3-வது முண்டகம் 2-வது கண்டம் 3 வது வாக்கியம்.

"இப்பரமாத்துமா (கடவுள்) சொற்களினாலே பெறப்படமாட்டார், புத்தியினாலுமில்லை, பலகேள்விகளினாலுமில்லை. யார் அவரை விரும்புகிறார்களோ, அவர்களால் அவர் பெறப்படுகிறார். பரமாத்துமா (கடவுள்) அப்படிப்பட்டவருக்குத் தமது சொரூபத்தை விளங்கச்செய்கிறார்" என்ற சுருதிபோதத்தின்படி பண்டைக்காலத்து வழக்கிலும் இப்பொழுதும் வெளிப்பட்டநுக்கிரகிக்கிறார். அவ்வெளிப்பாடானது,

சாந்தோக்கிய உபநிஷத்து

8-வது பிரபாடகம் 3-வது கண்டம் 4-வது வாக்கியம்.

"அப்படிப்பட்ட இந்தப் பிரமத்தின் (கடவுளின்) பெயர் சத்தியம், அவர் நிரவயவர், நிஷ்கிரியர், சாந்தர், அவர் அநிக்கநீயர், நிர்லிப்தர், முத்திக்குச்சிறந்த சேதுவை (கரையை)ப்போன்றவர். மேலுங் கொளுத்தப்பட்ட கட்டையிலிருந்து வெளிப்படுகிற அக்கினியைப் போலும் ஸ்வப்பிரகாசர்." என்றபடி அக்கினி தன் அநுற்பூத நிலைமையில் யாதொரு தன்மையும் வெளிப்படாதிருந்தவுண்மையினின்றும், உற்பூத நிலைமையில் ஒளி, வெம்மை, ஸ்வரூபங்களையுடையதாய் வெளிப்பட்டுத் தனது கிரியைநடாத்தி நிற்றல்போலவேயாகும். அப்படியானாலும்,

புரஹதாரணி யோபநிஷத்து,

?-வது அத்தியாயம் ?-வது பிராமணம் 8-வது வாக்கியம்.

"பரமாத்துமாவை (கடவுளை) அன்பாக உபாசித்தல் வேண்டும். யார் பரமாத்துமாவை யன்பாக உபாசிக்கின்றாரோ அவருக்கு அன்பானது, (அன்பருக்கு அன்பராகிய கடவுளானவர்) ஒருபோதும் மறைவாவதில்லை," என்றபடி பேரன்பினர்பொருட்டு வெளிப்பட்ட அவரது அநுக்கிரகத் திருமேனி யாண்டும் அவ்வன்பகத்தினின்றும் மாறுதலில்லாத(அழிவற்ற)தாய் விளக்கமுறுவதாம் என்பார் பெரியோர். அத்தகையகாட்சி வடிவத்தைத் தெரிசித்த பெரியோர் தாமே, அவரது பின் சந்ததிகளாகிய நம்மனோருந் தெரிசித்துய்வான் கருதித் தமது பெருங் கருணையினாலே தாங் கண்ட சுவானதநுக்கிரகத் திருமேனியின் பிரதிரூபம் அமைத்து வைத்திருக்கப்பட்ட ஸ்தலமே ஆலயமாம். அவ்வாலய சேவை செய்வதே விக்கிரகமாம் என்றறிக.

இதனாலே கடவுளுக்கு—வாஸ்தவதேகமும், கற்பித (அலங்கார) தேகமுமுண்மையைச் சூசிப்பித்து நிற்றலால் வாஸ்தவதேகத்திற்குப் பிரதிமை யில்லையென்றும், கற்பித தேகத்திற்கே பிரதிமாரூபமுண்டாயிருக்கிறதென்றும், கற்பித தேகத்தின் வழித்தானே வாஸ்தவதேக முண்மையாயிற்றென்றும், காண்பதறிவுடைமையாம். அந்தவுண்மைக்கு "மேலும், கொளுத்தப்பட்ட கட்டையிலிருந்து வெளிப்படுகிற அக்கினியைப் போலும் ஸ்வப்பிரகாசர்" என்ற போதமே போதிய சான்றுதல் காண்க.

இவ்வருட் டிருமேனியாகிய காட்சி வடிவத்தை யிகழ்ந்து காணொணாத பரிபூரணத்தைத் தேடித்திரிபவர் ஒரு காலத்தும் பெறமாட்டாரென்பதும் நிச்சயமாம். அந்தவுண்மை,

"வித்தினைத்தேடி முளையைக் கைவிட்டவர், பித்தேறி மாள்வரேன் றுந்தீபற [illegible]
பிறப்பிறப்பறரேன் றுந்தீபற"

அல்லது

"வித்தினைத்தேடி முளையைக் கைவிட்டவர், பித்தேறினர்களென் றுந்தீபற, [illegible]
வதங் கேன்பேணே யுந்தீபற" என்ற [illegible]
போதத்தால் ஸ்பஷ்டமாயிற்று.

ஆகவே, வாஸ்தவதேகத்தை (சர்வவியாபகத்தை) அறிவுறுத்துவான் முன்னின்ற கற்பித (அலங்கார) த்திருமேனியை யறிந்து கோடற்குக் கருவியாயுள்ள மந்திரதேகம், தந்திரதேகம், யந்திரதேசம், எனமூன்றுதேகங்களுண்மையுங் கேட்கப்படுகின்றன. அவற்றுள் மந்திரதேகமென்பதுதான் ஆலயத்திற் காணப்படுஞ் சிவலிங்கமா

வாம். தந்திரதேக மென்பதுவோ வேதசிவாகமங்களாம். யந்திரதேக மென்பதுவே பஞ்சவிம்சதியாதிய கோட்டங்களில் மூலமந்திரம் பீஜாட்சரங்களை யடைக்கப்பட்டுள்ளதாம். இம்மூன்றனுள் வேதசிவாகமப் பற்றுண்மை சாமான்யக்கிரகணசாதனமெனவும், ஆலயசேவைப் பற்றுண்மை விசேஷக் கிரகணசாதனமெனவும், கேட்கப்படுதலால் யந்திரபூசையை மத்தியக்கிரகணசாதனமென்னலாம் போலும். ஆனால் பொதுவாக ஆலயத்திலே யந்திரஸ்தாபனமும், மந்திரத்தால் மூர்த்திபாவாசனமும், ஈசுரநாமோச்சாரண முதலிய சுருதி முழக்கமும், உண்மையாமென்பதையு மிங்கே ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். இதுநிற்க, [illegible]னி,

8-வது வினா—சுருதிவிசாரஞ் சாமான்யமென்றால் வேதாந்திகள் சம்மதிப்பார்களா? என்பதற்கு,

விடை—உண்மையான வேதாந்திகளெல்லோரும் அப்படித்தான் சொல்லுகின்றார்கள் என்பதேயாம். ஆகவே போலிவேதாந்திகள் தாம் ஆலயசேவை யநாவசியகமெனபாரென்பது சூசிப்பிக்கப்பட்டது. [illegible]னெனின்:—

[illegible]தாந்திகளென்றால்— வேதங்களின் சிரோபாகத்தையுணர்ந்தவர்களென்பதுதான் தாற்பரியம். சிரோபாக மென்பது ஆதி, மத்ய, அந்தங்(அடி, நடு, முடி) களின் மூன்றாவது பகுதியையே குறிக்கும். அப்படியானால்— பூர்வத்திலே தைத்திரியம், பௌடிகம், தல்வகாரம், அதர்வம், எனக் கிடந்த வேதங்களை வியாச மகாரிஷியால் (இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நான்காக வகுக்கப்பட்டபிற்பாடு அவ்வொவ்வொரு வேதமும்,

I. ஸம்ஹிதை (மந்திரம் அல்லது ஸ்தோத்திரம்) என்ற அடியும்,

II. ப்ராஹ்மணம் (சுகாசாரவிதிகளின் வியாக்கியானம்) என்ற நடுவும்,

III. உபநிஷத்து (இரகசியம் அல்லது ஞானம்) என்ற முடியும்,

ஆக மும்மூன்று பாகங்களையுடைத்தாயே யமைக்கிருக்கிறது ஆகலின். அவற்றுள் மூன்றாம் பகுதியாகிய உபநிஷத்துக்களையும் நன்கு உணர்ந்து கொண்டவர் தாம் வேதாந்திகளெனப்படுகின்றனர். படலானே,

அவ்வேத சிரசாகிய உபநிடதங்களிலே முந்திய 6-வது வினாவுக்கு விடைபிறக்குங் காலறிவுறுத்தபடி சிவலிங்கார்ச்சனமே இன்றியமையாத மோக்ஷசாதனமாமென்றகூறியிருத்தல் ஸ்பஷ்டமாம். அதுவுமன்றி,

நாராயணோபநிஷத்து.

பரசிவாராதனத்தை—அபிஷேகம், அர்ச்சனை, அலங்காரம், பிரதக்ஷிணம், நமஸ்காரம், வாத்தியம், இத்தியாதி யுபசாரங்களோடு நடத்து முறைமையை நன்கு வெளிப்படுத்துகிறது. இங்ஙனம் பல உபநிஷத்துக்களின் மூலமாகவும், ஆலயவழிபாட்டின் மான்மியம் புலப்படுதலுடன், அருணாசலம், சிதம்பரம், காசி முதலிய புண்ணிய ஸ்தலபுராண சூசகங்களும் வெளிப்படுகின்றன வென்பார் பெரியோர். அன்றியும்,

ஜாபாலோபநிஷத்து

"மகாருத்திரனுக்கு நிவேதனஞ்செய்யப்பட்ட பிரசாதத்தைப் புசிப்பாயாக. ருத்திரனுக்கு ஆராதனஞ் செய்யப்பட்ட நீர், பால் முதலியவற்றைக் குடிப்பாயாக. ருத்திரனுக்கு ஆராதனஞ்செய்யப்பட்ட சந்தனம், புஷ்பம். முதலியவற்றை முகர்ந்து அனுபவிப்பாயாக." என்று வலியுறுத்துகின்றது.

ஈண்டு உபநிஷத்துக்களெல்லாம் ஆலய வழிபாட்டினுண்மை அதனொழுங்கு. அதன் பிரயோஜனங்களையே வலியுறுத்துகின்றதல் இணைமேயாம். அத்துடன் இரண்டாம் பகுதியில் (வேதமத்யமாகியப்ராஹ்மணத்தில்)

ஸாமவேதம் சட்விம்சப்பிராமணம் பிரபாடகம் 5 கண்டம் 11-ல்

"உலகத்திற்குக் கேடுண்டாகுஞ் சந்தர்ப்பங்களிலே-தேவாலயங்கள் நடுங்குகிறதையும், பிரதிமாரூபமான தைவதங்கள் சிரிக்கிறதையும், அழுகிறதையும், பாடுகிறதையும், கூத்தாடுகிறதையும், வாய்களைத்திறக்கிறதையும், வேர்வையை விடுகிறதையும், கண்களைத் திறக்கிறதையும், மூடுகிறதையும், நடக்கிறதையும், பிறசில காரியங்களையும் புத்திமான்கள் காண்கிறார்கள்" என்று போதித்தலுங் கண்டாம்.

அங்ஙனமே ஆக்கமுண்டாகுஞ் சந்தர்ப்பங்களில் பலநன்னிமித்தங்களுங்காணப்படுகின்றன வென்பார் பெரியோர். அப்படியே,

முதலாம் பகுதியில் (ஸம்ஹிதையென்பதத்தினடியில்) விக்கிரகங்களை ஆவாகனஞ்செய்யும் விஷயமாய்க்கணக்கற்ற மந்திரங்களமைந்திருக்கின்றன வென்றும் விக்கிரகாராதனத்தை யாதரிக்கிற பலகுறிப்பான வாக்கியங்களுண்டாயிருக்கின்றன வென்றும், வேதமுடையார் கூறுப.

உண்மை யங்ஙன மிருக்கவும் ஒவ்வொரு வேதத்தினுமுள்ள ஆதிமத்தியாந்தங்களி லெல்லாம் விக்கிரகாராதனமே மோட்ச சாதனக்கருவியாமென்பது கிராட்சேபமாயிற்று. அந்தவேதாந்தமாவாக்கியந்தானே வேதாதிகலைகள் பரவித்தியைகளன்று. அழிவற்றபொருளை எதனாலறிகிறார்களோ அதுவே சிறந்த வித்தை' என்று

(முண்டோகோபநிஷத்து) போதிக்குமாறல், அழிவற்ற பொருளை எளிதே அறிதற்கருவியாயுள்ள ஆலயவழிபாடே சிறப்புடையதாமென்று வலியுறுத்துமாறல், சுருதிவிசாரம் சாமான்யமென்பதை உண்மையானவேதாந்திகள் என் சம்மதிக்கமாட்டார்கள்? உண்மையான வேதாந்திகளனைவரும் சம்மதிப்பார்கள் என்க. அப்படியானால்,

பிரமகீதை முண்டகோபநிடத தாற்பரியம் 3—4—ல்

"இருகு காமறிய வேண்டுவதிரண்டு விச்சையவ்விரண்டினி லொன்று, பரகமாமபரை பரையெனப்படுமதொன் றதிற்பழமறைநாலும், அங்கமாறுண்மை யமையிதிகாசமாதிகளபரையாம் மற்ற, தெங்குமாய் நின்ற தொன்மையாதொன்றுலெய்தலாமது விறையருளால்"

"காண வோருருவுமின்றியே தனக்கோர் கண் செவி மூக்கு வாயின்றிப், பாணி

பாதங்களின்றி நுண்ணியதாய்ப் பற்றிய பொருளெலாங்கடந்து, தானுவாயெல்லாந் தோன்றுதற்கிடமாந் தத்துவந் தன்னைத் தன்னாலே, யாணியா யறியும் அறிவது விச்சையாவது பிறிதெலாம்விச்சை" என்று வலியுறுத்துமாறென்னை? யெனிற் கூறுதும்;—

இங்கே "பற்றிய பொருளெலாங் கடந்து தானுவாயெல்லாந் தோன்றுதற் கிடமாந்தத்துவம்" என்றது 'லிங்கம்' என்பதே யாம் 'தன்னாலே யாணியாயறியும் அறிவு' என்றது 'ஆராதனத்தையேகுறிக்கும். ஆதலின், சிவலிங்காராதனமே பரவித்தை யென்பதுதான், இக்கவிகளின் தாற்பரியமாமென்பார் மேலோர். அந்த வுண்மை மேல் 'லிங்கம்' என்ற பதப்பொருளை விவரிக்குமிடத்து நன்கு வெளியாம். ஆயினும், சிவலிங்காராதனமே பரவித்தை யென்னுமுண்மையை விவரித்துக்காட்டிய கைவல்யோபநிடத தாற்பரியத்தைமாத்திரம் ஈண்டெடுத்துக் காட்டுகின்றேன்.

கைவல்யோபநிடத தாற்பரியம்

5, 6, 7, 8, 9-களில்

1. பரவித்தையின் சொரூபத்திற்கு சாதனமான யோகம். "தத்கஞானத்தைத் தான்பெறப்பொருட்டுந் தனியிடந்தனை யடைந்திதய, துட்கமேவாமற் சுகாசனந்திருந்து தோடலை கழுத்துடம்பிவைநே, ரொக்குமாறிருந்திப் பூதிகொண்டிந்த வுடம்பையுந் துறவைப்பண்ணி, மிக்கவாய் வருமிந்திரியங்களை யெல்லாம் பிடியமே லெறாமலக விலந்து"

நிஸ்களசொரூபம்.

2. "பத்தியாற் குரவன் பதம்பணிந்திதய பங்கயந்தனை நினைந்ததிலே, நித்தமாயோருவ ராவினைப்பரிதாய் நிமலமாயெங்கணும் நிறைந்து, சுத்தமாய்ச் சாதமா யனைத்துலகுந் தோற்றுதற்கியோநியாய்ச்சுபாவ, சித்தமாயழதா யருவமாயொன்றாய்ச் சிற்சதா னந்தமாய்ச் சிறுமாய்"

லீலாவிக்கிரகம்.

3. "உரியநால் வேதத்தோமேனும் பொருளாயுள்ளதாயுள்ள வெப்பொருளுந்துங், கரியதாய் நின்ற வொன்றினைக்காமக் கண்டமுங் கண்ணொருமூன்றும், பிரிவிலாமங்கை பாகமுமாகப் பேணுநற்பாவலைப் பெறுவான், அரியதா யருவினுல்வருமவிச்சையதனினு லதனையேயடையும்"

சிவசொரூபத்தின்றன்மை.

4. "தெரிவரியசிற்கனமாய்த் திகழ் சிவனே திசைமுகனும், அரியுடனவ்வசவமவன் அமராதிபதியுமவன், துரிசறவேயக்கரமாய்ப் பரமாகுஞ் சுராட்டுமவன் எரியுமழல் காலனவன் இந்துவொடு பிறனைவன்"

பரசிவசொருபத் தியானமே மோட்சசாதனமாம், பரவித்தை,

5. ஒழிந்ததொரு பொருளில்லையுள்ளதெலா மவனேமுன், கழிந்தபொருள், இனிப் வரக்கடவபொருள்தானு மவனுமொழிந்ததனைப் பரவிச்சை யவிச்சையெனு முற்றுமவன், இழிந்தபிறப்பறுதற்கோர் வழியில்லை யிவனேறிய"

எனப்படுதலால் இவ்வைந்து கவிகளி

உண்மைகளை யுள்ளவாறே யறிவுறுக்கக் கூடிய நல்லாசிரியனை யடைந்து விசாரித்துணர்வார்க்கு, எல்லாம் வல்ல இறைவனை அருள்வடிவக்காட்சியிற் றெரிசித்து அகத்துட்கொண்டுய்தலெனப்படும் ஆலயவழிபாட்டை (விக்கிரகாராதனத்தை) நோக்க சுருதிவிசாரம் சாமான்யமே யாமென்னும் நிச்சயம் நன்கு புலப்படும்.

இவ்வுண்மையைமறந்து உபநிஷத்துக்களே "பரவித்தை" என்பாரு முலகத்திலிருக்கலாம். அவர் கூற்று வேதத்தின் முதலிடை (ஸம்ஹிதை-ப்ராஹ்மணங்)களைக்காட்டிலும், கடையாகிய உபநிஷத்துக்களே விசேஷமாமென் றுபசரிப்பதாயிருக்குமென்னுமளவில் எமக்கும் அஃதுடன்பாடேயாம். அம்மட்டினன்றி ஆலயவழிபாட்டிற் சிறப்புடைத் தென்னவருவரேல் அடியையும், நடுவையும் விடுத்துச் சிரசைத் துண்டுபடுத்திக் கௌரவப்பட்டஞ் சூட்டுதலா லவரிழுக்குறுவதோ டமையாது,

"கற்றதனாலாய பயனென்கொல் வாலறிவன், நற்றாடொழாஅரெனின்" என்ற சுருதிபோதத்தோடு முரணுறுகின்ற அவர் கூற்றும் நிஷ்பிரயோஜனமே யாதலின் அவர் கொள்கைக்கு உலகம்என்ன சொல்லுமோ அஃதெம்பொறுப்பன்று இத்துமட்டில் விக்கிரகாராதனமே பரவித்தையென்னும் உண்மை வலியுறுத்தப்பட்டது. அதற்கு, வேதாந்த பாஷ்ய கர்த்தரும் ஜகத்குருவென்னப் பிரசித்தி பெற்றவருமாகிய ஸ்ரீமத் ஆதி சங்கராச்சார்ய சுவாமிகள் சந்திரமௌலீஸ்வரரை வைத்துப் பூஜித்துவந்ததும், பிரதிஷ்டா ஆலயங்கடோறும் போய்வழிபாடு செய்ததும்; அவர் போலவே அவர் பரம்பரையில் பிற்றவரை ஆசாரியப்பட்டம்வகித்துள்ள சுமார் 72-சங்கராச்சிரம சுவாமிகளும் விக்கிரகாராதனத்தை ஆசரித்துவருவது மோர் சான்றாயிருத்த லறிக.

இங்ஙனம், மேலோர்களெல்லாம் அங்கீகரித்துள்ள ஆலயவழிபாடு (விக்கிரகாராதனம்)அவாந்தர கற்பிதம்(இடைக்காலத்து நியமம்) என்றும், அது கீழ்மைவினையென்றும், பிதற்றித்திரிவாரும் தம்மைவேதாந்திகளென்று சொல்லி யுழிகின்றனர். அவர்களை போலி வேதாந்திகளென்னாமல் வேறென்னதான் சொல்லலாம். அவரது வெற்றுரையை இங்கே சங்கிரகித்தாவது சொல்லித்தீரவேண்டியது அவசியமாதலிற் சொல்லித்தீர்க்கின்றேன்.

சித்தூர் ஜில்லா அதாலத்துக் கோர்ட்டுத் தீர்ப்பு என்னும் புஸ்தகத்தில் 54-வது பக்கத்தில்

"மாதாசில்பி பிதாசாஸ்திரம் அநுரூபமான சம்யபாத்; பிண்டோத்பவஞ்சை வதயாபுத்ரீ விதங்கர்மாதா" என்ற சிற்பசாஸ்திர சுலோகப்படி தேவாலயம், பிரமாலயங்களில் சிருஷ்டித்து வைத்திருக்கப்பட்ட விக்கிரகங்களுக்கு சிற்பிமாதாவென்றும் பிதா சாஸ்திரமென்றும், கேட்கப்படுதலினாலே எங்களால் சிருஷ்டிக்கப்பட்ட விக்கிரகங்களை, திரிகாலமும் நீங்கள் பூசித்து வணங்கிவருவது எங்களை வணங்கினதல்லவா? இது உமக்குத் தெரியாமற் போனதென்ன? என்கிறார் மார்க்கசகாய ஆசாரி.

இவர் ஓர் கற்பனுபுருஷர். இவரால் பஞ்சாங்க முண்டாயிற்றென்ற வொரு கற்

பனுபுருஷரா வென்றதாகக் கட்டப்பட்டிருப்பது இந்த சுவடி. இவர் (மார்க்கசகாய ஆசாரி,ஒரு சிறந்தவித்துவான் என்று இவரினத்தாரால் மதிக்கப்படுகிறார். அன்றியும், இவர்—வேதியர் வேதங்கட்குரியவ ரல்லரென்றும், தம்மவர் தாமே விசுவப்பிராமணர் ஆதலின், வேதவேதாந்தங்களுக்குரியவர் தாமேயென்றும், சொல்லுகிறவராயுமிருக்கிறார். இவரினத்தாரை நோக்கி, உம்மவரை, என் வணங்க வேண்டும்? வணங்கவேண்டினும் விக்கிரகமேதுக்கு? என்பனாதிய கேள்விகளெழுந்தால் என்னதான் சொல்லித் தப்புவரோ அது ஈசுவரனுக்குத்தான் தெரியும். இவரைத்தழுவி இப்படிப்போதவும், விச்சூர், முத்துக்குமாரசுவாமி முதலியார் என்பவர், தாமெழுதிய "கண்ணிருந்தும் மக்கள் பலர் குருடாவதேன்" என்னும், புஸ்தகத்தில் 52, 53, 54, ஆம் பக்கங்களில்,

வேத ஸம்ஹிதை சொல்லப்பட்ட வேதகாலத்தில் (வைதிக மார்க்கந் தழைத்தோங்கிய காலத்தில்) ஆலய பூசை கிடையாது. விக்கிரகங்கள் பொம்மைகள் கிடையா; உபநிஷத்காலத்திலும், தர்சனகாலத்திலுங்கூட அர்ச்சாமார்க்க மிருந்ததில்லை. பௌத்த ஜனங்களிடமிருந்து ஹிந்துக்கள் கற்றுக்கொண்ட வித்தை யிது.

புத்தருடைய காலத்துக்குப் பிற்பட்ட காலங்களில் பௌத்த ஜனங்கள் பகவான் புத்தர்கூறிய உபதேசத்தை மனத்தால் எட்டிப்பறியமுடியாமல் அவரையே தெய்வமாக வெண்ணி அவரைப்போன்ற பொம்மைகள்செய்து அந்தப் பொம்மைகட்கு இந்திரன், சந்திரன், முதலிய தேவர்கள் குடை பிடித்தல், சாமரை வீசுதல் முதலிய உபசாரங்கள் செய்வதாகப் பொம்மைகள் செய்து அமைத்து கோயில்கட்டி உற்சவாதிகள் செய்ய ஆரம்பித்தார்கள்.

பாமரஜனங்கட்கு வேடிக்கையும், பாணமும், மத்தாப்பும், மேளதாளக்காரருவும், மெய்ம்மதமாதலான் கணக்கிறந்த ஜனங்கள் பௌத்தமதத்தில் சேர்ந்துவிட ஆரம்பித்தார்கள்; இதைப்பார்த்தார்கள், அக்காலத்துப் பிராமணர்கள். இது எதடா வம்பாயிருக்கிறது! இந்துமதம் அழிந்துபோம்போலிருக்கிறதே, என்ன செய்யலாமென்று யோஜனை பண்ணி ஒரு முடிவுக்கு வந்தார்கள். பிற்பட்டு ஆலயங்கள் கட்டப்பட்டன. பொம்மைகள் வைக்கப்பட்டன. விக்கிரக பூசை செய்தார்கள், என்னும் பலவும் வழவழவென்று வாய்கூசாமற் சொல்லியிருக்கிறார்.

இங்ஙனம், மூன்றுபக்கங்களை துஷ்டவாசகங்களால் நிரப்பிவிட்ட இவர் தாம் ஒரு பரமவேதாந்தி யென்றும், பண்டித சிரோன்மணி யென்றும், சில ஜனங்களால் இதுகாறும் மதிக்கப்பட்டிருந்தனர். இப்போது சிலகாலமாக தமது முக்கியவேதாந்த ஆராய்ச்சியின் பலனுக் கைவரப்பெற்ற உயர்பதவியான கிறிஸ்து மார்க்கத்திற் பிரவேசித்துவிட்டன ரென்னு மோர் வதந்தியும் பரம்பிவருகிறது. ஆதலின் இன்னோரன்ன போலி வேதாந்திகளின் உபதேசத்திற்குச் செவிகொடுப்பா ரெவரும் கூடிய சீக்கிரத்தில் ஞானஸ்நாநம் பெறலாமென்பது நிச்சயமாவதையு மிங்கே ஞாபகப்படுத்திவிட்டேம்.

இனி—இவ்விருவர் கொள்கைகளையும்

ராய்வாம். ஆசாரி தம்மவரை வணங்குதற்காக விக்கிரகாராதனம் ஏற்படுத்தப்பட்டதென்கிருர். முதலியாரோ பௌத்தமதத்திற் பிரவேசிப்பாரைத் தடுத்தற்பொருட்டாகவும், ஆரியமதம் நிலைபெறற்பொருட்டாகவும், விக்கிரகாராதன மேற்படுத்தப்பட்டதென்கிருர். இவ்விருவர் சொல்லுற காரணங்களும் அறிஞர் அங்கீகரிக்கக்கூடியன வல்ல. ஏன்? எனில்:—

ஆலயங்களிலே காணப்படுகிற ஸ்வரூபங்களைப்போலக் கொடிமரம்போலவும், பலிபீடம்போலவும், காளைமாடுபோலவும், தீர்த்தம்மிக்குளவிபோலவும், யானை முகமுள்ள ரூபத்திலும், முக்கண்-சதுர்ப்புஜம்—எண்தோள்-முதலிய பலவிலட்சண வடிவத்திலும், கம்மியர் அன்று மின்றுமென்று முண்டாயிருந்தன வென்று கேட்கப்படாததனுல் கம்மியருக்குப் பிரதிமாரூபங்களாக அமைக்கப்பட்டிருப்பதே ஆலயமென்னப்படுவதாலுமுடியாது. ஆதலின், ஆசாரி கூற்றும் அபத்தமேயாதலறிக.

அன்றியும், பௌத்தமதத்தில் கடவுளுண்டென்று கேட்கப்படாததனுலும், பௌத்தமதத்தினர் விக்கிரகாராதனத்தை வெறுத்தனாரென்று கேட்கப்படுகிறதினுலும், முதலியார் கூற்றும் மோசமேயாதல் காண்க.

இவ்வளவில், இவ்விருவர் கூற்றுக்களும் அபத்த வாக்குகளாதலின் வெற்றுரையெனவும், இவற்றை யோராதவாக்கொண்ட மூடமக்களாற் கலக்குறத்துவதாகலின் துஷ்டவாசகமெனவும், ஈண்டைப்பாதகமாகக் கொண்டகற்றிலும்

இனி—விக்கிரகாராதனம் பௌத்த காலத்திலென்கினும்ஏற்பட்டிருக்கலாமோ? என்னுமொரு கேழ்வியுர் தலையெடுக்காதொழியுமாறு மற்றொருகதை மாத்திரஞ் சொல்லி முடிக்கிறேன்.

பௌத்தகாலம்—கலிபிறந்து 2730 ஆம் வருடமுதல் 3500-ஆம் வருடம் வரையுள்ள 7_0-வருடங்களே யாகுமென்று பண்டித சிரேஷ்டரான ஒருபங்காளியின் அபிப்பிராயமாக வெளிவந்த "பிராசீன இந்தியா" என்னும் புஸ்தகத்திற் கணிக்கப்பட்டிருக்கிறபடி இற்றைக்கு 1500-வருடங்கட்கு முன்னருள்ள காலமேயாயிருக்கவேண்டும். அந்தக் காலத்தில் விக்கிரகாராதனம் உண்டாகத் தலைப்பட்டதென்பது முதலியார் துணிபு. அப்படியிருக்கவும், ஒருமகம்மதிய பண்டிதரெழுதுகிறதாவது:—

இதுரீசு—என்பவருடைய சிஷர்கள் ஐந்து பேர்களுண்டு. அவர்கள் வத்துன், சுவாகு, எஊது, யகூக்கு, நசுறு என்னும் ஐவரேயாவர். இவ்வைவரும் மிகுந்த படிப்பாளிகளாகி மனிதருக்கு நேர்வழிகாட்டிக்கொண்டிருந்தார்கள். இவர்களுடைய, குருவாகிய இதுரீசு—என்பவர் வானலோகம் போனவுடன் அச்சிஷர் ஐவரும் வெளியிற் புறப்பட்டு ஊரூராய்ப்போய் இல்மை (அறிவை)ப் படிப்பித்துக்கொண்டிருந்தார்கள். இவர்கள் காலத்திற்குப்பின் இவர்களைப்போல ஐந்து சிலைகளையுண்டாக்கி ஐந்து பெயருடைய பெயராலும் ஸ்தாபித்துத் தெரிசித்துக் கடவுளை வழிபட்டு இசுலா மார்க்கத்தின்பேரில் மவுத்தானூர்கள். பின்பு அவர்கள் பிள்ளைகளிடத்தில் சாத்தான் வந்து அந்தச் சிலைகளுக்குள்ளே புகுந்துகொண்டு அவர்களைத் தன்வழிப்படுத்திக்கொண்டான்.

அப்பால் நூகு (நோவா) என்பவர் காலத்திலுண்டாய ஜலப்பிரளயத்தில் ஐந்து சிலைகளும் முழுகிப்போயின. அந்தமட்டில் ஒழிந்துபோகவிடாமல் இசுமாயில் காலத்திற்குப் பின்னும் அவ்வைந்து சிலைகளையும் சாத்தான் வெளிப்படுத்திவிட்டான். அவைகள் அப்படியே வணங்கப்பட்டு வருகின்றன. என்பதே யாம்.

இதைச் "கசசுல் அன்பியா" என்னும் புஸ்தகத்திலும் நன்கு விஸ்தாரமாகக் காணலாம். அதுவும் அன்றி, அந்நாளிலிருந்த விக்கிரக வழிபாடுகள்:—

I வெளியே புறப்படச்செய்கிறது.

II மண்டபம் ஆசனமிட்டெழப்பண்ணி அவைகளுக்கு எதிரே குறபான் செய்கிறது. (ஆடு, கோழிகள் அறுக்கிறது.)

III அக்குறபான் வஸ்துக்களை (ஆடு, கோழிகளின் இறைச்சிகளை) நெருப்பிற் போட்டெரிக்கிறது.

IV அந்த நேரத்திலே சஜிதா (பஞ்சாங்க வணக்கம்) செய்கிறது.

V. அப்பால் சாராயங்குடிக்கிறது.

VI. கைமணி யடிக்கிறதும், மேளதாளங்க ளிடுகிறதும்,

VII. வெறிகொண்டு போய் மிருகங்களைப்போல பெண்களுடன் மறைவின்றிக் கூடுகிறது.

இங்ஙனம், பல ஆபாசச் சேஷ்டைகளுடன் அந்நாட்டிலுண்டாயிருந்தனவென்றும். ஆதியில் ஐந்து பிரதிமைகளாகமாத்திர மிருந்ததுபோய்க் காலாந்தரங்களில் (700) பிரதிமைகள் உண்டாய்விட்டனவென்றும், அந்த ஏதுவால் அந்த நாட்டு ஜனசமூகங்கள் 170 கூட்டங்களாகப் பிரிந்துவிட்டார்களென்றும், அங்ஙனம் ஜனங்கள் பிரிவுபட்டுப்போனது நூகு(நோவா) என்பவருக்குப் பொருத்தமில்லாததால் ஜனங்களுக்கிடையில் வந்து, அவர்:—

"லாஇலா இல்லல்லாது. வயின்னிநூறநூலுல்லாகி" என்ற கலிமாவை (விண்ணப்பத்தை) யோதிவிக்கிரகங்களை வணக்கக்கூடாதென்று போதிக்க ஆரம்பித்தார் என்றும், அப்படி 600-வருடங்கட்கு அதிமாகவேபாடுபட்டும் அவரது முயற்சி அவ்வளவும் பயன்படாமற் போனதுமல்லாமல் அவர் சனூனென்னும் பயித்தியம் பிடித்தவராகவே மதிக்கப்பட்டார், தருமசிலன் என்னும் அரசனுலும், அவன் குமாரன் தவுலீன் என்னுமரசனுலும், அவன் குமாரன் தைறதுசு என்னும் அரசனுலும், அவர் கடிந்து கொள்ளப்பட்டார்; இம்மூன்று இராஜதலை முறைகளிலும் அவர் பலவடிக்கப்பட்டும் காலைப்பற்றி இழுத்தெறியப்பட்டும் துன்புற்ருர்; மண்ணுலும் கல்லாலும், எறியப்பட்டார்; பரிகசிக்கப்பட்டார்; அவரைக்கண்ணுற்ற ஜனங்களில் பலர் அவருபதேசத்திற்குச் செவிகொடாது காதுகளைப் பொத்திக்கொள்வார்கள். சிலர் அவருக்கெதிரிலும்வரமாட்டார்கள்; இப்படி ஆண்களின் முன்புக்கும், பெண்களின் முன்புக்கும் அலக்கணுற்றநின்ற அவருடைய 600-வயசு முடிந்த பின்பு ஜலப்பிரளயமுண்டாகி யுலகமழிந்ததென்று விவரமாக அக்"கசசுல் அன்பியா" என்னும் புஸ்தகத்திற் காணப்படுதலும் ஸ்பஷ்டம்.

இவ்வாறபிக்கதைகளை நோக்க விக்கிர
ாதன' வுற்பத்தி காரணம் முன்னிருவ
ற்றுக்களினின்றும் வேருயிற்று. இவற்
யோசிக்குங்கால் ஏதோ மனம்போன
க்கில் கதைகளெழுதிவைத்துவிடுகிற
குள்ளதோர்தத்துவம் அக்காலத்தவருக்
ிருந்திருக்கலாம் போலும். ஆதலின்,
கிகரித்தற்கொவ்வாத கதைக்காரணங்
ாத் தள்ளிக் காலத்தை மாத்திரம் நோக்
டத்தில், இதுரீசு என்பவருடைய சீஷ
ாலத்திற்குப் பிற்காலத்திலிருந்துதான்
கிராகாராதனந் தொடங்கிற்றென்பது
ம்மதியர்' கொள்கை. அப்படியானல்,

அவ்வாரம்பகாலம்—நூகு [நோவா]
பவருடைய பெற்றோராகிய 'லாமக்கர
, புருசாசி' களின் காலத்திற்குமுன்
மேயாதலால் இற்றைக்கு சுமார் 6000
டங்கட்கு முந்தியகால மென்னவேண்
எப்படி? எனில்:—

ஆதி மனுஷன் மனுஷியாகிய ஆதாமு
அவ்வாவும் (ஆதாமுட, ஏவாளும்) உல
ிற்றோன்றி இற்றைக்கு 7000 வருஷங்
யிருக்கலாமென்பது முகம்மதியரபிப்
யம். அவ்வாதித் தாய் தந்தைகளின்
)-ஆம் வருஷத்திற்றுன் நூகு (நோவா)
பவர் ஜெனனகாலமென்றுஞ் சொல்
கொள்கிருர்கள். அந்த நூகு (நோவா)
பவருக்கு 600 வயசு முடிந்ததும்,

ஆதமபி பிறந்து 2250-வருஷம் முடி
காளாயிருக்குமென்று 'கசசுல் அன்
வும்படிக்கிறது. அப்பாற்றுன் சலப்
யமுண்டாயிற்றும். ஆகவே, 1600-ம்
த்திற் றோன்றிய நூகு (நோவா) என்
ன் பிதாவின் காலத்திற்கு முந்திய

காலமாதலால் இற்றைக்கு 6000-வருஷங்
களுக்குமுன் காலமே விக்கிரகாராதன ஆ
ரம்பகாலமென்பது 'முகம்மதியர்' கொள்
கை யென்றுமென்க.

இதனுலே—முதலியார் பௌத்தகாலத்
திற்குப் பிற்காலந்தான் விக்கிரகாராதன
ஆரம்பகாலமென்றது மோசமாய் முடிந்த
தைக் கண்டாம். இனி,

அருளாகமமும், ஆதிச்சின்னமும், என்
ற புஸ்தகத்தில் 12-ம்பக்கத்தில் ஆதிச்சின்
ன பரிசோதனசபைக் கோர் பிரஸிடெண்
டாயிருந்த 'ஸ்மித்துரை' 1876-ம் வரு இற
ந்தபின் ராஜா என்னும் ஒரு முகம்மதிய
துரையால் சூரியபகவானுடைய கோயி
லொன்று கண்டுபிடிக்கப்பட்டதாயும், அதி
ல், அதற்குச்செலுத்தின காணிக்கைகளின்
பேரடங்கின 50,000 செங்கற் புத்தகங்க
ளும், கண்டெடுத்து இங்கிலண்டிலிருப்ப
தாயும் அது கொண்டு கி. மு. 5000-வரு
ஷங்களுக்கு முன்னருள்ள காலநிர்ணயம் ந
வெளியாகின்றதென்றும், வலியுறுத்துத
லால் இற்றைக்கு 7000-வருஷங்கட்கு முற்
காலத்திலும் விக்கிரகாராதனம் உண்மை
யாதல் மலைமேல் விளக்காம்.

இது கொண்டு ஆசாரி, முதலியார்,
அறபிகள் மூவருஞ் சொல்லுகிற காரணங்
களைப்போலவே அவர்கள் சொல்லுகிற
கால நிர்ணயங்களும், அபத்தமாதல் நிரு
பிக்கப்பட்டது. படவே, நம்மவர் சொல்லு
கிறபடி ஜகோதயப்பிரதமைமுதல் விக்கிர
காராதனம் ஏற்பட்டுள்ளதென்பது மறுக்க
முடியாத வுண்மையேயாயிற்று. அது (விக்
கிரகாராதனம்) ஈசுவரனுடைய வழிபாடா
தலாலே, ஆதிமுதலிருந்திருக்கவே வேண்
டும் அதுவும்,

'தோற்றுழி யுயிர்களியாவு யறிவினி
ற் றேற்றுந் தத்தம், ஆற்றுநல்லொழுக்
கந் தன்னு லறிவுறுமதற்கு நாளும், ஏற்ற
தோர்காலந்தன்னில் விருப்பொடுவெறுப்
பாங் கெய்திப், போற்றுறு தருமம் நீக்
கித் தீவினை புகுதுமன்றே'

என்றபடி நல்லொழுக்கமேயுடையரா
யிருந்த பிரதமகாலத்து ஜனசமூகங்களில்
அவர்க்கு அநுக்கிரகிக்கும்பொருட்டு இறை
வனும் வெளிப்பட்டு அவருடன் நின்று
வேத சிவாகமங்களை யறிவுறுத்து உஜ்ஜீ
விப்பருளிநிற்கும் அந்நாளில், இறைவனது
காட்சி வடிவத்தை நேத்திரேந்திரியத்தின்
வழியும் அவரது திருவாய்மொழிகளை சு
ரோத்திரேந்திரியத்தின் வழியும கிரகித்து
அகக்கோயிலினமைத்துப் பூசித்துய்வாரா
யிருந்தனர். என்ன வேண்டும்.

அப்பால், விருப்பு வெறுப்புக்களினுட்
பட்டு நல்லொழுக்கத்தினின்றும் வழீஇத்
தீவினைவசத்திற் புக்குழல் வாராவொழிந்த
காலத்து ஜனசமூகங்களில் இறைவனது
காட்சி அருமருந்தாயிற்று. அந்நாளில்
ஒலிவடிவாயேயிருந்து வந்த வேதத்தை
வரிவடிவத்திலமைத்தும், நேரிற்கிடைக்கப்
பெற்ற காட்சித் திருமேனியை பிரதிமா
ரூபத்தி லமைத்தும், ஆலயங்களையும்,
வேதபுத்தகங்களையும், பின்னவருஜ்ஜீவித்
தற்பொருட்டாய் பெருங்கருணைமேலிட்
டுள்ள மகான்மார்களால் ஏற்படுத்திவைக்கப்
பட்டன. என்னவேண்டும்.

இவ்வாறு யூகிக்கலாமேயன்றி காலநிர்ண
யஞ் சொல்லவல்லா ரெவருமிலர். இருந்
தாலும் வேதங்கள் வரிவடிவெழுத்தில்
வருவதற்கு முன்னரேயே உருவடிவெழுத்
தில் ஆலய முண்டாயிருந்ததென்பதே வல்

லாரது அபிப்பிராயமாம். ஆகலின்
யம்: முன்னருண்டானது பற்றி விசே
முடைமை யென்பதொன்று அன்றி
நேத்திரேந்திரியத்திற்கு விஷயமாயிரு
லாற் சிறப்புடைத்தென்பது மற்றொன்
அதுவுமன்றி வேதங்களாற் புகழப்படுத
டன் அறிஞரனைவரும் இறைவனையறி
அடைதற்கோர் சிறந்த கருவியென்றுபத
நின்றுய்தலான் மேம்பட்ட தென்ப
வேறொன்று. இன்னமும்,

வேண்டுவார் வேண்டிற் றெல்லா
வேண்டியாங்கருள்வோன்" ஆக இறைவ
அன்பர்பொருட்டு ஆண்டுவிளக்கமுற்றிரு
தல்பற்றி யுயர்வுடைய தென்பது பிறிதொ
ன்று. இந்த நியாயங்களால் ஆலயவழிபா
டை நோக்க சுருதிவிசாரம் சாமான்யமெ
பதை உண்மையான வேதாந்திகளனைவ
ருஞ்சம்மதிப்பர் என்றுமென்க. அந்தவு
மைக்கு

மாக்ஸ்மூலர் கடைசியாய் வெளியி
ட தமது.

Six systems of Indian Philosop
இந்தியர் ஆறுதத்துவ சாஸ்திரங்கள் எ
னும் புஸ்தகத்தில் திவ்வியதாஸ்தத்தர் எ
பவர் எழுதிய:

ஒன்றையறிவதற்குச் சொற்களு
பொருள்களும் அடையாளங்களாக இட
படுகின்றன; சொல்லடையாளங்கள் செ
யுணர்விற்குக்கருவியாகின்றன; பொரு
கள் கண்ணறிவுக்குக்கருவியாகின்றன;
வையே இவையிரண்டற்கும் வேற்றுமை
சொல் லடையாளங்களாகிய பாஷைக
உபயோகிப்பதற்கு எந்தச் சமயவாதியு
ஆசங்கிக்க இடந்தராதபோது இறைவ
வழிபடுதற்குக்கருவியாகிய பொருளடை

...ங்களை ஆசங்கித்தல் என்னை?' என்னும்
விஷயத்தை எடுத்துக்காட்டித் தமது துணி
கலைப்பட்டிருப்பதே போதிய சான்ருத
றிக. இத்தட்டிற் சகித்தெழுப்பும் வி
...க்களுக்கெல்லாஞ் சமாதானம முடிவா
...ற்று

இவ்வினுக்களெல்லாம் நம்மினத்தார்
...ளுக்குள்ளேயே நாளும் நிகழ்வனவாக்
...ண்டாம். நம்மினத்தார்களென்ருல் ஸ
...மார்த்த மாத்துவ வைணவர் ஆகிய மூத்
...திறத்தருமே யாவார்: இம் மூவர்களிலும்
...ம்மிலுமுண்டாயிருக்கிற சிலதான்தோன்
...றிகள்பாற் கற்றுக்கொண்டு தான் இதர
...ர்கேகிதரு மிக்கேள்விகளை நம்பால் விடுக்
...கின்றனர். இங்கே பறையர் முதல் மறை
...யோர் வரையிலுமுள்ள வெக்குலத்தவராயி
...லுஞ்சரி:

I சிவநேசச் செல்வரெனப்படும் சைவ
...ளைவரும் என்போலிகட்குச் சக்காதரரே
...யவர். ஆகவே,

II சைவரோடு கொள்வினை கொடுப்
...பினைகளை வைத்துக்கொண்டிருக்கிற ஸ
...மார்த்த மாத்துவ வைணவர்கள் சிவப்பெ
...ருஞ்செல்வத்திற்கு மாத்திரம் பாகஸ்தர்க
...ளல்லாதபோனுலும் மற்றுஞ் சம்பந்தத்தா
...ருறவினராயே யிருக்கின்றனர். இவர்
...போலன்றி,

III சிவப்பெருஞ் செல்வபாகத்திற்
...தும் சிவநேசச்செல்வருடன் சம்பந்தஞ்
...செய்து கோடற்கும் அருகரல்லாததால்
...தரெனப்படும் கிறிஸ்தவர்களும், முகம்
...மதியர்களும், நம்மை வெறுக்காதவர்களா
...யும், உலக விஷயத்தில் நம்மிலுஞ்சிறந்த
...

றியமையாச் சிநேகிதர்களாயே யிருக்கிருர்
கள். என்பதும் ஸ்பஷ்டமேயாதலறிக.

இவ்வுண்மையால் உலகத்திலே கா
ணப்படும் ஜனசமூகங்கள் அறிவாளிகட்குச்
சகோதரராயும், உறவினராயும். ஸ்நேகித
ன்மாராயுமேயிருப்பதாக நாம் காண்கின்
ருேம். அத்தகைய நமக்கு எந்த மதத்தி
னரும் விரோதிகளாகிறதில்லை அப்படித்
தானே ஒவ்வொரு மதத்தினருமிருந்து
கொள்வாராகில் உலகத்தில் மதச்சண்டை
யென்பது தலையெடுக்கவேமாட்டாது. மே
லுமிதரமதங்களைத் தூஷிப்பது கொண்டு
எந்த மதத்தையாவது மேம்படுத்திவிடுகிற
தற்கேவராலுமாகாது. ஆதலின், இதர எச்
சமதத்தின்பேரிலுஞ் சாடிவிடாதபடி எடுத்
துக்கொண்ட விஷய (விக்கிரகாராதன)த்
தின்பேரில்மாத்திரம் நான் போகின்றேன்.
அந்த என்னுடைய பிரசங்கமானது நான்
எடுத்துக்கொண்ட விஷயத்தை மாத்திரம்
ஸ்தாபிக்கிறதாயிருக்குமேதவிர மதகண்ட
னத்திலொருசிறிதுந் திரும்பிப் பாராதென்
பதும் நிச்சயமேயாம். ஆனுலும், விக்கிர
காராதனம் கூடாதகாரியமாமென்று சொல்
லத்தலைநீட்டுகிற எத்தகையோருடைய வி
யாசமும் என்போலிகள் முன்பில் ஜீவித்தி
ருக்கமாட்டாதென்பதையு மிங்கே ஞாப
கப்படுத்திக்கொள்கிறேன்.

இன்றையத்தினத்தில் விக்கிரகாராத
னம் (ஆலயவழிபாடு) இறைவனையடைந்
தற்கோர் கருவியாமென்பதைப் பேசி
வான் றுணிந்ததே எனதாரம்பமாம். இருந்
தாலும் இடையிலே நம்மிலும், நம்மினத்
தாரிலும்,

"ஆசா னநுக்கிரகமான லருநாளும்
பேசாமற் காட்டும் பெருமானே—"

என்ற சுருதிவழி உண்மையை யுள்ளவாறே
யுணர்ந்து கோடற்கருகராக்கும் ஒரு நல்
லாசிரியனை யடையப்பெருத தான்ருேன்
றிப் பண்டிதன்மார் அது விஷயமாக் கேட்
கிற சில கேள்விகட்கெல்லாம் ஒரு விதத்
திற் சமாதானங்கள் சொல்லித் தீர்க்க
வேண்டியது மேற்பட்டது. இனி, அவர்
பாற் கற்றுக்குட்டிகளாகியும், யாண்டு
மீசுவரக்காட்சி பெற்றதாகச் சொல்லுதல்
கேட்கப்படாத அபரஞான மூர்த்திகளா
யெழுந்த அசாரிய குபதேசத்தைத்தழீஇ
யொழுகுவோ ராகியுமுள்ள இதரரின் அப்த
துபோதனு சக்தியின் மயங்கி யுழல்வார்
பொருட்டும்,

ஆயாய்ப் பலகலையாய்ந்திடுந் தூயவருந்
தவர்பாற், போயாயினு மூண்மையைத்
தேர்ந்தாயிலை' என்றபடி எவ்விதத்தாயினு
முண்மையை யுள்ளவா றுணர்ந்துகோடற்
கியையாதே நின்று ஐதிகன்மாரை மூட
ரென்றெதுக்கியும், வைதிகன்மாரை அவி
க்கிரகாராதனரென்று புதுக்கியும், அறியா
மையினுலே வாயில் வந்தபடி பேசித்திரி
வார் பொருட்டும், யாதும் பேசுதல் அகா
வசியகமேயாம். ஆதலின், விஷயத்தின்
துணிவை யாலோசிப்பாம்.

வாஸ்தவத்தி லிறைவன் கடவுளெ
னப்படுதலால் அவர் (கடவுள், கடந்து நிற்
கும் பொருளே யாயினுரென்பது நாமெல்
லாருக்குந் தெரிந்த விஷயம். ஆதலின்,
கடந்துநிற்கும் பொருளாகிற அவர் நம்மா
லுணரப்படு பொருளாவரேல், அங்ஙனம்
அறியப்படும் பிரபஞ்சம்போல அழிபொரு
ளொத்த அசத்தேயாய்ப்போவர். அங்ஙன

மன்றி, எவ்வாற்ருனு மறியப்படாத வியல்
பினராயிருப்பரேல், அப்படிப்பட்டவர் யா
ண்டு மறியப்படாத முயற்கோடு; ஆமை
மயிர்க்கம்பலம் போலச் சூனியப்பொருளே
யாய்க் கழிவர். ஆனபடியால் இவ்விருவித
தோஷத்திற்கும் அவரை ஆளாக்கிவிடாத
படியே, (கேனு-2-2ல்)" கடவுள்-அறியப்
பட்டவருமல்லர்: அறியப்படாதவருமல்லர்,
என்னுமோர் சுருதிபோதமுங் கேட்கப்படு
கிறது. படலானே, நமக்கெதிர்ப்பட்டுள்ள
அழிபொருள்களைப்போன்று காணப்படா
தபடி அவர் நித்தியப்பொருளாக் காணப்
படுகிறவரா யிருக்கின்றன ரென்பதே மர
பாம்.

அவ்வுண்மையால் "புகலக்கருத வேட்
டிடா நிறை போருனளவையார் காண்
பார்" என்றபடி "கடவுளை" அசத்தசித்து
ருபமாகிய திரிகரணங்களாலுங் காணமுடி
யாதென்பது சர்வஜன சம்மதமேயாம்.
ஆனதுபற்றியே அவர் (கடவுள்): சோத்
திர நேத்திரங்களின் வழிக்கிராகிக்கிற நாம
ருபமயமான இந்திரியக்கிரகண (பாசஞா
ன)த்தையும், அவற்றின்வேருகிய மனோ
விருத்தியை (பசுஞானத்தை)யுங் கடந்து
அதீதராய்நிற்கின்ருர். நின்ருலும், வேதாக
கின் றுணரும் அநுபவஞான மாத்திரையால்
விளங்கிக்கோசரிப்ப (விஷயமாகிற) வராயு
மிருக்கின்றன ரென்பார் பெரியோர்.

அங்ஙனம் "வாக்நயனுதீதகோசரமாய்"
நிற்குங்கடவுளை அவரது இவ்அதீத நிலை
யில் கண்டேமென்ருவது, காண்கின்றே
மென்ருவது, காண்பேமென்ருவது, கூ...
வா ரெவருமிலர். எவராலு மறியொ...

ஃவதீதநிலையே அவருக்கு வாஸ்தவதேக
மெனப்படும்.

அத்தகைய வாஸ்தவ நிலையிற்றனே
வர் (கடவுள்) களிவின்றியிருந்து விட்
டால் சிற்றறிவும், சிறுதொழிலும், சிறுகி
றிந்ததனையும்மறந்துமறந்தறிதலும், மயங்
கியறிதலுமே யியற்கையிலுடைத்தாயிருக்
ற எத்துணையுமெளிய ஆன்மாக்கள், எத்
துணையும் வலிய இறைவனை யறிந்துவழி
படுதல் கூடாதன்றே? ஆதலின், பெருங்
கருணைத் தடங்கடலாகிய அவ்விறைவன்
தம்மை அவ்வான்மாக்களுணர்ந்து உபா
சித்து உய்யும்பொருட்டு ஓரோர்காலங்களி
ல் ஓரோரிடங்களில், ஓரோர் அன்பருக்
காகக் கன்றை நினைந்துவரும் புனிற்றாப்
போலவும், விறகின்கட்பிறந்த தீப்போல
வும், மோரின்கட் டிரண்ட வெண்ணெய்
போலவும், வித்தின்கட்பிழிந்தெடுத்த எண்
ணெய் போலவும், வெளிப்பட்டநுக்கிரகிக்
கத் திருவுள்ளங் கொள்கின்றார். அங்ஙன
ந் திருவுளங்கொண்டவாறே,

அதிவீரராம பாண்டிய மகாராஜா

"உரகாபரணத்திருமார்பு முமையொரு
பாகமுமாயிடப் புறமும், சிரமாலிகையும்
சடையும்செய்யவாயுங்கறைமிடறும்,
தாபயமும் மழுமானும் வயங்கு கரமும்
பொடியும், கருவா புரியான் வெளிப்படு
க் காட்சிகொடுத்து நின்றனே"

பிரமகீதை—சருவசாஸ்திரார்த்த சங்
கிரகம் 27-ல் "தேவருந்தேவ தேவர்க்குந்
தோத்திரியம் பகன்றனைத் தெண்டனு
ம் பூவிலே விழுந்து போற்றியே யுருகிக்
கொடுஞ்சுவைப் பொழுதிலே புத்தேள், மூவரு
ம், முதல்வனு மிறைவன் மூர்த்தியாய்

முழுந்தியவருளாற். காவியங்கண்ணிபங்க
னாய் வந்து தோன்றினன் கண்ணினுற்
காண"

திருவிளையாடல்.

"வானத்தின் மண்ணிற் பெண்ணின்
மைந்தரிற் பொருளிலாசை, தானற்றுத்
தன்னையுநீத்துத் தத்துவ முணர்ந்த யோ
கர், ஞானக்கண்கொண்டேயன்றி நாட
நுஞ் சோதிமன்னோர், ஊனக்கண் கோ
ண்டுங்காண வுடன்விளையாடல்செய்
தான்"

என்பனவாதிய போதங்களின் வழியே திரு
மேனியுடையராயு மெழுந்தருளுகின்றார்.
அப்படி யெழுந்தருளுகிற வெளிப்பாடுதா
னே யவரது பெருங்கருணையின் கனிவை
வெளிப்படுத்துவதா யிருக்கிறது. அந்த
வுண்மையை கந்தபுராணம்,

"தன்னைநேரிலாப் பரம்பொருடனியுருக்
கொண்ட, தென்னைகாரண மென்றியே
லைந்தொழிலியற்றி, முன்னையாருயிர்ப்பா
சங்களை முழுவது மகற்றிப், பின்னை வீடு
பேறருளவா வினைந்தபே ரருளே" என்
பதாதிய சுருதிகொண்டுணர்ந்து கொள்க.
அத்தகைய பொருட்காட்சி வடிவங்களா
கிய சிவமூர்த்தங்களை வழிபடுவோ மானுல்
இந்நில வுலகத்திலே யுள்ளளவும், பெரு
மகிழ்ச்சியுடன் வாழ்வுறுவோ மென்பதாக,

"மூவருமுப்பத்து மூவரும்மற்றெழிந்த,
தேவருங்காணச்சிவபெருமான்—மாவேறி
வையகத்தே வந்திழிந்தவார் கழல்கள்
வந்திக்க, மெய்யகத்து வின்ப மிகும்"
என்றதாதிய சுருதிகள் கோஷிக்கின்றன.
அல்லாமலும், தணிகைப்புராணம்,

"ஆதலாலானில நாறுமவ்வாறு மரு
ளிய பொருள்களூரதழுவிட, சோதிநிட்கள
மாய் நின்றிடினுயிரின் றரிகரு தெனக்கரு
ணையினுல், மாதர்சேர்சகள வடிவுகொண்
டிருந்த வரதனை வழிபடப்பெற்றோர், கோ
துறுவினைகள் முழுவதுந்துமித்துக் குறுகு
வர் சிவபுரத்தவன்பால்" என்று வலி
யுறுக்கு மோருண்மையால், முடிவில் பர
மேசுவரசாமீபமும் பெற்றுவாழ்வோமென்
பதும். நிச்சயமேயாம். அந்தவுண்மையற்றி
த்தானே'

இராமதாபினீயுபநிஷத்து

"ஞானவடிவமாயும், இரண்டற்றதாயும்,
நிஷ்களமாயும், சரீரமற்றதாயும் இருக்கின்
ற பிரமத்துக்கு உபாசகர்களுபாசனையின்
பொருட்டு வடிவகற்பனை (உண்மையாகின்
றது)" என்றதோர் சுருதியுமுண்டாகிற
து. அவ்வருட்டிருமேனிகளாகிய கற்பித
(அலங்கார)த் திருமேனிகளே காட்சிவடி
வங்களெனப்படுகின்றன. அவற்றையே,
உபாசிக்கும் மெய்யன்பினர்க்குச் சிவபோத
நிவிர்த்தியும், சிவபோதப்பிராப்தியும், நல்
குவான் முன்னிலைப்பட்டு நின்ற இறைவ
னது சகளவடிவ (வியத்தலிங்க)ங்களென்
னலாம். அவைதாம்,

சந்திரசேகரராதி 25-கேவல வடிவங்
களும், ஸ்ரீமன் மணிவாசகர் பொருட்டெ
ழுந்தருளிய பரமாசிரியவடிவமும், அவர்
பொருட்டுக்குதிரை கொணர்ந்த இராவுத்த
வடிவமும், பிட்டு வாணிச்சியம்மைபொருட்
டுவந்த ஒட்டர் வடிவமும், சிறுத்தொண்டர்
பொருட்டுவந்த பயிரவர் வடிவமும், இவை
போன்ற பிறபலவடிவங்களுமா மென்று
கேட்கப்படும்.

அத்தகைய காட்சிவடிவங்களை மெ
யன்பர் தாம் தெரிசித்தவழியே அப்பெரு
கருணைத் திருமேனியினருட் கோலங்க
நேத்திரேந்திரியத்தின் வழிக்கிரகித்து (அ
த்துட்கொண்டு நிற்றலாலுண்டாகிய அ
பின்பெருக்கினுல் அங்கணின்று தனி
விட்டெழும்பும் பேரின்பமயமான தம
திருவாக்கினுலே வருணித்துக்கூறு மு
மைகளை வரிவடிவெழுத்திலமைத்துக் கே
டலே சுருதியும், உள்ளத்திற்பதிந்து வி
ரும் கற்பிதத் திருமேனிகளின் சாயை
உருவடிவெழுத்தி லமைத்துக் கோட
ஆலயமுமாமெ பார் பெரியோர்.

இவற்றாலேதான் ஆஸ்திகவுண்
நிலையுதலாயிற்று. அன்றியும் நாமனைவ
முய்யுநெறிதேடுதற்கும் இவையே (சுரு
யும், ஆலயமுமே) உபகாரமாயின. ஆ
வே, வேதசிவாகம விதியாகிய இறைவன
திருவருளாணையின்வழி அதிரகசிய நுட்ட
களொடுகட்டப்பட்ட ஆலயங்களி லெழு
தருளச் செய்திருப்பனவெல்லாம் இறை
னது காட்சிவடிவங்களின் பிரதிமாரூப
ளேயாமென்பதுந் திண்ணம்.

இங்ஙனமாகவும், அதீதம், உருவம், என்
றிரண்டு திருமேனிகட்கிடையில் உருவ
பாட்டாளரை (புறத்தொண்டினரை)
வழிபாட்டாளராக்கவல்ல அருவருவ
அதனினின்றும், அதீதத்திற் சேர்க்கவ
அறிவுத்தொழின் மாத்திரத்தால் வழிப
தக்க அருவமும், ஆகிய இரண்டு திருமே
களுண்மையுங் கேட்கப்படுகின்றன. ஆ
வே, இறைவனுக்கு அதீதம், அருவம், அ
ருவம், உருவம், என நான்கு திருமே
களுண்மையாகப் பெரியோர்களால்
யித்தல் கண்டாம். அவை வருமாறு:-

சாந்தோ; பிரபாடகம் 8, கண்டம் 3, வாக்கியம் 4-ல்

"அப்படிப்பட்ட இந்தப் பிரமத்தின் பெயர் சத்தியம்; (உள்பொருள்), அவர் நிஷ்களர், நிஷ்கிரியர், சாந்தர், நிரவத்யர், நிரஞ்சனர் (அதீதம்) முத்திக்குச்சிறந்த ஒரு கரையாயிருக்கிறவர்; (அருபம்) மேலும் தகிக்கப்பட்ட கட்டையிலிருந்து வெளிப்படுகிற அக்கினியை நிகர்த்தவர் (உருபாருபம்)" [ஷை 7—23—ல்] "விஜிஜ்ஞாஸிதவ்ய:" என்றும், [ஷை 8—7—3ல்] ஸவிஜ்ஞாஸிதவ்ய:' என்றும் வருதலால் 'விசேஷமாக அறியப்படத்தக்கவர்" இது (ருபம்), என்றதாகிய சுருதிகளால் அதீதம், அருபம், உருபாருபம், உருபம், என்னும் நான்கனுண்மை குறிப்பிக்கப்படுகிறது. அல்லாமலும்,

I அதீதம் (நிராதாரம்)

[கேனோ: கண்டம் 1, வாக்கிய 3, 4ல்]

"அதைத் (கடவுளை) கண்ணாவது, வாக்காவது, மனதாவது எட்டுகிறதில்லை. அதை நாம் அறியோம். அதைத் தெரிவிக்கும்வழியும் நமக்குத் தெரியாது. அது தெரிந்ததற்கு (உலகத்திற்கு) வேறாயும், தெரியாததற்கு (உயிர் வர்க்கத்திற்கு)ப் புறம்பாயமிருக்கிறதென்று முன்னோருரைக்கக் கேட்டோம்"

கடோ 6-வது வல்லி, 12-வது வாக்கியம்.

"பிரமம் (கடவுள்) வாக்கினாலும், மனதினாலும், கண்ணினாலும், அடைய (அறிய)க் கூடியதன்று. கடவுள் உளரென்று சொல்லுகிறவரைக்காட்டிலும், வேறானவர் அவரை எப்படி யடைவார்கள்." என்பனவாதிய சுருதிகளெல்லாம், ஆத்துமப்பிரத்தியயத்தி [சிற்றறிவும், சிறுதொழிலும், சிறுகியறிந்ததனையும் மறந்து மறந்தறிதலும் மயங்கியறிதலுமே யியற்கையாக்கொண்ட சமுதண்மையைக்கொண்டு, முற்றறிவும், சர்வகர்த்திருத்துவமும் இயற்கையாக்கொண்ட ஒரு பரம்பொருளு முண்மையாக வேண்டுமென்னு மோர் யுக்தி விசாரம் சம்மிடத்துண்டாதலி]னலன்றி யறியப்படாத அதீதத்தையே பேசுகின்றன.

II அருபம்—(திவ்விய அதிசூக்ஷ்ம சாதாரம்)

(சுவே—3-வது அத்தியாயம், 3-வது வாக்கியம்)

"எங்குமவாது கைகால்கள்; எங்குமவாது கண் தலை முகம்; எங்குமவாது செவி; அவருலகெல்லாம் பரவியிருக்கிறார்."

[ஷை 1—19] "அவர் (பிரமம்)கையின்றிக் கிரகிக்கிறார். காலின்றி நடக்கிறார். கண்ணின்றிக் காண்கிறார். காதின்றிக் கேட்கிறார். அறியத்தக்கனவெல்லாம் அவர் அறிவார். அவரையோ அறிந்தவரில்லை. அவருக்கு வேறு லக்ஷணமொன்றுஞ் சொல்லக்கூடாமையால் அவரை ஆதி மஹா புருஷனென்கிறார்கள்."

(பிரஹ) "அவர் பார்க்கப்படாதவர், பார்ப்பவர்; அவர் கேட்கப்படாதவர், கேட்பவர்; அவர் கருதப்படாதவர். கருதுகிறவர்; அவர் அறியப்படாதவர், யாவற்றையும் அறிபவர்." என்பனவாதிய சுருதிகளெல்லாம், கிரியைக் காட்சி மாத்திரத்தில் வல்லது வுண்மையாக அநுமானித்தறிந்துகொள்

ளும், மறைவுக்காட்சி வடிவமாகிற அருபவிலக்கணத்தையே பிரஸ்தாபிக்கின்றன.

III உருபாருபம்—[திவ்வியசூக்ஷ்ம சாதாரம்]

(சுவேதா 1-14ல்) "ஒருவன் தன் தேகத்தை யாணியாக்கிக்கொண்டு, பிரணவத்தை மத்தாக்கிக்கொண்டு, கடைதலாகிய தியானாப்பியாசத்தினால் நன்றாய் மறைந்திருக்குந் தேவனைப் பார்ப்பான்."

(ஷை 1-15ல்) "எள்ளில் எண்ணெய் போலும், தயிரில் வெண்ணெய் போலும், பூமிக்குள் தண்ணீர்போலும், கட்டையில் அக்கினிபோலும், ஆத்துமாவில் பரமாத்துமாவை சத்தியத்தினாலும், தபசினாலும் தேடுவோனுக்கு அவனுக்குள்ளேயே அது, விளங்கும்."

முண்டகோ—2-வது முண்டகம், கண்டம் 2 வாக்கியம் 6-ல்.

"ஓங்காரப் பிரதி பாத்தியமான பிரமத்தைத் தியானியுங்கள்; அஞ்ஞான இருளினின்று நீங்குவதில் உங்களுக்கு நிர்விக்கின முண்டாவதாக. ஞானிகள் ஓங்கார சாதனத்தைக்கொண்டே அந்த சாந்தரும், மூப்பற்றவரும், சாவற்றவரும், பயம் நீங்கியவரும், நிரதிசயருமானவரை யடைகின்றனர்."

(தைத்திரியம்-சிக்ஷாவல்லி)ஓம் என்கிற எழுத்தினால் விளங்குகிறதெதுவோ அதுவே பிரமம். சகல தேவதைகளும் அதைப் பூசிக்கின்றனர். பிரபஞ்சத்தி னிடையேயிருக்கும். பூஜிக்கப்படத்தக்க விசுவநாதரை எல்லாத் தேவதைகளும் நியதமாக வுபாசிக்கின்றனர்."

என்பனவாதிய சுருதிக ளெல்லாம், தபசி (கிரியையி)னாலே புறவழிபாட்டுடன் அகத்தேயுஞ் செய்யத்தக்க அன்பின் வழிபாட்டிற் கிரங்கி யநுக்கிரகிக்க வேண்டி இருதய கமலத்திலே சோதி சொரூபமாக வெளிப்பட்டு விளங்குகிற உருபாருபத்திருமேனியை(உண்ணிலைக்காட்சி வடிவத்தை)யே பேசுகின்றன.

IV உருபம்—[திவ்வியஸ்தூலசாதாரம்]

(தைத்-நாராயண வல்லி, 4, 6, 10-ல்] "கிருஷ்ண பிங்களம், ஊர்த்துவரேதம், விரூபாக்ஷம், விஸ்வரூபம், (ஷை 4, 6, 12ல்) (ஆகிய) எல்லா வடிவனுக்கும் வந்தனம், வந்தனம்."

இதில்—கிருஷ்ணம் = நீலகண்டத்தையும் பிங்களம் = பொற்சடையையும்; ஊர்த்துவரேதம் = அதோரேதசடைய. சிவான்மையையும், விரூபாக்ஷம் = முக்கண், அல்லது—உபநயனத்தையும், விஸ்வரூபம் = அஷ்ட மூர்த்தங்களையும், குறிப்பித்து நிற்பதாகக் காண்பார் பெரியோர்.

(ஷை 4, 6, 18-ல்) "வணக்கம் பொற்றோளனுக்கு, அம்பிகாபதிக்கு, உமாபதிக்கு"

(ஷை 4 6 22-ல்) 'வணக்கம் பொற்றோளனுக்கு, பொன்னிறத்தனுக்கு, பொன்வடிவனுக்கு, பொன்னின் தலைவனுக்கு, அம்பிகை தலைவனுக்கு, உமை தலைவனுக்கு; பசுபதிக்கு நமஸ்காரம், நமஸ்காரம்.'

(கைவல்யோ) 'உமைதுணைவன்; பரமேசுவரன், இறைவன், முக்கண்ணன், நீலகண்டன், மிக்கமைதியன்'

(சுவே 6, 16-ல்) 'காலகாலன், ந

குணமுடையதன் வல்லவ வித்தைகளாலும் அறி ப்பட்டகன்.'

(முண்டகோ 3, 1, 3-ல்) 'எப்பொழுது பொன்னிறத்தனும் கர்த்தாவுமாகிய ஈசனை ஜீவன் பார்க்கின்றனனோ!'

(யஜுருத்திரம்) 'உமையொடு கூடியவனுக்கு வணக்கம்' 'சதாசிவனுக்கு' (உருபாரூபம்) 'முப்புரத்தை யழித்தவனுக்கு' வணக்கம், நீலகண்டனுக்கு, கறை கண்டனுக்கு.'

[ரிக்சம்ஹிதை 2; 7; 17-ல்] 'நிலையான வுறுப்புக்களால் பலவடிவன்; உக்கிரன்.' (ஷை) ரிஷிகளுக்குப் பிதாவாகிய சரப மூர்த்திக்கு,'

என்பனவாதிய சுருதிகளெல்லாம் உலகத்தார் புறத்தேயுந் தெரிசித்து வழிபடத்தக்க உருபத் திருமேனி (முன்னிலைக் காட்சி வடிவக) களையே துதிக்கின்றன. இங்ஙனங் கேட்கப்படுஞ் சுருதி முழக்கங்களாற் கடவுளுக்குண்மையேயாகிற நான்கு திருமேனிகளு முண்மையாயினவேயாம்.

இந்நான்கனுள், அதீதம் முணரப்பட்டதன்று. ஆதலின், இறைவன் றன்னியல்பாகிய, வாஸ்தவ தேகமெனப்படும். அவ்வதீதத்தை யாண்டும் பேசவல்லாரிலர் ஆனபடியால்,

திருமந்திரம்.

'பெருவாய் முதலென்னும் பேதமே பேதித், தருவா யுருவா யருவுருவாகித், தருவாய்வருஞ் சத்திகோ ணுயிர்ப்பன்மை, யுருவா யுடனிந் தோன்று மன்றுமே.'

சிவஞ்ஞான சித்தியார்.

'உருமேனி தரித்துக்கொண்ட தென்றலு முருவிறந்த, அருமேனி யதுவுங் கண்டோ மருவுருவானபோது, திருமேனி யுபயம் பெற்றேம் செப்பியமூன்றும் நந்தம் கருமேனிகழிக்கவந்த கருணையின்வடிவுதானே.'

'அருவமோ ருபாருபமானதோ வன்றி நின்ற, வுருவமோ வுரைக்குங் கர்த்தா வடிவெனக் குணர்த்திங் கென்னில், லருவமு முருபாருபமானது மன்றி நின்ற, வுருவமு மூன்றுஞ்சொன்ன ஒருவனுக் குள்ளதாமே.'

என்பனவாதிய சுருதிபோதங்களெல்லாம், அரூபம், உருபாரூபம், உரூபமெனும் மூன்று திருமேனிகளுண்மையையும் அவை தோற்றவா னின்ற வியற்கையையும், கருணையின்கனிவே அவற்றைத் தாங்குதற்கோராதாரவாயிருத்தலையும், அம்மூன்று மிறைவனொருவனுடைய திருமேனிகளே யாமென்னும் நிச்சயத்தையும், நன்கு வலியுறுத்து நிற்றல்காண்க. இம்மூன்று திருமேனிகளினியல்புகளை முன் 7-வது வினாவுக்குவிடையில் (58, 59 ஆம் பக்கங்களில்) எடுத்துக்காட்டியுமிருக்கிறேன், உண்மையிங்ஙனமாகவும், நம்முறவினருளொருசாராராகிய 'ஸ்மார்த்த மதத்தினரில்; தார்க்கீக வல்லுன ராகிய சிலர், தங்கள் வேதாந்த பக்ஷத்தில் அகவழி பாடொன்றனை மாத்திரம் விதந்தெடுத்தோதும் சுருதிகளை முக்கியப் பிரமாணமாக் கொண்டு உருபாரூப (வியத்தாவ்வியத்த லிங்க)த்தையே அங்கீகரிக்கின்றனர். அவரதங்கீகாரம் எமக்கு விரோதமன்று. ஆனால், அதீதம், அரூபம், உருபாரூபம், உரூ-

பம். என வழங்கும் ஆன்றோர் வழக்கை முற்று மில்லாதே யாக்க முயலுகின்றனர். அத்தகைய அவரது பயனில் முயற்சிகள் என்போலிகட்கொத்துக் கொள்கிறதில்லை. ஆதலின், அவரதராயச்சியைச்சற்றே விசாரித்தொழிப்பாம்.

(a) உருவம், அருவமென்னுமிரண்டும், ஒன்றுக்கு ஒன்று எதிர்மறைக்குணங்கள். அவை, ஒளியுமிருளும் போலவாம். இவ்விரண்டிற்கு மெதிர்மறையே அதீதமாம். உருவாருவமென்று சொன்னாலோ அவ்விரண்டும் நேர்மாறான குணங்களாகலின் ஒரு பொருளின்கணிரா. இங்ஙனமாவே ஒரு பொருளின்கணிவ்வித எதிர்மறைக் குணங்களெவ்வாறிருக்கும்? மேலும் அருவமுடைய பொருளொன்று உருவமுடையதாகிறதானால் அருவங்கெட்டு உருவமாகின்றதா? அருவங்கெடாது உருவமாகின்றதா? கெட்டு ஆகின்றதெனின் கேடுற்று அப்போதே அருவமில்லாமற் போகின்றது. அதோடு பின்னும் அருவமாதலுமில்லாமற் போகின்றது. கெடாது ஆகின்றதெனின்: அருவம் அருவமாகவேயிருந்தால் உருவமாவதெங்ஙனம்? அதுபோலவே; உருவம் அருவமாம்போது உருவங்கெடாது அருவமாகிறதெனின் உருவம் உருவப்படியிருந்தால் அருவமாதலெங்ஙனம்? என்னுமாக்ஷேபங்களுண்டாய்விடும். அப்படித்தானே; அதீதகுணம்: அருவம், அருவாருவம், உருவம் என்னும் நீதகுணங்களாகிறதென்னும் விஷயத்திலும் ஆக்ஷேபங்கள் நிகழும். நிகழவே, பால் கெட்டுத்தயிரானபோது பாலில்லாதேயானதும் பால்தயிரானபின்பு யாண்டு மது பாலாகமாறுதலில்லாதிருப்பதும்; கண்கூடாதல்போல பிரமத்திற்கு நான்கு திருமேனிகள் கற்பிப்பதன்மையாதலில்லை. என்பதே ஆனர் (ஸ்மார்த்தவேதாந்தி)களின் முதலாசாரியாசயம்.

(b) இனி, வேறொரு மார்க்கத்தாற் பரியாலோசிப்பான்றொடங்கி, அருவத்தினின்று உருவம் வந்துபோய்க்கொண்டிருக்கிறதெனின் அருவம் சொரூபகுணமா? கற்பிதகுணமா? சொரூபகுணமெனின்; எது சொரூபகுணமோ? அது குணியை விட்டு நீங்காது. நீங்காதாகவே அதற்கெதிர்மறையான மற்றொரு குணம் வந்துசேர நியாயமில்லை. அது, தீபத்தின் சொரூபகுணமான ஒளி: குணியைவிட்டுநீங்காததுபோலவும் அதற்கு எதிர்மறையான இருள்வந்து அதிற்சேராதது போலவுமாம். ஆகவே, சொரூபகுணம் குணியைவிட்டு நீங்குமாயின் குணியேயில்லாமற்போம். அது, ஒளிபோனபிறகு தீபமில்லாமற்போவது போலென்க. மேலும் ஒளி தீயத்தை விட்டுப் போய்பிறகும் தீபமென்னு மொருபொருளிருந்து, அதில் இருள் வந்து சேர்ந்து அவ்விருளையே குணமாகத் தீபம் பெற்றிருக்குமாயின் பிரமமானது அருவத்தை விட்டு உருவத்தைப்பெற்றுப் பிறகு பிரமமும் அழிவில்லாதிருக்கும் இனி அரூபம் சொரூபகுணமின்று கற்பிதகுணமெனின் அரூபமே கற்பிதகுணமாகிறபோது பிறகு வந்துசேரும் உருவமுங் கற்பிதகுணமேயாமென்பது சொல்லாமலே விளங்கும். உருவம்: அருவமாகிய இரண்டுங் கற்பிதமென்று சொல்லின்; அதற்குவேறாக ஒரு குணம் யதார்த்தமா யிருக்கிற தென்னவேண்டி வரும். அப்போது அது சொரூபகுணமா? கற்பிதகுணமா? என்னும் வினாத் தோன்றும், இவ்வாறு சொல்லச் சொல்ல அது

அத்தாதோடமெய்தும். என்றுராய்ந்திருக்
கின்றனர். இஃதவர்கள் இரண்டாவது
ஆராய்ச்சியாம்;

இவ்விரண்டனையும் நாம் சேர்துக்குங்கால்,
ஒருமாதிரியாக இவர்களை ஈசவலரென்ன
லாம். ஆயினும்; இவரது அதிகப் பிரசங்
கத்தால் இவருக்காவது இவருரைக்குச்
செவி கொடுப்போருக்காவது நன்மையுண்
டா மென்னமாத்திர மெனக்குத் துணிபுண்
டாகிறதில்லை. ஏன்? எனில்:—

இங்கே, 'Force' எனப்படு மின்சார
மானது இயல்பிலெல்லாப் பொருள்களிலு
ம்; எல்லா விடங்களிலும், எல்லாச் சரீரங்
களிலும், வியாபித்திருக்கிறது. அதனுண்
மை யியல்பை யெவராலு மறிந்துகொள்ள
முடியாது. அப்படியானாலும்; அது, இல்
பொருளல்ல. அந்த நிலைமையில் அதை
பதீதமென்னலாம்.

அதின்னறும்; கவர்வலி (Positive) கழி
வலி (Negative) களின் காட்சி உண்மை
கொண்டோர் அருபப் பொருளுண்மையா
கத் தோன்று மோர் குறிப்புணர்ச்சியால்
வந்து: கட்புலப்படாதபடி வலிகள் மாத்தி
ரன் காணப்பட்டுக் கொண்டிருக்கிற அவ
சரத்தில், அதை அருபமென்னலாம்.

அதுதானே பிளாற்றினம் முதலியவைக
ளோடு சம்பந்தப்படும்பொழுது ஒளியாய்த்
தோன்றுகின்றது. இரும்பு முதலியவற்
றிற் சாரும்பொழுது அந்த ஒளிவடிவந்
தோன்றவில்லை. ஆதலின், விளக்கத்தக்க
பொருளின் சார்புபற்றி விளக்கமுறுதலும்,
ஒளிமயமாயேயிருத்தலும், காணப்படுதலின்
அதனை ருபாருபமென்னலாம்.

அங்ஙனம், வலிகளின் சம்பந்தத்தால்
ஓரோர் காலங்களில் அது (மின்சாரம்) தீப்
பொறி வடிவாகவுங் காணப்படுதலுண்டு.
அதனை உருபமென்னலாம்.

இந்நான்கு பிரகாரத்திலும் காணப்படுவன
வெல்லாம் மின்சாரமொன்றேயாம். இவ்
வுண்மையைச் சோதித்தறிவானுக்கிரக
முண்டெனின்; அது (மின்சாரம்) சடமாத
லின் அதனைத்தொழிற்படுத்துக் காட்டுவா
னொரு கர்த்தாமாத்திரமே வேண்டப்படும்
படலான் அத்தொழிலிற் பயின்றுளொருவ
னை வேண்டிக்கொள்வா ரனைவரும் எளிதி
லுணர்ந்துகொள்ளுதல் திண்ணம். இவ்
விஷயத்தில் அவர் (ஸ்மார்த்தர்)களுடைய
ஆராய்ச்சி (பால் தயிராதல்போன்று அதி
தம்: அருபமாகிய குணங்களையடைந்தால்
அதீதங்கெட்டுப்போக வேண்டுமென்னும்
நிச்சயம்) செல்லாதேயொழிதல் ஸ்பஷ்ட
மாதலால் அஃதிழுக்கிற்றுதலின் என்க.
இன்னமும்,

அக்கினி: தனதியல்பில் (அநுற்பூதநிலைமை
யில்) அருபமும்; வியாபகமுமான ஒருவஸ்
துவாயிருத்தலுண்மையேயாம். அது உற்பூத
நிலைமையில் வெளிப்பட்டுத் தனதிருப்பைப்
பிறருக்குக்காட்டி அழகிய கிரியைகளைச்
செய்கிறதனால் அதற்கொரு தோஷமுமுண்
டாகிறதில்லையென்பது முலகறிந்த வுண்
மையே. அப்படியிருக்கவும், இவர் பிடிவா
தத்தால் ஏனோ, அருவங்கெட்டுத்தான் உரு
வமாகவேண்டுமென்றும், அருவத்தினின்று
முருவந்தோன்றமாட்டாதென்றுஞ் சாதிப்
பான் முயலுகின்றனர். அது;

உலகினிற் பதார்த்தமெல்லா முருவமோ
டருவமாகி, நிலவிடுமொன்றென்றகாநின்று

MADRAS 1914

வந்நிலையேபோல, அலகிலா அறிவன்றனு
மருவமே யென்னிலாய்ந்து, துலவியபதா
ர்த்தந்தோன்றயக் கூடுவன் குறித்திடா
யே" என்றபடி நமது சமயத்திலுள்ள
போதந்தானே ஆனாலென்னை?

தாயுமானர்.

"காட்டத்திலங்கி கடையவந்தாலென்ன
வுன்னும், நாட்டத்தினூடுவந்த நட்பே
பராபரமே." என்றும்;

தேவாரம்.

"விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போன்
மறைய நின்றுளான் மாமணிச்சோதியான்
உறவுகோனட் டுணர்வுகயிற்றினாற்
முறுகவாங்கிக் கடையமுன்னிற்கும்"

என்றுஞ் சுருதி போதங்களுண்மை
யால், பரிபூரணரும், அருபியானவருமாகிய
எல்லாம் வல்ல இறைவர்; வேதசிவாகமங்
களைத் தந்தருளுதற்பொருட்டும், தம்மை
யடைந்தாரை யறிவெழுப்பியுய்விக்கவேண்
டியும், ஒரு திருமேனிகொண்டருளுகின்று
ரென்பதைச் சம்மதிக்கும் அறிஞரே நம்
மவராயினர். அந்த நம்மவர்பொருட்டே
(பிரஹதா 4, 3, 1-ல்), "பிரமத்திற்கு உரு
வம், அருவம், என்றிரண்டே வடிவங்கள்"
என்ற போதமுண்டாயிருக்கிறது' இவ்வுப
நிஷத்து (வேதாந்த) வாக்கியார்த்தமாகிற
உருவந்திருமேனியையும் அங்கீகரித்துநிற்
கும் நம்மவர்தாமே உத்தமமான வேதாந்தி
களெனவும் படுவர். படவே ஜீவபோத
முனைப்பைக்கொண்டாராய ஆராய்ச்சி வல்
லபண்டிதசிகாமணிகளுட் சிலர் கூற்றுக்கள்
பிரம்மவித்துக்களாற் போதிக்கப்பட்ட சுரு

தி போதவல்லுனர் முன்பில் அஸ்திரமாத
லறிக. இவ்வுண்மையுடன், அகவழிபாட்
டை மாத்திரமே யங்கீகரிக்கிற ஒருசாரா
ராகிய இவ்வேதாந்திகள் "உருபாருபம்"
ஒன்றனையே ஒப்புக்கொண்டவராகின்று
ரென்பது மிங்கே ஞாபகப்படுத்திக்கொள்
கிறேன்.

இனி, நமதினத்தி லொருசாராராகிய
வைணவரும், மாத்துவராகிய ஒரு சாரா
ரும், சாட்சாத் விஷ்ணுபகவானுக்கு அர்ச்
சை, விபவம், வியூகம், பரம், (சூட்சுமம்)
அந்தர்யாமி, என்னும் ஐந்துவடிவங்களுண்
மையாகக்கண்டுவழிபடுகின்றனர். அன்னோ
ரது கொள்கையில் வாஸ்தவத்தில் சைவ
ரால் வாஸ்தவதேகம், கற்பிததேகம், மந்திர
தேகம் தந்திரதேகம், யந்திரதேகம், என்
னும் ஐந்தனுண்மை பேசப்படுந்தன்மை
போன்று பேசப்படினும், அவையிரண்டற்
குங் பகலுமிரவும்போன்ற வேற்றுமையுண்
மையையுந் தெரிந்துகொள்ளுமாறு இங்கே
அவரது கொள்கையைச் சிறிது விவரிக்
கின்றேன்.

I அர்ச்சை = பிம்போ (பிரதிமோம், பூசனைசெய்வான் வைத்துக்கொள்ளப்பட்ட மூர்த்தங்கள்.

II விபவம் = விஷ்ணு வாலயங்களிலே காணப்படும் தாரு, தாமிரம், சிலை, முதலியவைகளாலான மூர்த்தங்களில் மூர்த்திகளாக வரிக்கப்படுதற்காகவே முன்னவதரித்துள்ளவும், மேல் வருவதுமாகிய தசாவதாரங்கள் முதலியனவாம். இவை நல்லோரைக்காப்பாற்றவும், தீயோரைத்தண்டிக்கவும், தர்மங்களை நிலைநிறுத்தற்கா

வும், இச்சையினாலே தரித்துக்கொண்ட சரீரங்களெனப்படும்.

III வியூகம் = ஈண்டுக்கூறப்பட்ட அவதாரமூர்த்தங்கள் அம்சங்களென்று கேட்கப்படுதலானே அம்சியேயாக விளங்குகின்ற அந்தக்கரணரூபமாகிய, சங்கர்ஷணன் (மனம்)வாசுதேவன், (புத்தி),பிரத்யும்நன் (சித்தம்), அநிருத்தன் (அகங்காரம்) ஆகிய நால்வர்.

IV சூட்சுமம் = தேஜோமயமாய் ரஜோகுண தமோகுணங்கள் கலவாதுள்ள சுத்தசத்துவசொரூபமாம். இது-சர்வக்ஞத்துவம், நித்தியதிருப்தி, நித்தியஞ்ஞானம், சுவாதீனம், குறைவற்றசக்தி, அளவற்றசக்திகளாம் *சுத்தசாட்குண்யராகிய பரவாசுதேவர் (பரப்பிரமம்) என்னும் முத்திஸ்தானமாகிய பரசரீரம்.

* சுத்தசட்குணங்கள் = தன்வயத்தனாதல், முதலிலனாதல், உடம்பிலனாதல். எல்லாநலமுளனாதல், எங்கு வியாபகனாதல், எவற்றிற்குங்காரணனாதல், என்னும் ஆறுகுணங்களாகவும், அவாவின்மை, ஈசுரத்தன்மை, கீர்த்தி, செல்வம், ஞானம், வீரியம், என்னும் ஆறுகுணங்களாகவும், வேறுவிதத்துங் கூறுவாருமுளர்.

V அந்தர்யாமி = ஒவ்வொரு ஜீவனுக்கும் உற்றதுணையாக வுண்ணின்று அவனவன் செய்தனமுன் கருமங்கட்குத்தக்கபடி நன்மைகள், அல்லது தீமைகளைசசெய்வானியக்கி நிற்கும் ஏவுதற்சக்தி ஸ்வரூபமாம். இதுவே யோகத்தியானஞ் செய்பவர்கட்குப் பிரத்தியட்சமாய் வேண்டியவைகளைக்

கிறபடி இறைவனுக்கு ஐந்துவடிவங்கள் அவர்கள் கொள்கையிலுண்மையேயாககண்டாம். அன்றியும், அர்ச்சோபாசனையால் மனத்தின் கல்மஷம் நீங்கும்; அது நீங்கவே விபவோபாசனைகைவரும், அதன்மேல் வியூகோபாசனையிற் பயில்வது சுலபமாம். அப்பால் சூட்சுமோபாசனையும், அந்தர்யாமிசேவையும், இனிது பலித்தலால் அன்னே விசிஷ்டாத்வைதப் பேற்றிற் கருகமாகலாம். என்றும் பிரசங்கிக்கின்றனர். இவரது கொள்கையில்,

"எல்லார் பிறப்பு மிறப்புமியற் பாவலர்தஞ் சொல்லாலுணர்ந்தேம் நஞ்சோணேசர் = இல்லிற், பிறந்தகதைபுங்கேளோம் பேருலகில் வாழ்ந்துண், டிறந்தகதையுங் கேட்டிலேம்" என்றபடி, பிறப்பிறப்பின் கட்படாத அயோனிஜராகிய சிவத்தைவழிபடுவான் கொண்ட சைவாதுகொள்கையிற் கேட்கப்படும். விக்கிரகாராதனம் போலன்றிப் பிறப்பிறப்பின்கட்பட்டுள்ள மச்சர், வராகர், நரசிங்கர் கூர்மர். வாமனர், பலராமர், கிருஷ்ணர், பரசுராமர், இரகுராமர், என்னும் ஒன்பது பேர்வழிகளுடையவும், இனிவரவெதிர்பார்த்துக் கொண்டிருக்கப்பட்ட கற்கியினுடையதுமாகிய அவதார மூர்த்தங்களின் பிரதிமைகளும் இவரால் வணங்கப்படுகின்றன வென்பது நமக்கு ஸ்பஷ்டமாகிறது. ஆனால் ஈண்டெடுத்துக்கொள்ளப்பட்ட விக்கிரகாராதனமென்னும் விஷயத்தை மறந்தாயினும் மிவர்மறுக்கத்துணிகின்றிலர். ஆதலின் இது விஷயத்தில் இவரும் நமதுபக்ஷத்திலாகி நம்மினத்தாரென்றுபசரிக்கத்தக்கவராயினர். இந்தமட்டில் இங்கே வைணவரும், மாத்துவ

ளாரென்பது சூசிப்பிக்கப்பட்டது.

ஆனால்—"உருவம்" ஒன்றே மாத்துவருக்கு அங்கீகாரமாம். ஸ்ரீவைணவருக்கோ, உருவத்துடன் அந்தரியாமித்துவ (உயிர்தொறுமுடனாக நிற்கும் அரூப)மும் உடன்பாடாகும், என்றொரு கேள்வியுமுண்மையாகிறது. ஆயினும் இவ்விருகட்சியாரும் விஷ்ணுபட்சத்தாரென்பதிற் சம்சயமில்லை. இருந்தாலும், வைணவர்களைப் போல மாத்துவர் அத்தனை சிவத்துவேஷிகளல்லரென்பதுமீங்கே ஞாபகப்படுத்திக்கொள்கிறேன். இதுகாறும் சொல்லிவந்த வுண்மைகளால், I ஸ்மார்த்தர் = உருபாரூபத்தையும், II மாத்துவர் = உரூபத்தையும், III வைணவர் = உரூபம், அரூபம், என்னுமிரண்டனையும், IV சைவர் = உரூபம், உரூபாரூபம், அரூபம், என்னும் மூன்றனுடன் அதீதத்தையும், கைக்கொண்டுள்ளா ரென்பது நன்கு போதரல் காண்க.

இஃதொருபாலாகவும், இந்நான்கு பட்சத்தார் பேரிலும், பட்சத்தார் போன்ற சிலம்பர்வழிகள் (நவீனநாகரீகிகள்) சுருதிகளிற் கேட்கப்படுகிற முழுமுதற் கடவுளுண்மையை விக்கிரகாராதனம் (ஆலயவழிபாடு) இல்லாமலே அறிவகையாலறிந்து கொள்ளலாமென்கின்றனர். அவர் கூற்றையும் சரிபார்ப்பாம்.

'அறிவகை' என்பது போதப்பிரகாரமாம். அது இலக்கணம், உத்தேசம், பரீட்சை, என மூன்று விதமாயிருக்கும். அம்மூன்றனுளொன்றாகிய இலக்கண மென்பது-வினை

றுதலையே குறிக்கும். அங்ஙனம் சிறப்பித்துப் பேசுதற்கு ஒரு பொருளைக்கண்டுதான் தீரவேண்டுமென்றில்லை. கேள்வியளவையாலும் நன்றெடுத்துப் பேசலாம். அது போலவே, உத்தேசமென்பதிலுமாகும். உத்தேசமென்பதோ, விவரிக்கும் பொருளின் பெயர்மாத்திரம் கூறுதலாகும். ஆகலின் ஒரு பொருளின் பெயரைக்கேட்டவாறே சொல்லுதல் அத்தனை பிரயாசமன்று. அங்ஙனம், பேர் சொல்லவும், சிறப்பித்துப்பேசவும், கேள்வியளவையால் எளிதே தெரிந்துகொண்டு விவரிக்கும் ஒரு பொருளினிடத்து இவ்விலக்கணம் உண்டோ, இல்லையோவெனப் பார்த்தலாகிய பரீட்சையங்கூடியன்றோ 'அறிவகை' என்று கேட்கப்படுகிறது. அந்தப்பரீட்சை கண்மூடிகளுக்கு முண்டாயிருக்குமோ? யதார்த்த பரீட்சணஞ் (சோதனை) செய்தற்குக்கண்ணறிவுமுள்ளவரன்றோ யோக்கியராயிருக்கின்றனர். அங்ஙனஞ் சிறப்புற்ற கட்புலனாலுங் கடவுளுண்மையை ஆராய்ந்து கோடலே "விக்கிரகாராதன"மாமென்னுமுண்மையுணர்ச்சி கைவருகிறவரை இவர் கடவுள் விஷயத்தில்மாத்திரங் கண்ணறிவிழந்தவராயினர். ஆதலினா லன்றோ! அதிவீரராமபாண்டிய மகாராஜா,

"பெருந்காதல்கோண் டநுதினம்பேதை
நெஞ்சடியேன், உருகிநாடியும் வெளிப்
படாவுனையுளத்துணர்ந்தேன், இருகணா
வுங் காண்பதற் கென்றெதிர்ந்திடுவாய்,
கருதகண்டனே கருவையிற்கோ நறுங்
கனியே"

என்றும் மன்றாடி நின்று காட்சிபெற்

கிரகாராதனத்தா லன்றோ பெறுகின்றார் மேலோர். ஆதலானே கேள்வி யளவை யாற் கடவுளென்றபேர் சொல்லுதலும், அவரைப்புகழ்ந்துரைத்தலும், உத்தேசமும் இலக்கணமுமாமே யன்றிப் பரீட்சையுங் கூடியதாகமாட்டா. ஆகவே பரீட்சையில் வழி "அறிவகையாலறிதலும்" முற்றுப்பெறுதலின்மை யுணர்க.

இதன்மேல் வேறுசிலர், ஒருபாடுவெங் கெதிர்க்கின்றனர். அவரது கொள்கையில், விக்கிரகாராதனத்தை யொழித்தற்கு,

"எண்ணுமெழுத்துங் கண்ணெனத்தகும்"
"எண்ணென்ப வேனை யெழுத் தென்ப
விவ்விரண்டுங் கண்ணென்ப வாழுமுயிர்க்கு"

என்னுஞ் சுருதிபோதங்களை யோராதர வாக்கொண் டேறினுற் செயித்துவிடலா மெனத்துணிந்து, கணிதநூல் இலக்கண நூல்களின் வழியே கடவுளுண்மையைக் கண்டுகொள்ளலா மென்பதேயாம். அதை யும் விசாரிப்பாம்.

நியாயவாயிலாக—வஸ்துவி (கடவுளி) னிலக்கணமின்னது, அதன் சொரூபமின்னது, அஃதிதனுற் கொள்ளத்தக்கது, என்பதெல்லா முணர்ந்துகோடல்கூடும். அவ்வுணர்ச்சி வன்மையைப் பிழையன்னியிற் பேசுதற்குவேண்டுமானுல் இலக்கண ஆராய்ச்சியுபயோகமாம். ஆதலின் அவ்விரண்டும் (நியாயமும், இலக்கணமும்) கண்ணென் றுபசரிக்கப்பட்டன இங்கே 'கண்' என ஒருமையில் வைக்கப்பட் டிருத்தலானே கேள்வியளவை யொன்றனுணரும் தருக்க விலக்கணவல்லுனரை ஒற்றைக் கண்ண ரந்நூலுணர்வினுண்மையை நிலைப்படுத்த வல்ல பிரத்தியட்ச வுணர்வுக்கண்ணு மறிஞருக்குவேண்டியதாவசியகமன்றோ? அந்த வுண்மையை,

பரமததிமிரபாநு.

"காண்டலநுமானங் கதையநுத்தாபத்தியிவை, யீண்டிசைத்த வெண்ணெனம்வயெண்" 'வழப்பதத்தை வாக்கினுக்கு ஞாற்றிவரமாக்கு, மெழுத்தெழுவாயைந்துமெழுந்து" என்று எண்ணுமெழுத்து மென்னு முண்மையை விவரிப்பானெழுந்த இக்கவிகளில் முதற்கவியில் 'காண்டல்" என்னும் முதனிலைவைப்பினுலேயே சூசிப்பித்தல்கொண் டுணர்ந்துகொள்க. இதனுனே பார்வையுங் கேள்வியு மாவசியகமென்பது வலியுறுக்கப்பட்டது. அல்லாமலும் எண்ணுமெழுத்துமென்னும் பதப்பொருளுமெடுத்துக்காட்டியாயிற்று. ஆனுலும், பிழையறப்பேசுதற்கு மாத்திரமுணர்வெழுப்பு மிலக்கணத்தை விடுத்து, கண்வழியுண்மையேயாய், செவிவழிப் பொருளறிவெழுப்புந் தருக்கநூலும் விக்கிரகாராதனத்தை விரோதித்திட் டில்லை யென்பதையு மிங்கே விஸ்தரிக்க வேண்டிய தாவசியகமாதலின் சிறிது விஸ்தரிக்கின்றேன்.

I. காண்டல் = இது பொறிகளாற் காணப்படுபொருளை யறிதல். இதுதான் புலன் (இந்திரியவுணர்ச்சி)களைப் பொறிகள் நேரே தொடர்ந்துணரு முணர்வெனப் படும். நேர்பார்வை, பிரத்தியட்சம், சாட்சாது என்பது மிதுவேயாம்.

II அநுமானம் = இது, குறிகளானு

குறிகளைப் பொறிகள் நேரே தொடர்ந்து அவற்றின்வழி நின்றாராய்ந்து றைபொருளை யுணரு முணர்வெனப்படும். குறியாராய்ச்சி, கருதலறிவு, அநுமித்தல், என்பதுவு மிதுவேயாம். காரியத்தாற் காரணமறிதலாகிய இவ்வநுமான அறிவை, புகையைக் கண்டு நெருப்புண்டென்பது போன்ற குறிப்புணர்ச்சி யென்னலாம் இதனை உற்றுணரின், முன்னே சமயலறை முதலியவற்றில் அடுத்தடுத்துத் தீயொடு புகையுண்மையுங் கண்டுள்ள அநுபவத்தினுலேயே புகை தீக்களது சுபாவ சம்பந்தம்பற்றி யாண்டுப் புகையுள ஆண்டுத்தீயென்று துணிதல் வழக்காதலின் இவ்வநுமானம் பிரத்தியட்சத்திலிருந்தே ஜன்னியமா மென்றறிக. அன்றியுங் கருதலநுமான மென்னொரு கேள்வி வருங்கால் அது உரையால் அறிவினளவை அறிதல் என்னும் பொருடருதல்கொண்டு சத்தப்பிரமாணத்தி லடங்குத லறிக.

III கதை = இது, கருத்தாமொழியாகிய ஆகமத்தின் பதப்பொருளைக் கேட்டறிதல், இதுதான் ஆராய்ச்சியின் பயனுணர்தல், மாசிற்றவிர்தல், நியாயம்பேசுதல் பிரசித்தப்படுதல், முதலிய கண்ணியமுள்ள புண்ணியச்செயல் கைவருதற்குறிய வலியுடைய சொற்களாலே பொருளை நினைத்துணரு முணர்வெனப்படும். கேள்வி, விசாரம், ஆராய்ச்சி என்பதுவுமிதுவே. இது உபதேசகலை, தந்திரகலை, மந்திரகலை, என முத்திறத்தி லுண்மையாக் கேட்கப்படுகிறது. இங்கே உபதேசகலையென்றால், கடவுட்டன்மையை அறிவிப்பதும், தந்திரகலையென்றால் கடவுளை யறிந்தடைதற்குரிய கிரியைகளை யறிவிப்பதும், மந்திரகலையென்னல் கடவுளை யறிக்கின்றதும், யோக நெறியை போதிப்பதுமாகும். ஆனுல், இவ்வுரையளவையை சத்தப் பிரமாணத்தைக்கொள்ளு மறிஞருக்குப் பிராந்தன், வஞ்சகன்மா ருரைகளை யங்கீகரிக்கப்படாதென வற்புறுத்துவது மான்றோர் வழக்கு அந்த வுண்மை,

'தீங்களழுதாநின் றிநுவாக்கை விட்டரசே போங்குவிடமனைய பொய்நூல் புலம்புவனே'

என்னும் போதத்தால் நன்குவெளியாம். ஆகவே அங்கீகரிக்கத்தக்கது ஆப்தவாக்கியமே யாம். அது (ஆப்தவாக்கியம்) கேள்வி, பதம் பதப்பொருள். என மூன்றுவிதமாக் கேட்கப்படும். படவே, கேள்வியார்பகமும். பதத்தாற் பதப்பொருளும், ஞாபகத்திற்கு வருதல்கண்டாம். அதுகொண்டு பொருளையறியவேண்டு மென்றதோரிச்சை கைவருதல் ஸ்பஷ்டமாம். அந்த சுபேச்சை கைவரவே அது (சுபம்) பெறுதற்குரிய புறக்கிரியையாகிய ஆலயவழிபாட்டிலும். அகக்கிரியையாகிய யோகப்பயிர்ச்சியெனப்படும் விக்கிரகாராதனத்திலும், முயல்வழி அகத்தும் புறத்து மிறைவனுண்மையை யறிந்தடையலாமென்னுமோ ரறிவின் றுணிபையு முண்டாக்குவானே, அவ்வுரையளவையில் தந்திரகலை, மந்திரகலைகளுண்டாயிருக்கின்றன. இவ்வேதாகமங்கள் பரமாப்தனு லறிவுறுத்தப்பட்டதாகலின், அறிவுறத்தறிந்துகொண்ட ஆப்தர்களால் மேலும் வெளிப்படுத்தப்பட்ட அவை பிரத்தியட்சனின் றுண்டாயினவாகலின், உரையளவையும் பிரத்தியட்சத்திலிருந்தே ஜன்னியமாமென் றுணர்க.

IV அருத்தாபத்தி = இது, பகலுண்ணான் பருத்திருப்பானென்புழி இரவிலொழித்துண்பா னென்றறிதல். இதுதான், பொறிகள் புலன்களையும் குறிகளையும், நேரே தொடர்ந்து அவற்றின்வழி நின்றாராய்ந்து வெளிப்படையாயும், மறைப்புமாகவுள்ள உண்மையை யறியும் யறிவெனப்படும். அர்த்தத்தின் கற்பனை, சம்பாதகார்த்த கற்பனை யென்பது மிதுவே, இதனை, அன்னத்தின் புசிப்பின்றிச் சரீரத்தின் பருமையுண்டாகாதெனக் கண்டவோ ருண்மைகொண்டுகிக்கப்படுமோ ரூகவுணர்ச்சியென்னலாம். ஆகவே, உலக வழக்கிற் கண்டதோ ருண்மையாகுமிது திருஷ்டார்த்தபத்தியெனவும்படும். இங்கே திருஷ்டமென்பது காண்டலென்னும் பொருடரலானே இந்த அருத்தாபத்திப் பிரமாணமும், பிரத்தியட்சத்திலிருந்தே ஜன்னியமாமென்பார் பெரியோர்.

ஈண்டறிவுறுக்கப்பட்ட நான்கு பிரமாணங்களும், பிரத்தியட்சமும் பிரத்தியட்சஜன்னியங்களுமேயாமென்று கேட்கப்படுகின்றன. படலானே, பிரத்தியட்சமொன்றிருந்தே சேரிற்காணப்படும் திணை, பால், இடங்களையறிதலாகிய காண்டலும், அக்காண்டலின் வழி முன் அநுபவித்துள்ள வியாப்தியின் சமஸ்காரமாகிற குறியைப் பற்றிக்கரந்துறைபொருளை யுண்மையாக் காணும் அநுமானமும், உண்மையை உள்ளவாறே யறிந்து போதித்தும், அறிவித்தும், நிற்கும் ஆப்தவாக்கியமாகிய ஆகமமும், குறிப்புண்மைத் தோற்றமாகிற அருத்தாபத்தியும், அளவைக்கருவிகளாகப் பகுக்கப்பட்டிருக்கலாம்போலும். இன்னும் கேட்கப்படும் பிரமாணங்களும் இந்நான்கனுள் அடங்குமென்பார் பெரியோர். உண்மையிலெல்லாப் பிரமாணங்களு மறிவாளிகளுக்கேற்பட்டனவேயன்றிக் கண்மூடிகட்குண்டாயிருக்கவில்லை யென்பது நிச்சயம். இந்த வுண்மையை,

"காட்சியெல்லாங் கண்ணைவிடக் கண்டதுண்டோ யாதினுக்கும், ஆட்சியுனதுநோ யன்றே பராபரமே"

என்னுந் தாயுமானவர் திருவாக்சாலுமுணர்ந்து கொள்க. இந்தமட்டிற் பிரமாணங்களெல்லாங் காட்சியிற் கண்டநுபவித்துள்ள வியாப்தியின் சமஸ்காரங்கொண்டெழுமுணர்வின் ஸ்மரணையால் கருத்துப்பொரு ளுண்மையின் வெளிப்பாடாமென வலியுறுக்கப்பட்டது. படவே, பிரமாண அளவையாற் கடவுளுண்மை நம்பிக்கைக்கு வருவதன்றி அவரை யெப்படி யடைவிக்க முடியும்? முடியாது. ஆகவே, கடந்துநிற்கும் பொருளெனப்படும் கடவுளை யறிந்தடையவேண்டின் அந்தப்பிரமாண அளவை பற்றித் தந்திரகலை மந்திரகலைகளிற் கேட்கப்படுகிறபடி அகத்தும் புறத்தும் பூசித்து நின்றால் அங்ஙனம் பூசிப்போர் வழிபாட்டிற்கிரங்கி இறைவனும் வெளிப்பட்டநுக்கிரகிப்பரென்ற போதத்தின்வழி நடப்பதே நமது கடமையாம். அவ்வழிபாடுதானே விக்கிரகாராதனமா மென்றறிக. நட்பிற்குகந்த பெட்பினர்காள்!

இப்பிரசங்கத்திலே, நாம் பூசித்துத் தியானித்தும் நின்றால் இறைவனிரங்கிவெளிப்பட்டநுக்கிரகிப்பர், என்றதைக் கேட்டபோது, இறைவன் வெளிப்பட்டநுக்கிரகிப்பரென்பதை நமது எண்ணமாதலின்

அவ்வெண்ணமே இறைவனைச் சிருஷ்டித்துவிடும். அங்ஙனமாயின், அது நமது கருத்தின்வழி வெளிப்பட்ட உருவெளித்தோற்றமேயாம். அவ்வுருவெளித்தோற்றமோ மாயாகாரியமாமன்றி ஈசுவரஸ்வரூபமாக மாட்டாது என்று சொல்ல வல்லாருமிவ்வுலகத்திலிருக்கலாம். அவர் சொல்லுமாறே கேள்வி யளவையால் விசுவாசிக்கிற பிரமவித்தை, காமியவித்தை, என்னுமிரண்டு வித்தைகளில் காமியவித்தையை அப்பியசித்துச்சித்திகளை விரும்புவாருக்கு அங்ஙனமுண்டாவது சகஜந்தான். அவ்வாறின்றித் தமதுடல் பொருளாவிகளையும் ஆசிரியன் வழி இறைவனுக்கு ஒப்புக்கொடுத்து இறைவனதுடைமையேயாய் நிற்கு மெய்யன்பினர்பொருட் டிரங்கி வெளிப்பட்டநுக்கிரகித்தலையும் உருவெளித்தோற்றமென்பதோர் பிராந்தேயாதலறிக. இவர் (ஈசுவரனதருட்டிருமேனியையும் உருவெளித்தோற்றமென்போர்) கருத்ததெல்லாம் காக்கையெனவும், வெழுத்ததெல்லாம் கொக்கெனவும் சொல்லவல்லார் போல்வர். உண்மையில் உருவெளித்தோற்றம் எவன் மனத்தினின்று முண்டாயிற்றோ அவனுக்கே புலப்படும். அயலாருக்கு விளங்கமாட்டாது. இறைவனது காட்சிவடிவமோ அதுபோலன்றி அனைவருக்கும் விளங்கும். அந்த வுண்மையைப் பிட்டுவாணிச்சியம்மை பொருட்டுவந்த கூலியாளர் வடிவம் முதலிய ஒவ்வொரு அருட்டிருகோலங்களையும் அறிந்தார் பலரென்னுஞ் சரித்திரவாயிலாகக் கண்டு கொள்க. இன்னமும்,

"எவ்வுயிர் தோறுமிறைமே வியத்திறன்
செவ்வியபிரம்படி செப்பிடுமென்றேன்"

என்னும் பெரியோர் அங்கீகாரக்கான முணர்க. இந்தமட்டில் ஈசுவரனது திருவருட்காட்சி வடிவங்களுக்கும், உருவெளித்தோற்றத்திற்குமுள்ள வேற்றுமை யுணர்த்தியாயிற்று. இதுவரை நம்மவர் வாதங்களால் கடவுட் காட்சிவடிவத்தை மறுக்க முடியாதேயாயிற்று. ஆகவே "விக்கிரகாராதனம்" அறிஞர் கொள்கையாமென்பது ஸ்திரம்பெற்றது. இப்பால், விக்கிரகாராதனம் என்றது சிவலிங்கார்ச்சனமென்று கேட்கப்படுதலான், அதில் ஏதோதங்களுக்குத் தாஷியமகப்பட்டுக் கொண்டதுபோல இலிங்கம் என்றபதத்தின் அர்த்தத்தையும் அதன் உண்மையையும், உள்ளவாறே தெரிந்துகொள்ளாதபடி குருட்டாழ்வார் கொள்கையைப் பின்பற்றினோர் சிலர் கூறேசனிஜயத்தில், குழறிப்போந்தவழியே பழிப்பான் துணிகின்றனர். அவர்பொருட்டு உண்மையுறைப்பான் முயல்வது விழலுக்கு நீரிறைப்பான்முயல்வதேபோலும். ஆதலின் அவர் போதத்தான் ஐதீகன்மார்மனனுடைவுண்டாகாதபடி ஈண்டுச் சிறிதெடுத்துக்காட்டுதும்.

மறைதேரும் உறவினரே! லிங்கம் என்றபதம் லிங + கம் எனப்பிரிந்து லிங + இலயம், கம் = தோற்றம் எனப்பொருடரலானே உலகுயிரடங்கலும் ஒடுங்கித் தோன்றுதற்கு ஓர் ஆகரமாம் என்பர் உபதேச காண்டநூலார். அதுபோலவே (லிங்கசித்திரித்தல்) எனப்பொருள்காட்டி படைத்தல் காத்தல் முதலியவைகளினால் உலகத்தைச் சித்திரிப்பது என்று எமது நாவலர்பெருமானும் நன்கு வலியுறுத்தருளினர். அப்படித்தானே 'லிங்கம்' என்றபதத்திற்குப் 'பிரகாசம்' என்றபொருளோடு பஞ்சகிருத்தியங்க

ளால் உலகத்தைப் பிரகாசப்படுத்துவதென்றதை 'சூதசங்கிதை' யும் சூசிப்பித்துரைத்தல் கண்டாம் அந்த வுண்மை,

உபதேச காண்டம்.

"அருச்சனைக்குறித்தாயி லிங்கத்திடை யுறைந்தன மொருகணமகலேந் தெரிக்கினென்னுமெண் ணையுமெனச்சிறந்தனங்காண்பனயாவையுஞ் சிதைந்து, பரிக்குமாங்கதன் றன்னிடைவயிக்கையா லிலிங்கமென்றுரைத்திடப்படுமால், அசிப்பெரும் பெயர் முதலிஞெருயிர்த் தொகையாவையு மதனுழையடங்கும்"

சூதசங்கிதை.

"பொலிதரு மிலிங்கமெனு மொழிக்குரைக்கும்பொருள் பிரகாசகமென்பார், மலிதருமறிஞராதலாற் சிவமேமன்னிய லிலிங்கமாம்" "ஆதலிற் சிவமே யெவற்றையும் பிரகாசஞ் செய்வதறிமினிவ்வாறே வேதமுமுரைக்குஞ் சிலர் சிவனுடைய லிலிங்கமாமென விளம்பிடுவோர் காதல் செய்யுடமையாக்கல் கூடாது" என வலியுறுத்தலால் ஸ்பஷ்டமாதலறிக. இதன்மேல்,

முகம்மதிய நண்பரும், கிறிஸ்தவ நண்பரும், எல்லாம் வல்ல இறைவருக்கு அருபமொன்றே சாதிக்கின்றனர். அருபப் பொருளுண்மை மனுஷரறிவுக்கு எப்படிப் புலப்படுமென்று அவர்களை வினவினால், காற்றினுண்மை அடித்தல் அசைத்தல், முதலியகிரியைக்காட்சி மாத்திரத்தால் புலப்படுதல்போல, கடவுளும் உலகத்தோற்றம், நிலை யிறுதிமுதலிய காரியவுண்மைகொண்டே யுள்பொருளாக மதிக்கப்படுகிறதென்கின்றனர் அதனையும் விசாரித்து நமது பக்ஷத்தையே ஸ்திரப்படுத்தி எனது பிரசங்கத்தை முடிக்கின்றேன். அருப விலக்கணத்தை விசாரிக்குங்கால்,

இலிங்க புராணம்

"காலின்றாகி நடந்துழறு கையின்றாகிக் கவர்ந்துமலர். போலுப்விழியின்றாகியநும் பொருள்காணைத்துங்கண்டுமிக, வெலுஞ் செவியின்றாய்க்கேட்டும் வாயின்றாகியியம் பியுஞ்சீர், சாலவுறையுந்தனிச்சுடரே தலைவா நின்னைத் தொழுதோமே"

காசிகண்டம்

"நோக்கின்றிக்கண்டும் நனிக்கையின்றிக் கொடுத்தும் மறைநுவல்வதாய, நாக்கின்றி யறுசுவையு மினிதுணர்ந்துங்காலின்றி நடத்தல்செய்தும், மூக்கின்றி மணங்கவர்ந்தும் செவியின்றிக்கேட்டும் மறைமுதல்வர்யார்க்கும், வாக்கின்றிமனத்தினிற்குமெட்டாநின் றுண்மலரை வணங்கல்செய்வாம்"

என்று கேட்கப்படுகிறபடி காசராஜதியவயவங்கள் வெளிப்படாமே கிரியைக் காட்சி மாத்திரத்தாற் பொருளுண்மையாகமதிக்கப்பட்டு நின்றதோர் நிலையே அருபமாமென்பது எமக்கு முடன்பாடேயாம். அங்ஙனங்கிரியைக்காட்சி மாத்திரத்திலறிந்து புகழப்படுகிற

அவ்வருபநிலையை முகம்மதியநேசர் இறைவனது "சிபத்து" இலக்கணமாமென்று கூறுவர். அங்ஙனம் எவ்விதத்து முணரப்படாத இறைவனது வாஸ்தவ நிலையை

"தாத்து" என்னுமோர் இலக்கணமாகக் கூறுவது மவர்கள் வழக்கு. இங்கே 'தாத்து' என்பதும், 'சிபத்து' என்பதும், நம்மால் இறைவனுக்குண்மையென்று கருதப்படும் அதீதம், அருபம், என்னுமிரண்டனையுமே குறிக்குமென்பது நிராட்சேபமாம் ஆகவே முகம்மதியர் அங்கீகரித்துள்ளது மேனிலைகளையாமென்பதிற் சம்சயமில்லை. பேச்சளவில் இவ்வளவுயர்நிலைகளைத் தம்மதென்று சொல்லக்கூட இன்னமும் கிறிஸ்தவர்கள் கற்றுக்கொள்ளவில்லை. ஆதலின், கிறிஸ்தவர்களைக் காட்டிலும் முகம்மதியர் அறிவாளிகளேயாயினர். ஆனாலென்னை? அருவப் பொருளை அவ்வருபத் தன்மையிலேயே யுண்மையாக வறிந்துகொள்ளும் வன்மை யவர்களுக்குண்டென்கில் அவர்கள் கடவுளுண்மையைத் தெரிந்து சம்மதிக்கிறவராவார். அல்லாதவரையில் அவர்கட்கும் போலியாஸ்திகத்துவந்தானேயுண்மையாம். வாஸ்தவத்தில்,

"ஆரறிவாரெல்லா மகன்ற நெறியநூம்
பேரறிவான் வாராதபின்"

"அருவாகி நின்றானை யாரறிவார்தானே
யுருவாகித் தோன்றானேலுற்று" என்று முழங்குவது மெமதுபட்சமாம். அப்படியிருக்கவும், காற்றினுண்மை யறிவைக்கொண்டு இவர் தப்ப வழிபார்க்கின்றனர். இவரது (முகம்மதியருடைய) வேதபுராணம்.

முச்சுடர்ப்படலம் 19-ஆங்கவியில்,

"பூமியும் மஞ்சள் புனல் நிறம் வெண்மை பொருங்கனல் நிறமது சிவப்பு, நேமியில்வாயுகருநிறம் வானநிறமதுபச்சையாம் நிகழ்த்தின், ஆமிதிற்பூமிக்கைங்குணம்நான்காமப்பினிலனலின் மூக்குணமாம். ஓமிசை வாயுக்கிருகுணம் வானுக்கொருகுணமென்றுரைத்தனரே." என்றபடி வாயுவுக்குக் கருநிறமும், இருகுணமும், உண்மையென்று கேட்கப்படுதலால் வாயு அறிஞர் திருஷ்டிக்குக் கருமைநிறத்தோடுகூடிக் காணப்படுபொருளே யாதல் ஸ்பஷ்டமாம். அது பிரிதிவி, அப்பு, தேயுக்களைப்போலத் தடித்துக் காணப்படாத சூக்ஷுமானு ரூபமாயிருத்தலால் அருபவஸ்துவென்று கேட்கப்படும். அது பிரிவிதியு முருவெனப்படுதலால் அதிவியாப்திதோஷம்("லக்ஷியவ்ருததிக்லேஸதிஅலக்ஷியவ்ருத்தித்வ அதிவியாப்தி." என்றபடி குறித்த பொருளிலிருபபதாயும், இதர பொருட்களிலிருப்பதாயுமுள்ள துஷ்டவிலக்கணங் கூறல்போன்ற குற்றம்) உண்டாகாமைப்பொருட்டு, காற்று முருவுடையதெனப்படாது, அருபமெனப்படுகிறது. அத்தகையகாற்று சர்வவியாபகராகிய கடவுளருபத்தன்மைக்கு உவமானமாகநிற்குமோ? நிற்கமாட்டாது. மேலும் உருவமெனப்படுந்தூலப்பொருள்களுக்கெல்லாம் அருவமெனப்படுஞ்சூக்கும அவஸ்தை ஒருநிலையானுண்டென்னுஞ் சற்காரியத்தினியல்புபற்றி, உருவத் திருமேனி கொண்டருளுமெம திறைவனுக்கு அப்பாற்பட்ட அருவத் திருமேனியு முண்டென்று கண்டோமேயன்றி, வாஸ்தவத்தில் "சிவனரு வுருவுமல்லன் சித்தினோடசித்துமல்லன் பவமுதற்றொழில்களொன்றும் பண்ணினவனுமல்லன்" என்பதே எமது சமயபோதமாம்.

இதனாலே, எல்லாம்வல்ல இறைவன்

சூட்சமாணுருபமாகிய காற்றினைப்போலு மருவமுமல்லன். மலையைப்போல் வுருவமுமல்லன். பின்னையெப்படி எமதிறைவனுக்கு உருவத்திருமேனி யுண்மையாகக்காண்கின்றனர் பெரியோர்? எனின்,

மஸ்தான்சாகிபு (26?)

"முன்னுளிருந்த முறைபோலும் மூர்த்திகராய், என்னுள் வருவதெனக்கெந்தாய் நிராமயமே" என்றுமன்றாடி நிற்றல்போன்று மன்றாடுவோர் பொருட்டு' ஆதியாகமம் 18-வது |அதிகாரத்தில்" 'மம்ரேயின் சமபூமியில்' ஆபிரகாம்" என்னுமோரன்பன் பொருட்டு இரண்டு தூதருடனே தேவன் வெளிப்பட்டநுக்கிரகித் தருளினு ரென்று கேட்கப்படுதலுண்டே; அப்படிப்போலவென்றுதா னவர்களுக்குச் சொல்லலாம்' அங்ஙனம் நான்சொல்லுதல் கொண்டு நம்மவர்க்கு என்மீது கோபமுண்டாயினு முண்டாகட்டும். இங்கே அதனை ஒப்புக்கொள்வதாற் தோஷமொன்றுமில்லை யென்றுணர்க. அன்றியுங்கிறிஸ்தவ நண்பருக்கு,

(சாலோ, 20-12-13-ல்) "கேட்கிறகாதும், காண்கிறகண்ணுமான இவ்விரண்டையுங் கர்த்தருண்டாக்கினுர்." "நீ ஏழையாயாகாதபடி தூக்கத்தைச் சிநேகியாதிரு; உன்கண்களைத்திற; அப்போது அப்பத்தால் திருப்தியாவாய்."

ஷை 21 × 10, 16ல்) "ஆகாதவனுடைய ஆத்துமா பொல்லாப்பையிச்சிக்கும். அவன் கண்களிலவனுக்கு அடுத்த அநுக்கிரகங் கிடையாது." "புத்தியின் வழியைத்தப்பி ...

டத்திலே தாபரிப்பான்" என்ற சுருதிகளுண்டாயிருத்தல் ஸ்பஷ்டமாம். அது கொண்டு,

I காதுக்கு ஒலியறிவும், கண்ணுக்கு உருவவுணர்ச்சியுமே யுண்மையாம்.

II கண்மூடியாயிருப்பவர் (பார்வையற்றோர்) ஏழைகளும் அதிர்ப்தருமேயாவார்.

III கடவுளுக்கு வேண்டாதவனே பாவியாவான். அவன் கண்களுக்கு அவர் (கடவுள்) புலப்படுகின்றிலர்,

IV. கண் காதுகளாற் பெறப்படும் அறிவைத் தப்பி நடக்கிற மனுஷன் பைசாச புவனத்தின் வாழ்வைப்பெறுவான்.

என்னும் போதமெழுப்பிய தேவனேதான், ஆபிரகாம் பொருட்டருளிய காட்சியை ஜனங்கள் விசுவாசித்து வழிபட்டு அவனை (ஆபிரகாமை)ப்போற் காட்சிபெறுவான் வேண்டிக்கொள்ளாதபடியால் கிறிஸ்தவர் கண்களுக்கு நாளையும் புலப்படாதவராயே மறைந்துகொண்டாரென்பது குன்றின்மேலிட்ட தீபமாம். ஆகவே அவர்கட்கு நியாயத் தீர்ப்புநாள்வரை கல்லறையிலிருப்பையும் கற்பித்திருக்கின்றனர்போலும். அப்படித்தானே,

"இந்தநெறிதன்னி லியங்கார் பிசாசாவார், அந்தவினை போம்பரிகாரத்து"

என்று "சைவசமயநெறி" யில் நமக்கும் போதித்தருளினர் எல்லாம் வல்ல இறைவர். ஆனல் அறியாமையுற்றோனே, ...

மபக்குற்றுத்தானே, நாமும் காட்சிவடிவத்தை ஒருகாலத்து இகழ்ந்து நின்றாலும், ஒருகாலத்து மனம் திரும்பினல் பிராயச்சித்தத்தால் பைசாச புவன வாழ்வை யிழந்துவிடலாமென்பதும் நிச்சயமாகிறது.

இங்ஙனம், நம்மீதுவைத்தஇறைவன், பெருங்கருணையை என்று மறவாது நின்றுய்வோமாக. இத்தமட்டில் கிறிஸ்தவநண்பரும், முகம்மதிய நண்பரும் சொல்லுகிறபடி அரூபம் அறியமுடியாதென்பதும் வலியுறுக்கப்பட்டது. ஆதலின், மஸ்தான்சாகிபு மூர்த்திகராய்வந்தருளவேண்டுமென்று மன்றாடினரென்பதூஉம், ஆபிரகாமொருவனுக்குக் கிடைத்ததுபோல் கிடைக்கப்பெறுவான் வேண்டிக்கொள்ளாத அவன் சந்ததிகட்கு (கிறிஸ்தவருக்கு) யாண்டுங் காட்சியில்லாதேயானதும இங்கே சூசிப்பிக்கப்பட்டது.

இங்ஙனம், உண்மை யொருபாலிருக்கவும், சிலர் ஒருகாலத்தில் நாங்களுங்கள் சுவாமியை உடைத்தெறிந்து போட்டோம், மற்றொரு காலத்தில் உங்கள் சுவாமியைப் பிறருடைய சுவாமியாக மாற்றிக்கொண்டார்கள்; என்று பரிகசிப்பதுமுண்டு. அது வாஸ்தவமேயானலும் அத் துர்க்கிருத்தியத்தால் நாம் பரிகசிக்கப்படாமல் நம்மைப் பரிகசிப்போரே பரிகசிக்கப் பட்டிருக்கிறார்களெனபதை என்னல் வெளிப்படுத்தாதிருக்க முடியவில்லை. ஆதலிற் கூறுகின்றேன்.

நமது ஆராதனையி னுண்மையையறியாத சில ஜனங்கள் மதவெறிமேலிட்ட ஒவ்வொரு காலத்தும் அவரவாது அரசபலமுமொற்றுமை பெற்றிருந்ததால் விக்கிரகங்களை யுடைத்தெறியவும், பேர்மாற்றித் திரு...

ப்பிக்கொள்ளவும் ஆரம்பித்தார்களென்ப துண்மையேயாம்.

அவர்கள் பிரதிமா ரூபத்தை விக்கிரகமென்று காண்பவர் (ஐதிக அ... வாளி) களாயிருந்தார்கள். ஆனபடியா... அங்ஙனமோர் துணிபு மவர்களுக்கேற்ப... டது. அதனலென்னை? ஒரு பூமிப்பட... தைக் கிழித்தெறிந்துவிட்டால், அல்ல... பொசுக்கிப்போட்டால் பூமி யழிந்துபோ... மோ? ஒரு படத்தை யப்புறப்படுத்திவிட்... அஃதிருந்த விடத்தில் வேறொரு படத்தை... போட்டுவிடுதலினலேயோ, அல்லது அ... படத்தில் முன்னுள்ள வுருவத்தை மறை... து வேறொருருவத்தை எழுதிவைத்... விடுதலினலேயோ, முன்னைய ல்... ரூபனில்லாது போவனே? அவ்வுண்... மை யறியுமறிவின்மையால் துஷ்டர்க... யற்றுர் துர்க்கிருத்தியங்கொண்டு உண்... யுண்மை யாதலியாண்டுங் கண்டதின்... அத்தகைய பயனில் முயற்சிகள் (துஷ்ட... சேஷ்டைகள்) இனியாண்டுந் தலையெ... காதபடி.

இந்தியன் பீனல்கோடு 298-வது பிரி...

"ஒருவனுடைய மதசம்பந்தமான ... ணர்ச்சிக்கு சங்கட முண்டுபண்ணவே... மென்று தேர்ந்த எண்ணங்கொண்டு அ... னுக்குக்கேட்கும்படி எவனவது பேசி... லும், தொனிசெய்தாலும், அவனுடை... கண்ணுக்கு எதிரில் சேஷ்டைபண்ணி... லும், எதையாவது வைதாலும், அப்ப... பட்டவன் ஒரு வருஷத்திற்கு அதிகப்ப... மல், இருவகைக்காவலில் எதிலாகிலு... வைக்கப்படுவான், அல்லது அபராதத்...

டீைக்குமுட்படுவான்." என்றதாதிய நீதி
புள்ள சட்டங்கள் பிறந்துவிட்டன.

ஆதலின், உங்கள் சுவாமியை உடைத்
தெறிந்து போட்டோம்; உங்கள் சுவாமியை
எங்கள் சுவாமியாக்கிவிட்டோமென்று பிதற்
றித்திரியும் மதவெறிகாரர் கோட்டம் தற்
காலத்திலடங்கிப் போயிற்று. அங்ஙனம்,
கக்கண்டிப்பான சட்டங்களை ஏற்படுத்தி
ருக்கிற கடவுட்பக்திமேலிட்ட மேலான
நாகரீக கவர்ண்மெண்டின் அரசாட்சியின்
கீழுள்ள இக்காலமே பரிஷ்கார காலமெ
னப்படுகிறது.

அத்தகைய சீர்திருத்தமுள்ள அங்கிலி
ஷ்கவர்ண்மெண்டின் பிரஜைகளாகிய நாம்
மதிநிறைவருக்காகமனப்பூர்வமாகவும், உள்
அன்புடையோராகவும், துதிசெலுத்துவா
ரும் முன்னேற்றமுடையராய் வாழ்வோ
மாக.

இனி, சீர்திருத்த சிகாமணிகள் அவா
நயதேசத்திற்குச் செவிகொடுக்கும் களிஷ்
டன்மாரை நோக்கி, ஓ! அஞ்ஞானிகளே!
உங்கள் சுவாமிக்குக் கண்ணிருந்துங்காணு
கிறதா? காதிருந்தும் கேட்கிறதா? மூக்கி
ருந்தும் முகருகிறதா? வாயிருந்தும் பேசுகி
றதா? சரீரமிருந்தும் ஸ்பரிசிக்கிறதா? ஓரறி
வில்லாத ஒரு சுரூபத்தை நீங்கள் சுவாமி
யென்று கொண்டாடுகிறீர்களே! அப்படிப்
பட்ட உங்களுடைய சுவாமிக்கு உங்களால்
உண்டாக்கி வைக்கப்பட்டிருக்கிற கைகளைக்
கொண்டு ஏதாவது வேலைசெய்யமுடியுமா?
கால்களைக்கொண்டு நடக்கமுடியுமா? என்
னவாதிய பல கேள்விகளை காணமின்றிக்
கேட்கத்துணிகிறார்கள். அந்தோ! இவரதறி
யாமையின் றுணிபுக்குச் சிறியரும் விலாக்

குலுங்கச் சிரிப்பரே! அதுபற்றிய, டயமே
யிவருக் குண்டாகாமைகொண்டு இவரை
நிர்ப்பயத்துவ சாதனங் கைவந்தவரென்ன
லாம் போலும்.

இவர துபந்நியாசத்தைக் கேட்டுவந்த
ஒரு வித்தியார்த்தியைநோக்கி, 'ஹே! நண்
ப! அங்கு என்ன விசேஷம்?' என்று நண்ப
ரொருவர் வினவியபோது, அவன்:

'அங்கே ஒரு பிரசங்கம் நடந்தது. அதில்
ஒரு கூட்டத்தார் பூமிப்படத்திலே (In the
map of world) காணப்பட்ட சமுத்திரத்
திலுள்ள மீன்களைப்பிடிக்கவும், ரயிலிலே
பிரயாணிக்கவும், தங்கச்சுரங்கத்திலே பொ
ன்வெட்டியெடுக்கவும் இப்படிப் பலவுமாரம்
பித்ததில் ஒன்றுங் கூடாமலிருக்கிறதாம்
அங்ஙன முயலு மவருக்கு அது (படம்) அப்
பிரயோசனந்தானே? அதுகொண்டு படசே
வையை எங்களையும் அங்கீகரிக்கவேண்டா
மென்று கத்துகிறாப்போலிருக்கிறது. அவ
ரது பிரசங்கமெல்லாம் ஆலயத்திற் காணப்
படும் ஈசுவரப்பிரதிமா ரூபமொன்றாயினும்
அவைப்பார்க்கவாவது பேசவாவது செய்
யவில்லை யென்றும், அது கொண்டு நம்மவ
ருக்கும் ஆலயவழிபாடு கூடாததாமென்றும்
வலியுறுத்துவதொன்றேயாம். அதன்பொ
ருட்டு அவர் தம்பிற்றுமே பலகேள்விகளைக்
கேட்டுக்கொண்டுமே விடையிறுக்கமுடியா
மல் மிரள மிரள விழித்துக்கொண்டும், குள
றிநிற்கின்றனர். அதுதான் விசேஷம்."
என்றான்.

அது கேட்டநண்பர்,"அது விஷயத்தி
ல் உனதபிப்பிராயந்தானென்னை? உன்னி
டத்திலே என்றைக்காயினும்பிரதிமாரூபங்
கண்டாற் பேசிற்றுண்டோ"? என்று மறு

படியும் வினவினர். அதற்குப்பள்ளிப்பைய
ன்:

ஐயா! நானோ சிறுவன். என் மனம்
பள்ளிப்பாடங்களிற் பற்றி நிற்கிற இந்தக்
காலத்தில் மேலான அந்தவுண்மை விளங்கு
மா! எனக்குப் பூமிசாஸ்திரமும், பூமிப்பட
மும் நன்றாகக் கைவந்திருக்கிறது. அது
கொண்டு இவ்வுலகமுழுவதும சுற்றிப்பார்த்
த மகான்மாரில் ஒருவர்போலுமாயினேன்
அப்படிப்போலவே ஆலயசேவையும், சுருதி
விசாரமும் எனக்குக்கைவருங் காலத்தில்
நானும் உத்தம ஆஸ்திகரிலொருவர் போலு
மாவேன். இதுதான் ஆலயத்தைப்பற்றி
யுள்ள எனதபிப்பிராயமாம். இதன்மேல்
ஆலயவழிபாடு கைவந்த மகான்மாரில் மார்
க்கண்டேயர்பொருட்டு அவராற் பூசிக்கப்
பட்ட சிவலிங்கத்தில் பரமேசுவரர் சாட்சா
தாக வெளிப்பட்டு அநுக்கிரகிக்கவில்லை
யா! பிரகலாதன ஆழ்வார்பொருட்டு இறை
வர் கற்றூணினின்றும்நரசிம்மமாகத்தோன்
றி இரணியசம்மாரம் செய்யவில்லையா! இங்
ஙனம் அளவிறந்தசரித்திரங்களுண்மையாத
லினாலும்,

"கண்ணிற்காண்பதுன் காட்சிகையாற்
றெழில், பண்ணல் பூசைபகர்வது மந்தி
ரம், மண்ணுறைந்தும் வழங்குயிர்யாவு
மே, யண்ணலேநின் னருள் வடிவாகுமே"

என்று மெது தாயுமானார் வலியுறுத்துதல்
போன்ற பல அநுபவஞானிகளின் திரு
வாக்குகளும் உண்மையாதலினாலும், யானு
ம் அந்த மேல் நிலையை ஆதரித்து நிற்கத்
துணிந்தால் பிரதிமாரூப மட்டுமா? வேறுகா
ணப்படும். அனைத்தும் எனக்கு சிவசொரூப
மாய் விளங்குமன்றோ! அங்ஙனமிருத்தலின்

அந்த அதிந்தகேள்விக்குப்பதில் சொல்ல
இப்போது நான் தயாரில்லை. என்று பதி
லளித்தான் அந்தமட்டில் விட்டானில்லை.
அதன் மேலும் சிருப்புராணம் 5-ம் படலம்
10—11ல்.

"வெண்ணிலவு துளித்தொழுகும்
மதிநிகர்ன முகம் மதனை விளித்து நோக்கி,
வண்ணமலர் வாய்திறந்து பெரியோன் றன்
திருத்தூதாய் வந்தோனே; பண்ணருநன்
மறைநபியேயானவா பொன்னடிபரவப்பட
யின் வந்தோய், எண்ணரும் பேரொளியு
மும் தொளியில் வரகதிர் வடிவாயிருந்த
வோந்தே"

'அல்லாவின் திருத்தூதர் வேதநபிமுகம்
மதென வெத்திறக்காரர் பொல்லாத
ரகைடைவர் உமதுமயிற் பணிந்து சலிமானை
ப்போற்றிச். சொல்லாரமனத்திருத்தவறிந்
தவரோ சிறந்த பொருட்சுவைமான்வா, எல்
லாருமென்னைப்போல்வார் அறிவரிது சாத
மெனவுடையிற்றன்றே" என்று

"குசையினறபி" வேண்டுதலுக்காக
முகம்மது நபி வரர்களோடு அறபிநாட்டு
அமவகலப் பிரதிமையும் பேசினதாகக்கேட்
கப்படுமந்த அன்னியசரித்திர வுண்மையை
க்கூட இவர் அறிந்திலர் போலுமென்றுஞ்
சொன்னான். அதுகேட்ட நண்பர் மாண
வனைப்புகழ்ந்து ஆசீர்வதித்தனுப்பினாராம்.
என்று நிகழ்ந்துள்ளதோர் சரித்திரமே அப்
பிரசங்கிகள் இன்ன விதமாக மதிக்கப்பட்
டிருக்கிறார்களென்பதை நன்கு போதப்படு
த்தி நிற்றல்கண்டாம் ஆதலின் அவரது
வீண்கூக்கலைப்பற்றி இங்கே விசேஷமாக
விஸ்தரிக்கவேண்டாததாயிற்று.

ஆனாலும், அவரது போதனையிலகப்

பட்டினக் கனிட்டன்மார் சிலர், இந்நிலவுலகத்திலே ஒவ்வொருவனும் தத்தமனைவியுடன் இரவிற் கூடிக்கிடந்து விடிந்தெழுதல் போல, எல்லாமவல்ல இறைவராகிற நமது கடவுளும் தமது தேவியுடனிரவிற் பள்ளியறையிற் புணர்ந்திருந்து விடிந்தெழுதலான கிரியைகள் ஆலயத்தில் நடப்பதுபோலவும், அது அருவருக்கத்தக்கதாமென்றும், பேசிக்களிப்பாட்டமாடக் காண்கின்றோமன்றோ! அந்தப்பிராணிகள் பொருட்டுண்மையறிவுறுத்த லாவசியகமேயாம் ஆதலின், அறிவறிந்த மக்களுக்கெல்லாந் தெரிந்துள்ள ஆலயக்கிரியா விசேஷங்களெனக்குத்தெரியுமென்பதை மாத்திர மிங்கே சிறிது குறிப்பிக்கின்றேன்.

கண்பார்காள்!

"முகமெலாங் கண்ணீர் முத்தரும்பிடச் செங்கை முகிழ்ப்ப, அகமெலாங்குழைந் தானந்தமாக நல்லடியார், இகமெலாந்தவமிழைக் கின்றனர் செய்கோவேழை, சகமெலாம் பெறநின்னருணதா மாய்ச்சமைந்தோய்" என்பது நமது தாயுமானாருமையவாக்காலுலகறிந்தவுண்மையே. இதில் இறைவனுலகத்தைத் தனது திருவருளாகிற உதரத்தினின்றும் பெறுவித்தானென்பது நன்கு வலியுறுத்தப்பட்டது. இதனாலே திருவருளாகிற உதரம்பெறுவானும் உலகுபேறுமாதல் ஸாக்ஷேபமாயிற்று. ஆகவே, இறைவனாகிற அருளாளன் (பெறுவிப்பான்) அருள்(பெறுவான்) உலகு(பேறு) என்னுமூன்று சப்தார்த்தங்களே பிதா, மாதா, மகவு, எனவாதல்கண்டாம். இந்தவுண்மைபற்றியே நம்மை 'அமிர்தஸ்யபுத்திரா' என்று சுருதியுமழைக்கிறது. அருளதுசத்தியாகும் 'என்னுஞ் சுருதிப்போதத்தால் சத்தனே அருளாளனாகின்றான் சத்தி அருள் 'ஒளி' 'உமை' எனபன்வெல்லா மொரு பொருட்சொற்களே யாதலறிஞரனைவரும் அறிந்த விஷயமே நமது சைவமதத்தில் சத்திமானை ஆண்பாலாகவும், சத்தியைப் பெண்பாலாகவும், நம்மை மக்களாகவும், வழங்கி வருவது தொன்று தொட்டுள்ளதோர் வழக்கமாம். அந்த வழக்கத்தில் அம்மையப்பராகிய நமது பரமேசுவரர் (உமாபதி) தமது சத்தி (வல்லமை)யை விஸ்ரம்பிக்க விடாதடக்கிக் கொள்ளுதலே அவர் செய்யும் சம்மார கிருத்தியமென்று கேட்கப்படுகிறது. படவே, ஒருவன் கையிலுள்ள பலம் மற்றொருவனையடித்தபோது வெளிப்படுத்தல்போலத் தம்பாலடங்கி நின்ற சத்தியை விஸ்ரம்பிக்கவிட்டு சர்வான்மாக்களையுந் தோற்றுவித்தலே சிருஷ்டியாகும். அங்ஙனந் தோற்றுவிக்கப்பட்ட சர்வஜீவான்மாக்கள் விஷயத்திலுந்தாமே சர்வாதிகாரியாய் நின்று,

"இன்னதலத்தின் பொருந்தினதனு வின்னபயன் இன்னபடியாயிப் பொருந்துமென்றறிந்தே அன்னதலத் தன்னபோது தன்னதனுவன்னபய னன்னபடி, பின்னமறக்கூட்டும் பிரான்" என்றபடி ஒவ்வொருவரையும் அவரவர் வினைக்கண்டுவிடுத்து நுகர்வித்தலேதான் திதியென்பார் பெரியோர். இந்தப்பிரகாரம் நிகழும் சங்காரம் 'சிருஷ்டி திதி' என்னும் மூத்தொழில்களும் இறைவரதென்பதி லெவர்க்கும் ஆக்ஷேபமிருக்காதென்பதும் நிச்சயம்.

ஆனபடியால் "நித்தலுந் துஞ்சும் பிறப்பையுஞ் செய்தவன்" என்னுஞ்சுருதிவாக்கியப்படி நித்திய சம்மாரத்தின் பொருட்டு

சர்வாதிகாரியாய் நின்றசத்தன் சத்தியைத் தன்பாலடக்கிக்கோடலே பள்ளியறை சேர்தலாம். அங்ஙனம் இறைவன் பள்ளியறை சேர்ந்த அளவில் சர்வபிராணிகளும், 'யான் எனது' என்பதற்றுப் பிரேதம் போலச் சுழுத்தியவஸ்தையில் விழுதல் ஸ்பஷ்டமேயாக் கண்டாம். அப்பால்,

நித்திய சிருஷ்டியின் பொருட்டு சத்தன் தனது சத்தியை விஸ்ரம்பிக்கவிட்டுத் தனதிருப்பைக் காட்டி நிற்றலே இறைவன் திருப்பள்ளியெழுச்சியாம். அங்ஙனந் திருப்பள்ளியெழுச்சியானவுடனே இரவெல்லாம் பிரேதம்போல உசும்பாதடங்கிக் கிடந்த சர்வபிராணிகளும் சுழுத்தியின் நீங்கி-யெழுதலும் பிரத்தியட்சமே அதன்மேல்,

திருப்பள்ளியெழுச்சியானது முதல் பள்ளியறைசேருமட்டுஞ் செய்வதாகுகின்ற சர்வபிராணிகளையுந் தத்தம்வினைக்கண் விடுத்து அநுக்கிரகம் புரிதலே நித்தியதிதியாம். இந்தப்பகற்காலத்திலேதான் நாமனைவரும் 'சுவையொளியூறோசை நாற்ற மென்றைந்தின்-வகை தெரிவான்கட்டே யுலகு' என்றபடி பஞ்சேந்திரியங்களின்வழி விஷயக்கிராஹியன் மாராகி நானெனதென்னு மாரவாரித்துக் கொண்டிருக்கின்றோம்.

இங்ஙனம் நிகழுமுத்தொழில்களும் சர்வான்மாக்களுக்கும் பொதுவாக இந்திரியங்களைப் பொறுத்தே நிகழ்வனவா மென்று கேட்கப்படுகின்றன. இதிற்கண்ட சாக்கிராவஸ்தையில் ஆன்மலாபத்தையுத்தேசித்துச் செய்யப்படும் ஈசுரவழிபாடுதான் ஆலயசேவையாம். அங்கே ஈசுவரசந்நிதானத்திலிடப்படும் திரையே ஆன்மகோடிகட்கு ஆன்மநாயகனது (பசுபதிய) ன்மையை மறைத்துநிற்கும் திரோபவ கிருத்தியமெனப்படும். அப்பால் திரையைநீக்கி சோடசோபசாரங்களுடன் சேவைசாதித்தலே அநுக்கிரக கிருத்தியமென்பார் பெரியோர்.

இந்தப்பிரகாரம் எல்லாம்வல்ல இறைவரது பஞ்சகிருத்திய விசேஷங்களே ஆலயத்தில் நடைபெறுகின்ற நித்தியகிரியைகளாம். இந்தவுண்மையை யறியாமல் புருஷஸ்திரீ சங்கமத்தால் வர்த்திக்கிற இவ்வுலகத்தை மாத்திரமே கண்ட அந்தப்பிராணிகட்கும், ஈசுவரவலிமையை கண்டானந்திக்கிற நமக்கும் வெகுதூரமென்றுணர்க.

இங்கே—சிவம், சத்தி, உலகம், எனப் பிரித்து-பிதா, மாதா, மகவு, என வெளிப்பரிக்கப்பட்டாலும், வாஸ்தவத்தில் சிவமும் சத்தியும், ஒருபொருளேயாதலுண்மை. அது 'ஆணல்லப் பெணணல்லவன்றி யலியுமல்லக் காணுருபமல்லக் காணாதரூபமல்ல" எனறபடி அவன், அவள், அது, என்னும் வயவப்பகுப்பிற்கும் அப்பாலதாய், காணப்பட்டதுங் காணப்படாததுமல்லதாய், நிற்குமொருண்மையாற் போதரல்காண்க. அப்படிப்பட்ட சிவம்-உலகத்தைத்தோற்றுவிக்குங்கால்,

கலப்பினால் உடலுமுயிரும்போல அவ்வுயிர்களேயாகியும் பொருட்டன்மையாற் கண்ணுங்கதிரவனும்போல அவற்றின் வேறேயாகியும், உயிர்க்குயிராதற்றன்மையாற் கண்ணொளியு மான்மபோதமும்போல உடனேயாகியும், அவ்வுயிர்களின் வழியினேவி நிற்றலாற் சத்தியேயாகியும், பஞ்சகிருத்தியங்களாற் பதியேயாகியும், இவ்வெத்தன்மைகளினும் வேறாய் இவற்றொன்றா

தும் எஞ்ஞான்றுந்தானே சுயஞ்சோதியாய் நிற்குமந்தவுண்மை நிலையிற்சிவமேயாகியும், கேட்கப்படும்.

பலரும்—பஞ்ச கிருத்தியங்களினுண்மைபற்றித்தான் இறைவனிருப்பை எல்லாருஞ் சம்பதிக்கின்றனர். அவை (பஞ்ச கிருத்தியம்) I ஒடுக்கம் = இளைப்பாற்றல், II தோற்றம் = அவரவர் கன்மமுழுவதுங் கழியுமுகத்தான் மலபரிபாகம் வருவித்தல், III நிலை = கன்மங் கழியுமாறு அவற்றை நுகர்வித்தல். IV மறைப்பு = இருவினையொப்பு வருவித்து மலங்களை முதிர்வித்தல், V அருள் = பந்தத்தை விடுவித்தல், ஆகிய விவ்வைந்துமே யாம்.

இத்தகைய உயிர்க்குறுதி பயத்தனவாகிய பஞ்சகிருத்தியங்கள் இறைவனுக்கு வடிவமின்றி நிகழாவாகலின் அருவம், அருவுருவம், உருவம் எனப்படும். மூன்று திருமேனிகளும் அவனுக்கு வேண்டப்படுவவாயின. அவை—சிவம், சத்தி, விந்து, நாதம், சதாசிவம், மகேசுவரன், உருத்திரன், விஷ்ணு பிரமா, என்பனவாமென்பர் பெரியோர். இவ்வொன்பதனுள் முன்னையது நான்கும் அருபமும்,—பின்னையது நான்கும் உருபமும்,—இடைக்கணுள்ள சதாசிவமே அருவுருவமுமாகக் காண்க. அந்தவுண்மையைத்தானே,

“சிவமாதி நான்முகக் கோவந்த மாமறை செப்புகின்ற, நவமாயிலங்கிய ஒன்றே” என்று நமது தாயுமானாரும் வலியுறுத்தருளினர். அன்றியு மவர்தாமே, “அருள்வடி வேழுமூர்த்தம்” என்று மற்றது-சிவத்தையும் விந்துவையுமொழித்து நின்ற சத்தி, நாதம், மனோன்மணி, மகேசை, உமை. திரு. வாணி, யாகநிற்கும் சிவசத்தி சொரூபங்களைக் குறித்ததேயாம்.

இங்ஙனம் விவரிக்கப்பட்ட சிவகோணங்களாகிய ஒன்பதும், சத்திகோணங்களாகிய எழும், ஆகப்பதினாறு கோணங்களும், பிரிதிவியாதிய பஞ்சபூதங்களுடன் சூரியன்; சந்திரன், ஆன்மாவுங்கூட்டியுள்ள எட்டுத் திககுகளுள்ளேதானுண்மையாக வேண்டும். அத்தகைய உள்ளீடாய ஒரு பசுபதி அல்லது ஜகதீசனாகிய சிவபெருமானுக்கு இவ்வுருபம், உருபாருபம், அருபம், என்னு மூன்றும் தடத்த வடிவங்களேயாகும். ஆகவே சுத்த சச்சிதானந்த ஸ்வரூபமே அவனுக்கு சொரூபமாகக் காண்பார் பெரியோர். . அந்த சச்சிதானந்த ஸ்வரூபியே உயிர்களுக்குக் கன்மமலபரிபாகம் வருவித்தற்பொருட்டுக் கொண்ட கருணைசொரூபமாகிய தமது பராசத்தியின் செயலால் நம்மை யுய்விக்கவேண்டி அம்மையப் பராகியு மெழுந்தருளி யநுக்கிரகியா நிற்பர். அவரே பதி.

இனி—உலகமென்பது, சித்பிரபஞ்சம் (ஆன்மவர்க்கம்) அசித்பிரபஞ்சம் (சடவர்க்கம்), என இருதிறப்படுதலுங் கண்டாம். இவ்விரண்டனுள் ஆன்மவர்க்கமே உயிர்த்தொகையாமென்றுங் கேட்கப்படும். படவே அசித்பிரபஞ்சம் உலகமே யாயிற்று.

ஆதலின் “பதிபசுபாசம்” என்னும் முப்பொருளுண்மை ஸ்பஷ்டமே யாதல்

ச்வேதாச்வதரோபநிஷத்து.

ஜ்ஞாஜ்ஞோ த்வாவஜாவீஸநீ ஸோ!
க்ஷராத்மா நாவீ ஸதேதேவஏக:! [நாய்!
அந்த:ப்ரவிஷ்டஸ்ஸா ஸ்தாஸர்வஜநா
வித்யா வித்யே ஈஸதேயஸ்துஸோந்ய!
ஜ்ஞாத்வாதேவம் முச்யதேஸர்வபாசை
ம்.

(இ—ள்) சர்வக்ஞனபதியும், கிஞ்சிக்ஞானபசுக்களும், அநாதியாயுள்ளவர்கள்; இவருள் பதியாயுள்ளவன் ஈசன் (ஆண்டான்; பசுக்களாயுள்ளசீவர்கள் ஆளப்படுபவர் (அடிமைகள்), பசுபாசங்களை ஒரே தேவனாகிய பதி ஆளுகிறான். ஆளுகிறவனாகிய பதி எல்லாப் பசுக்களுக்கும் அந்தராத்மாவாக விருக்கிறான். பசுபாசங்களை ஆளுகிற அந்தப்பதி அவ்விரண்டிற்கும் அன்னியன். அப்படிப்பட்ட தேவனையறிந்த பசு: எல்லாப்பாசங்களினின்றும் விடுபடுகிறான்.” என்றும்,

ஷை[1—8ல்] ‘இந்த ஜகத்துவியக்தா வியக்தமும் (திரிசியப் பொருளான வுருவமும், அதிரிசியப்பொருளான அருவமும்), க்ஷராக்ஷரமும் (மாறுவதாகிய அசித்தும், மாறாததாகிய சித்தும்) ஆன வஸ்துக்களாற் கூடியது. இதை ஈசுவரன் பரிபாலிக்கிறார். ஈசுவரனல்லாத ஜீவன் அநுபவிப்பவனானதையால் இதிற் கட்டுப்படுகிறான். ஆனால் ஈசுவரனையறிந்து எல்லாப் பாசங்களினின்றும் விடுபடுகிறான்.” என்றும்,

ஷை (4—7ல்] “ஆன்மாவானவன் சரீரத்திலிருந்து கொண்டு தீனத்தன்மையில் மூழ்கியவனாகித் துயரப்படுகிறான். ஆனால் எப்பொழுது யாவராலுந்தொழப்பட்ட ஈசனையும். அவரது மகிமையையும் பார்க்கிறானோ அப்பொழுது துயரமற்றவனாகின்றான்.” என்றும்,

எழுந்த சுருதிகளால் நன்குபோதரல் காண்க. இதுவே ஆகமசம்மதமுமா மென்பார் ஆன்றோர். இவ்வுண்மைப் பொருள்களாற்றானே திரிபதார்த்தங்களுமநாதி நித்தியமா மென்கின்றனம் நாம். ஆதலின,

(a) ஏகசப்தத்தால் வழங்கப்படுகிற சர்வக்ஞனபதி (கடவுள்) ஒருவன்.

(b) சர்வஜன சப்தத்தால் வழங்கப்படுகிற கிஞ்சிக்ஞான பசுக்கள் [ஜீவர்] அநேகர்.

(c) எல்லாப்பாசங்களினின்றும்விடுபடுகிறானென்ற தாற்பாசம் பல, என்பதுங் கண்டாம்.

இவற்றன் [முப்பொருள்களுள்] பசுபாசங்களை யுடைமையாக்கொண்டு பரிபாலிக்கிற ஈசுவரன்பதியும் (ஆண்டானும்), அவ்வுடையோனாலாளப்படுகிற பசுபாசங்களுள்ளே நானடிமை யென்றுவதுணர்ந்து கொள்ளவல்ல கிஞ்சிக்ஞராகிய ஜீவவர்க்கம் அடிமையுமாமென்பதை, எந்தவல்லார்தமும் மறுக்ககில்லார். ஆகவே,

இறைவன்து அடிமைகளேயாகிய நாமொவ்வொருவருக்கும் தன்னையுந் தலைவனையு முணரவொட்டாது தடுத்து நிற்கும் சொரூபமறைப் பொன்றனது நீக்கமும், பெறவேண்டிப் பிரம வித்துணுக்கனாதுக்

தொழப்பட்ட ஈசுவரனைத் தொழவேண்டியதுதானே கடமையாயிருக்கிறது. அப்படித் தொழுதாற்றானே ஈசுவரனையும், அவரது மகிமையையும், அறிந்து அடையும்படியான முத்தியை அவ்வீசுவரனே அடைவிப்பர். (இது-சம்புபட்சம்). அவ்வீடு பேற்றைவேண்டி நாம் தொழுந் தொழுகைதானே ஆலயவழிபாடாம் (விக்கிரகாராதனமாம்).

அந்த வுண்மையை,

"குறிகளும் மடையாளமுங்கோயிலும்
நெறிகளும்மவர் நின்றதோர் நேர்மையும்
அறியவாரணை மாயிரமோதினும்
பொறியிலீர்மன மென்கொல்புகாததே"

என்ற சுருதியாலறிஞர் நன்குணர்ந்து கொள்வர். பொறியிலாராகிய ஏனையோர் அளவிறந்த வேதபாராயண வல்லுநராயினும் அறியவல்லாரல்லரென்பதையு மிந்த சுருதிபோதமே நன்குவலியுறுத்துத லுணர்க.

ஓ! சிவநேசச்செல்வர்காள்!

அறிவிற்சிறந்த நம்மவர்களுள்ளேயே என்றும் நடைபெறுவதாகத் தொன்றுதொட்டு வழங்கி வந்து கொண்டிருக்கிறதுதானே ஆலயவழிபாடு. அதனை அருவருக்கத்தக்க ஜனசமூகங்கடாமே தற்காலத்தில திகரித்துக்கொண்டு வருகின்றனர். 'ஆனாலென்னை? அதன் மகிமை ஒருசிறிதுங் குன்றிற்றில்லை யென்பது முலகறிந்தவுண்மையன்றோ! அப்படியாயின் அது எல்லாம் வல்ல இறைவனதென்பதை எந்த அறிஞர் தாமறுக்கத் துணிவர். முன்னொரு காலத்திலே சைவசமயநெறியை வேரறக்களைந் [illegible]

துவிடவேண்டுமென்றங் கங்கணங் கட்டிக் கொண்டிருந்த எண்ணிறந்த மூர்க்கர்களுடைய பெருமுயற்சியுங்கூடக் கைகூடாமற் போன துலகறிந்த வுண்மைதானே. அது,

"சோற்கோவுந் தோணிபுரத்தோன்றலும்நம் சுந்தரனுஞ், சிற்கோலவாதவூர்த் தேசிகனும் — முற்கோலி. வந்திலரேனீறெங்கே மாமறைநூலெங்கே, யெந்தைபிரானைந்தெழுத் தெங்கே." என்ற தவியராலும் போதரல்காண்க.

இதுகொண்டு "சைவசமயநெறி" மாறுதலடையாவண்ணம் சிவானுக்கிரகத்தால் அந்நாளில் சமயாசிரியன்மாருற் பவித்தனரென்பதே யான்றோர் துணிபு. அவ்வுண்மையை யுணராமல் அவ்வாசிரியன்மார் காலத்திற்றான் 'சைவசமயம்" உற்பவமாயிற்றென்று எத்தனையோ பித்தன்மார் ஒருபாற் கத்தியுகிற்கின்றனர். அவருரைக்குச் செவிகொடுக்கு மறிஞர் ஒருவரேனுமுண்டோ! பொறியிலாரே அவர் வசத்துப் புக்குழல்கின்றன ரென்பதும் வெள்ளிடைமலையாம். காரணம் என்னை? எனின்:—

சிவம்-என்பது நமது சமயாசாரிகளுடைய திருநாமமாக விருக்கவில்லை. அது எல்லாம் வல்ல இறைவனுடைய திருநாமமேயாம். ஆகவே சமயாசாரிகட்கோ திருவாத வூரடிகள், திருநாவுக்கரசு நாயனார், திருஞானசம்பந்தப்பிள்ளையார், சுந்தரமூர்த்தி சுவாமிகள் என்பதாதிய திருநாமங்களாக்கும் வழங்கிவருகின்றன. இந்நால்வருமொரேகாலத்திலுள்ளவருமல்லர், திருஞானசம்பந்தருந்திருநாவுக்கரசரு மொருகாலத்திலுள்ளாரென்று கேட்கப்பட்டாலும், ஒருவருக்குப் பதினாறுவயசும் மற்றொரு

வருக்கு எண்பத்தொரு வயசுமுண்மையாதலின் அவ்விருவருங்கூட முழுவதுமொருகாலத்தவரல்லரென்பதும் நிச்சயம். மேலும் அவ்விருவரு மொன்றுபட்டிருந்த காலம் மிகச் சொற்பநாளேயாம். அத்தகைய அவரில் இன்னார் காலத்துச் சைவமுண்டாயிற்றென்று சொல்லுவா ருண்டானாலும், இதர மார்க்கத்தாரைப்போல நாமும் ஒரு கால நிர்ணயங் கற்பியாததுக்காகத் துக்கிக்கலாம். அவர்போல மதாசிரியர் பெயரால் நமது மதத்தையும் வழங்கிவரலாம். அதற் கிடனில்லையாதலின் அறிஞரொருவருமவருரைக்குச் செவிகொடுத்துத் துக்கிக்காதிருப்பதேயாமென்றறிக.

அல்லாமலும், "சைவம்" என்பதிக்கு 'சிவசம்பந்தம்', என்பதேபொருளாதலின் அநாதிப் பழம்பொருளாகிய சிவத்தைப்போலவே அனைத்து சமயமும் அழிவற்றதாமென்று அறிஞர்சமுதாயத்தில் நிராட்சேபமான ஒரு நம்பிக்கையுண்டாயிருப்பதுமுணர்க. அதுதானே,

'சைவசமயத் தனிநாயகனந்தி. உய்யவகுத்த குருநெறி யொன்றுண்டு, தெய்வசமயஞ் சன்மார்க்கஞ் சேர்ந்துய்ய, வையகத்துள்ளார்க்கு வகுத்துவைத்தானே' என்றபடி சுருதிசம்மதமுமாகின்றது. இந்த சுருதியில் சிவனே 'சைவசமயத்தனிநாயகன்' என்றழைக்கப்படுகின்றார். அப்படித்தானே,

சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

'சைவத்தசெவ் வுருவன்றிருநீற்றானுஞ் மெய்யன், வெண்ணத்தொரு சிலையாலரண் மூன்றுமெரி செய்தான். தெய்வக்கவர் தொழுதேத்திய குழகன் றிருச்சுழியன், மெய்வைத்தடி நினைவார்வினை தீர்த்தலேளிதன்றே."

திருஞானசம்பந்தர்.

"வானவர் மதியோடு மத்தஞ் சூடித்
தானவர்புரமெய்த சைவன் இடம்
கானமடமயில் பெடைபயிலும்
தேனமர்பொழிலணி சிவபுரமே"

திருநாவுக்கரசர்.

"செய்யவுன்கமலபாதஞ் சேருமாதேவர்தேவே மையணிகண்டத்தானே மான்மறிமழுவேந்தும், சைவனே சாலஞானங்கற்றறிவில்லாத நாயேன், ஐயனே ஆலவாயிலப்பனே யருள்செய்வாயே."

மணிவாசகப்பெருமான்.

"பாழ்ச்செய்விளாவிப் பயனிலியாய்க் கிடப்பேற்குக். கீழ்ச்செய்தவத்தாற் கிழியீடுநேர்பட்டுத், தாட்செய்ய தாமரைச் சைவனுக்கென்புன்றலையால், லாட்செய்து லாத்தில்லையாண்டானைக்கொண்டன்றே"

என்னும் வேதபாசுரங்களில் சமயாசிரியன்மாராலும் சைவத்த செவ்வுருவனென்றும், சைவன் சைவன் சைவன் என்றும் அழைக்கப்பட்டிருக்கிறார் எமதிபரமேசுவரர். அங்ஙனமே ஆகமங்களும் 'சதாசிவப்பெருமானே அநாதி சைவர்' என்று கோஷிக்கின்றன வென்றுங் கேட்கப்படுகிறது. அப்படியானால் சைவசமயத் தலைவர்: சிவபிரானா? சமயாசிரியன்மாரா? சிவபெருமானுடைய தன்றோ சிவமதம். ஆதலின் அதற்கு [illegible]

சைவம், குருநெறி, தெய்வசமயம், சன்மார்க்கம், என்ற பெயர்களுண்டாயிருக்கின்றன. அன்றியும், அது உலகமுய்யவகுத்ததாதலின் 'அருணெறி' என்றும், ஒரு சாதி ஒரு தேசத்திற்கென் றில்லாமல் வையகத்துள்ளார்க்கு வகுத்து வைத்ததாதலின் 'தாய் மார்க்கம்' என்றும்.—பெயர் பெறுந்தகைத்தது. அதனைத்தானே 'சைவ சமயமே சமயம் 'முத்திதருந் தெய்வசபை' என்றார் பெரியாரும். இதனால் 'திருநெறி' 'முத்திநெறி' எனப்படுவதுஞ் சைவசமயந் தானே. இத்தகைய பெயர்களின் காரணங்களும்,

'பேரோராயிரமும் முடையானைப் பேரிறும் பெரிதும்மினியானை' என்றபடி பேரினாற் பெரிதும் மினியாராகிய தலைவருக்குப்போல அவரது சமயமாகிய சைவத்திற்கும் முற்றப் பெறப்படும். அந்தவுண்மைக்கு,

விரிவிலாவறிவினார்கள் வேறொருசமயஞ் செய்து, மெரிவினுஞ்சொன்னாலோனு மெய்பிரானுந் தேற்றதாதும், பரிவினுற்பெரியோரேத்தும் பெருவேறார்பற்றினானை, மருவிநான்வாழ்த்திட்டுய்யும் வகையது நினைக்கின்றேனே"

'யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகியாங்கே' மாதொரு பாகனார்தாம் வருவர்' என்று எந்த மதங்களினுங் கேட்கப்படாத சத்போதங்கள் இந்த சைவசமயத்தின் மட்டு முண்மையாதலேபோதிய சான்றாதலறிக. இவ்வனம் பலமான ஆதாரங்கள் பலவுங் கண்டன்றோ 'சிவமதம்' ஒன்றே முதன்மதமாமென்று நாம் பற்றி நிற்கின்றோம் அப்படியிருக்கவும்,

உண்மையறிவில்லாத சில ஜனங்கள் 'சிவமதம்' இடைக்காலத் துற்பவமாயிற்றென்கின்றனர். அவருக்கு விரிவிலா அறிவினர், ஆகிய மனுடராலாக்கப்பட்டுப்பிறந்தநாளும், வயசு நிர்ணயமும் நிச்சயித்துக் கொண்டுரைப்பட்ட மதங்களொன்று மெம்முடையதல்லவென்று நம்மவர் சொல்வது கொண்டாயினு முணர்வு தலையெடுக்கவில்லையே! அந்தோ! அவரென்செய்வர்! அவரது அவாந்தர மதங்களைப்போலு மொரு மதந்தானே சிவமதமு மென்றாரறான் தம் மதத்திற் கேற்றமுண்டென்று கருதினர் போலும்; அங்ஙனம் கூறுவோருஞ் சிலர் தாமுளார். வேறு சில கொடியா பரமத தூஷணைகடாந் தம்மதத்திற் கொரு பூஷணமாமென்று கருதியு மழிகின்றனர். அவர் எப்படியேன் போகட்டும்.

உலகத்திலே ஜன்னியங்களாகக் காணப்படுகிற புது மதங்களுக்கெல்லாம் ஜனகஸ்தானத்தி லுள்ளது, சைவசமயமொன்றேயாமென்பதும் நமது கொள்கையாம். அந்த உண்மை உய்த்துணரு மறிவாளிகளொவ்வொருவருக்கும் நன்கு புலப்படாதே போமோ! அப்படியிருக்க அநாதிசமயத்தை அவாந்தர சமயமென்றால் எவர்தாம் நம்புவர். ஒருவரும் நம்பார்; ஆதலின்,

"சைவசமயமே சமயஞ் சமயாதீதப் பழம்பொருளைக், கைவந்திடவே மன்றுள் வெளிக் காட்டுமிந்தக் கருத்தைவிட்டுப், போய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந், தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ்செகத்தீரே"

(இ—ள்) உலகத்தவரே! சிவமதமே மதமெனத்தக்கது. [அது] வேறைய மார்க்கங்களாலறிந்தடையக்கூடாத அநாதிசிவத்தைக் கையிலாமலகம்போல ஆலயத்தின் வைத்தே வெளிப்படுத்திவிடும். இந்த (மேலான சமயத்திலுள்ள) மெய்ஞ்ஞானத்தை நழுவவிட்டுப் பொய்யாகத்தோன்றியுழலாநின்ற மதவொழுக்கத்திற் புக்குழலாதீர்கள். மோட்சத்தை யருளாநின்ற தெய்வசபையை (சிவாலயத்தை)த் தெரிசித்தற்கு ஒருசேரவந்து சேருங்கள்; (எ—று) என்றார் எமது தாயுமானாரும். இந்த வருட்பாவில் மன்று, சபை என்பன ஆலயத்தை யுணர்த்து நிற்பனவாகக் காண்பதே ஆன்றோர் வழக்கு. அதனை 'ஆற்றேடு தும்பை யணிந்தாடும் அம்பலவாணர்' என்றதாதிய அருள்வாக்குக ளுண்மைகொண்டு மறிந்துகொள்க.

ஆனபடியால், நம்மவர்காள்!

சிவாலயவழிபாடொன்றனையே முத்திதருந் தெய்வசபையாகக் கொண்டோங்கி நிற்பதே சைவசமயமாமென் றுங்களுக்குச் சொல்லுகின்றேன். அப்படியானால்—'சைவ சமயம்' அநாதியாயிற்றே? அங்ஙனமே 'ஆலய வழிபாடும்' அநாதியாகத் தானே வேண்டுமென்று நீங்கள் என்னைக் கேட்கலாம். அதற்குப் பதிற் சொல்லமுடியாத நிலைமையில் நமது பெரியோர் நம்மை வைக்கவில்லை. ஆதலிற் சொல்லுகின்றேன்.

பட்டிணத்து அடிகள்.

'ஒருநான்கு சாதிக்கு மூவகைத்தேவர்க்கு மும்பருக்கும். திருநாளுந் தீர்த்தமும் வேறுளதோ வந்தத்திசைமுகனால், வருநாளில் வந்துமந்தக்கண்ணுதான் வகுப்பொழியக், குருநாதனுனைக்கண்டீர்பின்னை யேத்துந்தேவலயத்தே'

(இ—ள்) ஒப்பற்ற, (மறையோர், அரசர், வேளாளர், தொன்னாளிகள் ஆகிய நான்கு சத்துசாதிகட்கும், (பிர்மா, விஷ்ணு, நீலலோகித னென்னுங் கால வுருத்திரர், ஆகிய) மூப்பால தெய்வங்கட்கும், மேலுலகவாசிகட்கும், (சிவாலயத்திலே சேவிக்கவேண்டிய நித்திய நைமித்திகாதி) மகோற்சவங்களும், (அவர்க ளாடவேண்டிய) புண்ணிய தீர்த்தங்களும் (இவ் வுலகத்திலே காணப்படுபன அல்லாமல்) வேறு. வேறாக வந்திருக்கின்றனவோ? இல்லவே (இல்லை. ஆனபடியால், தேகபோகங்களைச் சிருஷ்டித்த) அந்தப் பிரமதேவனால்(அந்தத் தேக போகங்களைக் கொண்டுள்ள ஆன்மகோடிகட்கு முத்திநெறியு மாவசியகப்பட்டுள்ளதாதலின் அந்த) ஆரம்ப காலத்திலேயே (ஆலயவழிபாடும்) உண்டாக்கப்பட்டு வந்திடும்—அந்தச் சிருஷ்டி கர்த்தாவினால் வகுக்கப்பட்டதுமல்லாமல் அஃது பரமாசிரியனாகிய பரமேசுவரருடைய ஆக்கினையாயிருப்பதையும் (அறிவாளிகளே! வேதசிவாகமங்களிலும் நீங்கள்) கண்டிருக்கிறீர்கள். அப்படியில்லாமற்போனால்; (ஆலயவழிபாடுதான்) உலகத்தில் ஏது? சுருதி சம்மதமென்னுஞ் சிவாக்ஞைகொண்டு ஜகோதயப்பிரதமத்திலேயே பிரமதேவனால் வகுக்கப்பட்டிருக்குமோ ரேதுவினாற்றான் இவ்வாலய வழிபாடு உலகத்தி லுண்டாயிருக்கிறதென்றுணர்க.) (எ—று)

இங்கே ஆலயவழிபாடு அநாதியாமென்பதற்கு இவ்வாதாரமொன்றே போதுமானதென்கின்றேன். மேலும் விரிவஞ்சிப் பல

* ஐயம், சந்தயம். சந்தாபம, முதலியவும

விடப்பட்டன. இந்தக் கவியில் 'அந்தக் கண்ணுளன்' என்பதை மார்க்கத் கண்ணுளன்' என்று திரித்துக்கொண்டு சிம்மியர் மயங்குகின்றனர். அவ்வனந் திரித்துக் கோடலாற் பிரயோசனமென்னையோ தெரிகின்றிலம். ஏதும் பயனில்லாதே, கவியை அணங் கெடுப்பான் கருதிய கண்பர் (கம்மாளர்) மேலாயினும் 'அந்தக் கண்ணுளன்' என்பதை 'மார்க்கத் கண்ணுளன்' என்ன மயங்கி யிடர்ப்படா திருப்பாராக.

இனி, இந்தக் கவியிற்கண்டபடி உலகத்திலே காணப்படுகிற திருநாளும், தீர்த்தமுமன்றி வேறுகவொன்று: யாண்டுஞ் சேதனவிசிட்டருக்குங்கூட வுண்டாயிருக்கவில்லை யென்னு முண்மையை, காஞ்சிப் புராணம் திருவேகம்பப்படலத்தில்

(87.) 'மருள்புரிகருத்தினன் மரீயினேத்தலுங், கருதுமப்பெரிய கள்ளக் கம்பனை'

(88.) 'உருத்திரனலத்தரு மொருமைபூண்டுயர், கருத்தோடும்வழிபடு நல்ல கம்பனை'

(89.) 'வாலிய சிந்தையர் மலர்ப்பொதுட்டணை, மேலவன் வழிபடு வெள்ளக் கம்பனை' என்ற கவிகளைக் கொண்டு தெரிந்துகொள்ளலாம். இதனாலே திரிமூர்த்திகளாலும் பூசிக்கப்பட்ட சிவலிங்கங்கள் "கள்ளக்கம்பலிங்கம்; நல்லகம்பலிங்கம், வெள்ளக்கம்பலிங்கம்" என்ற திருநாமங்களோடு காஞ்சிபுரத்தி லுண்மை யும்பஷ்டமாம். இன்னும், அங்கே 'காமாட்சியம்மையாற் பூசிக்கப்பட்ட' 'பெரியகம்பலிங்கம்' என்னு மொன்ற துண்மைபுங் கேட்கப்படுகிறது. இங்ஙனம் பிறதலங்களிலுண்மையாகவுஞ் சரித்திரங்க ளுண்டாயிருக்கின்றன. ஆதலின் மண்மிசையுள்ளனவன்றி வான்மிசையொன்று மின்றென வுணர்க.

அத்தகைய [திரிமூர்த்திகளாலும் பூசிக்கப்பட்ட] லிங்கங் கடாமே சுவாமிகளாலும் வணங்கப்படுகின்றன. ஏனையதேவர்களும் அவற்றைத்தாமே வழிபடுகின்றனர். அன்னதுபற்றியே "ஒருநான்குசாதிக்கு மூவர்க்கு முதல்வனாகுந் திருநாளுந் தீர்த்தமும் வேறுளதோ, வென்றார் எமது பட்டினத்தடிகள். அப்பாலும், "அத்திசை முகனுல் வருநாளில் வந்திடும்" என்றது: திரிமூர்த்திகளுஞ் சிவார்ச்சனைசெய்து இறைவ னநுக்கிரகம் விகசித்த பின்னர்த் தத்தம் முத்தொழில்கட் கருகராயினார் என்னுமொரு கேள்வியை ஸ்திரப்படுத்தியதாம். அதுகொண்டு ஐகோர்தயப்பிரதமத்திலேயே வெளிப்பட்ட 'ஆலயவழிபாடு' அநாதியேயாமென்பது குன்றின்மேலிட்ட தீபமாதல் தேற்றம்.

இங்கே அநாதியென்பது = உலகந் தோன்றுநாளிற் றோன்றுமன்றையின் முன்னர்த்தோன்றியும், உலகமுள்ளகாறும் நிற்குமுறைமையின் மதிக்கப்படுமாறு நிலைகொண்டு நின்றும், ஒடுங்குநாளில் ஒடுங்குமுறையிற் பின்னொடுங்கியும், மீண்டுமுற்பவமாகுங்கால் அவ்வாறே வெளிப்பட்டும், என்றுமழியாதுள்ளதாம். நித்தியமெனப் படுதலும் அதுவே. 'கடவுள்' நித்தியமாதலின் அவரது வழிபாடு அநித்தியமாமோ? பஞ்சகிருத்தியம் நித்தியமாதலின் அத்திருநடனம் அநித்தியமாமோ? ஆதலின், 'ஆலயவழி

பாடு' அநாதியாமென்பதில் அறிஞரொருவருக்கும் ஆக்ஷேபமிருக்காதென்பதும் நிச்சயம். அந்தவுண்மை,

விம்பம், காமிகம், வாதுளம், காரணம், சுவாயம்பு, சந்தானம், சர்வோத்தமம், முதலிய சிவாகமங்களினாராய்ச்சிவல்ல பெரியோரால் வெளிப்படுத் தருளிய எழுவகைப்பட்ட சிவலிங்கங்களினுண்மையை விளைவியுணர்வார்க்கே நன்கு புலப்படும். அவை வருமாறு:—

I. பரார்த்தலிங்கம்—இது ஜகோதயப்பிரதமகாலந் தொடுத்து மகா சங்கார காலம்வரையுஞ் சிவபெருமான் சாந்நித்தியராயிருந்து ஆன்மகோடிகட்கு அநுக்கிரகிக்கப்பெறும் இலிங்கமாம். தாவரலிங்கம், திரலிங்கம், எனப்படுவதுமிதுவே.

II. சுயம்புலிங்கம்—இது அநுக்கிரகார்த்தமாகத்தானே தோன்றியதாம். ஸ்வயம்+பு = தானேயுண்டானது.

III. காணலிங்கம்—இது விநாயகர், வைரவர், வீரபத்திரர், சுப்பிரமணியர் முதலிய சிவகணாதிபர்களாலும், கணங்களாலும் ஸ்தாபிக்கப்பட்டது.

IV. தைவிகலிங்கம்—இது விட்டுணு, பிரமன், இந்திரன் முதலிய தேவர்களாலே ஸ்தாபிக்கப்பட்டது.

V. ஆரிடலிங்கம்—இது அகத்தியர், புலத்தியர், நாரதர் அத்திரி, வசிட்டர், விசுவாமித்திரர், காசிபர், வாமதேவர், பிருகு, முதலாய முனிவர்களாலே ஸ்தாபிக்கப்பட்டது. அசுரர், இராக்கதர், முதலினோராலுந் தாபிக்கப்பட்டதுமிதுவே.

VI. மானுடலிங்கம்—இது மனுமுதலிய வரசர்களாலும் அறிவுடைய கண்ணர், பரசுராமர், இராமர், முதலாயினோராலும், ஸ்தாபிக்கப்பட்டதாகும்.

VII. க்ஷணிகலிங்கம் = இது பூசித்தவுடன் விடப்படுவதும் மண், அரிசி, அன்னம், ஆற்றுமணல், கோமயம், வெண்ணெய், உருத்திராட்சம், சந்தனம், கூர்ச்சம், புட்பமாலை, சருக்கரை, மா, என்னும் பன்னிரண்டனுள்ளே யாதாவது ஒன்றனால் பூசிக்குமவ்வப்போது செய்துகொள்ளப்படுவதுமாகும்.

இவ்வேழனுள், க்ஷணிகலிங்கத்தினுயர்ந்தது மானுடலிங்கம், அதனி னுயர்ந்தது ஆரிடலிங்கம். அதனினுயர்ந்தது தைவிகலிங்கம். அதனினுயர்ந்தது காணலிங்கம், அதனினு முயர்ந்தது சுயம்பு லிங்கமாம். சுயம்பு வொருவராற் பிரதிட்டிக்கப்படாததும் கருணைகனிந்தன் பருக்கின்பருளுவானிறைவன், றானே வெளிப்படுத்தருளியதும், ஆதலின், அது [சுயம்புலிங்கம்] அநாதியென்பதும் நிராட்சேபத்தினிலையுதல் கண்டாம். அங்ஙனமே பரார்த்தலிங்கமு மாதலுண்மை. இதுகொண்டும் அறிஞர்க்கெல்லாமுண்மை யினிதுவிளங்குதல் திண்ணம். இந்தமட்டில் 'ஆலயவழிபாடு' அநாதியாமென்பது வலியுறுத்தப்பட்டது. அத்தகைய ஆலயவழிபாட்டைப் பிரதிபாதிக்கிற சைவசமயத்தை—நீர்மேற்குமிழிபோல் தோன்றி மறைந்தழிகின்ற பொய் மார்க்கங்களோடு ஒப்பவைத்து நோக்கலாமா? அது மரபன்று. பின்னை, ஒப்புயர்வற்ற சைவசமயமொன்றே! நித்தியமாமென்பது சத்தியம், சத்தியம், சத்தியம், மூக்காலும்

சரியம் அப்படித்தானே ஆலயவழிபா டும் நித்தியமாதலறிக.

ஆனால், சைவசமயிகள்' உலகத்திலே மிகச் சுருக்கமாக விருப்பானேன்? 'ஆலய வழிபாடு' அநேக ஜனங்களால் அங்கீகரிக்க மார்க்கமில்லாமற் கிடப்பானேன்? என்ற கேள்விகளை நீங்கள் என்பால் கேட்கவுந் துணியலாம். அதற்கு நான் உங்களைநோக் கி,

I. பாதைகளிலே உடை கற்களும், சாற்கற்களும், வண்டி வண்டியாகக் குவிந் துகிடக்கின்றன. நவரத்தினங்களோ கு றைவினுங்குறைவாய்ச் சிறியசெப்புகளிற் பத்திரப்படுத்தி இரும்புப் பெட்டிகளுள் வைத்துப் பூட்டப்பட்டிருக்கின்றன. இவ ற்றுளே நன்கு மதிக்கத்தக்கது எது?

II. 'ஆர்த்த சபை நூற்றொருவராயி ரத்தொன்றாம புலவர்-வார்த்தை பதினாயி ரத்தொருவர்" என்றபடி படித்து அவைக்க ளமேறி, மதிக்கப்பட்டு, பேசவல்ல படித்த வகுப்பார் ஜன சமுதாயத்தின் மிகக்குறை வாயேயிருக்கின்றனர் அவரைக்காட்டிலும் படியாத வகுப்பார் எத்தனையோ பங்கு அ திகமாகவே காணப்படுகின்றனர். இருவன் மதிக்கத்தக்கார் யாவர்?

என்னுமிரண்டு கேள்விகளை மாத்திர மிங்கே விடுக்கின்றேன். இக்கேள்விகட்கு நீங்களென்ன விடையிறுப்பீர்களோ அன் னமாதிரியே என்பாற் கேட்கத்துணியுமக் கேள்விகட்கும் பதிலுணர்ந்து கொள்வான் வேண்டிக்கொள்கின்றேன். ஆனபடியால் 'மெஜாரிட்டி' யில்லாததுகொண்டு 'சைவ சமயம்' குறைவானதாக மதிக்கப்படுமென் பது அறிவாளிகளின் கொள்கையன்று. பெரும்பாலாரு மங்கீகரியாதபடியால் மை னாரிட்டியின் வைத்து "ஆலயவழிபாடு" மூடர்கொள்கையா மென்பவரோ மூடரா வர். இது யான்விசாரித் தறிந்ததோருண் மையாம்.

அங்ஙனமாயினும், 'சைவசமய' த்தின் திருமுன்பிலே இதரமார்க்கங்களுக்கும் ஆ திக்க முண்மைபோல ஒவ்வொரு காலத் திற் காணப்படுவது முண்டு. அது கொண் டும் 'சைவசமயம்' அகௌரவப் படுவதாகப் பெரியோர் கருதுகின்றிலர். ஏன்? எனி ல்:—

“தோல்வியும்வெற்றியுந்தோன்மதங் கட்கெலாங், கால பேதந்திலுண்டுந்தீப ற, பருத்தன்-செயலதன்றுந் தீபற.

வாதி கடங்களுக்கல்லான் மதங்க ளுக் கோதார் வலியின்மையுந்தீபற. வோதி யுணர்ந்தோரென்றுந்தீபற’’ என்ற சாந்தலிங்கசுவாமிகள் திருவாக்கினுண்மை யாலந்த வுண்மையினிது போதருமென்க. இங்கே தொன்மதங்களென்றதால் அவை,

“அன்றென்று மாமென்று மாறு சம யங்கள், ஒன்றோடொன் றேவ்வா துறைத் தாலும்—என்றும், ஒருதனையே நோக்கு வாருள்ளாத் திருக்கும். மருதனையே நோக் கிவரும்’’ என்றபடி ஆறு சமயங்களுடனே யும் “கருக்குணிறத்து மாயனுகமமே கம லய்வாழ் பிரமனுகமமே,

யநகனுகமமே புத்தனுகமமே யறையு லோ காயிதநூலே, மநவு சாங்கியமே தருக்க சாத்திரமீ மாஞ்சமே யிவைகளு மின்னும்

மீநு நிலத்துள பன்னூல்களுஞ் சுயமே யெம்பிரான் படைத்தனவ் மாதோ’’

OFFICE OF TH... RECEIVED 15 SEP 19

விக்கிரகாராதனம் முன் 7-வது புத்தகம் 152-வது பக்கத் தொடர்ச்சி.

என்று கேட்கப்படுகிற புறச் சமயங்களனைத்துமா மென்னலாம். அவ்வெல்லாச் சமையங்களும் போதத் தருமங்களில் பெரும்பாலும் ஒற்றுமையுடையதாகவே காணப்படும். படினும் ஒவ்வொரு மதாநுசாரி களின் தகுதிக்குத் தக்கவாறு சில வேற்றுமைகளும் அவ்வமதங்களி லுண்டாயிருக்கலாம். அதுகொண்டொருதோஷமு மின்று. அப்பால் எல்லா மதங்களிலுங் கேட்கப்படுகிற சிறப்புத் தருமங்கள் முழுவதும் சைவ சமயத்திலே சோபானக் கிரமத்தின் வைத்துச் சொல்லப்படாது போகவுமில்லை. அநேலவை ஆன்ம லாபத்தைப் பெறுவான் முன்னேறு கின்ற அறிவாளியாகிற ஒரு மனுஷியனுடைய அறிவானது அவன் மதி யூகியான நாடோட்டுப் பூரணமான மனுஷனை (ஞானியா)கிறவரை நா ளுக்கு நாள் வளர்தோறும் வளர்தோறும் யாண்டியாண்டு நின்று மேலிடு கின்றதோ அவ்வவவத்தையில் ஆண்டாண்டு அநுபவித்த இன்பத்திற்கு லட்சியமான விஷயம் ஏதேது உண்டுமோ அஃதஃதை அவ்வப்போது மேலாகச் சொல்லி ஆண்டாண்டு நிறுத்தி நிறுத்தி மேற்கொண்டு போ மொரு முறையிலெழுந்த போதங்களேயாம். அப்போதங்கடாம் பல மதங்களாக் காணப்படுகின்றன. அவையனைத்துமே தொன் மதங்க ளெனப்பட்டன. அவற்றைப் பூர்வபட்ச ஸ்தானத்தில் வைத்து எடுத் துக்காட்டி மேனிலையின் வைத்து மதிக்கப்பட்டு விளங்குவது எதுவோ அதுவே சைவசித்தாந்தமாம். ஆகவே அத்தெய்வநெறிக்கெதிரே இதர வெல்லா நெறிகளும் நிலைபெறலானன்றே அதன் மகிமை பிரகாசப்படுகி றது. அத்திருநெறியின் திருமுன்பில் ஒரு சமயத்திற்கும் மிதமிஞ்சிய ஆதிக்க முண்டாதலில்லையென்பதும் நிச்சயமாம். ஆகவே, வாதிகளுக் குள் அவரவர் சாமர்த்தியம்போல வெற்றிதோல்விகளுண்டாவதுஞ் சக ஜந்தானே: அந்த வழக்கில் பலவீனமான ஒரு சைவன் மற்றோரசைவனி டத்திற் றோல்வியடைந்துவிட்டால் அவன் கதையில் சைவன் தோற்றுப் போகக்கூடியதொரு சாதாரணமதமென் றெழுதிவைத்துக்கொள்ளலா மா? அன்றியும் ஒரு காலத்திலே பௌத்தன் அரசனேயாகவும் சைவன் கீழ்ப்படிந் தொழுகியிருக்கவும் கூடும். அது உலக நீதியைப் பொறுத்த தோரொழுக்கமாமென்றுணராமல், சைவந் தாழ்ந்ததென்று கதை கட்ட லாமா? மேலும், சைவனால் ஆளப்பட்ட ஒரு ராஜ்ஜியத்தை வைணவன் கைப்பற்றியிருக்கலாம். அதுகொண்டு சைவத்தை அடக்கிவிட்டோ மென்னலாமா? எந்த விதத்திலும் தோல்வி வெற்றிகள் ஆளைப் பொறுத்

தல்லாமல் மதத்தைப் பொறுத்துண்டாவதாக அறிஞர் அங்கீகரிக்கின்றிலரென வறிக. இனித்தற்காலத்தில் சில நவீன மதங்கள் மிகவும் கண்ணியமுள்ளதுபோலக் காணப்படுகின்றன. அவை சுவயம்பான நவரத்தினங்களுக்கெதிரே "இமிற்றேஷன்" கற்கள் மதிக்கப்படத்தக்கதாக விளங்குதல்போலவும், "சுவர்ணாபரங்களுக்கெதிரே" கில்ட்டு நகைகள் கண்ணியமுள்ளதாகக் காணப்படுவதுபோலவும் வளங்குவனவாம். கில்ட்டு நகைகளும் இமிட்டேஷன் செகப்புகளும் எளிய ஜனங்களாலும் நாடகக்காரராலும் பயங்காளிகளாலும் கையாளப்படாமற் கிடக்கவுமில்லை. அப்படிப்போல புது மதாநுசாரிகள் ஏன் உலகத்தில் பெருமிதமாக யிருக்கமாட்டார்கள். நம்மவரிற்கூட அவ்விதரர் ஆசாரங்களைக் கண்ணுற்ற சிலர் புனர் விவாகம் செய்தலை நமது வழக்கத்திலும் கொண்டுவரவேண்டுமென்றும், ஜாதி பேதங்களால் அநேகந் தீங்குகள் நேரிடுகின்றனவாதலின் வரம்பழித்து மனுஷ ஜாதியென் றொரு ஜாதியே யாக்கிவிடவேண்டுமென்றும், பேசிக்கொள்ளுகின்றார்களல்லவா! இதரமதங்களில் ஒரு தேவனே போதிக்கப்படுகிறானென்றும் நமது மதத்தில் பல தேவவணக்கமுண்டாயிருப்பதாகவும், கரைகின்றார்களல்லவா! இதர மதத்தார் அவிக்கிரகாராதனர்களாகி மதிக்கப்படவும் நம்மவர் மாத்திரங் கல்லுகளையுஞ் செம்புகளையுங் கும்பிட்டுப் பிள்ளைகள் மணல் வீடு கட்டி மரத்தால் மாப்பிள்ளை பெண்ணுகள் வைத்து மணப்பித்து மணற்சோறாக்கி யுண்டு மகிழ்தல்போலக் களிப்பாட்டமாடவுந் தகுமோ வென்றுங் கத்துகின்றார்களல்லவா! அப்படியானால் இதர மதாநுசாரிகளால் அவரவர் மதங்கள் மதிக்கப்படு வனவாதல் வியப்பன்றே! ஆதலின் ஒவ்வொரு மதத்தவரு மவரவர் மதத்திலிருந்துகொள்ளட்டும். எந்த மதத்தையும், தெய்வஞ் சுதந்தரித்துக்கொண்டிருந்து அததினின்று ஆண்டாண்டுள்ளவர்கட் கநுக்கிரகிக்கு மொருண்மையை யெவராலு மறுக்க முடியாது. ஆயினும், எல்லாச் சமயமு மெம்பிராற் கேற்றதாகு மென்னுமுண்மை போதிக்குஞ் சைவ மொன்றே தாய்மார்க்கமாமென் றறிதருனே யுய்த்துணர்ந்தோர் கொள்கையாம். அப்படியிருக்கவும், சைவவொழுக்கங்களைக் குறைவாக மதிப்பானேன்: எனின்—

பட்டிணத்தடிகள்.

"பொல்லாவிருளகற்றுங் கதிர் கூகையென்புட்கண்ணினுக்
கல்லாயிருந்திடுமா றொக்குமே யறிவோருளத்தில்

வல்லாரறிவா ரறியார் தமக்கு மயக்கங் கண்டா
லெல்லாம் விழிமயக்கே யிறைவா கச்சியே கம்பனே."

(இ—ள்) காஞ்சீபுரத்தி லெழுந்தருளி யிராநின்ற எமதிறைவனாகிய ஏகாம்பரேசுவரரே! [அறிவு ஓர் உள்ளத்தில் வல்லார் அறிவார்] ஞான சாஸ்திரங்களை ஓதி யுணர்ந்த உள்ளத்தின் வலிமையுடையவர் தாம் உம்மை யறிகுவர் (அங்ஙனம் மனவலிமைபெற்று உம்மை) யறிந்துகொள்ளாதவர்க்கு (உண்மை ஞானத்திலே) மயக்கமுண்டாயின், (அவர் சொல்வது) எல்லாம் (அவரது) குருட்டாட்டமேயாம். (அது எதுபோலுமெனின்) கொடிய விருளை நீக்க வல்ல சூரியப்பிரகாசமானது: கூகையெனப்படு மொருவகைப் பறவையின்து கண்ணினுக்கு இருண்மயமேயா யிருத்தல்போலுமாம். (என்றறிக) (எ—று) என்றபடி அவரது அறியாமையினாலேதான் சைவசமைய வொழுக்கங்களைச் சிலர் குறைவாக மதிக்கின்றனரென்பதாகக் காண்க.

இந்தக் கவியிலும் சிவநேசப் பெருஞ் செல்வராகிய பட்டிணத்து அடிகள் காஞ்சீபுரத்திலெழுந்தருளியிருக்கும் எமதிறைவனாகிய ஏகாம்பரேசுவரரே! என விளித்தருளலாலும், ஆலய வழிபாடு அவர்க்கு அங்கீகாரமேயாமென்பது வெள்ளிடைமலையாதலறிக.

இன்னுமொரேர்வொரு காரியமுமிங்கே என் ஞாபகத்திற்கு வருகிறது. அதையுஞ் சொல்லியே முடிக்கின்றேன். அன்பர்களே! இப்போது உலகமுடிவுக்குக் காலமடுத்துவிட்டதென்று நண்பர்களாகிய இதரர் சொல்லிக்கொண்டிருப்பது உங்கள் காதுக்கு மெட்டியிருக்கலாமே! அதுவிஷயத்தி லுங்களுடைய நம்பிக்கை எப்படியிருக்குமோ? அது எனக்குத் தெரியாது. எனக்குத் தெரிந்ததைமட்டுமிங்கே சொல்லத் துணிகின்றேன். அநித்தியமான உலகத்திற்கு அழிவு வருவது சகஜந்தான். ஆனாலது நம்பாற் சொல்லிக்கொண்டுவருவதல்ல. ஒவ்வொருவனுக்கும் மரணமுண்டாவது நிச்சயந்தான். ஆனாலும் இன்னகாலத்திலிறப்பேனென்று சொல்ல வல்லானைக் காண்பதரிது. இதனால் எதுக்களைக்கொண்டு, நிச்சயிக்கமுடியாதென்பது என்னுடைய கொள்கையுமல்ல. இதுமுன் ஒவ்வொரு முடிவிலும் எந்த நிலைமையிலுள்ளபோது உலகமழிக்கப்பட்டதாகக் கேட்கப்படுகிறதோ அந்த நிலைமை இப்போது வந்துவிடவில்லையென் றெனக்குத் தோன்றுகிறது. நண்பர்களபிப்பிராயப்படுகிற சமீபித்த காலங்களுக்குள்ளேயும் அந்நிலைமை வந்துவிடுமென்னவுமுடியாது அதாவது:—

சைவசமயிகளாயிருந்த திரிபுரத்தசுரர்கள்; எவராலுஞ் செயிக்கமுடியாத பராக்கிரமசாலிகளா யிருந்தார்களென்பது முலகப்பிரசித்தம். அத்தகையோரை மகாசுத

ரான திருமால் புத்தவடிவங்கொண்டு கலகப்பிரியராகிய நாரதர் சீடராக வுடன் வரச் சென்று மயக்கி அசைவ (பௌத்த)ராக்கிவிட்டனர். அதுவுந் தற்காலத்திற் காணப்படுகிற கண்காணிகளைப்போலுமந்த தரமாகவல்லாமல் வெகு சீக்கிரத்திற் பிரவேசிப்பித்தனர்.

ஆனாலும் அவ்வசுரத்தலைவரும், தாரகாசுரனுக்கு மக்களுமாகிய தாரகாக்ஷன், கமலாக்ஷன், வித்துன்மாலி, என்னு மூன்றுபேர்களைமாத்திரம் அவர்கள் சாமர்த்தியத்தினால் வசப்படுத்தமுடியவில்லை. ஆதலின் அவர் மூவர் மாத்திரம் சத்திபதிந்த சைவராயிருந்தனரென்று மதிக்கப்படுகின்றார். அவரொழிந்த வேனைய ஜனசமுதாயங்கண் முழுவதும் சைவசமயத்தினின்றுங் கடத்தப்பட்டனர். அப்படியிருந்துங்கூட ஆயிரந் தேவவருடம்வரை பெருங்கருணைத் தடங்கடலாகிய பரமேசுவரர் பொருத்துக்கொண்டிருந்தனர். அப்பால்தான் அவர்களுடைய திரிலோகங்களு மெரிக்கப்பட்டன என்று கந்தபுராணம் உபதேசகாண்டமுதலியனவாற் கேட்கப்படுமோர் சரித்திரமேயாம். அங்ஙனமே வேதங்களை எடுத்துக்கொண்டுபோய்க் கடலுக்குளொழித்துக்கொண்டான்; பூமியைப் பாயாய்ச் சுருட்டிக்கொண்டுபோய்க் கடலுக்குள் ளொழித்துக்கொண்டான்; பகவான் அவதாரமாகி அவன்களைச் சம்மரித்து வேதங்களை நிலை நிறுத்தினார். பூமியை யுத்தாரணம் பண்ணினார். என்னும் சரித்திரங்களெல்லாம் ஜலப்பிரளயங்களையே குறிக்கும். ஆதலின் வைதிக, சைவ. மார்க்கிகண்முழுவதும் அன்னியமதப்பிரவேசமானன் மாத்திரம், அசைவர்களானிரம்பப்பட்ட இவ்வுலகம் அழிக்கப்படுமென்பது மேலோ ரபிப்பிராயமாம். அது இதராராலு மறுக்கமுடியாது. என்? எனில்:—

சத்தியவேத மென்கிற விவிலிய நூலிலே ஆதியாகமம் 19-வது அதிகாரத்தில், சோதோம், கொமோரா வென்னும் பட்டணங்களை அக்கினி மழையா லழிக்க நேரிட்டபோது "லோத்து" என்னுமோர் பக்தனும், அவனுடன் கூடிப் பிள்ளைகளைப் பெற்றதாகக் கேட்கப்படுகிற அவனது புத்திரிகளுமே தேவனால் நாடு கடத்தப்பட்டிருக்கின்றனர். மற்றவர்களெல்லாம் பாவிகளாயிருந்தது பற்றிதான் அது அழிக்கப்பட்டது. என்றோர் கதையுண்டு. அன்றியும், நோவா காலத்திலும் பாவிகளை வைத்துத்தானுலகமழிக்கப்பட்டதென்பது அவர்கள் மதம். அன்றியும் "பாவத்தின் சம்பளம் மரணம்" என்பதும் அவர்களது வேத போதமாம். ஆதலின் பாவிகளை வைத்துத்தானுலகமழிக்கப்படுமென்பதை அவர்களொப்புக்கொண்டு தீரவேண்டிய தனுலென்க.

இந்த வுண்மைகொண்டு உலகமுழுவதுமே அவைதிக. அசைவத்துட்பட்ட அன்றுதான் உலகமழிக்கப்படுமென்பதே எனது அபிப்பிராயமுமாம். ஆனல் ஒன்றிரண்டு பேராவது சைவரில்லாமலும் போகார். முடிவுகாலத்திலும் சைவரில்லாதேபோனல் சைவசமயம் நித்தியமா மென்பது பொய்மையேயாய்ப் போகும். ஆதலின் கடைசிக் காலத்திலுஞ் சைவப்பூண்டிருந்தே தீரவேண்டும். இருந்தாலும் பிரளயத்தால் அவர் மற்றவரைப்போலு மழிக்கப்படமாட்டார். அழிக்கப்படு மிதாருள்ளும், நவீனப்பிரவேசகராயுள்ளோர் (முன் சைவராயிருந்தும் அபத்தபோதனையான் மய ' ,5ற்றுப் பிரஷ்டரானோர்) ஏனைய இதரரைப்போலும் நரகம் புக்குகின்றிலர். ஆகடே சத்தி

பதிந்த சைவர் உயர் பதவியும், சார்புபற்றி நின்ற சைவர் சமயப் பிரஷ்டரானபோதிலும் அவர் சுவர்க்கபதவியும், பெற்றாரென்று கேட்கப்படுகிறபடியே பெறுவரென்பதிலும் எனக்குப் பலமான நம்பிக்கையுண்டு. அது, திரிபுரம் எரிக்கப்பட்டபோது மூவரி ரட்சிக்கப்பட்டார்.

சுந்தரமூர்த்தி.

"ஒப்பிலா முலையாளொரு பாகாவுத்தமா மத்தமார்தரு சடையாய். முப்புரங்களைத் தீவளைத்தங்கே மூவருக்கருள் செய்ய வல்லானே. செப்பவானிழற் கீழிருந் தருளுஞ் செல்வனே திருவாவடு துறையுளப்பனே யெனை யஞ்சலென்றருளா யாரெனக் குறவமரர்களேறே."

இரட்சிக்கப்பட்ட மூவரும் பெற்றபேறு.

மணிவாசகப் பெருமான்.

"எண்ணுடை மூவரிராக்கதர்க ளெரிபிழைத்துக்.
கண்ணுதலெந்தை கடைத்தலை முன்னின்ற தற்பின்
எண்ணிலியிந்திர ரெத்தனையோ பிரமர்களும்.
மண்மிசை மால்பலர் மாண்டனர் காண்தோணேக்கம்."

சுந்தர மூர்த்தி.

"மூவெயில் சேர்த்ற ஞான்றுய்ந்த மூவரிலிருவர் நின்றிருக் கோயிலின் வாய்தல். காவலாளரென்றேவிய பின்னை யொருவ னீகரி காடரங்காக, மானை நோக்கியோர் மாநடமகிழ மணிமுழாமுழுக்க வருள்செய்த, தேவ தேவநின் றிருவடியடைந்தேன் செழும் பொழிற்றிருப்புன் கூருளானே."

இதரர் போதனையால் வஞ்சிக்கப்பட்டு அசைவராயினோர் கேதி.

சுந்தரமூர்த்தி.

"ஒக்கமுப்புர மோங்கெரிதூவ வுன்னை முன்னிய மூவர் நின் சரணம்; புக்குமற்றவர் பொன்னுலகாளப் புகழினலருளீந்தமை யறிந்து, மிக்க நின் கழலே தொழுதரற்றி வேதியா வாதி மூர்த்தி நின்னரையில், அக்கணிந்த வெம்மானுனை யடைந்தேன் ஆவடுதுறையாதி யெம்மானே."

என்னுஞ் சுருதி போதங்களால் நன்கு போதரலுணர்க.

உண்மையிங்ஙனமிருத்தலால், வைதிக சைவ நெறியானது தம்முள்ளேயே கட்சிப்பிரதிகட்சிகளை யுண்டாக்கிக்கொண்டு உண்மையை

வெளிப்படுத்தி நன்கு நிலைபெறுகொண்டு வள்ர்ந்தோங்கு மிக்காலத்தை
உலகமுடிவைச் சமீபித்த காலமென்பது எனக்குடன்பாடன்று. இருந்
தாலும், தற்காலத்துச்சில நவீன நாகரீகிகளெல்லாம் அன்னியரபத்தபோ
தனைக்குட்பட்டு ஆலயவழிபாட்டை இகழுகின்றனரே! சைவவொழுக்
கங்களை யருவெறுக்கின்றனரே! குலதர்மங்களை முழுமூடக் கொள்கை
யென் றொதுக்கிப் பரிகசிக்கின்றனரே! இதுவே உலக முடிவுக்கு முன்
அறிகுறியாமென் றபிப்பிராயப்படுவாருஞ் சிலருளர். இவர் கொள்கை
யை அறிஞர் சம்மதிக்கின்றிலர். ஏன்? எனில்:

தற்காலத்திலாவது ஆலயவழிபாடு கூடாதென்று வாயினாலே மாத்
திரஞ் சொல்லுவோரையிவர் கண்டனர். சைவ வொழுக்கங்களை சிற்
சில காரணங்களைக்கொண்டு தம்முள் வெறுத்திருப்பாரையு மிவர் பார்க்
கின்றனர். கலர்களாயினோர் சிலர் குலதர்மம் அநாவசியகமென்பதை
யும் இவர் கேட்டிருக்கலாம். இங்ஙனமன்றி, முற்காலத்திலே ஆலயங்
களெல்லாம் கொள்ளைக்காரர்களாலே யிடிக்கப்பட்டும், பிம்பங்களெல்
லா முடைத்தெறியப்பட்டும், ஆண்டுள்ள சொத்துக்களெல்லா மபகரித்
துக்கொண்டுபோகப்பட்டு மிருக்கின்றனவே! சைவனைக் கண்டாலும்,
அவர் வார்த்தைகளைக் கேட்டாலும், "கண்டுமுட்டு, கேட்டுமுட்டு" களா
கக் கிடப்பதுடன் நித்திய நைமித்திகங்களொன்றும் நடைபெறவொட்
டாதே ஆலயங்களெல்லாம் அடைத்துவிட்டுமிருந்தனரே! அன்னிய
மார்க்கங்களைக் கைக்கொள்ளவில்லையானால் சண்டைச் சச்சரவுகளுண்
டாக்குவதுடன் பூர்வகாலத்துப் புறநாட்டு வழக்கம்போல் அருமையான
பெண்கள் சிறைபிடிக்கப்பட்டுப் போகவும், எதிர்ப்பட்ட பெண்களைப்
பிடித்துக் கற்பழித்துவிடவும், அதுகாரணமாக உடன்கட்டை ஏறுத
லென்னுமோர் கொடிய வழக்கம் சிலகாலமாக இங்கே நடைபெறவுமேற்
பட்டனவே! அந்தக் காலங்களுக்கெல்லாம் தற்காலங் கொடிய
காலமாகுமோ! அதிலும் மங்கலகரமான இங்லீஷ் ராஜ்ஜியத்தின்கீழ்
நடைபெறுமிக்காலம் நல்லகாலமன்றோ? இக்காலத்திலளவிறந்த நன்மை
கள் நமக்குண்டாயிருக்கின்றன வென்னலாமே. அத்தகைய இக்காலத்
திலே சிலர் வழக்காடுவதுகொண்டு தற்கால வழக்கு உலக முடிவுக்கு
அறிகுறியாமென்பதும் பொருத்தமின்றாதலானென்க.

ஆலயவழிபாடு கூடாதென்ற வியவகாரிகள் எவ்வளவு பலமாக வுண்
டாகின்றார்களோ, அங்ஙனமே அதனுண்மை யாராய்ச்சியில் வல்லாரு

மதிக்கப்படுவரென்பதும் நிச்சயம். அப்படியொரு நிகழ்ச்சியும் நன்றாக
வே காணப்படுகிறது. அது நிற்க, கோவிலுள்ளே போய் சுவாமிதெரி
சனஞ் செய்யவேண்டுமென்ற பேராசையோடு கூடி முன்னேறும் பல
ஜாதியாரையும் ஏனோ நம்மவரிற் சிலர் தடுக்கின்றனர். ஆனால் அவருஞ்
சிறிது சிறிதாக முன்னேறுவான் றொடங்கி முன்னர்க் கல்வியறிவொழுக்
கங்களைக் கைக்கொண்டு சமாதானத்துடன் வராமல் சீக்கிரத்திற் கை
களின் பலத்தால் மேலிடப் பார்க்கின்றனர். இவ்விருதிறத்தருஞ் சீர்
திருத்த முடையவராகி ஒரு சாரார் மேலிடுவாரைத் தடுக்காமலிருக்க
வும், மற்றொரு சாரார் ஒழுக்கங்களோடு கூடியவராய்ச் சமாதானத்து
டன் மேலிடுவாராகவும் நல்லுணர்ச்சி யவருக்கு எப்போது கைவருமென்
றறிஞரேதிபார்க்கின்றனர். அங்ஙனஞ் ஜன சமுதாயத்திற் சமாதான
வுணர்ச்சி கைவந்துவிட்டால், எல்லாவரும் ஈசுவராநுக்கிரகம் பெற்று நல்
லாராயிருப்பரென்பதும் எனது நம்பிக்கையாம்.

அப்படிப் பல ஜாதியாராலும் விரும்பப்படுஞ் சர்வ லோகைக நாயக
னாகிய விறைவனை இறைஞ்சியுய்தற்காக வேற்பட்டிருப்பதே யாலயமாம்.
அவ்வாலய வழிபாடுதானே ஏகாந்தமுஞ் சாதுசங்கமுமாகக் காணப்படு
கிறது. ஆலய சேவைக்கிணங்காத ஜன சமூகத்திற்கு சாதுசங்கமென்
பதுமரபாமா? வித்துவஜனசமூகத்திற்குக் கல்விச் சங்கமென்பதூஉம்,
போதகன்மார் கூட்டத்திற்குப் பிரசங்கசபை யென்பதூஉம், வணிகர்
கழகத்திற்கு வர்த்தகக் கூட்டமென்பதூஉம், உலகப்பரிபாலன சபைக்
குப் பாராளு மன்றென்பதூஉம், ஆன்றோர்வழக்கு அந்த வழக்கில் விஷ
யப் பிராந்தியினுழலா நின்ற மனதைத் திருத்திச் சாந்திபவித்துள்ள சா
துக்கள் கூடுமாலய மொன்றைத்தானே சாதுசங்கமென்பர். அந்தச்
சங்கத்திற்கு எல்லாம் வல்ல இறைவன்றோ சபாபதியா (அம்பலவாண
ரா) கக் கொள்ளப்படுகின்றனர். அவரது அக்கிராசனத்தின் கீழ்க்கூடி
யங்கே,

"தோற்றந் துடியதனிற் றோயுந்திதியமைப்பிற்
சாற்றியிடுமங்கியிலே சங்காரம்—ஊற்றமா
வூன்றுமலர்ப்பதத்தே யுற்ற திரோதமுத்தி
நான்றமலர்ப்பதத்தே நாடு."

என்றபடி யிறைவன்பாற் காணப்படும் பஞ்சகிருத்திய சேவையா
லிறைவனை யறிந்து, தியானித்து, சமாதித்து, சாக்ஷாத்கரித்து, நிற்றலா

கிற விக்கிரகாராதனமே யேகாந்தமா மென்றுணர்க. அத்தகைய சிவாலயத்தின் பெயர்ப் பொருளை இங்கே சிறிது விளக்கிக்காட்டி எனது பிரசங்கத்தை முடிக்கின்றேன். அது வருமாறு;

1 கோயில்=இறைவனிருப்பிடம்.
II தேவநகர்=கடவுள்வீடு.
III நியமம்=[கட்டளை]தெய்வசட்டப் புஸ்தகம் (வழிப்படுத்துவது.)
IIII பள்ளி=(பண்பு என்றுஞ் சொல்லினின்றும் வந்து குணப்படுத்துவது (என்று பொருள்படும். அதற்குக் கற்குமிடமென்னலுமாம்.
V விமானம்=விசேஷித்த பெருமை தருவது.
VI பீடரம்=துன்பத்தை யொழிப்பது.
VII பாழி=ஒழிபுதருவது.
VIII தளி=தட்பமென்றுஞ் சொல்லினின்றும் வந்து சாந்திபயப்பது.
IX நிகேதனம்= சுவாசவொடுக்கம் பயிலத்தகுமிடம்.
X சேதிமம்=இருணீக்குவது.
XI கற்கி=[கற்கம்=நிட்டை] நிட்டை கூடி நிற்றற்கேற்றவிடம்.
XII நிலயம்=மனதைப் புறஞ்செல்லவிடாது நிறுத்துவது.
XIII மந்திரம்=தியானத்தை நிலைபெறுவிப்பது.
XIV சினகரம்=[சின்X அகரம்] மெய்ஞ்ஞானபுரம்.
XV கோஷ்டம்=[கோX இஷ்டம்] பசுக்களின் விடுதலை ஸ்தானம்.
XVI ஆலயம்=சிவபோதம் பரபோதத்திலாகும் ஐக்கியந்தருவது. என்பனவாம்.

இவற்றையுய்த் துணர்ந்து மேலும் அறிஞர்வாய்க் கேட்டுத் தெளிந்து ஆலயவழிபாடே (விக்கிரகாராதனமே) மேலா முத்திநெறியென்னுமுண்மைபற்றி நின்றுய்வீர்களாக. மேலும்,

ஞானம் யோகம் கிரியை சரியை நாலும்
நாதன் றன்பணி—ஞானி நாலினுக்கு முரியன்
ஊனமிலா யோகமுதல் மூன்றினுக்கு முரியன்
யோகி—கிரியாவானுன் ஒண் கிரியையாதி
ஆனவிரண்டினுக்குரியன் சரியையினின்றோன்
அச்சரியைக் கேயுரியன்,, என்றும்,

ஞாலநீதியும் நான்மறை நீதியும்
பாலருன்மத்தர் பிசா சரிலெனவும்
உறங்கினோன்கை வெறும் பாக்கெனவும்
தானே தவிராதானுந் புரியா
தொழிந்திடினிரயத் தழுந்துதறிடமே, என்றும்,

சுருதிபோதங்களுண்மை யாதலின், மகா ஞானிகளுக்கே மிகப்பொறுப்பாகவுள்ள ஆலய வழிபாட்டை (விக்கிரகாராதனத்தை) அறிவாளிகளாகிய நாமனைவரும் முறையே பற்றி நின்றுய்வோமாக.

நமப்பார்வதீபதே!	அரகர மகாதேவ.
சிற்சபேசா!	சிவசிதம்பரம்.
கெஜமுகாநுக்கிரகம்பஜே!	விநாயகேச.
கார்த்திகேயநாம சங்கீர்த்தனம்!	சிவசுப்ரமண்யோம்.

திருச்சிற்றம்பலம்
மெய்கண்டதேவன் றிருவடி வாழ்க.

உ

சிவமயம்

சிவாலயங்கள் சீர்திருத்தமாகவேண்டும் சில முக்கிய விஷயங்கள்.

அகரமானது வேதங்களாயும், ஆகமங்களாயும், புராணேதிகாசங்களாயும், பெரிது பெரிதான நீதி நூற்களாயும், இலக்கண இலக்கியங்களாயும், வானசாஸ்திர முதலிய தத்துவ நூற்களாயும், அரசியற் சட்டங்களாயும், இன்னும் பொதுவாக ஆய்ந்து நோக்குமிடத்து கல்விமயமாக நின்று தோற்றப்படுகிற முச்சகங்களுக்கும் அகப்பொருள் புறப்பொருள் என்னும் இருதிறப்பட்ட எந்தப் பொருள்களையும் இஃதென விளக்கிக் காட்டப்படுகிற உயர்தரமான எந்தத் தேவபாஷைகளினுங்கூட எழுத்துக்களுக்கெல்லாம் முதன்முதற் றலையாக நின்று சீர் சிறப்புற்று வாழ்ந்து வருதலைப்போன்று ஆன்மவர்க்கங்கள் பிறவிப்பிணி தீர்ந்து பேரின்பவாழ் வெய்துதற்கு ஏதுவாகிய அகில அண்டகோடி பிரம அண்டங்கட்கும் அதிபதியாக விளங்கும், பெருங்கருணைத் தடங்கடலாகிய நம்முடைய பரசிவப்பெருமானின் பிரதிமாரூபங்கள் அமைந்துகிடக்கும் சிவாலயங்களைப் புதிய புதியனவாகச் சீர்திருத்தஞ் செய்யக் கடன்பட்டு நிற்கும் நம்பரதகண்டத்துப் பெருந்தகையவான பற்பல பகுதி மனிதக்குழாங்களினும் முதன்முதற் றலையாகப்புக்கி மிகவுஞ் சீர்திருத்தங்களான திருப்பணிகளாற்றி சீர்சிறப்போடு இருங்கடன் ஞாலத் தேல்வழியானும் இல்லற வொழுக்காம் நல்லற மரீஇ ஒண்கூழீட்டித் தண்புகழ் நிறீஇ வாழ்நருமாய ஓ நாட்டுக்கோட்டை நகரத்து எம் அரு

மைச் சகோதரர்களே! இங்ஙனம் சிவாலயங்கள் சீர்திருத்தமாக வேண்டும் சில முக்கிய விஷயங்கள் என எல்லாந் தெரிந்த வல்லவன் யாமே என்று நுங்களுக்குத் தெரியாததொன்றை உணர்த்தப்புகுவான் கருதி முன் வந்ததின்று. ஆயினும் எத்துணையோ தூரங்கடந்த சிவஞானபோகப்பெருஞ் செல்வர்கள் முதலாய மேனிலை கைவந்த எந்த மெய்ஞ்ஞானிகளிடத்துங்கூட மறத்தலென்னும் ஓர்வித அகக்கருவியானது நீங்காமை இயற்கையாதல்பற்றி மேற்கண்ட அவ்விஷயத்தை எம்மருமைச் சகோதரர்களாய நுங்களுக்கு ஞாபகப்படுத்துவான் பொருட்டு அவ்விஷயங்கள் பலவற்றையும் எம்முடைய ஞாபகத்திற்கெடுத்து நன்குசீர்தூக்கி அடியேமுடைய சிற்றறிவிற்கு எட்டிய ஒருவாறு நுட்பமாயும், தெளிவாயும், சுருக்கமாயும் எல்லாம் வல்ல இறைவன் இரண்டு திருத்தாள்களுக்கும் எம்மனப்பூர்வமான அஞ்சலியாற்றி வரையப்புகுவாம். நண்பர்காள் சற்று தயவுசெய்து நன்கு கவனித்தல் வேண்டும்.

(1) முதன் முதலாக நம்முடைய ஒன்பது ஆலயங்களையுஞ் சார்ந்த எல்லா நகரத்துக் கல்வியானும், அறிவானும், செல்வத்தானும் நிறைந்த தலைவர்களெல்லாம் ஒருங்கே ஒரே சங்கமாக நமது வகுப்பைச் சார்ந்த ஓர் தலை நகரத்திலே எனினும், ஓர் ஆலயத்திலே எனினும் நம்முடைய வகுப்புள்ளே சிறந்த ஒரு பெருந்தகவாய மேதாவியின் தலைமையின் கீழ்கூடி இவ்வங்கத்திற்காக வேண்டும் பற்பல வழிகளையும் பற்பல வாறுகளாக எவ்வகைத்தானுந் தேர்ந்த சர்வகலா நிபுணர்களாலேயுந் தீரத்தெளிந்து பகர்ந்து பேசிவருங்கால நாகரீகங்களுக்கு நேரொப்ப இன்றியமையாதுவேண்டும் சிற்சில சட்டங்களை ஒருங்கே வரன்முறையாக நமது செந்தமிழ் பாஷையாலே பூர்த்திசெய்து கோடலும் வேண்டும்.

(2) நம்முடைய வகுப்பைச் சார்ந்த எந்தக் குடும்பத்தவர்களும் தனித்தனியாக சிவாலயத் திருப்பணிகள் முதலிய பெருத்த கைங்கரியங்களாற்றுதலை கட்டோடே சட்டமாக நிறுத்துதல் வேண்டும்.

(3) வைத்தியசாலைகளுக்காக ஒரு வீசமும், கல்விச்சாலைகளுக்காக ஒரு வீசமும், திருப்பணிகளுக்காக ஒரு வீசமும், நம்முடைய நகரங்களுக்குள் பொதுவாக வேண்டும் போக்கு வரத்துப் பாட்டைகளையும் கிணறு குளங்களையும் சீர்திருத்துவதற்காக ஒரு வீசமும், இன்னும் பொதுவாக வேண்டும் அச்சியந்திரசாலை சுகாதார முறையாதுகாப்புக்

காக ஒரு வீசமும், இன்னும் ஏனைய சில விஷயங்களுக்காக ஒரு வீசமும் ஆக நம்முடைய வகுப்பைச்சாந்த எந்தப் பெரிய வர்த்தகர்கண் முதற்கொண்டு மாதம் ஒன்றுக்கு ஒரு வராகன் வருவாயுள்ள எந்தச் சிறிய வேலைக்காரர்கள் வரை ஒவ்வொரு சிற்றூர்களினும், ஒவ்வொரு நகரங்களினும், ஒவ்வொரு தொலை நகரங்களினும் ஒரு வருஷாந்தத்திலோ அல்லது மூன்று வருஷாந்தத்திலோ தங்கள் தங்களின் ஆதாயக் கணக்கு வரவு செலவுகளைப்பார்த்து எஞ்சிய மொத்தத்தில் காலேயரைக்கால் பாகத்தையும் நம்முடைய வகுப்பின் மகாசங்க சபையாரால் குறிப்பிடப்பெற்ற தெய்திக்குள் நம்முடைய வகுப்பின் பொதுப் பணச்சாலைக்கு அவ்வவர்களே மிக்க ஒழுங்காயும், கரராயும் அனுப்பிக் கொடுத்தல்வேண்டுமென்னும் பொருட்பாலினுள்ள ஓர் அயிட்டத்தையுங் கவனித்தல் வேண்டும்.

(4) நமது கவர்னமெண்டாரவர்கள் தங்களின் ஆளுகைக்குட்பட்ட உலக கைங்கர்யங்களை எவ்வாறு முனிசிப்பல் டிப்பாற்றுமெண்டு என்றும், ரெவினியு டிப்பாற்றுமெண்டு என்றும், இன்னும் இவைபோன்று பலவித டிப்பாற்றுமெண்டுகளாகத்தானே எந்தக் காரியங்களையும் பகுதி பகுதிகளாக வகுத்துக்கொண்டு நடாத்துந் தன்மையைப்போன்று மேற்கண்ட சிவாலயங்கள் சீர்திருத்தமாகவேண்டும் பல விஷயங்களையும் அடக்கித் திருப்பணி டிப்பாற்றுமெண்டு என்றோ அல்லது எம்மினுஞ் சிறந்த மேதாவிகளைக்கொண்டு அதற்காக வேண்டும் ஓர் அழகான நாமம் புனையப்பெற்ற ஓர் டிப்பாற்றுமெண்டு என்றோ வகுத்துக்கோடலும் வேண்டும்.

(5) அதற்காக வியலும் ஒவ்வொரு காரியாதிகளும் ஒருங்கே பூர்த்தியாக நடைபெறுவதற்கான அக்கவுண்டாபீஸும் அதற்குரிய சொந்தக்கட்டிடமாகவேதான் நம்முடைய நாடு நகரங்களுக்கு மிகவும் சமீபமாயுள்ள ஓர் தலைநகரத்திலே அமைத்துக்கோடலும் வேண்டும்.

(6) தற்காலவரை நம்முடைய பரதகண்டத்துப் பூர்வீக நாகரீக நிலையை விளக்கிக்காட்டிக்கொண்டிருக்கும் அபூர்வகாட்சிகளமைந்த சைவ வைணவ முதலாய நம்முடைய இந்து மதத்திற்கே உரித்தாயுள்ள சிவாலயங்கள் இத்தனை என்பதையும், அவ்வாலயங்கட்கு நம்முடைய அங்கிலோ கவர்னமெண்டாரவர்களால் அளிக்கப்படுகிற படித்தர விகிதங்களையும் ஒரு பெரிதான சலவைக்கல் ஒன்றில் நம்முடைய இனிதான

செந்தமிழ்ப் பாஷையாலே மிகவும் செவ்வையாக வரைந்து எந்தக்காலத்தும், எந்த அரசாட்சிகளாலும், நன்குமதிக்கத்தக்க நன்னிலைமையிலும், எவ்வகைத்தாலும் எவராலும் பெயர்த்து எறிந்துவிடமுடியாத வன்னிலைமையிலும் இவ்வக்கவுண்டாபீஸ் முகப்பில் நாட்டிவைத்தலும் வேண்டும்.

(7) பொதுவாக ஆய்ந்துநோக்குமிடத்து வைணவ ஆலயங்கள்பால் சீர்திருத்தஞ் செய்யப்புகுவதும் நம்முடைய கடமையோ வெனின்? ஆம். ஆம். நம்முடைய கடமையேயாம். ஆனாற் பலவந்தப்படுத்திக் கூறுவதற்கு எம்மான் முடியாது. இவ்விஷயத்தில் நமது வகுப்பாருள் கூடிய பக்கத்தார் அபிப்பிராயம் போன்று இயன்றகோடலும் வேண்டும்.

(8) நம்முடைய சமையக் குரவர் நால்வர்களாலும் பாடல்பெற்ற சிவாலயங்களைமாத்திரந்தான் சீர்திருத்தஞ் செய்தல் வேண்டும் அதனாற்றான் நன்மையல்லது புண்ணியமெனக் கோடற்குக்காரணம் யாது? பொதுவினுஞ் சிறப்பு விசேஷமென்பதை எவரும் மறுப்பாரில்லையே! அதுகொண்டு பொதுவாகவுள்ள சிவாலயங்களைச் சீர்திருத்தஞ் செய்தால் அதற்கு எற்றும் பயனில்லையென எந்த ஆகமப்புராணங்கள் அல்லது எந்தநூற்கள் கூறுகிறது? அல்லது எந்த நாவலர் கூறுகின்றார்? ஏனைய சிவாலயங்களும் அக்குரவர்களால் திருவருட்பாக்களைப் பாடப்பெறவில்லை என்பதற்கு சாட்சியமென்னையோ? அக்குரவர்களாலே ஆக்கப்பட்ட எத்தனையோ பேரருந் தன்மை வாய்ந்த அநேக திருவருட்பாசுரங்கள் மறைந்தொழிந்துபோயின வென்பதையும் உணராதார் யாவர்? புதிய நாகரீகங்கள் மிகுந்து விளங்கும் இக்காலத்திலும்

“பொன்னிறச் செந்நெல் பொதியொடு பீழ் வாட
மின்னொளிர் வானங் கடலுள்ளுங் கான்றுகுக்கும்
வெண்மையுடையார் விழுச்செல்வமெய்தியக்கால்
வண்மையுமன்ன தகைத்து.”

என்னும் பழயகாலத்துச் செய்யுளின் கருத்தினைப் பின்பற்றி இயலுதல் நம்முடைய புதியகால முன்னேற்றத்திற்கும் அழகாகுமோ? இயற்கையிலேயே அளவு கடந்த மாட்சியும், சிறப்பும், பற்பல பகுதி மனிதக்குழாங்களின் கைங்கரியங்களும் அமைந்து விளங்கும் சிவாலயங்களுக்கு மேலும், மேலும் இலக்கக்கணக்குகளாகச் செலவுசெய்து திருப்பணிகளாற்றுவதை கேவலம் ஒன்றுக்குமாகாத எம்போலி யறிவானது

சிவாலயங்கள் சீர்திருத்தமாகவேண்டும் சில முக்கிய விஷயங்கள்

முன் 8-வது புத்தகம் 164-வது பக்கத் தொடர்ச்சி.

மறுக்க முன் வந்ததாக எண்ணற்க. ஆனால் அதனினும் ஒருவேளை ஒருருண்டைக் கட்டிக்குக்கூட விதியில்லாது எருக்குங் குருக்கும் முளைத்துப் பாழ்பட்டு மிகவும் கிலமாய்க் கிடக்கும் சிவாலயங்கள் சிற்றூர்களிலே யிருப்பினும், நகரங்களிலே யிருப்பினும், பாடல்பெற்றே யிருப்பினும், பெறாதே யிருப்பினும், அவைகளுக்குத் தலபுராணங்கள் ஏற்பட்டேயிருப்பினும், ஏற்படாதேயிருப்பினும், எத்துணைக் கேவலமான தாழ்ந்த வருணத்தார் இருக்கும் இடங்களிலே யிருப்பினும் தாரதம்மியம் நோக்காது பூர்வகாலத்தேயுள்ள ஆலயந்தான என்பதை மாத்திரம் நன்றாக வுணர்ந்துகொண்டு அவ்வவ்வூரின்கண்ணே உள்ள ஜனப்பெருக்கத்தையும், சுருக்கத்தையும் சீர்தூக்கித் தக்க தக்கவாறு சிறுக்கவோ பெருக்கவோ சீர்திருத்தங்கள் செய்து சிவாகம விதிப்படி நாடோறும் ஏககாலமே என்கினும் நைவேதனம் முதலிய தீபாராதனை அபிஷேகாதி பூசா கைங்கர்யங்களெல்லாம் முறையே முட்டின்றி நடைபெறும் பொருட்டுச் செய்தல் மிக மேலானதென்பதை எவரானும் மறுக்கமுடியாதென்பதையும், அதுவே வுண்மை யென்பதையும் வலியுறுத்துவதற்கே முன் வந்ததாமென்க.

(9) இத்திருப்பணி டிப்பாற்றுமென்டாரால் எந்தச் சிற்றூர்களிலிருந்தோ, நகரங்களிலிருந்தோ அவ்வவ்வூர் ஜன சமூகத்தாராலே அவ்வவ்வூர் சிவாலயச் சீர்திருத்தங்களைப்பற்றி வேண்டிக்கொள்ளும் மாசூர் அல்லது விண்ணப்பத்தை நன்கு செவ்வையாகக் கவனிக்கப்படுமென்பதை நம்முடைய பரதகண்டம் ஒருங்கிற்கும் பேப்பர்கண் மூலமாயோ அல்லது தனித்தனித் துண்டுப்பத்திரிகைகண் மூலமாயோ பகிரங்கப்படுத்திக்கோடலும் வேண்டும்.

(10) தாரதம்மியம் நோக்காது நம்முடைய திருப்பணி டிப்பாற்றுமென்டு அக்கவுண்டாபீஸருக்கோ அல்லது அவ்வுத்தியோகத் தலைவருக்கோ வரும் மாசூர் அல்லது விண்ணப்பங்களை மிக நன்றாகக் கவனித்துக்கொண்டு அதற்கென அமைந்திருக்கும் ஒரு உத்தியோகத் தலைவரையனுப்பி அச்சிவாலயங்களையும், ஆங்கு சீர்திருத்தமாகவேண்டும் பல விஷயங்களையும் சீர்தூக்கி யாய்ந்துநோக்கியவண்ணம் மேற்கண்ட அத்தலைவருக்கோ அல்லது அவ்வாபீஸருக்கோ தெரிவிக்கப்பெற்று அவர்

உத்தரவின்பேரில் அத்திருப்பணி நமது பொதுப்பணச்சாலையிலிருந்து அச்சீர்திருத்தங்கள் ஒருங்கும் மிகச் செவ்வையாயும் மிக வொழுங்காயும் பூர்த்தியாதலும் வேண்டும்.

(11) அது விஷயமாக வரும் எந்த மாசூர் அல்லது ஒவ்வொரு எந்த விண்ணப்பங்களுக்கும் அங்ஙனே உடனுக்குடன் எவ்வித முகாந்திரங்களைக் காட்டியாவது பதிலுத்தரங் கொடுத்துவிடலும் வேண்டும்.

(12) நம்முடைய திருப்பணி டிப்பாற்றுமெண்டு எந்தச் சிறிய ஆபீஸ் முதற்கொண்டு தலையான அக்கவுண்டாபீஸ்வரை எல்லா ஆபீஸ்களும் காலை 10½ மணி முதற்கொண்டு 4 மணி வரையே நடவடிக்கைகளை நடாத்துதலும் வேண்டும்.

(13) அந்த அந்த ஞான்றுகளிலுள்ள எந்தக் கணக்குகள் எந்தக் காரியங்களையும் அந்த அந்த ஞான்று அந்த அந்தக் காலங்களுக்குள் எட்பிளவவ்வளவும் பாக்கியில்லாதவண்ணம் பூர்த்தியாக்கிக் கோடலும் வேண்டும்.

(14) எவ்விதமான முகாந்தரங்களைக்கொண்டும் ஏற்பட்டகால அளவைக்குமேல் ஆபீஸ் நடத்துதல் கூடவே கூடாது.

15. திருப்பணி டிப்பாற்றுமெண்டுக்குள்ள தொகை பூராவும் நமது பேங்குகளிலேதான் நிற்றல் வேண்டும். நூற்றுக்கு ஒன்று வட்டிக்குக் குறையாதிருத்தலும் வேண்டும். அல்லது நூற்றுக்கு நான்கு ஐந்து வட்டி கட்டக்கூடிய தொழிற்சாலைகளாக அமைத்து நஷ்டம் வராதவண்ணம் பாதுகாத்தலும் வேண்டும். இஃதன்றி ஒரே மொத்தத் தனித்தொகையாக ஏதோ ஒரு சமயம் சேரவேண்டுமாயின் அதற்கு யாதொரு இடையூறுகளும் நிகழாதவண்ணமாக இருத்தலும் வேண்டும். பலவிதமாகச் சிறிய சிறிய கிடங்குகளிலே நிறுத்தியிருப்பினும் வேண்டுஞ்சமயம் யாதொரு தேக்கமுமின்றி வந்துவிடுமார்க்கமாக இருத்தலும் வேண்டும்.

16. திருப்பணி டிப்பாற்றுமெண்டு என்றால் நம்முடைய நாட்டுக் கோட்டை நாடு நகரங்களுக்கெல்லாம் ஏகாங்கமான ஒரே பொதுவாக இருத்தல் வேண்டும். அவ்வாறிருந்து வருகிறதென்பதை நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் நன்றாக வுணர்ந்துகொண்டிருத்தலும் வேண்டும். அவ்வாறுணர்ந்துகொள்வ

தற்கான மார்க்கங்கள் பலவற்றையும் உடனே பூர்த்திசெய்துவிடலும் வேண்டும். எத்துணை தூரந் தாழ்ந்த அல்லது உயர்ந்த ஒரு விஷயத்தையும் நினைத்த அங்ஙனே பூர்த்தியாகச் செய்தலும் வேண்டும். நாளை நாளை என்பது நமனுடைய நாளாமென்பதை ஒரு கணப்போழ்துங்கூட மறத்தலாகாது. பொதுவான விஷயங்கள் பலவற்றுள்ளும் சிவாலயங்கள் சீர்திருத்தமாகவேண்டுஞ் சில முக்கிய விஷயங்கள் என்னும் பொதுவிற்குழைத்தலே எற்றானுஞ் சிறந்த பெருந்தகையான மேதாவிகளின் கடமையாமென்பதை எவரே என்கினும் மறத்தல் கூடாது. இதற்காக நமது கவர்னமெண்டாரவர்களால் ஆகவேண்டும் விஷயங்கள் பல விருப்பினும் அவைகளையும் வேண்டியவாறு எந்த எந்த வழிகளாகப் பூர்த்தி செய்துகொள்ளக்கூடுமோ அந்த அந்த வழிகளாக மிக்க இதமாயும், பதமாயும், வணக்கமாயும் நின்று பூர்த்திசெய்துகோடலும் வேண்டும்.

17. இத்திருப்பணி டிப்பாற்றுமெண்டுக்காக வேண்டும் ஒவ்வொரு உத்தியோகஸ்த்தர்களும் நல்ல நிர்ணயம் உள்ளவர்களும், நல்ல படிப்பாளிகளும், நிறைந்த நல்லறிவுள்ளவர்களுமாகத்தானிருத்தல் வேண்டும். ஒருங்கே யாங்கிலங் கற்றவர்களாக இருத்தல் வேண்டுமென நினைத்தலுங் கூடாது. (பியூன் வேலையல்லாத) எந்த உத்தியோகஸ்தர்களினும் கடையான உத்தியோகஸ்தர்களுக்குங் கூட மாத வேதனம் ரூபாய் இருபத்தைந்துக்குக் குறையாதிருத்தலும் வேண்டும். நம்முடைய நாடு நகரங்களில் சமுசார சகிதமாயுள்ள ஒரு முழு மனிதனுக்கு மாத வேதனம் இருபத்தைந்து ரூபாயினுங் குறைந்தால் அவனுடைய வாணாளானது எவ்வாறு கழியுமென்பதையும் பொதுவாகக் கவனித்தலும் வேண்டும். அவர்கள் நமது சைவ சமயத்தைச் சார்ந்த எந்த வருணத்தவர்களாயினுஞ் சரியே, ஆனால் முதன் முதலாகவுள்ள தலைவரும், அதற்கடுத்த ஒரு உத்தியோகஸ்தரும், அதற்கடுத்த ஒரு உத்தியோகஸ்தரும் ஆகிய மூவரும் வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் ஆகிய மூன்று பாஷைகளினும் வரன்முறையாகத் தேர்ந்த நிபுணர்களாயும், வேதாகம புராணேதிகாசங்களிற் றேர்ந்த வல்லுநர்களாயும், களங்கமற்ற பளிங்கம்போன்ற தெளிவான மனத்தினர்களாயும், இயற்கையிலேயே வான்குடித் தோற்றமுள்ளவர்களாயும், எவ்விஷயங்களினும் ஆழ்ந்துகிடந்து யோசிக்கும் அருங்கருத்துள்ளவர்களாயும், முப்பஃ

தாண்டுகளுக்குமேல் ஐம்பஃதாண்டுகளுக்கு மேற்படாத நல்ல சரீரங்களுள்ளவர்களாயும், இல்லற வொழுக்கத்திற் கட்டுப்பட்டவர்களாயும், இன்னும் ஏனைய நல்லொழுக்கங்கள் யாவும் ஒருங்கே நிறையப்பெற்றவர்களாயும், 100, 150, 200, மாத வேதன அமைப்புள்ளவர்களாயும் இருத்தல் வேண்டும். தலைவராயுள்ளார் நமது வணிக மக்களுள் ஒருவராகத்தானிருத்தல் வேண்டும். பெரிய உத்தியோகஸ்தர்களை ஐந்து வருஷத்துக்கொருமுறை ஒன்றைவிட் டொன்றில் மாற்றிவைத்துக் கொண்டிருத்தலும் வேண்டும். இவைகளுக்குரிய பெருஞ் சக்திகளெல்லாம் நமது மகா சங்கத்தாருக்குள் அடங்கியிருத்தலும் வேண்டும்.

18. எந்தக் காரியங்களையும், அக்கவுண்டுகளையும், பெட்டி யிருப்புத் தொகை வகைகளையும் இடை இடையே சரிபார்ப்பதற்காக நமது வணிக மக்களுள் ஒருவரையே நியமித்திருத்தலும் வேண்டும். எவ்விதச் சிறிய பிழைபாடுடையவர்களையும் பின்னொரு முறை செய்யாதிருக்க வேண்டும் வழிகளாகச் செய்வதில் எற்றும் பின்றாங்கல் கூடாது. டிப்பாஸ்டு பெறவேண்டும் உத்தியோகஸ்தர்களிடம் அவர்கள்பால் விடப்படும் வேலைகளுக்கும், இருப்புத் தொகைகளுக்குந் தக்க தக்கவாறு சட்டமாகப் பரவச்செய்து முன்னதாக வேண்டுந் தொகைகளைப் பெற்றுக் கணக்கில் வரவு வைத்துக்கோடலும் வேண்டும்.

19. பொதுவாக தர்மகர்த்தர்களாயும், கமிட்டி மெம்பர்களாயும், இத்திருப்பணி டிப்பாற்றுமென்டு தலைமை உத்தியோகஸ்தர்களாயும் விளங்கப்படுகிற நமது வகுப்பைச் சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும் இங்ஙனம் முக்கியமாகக் கவனிக்கவேண்டுவதொன்று அஃதாவது நாள் தோறும் ஒரு அரை முகூர்த்தகாலமே எனினும்

"அவமாம் புலத்தை யடக்கி மனாதி
சிவயோகஞ் சார்தல் தியானமாகும்"

"இந்துவும் பாநுவும் விந்துவும் நாதமும்
சந்தியில் வைத்தல் சமாதியாகும்" என்னும் நூன்

முறைப்படி தியானயோக சமாதியில் பயின்று வருதலும் வேண்டும். அல்லாதவரை தோற்றப்படுகிற மூவுலகங்களுக்கும் பொதுச் செல்வமாகிய சிவாலயங்கள் திருப்பணி சீர்திருத்தவிஷயமாக நமக்கே தெரியாமல் நம்மாலே நிகழ்ந்து நம்மைச் சூழும் எத்துணைப் பிழைகளுக்கும் வேறு

விதமான பிராயச்சித்தம் கிடையாது. இதனைக் கல்லின்மேல் வரைந்துள்ள எழுத்துக்களைப்போன்று தங்கள் தங்களின் மனத்திற் பதித்துக் கோடலும் வேண்டும். வேறுவிதமான பிராயச்சித்தங்கள் நமது ஆகமாதிகளிலே கூறியிருப்பினும் அவைகள் இங்ஙனம் மேலே கூறிய பிராயச்சித்தத்தின் முன் னிற்குமென எவர்தான் கூறுவர்.

20. இன்னும் பரிசாரகர் முதற்கொண்டு அர்ச்சகர் வரையுள்ள ஆதிசைவர்கள் அல்லது குருக்கள்மார்கள் அல்லது அந்தணோத்தமர்களையும், ஆலயத்திலுள்ள ஏனைய வேலைக்காரர்களையும் அவ்வவர்களுக்குரிய தாரதம்மியங்களை நோக்காது ஒன்றாகப் பாவித்தல் கூடாது. அவர்கள் கல்வி, அறிவு, செல்வங்களினும் நமது அதிகாரங்களுக்கும் ஒருவாறு கீழ்ப்படிந்தவர்களாகவே இருப்பினும் சிவாலயங்களிலே நடைபெறும் மற்றெல்லாக் கைங்கர்யங்களினும் தலையாய கைங்கர்யங்களை நடாத்தும் தத்துவம்பெற்றவர்களாகையால் அவர்கள் எவ்வகைத்தானும் நம்மை வணங்குமாறு செய்துகோடலும் ஆகாவாம். அதிகார முறைமையில் அவர்களுக்கும் நமக்கும் ஏற்படுகிற எவ்விதத் தொடர்புகளையும் விட்டுச் சாதாரண ஏனைய நம் சகோதரர்களைப்போன்று மதித்து ஒழுகுமாறு நடந்துகோடலும் வேண்டும். அவர்கள் நம்மைக்கண்டவுடன் அங்கவஸ்திரத்தை இறக்கிக்கோடலும், முன்னதாகவே ஆசீர்வதித்தலும், இரண்டு கைகளையும் ஆர்த்துக்கோண்டு நெடுந்தூரம் நம்பின்னோடே வருதலும், அச்சத்தாலே நமக்குப் பயந்து நாம் சொல்வனவற்றிற்கெல்லாம் நல்லது நல்லது எனப்பணிமொழி கூறலும், ஆங்கோரு சிறு தூரத்தில் நமக்கோரு வேலை யுளதாயின் அங்ஙனம் நின்றவாக்கிலே சென்றோடி வருதலும் நமக்குப் புகழென்றாவது, நன்மை என்றாவது நாம் நினைத்தல் கூடவே கூடாது. அவர்கள் உள்ளன்போடும், களங்கமன்னியிலும் இயலுகிறார்கள் என நினைந்து ஏமாறுதலுங் கூடாது.

21. பொதுவாக ஆய்ந்துநோக்குமிடத்து சிவாலயங்களிலே திரவிய நிர்வாகம் பெற்ற கமிட்டியாரவர்களும், தர்மகர்த்தர்களும், கிரியா நிர்வாகம்பெற்ற அர்ச்சகர்களும், இவ்விரண்டற்கும் பொது நிர்வாகங்களைப்பெற்ற மற்றையவர்களும், இன்னும் ஏனைய ஒவ்வொரு உத்தியோகஸ்தர்களும் தத்தமக்குரிய கடமைகளை நிறைவேற்றுதற்கு இன்றியமையாதனவாகிய உண்மை நூலுணர்ச்சிகொண்டே இயற்கையிலேயே தங்கள் தங்களுக்கு அமைந்துகிடக்கும் நான்முறைச் சட்டங்களுக்கு உட்

பட்டு மிகவும் அன்பான பக்தி சிறத்தையோடும் நம், நம் கடமைகளை நாம், நாமே மனப்பூர்வமாயும், ஒழுங்காயும் நடத்திக்கோடல்வேண்டுமென நினைந்து நடந்துகோடற்காக வேண்டும் மிகவுஞ் சீர்திருத்தமான நூன்முறைச் சட்டங்களைப் பூர்த்தியாக்கி ஒவ்வொரு சிவாலயங்களினும் தெற்றென விளங்குமாறு செய்தலையே நமது முதன் முதற் சீர்திருத்தமாக வைத்துக்கோடலும் வேண்டும்.

22. நமது பரதகண்டத்துத் தோற்றப்படுகிற ஒவ்வொரு பெரிய சிவாலயங்களினும் வருஷத்துக்கொருமுறையாக நடைபெறும் பெரியவோர் உத்ஸவகாலங்களில் சிவாலய சீர்திருத்த சங்கமொன்று கூடுதல் வேண்டும். (அஃதாவது காங்க்ரஸ் மகாசபை கூடுவதைப்போன்று) ஒவ்வொரு வருஷங்களினும் ஒவ்வொரு நகரங்களிலே கூடுதலும் வேண்டும். அவ்வாறு ஒரு நகரத்தில் கூடும்பொழுது ஏனைய பல நகரங்களினுமுடைத்தான பற்பல செல்வவந்தர்களையும், எற்றானுஞ் சிறந்து நிறைந்த பல மேதாவிகளையும், தர்மகர்த்தர்களையும், கமிட்டி மெம்பர்களையும், நமது சமயத்தவர்களாயுள்ள பெரிது பெரிதான கவர்னமெண்டு உத்தியோகஸ்தர்களையும், வேதாகமமாதிகளினுஞ் சிறந்து நிறைந்த வல்லுநர்களான வக்கீல்மார்களையும் வந்து கூடுமாறுசெய்து சிவாலய விஷயங்களையெல்லாம் ஒருங்கே செவ்வையாகப் பகர்ந்துபேசி வேண்டுஞ் சீர்திருத்தச் சட்டங்களைப் பூர்த்தியாக்கி அங்ஙனம் ஆக்கியவாறு ஆங்காங்கு பரவச்செய்து ஒழுங்காக இயலச்செய்தலும் வேண்டும்: இன்னும் சிவபுண்ணியமான்மியங்களையும், சிவத்திரவியாபகார முதலிய சிவத்துரோகங்களின் இயல்புகளையும், அவற்றால் மறுமையிலெய்தப்படும் நகரவாதனைகளையும், இம்மையிலெய்தும் பழிப்புரைகளையும், பிறவிஷயங்களையும் தக்க வித்வான்களைக்கொண்டு உபந்நியாசிக்கச் செய்தலும் வேண்டும்.

23. பூசா கைங்கர்ய முதலியவற்றின் விளக்கத்தையும், சிவபுண்ணிய விசேடங்களையும் எடுத்துக்கூறும் சிவாகமாதி சாஸ்திரங்களை வருணபேதம் நோக்காது நமது சைவசமயத்தவர்களாயுள்ள எந்த மாணவர்களுக்கும் போதிக்கவல்ல சிவாகம பாடசாலையொன்று நமது திருப்பணி டிப்பாற்றுமெண்டுடன் சம்பந்தப்பட்ட ஒரு தனியாகவாவது, நமது மதப்பாடசாலையின் ஓர் பகுதியாகவாவது அமைத்துக்கோடல்வேண்டும். அதனை நமது உயிரினுஞ் சிறந்ததாக மதித்துப் பாதுகாத்துவருத

லும் வேண்டும். அதில் முறையாகக் கற்றுத்தேர்ந்த மாணவர்களுக்கு ஒருவிதப் பட்டமும், பரிசளிப்பும் நியமித்து நடாத்திவருதலும் வேண்டும்.

24. இத்திருப்பணி டிப்பாற்றுமெண்டுடன் சம்பந்தப்படுத்தியதான ஓர் சிறிய அச்சியந்திரசாலையொன்றும் வேண்டும். அதில் இத்திருப்பணி விஷயமான பல வேலைகள் நடந்துவருவதுடன் நமது சிவாகம பாடசாலையைப் பொறுத்த எந்த வேலைகளையும், தேவஸ்தானம் சம்பந்தமான சகல அச்சுவேலைகளையும், நமது சமய பரிபாலன சம்பந்த பத்திரிகை புத்தகம் முதலிய பல வேலைகளையும் முட்டின்றி நடாத்திவருதலும் வேண்டும்.

25. பொதுவாக நமது சிவதேவஸ்தானங்களின் சரித்திரங்களையும், அவற்றிற்குரிய வரவு செலவு இருப்புக்கம்மிகளையும், உத்ஸவ விவரங்களையும், சிற்பந்திகளின் எண்ணங்களையும், நியமனமாறுதல்களையும், அந்தந்தச் சமயமிருக்குங் குறைபாடுகளையும், அவற்றை மாற்றுதற்குரிய உபாயங்களையும், சைவசமயிகளறிந்து அநுட்டித்து எழுதவேண்டிய சாஸ்திர உண்மைகளையும், இவைபோன்ற பிறவிஷயங்களையும் விளக்கத்தக்கதாகிய ஓர் மாதாந்தப்புத்தகம் ஒன்று தக்கவர்களால் எழுதுவித்து யாவருக்கும் பயன்படுமாறு குறைந்த சந்தாவிற்கோ அல்லது இனாமாகவோ பிரசுரித்துவருதலும் வேண்டும்.

26. நமது சிவதேவஸ்தானங்கள் சம்பந்தமான லௌகிக வைதிக விஷயங்களைக் கவனித்து நடாத்துதற்குப் போதிய கல்வித்திறமையும், சமயாபிமானமும் அமைந்துள்ள சிலரைத் தெரிந்து அவர்களைக்கொண்டு அச்சுக்குவரும் புத்தகங்கள், பத்திரிகைகள் முதலியவற்றைச் சீர்திருத்தி உபகரிக்குமாறு தக்கமுறையாக வேண்டிக்கோடலும் வேண்டும்.

27. எந்தத்தலையான உத்தியோகஸ்தர்களும் தமது பாதுகாப்பிலிருக்கும் சிவாலயங்களில் நடைபெறும் விஷயங்களைத் தாம் வருதலை முன்னறிவியாது சென்று கவனித்தலும், அப்பொழுது தமக்குப் பிரத்தியக்ஷப்படும் குறைபாடுகளை நியாயமாயும், தாட்சண்யமின்றியும் மாற்றுவித்து வருதலும் வேண்டும்.

28. சிவாலயங்களின் உள்ளும் புறமும் அமைந்திருக்கும் தீர்த்தங்களை யாவரும் எளிதிலுணரும்படி யவற்றின் பெயர்களையும் மான்மியங்

களையும் சிலையிலாயினும், பலகையிலாயினும் மிகத் தெளிவாய் வரைவித்து அவற்றில் எவ்வித அசுத்தமும் செய்யாதவாறு காவல்செய்து புனிதமாயாங்காங்கு விளங்கவைத்தலும் வேண்டும்.

29. திருக்கோபுரம், கெற்பகிருக விமானமுதலியவைகளிலுள்ள ஸ்தூபிகள், பிம்பங்கள் பின்னமுறாமலும், உட்புறங்களில் அசுத்த முறாமலும் பந்தோபஸ்துசெய்து மனோகரமான வருணம், வெள்ளை என்பவைகளால் அலங்கரித்துவைத்தலும் வேண்டும்.

30. சிவாலயங்களில் எழுந்தருளியிருக்கும் மூர்த்திகளின் திருநாமங்களை யாவருமுணர்ந்துகொள்ளுமாறு அவ்விடங்களில் எழுதிவைத்தலும் வேண்டும்.

31. ஆலயத்தின் உட்பாகத்தில் பஹிரங்கமும் பந்தோபஸ்துமான சுவர்களில் விநாயகர், சுப்பிரமணியர், பரமேஸ்வரர், பார்வதியார் இவர்களின் பலதிறப்பட்ட திருமேனிகளையும், இவர்களியற்றிய பொதுத் திருவிளையாடல்களையும், அந்தந்த ஸ்தலங்களில் நடந்த புராண சம்பந்தமான லீலைகளையும், திருத்தொண்டர் புராணவரலாறுகளையும் தரிசனார்த்தமாக வருகிற ஜனங்களுக்கு பக்தி வளர்த்தற்கேதுவாக அழகிய சித்திரங்களால் வரைந்துவைத்தலும் வேண்டும்.

32. ஆலயத்தின் உட்பக்கங்களிலும், புறப்பக்கங்களிலும் நூலாம்படை, செத்தை, குப்பை முதலியவைகளையும், திருமதிற்றட்டி திருக்கோபுரம் முதலிய இடங்களில் தற்செயலாயுண்டாயிருக்கும் அரசு முதலிய செடிகளையும், உடனுடன் களைந்து வெள்ளை தீற்றவேண்டிய இடங்களில் வெள்ளை தீற்றியும், மெழுக்கிட்டும், சுத்தமாயும், மனோகரமாயும் வைத்திருத்தல் வேண்டும்.

33. அபிஷேக அலங்காரங்கள் நடைபெறுஞ் சமயங்களில் அந்தக் கைங்கரியங்கட்குரியாரன்றி ஏனையோர் உள்ளே பிரவேசியாதவாறு நந்திதேவர் சித்திரந்தீர்ந்த திரைச்சேலைகளை யமைத்து மறைவாம்பொருட்டுத் தூங்கவிடுதலும் வேண்டும்.

34. ஒதுக்கமான இடங்களில் பாமரஜனங்கள் அசுத்தம் செய்யாதிருத்தற்பொருட்டு இருப்பளிகளால் பந்தோபஸ்து செய்தலும் வேண்டும்.

35. நித்திய நைமித்திகங்கட்கு வேண்டப்படும் அவசியமும், அரியதுமாகிய பதார்த்தங்களைச் சேகரித்து அடிக்கடி முட்டுப்படாது வைத்தலும் வேண்டும். தேவாலய சம்பந்தமான திருவாபரணாதிகளையும், உயர்தரப்பட்ட எந்த வாகனாதிகளையும், மற்றுமுடைத்தாய பண்டபாத்திரங்களையும் வருஷத்திற் பலதடவைகளாக பரிசோதனைகள் செய்து கவனித்துவருதலும் வேண்டும்.

36. மேற்கண்ட ஆபரணாதிகள், வாகனாதிகள், மற்றுமுள்ள எந்தப் பண்டபாத்திரங்கள், எந்தச் சாமான்கள் எந்த உத்தியோகஸ்தரிடம் ஒப்புவிக்கப்படுகிறதோ அந்த உத்தியோகஸ்தரிடம் முன் பெற்று வைத்திருக்கிற கையொப்ப ரிக்காடுகளையும் அந்தக்காலத்தில் பரிசோதனை செய்துவருதலும் வேண்டும்.

37. ஆலயங்களில் சிவாகம விதிப்படி பிரதிஷ்டை செய்யப் பெற்றிருக்கும் சில மூர்த்திகளின்மீதும், தாமிரமூர்த்திகளின்மீதும், முறையே எண்ணெய்ச்சிக்கலாய மெழுகும், களிம்பும் பற்றாதவாறு சுத்தஞ்செய்துவருதலும் வேண்டும்.

38. அவ்விதஞ் செய்யாது பாராமுகஞ்செய்யின், அர்ச்சிப்பவர்களுக்கும், தரிசிப்பவர்களுக்கும் அஞ்ஞானமும், பீடைகளும் பல்கிப் பெருகுமென்பதை யுணர்தலும் வேண்டும்.

39. தீபாராதனை நடைபெறுங் காலங்களில் யாவருந்தரிசித்து இன்புறுதற்கேதுவாக சந்நிதானங்களில் இருப்பளிகளினாலாவது, சங்கிலிகளினாலாவது ஜனங்களை வரம்புபட நிற்கச்செய்தலும் வேண்டும்.

40. தரிசனார்த்தம் வந்த அன்பர்களுக்கு பரம ஐசுவரியமாகக் கொடுக்கப்படுகிற விபூதியானது பசுவின் சாணத்தாலமைந்ததாகவும், தாவள்யமும், சுகந்தவாசனையும், மிருதுத்தன்மையுமுடையதாகவும் தயார் செய்துவைத்து அதன் அருமை பெருமை தோன்ற விதிப்படி நிதானமாகக் கொடுத்துவருதலும் வேண்டும்.

41 இன்னும், ஒவ்வொரு நாட்களினும் பரமேஸ்வரரது திருமேனிப்பாங்கான அபிஷேகத் திரவியங்களில் உலோபம் நேரிடாமலும், அவைகள் அவம்போகாமலும் பாதுகாத்துச் சமர்ப்பித்து வரும்படிச் செய்தலும் வேண்டும். தீர்த்தத்தொட்டிகளை யடிக்கடி சுத்தப்படுத்தி வைத்தல் வேண்டுமெனவும், திருமடப்பள்ளியின் சுத்தம், நைவேதனஞ் செய்

யும் பாத்திரங்களின் சுத்தம், அதனைச் செய்பவர்களின் சரீர சுத்தம், என்பவைகளையும்; நைவேதனப் பொருளின் அளவையும், பாகத்தின் தன்மையையும், நன்கு செவ்வையாக நடந்துவரும்பொருட்டுக் கவனித்தலோடும், நைவேதனமான நிர்மாலியங்களை மீட்டும் மடப்பள்ளியிற் கொண்டுபோகாது ஆலயவதிகாரிகளின் பார்வையிலோர் இடம் அமைத்து அங்கு வைப்பித்து பக்குவம் அளவு திட்டமென்பவைகளைக் கவனித்தலும் வேண்டும். தர்மகர்த்தர்கள் தங்களுக்கு தர்மகர்த்தர்களென்னும் பட்டங்கிடைத்ததை நினைந்த பெருமகிழ்ச்சியினாலாவது, தேவதாசிகளின் ஆட்டபாட்டங்களினாலாவது, தங்களுக்கென வேறு வேறு விதங்களாய் தங்கள் தங்கள் இல்லங்களில் தங்கள் தங்களை யறியாமற் போய்க்கிடக்கும் நைவேதனங்களைக்கண்டாவது, தங்கள் தங்களின் பின்னோடே ஆலய வேலையாட்கள் கையார்த்துக்கொண்டுவரும் கௌரவத்தை நினைந்தாவது அதர்மகர்த்தர்களாய்விடாமல் மிக எச்சரிக்கையாயொழுகிக் கவனித்துத் தமக்குற்ற கைங்கர்யத்தை மிகச் சரியாக நடாத்திவருதலும் வேண்டும். உமிக்கரிச் சாம்பர் விபூதியாவதைக் கட்டோடே நிறுத்துதலும் வேண்டும். கிழக்கெழுங் கதிரவன் மேக்குதயமாயினும் பண்டைய ஞான்றில் ஏற்பட்ட நைவேதனக்கட்டியின் அளவைமாத்திரம் எவ்வித முகாந்தரங்களைக்கொண்டுங் குறைத்தல் கூடாது. சக்தியுளதாயின் ஒரு காற்படியரிசி நைவேதனக் கட்டியை ஓரரைப்படியரிசி நைவேதனக் கட்டியாக வமைத்து வையுங்கள். அதற்காக ஏனைய வேலைக்காரர்கள்பால் மாதவேதனத்தைக் குறைத்தலுங் கூடாவாம். நைவேதனக் கட்டிகளின் மீது கற்களும், நெற்களும், உமிகளும், வண்டுகளும், தூசு, தும்பு, மாசு, மறுக்களும் அநேக ஆலயங்களிற் காணப்படுகிறது. வேலைக்காரர்கள் மிக்க மனவருத்தத்தோடுங் கூடப்பெற்று எவரேனும் யாத்திரைவாசிகளாவது, ஆண்டி பரதேசிகளாவது காலணா அரையணாக்கொடுத்து பெற்றுக்கொள்ளமாட்டார்களாவெனக் கழித்துவிட்டுவிடுகிறார்கள். எற்றும் விதியற்ற ஆண்டி பரதேசிகள் அதனைப்பெற்று அங்ஙனே யுடைத்தான பொற்றாமரைக்கரையோரங்களிலுட்கார்ந்து தங்களின் விதிகளை நோக்கி, எங்கிருந்தோ நடந்து வந்த சிரமத்தையும் நினைந்து தங்களுக்குள் தாங்களே முணமுணர்த்துக் கொண்டு பாதியைத் தின்றும் பாதியைத் தண்ணீரில் எறிந்தும், என்ன கோவில், என்ன ஆலயம், வல்லாரோளிமகன் ஸ்வாமிக்கு இதுதானோ

நைவேதனம் எனப்புலம்பிக்கொண்டும் போகிறார்கள். சிலர் தர்மகர்த்தர்களையுங்கூட வாயில்வந்தபடி வைகிறார்கள். தர்மத்திற்குக் கர்த்தர், யாமே என மீசை முறுக்கிக்கொண்டு முன் வந்த ஒருவர் இவ்விஷயங்களையன்றோ நன்றாகக் கவனித்துத் திருத்துதல் வேண்டும். படித்தரவிகிதங்களைக் குறைத்து வேலையாட்களெல்லாம் குய்யோ, முறையோவெனக்கத்துமாறு வருஷத்துக்கு இலக்ஷக்கணக்குகளாக மீதியாக்கி வைப்பதில் யாது பிரயோசனம். ஓ! தர்மகர்த்தர்களான ஐயன்மீர் எந்தச்சிவாலயங்களிலேயாவது ஆங்குடைத்தான பரசிவப்பெருமான் இவ்வாறு செய்யும்படி எந்தத் தர்மகர்த்தர்களின்பாலாவது கேட்டுக்கொண்டாரோ அங்ஙனங் கேட்டுக்கொண்டாரெனச் சொல்ல எவரேனுங் கேள்விப்பட்டதாவதுண்டோ, நடுநிலையான நீதியை விழித்துப்பாருங்கள். மாயாமயக்கப்போக நித்திரையைவிட்டு ஒழிந்து எழுந்திருங்கள். நீதிமார்க்கங்களினும், ஆகம புராணங்களினும் நன்றாகப் பழகுங்கள். வஞ்சமற்ற நெஞ்சத்தோடு ஆங்குடைத்தான பலவற்றையும் விசாரணை செய்யுங்கள். "மறை சோலும் பொருள் மனிதவேடம்" என்பதை யுணருங்கள். வேலைக்காரர்களின் வாயில் மண் போடாதிருங்கள். ஆங்கு ஆடக்கண்ட தாசியைக் கூட்டிக்கொடுப்பவர்களுக்குத் தக்கதோர் உயர்தரவேலையைக்கொடுத்து மோசம்போகாதிருங்கள். அதற்காக ஆயிரக் கணக்குகளிலே பொருள்விரையஞ்செய்து ஏமாறாதிருங்கள். எற்றானுஞ் சிறந்த நல்லறிவாளர்களோடே நட்புக்கொள்ளுங்கள். நாடோறும் ஆலய கைங்கர்யத்தை நன்றாகக் கவனித்துப்பாருங்கள். மிக ஆடம்பரத்தோடு நமது பின் பலர் கூடிவருதல் வேண்டுமென நினையாதிருங்கள். தகுதியுடையார் பலரை யங்ஙனம் காணின் அங்ஙனமே முகமன்கூறிவிடுத்துத் தனியாகச்சென்றே விஷயங்களைக் கவனியுங்கள். அநேக தர்மகர்த்தர்கள் சந்ததியற்று வருந்துவதற்குக் காரணம் யாதெனக் கண்டுணர்ந்து தெளியுங்கள். எற்றானும் நடுநிலையென்னும் பாலத்தினின்றும் நழுவாதியலுங்கள்.

42. திருவிளக்குகளையும், தீபாராதனைத் தட்டுகளையும் சுத்தமாய் வைத்தும், தீபங்களுக்குக் குறைவு ஏற்படாதவண்ணம் பாதுகாத்து வருதலும் வேண்டும்.

43. தேவஸ்தானம் ஆபீசில் சைவாபிமானிகளின் அபிப்பிராயப் பதிவு புஸ்தகமொன்று தயார்செய்துவைத்து அதில்த் தக்கவர்களிடம்

ஆலய கைங்கரியாதிகளின் நிலைமையைப்பற்றி அபிப்பிராயம் எழுதிப் பெற்றுவருதலும் வேண்டும். இன்னும் ஸ்தலவாசிகளுள் சைவாபிமானமும், சாஸ்திர ஆராய்ச்சியும், சிவாலாய தரிசன நியதியும், அந்தஸ்துமுள்ள கௌரவ புருஷர்களுக்கு தர்மகர்த்தர்கள் தாம் தயார்செய்து வைத்திருக்கும் அபிப்பிராயப்புஸ்தகத்தில் தம் ஆலயத்தின் உண்மைகளைப் பதிவுசெய்யுமாறு தக்க நிருபங்களனுப்பிக் கேட்டுக்கொள்ளுதலும் வேண்டும்.

44. அத்தகையோர்களால் குறித்த புத்தகத்தில் வரைந்திருக்கும் விஷயங்களுள் உடனே நிவிர்த்திசெய்யக்கூடியவைகளை நிவிர்த்திசெய்தும், சிறிதுகால நீடிப்பில் நிவிர்த்திசெய்யக்கூடியவைகளை நிவிர்த்திசெய்வதிலிருக்கும் நோக்கத்தையும்பற்றி நிருபமூலமாய்த் தெரிவித்துக்கோடலும் வேண்டும்.

45. சிவாகம பாடசாலையின் உபாத்தியாயர்களைக்கொண்டு ஆலயவதிகாரிகளுக்கும் ஊரிலிருக்கும் மகா ஜனங்களுக்கும் சிவதருமாதி விஷயங்களை ஏதோ அவகாசப்பட்ட காலங்களில் ஆங்காங்கு உபந்நியாசம் செய்துவரும்படி எச்சரித்தலும் வேண்டும்.

46. கோயில் உத்தியோகஸ்தர்களுள் தினமொருவராகக் குறிப்பிட்டு நித்திய கைங்கர்யங்களைக் கவனித்துச் சீர்திருத்தி வரும்படி எச்சரித்தலும் வேண்டும்.

47. இன்னும் உத்ஸவகாலங்களில் சிவாலயத்தின் கொடிகள் ஏற்றப்படும் எட்டுத்திக்குகளினும் திக்குப்பாலர்களின் திருவுருப்படங்களைப் பெரிதாய் எழுதுவித்துக் கட்டுவித்தலும் வேண்டும். உத்ஸவங்களுக்குரிய விமானங்களையும், வாகனங்களையும், முறையாகவும், மனோகரமாகவும் அமைத்துவைத்தலும் வேண்டும். உத்ஸவ மூர்த்திகளுக்கு அபிஷேக அலங்காரங்கள் நடைபெறுங்காலங்களினும் பெரியதிரைகளமைத்துக்கோடல் வேண்டும். திருவீதியின் எட்டுத்திக்குகளினும் வெய்யின் மழை வீழாவண்ணம் பெரிய பந்தர்களமைத்து அவற்றில் திக்குப்பாலர்களின் படங்களும், அவர்களது அதிகார சம்பந்தமான சரித்திரப் படங்களும் அமைத்துவைத்தல் வேண்டும். இப்பந்தர்களுக்கு மத்திய இடங்களில் நீதிவாக்கியங்களடங்கிய அழகிய தோரணங்கள் கட்டுவித்தல் வேண்டும். காலை மாலைகளில் ஸ்வாமி திருவீதிகொண்டருளுதற்கு

16 NOV 1914 MADRAS.

சிவாலயங்கள் சீர்திருத்தமாகவேண்டும் சில முக்கிய விஷயங்கள்.

முன் 9-வது புத்தகம் 176-வது பக்கத் தொடர்ச்சி.

முன் நூதன சிற்பந்திகள் நியமித்துத் திருவலகிடுவித்து, ஜலந்தெளிப்பித்துச் சுத்தஞ்செய்துவருதலும் வேண்டும். கொடி, குடை, சாமரங்கள் முதலிய விருதுகளை அழகுபெற வரிசைப்படுத்திவைத்தலும் வேண்டும். உள்ளூர் வெளியூர்களிலிருக்கும் பக்தஜனங்களையும், கௌரவ புருஷர்களையும், தேவஸ்தான ஆபிசு உத்தியோகஸ்தர்களையும், ஸ்வாமியுடன் திருவீதிவலம் வரும்படி வேண்டிக்கொள்ளுதலும் வேண்டும். திருவீதியின் முக்கியமான இடங்களில் உத்ஸவ தரிசனார்த்தமாக வந்திருக்கும் நமது சைவ நூலாராய்ச்சியிற் சிறந்த வித்வான்களைக்கொண்டு அங்ஙனம் இன்றியமையாதனவாகிய சாஸ்திர இரகசியங்களை பிரசங்கஞ் செய்வித்தலும் வேண்டும். சைவசமய வுண்மைகளையும், நம்மவர்களுக்கு இன்றியமையாத பிறவிஷயங்களையும் சிறு புத்தகங்களாக அச்சிடுவித்து நாற்றிக்குகளினும் நடப்பித்து தக்கவர்களாற் குறைந்த கிரையத்திற்கு விற்பனை செய்வித்து வருதலும் வேண்டும். இனாமாகக் கொடுத்தற்குரிய துண்டுப்பத்திரிகைகளை அச்சிடுவித்து தக்கவாறு பலருக்கு உபசரித்தலும் வேண்டும். தமிழ் வேதபாராயணத்துக்குரிய சைவ மாணவர்களுக்கும் ஏனையோருள் பாராயணஞ் செய்பவர்களுக்கும் உத்ஸவாரம்பமுதற்கொண்டு பூர்த்தியாகிறவரை மாகேஸ்வரபூசை நடாத்திவருதலும் வேண்டும். வேதபாராயணஞ்செய்யும் அந்தணமாணவர்களுக்கும் மிகத் திருப்த்திகரமான போஜனம் உதவிவருதலும் வேண்டும்.

48. தேவாலயங்களுக்கு தாசிகளுடைய ஆடல்பாடல்களும் அவர்களாலே செய்யப்படுகிற சில தொழில் முறைகளும் வேண்டியது ஆவசியகந்தானென்பதையுங் கவனித்துக் கூடிய கூட்டத்தில் கூடிய பகுதியார்களின் அபிப்பிராயம்போன்று இயன்றுகோடலும் வேண்டும். சில மேதாவிகள் ஆவசியகமில்லையென மறுக்கவுஞ் செய்கிறார்கள்.

49. சில ஆலயங்களில் வாகனங்கள் மிகக் கனமாய் 40, 50 பெயர்களாலுங்கூடக்கூடிச் சுமக்கக்கூடாத நிலைமையிலிருக்கிறது. அதன்மேற் ஸ்வாமியை எழுப்பண்ணி மிகுந்த ஆபரணாதிகளையும், நீர் நிறைந்த புஷ்பாதிகளையும் அளவுசங்கையில்லாமற் சுமத்தி சுமப்பவர்களுக்கும், ஸ்வாமிக்கும் கஷ்டத்தை யுண்டாக்குகிறார்கள் சாதாரணமாக இலகுவாயும் அலங்காரமாயும் இருத்தல் வேண்டியதே ஆவசியகமாம்.

50. ஆலயங்களுக்குள்ளிருக்கும் பொற்றாமரைகளில் வேஷ்டி தோய்த்தல், காரியுமிழ்தல், விசேஷகாலங்களில் கும்பல் கும்பலாக நீர் நிலை கலங்குமாறு ஸ்நானஞ்செய்தன்முதலிய கெட்ட பழக்க வழக்கங்களைச் சட்டமாக நிறுத்துதல்வேண்டும். எந்த ஞான்றுமே ஆங்கு ஸ்நானஞ்செய்தல் வேண்டுமாயின் வெளியே கொணர்ந்துவைத்து ஸ்நானஞ்செய்துகோடலும் வேண்டும். மணற் பரப்பிவைத்துக்கோடலும் வேண்டும்.

51. ஐயன்மீர்! கட்டாயமாக 3 அல்லது 5 வருஷத்திற்கொருமுறை பொற்றாமரையிலுள்ள தண்ணீர் ஒருங்கையும் வெளியாக்கி கல் மண் சேறு முதலியவைகளை அள்ளிச் சுத்தஞ்செய்து மணற்றரையல்லாதவரை மணற்பரப்பி சுகாதார முறைகளுக்குப் பொறுத்தமாக வைத்துக்கோடலும் வேண்டும். எல்லாப் படிக்கல்லுகளினுமுள்ள பாசப்பற்றுக்களையுந் தேய்த்து சுத்தப்படுத்தல் வேண்டும். எவ்வகைத்தானும் நண்பர்காள் ஆலயங்களிலுள்ள தீர்த்தத்தொட்டிகளையும், பொற்றாமரையையும், அதன்பாலுடைத்தான நீர் நிலைகளையும் மிகச் சுத்தமாக வைத்துக்கொண்டிருத்தலும் வேண்டும். இன்னும் ஆலயங்களினுள்ளே கட்சாராயங் குடிப்பவர்களையும், பெரும்பான்மை அயோக்கியத்தன்மையிற் பொருந்தியவர்களையும் சாதாரணமாக விடுதல் கூடாது. சில ஆலயங்களுள் சூதாட்டம் வெகு பலமாக நடந்துகொண்டிருக்கிறது. இன்னும் இவைபோன்ற துர்விஷயங்கள் பலவும் நடக்கவொர்ட்டாமற் பாதுகாத்துவருதலும் வேண்டும்.

52. எவனேனும் ஒருவன் சிவாலயங்கள் விஷயமாயாவது, அதன் சீர்திருத்தவிஷயமாயாவது, புதிதாகக் கட்டவேண்டும் விஷயத்திலாவது, விக்கிரகாராதன விஷயமாயாவது நமது சைவசமயத்துக்கு நேர்விரோதமாகவேனும், விரோதமாவதற்குத் தகுந்த ஏனைய பல வழிகளாலேனும் உபந்நியாஸித்தாலும், துண்டுப்பத்திரிகைகள் அல்லது பேப்பர்கள் மூலமாகப் பிரசுரித்தாலும், புத்தகங்களாகச் செய்தாலும் அங்ஙனே அச்செடிகொடிகளை வேரறப்பிடுங்கிவிடுதலும் வேண்டும். அதுவகையில் எச்சரிக்கையற்றிருத்தல் கூடவே கூடாது.

53. நண்பர்காள் நம்பரதகண்டத்துள் தற்காலவரை அளவுகடந்த சீர் சிறப்போடும், எல்லாம் வல்ல இறைவன் திருவருட் சக்தியோடும், எற்றானுஞ் சிறந்த பெருந்தகையான நம் கோனாட்டுவர்க்கங்களாய மேனாட்டு மேதாவிகளும் கண்டு வியப்படையக்கூடும் உயர்தர வேலைத்

திறங்களோடுகூடி பிரபலமாக விளங்கும் எந்தச் சிவாலயங்களினும் ஆங்காங்கு இயங்கிக்கொண்டிருக்கும் ஓர்வித அபார சக்தியைப்பற்றி யாய்ந்துநோக்குமிடத்து ஒவ்வொரு மூலஸ்தானங்களினும் சிவஞ்ஞானயோகப்பெருஞ்செல்வர்களாலே ஸ்தாபிக்கப்பட்ட யந்திராதிகள் இருப்பதோடும் சில மெய்ஞ்ஞானவான்கள் நிஷட்டாபரர்களாய்த் தவம்புரிந்துகொண்டிருக்கிறார்களென்றுஞ் சில மேதாவிகளாலே யூகிக்கப்படுகிறது. அதனை யாய்ந்துநோக்குமிடத்து அடியேற்கு முண்மையாகவே தோற்றப்படுகிறது. யாங்ஙனமெனின் நகரப்பிரபுக்கள் சீர்திருத்தஞ்செய்யப்புகுந்த சில சிவாலயங்களின் மூலஸ்தானங்களைப் புதிப்பிக்கக் கருதியவைகளை இடித்தோ அல்லது பெயர்த்தோ பரிசீலனை செய்யுங்கால் மண்வெட்டி, கடப்பாரை முதலிய ஆயுதங்கள் பட்டமாத்திரத்திலே இரத்தம் பீரிட்டதாயும், அதனைக்கண்டு அதிசயித்தவர்களாய்ப் பின்னர் ஒன்றுஞ்செய்யாது முன்னிருந்தபடியே வைத்துவிட்டதாயும் கர்ண பரம்பரையொன்று பெரும்பான்மையோராலும் வழங்கிவருகிறது. இவ்விஷயம் நம் சகோதரர்களாயுள்ளார் ஒவ்வொருவர்களும் நன்குணர்வார்கள். இன்னும் புராதனமாயுள்ள மூலஸ்தானங்களை அடியோடே பெயர்த்தெடுத்துவிட்டு லிங்காதிமுதலிய அடிப்பீடங்களையெல்லாம் புதிதாக ஸ்தாபித்ததின்பின்னர் அங்ஙனம் புராதனமாகவும், இயற்கையாகவும் உடைத்தாயிருந்த திருவருட் சக்திகள் மாறுபட்டு போயிற்றென்றும், அங்ஙனம் மூலஸ்தானத்தைப் பெயர்த்துப் புதிதாக்கியதற்கு உடன்பாடாயிருந்த தலைவர் சிலர் அங்ஙனம் புதிதாக்கிய இரண்டொரு ஆண்டுகளுள்ளே காணாது மறைவுபட்டுப்போய்விட்டார்களென்றும் நம் நாடு நகரங்களுள் பலராலும் பேசக்கேள்விப்படுகிறோம்.

இன்னும் சிதம்பரம் மூலஸ்தானத்தில் ஸ்ரீ நடராஜப்பெருமானோடு திருமூலர், நந்தனார், மணிவாசகர், முத்துத்தாண்டவர் முதலிய பெரியோர்களும்; திருப்பதியில் முருகக்கடவுளோடு உரோமர் முதலிய பெரியோர்களும்; மதுரையிற் சோமசுந்தரக்கடவுளோடு அம்மையும், நாய்க்கர் முதலிய பெரியோர்களும்; இன்னும் இவைபோன்று புராதனமாயுள்ள ஒவ்வொரு சிவாலய மூலஸ்தானங்களினும் பெரியோர்கள் வாசஞ்செய்துவருகிறார்கள் என்றும் பல அறிஞர்கள்வாயிலாகக் கேள்விப்பட்டுவருகிறோம். எந்தவாற்றானும் எவராலும் அறுக்கக்கூடாத பாமாலையென்னும் இருப்புச்சங்கிலியாலே அருளென்னுஞ் சக்தியைக்கொண்டு

ஆன்றோர்களாலே ஒவ்வொரு மூலஸ்தானங்களையும் ஆர்க்கப்பட்டிருக்கிறதென்பதையும் நாம் நன்றாக உணர்தல் வேண்டும். சகோதரர்களே எவ்வகைத்தானும் மாட்சிமைதங்கிய நம் சைவசமயத்திற்கே புராதனமாயுள்ள திருவருட்பொக்கிஷசாலையென்னும் சிவாலயங்களிலே யுடைத்தாயிருக்கும் மூலஸ்தானங்களைப் பெயர்த்திடித்துப் புதிதாக்குமாற்றலில் நாமிகவும் எச்சரிக்கையுடையவர்களாயிருத்தல் வேண்டும். அவைகளைப்பற்றி யாராய்ச்சிசெய்வதில் மிகுதியுங்கவனமுடையவர்களாயிருத்தல்வேண்டும். மண்ணாலோ, மணலாலோ, கல்லாலோ யிருக்கும் புராதன லிங்கத்தைவிடப் புதிதாக வைக்கும் படிகலிங்கம் உயர்ந்தனவாயும் அழகாயும் இருக்குமே என்பதை நாம் கனவினுங்கூட நினைத்தலாகாது. இறந்தது விலக்கல் எதிரது போற்றல் என்னும் உத்தியை எல்லா வியவகாரங்களினுந் தாக்குதல் கூடாது. அசரீரியாலோ அல்லது வேறு அறிகுறிகளாலோ அங்ஙனமுடைத்தாய மூலஸ்தானத்தைப் பெயர்த்திடித்து வேறு புதிதாகக் கட்டுவதற்கு வேண்டும் உத்தரம் நிகழ்ந்தாலொழிய அதனை வேறு எவ்வித முகாந்தரங்களைக் காட்டியும் நாமிடித்துப் பெயர்த்துப் புதுப்பித்தல் கூடவே கூடாது. புராதனமாயங்ஙனமுடைத்தென இயங்கிக்கொண்டிருக்கும் திருவருட் சக்திக்கோ நம்முடைய பரசிவப்பெருமானுக்கோ ஓடும் பொன்னும் ஒப்பநோக்கும் மெய்ஞ்ஞானவான்களுக்கோ தோற்றப்படுகிற எந்தப்பொருள்களினுமுடைத்தாய ஏற்றந்தாழ்வு அவர்களுக்கில்லை யென்பதை நாம் நன்றாக வுணர்தல் வேண்டும். ஆகவே இங்ஙனமாய்ந்துநோக்கி முடிவாகக் கூறப்புகுவது யாதெனின் புராதனமாயுள்ள நம்முடைய சிவாலயங்களைப் பெயர்த்துப் புதுப்பணியாகச் செய்வதில் மூலஸ்தானத்தைமட்டும் மிகமேரைக மதித்து அதனைப்பெயர்த்திடிக்கவேண்டுமானால் அதற்குரிய கர்த்தாவானவர் மிகுதியும் பக்தி சிரத்தையோடுங் கூடினவராய், ஆசார சீலங்களிலே எற்றும் வழுவற்றவராய், ஏதோ சில ஞான்றுகளே எனினும் வைராக்கிய தீபச்சுடரொளியின்பாற் சொக்கினவராய் நின்று அம்மூலஸ்தானங்களிலே யுடைத்தாய ஒவ்வொரு அபாரசக்திகளையுஞ் செவ்வையாக வோர்ந்து, அதனைச்சார்ந்த எந்த நாடு நகரங்களையும் தங்களையும் பாதிக்காதவண்ணந்தெளிந்து இடித்துக்கட்டுவதற்காக நம்முடைய பரசிவப்பெருமானின் உத்தரவு நிகழ்ந்தாலொழிய புராதனமாயுள்ள மூலஸ்தானங்களை பெயர்க்கக்கூடாதென்பதேயாம். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவாராகுக சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

திருச்சிற்றம்பலம்.

தமிழ் இலக்கண வினா விடை.

முன் 4-வது புத்தகம் 13-வது பக்கத்தொடர்ச்சி.

21. இனி இத்தமிழ்நூல் நூற்கவேண்டுமாறுகளைப்பற்றியும்; பாயிரவிலக்கணம், ஆசிரியரிலக்கணம், மாணவரிலக்கணம், இன்னும் காலம் இடம் காரணம் இவைகளைச் சார்ந்த ஏனைய பல விலக்கணங்களைப் பற்றியும் ஈங்கு கூறவேண்டுவதும் ஆவசியகந்தானே?

ஆம்! ஆவசியகந்தான் ஆனால் இலக்கணம் இன்னது, வினாவிடை இன்னது என்பதைக்கூறிப் பின்னர் கவனிப்போம்.

22. இலக்கணமாவதென்னை?

ஐயன்மீர் ஆய்ந்துநோக்குமிடத்துப் பிழையறப் பேசவும், பிழையறப் படிக்கவும், பிழையற வெழுதவும் மீண்டுங் கவனிக்கப்புகின் எழுத்துச், சொற், பொருள், யாப்பு, அணி எனப்படுகிற ஒரு பாஷையின் ஐந்து அங்கங்களையும், அவைகளின் உட்பிரிவுகளான பல்வகைப் பாகுபாடுகளையும், அவைகளின் இயற்கையமைப்புக்களையும் முறையாகத் தெரியக்கிடக்குங் கல்வி யெதுவோ? அதற்கே "இலக்கணம்" என்று பெயர்.

கற்றார் சிலருக்கே விளங்குமாறு ஓரிலக்கியத்திலமைந்துகிடக்கும் அவ்விலக்கியத்தின் அமைதிகளானப் பல்வகை இலக்கண விவரங்களே இலக்கணமாம் என்னலும் பொருந்தும்.

23. இதற்காக உதாரணம் ஒன்று கூறக்கூடுமா?

ஆம் கூறக்கூடும். அஃதாவது வீடு. இஃது ஓரிலக்கியம், இதற்குரிய இலக்கண முறையைக் கவனித்து ஒருங்கும் பூர்த்தியாக ஈங்குரையப்புகின் மிகுதியும் விரிவாம், எனினும் ஓரிலக்கியத்தில் இலக்கணமமைந்துகிடப்பனவற்றைச் சுட்டுவதற்கே சில கூறி நிறுத்துவாம்.

a. இஃது (அஃதாவது வீடு) எம்மொழி?

நம், தமிழ்.

b. ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி எனக் கூறப்படுவதில் இஃதெம்மொழி?

ஒருமொழி.

c. இடுகுறியா காரணமா?

இடுகுறி.

d. இஃதென்னை பொருளா?

பொருள்.

e. இஃதென்னை பெயர்ச்சொல்லோ?

ஆம் பெயர்ச்சொல்.

f. பகுபதமா பகாப்பதமா?

பகாப்பதம்.

g. திணை யென்னை?

அஃறிணை.

h. பாலென்னை?

ஒன்றன்பால்.

i. இடமென்னை?

படர்க்கை.

j. வெளிப்படையா குறிப்பா?

வெளிப்படை.

k. மீண்டுஞ் சிறிது விவரிக்கக்கூடுமா?

ஆம் கூடும். வெய்யில் மழை வீழாவண்ணந் தடுத்துப் பெரும்பான்மை ஐந்து பெரிய பூதங்களாலும் நமக்கு யாதொரு இடையூறுகளும் நிகழாதவண்ணம் கல் மண் மரமுத

லியவைகளாலே கட்டி நாம் வாசஞ்செய்யப்படுகிற ஓரிடமேயாம்.

இன்னும்; சிற்பசாத்திரமுறைப்படி அச்சாத்திரத்திற்றேர்ந்த ஒருவனால் நிருமாணிக்கப்பெற்ற அட்டுழை, பட்டகசாலை, அறை, இரண்டு திண்ணைகள், அல்லது நெடிய ஒரு கூடம், நன்மரைக்கட்டைகள் பரப்பிய மேன்மாடி, பல வாயல்கள், சன்னல்கள் முதலியனவமைக்கப்பட்டனவாய் இல்வாழ்க்கைக்காகவேண்டும் பல பண்டபாத்திரங்களுடன் மனையாள், கொழுநன், சிறார் முதலிய நம்போல்வார் வாசஞ்செய்யப்படுகிற ஓரிடத்தையே வீடு என கூறப்படுகிறது.

வீடு என்னும் இலக்கியத்தில் இலக்கணம் அமைந்து கிடக்கும் முறைகளைக் கவனியுங்கள்.

24. ஆம்! கவனிப்போம் இலக்கியமாவதென்னை?

இலக்கணங் கூறற்கும், பொருள் கூறற்கும் இலக்காக நிற்கும் மொழியின் பெயர் இலக்கியம்.

25. இவ்விலக்கியத்தை ஒருவாறு எத்துணை வகையாகப் பிரிக்கலாம்?

பட்டியிலக்கியம் என்றும், பட்டின இலக்கியம் என்றும், நூல் இலக்கியம் என்றும் மூவகையாகப் பிரிக்கலாம்.

26. இம்மூவகை இலக்கியத்திற்கும் ஒழுங்காக எவராலும் இலக்கணம் கூறக்கூடுமா?

ஒழுங்காகக் கற்றுத்தேர்ந்த மகா மேதாவிகளாலன்றி எவராலுங் கூறக்கூடாது.

27. இம்மூவகை இலக்கியத்தின் திரிபுகளையும் ஈங்கு விவரித்துக் கூறக்கூடுமா?

ஆம் கூறக்கூடும். அஃதாவது பட்டிக்காட்டு வாசிகள் பேசும் வார்த்தைகளும், பட்டினக்கரைவாசிகள் பேசும் வார்த்தைகளும்,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்."

என்பதுபோன்று ஆன்றோர் திருவாக்குகளினின்றும் மறைமொழிகளாக வெளிவந்துலாவும் நூற்களிலேயுடைத்தான வார்த்தைகளும் ஒரே தன்மையதென எவர்தாம் ஒப்புவர்? பெரும்பான்மை எத்துணைதூரந்தாழ்ந்த சிற்றறிவுடையார்க்குங்கூட இஃதெற்றன விளங்குமாதல்பற்றி மிகைபட விரியாது விடுத்தாம். சகோதரர்கள் கவனித்துக்கொள்க.

28. வினாவென்பதென்னை?

ஒருவன் கேட்கும் கேள்வி.

29. விடையென்ப தென்னை?

ஒருவன் கூறும் பதிலுத்தரம்.

உ

திருச்சிற்றம்பலம்.

திருவிழா.

இருவினையறுக்கும் ஒருதனிப்பொருளின்
திருவருட் சக்தியைப் பெரிதும் போற்றி.

நண்பர்காள்!

திருவிழா என்னும் அங்கத்தை வரையத் தொடங்குவாம். அஃதாவதென்னை? எச்சமயத்தவர்களாலும் அஃது கொண்டாடப்படுகிறதா? தோற்றப்படுகிற இம்மனிதவுலகத்திற்கு அஃது இயலவேண்டுவதும் ஆவசியகந்தானோ? என்பனவாய பல விஷயங்களையும்பற்றிச் சிறிது கவனிப்பாம்.

I. "திருவிழா" என்றால் என்னை? நம்மவரிற் பலரிடம் இக்கேள்வியைக் கேட்டால் திருக்கோயிலில் கடவுளுக்குத் திருநாட்கொண்டாட்டம் அஃதாவது வருஷத்தில் ஒருமுறை ஆங்காங்கு குறித்த ஒரு காலத்தில் ஆலயத்தில் ஸ்வாமி சந்நிதியிற் கொடியேற்றி 10 நாட் காலை மாலையில் ஸ்வாமியை வீதியில் எழுந்தருளச்செய்து மிகுதியும் எவராலுங் கண்காட்சியாகெனக வெகு ஆடம்பரத்தோடு நகர்வலம் வருவித்து முடித்தல் என்றே கூறுகிறார்கள். இஃதுண்மையே. நடப்பதும் இவ்வாறுதான். நம் நாட்டிலே மதுரையம்பதி, திருநெல்வேலி, சிதம்பரம் முதலிய சிவக்ஷேத்திரங்களில் வருஷந்தோறும் நடைபெறுகிற திருவிழாக்களில் அவ்வத் தேவஸ்தானங்களிலிருந்து செலவிடப்படுகிற பொருளோ மிகவதிகம். இவ்வுற்சவத்தை விநோதக்காட்சியாகக் கருதிக் காணவந்த நம்மவர்கள் செலவிடும் பொருளும், அடையுஞ் சிரமமும் மிக அதிகமே. ஆனால் இவ்விழா இன்ன கருத்துடன் நடைபெறுவது என்ற உண்மையைத் தெரிவார் மிகச் சிலரே எவரேனும் விசாரிக்கப்புகின் தக்கவாறு விடைபுகல்கின்றவரோ சிலரினுஞ் சிலரேயிருக்கலாம். இக்கேள்விக்கு விவரமாக விடைகூறவேண்டின் சிவாகமங்களை நன்கு தெளிந்திருத்தல் வேண்டும். ஆகமங்களோ தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுப் பரவவில்லை. வடமொழி பயின்று ஆகம வுணர்ச்சி பெற்றவர்கள் ஓரோரிடங்களில்மட்டுமே இருக்கின்றனர். இவ்வாறாயின் நம்

தமிழ் மக்கள் இவ்விஷயத்தை யூகியாதிருப்பதில் ஆச்சரியம் ஒன்று
மில்லையென்றே கூறலாம். முக்கியமான பலதலங்களில் நடைபெறும்
திருவிழாக்களைத் தரிசிப்பதற்காக பலதடவை நாம் சென்றிருக்கிறோம்.
ஆங்காங்கு நமது செந்தமிழ்மாக்கள் பலர் திரள்திரளாகக் கூடுகின்றனர்.
நாம் வேண்டுமென்றே இவ்விஷயத்தைப்பற்றிப் பலரிடம் வினவினோம்.
முற்றுந்தக்கவாறு கூறியவர்களில்லை. அறிந்தவளவில் பெரியோர்களின்
கருத்தை ஒரு சிறிது சுருக்கமாகக் கூறுவாம்.

2. பரம கருணாநிதியாகிய சிவபிரான் சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹா
ரம், திரோபவம், அநுக்கிரகம் என்கிற பஞ்சகிருத்தியங்களையும் புரிந்
தருளும் விஷயத்தைப் பகிர்முகத்தால் ஜீவர்கட்கு வெளியிடுகின்ற தன்
மையே திருவிழா ஆகும். உத்ஸவம் என்பதற்கு மஹாயாகம் எனவும்,
அதுவே சிவதீக்ஷை எனவும் ஆகமங்கள் கூறுகின்றன. தீக்ஷாசாலையில்
மண்டபம், குண்டம், வேதிகை, சிவவர்த்தனி, ஆஸ்திரவர்த்தனி ஆகிய
ஐந்தும் அமைத்தல்போலவே உத்ஸவ சாலையிலும் இவ்வைந்தும் அமைக்
கப்பெறுகின்றன. ஆன்மாக்கள் மும்மலபந்தத்தி னீங்கி முத்தியிற்
கூடும்வண்ணம் சிவாலயங்களிற் செய்யப்படும் பூசையெல்லாம் சிவதீ
க்ஷையே யென்றும் பெரியோர் கூறுவர். நித்திய பூசையின் தாழ்வு தீர
வேண்டிச்செய்வது நைமித்திகம். திருவிழா என்பர் ஆசிரியர் பரிமே
லழகர். இத்திருவிழாக்காலத்தில் முன்னர் செய்யப்படுவதாகிய துவ
ஜாரோகணம் என்னகருத்தை விளக்குவதென்று ஆராய்வாம். துவஜஸ்
தம்பமே சிவபெருமான், கொடிச்சீலையே திரோதானசத்தி, அச்சீலையில்
எழுதப்பட்டிருக்கும் ரிஷபமே ஆன்மா, அச்சீலையைச்சேர்த்துச் சுற்றப்
பட்டுள்ள கயிறே பாசம் ஆகவே பாசத்தாற் கட்டுண்ட ஆன்மாவை
திரோதான சத்தி தன்வசப்படுத்திச் சிவத்துடன் சேர்த்தல்வேண்டும்
என்கிற உண்மையை விளக்குவதே முற்கூறிய துவஜாரோகணமாக ஏற்
படுகின்றது. கயிறாகிய பாசத்தால் பந்திக்கப்பட்டுள்ள ரிஷபமாகிய
ஆன்மா கொடிச்சீலையாகிய திரோதானசத்தி வசப்பட்டு ஸ்தம்பமாகிய
சிவபெருமானைக்கலக்கும் என்பதை இதனால் அறிவித்தவாறாகும்.

3. இங்ஙனமாக உத்ஸவகாலங்களில் செய்யப்படுகிற எல்லாக்
கிரியைகளும் ஒவ்வொரு தத்வவிஷயத்தை யுணர்த்துவதற்காகவே ஏற்
படுத்தப்பெற்றனவாம். அஸ்திரதேவர் என்கிற திரிசூலவாயிலாகப் பலி
பீடத்தில் பலியிடுதல், பாசத்தின் சக்தி கெடும்படி அப்பாசத்திற்குக்

கன்மத்தை யூட்டுதல் ஆகும். யான் எனது என்னும் அகங்காரமமகா
ரங்களே பாசத்தின் குணமாகும். கன்மப்பயனாகிய சுகதுக்கா நுபவம்
அச்செருக்கைத் தடுப்பதாகும் அதுபற்றியே பாசமாகிய பலியிடப்படு
கின்றதென்பர். அன்றியும் அஸ்திரதேவர் 8 திக்குகளினும் பலியிடப்
படுதலானது எண்டிசையிலுமுள்ள சகல ரோகங்களினும் பஞ்சகிருத்
திய வாயிலாக கன்மத்தை யூட்டுதலாம் இத்தகைய பஞ்சகிருத்தியங்
களினாலே ஆன்மாக்களுக்கு மலபரிபாகமும் இருவினையொப்பும் எய்த
உடனே சத்திநிபாதம் சித்திப்பதாகும். இந்தச் சத்திநிபாதம் சித்திப்ப
தே தீர்த்தஸ்நானம் என்பதாம். கொடியேற்றமுதல் ஸ்தலவாசஞ்
செய்து மூர்த்திதரிசனைபெற்று அவற்றால் மலபரிபாகமும் இருவினை
யொப்பும் அடையவே தீர்த்தஸ்நானத்தால் சத்திநிபாதம் எய்தியதா
கும். ஆதிசத்தியென்னும், அஸ்திரதேவர் சிவசந்நிதியில் விளங்கும் பரா
சத்தியென்னும் தீர்த்தத்தினுள்ளே முதலில் முழுக யாவரும் அத்தீர்த்
தத்தில் முழுகுகின்றனர். அஸ்திரதேவர் ஆதிசத்தியாகையால் அதுவ
ரையில் ஐந்தொழிற்படுத்திப் பரிபாகம் வருவித்த ஆதிசத்தியாகிய அஸ்
திரதேவர் செய்யவேண்டிய வேலை முடிந்தவுடன் அருட்சத்தியென்னும்
பராசத்தி வடிவாயுள்ள தீர்த்தத்திலே முழுக நாமும் உடன் முழுகுதலா
னது அத்துவித நிலையை யடைதலை யுணர்த்துமென்பர். ஆதிசத்தி
நீங்க அருட்சத்தி பதிதலே சத்திநிபாதமாம். தீர்த்தஸ்நானம் அத்தன்
மையை யுணர்த்துங் கிரியையாக அமைக்கப்பெற்றதாம். இங்ஙனம்
ஆன்மா அருட்சத்தியை யடைந்தபோது வெளிப்படுஞ் சிவபரஞ்சுட
ரைத் தரிசித்து ஆநந்தப்பெருவாழ்வெய்துதலை யுணர்த்தவே தீர்த்தத்தி
னின்று எழுந்தவுடன் சிவதரிசனம் அமைக்கப்பட்டிருப்பதென்பர்.
யெந்தத்திசையில் பாசவசப்பட்டிருந்த ஆன்மா அதினின்று விலகி
அருட்சத்தியுடன் கூடி தன்னுள் மறைந்துநின்ற சிவபரஞ்சுடரை
ஞானக்கண்ணாற் கண்டு பரமானந்தமடைதலையே தீர்த்தஸ்நானம் விளக்
குகின்றதாகும். நின்மலரான ஆன்மாக்களுக்குச் சிவபெருமான் விளங்
குவரென்பதையும் உணர்த்தும். நண்பர்களே கோயில்களும் பூசைக
ளும் விழாக்களும் ஏற்பட்ட காரணங்களை உய்த்துணர்வோமாயின் நம்
முடைய மனம் அழுக்கற்று சாந்தமடைந்து இன்பநிலையைச் சேர்தற்
குச் சாதனமாகவே நம்முன்னோர்கள் ஆழ்ந்த மதிவலியால் நமக்குத் தந்
துள்ள பெரும்பாக்கியங்களாக வெளியாகும்.

4. இவற்றை யுணராமல் மனமடங்கிநின்று பரிசுத்தமுறத்தக்க தேவாலயங்களிலே சென்று மனத்தைக் கவர்ந்து மையலை யூட்டித் துன்பத்திற் புகுத்தும் விநோதக்காட்சிகளைக் காண்டலும் அக்காட்சிகளை யாங்கே யமைத்தலும் குளிக்கப்போய்ச் சேறு பூசுவதையே யொக்கும் என்றும் சினமடங்கக் கற்றாலும் சித்தியெல்லாம் பெற்றாலும் மனமடங்கக்கல்லார்க்கு வாயேன் பராபரமே என்றார் நம் தாயுமானவரும் என்றுங் கூறுவர் ஒரு சாரார். ஆனால் பேரறிவாளர்களான நம்முன்னோர்கள் இத்தகைய வழக்கங்களை யேற்படுத்திய காரணம் ஒன்றிருக்க வேண்டும் அதை இன்னதென்று ஆலோசித்தறிதல் அவசியமேயாம். சுகதுக்கமிரண்டையும் சமமாக விருப்பு வெறுப்பின்றி அநுபவித்து மனத்தை யடக்கி ஈஸ்வரத்தியானத்தையே மேற்கொண்டு வனத்திலிருந்து தவஞ்செய்து உயர்வான சாந்த நிலையை யடையவேண்டுமென்ற விதியை வ்குத்திருக்கின்றனர். அவ்வாறு வனத்திற் சென்று நற்றவம் புரிதல் செயற்கருஞ் செயலேயன்றி எல்லார்க்கும் கைகூடுவதன்று. ஆனதுபற்றியே யாவரும் எளிதில் மனோசாந்தியடையத்தக்க விதமாகவே ஆலயங்களும், நித்திய நைமித்திக பூஜாவிதிக்கிரமங்களும் நம் முதியோர்களால் அமைக்கப்பெற்றன. பொழுதெல்லாம் லௌகிக முயற்சியிற் கழிக்கும் மக்கள் தங்கள் தங்களுக்கேற்ற ஓரோர் காலங்களிலாவது ம்ன அமைதியுடன் கடவுள் விஷயமாகப் பக்திபண்ணல் வேண்டுமென்பதே முக்கிய கருத்தாகும்.

5. எவ்வளவு கல்மனதுள்ளவனாயினும் நமது மகரிஷிகளான மஹான்களால் தங்கள் மந்திரசக்திகளைக்கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள தேவாலயங்களில் பிரவேசிப்பானாயின் அங்கிருக்கும்வரையாவது அவன் மனம் பண்புபட்டுச் சாந்தநிலையை யடையுமென்பது நிச்சயம். உலகத்திலுள்ள மக்களெல்லாரும் ஒரே தன்மையினராகாமல் பலதிறப்பட்டு நிற்றலால் ஈஸ்வரவழிபாட்டுக்காகத்தான் ஆலயத்திற்குச் செல்லவேண்டும் என்றிருப்பின் ஆலயதரிசனைக்கே வாராதொழிபவரும் பலவர். அத்தகையார் வேறொன்றைக் கருதியேனும் ஆலயத்துள் வரவேண்டுமென்றும் வந்து புகுந்தால் சிறிது சிறிதாகப் பக்தி ஜனித்து நாளடைவில் வளர்வதாகுமென்றும் கருதியே மேற்கூறிய விநோத விஷயங்களையும் ஆலயங்களில் அமைக்கச்செய்தனரென்று கூறுவர் மற்றொரு சாரார்.

(இன்னும் வரும்)

திருவிழா முன் 10-வது புத்தகம் 184-வது பக்கத் தொடர்ச்சி.

6. இஃதெவ்வாறாயினுமாகுக. ஆலயங்களில் அர்ச்சகர்கள் ஆகமாதி சாஸ்திர பயிற்சியுடையாராயும் நல்லொழுக்கம் வாய்ந்தவராயும் கிரியா லோபமின்றி பக்தி சிரத்தையோடு ஆராதனை செய்பவராயும் இருக்கவேண்டுவதே மிக முக்கியம். இதைப்பற்றி நம்மவர்கள் மிகவும் கவனிக்கவேண்டும். எக்காலத்தும் எத்தேசத்தும் எம்மதத்தும் அறிவுடையார் சிலரும் அஃதிலாதார் பலருமாக இருத்தல் இயற்கைதான் ஒரு சூரியனால் அநேக கோடி நேத்திரங்கள் ஒளிபெற்றாற்போல ஒரு அறிவாளியால் அநேகர் அறிவடைவர். நமது சமயாசாரியர்கள் ஒவ்வொருவர் காலத்தும் எத்தனையாயிரம்பேர்கள் அறிவுடையாராயினர் இதனை யறியாதார் யாவர். சிவநேயச்செல்வராகிய பேரறிவாளர்கள் உத்ஸவ விஷயங்களையெல்லாம் அவ்வவற்றின் தத்வார்த்தங்களை எல்லாரும் அறிந்துய்யும்படியாக நல்ல தமிழ் நடையில் எழுதித் துண்டுப்பத்திரங்களாகவும் புத்தகங்களாகவும் வெளியிட்டு உபகரித்தல்வேண்டும். போலிமதத்தவர்கள் பலர் தங்கள் மதக்கொள்கைகளை எத்தனை வகையாகவோ வெளியிட்டுப் பரப்புகின்றார்களே அவர்களைக்கண்டாவது நாம் கண்விழிக்க வேண்டாமா? முக்கியமாக இவ்விஷயத்தைக் கவனித்து நடத்துங் கருத்து தேவஸ்தான பரிபாலர்களுக்கே வரவேண்டும் இனியாவது கவனிப்பார்களாக.

7. திருவிழா என்னுங் காட்சியானது பலசமயத்தவர்களாலும் நன்குமதிக்கப்பட்டு அவ்வவ்வச் சமயங்களிலும் நடைபெற்று வருகிறதென்பதை பலருந் தெரிந்தவிஷயமேயாம்.

8. இவ்விழாவானது மனிதவுலகத்திற்கு இன்றியமையாதுவேண்டுஞ் சிறப்புடைத்தென்பதும் எப்பாலவர்களுக்கும் வெளிப்படையேயாம். சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

3-வது இல்லறவியல்.

திருமணம்.

அன்பர்காள்! எல்லாம் வல்ல இறைவன் திருவருட் கிருபையால் இங்ஙனம் இத்திருமணமென்னும் அங்கத்தை எற்றானுஞ் சிறந்த கல்வி, அறிவு, ஒழுக்கம், உலகவியவகாரத்தேற்றம், அணிபெறவனையுமாற்றன் முதலியவைகளிலே குறுகிய அடியேமுடைய சிற்றறிவிற்கு எட்டிய ஒருவாறு பாகுபடுத்தி வரையத்தொடங்குவாம்.

I. எந்தவிதமான உலகவியவகாரங்களையுமுணரத்தகுந்த வயது நிறைந்த ஒரு ஆண்பாலும், ஒரு பெண்பாலும் ஆகிய இவ்விருவரும் கூடி எந்த ஞான்றும் (அஃதாவது தங்களின் இறுதிக்காலம்வரை) ஒருவரை விட்டு ஒருவர் பிரியாத அன்னியோன்னியமாகவேண்டும் நேசப்பான்மையோடும் சிறந்த அறச்செயல்களைச் செய்யவும், காமலீலாம்ர்தமான இன்பாதிபோகங்களைத் துய்க்கவும், பாசக்கடன்மிசை மூழ்குவதற்காக வேண்டும் செவ்வையான சிறார்களை ஈற்றவும், இறக்க இறக்கப் பிறக்கவும், இஞ்ஞாலமானது ஞான்றும் நிலைபெற்று நிற்கவும், தாய், தந்தை, தமக்கை, தங்கை, தமயன், தம்பி, மாமன், மைத்துனன், ஏனைய சுற்றத்தார் முதலிய பந்துக்களினின்றும் மிகுதியான பந்துத்துவம் நிகழவும், ஒருவருக்கொருவர் ஆதாரதாரமாகவும், இல்வாழ்க்கையென்னுஞ் சகடமானது எற்றானும் இடையே கேடுறாவண்ணம் இயலவும், நிருபங்களாலும், பறைகளாலும், நகரமொருங்குந் தெற்றெனத்தெரிய தங்கள் தங்களின் தாய் தந்தையர் முதலிய பந்துக்களையும், ஆசிரியன்மார்களையும், ஆன்றோர்களையும், மிகுதியும் மங்கலகரமான ஆடல்பாடல்கண் முதலாய வாத்தியங்களையும், சுகந்தாதி தாம்பூலங்களையும், சிற்றுண்டி முதலிய உணவுக்களையும் முன்னிலையாக வைத்து ஆன்றோர்களாலே குறிப்பிடப் பெற்றவோர் முகூர்த்த காலத்திலே அவர்களுக்குரிய சமய நூன்முறைச் சட்ட விதியின்பிரகாரம் செய்துகொள்ளும் ஓர்வித உடன்படிக்கையையே கலியாணம், அல்லது விவாகம், அல்லது திருமணம் எனக் கூறப்படுகிறது.

இன்னும் ஒரு ஆண்பாலும், பெண்பாலும் சிற்சில மிருகவர்க்கங்களைப்போன்றியலாமல் உயர்தர மனிதத்தன்மையோடு கூடி இயலுவதற்காக வேண்டும் அநேக நல்லொழுக்கங்களை நிலைபெறச் செய்யும் ஓர்வித உடன்படிக்கை எதுவோ? அதனையும் கலியாணம், திருமணம், விவாகம் எனவுங் கூறப்படுகிறது.

2. இத்திருமணத்தை நமது பண்டைக்காலத்து மகரிஷிகளாலே எண்வகையாகப் பிரித்துக் கூறப்படுகிறது. அஃதாவது பிரமம், தெய்வம், பிரசாபத்தியம், ஆரிடம், காந்தருவம், ஆசுரம், இராக்கதம், பைசாசம் என்னும் வேறுபாடுகளான பிரிவுகளேயாம்.

பெரும்பான்மையும் தலைமகன் அல்லது தலைமகன் இனத்தார் வேண்ட தலைமகள் அல்லது தலைமகள் இனத்தாருடன்பட்டு நம்மவர்களுள் ஓமகுண்டம் எச்யாதிகள் முன்னிலையாகவும் இத்திருமணத்தை முடிக்கும் வழக்கத்தாலே இத்திருமணத்தை பிரசாபத்தியமெனக் கூறப்படுகிறார்கள். இவ்வெண்வகைத் திருமணத்துள்ளும் இதனையே முதன்மையானதெனக் கூறுவர் பெரியோர்.

3. மனிதராய்ப் பிறந்தார் ஒவ்வொருவரும் இறந்துபோவது உண்மையேயாயின் கட்டாயமாகவநுபவித்துத் தீரவேண்டும் ஒரு தலையாய இன்பமே இத்திருமணமாமென்பது, அறிஞர்கள் எவரும் நன்குணர்ந்த விஷயமேயாம்.

a. இதனை இழந்து உயிர் துறப்பார்களேயாயின் அரிதினும் அரிதாய இம்மனிதச் சரீரம் எடுத்ததனாலாய பயனை அநுபவித்தார்களில்லையாமென்க.

b. இத்திருமணத்துக்கெஞ்சிய ஓர் மணவகை இஞ்ஞாலத்தில் எதுவுமே இல்லையாமென்க. தன்னையுணர்ந்து தலைவனைக் கண்ட மகாஞானிகளாலே வகுக்கப்பெற்ற வித்திருமணமாமென்க. அம்மகாஞானிகளுமே இதனை யநுபவித்துத்தான் துறவு பூண்டு தியான யோக சமாதியிலே நின்று சாதித்தல் வேண்டுமெனக் கூறுகிறார்களாமென்க.

c. ஏதோ சிற்சில சித்தபுருஷர்களின் வாக்குகளைப் பார்த்துவிட்டு எமக்கு விவாகம் வேண்டுவதில்லையெனக் குந்திக்கொண்டு அதனிலுமின்றி இதனிலுமின்றித் (அஃதாவது இல்லறமுமில்லாமற்றுறவறமுமில்லாமலிரண்டுங்கெட்டு நடுவாகநின்று) தேங்கிக்கொண்டிருக்கும் ஒவ்வொரு நண்

பர்களும் இதனை நன்கு கவனித்தல் வேண்டுமாமென்க. துறவறமானது நீடூழிகாலம் (அஃதாவது நம்முடைய பரசிவப்பெருமானைக் காணுகிற வரை) பூரண சக்தியோடு நிலை நிற்கவேண்டுமாதலால் இஞ்ஞாலத்தில் நாம் துய்க்கவேண்டும் ஒவ்வொரு சிறிய இன்பாதிகளையுமே போதும், போதுமெனத் (அஃதாவது மனம், புத்தி, சித்தங்களுக்குச் சலிப்புண்டாகும்படி) துய்த்துக் கழித்தாலொழிய நிற்கவியலாதாமென்க. நாளை வருகிற பலாக்காயை நம்பி இங்ஙனே கைக்கு வரும் களாக்காயை விட்டுவிடுதல் வேண்டாமாமென்க. இங்ஙனம் வரும் களாக்காயையும் பக்குவமாகப் பாகப்படுத்தி யுண்ணவும், நாளைவருமென நம்பிக்கொண்டிருக்கும் பலாக்காயும் நமது நம்பிக்கைப்போன்று கிடைக்கப்பெறுவோமாயின் அதனையும் நன்குசுவையாகப் பாகஞ்செய்துண்ணவும் வேண்டுமாறுகளையுந் தெளிந்துகொண்டிருத்தல் வேண்டியாமென்க.

d. நம்முடைய வகுப்பைச்சார்ந்த எவரே எனினும் திருமண முடித்துக்கொள்ளாதிருத்தல் கூடவே கூடாதாமென்க. அதனை யநுபவித்துக்கொள்ளவேண்டும் பருவகாலங்கள் மாறிப்போய்விடின் அதனை எவராலும் அழைப்பிக்க முடியாதாமென்க. ஐம்புலாதிகளை யடக்கித் தியானயோகசமாதியாகச் சதாவும் நிட்டைகூடியிருக்க வரன்முறையான பூரணசாதனம் அற்றவர்கள் எவரே என்கினும் எமக்கு விவாகம் வேண்டுவதில்லையென மாறுபட்டுக்கொண்டிருந்தால் அவர்களை ஆவசியகமாகப் பொதிகைமலைச் சாரலுக்கே அனுப்பிவிடல் வேண்டுமாமென்க. அவர்கள் நம்முடைய நாடு நகரங்களிலே வசித்துவருவார்களேயாயின் மிகுதியும் அசங்கியமேயாமென்க.

4. எத்துணைதாரஞ் சிறந்த செல்வவந்தர்களே எனினும் தானியாதிகளையாவது, துட்டுக்காசுகளையாவது, ரூபாய்களையாவது சூறையிடுதல் கூடவே கூடாவாம். பூரிசொடுத்தல் என்னுங்கெட்ட வழக்கத்தை வேரறத் தொலைத்துவிடலே வேண்டும்.

5. கிரமப்படி 3 நாளோ 5 நாளோ 7 நாளோ ஒழுங்காக ஒவ்வொரு சடங்குகளையும், ஆகமோக்தமப்படி மிகச் சீர்திருத்தமாகவும், பூர்விக வழக்கத்தை யொட்டியும், காலவியற்கைகளுக்குப் பொருத்தமாயும் நடாத்துதல் வேண்டும். அவ்வாறு நடத்திவைப்பவர்கள் நம்முடைய சைவசமய குருவர்களாகவேதா னிருத்தல் வேண்டும்.

6. ஒவ்வொரு குடும்பத்தவர்களும் தங்கள் தங்களின் செல்வத்தின் அளவை நன்றாகக் கவனித்து தக்கதக்கவாறு செலவுகள் செய்தல் வேண்டும். ஏராளமான செல்வவந்தர்கள் செலவு செய்யத் தொடங்குவதைப்போன்று ஏனையவர்களுஞ் செலவு செய்யத் தொடங்கல் கூடவே கூடாது. செல்வவந்தர்களுங் கூட நிதானமாகத்தா னிருத்தல் வேண்டும்.

“எண்ணித் துணிவது கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்பதிழுக்கு” என்ற தேவர் திருவாக்கை

மறத்தல் கூடாது. பின்னர் யோசனை செய்வதில் யாதொரு பயனுமில்லை. நமது நகரத்தாருள்ளும் பலர் வரவு செலவை நோக்காது ஒரு சமயத்தில் பெருந்தொகைகளைச் செலவு செய்துவிட்டுப் பின்னர் விழிக்க ஆரம்பிக்கிறார்கள். மிக ஆலோசித்தே செய்தல் வேண்டும். நமது அருமை மக்களின் திருமண விஷயத்தில் நமது பேறிவாண்மையைக் கடன் கொடுத்துவிடுதல் கூடாது.

7. திருமண ஞான்றுகளான ஒவ்வோர் இரவுகளினும் அம்மண மக்களிருவரையும் ஆநந்த சாகரத்திலே மூழ்கச் செய்வதற்காக வேண்டும் ஆட்டக் கச்சேரிகள், பாட்டுக் கச்சேரிகள், கதாப்பிரசங்கம் உபந்நியாஸங்களும் அமைந்திருத்தலும் வேண்டும். மேற்கண்ட திருமண ஞான்றுகளில் புலாலையாவது, போதைவஸ்துக்களையாவது உபயோகப்படுத்துதல் கூடவே கூடாது. என்னையோய் இதற்குமாத்திரம் நிகழ்காலச் சட்டம் இல்லையோ வெனின்? அளவாக உபயோகப்படுத்திக்கோடலும் வேண்டும். அத்தினங்களில் பாவச்செய்கைகள் இருத்தல் கூடாதென்பதே அடியேமுடைய கருத்தாகும். மணமக்கள் இருவரையும் நான்கு சக்கரங்கள் அசுவங்கள் அமைந்த இரதம் அல்லது சகடத்திலே வைத்துத்தான் நகர்வலம் வருவித்தல் வேண்டும். ஏனைய வகுப்பார்கள் செய்வதைப்போன்று பல்லக்காயிருத்தல் கூடவே கூடாது. எந்த விஷயமும் வருங்கால உலக வழக்கியல்களுக்கு நேரொப்பும் வழிகளாக அமைத்தலும் வேண்டும். மணமகனைமட்டும் ஒற்றைக்குதிரையின் மேலேற்றிவைத்து நகர்வலம் வருவித்தல் அத்துணை உசிதமாகாது. அஃதாவது நமது வகுப்பாருக்கு எத்துணை இராசிப்பொருத்தமாக விருப்பினும் ஆன்றோர்கள் கவனித்தல் வேண்டும். மணமகனோடு சார்ந்த அம், மணமகளும் மனிதவர்க்கந்தான் என்பதை மறந்துவிடுதல் கூடாது.

மணமகளுக்குரிய பலவழிகளான சுதந்தரங்களொருங்கையும் இழக்கச் செய்வித்தல் எந்தவாற்றானும் நியாயமாகமாட்டாது. புதிய நாகரீகங்கள் மிகுதியுஞ் சிறந்து மலிந்து விளங்கும் இக்காலத்திலும் நாம் யோகநித்திரை புரிதல், சீர்திருத்தமாகவேண்டும் பல விஷயங்களையும் மறந்திருத்தல், சூதாட்டமுதலியவைகளிற் சொக்கியிருத்தல், என்ன சபைகள், என்ன பிரசங்கங்கள், என்ன பத்திரிகைகள், என்ன புத்தகங்கள், என்ன படிப்புகள், என வீண் வாய்ப் பேசித்திரிதல், வேசியோடு புணர்தன்முதலியவைகளும் அழகாகமாட்டாது. ஒவ்வொரு சிறிய விஷயங்களையுங்கூட மிகச் செவ்வையாக வூகித்துணர்தல் வேண்டும். லௌகிக விஷயங்களை மிகச் செவ்வகையாகச் சீர்திருத்திக்கொண்டாற்றான் நாம் முதன்மையென நினைக்கும் வைதிக விஷயங்களும் உயர்தர பதவியையடையும். மணமகளையுஞ் சேர்த்து உடனிருத்தி நகர்வலஞ் செய்யாததற்கு எவரானு மறக்கக்கூடாத சரிமுகாந்தரங்கள் எத்துணை இருப்பினும் அவைகளையும், நிகழ்கால வியவகாரங்களையும், உலகத்தில் கூடிய பக்கத்தார் பழக்க வழக்கங்களையும், ஆகம புராணேதிகாச முதலிய சாஸ்திர யுக்தங்களையும், நமது வகுப்பாருள் உயர்தரப் படிப்பாளிகளின் அபிப்பிராயங்களையும், இன்பாதிகளுக்குரிய பல மார்க்கங்களையும் மிகச் செவ்வையாகச் சீர்தூக்கிக் கவனித்து நமது மகா சங்கத்திற் பகர்ந்துபேசி வேண்டுந் தீர்மானங்களைச் செய்து மணமக்களிருவரையும் மேற்கூறியவாறு இரதம் அல்லது சகடத்தில் வைத்து மிக அழகாக நகர்வலஞ் செய்வித்தலும் வேண்டும். உடுப்பு முதலிய அணிகளும் புதிய நான்முறைப்படியேதான் அமைத்துக்கோடலும் வேண்டும்.

8. பெரியவர்களாலே குறித்த வொரு அம்முகூர்த்த காலமானது முன்பின் ஒருகணப்பொழுதே எனினும் தவறின்றி யவ்வுடன்படிக்கையானது நிறைபெறும்பொருட்டு பெரிய தலைவர்களெல்லாம் ஒருங்கே முன்னின்று முடித்தலும் வேண்டும். முந்திய மனவருத்தங்கள் எத்துணை தூரமிருப்பினும் எற்றையும் அங்ஙனம் நினைத்தல் கூடவே கூடாது.

9. கலியாணத்திற்காக பெரிதும் மிக அழகான கொட்டகை ஒன்று அமைத்தலும் வேண்டும். கலியாண முதலிய நல்ல விசேஷங்களை உத்தேசித்தே நமது வகுப்பார் மிகவும் பெரிதான வீடு கட்டுகிறார்கள் என பல பேரறிவாளர்கள் கூறுகிறார்கள். எந்த ஞான்றுங் கலி

யாணக்கொட்டகைகளிலே வசிக்கப்படுகிற ஒவ்வொரு சகோதர சகோதரிகளுக்கும் கலியாணக்காலத்தில் அக்கொட்டகையினாலே எந்த விதமான ஆனந்தமும் நிகழமாட்டாது. எவ்விதச்சாமான்களும், அலங்கரிக்கப்பெற்ற எவ்வித இடங்களும் கலியாணத்திற்கென நூதனமாகவேதான் அமைத்தல் வேண்டும். அங்ஙனமானாற்றான் அதற்கொரு விசேஷம் நிகழும். அக்கொட்டகையினுள் பெரும்பான்மையும் பெண்பாலுட்கார்வதற்குரிய இடம் மணவறையைச் சுற்றியதாகவேதா னிருத்தல் வேண்டும் ஆங்கு சிறார்களும் வயோதிகர்களும் தவிர ஏனைய ஆண்மக்கள் உட்கார்ந்துகொள்வதற்குரிய இடமாயிருத்தலுங் கூடாது. வரிசை வரிசையாக நாற்காலிகள் அமைத்துப்போட்டிருப்பினும் பெண்பால்களுக்கு வேறாகவும், ஆண்பால்களுக்கு வேறாகவுமே இருத்தல் வேண்டும். யாவருங் கலந்துட்கார்ந்துகொண்டிருக்கத்தக்க விதமாயிடங்களையமைத்திருத்தல் கூடாது. நம்முடைய இனத்தலைவர்களுக்கும், ஆசிரியன்மார்களுக்கும், ஏனைய பிரபுக்களுக்கும் அக்கொட்டகையின் முகப்பிலோ அல்லது அக்கொட்டகையின் மற்றொரு பக்கத்திலோ மணமக்களிருவரையும் ஆசீர்வதித்து வெண்ணீற்றைச் சாற்றுவதற்கு மிகவும் சமீபமாய் ஈவிச்சேர்கள் போட்டிருத்தலும் வேண்டும். அக்கொட்டகையினுள் எவர்களும் உட்கார்வதற்குத் தகுந்த பெஞ்சு, நாற்காலிகள் ஏற்படுத்திவிட்டாலும் மணமக்களிருவம் ஒருவருக்கொருவர் செய்துகொள்ளும் உடன்படிக்கையான வாக்கியங்களை ஆங்குடைத்தான சகலருங் கேள்க்க விரும்புவார்களாகையால் அதற்குரித்தாயுமிருத்தல் வேண்டும். அக்கொட்டகையின் கண்ட நடுமத்தியாயுள்ள இடத்தில் வைத்துத்தான் தாம்பூலாதிகள் செலவு செய்தல் வேண்டும். ஆன்றோர்களுக்கும், ஆசிரியன்மார்களுக்கும், வகுப்பின் தலைவர்களுக்கும், பெரியவர்களுக்கும் முதன்முதலாகக் கொடுத்துவிட்டுத்தான் மற்றையவர்களுக்கெல்லாம் வரிசைக்கிரமமாய்க் கொடுத்துவரலும் வேண்டும்: ஒரு பெருங் கூட்டத்தில்த் தகுதிநோக்கிக் கவனித்தல் நியாயமாகாது. முன்னதாகவே தகுதியுடையார் பலரையும் ஒருங்குசேர ஓரிடத்தில் உட்காரவைத்தல் உசிதம்.

10. அயலர் என்றும், பகைவர் என்றும், நட்பிலர் என்றும் அத்திருமண ஞான்றில் விலகிநிற்றல் கூடாது திருமண இல்லத்தில் வந்திருந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் நன்கு மனப்பூர்வமாக

உழைத்துச் சிறப்பித்தல் வேண்டும் பெரும்பான்மையும் செல்வவந்தர்களாயின் ஒவ்வொரு வேலைகளுக்கும் வேலையாட்களை நியமித்துவிடலாமென யோசிக்கவுங்கூடும் அவ்வாறு யோசித்து வேலையாட்களாக, நியமித்துக்கோடல் ஒரு கலியாண வீட்டில் வேலையாட்களைத் தீர்மானித்துச் சிறப்பிவிக்கவேண்டும் காரியங்கள் எது எதுவென்றும், வேலையாட்களை வைத்துச் சிறப்பிவிக்கப்புகின் சிறப்புறுது வகுப்பின் தலைவர்களாலும், பெரியவர்களாலும், பந்துக்களாலும் சிறப்புச் செய்துகொள்ளவேண்டுங் காரியங்கள் எது எதுவென்று அவைகளையும் நன்கு சீர்தூக்கியுணர்ந்துகோடலும் வேண்டும்.

II. மணமகன் பகுதியாரும், மணமகள் பகுதியாரும் மிகப் பொறுமையாயும், எச்சரிக்கையாயும், சோம்பலின்றியும் இருத்தல்வேண்டும். மற்றெல்லாச் சாதாரண காலங்களினும் இன்சொற்களோடே யுபசரித்தல் வேண்டுமென்பது ஓர்புறம் நிற்பினும் அந்த ஒவ்வொரு நாட்களும் கட்டாயமாக இன்சொற்களோடேதான் பழகுதலும் வேண்டும். இன்முகத்தையே காட்டுதலும் வேண்டும். கடுஞ்சொற்களை எவ்வித அசந்தர்ப்பகாலங்களினுங்கூட உபயோகித்தல் கூடவே கூடாது.

I2. அந்த ஒவ்வொரு ஞான்று காலை ஆறுமணிக்கெல்லாம் சிற்றுண்டி விருந்தும், பதினொன்று அல்லது பன்னிரண்டு மணிக்கெல்லாம் பூர்த்தியான விருந்தும், மாலை நான்கரை மணிக்கெல்லாம் சிற்றுண்டி விருந்தும், இரவு பத்துமணிக்கெல்லாம் பூர்த்தியான விருந்தும் முறையாக வைத்துக்கோடலும் பெருமிதமான வெற்றிலை பாக்குச் செலவுகளும் ஒரு நாள்தான் வைத்துக்கோடலும் வேண்டும். அஃதும் முகூர்த்த ஞான்றுதான் மிகுதியும் பொருத்தமானது. ஆக்குப்பிறை வேறாகவும், உணவுப்பிறை வேறாகவும் தனித்தனியாகத்தான் வைத்துக்கோடலும் வேண்டும். ஆண்பால்களுக்கு ஒரு பந்தியும், பெண்பால்களுக்கொரு பந்தியுமாக விருந்து வேலைகள் முடிந்துவிடல்வேண்டும். அதுவும் அவ்வொரு கொட்டைகையினுள், அல்லது அப்பிறையினுள்ளே யடங்குதலும் வேண்டும். நிற்க தற்காலம் சில நவீன மேதாவிகள் திருமண முதலிய எந்த விருந்துக்களே எனினும் அவ்விருந்துக்காக வரப்போகிறவர்களை முன்னதாகவே கணக்கெடுத்து செல்வத்தாலுங் கல்வியாலு முயர்ந்தவர்களை வேறுபிரித்து அவர்களின் அந்தஸ்த்துக்குத் தகுந்த விருந்துகள் வேறு, வேறு முறையாகச் செய்துவைத்தல்வேண்டும்.

அல்லாதவரை செல்வவந்தர்களும், உயர்தரப் படிப்பாளிகளும் ஏனைய யாவரோடும் சமபோசனஞ்செய்ய நாணுகிறார்களென்றும், ஆனதுபற்றி வேறு வேறு முறையாகத் தாங்களைப் பிரித்து இனம் ஒன்றுக்கு அரை ரூபாய் யுணவு முதற்கொண்டு உயர்ந்த ரேட்டு ஐந்து ரூபாய் உணவுகளை பாகப்படுத்தி, அந்த அந்த உணவு விவரங்களையும், அவ்வவர்களுக்குரிய இடங்களையும், செவ்வையாக விளக்கிக் காட்டப்படுகிற டிக்கட்டுகளை ஒவ்வொரு குடும்பங்களையும், அல்லது ஒவ்வொரு சகோதர சகோதரிகளையும் மிக ஒழுங்காகக் கணக்குசெய்து முன்னதாகவே அனுப்பி அவ்வவர்களின் அந்தஸ்த்துக்குத் தக்கவாறு உபசரித்தல் வேண்டுமெனவும் அபிப்பிராயப்படுகிறார்கள். அதனைப்பற்றி நம்முடைய மகா சங்கத்திலே பகர்ந்துபேசித் தீர்மானித்துக்கோடல்வேண்டும். எம்முடைய அபிப்பிராயம் காலபேதத்தால் எந்த நான்முறைச்சட்டங்களும் இலகுவிலே மாறுதலடையக்கூடுமென்பதுதான். பந்திவிசாரணைக்குத் தக்க தக்கவர்களைப் பார்த்துத் தீர்மானித்து ஆங்காங்கு நிறுத்துதல்வேண்டும். பெரும்பான்மையும் கௌரவபுருஷர்கள் நிற்றலே மிகவும் சலாக்கியம். அவர்கள் முன்னதாக ஓர் அரைக்கால் ஆகாரஞ் செய்துகொள்ளல் வேண்டும். எத்தனை வகையான பதார்த்தங்கள் செய்யப்பெற்றிருக்கிறதோ அத்தனைவகைக்கும் அத்தனையாட்களையோ அல்லது அத்தனைச் சிறார்களையோ நியமித்து ஒரே எடுப்பாக எடுத்தலும் வேண்டும். உடனுக்குடன் போசனப்பிறையைச் செவ்வையாகச் சாணமிட்டு மெழுகிக் காயச்செய்தலும் வேண்டும்.

I3. பொதுவாக நமது இந்தியதேயத்தாளும் மேனாட்டாரின் பழக்கவழக்கங்களைப்போன்று பீங்கான் கோப்பைகளில் ஆகாராதிகளை வைத்து அழகான மேசைகளின்மேற் பரப்பிவைத்துக்கொண்டும் பூரணவடுக்கையுடன் நாற்காலிகளிலே உட்கார்ந்துகொண்டும் புசிக்கும் பழக்கவழக்கங்களும் வந்துவேரூன்றிக்கொண்டன இனி முளைத்துச் செடியாகி மரமாகிப் பூப்பூர்த்துப் பிஞ்சாகிச் செங்காயாகிக் கனியாகி விற்பனைக்கு வருவதற்கு இன்னுஞ் சில ஞான்றுகள்தான் செல்லும். விற்பனைக்கு வந்துவிட்டால் நமது வகுப்பாருந் தக்கவிலைகொடுத்து வாங்கத் தலைப்பட்டுவிடுவார்கள். அதற்குள் நமது தேயத்துச் சகோதரர்களும் ஏனைய மேனாடுகளிலிருந்தும் ஜப்பான், சைனாவிலிருந்துஞ் செய்து தற்காலம் ஈங்கு வரப்பெறுகிற கோப்பைகளைப்போன்றும், பீங்கான்களைப்

போன்றும், உயர்வான பளிங்குப்பாத்திரங்களைப்போன்றும், உயர்ந்த மரங்களாலே செய்த மேசை நாற்காலிகளைப்போன்றும் செய்து விற்கத் தலைப்பட்டுவிடுவார்கள். அப்பாலென்றால் அந்தப் பழக்க வழக்கங்கள் நமக்கும் நன்மையைப் பயக்கும். அதுவரை இயற்கையாக நமக்கென் வமைந்த சாணமிட்டவெண்டரை மீது உட்கார்ந்துகொண்டும், தங்கள் தங்களின் முன் வாழையிலையைப்போட்டுக்கொண்டும், அதன்மேல் ஆகாராதிகளை வைக்கச்செய்தும் உண்ணும் பழக்க வழக்கங்களை எவ்வித முகாந்தரங்களாலும் விட்டுவிடலாகாது. நிகழ்கால நாகரீகங்களுக்கு எத்துணை தூரம் கேவலமாக விருப்பினும் அதனைக் கவனித்தல் கூடாது. ஆகாரப்பிறையில் ஆசனம் அல்லது பாய்களை விரித்துக்கொண்டு உட்கார்ந்து ஆகாரஞ்செய்யும் தற்கால பழக்க வழக்கங்களைத் தொலைத்து விடல் வேண்டும். அஃது நன்மையாகவும், நாகரீகமாகவுந் தோற்றப் படுமாயின் அதனைவிட மேசை நாற்காலிகளே மிகவுத்தமம். நன்றாகக் கவனித்தல்வேண்டும்.

14. பந்தியிலுட்கார்ந்து ஆகாரஞ் செய்துகொண்டிருப்பார் யாவரே யாயினும் எதானும் ஒன்றை வேண்டுமெனக் கேட்கும்வரை விசாரணை செய்வோர் எச்சரிக்கைத்தப்பாயிருத்தல் கூடாது. ஆகார முடிந்தவுடன் அங்ஙனே கைகால் சுத்தஞ்செய்வதற்குத் தண்ணீர் தயாராகவிருத்தல் வேண்டும். ஊருணிக்கரைகளுக்காவது, கிணற்றங்கரைகளுக்காவது போகச்செய்தல் கூடாவாம். சுத்தஞ்செய்து முடிந்தவுடன் செவ்வையான வோர் பட்டசாலை யல்லது அக்கொட்டகையிலேயாவது இரத்தினக் கம்பளம் மேலான நாற்காலி பெஞ்சுகளின் மீதாவது உட்காரச்செய்து சந்தன தாம்பூலாதிகள் கொடுத்தும், பன்னீர் தெளித்தும், ரோஜா, மல்லிகை, இருவாச்சி முதலிய மலர்களாலே கட்டப்பெற்ற செண்டுகள் கொடுத்தும் ஆனந்தமான திருப்தி செய்தலும் வேண்டும். பின்னர் பெண்பால்களுக்கும் அஃதேமாதிரி பெண்பால்களாலே திருப்தி செய்தலும் வேண்டும். ஆண்பால்களுக்குச் செய்யும் உபசரணைகளையும், மரியாதைகளையும்விட மிகுதியாகவேதான் செய்தலும்வேண்டும். பெண்பால்களைக் கேவலமாக நினைக்கும் ஆய்ந்துநோக்காத கீழ்த்தர நினைப்பை மறத்தலும் வேண்டும்.

15. நமக்குப் பெண்கள் இத்துணை, ஆண்கள் இத்துணை; ஆஸ்தி இவ்வளவு, மாதம் ஒன்றுக்கு அல்லது வருஷம் ஒன்றுக்கு வருவாயித்

துணை என்பதையும் நன்றாகக் கவனித்துச் சீர்தூக்கிப் பார்த்து ஒவ்வொரு கலியாணத்திற்கும் இவ்வளவுதான் செலவு செய்தல் வேண்டுமென்னுங் கணக்கினை முன்னதாகவே நிதானமாய்த் தீர்மானித்துக் கொண்டு திருமணஞ்செய்ய ஆரம்பித்தலும் வேண்டும். தான் சம்பாதித்த பொருளாக விருப்பினுந் தரத்துக்குத்தக்கவாறு நிதானமாகத் தான் செய்தலும் வேண்டும்.

16. தம்முடைய பந்துமித்திராதிகள், பெரியோர்கள், தாய்தந்தையர்கள், தம் ஊரார்கண் முதலிய எவரானும் ஒப்பத்தகாத ஒரு பெண்பாலை ஒரு ஆண்பாலும், ஒரு ஆண்பாலை ஒரு பெண்பாலும் விவாஹஞ் செய்துகொள்ளுதலுங் கூடாவாம். அவ்வாறு ஒப்பத்தகாத ஒரு விவாஹஞ் செய்துகொள்வார் யாவரே எனினும் அவர் "ஊருடன் கூடிவாழ்" என்ற வேதவாக்கினை மறந்து அதற்கு நேர்விரோதமானவர் என்பது யாவருமுணர்ந்த விஷயம். ஊருடன் கூடிவாழத் தெரியாதார் பயிற்பாட்டைப்பற்றி இங்கு வரைந்து முடியாது.

17. இங்ஙனம் வாணாள் இறுதியாக ஒவ்வொரு ஸ்திரீபுருஷர்களின் இன்பதுன்பங்களுக்கும், நன்மை தீமைகளுக்கும் மூலமாயிருப்பது மிகுதியுமகத்துவந் தங்கிய இத்திருமணமே யாகலின் வதூவரர்களான ஒவ்வொரு ஸ்திரீபுருஷர்களும் தங்கள் தங்களுக்குப் போதியவயது வந்தபிறகே (அஃதாவது மணமகனுக்கு 25 க்குமேல் 30 வயதுக்குள்ளும், மணமகளுக்கு 18க்கு மேல் 25 வயதுக்குள்ளுமே) தங்கள் தங்களுடைய இஷ்டத்துக்குத் தக்கவாறு விவாஹ விஷயத்தை நிச்சயித்துத் தம்மைத்தாம் வரித்து மணம் புரிவதே நியாயமாகக் காணப்படுகிறது. ஆயினும் தற்காலவரை நம் நாட்டுக்கு இவ்வழக்கம் புதியனவாகலின் சாதாரணமாயவர்கள் மோகாந்தகாரத்தில் மூழ்கி நன்மை தீமைகளையும், இன்னும் ஏனைய பல விபரீதங்களையும் ஒருவருக்கொருவர் தீர்க்க ஆலோசித்து அறிந்துகொள்ளமாட்டாமல் அவசரப்பட்டு அருகதையற்ற சம்பந்தங்களுக்கு உடன்படவுங்கூடுவார்களாகலின் தாய்தந்தையர்கள் அவர்களைப் பத்திரமாகக் கவனித்துவந்து தகுந்த ஆலோசனைகள் சொல்லி அவ்வித தீர்மானத்திலிருந்து காப்பாற்றுவது மிகவும் ஆவசியகமானது.

18. ஐரோப்பா கண்டத்திலும், அமெரிக்கா கண்டத்திலும் யௌவனபருவமுற்ற பிறகே பிள்ளைகள் தமக்குத்தாமே சம்பந்தங்களை

ஏற்படுத்திக்கொண்டு பிற்பாடு சாதாரணமாய் தாய்தந்தையர்களின் அநுமதிபெற்று விவாஹஞ் செய்துகொள்வார்கள் என்றும், நமது தேசத்திற்போல் அத்தேசத்து பெண்டுகள் இராணிவாசமென்பது அறியாமல் புருஷர்களுடன் கலந்து திரிவார்கள் என்றும், நேயத்துடன் சம்பாஷிப்பார்கள் என்றும்; இப்படி இணங்கித்திரிந்து பேசிக்கொண்டிருப்பதினால் அவர்கள் கெட்டநடவடிக்கையுள்ளவர்கள் என்றெண்ணுவது பிறழ்வென்றும் அவர்கள் அனைவரும் சிறுகவோ பெருகவோ கல்விகற்றவர்களாயிருப்பார்கள் என்றும், அநேகர் அதிக நீதிவதிகளும், குணவதிகளுமாயிருக்கிறார்கள் என்றும், அத்தேசத்தில் அநாதியாய் இவ்வழக்கம் ஏற்பட்டிருப்பதினால் ஸ்திரி புருஷர்கள் இணங்கித்திரிந்து சம்பாஷிக்குமாத்திரத்திலேயே துற்புத்திகளுக்குத் தூண்டுகோலுண்டாகமாட்டாதென்றும், பூர்வகாலத்தில் நம்முடைய தேசத்திலுங்கூட வதூவரர்களுடைய இஷ்டாநுகூலங்களை யொட்டியே நடத்தப்பட்டனவென்றும், சுயம்வரங்களும், காந்தருவவிவாஹங்களுங்கூட அடிக்கடி நடந்ததுண்டென்றும் புராணேதிகாசங்களால் தெரியவருகிறதென்றும், தற்காலத்தில் வதூவரர்களின் இச்சையனிச்சைகளைச் செவ்வையாயறிந்துகொள்ளாமலே பெற்றோர்கள் தத்தம்பிள்ளைகளுக்குக் கலியாணத்தை நடத்திவைக்கிறார்கள் என்றும், ஆய்ந்துநோக்குமிடத்து அஃதொரு பெருந்தவறான காரியமென்றும், எவ்விதத்தாலும் அத்தவறான காரியத்தை அடியோடே நிறுத்துதல் வேண்டுமென்றும், ஆங்கிலத்தானுந்தேர்ந்த வித்வசிரோன்மணிகளுங் கூறுகிறார்கள். ஆகலின் என் அருமைச் சகோதரர்களே வதூவரர்களின் இச்சையனிச்சைகளை மிகச்செவ்வையாகக் கவனித்து அவர்களின் தேகதத்துவங்களையும், மனோதத்துவங்களையும், குணகுண வியற்கைகளையும், நன்குசீர்தூக்கி அவர்களின் புத்திமலர்ந்தபின்னரே அவர்களுடைய சுபாவங்களுக்கு ஏற்ற சம்பந்தங்களைத் தேடி எல்லா விஷயங்களையும் அவர்களுக்குச் செவ்வையாக விளங்கப்படுத்தி அவர்கள் சொந்தமாய்த் தெரிந்துகொள்வதற்கும் தகுந்த அநுகூலங்களை கொடுத்து பிற்பாடுதான் அவர்களுக்குக் கலியாணஞ் செய்துவைத்தல் வேண்டும். இப்படிச் செய்வதுதான் கிரமமான வழி. இதுவே நியாயம், இதுவே க்ஷேமகரமானது, இதுவே இல்லற தருமம், இதுவே இன்பத்துக் குறைவற்றது, இதுவே திருத்தமானது, இதுவே நாகரீகக்காரர்களின் கொள்கை, இதுவே பெரியோர்கள் ஒப்பத்தக்கது, இதுவே கருமதேவதையின் சம்மதம் நன்றாகக் கவனித்தல் வேண்டும்.

திருமணம் முன் 11-வது புத்தகம் 196-வது பக்கத் தொடர்ச்சி.

19. வதூவரர்களுக்கு அவர்களின் தேகதத்துவங்களுக்கும், மனோதத்துவங்களுக்கும், குணகுண வியற்கைகளுக்கும் பொருத்தமிருக்கவேண்டுமென்றால் அவை ஒருவரையொருவர் விரும்பச்செய்யுமாறு இருக்கவேண்டுமே அன்றி வெறுப்பைப் பிறப்பிக்குந் தன்மையவாய் இருக்கக்கூடாது. இப்படி மெய்யான ஆகிருஷ்ணம் இருந்தாலே அவர்களிருவரும் நெடுங்காலம் அன்னியோன்னிய நேசங்கூர்ந்து சுகமுற்று வாழ்வார்கள். இல்லாவிடின் மரணபரியந்தம் அநேக கஷ்டங்களுக்கு ஆளாவார்கள். வதூவரர்களின் சரீரங்களுக்கும், மனங்களுக்கும் பரஸ்பர ஆகிருஷ்ணமிருப்பதும், இல்லாததும் கண்டுபிடிப்பதற்கு மெய்யாயவர்களுக்குத்தான் முடியுமே அன்றி வேறெவருக்குஞ் சாத்தியமாகாது.

அடிக்கடி யவர்கள்கூட மோகவசத்தினால் அவசரப்பட்டுத் தவறபிப்பிராயங்களிற் சிக்கி மோசம்போய்த் தவிக்கிறார்கள். சிறுபிராயத்தினின்றும் பிள்ளைகளின் இயற்கையாதிகளைச் செவ்வையாய்த் தெரிந்துகொண்டுவரும் தாய்தந்தையர்கள் இம்முற்கூறிய பொருத்தங்களை கொஞ்சமளவு நிருணயிக்க சக்தியுற்றிருப்பரே யாயினும் ஈற்றில் வதூவரர்களின் இஷ்டா இஷ்டங்களை நன்குணர்ந்தபின்னரே விவாஹம் நடத்தவேண்டியது, அவர்களுடைய இஷ்டங்களுக்கு விரோதமாய் என்றும் கலியாணம் நடத்தக்கூடாது. முறையான கல்வி யொழுக்கத்தாலே புத்தி விரிவதற்கு முன்னர் இந்த விஷயத்தில் இஷ்டங்களும், அபிப்பிராயங்களுந் தேர்ந்து உரைப்பதற்கு வதூவரர்களுக்கு சக்தியிராதென்று நாம் சொல்லவேண்டியதில்லை. ஆன்றோர்கள் கவனித்துக்கொள்க. முறையான கல்வி, நல்லொழுக்க முதலியவைகளிலே பயில்விக்கவேண்டியதுதான் இதற்கு முதன்முதற்கருவி.

20. பிராயத்தில் வதூவரர்கள் ஒருவருக்கொருவர் நன்றாய் ஏற்றிருக்கவேண்டியது. இருவருடைய வயதுகளுக்கும் 5, 6 வருஷங்கள் வித்தியாசமிருப்பது உத்தமம். வதூவரர்களின் வயதுகள் ஒத்திராதபட்சத்தில் அவர்களுடைய சரீரங்களுக்கும் மனங்களுக்கும் பொருத்தமிருக்கமாட்டாது. 10 வயதுள்ள சிறுவனுக்கு அவனினும் வயது மேம்பட்ட ஒரு சிறுமியைக் கட்டுந் தற்கால வழக்கை நிறுத்துதலும் வேண்டும். எந்தக்காலத்தும் மணமகனினும் மணமகள் இரண்டு

மூன்று வயதுகளாவது குறைந்தனவாகவே தானிருத்தலும் வேண்டும். எவ்வித முகாந்தரங்களைக்கொண்டும் சிறியவொரு புருஷன் பெரிய ஒரு பெண்ணை மணம் புரிதல் கூடவே கூடாது. அப்படிப்பட்ட விவாஹங்களைத் தாய்தந்தையர்கள் செய்துவைத்தலுங் கூடாவாம். இனி வருங் கால வழக்கியல்களாலே ஆமோதிக்கப்பட்டப் பெரும்பான்மையோர்களின் அபிப்பிராயங்களையே சட்டமாக்குதலும் வேண்டும்.

21. வதூவரர்களின் சரீரங்கள் ஆரோக்கியமுள்ளதாயிருக்க வேண்டும். பலவீனமாயும், பிணிவருத்தமுற்றதாயும், இருக்கக்கூடாது. தாய்தந்தையர், தமையன் தம்பி, தமக்கை தங்கை, இவர்களுடைய சரீர தத்துவங்களை நோக்கியும், ஆயுள் ஆரோக்கியங்களை நோக்கியும், வதூவரர்களின் சரீர வியற்கை முதலியவற்றை நன்றாய்ச் சீர்தூக்கியும் அறியவேண்டியது. அழகு மிகவும் ஆவசியகமானது. சௌந்தரியத்தைப் புகழ்ந்துகொண்டாடாத ஸ்திரி புருஷர்கள் இவ்வுலகத்தில் இல்லை. சௌந்தர்யத்தைக்கண்டு புருஷர்கள் முக்கியமாய்ப் பிரமிக்கிறார்கள். ஸ்திரிகள்கூட சௌந்தரியத்தைப் பார்ப்பார்களாயினும், புருஷர்களின் சாமர்த்தியம், சேஷ்டை, தைரியம், கீர்த்தியான சரித்திரம் முதலியவற்றைக் கண்டு அதிகமாக ஆசைப்படுகிறார்கள். அழகொன்றை மாத்திரம் நன்றென்று கண்டுபிடித்து மணம்புரிவது என்றைக்கும் நன்றன்று. நற்கல்வி, நற்குணம், நன்னடக்கை முதலிய இல்லாமல் அழகை மாத்திரம் பெற்றிருக்கும் பெண்சாதி அல்லது புருஷன் பகையாளியேயாகும். உதவாக்கரையான புருஷன் எவ்வளவு இலக்ஷணமுள்ளவனாயிருப்பினும் யாது பயன் ஆகலின் மேற்றோலுக்கை மாத்திரங் கண்டு பிரமித்துக் கெட்டுப்போகாமல் எல்லா விஷயங்களையும் சாவகாசமாய் விசாரித்து சம்பந்தஞ் செய்துகொள்ளவேண்டியது. வதூவரர்களின் முகவடிவு முதலிய தேகவியற்கைகள் வித்தியாசப்பட்டிருக்கவேண்டியது. ஒரேவிதமுள்ளனவாயிருக்கும்பட்சத்தில் அவர்களுக்கு பரஸ்பர ஆகிருஷ்ணை இருக்கமாட்டாது. இரத்தம் ஒத்திருக்கும் சமீப சம்பந்தங்களும் அயுக்தமானதென்றே மேலோர்கள் அபிப்பிராயம். காரணம் என்னையோ வெனின் அம்மான் பெண், அத்தைப் பெண், அக்காள் தங்கைகளின் பெண், அல்லது இவர்களின் பிள்ளைகளுக்குப் போலியதிகமாதலினால் பொருத்தங் குறைவாயிருக்குமென்பதூஉம், அவ்வித சம்பந்தங்களுக்குப் பிறக்குஞ் சந்தானமானது ஆரோக்

கியமற்றதாகவும், பிணிவேதனையுற்றதாகவும், அறிவு விளக்கமற்றதாகவும் இருக்குமென்பதூஉமேயாம்.

22. வதூவரர் இருவர்களுக்கும் சற்குண சம்பத்தும், நல்வழி நல்லொழுக்கங்களும், பொருந்தியிருப்பது மிகவும் முக்கியமானது. அருள்நெஞ்சு, மெய்மை, நல்லொழுக்கம், கல்வி, பகுத்தறிவ, அறனுடைமை, கடவுளன்பு இவற்றை முக்கியமாகக் கவனித்தல் வேண்டும். கெட்ட காரியாதிகளிலே நெஞ்சழுத்தம், குரூரம், கடுகடுப்பு, பெருஞ்சினம், வஞ்சம், பொய்மை, சூது, கள்ளம், துன்னெறி, செருக்கு, இறுமாப்பு, தன்னயம் பார்த்தல், சோம்பல், இவை முதலிய துற்குணங்களிருப்பின் அச்சம்பந்தங் கூடாது. வதூவரர்களின் வீடுகளில் அவர்களுடைய பிரவர்த்தனை, சம்பாஷணை முதலியவற்றை சில மாதங்கள் பரியந்தம் கருத்துடன் ஆராய்ந்து பார்த்தாலே மேற்குறித்த நற்குண துற்குணங்களை நன்றாய்த்தெரிந்துகொள்ளலாமேயன்றி இரண்டொரு தினங்களில் கண்டுகொள்வது அசாத்தியமென்றே அறிதல்வேண்டும். தாய்தந்தையர்களின் யோக்கியதா யோக்கிதைகளைக்கண்டு சிற்றளவு வதூவரர்களின் குணவியற்கைகளைத் தெரிந்துகொள்ளலாம். தகப்பனுடைய குணங்கள் மகனுக்கும், தாயினுடைய குணங்கள் மகளுக்கும்,

“சேங்நெல்லால் ஆய செழுமுளை மற்றும் அச்
சேங்நெல்லே ஆகி விளைதலால்——அங்நெல்
வயல் நிறையக்காய்க்கும் வளவயல் ஊர
மகன் அறிவு தந்தை அறிவு”

என்ற முதியோர் வாக்குப்போன்று சாதாரணமாயிறங்குகின்றனவாகலின் அவர்களின் யோக்கியதைகளைக்குறித்தும், குணசாரங்களைக்குறித்தும் எவ்வளவேனும் அனுமான மிருந்தபோதிலும் அச்சம்பந்தத்தையுந் தவிர்த்தல் வேண்டும்.

23. வதூவரர்களின் குணவியற்கைகளை நிருணயிக்குமளவில் எவ்வளவேனும் அவசரப்படுதல் கூடாது. இரண்டொரு தினங்கள் தூரப் பார்வை பார்த்துவிட்டு மேற்றோலுக்கைமாத்திரங்கண்டு பிரமைப்பட்டு சம்பந்தங்களை நிச்சயித்துவிடாமல், மாதக்கணக்காய்ப் பலவழியாகவும் பரீட்சித்துக் கண்டுபிடித்து மெய்யான குணகுணங்களை ஆறத்தீரத் தெரிந்துகொள்ளவேண்டியது. இப்படிப் பரிசோதிக்கையில் வதூவரர்களுக்குச் சுகுண சம்பத்தும், அவர்களிருவருக்கும் பொருத்தமுங் கா

ணப்பட்டாலே அந்நியோந்நிய வநுராகம் வாய்ந்து வாழ்நாள் முழுவதும் சுகதுக்கங்களைப் பகுத்து வாழ்வார்கள் என்பது நிச்சயம். மேற்றளுக்குக்களின் மூலமாயுண்டாகும் காதலாவது, அன்பாவது நெடுங்காலம் நிற்கமாட்டாது. ஆகலின் முதன் முதற் பிறக்கும் ஆலோசனைகளுக்கு இடங்கொடாமல், திறந்த கண்கள் உள்ளவர்களாய் சமஸ்த விஷயங்களையும் பரிசீலித்துக்கொள்ளவேண்டியது.

24. வதூவரர்களின் குணவியற்கைகளையும், ஆயுளைசுவரியங்களையும், புத்தி யுக்தி சக்திகளையும், போகபாக்கியங்கள், சுகதுக்கங்கள், சுகுண துற்குணங்கள், வித்தை உத்யோகம், சந்தானப் பிராப்தி இவை போலும் பற்பல விஷயங்களையும் ஒருவாறு முகக்களையின் காந்தியைக் கண்டும், சரீரத்தின் ஆகிருதியின் உதவியினாலும், நிருணயிக்கத்தக்க சம்பாஷணையினாலும், சிற்சிலவிடத்துச் சாத்தியமாகலாம். ஆயினும் சாமுத்திரிகலட்சணங்களின் மூலமாயும், ஜாதக சக்கரங்களின் மூலமாயும், உள்ளங்கை ரேகைகளினாலும், உதரத்தின் மடிப்புகளினாலும், உடம்பின் மேலுள்ள சுழிகளினாலும், பிறந்த இலக்கினத்தினாலும், கிரகங்களின் கேந்திரங்களினாலும், நிருணயிப்பது பெரும்பாலும் மானிடரால் முடியாதவொரு காரியமாகலின் மேற்கூறிய எல்லா விஷயங்களினும், செவ்வையாகப் பரிசீலித்துக் கலியாணஞ்செய்துகொண்டாலே தம்பதிகள் வாழ்நாள் இறுதிவரைக்கும் சுகதுக்கங்களில் ஒருவருக்கொருவர் உதவியாயிருக்கக் கூடும். வதூவரர்களின் சரீரத்துக்கும், மனத்துக்கும் சுபாவங்களுக்கும் பரஸ்பர ஆகிருஷ்ணையிருந்தாற்றான் அவர்களுக்கு அந்நியோந்நியவநுராகம் பொருத்தமுற்றிருக்கும். சரீர ஆகிருஷ்ணை மாத்திரமிருந்து மனம் கலந்திராதபட்சத்தில் அவர்கள் செவ்வையாய்ச் சுகிக்கவொண்ணார்கள். மனமும் சுபாவமும் எவ்வளவு பொருத்தமுற்றனவாயினும் சரீர வநுகூலங்களும் ஒத்திருத்தலும் வேண்டும். வதூவரர்களுக்கிருக்கவேண்டும் ஒவ்வொரு பொருத்தங்களையும் நன்கு சீர்தூக்கி ஒருவர்மேலொருவர்க்கு நண்பும் நேசமும், மனப்பற்றும் உண்டாமாறு திருமணங்களை முடித்து நீண்டகாலம் நிலைபெற்று இல்லறதருமங்களை வழுவாதாற்றுஞ் செல்வர்களாய் வாழுமாறு வேண்டுஞ் செல்வங்களையுஞ் சேர்த்துவைக்கவேண்டுங் கடப்பாடு நம்முடையதே என ஒவ்வொரு தாய்தந்தையர்களும், ஒவ்வொரு பெரியவர்களும் கவனித்தல் வேண்டும். இவ்விஷயங்களைப்பற்றி மனப்பூர்வமாய்ச் சிந்தித்தல் வேண்டும். எற்றமறியாத சிசுக்களுக்கு எவ்வித முகாந்தரங்களைக் கொண்டும் விவாஹம் நடத்துதல் கூடாது. ஆண்மக்களுக்கிருக்கும் ஒவ்வொரு சுதந்தரங்களும், ஒவ்வொரு பாத்தியதைகளும் நமது ஒவ்வொரு பெண் சகோதரிகளுக்கும் இருத்தல் வேண்டுமென மாதர்விஷயம் என்னும் அங்கத்தில் கூறியிருக்கிறபடியால் மிக விரிவாயும், ஸ்திரிதனங்கொடுத்தல், ஆபரணம் பூட்டன் முதலிய விஷயங்களைப்பற்றியும் ஈங்கு வரைதற்கு இடனில்லை. விவாக விஷயமான எந்தச் சடங்குகளும் நமது ஆகமநூன்முறைப்படியே நடத்துதல் வேண்டும். செலவுகளும் நிதானமாகவேதான் இருத்தலும் வேண்டும்.

25. பொதுவாகத் தோற்றப்படுகிற மிகவும் பெரிதான இந்நிலவுலகத்தில் எந்தச்சமயத்தைச் சார்ந்த எந்த வகுப்பார்களை நோக்கினும் பெரும்பான்மை மணமக்களிருவரையும் இரதங்களில் வைத்தோ அல்லது புரவிகள் பூட்டிய சகடங்களில் வைத்தோ நகர்வலஞ்செய்யாத ஒரு திருமணம் இயங்குவதாகத் தெரியவில்லை. மேலுஞ் சிறப்பாகக் கவனிக்கப்புகின் நமது இந்துமதத்தைச் சார்ந்த எந்த வகுப்பார்களும் இதனை வெள்ளிடைமலைபோற்றெள்ளிதில் யாவருக்குந் தெற்றென விளங்குமாறு நடாத்தியே வருகிறார்கள். ஆகலின் நாமும் நகர்வலஞ்செய்யும் வழக்கத்தைச் சட்டமாக்குதலே மிக உத்தமம்.

26. உலகவியவகாரங்களெல்லாம் ஒருங்கே நிறைந்துவிளங்கும் உயர்தரமான பற்பல நூன்முறைப் பயிர்ச்சிகளினுந்தேர்ந்த அறிவென்னும் அங்கத்தின்மீது, புதிய நாகரீகங்களென்னும் பட்டாடைகளையார்த்து, சீர்திருத்தங்களென்னும் மேடைகளின்மீதேறி சீர்திருத்துதல் என்னும் (லெக்சர்கள்) அல்லது உபந்நியாசங்கள் செய்வதற்காக முன் வந்திருக்கும் ஓ! எமதன்பார்ந்த நண்பர்காள்! ஓ! சிறந்த மேதாவிகாள்! ஓ! சிறந்த நாவல்லர்காள்! ஓ! சிறந்த செல்வவந்தர்காள்! நம்முடைய நாட்டுக்கோட்டை நகரங்களுக்கெல்லாம் பொதுவாயும், சொந்தமாயும், புராதனமாயும், உடைத்தாக விளங்கும் நம் ஜாதீயக் கட்டுப்பாடுகளென்னும் கட்டுப்பெட்டிகளை எல்லாம் ஒவ்வொன்றாகப் பொறுக்கி, நம் வகுப்பைச்சார்ந்த பற்பல மேதாவிகளாலேயும் சூழ்ந்து விளங்கும் சங்கமென்னும் கட்டிடத்திற்குக் கொணர்ந்து, பலர் அஃதாவது பெரும்பான்மையோர்க்குந் தெற்றென விளங்குமாறு வெளிப்படையாகவைத்து, இரத்தினப்பெட்டிகள் எத்தனை, இரும்புப்பெட்டிகள் எத்தனை, மரப்

பெட்டிகள் எத்துணை, கல்லியம்பெட்டிகள் எத்துணை, நார்பெட்டிகள் எத்துணை, ஓலைப்பெட்டிகள் எத்துணை, என்பதையுஞ் செவ்வையாக ஆய்ந்துநோக்கித் தரவாரியாகப் பிரித்து கணக்கெடுத்து

நண்பர்காள்! ஓலைப்பெட்டி நார்பெட்டிகளை எல்லாம் பிச்சு, அதனுள்ளிருக்குஞ் சில்லறைச்சாமான்களை எல்லாம் எடுத்துவதனை அக்கினிஸ்வரூபமாக விளங்கும் நம்பரசிவப்பெருமானுக்கு நைவேதனஞ் செய்துவிட்டு மற்றப்பெட்டிகளையும் நெடுங்காலமாக வைத்த இடத்திலே யிருக்குந் தன்மையால் தூசி, ஒட்டடை முதலியவைகளை யெல்லாஞ் செவ்வையாகத் துடைத்து, சௌளரித்திருக்கிறதா வென்பதையும் பார்த்து, பற்பல மேதாவிகளும் ஒன்றுகூடி அறிவென்னுந் திறவுகோலாலே திறந்து அவைகளுள் இருக்கும் பற்பல நாணயங்களையும் வெளியே எடுத்து பரிசீலனை செய்து தங்கநாணயம் ஒன்றைமட்டும் வெகு பந்தோபஸ்தாக வைத்துக்கொண்டு, மற்ற நாணயங்களை எல்லாம் நிகழ்கால வியற்கைகளென்னும் கவர்னமெண்டாரவர்களின் (ட்டிரஸரி) பணச்சாலைகளிலே கொண்டுபோய் கணக்குகளையுங் காட்டிக்கொடுத்து, தங்கநாணயமாக மாற்றிக்கொணர்ந்து, மிகுதியுங் கிலமாகக் கிடக்கும் பழய பெட்டிகளையும் மரப்பெட்டி, கல்லியம்பெட்டிகளையும், சொற்ப விலைக்கேனும் விற்றுவிட்டு, நிகழ்காலநாகரீகப்படி செய்யப்படுகிற பெரிது பெரிதான இரும்புப்பெட்டிகளை எவ்வளவு உயர்ந்த விலைகளையே யெனினுங் கொடுத்து பெற்றுவதனுட் புதிது புதிதான தங்க நாணயங்களை எல்லாம் ஒருங்கேயுளவாக நிரம்பக்கொட்டி நம் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கெல்லாம் பொதுவாய சொத்துக்கள் என்பதையுஞ் செவ்வையாக வரைந்து ரிஜிஸ்டர் செய்த ரிக்கார்டுகளாக வதனுள்ளே வைத்து நம் பின் சந்ததியார்கள் வேண்டுங் காலங்களிலெல்லாம் திறக்கவும், அவைகளைச் சரிபார்க்கவும், காலங்களுக்கேற்ப மாற்றிக்கொள்ளவும், வேண்டுஞ் சுதந்தரங்களையுங் கொடுத்து, அப்பெட்டிகளை நம் நகரங்கள் நாலா பக்கங்களினும் எந்த ஞான்றும், எந்தவாற்றானும் அசையாத வண்ணம் நிறுவி; செல்வவந்தர்களென்றும், ஏழைகளென்றும் உடைத்தாய பேதாபேதங்களை யொழித்து வொருங்கே ஒற்றுவாழ்வதற்காக வேண்டும் வரன்முறைகளை எல்லாம் சீர்திருத்தஞ் செய்து நம் ஜாதிக் கட்டுப்பாடுகளை எல்லாம் பலப்படுத்த முயலுகின்றீர்களா? அல்லது இரம்பை, மேனகைதிலோர்த்தமை ஊர்வசிபோன்ற தேவகன்னிகைகளோடுங் கூடிச் சீட்டுக்கச்சேரிகளிலுட்கார்ந்துகொண்டும் விளையாட

முயலுகின்றீர்களா? ஐயய்யோ! நம்முடைய வாழ்நாட்கள் எல்லாம் வீண்நாட்களாகக் கழிவதூஉம் நன்மையோ? நண்பர்காள்! மேற்கண்டவாறு பலப்படுத்த முயலுகின்றீர்களாயின் நம்முடைய வகுப்பின் விவாக விஷயங்களைப்பற்றியும் நன்றாகக் கவனியுங்கள். இவ்விவாகச் சட்டமென்னும் நாணயமானது கடிதமோ? ஜர்மன் வெள்ளியோ? அல்லது சுத்த வெள்ளியோ? தங்கமோ? வென்பதையும்பகுத்துணர்ந்து தெளிந்து நோக்குங்கள். உயர்தரமான பதிநெறு மாற்றுள்ள தங்க நாணயமென்றே சாதிப்போமாயின் இங்ஙனம் முடிவுரையாகச் சில விஷயங்களை மிகவுஞ் சுருக்கமாகக் கூறுவாம் கவனியுங்கள்.

a. சகோதரர்களே! நம் வகுப்பைச் சார்ந்த எத்துணை தூரந் தாழ்ந்த வொரு வறியவர்களுக்கும் வெகு சுளுவிலே யாதொரு கஷ்ட நஷ்டப் பிரையாசைகளுமின்றி விவாகமாகவேண்டுமாற்றை எந்த எந்த வழிகளாகப் பூர்த்திசெய்துகோடல்வேண்டுமோ அதனை அந்த அந்த வழிகளாகவும், நிகழ்காலச் சீர்திருத்தங்களாகவும், வெகு சுருசுருப்பாகவும், ஏனைய பற்பல பகுதி நம்மனிதக்குழாங்களும் கண்டுங், கேட்டும், அதிசயிக்கத்தக்கவாறாகவும் மேற்கண்ட நம் ஏழைச் சகோதரர்களின் மீது பெருங்கருணையோடுங் கூடி நாட்டுக்கோட்டை நகரத்தார் திருமணச் சட்டமென்றோ! அல்லது ஏனைய வொரு அழகான நாமம் புனைந்தோ! பகிரங்கமாக எவர்களுக்குந் தெற்றன விளங்குமாறு நம் நாட்டுக்கோட்டை நகரத்துச் சிறந்த மேதாவிகளெல்லா மொன்றுகூடிப்பகர்ந்து பேசித் தீர்மானித்து, சீர்சிறப்போடுங்கூடிய நூன்முறை விதிகளாக வமைத்து, அச்சிட்டுப் புத்தக ரூபமாக்கி நம் வகுப்பைச் சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும், கட்டாயப்பார்வையாகப் பார்த்து வரும்படி. செய்தலும் வேண்டும்.

b. 20000 ரூபாய் ஆஸ்தியுள்ள நம் வகுப்பைச் சார்ந்த, தாம் பெற்ற அருமைப் புதல்வர்களை விற்றற்குரிய வெண்ணமற்ற ஒருவருக்கு 5 ஆண்மக்கள்மட்டும் உளராயின் அவ்வாண்மக்கள் 25 அல்லது 30 ஆண்டுகள் நிறைந்து தக்கவாறு பொருளீட்டுஞ் சமயத்திற்றான் அவர்களுக்கு விவாகஞ்செய்தல் வேண்டுமென்னும் நூன்முறை பெரும்பான்மை நம் வகுப்பாருள் இல்லாமைபற்றி மேற்கண்ட 5 ஆண்மக்களை மட்டும் உடைத்தாகப்பெற்ற ஒருவருக்கு நிகழும் கஷ்ட நஷ்டக் கவலைகளில் நம் வகுப்பைச்சார்ந்த பெருந்தகவாய ஒவ்வொரு மேதாவிகளுக்

கும் பாகமுண்டென்பதை இதனை நோக்கும் எந்தச் சகோதரர்களும் மறத்தல் கூடாது.

c. நம்முடைய பகுதியும் புதிய நாகரீகங்களால் சீர்சிறப்பெய்தி இயலப்படுகிறதென்பதை வெளிப்படுத்த முயலுவோமாயின் நம் வகுப்பைச் சார்ந்த ஒருவர் தம்மக்களை இல்லறதர்மங்களிற் செலுத்தவேண்டுவதற்கு முதற்கருவியாயுள்ள மங்கலகரமான இவ்விவாக விஷயத்தில் அந்தோ! இதற்காக யாமெவன் செயவல்லேமென்று பல வழிகளானுங் கவலைப்பட்டுத் தியக்கமுறாதவண்ணம் வேண்டுமாறுகளை மிகு சீர்திருத்தமாகச் செய்து முடிப்பதே நம்முடைய முதற்கடமையாகமுடியும்.

d. நம் ஆகமாதிகளையும் **உலகத்தையும் ஒத்ததாகவே** இருத்தல்வேண்டும்.

e. எதோ சிறுபான்மை ஆகமாதிகளுக்கு மாறுபட்டிருப்பினும் வருங்கால நாகரீகங்களுக்கும், பெரும்பான்மையான உலகவியவகாரங்களுக்கும் எட்பிளவேனும் மாறுபாடிருத்தல் கூடவே கூடாது.

f. 15000, 20000, 25000, 30000, ஆயிரமெனப் பெண்களுக்குக் கிரையம் கொடுத்துத் திருமணமுடிக்கும் வழக்கத்தை கட்டோடே சட்டமாக நிறுத்துதல் வேண்டும். அல்லது நம் வகுப்பைச் சார்ந்த ஒவ்வொருவரையும் குறைந்தபக்ஷம் ஒரு லெக்ஷரூபாய்க்குக் குறையாத பணக்காரர்களாயிருக்குமாறு செய்துவிடுதல் வேண்டும். அவ்வாறு செய்துவிட்டாலுங்கூட நம்முடைய வகுப்பினுள் ஒருவருக்கொருவர் கிரையங்கொடுத்துக் கிரையம்பெற்றுக் கொள்வன கொடுப்பன செய்துகொள்வது எத்துணை தூரமாழ்ந்த கருத்தோடுங் கவனித்துப் பார்ப்போமாயினும் வருங்கால வியற்கைகளுக்கேற்ப நியாயமும் நாகரீகமுமாகமாட்டாது.

g. பெண்மக்களுக்கு 16 வயசுக்கு மேலும், ஆண்மக்களுக்கு 20 வயசுக்கு மேலுமே விவாகஞ்செய்தல் வேண்டும்.

h. எவ்வித முகாந்தரங்களைக்கொண்டும் மேற்கண்ட வாண்டுகள் குறைந்த சிறுவர் சிறுமிகளுக்கு விவாகம் நடத்துதல் கூடவே கூடாது.

i. ஆசையும், பாசமும் அளவுகடந்து நிறைந்த நம்புதல்வர்களுக்கு பதினாயிரக்கணக்காகப் பொருள்களை விரையஞ்செய்து திரு

மணமுடிப்பதாலுண்டாம் ஆனந்தமான வைபவங்களை அம்மணமக்களிருவரான தாங்களும் அதனைக்கண்டுங், கேட்டும், உண்டும், உடுத்தும், துய்த்தும், ஆனந்தமடையத்தக்க பருவகாலத்திலன்றோ நாமவர்களுக்குத் திருமணம் முடிக்க வாரம்பஞ் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்வதை யொழித்து எற்றும் பால்மணமாறாக் குழந்தைப்பருவங்களிற் செய்துமுடிக்குந் திருமணத்தாலுண்டாம் வைபவங்களிற் சிறுபான்மை நாமனுபவித்ததொழியப் பெரும்பான்மையும் பயனற்றனவாகவே வொழிந்துவிடுகிறது 25 ஆண்டுகள் நிறைந்த வொருவரைப் பார்த்து ஐயன்மீர் நீயீர் கலியாணகாலத்திலே யாது சுகமனுபவித்தீர் நும்முடைய கலியாணச்செலவு ரூபாய் 50 ஆயிரம் ஆயிற்றென்று சொல்லிக்கொள்கிறார்களே நுமக்கு எப்படித் தெரியவருமோ என்று வினவினால்? அதற்கவர் விடைகூறுவதாவது அப்போழ்து யான் மிகவுஞ் சிறுபிள்ளை பத்து வயசோ பன்னிரண்டு வயசோதான் உள்ளது எனக்கு அவைகளெல்லா மொன்றுமே ஞாபகமில்லை யென்றுஞ் சொல்ல வருகிறார்கள். ஆகவே எமதன்பார்ந்த நண்பர்காள்! இவைபோன்ற பல விஷயங்களையுஞ் செவ்வையாகக் கவனித்தே மிக்கச் சீர்திருத்தமாகச் செய்தலும் வேண்டும்.

j. வயசாலே பெரிய பெண்ணிற்கும் சிறிய வாணிற்கும் ஏனைய பல காரணங்களையு முன்னிட்டோ மிகவும் பெரிதான ஒரு காரணத்தை முன்னிட்டோத் திருமணஞ் செய்தலுங் கூடாவாம்.

k. பொதுவாகத் தம்மனைவியை யிழந்த வாண்மக்களுக்குத் திரும்பத்திரும்பப் புனர்விவாகஞ் செய்வதைப்போன்று நம்மருமைச் சகோதரிகளுக்குஞ் செய்ய வாரம்பஞ்செய்துவிட்டால் பெருந்தொகை கொடுத்து பெண் எடுக்கும் பழக்கவழக்கங்களும், ஏழைச்சகோதரர்களுக்குரித்தாய தேக்கமுதலாய பெருங்கவலைகளும் நின்றுபோய்விடுமா? என்பதைப்பற்றியுங் கவனித்தல் வேண்டும்.

l. எண்ணிலடங்காத புத்திர பௌத்திரர்களைப்பெற்றும், இன்னும் ஏனைய பற்பல செல்வமாதிகளிலே யமிழ்ந்தும் வாழ்ந்துவருகிற ஒரு வயோதிகரைக்கொண்டு மற்றொரு கணவனுக்கு மனைவியாகவேண்டும் ஒரு பாலிகையின் கழுத்தில் திருமாங்கல்யத்தை யார்க்கச்செய்வதால் இயற்கையிலேயே மேற்கண்ட வயோதிகப்பெருமானுக்குரிய பல வகைப்பட்ட செல்வங்களும், மிகுதியான வாழ்நாட்களும் இவ்வ

யோதிகப்பெருமானாலே முடித்துவைக்கப்பட்ட மணமக்களிருவரும் இலகுவிலே கிடைக்கப்பெற்று நீடூழிகாலம் நிலைநின்று வாழ்ந்துவருவார்கள் எனினும், அஃதாவது பூரணமாக நிறைந்த வாய்மையே யெனினும் அதனைப்பற்றிய நம்முடைய வாகமாதிகள் முதலிய சாஸ்திர யுக்தங்களை எல்லாமோர்புறமாக ஒதுக்கிவைத்துவிடுவோமாயினும், நிகழ்கால உலகவழக்கியல்களுக்கும், நாகரீகங்களுக்கும் பொருத்தமுடையது தானா உலகத்தில் பெரும்பான்மையோர்களும் ஒப்பத்தகுந்ததுதானா வென்பதைமட்டுமாவது நன்றாகக் கவனித்தே செய்தலும் வேண்டும் என நமது வகுப்பாருள் பல மேதாவிகளாலுங் கருதப்படுகிறது. எம்முடைய வபிப்பிராயம் அவ்வழக்கியல் மிக உத்தமமானதென்பதேயாம். எங்ஙனமெனின்! சில வகுப்பாருள் மக்கட் செல்வமும், பொருட்செல்வமும், வாழ்வரசியலும், மணமகனுக்குத் தமக்கை முறைமையுமுடைத்தான ஒரு பெண்பாலே மணமகன் கரத்தையோர் இலக்காக வைத்துக்கொண்டு திருமாங்கல்யத்தைப் பூட்டுகிறாள். மேலும் மணவறைப்பக்கத்திலுள்ள பலபெரியவர்களாலும் திருமாங்கல்யத்தைத் தொட்டு ஆசீர்வதித்துத்தரப்பெற்றுமே கட்டப்படுகிறது. இவைகளை நோக்க நமது வழக்கியல் இழுக்காகமாட்டாதென்பதேயாம்.

m. மணமக்களிருவரையும் நன்றாக வலங்கரித்து ஒன்றாகவைத்தே கட்டாயச்சட்டமாக ஆட்டபாட்டமுதலிய மேளவாத்தியங்களோடு முறையாக இரண்டு மூன்றுதரம் பட்டினப்பிரவேசம் செய்துவைத்தலும் வேண்டும்.

n. வருங்கால நாகரீகங்களுக்கு நேர்விரோதமான வீண்செலவுகள் எவை எவை என்பதை நன்றாகத்தெரிந்தெடுத்து கட்டோடே சட்டமாக நிறுத்திவிடுதலும் வேண்டும்.

o. ஆடு கோழி யறுப்பதையும், அதனைப் புசிப்பதையும் அந்த நாலைந்து நாளும் கட்டாக நிறுத்திவிடுதலும் வேண்டும்.

p. திருமண விஷயத்தைப்பற்றிய எந்த வியவகாரங்களும் நம் வகுப்பைச்சார்ந்த எந்தச் சகோதரர்களுக்கும் சாதாரணமாக இயல வேண்டு முறைகளையே நம்முடைய வகுப்புச் சட்டமாக வமைத்துக்கோடலும் வேண்டும்.

q. இதற்காக வேண்டும் பல விஷயங்களையும் நம்முடைய மகா சங்கத்தில் மிகுந்த பேரறிவாண்மை, உயர்ந்த நடுநிலை நிற்றல், ஆழ்ந்து

கிடந்து யோசிக்குமாற்றல், கண்ணோட்ட முதலிய பல நற்குணங்களெல்லாம் நிறைந்து, வருங்கால நாகரீக வியற்கைகளுக்கு நேரொப்பச் சீர்திருத்தஞ் செய்யத்தகுந்தச் சீர்திருத்தக்காரர்களாலே பகர்ந்து பேசி பெரும்பான்மையோர்களின் அஃதாவது படித்த வகுப்பாருள் பெரும்பான்மையோர்களின் பக்கமாக வமைத்துக்கோடலும் வேண்டும்.

r. பெண்வீட்டார் மணமகனுக்குக் கொடுக்கும் பண்டபாத்திரம், பூஷணம், ஸ்திரிதன, முதலியவைகளையாவது, மாப்பிள்ளை வீட்டார் மணமகளுக்குக் கொடுக்கும் வஸ்துக்களையாவது கொடுத்தல் எவ்வளவோ அவ்வளவையைத்தான் ரிக்கார்டாக எழுதுவதானால் எழுதுதலும் வேண்டும். கொடுப்பது ஒன்றும் வரைவது ஒன்றுமாயிருத்தல் கூடாது. மேலும் இது விஷயங்கள் நமது வகுப்பொருங்கிற்கும் ஓரளவையாக இயங்கிவரும்படி நமது மகா சங்கஞ்செய்தலும் வேண்டும். அல்லது சாதாரண கீழ்த்தரச் செல்வவந்தர்களையும் உயர்தரச் செல்வவந்தர்களையும் பாதிக்காத தன்மையனவாக அமைத்துக்கோடலும் வேண்டும். சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

சிவமயம்.

கணவி கணவர் சுகப்படும் வழிகள்.

எற்றெடுந்தானைப் முற்றுறத்தோய்ந்தோனிருங்கழல் போற்றி, நண்பர்காள்! ஒரு கணவியுங்கணவனுஞ் சுகப்படும் வழிகளைப்பற்றிக் கவனிப்பாம். விவாகத்தினாலே பெண்சாதி புருஷர் ஐக்கியமாவார்களென்பது அறிவாளிகளான ஒவ்வொரு நண்பர்களுமுணர்ந்த விஷயமேயாம். எனினும் அவர்களுடைய இருதயங்களும், மனங்களும், எப்பொழுதும் ஒன்றாகவே இருத்தல் வேண்டும். எவ்வித இரகசியங்களையாயினும் ஒளித்துவைக்காமல் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ள வேண்டும். தப்பிதமானாலும் ஒப்புக்கொண்டு மன்னிப்புக்கோரவேண்டும். அப்படிச்செய்யின் அவர்களுடைய அந்நியோந்நிய நேசம் பெற்

றப் பரஸ்பரானுராகம் பலப்படும். ஒருவர்மீதொருவருக்கு நம்பிக்கை விருத்தியடையும். ஒளித்துவைப்பதிலைனுமான முதிக்கும். பிற்பாடு நம்பிக்கைப் பிறப்பதற்குத் தடவைக்குத் தடவை பிரமாணஞ் செய்ய வேண்டிவரும். கடைசியில் இதுகூடக் கெட்டு விரோதமுண்டாகும். ஒருவர்மேலொருவர் விசுவாசம் பிறழ்ந்துபோன இருவர்களுக்கும் இல்லற வின்பத்திற்கும் வெகுதூரம்.

2. பாரியைக்குப் பர்த்தாவைக்காட்டிலும், பர்த்தாவுக்குப் பாரியைக்காட்டிலும், இவ்வுலகத்தில் அதிகமான நண்பர்கள் எவர் உளர். அவர்களிருவரும் ஒரே சரீரத்தில் பகுதிப்பாகங்களாவதினால் எவ்வித சுக துக்கத்திலும் பங்குபெற்று இசைந்து இணங்கியிருப்பார்கள். ஒருவரையொருவர் மோசஞ்செய்வதும், ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளாமல் எந்த **விஷயத்தையாயினும்** மனதிலேயே வைத்து மறைத்துக்கொள்வதும், ஈதெல்லாம் இயற்கைக்கு விரோதமானவை. ஒருவரிடத்தில் ஒருவருக்கெப்படி அந்நியபாவம் பிறக்கும். பாரியையைத்தனது ஆத்மாவாகப் பார்த்துக்கொள்ளும் பர்த்தாவே பர்த்தா. பர்த்தாவைத் தன்னுடைய ஆத்துமாவாகப் பாவித்துக் கொள்ளும் பாரியையே பாரியை. இவரிருவருடைய தாம்பத்தியமே தாம்பத்தியம்.

3. ஒருவரையொருவர் சுகப்படுத்துவதைக்காட்டிலும் பாரியா பர்த்தாக்களுக்குப் பின்னை அதிகமான சவுக்கியம் ஏதிருக்கிறது. ஒருவருடைய விசாரத்தை ஒருவர் போக்கடிப்பதைக் காட்டிலும் அதிகமான சந்துஷ்டி பிறிதேதுளது. எவ்விடமோபிறந்து எவ்விடமோ வளர்ந்து எப்படி எப்படியோ ஒன்றுகிறார்கள். தம்பதிகள் அவர்களுடைய பரஸ்பரவிருப்பம் ஆகாகா! அதன் மகிமையை என்னவென்றுரைப்பது. தாய்தந்தைகளைக்காட்டிலும், தம்பி தமையன்களைக்காட்டிலும், தங்கை தமக்கைகளைக்காட்டிலும், தன்னைக்காட்டிலுங்கூட ஒருவரையொருவர் அதிகப்படியாய்ப் பாவித்துக்கொள்ளும்படி செய்கின்றது. ஓகோ! கோ! சிருஷ்டிகர்த்தாவின் சாமர்த்தியத்தை எவ்வாறுகொண்டாடுவது.

4. தன்னவர்களை எல்லாம் விட்டுவிட்டு தாயும் தகப்பனுந் தெய்வமும் சமஸ்தமும் பர்த்தாவே என்று நம்பி வருகிறாள் பாரியை ஏசினாலும் அடித்தாலும் பாரியைக்குப் பர்த்தாவே யல்லவா பற்றுக்

கோடு ஆதரிப்பதற்கும், அநுக்கிரகிப்பதற்கும் பர்த்தாவேயல்லவா துணைக்கொம்பு. பர்த்தாவுக்குக் கோபம் உதித்துப் பேச்சுவிட்டுவிட்டால் பாரியைக்குத் திக்கி யாருலகத்தில் ஐயோ! அப்படிப்பட்ட சமயத்தில் பாரியையின் மனமெப்படிப் பரிதவிக்குமோ! எவ்வளவு வருந்தியேங்குமோ! அவளுடைய விருதயம் எப்படித் துடிக்குமோ! இவ்வளவு வருத்தத்தை மனையாட்டி சகிக்க வலாள். ஆதலால் பர்த்தாக்களே உங்களுடைய பத்தினிகளைத் தயை கூர்ந்த மனத்துடன் பேணிப் பெருமைப்படுத்துங்கள். அவர்களை விருப்பத்துடன் கருணியுங்கள். நல்ல வார்த்தைகளை மெல்ல மெல்லப் போதியுங்கள். அவர்களுடைய மனங்களுக்கு வருத்தம் வந்தபொழுது காதலுடன் ஆதரியுங்கள்.

5. நமக்குள் அநேகர் தங்களுடைய மனைவிகளை மிகவும் தாழ்மையான நோக்கத்துடன் பார்க்கிறார்கள். ஊழியஞ் செய்வதற்கும், பள்ளியறையிலிட்டு சுகிப்பதற்கும் தவிர வேறெதற்கு முதவாத தொண்டுகளாக்கியிருக்கிறார்கள். ஐயய்யோ! ஈதெவ்வளவு அநியாயம். எவ்வளவு இழிவுள்ளது. உயிர்ச்செல்வத்தை இவ்வாறு விலங்குக்குச் சமமாகப் பார்ப்பது நமக்குத் தகுமா? மெய்யான இல்லற சவுக்கியத்தை இப்படிப்பட்டவர் எவ்வாறு சுவை பார்ப்பார்கள். பெண்டுகளை எவ்வளவோ மேன்மைப்படுத்திச் சுகப்படச்செய்தாலல்லவா புருஷர்களுக்கு சவுக்கியம் கிடைக்கும். அவர்களுடன் தங்களுடைய கஷ்டநிஷ்டூரங்களைச் சொல்லிக்கொண்டாலல்லவா மனம் அமைதிப்படும். அவர்களுடைய மரியாதையை யடைந்தாலல்லவா இவர்களுடைய ஆவியும் மகிழ்வுற்றிருக்கும். அவர்களுடைய சந்தோஷத்தை யநுபவித்தாலல்லவா இவர்களுடைய இருதயங்களும் குளிர்ச்சியடையும்.

6. நம்முடைய செந்தமிழ்ப் பகுதிகளில் சில குரூரர்கள் அத்தியந்தயா சூனியர்களாகி தங்களுடைய பெண்சாதிகளை யடிக்கிறார்கள். பண்டிதர்களென்று பெயர்பெற்றுச் செருக்குற்றப் பரமவேஷதாரிகள்கூட இவ்வாறு செய்கிறார்கள். பெண்பிள்ளைகளை யடிப்பதற்கு இவர்களுடைய கை எப்படி யாடுமோ? சொல்ல சக்தியற்றிருக்கிறோம். அபலைகளின் மிருது சரீரங்களை வருத்துவதற்கு அந்தோ! இக்கன்னெஞ்சர்களின் மனமெப்படி யொப்புகின்றதோ? அவர்கள் கண்ணீர் விடுவதைக் கண்டு இவர்கள் எப்படிச் சகிக்கிறார்களோ? ஓ! நண்பர்காள் இப்படிப்பட்ட கொடுஞ்செயல்கள் நம்முடைய நாடு நகரங்களி

னும் வந்து தலை நீட்டிவிடாமற் பாதுகாத்துங்கொள்க. அவர்களைக் கொடூரத்துக்குள்ளாக்காமல் எக்காலுந் தயையுடன் பார்க்கவேண்டியது. பதினாயிரம் தப்பிதங்கள் செய்தபோதிலும் இல்லாளைப் பூவிதழினாலும் அடித்தல் கூடாதென்னுஞ் சொல்லை மதியுங்கள். அவர்களுடைய கண்களிலிருந்து கண்ணீர் வாராதவண்ணம் முத்தமிட்டுப் புத்தி சொல்லுங்கள். இப்படிச் செய்யுமிடத்து அவர்களுடைய மனங்கள் உங்களுடையவாம். அவர்களுடைய இருதயங்களும் உங்களுடையவை. அவர்களுடைய ஆவிகள்கூட உங்களவையேயென்று திடமாய் நம்புங்கள்.

7. நண்பர்காள்! நன்கு கவனித்தல் வேண்டும் நம்முடைய பெரிய செல்வவந்தர்களிற் சிலர் தங்களாசைகள் யாவற்றையும் வேசையின் மீதும், மேன்மினுக்கிகளான வேஷக்காரிகளின் மீதும், நிறுத்திவிடுகிறார்கள். அருமையிலும், பெருமையிலுஞ், சிறந்த தங்களின் சொந்த மனைவிமார்களைக் கனவிலுங்கூட நினைக்காமல் பெரும்பான்மையும் அயல்நாடுகளிலே சஞ்சரிக்கிறார்கள். இப்படியாயின் தங்கள் தங்களின் சொந்த மனைவிமார்களாலுண்டாகும் சுகம் இப்படிப்பட்டதென்பது கணவர்களுக்குத் தெரியுமாறென்னை? யக்கணவிமார்களும் இக்கணவன்மார்களாலனுபவித்துக் கண்ட சுகம் யாது? அக்கணவிமார்களும், அந்தோ பரிதாபம். இக்கணவன்மார்களைப்போன்று மனித வர்க்கமன்றோ? இவர்களுக்காக இங்ஙனம் இவ்வாறுதான் கூறவேண்டுமென்பது சிறியேற்கு ஒன்றுமே தோற்றவில்லை. ஏதோ ஒரு சமயத்தில் வருஷத்தில் ஒருமுறை யிருமுறை "குருட்டுப்பூனை விட்டத்தில் பாய்ந்ததுபோல்" காலரை மனதோடுங் கூடிச் சேர்வார்களானால் இவர்களின் சவுக்கியத்தைப்பற்றி எற்றெனக் கூறுகிறது. இப்படிப்பட்ட ஓ! என் அருமையான செல்வச் சகோதரர்களே! மேற் கூறப்படுகிற ஒவ்வொரு விஷயங்களையும் நன்றாகக் கவனியுங்கள். தங்களின் தூய்மையான சத்துக்களை யெல்லாம் அயல்மாதர்கள்பால் தொலைத்துவிடாதேயுங்கள். பசும்பொன்னைப்போன்ற சரீரத்தை அயல்மாதர்களாலே தழுவக் கொடாதேயுங்கள். எந்த வயல் நகரங்களுக்கே செல்லினும் தங்களின் மனைவி மக்களோடுஞ் செல்லுங்கள்.

8. ஓ! என் அருமைச் சகோதரிகளே! இங்ஙனம் கூறும் ஒவ்வொரு விஷயங்களையும் நன்கு கவனியுங்கள். எந்த வழிகளினாலாவது

கணவன்மார்களைச் சுகப்படுத்தும் வழியே முயலுங்கள். அவர்களுக்குக் கோபம் வாராதவண்ணமியலுங்கள். மாதர்கள் நீதியமைந்து கிடக்கும் ஒவ்வொரு நூற்களையும் நன்றாகத் தெளியுங்கள். கற்பிலக்கணங்களைபற்றி நன்கு தெரிந்துகொள்ளுங்கள். கணவர்களோடு எந்தஞான்றுமினியவார்த்தைகளாடிப் பயிலுங்கள். அவர்கள் அந்நியமாதர்களைக் கவனியாதவண்ணம் காதலைக்கொண்டு கட்டுப்படுத்துங்கள். காதலின் மூலமாய் காதலர்களை யடக்கி யாளுங்கள். அவர்களைக்கொண்டே அரிதான பெரிய நூற்களை கற்பிக்கச் செய்யுங்கள். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்காபரணங்களையும் ஏனையவாபரணங்களுக்கெல்லாம் சிறந்தனவாக நினையுங்கள். அஃதின்றி யவர்களின் எதிர்நின்று வார்த்தையாடாதேயுங்கள். அவர்கள் எத்துணை தூரம் கொடூரமான வார்த்தைகளாடி கோலாற் புடைக்கத்தொடங்கினும், எதிராடாமல் சாந்தத்தை வகித்து, சீற்றமாறியபிறகு, குளிரப்பேசி இரக்கப்படச் செய்யுங்கள். எப்பொழுதும் சுகாதார முறைப்படி நடக்க முயலுங்கள். எவ்வகைப் பட்ட உணவுப் பதார்த்தங்களையும் அன்போடு மிகவும் சுவைபடுமாறு பாகப்படுத்தி யூட்டுங்கள், அவர்களின்மீது பிரேமையும், பக்தியும், பொருந்தி அவர்களுடைய மனங்களுக்கு, எள்ளளவும் அநுமானம் பிறவாதவண்ணம் நீங்கள் பிரவர்த்திப்பது மிகவும் முக்கியமானது. அவர்களுடைய இருதயங்களுக்கு உங்களிடத்தில் பரிபூரணமான விசுவாசத்தை பிறப்பிக்கத்தக்க வழியிலே நடந்துகொள்ளுங்கள். நுங்களுக்கு நிகழ்கால வர்த்தமானங்களையொட்டிக்கொடுக்கப்படும் சுதந்தரங்களை துர்விநியோகப்பட்டுப்போகாமற் பாதுகாத்துக்கொள்ளுங்கள். நீங்கள் பெறவேண்டும் புகழைப் பெற்றுக்கொள்ளுங்கள். பாலிலே நீர்கூடிவாழ்தலைப்போன்று ஒருவரைவிட்டொருவர் பிரியாது வாழ முயலுங்கள். அவர்களுக்குத் தக்க நல்லொழுக்கங்களிலே பழகுங்கள். அவர்கள் எந்த வயல் நகரங்களுக்கு செல்லினும் அவர்கள் உத்தரங்கிடைத்தாலொழியபின் செல்லாதேயுங்கள். நுங்களோடு யானும் கட்டாயம் பின்றொடர்ந்துவருவேனென அவர்களுக்கு கஷ்டத்தை யுண்டுபண்ணாதேயுங்கள். எவ்வகைத்தானுமவர்கள் உத்தரவை மறக்காதேயுங்கள். அவர்களுக்கு தயவாயிருப்பதில் அவர்களின் தாயைப்போலிருங்கள். அவர்களுக்கு பணிவிடை செய்வதில் அடியாளைப் போலியலுங்கள். அவர்களுக்குத் தக்க

சமயத்தில் ஆலோசனை கூறுவதில் மந்திரியைப்போலுமாகுங்கள். அவர்கள் மீது எவ்வகை முகாந்தரங்களைக்கொண்டும் மனவருத்தப்படாதேயுங்கள். மனஸ்தாபம் செய்யாதேயுங்கள். அவர்களுக்கு நல்ல கீர்த்தியுண்டாமாறு நடவுங்கள். அவர்களின் குறிப்பறிந்து நடவுங்கள். அவர்களுக்கு ஆதாரம் நம்மை யல்லது வேறு யாவரென்பதை யுணருங்கள். அவர்களின் மனமானது எந்தப்பொழுதும் ஆனந்தக்கடலிலே மூழ்கச்செய்யுங் கருவியாக நம்மை பிரம்மாவாலே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்பதையு முணருங்கள். அவர்கள்பாலெற்றுங் குறையுளதாயின் அதனைப்பலர்பாலுந் தூற்றாதேயுங்கள். "தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்" என்ற மூதாட்டியாள் வாக்கையு முணருங்கள். தற்காலவரைக்கற்றுக்கொள்ளாத ஒவ்வொரு சகோதரிகளும் நுங்கள் நுங்களின் கணவன்மார்க்களைகொண்டே கற்பிக்கச்செய்து கூடிய சுருக்கில் விவேகியாகுங்கள்.

9. ஒவ்வொரு கணவிமார்களும் கணவன்மார்களும் உலாவப்போயினும் ஒன்றாகவே சோடியாகப் போதல் வேண்டும். சாதாரணமாய் இரண்டுபேர்களும் ஒன்றாய்ப்போய்வருவதில் எற்றும் நாணப்படுதல் கூடாது. நாடகம் பார்க்கப்போயினும் ஒன்றாகவேதான் போதல் வேண்டும். சைக்கிள், மோட்டார், முதலிய எந்த சவ்வாரி போயினும் தனியாகப்போதல் கூடாது. இருவரும் சோடியாகத்தான் போதல் வேண்டும். எவ்விதப்பட்ட தேவாமிர்தமே எனினு மிருவர்களும் பகர்ந்துதான் புசித்தல் வேண்டும். ஒருவர் சொல்வதை யொருவர் அங்கீகரித்துக்கோடலும் வேண்டும். ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்ளக்கூடாது. ஒருவருக்கொருவராதாரம் என்பதை இரண்டு பேர்களும் மறத்தல் கூடாது. தங்கள் குடும்பத்துக்குறிய ஒவ்வொரு வேலைகளையும் இருவரும் கவனித்து முடித்துக்கோடலும் வேண்டும். கணவி செய்யும் வேலைகளைக் கணவன் செய்யவும், கணவன் செய்யும் வேலைகளைக் கணவி செய்யவும் தெரிந்துகொண்டிருத்தலும் வேண்டும். ஒருவருக்கொருவர் அவர்கள் இவர்கள் என மரியாதையாகவேதான் பேசிக்கொள்ளுதலும் வேண்டும். எவ்விதப்பட்ட சுகத்தையும் இரண்டு கூறுகளாகவே பாகித்துக்கொள்ளல் வேண்டும். ஒருவருக்குத்தெரிந்த ஒரு கல்வியை ஒருவருக்குச் சொல்லிக்கொடுத்தல் வேண்டும். எவ்வித முகாந்தரங்களைக்கொண்டும் ஒருவரைவிட்டொருவர் பிரிதல் கூடவே

உ

திருச்சிற்றம்பலம்.

Nattukcottai Vaiciyam.

நாட்டுக்கோட்டை வைசியம்.

கணவி கணவர் சுகப்படும் வழிகள்

முன் 12-வது புத்தகம் 212-வது பக்கத் தொடர்ச்சி.

தொகுதி க. } ஆநந்த ௵ தை ௴ { பகுதி கங.

கூடாது.

"காதன் மனையாளுங் காதலனுமாறின்றித்
தீதிலொரு கருமஞ் செய்பவே—ஓதுகலை
எண்ணிரண்டு மொன்றுமதி யென்முகத்தாய் நோக்கருன்
கண்ணிரண்டு மொன்றையே காண்"

என்ற நன்னெறியையு முணர்க. இல்லற தருமத்தாலும், துறவற தருமத்தாலும், வரும் பயன்களையே எனினும் இருவருமாகவேதான் விரும்பித்துய்த்தலும் வேண்டும். சந்நியாசி ஆச்சிரமம் பெறவேண்டுவது ஒருவரைவிட்டொருவர் பிரிந்துதான் பெறவேண்டும் என இருவருள் ஒருவரான எவரும் நினைத்தல் கூடவே கூடாது. உலகவின்பத்தை கணவி, கணவர் இருவருங் கூடி ஒன்றுபோலனுபவித்து வாழ்வதற்காகத்தான் சிருஷ்டிகர்த்தா ஓரே மனிதப்பிறவியை ஆண்பால், பெண்பால் என இரண்டு பிரிவுகளாக வகுத்திருக்கிறாரென்பதை இருவருளொருவர் எவரே என்கினும் மறத்தல் கூடாது. வண்டி, ரெயில், ஸ்டீமர் முதலிய எந்த யாத்திரைகளும் இரண்டுபேர்களுமாகத்தான் செய்தல் வேண்டும். இன்பநிலையிற்றெனத் தெளிதல் வேண்டுமாயின் ஒவ்வொரு சகோதரி, சகோதரர்களும் எற்றையும் நோக்காது இங்ஙனம் கூறிக்கிடக்கிறபடி நடக்க முயலுங்கள். அவ்வாறு நடந்துபாருங்கள். நாளைப்பார்த்துக்கொள்வோமென வரும் நினைப்பைத் தள்ளுங்கள். கிடைத்தற்கரிய மனிதப்பிறவி கிடைத்த இந்த ஞான்றுகளைக் கழிய விட்டுவிடாதேயுங்கள். "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ ஏது வருமோ அறிகிலேன்" என்ற நம் தாயுமானர் வாக்கையும்

மறவாதேயுங்கள். கழிந்த நாட்களை வாவெனக் கர்னம் போட்டாலும் வரமாட்டா. ஆகவே எவ்வகைத்தானும் இங்ஙனம் சுருக்கமாகக் கூறி முடிக்கவேண்டும் விஷயம் ஒன்றுளது. அஃதாவது ஒரு கணவிக்குக் கிடைத்த ஒரு கணவன் எத்துணையசங்கியமாயும், கேவலமாயும், தாழ்மையாயும், மனித ஜென்மத்தைப்போன்றல்லாதவனையும், இயற்கையிலேயோ அல்லது விவாகம் நடந்தபின்னர் அவ்விதமாயோ இருப்பினும்; ஒரு கணவனுக்குக் கிடைத்த ஒரு கணவி எத்துணை யசங்கியமாயும், கேவலமாயும், தாழ்மையாயும், மனித ஜென்மத்தைப்போன்றல்லாதவளாயும், அல்லது ஒரு பிசாசைப்போன்றுள்ளவளாயும் இயற்கையிலேயோ அல்லது விவாகம் நடந்தபின்னர் அவ்விதமாயோ இருப்பினும், தங்கள் தங்களுக்குக் கிடைத்தது சரியென ஒருவரைவிட்டு ஒருவர் விலகிக்கொள்ளாது தங்கள் வாழ்நாளிறுதிவரை ஒருவரோடொருவர் அந்நியோந்நியமாக கூடிவாழ்தல் வரைகடந்தவின்பாதி போகங்களை தரும் மேலான இயற்கையாம். இதுவே அவ்விருவர்களுக்கும் சுகத்தைக்கொடுக்கும் வழிகளாம் இஃது அவ்விருவர்களும் சுகப்படும் வழிகளுமாம். சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

சிவமயம்.

இல்வாழ்க்கையும், வாழ்க்கைத்துணை நலமும்.

ஓ! எமதன்பார்ந்த நண்பர்காள்! குறவர் கோமான் குறுந்தாள் பணிந்து இங்ஙனம் இல்வாழ்க்கையும், வாழ்க்கைத்துணை நலமும் என்ற அங்கத்தை வரையத்தொடங்கி, முதன் முதலாக இல்வாழ்க்கையைப்பற்றிக் கவனிப்பாம். இல்வாழ்க்கையென்னும் இச்சிறுதொடரின் பதப்பொருளாவது இன்னதுதானென்பதைப் பெரும்பான்மை எவர்களுந் தெற்றெனத் தெளிவார்களே எனினும், அவ்வவர்களின் தொன்னூல் வழக்கென்னும் நன்னூன் முறைப்படி திருமணமார்த்த ஓர் மனையாளும், கொழுநனுமோரில்லொடுங்குழீஇ, பலவித நல்லொழுக்கங்களோடுமரீஇ, ஆன்றோர்களாலே விலக்கக் காட்டிக்கிடக்கும் எவ்வகைப்பட்ட தீயவொழுக்கங்களினின்றும் ஒரீஇ, மக்கட்பேறு

முதலிய அறம், பொருள், இன்பங்களைக் கருதிவாழ்தலேயாம். மனிதவர்க்கமாய்ப் பிறந்தார் ஒவ்வொருவர்களுக்கும் இவ்வில்வாழ்க்கையின்றி அமையாது வேண்டுமாவசியகமேயாம். பிரமசாரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசமெனப்படுகிற மூவகையாச்சிரமங்களுக்கும் கிரகஸ்தாச்சிரமமே மிகத் தலையாயதாம். இஃதுபற்றித்தான் "இல்வாழ்வானென்பானியல்புடைய மூவருக்கும் நல்லாற்றி னின்ற துணை" என நமது தேவபெருமானுங் கூறினர். இவ்வில்வாழ்க்கையை நீத்து ஒருவர் எத்துணை யின்பாதி போகங்களைத் துய்ப்பவரே எனினும் கவனிக்குமிடத்து அவர் பிறந்தும் பிறவாதவரேயாவர். அறம், பொருள், இன்பம், வீடு எனப்படுகிற நான்குபொருள்களையு மடைதற்கு இதுவே யடிபீடமாகும். காமவிகாரத்துக்கும், மோகபாசங்களுக்கும் உட்படாமல் நிர்மலவிருதம் வாய்ந்திருப்பது அசாத்தியமல்லவென்று சிலர் சொல்லுவார்கள். ஆனால் சர்வசாதாரணமாய் இவ்வுலகத்தில் ஏதோ ஒருகாலத்திலாவது சித்தசஞ்சலம் பிறக்காமல் காலங்கழித்தவர்கள் மிகவும் அரிதேயாம். உலகப்பற்றுக்கோடில்லாதவர்களாய் யோகத்தியானத்திலிருந்த சில மகா முனிவரர்களின் நற்சரித்திரங்களை புராணேதிகாசங்கள் முதலிய பல பிரபந்தங்களிற் படித்துவருகிறோம். சந்நியாசிகள், குருக்கள், வேதாந்திகள், முதிய பிரமசாரிகள் முதலியவர்களில் அநேகருடைய நடவடிக்கைகளைக் கண்ணுறப் பார்த்தும் வருகிறோம். நெடுங்காலம் பரஸ்பர சம்பந்தமில்லாததினால் மதோன்மத்தர்களாயிருக்கும் ஸ்திரி புருஷர்களைக்கூட அறிவோம். இப்படியிருப்பதினால் இவ்வில்வாழ்க்கை உத்தமமென்று சொல்வதற்கு எட்பிளவேனுஞ் சந்தேகமுளதோ? இவ்வில்வாழ்க்கையை அவலம்பிக்காமல் நன்னடக்கை பொருந்தியிருக்குமவர்கள் உற்சாகவீனர்களாயிருப்பார்களேயன்றி அதிகமான சௌக்கியத்தையனுபவிக்க வொண்ணார். ஆகலின் ஸ்திரிபுருஷர்கள் பரிபூரண சௌக்கியத்தைப் பெறக் கோருதல் வேண்டும். இவ்வில்வாழ்க்கை மிக் ஆவசியகமேயாம். பரஸ்பர நேயக்கட்டினாலும், பரமானந்தகரமான சந்தான சம்பந்தத்தினாலும், தங்கள் தங்களின் இறுதிநாள் வரைக்கும் ஒன்றுபட்டிருந்து, இன்பதுன்பாதி போகங்களில் ஒருவரோடொருவர் தோழமைப்பட்டு மனமொப்ப வாழக்கிடக்கும் இவ்வில்வாழ்க்கையின் மாட்சியைப்பற்றி எவருமெடுத்துரைக்குந் தரத்தன்றாம்.

2. இவ்வில்வாழ்க்கையானது ஒருவாறு ஆயுள்விருத்திக்கு மிக அனுகூலமாயுமிருக்கும். அதனால் மனஞ் சஞ்சலப்படாமலிருப்பதே அன்றி சந்தோஷகரமும் சௌக்கியமுமதிகமேயாம். ஸ்திரி புருஷர்களுக்கு இவ்வில்வாழ்க்கை குறைபோன்றது மற்றேதுமின்றாம். எத்துணை சௌக்கியங்களிருப்பினும் ஒருவர்க்குத் தக்க மனைவி அல்லது கொழுநனோடு கூடிய இல்வாழ்க்கை இல்லாதொழியின் ஆழ்ந்தறியாக்குறைவுதோன்றிக்கொண்டேயிருக்கும். உலகத்தின்மீதும், சுற்றத்தார்களின்மீதும், ஆசையின்மையும், அருவருப்பும் பிறக்கும். கணவி கணவர்களின் அந்நியோந்நிய நேயத்தைக்காட்டினும், தாய் தந்தையர்களுக்குங் குழந்தைகளுக்குமுள்ள பரஸ்பர பிரியபந்தத்தைக்காட்டினும், இனிமையானது இஞ்ஞாலத்தில் வேறியாதுள்ளது. இந்தப் பிரேமாம்ரதத்தைக்காட்டினும் பரமௌஷதம் மற்றேதுண்டு. குணவதியாயிருக்கும் மனைவியையும், சற்குணமுள்ள சந்தானத்தையும், பெற்ற ஒருவன் எந்த ஞான்றும் ஆனந்தசாகரத்தில் நீந்திக்கொண்டு சுகதரங்களில் ஓலமாடிக்கொண்டிருப்பான் என்பதிலுஞ் சந்தேகமென்னை. இஃது பற்றித்தான்

"கற்புடுத்தன்புமுடித்து நாண்மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பேறு
என்பதோர் செல்வமுமுண்டாயினில்லன்றே
கோண்டாற்குச் செய்தவம் வேறு"

என நங்கு மாகுருபரருங் கூறினர்போலும் ஓ! எமதன்பார்ந்த நண்பர்காள்! இவ்வில்வாழ்க்கையின் மாட்சியே மாட்சி. இவ்வில்வாழ்க்கையின் இன்பமே இன்பம். வமிசாபிவிர்த்திக்கு இன்றியமையாததெனச் சொல்லவும் வேண்டுமோ? இன்பாதிபோகக்களஞ்சியமென்பதை எவர்தான் மறுப்பர். இஃதாவது எப்பாலவர்களும், எத்தேயத்தவர்களும் அங்கீகரித்ததேயாம்.

3. தத்தஞ்சமயநூன்முறைகளில் எற்றும் வழாதொழுகுதலே மிகச்சிறந்த இல்வாழ்க்கையாம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்
தெய்வத்துள் வைக்கப்படும்" என்றும்

"தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கலானென்றாங்
கைம்புலத்தாறோம்பறலை" என்றும்

"நல்லறநூல்களிற் சொல்லறம் பலசில
இல்லறந் துறவறமெனச் சிறந்தனவே
அந்நிலையிரண்டினுண் முன்னது கிளப்பிற்
கற்றநூற்றுறைபோய்க் கடிமனைக்கிழவன்
நற்குணநிறைந்த கற்புடைமனைவியோடு
அன்புமருளுந் தாங்கியின் சொலின்
விருந்துபுறந்தருந்தவர்ப்பேணி
ஐவகைவேள்வியுமாற்றியிவ்வகை
நல்லற நிரப்பிப் பல்புகழ் நிறீஇப்
பிறன்மனைநயவான் றன்மனை வாழ்க்கைக்கு
வரையா நாளின் மகப்பேறு குறித்து
பெருநலந்துய்க்கும் பெற்றித்தன்றே"

என்றும் வரப்படுகிற வேதவாக்குகளை நாம் நன்குணரத்தக்கதே. ஈண்டும் இவைபோன்ற பலவகை நல்லொழுக்கங்களும், இல்வாழ்க்கையுறுப்புகளாமெனக்கொள்க. முறையே ஒவ்வோர் அங்கங்களாக வருதல்பற்றி மிகுதியும் விரிக்காமல் விடுத்தாம்.

4. இனி இவ்வில்வாழ்க்கைக்காக வேண்டுந்துணை நலங்களைப் பற்றிக் கவனிப்பாம். முதன்முதலாக ஒரு கொழுநனுக்குத் தக்க மனையாணலத்தைப்போன்றும், ஒரு மனையாளுக்குத் தக்க கொழுநன் நலத்தைப்போன்றும், பிறிதொன்றில்லை. ஒருவருடைய துணை ஒருவருக்கிருந்தாலன்றி, ஸ்திரி புருஷர்கள் தம்முடைய குறைகளும், கோரிக்கைகளுந் தீர்ந்து, சம்பூரணாநந்தத்தை யடைய நேரார்கள். மேலும் புருஷனுக்கு பெண்சாதி குறைபோன்றது வேறொன்றுமில்லை. ஓர் உத்தம புருஷனுக்கு கணவியில்லாத தினமும், ஓர் உத்தம ஸ்திரிக்கு கணவனில்லாத தினமும், உலகமெல்லாங் காரிருள் மூண்டதுபோலிருக்கும். ஒரு பெண்ணினிமித்தமாய் எத்துணை யுத்தங்கள் நடக்கவில்லை, எத்துணை பேர் மாண்டுபோகவில்லை, எத்துணை மன்னாதி மன்னர்கள் தங்கள் தங்களின் நாடுநகரங்களைத் தோற்றுப்போகவில்லை, ஆய்ந்துநோக்குமிடத்து நண்பர்காள்! இவ்வில்வாழ்க்கைக்கு மனை நலமிகச் செவ்வையாயமைந்திருத்தல் வேண்டும். இல்லாதவரை இல்வாழ்க்கை அல்வாழ்க்கையாக முடியும். ஏனைய பலவகைத்தான நலங்களினும் ஒவ்வொரு புருஷர்களிடத்தும் சற்குண சம்பத்தும், நல்வழி நல்லொழுக்கங்களும் பொ

ருந்தவேண்டுவது மிக முக்கியமானது. அருணெஞ்சு, மெய்மை, நல்லொழுக்கம், கல்வி, பகுத்தறிவு, அறனுடைமை,கடவுளன்பு,சமயப்பற்று, சுற்றந்தழுவல். இவை முதலியன முக்கியமாயமைதல் வேண்டும். நெஞ்சழுத்தம், குரூரம், கடுகடுப்பு, பெருஞ்சினம், பொய்மை, சூது, கள்ளம், துன்னெறி, செருக்கு, இறுமாப்பு, அசைகை, தன்னயம்பார்த்தல், சோம்பல், போக்கிரித்தனம், இவைபோன்ற பல துற்குணங்களுமிருத்தல் கூடவே கூடாது. சற்றேறக்குறைய நிகழினும் வேரறத் தொலைத்தொழித்துவிடுதலும் வேண்டும். எந்தவாற்றானுந் தன்னைப்போன்றே, தன் மனையாளையும், பாவித்தல் வேண்டும். இனி மனைவிமார்களைப் பற்றிக் கவனிக்கப்புகின், அவர்கள் நன்னடக்கையும்,

"தெய்வந்தொழாஅள் கொழுநற்றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யுமழை" என்றும்

"காண்டகைய தங் கணவனைக் கடவுளார்போல்
வேண்டலுறு கற்பினர் தம் மெய்யுறையினிற்கும்
யீண்டையுள தெய்வதமும் மாமுகிலுமென்றால்
ஆண்டகைமை யோர்களு மவர்க்கு நிகரன்றே" என்றும்

முனிவர்களாலேயும் புகழ்ந்து கூறப்படுகிற சிறப்பு வாய்ந்த கற்புநிலைமையும், கொழுநன்மீதும், கொழுநனைப் பெற்றோர் தன்னைப் பெற்றோர்கள்பால் பயபக்தி விசுவாசமும், உடன் பிறந்தாரிடத்து அன்பும், உசிதமான நாணய விநயங்களும், அமைதியும், சாக்கிரதையும் பரிசுத்தமும், வேலைவித்தைகளில் ஆவலும் வாய்ந்தவர்களாயிருத்தல் வேண்டும். மாமியாருக்குச் சிறந்தகைத்துணையாயும், மாமனருக்கு அன்பு மிகுந்த ஓர் மகளாயும், கொழுந்தன்மார், கொழுந்திமார்களுக்குத் தாயாயும், பந்துக்களுக்குப் பாக்கியமாயும், கொழுநனுக்கு உத்திகூறுவதில் மந்திரியாயும், அவனைப்போஷிப்பதில் தாயாயும், பணிவிடை செய்வதில் உத்தமமான வேலைக்காரியாயும், அவன்பானிகழுங் கோபத்தைத் தாங்கிக் கொள்வதில் பூமியாயும், போகத்தில் உயர்தர நாகரீகம் வாய்ந்த கள்ளக் கணவியாயும் அமைந்தொழுகுதல் வேண்டும். இராணிவாசமாய் வளர்ந்து முதுகு குனியாத தன்மையையும் சிறிதும் நாணவடக்கமில்லாத் தன்மையையும், அதிக வெட்கமுள்ளவள்போல பாசாங்கு செய்யுந் தன்மையையும், மிகவும் ஒய்யாரமாய் தளுக்குகள் காட்டி குலுகுலுக்கி நடக்குந் தன்மையையும், விழிகள் புரட்டிக்கொண்டு ஓரப்பார்

வைகளும், கோணற்பார்வைகளும் பார்க்குந் தன்மையையும், வெகு சாமர்த்தியத்துடன் கல்வி பேசுந் தன்மையையும், எக்கசெக்கமாய் பேசுந் தன்மையையும், அடக்கவணக்கமில்லாமல் துடுக்குநாக்குள்ள தன்மையையும், ஒதுக்கவிலக்கங்களில்லாமல் புதியவரோடு வார்த்தையாடுந் தன்மையையும், கட்டுதிட்டத்துள் அடங்காததன்மையையும்,கெட்டசகவாசங்கள்செய்து பட்டித்தனமாகத்திரியுந்தன்மையையும் எந்தவாற்றானும் அனுசரித்தல் கூடவே கூடாது. தீயமார்க்கங்களை தீயினுங்கொடிய தீயாகவே பாவித்தல் வேண்டும். "ஓதாமலொருநாளுமிருக்கவேண்டாம்" எனக் கூறிய ஔவையம்பிராட்டி திருவாக்கு தங்கள் வர்க்கத்தார்க்காக நிகழ்ந்ததென உணர்தலும் வேண்டும். குடும்பமென்னும் ராஜ்ஜியத்திற்கு தாங்களே மன்மகனென்பதை நன்றாகத் தெளிதலும் வேண்டும். இல்லறத்துக்குத் தகுந்த நற்குண நற்செய்கைகளையுடையவளாகித் தன்னைக்கொண்டானது வரவுக்குத் தகுந்தவாறு செலவு செய்தலும் வேண்டும். கற்பினின்றும் வழுவாமல் தன்னைக்காப்பாற்றிக்கொண்டு தன்னைக்கொண்டவனையும் உண்டி முதலானவைகளாலுபசரித்து தம்மிருவரிடத்தும் நன்மையமைந்த புகழை நீங்காமற் காப்பாற்றி முன்சொல்லப்பட்ட நற்குண நற்செய்கைகளில் சோர்வில்லாதவளாயிருத்தலும் வேண்டும்.

"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை" என்றும்

"புகழ்புரிந்தில்லிலோர்க்கில்லையிகழ்வார் முன்
ஏறுபோற்பீடுநடை" என்றும்

"மங்கலமென்பமனைமாட்சி மற்றதன்
நன்கல நன்மக்கட்பேறு" என்றும்

"பெண்ணிற் பெருந்தக்கயாவுளகற்பென்னுந்
திண்மையுண்டாகட்பெறின்" என்றும்

வரப்படுகிற தேவர் திருவாக்குகளை நன்றாக உணர்தலும் வேண்டும்.

5. இன்னும் ஏனைய. வாழ்க்கைத்துணை நலங்களைப்பற்றிக் கவனிக்கப்புகின் இல்லம் தங்களின் சொந்தமாயிருத்தல் வேண்டும். தக்கவாறு பொருளும், விளைநிலந்தோட்டமுதலியவைகளும் தங்களுக்குச் சொந்தமாயிருத்தல் வேண்டும். மாதாமாதம் வருவாய் மிகச்செவ்வை

யாய் வந்துகொண்டிருத்தல் வேண்டும். கடன் என்பதிருத்தல் கூடவே கூடாது. வரவுக்குத்தக்கவாறு செலவுசெய்தல் வேண்டும். இருவர் பாற்றுஞ் சீர்திருத்தமான உயர்தரக் கல்வி மிகச் செவ்வையாக அமைவு பெற்றிருத்தல் வேண்டும். சுகாதார முறைக்குப் பிறப்பிடம் நாமாகத் தானிருத்தல் மேண்டும். நல்லோரிணக்கமும், நல்லறிவுடைமையும் நமதுழிநிலைபெறுதல் வேண்டும். மீண்டும் மீண்டும் கல்விப்பொருளை யுஞ் செல்வப்பொருளையும் சேர்ப்பதிலேயே மிகக் கருத்துடையவர்க ளாயிருத்தலும் வேண்டும். இவ்விரண்டுபொருளும், இல்வாழ்க்கைக்கு உதவிசெய்துவருவதுபோன்று ஏனைய எந்தப் பொருள்களுமின்றாம். பலவகைத்தான தொழில்களும் நன்கு அமைவுபெற நடாத்துதலும் வேண்டும். எப்படிப்பட்ட உயர்தரமான துணை நலங்களையும் கல்விப் பொருளுஞ், செல்வப்பொருளுங் கொடுக்குமென்பதை நாம் நன்றாக உணர்தலும் வேண்டும்.

6. ஈண்டும் புருஷன்விஷயத்தைப்பற்றிக் கவனிக்கப்புகின் பிறன் மனையாளையும், விதவையையும் வேசையையும் விரும்பாதவனு யும், தன் மனையாளையும் விதிக்கப்பட்ட நாட்களன்றி விலக்கப்பட்ட நாட்களிலே கூடாதவனுயுமிருத்தல் வேண்டும். தற்காலவ்வா ஆய்ந்து நோக்குமிடத்து பெரும்பான்மை ஒவ்வோரில்லங்களுக்கும் புருஷர்களே கர்த்தர்களாக விளங்குகிற தன்மைபற்றி இல்வாழ்க்கை என்னுஞ் சகடத்தை மிகச் செவ்வையாக ஓட்டுவார்களென்பதில் எட்பிளவானுஞ் சந்தேகமின்றாம். "இறந்தது விலக்கல் எதிரது போற்றல்" என்னுமுத்தியை மிகச்செவ்வையாகக் கவனித்தே இல்வாழ்க்கையென்னுஞ் சகடத்தை நடாத்துதலும் வேண்டும். இல்வாழ்க்கையையும் அதன் துணைநலங் களையும் மிகச் சீர்திருத்தமாய் நிகழ்கால நாகரீகங்களுக்கு நேரொப்ப நம்மருமைப்புதல்வர்களுக்கும் நன்கு பயிற்றுவித்துவிடுதலும் வேண்டும். நம்முடைய தேவபெருமான் இல்லறவாழ்க்கையை நடாத்திக்காட்டி யதுபோல் பல மேதாவிகள் நடாத்திக்காட்டப்புகுதலும் வேண்டும். கிடைத்தற்கருமையான இம்மனிதச்சரீரம் நீங்குவதற்கு முன்னே இஞ் ஞாலத்தில் நம்போல்வார் அநுபவிக்கவேண்டுஞ் சம்பூரணாநந்தங்களை எற்றானுங் கவலையின்றியுங், குறைவின்றியுமனுபவித்துக்கோடல் வேண் டும். நண்பர்காள்! நன்றாகக் கவனித்தல் வேண்டும். இல்வாழ்க்கைக் காக வேண்டும் பல விஷயங்களை மிகச் செவ்வையாய் ஆய்ந்து உயர்தர

நூன்முறைச்சட்டங்களைப் பொருந்த நடாத்திவருதலும் வேண்டும். பலதேயத்தவர்களின் இல்வாழ்க்கையையும், நம் செந்தமிழ்நாட்டா ரின் இல்வாழ்க்கையையும் மிகச்செவ்வையாகச் சீர்தூக்கிப்பார்த்து நிகழ்காலதர்மங்களுக்கு ஒப்புமாறு நடாத்த முன் வருதலும் வேண் டும். எந்தவாறுகளினும் மயங்குதல் கூடவே கூடாது. இது விஷயங் களைப்பற்றி நம்முடைய மகா சங்கத்திலே நன்கு யாவர்களுக்குந் தெற் றென விளங்குமாறு பகர்ந்துபேசுதலும் வேண்டும். நமது வகுப்பைச் சார்ந்த ஒவ்வோர் நகரங்களிலேயுமுடைத்தாய ஒவ்வோர் சபைகளினும் ஆங்காங்குடைத்தாய பல பேரறிவாளர்களும் கூடி யடிக்கடி உபந்நி யாசித்துவருதலும் வேண்டும். நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளையுந் தக்க பருவகாலங்களிலே இல்வாழ்க்கையில் அமர்த்திவிடுதலும் வேண்டும். அதினின்றும் வீடுபெறுவதற்குரிய பல மார்க்கங்களையும், இலகுவிலே காணத்தகுமெனத் தெளிதலும் வேண் டும். இல்வாழ்க்கையானது இத்தன்மைத்தென்பதை எற்றுமுணர்ந்து கொள்ளாமற் றுறவுபூண்டு சுவர்க்கலோகத்தை அடைய விரும்புவது பெரும்பான்மை எவர்களாலுஞ் சாத்தியப்படாத ஒரு காரியமேயாகும். நடுப்பருவத்தில் இல்வாழ்க்கையே சுவர்க்கமாக அமைந்துவிடினும் விடும். பெரும்பான்மை மனம், புத்தி, சித்தம் ஓர் நிலைப்படுவது மிகத் துர்லபமேயாகும். சிறுபான்மை ஒருவர் இருவர்களுக்கு சித்தித்திருப் பதும், "குருட்டுப்பூனைப் பாய்ந்து விட்டத்திலுட்கார்ந்துகொண்ட தன்மை யையே ஒக்கும்." அந்தோ! சில நண்பர்கள் சிறுபிராயமுதற்கொண்டு சில வேதாந்த நூற்களைப் படித்துவந்தமாத்திரத்திலே நின்றுகொண்டு யாமில்வாழ்க்கை வேண்டேம், அஃதாற் பெறும்பயனிலைகளெல்லாம் நிலையுடையதாமோ, அஃதாவது அறிவிலார் கொள்கையேயாமன்றோ, அழிவற்ற பொருளொன்றைக் காண்பதன்றோ நம் பேரறிவாண்மை என வாய்ஞானதீரர்களாய், பின்னர் ஐயய்யோ! நம்முடைய வாழ்நாட்க ளெல்லாம் போய்விட்டனவே, நம்முடைய தக்க பருவகாலமெல்லாமொ ழிந்துபோய்விட்டதே, வயசும் 50க்கு மேலாயிற்றே, இனிமேல் நமக்கு எவர் பெண் தரப்போகிறார்கள், ஒருவாறு ஒருவர் தருவதாக ஒப்புக் கொண்டாலும், ஊராருக்கு பதில் யாது கூறுகிறது, பெருங்கேலியாக வன்றோ முடிந்துபோம். தற்காலவவை உடைத்தான ஸ்வாமியார், ஸ்வாமியார், அல்லது வேதாந்தியென்ற யோக்கியதையுங்கூட கெட் டன்றோபோம். நம்முடைய வூழ்வினைப்பயனிஃதேயாம்போலும். சுக்

கிரன் 12லிம், புதன் 8லும், மறைந்துகொண்டதன் பயனே போலும். எனத் தன்னுள்ளே துக்கித்துக்கொண்டு இல்வாழ்க்கையுமின்றி, வீடு பேற்றிற்குரிய துறவறவாழ்க்கையுமின்றி,

"தோந்திசரிய மயிரே வெளிறநிறை
தந்தமசைய முதுகே வளைய இதழ்
தோங்க ஒரு கைதடிமேல் வரமகளிர்—நகையாடித்

தொண்டு கிழவனிவன் யாரென இருமல்
கிண்கிணென முனுமுனையே குழறவிழி
துஞ்சுகுருடுபடவே செவிடுபடு—செவியாகி"

என்று வரப்படுகிற அருணகிரி ஸ்வாமிகள் வாக்கிற்கிணங்கி வயோதிகப் பருவத்தையடைந்து, கோலூன்றிக் குனிந்து நடந்து, ஐயய்யோ என்று துஞ்சப்படுகிறார்கள், இவர்களின் கதியை நன்றாக ஆய்ந்துநோக்குங்கள். இடையிலே இவர்கள் சில சேஷ்டைகள் செய்யாமலும் இருந்திருக்கமாட்டார்களே இப்படிப்புள்ளார் உடைத்தான நாடுநகரங்களிலே நீர்வளமெல்லாம் மிகச் செவ்வையாய் நிறைந்திருப்பினும் நிலவளங் குறைந்து விளைபயன்குன்றிப்போமென்பதிற் சந்தேகமில்லவேயில்லை. இம்மாதிரியான கெட்டபழக்கவழக்கங்கள் நம்முடைய நாடுநகரங்களினும் வந்து நுழையாதவண்ணம் பேரறிவாளர்கள் பாதுகாத்துக் கோடலும் வேண்டும். இல்வாழ்க்கையும் அதற்காக வேண்டும் பல வகைப்பட்ட துணைநலக்கருவிகளும் எல்லாம்வல்ல இறைவன் திருவருட்சத்தியை முன்னிட்டும் முருகக்கடவுளின் பூரணானுக்கிரகத்தை முன்னிட்டும் நாளுக்குநாள் மேலும்மேலும் வளர்ந்தோங்குமாறு எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளை இறைஞ்சுகின்றாம். சுபம்! சுபம்!! சுபம்!!!

மக்களின் மாட்சியும், அவர்களுக்காக அவ்வவர்களின் தாய்தந்தையர்கள் செய்யவேண்டும் பல கடமைகளும்.

"கண்ணிற்சிறந்த உறுப்பில்லை கொண்டானிற்
றுன்னிய கேளிர் பிறரில்லை மக்களி
னொண்மையவாய பொருளில்லையீன்றாளி
னென்னகடவுளுமில்"

அருங்கலைவினோதர்களான ஓ! நாட்டுக்கோட்டை எமதன்பார்ந்த ஐயன்மீர்! சர்வகலா நிபுணர்களின் பாதம் புக்கி, இங்ஙனம் மக்களின் மாட்சியும், அவர்களுக்காக அவ்வவர்களின் தாய்தந்தையர்கள் செய்யவேண்டும் பல கடமைகளும் என்னும் அங்கத்தை வரையப்புகுகிறேம். இதனை நோக்குங்கால் இடைஇடையே ஏனைய விஷயங்களிற் செல்லாதவண்ணங் கவனத்தை ஓம்புக. ஆகாயத்தையே ஆடையாகத் தரித்துக்கொண்டியங்கும் பெரிதான இந்நிலவுலகத்தில் விரும்பப்படுகிற பல்வகைப்பட்ட செல்வங்களினும் மக்கட்செல்வமே மேலாயதென ஆன்றோர்களாலே கருதப்படுகிறது. என்னையோ? ஏனைய பலவகைப்பட்ட செல்வங்களை ஈட்டிக்கொள்வதற்கும், ஈங்கு கூறப்படுகிற மக்கட்செல்வத்தை ஈட்டிக்கொள்வதற்குமாகச் செய்யும் எந்தத் தொழில்களுக்கும் நாம்தானே கர்த்தாவாக நிற்கிறேம். ஏனைய செல்வங்களை ஈட்டுவதற்குரித்தான கஷ்டங்களைப்போன்று இம்மக்கட்செல்வத்தை ஈட்டுவதற்கு யாதொரு கஷ்டத்தையுங் காணவில்லையே? கவனிக்கப்புகின் மிகவும் பேரானந்தத்தைத்தானே உண்டுபண்ணுகிறது அப்படியிருக்க விரும்பப்படுகிற பல்வகைப்பட்ட செல்வங்களினும் மக்கட்செல்வமே மேலாயதென எம்மாலே கருதப்படுகிறதென்றாவது கூறுவதை ஒழித்து ஆன்றோர்களாலே கருதப்படுகிறதென கூறத்தொடங்கினீரே? எங்ஙனமெனின் ஈங்கு தோற்றப்படுகிற சருவசிருஷ்டிக்கும் மனிதச்சரீரம் முதன்மையானதன்றோ! அம்மனிதச்சரீரத்தைச் செவ்வையாய்ப் பரீட்சிக்குங்கால் அதனுள் அமர்த்தப்பட்ட அவயவங்களின் பொருத்தங்களையும், அதின் மகாற்புதமான இயந்திரங்களின் ஒழுங்குகளையும், ஆங்குடைத்தான தலைவன் முதலாய தத்துவாதிகளையும், அவைகளாலே செய்துவரும் பலவகைப்பட்ட வேலைகளையும் தெளிந்துநோக்குமிடத்து, ஏனைய செல்வங்களுக்கும், இம்மக்கட் செல்வத்துக்கும் உண்டாம் ஏற்றத்தாழ்வு இஃதாமென்று தெற்றென விளங்காதொழியினும்; பொதுவாக மக்கட்செல்வமுதலாய எவ்வகைப்

பட்ட செல்வங்களையும் ஈட்டுவதற்காகச் செய்யப்படும் எந்தத் தொழில்களுக்கும் நாம்தானே கர்த்தாவாக நிற்கிறோமென்னும் சத்துவங் கிடைத்தது நம்போன்ற மனிதவர்க்கத்துக்குத்தானே என்பதை மறுப்பவர் யாவர். மக்கட்செல்வமென்று கூறப்படுகிற மனிதக்குழந்தைகளும் நம்மனிதவர்க்கந்தானே என்பதையும் உணராதார் யாவர். தம்பதிகளாலே சேர்க்கப்படும் ஏனைய பலவகைப்பட்ட செல்வங்களையும், மென்மேலும் அபிவிர்த்திசெய்து வைத்தாண்டு அநுபவித்துக் களிக்குங் கர்த்தாவும் அவ்வவர்களின் மக்கட்செல்வமேயாமன்றோ? ஆகவே விரும்பப்படுகிற பலவகைப்பட்ட செல்வங்களினும் மக்கட்செல்வமே மேலாயதென்பதிற் சந்தேகமென்னை? இஃதுபற்றியன்றோ!

“சொன்னகலையின்றுறையனைத்துந்தோய்ந்தாலும்
என்னபயனுடைத்தாமின்முகத்து—முன்னங்
குறுகுதலைக் கிண்கிணிக்காற்கோமக்கள்பால்வாய்ச்
சிறுகுதலைக் கேளாச்செவி” என்றும்,

“மக்கண் மெய்தீண்டலுடற்கின்பம் மற்றவர்
சொற்கேட்டலின்பஞ் செவிக்கு” என்றும்,

“உந்துநீர்க்கடலுடுத்தபார்முழுவதுமொருங்கே
வந்துதாடொழுமரசியல் வளமெலாம் பெறினும்
இந்திராதியோர் பெரும்பதத்திருக்கை எய்திடினும்
மைந்தரின்றியே வாழ்வது வாழ்வுமற்றன்றே என்றும்,

“படைப்புப்பல படைத்துப் பலரோடுண்ணும்
உடைப்பெருஞ் செல்வராயினுமிடைப்படக்
குறுகுறுநடந்து சிறுகைநீட்டி
இட்டுந்தொட்டுங் கவ்வியுந்துழந்தும்
நெய்யுடையடிசின் மெய்படவிதிர்த்து
மயக்குறு மக்களையில்லோர்க்குப்
பயக்குறையில்லைத்தாம் வாழுநாளே” என்றும்,

“தொக்கிளமலர்துதைவிலாத சோலையும்
புக்கிளந்தாமரை நகாத பொய்கையும்
மிக்கிளம்பிறைவிசும்பிலாதவந்தியும்
மக்களையிலாததோர் மனையுமொக்குமே” என்றும்,

“பொன்னுடையரேனும் புகழுடையரேனுமற்
றென்னுடையரேனுமுடையரோ—வின்னடிசில்
புக்களையுந்தாமரைக்கைப்பூ நாறுஞ் செய்யவாய்
மக்களையிங்கில்லாதவர்” என்றும்,

“கற்புடுத்தன்புமுடித்து நாண்மெய்ப்பூசி
நற்குண நற்செய்கை பூண்டாட்கு—மக்கட்பே
றென்பதோர் செல்வமுமுண்டாயினில்லன்றே
கொண்டாற்குச் செய்தவம் வேறு” என்றும்,

“பொறையிலாவறிவு போகப்புணர்விலாவிளமைமேவத்
துறையிலாவனசவாவித்துகிலிலாக்கோலத்தூய்மை
நறையிலாமாலைக் கல்வி நலமிலாப்புலமை நன்னர்ச்
சிறையிலா நகரம்போலும் சேயிலாச்செல்வமன்றே” என்றும்,

“கல்லாமழலைக் கனியூறல் கலந்துகொஞ்சுஞ்
சொல்லாலுருக்கியழுதோடித் தொடர்ந்துபற்றி
மல்லார்புயத்தில் விளையாடுமகிழ்ச்சிமைந்தர்
இல்லாதவர்க்குமனைவாழ்வினினிமையென்னும்” என்றும்,

ஆன்றோர்களாலேயுங் கூறப்படுகிறது. ஆகவே மக்கட்செல்வமுள்ளவர்களுக்கு இடையறாச்சந்தோஷமே மேன்மேலும் பெருகிக்கொண்டு எத்துணை கஷ்டங்களிருந்தபோதிலுந் தோன்றுது. பிள்ளைகளின் மிருதுவான தேங்குதலைகள், அவர்களுடைய ஆட்டபாட்டங்கள், நகை, அழகு, குழறுமொழிகள் முதலிய இவ்வியற்கைகள் தாய் தந்தையர்களுக்கு பரமானந்தத்தை உண்டாக்குந்தன்மையுள்ளனவேயாம். விசாரங்களை எல்லாம் போக்கடிக்கும் அமிர்த சஞ்சீவிகளேயாம். தம்பதிகளிருவரும் மக்கட்செல்வத்தின் மூலமாகவே ஐக்கியப்பட்டு எந்தஞான்றும் அநுராகமென்னும் நேயவாழியில் நீந்திக்கொண்டிருப்பார்கள். ஆகலின் மக்களின் மாட்சியை எவராலும் இற்றென வரையறுத்துக் கூற முடியாதாமென்க.

2. இன்னும் மனிதச்சரீரத்தை ஆக்கப்படுகிற தெய்வசிற்பியின் வலிதான சாமர்த்தியத்தை ஒருவாறு ஆய்ந்துநோக்குமிடத்தும் மக்களின் மாட்சி வரைகடந்ததாகவே முடியும். நம்முடைய செந்தமிழ் நாடுநகரங்களில் இவ்வாறு வரையிலா மாட்சிகளமைந்த தங்களருமை

மக்களில் பெண்மக்களைப் பெரும்பான்மையுந் தாய் தந்தையர்கள் மக்களாகவே கவனிக்கப்படுகிறார்களில்லை. அவர்களை வளர்க்குந்தன்மை, அவர்களைக்கொண்டு நடாத்துமியற்கை; அவர்களுக்குக் கல்வி கற்பித்தல், இன்னும் அவர்களின்மீது செலுத்தப்படுகிற அன்புரிமை முதலிய பாசப்பற்றுக்களை எல்லாமொருங்கே கவனிக்கப்புகின் ஆண்மக்களை உயர்வாயும், பெண்மக்களைத் தாழ்வாயும் பாவிக்கப்படுகிறதென்பது அறிவாளிகளாயுள்ள எவர்களுக்குந் தெரியாமற் போகா. இவ்வாறு பாவிக்கப்படுவது ஏனைய வகுப்பார்களுக்கெல்லாம் ஒருவாறு பொருத்தப்படினும் ஓ! நாட்டுக்கோட்டை நகரத்து எம் அருமைச் சகோதரர்களே! நம்முடைய நிகழ்கால நாகரீகமுன்னேற்றத்திற்கும், பெரும்பான்மையும் நம்முடைய வகுப்பாரைக் கருணையுடையவர்களென ஏனைய பற்பல பகுதியார்களும் புகழ்ந்துகொண்டாடப்படுகிற புகழ்நிலையத்திற்கும், பொருத்தமுடையனவாக யிராவாகலின் தற்காலவரை காணப்படும் ஏற்றந்தாழ்வை அடியோடே வேரறக் களைதல்வேண்டும். மக்கட்செல்வத்தை ஆண்மக்களிடத்தும், பெண்மக்களிடத்தும் ஒரே தன்மையதாகப் பாவித்தல் வேண்டும். எவ்வகைப்பட்ட சுதந்தரச் சட்டங்களையும் சமமாகவே நிறுவுதல்வேண்டும்.

3. சகோதரர்களே! சிறுபான்மை நம்முடைய வகுப்பாருள் 7000, 10000, 20000 என ஏதோ சில தொகைகளை வாங்கிக்கொண்டு குழந்தைகளைக்கொடுத்துவிடும் வழக்கம் ஒன்றேற்பட்டுவருகிறதாகத்தெரிகிறது. இவ்வழக்கம் நம் நகரத்தாருள் பெரும்பான்மையோர்களுக்குச் சம்மதிதானா? இதனைப்பற்றிக் கவனித்தீர்களா? பொதுவாக ஒரு பெரிதான மீட்டிங்கு கூடிப் பகர்ந்துபேசித் தெளிந்தீர்களா? இப்படிக் கொடுக்குந்தன்மையைப்பற்றிக் கவனிக்கப்புகின் நெஞ்சமானது மிகவும் சஞ்சலப்படுகிறது. கொடுக்கப்படுங் குழந்தையின் பாரத்தளவு வயிரக்கட்டி, அல்லது நவரத்தினங்களையே பெறினும் அங்ஙனம் பெறும் பெரும்பொருளினும், அக்குழந்தை உயர்ந்ததாமென நினைக்கிறீர்களா? அல்லது தாழ்ந்ததாமென நினைக்கிறீர்களா?

"புன்மர நேளிப்புழுப்புள் விலங்கேனும்
பன்மையதுயர்செயும் பவங்கடப்பியே
வன்மைகோணிலமிசை மக்களாகுத
னன்மைகோளுயிர்க்கலாலரிது நந்தியே" என்னும்

செய்யுளின் கருத்தையுமுணருங்கள். பெரும்பொருள் கொடுத்து வாங்குமவர்களுக்கு, இக்குழந்தை மீதுற்ற ஆவலையும், அருமையன்புகளையும் பற்றிக் கவனித்தீர்களா? பூர்வபுண்ய வசத்தினாலே அக்குழந்தையைப் பெற்ற நுங்களுக்கேனோ அவ்வாவல், அருமையன்புகள் எல்லாம் இல்லாமற் போய்விட்டன, அப்படிக் கொடுத்தற்குத் தாய்தந்தையர்களாய நுங்களின் மனமெப்படி சகிக்கிறது? அப்படிக் கொடுத்ததின் பின்னும் எப்படி சகித்துக்கொண்டிருக்கிறது? குழந்தைகளின்மீது பெற்றவர்களுக்கிருக்கும் பாசப்பற்றுக்களை கவனிக்கப்புகின்

"எமனுக்கு ஏழுபிள்ளை கோடுப்பினும்
உற்றாருக்கு ஒரு பிள்ளை கோடுக்க மனம் வாரா"

தெனப் பழமொழி ஏற்பட்டிருக்கிறதே. ஆய்ந்துநோக்குமிடத்து நெருங்கிய பந்துக்களாயுள்ளவர்களுக்கு குழந்தைகள் இல்லாதிருப்பின் அவர்களும் தங்களின் குழந்தையாகப் பாவித்து, வேண்டும் பாசப்பற்றுகளைச் செலுத்திக்கொள்ளட்டுமே, கிரையமாக ஒரு தொகை கொடுத்து வாங்குந் தன்மைபற்றி சொக்காரர் அல்லது நாதிக்காரர்களில்லை என்பது தெற்றென விளங்குகிறதன்றோ! மேலும் கிரையத்துக்காக ஒரு குழந்தையைக் கொடுப்பது எத்துணைதூரம் கொடுப்பவர்களின் தாழ்மையைக் காட்டுகிறது. அக்குழந்தையும், மனிதத்தன்மைகளை எல்லாமொருங்கே எய்து, தக்கவறிவாளியான பெரியமனிதனாயகாலத்து நம்முடைய தாய்தந்தையர்கள் நமக்காக ஏதோ சில பொருட்டொகைகளை வாங்கிக்கொண்டன்றோ நம்மை இவர்களுக்குக்கொடுத்துவிட்டார்களாம், நம்முடைய தாய்தந்தையர்கள் இவர்களில்லையாமே, எனக் கவனிக்கநேர்ந்த ஒருபொழுது அவர்களின் நெஞ்சம் எத்துணைதூரம் கவனிக்குமென்பதையும் உணருங்கள். இப்படிக்கொடுக்குந் தன்மைபற்றி உண்டாங்கேவலத்திற்கோர் அளவுசங்கையில்லையே அதனைப்பற்றி எல்லாமிங்கு மிகவும்விசாலமாகவரைதல்வேண்டுமாயின் எடுத்துக்கொண்ட விஷயம் மிக்க விரிவாமே என்று விடுக்கிறேம். நண்பர்காள்! இவ்வழக்கத்தைப்பற்றி ஒருபெரிதான மீட்டிங்கு ஒன்று கூடி பகர்ந்து பேசித் தெளியுங்கள். பெரும்பான்மையோர்களின் அபிப்பிராயங்களையும் கவனியுங்கள். பெரும்பான்மை இவ்வழக்கத்தைத் தலையெடுக்கவிடாமற் களைவதுதான் உத்தமமெனப்படும். கவனியுங்கள். நம்முடைய வகுப்

பின் பொதுவுக்காக உழையுங்கள். பொதுவுக்காக வேண்டும் நன்மைகளைச் செய்வதே மேலான ஆண்மக்களின் கடனெனத் தெளியுங்கள்.

4. நண்பர்காள்! "போனநாட்செய்தவவை மண்ணிற் பிறந்தார்க்கு வைத்தபொருளென்றார்" ஔவையார் இன்னும் மற்றொருபக்கத்தில் "வெறும்பானை பொங்குமோ மேல்" என்றுங் கூறுகிறார். ஆகவே இதனை ஆய்ந்துநோக்குமிடத்து இந்த ஜென்மத்தில் யாமடைய விரும்பும் எவ்வகைப்பட்ட ஒவ்வொரு செல்வப்பேறுகளுக்கும், உரிய அருந்தவச்செயல்களும், புண்யப் பயன்களும், முந்திய ஜென்மத்தேயமைந்து கிடத்தல் வேண்டுமென்பதாயிற்று. முந்திய ஜென்மத்தில் யாம் செய்த தீவினைப் பயத்தால் இஜ்ஜென்மத்தில் நமக்கு மக்கட்பேறில்லை என எல்லாம் வல்ல இறைவன் கட்டளையிட்டிருப்பானேயானால் நாம் கிரையங்கொடுத்து வாங்கப்படும் மக்களும், மக்களாவார்களோ? இம்மக்கள் எதற்கு பிரயோசனப்படுவார்கள்? இம்மக்களாலே செய்யப்படும் எந்தக்கருமமாதிகளுக்குமுரிய பயன்களை எந்த பிதிரர்கள், அல்லது எந்தத்தேவர்கள் ஒப்புக்கொள்வார்கள். நம்முடைய மனையாளும் நாமுங்கூடி உணர்வு முதலாய தத்துவக்கட்டுகளெல்லாம், நெகிழ்ந்தோடுமாறு, ஏகோபித்து பேரானந்தத்தையடைந்த முயக்கத்தானே நாம் பெற்ற மக்களாவார்களோ இம் மா மக்கள்

"மக்கண்மெய்தீண்டலுடற்கின்பம்
மற்றவர் சொற்கேட்டலின்பஞ் செவிக்கு"

எனவும் இம்மாமக்களைத்தான் சிறப்பித்துக் கூறினர் போலும்! இங்ஙனங்கூறப்படுகிற மாமக்களையன்றென்பது தெற்றென விளங்குமாறே அடுத்தாற்போலும்

"குழலினிது யாழினிதென்பதம்மக்கள்
மழலைச்சொற்கேளாதவர்"

என தம்மக்களென வியந்தோதியவாற்றையுமுணர்க. இச்சென்மத்திலே மக்கட்பேறில்லாத ஒவ்வொரு நண்பர்களும் இனிவருஞ் ஜென்மத்திலேயாவது மக்கட்பேறுண்டாகுமாறு வேண்டுந் தருமத்துறைகளிலே நுழையுங்கள். நம்மோடும் பிறந்த நம் சகோதரன், சகோதரிமக்களையெனினுங் கிரையங்கொடுத்து வாங்குந்தன்மையை ஒழித்துவிடுங்கள். அரும்பாடுபட்டு நாம் தேடிய சொத்துக்களை எல்லாம் மற்றொருவரின் மக்கள் பேருக்கெழுதிவையாதேயுங்கள். இதற்காக நெஞ்சத்தை பதற

29 MAR 1915
MADRAS.

உ
திருச்சிற்றம்பலம்.

Nattukcottai Vaiciyam.

நாட்டுக்கோட்டை வைசியம்.

மக்களின் மாட்சியும், அவர்களுக்காக அவ்வவர்களின் தாய்தந்தையர்கள் செய்யவேண்டும் பல கடமைகளும்.

முன் 13-வது புத்தகம் 228-வது பக்கத் தொடர்ச்சி.

தொகுதி க. } ஆநந்தவருஷ மாசிமீ } பகுதி கச.

விடாதேயுங்கள். நம்முடைய பலவகைப்பட்ட செல்வங்களையும் வைத்தாண்டனுபவித்து களித்தற்காக நம்முடைய பரசிவப்பெருமான் ஒரு குழந்தையை நமக்குக்கொடுத்தாரில்லையே யெனக் கவலைப்படாதேயுங்கள். "எல்லாமீசன் செயல்" "உள்ளது உள்ளது போனடக்கு" மெனத் தைரியமாகச் சும்மாவிருங்கள். இருக்குஞ் சொத்துக்களை யெல்லாம் தருமவைத்தியசாலைகளுக்காகவும், குழந்தைப் பண்ணைகளுக்காகவும், கல்விச்சாலைகளுக்காகவும், திருப்பணிடிப்பாற்று மெண்டுகள் முதலியத் தருமக் கைங்கரியங்களுக்காகவும் எழுதிவையுங்கள். அல்லது நாதிக்காரர்கள் எடுத்துக்கொள்ளட்டும். ஆகவே நண்பர்காள்! குழந்தைகளைக் கிரையத்திற்கு கொடுக்கும் வழக்கத்தையும், வாங்கும் வழக்கத்தையும், நம்முடைய நாடுநகரங்களிலே இல்லாமற் செய்யுங்கள்.

5. நண்பர்காள்! ஆண்குழந்தைகளேயாயினும், பெண் குழந்தைகளேயாயினும் ஏற்றத்தாழ்வின்றி மிகவும் சீர்திருத்தமான சுகாதாரநூன் முறைப்படிச் செவ்வையாய் வளர்த்தலும் வேண்டும். புதிய நூன்முறைகளான நடையுடைபாவனை முதலியவைகளிலே பழக்

குதலும் வேண்டும். நம்முடைய மக்களுக்காக நாம் செய்யவேண்டுங் கடமைகள் என்ன, என்ன வென்பதை மிகவும் செவ்வையாய்ச் சிந்தித்தல் வேண்டும். எவ்வகைப்பட்ட கருமமாதிகளுக்கும், பெண் குழந்தைகளும் பயன் படுமென்பதையும் உணர்தல் வேண்டும். அவர்கள் பாற்றற்காலவரையியன்று வருங் கொடுஞ்செயல்களை எல்லாம் பரந்தோடச் செய்தலும் வேண்டும். அவர்களையும் நாம் பெற்றமக்கள் தானென்பதை எற்றானும் மறந்து விடுதல்கூடாது. பெரும்பான்மையும் நம்முடைய வகுப்பார் தங்களின் பிள்ளைகளை வரன்முறையாகக் கல்விச்சாலைகளுக்கனுப்பிக் கற்க செய்யாது எவரேனும் ஒருவரைக் கொண்டு இரண்டொரு ஏடுகளை மட்டும் கற்பிக்கச்செய்து அங்ஙனம் ஒரைந்தாறாண்டுகள் கூடப் பூர்த்தியாவதற்குள் அயனகரங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். ஒருவாறு அதுவும் நம்முடைய வியாபார முறைகளுக்கு தற்காலவரை நன்மையாகவே இருப்பினும், இனிவருங்காலங்களுக்கு அஃது நன்மையைத்தாராவாம். ஆய்ந்து நோக்குங்கள். பற்பல பாஷைகளானும், பற்பல வியவகாரங்களினுந் தேர்ச்சி யடைந்தாலே பெரிது பெரிதான எந்த வர்த்தக விஷயங்களைப்பற்றியே எனினும், ஒரு பெரிய சபையின் நடுவாக நின்று பகர்ந்து பேசவும், அவைகளைப்பற்றி பெரிது பெரிதான பல பேப்பர்களுக்கு வரைந்தனுப்பவும், எந்தப்பகுதியார்களோடே எனினும் வேண்டியவாறு சீர்திருத்தமாக வேண்டும் பல வொப்பந்தகளைப் பூர்த்திசெய்து கொள்ளவும், தகுந்த வல்லுநர்களாவார்கள் என்பதையும் நன்குணர்தல் வேண்டும். பெரும்பான்மையும் பிள்ளைகளை மூன்று நான்கு வயது முதற்கொண்டே பாடசாலைக்கு அனுப்புதலும் வேண்டும். சிறு பிராயத்திலே நாம் அவர்களை எவ்வாறு பழக்கிக்கொண்டு வருகிறோமோ அவ்வாறு தான் பின்னர் அப்பிள்ளைகள் முழுமனிதர்களான காலத்தும் முன்வருவனவாயிருக்கும் ஆகலின் அவர்களை குழந்தைகளாயுள்ள இரண்டு மூன்று வயது முதற்கொண்டே மிகச்சீர்திருத்தமானவும், புதிய நாகரீகங்களுக்கு நேரொப்புவனவானவும், ஆகிய நல்ல பழக்க வழக்கங்களிலே பழக்கிக் கொணர்தலும் வேண்டும். நம்முடைய வகுப்பு ஒவ்வொரு சகோதரர்களும் குழந்தைகள் பிறந்த அந்த நிமிஷம் முதற்கொண்டே இப்பிள்ளைக்குப் பின்னர் எந்தத் தொழிலைக் கற்பிக்கலாமெனச் சிந்தித்தலும் வேண்டும். எம்மட்டுச் செல்வங்களிருப்பினும் அதைக்கொண்டு மாத்

திரம் பிழைப்பது கௌரவமல்ல உலகத்தில் மற்றவர்களும்மதிக்க வேண்டுமானல் தற்காலவரை நம்மவர்கள் செய்து வருகிற வர்த்தகத்தொழில்களோடும் ஏனைய பற்பல தொழில்களின் மீதும் பிரவேசித்துப் பணஞ்சம்பாதித்துப் பெரும் புகழ்நாட்டி வாழ்தல் வேண்டுவதும் ஆவசியகமேயாம். ஆகலின் எவ்விதத்தானும் நம்முடைய ஆண் மக்களும், பெண் மக்களும் எவ்வகைத்தானும் உயர்தரப்பட்ட எந்தத்தொழில்களையும், அதற்காக வேண்டும் உயர்தரமான எந்த வியவகாரங்களையும் தக்க முழுவலிமனத்தோடுங்கூடி கொண்டு நடத்துவதற்கு வேண்டும் ஓர் முதற் கருவியானது கல்வியேயாமன்றோ ஆகலின் நண்பர்காள்! நம் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டுமாற்றிலே மிகவும் எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும்.

6. பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதில் பெரும்பான்மையும் தாயே சிறந்தவளாக இருத்தல் வேண்டும். பாடசாலை விட்டுவீடு வந்த பொழுதும், விடு முறை நாட்களினும், கண்டபொழுதெல்லாம் தாய் தந்தையர்கள் படிப்பித்தல் கூடாது. ஏதோ ஒரு மணிக்கூறு அல்லது இரண்டு மணிக்கூறுகள் மாத்திரமே அவர்களை அதிகமாய்த் தொந்தரவு படுத்தாமல் படங்கள் மூலமாயும், பொம்மைகள் மூலமாயும் பொருள்களைக் காட்டி மிகவுந்தெளியக்கூறி அவர்களுக்குக் கற்பிப்பதே அவர்களின் மனதிற்கு இன்பமாகப் பதியும். அதிசீக்கிரமாய் வித்தை கற்பிக்கவேண்டுமென்று பிள்ளைகளை ஓய்வொழிவில்லாமல் படிக்கச் செய்தல் கூடாது. ஓரே படியாய் வளர வேண்டுமென்று பின்னும் அதிக மாயாகாரத்தைக் கூரியுண்பிப்பது போலாகும். ஆகலின் அவர்கள் பரபர வென்றுபரீட்சை மேற்பரீட்சையாய்த் துரிதகாலத்திலேயே தேர்ந்து வந்து விடவேண்டுமென்று தாய்தந்தையர்கள் கவலைப்பட்டு பேராசை பாராட்டத்தகாது. அவர்களுடைய சரீர சௌக்கியத்தையும், பலத்தையும், முக்கியமாய்க் கவனித்துக் காப்பாற்றி வித்தை பயிற்றுவது தான் உத்தமமானது. அதித்துரிதமாய் எல்லாங் கற்றுக்கொள்ளும் பிள்ளைகள் சாதாரணமாய் பெரும்பான்மை பலவீனமுள்ளவர்களாகவே தானிருப்பார்கள். ஆகலின் அவர்களைப்பற்றி மிகவும் சாக்கிரதையாயிருத்தல் வேண்டுவதும் ஆவசியகமே. பிள்ளைகளுக்குச் சரீரத்தில் எவ்வளவு சிறிது நோயாயிருப்பினும் அவர்களைப் பலவந்தப்படுத்திப் படிப்பித்தல் கூடாது. அன்றியும் அவர்கள் படிக்கும் பொழுதாவது, மற்

றெந்த வேலைகள் செய்யும் பொழுதாவது நெடுநேரங்குனிந்து கொண்டிருப்பது கூடாது. அப்படிக் குனிந்து கொண்டிருப்பதனால் சுவாச கோசங்களுக்குப் பிணியுபாதியுண்டாகும். ஓர் சமயம் இருதயத்திற்கு கூடத்தீங்குண்டாகும்.

7. பெண்பிள்ளைகளுக்கும், ஆண்பிள்ளைகளுக்கும் சங்கீதம் கற்பிப்பது மிகவும் நலமானது. சங்கீதத்தினால் நிகழும் ஆநந்தம் இத்தகையதெனக்கூற எவராலும் முடியாது. எவ்விதத் துன்பங்கள் நேரிட்டபோதிலும் சங்கீத சவுக்கியத்தினால் மனத்துக்கு மிகச் செவ்வையான அமைதியுண்டாகும். விசாரங்களெல்லாந் தொலைந்து போய் விடும். அன்றியும் வாய்ப்பாட்டினால் மார்பு விசாலமடைந்து சுவாச கோசங்கள் உறுதிப்படும். குரலுக்கும் இனிமை யுண்டாகும். உச்சரிப்புகளும் திருத்தமடையும். ஆகலின் சிறுகவோ பெருகவோ சங்கீதப்பயிர்ச்சி யனைவர்க்கும் ஆவசியகமானது. பெண்பிள்ளைகளுக்குக் கல்வி பயிற்றுவது எவ்வளவு முக்கியமோ? வீட்டு வேலைகளைக் கற்பிப்பதும் அவ்வளவு முக்கியமே ஆகும். எவ்வளவு செல்வமுள்ளவர்கள் பிள்ளைகளாயினும் சமயல் செய்து வீடு ஒக்கப்பண்ணுவது முதலான வீட்டு வேலைகளும் கற்றிருக்கவேண்டியது. அப்படிக் கற்றிருந்தாலே அவர்களினால் புருஷர்கள் சௌக்கியமடையக்கூடும். அவர்களுக்கும் சரீர சௌக்கியம் அமைந்திருக்கும். வேலை வித்துக்களொன்று மில்லாமல், அழகிகளாய் வீண்காலம் கழிக்கும் பெண்கள் சோம்பேறித்தனம் முற்றிக்கணவர்களுக்கும், பிள்ளைகளுக்கும் ஏற்றவாறு சௌக்கியத்தை உண்டாக்க மாட்டார்கள். தாங்களும் சுகிக்கவேலார்கள். பெண்பிள்ளைகளுக்கு வித்தை பயிற்றுவது ஆவசியகமே ஆயினும், நன்னடக்கையுள்ள உபாத்தியாயிகள் வித்தை சொல்லிக் கொடுக்கும் பாடசாலைகளுக்கு அவர்களை அனுப்ப வேண்டுமே அன்றிப் புருஷர்கள் உபாத்தியாயிகளாயிருக்கும் பாலிகா பாடசாலைகளுக்கு அனுப்புதல் அவ்வளவு உசிதமானதல்ல. உபாத்தியாயர்களாயிருக்கும் புருஷர்கள் எவ்வளவு உசிதவொழுக்முள்ளவர்களாயிருப்பினுமவர்கள் ஓதுவிக்கும் வித்தையினால் உசிதமான பெண்ணியற்கைகள் குழந்தைகளுக்குச் செவ்வையாய்ப் பிடிபடமாட்டாது. அப்பொழுது எவ்வளவு வித்தை வந்திருந்தும் என்ன பிரயோசனம் ஆகலின் கவனித்து உபாத்தியாயிகள் கற்பிக்கும் பாடசாலைகளுக்கே அனுப்புதலும் வேண்டும்.

8. குழந்தைகளை மிகவும் செல்வமாய் வளர்த்தல் கூடாது. அப்படி வளர்க்கும் பக்ஷத்தில் அவர்கள் பெரியவர்களான காலத்து ஏதோ ஒரு சமயம் சில கட்ட நட்டங்கள் ஏற்படின் அதனைப் பொறுக்கும் சக்தியற்றிருப்பார்கள். மேலும் அவர்களை அதிகமாய்ச் சீராட்டுதலுங் கூடாது. சீராட்டத்தினால் பிள்ளைகள் பயபக்தி கெட்டவர்களாய்ப் படிப் பொட்டாமல் தக்க பருவகாலத்தில் உப்புக் கல்லுக்கும் உதவாக்கரையாய் விடுவார்கள். ஆகலின் மனம் போனபடி வளரவிடாமல் பிள்ளைகளைத் தகுந்த அடக்க வணக்கமாய் பல நல்லொழுக்கங் கட்குட் படுத்தியே கொணர்தல் வேண்டும். சிறு பிராயத்திலேயே பிள்ளைகளுக்கு விநயபயங்களையும், கீழ்ப்படிதலையும், மரியாதையையுங் கற்பிக்க வேண்டியது. பால்யத்தில் நாட்டிக் கொள்ளும். அப்பியாசங்கள் தவறின்றி விருத்தியடையுமாகலின், நற்குணங்கள் பிடிபடுமாறும், துர்குணங்கள் தொலைந்தோடுமாறும் தாய்தந்தையர்கள் தகுந்த சாக்கிரதை எடுத்துக்கொள்ள வேண்டும். தாய் தந்தையர்களிடத்து பயபக்திகள் காட்டி அவர்கள் சொல்லிய வண்ணம் பிள்ளைகள் நடந்து கொள்வது மிகவும் ஆவசியகமானது. ஆகலின் அவர்களிடத்து எவ்வளவு அன்பு நிறைந்திருந்த போதிலும், பயபக்தியுடன் அவர்கள் நடக்குமாறு மிகச் செவ்வையாயொழுகுதலும் வேண்டும். மேலும் பிள்ளைகள் விஷயமாய் எடுத்துக்கொள்ளுஞ் சாக்கிரதைகளில் தாய் தந்தையர்களிருவரும், ஒருமைப் பட்டிருத்தல் வேண்டும். ஒருவர் செய்யும் நல்ல காரியத்தை அதற்குத் துணையாக நிற்க வேண்டும் மற்றையொருவர் என்றைக்குங் கெடுப்பது கூடாது. "கெடுப்ப தொழி" என்ற நம்பாட்டியின் திருவாக்கை மறத்தலுங் கூடாது. தாய் குற்றங் கூறுகையில் தந்தை குறுக்குப்படுவதும், தந்தை குற்றங்கண்ட பொழுது தாய் தடுக்க வருவதும் அந்தோ! அக்குழந்தைகளைக் கெடுக்கு மார்க்கமேயாகும். தாய் தந்தையர்களாயுள்ளார் எவரும் இவ்விஷயத்தில் மிக எச்சரிக்கையாயிருத்தல் வேண்டும். அன்றியும் பிள்ளைகளுக்கு அசாத்தியமான வேலைகளையாவது, கீழ்ப்படிய முடியாத கட்டளைகளையாவது ஏற்படுத்தி அவ்வண்ணம் அவர்கள் செய்யாவிடின் கீழ்படிவில்லாமையாகப் பாவித்தல் கூடாது. பிள்ளைகளிடத்துத் தாய் தந்தையர்கள் மிகுதியும் அன்பு கூர்ந்திருத்தல் வேண்டும். "அன்பே பிள்ளை

களுக்கு அமிழ்தம்" அன்பில்லாவிடின் அவர்கள் செவ்வையாய் வளர மாட்டார்கள். குற்றங்கள் செய்த பொழுது அன்போடு கூடியே அவர்களுக்கு நல்லொழுக்கத்தைப் போதித்தல் வேண்டும். கோபித்துக் கொண்ட பொழுதும், அடம் பிடித்த பொழுதும் அவர்களை அன்புடனேயே மீட்க வேண்டும். அன்பில்லாவிடின் பிள்ளைகளுடைய மனத்துக்கு குதூகலமிருக்க மாட்டாது. இவ்வுலகத்தில் பிள்ளைகளுக்கு அன்பே எல்லாவற்றிலும் அதிகமான சவுக்கியம். முக்கியமாய்த் தாயினுடைய அன்புக்குச் சமானம் எதுவுமே இல்லை. தாயின் அன்பறியாத பிள்ளைகள் ஐயோ' பாவம் அவர்களை நமது கருணாகரக் கடவுளே கண் திறந்து கனிந்த மனத்துடன் இரங்கிக் காப்பாற்றுதல் வேண்டும்.

9. எத்தனை வேலைகளிருப்பினும் தாய் தந்தையர்கள் பிரதி தினமும் கொஞ்சக் காலத்தைத் தங்களின் பிள்ளைகள் விஷயமாய்ச் செலுத்துதல் வேண்டும். அவ்வாறு செய்தாலே அவர்களின் புத்தி யுக்திகளையும், இயற்கைகளையும் அறிந்து கொள்வதற்கும், அவர்களைச் சன் மார்க்கத்தில் நிறுத்துவதற்கும் அநுகூல மேற்படும். மேலும் தாய் தந்தையர்கள் எவ்வளவு பெரியவர்களான போதிலும் தங்களுடைய குழந்தைகளுடன் சற்று நேரம் விளையாடிக் கொள்வது தங்களின் பெரிய மனிதத் தன்மைக்குக் குறைவாக நினைத்தல் கூடாது குழந்தைகளின் விளையாட்டுக்களினும், விஷமங்களினும், பிரவேசித்த பொழுது தங்களின் முதுகு மேலும், தோள்கள் மேலும், கழுத்து மேலும், கால்கள் மேலும், ஏறி ததுவைத்துப் புரளும் பொழுதும், கட்டியணைத்து முத்தும் பொழுதும், தங்களுக்கும் பிள்ளைகளுக்கும் கூட. அடடா! நிகழும் பேரானந்தமான என்ன கொண்டாட்டம், என்ன அன்பு என்ன பரவசம் மாயாமயக்கப்போகத்திருவிளையாட்டு ஆ! ஆ! எத்தனை வன்மையுடையது. அதனைப் பற்றியாவரே எடுத்துக் கூறும் வன்மையுடையார் அப்பெரியவோர் பேரானந்தமான பேரின்பத்தை அனுபவியாத தாய் தந்தையர்களும் அக்குழந்தைகளின் தாய் தந்தையர்களாவரோ? அவர்கள் பிள்ளைப் பேறு அற்ற பெரும்பாவிகளேயாவர். ஆய்ந்து நேர்க்குமிடத்துப் பெரும்பான்மையும் தாய்மார்கள் இவ்வின்பத்தை அனுபவித்து வருகிறார்களென்பது

" நிலா நிலா வா! வா! நில்லாமல் ஓடிவா!

மலை மேலே ஏறிவா! மல்லிகைப்பூக் கொண்டுவா!
நடு வீட்டில் வையே நல்லதுதி செய்யே
வெள்ளிக் கிண்ணத்தில் பால் சோறு
அள்ளி எந்தன் அப்பன் வாயில்
கொஞ்சிக் கொஞ்சி ஊட்டு
குழந்தைக்குச் சிரிப்புக் காட்டு"

" காக்கா கண்ணுக்கு மை கொண்டுவா!
குருவி கொண்டைக்கு பூ கொண்டுவா!
கொக்கு குழந்தைக்குத் தேன் கொண்டுவா!
கிளியே கிண்ணத்தில் பால் கொண்டுவா!
அப்பா முன்னே வையுங்கள்
அழாதே என்று சொல்லுங்கள்"

" சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு
தாமரைப்பூவே சாய்ந்தாடு
குத்து விளக்கே சாய்ந்தாடு
கோயிற் புறுவே சாய்ந்தாடு
பச்சைக் கிளியே சாய்ந்தாடு
பவழக்கொடியே சாய்ந்தாடு
சோலைக் குயிலே சாய்ந்தாடு
ஸுந்தர மயிலே சாய்ந்தாடு
கண்ணே மணியே சாய்ந்தாடு
கற்பகக் கொடியே சாய்ந்தாடு
கட்டிக் கரும்பே சாய்ந்தாடு
கனியே பாலே சாய்ந்தாடு"

" கைவீசம்மா கைவீசு
கடைக்குப் போகலாம் கைவீசு
மிட்டாய் வாங்கலாம் கைவீசு
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு
பழங்கள் வாங்கலாம் கைவீசு

பரிந்து புசிக்கலாம் கைவீசு
சோக்காய் வாங்கலாம் கைவீசு
ஸோகுஸாய் போடலாம் கைவீசு
கோயிலுக்கு போகலாம் கைவீசு
கும்பிட்டு வரலாம் கைவீசு
தேரைப் பார்க்கலாம் கைவீசு
திரும்பி வரலாம் கைவீசு" என்று நமது செந்தமிழ் நாட்டுப் பெண்மக்கள் பெரும்பாலோர் நாட்டுப் பழக்கமான பலவின்மொழிகளாலே நாவாரப்பாடியும் ஆநந்தத் திருநடமாடியும் தங்களின் குழந்தைகளோடு கொஞ்சி கொஞ்சிப் பாலூட்டியும், சோறூட்டியும், பண்டங்கள் கொடுத்தும், படிப்பித்தும், ஆதரித்தும் வளர்த்து வருதலைப் பெரும்பான்மை எல்லாச் சகோதரர்களும் கண்டிருக்கலாம். நிற்க சிற்சில தந்தைமார்களும் இவ்வின்பத்தை அனுபவித்தே வருகிறார்கள். என்றாலும் பெரும்பாலோர் பிள்ளைகளின் மாட்சி இற்றென்பதை சற்றுங் கவனித்தல் கூடக்கிடையாது. ஊரொப்பனைக்காகப் பிள்ளைகளிருந்தாற் போது மென்றே திரிகிறார்கள். நண்பர்காள்! சற்றூன்றி நோக்கிக் கவனிக்கப்புகின் இம்மக்களின் மாட்சி மிகச் சிறப்புற்றனவேயாம். பானுகோபன் இறந்தகாலத்தில்

"மாகோற்ற மைந்தன் மடிந்தானெனக் கேட்டு
மேகிற்றிலையா லிருக்கின்ற தின்னுமுயிர்
வேகுற்ற துள்ள மிகுதுயரம் வந்தவழி
சாகுற்றதோர் வரமும் சங்கரன் பாற்பெற்றிலனே" என்றும்,

"வெற்றியுளமதலை விந்தால் விளியாமன்
மற்றுமெனதுயிரும் வைகும் வலிதாகச்
செற்றிடலுமாகாதேன் செய்கேனழியாமற்
பெற்றவரமும் பிழையாய் முடிந்ததுவே".
என்றும், சூரபத்மன் புலம்பியதும்;

"இல்லையென்றுரைக்கல் ஆற்றான் எங்கினன் முனிவன் நின்றான்
நல்லவன் முகமே நம்பி நடந்திலன் என்னும் மாற்றம் சொல்லலும்
அரசன் சோர்ந்தான் துயர் உறு முனிவன் நான் இவ் அல்லல்
காண்கில்லேன் என்னா ஆங்கு நின்ற கலப்போனான்"

மக்களின் மாட்சியும், அவர்களுக்காக அவ்வவர்களின் தாய்தந்தையர்கள் செய்யவேண்டும் பல கடமைகளும்.

"நாயகன் பின்னுந்தன் தேர்பாகனை நோக்கி நம்பி
சேயனோ வணியனோ என்றுரைத்தலும் அனையான் செய்ய
வேயுயர் கானந்தானும் தம்பியும் மிதிலைப்பொன்னும்
போயினன் என்றான் என்ற போழ்தத்தேயாவி போனான்"

என்றபடி இராமபிரானும், சீதையம்பிராட்டியும், இலக்குமணப் பெருமாளும் வனத்துக்குப் போயினன் என்று கேட்ட தசரதனுக்கு ஆவியொழிந்ததுமே போதிய சான்றாமன்றோ. இத்தகைய மாட்சியானது நாம் கிரையங்கொடுத்துப் பெற்றுக்கொண்ட மக்களுக்கு எங்கேனும் ஏற்பட்டதென்று யாவரேனும் ஒருவர் சொல்லக் கேள்விப்பட்டதாவதுண்டோ. சகோதரர்களே ஏனைய வொருவருக்குப் பிறந்தவோர் குழந்தையை நாம் பெற்ற குழந்தையாகப் பாவிக்குந் தன்மையைப் பற்றி அடியேமுடைய மனமானது மிகவும் வருந்துகின்றது. அதனைப் பற்றிய பல விஷயங்களையும் வெளிப்படையாக வரைதற்கும் அடியேமுடைய மனம் மிகவும் நாணுகின்றது. இன்னும் ஆய்ந்து நோக்குமிடத்து ஏனைய வகுப்பார்களிடத்து இவ்வழக்கம் பெரும்பான்மையாகக் காணப்படவுமில்லையே. இன்னும் "கடந்த ஞானியும் மறப்பரோ மக்கண் மேற்காதல்" எனச் சிறப்பித்ததும் தாம் பெற்ற மக்களையேயன்றோ. எத்துணைதான் கோடி கோடியாகக் கிரையங் கொடுத்து வேண்டினும் நாம் பெற்ற மக்களாக மாட்டார்களென்பதை நன்றாக உணர்தல் வேண்டும். தாம் பெற்ற மக்கண்மீதேற்படும் பாசப் பற்றுக்களைப் போன்று நாம் கிரையங் கொடுத்து வேண்டும் மக்களின் மீது எந்த வாற்றானும் எவ்விதக் காரணங்களைக் கொண்டும் ஏற்படாதென்பதையும் நாம் நன்றாகத் தெரிந்து கொண்டிருத்தலும் வேண்டும். எந்த வாற்றானுங் குழந்தைகளைக் கிரையத்திற்கு விற்கும் வழக்கமும், கிரையத்திற்கு வேண்டும் வழக்கமும் நாளுக்கு நாள் வரவரத் தலையெடுக்காதவண்ணம் நம் வகுப்பைச் சார்ந்த எந்தச் சகோதரர்களுக்கும் மக்கள் செல்வத்தையும், பொருள் செல்வத்தையும் எல்லாம் வல்ல இறைவன் கொடுத்தருளுவானாக. நிற்க பிள்ளைகள் சொல்லிய வண்ணம் சரியாய் நடந்து கொள்ளும் பொழுது தின் பண்டங்களையாவது, துட்டுக்காசுகளையாவது வெகுமானமாகக் கொடுத்தல்கூடாது. அவ்வித வெகு

மானங்கள் கொடுப்பதினால் சொல்லிய வார்த்தைகள் கேளாதிருப்பதற்கு அவர்களுக்கு இன்னுங் கொஞ்சந் தூண்டுகோலாய்விடும். குழந்தைகள் நல்ல காரியங்களைச் செய்த பொழுது அவர்களைப் புன் சிரிப்புடன் நோக்கி மெச்சிக்கொண்டு சந்தோஷமடைவதே அவர்களுக்குப் பெரிய வெகுமானம். அதனாற் பிள்ளைகளுக்கு ஆநந்தம் பெருகுவது போல் வேறெதனாலும் உண்டாகமாட்டாது. தாய் தந்தையர்களின் புகழ் மொழிகள் பிள்ளைகளுக்கு அத்தியந்தமகிழ்வாம். நல்ல வேலைகளைச் செய்வதற்கு அவை தூண்டுவது போல மற்றெதொன்றுஞ் செய்யமாட்டாது. புகழத்தக்க வேலைகளைச் செய்யும் பொழுது பிள்ளைகளை ஓயாமற்றுதிப்பதுங் கூடாது. பிள்ளைகள் சேட்டைகள் செய்யும் பொழுதும், சொன்ன வார்த்தைகளைக் கேளாத பொழுதும், பூச்சாண்டிக்குப் போட்டு விடுவேனென்றும், பூச்சாண்டி வருகிறானென்றும், பைக்குள் போட்டுக் கொண்டு போவானென்றும், இன்னும் இவை போன்ற பலவிதப் பட்ட பயங்கர வார்த்தைகளினால் அவர்களைப் பயம் உறுத்துவது மிகவும் அஃது கூடாத வொருகாரியமே ஆம். அப்படிச் செய்வதினால் அவர்களுக்கு வாலிபத்திலேயே கோழைத்தனம்பிடிப்பட்டுப்பெரியவர்களான பொழுதும் தைரியக்குணம் குறைவாய் விடும். அன்றியும் அவ்விதப் பயத்தினால் ஒரு வேளை அவர்களுடைய சரீரத்துக்குக் கூடத்தீங்கு நேரிடும். இராக்காலங்களில் சொப்பனத்தில் பிதற்றிக் கொண்டு தூக்கத்திற் பயந்து அழுவதினால் ஆரோக்கியங் குறைந்து போகும். பிள்ளைகளின் மேல் உறத்துச் சினந்துகொணடு கடுமையான வார்த்தைகளைப் பேசக்கூடாது. அவை அவர்களுடைய நெஞ்சுகளில் நாராசங்கள் போலேறி வேதனை செய்யும். அவர்கள் குற்றஞ் செய்யினும், கோபித்துக்கொள்ளினும் குளிர்ந்த சொற்களினால் மனம் இளகப் புத்திகள் சொல்லி ஆதரவு படுத்தல் வேண்டும். வார்த்தைகளாற் கண்டிக்கும் பொழுதுகூட. கோபத்திற்குப் பதிலாய்க் கோபமல்லாத விசனக் குறிகளையே காட்டல் வேண்டும். குற்றஞ் செய்த பொழுது அவர்களை அன்புடன் அழைத்துத் தொடையின் மேலுட்கார வைத்துக்கொண்டு நீ செய்யும் துன்மார்க்கத்தால் எமக்கு மிகவும் விசாரமாயிருக்கிறதென்றும், செவ்வையாய் நடந்து கொண்டால் எவ்வளவோ சந்தோஷமாயிருக்குமென்றும் இளகிய மனத்தோடுங்கூடி இனிமையும் பொருந்தச் சொல்லும் பட்சத்தில் அவர்கள் வெட்கப் பட்டவர்களாய் அன்புடன்

தழுவிக்கொண்டு இனிமேலிப்படித்தவறுசெய்யோமென்று கூறுவார்கள். ஒரு முறை குற்றத்தை ஒப்புக்கொண்டதன்மேல் எப்பொழுதும் அதனையே எடுத்துச் சொல்லிக்காட்டல் கூடாது. மேலும் பத்துக் குற்றத்துக்கு ஒன்றுஞ் செய்யாமலிருந்து பிறகு ஒரு தடவை பக்கென்று எரிந்துவிழுதலுங்கூடாது. குழந்தைகளைப் பொய் சொல்லுமாறு விடுதலுங்கூடாது. அவர்கள் ஏதேனுங் குற்றஞ் செய்த பொழுது அன்புடன் கேட்டு ஒப்புக்கொள்ளுமாறு செய்தலும் வேண்டும். அவர்களைப் பயமுறுத்தியாவது, கோபத்துடனாவது கேட்கும் பட்சத்தில் பொய் பேசுவதற்கும் அதனையே சாதிப்பதற்கும் முகாந்தரம் ஏற்படும். ஏதாவது ஓர் வஸ்துவை உடைத்து விட்டால் அப்பொழுது அவர்கண் மேற் சினந்துகொள்ளாமல் நல்ல வார்த்தைகளுடன் அவர்களின் குற்றத்தை ஒப்புக்கொள்ளச்செய்தல் வேண்டும். அப்படி ஒப்புக்கொண்ட அந்தக்கணமே அவர்களை அன்புடன் தழுவிக் கொடுத்து, முத்தமிட்டு இனிமேல் சாக்கிரதையாயிருத்தல் வேண்டுமெனப் போதித்தல் வேண்டும். பிள்ளைகள் ஒருவரோடொருவர் சண்டை செய்யும் பொழுது அவர்களை நல்ல வார்த்தையுடன் அமைதிப்படுத்தி கலகம் கூடாத காரியம் என்றும், ஒருவரையொருவர் நேசித்தல் வேண்டுமென்றும் சாந்தத்துடன் போதித்தல் வேண்டும். பிள்ளைகளின் சண்டைகளைத் தீர்க்குங் காலத்தில் தாய் தந்தையர்கள் பட்சபாதம் காட்டல் கூடாது. யாவரிடத்தும் சமானமான பிரேமை காட்டி நியாயமாகத் தீர்ப்புச் செய்தல் வேண்டும். ஒரு பிள்ளையிடம் அதிகமாய்ப் பட்சங் காட்டினால் மிகுந்த பிள்ளைகளுக்கு மனம் நொந்து கலகங்கள் அதிகரிக்கும்.

10. தப்பிதங்கள் செய்தபொழுதுங்கூடப் பிள்ளைகளை யடிப்பது நல்ல தல்ல சாத்தியமான வரைக்கும் நல்ல வார்த்தைகளையே பேசி நல்வழிப் படுத்தல் வேண்டும். தலைமேற் கொட்டுவதும், செவிகளை முறுக்குவதும், தொடையைக் கிள்ளுவதும், இவை போல்வன பிறவும், ஆனிகரமேயாம். அடிக்கிறேம் பாரென்று யாதொரு காரணமும் இல்லாமலே குழந்தைகளை என்றைக்கும் அச்சுறுத்துதல் கூடவே கூடாது. தாய் தந்தையர்களைக் கண்டு பிள்ளைகள் கற்றுக் கொள்வார்கள். ஆகலின் அவர்கள் எல்லா விஷயங்களிலும் கிரமமாய் நடந்து கொள்வது மிகவும் ஆவசியகமானது. ஆயிரம் நீதிகளைப் போதிப்பதைக் காட்டிலும், ஒருதரஞ் செய்து காட்டுவது மிக்க நலமுள்ளதாகலின் மெய்

பேசுவது, துப்புரவாயிருப்பது, வைகறையிற் றுயிலொழிப்பது, இவை முதலிய நற்குணங்கள் தாய் தந்தையர்களிடம் இருந்தாலன்றிப் பிள்ளைகளுக்குப் பிடிபடாது. பிள்ளைகளைக் கெட்ட சகவாசஞ்செய்ய விடுதல் கூடாது. எதிராளியைக்கண்டு கற்றுக்கொள்ளு மியற்கை பிள்ளைகளுக்கு அதிகமாயிருக்குமாகலின் இந்த விஷயமாய்த் தாய் தந்தையர்கள் தகுந்த சாக்கிரதை எடுத்துக்கொள்வது மிகவும் ஆவசியகமானது. மேலும் வேலைக்காரர்கண்மூலமாய்ப் பிள்ளைகளுக்கு அநேக துரப்பியாசங்கள் பிடிபடுகின்றனவாகலின்நல்லவர்களை அமர்த்திக்கொள்வது பிரதானமானது. திக்குவாயும், ஒன்றரைக்கண்ணும் உள்ளவர்களை நியமித்துக் கொள்ளல் கூடாது. எப்பொழுதும் அவ்விதமானவர்கள் இடத்திருப்பதினால் குழந்தைகளுக்குக்கூட அவ்விதக்குறைகள் உண்டாகக்கூடும். கொஞ்சம் வயது முதிர்ந்த பின்னர் பெண்பிள்ளைகளையும், ஆண்பிள்ளைகளையுஞ் சேர்ந்து விளையாடிக்கொள்ள விடுதல் கூடாது. மேலும் அவர்களுக்கு அக்கிரமமான பரிசயத்தை இருக்க விடலாகாது.

11. பிள்ளைகளெதிரில் என்றைக்கும் இரகசியங்கள் பேசிக்கொள்ளக்கூடாது. சொல்லிக்கொண்டால் அவர்கள் அவற்றை வெளிப்படுத்துவார்கள். மேலும் பிள்ளைகளெதிரில் வசைவார்த்தைகளை யுச்சரிக்கக்கூடாது. வேலைக்காரர்கள்கூட அப்படிப்பட்ட சொற்களை யுச்சரிக்காத வண்ணம் பார்த்துக்கொள்ள வேண்டியது. பிள்ளைகளுக்குக் கெட்டவார்த்தைகளைச் சொல்லிக்கொடுத்து மற்றவர்களெதிரில் சொல்லச்செய்து கொண்டாடுவது எள்ளளவும் நலமுள்ளதல்ல.

12. பிள்ளைகளுக்கு மோசபுத்தி கற்றுக் கொடுக்கக்கூடாது. மேலும் அவர்களையும் எப்பொழுதும் மோசஞ்செய்யக்கூடாது. அவர்களுடன் சொல்லிய பேச்சை ஒன்றும் தவறக்கூடாது. தவறும் பட்சத்தில் அவர்கள் மறுபடியும் நம்மை நம்பவொண்ணார்கள். ஆதலால் ஏதாவது கொணர்ந்து கொடுப்போமென்றாவது எவ்விடத்திற்காவது அழைத்துக்கொண்டு போவோமென்றாவது மற்றெந்த விஷயத்தைக் குறித்தாயினும் அவர்களுடன் வெறும்வார்த்தைகள் சொல்லக்கூடாது. அவ்விதப்பேச்சுகளை அவர்கள் மறக்கமாட்டார்களாதலால் சொல்லிய வண்ணஞ் செய்வித்தல் முக்கியமானது.

13. உடன் பிறந்தவர்களையாவது, தோழப்பிள்ளைகளையாவது, தொண்டுகளையாவது, ஏனையோர்களையாவது, அடிக்கடியும் வருத்தப்

படுத்திக்கொண்டு சிலகுழந்தைகள் முரட்டுக்குணம் பொருந்தியவர்களாயிருப்பார்கள். இதை ஆவசிகம் ஒழித்துவிடவேண்டியது. இவ்வியற்கை முற்றிவருமாயின் பெரியவர்களான பொழுது தயாளுத்தன மற்று ஈர இரக்கமில்லாதவர்களும், குரூரச்சுபாவ முள்ளவர்களுமாய் அனேகவிதமான இடையூறுகளுக் காளாவார்கள். மேலும் தோழக்குழந்தைகளை அநியாயம்பண்ணி அவர்களுடைய பொருள்களை அக்கிரமமாய் அபகரித்துக்கொள்ள விடக்கூடாது. செட்டு சில்லறைக்கெல்லாம் சினந்து கொள்வது பிள்ளைகளுக்குப் பழக்கப்படுத்தக்கூடாது. இரங்கிய இளநெஞ்சுடனும், பொறுமையுடனும் இத்துர்க்குணத்தைப் போக்கடிக்கவேண்டியது.

14. கேட்டபேச்சுக்கு உத்தரவு கொடுக்காமல் ஊமைகளைப்போல இருக்கும் இயற்கையைப் பிள்ளைகளிடத்துப் பிறப்பிக்கக் கூடாது. குழந்தைகள் விநயங்கெட்டு வாய்க்குவந்தபடி யெல்லாம் வதறுவதும்கூடாது. பெரியவர்களுடைய நடவடிக்கைகளையும் வழிகளையும் அநுசரிப்பதும்தகாது. நய, பய, விநயங்கள் இசைந்தமட்டும் பொருந்தியிருந்து, நாலுபேர் நடுவில் பதமையாய் நடந்துகொள்ளும் பிள்ளைகள், பெற்றவர்களுடைய இருதயக்கட்டுகளைப் பின்னிக்கொண்டு அபரிமிதமான ஆனந்தத்தை யுண்டுபண்ணுவார்கள்.

15. பிள்ளைகள் உலகவறிவு பெறவேண்டியவர்களாதலின் புதுப்பொருள்களைக்கண்டபொழுதும் ஏதேனும் தெரியாதவிஷயம் காணப்பட்டபொழுதும் திரும்பித்திரும்பி வினவிக்கேட்பார்கள். அப்பொழுது அவர்கள்மேல் கசிந்துகொள்ளாமல் அவர்களுக்கு அச்சங்கதிகளைச் செவ்வையாய்த் தெரியப்படுத்தவேண்டியது. அவை அவர்களுக்குச் சொல்லக்கூடாத விஷயங்களாயின், சொல்லத்தகாதென்று தெளிவுபடத் தெரியப்படுத்தவேண்டியது.

16. தங்களுடைய விளையாட்டுச் சாமான்கள், பொம்மைகள் முதலியவற்றைத் தாமேசாக்கிரதையாய்க் காப்பாற்றி ஒழுங்காய் வைத்துக்கொள்ளும்படிப் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்க வேண்டியது. சோம்பல், அசிரத்தை, ஒழுங்குபாடில்லாமல் பொருள்களை வழிக்குக் குறுக்கேபோடல், இவைபோன்ற கெடுவழக்கங்களை மாற்ற

வேண்டியது, கிரமமாய்ப் பொருள்களை யிட்டுக்கொள்ளும் வழக்கம் பெரியவர்களான பிறகு மிகவும் பிரயோசனப்படும்.

17. சிலர் அவிவேகிகள் பிள்ளைகளை வெறுமெனப் போராட்டங் கொடுத்து அழமூட்டுகிறார்கள். அவ்வாறு செய்வது அவர்களுக்கழகென்று சொல்லுவார்கள். ஆயினும் அது மிகவும் கெட்ட வழக்கம். பாவம்! பச்சைப் பிள்ளைகளை அழமூட்டுவது, ஐயோ! அது எவ்வளவு குரூரமானது. அவர்களுடைய அழுகை, அந்தோ! அது எவ்வளவு துக்ககரமானது! அதனால் சந்தோஷமெப்படிப்பிறக்கும்? அதைப் பிள்ளைகளைப் பெற்றவர்கள்யான்றும் காதிலேற்றமனந்தாளார்.

18. சிரிப்பு பிள்ளைகளுக்குப் பரமானந்தகரமானது. நகையினால் அவர்களுடைய மார்பு அகலும், மூச்சுப்பைகள் பலப்படும். இரத்தம் செவ்வையாய் ஓடி இருதயத்தைச் சந்தோஷத்துடன் பொங்கச்செய்யும். சீரணசக்தி அதிகரிக்கும். ஆரோக்கியத்திற்கும் தேகபலத்திற்கும் சிரிப்பு தேவாமிர்தத்திற்கொப்பானது. ஆதலின் பிள்ளைகள் சிரித்துக்கொண்டிருக்கும்பொழுது அவர்கள்மேல் கோபித்துக் கொள்ளக்கூடாது. இவ்வளவேயல்லாமல், கேட்பவர்களுக்குக்கூடப் பிள்ளைகளின் சிரிப்பு விசாரங்களைப் பறக்கடித்துச் சந்தோஷத்தைப் பிறப்பிக்கும். பிள்ளைகளின் சிரிப்பு—ஆகா! அதன் கலகலத்தொனி, அதன் இன்னலைகள், அதன் இயற்கை யியல்பு, அதன் உற்சாகம், அதன் மிருதுவும் இனிமையும்! அதனைக்காட்டிலும் மனச்சந்துஷ்டிகரமாகவிருக்கும் இசையொலி இவ்வுலகில் பிறிதேதேனுமுளதோ?

சுபம்! சுபம்! சுபம்!

நமது இளய சகோதரர்களுக்காக வேண்டும் சில முக்கிய விஷயங்கள்.

ஓ! எமதன்பார்ந்த நண்பர்காள் இறைமகற்கிளையோன் இருதாள் வணங்கி இங்ஙனம் நமது இளய சகோதரர்களுக்காக வேண்டும் சில முக்கிய விஷயங்கள் என்னும் அங்கத்தை வரையத் தொடங்கி முதன்முதலாக இளயவரெனப்படுவார் யாவரென்பதைப்பற்றிக் கவனிப்பாம். அஃதாவது பெரும்பான்மை எவர்களுக்குந் தெற்றென விளங்குமே எனினும், தற்காலவரை ஆய்ந்து நோக்குமிடத்து எந்த வாற்றானும் கல்வி கரையிலவென்பது வோர்புறமிருப்ப நமதரசியன் வகுப்பார் நூன்முறை

ப்படி ஒருவாறு கற்றுத்தேர்ந்து பூர்த்தியாகிற அஃதாவது இருபத்தைந்து அல்லது முப்பஃதாண்டுகள் வரையேயுடைத்தான ஒவ்வொரு சகோதரசகோதிரிகளையுமே எற்றானுஞ் சிறந்த தற்காலத்தியவான்றோர்களாலே இளயவரெனப்படுகிறது.

"மனிதர்க்கு வயது நூறல்லதில்லை
ஐம்பதிரவில் அகலுந்துயிலினால்
ஒட்டிய விளமையிலோரைந்து நீங்கும்
ஆக்கையிளமையிலை மூன்று நீங்கும்
எழுபதுபோக நீக்கியிருப்பன முப்பதே"

என நமது கபிலமகரிஷிவரையறுத்துக்கூறிய கணக்கு முறையானும் முப்பஃதாண்டுகளே இளமைப் பருவத்திற்குரியன வென்பதை மிகத் தெளிவாகக் காணலாம். இன்னும் நமக்குப் பண்டைக்காலத்து மகமுனிவர்களாலே செய்து தந்திருக்கிற சோதிடசாத்திர முறைப்படி மனிதவர்க்கத்திற்கு 12 மாதங்கொண்ட 120 ஆண்டுகளே எனமிகத் தெளிவாய்க் காணப்படுகின்றது. சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, வியாழன், சனி, புதன், கேது, சுக்கிரன் ஆகிய இவ்வொன்பது கிரகங்களின் தசைகளாக மேற்கண்ட 120 ஆண்டுகளையும் பிரிக்கப்படுகிறது. நமது மனிதவர்க்கத்திற்கு இயற்கையில் 100 அல்லது அதற்குக் குறைந்த ஆண்டுகளேதான் உளதான அமைப்பாக விருப்பின் அதற்குத் தக்கனவாகவே கணக்கிட்டு மேற்கண்ட தசைகளை வகுத்திருப்பார்களே அல்லது கொன்முறைக்கணக்கிற் புகுந்திருக்கமாட்டார்கள் ஆகலின் இவ்வாற்றானும் மேற்கண்ட முப்பஃதாண்டுகளே இளமைப் பருவத்திற்குரியன வென்பது மிகத்தெளிவாம். அறியார் பலராலும் 20 ஆண்டுகளே இளமைப் பருவத்திற்குரியனவாகக் கருதுந்தன்மையை இறந்தகால வழக்கியல்களோடும் ஒதுக்குதல்வேண்டும். யாங்ஙனமெனின், எற்றானும் வஞ்சமின்றி நிகழ்கால வழக்கியல்களைப்பற்றிக் கவனிக்கப்புகின் தற்காலவரை நமதரசியன் வகுப்பார் எந்தக்கல்விகளையும் "கல்வி கரையில" வென்னும் பழமொழியை நம்மோடு மட்டும் நின்றுகொள்ளுமாறு செய்துவிட்டு தக்கதக்கவாறு வரையறுத்து பெரும்பான்மை எத்தகைய உயர்தரக்கல்விகளையுங்கூட எந்தச் சகோதரசகோதரிகளுங்கூட முப்பஃதாண்டுகளுக்குள்ளே படித்து முடித்து விடுமாறு மிகச்செவ்வை

யாய் வான்முறைப்படுத்தி ஆங்காங்கு இஞ்ஞால மெங்கணும் பெரிது பெரிதான கல்விச்சாலைகளை நிறுவிக்கல்வியாதிய நான் முறைச்சீர்திருத்த முதலிய பல நாகரீகங்களையும் மிகச்செவ்வையாய்ப் பரந்து விளங்கச் செய்து வருகிறார்கள் என்பதை எவர்கள்தான் மறுக்கக்கூடும். ஒருவாறு இளமைப் பருவமானது இத்துணையாண்டுகள் வரைதான் என்பதை யூகித்துக்கொள்ளாது கல்வியாதிய நான்முறைகளை வரையறுத் திருத்தலுங்கூடுமோ? "சிறுமையிற் கல்வி சிலையிலெழுத்து" என்பதன் கருத்து அவர்கள் மனத்திடை எழாதிருத்தலுங்கூடுமோ? மேற்கண்ட நமது சோதிட சாத்திர முறைப்படி மனிதவர்க்கத்தார்க்கு 12 மாதங் கொண்ட 120 ஆண்டுகளை பூரணவாயுளென்பதை எவரே எனினும் மறுக்கவுங்கூடுமோ? இங்ஙனமாயின் முப்பஃதாண்டுகளை இளமைப் பருவத்திற்குரியன வென்பது கல்வியறிவிற்சிறந்த எப்பகுதியாரும் ஒப்பத்தகுந்த பிரத்தியக்ஷமேயாமன்றோ? நம்போல்வார் நுண்ணறிவு இவ் விஷயத்தில் ஏமாந்து போதலுங்கூடுமோ? ஆகவே நமது வகுப்பைச் சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் தாங்கள் பிறந்த நாட் டொடங்கி முப்பஃதாண்டுகள் வரையே இளமைப் பருவமாமென்பதை மிகச் செவ்வனே உணர்வதோடும், நாம் பிறந்து முப்பஃதாண்டுகள் வரை குழந்தைப் பருவத்தை யொட்டிய விளமைப்பருவமென்றும், அதினின் றும், முப்பஃதாண்டுகள் ஆக்கையோடுகூடிய விளமைப்பருவமென்றும், அதினின்றும் முப்பஃதாண்டுகள் முழுமனிதப்பருவமென்றும், அதினின் றும் முப்பஃதாண்டுகள் வயோதிகப்பருவமென்றும்.உணர்தலும் வேண் டும். இனி இவ்விளயவர்களுக்சாக வேண்டுஞ்சில முக்கிய விஷயங்கள் என்பதன் பொருள்யாங்கூறுமலே சாதாரணமாயெவர்க்குந் தெற்றென விளங்குமாகலின் அதனைவிரியாது விடுத்தனம்.

2. ஓ! எம்முடைய ஆப்த நண்பர்காள்! ஓ! எமது இளய சகோதர சகோதரிகாள்! ஈங்கு வரப்படுகிற பல விஷயங்களையும் மிகச் செவ்வையாகக் கவனியுங்கள். நுங்களின் ஞாபகத்தை விட்டு எந்த வாற்றானும் அகலாதிருக்குமாறு ஓம்புங்கள். நுட்பமாகிய எந்த விஷயங்களையும் மறந்து விடாதேயுங்கள். "பெருக்காறொத்தது செல்வம், பெருக்காற்றிடிகரை யொத்ததிளமை, இடிகரைவாழ்மரம் ஒத்ததுவாழ் நாள்" என்ற நிச்சமொழிகளைத் தெளியுங்கள். இவ்விளமையின் மாட் சியை எண்ணி நோக்குங்கள். இவ்விளமைப் பருவங்கழிந்ததின் பின்னர்

எத்துணைகல்பகோடிகாலந்தவம் புரியினும் அஃதுவாராதென்பதை நன் குணருங்கள். அன்பார்ந்த தாயுதரத்தின்கட் பத்துமாதங்கிடந்து வளர்ந்த அற்புதத்தையும், அசங்கியத்தையும், ஆங்கு நிகழ்ந்த துன்பத்தை யும், அதினின்றுந் தப்பிப்பிழைத்து அம் தாயின் சரீரத்தையும் கிழமாக்கி அம்ம, அம்ம, எ அம்மம்மா வென்று அவள் தம் ஆவியானது படபடவென்று துடித்து ஓ! கோவென்றரற்ற மிகச்சிறிதான மெல்லிய அல்குலானத் ஏகப்பெரிதென ஆமாறு அப்பாழான தூமைக்கடைவழி யானே கூவா கூவா வென்றரற்றிக்கொண்டு ஒருவாறு தப்பிப் பிழைத்து இப்பூமியின் கண்வந்து பிறந்ததன்மையையும், அதினின்றுங் குழந்தைப் பருவங்களினும் பிழைத்து இவ்விளமைப் பருவத்தையடைந்த நம் ஊழ் வினைப்பயனையும் உணருங்கள். இவ்விளமைப் பருவத்தைக் கிடைத் தற்கரியவோர் பெரும் பொருளாகமதியுங்கள். இவ்விளமைப் பருவத் தில் நாம் செய்யவேண்டும் முதற்கடமையாவது யாதெனக் கவனியுங் கள். காலக்கிரமத்தில் இருபஃதாண்டுகள் வரைதான் இளமைப்பருவ மென்பதை தற்கால வழக்கியலில்நின்றும் பெயர்த்தெடுத்து விடுங்கள். முப்பஃதாண்டுகள் வரையே என்பதை நிலை நிறுத்துங்கள். இவ்விள மைப் பருவத்துக்குரிய பத்தாண்டுகள் குறைந்தொழிந்தது மந்திய காலத்திலேயாமெனத் தெளியுங்கள். இவ்விளமைப் பருவத்தில் நாம் துய்க்கப்படுகிற எந்தப் பொருள்களும் நமது தாதைமுதாதைகளுடை யனவாகலின், அவர்களுக்கு நாமெந்த ஞான்றும் நீங்காத அடிமைகளே யாமென்பதையும் நன்குணருங்கள்.

"ஈன்று வளர்த்த தாய்தந்தைக் கேவரே கைமாறியற்றிடுவோர்
ஆன்றமதலை நூறு வயதளவும் அடிமைத்திறம்பூண்டு
மூன்றுபுவனத்துள்ள பொருள் முற்றும் அளித்து முறை முறையே
ஏன்று வழிபாடியற்றிடினும் ஒருநாள் வளர்த்தற்கியையாதே."

என்ற முதுரையைப் பாடஞ் செய்துகொள்ளுங்கள்.

ஓ! எமதன்பார்ந்த இளய சகோதரர்காள்! இதன் கீழ்வரும் விஷயங்களை நுங்களின் ஞாபகத்தில் வைய்யுங்கள். முதன்முதலாக இவ்விளமையை நமக்குத்தந்த எல்லாம் வல்ல இறைவனை வணங்குங்கள். எற்பட்ட காலங்கள் எற்றானுந் தவறாதவண்ணம் நுங்களின் பாடசாலைகளுக்குச்

செல்லுங்கள். நுங்களின் பாடசாலையில் விளையாடுங் காலமின்றி ஏனைய காலங்களில் விளையாட்டைக் கவனியாதிருங்கள். சீட்டாட்டத்தி லுட்கார்ந்து அருமையான மனத்தையும், விலை மதிக்கக்கூடாத அறிவையும் புண்படுத்தாதேயுங்கள். ஆசிரியரிடத்துமிகுதியும் அன்புவைத்து "சித்திரப் பாவை யத்தக வடங்கி" வணங்கி நின்று பாடங் கேளுங்கள். சந்தேகம் நிகழின் முதல் மாணவனிடங் கேட்டுத்தெளிந்து கொள்ளுங்கள். எற்றுனுந் தேர்ந்த முதல் மாணவன் இல்லாதவரை ஏற்பட்ட காலத்தில் ஆசிரியர்பால் விண்ணப்பித்துக் கொள்ளுங்கள். "இளமையிற் கல்" "இளமையிற் கல்வி சிலையிலெழுத்து" "பாடமேறினும் ஏடதுகை விடேல்" "கண்டது கற்கின் பண்டித னுவான்" கைப்பொரு டன்னின் மெய்ப்பொருள் கல்வி, கற்கை நன்றே கற்கை நன்றே, பிச்சை புகினுங் கற்கை நன்றே என்பனவாதிய நல்ல வாக்கியங்களை மறவாதிருங்கள். தாய் தந்தையர்கள் கல்வி, அறிவு, செல்வம் முதலியவைகளில் எத்துணைதூரம் தாழ்ந்தவர்களாயிருப்பினும், அவர்களுக்கு அடங்கி யொழுகுங்கள். மிகப் பொல்லாதவர்களா யிருப்பினும் அவர்களுக்குத் துன்பஞ் செய்யாதிருங்கள்.

தந்தையர்களுடன் வழக்குத் தொடுத்து நியாயத்தலத்துக்குச் செல்வது எற்றுனும் ஒரு இழிந்த செய்கை என்பதை நினையுங்கள். கற்கும் விஷயத்தில் அல்லாமல் ஏனைய எந்த விஷயங்களினும் அருமையான நுங்களின் மனத்தைச் செலுத்தாதிருங்கள். நுங்களின் தாய், தந்தை, தமையன், தம்பி முதலிய பந்து மித்திராதிகளிடம் மிகப் பாசமாயிருங்கள். எவர்களோடேனினும் சண்டை சச்சரவுகளுக்குப் போகாதிருங்கள். கோரமான வார்த்தையாடப் பழகாதிருங்கள். இனிய வார்த்தைகளோடே பழகுங்கள். பிழையின்றிப் பேசவும், எழுதவும், படிக்கவும் தெரிந்துகொள்ளுங்கள். ஏதோ சற்று செவ்வையான பாண்டித்தியந்தான் என்கிறவரை உலக வியவகாரங்கள் (அவசியமல்லாத) பலவற்றினும் நுழையாதிருங்கள். வீண்காலம் போக்க விரும்பாதிருங்கள். நாம் செய்யக் கிடக்கும் நித்திய கரும விதிகளையும், காலத்தையும் மிகச் செவ்வையாக அளவுபடுத்திக் கொள்ளுங்கள். அங்ஙனம் கொண்டவாறு இயலவும் பழகுங்கள்.

இவ்விளமைப்பருவம் ஒருங்கும் கல்வி கற்றற்குரியதே என்பதை எந்த வாற்றுனும் மறந்து விடாதிருங்கள். ஒவ்வொருநாளும் கல்விச்சாலைக் குரிய காலத்தில் ஒரு நிமிஷமே எனினும், எந்த வாற்றுனும் எவ்வகை

முகாந்தரங்களைக்கொண்டும் பின்னுகாதவண்ணம் தாக்கலாதலும்வேண்டும். தங்களுக்குரிய ஒவ்வொரு பாடப்புத்தகங்களையும் மிகச் செவ்வையாய்ப் பத்திரப்படுத்தி வருதலும் வேண்டும். பாடம் நடக்குங்கால் மிக்கஞாபகமாகக் கவனித்தலும் வேண்டும். ஏனைய வோர்விஷயத்தில் புத்தியைச் செலுத்துதலும்கூடாது. ஒருவரோடு ஒருவர் வார்த்தை பாடுதலுங்கூடாது.

"சித்திரப்பாவையத் தகவடங்கிச் செவிவாயாக நெஞ்சுகளனுகக்
கேட்டவை கேட்டவை விடாதுளத்தமைத்தலில்"

மிகுசமத்தர்களாயிருத்தலும் வேண்டும். உபாத்தியாயரிடம் மறுத்து மறுத்து வினுவதலுங்கூடாது. பழம் பாடங்களை மறந்து விடாதவண்ணம் பாதுகாத்து வருதலும் வேண்டும். ஒவ்வொரு நாளுங்கேட்ட பாடங்களை மிகச் செவ்வையாக நாத்திருத்தமாய்ப் பன்முறை உச்சரிப்புகள் எற்றுனும் பேதப்படாதவண்ணம் கொஞ்சநேரம் சத்தமிட்டுப் படித்தலும்வேண்டும். மிகச் செவ்வையாய் சப்தம் பிறருக்குக் கேளாதவண்ணம் சிந்தித்தலும்வேண்டும். முதன்மாணவனுகப் பழகிவருதலும் வேண்டும். தன் வகுப்புமாணவர்களோடே பழகிவருவதோடு மேல் வகுப்புமாணவர்களோடேதான் நட்புக்கொண்டிருத்தலும் வேண்டும். தாழ்ந்த வகுப்புமாணவர்களோடே வார்த்தை யாடுதலும்கூடாது. பொள்ளற்குடமானது நீரைவார்க்குந்தோறும் ஒழுகவிடுதல்போல நூற்பொருளைக் கற்பிக்குந்தோறும் மறந்து விடுதல்கூடாது. உபாத்தியாயரிடத்து நிகழும் சினக்குறிகளை மிகச் செவ்வையாகப் பொறுத்துத் தம்மைத்தாமே தண்டித்துக் கோடலும் வேண்டும். கல்விச்சாலையில் அல்லது வேறு எவ்விடங்களினும் விளையாடுதல்கூடவேகூடாது. 4½ மணிக்குக் கல்விச்சாலை விட்டவுடன் நேராகத்தாங்களிருப்பிடமே வந்து சார்தல் வேண்டும். புத்தகங்களை வைத்துவிட்டு ஈவிச்சேர்களிற் சற்றுச்சாய்ந்து கொண்டிருந்துகளைப்பாறியதின் பின்னரே ½ மயிற்றூரம் உலாத்தி வருதலும்வேண்டும். இரவு 7 மணி முதற்கொண்டு 9 வரை பாடங்களைப்படித்துப் பின்னர் போஜனஞ்செய்து பின்னர் தங்களின் முத்தத்தில் சற்றுஉலாவியதும் 10 மணியடித்ததும் சயனித்துக்கோடலும் வேண்டும். அப்பொழுது அநாவசியமான எண்ணங்கள். உதயமாகாதவண்ணம் தம்மனத்தைப் பாதுகாத்து நித்திரையாய் விடுதலும்

வேண்டும். பின்னிரவு 3½ மணியானதும் எழுந்துவிடல் வேண்டும் பின்னர் ½ மணிப்பொழுது சங்கீதப்பயிர்ச்சியோடும் இனியகுரலோடுங்கூடிக் கடவுளை வணங்கல்வேண்டும் அதினின்றும் சற்றேறக்குறைய ½ மயிற்றூரமாவது சென்று மலஜலங்கழித்துவிட்டுக்காலை 7 மணிவரை பாராமற் படிக்கவேண்டும் பாடங்கள் உளதாயின் நெட்டுருச்செய்தல் வேண்டும். எழுதவேண்டுவனவிருப்பின் எழுதியும் கணக்குகளையுமுடித்து வைத்துவிடல்வேண்டும். பின்னர் ½-மணிப்பொழுது கழிந்தவுடன் பச்சை நன்னீரில் ஸ்நானஞ் செய்தல் வேண்டும். நீரொடுகலவாமல் நெற்றிபூராவும், மார்பொருங்கும், இரண்டுகைகள் நிறையவும் விபூதியைப் பூசிக்கொள்ளல் வேண்டும். ½ மணிப்பொழுது மனத்தையோர்நிலைப்படுத்திக் கடவுளைத் தியானித்தல் வேண்டும். பின்னர் இல்லத்திற்குரிய சில முக்கியவற்றைக் கவனித்துப் பூர்த்தியாக்கிவிட்டு. எற்றும் பழயபதார்த்தங்கள், கலவாத புதியனவாகவே முறையாகச் சாப்பிட்டுவிட்டுப் பாடசாலைக்குப் போதல் வேண்டும். காப்பி, உப்புமாவைக் கனவிலுங்கூட நினைத்தலாகாது. "யோகிக்கு ஒருவேளை, போகிக்கு இரண்டுவேளை, ரோகிக்கு மூன்றுவேளை" என்பதும் ஞாபகம் இருத்தல் வேண்டும். இரண்டுவேளை நல்ல புதிய காய்கறி பதார்த்தங்களோடும் அமைந்த நமது பூர்வீக அன்னபானுதிகளைத்தவிர வேறு எதனையும் சாப்பிடுதல் கூடவேகூடாது. சிலகாலங்களிற் சாப்பிட நேரின் மிகத்தீவிரமான பசியுண்டானதின் பின்னரே சாப்பிடுதல் வேண்டும். இல்லத்தில்வைத்து சிந்தித்த முடிவுரைகளை ஒப்புவித்தற்கும், ஆசிரியர் கூறும் பாடங்களை மிது மனவோர்மையுடன் கேட்டு வரவுமே பாடசாலைக்குச்செல்லுகிறோமென்பதையும் மறந்துவிடுதல் கூடாது. "நீர் சுருக்கி, மோர் பெருக்கி, நெய்யுருக்கி உண்பவர் தம்பேருரைக்கிற் போமே பிணி" என்பதையும் மறத்தல் கூடாது. முற்பகல் 9-மணிக்கும், முன்னிரவு 9-மணிக்குமே சாப்பிடுதல்வேண்டும். மாலையில் ஒருதரம் ஒருமயிற்றூரம் போய்த் திரும்புதல் வேண்டும். உண்டபின் ஒரு அரை நாழிகை சிறுநடை நடந்ததின் பின்னரே நித்திரைக்குப் போதல் வேண்டும். எந்த விரிப்புகளின் மீதேனுனினும் தரையிற் படுத்து நித்திரை செய்தல்கூடாது. படுக்கை அறையானது மிகத் தூய்மையும், சுத்த ஆகாயமும், நல்ல வெளிச்சமும் மிக நிறைந்ததாகவே இருத்தல் வேண்டும். இருட்டறையிற்றூங்குதல் என்றைக்குங் கெடுதலென்பதை மறத்தல் கூடாது. "இலவம்பஞ்சிற்றுயில்" என்றபடி இயலுதல்

OFFICE OF THE REGISTRAR OF ... 17 APR 1915 MADRAS.

உ
திருச்சிற்றம்பலம்.

Nattukcottai Vaiciyam.
நாட்டுக்கோட்டை வைசியம்.

நமது இளய சகோதரர்களுக்காக வேண்டும் சில முக்கிய விஷயங்கள்.

முன் 14-வது புத்தகம் 248-வது பக்கத் தொடர்ச்சி.

தொகுதி க. } ஆநந்தஹூ பங்குனிமீ } பகுதி கரு.

வேண்டுமாயின் அதற்குத்தக்க முறையான உணவியல் அமைந்தாலன்றி அதனிற்செய்யும் நித்திரை சுகமற்றதென்பதையும் மறத்தல் கூடாது. கொசுவலையாலே எந்த ஞான்றும் மஞ்சம் பொதியப்பெற்றனவாக இருத்தல் வேண்டும். மறந்தேயும் பகற்பொழுதில் நித்திரை செய்தல் கூடாது. பாடசாலையில் குறித்தகாலத்தில் தேகப்பயிர்ச்சி மிகச்செவ்வையாக நடந்துவருதல் வேண்டும். காலை 7 மணியிலிருந்து தாங்கள் கல்விச்சாலைக்குப் போகக்கிடக்கும் காலத்துள் ஸ்நானமுதலிய அநுட்டானங்களை முடித்துக்கோடல்வேண்டும். நடுப்பகலில்வந்து ஸ்நானஞ் செய்து கொள்ளலாமென நினைத்தல் கூடவே கூடாது. சில கடைமாணுக்கர்களோடு சதாவீண்வார்த்தை ஆடிக்கொண்டிருக்கப் பழகுதலுங் கூடாது.

3. சிலருக்கு விடுமுறை நாட்களினும், கல்விச்சாலையிற் கற்குங் காலமொழிந்த ஏனையகாலங்களினும் சீட்டுக் கச்சேரியே படிப்பாகிவிடுகிறது. சிலர் ஓயாமல் நாடகம்பார்க்கவே தலைப்பட்டு விடுகிறார்கள். மிகலர் கொல்லைக்குப் போய் விட்டுப் பின்னர் பற்கொம்புகளை வாயில்

வைத்துக்கொண்டு ஊருணிக்கரை, வாய்க்காற்கரை, ஆற்றங்கரைகளினுமுடைத்தான பெண்மக்கள் நீர் எடுக்கவரப்படுகிற நடுத்துறைகளிலே போய் உட்கார்ந்துகொண்டு ஆங்குறும் பல ஸ்திரிகளின் வதனங்களையே நோக்கியிருந்து, நெஞ்சம் புண்ணாக நினைந்து நினைந்து அப்பொழுது தான் மிகச் செவ்வையாகவூறிவரும் நல்ல இரத்தத்தின் பிரயோசனத்தைக் கௌபீனத்திலே சோரவடித்துப்பின்னர் ஆ! ஆ! என் செய்தோம் மணி 10 ஆய்விட்டது போலிருக்கிறதே என எண்ணித் தம்முட்டாமே துக்கித்துக்கொண்டு பரந்தோம், விழுந்தோம், எனக்கல்விச் சாலைக்கு ஓட்டமெடுக்கிறார்கள். சிலர் தாங்கள் கற்கச் சென்றிருக்கும் அயல் நகரங்களிலே உடைத்தான சிலவேசைதாசிகளுக்குத் தங்களுக்கு மணியார்டர்வரும் ரூபாய்களை எல்லாஞ் செலவு செய்துவிட்டுத் தங்களின் சரீரகத்தையும் வற்றவைத்துக்கொண்டு நான்குவருஷம் ஐந்து வருஷம் ஒரே வகுப்பிற் கிடந்து திண்டாடுகிறார்கள். நண்பர்காள்! இப்படியான கெட்டபழக்க வழக்கங்கள் நம்மையும் வந்து அணுகவொட்டாமற் பாதுகாத்துக்கோடல் வேண்டும்.

4. நண்பர்காள்! நன்றாகக்கவனித்தல் வேண்டும். படிப்புப்பூர்த்தியாகிறவரை ஸ்திரிகளோடு வார்த்தையாடுதலுங்கூடாது. உயர் தரப் படிப்புக் காகச் சென்றிருக்கும் அயல் நகரங்களிலே மிக எச்சரிக்கையாக வசித்தலும் வேண்டும். சீட்டுக்கூட்டத்தைக் கையாற்றொடுதலுங் கூடாவாம். நாடகம் என்பதை நினைத்தலும், கேட்டலும் கூடாவாம். வாய்க்கால், ஆறு, குளங்களுக்குச் சென்றால் பெண்மக்கள் இல்லாத துறைகளுக்கே செல்லுதல் வேண்டும். மனம் என்னுங்குரங்கை வெகு நிதானமாக வைத்துக் கோடலும் வேண்டும். முப்பஃதாண்டுகளுக்கிடையில் விவாகஞ் செய்து கொள்ளச்சம்மதித்தல்கூடாது. அநாவசியமாக எவரோடும் பேசப் போதல்கூடவே கூடாது. பெரும்பான்மையும் இம்முப்பஃதாண்டுகள்வரை காலந்தாழாது போசனஞ்செய்து வருதலும், மலஜலங்கழித்தல், ஸ்நானஞ்செய்தன் முதலிய நித்தியவநுட்டான கருமங்களை நடாத்தி வருதலும், கல்வி பயில்வதூஉமேதான் தங்கள் தங்களின் கடமைகளாக இருத்தலும் வேண்டும். சுகாதாதல் முறைகளை நன்றாக அநுசரித்தே ஒழுகுதல் வேண்டும். ஒரு நிமிஷ எனினும் பகல் நித்திரை கூடவே கூடாது. எவ்வளவு பெரிய சமுகாளம், அல்லது பாயாக இருப்பினும் ஒரே விரிப்பில் ஒருவர்க்குமே

படுத்து நித்திரைபோதல் கூடாது. இருவர், மூவர், நான்கைந்து பேர்கள் ஒரே விரிப்பில் ஒன்றாகப்படுத்து நித்திரை செய்வதால் நிகழும் கேடுகளைப்பற்றி ஈங்குவரைந்து முடியாது. மிகச் செவ்வையான தேகப் பயிர்ச்சியோடுங்கூட இம்முப்பஃதாண்டுகள் வரை ஸ்திரிபோகத்தைக் கனவினுங்கூட நினையாதிருந்தும், ஏனைய எவ்வகை முகாந்தரங்களைக் கொண்டும் ஒருதுளி அளவே எனினும் நமதுவிந்து நாதத்தை வெளிப் போக்காதவாறு பாதுகாத்தும் வருவோமாயின் பின்னர் இவ்வுலகத்திலே யாமநுபவிக்கப்பெறும் எவ்வகைப்பட்ட இன்பாதி போகங்களும் தேவபோகங்களாகவே விளங்கக்கூடும். நம்முடைய நாடு நகரங்களிலே 8 அடி 9 அடி உயரம் அமைந்த மனிதர்கள் இல்லை என்பதூஉம் நிவர்த்தியாய் விடும். செய்யப்படுகிற எந்தத்தொழில்களும் உயர்தர நாகரீகத்துட்டங்கும். 12 மாதங்கொண்ட 120 ஆண்டுகளும் நமக்குச் சொந்தமாய்விடும். நவக்கிரகங்களுக்குமுரித்தாய ஒவ்வொருமகாதசைகளின் பலன்களையும் அநுபவித்து விடலாம். ஆகலின் இம்முப்பஃதாண்டுகள் வரை மிக மேலான பிரமச்சரியத்தை யோம்பி, எவ்வகைத்தானுஞ்சிறந்த உயர்தரக்கல்விகளிலே தேர்ந்து, பெரிது பெரிதான பட்டங்களைப் பெற்றுப் பின்னரே எந்தத்தொழில்களினும் பிரவேசித்தல் வேண்டும். ஏனைய உலகவின்பத்தை நுகர்தற்கு ஆரம்பித்தலும் வேண்டும் எவ்வகை முகாந்தரங்களைக்கொண்டும் முப்பஃதாண்டுகளுக்கு முன்னர் ஸ்திரி விஷயங்களிற் பிரவேசித்தல்கூடவே கூடாது.

5. ஒருவாறு இருபஃதாண்டு இருபத்தைந்தாண்டுகளிற் படிப்பை நிறுத்திவிடின் நமக்குரிய எந்தத் தொழில்களையும் தக்கவாறு கொண்டு நடாத்துதலும் வேண்டும். குடும்ப வியவகாரங்களை மிகச் செவ்வையாய்க் கவனித்துவருதலும் வேண்டும். நமக்குக் கிடைத்தற்கரிதாகக் கிடைத்த இவ்விளமைப்பருவத்தை எற்றானும் பிரயோசனத்துக்குக் கொண்டுவராமல் கொன்னே கழித்துப்பின்னர் நாவூறிக்கொண்டிருப்பதில் எற்றும் பயனில்லை. நம் தாதை மூதாதைகள் தேடித்தந்த பெரும் பொருள்களைக் கொன்னே அழிக்கக்கருதுதல் கூடாது. பழிபாவங்களுக்கு அஞ்சியே ஒழுகுதல் வேண்டும். வீண் செயல்களினும், டம்பாதிகளினும் பிரவேசித்தல் கூடாது. உலக வியவகாரங்களிலே மிகச் செவ்வையாய்ப் பழகுதல் வேண்டும். எந்தக்காலத்தும் உயர்தர நூற்களிடத்தும், வர்த்தமானப் பத்திரிகைகளிடத்துமே நம்மனம் படி

தல் வேண்டும். நான்குபேர்கூடிச் சும்மாகுந்திக்கொண்டு வீண்கதை கதைப்பதிற் புகுதல் கூடவே கூடாது. ஒவ்வொரு நிமிஷத்தையும் ஒவ்வொரு பெரும் பொருட்கு வியலாகக் கவனித்தே ஒழுகுதலும் வேண்டும். நம் தாரமல்லாத அன்னிய ஸ்திரிகளிடத்தும், சில வேசைதாசிகளிடத்தும் நம் நாதத்தை வினியோகப்படுத்தி ஆங்குநவரத்தினங்களாலிழைத்த சொர்ண விக்கிரகங்களைப்போன்று குழந்தைகளை வார்த்துவிட்டுப் பின்னர் அந்தோ! நமக்குக் குழந்தைகள் இல்லையே எனக்கவனித்து மிகவுந் துக்கசாகரத்திலே மூழ்கிக் காசி, இராமேச்சுரத்துக்குப் போதலும் நியாயமாகாது. பெரும் பெருளீட்டுவதற்குரிய பெரிய தொழில்களையேகொண்டு நடாத்துதல் வேண்டும். என்னையோய் நீயிர் எந்தப் பெரிய தொழிலைக்கொண்டு நடாத்துகிறீர்? நுமக்கென்னை பெரும் பொருண்மீது பேரவாவில்லையோ? மற்றையோர் பலர்க்குந்தெற்றென விளங்க நல்லுத்திகூறும் நீயிரேன் பெயர் மாத்திரையோடு மட்டும் ஆண்டியாக இராமல் பொருள் மாத்திரையானும் ஆண்டியாய் விளங்குகிறீர்? இப்புத்தகம் வரையுந்தொழிலென்னை மிக்கஉயர்ந்ததே எனின் இஃது வரையத்தொடங்கி இதுகாறும் எத்துணை ஆயிரம் சம்பாதித்திருக்கிறீர்? வெண் சோற்றுப்பருக்கைக்கும் விதியற்றுத் திரிவதோடும், அளவுக் கெஞ்சியகடனோடுந் திரிகின்றீரே யாது காரணம்? நுமது பேரறிவாண்மையும், கல்வியும் எத்துணை வன்மையுடையது கண்டீரா? நுமது சந்தா நேயர்கள் பலரும் இவ்வருஷ V. P. கள் ஒருங்கையுந் திருப்பி விட்டார்களே இன்னும் நுமக்கேன் நல்லறிவு உதையமாகவில்லை? இதனையோர் மூலையிலொதுக்கிவிட்டு நல்லவோர் தொழிலை நாடுமின். தக்கவோர் வருவாயைத்தேடுமின். உள்ள நாள் வரை பணத்தானிகழுங்கவலை எற்றுமின்றி இயல்வதே சுவர்க்காதிபோகமெனத் தெளிமின். வாதத்துக்கு மருந்துண்டு பிடிவாதத்துக்கு மருந்தில்லை அப்பால் நுமதிட்டம் எனின் ஐயீர்! ஆ! ஆ! மிக நன்றாயிருக்கிறது. மேற்கூறியதத்துணையும் மிக நியாயமே எனினும், யாம் மனிதவர்க்கமேயாம், எம் அருமைச் சகோதர சகோதரிகளின் அறிவை விசாலமாக்கும் இத்தொழிலுக் கெஞ்சியவோர் மேற்றொழில் இஞ்ஞாலத்திலுளதாக அடியேற்குவிளங்கவே இல்லை ஆகலின் சரீரத்தைப்பொருத்த எத்துணை கட்ட நட்டங்கள் ஏற்படினும் இத்தொழிலை நிறுத்தி ஏனையவோர் தொழிலிற்புகேம். நிற்க நண்பர்காள்! பெரியாரினத்தோடு சார்தலும்

வேண்டும். நிகழ்கால நாகரீகத்திற்கு மிகப் பொருத்தமாய் ஒழுகுதலும் வேண்டும். நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு குடும்பத்தார்களையும் கோடீஸ்வரர்களாமாறு செய்யப்புகுதலும் வேண்டும். ஒருங்கேயாவருங் கற்றுணர்ந்தாரே என்க ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் மிகச் செவ்வையாய் முப்பஃதாண்டுகள் வரை கற்றுவருதலும் வேண்டும். 15 16 வயதுகளிலே விவாகஞ்செய்து 20 25 வயதுகளுக்குள்ளே நாலைந்து குழந்தைகளைப்பெற்று 30 35 வயதுகளுக்குள் வயோதிகத்தன்மை வாய்ப்பப்பெறுகிற கொடிய விடம் போன்ற அதர்மசண்டாள வியற்கைகளை நமது நாடுநகரங்களினும் வந்து நுழைய விடாமற் பாதுகாத்துக் கோடலும் வேண்டும். நமது பேரறிவாண்மையோடுஞ்சார்ந்த ஞாபகக் குறையால் யுகதர்மத்தின்மீது குறை கூறப்புகுவது எற்றும் நியாயமாகாது. ஆன்றோர்களாலே கூறப்படுகிற பலவித நல்லொழுக்கங்களினின்றும் எற்றானும் வழாதொழுகப் பழகிவருதலும் வேண்டும். நடையுடைபாவனைகளால் கெட்ட பெயர் ஏற்றுக் கொள்ளுதலுங் கூடாது. ஞான்றும் ஒரே தன்மையதாக இயல்தலும் வேண்டும். 30 வயதுகளுக்கு மேல் 90 வயதுக்கள் வரைக்கும் எற்றானுஞ்சிறந்த உயர்தரப் பெரிய மனிதப் பருவமென்பதை நாம் எந்த வர்ற்றானும் மறத்தல்கூடாது. 90 லிருந்தே வயோதிகமென்பதை யுணர்தலும் வேண்டும். பொதுவாக மனிதவர்க்கத்தார்க்குரிய பூரண ஆயுளானது 120 ஆண்டுகளேயாமென்பதையும், நம்முடைய நடையுடை பாவனைகளாலே மிகக் குறைவுபட்டுப் போயிற்றென்பதையும் மிகச் செவ்வையாய்த் தெளிதலும் வேண்டும் நோய்க்கு இடங்கொடேல் என்ற வண்ணம் மிக நாகரீகமாயும், ஆசாரமாயும், நாளுக்கு நாள் சீர்திருத்தமாயும், இவ்விளமைப் பருவந்தொடங்கியே ஒழுகப்பழகி வருதலும் வேண்டும். ஓதாமல் ஒருநாளுமிருக்க வேண்டாம் என்றதை நமதாயுள்வரையேயாமென்பதையுந் தெளிதலும் வேண்டும்.

6. நண்பர்காள்! இங்ஙனம் முடிவுரையாகச் சிலவற்றைக்கூறி விஷயத்தைப் பூர்த்தியாக்குவாம். ஆகவே எந்த வாற்றானும் தாம் பிறந்து 30 ஆண்டுகள் வரை இளமைப்பருவமே யாமென்பதையும், கல்வி கற்றற்கே உரியகாலமென்பதையும், இம்முப்பஃதாண்டுகள் கழிந்ததன் பின்னரே விவாகஞ்செய்தல் வேண்டுமென்பதையும், அதுகாறும் பிரமச்

சரியத்தை மிகு மனவலியோடு பாதுகாத்தல் வேண்டுமென்பதையும், பலவித நல்லொழுக்கங்களில் நின்றும் எற்றும் வழாதொழுகுதல் வேண்டுமென்பதையும், மிகச் செவ்வையாய்த் தேர்ந்து தெளிந்து அதில் நின்றும் “கற்கக் கசடறக் கற்பவை கற்றபின் நிற்கவதற்குத்தக” என்ற தேவர் வாக்குப் போன்று எற்றும் வழாதொழுக வேண்டுமென்பதூஉமேயாம். இவ்விளமைப் பருவத்தில் நாம் பெற்றுக்கொள்ளவேண்டுமாவசியகப் பொருள் எற்றானும் அழியாத உயர்தரக்கல்வி யொன்றேயாம். ஏனைய பருவங்களில் ஒருவாறு அசாக்கிரதையாயிருப்பினும், இவ்விளமைப்பருவத்தில் மிகசாக்கிரதையாயும், ஞாபகச்சக்தியோடுமிருந்து கல்வி பயிலுதல் வேண்டும். ஒருவாறு “நரைவருமென்றெண்ணி நல்லறிவாளர் குழவியிடத்தேதுறந்தார்” என்ற முனிவர்வாக்கை யுணர்தலும் ஆவசியகமெனப்படும். இவ்விளமைப்பருவம் அது வகைக்கு மிகச்சலாக்கியமானதேயாம். கவனிக்குமிடத்து எத்தகையவொரு பெரிய தொழில்களைச் செய்வதற்கும் இஃதொரு நல்லதருணமென்பதை நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் நன்குணர்தல் வேண்டும். இது விஷயத்தைப்பற்றி நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வோரவைகளினும் மிகச் செவ்வையா யுபந்நியாசித்தலும் வேண்டும். அறிவிற்சிறந்தார் பலர் பேப்பர்களுக்கு வரைந்தனுப்புதலும் வேண்டும். தெரியாதார் பலருக்குந் தெரிந்தார் சிலர் சொல்லிக்காட்டுதலும் வேண்டும். எந்த விஷயத்திற்கும் நிகழ்கால நாகரீகத்தானும், சீர்திருத்தத்தானும் சிறந்தகல்வியே காரணமாமென்பதை மிகச்செவ்வையாய்த் தெளிதலும் வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் திருவருட்சக்தியும் முன்னிற்க. குமர குருபரன் திருவடி வாழ்க.
சுபம்! சுபம்!! சுபம்!!!

பெற்றோரைப் பேணலும், அவர் தம் மாட்சியும்.

நண்பர்காள்! இம்மலர் தலை வையத்துத் தோற்றப்படுகிற ஆன்மகோடிகள் பலவற்றுள்ளும் சிறந்த மனிதப்பிறவியை நமக்குத்தந்த எல்லாம் வல்ல இறைவன் திருவருட்சக்தியை முன்னிட்டுப் பெற்றோரைப் பேணலும், அவர் தம் மாட்சியும் என்னும் அங்கத்தை வரையத்தொடங்குவாம். அஃதாவது நம்மை ஈன்ற தாய் தந்தையர்களை, அவர்கள் தம் மனமானது எஞ்ஞான்றும் எற்றானும் எற்றும் நோவாத வண்ணம் பாதுகாத்து வருதலும், அவர்களின் பெருமையுமே ஆம்,

நண்பர்காள்! ஆண்பால், பெண்பாலெனக் கூறப்படுகிற மனிதவர்க்கத்தை ஈற்ற வேண்டும் கருவி இரண்டனுள் “சமன் செய்து சீர்தூக்குங்கோல் போலமைந் தொருபாற்குக் கோடாமை சான்றோர்க்கணி” என்ற வேத வாக்கியம் போன்று நடுநிலைக்கோடின்றி ஆய்ந்து நோக்குமிடத்து பெண்கருவியே (அஃதாவது நமது தாயின் சரீரகமே) உயர்ந்தனவாகும். ஈன்றாண் மாட்சியே எற்றானும் சிறந்தனவாகும். அவள் தம் மாட்சிபற்றி எவரானும் வரைந்து முடியாததேயாம். யாங்ஙனமெனின் இதனை ஒரு சிறு அநுபவக்காட்சியானே விளக்கி மேற்செல்வாம். நண்பர்காள்! ஆண் கருவியான அஃதாவது நமது தந்தை என்பான் ஒருவன் ஏதோ காமச்சூடு உண்டான அங்ஙனே ஏதோ சற்று நேரம் நமது தாயின் சரீரகத்தோடுங்கூடிக் கலந்த இன்பாதியோடுற்ற பிரையாசை ஒன்றை அல்லது வேறு எற்றையும் அவன் கண்டிலன். மிக முதன்மையான கருப்பையில் அவனோர் துணைக்காரணமும் இலன். பின்னர் உண்மையாகக் கவனிக்கப்புகின் நமது தாயின் சரீரகத்துள் அன்றோ பிரமன் வீற்றிருக்கப்படுகிறான். 280 நாள் அல்லது 300 நாள் வரை அவன் (அஃதாவது நான் முகன்) நம் தாயின் சரீரகத்துளிருந்து நம் போன்ற மனிதச் சரீரச்சிசுவை உண்டாக்கும் பேருந்தொழிலை நன்றாக நினைந்து கவனிப்பார் ஒவ்வொரு சகோதரர்களும் ஈன்றாண் மாட்சியே பெரிதெனக் கூறாமற்போகார். அவ்வாறுண்டாக்குவதற்கு முதற்காரணம் நமது தாயின் சரீரகமும், துணைக்காரணம் நமது தந்தையின் சரீரகமுமே ஆம். ஆகவே இரண்டும் வேண்டியதாவசியகமே எனினும், ஒன்றாவது மாஸ முதலாக பத்தாவது மாஸம் வரை தங்களின் சரீரகத்தினுட்டாங்கியும், ஈற்றில் ஒருநாளோ இரண்டுநாளோ அல்லது நான்கைந்து நாளோ பெருந்துன்பம் அடைந்தும் அக்குழந்தையைப் பெற்றாளென்பதை யாவர்தான் உணராதவிஷயம். அவ்வாறு ஈற்றியதன் பின்னருங்கூடக் குறைந்தபாகம் ஐந்தாறுபத்து ஆண்டுகள் வரையாவரால் அக்குழந்தையானது மிகுதியுஞ் சீர்திருத்தத் தோடுங்கூட வளர்ந்து வருகிறதென்பதை யுணராத மனிதஜென்மமும் உண்டோ. அவ்வாறு வளர்த்துத் தந்தையைக் காட்டிய தாயினும், தந்தை என்பானொருவன் யாங்ஙனம் உயர்ந்தோன் எனப்படுவான். தந்தையைக்காட்டுந் தாயின் பக்கமிருக்கும் குழந்தைக்கு யாவரிடத்தோ அன்பு மிகுதி அல்லது பாச மிகுதி என்பதையு முணருங்கள். பெரும்பான்மையும் காட்டு

மாட்டு வர்க்கங்களுங்கூட இம்மா, அம்மா வென அரற்றுவதை யாவர் தான் கேட்டுணராதார். தாயைப்பற்றியும், தந்தையைப்பற்றியும் செவ்வையாக ஆய்ந்து நோக்குமிடத்துக் குறைந்த பாகம் கருத்தரித்த நாண் முதலாகப் பத்தாண்டுகள் வரை தந்தையினுந்தாயே சிறந்த ஒரு நிறையினின்ற வளாகிறாள். அதன் பின்னர் தற்கால வழக்கியலின்படி இருவருமே குழந்தைகளுக்கு எவ்வித நன்மைகளையும் பயப்பதற்கு சமனாகப் படுகிறார்கள் என்பது எவரும் நன்குணர்ந்த விஷயமேயாம். அதற்காகவே இன்னும்.

I. "அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற நமது ஔவையம் பிராட்டியின் வாக்கிலிருந்து கவனிக்கப்புகின் அஃதாவது முதலிற் றெரிந்துகொண்ட தெய்வம் அன்னையும் பிதாவுமேயாம். இங்கே முதலிற் றெரிந்துகொண்ட தெய்வம் என்றதனால் அடுத்துத் தெரிந்து கொள்ளவேண்டிய தெய்வமும் ஒன்று உண்டென்பது உறுதியாயிற்று. இன்னமும் அறி என்னும் முதனிலை பிற வினை வாய்ப்பாடாநின்று அறிவித்த எனவிரிந்து சிறிதும் அறிவில்லாத ஒரு கட்டையைப் போற் கிடந்த நமக்கு முன்னின்று அம்மா, அப்பா, ஆச்சி, பாச்சி, சோச்சி என்றும், இன்னும் இவை போன்று பல மென் மொழிகளாக மழலைப்பருவத்தில் பழக்கியதன் பின்னரும் இது படம், இது குடம், இது மடம் என ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டிப் படிப்படியாக அறிவூட்டி நம்மை அறிவுடையோரென வைத்தலால் பெற்றோர் அஃதாவது தாயையும், தந்தையையுமே தெய்வமெனப் பட்டனரென்றுங் கொள்ளலாம். இதுவும் பெற்றோர் முன்னின்றறிவித்த தெய்வமெனப் படுதலால் உண்ணின்றறிவிக்குங் கரந்துறை தெய்வமும் ஒன்றுண்டென்பதுணர்த்திற்றே எனினும், உண்ணின்றறி விக்குங் கரந்துறை தெய்வத்தை விட வெளிப்படையாக நம் முன்னே நின்று அறிவிக்குந் தெய்வமே (அஃதாவது நமது தாய் தந்தையர்களை) உயர்ந்தன வென்பதையும் உணர்க. ஒருமையிற் றெய்வமென்றது ஒரே தெய்வவுண்மையைக் குறிப்பிட்டதாமே ஈண்டு பெற்றோரைத் தெய்வ மென்றதையாய்ந்து நோக்குமிடத்து உண்மையாகப் பெற்றோர் அருட்டன் மையிலொருமையும், பொருட்டன் மையிலிருமையும் பெற்றிருத்தலால் இருதிறத்தும் பொருள் கொள்ளும்படிதான் எமது ஔவையம் பிராட்டியார் இங்கே தெய்வ மென்று ஒருமையாக வைத்தனர் போலும். அம்மை

யும், அப்பனும் இரண்டு சரீரிகளாயிருந்தாலும், அவ்விருவரும் வேறுபாடின்றிச் சரீரமும், மனமும் ஒன்று பட்டிருந்த அவசரத்திற்றானே மக்களுதயமாகின்றனர். மேலும் பெற்றோர்களின் மனம் பிள்ளைகளின் நன்மை ஒன்றனையே நாடிநிற்கும். அல்லாமலும் பிள்ளைகளுக்குத் துன்பம் நேரிடின் தாய் தந்தை இருவருடைய கண்களில் நின்றும் ஒன்றுபோல கண்ணீர் நிகழ்வதையுங் காணலாம். அன்றியும் பிள்ளைகள் பெற்றோர்களின் கழுத்தைக்கட்டி விளையாடும் பொழுதும், அவர்கள் உண்ணுங்கலத்திற் கைபோட்டு "இட்டுந் தொட்டுங் கௌவியுந்துழந்தும் நெய்யுடையடி சின் மெய்பட விதிர்த்தும்" என்றவாறு கூடப் பிசைந்தும், தோண்டியும், வாயாற் கௌவியும், கையாற்றுழாவியும், நெய்யுடை உணவை உடம்பின்கட்படச் சிதறுதல் கண்டு உண்ணுங்காலத்தும், பிள்ளைகள் விளையாடுவதைக் காணுஞ் சமயத்தும், அவர்கள் பிள்ளைகளை முத்தாடி, உச்சிமோந்து, துய்க்கும் வேளையும், பிள்ளைகள் பேசும் நேரத்தும், அம்மை அப்பன் இருவருடைய ஐம்பொறிகட்கும் ஒரே படித்தாக இன்பமுண்டாகின்றதுண்மை. இவ்வுண்மை பற்றியே.

"மக்கண் மெய்தீண்டலுடற்கின்பம் மற்றவர்
சொற் கேட்டலின்பம் செவிக்கு"

"அமிழ்தினும் ஆற்ற இனிதே தம்மக்கள்
சிறுகை அளாவிய கூழ்"

"குழல் இனிது யாழ்இனிதென்ப தம்மக்கள்
மழலைச் சொற் கேளாதவர்"

என்றார் நமது தேவ பெருமானும், ஆனபடியால் அருட்டன்மையிற் பெற்றோர் ஒருமையினரே யா யிருக்கின்றனர். இவர்கள் வேறு வேறு சரீரிகளாயிருத்தலினும்; "தா யொடறுசுவைபோம் தந்தையோடு கல்வி போம்" என்றபடி தாயாலாகுங் காரியங்கள் பத்து மாஸம் சுமந்து, வருந்திப்பெற்று, பத்தியங்காத்து, முலைப்பாலூட்டி, வளர்த்தன் முதலியன தந்தையாலாகாமலும்; தந்தையாலாகிற காரியங்கள் கல்வி, அறிவு,

வொழுக்கங்களின் அபிவிருத்திக்கு தாயானவள் துணைக்காரணமாய் இருக்கிறதோ உண்மையாலும், ஒருவரை விட்டு ஒருவர் முன்னும் சற்றுப் பின்னுமாகப் பிழவுபட்டு நிற்கிறதினாலும், பொருட்டன்மையில் இருமையினராகவே இருக்கின்றார்கள். இந்தக் கிரமத்தை உணர்த்துவான் கருதி ஒருமையிற் றெய்வமென்ற பிராட்டியார் " அன்னையும் பிதாவும் " என எண் உம்மைகளாற் பிரித்தனர். இங்ஙனம் அருட்டன்மையில் ஒருமையினரேயாயிருந்தாலும், பொருட்டன்மையில் இருமையினராகவே இருக்கிறபடியால் அவர்கள் பெற்றோர் என்று பன்மையிற் பேசப் பெற்றனர். இனித் தெய்வம் என்றது நமக்கு வேண்டிய அறிவின் விளக்கக்காரணமாகும்.

" மாயாதநு விளக்காய் மற்றுள்ளங்காணுதேல்
ஆயாதாமோன்றையதுவதுவாய் " என்றபடி அறிவின் விளக்கம் சரீரம்பற்றியே நிகழ்வதாகும். ஆகவே அறிவின் விளக்கத்திற்கு இன்றியமையாத சரீரத்தைத் தந்தருளினவரும், (கடவுளும்). தெய்வமெனப்பட்டனர் அவர் " அவாவென்ப வெல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும் தவாஅப்பிறப்பீனும் வித்து " என்றபடி நமது இச்சையின் வழியே அருமையான இந்த மனிதச் சரீரத்தை நமக்குக் கொடுத்தனர். நிலவுலகத்துள்ள நாளளவும் " வேண்டுவார் வேண்டிற்றெல்லாம் வேண்டியாங்கருள்வோன் " ஆகிய அவரே நம்மைப்பாதுகாத்துவருகிறார். அப்பால் நாம் மரித்த பின்னரும் நம்முடைய நல்வினை தீவினைகளுக்குத் தக்க சுகதுக்கங்களைக்கூட்டி நுகர்விப்பிப்பவரும் அவரேயானபடியால் நேற்றும், இன்றும், நாளையும், அஃதாவது முக்காலத்தும் தெய்வம் அறிவாயிருந்து நமக்கு அறிவெழுப்பி சகல போகங்களையும் நம்மை அடையச் செய்கிறார். அவர் ஊரும், பெயரும், உருவும், குணமும், குறியும் அற்ற ஒரு பெருங்கருணைத் தடங்கடலாய் இருக்கிறார். அவர் பெற்றோர்களின் வழியாகவே நம்மை மனுடராக்கி விட்டனர். 'வேறு எந்த வழியாலும் நமதுற்பத்தி கேட்கப்படவில்லை. ஆகவே தெய்வம் எந்த வழியாக நம்மை பிறப்பித்திருக்கின்றாரோ அந்த நமது பெற்றோர்களின் வழியாகவே " மகன் அறிவு தந்தை அறிவு " " தாயைப்போற் பிள்ளை " என்று கேட்கப்படுகிறபடி அறிவையும் உதிப்பிக்கின்றனர். ஆகலின் நமது சரீரோற்பத்திக்கும், அறிவின் அபிவிர்த்திக்கும், பெற்

றோரே முதற்காரணராய் இருக்கிறார்கள். பெற்றோர் இல்வழி எவருமில்லையே யாவர். ஆகவே பெற்றோர்களாலேயே உலகம் உள்ளனவாகக் காணப்படுகிறது. அதுபற்றியே ஈங்கு பெற்றோர்களைத் தெய்வமென்று நமது பாட்டியரும், சிவஞானயோகச் செல்வக்கிழவியருமான ஔவையம் பிராட்டியும் உபசரிக்கப்பட்டார். இக்கண் கண்ட தெய்வத்தாலேயே காணவேண்டிய தெய்வத்தையும் அறிவுறுத்தப் பெறுகிறோமாகலின் இது முன்வைக்கப்பட்டதாம். அன்னையை முன்னரும், பிதாவைப் பின்னருமாக இவ்வாக்கியத்தில் வைத்த முறை என்னை எனின், தாய் தகப்பன், அம்மை அப்பன், மாதா பிதா, என்னும் உலகவழக்கியலானே உயர்வாதல்பற்றியென்பது ஓர்புறம் நிற்பினும் பிள்ளையானவன் முதன் முதலாகத் தாயையறிகிறான். தாயைத்தெரிந்துகொண்ட பிள்ளைக்குத் தாயே தந்தையை அறிவுறுத்துகின்றாள். அப்பால் தந்தையாற் குருவையும், குருவாற்றெய்வத்தையும் பிள்ளையறிகிறான். அந்த முறைபற்றியே, ஈண்டு தாயை முன்வைத்தனரென்பர், பெரியோர். அல்லாமலும்,

" அன்னையானவள் தாதைக்குமதிகம் அன்னையும் பிதாவும்
முன்னையோர் தெய்வமென்ற மொழிக்கேவர் முதன்மை பூண்டார்
பின்னோராச்சிரமத்தேகிப் பிதாவையும் வணக்கங்கொள்ளும்
சந்நியாசிகளும் அந்தத் தாயரைத் தொழுவரன்றோ "

என்றபடி அன்னையும் பிதாவுமென்ற இந்நூலாதரவு பற்றியும், பிதாவும் வணங்கத்தக்க சந்நியாசிகள் தாயை வணங்குவது பற்றியும், தாதையைக் காட்டிலும் தாயார் மேம்பாடுடையவரென்றாகின்றது. இந்நூலாசிரியர் " தந்தை தாய் பேண் " என்றுஞ் சொல்லியிருக்கிறார். ஈசுவரானுக்கிரகத்தால் பிதாவின்றியுண்டாகிய அவதாரத்திருமேனிகள் அஃதாவது ஸ்ரீ சங்கராச்சாரியஸ்வாமிகள் போல்வார் தாயை மாத்திரம் வைத்துண்டாயிருத்தலின் சந்நியாசிகள் தாயை மாத்திரம் வணங்கவேண்டிய கிரமங்கள் ஏற்பட்டிருக்கலாம். அதுவுமல்லாமல் கோவணத்திற்குங்கூட விதியற்று, எவ்வகையாதரவுமின்றி, அறிவில்லாமலும், பலவீனராயும், பிறந்த நம்மை ஈமொய்க்காமலும், எறும்புகடியாமலும், வெயிற் படாமலும், மிகக்காற்று வீசாமலும், பனியடியாமலும், மழை வீழாமலும், மார்பிலும், தோளிலும், வயிற்றிலுமாக அணைத்து கண்ணை இமைகாப்பது போல் காத்

தவள் அன்னையே. முகத்தோடு முகம் வைத்து முத்தாடிக்களித்தவளும், நம் சுகத்தைநாடி மருந்தூட்டி, அழுகைமாற்றித், தொட்டிலிட்டுத்தாலாட்டி உறக்கி மகிழ்ந்தவளும், நாம் பசித்தழும் பொழுதெல்லாம் பால்தந்து திருப்திகொண்டவளும் அன்னையே. இம்மட்டோ நம்மூக்குச்சிந்தி, நீராட்டி, ஈரம்புலர்த்தி, நாசியூதி, செவியுறவி, விழிக்குமைதீட்டி, கன்னங்கிள்ளி, உச்சிமோந்து, உவகைகூர்ந்தவளும்; உரியகாலத்தில் அமுதுண்ணப்பழக்கிக் கொஞ்சங் கொஞ்சமாகப் பால் குடியை மறப்பித்து, நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து இன்பார்ந்தவளும் அன்னையே அத்தகைய அன்னையானவள் நாம் அழ அவள் சம்மதியாள்; நாம் பிணிகளாற்றுன்புறுதலைக் கேள்க்கவுஞ் சகிக்காள்; நாம் சுகமுறத்தான் மருந்துண்டு பத்தியங்காப்பாள்; கடவுளைப்பிரார்த்திப்பாள்; விரதமிருப்பாள்; மாதாந்தம் நடப்பாள்; காணிக்கை நேர்ந்து கொள்வாள்; அவ்வாறு செலுத்தும்படி நமது ஐயனையும் வேண்டுவாள்; கவலை ஈனராய் விளையாட நாம் வெளியே சென்றால் நம்மை பின்றொடர்ந்து பற்றி எடுத்துக் கொண்டுவருவாள்; நமது தேகத்திற் புழுதி படிந்திருக்கக் கண்டால் தண்ணீராகாதென்று வெந்நீரிற் ஸ்நானஞ்செய்து வைப்பாள்; நாம் பராமுகமாக உண்ணமாட்டேன் என்றால் காக்கையைக்கூவியோ மற்றொரு போக்கைக்காட்டியோ நம்மையுண்பிப்பாள்; நம்மை சந்தோஷிப்பதில் அவளுக்குச் சந்தோஷமிருக்கும்; நம்முடைய அறிவின் அபிவிர்த்தியே அவளுக்குத் திருப்தியைக்கொடுக்கும்; அந்த நமது மழலைப்பருவத்தில் பிறந்த உடன் மிருகங்கள்கூட நடமாடவும், பால் குடிக்கவும், கூடியசீக்கிரத்தில் புல் முதலியன தின்னவும், பழகிக்கொள்ளுகின்றன; இம்மிருக சாமர்த்தியங்கூட இல்லாதவோர் நிலைமையிற்றான் நாமிருந்திருக்கிறோம்; அத்தகைய நமக்கு அன்னையின் உதவியில்லையேயானால் நம்முடைய கதி அதோகதிதான் ஆனதுபற்றியும் அன்னையைமுன் வைத்தனர் எனவும்பொருந்தும். எப்படியானாலும் சரியே ஈசுவரனையே நோக்கி அன்னை யொப்பாய் என்றதோர் உண்மையால் தாயினிடத்துள்ள பெருங்கருணை வெளிப்படை. தெய்வம் தாயின் வழியாகவே நம்மை இரட்சித்து வருகிற கருணையே அறக்கருணையாம். அதுகொண்டே எவரும் வாட்டமுறுவதுகண்டால் "தாயின் மகவையும்" "மழையிற் பயிரையும்" உவமிப்பது உலகவழக்கு.

2. இனிப் பிதாவோ நம்மிடத்தில் யாதானுஞ் சேட்டைகள்

நிகழின் அதனை ஒழிக்குமாறு தண்டித்துத் தடுத்தாளுகிறவராயிருக்கிறார். இன்னும்,

"தந்தைதாய் பெற்ற தத்தம் புதல்வர்கள் தம்சொல் ஆற்றின்
வந்திடா விடினுறுக்கி வளாரினலடித்துத்தீய
பந்தமும் இடுவர் எல்லாம் பார்த்திடிற் பரிவேயாகும்"

என்றபடி அவர்நாம்கெட்டபிள்ளைகளுடன் கூடியாடக்கண்டால் தடுப்பார். நாம் இடறிவிழும்படி திரியக்கண்டால் வெடு வெடுப்பார். பள்ளிக்கூடம் அல்லது கல்விச்சாலைக்குப் போகமாட்டோம் என்றால் எற்றுங் கண்ணோட்டமின்றி நம்மைக் கண்டித்து ஆங்குகொண்டு போய் விடுவார். நம் சகோதரருடன் சண்டை போட்டுக்கொண்டால் நம்மைத் தண்டித்து சமாதானத்துடன் வேண்டும் நல்லுத்திகூறுவார். குறளையும், பொய்யும் நமதுழிபிறக்க வொட்டாமற்றடுப்பார். நாம் தேடிய பொருளையே எனினும் வீணிற் செலவுசெய்ய அவர் சம்மதியார். சீட்டாடுதல் முதலிய கெட்ட செயல்களும், சோம்பித்திரிவதும், நாம் வீண்பொழுது போக்குவதும் அவருக்கு வெறுப்பாகவே இருக்கும். அவர் மட்டுங் கவனியாவிடின் துர்இச்சைகளும், துர்ச்செயல்களுமே ஒருருவாகக்காணப்படுகின்றமாயாசாலங்கள் நம்மை விழுங்கியே விடும். இக்கேட்டிற் குள்ளாகாதபடி அவர் நம்மைத்தண்டிப்பதெல்லாம், நம்மைத்தடுத்தாள்கிறதாகவே முடியும். ஆனது பற்றியே,

"அன்றலிற் றுயின்மாலும் அண்டருமந்தரமலை யிட்டலைவதாக்கி
நின்றாலுந் தன்வருத்தம் நினையாதபாற்கடலின் நீர்மை போலக்
கொன்றாலும் அழலெழத்தீக்கொளுத்தினுஞ்சிற்றறிவாளாற் கொய்துகொய்து
தின்றாலும் மறந்தேனுந் தீங்கு தந்தைக்கிழையாதேன் சிந்தை என்றான்"

என்று பிரபோத சந்திரோதயங்கூறிற்று. ஆகவே மதியூகிகளுக்குப் பிதாவின் கடுகடுப்பெல்லாம் தங்களின் நன்மையை நாடினதாகவே விளங்கும். தெய்வந் தந்தையின் வழியாய் நம்மை இரட்சிப்பதையும் மறக்கருணை என்னலாம். இங்ஙனம் அறக்கருணை, மறக்கருணை எனக்கருணை இரு

திறப்பட்டிருத்தலால் பெற்றோர் அருட்டன்மையில் ஒருமையினரென்பது யாங்ஙனமாகும், எனின்? கருணை ஒன்றுதானே தன்இயல்பில் அறக்கருணை என்றும், நம்மிடத்தில் காணப்படும் சேட்டைகளை ஒழிக்குங்கால் மறக்கருணை என்றும் வழங்கப்படுதலின்றி இருதிறத்தனவல்ல என்க. ஈண்டு மறக்கருணையை யுணர்த்துவான் எடுத்துக்காட்டிய மேற்கோளில் தந்தை தாய் என்று இருவரையும் வைத்ததென்னை எனின்? தந்தை தண்டிக்கும்போது அத்தந்தையின் ஆணையின் கீழடங்கி நிற்குந் தாயும் அங்ஙனங்கூடிச் சகித்து சம்மதிபெற்று தானுந்தண்டிக்குந் தன்மைபற்றியே யாமென்க. இதுவும் வேண்டியதுதானென்பதற்கு, "உழுக்கி வளர்க்காத பிள்ளையும், முறுக்கி வளர்க்காத மீசையும்" ஒழுங்குபடாது. என்றபழமொழியே சாட்சியாம். இதுகொண்டு தந்தை தாயினுங் குறைந்தவராகார். "மைந்தர் தமை நெஞ்சில்" என்றபடி பிள்ளைகளையொடுக்கி வளர்க்கிற தந்தையகத்தே கருணைமயமாகவே இருக்கும், என்பது மேல் வரும் விஷயங்களைக்கொண்டு அறிக. இப்பெற்றோர்கள் பிள்ளைகளிடத்து வைக்கும் பிரீதியே அருளென்றும், இவர்களிடத்துப் பிள்ளைகளுக்குண்டாம் பிரீதியே அன்பென்றும் பெரியோர் சொல்லுவர்: இவர்களுக்கு நம்மிடத்துள்ள பிரீதியாலேயே அஃதாவது கருணையாலேயே நாம் இற்றைக்கு மானிடராயிருக்கிறோம். நாம் மானிடர் என்று மதிக்கப்படுவதற்குமுன் நம் இளமைப்பருவத்தில் பெற்றோர்கள் நம்மாற்பட்டிருக்கும் கட்ட நட்டங்களைச் சொல்லவுங்கூடுமா? "மிதித்தாரைக் கடியாதபாம்பில்லை" என்றன்றோ பழமொழி நிகழ்கின்றது. பலவிதமாயுந்தம்மைத்துன்புறுத்துகிற பிள்ளைகளைப் பெற்றோர்கள் ஒருக்காலும் வெறுப்பதில்லையே. தாங்கள் துன்பப்படாதிருத்தலை உத்தேசித்துப் பிள்ளைகளிடத்தில் கருணைகுன்றி அவர்களுக்கு வெறுப்புமட்டுமுண்டாகுமானால் கருப்பையிலிருக்கிற அக்காலத்திலேயே மிகச் சுலபமாக அழித்துவிடலாம். அதிகச்சிரமமுண்டாகிற பிரசவ அறையில் கழுத்தை நெரித்துந் தொலைக்கலாம். பசும் பருவத்தில் யாதொரு பாடும் படாத நம்மை பட்டினிபோட்டும் கொல்லலாம். கல்வி, கேள்விகளில் பிரியப்படாத நமது சிறுபருவத்தில் மூடர்களாகும்படி விட்டுக் கெடுக்கலாம். விளையாட்டுப் பிள்ளைகளுடன் கூடிக்கலகம் விளைவிக்கிறபொழுதுக் கண்டித்துத் தடுத்தாளாது ஒழிக்கலாம். மாதர்சுகத்தை விரும்புகிற யௌவனகாலத்தில் நெற்றிவேர்வை நிலத்தில் விழத்தாம்

பாடுபட்டுத்தேடிய பொருளைச் செலவழித்து மணப்பியாது விடலாம். அன்றியும்நம்சொந்தத்தவறுகளாலோ பூர்வகர்மாநுசாரத்தாலோ பிணிகள் பீடிக்கும்பொழுது மனமிரங்கி மிக்கப்பணஞ் செலவழித்து வைத்தியம் பாராவிட்டாலும் மிகமோசமேயாம். பகைவராலோ, அந்நியராலோ உண்டாகும் ஆபத்துக்காலங்கள் தோறும் உதவிசெய்து காப்பாற்றாமற் போனாலும் பிள்ளைகளின்கதி அதோகதிதான். பிள்ளைகளின் நன்மையை நாடி மதிப்புண்டாகத்தக்க நல்லவழிகளிற் றிருப்பிவிடாமற் போனாலும் மிகச்சங்கடமேயாம். "விழியிருக்கக் குழியில் விழுந்து" துன்பப்படுகிற கெட்டபழக்க வழக்கங்களையும், சுகவாழ்வினராக இருக்கிற மேலோர்களுடைய நல்லொழுக்கங்களையும் அடிக்கடி எடுத்துக்காட்டி நன்னெறிப்படுத்தி,

"தந்தை மகற்காற்று நன்றியவையத்து
முந்தியிருப்பச் செயல்"

என்றபடி பெரியோரவைகளிலே மேலாக விருப்பச் செய்யாமற் போனாலும் ஞாலவாழ்வனைத்தையுமே இழக்க நேரிடுமன்றோ? ஆகவே பெற்றோர்களால் வெறுப்பப் படுதலின்மையினாலேயே இற்றைக்கு நாம் மதிப்பிற்குரிய மனிதராகின்றோம். ஆகவே எவ்வாற்றானும் பெற்றோருடைய கருணையளவைக் கணக்கிட்டுக்கூற எவராலும் முடியாததேயாம். அவர்கள் உள்ள நாளளவும் பெரும் பாடுபட்டவைகளுள் அவர்களும், நாமும் துய்த்து மீந்துள்ள சம்பத்துக்களையும் ஒப்புக்கொடுக்கிறார்கள். இவ்வாறு யாதொரு பிரயோசனமுமின்றி எவ்வளவோ கட்ட நட்டப்பட்டு நம்மை மதிப்பிற்குரிய மனிதராகச்செய்த பெற்றோர்களுக்கு நாம் செய்யும் கைமாறென்னை? அவர்களுக்காக நமது காலமொருங்கும் எவ்வளவு நன்மைகள் செய்யக்கூடுமோ அவ்வளவு நன்மைகளும் நாம் கர்ப்பப்பிரவேசமாயிருக்கும்பொழுது பத்துமாஸம் அளவும் அவள் ஓர் சுமைதாங்கியாயிருந்ததற்கேனும், அக்காலங்களிற் பீடித்த வாந்தி மயக்கம் முதலிய வியாதிகளால் துன்பந்தோன்றாதபடி அன்னையானவள் பிரீதிகொண்ட பதார்த்தங்களை வாங்கிக்கொண்டு போய் கொடுத்து, இனிமையான வார்த்தைகளாலும் சந்தோஷிப்பித்தலிலேயே தந்தை நோக்கமாயிருந்ததற்கேனும், ஈடாகப்போகிறதா. இது பற்றியன்றோ,

" சின்னவோர் பொருள் தந்தோரைச் சீவனுள்ளளவுமுள்ளத்
துன்னவே வேண்டுமென்ன உரைத்தனர் பெரியோர் தேகந்
தன்னை யாருயிரைச் சீரார்தரணியின் வாழ்வைத்தந்த
அன்னை தந்தைக்குச் செய்யும் அருங்கைம்மாறுளதோ அம்மா "

என்றார் பெரியோர், ஆனபடியால்,

" மகன் தந்தைக்காற்று முதவியிவன் தந்தை
என் நோற்றான் கொல் என்னுஞ்சொல் "

" ஈன்றபொழுதிற் பெரிதுவக்குந் தன் மகனைச்
சான்றோனெனக் கேட்ட தாய் "

என்ற பெரியோர் திருமொழியின் பிரகாரம், அருளாளராகிய பெற்றோர்களின் இச்சைக்கிணங்கப் பிள்ளையானவன் உலகம் அறிவுடையோனென்று சொல்லத்தக்கவனும், தந்தையின் அரியதவத்தைப் பலரும் மெச்சும்படி நல்லொழுக்கமுடையவனுகி பெரியோர்கள் பலருங்கூடிய அவையத்துள் தானுமொருவனுக மேலாயிருப்பவனும், ஆதலே பெற்றோர்க்குச்செய்ய வேண்டிய நன்றியாம். ஈன்றோர்க்கு நாம்பற்ற வேண்டிய இக்கடமைகளும், நமது நன்மையைப் பொறுத்ததாகவே இருத்தல் உண்மை. இதுகொண்டு அவர்கள் கருணையின் திறம் அறிவுடையார் பலருக்கும் இனிது புலப்படும். இம்மட்டில் திருவருள் நிலையுமாகிய பெற்றோரைத்தெய்வமாகக்காண வேண்டுமுண்மை அறிவுறுத்தப்பட்டது. கண்கண்ட தெய்வமாகிய பெற்றோர்களிடத்தில் நாம் பிள்ளைப்பருவத்தில் இடையறாத பற்றுவைத்திருந்ததினுலே இப்பொழுது மதிக்கப்படத்தக்க மனிதராயிருக்கிறோம். இவ்வுண்மையை மறந்து சிலவிடலைகள் பெற்றோர்களுடைய சகாயமின்றியே சீவித்துக்கொள்ளத்தக்க சாமர்த்தியம் தம்மிடத்துண்டாகுங்காலத்து அவர்களைக்கைவிட்டு விடுகிறார்கள். தங்கள் தங்களின் பெண்டு பிள்ளைகளைப் பேணிக்கொள்வதில் மாத்திரம், அவர்களிடத்தில் சிரத்தை அதிகமாகக் காணப்படுகிறது. அப்படிப்பட்டவர்களுக்கு இனிப்பெற்றோர்களால் ஆகவேண்டியதொன்றுமே இல்லையென்ற எண்ணமே உண்டாயிருக்கும்போலும்! இவ்வாறு

எண்ணுவது மௌடீகம். இனிமேற்றான் அஃதாவது மனிதரான பிறகுதான் பெற்றோர்களால் முக்கியமாய் ஆகவேண்டியவைகள் உண்டு. அவைதாம் மேலான மனிதப்பிறப்பின் பயன்களாகும். அவைவருமாறு, ஒவ்வொருவனுக்கும், மழலை, பாலை, விடலை, மூப்பு, என்கிற நான்கு பருவங்கள் உண்டு என்பதை எவராலும் மறுக்கமுடியாது. ஒவ்வொருவனும் மழலைப்பருவத்தில் மூன்றுவயதளவும் ஊட்டிவளர்க்கும் அன்னையை விடாது தொடர்ந்துநிற்றலாற் கீரிப்பிள்ளையைப் போலும்; பாலைப்பருவத்தில் பெரியோராலும், உபாத்தியாயராலும், பெற்றோராலும், கற்றுக் கொடுப்பவைகளை அர்த்தஞானமின்றி விடாதுபடித்துக்கொள்ளுதலால் கிளிப்பிள்ளையைப் போலும்; விடலைப்பருவத்தில் தன்னை மனிதராக்கி விட்டோர்க்கு உபகாரமாயிருத்தலாற்றென்னம்பிள்ளையைப் போலும்; மூப்பு ஆகிற முழுமனிதப்பருவத்தில் யாவரும் விரும்பப்படும் வாசனைவிளங்க நிற்றலால் புழுகுப்பிள்ளையைப் போலும்; பழையோரால் பேசப்படுகிறான். அந்நான்கு பருவங்களுள்ளே அறியாமையையுடைய இளம் பருவங்களாகிற முன்னைய விரண்டினிடத்தும் மக்களாலாம் பிரயோசனத்தைப் பெற்றோர் விரும்புகிறதில்லை. தாங்கள் பட்டினிகிடந்தாவது, பிள்ளைகளுக்கு ஆகாரமும், அறிவும் ஊட்டி வளர்க்குந்தன்மையை அவர்கள் வகித்திருந்தார்கள். அப்பால் விடலைப்பருவத்தில் பிள்ளைகளுக்கு நாளுக்கு நாள் அறிவும், திடனும் அதிகரித்தல்போல பெற்றோர்களுக்குக் கிழப்பருவத்தால் நாளுக்கு நாள் தளர்ச்சிமேலிடவும், பிள்ளைகளின் உபகாரத்தைஎதிர்பார்க்கிறார்கள். அப்பொழுது பிள்ளைகள்,

" எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு "

என்னுஞ்சுருதி வாக்கை நினைந்து, பெற்றோர்களைப் பேணி உய்யக்கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்பொழுது தான்,

" பெறுமவற்றுள் யாமறிந்ததில்லை யறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற "

என்றவாறு பெற்றோர்கள் கொண்டடுவார்கள். அங்ஙனங் கொண்டாடப் பெறுகிற பிள்ளைகளே பெரியோர்களாலும் மதிக்கப்படுவார்கள். அல்லாதவர்கள் வளர்ப்போர்க்குளெள்ளளவும்பிரயோசனப்படாத அணி

ற்பிள்ளையை ஒப்பாரென்பது திண்ணம். ஈண்டு எடுத்துக்காட்டிய கீரி, கிளி, தென்னை, புழுகு, அணில் என்னும் ஐந்து பிள்ளைகளில் தென்னம்பிள்ளையே பயன்றருவது கண்டாம். புழுகுப்பிள்ளையும், எவரும் விரும்பத்தக்க நறுமணவஸ்த்தொன்றை உபகரித்து நிற்கும். இவ்விரண்டும் நிற்க ஏனைய மூன்றனுள் பயனற்றது அணிற்பிள்ளை என்றதனால் மற்றிரண்டும் பயனுற்றதாயிருத்தல் வேண்டுமே, கீரியும், கிளியும், வளர்ப்போர்க்கு என்ன பயனைக் கொடுக்கின்றனவெனின் கீரி வளர்ப்போர் மனையில் பாம்புகள் வராதென்று கேட்கப்படுதலாலும், கிளி பேசும் பொழுதெல்லாம் வளர்ப்போர்க்கு இன்பமுண்டாவதாலும், அவையே பயன்களாமென்க. அணிற்பிள்ளை ஏதும் பிரயோசனமற்றதென்பதற்கு சில மூடப்பிள்ளைகள் வேடிக்கையாய்ப் பிடித்து வளர்த்துத் தொலைக்கிறதன்றி அதனை வளர்க்க எவரும் பிரியப்படாதிருப்பதே போதிய சான்றாம். ஆகலின் தென்னம்பிள்ளையை ஒத்துப் பெற்றோர்களுக்கு உதவுகிற பிள்ளைகளே அறிவறிந்த மக்களாவார்கள். அல்லாதவர் நன்றிகொன்றவரேயாவர். பிள்ளைகள் கைவிட்டுவிடுகிறதினால் பெற்றோர்கள் மரித்துப் போவதில்லை. பிள்ளைகளையே நம்பி அவர்கள் படைக்கப்படவுமில்லை. மரம் வைத்தவன் நீர் வார்ப்பான். "எவ்வுயிருங்காக்கவொரு ஈசனுண்டு" இருந்தாலும் பயனில் மக்களை பயந்ததனிமித்தம், பலருந் தூற்றும்பொழுது, பெற்றோர்கள் உற்சாகமில்லாதவர்களாய் உட்புழுக்கமுறுவர். அவர்கள் உள்ளம் புழுங்குமாயின் மாயாசாலங்கள் நம்மையாளும். அப்பொழுது பலன்கொடாத பயிர்களிற் சில மிருகங்கள் வீழ்ந்தாற்போல நமதுவாழ்வு அழிக்கப்படும். அத்தகைய கேட்டிற்கு ஆளாகாமல் "தந்தை தாய் பேண்" என்ற நீதியை அநுசரித்து நடந்துகொள்கிறவர்கள் தாம் பேரறிவாளரெனப்படுவார்கள். பெற்றோர்களாலும், ஆன்றோர்களாலும், ஆசீர்வதிக்கப்பெற்று, சற்புத்திரர்களை யுடையவர்களாவார்கள். சற்புத்திரர்களைப் பெற்றவர்களே கிழப்பருவத்தில் பாதுகாக்கப்படுவதுண்மை. "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" இது சத்தியம். பெற்றோர்களுக்குக் கிழப்பருவத்தில் கீழ்ப்படிதலுடன் நம்மாற் செய்யப்படுகிற வழிபாடுகள் அனைத்தையும், நாம் நமது கிழப்பருவத்தில் நமது பிள்ளைகளாற் செய்யப்பெறுவோமென்பது நிச்சயம். கிழப்பருவத்தில் நாம் போஷிக்கப்படவில்லையானால் சீவிப்பதில்லை. அல்லாமலும், நாம் கட்டப்படுவதைக்காண்போர்களால் "இட்டார்க்கு இட்

டபலன்" என்று நிந்திக்கப்படுவோம். அத்தகைய கேட்டுக்கும், வசைக்கும் உள்ளாகாத நல்வாழ்வைப் பெற்றோர்களைப்பேணிப் பெற்றுக்கொள்ளல் அறிவுடையோர் கடனாம். இங்ஙனமிருக்கச் சிலர் பெற்றோரான் முழுதும் வெறுக்கப்பட்டு மற்றோர்க்கு நல்லவர்போன்று இருக்கக்காண்கிறோம். அவர்கள் நடத்தையை யோசிக்குங்கால் அது தன்னையே துணையாகக்கொண்ட புருஷனுக்குக் கீழ்ப்படியாத ஒருத்தி தூர்ச்சனர் பலருக்கும் அடங்கி நடந்து நல்லபேரெடுப்பதை யொக்குமென்பதில் சந்தேகமில்லை. இனி மனிதப்பருவம்வரையே முந்தியபருவத்தில் உலக அநுபவம் இத்துணைத்து என்று கண்டுகழித்துள்ள ஏதுவினால் மனிதர்களைச் சந்நியாசிப்பருவம் அடைந்தவர்களென்றே சொல்லலாம். ஆயினும் இவர்களும் பெற்றோர்களுக்குச்செய்து தீரவேண்டிய கடமைகளைச் சரிவரச் செய்ய வேண்டியதேயாகும். இல்லையேல் நரகமே அவர்களுக்குப் பிராப்தியாம். இவ்வுண்மை,

"தந்தை தாய் குரவன் மைந்தன் தனது மாணுக்கனிந்த
ஐந்துபேர் கடன்க ளாற்று மதுதுறவாகு மல்லால்
மந்திரக் காவி சாத்தி மறுசன்மம் அடைந்தானேனும்
இந்தமுற் கடன்கள் ஆற்றான் எழு நரகடைவன் அன்றே"

என்பதாலுணர்க. இப்பருவத்திற்கு முற்பருவத்திற்கூடப் பெற்றோர்கள் நம்மை வளர்க்கும்போது பட்டபாடுகள் நமக்குப் புலப்படுவதில்லை. இப்பொழுதுதான் நாம் குழந்தைகளைப் பெற்று வளர்க்கும் பாடுகள் அநுபோகசித்தமாய் விளங்குங்காலமாகலின் இப்படித்தானே பெற்றோர்கள் நம்மையும் வளர்த்திருப்பார்களென்ற நம்பிக்கை நமக்குண்டாகிறது. உண்டாகவே நமக்கு நம் பெற்றோர்களைக் கனப்படுத்த வேண்டியது இன்றியமையாததெனப் புலப்படுமென்பது திண்ணம். நாம் பிறக்கும்பொழுது அறிவுவிளக்கமற்று பலவீனராய் இருந்ததுபோலவே நம் பெற்றோர்களும் கிழப்பருவத்தில் அறிவுமழுங்கி வலிமை குன்றியிருத்தல் இயற்கையே. அக்காலத்தில் மகனும், மருகியும் மனது ஒருப்பட்டு அவர்களுக்குச் செய்யவேண்டிய வழிபாடுகளைச் செய்யக்கடமைப்பட்டிருக்கிறார்கள். இளம்பருவத்தில் அறியாமையால் பெற்றோர்களை நாம் வையும்பொழுது நமது குழறுபாடான சொற்களையும், புன் சொற்

களையும் அவர்கள் கேட்டு மகிழவில்லையா? அவர்களுடைய வாக்கிலிருந்து இப்பொழுதுண்டாகும் கோபாவேச வன் சொற்களனைத்தையும், இன் சொற்களாகக்கொண்டு நாமேன், மகிழ வேண்டாவோ? நம்முடைய மலஜலாதிகளில் அவர்களுக்கு அருவருப்புத்தோன்றிற்றா? இல்லையே, அவர்கள் பல்லும், பார்வையும், சொல்லும், சுவையும், யாவுமிழந்து, யாவுமறந்து, மறுவலுஞ் சேயெனமதித்தனர் வெய்திய இப்பருவத்தில் அவர்களுடைய மலஜலாதிகளைக்குறித்து அருவருப்படைதல் எவ்வளவு அநீதி, நிற்க அறிவறிந்த மக்கள் தமது இளம்பருவத்தில், அடித்துச் சோறூட்டவும், பயப்படுத்தி மருந்தூட்டவும், உபாத்தியாயராலுக்கிப் படிப்பிக்கவும், பெற்றோர்களுக்கு அடங்கியும், இருந்தது உண்மையே யாயினும், மடமைக்காலத்துள்ள அவ்வடக்கம், அடக்கமாக மாட்டாது. ஆண்மை மேவிட்டபருவத்தில் பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிதல்தான் அடக்க முடைமையேயாம். ஆகலின் புத்திமான்கள் ஒவ்வொருவரும், நம்மை மேலான நிலைமைக்கு ஆளாக்கிவிட்ட தெய்வம் யாவர்? அவர்களின் கருத்து யாது? அவர்களுக்கு நாம் செய்ய வேண்டிய கடமைகள் என்னை? என்பவைகளை ஆராய்ந்து நடந்து பெற்றோர்களுக்குப் பிரீதியுடையவர்களாய் அவர்களுக்குக் கீழ்படிந்து அவர்கள் பொறுப்பிலிருந்த குடும்பபாரத்தை ஏற்று அவர்களுக்கு வேண்டியவைகளை அன்புகூர்ந்து நமது முதற்கடமையான வழிபாடுகளை எனக்கவனித்து சந்தோஷமாய்ச் செய்து வரல் வேண்டும். இவவுண்மையுற்றித்தான்,

“தாயினிற்சிறந்த தெய்வமில்லையுயர் தந்தைதன்னி
னேயநற்குருவுமில்லை யென்னின் மற்றிவர்கடாளிற்
றாய்மலர் தூவிநாளுந்தொழுதிமேறிஞர்தாமே
யாய்கதிர்பரப்பும் போன்னுட்டமரராயினிது வாழ்வார்”

“ஈன்றதாயினையின் றேடுத்திருபுயத்தணைக்கு
மான்றதந்தையை யரந்தைசெய்தகன்று போயடவி
தோன்றிமாதவந் தொடங்கினோரிவர்களைத் தொல்லை
மூன்றுதேவருமுனிவுற கிரயமுற்றிழிவார்”

“வைகறையாமந் துயிலெழுந்துதான்செய்யு
நல்லறமுமோண் பொருளுஞ்சிந்தித்து வாய்வதிற்

உ

திருச்சிற்றம்பலம்.

Nattukcottai Vaiciyam.

நாட்டுக்கோட்டை வைசியம்.

பெற்றோரைப் பேணலும், அவர் தம் மாட்சியும்.

முன் 15-வது புத்தகம் 268-வது பக்கத் தொடர்ச்சி.

தொகுதி க. } ராக்ஷஸஹு சித்திரைமீ } பகுதி கசு.

ந்தையுந் தாயுந்தொழு தெழுகவென்பதே
முந்தையோர் கண்டமுறை”

“மைந்தனைப் பெறுகின்றமாது மாசிலாப்
புந்தியன்யோடுபோற்றிவளர்ப்பதுந்
தந்தைமாண்டுழித்தம்முறைக்கேற்றிட
வந்தமில் கடனாற்றுதற்கேயன்றோ”

“தந்தை தாய் பணித்தல் செய்யுந்தவமலாற்றவம் வேறில்லை
மைந்தருக்கெதிகளேனும் வணங்குவர் தாயைத்தந்தை
யந்தமைந்தனையே போற்றல் வேண்மேற்றாதறன்னாற்
சிந்தையுற்றுணரிற்றாயே தந்தையிற் சிறந்தாண்மன்னோ.”

“நைந்தடியற்றவாலநடுங்கி வீழ்கின்றதென்று
வந்தவீழுன்றி வீழாவகை நிலைவிளக்குமாபோன்

மைந்தர்கடமக்கு நல்லவறிவினன் மகிழ்ந்துசேர்ந்து
தந்தையைத் தளராவண்ணந்தாங்குவர் தவத்தினனென்றான் "

" புத்திரனாவோனீதி பொருந்தித்தன் குலத்தினுள்ளோ
ரத்தனைவரையுந் தீயவருநரகுறுமற்காத்துச்
சுத்தமாங்கதியினுய்ப்பானென்று சொல்வார்கடேயோ
ரித்தைநீயுணர்ந்தென்முப்பாமிடும்பையைத்தீர்த்தியென்றான் "

" மகன்றந்தைக்காற்றுமுதவியிவன்றந்தை
யென்னோற்றான்கொல்லென்னுஞ்சொல் "

என, ஆன்றோர் பலராலும் வரையறுக்கப்படுகிறது. ஆகவே

" ஈன்றுவளர்த்த தாய்தந்தைக்கேவரே கைம்மாறியற்றிடுவா
ரான்றமதலை நூறுவயதளவுமடிமைத்திறம்பூண்டு
மூன்றுபுவனத்துள்ளபொருண்முற்றுமளித்துமுறைமுறை
யே. யேன்றுவழிபாடியற்றிடினுமொருநாள் வளர்த்தற்கி
[ணையாதே "

என்பதையோர்ந்து இயன்று கோடலே மனிதவியற்கையாம்.

3. இன்னும், மகனறிவு தந்தையறிவு என்னும் உண்மையால் ஒவ்வொரு மைந்தனும் தந்தையின் அம்சமாகவே இருக்கிறான் என்பது ஆன்றோர் கொள்கை, ஆனால் மனிதரல்லாத இதரபிராணிகள் பசும்பருவத்தில் மாத்திரம் தாயையறிந்து பற்றி நிற்கும். பசுபட்சியாதிகள் தந்தையை யாண்டுமுணர்ந்தில என்பதும் வெளிப்படை. ஆகலின் தாயோடு தந்தையைத் தெரிந்துநிற்றலே பகுத்தறிவுள்ள மேலான மனிதரின் அறிவுச்செயல்களுட் சிறந்ததொன்றாம் என்பர் பெரியோர். இருந்தாலும் தந்தையையறியாத சிலஜாதியாரும் உலகத்தில் காணப்படுகின்றனர் இன்னோரன்ன ஜாதிகளின் தந்தையாயினோர்கதி அதோகதிதான் ஆகலாமென்பதை எவராலும் மறுக்கமுடியாது. இது நிற்க,

" இல்லற மல்லது நல்லற மன்று "

" அறத்தாற்றினில் வாழ்க்கையாற்றிற் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவதெவன் "

" ஆற்றினொழுக்கி யறனிழுக்கா வில்வாழ்க்கை
நோற்பாரி னோன்மை யுடைத்து "

" பத்தி செய் சமயபேதப் பகுதிக்கும் பொதுவா நிற்கும்
புத்தெனும் நரகம் நீக்கிப் பொருவரும் வீட்டை நல்கும்
உத்தம வனந்தஞான வருவேடுத்திலக நிற்கும்
சத்திய மகத்திற்பேறு தருவதில் வாழ்க்கை தானே "

என்ற விதிகளாலே மேலான கிருகஸ்தாசிரமானுஷ்டான பரர்களாகி சுதர்மங்கள் வழுவாது சரியாக நடைபெறப் பொருட்டுக்கொண்டு தொட்டுள்ளோர் வழங்காத சுத்தகுலத்தில் ஒத்தகுடியில் உத்தமமானதோர் கன்னிகையைத் தெரிந்தெடுத்து விதிப்படி மணவாட்டியாகக் கொண்டு கர்ப்பாதானாதி சத்கருமங்களால் சுபுத்திரர்களைப் பெற்றுவாழ்தலாலே இகபரசுகானுபவங்களுக்கு யோக்கியராயிருக்கிற பெருமதிப்பிற்குரிய மன்றமேயாரும், வேந்தரும், வேளாளரும், தொழிலாழிகளெனப்பட்ட எல்லா வகுப்பினரும், மேலோர் பழக்கவழக்கங்களை ஐதிகமாய நுட்டித்துவரும் பஞ்சமர்களும் தந்தையைத் தெரிந்துகொண்ட ஜாதியர்களாகவே மதிக்கப்படுகிறார்கள் என்பது உண்மை. இவ்வுண்மை கொண்டேதான் " தந்தை தாய் பேண் " " அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம் " என்பதாதிய சுருதிகள் ஏற்பட்டன. அல்லாமலும் " மாதிருதேவோபவ, பிதிருதேவோபவ " என்று வேதம் முழங்குவதாயும் கேட்கப்படுகிறது. இவ்வுண்மைபற்றி நிற்கும் ஜனசமூகங்கள் மாதா, பிதா, குரு, தெய்வம் என்னும் உணர்ச்சி மேலிட்ட ஞானப்பிரகாசத்தினாலேயே தொன்று தொட்டுப் பெருமதிப்பிற்கு உரியாராகக் கருதப்படுகின்றனர். அங்ஙனமாகவும்,

" அன்னையானவடாதைக்குமதிக மன்னையும் பிதாவு
முன்னையோர் தெய்வமென்ற மொழிக்கேவர் முதன்மை
பூண்டார், பின்னோராச்சிரமத் தேகிப்பிதாவையும்வணக்
கங்கொள்ளுஞ், சந்நியாசிகளுமந்தத் தாயரைத்தொழுவரன்றே "

" தந்தைதாய் பணித்தல் செய்யுந் தவமலாற்றவம் வேறில்லை
மைந்தருக்கேதிகளேனும் வணங்குவர் தாயைத்தந்தை
யந்தமைந்தனையே போற்றல் வேண்டமேற்றுதறன்றுற்
சிந்தையுற்றுணர்சிற்றாயே தந்தையிற் சிறந்தாண்மன்றே "

என்பதாதிய வாக்கியங்களால் தாயைக்காட்டினும் தந்தை சிறிது குறைந்தவராக மதிக்கப்படுகிறார். இவை பற்றித்தான் சைவ, வைணவ, மாத்துவ, ஸ்மார்த்த சதாசாரசத்சமயிகளின் குருமடங்களிலே ஆசிரியராயெழுந்தருளியிருக்கப்பட்ட சந்நியாச மூர்த்திகள் தாயை வழிபடுதலும் தந்தையைத் தங்காலின் கீழ்வழிப்படுத்தலும் ஓர் வழக்காக அநுட்டித்து வருகிறார்கள்போலும். அந்த மட்டிலும் இவ்வநுட்டானத்திற்கு வேதசிவாகமங்களும் இடம் கொடுத்திருக்குமென்று சிலர் எண்ணுகிறார்கள். வேறு சிலர் இக்கலியுகத்தில் சந்நியாசப்பிரதிட்டாபகாச்சாரியர் சங்கராச்சாரியர் என்று சங்கர விஜயம் சாதித்து நிற்பதால் தாய்க்கே ஆதிக்கம் சாதிப்பது அவருடைய வழக்கமாமென்றும், உலகத்தில் காலபேதத்தால் சில காலத்திற்கு முன்னர்கொண்டே எல்லா மடாதிபதிகளும் அநுட்டித்துவருகிறார்களென்றும் பேசிக்கொள்கிறார்கள் இது நிற்க.

" ஈன்றதாயினையின்றேத்திருபுயத்தணைக்கு
மான்றதந்தையை யரந்தை செய்தகன்று போயடவி
தோன்றிமாதவந் தோடங்கினேரிவர்களைத் தொல்லை
மூன்றுதேவரு முனிவுற நிரயமுற்றிழிவார் "

" தந்தை தாய் குரவன் மைந்தன் தனது மாணக்க னிந்த
ஐந்துபேர் கடன்களாற்று மதுதுறவாகு மல்லால்
மந்திரக் காவி சாத்தி மறுசன்மம் அடைந்தானேனும்
இந்தமுற் கடன்கள் ஆற்றான் எழு நரகடைவன் அன்றே"

என்பதாதிப் பிரமாணங்களும் எழுந்திருக்கின்றன. இவ்வுண்மைகளையும், உள்ளவாறுணரும் புத்திமான்களுக்குத் தாயைக்காட்டினுந் தந்தை சிறியரல்லரென்பதும் புலப்படுதல் திண்ணம். இதனைமேல உயர்குடிமைந்தரனைவரும் எத்தகைய பதவிகளைப் பெற்றிருப்பினும் தாய் தந்தையர்

இருவரிடத்தும் அன்பு செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்களென்பது அறிஞர் சம்மதமாம். இன்னும் விசாரிக்குமிடத்து " தாயைச் சிறந்ததோர் கோயிலு மில்லை " " தந்தை சொன்மிக்க மந்திரமில்லை" என்பன வாதிய விதிகளால் தாயைக்கோயிலாகவும் தந்தையைக் குருவாகவும் கொள்ள வேண்டிய தன்மையாகின்றது. இங்கே கோயில் என்பது கோ, இறைவன். இல், இருப்பிடம் என்று பொருள்படுமாகலானும்,

" காண்டகைய தங்கணவரைக் கடவளார்போல்
வேண்டவுறு கற்பினர் தம்மெய்யுரையினிற்கு
மீண்டையுள தெய்வதமுமாமுகிலு மென்றால்
ஆண்டகைமையோர்களு மவர்க்கு நிகரன்றே "

" வாள் விழிக்குல மங்கையரன்பர் போற்
றாள் விளக்கிய தண்புனற் கங்கையைக்
கேள்வரேகிளர் தேவர்கண் மூவரில்
ஆளுமெய்மை யடிகளேன்றெண்ணுவார் "

என்பனவாதிய சுருதி போதங்களாலும் கோயிலென்பது கற்புக்குலமகளாகிய அன்னை தந்தெய்வமாகிய கணவனையே இதயாசனத்திருத்தி நிற்பதுணர்த்திற்றென் றென்னுக. அல்லாமலும் ஈங்குகாட்டிய பிரமாணத்தால் மூன்று தேவர்களும், மகிற்குலங்களும் அவளாணை வழிபட்டு வேண்டியவாறு அநுக்கிரகித்து நிற்குமோருண்மை வெளிப்பட்டது. ஆனதுபற்றியே " மாதிருதேவோபவ " " தாயினிற் சிறந்த தெய்வமில்லை " " ஈன்றாளிலென்ன கடவுளுமில் " என்பன கேட்கப்படுகின்றன. இவ்வாதரவுகளைக்கொண்டு தாயைத் தெய்வமென்றும் பேசுவரான்றோர். அவ்வுபசாரங்கள் அத்தனையையும், அன்னையானவள் தன் இதயாசனத்தில் குடிகொண்டுள்ள தலைவனுக்கே அர்ப்பித்துநிற்பவளன்றி தனக்கோர் பூஷணமாகக் கொள்கின்றிலள் என்பது மேலோர் துணிபாம்.

4. இனிபத்மபுராணம் பாதாளகாண்டம் அ.88 சுலோகம் 48ல் திருப்தியானது அன்னத்தினையின்றி வேறொன்றினுமில்லை. தகப்பனைவிட வேறொரு குருவுமில்லை. பிராமணனைவிட சத்பாத்திரமுமில்லை. கேச

வனைவிட வேறுதெய்வமில்லை. எனக்கூறப்படுகிறதனாலும், கூர்மபுராணத்தில் உயர் தந்தைதன்னில் ஏயநற்குருவுமில்லை என்று காணப்படுதலானும் தந்தையே மைந்தருக்குக் குருவாயிருக்கிறார் ஆகலான் புத்திசாலிகளான மக்களனைவரும் இருமுதுகுரவரையும் பேணி உய்வரென்பது திண்ணம். இங்ஙனமாகவும் தாயினும், தந்தையே சிறந்தாரெனப்படிக்கும் நூல்களும் பலவுள, அவை வருமாறு ஆத்மாவை, புத்ரநாமாஸி, புத்திரன் பிதாவுடைய அம்சமாகின்றான். என்பது வேதவாக்கு அன்றியும்;

"சேற்றிற்பிறந்த செங்கழுநீர் போலப்
பிரமற்குக்கூத்தி வயிற்றிற் பிறந்த வசிட்டரும்
வசிட்டர்க்குச் சண்டாளிவயிற்றிற் பிறந்த சத்தியரும்
சத்தியர்க்குப் புலைச்சிதோள் சேர்ந்து பிறந்தபராசரரும்
பராசரருக்கு மீன்வாணிச்சி வயிற்றிற் பிறந்த வியாசரும்
[ஆகிய இந்நால்வரும்] வேதங்களோதி மேன்மைப்பட்டு
மாதவராகி வயங்கினரன்றோ"

என்றகபிலர் திருவாக்கானே வசிட்டர், சத்தியர், பராசரர், வியாசர். ஆகிய இந்த நால்வரும் தாயைப்பின்பற்றாமல் தந்தையைப் பின்பற்றியே பிரம்மவித்துக்களாய் பிரகாசித்தனர் என்பது வெள்ளிடைமலையாம். மேலும் வனவாசகாலத்திலே நச்சுப்பொய்கைக் கரையிலே யக்ஷன்வினைகளுக்கு உத்தரங்கூறுங்கால் "அன்னையே உலகத்தினும் பெரியவள்" "தந்தையே வானத்தினும் உயர்ந்தோன்" என்று தருமரே திருவாய்மலர்ந்தனர். அல்லாமலும் பரசுராமனாகத் திருவவதாரஞ் செய்தருளிய ஸ்ரீமன் நாராயணர்தாமே பிதுர்வாக்கிய பரிபாலனார்த்தமாகத் தமது தாயைக்கொன்றும் போட்டனர். அன்றியும், ஸ்ரீராமபிரானாகத் திருவவதாரஞ் செய்தருளிய அந்தத் திதி கர்த்தர்தாமே தம்பொருட்டனுகூலம் புரிவதேகருத்தாக கோபாவேசங்கொண்டெழுந்தருளிய இளையபெருமாளை நோக்கி "தத்துவமாகவுன்றன் புத்தியெல்லாம் வெள்ளை, தகப்பன் பேர் சொல்லுகிற பிள்ளையல்லவோ பிள்ளை" என்று அறிவுறுத்தருளினார். அதுவுமன்றி வனம்புகுவதற்குச் சிறிதும் சம்மதமேவாராத திருவுளத்தோடுகூடிய கருணைத்தாயின் நோக்கத்திற்கு இணங்காதவராய் பிதுர்வாக்கிய பரிபாலனம் ஒன்றனையே மேலானதென்று கண்ட

வராய் நாடுவிட்டகன்றருளினர் என்று இதிகாசம் முழங்குகின்றது. இவையும் அன்றி "தாயுடன் சென்றுபின் தாதையைக்கூடி" என்றார் பட்டினத்தடிகளும், உண்மை இங்ஙனமிருக்க "அன்னையானவள் தாதைக்குமதிகம்" என்று படிப்பதெல்லாம் ஆன்றோர்உபசாரவழக்கேயாம். இங்ஙனம் உணராதார் சிலர் சந்நியாசத்துவம் மறுபிறப்பானபடியால் சந்நியாசிகளைத் தம்பிள்ளைகளெனச்சிந்தியாது சிவமேயாகக் கருதுதல் வேண்டும் என்கிற விதிபற்றியாக்கும் தந்தை வணங்குவது வழக்கு என்கின்றனர். இவர்கூற்று யாவர்க்கும் உடன்பாடேயாம். இவர் சொல்லுகிறபடி வாஸ்தவமேயாயின் தந்தையின் உடைமையாயிருக்கும் தாய்க்கும் அதுதானே விதியாதல் வேண்டும். அங்ஙனமாகாமல் தந்தையின் உடைமைப் பொருளாகிய தாயை சந்நியாசிகள் வழிபடுதலும், அவர் காலின் கீழ்தாயை ஆளாகவுடைய தந்தையைப் பணிவுறுத்தலும் அழகாகுமா? இங்கு அரசனுக்கும் மந்திரிக்குமாக அடங்கியகுடிகள் மந்திரியைக் கும்பிட்டும் அரசன் தங்களைக்கும்பிடல் வேண்டும் என்றது போலும் ஆம். கல்வி அறிவு ஒழுக்கங்களிற்சிறந்த மேதை என்னும் மைந்தன்பால் அதிகப் பிரீதிகொண்ட சிர்க்காரி மகரிஷியானவர் ஒரு காலத்தில் மனைவியால்வந்த கோபாவேசத்தால் மகனைநோக்கி உன்தாயைக் கொன்றுபோடு என உத்தரவு செய்துவிட்டு வெளியே போயினர். புத்திசாலியான மேதையாயினோர் தந்தை சொல்லைக்கடக்க முடியாமையும், தாயைப்பிள்ளைக் கொல்லக்கூடாமையும் தர்மசாஸ்திரங்களில் நன்குணர்ந்தமையினால்மிகவும் யோசனையிலாழ்ந்து துக்காக்கிராந்தராகி தன் உயிரைமாய்த்துக்கொள்வதே நலமென்ற துணிவுற்றனர். அந்தருணத்தில் கோபங்கொண்டு குறும்பொறையிற் புகுந்த தந்தையார் சினந்தெளிந்து ஆச்சிரமத்தை நோக்கித் திரும்பி ஐயோ என்னே? மோசம் போனேம்! என் வாழ்க்கைத்துணையை வெட்டிவிட்டானோ, ஆ! தெய்வமே அவளைக் கண்ணிற்காணக்கிட்டுமோ, தெய்வமே நான் போகிறவரையிற் பேரறிவாளனாகிய என்பிள்ளை தாயைவெட்டாமலிருக்கானோ, என் மேன்மைக்குமாரன் பிதுர்வாக்கியத்தை பரிபாலித்தலுடன் நான் கோபத்திற் கூறினேன் என்று மறுவுத்தரவையும் எதிர்பார்த்துப் பொறுத்திருக்கின்றனனோ, நல்லறிவாளன் தாயைக் கொல்லவே துணியான், பரசுராமனைப் போன்ற பரபரப்புள்ளவன் எனது புத்திரனல்லன், "தூக்கிவினைசெய்" என்ற விதியை நன்குணர்ந்தவன், இருந்தாலும் என்னே எப்படியாயிற்

றே, என்று எண்ணுதும் எண்ணி மனம் புண்ணுகநொந்துகொண்டு ஓடியும் வந்தார், தன்மனைவியும், பிள்ளையும் எதிர்கொண்டு வந்து பணிந்து நிற்கக்கண்டு உள்ளங்குளிர்ந்து கண்ணீர் வெள்ளமாயோட பிள்ளையின் அறிவுடைமையை மெச்சி ஆசீர்வதித்து மனைவிக்கும் நல்லபுத்திகள் போதித்து மகிழ்கூர்ந்து வாழ்ந்திருந்தார்கள். நண்பர்காள் இச்சிர்க்காரி மகரிஷியின் புத்திரராசிய மேதை என்பாரைப்போல, தந்தை தாய் ஆகிய இருவர்மாட்டும் பேரன்புடையராய் நடந்துய்யமுயலுவதே உத்தமர்களின் கடமையாம். நிற்க, முடிவுரையாகச் சில விஷயங்களைக்கூறி இவ்வங்கத்தைப் பூர்த்தியாக்குவாம். அன்பர்காள்! முதன்முதலாக தந்தை, தமையன், பெரியதந்தை, சிறியதந்தை, பாட்டன், அத்தான், மாமன், முதலிய ஆண்வர்க்கங்களை எவ்வாறு அவர்கள், இவர்கள் என மரியாதையாயும், பணிவாயும், இனியவார்த்தைகளோடும், உபசாரமாக அழைக்கப்படுகின்றோமோ, அஃதே மாதிரியாக நம்முடைய தாய், தமக்கை, சிறியதாய், பெரியதாய், தமையன்மனைவி, அத்தை, பாட்டி, தங்கள், தங்களின் மனைவிமார் முதலாய பெண்வர்க்கங்களையும், அவர்கள், இவர்கள் என மரியாதையாயும், பணிவாயும், இனியவார்த்தைகளோடும் உபசாரமாகவே அழைக்கப்படல் வேண்டும்.

a. தந்தையைவிடத்தாயே சிறந்தவள் எனமிகத் தெளிவாய்த் தெரிந்துகொண்டிருந்தாலுங்கூட தந்தையின் மாட்டு அன்பு குறைதல் கூடவே கூடாது.

b. தந்தையார்க்குரிய ஒவ்வொரு அதிகாரச்சட்டங்களும், முறைகளும், சுதந்தரங்களும்; தாயார்க்கும் உண்டென்பதை தற்கால நாகரீகவழக்கியல்களாமென உணர்தலும் வேண்டும்.

c. தாய் தந்தையர்களைவிட எத்துணைமடங்கு கல்வி கற்றவர்களாயினும், பேரறிவாளர்களாயினும், செல்வம் தேடுபவர்களாயினும் அவர்களை எற்றும் அவமதித்தல்கூடாது.

d. அவர்களின் குழந்தைகள்தானே நாமென, மறந்துவிடாமற்றெரிந்து எவ்வகைத்தாலும் அவர்களுக்குக் கீழ்ப்படிந்தேதான் ஒழுகுதலும் வேண்டும்.

e. நம்முடைய வகுப்பாருள் சிலர் தங்கள் தங்களின் தாய் தந்தையர்கள் மலையைப்போன்று அவர்கள் இருக்கும் ஞான்றே எமக்குப்

பாகத்தைப் பிரித்துவிடுமென மல்லுக்குநிற்கிறார்கள். இவர்களின் அறிவு விசேடத்தை என்னவென்க் கூறுகிறது. இவர்கள் எத்துணை தூரம் கற்றவர்களாயிருந்தாலுமென்? நற்றவர்களாயிருந்தாலுமென்? தாய், தந்தையர்கள் மாட்சியை இஃதென உணர்ந்துகொள்ளாது போனால் யாது பயன்? இவர்கள் தங்களின் தாய் தந்தையர்கள் இறந்துபோயதன் பின்னர் 10வது நாட்களுக்குள்ளே 50 ஆயிரம் 60 ஆயிரம் ரூபாய்கள் வரை வாரி இறைத்துத் தானதரும முதலியகரும மாதிகளையுஞற்றித்தான் யாதோபயன்? அவர்கள் இறந்து போயதன் பின்னர் அவர்கள் வைத்திருந்த பெருஞ்செல்வங்களெல்லாம் யாவர்க்கு உரியதோ? அன்பர்காள் அக்கொடிய வழக்கங்களை வேரறத்தொலைத்தலும் வேண்டும்.

f. அவர்கள் சம்பாதித்த பொருள்களை எல்லாம் ஒருங்குஞ் சூதாடித்தோற்று விட்டாற்றான் என்னை? வேசையர்கள் வீட்டிற்குக் கொடுத்து மோசம் போய்விட்டாற்றான் என்னை? அவர்களின் மனம் போதிய வழிகளால் யாதொரு நற்பயன்களும் இன்றிச்செலவு செய்து விட்டாற்றான் என்னை? நாமும் மனிதவர்க்கமன்றோ? அவர்களுக்குண்டான ஒவ்வொரு தத்துவாதிகளும் நமக்கும் இன்றோ? நாமும் ஏன் அவர்களைப்போன்று சம்பாதித்தல் கூடாது? அவர்கள் தேடிய பொருளும், அவர்களின் மூதாதைகள் தேடிய பொருளுந்தானே போயிற்று, நாம் தேடிய பொருளாபோயிற்று? என்பதைத் தெரிந்து அவர்களின் பணிவையே நித்தியவநுட்டான கருமங்களாக உஞற்றுதல் வேண்டும்.

g. அவர்கள் செய்யும் பிழைகளுக்காகத் தண்டிக்குங் கர்த்தா நாமல்லவென்பதையும் உணர்தல் வேண்டும். தேவாம்சமாக உதயமாயிருப்பின், அச்சிறுவர்கள் செய்யும் காரியாதிகள் புறம்போயாம்.

h. நாம் எந்த அயல் நகரங்களிலே இருப்பினும் அவர்களின் க்ஷேமலாபங்களை அடிக்கடி எழுதித்தெரிந்து கொண்டிருத்தலும் வேண்டும். அவர்கள் வேண்டுமென எழுதிக்கேட்கும் சாமான்களையும், ரூபாய்களையும் உடனுக்குடன் அனுப்பிக்கொண்டிருத்தலும் வேண்டும். அவர்கள் தலயாத்திரை செய்ய வேண்டுமென விரும்பினால் அதனை அங்ஙனே

பூர்த்தியாக்குதலும் வேண்டும். நம்மாலே செய்யப்பெறுகிற எந்த விஷயங்களை விரும்பினும் விரும்பிய அங்ஙனே பூர்த்திசெய்து கொடுத்தலும் வேண்டும்.

i. ஏதோ ஒரு காலத்தில் சினங்கொண்டு தாறுமாறுமாக வார்த்தையாடுவார்களாயின் அதனை அன்போடும் பொறை செய்தல் வேண்டும். கோலாற்புடைப்ப நோக்கினும் எதிர்த்து வார்த்தையாடுதல் கூடாது. 50 வயதுக்கு மேற்பட்டு விடுமாயின், அவர்களுக்கு வேண்டும் சுகாதாரமுறைகளை யெல்லாம் நாமே கவனித்தல் வேண்டும். பெரும்பான்மை நல்ல சுகசரீரிகளாயுள்ளவர்கள் 70, 80 வயதுகள் வரையோ அல்லது அவர்கள் சாகும் நாள்வரையோ தங்களுக்கு வேண்டும் ஒவ்வொரு சுகாதார முறைகளையும், தங்களுக்குத் தாங்களே போதியவரை யமைத்துக்கொள்வதிலும், தங்களைத் தாங்களே ஓம்பிக்கொள்வதிலும் பூரணதத்துவமுடையவர்களே யாயினும், "ஏவாமக்கண் மூவாமருந்து" என்னும் வேதவாக்கின்படி அவர்களின் ஏவுதலைப்பெறாது அவர்களுக்கு வேண்டுவனவற்றை யெல்லாம் அவர்கள் உள்ளிய அங்ஙனே ஆற்றத்தகுந்த "காமதேனு" "கற்பகதரு" அமிர்தவஸ்துக்களாகவும், ஒரு வித அடிமைகளாகவும், நம்மைப் பெற்றுக்கொண்டார்களாகையான் எந்த ஞான்றுமே அவர்களை நாமே கவனித்தல் வேண்டுமென்பதும் சட்டமாயிற்றென்க.

j. அவர்களுக்கு எந்தப் பருவங்களிலாவது பிணிகளுறுமாயின் அப்பிணிகளுக்கு தக்க தக்கவாறு நம்முடைய நாட்டு வைத்தியர்களாலோ, டாக்டர்களாலோ வேண்டுஞ் சிகிச்சைகள் செய்வதில் எற்றும் பின்னிற்றல் கூடாது. அந்த ஞான்றுகளில், மலஜலாதிகண் முதலிய துர்விஷயங்கள் ஏற்படின் அவைகளை நாமே உடனுக்குடன் துப்புரவுசெய்து கொண்டிருத்தல் வேண்டும். படுக்கை முதலியவைகளையும், அவ்விடத்தையும் அடிக்கடி சுத்தஞ்செய்து கொண்டிருத்தலும் வேண்டும். எவ்வகை முகாந்தரங்களைக் கொண்டாவது நம்மாலே மேற்குறித்த வேலைகளைச்செய்ய முடியாவிடின், மனப்பூர்வமான அன்போடு செய்யத்தகுந்த ஒரு வேலைக்காரனைத் தீர்மானித்துக் கோடலும் வேண்டும். அந்தக் காலங்களில் அவர்களுக்காகச் செலவுசெய்யும் தொகைகளில் எற்றும்

செட்டுச் செய்தல்கூடாது. அதனைப்பற்றி மனவருத்தம் வைத்தலுங் கூடாது. அவர்களுக்கு 60, 80வது வயதுகளிலேசெய்ய வேண்டுஞ் சடங்குகளை நம்முடைய மனப்பூர்த்தியோடும், சீர் சிறப்போடுங்கூட நம்முடைய ஆசிரியன்மார்களாலே ஒழுங்காகவும், முறையாகவும், நமது சுற்றத்தார் ஒவ்வொருவர்களுக்கும் நன்குவுணரத்தக்கதாக விருந்து முதலான பல அறச்செயல்களோடுங்கூட மிகச் செவ்வையாய் நடத்துதலும் வேண்டும். அவர்களுக்கும், எமக்கும் விரோதமாமென்று ஒருகணப்போழ்தே எனினும் மனவருத்தத்தோடு பேசாதிருத்தலுங்கூடாது. அவர்கள் துஞ்சும் நாள்வரை எவ்வகைத்தான துன்பங்களும் அவர்களின் பாலுட்கார்ந்துகொண்டுழப்பியாதவண்ணம் பாதுகாத்தலும் வேண்டும். நம்மாலேயும் எவ்வகைத் துன்பங்களும் நிகழ்தல் கூடாது. ஒருவாறு முடியுமாயின், அவர்களின் எமலபியை விலக்குதலும் நமது கடமையேயாம். ஆன்றோர்களாலே, அவர்களுக்கு மக்களாகிய நம்மாலாற்ற வேண்டும் கடமைகள் விதித்துக்கிடக்கும் ஒருங்கையும், எற்றுந் தவறுதலின்றியும், கோடுதலின்றியும், வேண்டும், வேண்டுங் காலங்களில் ஊக்கத்தோடும், உற்சாகத்தோடும் செய்வதில் எவ்வகை முகாந்தரங்களைக்கொண்டும் பின்னிற்றல் கூடாவாம்.

k. அவர்களை நாமாயவாறும், நாமே அவர்களாய் நிற்குமாறும் செவ்வையாகவுணர்தல் வேண்டும். அவர்கள் வானுலகம் எய்ததன் பின்னரும், அவர்கள் ஞாபகார்த்தமாகச் செய்ய வேண்டும், எந்தக் கடமைகளையும் விடாது செய்து வரலும் வேண்டும். எவ்வகைத்தானும் யாம் இங்கே கூறுவதெல்லாம் தாய் தந்தையர்களுக்குச் செய்யவேண்டும் ஒவ்வொரு கடமைகளையும், தங்கள் தங்களின் மனப்பூர்வமான பக்தி சிரத்தையோடும், அன்போடும், பணிதன் முதலாய இன்சொற்களோடும், சினமுதலாய துர்க்குணமின்மையோடும் ஆற்றுவதோடும்; அவ்வவ்க்காலங்கள் மாறுபட்டு முறை பிறழ்தலின்றியும்; நம்முடைய சைவ சமய நூன்முறைச் சட்டங்களின் பிரகாரம் வரன்முறையான ஒழுங்காகவும்; நமது வகுப்பைச்சார்ந்த வறியர் முதலாகப் பெருஞ்செல்வர்கள் ஈறான ஒவ்வொரு குடும்பத்தவர்களும் அவ்வவர்களின் எதா சக்திக்குதக்க தக்கவாறு தாழ்வின்றியும், கட்டாயமாகவும் செய்து தீரல் வேண்டுமென்பதூஉமேயாம். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

எம்மருமைச் சகோதரர்களே! காலதருமத்தின் இயற்கை இற்றெனத் தெரிந்தாலொழிய இஞ்ஞால வாழ்க்கையானது எந்தச் சகோதர சகோதரிகளுக்கும் இன்பத்தைத் தாராவாகலின் இவ்வங்கத்தை இங்கே அமைக்கப்பட்டதெனத் தெரிக.

அன்பர்காள்! நம்முடைய சைவசமயத்திற்கு முதன் முதற் கடவுளாக விளங்கும் செல்வ விநாயகன் திருவருள் விலாசப் பெருக்கத்தால் இங்ஙனம் "யுகதருமம்" என்னும் அங்கத்தை வரையத் தொடங்குவாம். நன்குகவனியுங்கள். அஃதாவது இவ் யுகதருமம் என்னும் தொடர்மொழியை யுகம் வேறு, தருமம் வேறாகப்பிரித்து ஆய்ந்து நோக்கி விரிக்குமிடத்து, யுகம் என்பது கிரேதாயுகமென்றும், திரேதாயுகமென்றும், துவாபரயுகமென்றும், கலியுகமென்றும் நான்கு வரையறைகளாகத்தானே காலத்தை பகலென்றும், இரவென்றும், விநாடியென்றும், நாழிகையென்றும் நாளென்றும், வாரமென்றும், மாஸமென்றும் அளவுபடுத்துவதைப்போன்று, அளவுபடுத்தும் ஓர் தலையாய கருவியேயாம்.

தருமம் என்பது, அக்கால பேதத்தாலுண்டாகும் உலக நடை உடை பாவனை முதலியவைகளே யாமென்ப மேலோர் இவை நிற்க,

மேற்கூறப்படுகிற நான்குயுகங்களினும், கிரேதா, திரேதா, துவாபர என்னும் மூன்றுயுகங்கள் கழிந்து போயின வென்பதூஉம், தற்காலவரை நிகழ்தல் கலியுகமே யாமென்பதூஉம் எவரும் தெற்றெனத் தெளிந்ததேயாம்.

1. ஆய்ந்து நோக்குமிடத்து கடந்த மூன்றுயுகங்களினும் மிகுந்த நன்மைகளையும், நானாவிதமான நாகரீகங்களையும், அளவுகடந்த இன்பாதி போகங்களையும், சிவஞானயோகச் செல்வ முதலாய கற்பகோடிகால வாழ் நாட்களையும், இன்னும் ஏனைய பல்வகைச் சக்திகளையும் எளிதிற்பயக்கும் நமது கலியுகதருமத்தின் காலக்கிரம மென்னும் செங்கோல் மன்னவன் சீர்வழிமீஇ அம்மன்னவன் சட்ட முறைகளைப் பின்பற்றி நாமியலவேண்டுவதே முதன் முதற்கடமையாம்.

2. சகோதரர்களே! ஆய்ந்து நோக்குங்கள். பொதுவாக தோற்

றப்படுகிற பகலவன், மதியம் முதலாய எந்தக் கருவிகளும், எந்த அண்டங்களும், எந்தப் பொருள்களும் இஃதெனத் தோற்றப்படாத ஏகப் பரவெளியினிடத்தே இருந்துதான் தோற்றப்படுகிறதென்னும் வாய்மையானது ஓர் புறம் நிற்பினும், யுகதருமம், நவீன நாகரீகங்கள் அடங்கிய நூன்முறைச் சட்டங்கள், முதலியன மிகத்தூய்மையான அறிவினிடத்தேயிருந்து தான் தோற்றப்படுகிறதென்பதற்கு யாதேனும் ஐயம் உளதோ? எந்த யுகங்கள் ஆயினும், அந்த, அந்த யுகங்கள், அல்லது அந்த அந்தக்காலங்களில், அந்த, அந்தப்பகுதிகளிலே யுடைத்தான ஆன்றோர்கள்; சிவஞானயோகப் பெருஞ்செல்வர்கள்; முனிவர்கள்; எவ்வகைத்தானுங்கூடிய கல்விப்பயிர்ச்சி யறிவானுந் தேர்ச்சியடைந்த நாவல்லவர்களாலே வகுக்கப்பட்ட நூன்முறைச் சட்டங்களாதலால்; அந்த, அந்த யுகதரும காலங்களில் அந்த, அந்த நாகரீகங்களும்; நூன்முறைச்சட்டங்களும்; ஆங்காங்கு மிக்க உயர்ந்தனவாகவே தான் தோன்றி, தற்காலத்திய ஆன்றோர்களாலேயும், ஆதரிக்கப்பட்டு பண்டைய ஞான்று மெக்குகளென, இப்போழ்துஞ் சில நூன்முறைச்சட்டங்களை நழுவவிடாது அஃதினையநுசரித்தே நாமும் இயலப்படுகிறோம். இன்னும் அந்த, அந்த யுகங்களில் உடைத்தான ஆன்றோர்களாலேயும், ஆண்டகை பொருந்திய சூத்தவீரர்களாலேயும், அந்த ஒவ்வொரு யுகங்களும் எவ்வகைத்தானும், எந்த ஞான்றும் அழியக்கூடாத பெரும்புகழினை நிலை நிறுத்திக்கொண்டன.

3. ஆகலின், எம் அருமைச் சகோதரர்களே! ஆய்ந்து நோக்குங்கள். எந்த யுகங்கள், அல்லது எந்தக் காலங்களேயே எனினும், நாம் எந்த வாற்றானும், எவ்வகை முகாந்தரங்களை எடுகொடுத்தே எனினும், குறை கூறலாகாது. எந்த யுகங்கள் அல்லது எந்தக் காலங்களும், நமக்கு நல்ல யுகங்கள் அல்லது நல்ல காலங்களேயாம். ஆகலின் தற்காலவரை நாம் இயலவேண்டுவது நம்முடைய கலியுக தருமத்தின் காலக்கிரம நூன்முறைச் சட்டங்களைப் பின்பற்றியே யல்லது, ஏனைய எந்த யுகங்களின் நூன்முறைச் சட்டங்களையும் நாம் கனவினுங்கூட நினைத்தல் ஆகாது. அக்காலத்திய வியற்கைகளையும் இக்காலத்திய வியற்கைகளையும் சீர்தூக்கிப்பார்த்தலும் வேண்டும். நிற்க.

4. நம்முடைய கலியுக தருமமானது பிறந்து 5000 வருஷங்களுக்கு மேற்பட்டும், நம்முடைய கலியுக தருமத்தின் காலக்கிரம நூன்முறைச் சட்டங்களை வர வரப்பயின்று முறையே அதன், அதன் பின் பற்றியொழுகாது, ஒழியுவோமாயின், ஏனைய பகுதிவர்க்கங்களொருங்கும் நம்மை, மிகுதியும் பித்தமற்ற சுத்த சரீரிகளாயுள்ளவர்களென்றும்; உயர்தர நாகரீகத்தன்மை வாய்ந்த கல்வியுடையவர்களென்றும்; எவர்களும் வியப்பத்தகுந்த அறிவுடையவர்களே என்றும்; பேரறிவாலே பொதியப் பெற்ற ஆண்மையுடையவர்களே என்றும்; காலத்துக்கேற்பவியலத்தெரிந்த உயர்தர மனிதவர்க்கத்தாரே என்றும்; புகழ்ந்து கூறுவதின் பயனில்லை யாங்ஙனம் விளங்கும். நம்முடைய அறிவின் ஏற்றத்தை எந்த விதத்தில் வைத்துக்கூறுகிறது. எந்த யுகங்கள், அல்லது எந்தக் காலங்களும், எந்தப்புதிய நாகரீகங்களும் இந்த ஞாலம்பற்றுக்கோடாகவே தான் நிகழ்கிறதென்பதை நாமெவர் உணர்தல் வேண்டாவோ? நாமும் மனிதவர்க்கமேயாமன்றோ? இன்னும், சிலர் நம்முடைய கலியுக தருமத்திலேயே பிறந்து வளர்ந்தவர்களாயிருந்தும், வாய் புளித்ததோ? மாங்காய் புளித்ததோ? என்பதையுணராமல் தாறுமாறுமாக வெறிகொண்டவர்களைப்போன்று, தங்களின்மனம்போதியவாறெல்லாம் வரைகடந்த குறைகூறுகின்றார்கள். இன்னுஞ் சிலர் கலிகாலக்கொடுமையென சிந்துக்களும் பாடுகிறார்கள். இன்னுஞ் சிலர் செய்யுள் வடிவங்களாயும், சுலோக வடிவங்களாயும் பேப்பர்களுக்கும் வரையத் தலைப்படுகிறார்கள். காரணம் என்னவோ அறியேம். கல்வியென்றே தான் பகர்தல் வேண்டும். யுகதருமத்தைப்பற்றி நன்றாகவுணர்தல் வேண்டும்.

5. காலபேதத்தாலுண்டாகும் சீர்திருத்த நாகரீகம், பற்பல உலகவியவகாரங்கள், நடையுடை பாவனை முதலியவைகளுக்குத் தருமம் என்னும் பெயர் வருவானேன்? அவ்வாறு எதற்காக நம்பண்டைக் காலத் தான்றோர்கள் வகுத்து வைத்திருக்கிறார்களென்பதை நண்பர்காள் கவனித்தீர்களா? காலங்களுக்கேற்ப நூன்முறைச் சட்டங்களும்; நடையுடை பாவனைகளும்; இன்னும் ஏனைய பற்பல உலக வியவகாரங்களும்; ஒருங்கே மாறுதலடைந்து, எத்துணை தூரங்கடந்த தத்துவ ஞானிகளுங்கூடக்கண்டு அதிசயிக்கத் தக்கவாறு புதிய புதியனவாகத் தோற்றப்படினும், அவைகளும் தருமவழியே யாமென்பதை எவர்களுந்

தெற்றெனத்தெளிதற் பொருட்டேயாம். எந்த யுகம் அல்லது எந்தக் காலத்தை நாம் நல்லனவாகக் கருதப்படுகிறோமோ அல்லது கெட்டனவாகக் கருதப்படுகிறோமோ? அந்த யுகம் அல்லது அந்தக் காலத்திலுண்டாம், நடையுடை பாவனை முதலிய வியற்கைகளுக்கும், யுகதருமம் என்று தானே பெயர் வைத்திருந்ததாகக் காணப்படுகிறது. அப்படியாயின் பழயமுறைகள் மாறி, புதிய முறைகளைக்கையாண்டு வந்த உயர்தரமான எந்த மேதாவிகளும் கவலை கொண்டிருந்திருப்பார்களென்பது யாங்ஙனம் விளங்குகிறது. எத்துணை தூரம் யுகதருமங்கள் தலைகீழுங் கான் மேலுமாக மாறுதலடையினும், ஈசனென் பானொருவன், நேற்று, இன்று, நாளை அஃதாவது மூன்று காலங்களுக்கும், அதனைச்சார்ந்த பற்பல யுகங்களுக்கும், எற்றானும் மாறுதலடையாது, ஓரே தன்மையதாக நடுவுநிலைமையிலேயே நின்று, அந்த, அந்த யுகங்கள் அல்லது அந்த அந்தக் காலங்களினும், நல்வழக்கம் ஒன்றால் குவலயம் கேடுறா வண்ணம் தம் சங்கற்பத்தை பற்பலவழிகளானும், நிறைவேற்றி வருகிறானென்பது அறிஞர்கள் எவரும் தெள்ளிதிலுணர்ந்த விஷயமேயாம். இன்னும், ஏகமாயும், அகண்டமாயும், என்று மாறாதநித்தியமாயும், ஆத்மஸ்வரூபியாயும் விளங்கப்படுகிற நம்முடைய பரசிவப்பெருமான் எற்றோடும் பூரணமாக நிறைந்திருக்கிறானென்பது நிச்சயமேயாயின், யுகதருமமாய் விளங்குகிறதும் அவனே யாமென்பதிற் சந்தேகமென்னை? ஆய்ந்து நோக்குமிடத்து, கலியுக தருமமானது மொத்த வருஷத்தில் இதுகாறும் நூற்றிலொரு பாகந்தான் சரிவர பூர்த்தியாகியிருக்கிறது போலும் தெரிகிறது. அதன் முன்னரே ஏனைய பகுதிவர்க்கங்களை நேரொப்பி நிற்கவினவும் நானாவிதமான நாகரீகங்களையும், நூதன சக்திகளையும், நமது பரதகண்டத்துத் தோற்றப்படுகிற ஒவ்வொரு இந்தியனும் ஓரே தாயின் வயிற்றிற் பிறந்த சகோதரர்கள் தான் என்னும் மெய்ஞ்ஞானபோத உணர்ச்சியையும், நமக்குத்தந்து ஈண்டும் பல்லாயிரங்கோடியண்டங்களையுந் தமது காலக்கிரமத்தில் ஏகச் சக்கராதிபதியாய் செங்கோலோச்சக்கூடிய வலிய நவீனசக்திகளையும் நமக்குத்தரத் தகுந்தது பாங்குள பற்பல தேவபாஷைகளினுங்கூட மிக்க உயர்தரமான நம் அங்கிலோபாஷையும், அவ்வாசிரியன் மார்களாய நமதரசியன் வகுப்பாருமே என்று சொல்லப்படுகிற புகழொலிகளையே மணிகளாகக் கோர்த்த கெச்சங்களை, பற்பலவாய புதிய நூன்முறை சட்டங்கள் நிறைந்து விளங்கும். புஸ்தகங்

கள் என்று சொல்லப்படுகிற தமது அழகுவாய்ந்த இரண்டு திருவடிகளி லும் ஆர்த்துக்கொண்டு நம்முன்னே நடனமாடுகிறது. எம் அருமைச் சகோதரர்களே இம்மாதிரி நடனமாடும் நமது கலியுக தருமமானது தமது காலாதி பூர்த்தியாகிறவரை எம்மாதிரி நிலையிலும், எந்த மாதிரி யான புகழிலும் நிற்குமென்பதை யாங்கூற வலியமல்லேம். அவைகளை யெல்லாமொருங்கேயாம் வரைதல் வேண்டுமாயின், எம்முடைய ஆன்மா வானது, தாம் எண்ணியவாறு மாறி, மாறி, வேறு, வேறு உயர்தர தேவ சரீரங்களாகி எத்தனை பிறவிகள் தோற்றப்படினும், ஆயுள் போதாவாம். கவனியுங்கள்.

6. கால தருமமானது எவ்வாறு நிகழ்கிறதென்பதைக் கவனி யுங்கள். நமது பரதகண்டத்துள் பெருந்தகையான எந்த எந்த மேதா விகளின் தூய்மையான அறிவினிடத்தே புகுந்து வேலை செய்கிறதென் பதையுங் கவனியுங்கள். கால தருமகர்த்தா வென்னுங்கிரவன் தோற் றப்படுகிற முச்சகங்களுக்கும் ஒருவனே என்பதூஉம், அவன்றன் கிர ணங்கள் தோற்றப்படுகிற எந்த ஒவ்வொரு வஸ்துக்கள், அல்லது ஒவ் வொரு பொருள்களின் உள்ளும், புறமும், ஒருங்கே எங்கணும் தோய்ந்து கொண்டிருக்கிறதென்பதூஉம், அறிவாளிகளாயுள்ள ஒவ்வொரு சகோ தரர்களும் நன்குணர்ந்த விஷயமேயாம். கால தருமத்தை ஏற்றுக்கொ ண்டியலும், ஏனைய கண்டங்களையும், அதன் பாற்றோற்றப்படுகிற பல தலை நகரங்களையும், நமது ஏசியா கண்டத்தையும், இதன்பாற் றோற்றப் படுகிற ஒவ்வொரு தலை நகரங்களையும், நமது நாட்டுக்கோட்டை நாடு நகரங்களையும் மிகச் செவ்வையாகச் சீர்தூக்கிப்பாருங்கள். காலதருமமா னது எற்றானும் வஞ்சநெஞ்சமற்றதாமென்பதை யுணருங்கள். மிகுந்த சீர்சிறப்போடும், அறம், பொருள், இன்பம் வீடு என்னும் நான்கு புருஷார் த்தங்களோடும் பொருந்தி, பற்பல சீர்திருத்தங்களினும் நானாவித நாகரீ கங்களினும் முச்சகங்களும் மெச்சத்தகுந்த வியாபார முறைமைகளினு மளவிலாத் தேர்ச்சியடைந்து, காலத்துக்கேற்ப வியனுமாற்றலில் மிகுர மான ஆண்டகையுட்டங்கி வாழ்தற்குரிய தேசாபிமானம், பாஷாபிமா னம், மதாபிமானம், ஜனாபிமானம், ஜாதிய ஐக்கிய உணர்ச்சி, பொதுக் காரியத்திலக்கறை, கூட்டுறவு, அடக்கமுள்ள நன்னடக்கை, விடாமுய ற்சி, தளர்ச்சியின்மை, மனோதைரியம், அன்பு, தயை, பொறை, ஆண்மை,

உ
திருச்சிற்றம்பலம்.

Nattukcottai Vaiciyam.
நாட்டுக்கோட்டை வைசியம்.

தொகுதி க. | ராக்ஷஸ௵ வைகாசி மீ | பகுதி கஎ.

யுகதருமம்.

முன் 16-வது புத்தகம் 284-வது பக்கத் தொடர்ச்சி.

அடைந்தோரைக் காத்தல், இந்திய தேசத்துட்பிறந்த எந்த மனிதரும் நம்மோடுடன் பிறந்தாரும் சகோதரரே யாமென்னும் உண்மையுணர்ச்சி, நம் நகரத்தாரெல்லாம் ஏகாங்கமான ஒரே குடும்பமாக வாழ்தல் வேண் டுமென்ற ஞாபகசக்தி, இன்னும் இவைபோன்ற பலவிதமான நற்குணங் களையும் தானே நம்முடைய நாடுநகரங்களிற் கொணர்ந்து பரப்புஞ் சக் தியுள்ளதாமென நினையுங்கள். எற்றானுந் தூக்கமின்றி உயர்தரப்பட்ட எந்நாகரீகங்களையும், எந்த நவீனசக்திகளையும், எந்தத் தேவஉலகத் திலே உள்ளனவாக இருப்பினும், ஒருவருடைய வேண்டுகோளின்றித் தானே ஆங்காங்கு சென்று நமக்கு வேண்டுவனவற்றையெல்லாம் ஆரா ய்ந்து தெளிந்து பொருக்கியெடுத்து, பெரிது, பெரிதான மூட்டைகளாக க்கட்டிக்கொணர்ந்து நம்முடைய நாடுநகரங்களிலே அவிழ்த்துக் கொட் டி பரப்பும் ஓர்வித நீராவியந்திரமாமென நம்புங்கள். கால தருமத்தை த் திர்க்க எவரானும் முடியாதாமென்க. அதனையொட்டி ஒழுகுதலே நமது கடமையாமென்க. எந்தப் பகுதியார்களாலும், எந்த அரச வகு ப்பார்களாலும், எந்த மேதாவிகளாலும் அதனை அடக்கி வைத்துக்கொ

ள்ளமுடியாதாமென்க. தற்காலவரை ஆய்ந்து நோக்குமிடத்து நம்முடைய கலியுக தருமத்தின் காலக்கிரமமானது, வளர, வளர பாரதமாதாவின் புத்திரர்களாகிய நம்மவர்களின் கருத்துக்களும், நடையுடை பாவனை முதலிய சுகாதாரங்களும்; வெறுப்பு விருப்புக்களும், நானாவிதமான கல்வியபிவிர்த்தியும், ஒற்றுணர்ச்சி முதலிய ஆசாரச் சீர்திருத்தங்களும், முற்காலத்து நிலைமையைப் போலிராமல், நாளுக்கு நாள் ஏனைய பகுதி வர்க்கங்களை நேரொப்பப் புதிய, புதியனவான நுண்ணிய நாகரீகங்களையும், தோன்றி வளர்ந்து வருவதே போதியசான்றாம்.

7. யுகதருமத்தின் தன்மையை இற்றென நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும், தெரிந்துகொள்ள வேண்டியதும் ஆவசியகமேயாம். அவ்வாறு தெரிந்து கொண்டாற்றான் இஞ்ஞால வாழ்க்கையானது நமக்கு இன்பத்தைக் கொடுக்குமாம். கடந்த மூன்று யுக தரும் காலத்திய நூன்முறைச் சட்டங்களையும், அக்காலத்திய மனித வியற்கை முதலாய உலக வியற்கைகளையும், அக்காலத்தியவர்களின் அற்புத சக்திகளையும், ஆயுட் பிரமாணங்களையும், அரசியன் முறைகளையும், அவ்வரசர்களின் வல்லாசுத் தன்மையையும். இங்ஙனமியலும் கலியுக தருமத்தின் மேற்கண்ட எல்லா விஷயங்களையும் நன்கு சீர்தூக்கிப் பார்த்தலும்வேண்டும். காலவியற்கை மாறுதல்களைப்பற்றி மிகச் செவ்வையாயுணர்தலும்வேண்டும். அவைகளைப்பற்றி நமது நெஞ்சிடை எற்றும் பயங்கரம் வேண்டாம். காலதருமத்தால் நம்மனதில் பிறக்கவேண்டுமென்று கருதப்படுகிற குறை குணங்களைக் கவனித்தல்வேண்டும். அதனை நாம் எதிர்க்கவேண்டாம், ஒருவாறு கவனிக்குமிடத்து அஃது முடியாத வொருகாரியமுமாகும். அதுகொண்டு வந்து பரப்பும் எந்த வியற்கைகளையும், எந்த விஷயங்களையும் நாம் உபயோகப்படுத்தலே நலம். காலதருமமாகிய புதிய நூன்முறைச் சட்டங்களில் ஆராய்ச்சியோடு புகுங்காற்றடுக்கும், முரட்டுச்சுபாவங்களைச் சிதைத்தலும்வேண்டும். கழிந்துபோன மூன்று யுகதர்மகால வர்த்தமானங்களையும், அரச கர்த்தர்கள், வேத கர்த்தர்கள், ஆகம கர்த்தர்கள், இதிகாச கர்த்தர்கள், தர்க்க கர்த்தர்கள், தர்ம கர்த்தர்கள், அற்புத கர்த்தர்கள், கீர்த்தி கர்த்தர்கள், பாஷா கர்த்தர்கள், ஞான கர்த்தர்கள், வீர கர்த்தர்கள், முதலிய பெருந்தகையாளர்களின் இலக்கணங்களையும், தற்காலத்திய 5000 வருஷத்து

ஆண் மகன் கற்பு.

1. நோக்கின்றிக் கண்டு நனி கையின்றிக் கோடுத்து மறைநுவல்வதாய, நாக்கின்றி யறுசுவையு மினிதுணர்ந்துங்காலின்றி நடத்தல் செய்து, மூக்கின்றி மணங்கவர்ந்துஞ் செவியின்றிக் கேட்டுமறை முதல்வர் யார்க்கும், வாக்கன்றி மனத்தினுக்கு மெட்டாத, எல்லாம் வல்ல நமதிறைவன் இரண்டு திருத்தாள்களுக்கும் அஞ்சலியாற்றி இங்ஙனம் ஆண் மகன் கற்பு என்னும் அங்கத்தை ஒருவாறு மிகச் சுருக்கமாயும், கூடியவரை மிகத் தெளிவாயும், அடியேமுடைய சிற்றறிவிற்கு எட்டிய ஒருவாறு வரையத் தொடங்குவாம்.

2. அஃதாவது பெண்மக்களான நமதருமைச் சகோதரிகளுக்குக் கற்பு நிலை எத்துணை ஆவசியகமாகக் கருதப்படுகிறோமோ அஃதே மாதிரியாக நமதருமைச் சகோதரர்களான ஆண் மக்களுக்காக வேண்டும் கற்பிலக்கணங்களையும், அவைகள் நமதன்பார்ந்த சகோதரர்களுக்கு இன்றியமையாது வேண்டும் ஆவசியகப் பொருளே யாமென்பது பற்றியுங் கவனிப்பாம்.

3. முதன்முதலாகப் பெண்மக்களுக்குத் திருமாங்கல்யமென்று தன் கணவனைக் குறிப்பிட்டு எந்த ஞான்றும் எவ்வாறு ஓரடையாள வஸ்துவைக் கட்டிக்கொண்டிருப்பச் சட்டமொன் றேற்பட்டிருப்பதைப் போன்று, நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களுக்கும் திருமாங்கல்யதாரண முகூர்த்தத்தன்றே தன் மனைவியைக் குறிப்பிட்டு எந்த ஞான்றும், எந்த வாற்றானும், தங்களின் மனைவியொழிந்தாலொழிய நீங்காத அடையாள வஸ்துவொன்றைத் தங்களின் கைகளிலேனும், கண்டங்களிலேனும் கட்டிக்கொள்ளல் வேண்டுஞ் சட்டமொன்று கட்டாயமாக ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

4. அஃதாவது அத்திருமண முகூர்த்தத்தன்று மணமகன் கையாலே மணமகளுக்கும், மணமகள் கையாலே மண மகனுக்கும், ஆக ஒருவருக்கொருவர் கட்டிக்கொள்ளல் வேண்டும்.

5. விவாஹமாகிய மனிதனென்பதை ஏனைய எவர்களுக்குந் தெற்

றெனச் சரீரத்தை நோக்கிய வங்ஙனே விளங்கச் செய்தலும் வேண்டும்.

6. அவ்வடையாள வஸ்துவானது உருத்திராக்க மணியாயிருந்தால் பெரும்பான்மை நன்மையாக இருக்குமென்பது எம்முடைய அபிப்பிராயம். விவாஹமாகிறதற்கு முன் அதனை எவர்களும் ஆர்த்தல்கூடாதென்னுஞ் சட்டமொன்றேற்பட்டிருத்தலும் வேண்டும். அல்லது இன்னவித அடையாளங்களோடு கட்டிக் கொள்ளக்கூடாதென்றுவது ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

7. அத்திருமாங்கல்யமானது நீடூழிகாலம் தங்கழுத்திலோ அல்லது தங்கையிலோ நிலைபெற்று வாழ்தற்பொருட்டு ஓவ்வோராண்டுகளினுஞ் சிற் சில தினங்களில், விரதமாயிருத்தலும் வேண்டும். ஒவ்வொரு நாட்களினும் ஸ்நானஞ் செய்யுங்காலத்தில் அவ்வாறு நிலைபெற்று வாழ்தற்பொருட்டு மனப்பூர்வமாக நினைத்துத் தங்களின் குலதெய்வங்களைப் பற்றித்தியானஞ்செய்து பிரார்த்தித்துக் கோடலும்வேண்டும். அவ்வாறு நீடூழிகாலம் நிலைபெற்று வாழ்தற் பொருட்டு ஒவ்வொரு நாட் பிராதக் காலையினுந் தவறின்றி எழுந்த உடன் வெண்ணீறணிந்து கோடலும் வேண்டும். இன்னும் ஏனைய ஒவ்வொரு நான்முறைச் சட்டங்களும் பெண் மக்களுக்கு ஏற்பட்டிருத்தலைப் போன்றே ஆண் மக்களுக்கும் ஏற்பட்டிருத்தல் வேண்டும்.

8. வஞ்சமற்ற நெஞ்சத்தாலே உண்மையாக ஆய்ந்து நோக்குமிடத்து ஒவ்வொரு ஆண் சரீரங்களையும், பெண் சரீரங்களையும் மிகச் செவ்வையாக ஈற்ற வேண்டும் உலகமாதா அல்லது பராசக்தி மகளிர்க்கு எஞ்சிய தெய்வமென்பது வேறொன்றில்லை யாகலினும், "அன்னையும் பிதாவு முன்னறி தெய்வம்" என அன்னை யென்னும் பதத்தை முன்வைத்துக் கூறினமையானும், நமது தாய் வர்க்கமாகையானும், தங்கள் தங்களின் மனைவிகளையே தெய்வ வடிவங்களெனப் பாவித்து நாடோறும் வழிபடுதலும் வேண்டும்.

9. அவ்வாறு வழிபடுவோனே கறபுடைய கொழுநனாவான். அவன் பெயரும், பெரும் பேறுகளை இற்றென எவராலுங்கூடிக்கூறி முடியாதாமே

ன்க. ஏனைய மேனாட்டு ஆண் வர்க்கங்களெல்லாம் கற்புடையவர்களென்பதிலெற்றுஞ் சந்தேகமின்றாம். கற்புடைத்தாய ஒவ்வொரு புருஷர்களுந் தங்கள் தங்களின் கல்வியற்ற மனைவிமார்களையும், தங்கள், தங்களின் இல்லங்களிலுடைத்தாய பெண் மக்களையும் நன்றாகக் கல்வி கற்பிக்கப்படல் வேண்டும்.

கொண்டமனையாள் குரூபியே யானாலும்
பண்டுதான் செய்த பலனெனவே---கண்டு கொண்டு
குற்றமென வெண்ணிமனங் கோணாதவள் பணியைப்
பற்றி மிகச் செய்வார் பரிந்து.

நண்பர்காள்! சற்று நன்றாகவூன்றி நோக்கிக் கவனிக்கப் புகுந்தால் தமக்குக் கிடைத்த மனைவியானவள் பின்னர் நல்ல குணமில்லாதவளாயினும், மிகுதியான சோம்பலுள்ளவளாயினும், ஆவசியகமாக வேண்டும் உறுப்பற்றவளாயினும், வஞ்ச நெஞ்சமுடையவளாயினும், கல்வியற்றவளாயினும், சினமுடையவளாயினும், தனக்குரிய கற்பு நிலைமையை எவ்வளவும் பாதுகாவாதவளாயினும், பலவாய நல்லொழுக்க மற்றவளாயினும், ஒரே விபசாரியேயாயினும், தம தில்லத்திற்குரிய ஒவ்வொரு செயல்களையும் மிகச் செவ்வையாகச் செய்யக்கூடாதவளாயினும், தங்கள் மனமொப்ப நடக்குஞ்சக்தியற்றவளேயாயினும், இன்னும் ஏனைய இல்வாழ்க்கைக்காகவேண்டும் ஒவ்வொரு நல்லியற்கைகளுக்கும் நேர் மாற்றமுள்ளவளாயினும், எற்றும் அவளின்பாற்குற்றம் பாராட்டாதவனாய், எவ்வகைத்தானுஞ் சிறந்த கற்புடைத்தாய மனைவியைப் போன்றுள்ளி அவளுக்காக வேண்டும் ஒவ்வொரு அணி பணியாதிகளையும், இன்பாதி போகங்களையுங் கொடுத்து ஏனையவோர் மகளிரைக் கவனியாதும், மற்றோர் விவாஹஞ்செய்து கொள்ளாதிருத்தலும் வேண்டும்.

10. தங்களுக்குரிய ஒவ்வொரு சட்டங்களையும் அவர்களுக்கும் உண்டென்று தீர்மானித்தலும் வேண்டும். அதன்படியின்று கோடலும் வேண்டும். நல்லொழுக்கங்களெல்லாம் இயற்கையாகவே அமைந்த கற்புடைய மாந்தர்களாயின், எவ்வகைத்தானுந்தீராத கோபமுறினும், வரைதவறின வார்த்தைகளைக்கூட உபயோகப்படுத்த மாட்டார்கள். கையாற்றொடவு மாட்டார்கள். சில அதர்ம சண்டாளர்களைப் போன்று

கோலரற் புடைக்கக் கனவினுங்கூட நினைக்க மாட்டார்கள். சாகும் நாள் வரை எச்சமற்றுப் போயினும், பின்னையோர் விவாஹஞ்செய்து கொள்ள மாட்டார்கள். தமதருமை மனைவிக்கு ஏனையவோர் அழகு முதலிய சிலங்கள் வாய்ந்த நல்லவோர் புருஷனை விவாஹஞ்செய்து வைப்பார்கள். தங்களின் அடிமைகளைப்போன்றெண்ண மாட்டார்கள். நம்முடைய ஊழ்வினைப்பயன் இஃதே எனவோர்ந்து அவளோடுங்கூடியே யானந்த மடைவார்கள். இன்சொற்களோடுங்கூடக்கூடியே வேண்டுஞ் சீர்திருத்தங்களைச் செய்வார்கள். அவர்களோடன்றி எந்த அயன கரங்களுக்குஞ் செல்லமாட்டார்கள். அவர்களோடன்றி எந்த அறச் செயல்களினும் புகுதமாட்டார்கள். அவர்களோடன்றி எந்தப் புண்ணிய தீர்த்தங்களினும் ஸ்நானஞ் செய்யமாட்டார்கள்.

11. எந்த விதமான உணவுகளையு முண்ணமாட்டார்கள். எவ்விதமான கண் காட்சிகளையுங் காண மாட்டார்கள். எந்த விதமான நன்மை, தீமைகளைப் பற்றியோ வெனினும் அடுத்த இல்லங்களுக்குங் கூடச் செல்லமாட்டார்கள். ஓரரைக்கணமே என்கினும் அவர்களை விட்டுப் பிரிந்திருக்கவு மாட்டார்கள். எற்றும் அவமதிக்க மாட்டார்கள். அவடன் மனத்தினை எற்றும் வருத்தஞ் செய்யார்கள். யாதானும் ஓர் விஷயத்தைப்பற்றி எற்றும் வருந்துமாயின் தாங்களும் அனலிடைப்பட்ட மெழுகாமென்ன உருகாதிருக்கவுமாட்டார்கள். அவடன் பந்து வர்க்கங்களை யெல்லாந் தங்களின் தாய் தந்தை சகோதரர்களைப் போன்றே நன்குமதித்து ஒழுகுவார்கள். அவர்களுக்கு வருந் துன்பங்களையுந் தங்களுக்கு வந்தனவாக நினைத்து வருந்துவார்கள். அத்துன்பத்தை அங்ஙனே நீக்க முயலவுஞ் செய்வார்கள்.

12. இனிமையான வார்த்தைகளானும் பாடல்களானும் அவர்களின் மனத்தை யானந்தப் படுத்துவார்கள். மனைவியுந்தானும் ஒரே கலம் அல்லது ஒரே இலையிலுட்கார்ந்து கொண்டும், பற்பல கதை நொடிகளானும் பகர்ந்து மகிழ்ந்தும் உண்பார்கள். மனைவி செய்யுந் தொழில்களைத் தாங்கள் செய்யவும், தாங்களாற்றுந் தொழில்களைத் தங்கள் மனைவி செய்யவுமாகக் கூடியிருவரும் பழகிக் கொள்வார்கள். அவளின் சரீரகமும், உயிர்நிலையும் ஒன்றுதானென்பதைத் தெற்றெனத் தெளிவார்கள். அவளால் நிகழும் பழிச்செயல்களைப்பற்றிப் பலர் பாலுந்தூற்ற மாட்டார்கள். தங்களுக்குள்ளாகவே அடக்கிக் கொள்வார்கள். அவள் தன்னறிவும், சக்தியும், தங்களுக்கு மேம்பட்டதெனத் தெற்றென உணர்வார்கள். எவ்வகைத்தானும், அவள் பேயைப் போன்றுள்ளவளாயினும் அவளே பெரிதாமென நினைப்பார்கள். தங்களின் குடியும், குலமும், உயர்வாகும் பொருட்டும், செல்வவந்தர்களாகும் பொருட்டும், எற்றுங்குன்றாத பெரிது பெரிதான முயற்சியிலே தங்களின் எதா சக்திக்கு ஏற்றவாறெல்லாம் எண்ணித் துணிவார்கள். எற்றுஞ் சோம்பலுட்டங்கார்கள். தங்களின் தாய் வர்க்கங்களுக்குச் செய்ய வேண்டும் நன்மைகளுக்காகவும், ஆண் வர்க்கங்களாய நாமும், கற்பென்னும் ஓர் நன்னிறையுட்டங்கி யொழுகுவதற்காகவும், இறந்தகால வழக்கியல்களையும், தற்கால வழக்கியல்களையும், நன்றாகச் சீர்தூக்கிப் பார்ப்பார்கள்; தங்களின் மனைவிமார்களும் மனித வர்க்கந்தானென்பதையும் உணர்வார்கள்.

13. சிறைச்சாலைகளில் கள்வரை அடைத்து வைப்பதைப்போன்று அடைத்து வையார்கள். அவர்களும் ஆண் மக்களைப்போன்று சகலாகம பண்டிதர்களாய் வெளி வரலாமென்பதையும் உணர்வார்கள். இஞ்ஞாலமானது கூடிய பக்கத்தார் பக்கமே இயலுகிறதாமென்பதை மறவார்கள். உல்க வியற்கையை நன்குணர்வார்கள்.

“ நுண் மாணுழை புலமில்லானெழில் நலம்
மண் மாண் புனை பாவையற்று ”

என்னுந் தேவர் கருத்தினை எந்த ஞான்றுந் தங்களின் ஞாபகத்தில் வைத்துக் கொண்டிருப்பார்கள். தேவரம்பைகளைப் போன்றுள்ளவர்களை எனினும் ஏனைய மாதர்களைக் கடைக் கண் கொண்டும் பாரார்கள். எற்றும் அவர்களைப்பற்றி எண்ணவு மாட்டார்கள். தங்களின் கற்பென்னும் நன்னிறை யழிதலினாலே உண்டாங் கேடுகளைப்பற்றி மிகச் செவ்வையாக எண்ணி நோக்கி யுணராதிருக்க மாட்டார்கள். தங்களின் சரீரகத்தினுண்டாந் தூய்மையான சத்துக்களை யெல்லாம் பரத்தையர்களிடத்தும், ஏனைய பற்பல மாதர்களிடத்துமாக வெளிப்படுத்த மாட்டார்கள்.

நாணமென்னும் பொருளை எந்த விதத்தாலும் நழுவ விடமாட்டார்கள். ஆடையின்றிக் கௌபீனத்தோடும் ஸ்நானஞ் செய்யமாட்டார்கள். அழகாலுந், தேமலாலும் படர்ந்த தங்களின் மார்பை ஏனைய ஆண்மக்களிடத்துங் கூடக் காட்டார்கள். தனித்த விடங்களிலேயல்லாமல் வெளிப்படையான கடற்கரைகளிலும், ஆற்றங்கரைகளிலும், குளக்கரைகளிலும், தங்களின் வீட்டு வாயல்களிலும் ஸ்நானஞ் செய்ய மாட்டார்கள்.

14. அறிவிலார் பலர் வெளிப்படையாக மல ஜலங்கழிக்குமிடங்களிற் றாங்களும் மல ஜலங்கழிக்க மாட்டார்கள். அவ்விடங்களை மிதிக்கவு மாட்டார்கள். பெண் வர்க்கங்களைப் பார்க்கினும் நம்முடைய ஆண் வர்க்கங்களென்ன கேவலமா வென்னும் ஆண்மையை ஒழித்துவிட மாட்டார்கள். எந்த விதமான பெண்பால்களோடும் வஞ்ச நெஞ்சமாக வார்த்தையாட மாட்டார்கள். ஒருவாறு சில விஷயங்களைப் பற்றிக் கபடற்ற வார்த்தையாடிக் கொண்டிருப்பினும் தங்களின் மனமென்னுங் கண்ணாடியை மழுங்க விட மாட்டார்கள். ஆண் வர்க்கங்களாயின் காட்டு மாடுகளைப் போன்றலைந்தாலுங், குற்றமில்லை யென்னுஞ் சட்டத்தை யொழித்து விடுவார்கள். கற்பென்னும், நன்னிறையிலே சிறந்த புருஷர்கள் தங்களின் கற்புடைய மனைவியானவள் இறந்து போய் விட்டால்,

> "தாயோடறு சுவைபோம் தந்தையோடு கல்விபோம்
> சேயோடுதான் பெற்ற செல்வம் போம்—நேயவாழ்வு
> உற்றருடன் போம் உடன்பிறப்போடு தோள் வலிபோம்
> பொற்றலியோ டெவையும் போம்"

என்பது போன்று அதன் பின்னர் இஞ்ஞால வாழ்க்கையானது எற்றும் பயன்படா வாகையால் அங்ஙனே அஃதாவது தங்களின் மனையாளோடே தங்களின் சரீரத்தையுந் துறந்து விடுவார்கள். வீரசுவர்க்கம் இஃதெனக் காட்டும் ஆசிரியன் மார்களு மாவார்கள்.

15. பெண்பால்கள் இளம் பருவத்திலே பிதாவினாலும், யௌவனத்திலே கணவனாலும், மூப்பிலே புத்திரன் அல்லது பந்து வர்க்கத்திலுடைத்தான ஒரு தலைவராலே காக்கத்தக்கவரென்னும் வழக்கானது தங்

களைத் தாங்களேக் காத்துக்கொள்ளுஞ் சக்தியற்றவர்களுக்கா மென்பதையு முணர்வார்கள். பெண் பால்களுக்கெல்லாம் பொதுவாக வழங்கி வந்த அவ்வழக்கியல்கள் இறந்தது விலக்கலென்னும் உத்தியைப் பொருந்த பல பேரறிவாளர்களாலே கழிக்கப்பட்டு வருகிற தென்பதையு முணர்வார்கள். கற்புடைய மாந்தர்களுக்குரிய பற் பல அறச் செயல்களான நல்லொழுக்கங்களினும், முதன்மை பெற்றவோர் நல்லொழுக்கமானது தங்கள் தங்களின் கற்புடைய மனைவிமார்களின் மனம் போன்றொழுகு மொழுக்க மென்பதையு முணர்வார்கள். பெரும்பான்மையும் ஒரு சிற்றூர் அல்லது ஒரு நகரத்திலுடைத்தான ஒவ்வொரு ஆண் மக்களும் கற்பென்னும் வரம்பை எற்றுங் கடவாத பேரறிவாளர்களாய்த் தோற்றப்படுவோர்களாயின், அச்சிற்றூர் அல்லது அந்நகரத்திலுடைத்தான ஒவ்வொரு பெண் மக்களும், கற்புடையவர்களாகவே தான் தோற்றப்படுவார் களென்பதையும் மிகச் செவ்வையாக உணர்வார்கள்.

16. வருங்கால வழக்கியல்களை ஆய்ந்து நோக்குமிடத்து, பெண் மக்களின் கற்பைக்காக்க வேண்டுங் கருவி அல்லது ஆயுதமாவது ஆண் மக்களின் கற்பா மென்பதையு முணர்வார்கள். இன்னுந் தங்கள் மனைவியானவள் உண்டாலொழியத் தாங்களுண்ணார்கள். அவர்கள் துஞ்சினொழியத் தாங்கள் துஞ்சார்கள். அவர்களோடுங்கூடிக் கலந்து கொண்ட சம்மதமன்றியில் எந்த விதமான காரியங்களையுஞ் செய்ய ஆரம்பஞ் செய்யார்கள். அவர்களித்தனை நாழிகையாக எங்கு சென்றிருந்தீர்களென வினவின் அதற்கு, அதற்குத் தகுந்த விடையே யளிப்பார்கள். வெறி கொண்டவர்களைப் போன்று தாறுமாறுமாகக் கடுகடுத்துப் பேச மாட்டார்கள். இன்னும் சரி! சரி! போ! போ! பெட்டைக்கழுதைகளுக்கு என்ன தெரியும், கழுதைகளோடு வாய் கொடுத்ததும் பிசகுதானெனத் தானேயும் புலம்பிக்கொள்ள மாட்டார்கள். எந்த விதமான சிறிய காரியங்களைப் பற்றியே எனினும், அவர்களாற் கூறப்படுகிற ஒவ்வொரு நியாயங்களையும், நன்கு சீர்தூக்கிப் பார்ப்பார்கள். பொருந்தாததாயின் இனிதான நன்சொற்களாலே அமைந்த தக்க சமாதானத்தோடும் மறுப்பார்கள். இன்னும் அவர்களின் மாட்சியைப் பற்றி எடுத்துக்கூறப்புகின் எந்த வாற்றானும், எந்த ஞான்றும் அழியாத புகழுடம்பைப் பெறுவார்கள். தோற்றப்படுகிற மூவுலகங்களுந் தெற்றெனவுண

றும்படி விளங்குவார்கள். மாதவர்களாலும் இவர் மிகவும் கற்பிற் சிறந்தவராமென வாழ்த்தவும் படுவார்கள்.

17. “ நண்ணுகற்புடை நற்றவன் சீரடி
மண்ணி னெவ்விடந் தோயினும் மற்றஃ
தெண்ணுகின்ற தலங்களே வற்றினும்
புண்ணியத்தல மேன்று புகல்வரால் ”

என்றபடி அவர்களின் செவ்விய தாமரை மலர்களை யொத்த திருவடிகளானது பெரிதான மாநில மிசைத்தெங்கனம் தோய்ந்தாலும், அதனையேப் புண்ணியத்தலங்களாகவுங் கருதப்படுவார்கள். பெரிதான மகா முனிவர்களின் வாக்கிற்கும், இவர்களின் வாக்கிற்கும், எட்பிளவாலும் பேதமில்லையாமென்க. அவர்களின் வாக்குகள் பிரமவாக்குகளே யாமென்க. அவர்களின் சரீரங்கள் தேவ சரீரங்களே யாமென்க. அவர்களின் வாழ்க்கையே வாழ்க்கை யாமென்க. அவர்களின் காரணமாகவே வானம் பொழிகிறதாமென்க. நீதி நெறிகளெல்லாம் ஒருங்கே நடைபெறுகிறதாமென்க. அவர்களின் மாட்சிமை எவராலும் இற்றென வரையறுத்துக்கூற முடியாதாமென்க.

18. கற்பிற்சிறந்த மகாத் மாக்களாலேயே செங்கோன் முறைகளெல்லாம் ஒழுங்காக நடைபெற்று வருகிறதாமென்க. அவர்கள் முன்னிலையாகவே இஞ்ஞாலமொருங்கும் நாகரீகங்களடையுமா மென்க. அவர்களில்லாத ஞாலமில்லை யாமென்க. எந்தச் சமயத்தும், எந்த வருணத்தும், எந்த நகரத்தும், எந்தச் சிற்றூர்களிடத்தும், எந்தக் காலத்தும், நூற்றுக்கொருவர், ஆயிரத்துக்கு ஒருவர், பதினாயிரத்துக்கொருவர், இலக்ஷத்துக்கொருவர், கோடிக்கொருவரே எனினும் உளராமென்க.

19. இன்னும் தருமர் என்னை? இராமர் என்னை? இலக்குமணர் என்னை? அரிச்சந்திரர் என்னை? நளன் என்னை? குமுணன் என்னை? இன்னும் இவர்களைப் போன்றுள்ள அநேக மகா புருஷர்கள் என்னை? ஆய்ந்து நோக்குமிடத்து இவர்களெல்லாம் கற்பென்னும் பதமானது முதன்மையாகக் குறிப்பிக்கும், தன்னிறை யழியாத தன்மையிற் சிறந்தோரே என்பது அறிஞர்கள் எவரும் தெற்றெனத் தெளிந்ததேயாம்.

20. ஆனதுபற்றி இதனைப் பார்வையிடும், ஒவ்வொரு நண்பர்களும் கற்பென்று கூறப்படுகிற இப்பெரிதான வரன்முறையை விட்டு, எந்த வாற்றானுந் தவறியொழுகாதவண்ணம் பயிலுதல் வேண்டும். எந்த வாற்றலாவது தன்னிறை யழியுமேயாயின் தன்னுயிர் போயதாகவே உணர்தல் வேண்டும். காய்ந்த மரக்கட்டையைப் போன்றுள்ள சரீரகமாமென்க. ஆண் மக்களுக்கே கற்பிலக்கணம் முதன்மையாக வேண்டுங் கருவியாமென்று நமது செந்தமிழ் ஞாலமெங்கணும் நிலைநிறுத்தலும் வேண்டும். தற்காலம், சிறைச்சாலைக்குச் சென்றவர்களைப் பொதுவாக நம்முடைய வகுப்பினின்றும் விலக்கி வைப்பதைப்போன்று கற்பாலழியும், ஒவ்வொரு ஆண் மக்களையும், அவர்கள் எத்தகைய செல்வர்களாயினும், எத்தகைய படிப்பாளிகளாயினும், எத்தகைய மேம்பாடுடையவர்களாயினும், எத்தகைய போக்கிரிகளாயினும், நம்மோடும் பிறந்த நம் சகோதரர்கள் தானென்னும் உண்மையையும், அவர்கண் மேலுண்டாம் பாசத்தையும், மறந்து, உயிரோடிருந்தும் பிணமாய வாற்றையுணர்ந்து, நம்முடைய வகுப்பினின்றும் அப்புறப்படுத்துவதற்காக வேண்டும், பொதுவாய ஓர்விதச் சட்டத்தையும் அமைத்து, நமது ஜாதியக் கட்டுப்பாடுகளாக எங்கணும் பரவச் செய்தலும் வேண்டும்.

21. ஆண்வர்க்கங்களே யாயினும், பெண்வர்க்கங்களே யாயினும், கற்பென்னும் நன்னிறையழிதலினாலே உண்டாங் கேடுகளை நன்கு செவ்வையாக உய்த்துணர்ந்து பார்த்தலும் வேண்டும். இன்னும் வருங் காலத்திலும், ஆண்வர்க்கங்களே பெண்வர்க்களினும் மேம்பாடுடையவர்களென்னும் புகழோங்கி நிற்க விரும்பும் ஒவ்வொரு புருஷர்களும் தங்கள் தங்களின் நன்னிறையழியாது பாதுகாத்துக்கொள்ளுஞ் சக்தியை பூர்வபக்கத்து வெண்பிறைபோன்று வளர்த்துவரலும் வேண்டும். எவ்வகைத்தாலுந் தேர்ந்த கல்வியாதிகளைக்கற்றுக் கொண்ட ஒருவன் றானே கற்றுக்கொள்ள நிற்குமொருவனுச்குக் கல்வி கற்பித்தல் வேண்டும் அஃதேபோல் பெண்வர்க்கங்களெல்லாங் கற்புடையவர்களாயிருத்தல் வேண்டுமெனப் போதிப்பானொருவன் தங்களின் சுயஜாதியான ஆண்வர்க்கங்களை யெல்லாம் கற்பென்னும் நன்னிறையிலே நிற்கச் செய்து கொண்டல்லவோ ஏனைய பெண்வர்க்கங்களைச் சீர்திருத்தஞ்

செய்யப்புகுதல் வேண்டும். நிகழ்கால வருங்கால வழக்கியல்களை ஆய்ந்து நோக்குமிடத்து சற்றேறக்குறைய ஒரு நூற்றாண்டுகளுக்குள் நமது செந்தமிழ் ஞாலத்து ஒவ்வொரு பெண்மக்களும், ஏனைய கண்டத்துப் பெண்வர்க்கங்களைப் போன்று கல்வியாதிகள் முதலிய நவீன நாகரீகங்களாலே முன்வந்துவிடுவார்களென்பதிற் சந்தேக மெட்டினை வாறுங்கூட இன்றாம். அதன்பின்னர் அவர்களாலே நம்முடைய ஆண்வர்க்கங்களுக்கும், கற்பிலக்கணம் இன்றியமையாது வேண்டுஞ் சாதனமாமென்று ஓர்வித நூன்முறைச்சட்டம் புதிதாக ஏற்பட்டு அதன்பிரகாரம் நம்முடைய வருங்காலத்தாண்வர்க்கங்கள், ஒழுகத்தலைப்படுவதைவிட இப்பொழுது நிகழுங்காலத்தாலே நம்முடைய ஆண்வர்க்கங்களுக்கு நம்மாலேயே அவ்வித நூன்முறைச் சட்டங்களை வகுத்துவைத்து அதன் பிரகாரம் ஒழுகியும், பயிற்றியும் வருவது மிகுதியும் புகழைத் தருவதற்கோர் வித்தாகுமென்ப மேலோர். மேற்கூறியவாறு நம்முடைய செந்தமிழ் ஞாலத்துப் பெண்வர்க்கமெல்லாம் முன்வரும் ஞான்றுகளினும், நம்முடைய ஆண்வர்க்கங்களின் மூன்று காலத்து வழக்கியல்களையும், கருணையையும், செவ்வனே யோர்ந்து எந்தக் காலத்தும் ஆண்வர்க்கங்கள் நமக்கு மேம்பட்டவர்கள் தாமென்னும் உண்மையைத் தெளிந்து அக்காலத்து நமது ஆண்வர்க்கங்களுக்கும் அடங்கி யொழுகத்தலைப்படுவார்கள். அல்லாதவரை தற்கால மீறாக நம்முடைய ஆண்வர்க்கங்களாலே எத்துணை தூரந்தாழ்வடைந்து விலங்கினத்தைப்போன்றும், ஒருசாதிப் புள்ளினத்தைப்போன்றும், இயன்றுவருகிறார்களோ, இஃதே போன்று இதற்கு நேர்மாற்றமாக அப்பெண்வர்க்கங்களின் வல்லபங்களினாலேயோ, தெய்வச்செயலாலேயோ நம்முடைய ஒவ்வொரு ஆண்மக்களும் இயல நேரிடும் என்பதையும் தெள்ளிதிலுணர்தல் வேண்டும்.

22. ஆண், பெண் எனக்கூறப்படுகிற இரண்டு பகுதியாருக்கும் தெய்வம் ஒன்று தானென்னும் உண்மையையும் மறத்தல் கூடாது. தெய்வமென்று கூறப்படுகிற ஒரு பரம் பொருளானது கலியுக மென்னுந் துலாக்கோலின் நுனியாமென்பதையுமுணர்க. வஞ்சமற்ற தென்பதையும் தெளிக.

“ வெள்ளம்
வருவதற்கு முன்னர் அணைகோலி வையார்

பெருகுதற் கண் என் செய்வார் பேசு ”
என்ற நன்னெறி வாக்கையு முணர்க.

23. ஆனதுபற்றி நண்பர்காள்! இங்ஙனம் ஆண் மக்களுக்காக வேண்டுங் கற்பியல்களைப்பற்றி யாங்கூறுங் கூற்றுக்களை ஞாபகப்படுத்துங் கருவியாக வைத்துக்கொண்டு சர்வகலா நிபுணர்களையே அங்கங்களாக வமையும், பெரிது, பெரிதான மீட்டிங்குகளைக்கூட்டி யதற்காக வேண்டும் புதிய நூன்முறைச் சட்டங்களைத் தீர்க்கவாலோசனையுடன் வகுத்துக் கோடல் வேண்டும். காலத்துக்கேற்ப வியலப்பழகிக் கோடலும் வேண்டும். எற்றுங் கண்ணோட்டமின்றிக் கற்பிய லொழிந்தார் யாவரே எனினும் அவர்களையும் அப்புறப்படுத்துதல் வேண்டும். நமது வகுப்பின் பொதுவாலே நிகழும் நூன்முறைச் சட்டங்களுக்கு அடங்கி யொழுகப் பழகிவருதலும் வேண்டும். அடியேமாற் கூறப்படுகிற எவ்விதமான புதிய வியவகாரங்களைப்பற்றியே எனினும் கூடியபக்கத்தார் அபிப்பிராயத்தோடே நின்றுகோடல் வேண்டும். உலக வியவகாரங்களினும், பேரறிவாண்மையோடும் பயிலாத சிற் சில கருநாடக நண்பர்களுக்கு இஃதெலாம் ஓர் விசித்திரமாகத் தோற்றவுங்கூடும். நன்கு ஆய்ந்து நோக்குங்கள் ஆண் மக்களுக்காக வேண்டும் கற்பியற் சட்டங்களை நன்கு வெளிப்படுத்துங்கள். நிற்க.

24. ஆம். ஆம். நீயிர் கூறிவருவன வொருங்கும் நியாயந்தான். பெரிய வேதவாக்குகள் போன்றுதான் காணப்படுகிறது, என்றாலும் பழய காலத்திருந்த மகா மேதாவிகளைவிட நீயிர் என்ன வல்லீரோ? அவர்களினின்றும் பெரியீரோ? அறிவுடையீரோ? அவர்கள் செய்திருக்கும் இலக்கியங்களைவிட நும்முடையதென்னை மிகச் சிறந்ததாமோ? அவர்கள் சொல்லாத நீதிகளையோ நீயிர் சொல்லிவிட்டீர். வயிற்றின் கொடுமைக்காக என்னவெல்லாஞ் சொல்லப்புகுந்தீர். எந்தக்காலத்திலாவது உண்டா ஆண்மக்களுக்குங் கற்புவேண்டுமென்பது அடடா! காலம் தலைகீழுங் கான்மேலுமாகவன்றோ மாறிக்கொண்டது; இதனை யாரோடு கூடியழுது தொலைக்கிறது. என்ன அநீதி, அந்தக் காலத்துள்ள எந்த மேதாவிகளும் ஆண்மகன் கற்பென்று ஓரங்கம் வகுக்கவில்லையே. ஆண்மக்கள் சிம்மம் என்பதையுணர்ந்திலீர் போலும். எனின்? அன்பார்ந்த நண்பர்காள்! நமதாண்வர்க்கங்கள் ஒரு

கும் சிம்மக்குட்டிகள் என்பதைத் தெரிந்துதான் இவ்வாறு கூறத்துணிந்தேம். காலத்துக்கேற்ப வியல்பழகும் ஒவ்வொரு சிம்மக்குட்டிகளுக்கும் இஃது பொருத்தமாகவேதான் காணப்படும். அல்லாதார் பலர்க்கும் இஃது அருவெறுப்பாகவேதான் காணப்படும். அதற்காக யாமெவன் செயக்கடவேம். எல்லாம் வல்ல இறைவன் திருவருள் காப்பாற்றுக.

இல்லாளகத்திருக்க வில்லாத தோன்றில்லை
இல்லாளு மில்லாளே யாமாயின் இல்லான்
வலிகிடந்த மாற்ற முரைக்கு மேலவ்வில்
புலிகிடந்த தூறாய் விடும்.

மிடியினள் குணமிலள் விருத்தி நோயினள்
வடிவிலள் உறுப்பிலள் வஞ்சி மூடிவெங்
கோடியவளாயினும் மனைவிதம் மிடை
மடிவிலரன்புகற்புடைய மாந்தரே.

சுபம்! சுபம்!! சுபம்!!!

நாட்டுக்கோட்டை
வைசியம்.
Acc. No. 221519
Pages missing
No. 301 To 420

Registered No. M. 1111.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
6 - JUL 1916
MADRAS.

உ

திருச்சிற்றம்பலம்.

Nattukkottai Vaiciyam.

நாட்டுக்கோட்டை வைசியம்.

இஃது ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

தொகுதி ௧. | ௧௯௧௬ வைகாசிமீ. | பகுதி ௨௧.

முன் 20-வது புத்தகம், 420-வது பக்கத்தொடர்ச்சி.

42-வது அ·ம். பொறாமையொழித்தலும், புறங்கூறாமையும்.

சில வித்வ சிரோமணிகளிடத்தும் இப்பொறாமையென்னுங் கொடுந்தீக்கொழுந்துவிட்டுப் பற்றியெரிகிறது. அவர்களும் அதனைக்கவனித்து அத்தீயினைக் கொஞ்சமுங் கனியவிடாமல் "கற்கக்கசடறக் கற்பவைகற்றபின் நிற்கவதற்குத்தக" என்ற நன்னீரைக் கண்டமட்டும் வார்த்து அவித்துவிட்டாலே மிக நன்மையாம். . அப்பொழுதுதான் அவர்களும் வித்வ சிரோமணிகளும் ஆவார்கள்.

4. "அழுக்காறெனவொரு பாவி திருச்செற்று தீயுழியுய்த்துவிடும்" அஃதாவது பொறாமையென்று சொல்லப்பட்ட ஒப்பில்லாத பாவியானவன் தன்னையுடையவனை இம்மையிலே அவனது செல்வத்தைக் கெடுத்து, மறுமையிலே நரகத்தினிடத்துச் செலுத்திவிடுவான் என்றும், "அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமுஞ் செவ்வியான் கேடும் நினைக்கப்படும்" அஃதாவது பொறாமையுள்ள மனத்தையுடையவனது செல்வமும், பொறாமையில்லாத மனத்தையுடையவனது வறுமையுமுண்டானால் ஆராயப்படும் என்றும் அஃ்து

வது பழியினையென்றெண்ணப்படும் என்றும், "அழுக்கற்றகன்றாரு மில்லை யஃதிலார் பெருக்கத்திற்றீர்ந்தாருமில்" அஃதாவது பொறாமைப்பட்டுப் பெருகினவருமில்லை, அச்செயலில்லாதவருள் பெருக்கத்திலிருந்து நீங்கினவருமில்லையென்றும், வரப்படுந் தேவர் வாக்கையுமுணர்தல் வேண்டும்.

5. இனிப் புறங்கூறாமையைப்பற்றிக் கவனிப்பாம். அஃதாவது காணாதவிடத்தே பிறரை யிகழ்ந்து பேசாமையாம். கவனிக்குமிடத்து இவ்வழக்கானது பெரும்பான்மை கற்றுத்தேர்ந்தார் சிலரிடத்துங்கூடக் காணப்படுகிறதிக்காலம் மிகத்துர்லபமாயிருக்கிறதே. ஏனையோர்மாட்டு யாங்ஙனங் காணப்படும். பொய்யாலும், மெய்யாலுந்தோய்ந்து விளங்கப்படுகிற மிகவும் பெரிதான இப்பூமண்டலத்தின்கண்ணே சற்று ஊன்றி நோக்கிக் கவனிக்கப்புகின், எந்தப் பௌராணிகர்களிடத்தும், எந்த நாவல்லவர்களிடத்தும், எந்த உயர்தரப்பட்ட சர்வகலா நிபுணர்களிடத்தும், மகா இராமயண சாஸ்திரிமார்களிடத்தும், மகா பண்டித சிரோமணிகளிடத்தும், எந்த மேதாவிகளிடத்தும், எற்றுங்கடந்த சிவஞானயோகச் செல்வர்களிடத்தும், எந்தச்செல்வவந்தர்களிடத்தும், ஈண்டுங் கவனிக்குமிடத்து நம்முடைய பரசிவப் பெருமானிடத்துங்கூட வொழுக்க வழுக்களில்லையெனச் சாதித்தல் கூடுமோ? அஃதாவது இவ்வுலகவியற்கையேயாமன்றோ? இவ்வழுக்களைப் பற்றியறியாதார் சிலர் புறங்கூறுவதைப்போன்று, அறிந்தார் பலரும் ஒருவரைக் காணாதவிடத்து அவர்தம் பழிச்செயல்களை யெடுத்து இகழ்ந்து பேசி மகிழ்வது யாங்ஙனம் பொருந்தும்? அவர்களின் பெருந்தன்மைக்கழகாகவுஞ் செய்யுமோ? அறியாதார் பலரையுஞ் சீர்திருத்தஞ் செய்யவேண்டுவதும் அறிந்தார் சிலரின் கடமையேயாமல்லவோ? நண்பர்காள்! இப்புறங்கூற்றால் மனத்திடை நிகழுமோர் அற்பச் சந்தோஷமும், சந்தோஷமாகுமோ? பிறன் பழி கூறுவான்றன்பழியுள்ளுந் திறன்றெரிந்து கூறப்படும் என்றும்போன்று, ஒருவன் பிறன் பழிகளைப்பற்றிப் பேசப்புகுங்கால், நமதுழியுண்டாம் பல பெரும்பழிகளுள்ளும் மிகச்சிறந்தவற்றையாகத் தேர்ந்தெண்ணியெடுத்து ஏனைய பலராலுந் தூற்றப்படுமேயென வுணர்தலும் வேண்டாவோ? "நெல்லுக்குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு புல்லிதழ் பூவிற்குமுண்டு" என்றன்றோ பழமொழி.

இப்புறங்கூறும் பழக்கவழக்கங்கள் நம்முடைய நாடு நகரங்களிலில்லையேயெனினும், ஏனைய நாடு நகரங்களிலேயிருந்து நிகழ்கால நாகரீகங்களென வந்து நுழைந்துகொள்ளாதவண்ணம் முன்னதாகப் பாதுகாத்துக்கொள்ளல் வேண்டுமாறுபற்றி இங்ஙனம் ஞாபகப்படுத்துகிறேம். நண்பர்காள்! நன்றாகக் கவனித்தல் வேண்டும்.

6. "பிறன் மறையின்கட் செவிடாய்த்
திறனறிந்தே திலாரிற்கட் குருடனாய்த்
தீய புறங்கூற்றின் மூகையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டாவவர்க்கு" என்றும்,

"கணமலை நன்னாட கண்ணின்றொருவர்
குணனேயுங்கூறற்கரிதாற்—குணனழுங்கக்
குற்றமுழை நின்றுகூறுஞ்சிறியவர்கட்
கெற்றாலியன்றதோ நா" என்றும், வரப்படுகிற நாலடியையும்,

"பொல்லாதுசொல்லி மறைந்தொழுகும் பேதைதன்
சொல்லாலே தன்னைத் துயர்படுக்கும்—நல்லாய்
மணலின் முழுகிமறைந்துகிடக்கும்
நுணலுந்தன் வாயாற் கெடும்" என்ற அறநெறிச்சாரத்தையும்,

"உண்டுகுண மிங்கொருவற்கெனினுங்கீழ்
கொண்டு புகல்வதவர் குற்றமே—வண்டு மலர்ச்
சேக்கை விரும்புஞ் செழும்பொழில்வாய்வேம்பன்றோ
காக்கை விரும்புங்கனி" என்ற நன்னெறியையும்,

"கூனியிராமன்பிரிந்து போமாறே கூறினளே
தூநறும்பூங் கொன்றையணி சோமேசா—தானே
பகச்சொல்லிக் கேளிர் பிரிப்பர் நகச்சொல்லி
நட்பாடலேற்றாதவர்" என்ற சோமேசர் முதுமொழி வெண்பாவையும்,

"ஆக்கப்படுக்குமருந்தளை வாய்ப்பெய்விக்கும்
போக்கப்படுக்கும் புலைநரகத்துய்ப்பிக்கும்
காக்கப்படுவன இந்திரியம் ஐந்தினும்
நாக்கல்லதில்லை நனிவெல்லுமாறே" என்ற வளையாபதியையும்,

"அறங்கூறானல்லசெயினும் ஒருவன்
புறங்கூறானென்றலினிது" என்றும்,

"புறங்கூறிப் பொய்த்துயிர் வாழ்தலிற்சாதல்
அறங்கூறுமாக்கந் தரும்" என்றும்,

"கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச்சொல்" என்றும்,

"அறனோக்கியாற்றுங் கொல்வையம்புறனோக்கிப்
புன்சொலுரைப்பான் பொறை" என்றும்,

வரும் திருக்குறள் வெண்பாக்களையும் மிகச் செவ்வையாகவுணர்ந்து பாடமாக்கிக்கொடலும் வேண்டும். சிலர் இரகசியமாகப் பேசும் விஷயங்களை நாம் செவிகொடுத்துக் கேட்குதல் கூடவே கூடாது. அது விஷயத்தில் நம்முடைய இரண்டு செவிகளையும் செவிடாக வைத்துக்கொள்ளலும் வேண்டும். அஃதோ வெஞ்சியொருவாறு நம்முடைய செவிகளிற் பதிந்துவிட்டதாயின் பின்னர் அவ்விஷயத்தை நம்முடைய விறுதிநாள்வரைக்கும் வெளிப்படுத்தல் கூடவே கூடாது. அது விஷயத்தில் உண்மையாக வியன்றுகொடலும் வேண்டும். இங்ஙனமுள்ளாரெவர்களும் வேறுவிதமான அறச்செயல்களுள்ளே புகுதல் வேண்டாமென்ற ஆன்றோர் கருத்தையுமுணர்க. புறங்கூறுவதாலுண்டாம் பயனிலைகளைப்பற்றி மிகச் செவ்வையாயுணர்தலும் வேண்டும். பொன்னன் என்பவன், இராமனைப்பற்றியவனைக் காணாதவிடத்து கோவிந்தனிடம் சில பழிச்சொற்களைக்கூறி யிகழ்ந்து பேசிக்கொண்டிருந்தான். அங்ஙனங் கேட்டுக்கொண்டிருந்த கோவிந்தன் முன்னதாகவே இராமனைப்பற்றிய எந்தச்செய்திகளையும் என்னிடங்கூறாதே யான் செவி கொடுக்கமாட்டேன் புறங்கூறும் போக்கிரிகளோடு செய்யும் நட்பினை நேற்றோடே யொழித்துவிட்டேன். யாவருடையதேனினும் நல்ல விஷயங்களாயின் என்னுடன் வார்த்தையாடுக. அல்லாதவரை நாத்திறவன்மின், என ஒழித்துவிடாதவண்ணம் அவன் கூறிய வொருங்கையும் இராமனிடம் ஒரு பெரு மூட்டையாகக் கட்டிக்கொண்டுபோய் அவிழ்த்தான். அவைகளொருங்கையுங் கேட்டவிராமன் கோவிந்தனையுங் கையோடே இழுத்துக்கொண்டுபோய் என்னடா! ஏ! பொன்னா! என்னைப்பற்றிக் கோவிந்

தனிடம் என்னவெல்லாமோ சொல்லித் தூஷணை செய்தாயாமே? அஃதென்னடா? போக்கிரித்தனம்! இதோ கோவிந்தனும் வந்திருக்கிறானென வினவ, பொன்னன், ஏ! ஏ! எம்பி! யான் நின்னைப்பற்றி யாதொன்றும் அவனிடஞ்சொல்லவில்லையே! எனக்கும் நினக்குமுள்ள சிநேகத்தன்மை எத்துணைச்சிறந்தது. எடா! ஏ! கோவிந்தா! இவ்விதமான கெட்ட பழக்கவழக்கங்கள் உதவாதே, என்னவெல்லாமடா இராமனிடஞ்சென்று பற்றவைத்துவிட்டாய், இங்கொன்றைக் கூறுவதும் அங்கொன்றைக் கூறுவதுந்தான் நின்றொழிற்போலும்! ஏடா! ஏ! எம்பி! இராமா! இக்கோவிந்தன் நேற்று மாலை யுன்னைப்பற்றியும், நமது தமக்கை பாமாவைப்பற்றியும் அனேக விஷயங்களை என்னிடஞ் சொல்லிக்கொண்டிருந்தான், அதனைப்பற்றி யின்று நின்னோடு கலந்துகொள்ளவேண்டுமென்றிருந்தேன், அதற்குள் பார்த்தாயா! இவன் செய்த வேலையை எனச் சொல்லிக்கொண்டு கோவிந்தனைப்போய் அடிப்பதற்காகக் கையை யோங்கினன், அங்ஙனமோங்கவே கோவிந்தன் ஏடோ! ஏ! இராமா கடவுள் சாட்சியாகப் பொன்னன் கூறுவது சுத்தப் பொய், சுத்தப்பொய்யெனக் கூறிக்கொண்டு வோடவாரம்பித்தான், உடனே கோவிந்தன் ஏடோ! ஏ! எம்பி! இப்பையல் உள்ளதைச் சொல்லுகிறவனானால் இங்ஙனம் நின்று சாதிக்கமாட்டானே? பார்த்தாயா! நம்மிருவருக்கும் இங்ஙனம் மனஸ்தாபத்தை யிழுத்து வைத்துவிட்டான், இவனுக்குச் சரியான மாதிரி யிங்ஙனம் புத்தி கற்பித்தல் வேண்டும், புறங்கூறும் வழக்கத்தை இவனை விட்டோடச்செய்துவிடல் வேண்டும், என இருவருங் கூடியோடிப்பிடித்திழுத்து நன்றாக வுதைத்து அனுப்பிவிட்டார்கள். நண்பர்காள்! இக்கோவிந்தன் உள்ளதைச் சொல்லியும், புறங்கூற்றாலவனுக்கு நிகழ்ந்த தன்மையைக் கவனித்தீர்களா? நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரினேம் புறங்கூற்றென்னுந் தீயினைப் புகுதாதொழுகுமாறு எல்லாம் வல்ல நமதிறையிளங்குமரனைச் சிந்திக்கின்றாம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஸ்ரீ மயூர வூர்திமலர்த்தாள்போற்றி ஓ! எமதன்பார்ந்த நண்பர்காள்! "ஒப்புரவறிதலும், ஈகையும்" என்னும் அங்கத்தை வரையத்தொடங்கி முதன்முதலாக ஒப்புரவறிதலைப்பற்றிக் கவனிப்பாம். அஃதாவது ஒருவருக்கொருவர் உபகாரஞ்செய்யவேண்டுமாற்றையும், நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும், ஒருமைப்பாடெய்து, ஒரே குடும்பத்தவர்கள் போன்று, எற்றானுஞ்சிறந்த ஒற்றுமையோடுங்குழீஇ வாழ்ந்து வருதல் வேண்டுமாற்றையும், கொடை கொடுக்கவேண்டுமாற்றையும், நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு செல்வவந்தர்களும், கல்விவந்தர்களும் ஏனைய ஒவ்வொரு சகோதர சகோதரிகளையும் தங்களைப்போற் சமமாகப்பாவிக்கவேண்டுமாற்றையும், எந்தவாற்றானும் எவ்வகை முகாந்தரங்களைக்கொண்டும் ஒருவரோடு ஒருவர் கலகம் விளைத்துக்கொள்ளாது சமாதானமாக வாழ்ந்துவருதலாலுண்டாம் நன்மைகளைப்பற்றியும், இன்னும் இவைபோன்ற நம் இல்லற தருமத்திற்குரிய பல முறைமைகளையும் மிகச் செவ்வையாய்த் தெரிந்துகோடலேயாம். ஈங்கு கூறப்படுகிற இவ்வாறு விஷயங்களையும் மிகச் செவ்வையாய்த் தேர்ந்து தெளிந்துகொண்டாலே நம்முடைய இல்வாழ்க்கையானது இல்லற தருமம் என்பதனோடும் சாருமாமென்க. இவ்வாறையுமே, இல்வாழ்க்கைக்கு முதன்முதலங்கங்களாகக்கோடலும் வேண்டும். ஆகலின் நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் மிகச்செவ்வையாய் நன்றாகவுணர்தலும் வேண்டும்.

இவ்வறு வகைத்தான உயர்தர விஷயங்களையும் மிகச் செவ்வையாயுணர்வதிலிருந்தும் நிகழும் நன்மைகளைப்பற்றிக் கவனிக்கப்புகின், உலகவியற்கைகளெல்லாம் மிகச்செவ்வையாய் விளங்கும். பெருந்தன்மைகளெல்லாந்தானே நமதுழி வந்து பொருந்தும். உயர்தர நாகரீகங்கள் மிகச்செவ்வையாயமைவுறும். காலவியற்கைகளுக்குத் தக்கவாறு நம்முடைய நாடு நகரங்களைச் சீர்திருத்துவதற்கும் மிக ஏதுவாயிருக்கும். நம்முடைய வகுப்பின் பொதுவுக்கேயொரு பெரும்புகழ் படைக்கும். தற்காலவரையாமனுபவித்துவருகிற இன்பங்களுள்ளே இன்பங்களாவது இஃதெனக்காட்டும். பெரும்படிப்பாளிகளென்பதையும், பேரறிவாளர்களென்பதையுந் தெள்ளிதிற் புலப்படுத்தும். பெரும்பொருள்

படைத்தற்கும் மிகவனுகுணமாயிருக்கும். அல்லாதவரை நம்முடைய இல்லற தருமத்தை இல்லற தருமமெனச் சொல்லற்கியலாது. எத்துணை தூரம் அளவு கடந்த பெருஞ்செல்வங்களுக்கே அதிபதியாகவிருந்தும் அதனாலடையவேண்டும் பெரும் பிரயோஜனங்களையடையத்தகாதவர்களேயாவோம். அதனை இன்னதுதான் செய்தல் வேண்டுமென்பதுகூடத் தெரியாமல் விழிப்போம். இல்லற தருமமென்பது இல்லறவதருமமாகவே முடியும். உபகாரஞ்செய்தலாவது, கொடைகொடுத்தலாவது இன்னாருக்குத்தான் இன்னவாறாகச்செய்தல் வேண்டும், இன்ன விஷயத்துக்குத்தான் இவ்வளவு தொகை நன்கொடையாகக் கொடுத்தல் வேண்டும் என்பவைகளை மிகச்செவ்வையாகத் தேர்ந்து தெளிந்து செய்யாதவரையும், கொடாதவரையும் அவைகளால் எவ்வளவும் பிரயோஜனமல்லவென்பதையும், ஒற்றுமையோடுங்கூடி எல்லாச் சகோதர சகோதரிகளுஞ் சமமாயும், சமாதானமாயும், முறைமையாயும் வாழ்ந்து வருவதற்குரிய பல விலக்கணங்களையும் மிகச் செவ்வையாய்த் தெரிந்துகொள்ளாதவரை நாம் பிறந்தும் பிறவாதவர்களேயாவோமென்பதையும் நாம் நன்றாகத் தெளிதல் வேண்டும். இது விஷயத்தில் அஜாக்கிரதையாயிருத்தல் கூடவே கூடாது. ஆகலின் நண்பர்காள்! ஒப்புரவறிதலை நன்றாகவுணர்தல் வேண்டும்.

"நன்றி யொருவர்க்குச் செய்தக்காலந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டாம்—நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலேதான் தருதலால்" என்றும்,

"கைம்மாறு வேண்டாக்கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங்கொல்லோவுலகு" என்றும்,

"ஊருணி நீர் நிறைந்தற்றேயுலகவாம்
பேரறிவாளன் திரு" என்றும்,

வரப்படுந் தேவ வாக்கிற்கிணங்க உபகாரஞ்செய்தலே நன்மையாம். ஒருவர் கேட்டுக்கொள்ளாமுன்னர் உதவிபுரிவதுதான் உத்தமர்களின் கொள்கை. நண்பர்காள்! நன்றாகக் கவனித்தல் வேண்டும். ஒப்புரவறிதல் என்னும் இவ்விஷயத்தை நன்றாகத் தெரிந்தே நமது வகுப்பார் ஒழுகுதல் வேண்டுமென எல்லாம் வல்ல நமதிறையிளங்குமரனைப் பிரார்த்திக்கின்றேம்.

2. ஈகையைப்பற்றிக் கவனிப்பாம். அஃதாவது ஒருவர்க்கு அல்லது ஓர் விஷயத்திற்கு இனாமாகப்பொருள் கொடுத்தலென்பது பொருள். அன்பர்காள்! இது விஷயத்தைத்தான் மிகச்செவ்வையாகக் கவனித்தல் வேண்டும். நான்கு கரங்களையும், எட்டுத் தோள்களையும், ஐந்து முகங்களையும், மூன்று கண்களையுமே உடைத்தாகப்பெற்ற நம் பரமேசுவரனே நம்முன்னர் வந்து நின்று அவர்களுக்கு வேண்டுகிறதான நமதருமைக்காசுகளை நீட்டி யிரப்பினும் ஓர் தம்படிகூட ரொக்கமாக ஈதல் கூடவே கூடாது. அதனாலே நமக்கு வானுலகம் கிடைக்கத்தக்கதாகவிருப்பினும் நாம் அதனை விரும்பாதிருப்போமாக. “இறந்தது விலக்கலினும், எதிரது போற்றலினும்” மிக எச்சரிக்கையுடையவர்களாயிருத்தல் வேண்டும். நிகழ்கால தருமத்தைத் தழுவியே ஈதற்குடன்படுதல் வேண்டும். ஒருவர் தக்கவாறு கல்வி கற்றுக்கொள்வதற்காகப் பொருள் வேண்டுமெனின், அவர் தம்பிறப்பகைகளையெல்லாம் மிகச் செவ்வையாய்த் தேர்ந்து தெளிந்து ஆராய்ச்சி செய்துகொண்டு, அவர் தம் மனத்தூய்மையையும் பரிசீலனைசெய்துகொண்டு, அவர் தம் அபிப்பிராயம்போன்று தக்கவாறு வேண்டும் போஷணைகளோடு கல்வியைக் கற்பிக்கச்செய்தலும் வேண்டும். அவர் தம் மாசா மாசச்செலவுக்குமட்டும் வேண்டிய ரூபாய்கள் இரண்டொன்றையக் கல்விச்சாலையிலிருந்தே உதவுமாறு செய்தலும் வேண்டும். ஒருவர் விவாகத்துக்காகப் பொருள் வேண்டுமெனின், அவர் தம்மை மகா சங்கத்தாரிடம் போமாறு செய்துவிடுதலும் வேண்டும். ஒருவர் தவஞ்செய்வதற்காகப் பொருள்வேண்டுமெனின் நம்முடைய வேதாந்த பாடசாலைக்குப்போமாறு செய்தலும்வேண்டும். சில வயோதிகர் அங்கவீனர்கள் எனின் அவர்களை வைத்திய சாலைக்கு அனுப்பிவிடுதலும் வேண்டும். சிலர் யாம் அநாதையான ஏழைகளென வந்தால் தக்க தொழிற்சாலைக்கு சீட்டுக்கொடுத்தனுப்பிவிடுதலும் வேண்டும், சிலர் யாமோ அநாதி எம் குழந்தைகளைப் பாதுகாத்தல்வேண்டுமெனின் குழந்தைகளைப் பாதுகாக்கும் பண்ணைக்கனுப்பிவிடுதலும் வேண்டும். சிலர் குருபூசை மடம் கட்டப்போகிறோம், அல்லது திருப்பணி செய்யப்போகிறோமென வரின், திருப்பணி டிப்பார்ட்மெண்டு அக்கவுண்டு ஆபீசுக்குச் செல்லுங்களென அனுப்பிவிடுதலும் வேண்டும். தருமம் என்னும் அங்கத்தையும் நன்கு கவனித்தல்வேண்டும்.

3. தருமம் என்னும் அங்கத்திலும் இவ் ஈகையைப்பற்றி மிகச்செவ்வையாக வரைந்திருப்பினும், அவ் அங்கத்தில் வராத சில விஷயங்கள் இவ் அங்கத்திலும் வருகிறதாமென்க. இனி எவ்வாறு ஈதல் வேண்டுமெனின், நம்முடைய நாடு நகரங்களிலேயுடைத்தாய நம்முடைய வகுப்பின் பொதுவைச்சார்ந்த எந்தக் கல்விச்சாலைகளுக்கும், எந்த வைத்தியசாலைகளுக்கும், திருப்பணி டிப்பார்ட்மெண்டுக்கும், மகா சங்க முதலிய எந்தச் சபைகளுக்கும், எந்தக்குழந்தைப்பண்ணைகளுக்கும், அச்சியந்திரசாலை முதலிய எந்தத் தொழிற்சாலைகளுக்கும், சீர்திருத்த டிப்பார்ட்மெண்டுகளுக்கும், இன்னும் ஏனைய தர்மாதிகளுக்கும் போதுமானவரை பெருந்பண்டுகள் ஏற்படுத்திக்கொண்டு, பின்னர் நம்முடைய பாத கண்டத்தேயுடைத்தான, எந்தச் சங்கங்களுக்காவது, கல்விச்சாலைகளுக்காவது, வைத்தியசாலைகளுக்காவது, குழந்தைப்பண்ணைகளுக்காவது, எவ்விதச்சீர்திருத்தங்களுக்காவது, நகரபரிபாலனங்களுக்காவது, ஆங்காங்குடைத்தான சீர்திருத்தகர்த்தர்கள் வேண்டிக்கொள்வார்களானல் நம்முடைய பொதுப்பணச்சாலையிலிருந்து இலக்ஷக்கணக்குகளிலே, ஈந்து, “கைமாறு வேண்டாகடப்பாடு மாரிமாட் டென்னாற்றுங்கொல்லோவுலகு” என்ற நம்முடைய தேவபெருமான் திருவாக்கையோர்ந்து பெரும்புகழ்படைத்தலும் வேண்டும். அவ்வாறு ஈதலும் ஆங்காங்குடைத்தான பல சீர்திருத்தகர்த்தர்கள் கேட்டுக்கொள்ளுகிறபடி விஷயம், நியாயந்தானே? கவர்ண்மெண்டாரோடு சம்பந்தப்பட்டதோ? அல்லது சம்பந்தப்படாததோ? ஆவசியகமான கருமந்தானே? பொதுப்பான்மைக்குரிய முக்கிய விஷயந்தானே? அக்கர்த்தர்கள் மிகப்பரிசுத்தமுடையவர்கள்தானேவென்பது முதலாய பல விஷயங்களையும் மிகச்செவ்வையாகச்சீர்தூக்கி நம்முடைய மகா சங்கத்தின் அங்கத்தினர்களுள்ளே பெரும்பான்மை யாவரும் ஒப்பக் கொடுத்தலும் வேண்டும். நமது வகுப்பைச்சார்ந்த எந்தக்குடும்பத்தவர்களும் தனித்தனியாகவீதலைப்பற்றிக் கவனித்தலும் வேண்டும். கவனித்துத் தனித்தனியாகவீதலைக் கட்டோடே சட்டமாக நிறுத்திவிடுதலும் வேண்டும். பெரிது பெரிதான கோடீஸ்வரர்களெனப் பெயரேற்றுக்கொண்டதின்பின்னர் ஒருவாறு கொடுத்தலும் நியாயமாம். தற்காலவ[illegible] தனித்தனியாக பெரும்பொருள்வழங்குவதன்

மிகத்துர்லபமேயாம். நமது மகாசங்கத்தார் அபிப்பிராயம்போன்று நமது பொதுப்பணச்சாலையிலிருந்து கொடுப்பதென்றால் மிகச்சுவையாயும், நம்முடைய பொதுவுக்கே பெரும்புகழ்நிலையும் அமைவுறும். ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் மிகச்செவ்வையாய்க் கவனித்தல் வேண்டும். ஏனைய நாடு நகரங்களிலேயுடைத்தாய சில பிரபுக்கள் தங்களோடு சதா வுட்கார்ந்துகொண்டு பயனின் மொழிகளைப்பகர்ந்து பொழுதுபோக்குஞ் சில புல்லறிவாளர்களுக்கும், ஈங்கு கண்டதையாங்குபோய் ஒன்றிற்கு இரண்டாகச் சொல்லி ஆங்கு கண்டதை ஈங்குவந்து ஒன்றிற்கு இரண்டாகச் சொல்லி ஒருவரோடு ஒருவர் கலகம் விளைத்துக்கொள்ளச்செய்து தங்களிடம் வந்து இன்று பாருங்கள் நாரதர் வேலையொன்று செய்திருக்கிறேன். இன்னுஞ் சற்று நேரத்தில் வேடிக்கை பார்க்கலாம் எனச் சொல்லித் தங்களையும் கீழ்த்தர வியற்கைகளிலே படுக்கும் சில நபவர்களுக்கும், தங்கள்பால் சில வேசை தாசிகளைக்கொணர்ந்துவிடும் சில வயோக்கியர்களுக்கும், அயலான் மனைவி மக்களையெவ்வாறோ மோசடிசெய்துகொணர்ந்து தங்களுக்குப் புணரவிடுக்கும் சில வதரும சண்டாளர்களுக்கும், தங்களின் மனைவி மக்களையே கொணர்ந்துவிடுக்கும் சில கொடிய மாபாதகர்களுக்கும், சில கீழ்த்தரவியற்கைகளுக்கும் போக்கிரித்தன்மைகளுக்கும் தங்களின் முன்னோடிகளாய் விளங்கும் சில குரங்கினர்களுக்கும், தங்களின்மனம்போதியவாறு ஆயிரக்கணக்குகளிலேயள்ளிக்கொடுத்துவிடுகிறார்க்ள். ஊர்வாயை மூட உலைமூடியில்லையென்பது அங்ஙனந் தெற்றென விளங்கிவிடுகிறது. இவர்களின் தன்மையை ஈங்கு விரித்தல் நியாயமாகாது. இப்படிப்பட்ட ஈகைகளை நம் பரதகண்டத்தே நிகழாதொழித்துவிடுதற்கு எந்தப் பரம புருஷன் வந்து அவதரிக்கப்போகிறானோ தெரியவில்லை. எல்லாம் வல்ல இறைவனுக்குத்தான் விள்ங்கும். இப்படிப்பட்டவீகைகள் நம்முடைய நாடு நகரங்களிலேயும் வந்து நுழைந்துகொள்ளாதவண்ணம் ஆன்றோர்கள் பாதுகாத்துக்கொள்ளல் வேண்டும். மிக எச்சரிக்கையுடையவர்களாயிருத்தலும் வேண்டும்.

4. என்னையோய்! நீயிர் கூறுஞ் சில விஷயங்களிலே வியப்புக்களைக்கொணர்ந்து காட்டிவிடுகின்றீர்? நமது தேவபெருமானை விட நீயிர் என்னை? பெரியீரோ?

“ஊருணி நீர் நிறைந்தற்றேயுலகவாம்
பேரறிவாளன்திரு” என்றும்,

“பயன்மரம் உள்ளூர் பழுத்தற்றாற்செல்வம்
நயனுடையான்கட்படின்” என்றும்,

“மருந்தாகித் தப்பாமரத்தற்றாற் செல்வம்
பெருந்தகையான்கட்படின்” என்றும்,

“ஈத்துவக்குமின்பமறியார்கொல்தாமுடைமை
வைத்திழக்கும் வன்கணவர்” என்றும்,

“உரைப்பாருரைப்பவையெல்லாம்
இரப்பார்க்கொன்றீவார் மேனிற்கும் புகழ்” என்றும்,

“நல்லாறெனினுங்கொளல் தீது மேலுலகம்
இல்லெனினும் ஈதலே நன்று” என்றும்,

கூறப்படுகிறதே? ஈண்டுங் கவனிக்கப்புகின் நம்முடைய புராணேதிகாசங்கள் முதலிய பல நூற்களும் ஈகையை மிக விசேடித்தன்றோ கூறப்படுகிறது? இம்மியரிசித்துணையானும் வைகலும் நும்மிலியைவ கொடுத்துண்மின் எனக்கூறுமுனிவர் வாக்கை என்கொல் நீயிர் உணரீர் போலும்? நமது வகுப்பைச்சார்ந்த எந்தக் குடும்பத்தவர்களும் தனித்தனியாக ஒரு தம்படிகூட ஈதல் கூடவே கூடாதென்றும், இவ்வழக்கத்தைக் கட்டோடே சட்டமாக நிறுத்தல் வேண்டுமென்றும் கூறுகின்றீரோ? இஃதென்னை விநோதம்? தொன்றுதொட்டு நெடுங்காலமாக வியன்றுவந்த இத்தரும வழக்கியலுக்கு நேர்மாற்றமாகக் கூறப்புறப்பட்டீர்? ஓ! ஐயன்மீர்! இஃது தருமவிஷயமேயாமன்றோ? சற்றுக் கவனித்துக்கூறுமின்! பாவத்தை மூட்டை கட்டிக்கொண்டு செல்லன்மின். பாவ மூட்டையை விற்கவேண்டுமானால் நரகநகரத்துக்குத்தான் செல்லல் வேண்டும். கற்றறிமூடரெனப் பெயரேற்றுக்கொள்ளன்மின், எனிலோ? நண்பர்காள்! காலமாறுதல்களை மிகச்செவ்வையாய்க் கவனித்தல் வேண்டும். இந்நூன்மிசைவரும் ஒவ்வோரங்கங்களையும் மிகச் செவ்வையாயோர்தலும் வேண்டும். இறந்தகால வழக்கியல்களை விலக்கியும், எதிர்காலவழக்கியல், நிகழ்காலவழக்கியல்களைத்தழுவியும் இயலுதல் வேண்டுமெனக் கூறப்படுகிறதேயன்றி ஈதல் எந்தவாற்றானுங் கூடவே கூடாதென யாங் கூறத்துணியவில்லை. நமது

வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் ஏக குடும்பமாக வாழ்தல் வேண்டுமாறுபற்றி இவ்வாறு கூறத்துணிந்ததேயன்றிப் பிறிதில்லை. எந்தச்செயல்களும், மிக்க உயர்தரக்கணக்கின்முறைகளோடு மரீஇச் செய்தலே மிக உத்தமமாகும். நாடோறுமீந்தாலென்னை? அஃதினையோர் கணக்காக ஒரு வருஷாந்தத்திலோ அல்லது மூன்று வருஷாந்தத்திலோ மொத்தமாக்கி நம்முடைய மகா சங்கத்தின் வழியே நமது பொதுப்பணச்சாலையிலிருந்து ஒன்றாகக் கூட்டித்திரட்டிப் பெரிய தன்மைகளோடும் மரீஇப் பெருந்தொகைகளாக ஈந்தாலென்னை? பேருபகாரத்தைத் தானே கருதுதல் வேண்டும். நாம் கொடுக்கப்பெறுகிற இரவலர்களாகிய ஒவ்வொரு பகுதியார்க்குந் தக்க தக்கவாறு வெவ்வேறு விதிகள் வகுக்கப்பட்டிருக்குமாயின் அடியேமிடத்து எவ்வாறு பிழைபாடு நிகழும். வியப்பான சமாசாரமாக யாமொன்றையும் வரையத்துணியவில்லையே. நண்பர்காள்! நன்றாகக் கவனித்துப் பாருங்கள் எற்றானுங் கூடி யோசித்துப் பாருங்கள். அடியேம் நாமிசை கொடுந்தமிழ் ஒன்றும் உதயமாகவில்லை. நிகழ்காலதரும நூன்முறைச் சட்டங்களுக்கு நேரொப்ப நம்முடைய நாடு நகரங்கள் சீர்திருத்தமாகிறவரை பழைய நூன்முறைச் சட்டப்படியே நமது நாடு நகரங்கள் இயலுமென்பதை யாம் வரைந்து தெரிய வேண்டுவதுமில்லை.

5. இவ் ஈகையின் மாட்சியைப்பற்றிக் கவனிக்கப்புகின், வரை கடந்ததேயாமெனினும், சிலவற்றை ஈங்கெடுத்து ஞாபகப்படுத்துவாம். பெரும்புகழ் படைத்தற்கும், பெரும்பொருளீட்டற்கும், பெருந் தொழில்களைக்கொண்டு நடாத்துதற்கும், உயர்தர நாகரீகம் நாளுக்கு நாள் மேன்மேலும் வளர்ந்தோங்குவதற்கும், பலவகைப்பட்ட சீர்திருத்தங்களுக்கும், ஏகக்குடும்பமாக வொற்று[illegible]ழ்வதற்கும், மிக ஏதுவாயிருக்கும். எத்தேயத்தவர்களாலும் [illegible]ம் இத்தேயம் மிகச்சிறந்தனவாயும், நாகரீகம் பெற்றதாயும், புகழ்ந்து கொண்டாடப்படும். நம்முடைய நாடு நகரங்களெல்லாம் செல்வக்களஞ்சியமாக விளங்கும். பிச்சை, யாசகம் பெறுகிறவர்கள் இல்லாதிருப்பார்கள். கேவலத்தன்மைகளெல்லாந் தானே விலகிக்கொள்ளும். பெருந்தன்மைகளெல்லாந் தானே யியங்கும். கல்வியாதிய நூன்முறைச் சீர்திருத்தங்கள் மிகச்சிறந்து வளர்ந்

நாட்டுக்கோட்டை
வைசியம்.
Acc. No. 221519
Pages missing.
No. 433, 434.

தாதோ, அல்லது வேறு எந்த விதத்திலோ விலக்கப்பட்டனவற்ருல் இயலுமோர், மாறுன இயலினையே தீயொழுக்கமெனவும் ஆன்றோர்களாலே கூறப்படுகிறது. நிற்க. காலத்திற்கேற்ப ஞாலத்தைச் சீர்திருத்தஞ்செய்யப்புகுந்த ஆன்றோர் காரணமாக தொன்று தொட்டுப் பரம்பரையாக இயன்றுவரும் நல்லொழுக்கம் பலவற்றுள்ளும் பெரும்பான்மை சிற்சில வொழுக்கங்கள் இயன்று வந்த வழிகள் எட்பிளவுங்கூடத் தெரியாது மாறுதலடைந்துவிடவுங்கூடும். நிற்க.

1. முதன்முதலாக கடவுளும், புண்ணியபாவமும், சுவர்க்க நரகமும், மறு பிறப்பும், முத்தியும் உண்டென்னும் வாய்மையை ஒருபொழுதும் மறக்கலாகாது.

2. எந்தவாற்ருனும் ஒருயிருக்குஞ் சிறிதே எனினுந் தீங்கு நினைத்தல் கூடாது.

3. தனக்குத் துரோகஞ்செய்தவரிடத்தும் தான் துரோகச் சிந்தையில்லாதவனுய் இருத்தல் வேண்டும்

4. பிறவுயிர்களுக்குத் துன்பம் வந்தபொழுது, தன்னை நெருப்பிலே தோய்த்தாற்போல மனம்பதைத்து அதை நீக்க முயலல் வேண்டும்.

5. பொறுத்தற்கரிய கோபமும், துன்பமும் வந்தக்கால் அதனை மிகச்சந்தோஷமாகவே சகித்துக்கொள்ளலும் வேண்டும்.

6. பிறருடைய பொருளைக் காஞ்சிரங்காய்போல நினைத்தல் வேண்டும்.

7. தனக்கு, இலாபம் கருதாது பிறர் செய்த நன்றியை எந்ஞான்றும் மறக்கலாகாது.

8. வஞ்சனையை யொழித்தல்வேண்டும்.

9. உலகநடையான எந்தக்காரியங்களேயெனினும் தன்ருற் பிறருக்கு அல்லது பிறராற்றனக்கு முடியவேண்டியிருந்தால் பகை, சிநேகம், அயல் ஆகிய முத்திறத்தாரிடத்தும் பக்ஷபாதமின்றிச் சமமாகவிருந்து முடிவுபெறச்செய்தலும் வேண்டும்.

10. பிறருடைய கல்வி செல்வ முதலியவற்றைக் கண்டு நாம் பொறாமைப்படுதலினால் யாதாமொன்றும் பயனில்லை யென்பதை நன்கு தெளிவாக உணர்ந்திருத்தலும் வேண்டும்.

11. காணாதவிடத்துப் பிறரை இகழ்ந்து பேசலாகாது.

12. விளையாட்டுக்கே எனினும் பொய் பேசலாகாது. எந்த ஞான்றும் சத்தியமேபேசல் வேண்டும்.

13. தன்னை வைதவனிடத்தும் கடுஞ்சொற்களை பேசாது இனிய வார்த்தைகளாலே தமக்கு வேண்டுங்காரியாதிகளை முடித்துக் கோடல்வேண்டும்.

14. தனக்கும் பிறருக்கும் பயன்படாத வீண்வார்த்தைகளைப் பேசலாகாது.

15. கோண் மூட்டலாகாது.

16. தமையன்மனைவியைக் குருபத்தினியாகவும், தம்பிமனைவியை மருமகளாகவும், பிறர் மனைவியாரைத் தாயாயும், தமக்கையாயும், தங்கையாயும், பாவித்தல்வேண்டும்.

17. பிறரிடத்தே குற்றமுண்டாயின் அவரைத் தனித்தவிடத்திற் கண்டு அதனையும் அதனால் வருங்கேட்டையும் அவருக்கு மிக நன்றாகத் தெரிவித்து அவரை நல்வழிப்படுத்தல் வேண்டும்.

18. ஒன்று; ஒருவருக்கு மிகப் பிரியமற்றனவாகவிருப்பினும் அஃது அவருடைய நன்மைக்குக் காரணமாயிருக்குமாயின் அதை யாவசியமாகச் சொல்லல் வேண்டும்.

19. ஈஸ்வரத்துரோகி, கொலைஞன், கள்வன், கள் குடியன், பொய்யன், சூதாடுவோன், வஞ்சன், பொறாமையுடையவன், தூர்த்தன், புறங்கூறுவோன், பலரோடு பகை கொண்டவன், வரும்படிக்கு மிஞ்சிய செலவு செய்வோன், பைத்தியகாரன் முதலியவர்களோடு கூடுதலாகாது.

20. தனக்கு மந்திரங்களையெனினும், சாஸ்திரங்களையெனினும் உபதேசித்த, உபதேசிக்கும் ஆசிரியனை மிக்க உள்ளன்போடு வழிபடல் வேண்டும். ஆசிரியனுக்கு வழிபாடு செய்யாது பெறும் வித்தை சித்தி பெறாதென்ப பெரியோர்.

21. கிரியை, ஞானம் என்னும் இரண்டினுள்ளும் ஞானஞ் சிறந்ததுபோல கிரியையாசிரியன், ஞானாசிரியன் என்னும் இருவருள்ளும் ஞானாசிரியன் சிறந்தவன், அதிகமாகவேனும், அற்பமாகவேனும் ஆன்மாவுய்யும் வழிக்கு உரியதையறிவித்தவனையும், ஆசிரியன் என்றே நினைத்தல் வேண்டும்.

22. சமயச்சடங்கு செய்விப்பவரும் ஆசிரியரேயாவர் அவரிடத்தும் வழிபாடு செய்தல்வேண்டும். ஆசிரியரின் ஆசனத்திலும், படுக்கையிலும், இருத்தலும், படுத்தலும், அவைகளைக்காலினாற்றீண்டலுமாகாவாம்.

23. "அந்தணர் சான்றோர் அருந்தவத்தோர் தம்முன்னோர்
தந்தை தாயென்றிவர்க்குத் தார்வேந்தே—முந்தை
வழிநின்று பின்னை வயங்கு நீர்வேலி
மொழிநின்று கேட்டன்முறை" என்றும்,

"அரசனுவாத்தியான் றாய்தந்தை தம்முனிகரில்
குரவரிவரிவரைத்
தேவரைப்போல தொழுதெழுகவென்பதே
யாவருங்கண்ட நெறி" என்றும் வரும் ஆன்றோர் ஆஞ்ஞைகளையும், நினைந்து, தகப்பன், தாய், பெரிய தகப்பன், சிறிய தகப்பன், பெரிய தாய், சிறிய தாய், பாட்டன் பாட்டி, மாமன் மாமி, தமையன், தமையன் மனைவி, குரு, குருபத்தினி, உபாத்தியாயர் முதலிய பெரியோர்கள் வரக்கண்டால்,

"இருக்கையெழலும் எதிர் செலவும் ஏனை
விடுப்பவொழிதலோடின்னக்—குடிப்பிறந்தார்
குன்றாவொழுக்கமாக்கொண்டார் கயவரோ
டொன்றாவுணரற்பாற்றன்று" என்னும், ஆன்றோர் வாக்கின்படியும் இருக்கை விட்டெழுந்து, எதிராகச்சென்று, மிகவும் பணிவான இன்சொற்களோடுங்கூடி வந்தன வழிபாடுகளெல்லாம் முறையாகச்செய்தல்வேண்டும். அவர்கள் ஏவிய ஏவலின் பிரகாரம் வேண்டுங்காரியாதிகளையங்ஙனே பூர்த்திசெய்துகொடுத்தலும் வேண்டும்.

24. ஊழ்வினைப்பயனால் ஏதேனும் அன்னவர்களுக்கு இடுக்கண்கள் வரினும், தங்கள் தங்களாலியன்ற உபகாரவாயிலாக அதனை

யங்களை தடைத்தலும் வேண்டும். அன்னவர்களுக்காற்றுந் தருமங்களைவிட வேறு எவ்விதத் தருமங்களினும், யாதொரு பயனிலைகளும் இல்லையென்பதையும் நன்குணர்தல் வேண்டும்.

25. வயசினாலும், கல்வியினாலும், ஒழுக்கத்தினாலும், முதிர்ந்த பெரியோர்கள் வரும்பொழுது சிறியவர், இருக்கைவிட்டு எழாதிருந்தால் அற்ப ஆயுளை அடைவாரென்றும், பெரியோர்களை நாடோறும் வந்தனஞ் செய்பவருக்கு ஆயுள், கல்வி, கீர்த்தி, பலம் என்னும் நான்கும் அபிவிருத்தியாகுமென்றும், நமது ஆறுமுகநாவலரவர்கள் கூறுகின்றார்கள்.

26. தன்னின் உயர்ந்தாரையாயினும், ஒத்தாரையாயினும் வணங்கும்பொழுது அவ்வணக்கம் அவருக்கென்று புத்திபண்ணாமல், அவரிடத்திலிருக்கும் கடவுளுக்கென்று புத்தி பண்ணி வணங்கல் வேண்டும். தன்னை யாராயினும் ஒருவர் வணங்கும் போழ்து இவ்வணக்கமானது நமக்கன்று, நமதுள்ளே வசிக்கும் கடவுளுக்கேயாமென்று புத்தி பண்ணல் வேண்டும்.

27. தான் ஒருவருக்குச்செய்த நன்றியைச் சொல்லலாகாது. தனக்கு ஒருவரிட்ட போஜனத்தை யிகழ்ந்து பேசலாகாது. தான் செய்த தருமத்தையும், விரதத்தையும் புகழ்ந்து பேசலாகாது.

28. அங்கயீனர், ஆறு விரலுள்ளவர்கள், வியாதியாளர், படியாதவர்கள், கிழவர், குரூபிகள், தரித்திரர், தாழ்ந்தஜாதியார் என்பவர்களை அவர்களின் தோஷத்தைச்சொல்லிப் பரிகாசஞ்செய்யலாகாது.

29. ஒருவரையடிக்கும்பொருட்டு தடி முதலிய ஆயுதங்களை உயரத் தூக்குதலும், எத்துணையோ தூரமெளியவர்களாயிருப்பினும், அவைகளாலடித்தலுமாகாவாம்.

30. புத்திரன், மனைவி, சீடன் என்பவர்கள் குற்றஞ்செய்தால் "வெட்டெனவை மெத்தனவை வெல்லாவாம் வேழத்திற், பட்டுருவுங்கோல் பஞ்சிற்பாயாது, நெட்டிருப்புப் பாறைக்கு நெக்குவிடாப்பாறை பசுமரத்தின் வேருக்கு நெக்குவிடும்" என்ற நமதௌவையம்பிராட்டியின் வாக்கினையோர்ந்து இனிய சொற்களாலே தண்டித்தலும் வேண்டும். அஃதாயெஞ்சிய பாகம் கட்டாயம் புடைத்தல் வேண்டுமாயின் தென்னையீர்க்கிர் பிரமாணமானவோர் சிறிய பிரம்பினாலே இரண்டொருதரம் புடைத்தலும்வேண்டும். அடங்காச்சினங்கொண்டு, ஒருவர் தலைமயிரைப்பிடித்திழுத்தலும், தலையிலடித்தலுமாகாவாம்.

31. தன் வேலைக்காரர் தன் நிழலாயும், தன் மனைவி மக்கள் தன் சரீரமாயும் இருத்தலால் அவர்களாற்றும் பிழைகளை வருத்தமின்றிப் பொறுத்துக்கொள்ளலும் வேண்டும்.

32. அயனம், விஷுவம், அமாவாசை, பௌரணமி முதலிய விசேஷ தினங்களிலே தேவாலயத்தையும், பிதா, மாதா, குரு, உபாத்தியாயர் முதலிய பெரியோர்களைத் தரிசித்தலும் வேண்டும்.

33. இரவு நான்கு மணிக்கெல்லாம் நித்திரை விட்டெழுவது மிக உத்தமம். நான்கரை மணிக்கெழுவது மத்திமம். உதயத்தில் எழுவது அதமம், உதயத்தின்பின் எழுவது அதமா அதமம்.

34. அவசிய கருமமுதற்றந்தசுத்தி யிறுதியாகிய கருமங்களை சூரியோதயத்துக்குமுன்னே முடித்தல் வேண்டும்.

35. தேவாலயம், ஆறு, குளம், கிணறு, பூந்தோட்டம், வீடுகள் முதலியவற்றிற்குச் சமீபத்திலும், மனிதர் சஞ்சரிக்கும் இடங்களிலும், பசு மேயும் இடங்களிலும், மர நிழலிலும், உழுத நிலத்திலும், பயிர் நடுவிலும், வழியிலும், சுடுகாட்டிலும், அருகம்பூமியிலும், புற்றிலும், மலையிலும், தண்ணீரிலும் மலஜலங்கழித்தலாகாது. காலிற் பாதகுறடேனுஞ் செருப்பேனும் இட்டுக்கொண்டும் மலஜலங்கழித்தலாகாது. சந்திரன், சூரியன், அக்கினி, காற்று, பசு என்னும் இவைகளின் எதிரேயும், பெரியோர்களின் எதிரேயும் காறியுமிழ்தலும், மலஜலங்கழித்தலுமாகாவாம். எண்ணை தேய்த்துக்கொண்டாயினும், ஈர வஸ்திரந் தரித்துக்கொண்டாயினும், நின்றுகொண்டாயினும், நடந்துகொண்டாயினும், கையில் ஜலபாத்திர முதலியவைகளை வைத்துக்கொண்டாயினும், மலஜலம் விடலாகாது. மலஜலங்கழித்தவுடனே விதிப்படி மண்ணிட்டு மிகச்செவ்வையாகச் சௌசஞ்செய்தல் வேண்டும். மலஜலங்கழிக்

கப்புகுங்காற்றொடங்கிச் சௌசாசமனம் முடிக்கும்வரையும் ஒருவரோடும் பேசலாகாது.

36. ஆறு, தடாகம், ஓடை, மடு முதலியவைகளிலே ஸ்நானஞ்செய்தல் வேண்டும். இவைகள் இல்லையானால், கிணற்றில் நின்றும் தண்ணீரை எடுத்து ஸ்நானஞ்செய்தல் வேண்டும். ஒருவர் வெட்டின குளத்திலே ஸ்நானஞ்செய்யப்புகின் அந்தக்குளத்தில் ஐந்து கை மண்ணெடுத்து வெளியிற்போட்டுவிட்டு ஸ்நானஞ்செய்தல் வேண்டும்.

37. திருவிழாவிலும், யாகத்திலும், விவாகக்காலத்திலும், தீர்த்தக்கரையிலும், யாத்திரையிலும், யாதானும் ஒன்றில் நெருப்புப்பற்றியெரியுங் காலத்தினும், கலகத்திலும், இடருற்ற காலத்திலும் நீசர் முதலிய பஞ்சமர்களைத் தீண்டினால் யாதொரு தோஷமுமின்றாம்.

38. இரண்டு தெய்வ விம்பத்துக்கு நடுவிலும், அந்தணர் முதலிய பெரியோர் பலருக்கு நடுவினும் ஊடறுத்துப்போதலாகாது. ஒருவருக்கும், விளக்குக்கும் நடுவேயும் போதலாகாது. கழுதைக்கு நடுவிலும், மாடுகளுக்கு நடுவினும் போதலாகாது.

39. பெரியோர் நித்திரைசெய்யும்பொழுது அவரை யெழுப்பலாகாது.

40. பசுவானது தண்ணீர் குடிக்கும்போதும், புல்லுத் தின்னும்போதும், கன்று பால் குடிக்கும்போதும் தடை செய்யலாகாது. பசுக்கன்றையேனும், அது கட்டுங் கயிற்றையேனும் தாண்டலாகாது.

41. பிறர் எழுந்துபோகத் தொடங்கும்பொழுது அவரின் பின்னே நின்று அழைத்தலும், தும்முதலும், நீர் யாங்கு போகின்றீரெனக் கேட்டலுமாகாவாம். அவருக்கு யாதானுஞ் சொல்லவேண்டுமாயின் விரைந்து சென்று அவர் பக்கத்திலே நின்று சொல்லல் வேண்டும். அவர் முன்னே போய் எதிர்முகமாக நின்று ஒன்றையுஞ் சொல்லலாகாது.

42. பிறரைப்பார்த்து நம்முடைய உடம்பு நன்றாகவிருக்கிறதென்று சொல்லலாகாது. அவருண்டுவந்த உணவுகளைப்பற்றி விசாரித்தலுமாகாது.

43. மார்க்கத்திலே போகும்பொழுது, தேவாலயமும், தெய்வவிம்பமும், ஆசாரியர், அந்தணர் பிரபு வித்வான்கள் முதலிய பெரியோரும், பசுவும், அரசு முதலிய புண்ணிய விருக்ஷமும், நெய்க்குடம், தயிர்க்குடம், தேன்குடங்களும், நாற்சந்தியும் எதிர்ப்பட்டால் வலஞ்சுற்றிப்போதல் வேண்டும். பெரியோர்களும், வயோதிகர்களும், சுமை சுமப்போர்களும், வியாதியாளர்களும்; பிள்ளைகளும், பசுக்களும், பெண்களும் எதிர்ப்பட்டால் அவர்களே விலகிப்போவார்களென்று நினையாது, அவர்களுக்கு வழி கொடுத்து விலகிப்போதல் வேண்டும்.

44. பிறர் இரகசியம் பேசும்பொழுது அதனைக் கேட்கலாகாது. இருவர் இருந்து பேசுமிடத்திலே அவரனுமதியின்றிப் போகலாகாது. பிறர் பேசும்பொழுது கதவு முதலியவைகளின் பக்கத்திலே மறைந்து நிற்றலாகாது. பிறருடைய வீட்டின்கண்ணே புறக்கடை வாயிலாலே போதலாகாது.

45. பற்கடித்தலும், நகங்களைக் கடித்தலும், மீசையுளதாயின் அதனைக் கடித்தலும், நகத்தினாலே பல்லைக் கிளைத்தலும், உதட்டைக் கசக்கிக்கொண்டிருத்தலும், மூக்கைத் தூக்கியிழுத்தலும், கண்மயிரைப்பிடுங்கலும்; நகம், மயிர் இவைகளைத்தானேச் சேதித்தலும் ஆகவாம்.

46. வாயை மூடிக்கொள்ளாமல் கொட்டாவி விடுதலும், பெருமூச்செறிதலும், இருமுதலும் ஆகாவாம். இறைச்சலிட்டுச் சிறித்தலும், காரணமின்றிச்சிரித்தலும், ஓசையுடன் அபானவாயுவை விடுதலும் ஆகாவாம்.

47. காரணமின்றி மண்கட்டியை யுடைத்தலும், துரும்பு கிள்ளுதலும், நிலத்தைக்கீறலும், கையை யுதறலும், கையினாலே உடம்பில் அடிக்கடி புடைத்துக்கொள்ளலும், ஆகாவாம். தலை சொறிதல் வேண்டின் வலக்கையாற் சொறிதல் வேண்டும். இடக்கையினாலே சொறிதலும் இரண்டு கையாலும் சொறிதலும் ஆகாவாம். முகத்தையிடக்கையினாலே தீண்டலும் ஆகாவாம். அரையின்கீழே தீண்டினால் கை கழுவுதல் வேண்டும். காலையிடக்கையினாலன்றி வலக்கையினாற்றீண்டலாகாது. இருந்த ஆசனத்தைக் காலினாலுதைத்தலாகாது.

48. நெருப்பை வாயினாலூதலாகாது. ஆடையினாலேனும், முறத்தினாலேனும், கையினாலேனும் வீசி மூட்டலாகாது. இருவருக்கு நடுவேயுங் கொண்டுபோகலாகாது. கொண்டுபோகவேண்டின் கீழே வைத்து எடுத்துக்கொண்டுபோதலும் வேண்டும். தாண்டிப்போதல் கூடாது. அதற்கெதிரே காலை நீட்டலும், அரையின் கீழ் தாங்கலும், காலைக்காய்ச்சலும், அசுத்தமாகிய பொருளையதிற்போடுதலும், அடுக்களையிற்வைத்து நீர் விட்டவித்தலும் ஆகாவாம்.

49. விளக்கை வாயாலூதி யவித்தலும், கையினாலே தூண்டலும் ஆகாவாம். தான் உயரமாகப்படுத்துக்கொண்டு அக்கினியைக் கீழே வைக்கலாகாது.

50. சூரியன் உதிக்கும்பொழுதும், அஸ்தமிக்கும்பொழுதும் கிரகணம் பிடிக்கும்பொழுதும், நீரில் பிரதிவிம்பித்திருக்கும்பொழுதும், உச்சியிலிருக்கும்பொழுதும் பார்த்தலாகாது. தண்ணீரிலும், எண்ணையிலும் தந்நிழலைப்பார்த்தலாகாது. சுடுகாட்டுத்தீயையும், வஸ்திரந் தரித்துக்கொள்ளாதவரையும் பார்க்கலாகாது.

51. "இருளை யுலகத்தியற்கை, யிருளகற்றுங்
கைவிளக்கே கற்ற அறிவுடைமை, கைவிளக்கின்
நெய்யே தன் நெஞ்சத்தருளுடைமை, நெய் பயந்த
பால்போலொழுக்கத்தவரே, பரிவில்லா
மேலுலகம் எய்துபவர்" என்றும்,

"ஒழுக்கம் விழுப்பந்தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப்படும்" என்றும்,

ஒழுக்கமுடைமை குடிமையிழுக்கம்
இழிந்த பிறப்பாய்விடும்" என்றும்,

"ஒழுக்கத்தினெய்துவர் மேன்மையிழுக்கத்தின்
எய்துவர் எய்தாப்பழி" என்றும்,

"ஒழுக்கமுடையவர்க்கொல்லாவே தீய
வழுக்கியும் வாயாற் சொல்லல்" என்றும், வரப்படும் வேதவாக்கியங்களை யுணர்தலும் வேண்டும். நண்பர்காள்! இன்னும் மிக்க விரிவாகக் கூறப்புகுவோமாயின் இந்நூலின்கட்டோற்

றப்படுகிற ஒவ்வோரங்கங்களுமே ஆய்ந்து நோக்குமிடத்து நல்லொழுக்கங்களென்பதாகத்தான் முடிகிறது. ஆனதுபற்றி இம்மட்டோடு விடுத்தாம். நமது வகுப்பு ஒவ்வொரு சகோதர சகோதரிகளும், ஆன்றோர்களாலே வகுத்துக்காட்டப்படுகிற நல்லொழுக்கங்களைவிட்டு எந்தவாற்றானுந்தவறி யியலாதவண்ணம் நம்முடைய திருமுருகக்கடவுளைப் பிரார்த்திக்கின்றோம்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

45-வது அ-ம் தீயொழுக்கம்.

எமதன்பார்ந்த நண்பர்காள்! தீயொழுக்கத்தை விலக்கத் திருவருள்புரிவான் யாவனோ? அவன் தன் இரண்டு திருத்தாள்களுக்கும் அஞ்சலியாற்றி யிங்ஙனம் தீயொழுக்கம் என்னும் அங்கத்தை வரையத்தொடங்குவாம். அஃதாவது

1. அவ்வவர்களின் சமயக் கோட்பாடுகளின்படிக் கடவுள் இலக்கணங்களைப்பற்றி நல்ல ஆசிரியன்மார்கள் வாயிலாகவோ? எனினும், அல்லது கல்விச்சாலைகளில் தாங்கள் கற்றுமுடிந்த கல்வி முறைகளோடுங்கூடி மற்றைக் கடவுளிலக்கணங்களைக் காட்டும் நூற்கள் வாயிலாகவோ? எனினும், சந்தேக விபரீதங்களற நிறம், குணம், வடிவம், தொழில், தன்மை, வலி, இருப்பிடம் முதலிய ஒவ்வோரியற்கைகளையும் இஃதென மிகச்செவ்வையாகத் தெளியாது இயலுதல்.

2. ஒவ்வொருநாளும் முறைப்படி யேககாலமே என்கினும் ஆலயஞ்சென்று தொழாதிருத்தல். ஆலயத்திற்கு வேண்டும் கைங்கர்யங்களை நாடோறும் ஒரு அரை நாழிகையே என்கினும் எற்றுங் கவனியாது ஏனைய தங்களின் சொந்த வியவகாரங்களிற்புகுதல்.

3. ஆலயந்தொழுவது சாலவும் நன்றென்றும், கோயிலில்லாவூரிற் குடியிருக்கவேண்டாமென்றும், நமது ஒளவையம் பிராட்டியாராலே கூறிக்கிடக்கும் வேதவாக்குகளை மறந்தொழுகுதல்.

4. ஒருவாறு கடவுளிலக்கணங்களைப்பற்றியாவது, சமய விலக்கணங்களைப்பற்றியாவது, தர்க்கஞ்செய்யப்புகின் ஆன்றோர்

களாலே வகுத்துக்கிடக்கும் தர்க்க நூலாதிமுறைகளோடுமின்றித் தங்கள் தங்களின் மனம் போதியவாறெல்லாம் குதர்க்கஞ்செய்தல். கடவுளை யில்லையெனப்பகர்தல் தங்கள் தங்களின் சமய நூன்முறை யொழுக்கங்களுக்கு மாறாக வொழுகுதல். ஏனைய சமயத்தவர்களின் ஆலயங்களிற்போய்த் தொழுதல். ஏனைய சமயங்களுக்குரிய சின்னங்களைப்புனைதல். தங்களின் ஜெனனசமயத்தை யொழித்துப் பிறசமயம் புகுதல். ஏனைய சமயங்களைப்பற்றித் தாழ்வாகக் கூறல். தங்கள் தங்களின் சமய நூன்முறையங்கச் சட்டங்களையெல்லாமொருங்கே நன்கு செவ்வையாகக் கற்றுத்தேர்ந்து தெளியாதொழுகுதல்.

5. "தந்தைசொன்மறுப்பவர்கள்தாயுரைதடுப்போர்
அந்தமறுதேசிகர்தமாணையையிகழ்ந்தோர்
வந்தனைசெய்வேதநெறிமாற்றினர்கண்யாருஞ்
செந்தழலவாயநிரயத்தினிடைசேர்வார்" என்பதை
யுணர்ந்து நிற்றல்.

6. நம்முடைய குடும்பத்திற்கும், நம்முடைய வகுப்பிற்கும் ஆசிரியன்மார்கள் இன்னார்தானென உணராது நிற்றல். சமய நூற்களிற் கூறும் முறைப்படி யவர்கள் பாற்சென்று உபதேச முதலிய தீக்ஷைகள் பெற்றுக்கொள்ளாதொழுகுதல். அவ்வாறு பெற்றுக்கொண்டதின்பின் நாடோறுங் காலக்கிரமப்படி யனுட்டானத்திற்குக் கொண்டுவராது நிற்றல். அதனைப் பூராவும் மறந்து விடுதல். அன்னவர்களை விசேஷ தினங்களிலாவது தரிசியாதொழுகுதல். அவர்களின் அனுமதியின்றியே அவர்களுக்கு வேண்டும் வழிபாடுகளெல்லாம் ஒருங்கே இயன்றுவருகிறதாவெனக்கவனியாதொழுகுதல். அவர்களுக்கு வேண்டும் வழிபாடுகளையெல்லாம் அவர்கள் அனுமதியின்றியே ஏனைய தொழில்களில் அவர்கள் பிரவேசியாதிருக்கும்வண்ணம் செய்வியாதொழுகுதல்.

7. சமய நூற்கள், நீதி நூற்கள், உலக வியவகாரங்கள், தத்துவ மார்க்கங்கள், அரசியற் சட்டங்கள், முதலிய எவற்றிலேனும் எற்றுங் கற்றுக்கொள்ளாத முழு மூடனென்னும் பெயரோடொழுகுதல்.

8. தந்தையின் மாட்சி யின்னது, தாயின் மாட்சி யின்னது என உணராதிருத்தல். அவர்களுக்கு எஞ்சிய தெய்வமொன்றுளதோ? அல்லது இலதோ? என்பதனை நன்கு உணராது ஒழுகுதல். அவர்களின் மனம் கோடாவண்ணம் மக்களாற்றும் நன்மைகளாலுண்டாகும் நன்மை இஃதெனத் தெளியாதொழுகுதல். அவர்களை வைதல். கையாலெனினுங் கோலாலெனினும் புடைத்தல். அவர்களின் ஆஞ்ஞைபின்படி நடவாதொழுகுதல். அவர்களுடைய சரீரமே நம்முடைய சரீரங்களாமென எவ்வளவுந் தெளியாதொழுகுதல். உடுக்கையிழந்தவன் கையைப்போன்று நம்முடைய சரீரங்களை யெவ்வாறு பாதுகாத்து வருகிறோமோ? அஃதே மாதிரியாக அவ்விருவர்களுக்குந் தங்கள் தங்களாற் றங்களைப் பாதுகாத்துக் கொள்ளுஞ் சக்தியை யிழந்து கிழப்பருவம் மேலிட்டோ? அல்லது வியாதி மேலிட்டோ? வருந்துங்காலங்களிற் பாதுகாவாதவண்ணம் திடுதிண்டாயி நமாவெனத் தங்கள் தங்களின் வயிற்றை மட்டும் விலாப்புடைக்க வைத்துக்கொண்டிருத்தல். இன்னும் அவர்களுக்கு வேண்டும் காலந்தாழ்த்தாது அன்போடு மனையாளுந் தானுங்கூட ஒவ்வொரு சௌகரியங்களும், வேண்டும் வேண்டுங் காலங்களிற் சரியாயும், முறைப்படி மரியாதையாயும், இன்சொற்களோடுங்கூடி யாற்றாது நிற்றல். அவர்கள் சிவலோக பதவி யடைந்த நாள் முதல் வருகிற வருஷத்திதி வரை செய்யவேண்டுஞ் சாச்சடங்கு முதலிய கருமமாதிகளை யெல்லாம் ஒழுங்காக முறைப்படி செய்யாதொழுகுதல். சிரார்த்தஞ்செய்வதை மறந்துவிடுதல். வேண்டுமென்றே செய்யாது நிற்றல்.

9. ஆசிரியன்மார்களையும், கல்விச்சாலை உபாத்தியாயன்மார்களையும், வயசாலும், அறிவாலும், கல்வியாலும், செல்வத்தாலும், புகழாலும், தருமத்தாலும், உத்தியோகத்தாலும், தேவாலயம் முதலிய திருப்பணிகள் செய்வதாலும் பெரியவர்களையும் காணின் அவர்களுக்கு அஞ்சலி செய்யாதிருத்தல். அங்கவஸ்திரத்தை யிறக்கிக்கொண்டு, எழாது நிற்றல். அவர்களின் பின்சென்று வழிவிடாதுநிற்றல். அவர்கள் ஏதாவது கூறுவார்களாயின் அதற்கு நல்லது நல்லது என்னாது இம், இம்மெனக்கேட்டு நிற்றல். அவர்கள் கூறும் வியவகாரங்களை நல்லதென ஒப்புக்கொள்ளாது தாறுமாறாகத் தடுத்தல். அவர்கள் யாதாலும் அநீதியான வியவகாரமொன்றை அங்ஙனமே எனச் சாதிப்பார்களாயினும்,

அதற்கும் நல்லது நல்லது எனப் பூசாவும் அங்ஙனம் ஒப்புக்கொண்டுப்பின்னர் மிக்கப்பணிவாயும், மலர்ந்த முகத்தோடும், இனிய சொற்களோடும் வேண்டும் உவமான உவமேயங்களோடும், இதற்கிதுமுடிபெனக்கூறிச் சமாதானஞ்செய்யாது, மனம் போதியவாறு கூறி நிற்றல்.

10. அரசியற் சட்டங்களுக்கு மாறாகவொழுகுதல். "சக்கர நெறிநில்" என்ற வாக்கியத்தை மறத்தல்.

11. சுகாதார முறைப்படி தன்னையும், தனது மனைவி மக்களையும், தனது வீடு வாசல்களையும் ஓம்பாது நிற்றல்.

12. கள், சாராயம், பூரணாதி, கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்களையும், பீடி, சிகரெட்டு, சுருட்டுப்புகையிலை பொடி முதலிய சிறிய லாகிரி வஸ்துக்களையும் உபயோகித்தல், புதிதாகப் புலாலுண்ணல்.

13. ஏற்பட்டிருக்கும் வேலைகளைக் குறித்த காலத்தில் சோம்பேறித்தன்மைபற்றிச் செய்யாதொழிதல். வீண்காலம் போக்குதல். பலரோடுங்கூடி யாதொரு பயனுமின்றி வார்த்தையாடிக் கொண்டிருத்தல். வட்டாடுதல்.

14. "ஆனமுதலுக்கதிகஞ் செலவானால், மானமழிந்து, மதிகெட்டுப்போன திசை எல்லார்க்கும் கள்வனாய், ஏழ் 'பிறப்புந்தீயனாய், நல்லார்க்கும் பொல்லனாம் நாடு" என்ற வேதவாக்கையுணராமல் வரவுக்கெஞ்சிய செலவு செய்தல்.

15. நாடோறுங் கூத்தாட்டுப்பார்த்தல். கூத்தாடுவோர்களுடன் இணங்கியொழுகுதல். கூத்தாடும் பெண்களைச்சேரல். அவர்களை வைப்பாகவைத்துக்கொள்ளல்.

16. புறங்கூறுதல், பொய்ச்சாட்சி சொல்லுதல். கள்ளத்தன்மையான ரிக்காடுகள் செய்தல். கள்ளத்தன்மையான நாணயங்கள் செய்தல். கள்ளக்கையொப்பம் வைத்தல். லஞ்சம் வாங்குதல். கள்ளத்தன்மையாகப் பொருட் சேர்த்தல். கள்வரோடிணங்கியொழுகுதல். கள்ளக்கணக்கு வரைதல். கள்ளத்தன்மையான லெட்டர்கள் வரைதல். நம்பிக்கைத்துரோகஞ்செய்தல்.

"கற்றதற்கிசைந்த வொழுக்கமில்லவனுய்க் களவினாற் பிறர்பொருள் கவர்ந்து, முற்றவிற்றுழலும் முலை மடமாதர் முயக்கிடையழுந்தியும் மனைக்கும், செற்றமிக்காக்கும் தீய கள்ளுண்டும் செறிபல துரோகமே பயின்று, முற்றவெங்கொலையும் புரிதரத் துணிந்தான் உரைக்கரும் கொடிய மாபாவி" என்பதற்கிணங்கி நிற்றல்.

17. ஊருடன் பகைக்கின் வேருடன் கெடுமென்ற வாக்கியத்தை மறத்தல்.

18. பல்லாரோடு பகை கோளல். நல்லார் தொடக்கைவிடல்.

19. தந்தை தாயுண்ணுத முன்னும், வந்த விருந்துண்ணுத முன்னும், தான் உண்ணல்.

ஒரே பந்தியுள் பல வேறு வகைகளான உணவுகளைப் படைத்தல்.

20. பிறன் மனையாளை விரும்புதல்.

21. ஒருவரோடு ஒருவர் கொண்டிருக்கும் நட்பினைப்பிரித்தல். பிறர் வாழ்தலைக்கண்டு பொறாமை கொள்ளுதல். கன்றுக்குட்டிக்குப் போதுமானவரை பால் விடாது கறந்துண்ணல்.

22. "இரும்பார்க்குங் காலராய், ஏதிலார்க்காளாய், கரும்பார் கழனியுட்சேர்வர். சுரும்பார்க்கும், காட்டுளாய் வாழும் சிவலும் குறும்பூழுங் கூட்டுளாயக் கொண்டுவைப்பார்" என்பதையுணராது நிற்றல்.

காட்டுள்ளாக்த் தங்கள் தங்களின் இனங்களோடுங்கூடி வாழ்ந்திரா நின்ற சில பட்சி ஜாதிகளையும், சில விலங்கினங்களையும், எட்பிளவுங்கூடக்கருணையின்றி நாட்டுள்ளேகொண்டு வந்து சிறை செய்து வைத்தல். அவைகளைக்கொன்று தின்னல்.

23. அயோக்கியன், போக்கிரி, மானமில்லாதவன், சுபவன், வஞ்சகன், பொய்யன், கள்வன் முதலிய கெட்ட பெயரோடிருத்தல்

24. வேசை யில்லம் புகுதல். "பொருட்பெண்டிர் பொய்மை முயக்கம், இருட்டறையில் ஏதில் பிணந்தழீஇயற்று" என்னும்,

தேவர் வாக்கினை மறத்தல். வேசையரில்லங்களையே கதியெனக் காத்தல். கொண்ட மனையாட்கு இரண்டகஞ்செய்தல். ஏனைய வொரு புருடனைக் கவனியாது தன்னையே கடவுளாமென்கவேண்டு மாற்றினைச் செய்யாது நிற்றல். தன்னுடைய சரீரப் பாதுகாப்புப் போன்று அவள் தன் சரீரத்தையும் பாதுகாப்பிக்கச்செய்யாது நிற்றல். எந்தவாற்றானும் ஆண்வர்க்கங்களைவிட பெண்வர்க்கங் களே உயர்ந்தனவென்பதை மறத்தல். தன் மனையாள் படியாத வளாயின் நாடோறும் படிப்பிக்கச்செய்யாது நிற்றல். தன் பகுதி பந்து வர்க்கங்களை போம்புவதுபோல் தன் மனைவியின் பகுதி பந் து வர்க்கங்களையும் ஓம்பாது நிற்றல்.

25. புதிய நாகரீகங்களிலொட்டி யொழுகாது நிற்றல்.

26. "தந்தைமகற் காற்று நன்றியவையத்து முந்தியிருப்பச் செயல்" என்பதனை மறத்தல். தாம் பெற்ற மக்களை சிறு பிராயத்திலேயே நல்லொழுக்கங்களினும், கல்விச்சாலைகள் வாயிலாகக் கல்விமுறைகளினும் பழக்காதொழிதல். நாமுள்ளவரையும், அதற்குப் பின்பும் அவர்கள் க்ஷேமத்தோடிருந்து யாதொரு விதமான கவலைகளுமின்றி நன்கு இன்பாதி போகங்களைத் துய்த்துக்கொண் டிருக்கும்பொருட்டு வேண்டுஞ் செல்வநிதிகளை ஈட்டிவைத்தற்கு வேண்டுங் கவனங்குறைதல். அவ்வாறு ஈட்டிவையாதொழுகுதல்.

27. "வேதமாகமங்கள் மிருதி நூல் புராணமிக்க வெக்கலை களும் பயின்று, போதமேசொல்லிப் போதமங் குணராப் புலைபருங் கழுதையும் நிகராம், கோதிலவாசங் குங்குமம் பனிதங்குலவிய புழுகடையாளி, பேதமே சுமந்த கழுதை யீங்கிவனின் ஏற்றமாம் வஞ்சமின்மையினால்"

"மறைமுதற் கலைகளியாவையுமுணர்ந்து மாசற வுரைத்து மாசொடுந்தான், கறையுறும் விடயக் கடுவெனுங் கடலிற் கருத்தருதின் விழுமாகில், அறைதருமவனே கன்ம சண் டாளன் அறிவற விருமையுமிழந்த, பொறியிலி யிவனைப் போலும் பாதகரிப்புவியினி லொருவருமிலையே"

"நற்றவவேடங்கொண்டறமுரைத்து நானிலத்தவரின் பொருட்டாற், பற்றறுமவர்கள் போலவே நடித்துப் பற்ற வாவொடும்பிறன் கடையின், முற்றவேயுமுழலும் மூடரு மனையை படைந்திடு மூடருமொக்கச், சுற்றியே பாசப்பவக் கடற்பட்டுக் கறங்கெனச்சுழல்வர் விடிலரே"

"ஐங்குபெரு ஞானியர்போற் பேசுவாரவருண்மை வேடம் போல, பாங்குபெற வுடற்புனைவார் சற்கருமஞ்செய்வார் தம்பக்கமேகி, நீங்குகவென் றொழிப்பாரிங்கில மேலாம் பிரமத்தினிலேயேயென்பார், ஈங்கிவர்கடாங்கெடுவதன்றி மற்றோரையுங் கெடுக்கும் எண்ணம் பூண்டோர்"

"தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல பொருள் வெஃகுஞ் சிறுமையுமிம்மூன்றும்
செல்வமுடைக்கும்படை"

"நன்றி பயன்றூக்கா நாணிலியும் சான்றோர் முன்
மன்றிற் கொடும்பாடுரைப்பானும்—நன்றின்றி
வைத்தவடைக்கலங் கொள்வானுமிம்மூவர்
எச்சமிழந்து வாழ்வார்"

"தீயவை தீயபயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப்படும்"

"மறந்தும் பிறன்கேடு சூழற்கச் சூழின்
அறஞ்சூழுஞ் சூழ்ந்தவன் கேடு"

"இலனென்று தீயவை செய்யற்கச் செய்யின்
இலனாகும் மற்றும் பெயர்த்து"

"தன்னைத்தான் காதலனாயின் எனைத்தொன்றுந்
துன்னற்கத் தீவினைப்பால்"

"வஞ்சமனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க
ளைந்து மகத்தே நகும்"

"தவமறைந்தல்லவை செய்தல் புதன் மறைந்து
வேட்டுவன் புட்சிமிழ்த்தற்று" என்பனவாதிய முதுரைகளாலேயும், நல்லொழுக்கமிஃது தீயொழுக்கமிஃதெனத்தெளியா தொழுகுதல்.

28. நிறையச்சொல்லிக்குறையவளத்தல் அல்லது நிறுத்தல்.

29. என் சகோதரர்களே! இது காறும் எம்முடைய புல்லறி விற்கு எட்டியமட்டும் தெரிந்தவாறு கூறினேம். இன்னும் ஆன் றோர்கள் வாயிலாக நிகழுந் தற்கால நாகரீகங்களையொட்டிக் கூறிக் கிடக்கும் பற்பல நூற்களின் வாயிலாகவும், பத்திரிகைகளின்

வாயிலாகவும் இதிற் காணுதன சில தெரியவருமாயின் அதனையும் ஓர்ந்துகொள்க.

30. எந்தவாற்றானும் நல்லொழுக்கமெனவெதனை யுலகங் கூறப்படுகிறதோ அதற்கு நேர்விரோதமான வொழுக்கமே தீயொழுக்கமென்பதிற் சந்தேகமில்லை. கற்றது கைமண்ணளவு கல்லாதுலகளவு உற்றகலை மடந்தை யோதுகிறாள் என்றும், கல்வி கரையிலகற்பவர் நாள் சில மெல்ல நினைக்கிற் பிணி பலவாம் என்றும் வரப்படுகிற முனிவர் வாக்கியத்தை யாய்ந்து நோக்குமிடத்து, எம்மையும், எம்முடைய கல்வித்திறனையும்பற்றிக் கவனிக்குமான்றோர்கள் யாது கூறுவார்களோ அறியேம்.

> "கற்றறிந்த நாவினர் சொல்லார் தஞ்சோர்வஞ்சி
> மற்றையராவார் பகர்வர்—பனையின்மேல்
> வற்றியவோலை கலகலக்குமெஞ்ஞான்றும்
> பச்சோலைக்கில்லை யொலி" என்றபடி கலகலவென்று

கூறிக்கொண்டு வருகிறேம். கவனியுங்கள்.

> "தாழ்ந்த வருணத்துதித்தவருந் தக்கோராவார் ஒழுக்கத்தால்
> விழ்ந்த வொழுக்கத்தாரிழிவர் மேலாம் வருணத்துதித்திடினும்"

"ஒழுககமுயர்குலம்"

31. நல்லொழுக்கத்தானுந் தீயொழுக்கத்தானுமே நல்ல குலம், தீயகுலமென நாவல்லவர்கள் வகுத்தனராமென்க. ஆனது பற்றி நண்பர்காள்! எந்தவாற்றானும் தீயவொழுக்கங்களில் நம்முடைய புத்தி இத்தாதிகளை செல்லவிடாது நல்லொழுக்கங்களையே பின்பற்றியொழுகுதல் வேண்டும்.

> "எவ்வகை யுலகத்துள்ளா ரியல்புடனொழுகுகின்றார்
> அவ்வகையொழுக்கினின்றே யழிவன வருமுன்காத்துத்
> தவ்வெனும் பழிபாவங்க டபுதியெய்தாமையஞ்சிச்
> செவ்விய நெறியினூடுஞ் செலுத்துக பொறிகளைந்தும்"

என்பதையுமுணர்க. பொதுவாகத் தீயொழுக்கமுடையவர்கள் மறுமையிலடையும் நரகத்துன்பங்களைக் கவனித்து இங்ஙனம் வரையப்புகின் அளவின்றாம். இம்மையிலோவெனின் அத்தீயொழுக்கமுடையவர் மாந்தராய்ப் பிறந்தும் அவர் மாந்தருள்ளும் வேறாம். அவரடையும் பயனிலைகளும் மாந்தராய்ப்பிறந்தாரடையும் பயனிலைகளினும் வேறாம். அத்தீயவர்களைப்பற்றி மிக்க

விரித்துக் கூறுவதால் யாதொரு பயனுமின்றாம். நமது வகுப்பின் தலைவர்களெல்லாம் ஒன்று கூடி இத்தீயொழுக்கங்கள் எற்றும் நமது வகுப்பின் அறிவிற் சிறியார் எவரிடத்தே என்கினும் எவ்வளவும் பற்றுதொழியும்பொருட்டுப் பகர்ந்து பேசி வேண்டுந் தீர்மானங்கள்செய்து, நல்லொழுக்கமுடைய அறிவாளிகளைக்கொண்டு ஆங்காங்கு போதிக்கச்செய்தலும் வேண்டும். அதற்காக வேண்டும் ஒவ்வொரு சாதனங்களையும் எல்லாம் வல்ல நம்முடைய பரசிவப்பெருமான் கொடுத்தருளுவாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

46-வது அ-ம், எழுஞ்சினங்காத்தலும், இன்னாச்செய்யாமையும்.

நண்பர்காள்! குமரன் திருவடி சிரமேற்கொண்டு இங்ஙனம் எழுஞ்சினங்காத்தலும், இன்னாச்செய்யாமையும் என்னும் அங்கத்தை வரையத்தொடங்கி முதன்முதலாக எழுஞ்சினங்காத்தலைப்பற்றிக் கவனிப்பாம். அஃதாவது எக்காரணம்பற்றியோ? எதனையும் ஆழ்ந்தமர்ந்த சிந்தையோடும், ஓர்ந்துணர்ந்து நோக்காதமுன்னர் நிகழப்படுங் கோபத்தை மிக்க நிதானபுத்தியோடு அடக்கிக்கொள்ளுதலும், பொதுவாகக் கோபஞ்செய்தற்கு காரணமாகிய குற்றம் ஒருவரிடத்தே யுண்டாகியவிடத்தும் அதனைப் பொறுத்து, அங்ஙனம் எழாநின்ற கோபத்தை மீண்டும் நீர் உள்ளே சென்மின். ஆங்குதானே மிகச்செவ்வையாய் அடங்கியிருமின். நீயிர்! வெளி வந்தால் எமக்கு மிகச்சங்கடமாக இருக்கிறது.

> அனற்பொரி பறக்கக் கனலுருவாகின்றேம்.
> தாயருங்கோவென நாயாய்க் குரைக்கின்றேம்.
> இல்லாளுந் தூற்ற வெறுபதாகின்றேம்.
> பல்லாரிகழப் படுமரமாகின்றேம்.
> நல்லாரிகழ நாம் பழி யேற்கின்றேம்.
> பேய் போற் குதித்துப் பிணம்போற் கிடக்கின்றேம்.
> ஒன்றுந் தெரியாதுழறுவானுகின்றேம்.
> பேசா வார்த்தை பேசப்புகுகின்றேம்.

கட்டங்கடக் கூத்தாடியாகின்றேம்.
சிறுவரும் நகைப்பச் சீச்சீ! சீயென,
எல்லாருங்காண இவர் கொடியரென்று,

சொல்லாருஞ் சொல்லத்துன்பப்படுகின்றேமாகலின், மிகுதியும் அடியேம்பாற் பெருங்கருணைகூர்ந்து தம்முடைய வீராவேசத்தை நீயிரே பெருந்தகைகூர்ந்து தம்முன்னே நீற்றி, எம்முன்னே சாம்பராய் அடங்கிக்கிடக்கக் கடவதாமென்று ஆஞ்ஞாபித்து அடங்கச்செய்துகொள்ளுதலேயாம்.

2. எந்தவாற்றானும் நண்பர்காள்! மிகவும் பெரிதாகிய இந்நிலவுலகத்தின் கண்ணே நம்போன்ற மனிதவர்க்கத்தாரியற்கைகளையும், நம்மினும் உயர்தரப்பட்ட தேவவர்க்கத்தாரியற்கைகளையும் மிகச்செவ்வையாக வூன்றிநோக்கிக் கவனிக்குமிடத்து எத்துணைதூரங்கடந்த தவச்சிரேஷ்டர்களாக விருப்பினும், மகா நாவலவர்களாயிருப்பினும், ஆரியஞ், செந்தமிழ், ஆங்கில முதலிய சில முதன்மையான பாஷைகளினுந் தேர்ந்த மகா வல்லுநர்களாக விருப்பினும், மிகவும் பெரிதான கதாப்பிரசங்கியாக விருப்பினும், கோபமானது மிகக்கொடியதேயென்று பன்னூற்களானுந் தெரிந்தெடுத்த மேற்கோள்களையுங்காட்டி ஆங்காங்குடைத்தான பலசங்கங்களுக்குஞ் சென்று, பன்முறைவற்புறுத்தி மிகவும் இனிதான உபந்நியாஸங்களைச் செய்துவருவதையே தம்மியற்கைத்தொழிலாமென்று மேற்கொண்டவர்களாக இருப்பினும் கோபமென்னுந் தீயிடை யமிழ்த்தப்பட்டவர்களாகவே காணப்படுகிறது.

3. உடல்கொள் உயிர்க்குணம் பலவகைத் துள்ளும் இக்கோபமேயன்றோ மிகச் சிறந்ததாம் போலும்! காணப்படுகிறது.

4. தோற்றப்படுகிற எந்தத் தோற்றங்களினும், உயர்தரப்பட்ட அருமையுடையதென்றும், தெய்வத்தன்மை வாய்ந்ததென்றும், புகழ்ந்து கொண்டாடப்படுகிற நம்மனித யாக்கையினுள்ளே இக்கோபமென்னுந் தீயையும் புகுத்திச் சிருஷ்டிக்கப்படுகிற சண்டாளத்தன்மையை யோர்க்குதான் நம் பட்டினத்தடிகளும், சிருஷ்டிகர்த்தனை கமண்டல, "வீணன்" எனச் சிறப்பித்துக்கூறினர்போலும்! அந்தோ! இஃதென்னை வியப்பு! மும்மூர்த்திகளுள் ஒருவரே இம்மாதிரியான சண்டாளத்தன்மைக்கு உடன்படுதலென்றால் யா

மெவன் செய்யவல்லோம். யாவர்பாற் சென்று முறையிடுவோம். ஈண்டு நம்போல்வார் செய்யப்படுகிற பலவிதமான ஒவ்வொரு தொழின்முறைகளுக்கும், நாமியலப்படுகிற பலவித இயற்கைகளுக்கும், பலவித் நியாயச்சட்டங்களும், உயர்தர சாஸ்திர முறைகளும், நம்மினுஞ் சிறந்தார் பலராலேயும் ஏற்பட்டுக் கற்பிக்கப்படுமானால் எற்றானுஞ் சிறந்த படைப்புத்தொழிலைக் கற்பிக்கப்படுவதோர் நூன்முறைச் சட்டமொன்றேற்படாதிருத்தல்கூடுமோ? அவ்வாறு ஏற்பட்டு அதனைக் கற்றுத்தேர்ந்து வல்லுநத்தன்மையான சில பட்டங்களைப்பெற்றாலொழிய ஒருவரைச் சிருஷ்டி கர்த்தாவாக நியமிக்கும் பழக்கவழக்கங்களும் ஆங்குள்ளதாயிருக்குமோ? நம்முடைய பரசிவப்பெருமான் என்னை அத்துணைதூரந் தேர்ந்தவோர் வல்லுநத்தன்மை வாய்ந்தாரன்றோ? சிநேகத்தன்மையால் முட்டாளுக்கு உத்தியோகங்கொடுக்கும் உணர்ச்சியற்றாரவரோ? அங்ஙனமில்லையாயின் நம் மனிதயாக்கையுள் பலவித நற்குணங்களையும் தெய்வத்தன்மைகளையும் ஸ்தாபித்து, அதனோடு இக்கோபத்தீபோன்ற பல தீயகுணங்களையும் ஸ்தாபிப்பதற்கும் அவன் யாவன்? பலவகைப்பட்ட நியாயாநியாயங்களும், கருணை முதலிய பல நல்லொழுக்கங்களும் அற்றனெனப்படுமோ? அல்லாதவரை அவனுடைய வீண்தன்மை யாங்கு நிலைபெறவுங்கூடுமோ? நம்போன்ற மனிதவர்க்கத்தார் மாட்சியைக் குறைபடுத்துவதும் அவனுக்கென்னை ஓர்வித அழகாம்போலும்! மும்மூர்த்தி பதவியுள் இருக்கும் ஒருவன் இத்தகைய கீழ்த்தர வேலைகளைச் செய்வதற்குரிய தமது புத்திசித்தங்கள் எவ்வாறு சம்மதித்துக்கொண்டதோ தெரியவில்லையே! இத்தகைய கீழ்த்தன்மை வாய்ந்தவொருவனை பெரும் பதவியிலுள்ளானென நம்போல்வாரே யங்கீகரிப்பதற்கிடனில்லையாயின் ஆன்றோர்களாலே யாங்ஙனம் அங்கீகரிக்கப்படப்போகிறது. இக்கமண்டல வீணன் வீண்தன்மைகளைப்பற்றி மிக விரித்துப்போவது அனாவசியமேயாகும். இவன் கெட்ட விஷயங்களையெல்லாம் மிகச்செவ்வையாகக் கணக்கெடுத்து வரைந்து மிகவும் பெரிதான விண்ணப்பம் ஒன்று தயார் செய்து நம்போல்வார் பலருங்கையொப்பம் வைத்து நமது பரசிவப்பெருமானுக்கு அனுப்பினோமாயினும் அவர் கவனிக்கமாட்டாரென்பதூஉந் திண்ணமாம். மகா கோத்திரப்பிரியரென்பது நம்போல்வார் பலரும் நன்குணர்க்

தீதேயாம். மேலும் இக்கமண்டல வீணனாலே சதாவும் தியானிக்கப்படுகிறவர். இதற்காக நாம் யாது செய்தல் வேண்டும்? இக்கோபத்தீயை எவ்வாறொழித்தல் சாத்தியம்? இக்கமண்டல வீணனின் போக்கிரித்தன்மையையும், நம்முடைய கெட்டித்தன்மையையும் ஒரு கை பார்த்துவிடுதலும் வேண்டும். இவனாற் கற்பிக்கப்படுகிற எந்தத் தீக்குணங்களையும் ஒழிக்குந் தன்மையையே நம்முடைய முதன் முதற்றொழிலாக வைத்துக்கோடலும் வேண்டும். ஆய்ந்து நோக்குமிடத்து இதற்கெஞ்சிய ஒருவாறு நமக்குப் புலப்படவில்லை. இதற்காக நம்முடைய தொழின்முறைகளையும் இன்பாதிபோகங்களையுமொழித்து இமாலயம், பொதியை முதலாய குன்றங்களுக்குச்சென்று நம்முடைய பரசிவப்பெருமானைக் குறித்துத் தவம் புரிதலென்றாலும் மிகத்துர்லபமாக முடியும். பெரும்பான்மை சாத்தியமாகவும் மாட்டா. நண்பர்காள்! நன்றாகக் கவனியுங்கள்.

5. ஆகலின் இக்கோபம் என்னுந் தீயை, விவேகம், சாந்தம் முதலிய நன்னீரால் அவித்துவிடல்வேண்டும். அல்லாதவரை மகாபாதகமென்னுஞ் சாகரத்திலே அமிழ்ந்துவிடுவோம். பாவமென்னும் சரக்கை மூட்டை மூட்டையாகச் சேர்ப்பிக்கும். அன்பார்ந்த சுற்றத்தார்களையெல்லாம் விலக்கச்செய்யும். எவரோடும் பகைமையை விளைவிக்கும். நம் மனத்தையும், நம்மையும் மாறாத்துயரத்துள் அழுந்தச்செய்யும். மறுமையில் ரௌரவாதி நரகத்தையுங் காட்டும். ஓயாத மனக்கலக்கத்தையுண்டாக்கும். அறிவுகெட்டுப்போம். அருள் இல்லையாகும். எவ்வுயிர்களுக்குந் துன்பஞ்செய்தல்கூடும். பல்லோராலும் கீழ் மக்களாமென எள்ளச்செய்யும். ஆன்றோர் சேர்க்கையுள் அகப்படச்செய்யா.

"கோபத்தாற் கோசிகன் தவத்தைக் கொட்டினன்
கோபத்தால் நகுடனுங் கோலமாறினன்
கோபத்தாலிந்திரன் குலிசம்போக்கினன்
கோபத்தாலிறந்தவர் கோடி கோடியே" என்றும்,

"கோபமே பிறவியைக்கொடுக்குங் கொள்கலம்
கோபமே தனுவினைத்துன்றக்குங் குட்டநோய்
கோபமே தாயையுங் கொல்லுந்திண்படை
கோபமே தவத்தினைக் குலைக்கும் பேயரோ" என்றும்,

வரப்படுகிற ஆன்றோர் வாக்குகளையாவசியமாகவுணர்தற்பாலதே.

6. "நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்—வோர்த்ததனை
யுள்ளத்தானுள்ளியுரைத்துராயூர் கேட்பத்
துள்ளித்தூண்முட்டுமாங்கீழ்" என்றும்,

"நெடுங்காலமோடினும் நீசர் வெகுளி
கெடுங்காலமின்றிப் பரக்கும்—அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற்றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்" என்றும்,

"கூர்த்து நாய் கௌவிக்கொளக்கண்டுந் தம் வாயாற்
பேர்த்து நாய்க்கௌவினாரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால் சொல்பவோ
மேன்மக்கள் தம் வாயான் மீட்டு" என வரும் முனிவர்

வாக்கையும் உணரற்பாலதே. ஆகலின் எந்தவாற்றானும் எழுஞ்சினத்தைக் காத்தலே நம்முடைய பேரறிவாண்மையாமென்பதை நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் நன்றாக உணர்தலும் வேண்டும். நம்முடைய தேவபெருமான்

"செல்லிடத்துக்காப்பான் சினங்காப்பான் அல்லிடத்துக்
காக்கிலென் காவாக்காலென்" எனக்கூறியதுபோன்று

நம்முடைய கோபமானது செல்லுமிடத்துக் காத்துக்கொள்வதுதான் மிக விசேஷ ஆண்மையாம். அல்லாதவிடத்து யாம், பொறுத்துக்கொண்டிருந்தேம் என்பது ஒருவாறு நகைப்பே எனினும், பெரும்பான்மை நன்மைதானென்பதில் எற்றுஞ் சந்தேகமின்றாம். "தன்னைத்தான் காக்கிற்சினங்காக்க காவாக்கால், தன்னையே கொல்லுஞ் சினம்" என்றும், "இணரெரி தோய்வன்ன இன்னாசெயினும்புணரின் வெகுளாமை நன்று" என்றும், "உள்ளிய வெல்லாமுடன் எய்தும் உள்ளத்தாலுள்ளான் வெகுளியெனின்" என்றும் வரும் முக்குறளையும் மிகச்செவ்வையாக உணர்தலும் வேண்டும்.

7. இக்கோபத்தையொழித்தாலே நாம் கற்றது கல்வியாம். நாமும் மனிதவர்க்கமெனப்படுவோம். நம்முடைய பேரறிவாண்மையும் ஆண்மையெனப்படும். நம்முடைய வர்யஞானங்களும்

பயன்பட்டனவாகும். நம்முடைய பக்தியும் பக்தியாம். நம்முடைய தருமமும் தருமமாம். நம்முடைய அன்னதானமும் தானமாம். "உள்ளங் கவர்ந்தெழுந்தோங்கு சினங்காத்துக்கொள்ளுங் குணமே குணமென்க" என்பதுபோன்று நம்முடைய குணமுங் குணமாகும். நம்முடைய செல்வமும் செல்வமாம். எத்தகைய பெரியவோர் காரியாதிகளையுங்கொண்டு முடிக்கலாம். பெரியவோர் சக்தி நமதுழியுள்ளனவாக எவர்களுக்குந் தெற்றென விளங்கும். நான்முகனோடு போட்டிபோடத்தகுந்த ஆண்மையும் நிலைக்கும். பலவகைப்பட்ட கீர்த்தியும் நமதுழி மிகச்செவ்வனே வளரும். எல்லாவித நன்மைகளுந் தானே பெருகும். "கற்பிளவோடொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்பொற்பிளவோடொப்பாரும்போல்வரே—விற்பிடித்து, நீர் கிழிய வெய்த வடுப்போல மாறுமே, சீரொழுகு சான்றோர் சினம்" என்ற வேதவாக்கையுணர்தலும் வேண்டும். ஞாலவாழ்க்கைக்காக வேண்டும் எந்தவோர் பெரிய வியவகாரங்களையுஞ் சிதைக்குமோர் கருவியே, இக்கோபமாமென்பதை நாமெந்தவாற்றானும் மறத்தல் கூடாது.

8. இனி இன்னாச்செய்யாமையைப்பற்றிக் கவனிப்பாம். அஃதாவது தனக்கு ஒரு பயனைக்குறித்தாவது, வைரம்பற்றியாவது, சோர்விலாவது, ஒருயிர்க்குத் துன்பந்தருமவைகளைச் செய்யாமையேயாம்.

9. என்னையோய்? நீயிர்! சொல்வது மிக வியப்பேயாம் இங்ஙனம் நம்முடைய நாடு நகரங்களிலே இருந்து வாழ்ந்துவருமாறு சொல்கின்றீரோ? அல்லது காடு வனாந்தரங்களைத்தேடி கோவணாண்டியாகச்செல்லுமாறு சொல்கின்றீரோ? ஒருவாறு கோபத்தையெழவொட்டாமற் றடுத்துக்கொண்டாவது நய வஞ்சகத்தோடும் மரீஇ நமது இல்லற ஒழுக்கங்களுக்காக வேண்டும் பல தொழின்முறைகளையும், இயற்கைகளையும் முடித்துக்கொள்ளினுங் கொள்ளலாம். வைரம்பற்றியாவது, சோர்விலாவது பிறிதோருயிர்க்கு இன்னாச்செய்யாமல் எவ்வாறு இயலுதல் கூடும்? காலதருமத்தைப்பற்றிக் கவனிக்கின்றீரோ? இல்லையோ? வெறுமனே பழைய நூற்களைப்பார்த்து பதிலடித்துவைக்கவந்தீரோ? நன்றாக

வுணர்மின். செவ்வையாக ஆய்ந்தோர்ந்து நோக்குமின். அதனையும் மிகத்தெளிந்தே கூறுமின். எவனேனும் நமக்கொருவன் தீங்கிழைப்பானேயாயின் அவனுக்கு அங்ஙனமே இரண்டு பங்கு தீங்கிழைத்தாலன்றோ இக்காலம், நம்மையும் மனிதவர்க்கமாக வெண்ணுகிறான். அல்லாதவரை சுத்தமான பித்தன் என்றன்றோ கூறுவான். மிகச்சாந்தமுடையவனென்றாவது, பெருந்தன்மை நிறைந்தவன் என்றாவது நினைப்பவர் சிறுபான்மை, அஃதினும் மிகச்சுருக்கமேயாமன்றோவெனின்? நண்பர்காள்! நன்றாகக் கவனித்தல் வேண்டும். பெரும்பான்மை யறநெறி வழுவாது இயலும் பேரிவாளர்களுக்கே மேற்கண்ட சட்டமாம். சிறுபான்மை நம் போல்வார் அனாவசியமாக எந்த வுயிர்களுக்கும் துன்பந்தருமவைகளைச்செய்யாமையேயாம் என்பதாக வுணர்தல் வேண்டும். விளக்குவைத்துக்கொண்டு கிணற்றில் வீழ்தல் நியாயமாகுமோ? அஃதாவது ஒரு விஷயத்தைப்பற்றிச் சிறிது கவனிப்போம்.

"இரும்பார்க்குங் காலராய் ஏதிலார்க்காளாய்
கரும்பார் கழனியுட்சேர்வார்—சுரும்பார்க்கும்
காட்டுளாய் வாழும் சிவலும் குறும்பூழும்
கூட்டுளாய்க் கொண்டுவைப்பார்"

அஃதாவது, வண்டுகள் ஆரவாரிக்கின்ற காட்டிலிருந்து வாழ்வதற்குரிய, கவுதாரியையும், காடையையும், கிள்ளை முதலிய ஏனைய பட்சி ஜாதிகளையும் பிடித்துக்கொணர்ந்து பஞ்சரத்திலிருக்கவைத்து வளர்ப்பவர், மறுமையில் இரும்பு விலங்கினாற் பூட்டப்பட்ட கால்களையுடையராகி, அயலார்க்கும் அடிமைகளாய், கருநிலத்தினும், விளை நிலத்தினும், சார்ந்து தொழிற் செய்வரென வரும் முனிவர் வாக்குகளைக் கவனியுங்கள். இஃது அவசியமானதா? அனாவசியமானதா? இவ்விளையாட்டுத்தன்மையால் நிகழும் பயனிலைகளைக் கண்டீர்களா? காடுகளேயவைகளுக்கு நாடுகளாமென்பதை நாம் உணர்தல் வேண்டாமோ? பால், பழம், சர்க்கரையோடும், அவைகளை உண்பிக்கச்செய்யினும், அவைகளுக்குத் துன்பமேயாமன்றோ? அவைகளின் மனைவி மக்களையும், இன பந்துக்களையும் விட்டுப்பிரித்து அவைகளின் சரீராதிகளை பதைபதைப்பச்செய்து ஓர் கூட்டுக்குள்ளே கொணர்ந்தடைத்துக்கொண்டு அதனோடு கொஞ்சிப்பேசி விளையாடும் நம்மனிதத்தன்

மையை எத்தகையமென்று நாம் உணர்தல் வேண்டாமோ? வினையாட்டைப்பொருந்தியும் பாதகங்களை ஏற்றுக்கொள்ளலாகுமோ? சில வதர்ம சண்டாளர்கள் இதனைக்கவனிக்கிறார்களில்லையே? இவ்வதர்மத்தொழில்களைக் கவனியாது செய்யும் இவ்வதர்ம சண்டாளர்களையும், தங்கள் தங்களின் நாடு நகரங்களையுமொழித்து, மனைவிமக்கள், பந்துவர்க்கங்களில் நின்றும் பிரித்துச் சில கரடி, புலி, சிம்மம்போன்ற மிருகங்கள் வந்து எவர்க்குந் தெரியாது தூக்கிக்கொண்டுபோய் தாங்கள் வசிக்குங் குகைகளிற் புகுத்திவைத்துக் கொண்டு, தாங்கள் அன்போடும் அருந்தும் ஆகாராதிகளையுங் கொடுத்து, முத்தியுங், கடித்தும், பிடித்திழுத்தும், தங்கள் அருமைத் திருக்கரங்களாற் றடவிக்கொடுத்தும், கொஞ்சிப்பேசியும், தங்களுக்குப் பசி நேர்ந்த காலம், ஒவ்வொரு கால் கைகளாகப் பற்றித் தின்றுகொண்டும் வருமாயின், அந்தோ! இவ்வதர்ம சண்டாளர்களின் மனம் படும் பாட்டை ஈங்கு வரைந்து முடியுமோ? இவர்களின் சரீரந் துடிக்குந் துடியை எவரேனும் பார்த்துமுடியுமோ? ஏதோ தப்பித்தவறி மனிதச்சரீரங் கிடைத்தவோர் பாக்கியத்தை எவ்வாறு வினியோகிக்கிறார்கள் கண்டீர்களோ? இவ்வதர்மத்தொழில்களைச் செய்யத்தானோ நம்பரசிவப்பெருமான் இம்மனிதயாக்கையையும், பேருஞ்சக்தியையுங்கொடுக்கச் செய்தான் போலும்! மிருகங்களையும் பட்சி பறவைகளையும், பிடித்துக்கொணர்ந்து (சர்க்கஸ்) அஃதாவது ஒருவகைக் கூத்தாடிப்பொருள் சேர்த்துத் தங்களின் ஒருச்சாண் கும்பியை நிறைத்து மனிதப்பதர்களாய் உலாவித்திரியும் சில காட்டுமிராண்டிகளைப்பற்றிக் கவனிக்கப்புகின், எந்த ஞான்றும் அவர்கள் அவைகளோடே சஞ்சரிக்குந் தன்மைபற்றி யேனைய உலகவியவகாரங்களையும், பாவபுண்ணியம், சுவர்க்க நரக கடவுளிலக்கணங்களையும், பேருந்தன்மைகளையும் காணாதவர்களாய் தத்துவ மார்க்கம் முதலிய பல நல்லொழுக்கங்களை யிஃதாமென உணர்வில்லாதவர்களுமாய், எற்றானும் ஞாபகம் அற்றவர்களுமாயிருத்தலின் அவர்களை அவைகளோடு வைத்தே எண்ணப்படுதல் ஆன்றோர் கொள்கையாமென்பது கற்றோர் பலர்க்கும் பிரத்தியக்ஷக்காட்சியேயாம். பெரும்பான்மை இப்பழக்க வழக்கங்கள் நம்முடைய நாடு நகரங்களினுள்ளே வந்து நுழையவில்லையேயெனினும் முன்னதாக எச்சரித்துவைக்கிறோம்.

எழுவகைத் தோற்றத்துள் எந்தத் தோற்றத்தை நினைப்பினும், நினைத்தவண்ணமே எவ்வித கட்டுமின்றி மிக அன்போடுவந்து பணிவிடை செய்யப்பெறும் ஆன்றோர்கள் நிறைந்த நம பாரதகண்டத்துள் தற்காலம் இக்கூத்தாட்டு அபூர்வமாகக் காணப்படுவது காலகதியென்றுதான் கூறல்வேண்டும். வேறு எவ்வித காரணத்தையுங் காணவில்லை. அநாகரீகங்களெல்லாம் நாகரீகமாகக் காணப்படுவதும் அஃதேயாம்.

10. நண்பர்காள்! இத்தகைய பலமார்க்கங்களையும், நம்மினும் மெலியார்க்கு எந்தவாற்றானும் துன்பந்தருமவைகளையுஞ் செய்தல் கூடவேகூடாது. எந்த ஜாதி மிருகவர்க்கங்களுக்கும், பட்சிஜாதிகளுக்கும் நம் கனவினுங்கூட இன்னாச்செய்ய நினைத்தல் கூடவே கூடாது.

"சிறப்பீனுஞ்செல்வம்பெறினும்பிறர்க்கின்னா
செய்யாமைமாசற்றார்கோள்" எனவும்,

"கறுத்தின்னாச்செய்தவக்கண்ணும்
மறுத்தின்னாசெய்யாமைமாசற்றார்கோள்" எனவும்,

"இன்னாச்செய்தாரை யொறுத்தாலவர்நாண
நன்னயஞ்செய்துவிடல்" எனவும்,

"தன்னுயிர்க்கின்னாமைதானறிவானென்கொலோ
மன்னுயிர்க்கின்னாச்செயல்" எனவும்,

"பிறர்க்கின்னாமுற்பகற்செய்யிற்றமக்கின்னா
பிற்பகற்றாமேவரும்" எனவும்,

"எனைத்தானுமெஞ்ஞான்றும்யார்க்குமனத்தானும்,
மாணாச்செய்யாமைதலை" எனவும். வரும் தேவர் திருவாக்குகளை நன்றாகக் கவனித்தலும் வேண்டும். அதன்படி யியலப்பழகுதலும் வேண்டும். தமக்குத் துன்பந்தருமவைகளைச் செய்தார்க்குத் தண்டமளாது, அவர்தாமே நாணுமாறு அவர்க்கு இனிமையான பலமகிழ்ச்சிகளைச்செய்து விடுதலால், ஒருவர்க்கு நன்மையும், புகழும் பல காரியசித்திகளும் உண்டாகுமா? அல்லது எற்றானுந் தாழ்ந்தவோர் கேவலத்தன்மைகள் நிகழக்கூடுமோ? என்பதைப்பற்றிச் சற்றுக் கவனிக்கப்புகின் கேவலத்தன்மை என்பது எற்றானும் நிகழவேமாட்டாது. பல நன்மைகளும், புகழும்,

பல காரியசித்திகளுமே விளையக்கூடுமென்பதை எக்காலத்தும் பிரத்தியக்ஷமாகக் காணலாம். அஃதாவது முதன்முதலாக மனக் கலக்கமென்பதொன்றில்லவே இல்லை, கோடுகாடுகளுக்காகத் திரியுந் திரிச்சல் பலவில்லை, பின்னரும் அவரோடு பகைமையில்லை, அவர்க்காற்றிய பல நன்மைகளுக்கும் உரிய மறுமைப்பயனிலேகள் வேறுள்ளது, மிக்க விவேகசாலி, மிகுதியுஞ் சாந்தமுடையவர், கலக்கமற்ற மலைபோன்ற அறிவினையுடையவர், எனப் பலராலுங் கூறப்படுகிற புகழ், எவராலும் ஆன்ற மதிப்பு, பெரிய மனிதத் தன்மை, முதலிய பல நல்ல பிரயோஜனங்களுமேயுண்டாம்.

11. ஆகலின் நண்பர்காள்! துன்பந் தருமவைகளைச் செய்தவர்களுக்கு நாமும் கூடத் துன்பஞ்செய்ய நினையாதிருத்தலே நந் தகுதியாகும்.

> "தம்மையிகழ்ந்தமை தாம் பொறுப்பதன்றி மற்
> றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
> எரிவாய் நிரையத்து வீழ்வர்கொல் என்று
> பரிவதூஉம் சான்றோர் கடன்"

என்ற முனிவர் வாக்கையுணர்தலும் வேண்டும். ஆகவே இது விஷயங்களையெல்லாம் மிகச்செவ்வையாக நமது மகா சங்கத்திலே பல மேதாவிகளும் ஒன்றுகூடிப் பகர்ந்துபேசி நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளின் மனத்திடையும் நன்கு பதியுமாறு வேண்டும் பல மார்க்கங்களையும், நாளை, நாளையென்று நினையாது இக்கணமே பூர்த்தி செய்தலும் வேண்டும். எழுஞ்சினங்காத்தற்கும், இன்னச்செய்யாமைக்கும் எஞ்சியவோர் பேறிவாண்மை கோறப்படுகிற எந்த வுலகத்தும், எத்தகைய தேவர்களிடத்துங்கூட இல்லையென்பதை நாம் நன்றாக வுணர்தல் வேண்டும். எந்த மார்க்கங்களுக்கும் கல்வியே காரணமென்பதையும் நன்கு தெளிதல் வேண்டும். எழுஞ்சினங்காத்தற்கும், இன்னச்செய்யாமைக்கும் போதிய திருவருட் சக்தியை நம்முடைய குமர குருபரன் நமக்குத் தந்தருளுவாராக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE REGISTRAR ... 21 JUL 1915 ... MADRAS.

Nattukkottai Vaiciyam.

நாட்டுக்கோட்டை வைசியம்.

ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

தொகுதி க. | நளஹுல ஆனிமீ. | பகுதி உஉ

47-வது அத்தியாயம்.

அணியும், உடுக்கையும்.

நண்பர்காள்!

> "மாடத்துளானலன் மண்டபத்தானலன்
> கூடத்துளானலன் கோயிலுள்ளானலன்
> வேடத்துளானலன் வேட்கைவிட்டார் நெஞ்சின்
> மூடத்துளே நின்று முத்தி தந்தானே."

எனக்கூறியார் இரண்டு திருத்தாள்களையும், அடியேஞ் சிரமேற்கொண்டு இங்ஙனம் அணியும் உடுக்கையும் என்னும் அங்கத்தை வரையத்தொடங்கி முதன்முதலாக அணியென்பதைப் பற்றிக் கவனிப்பாம். அஃதாவது படையினது உறுப்பும், ஒப்பனையும், அழகும், பெருமையும், கலனும், அன்பும், அணியெனல் எனப்பிங்கலந்தையார் கூறுவதுபோன்று, படைவகுப்பு, அலங்காரம், அழகு, பெருமை, ஆபரணம், அன்பு முதலிய பலபொருள் குறித்த ஒரு சொல்லே எனினும், அழகு, ஆபரணம், அலங்காரம் ஆகிய இம்மூன்றையுமே இதன் பொருளாகக்கொள்க. அஃதாவது இங்ஙனம் எடுத்துக்கொண்டதாமென்க.

இனி உடுக்கையைப்பற்றிக் கவனிக்கப்புகுந்தால் உடுக்கப்படுவது உடுக்கையாமென்க. சகோதரர்காள்! பல சமயங்களாலும், பல பாஷைகளாலும், பல நாகரீகங்களாலும் சூழ்ந்து விளங்கப்படுகிற மிகவும் பெரிதான இந்த நிலவுலகத்தின்கண் தோற்றப்படுகிற எந்தப்பகுதி மனிதக்குளாங்களை நோக்கினும் பெரும்பான்மை இயற்கையழகற்றவர்களாகவிருப்பினும், செயற்கையாலாவது அவ்வழகினை அமைத்துக்கொள்ளல்வேண்டும் பேரவாவோடு உயர்தரமான சில ஆபரணங்களைக்கொண்டும் தங்களை அலங்கரித்துக்கொள்ளும் இயற்கையையுடையவர்களாயுமே காணப்படுகிறார்கள். பொதுவாகக் கவனிக்குமிடத்துக் கல்வியாலும், அறிவாலும், நடையுடை பாவனை முதலிய வொழுக்கங்களாலும், உயர்தரம்பெற்ற எந்த நாகரீகங்களாலும் எத்துணையோ தூரம் தாழ்ந்த அஃதாவது வேடர், வில்லியர், பள்ளர், பறையர், குறவர், புலையர், இருளர், தொம்பரவர், சக்கிலியர், செம்மார் முதலானவர்களுங்கூட ஒருவகைப் பாசிகளைக்கோர்த்துத் தங்களின் கழுத்துகளில் ஆர்த்துக்கொண்டும், ஒருவகைக்கம்பிகளை வளைத்துத் தங்களின் காதுகளில் மாட்டிக்கொண்டுந் திரிகிறார்களென்பதைப் பெரும்பான்மை எந்தச் சகோதரர்களும் நன்குணர்வார்கள். என்றால் பலவிதமான உயர்தர நாகரீகங்கள் அமைந்துவிளங்கும் எந்தப்பகுதி மனிதக்குழாங்களும் பெரும்பான்மை இயற்கையழகற்றவர்களாயிருப்பினும், செயற்கையாலாவது அவ்வழகினை அமைத்துக்கோடல்வேண்டும் பேரவாவோடு உயர்தரமான சில ஆபரணங்களைக்கொண்டு அலங்கரித்துக்கொள்ளும் இயற்கையையுடையவர்களாகவே காணப்படுகிறார்களென்பதை ஒப்பாதார் யாவர்? இது விஷயத்தில் நமது இந்திய தேயமானது தொன்றுதொட்டு அஃதாவது வரையறுத்துக்கூறுவதற்கு இயையாத நெடுங்காலந்தொடங்கியே சீர்திருத்தம் அடைந்துவந்திருக்கிறதென்பதை மறுப்பாரும் இலர்.

2. ஆனால் உலகத்தில் தோற்றப்படுகிற ஒவ்வொரு தேயத்தவர்களின் அழகும், ஆபரணங்களும், அலங்கரித்துக்கொள்ளுதலும் ஒவ்வொருவிதமாக இருத்தலைப்போன்று நம் பரதகண்டத்தின் தோற்றப்படுகிற ஒவ்வொரு பெரிய பகுதிகளினும் ஒவ்வொரு விதமாகவே காணப்படுகிறது. ஆகலின் ஒவ்வொரு பகுதியார்களும் தங்கள் தங்களின் இயற்கையழகு, செயற்கையழகுகளைப்

பற்றியும். ஆபரணங்களைப்பற்றியும், அலங்கரித்துக்கொள்ளுதலைப் பற்றியும், பொதுவாகப் பலதேயத்துப் பல பகுதியார்களின் இயற்கையழகு, செயற்கையழகு, ஆபரணங்கள், அலங்கரித்துக்கொள்ளுதல் முதலியவைகளைப்பற்றியும், தோற்றப்படுகிற முச்சகங்களாலுங்கூட உயர்தர நாகரீகம் பெற்ற பகுதியாரெனப் புகழ்ந்து கொண்டாடப்படுகிற நமதரசியன் வகுப்பார் இயற்கையழகு, செயற்கையழகு, ஆபரணம், அலங்கரித்துக்கொள்ளுதல் முதலியவைகளைப்பற்றியும் எந்தவாற்றானுஞ் செவ்வையாகக்கவனித்து இறந்ததுவிலக்கல் எதிரதுபோற்றல் என்னும் உத்தியின் பற்றுக்கோடாக நிகழ்கால வருங்கால வியற்கைகளுக்குப் பொருத்தப்படாதனவற்றையெல்லாமொழித்துப் பொருத்தப்படுவனவற்றையெல்லாம் பாதுகாத்துப் புதிதாக ஆக்கிக்கொள்ள வேண்டுவனவற்றையாக்கிக்கொள்ள வேண்டுவதூஉம் ஆவசியகமேயாம். எனினும் நம்முடைய பகுதியார்களுக்காக நம்முடைய மகாசங்கத்தாரும் மேற்கண்டவாறு கவனித்துச் செய்துகொள்ள வேண்டுவதூஉம் ஆவசியகமேயாம். மனிதவர்க்கமாய்ப்பிறந்தார் ஒவ்வொருவர்களுக்கும் இன்றியமையாது வேண்டுவனவாவது கல்வியறிவாலும், இயற்கையழகு செயற்கையழகாலும், உயர்தர நாகரீகங்களமைந்த ஆபரணங்களாலும், உடைகளாலும் தன்னையலங்கரித்துக்கொள்வதேயாம். அஃதாவது ஒவ்வொரு பெண்மக்களும், ஒவ்வொரு ஆண்மக்களும் பார்ப்பவர்களுக்கு எவ்வகைத்தானுஞ் சிறந்த பேரணிவாய்ந்த மன்மதனைப்போன்றும், இரதியைப்போன்றும், தோற்றப்படுதல் வேண்டுமென்பதேயாம். அங்ஙனம் ஆனாற்றான் நாகரீகமான ஞாலவாழ்க்கை பயன்பெற்றனவாகமுடியும். பொதுவாகக் கவனிக்குமிடத்து மயிரை உச்சியில் முடித்தற்கு முடியென்பதூஉம், சுருட்டி முடித்தற்குக் குழல்என்பதூஉம், மயிரை முடித்துத் தூங்கவிடுதற்குத் தொங்கல் என்பதூஉம், பின்னிவிடுதற்குப் பனிச்சை என்பதூஉம், பின்னே சொருகற்குச் சுருள் என்பதூஉம், ஆகவே முடி, குழல், தொங்கல், பனிச்சை, சுருள் என்பன ஐம்பான் முடி என்பதூஉம் நமதரசியன் வகுப்பார் பெண்பாலாருள்ளும் நம் இந்தியதேயத்து ஏனைய சில பகுதியார்களின் பெண்பாலாருள்ளும் பெரும்பான்மை நான்கும், ஐந்துமே வழக்கத்திலிருந்து வருகிறதென்பதூஉம் நமது வகுப்பைச்சார்ந்த மேதாவி

குளாயுள்ளார் பலரும் நன்குணர்ந்த விஷயமேயன்றோ? நமது
வகுப்பைச்சார்ந்த நமதருமைச் சகோதரிகளின் தலையில் சுருள்
அஃதாவது பின்னர் மயிரை அள்ளிச் சொருகிக்கொள்ளுதல்
ஒன்றைமட்டுந்தானோ காணும்படி பிரமன் எழுதினான்? ஏனைய
பணிச்சை, தொங்கல், குழல், முடி என்று கூறப்படுகிற நான்கும்
நமது வகுப்புப்பெண்பாலாருக்கு உதவாமற்போன காரணம் யாது?
இறந்தகாலங்களிலே பக்காரணம் உடன்பாடாயிருந்ததென்போமா
யினும் தற்காலவரை பக்காரணத்தை யொழித்துவிடுதற்கு என்ன
தடையாயிருக்கிறது? பழையகாலத்து வழக்கம், பழையகாலத்து
வழக்கமென மயங்கிக்கொண்டே நமது வாணாட்களைத் தொலைப்
போமாயின் நம்மோடும் பிறந்த நம் சகோதரிகளான நமது வகுப்
புப் பெண்பாலாரையும் புதிய நாகரீகங்கள் வளர்ந்து நிறைந்து
விளங்கும் பேரழகுவாய்ந்த ஸ்திரீ ஜாதிகளாக்கி அவர்களோடு
வாழ்ந்துவரும் நாட்களும் யாங்ஙனம் கிடைக்கப்பெறுவோம்?
தற்காலவரை யாய்ந்துநோக்குமிடத்து நம்முடைய வாணாட்களெல்
லாஞ் சுவையற்றனவாகவோ ஒழிதல்வேண்டும்? பேதை, பெதும்
பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண்
என்று சொல்லப்படுகிற எழுவகைப் பருவங்களினும் அவ்வப்பரு
வங்களுக்குத் தக்கதக்கவாறு மிகவுஞ் செவ்வையாக அலங்கரித்து
நமதிரண்டு கண்களுங் களித்தல்வேண்டாவோ? பிறந்தும் பிற
வாதவர்களெனப்பெயர்மரீஇக்கோடலும் நியாயமாகுமோ? பெண்
பாலார் விஷயத்தைப் பெரிதும் தம் மனத்திடையெடுத்து மிகச்
செவ்வனேச் சீர்தூக்கிப்பார்த்து, அவர்களும் நமது சகோதரி
களே என்னும் உண்மையையுணர்ந்து, அவர்களுக்காக வேண்டும்
பல நல்ல மார்க்கங்களையும் அவர்களுக்குக்காட்டி நமது நாடுநகரங்க
ளெங்கணும் அம்மார்க்கங்களைப் பரவச்செய்யாது தூங்கிக்கொண்டி
ருக்கும் பேரறிவாண்மையும் ஆண்மையாகுமோ? அவர்களை மிருக
வர்க்கமாகப் பாவித்தல் மனித வர்க்கத்தாரின் இயற்கையாகுமோ?
அவர்களுக்குத் தக்க அழகையும், ஆபரணங்களையும் பூட்டி, உயர்
தர நாகரீகமமைந்த உடைகளையுங் காட்டி நாணம், மடம், அச்சம்
பயிர்ப்பு, இல்லற தருமத்திற்குரிய பல நல்ல வொழுக்கங்களும்
மிகத்தெளிவாக விளங்குமாறுகூடிய கல்வியென்னும் ஆகாரத்தை
யும் ஊட்டி, ஆடைவையுந்தீட்டி, இன்பாதியோகங்களுக்குரிய இயற்

கைகளையும் மிகத்தெளிவாக ஊட்டி, மல்லிகை, முல்லை, இரு
வாச்சி, பிச்சி, மரு, கொழுந்து, செண்பகம், மனோரஞ்சிதம், பா
திரி, நிலசம்பங்கி, கொடிசம்பங்கி, முதலிய பூக்களை அவர்களின்
அழகுவாய்ந்த முடி, குழல், தொங்கல், பணிசசை, சுருள் என்ப
வைகளிலே பூட்டி, விலங்கு, புள், ஊர்வன, தாவரமுதலாக எவை
களும் மயங்கத்தக்க சங்கீதப்பயிர்ச்சியினும் மிகக் கோட்டியாக
மாட்டி, இனிய வார்த்தைகளும், அறுசுவையினும் இன்சுவை
யமையுமாறு சமைத்த நல்லுணவுகளும் தக்க அன்போடு தருமாறு
மீட்டி, அவர்களோடுங் கூடிக்கலந்து வாழ்தற்குத் தெரியாது
வேசை, தாசி, இல்லங்களுக்குச் செல்லுதலும் வீணேயன்றோ?
மிகத்தாழ்ந்த மடமேயன்றோ? அறிவுளார் எவரும் அருவருக்கத்
தக்கதன்றோ? நண்பர்காள்! நன்றாகக் கவனியுங்கள். இப்பிறவி தப்
பினால் எப்பிறவி வாய்க்குமோவென்றதை நினையுங்கள். இரவு
பகலின்றி நாம் பொருளீட்டுவதெல்லாம் இன்பந் துய்த்தற்காமென்
பதையுணருங்கள். அலங்கரித்துக்கொள்ளுதலைப்பற்றி நன்றாகச்
சிந்தித்து நோக்குங்கள். நன்மையுள் நாடுங்கள்.

3. இனி உடுக்கையைப்பற்றிக் கவனிக்கப்புகுந்தால் நமது
செந்தமிழ் வர்க்கத்தார் ஒருங்குமே அதனை நாகரிக விஷயமாக
ஆர்த்துக்கொள்வதில் எவ்வளவுங் கவனமற்றவர்களாகத்தான்
இருக்கிறார்கள். அஃது கவனமாய் ஊன்றி நோக்குவார் ஒவ்வொரு
வருக்குந் தெற்றென விளங்காமற்போகா. எங்ஙனமெனின் சாதா
ரணமாக எந்த மனிதர்களும், எந்த உத்தியோகஸ்தர்களும்
கோர்ட்டுக்குப் போதல்வேண்டுமாயின், மிகத் துப்புரவானவும்
வெள்ளையானவும் ஆன சர்ட்டு, கோட்டு, தலைப்பாகை முதலிய
எல்லா உடுக்கைகளையும் ஆர்த்துக்கொண்டுதான் போதல்வேண்டு
மென்பது கட்டாயச்சட்டமன்றோ? அவ்வாறு போதல்வேண்டு
மென்னுங் கட்டாயச்சட்டமானது நம்முடைய அந்தஸ்து குறை
யாதிருக்கும் பொருட்டோ? அல்லது மேன்மேலும் வளர்ந்தோங்
கும் பொருட்டோ? அல்லது கவர்ண்மெண்டாரவர்களின் அந்
தஸ்து குறையாதிருக்கும் பொருட்டோ? அல்லது மேன்மேலும்
வளர்ந்தோங்கும் பொருட்டோ? என்பதை நமது திருநெல்வேலி,
மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, சென்னை
முதலிய பெரிய நகரங்களிலேயும் உடைந்தான சில பெரிய படிப்

யாளர்களுங்கூடக் கவனிக்கவில்லையென்றால் நம் போல்வார் தன்மைகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? என்னையோய்! இவ்வாறு கூறுகிறீர்? பி. ஏ. பி. எல். யம்மே. யம்மல். முதலிய சில பேரறிவாளர்களுங்கூடவா கவனிக்காதிருக்கிறார்களெனின் ஆம் ஆம் கவனிக்காதேதானிருக்கிறார்கள். அவ்வாறு கவனித்திருப்பார்களாயின் ட்ரவுஸர், பூட்ஸ் இன்றி இடுப்பில் வேஷ்டியைக் கட்டிக்கொண்டும், காலில் இரண்டடி நடையன் ஒன்றைச் சடக்குப் புடக்கென மாட்டிக்கொண்டும், உச்சிமயிரை நீளத் தூங்கவிட்டுக் கொண்டும், அதன் மேல் தலைப்பாகையை வைத்துக்கொண்டும், சர்ட்டு, கோட்டுப்போட்டும் எவர்களும் மயங்கத்தக்க அலங்காரத் தோடு கோர்ட்டுகளுக்கு போகவேமாட்டார்கள். இன்னும் ஆய்ந்து நோக்குமிடத்து பெரும்பான்மையோர்களைப் பார்ப்பதற்கு மிக அசங்கியமாயுங் காணப்படுகிறது. அஃதாவது நான்கு நாளைக் கொருதரங்கூடத் தங்களின் முகத்தை வழித்துக்கொள்கிறதில்லை. முகத்தை முகமாக வைத்துக்கொள்கிறதுமில்லை. 3, 4, நாளைக் கொருதரங்கூட அவ்வுடுக்கைகளை மாற்றிக்கொள்கிறதுமில்லை. 15 நாள் ஒரு மாஸம் வரை கூட அவ்வுடுக்கைகளை மாற்றாமலும், தோய்க்காமலும் தங்களின் மனமொப்பப் பாவித்துவருகிறார்கள். அவ்வுடுக்கைகளினுந் தலைப்பாகைகளினும் வெயர்வைத்தண்ணீர் நாற்றஞ் சொல்லமுடியாது. அஃது அவர்களுக்குத்தான் தெரியும். அதினுஞ் சிலர் 10¾, 11-மணிக்குப் பரந்தோம் விழுந்தோம் என்று சுடச்சுடக் காலரை வயிற்றிற்கு உணவினை யெடுத்துக்கொண்டு இடுப்பிலொரு வஸ்திரத்தைக் கட்டிக்கொண்டு, அதற்குமேல் முழங்கால் வரையானவோர் சர்ட்டை மாட்டிக்கொண்டு, அதற்கு மேல் இடுப்புவரையான பழைய கோட்டொன்றை இரண்டு பொத்தான் மாட்டியதாயும், மூன்று பொத்தான் மாட்டாததாயும் எவர்களுக்குந் தெற்றென விளங்குமாறு போட்டுக்கொண்டு, முடியிலிருந்து தண்ணீரானது சொட்டுச் சொட்டென வீழுமாறு விரித்துப்போட்டுக்கொண்டு அதன்மேற் றலைப்பாகையையும் வைத்துக் கொண்டு, ஒரு கையிற் குடையும், ஒரு கையில் இரண்டு மணிக்காகவேண்டும் ஆகாரத்தூக்கும், கக்கத்தில் சில ரிக்கார்டுக்கட்டுகளும் தாங்கி அவர்கள் உத்தியோகஞ்செய்யப் பயணமாகிட் டயமாய்விட்டதிட் டயமாய்விட்டதென நடந்தும், ஓடியும், சட்டாக்

களினும், டிராங்கார்களினும் செல்லும்பொழுதுதான் பார்ப்பவர்களுக்கு மிகவும் ஆனந்தம். எந்த நாடகங்களினுங்கூட இவர்கள் மாதிரி பபூன்பார்ட்டு ஆக்ட் செய்யப்படமாட்டாது. இவர்களைப் பார்த்து ஏன்! ஐயா! இம்மாதிரி அலங்கோலமாக உத்தியோகஞ் செய்யப் போகிறீர்கள் எனக்கேட்டால் நாய்வேடம் போட்டாற் குரைத்துத் தீரவேண்டுமே என்கிறார்கள். இன்னுஞ் சில பெரிய வக்கீல்கள், பெரிய உத்தியோகஸ்தர்கள் உடைகளைப்பற்றிக் கவனிக்கப்புகுந்தால் அஃது மிக வேடிக்கையாகவிருக்கும். இவ்விஷயத்தை மிக விரித்துக்கொண்டு போவதில் யாதொரு பயனுமில்லை. லௌகிக வியவகாரங்களுக்காக நமதரசியல் வகுப்பார் ஆசிரியன்மார்களாய் ஒருநூறு, இருநூறு வருஷங்களுக்கு மேற்றொலைந்தும் நம்முடைய செந்தமிழ் நாடு நகரங்கள் இவ்வித சீர்திருத்த நிலைமையிற்றோற்றப்படுமாயின் அந்தோ! யாவரைத்தான் குறை கூறுகிறது? எல்லாம் வல்ல இறைவன் திருவருட் செயலென்றுதான் கூறல்வேண்டும். நிகழ்கால வர்த்தமானத்திற்குத் தக்கவாறு அழகாக உடையுடுத்திக்கொள்ளத் தெரியாமலும், ஐயா! எங்களின் சுதேயமாகிய இத்தேயம் அளவுக்கு மிஞ்சிய சூரிய வெப்பம் பொருந்தியதாகையால் எங்களின் சரீரம் ஒருங்கையும் கம்பளியாலும், தோலாலும், துணிகளாலும் போர்த்திக் கட்டிக்கொள்ள முடியாதவோர் காரியமாகும், நீங்கள் மேனாட்டு வெண்துரைமக்களாயிருந்தாலும் நாங்கள் இவ்வுடையாலுந் துன்பமடையக்கூடாது, நாங்கள் மிக நன்றாக நன்னீரில்த்தோய்த்துலர்த்திய வஸ்திரமொன்றை யிடுப்பிற் கட்டிக்கொண்டும் அதன்மேற்றுண்டு ஒன்றைப் போட்டுக்கொண்டுந்தான் றுங்கள் உத்தியோகத்தைச் செலுத்தக்கூடுமே யன்றி றுங்கள் தேயத்துக்கு வேண்டுமாறுபோல உடையுடுத்திக் கொள்ள எங்களுக்குத் தெரியாது, ஒருவாறு தெரிந்தாலும் அவ்வாறு செய்யமாட்டோமெனச் சொல்லும் வன்மையுமின்றி இடை நடுவிற்கிடந்து சங்கடமடையும் நம் தமிழ்ச் சகோதரர்களைச் சீர்திருத்த எந்த உத்தமசீலன் இனிப்பிறக்கப்போகிறானோ தெரியவில்லை. ஒவ்வொருவர்களுக்கும் அவ்வவர்களின் அறிவு கல்வியோடு கூடிவளர்ந்துவருமானால் அஃதே போதுமானது.

4. சகோதரர்காள்! ஏனையவிஷயங்கள் எவ்வாறொழியினும் ஒழியட்டும். நமது வகுப்பு ஆண்பாலுக்கும், பெண்பாலுக்கும்

வேண்டும் அணிகளையும், உடுக்கைகளையும்பற்றி முக்கியமான சில விஷயத்தைக்கூறி இவ்வங்கத்தைப் பூர்த்தியாக்குவாம். நாகரிகமல்லாத எந்தக் காரியங்களையும் ஒழித்துவிடுவதில் நாம் பெருஞ் சக்தி வாய்ந்தவர்களாயிருத்தல்வேண்டும். இதற்காக வேண்டும் பல விஷயங்களையுந் தொகுத்து நமது வகுப்பைச்சார்ந்த பல மேதாவிகளும் செவ்வையாய்ப் பகர்ந்து பேசுதலும் வேண்டும்.

5. மிக்கவழகாயும், நாகரீகமாயும், வருங்கால வியற்கைகளுக்குப் பொருத்தமாயும், பல தேயத்தவர்களும் ஒப்பத்தக்கதாயும், ஒன்றிரண்டு ரூபாவுக்கு மேற் கிரையம் அடங்காததாயும் எந்த ஞான்றும் எவ்வகை முகாந்தரங்களைக்கொண்டுஞ் சிரசில் எந்தவிதமான நோயணுகாததாயும் உள்ள நல்லமாதிரி யஃதாவது புதுமாதிரியான தலைப்பாகையொன்றைக் கட்டி நமது வகுப்பைச் சார்ந்த ஒவ்வொரு ஆண்மக்களும் கட்டாயமாக இம்மாதிரியான தலைப்பாகையொன்றைத் தரித்துக்கொள்ளாதிருத்தல் கூடவே கூடாதென்ற கட்டாயச் சட்டமொன்றையும் நிறுவி இம்மாதிரியான தலைப்பாகையை ஏனைய எவர்களே எனினும் தரித்துக்கொள்ளக் கூடாதென்ற வரன் முறையான சட்டம் ஒன்றையும்செய்து நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு நாடுநகரங்களுக்குந் தெற்றன விளங்குமாறு பரவச்செய்தலும் வேண்டும்.

6. வதனம் ஒன்றன்னியில் மற்றைய பாகம் ஒருங்கையும் உடைகள் செவ்வையாய்ப் பற்றிக்கொண்டிருத்தலும் வேண்டும்.

7. எந்தக் காலத்தும் பூட்ஸ் கட்டாயம் இல்லாமற்றீராதவொரு பொருளாகக் காலில்ப் பாவித்து வருதல்வேண்டும்.

8. மேற்கண்டவாறு பெண்மக்களின் சரீரத்தையும் உடைகள் அஃதாவது பாவாடை கோட்டுகள் செவ்வையாகப் பற்றிக்கொண்டிருத்தலும் வேண்டும். அவர்களும் கால்களிற் பூட்ஸ் மாட்டிக்கொள்ளவேண்டும்.

9. நாம் இன்ன சமயத்தைச் சார்ந்தவர்களென்பது நம்முடைய நெற்றியிலுண்டாகுஞ் சில குறிகளாற்றெரிந்துகொள்ள விளங்குதலே சாலும்.

10. ஆண்மக்களுக்கே எனினும், பெண்மக்களுக்கே எனினும் கல்வியாற் சிறந்த அறிவும், நைசான உடைகளுமே சாலும்.

11. பொன்னாற்செய்யப்படுகிற ஆபரணங்களினும் திருமாங்கலியம் ஒன்றைமட்டும் எந்தஞான்றுந் தங்களின் மிடறினை நீங்காதிருக்கும்படி செய்துவிட்டு ஏனைய எந்த ஆபரணங்களையும் நிறுத்திவிடுதலே மிக நன்றாம். அஃதாவெஞ்சி வேண்டுமெனப் பெரும்பான்மையோர்களின் பேரவாவுளதாயின் காதில் கம்மலிடுவதற்குமட்டுந் துவாரங்களிருத்தல்வேண்டும். ஏனைய பல துவாரங்கள் நாமாக இடுதல்கூடாது. கழுத்தில் திருமாங்கலியமும், அதன் கொடியும் கோட்டுக்குள் கிடக்குமாறு செய்துகொள்ளுதல் வேண்டும். அதன்மேல் வேண்டுமாயின் சரப்பணியல்லது பவுன் மாலை தரித்துக்கொள்ளுதலும் வேண்டும். கைவிரல்களில் மோதிரங்களாகவே தான் தரித்துக்கொள்ளல் வேண்டும். இவைகளையல்லாமல் பெண் மக்களின் சரீரங்களில் வேறு வேறு பொன்னாபரணங்கள் போடுதல் கூடவேகூடாது.

12. எந்த நாளும் திலதம் நமது நெற்றியை விட்டகலுதல் கூடவேகூடாது. தலைப்பாகையின்றி இடுப்பில் வேஷ்டி கட்டிக்கொண்டும், கோட்டு மாட்டிக்கொள்ளும் பழக்க வழக்கங்களுங் கூடவே கூடாது.

13. சதாகாலமும் பூட்ஸ், ட்ரவுஸர், கோட்டு, தலைப்பாகை வைத்துக்கொள்வதற்குரிய நாடு நகரங்கள் நம்முடையதல்லவென சில சுகாதார முறைக்காரர்கள் சொல்லவுங்கூடும். அஃதும் வாய்மைதான். அதனைப்பற்றிக் கவனிக்கவேண்டுவதும் ஆவசியகந்தான். ஆனால் கம்பளிகளாலும், செக்குகளாலும், தோல்களாலும், கொடிய நெருப்புக்குச் சமமான இன்னும் ஏனைய சில துணிகளாலும் நாம் உடைகளைத் தயாரித்துக் கொள்ளவுங்கூடாது. அவைகளையுபயோகப்படுத்துதலுங் கூடாது. மிக மிருதுவும், வெண்மையுமான சில பட்டுகளாலும், பஞ்சுநூற்றுணிகளாலுமே தயாரித்துக்கொள்ளுதலும் வேண்டும்.

14. பொதுவாகக் கவனிக்குமிடத்து, நம்போன்ற வயசானவர்களெல்லாம் இவ்வாறு துணிந்து இயன்றுகொள்ளுவதென்றால்

ஒருவாறு மணம் காணுதல் கூடும். இதற்காக யாது செய்தல் வேண்டுமென்றால் நம்முடைய காலங்கள் ஒருவாறு கழிந்தது ஒழியட்டும் நம்முடைய சிறுவர் சிறுமிகளையாவது மேலே காட்டப்பட்டவாறுள்ள பழக்க வழக்கங்களிலே செவ்வையாகப் பழக்கிக் கொணர்ந்துவிடுதலும் வேண்டும். ஒரு 20, 30 வருடங்களுக்குள்ளே உயர்தர நாகரீகத்திற்கு வந்துவிடுமென்பதில் எட்பிளவானுஞ் சந்தேகமில்லை.

15. உயர்தர நாகரீகங்களிற் புகுவதால் நிகழும் நாணங்களை நாணங்களாக நினையாமலொழித்துவிடுதலும் வேண்டும். ஆகவே எவ்வகைத்தானும், உயர்தர நாகரீகங்களமைந்த அணிகளாயும், நடையுடை பாவனைகளாயும், அலங்காரமாயும் இருத்தல் வேண்டுமென்பதேயாம். இவ்வங்கத்திற்காக வேண்டும் பலவிஷயங்களையும் ஆன்றோர்கள் கவனித்து இதில் வாராதனவாய் மறைந்தொழிந்து கிடப்பினும் அவைகளையுஞ் சீர்தூக்கிக்கொள்க. நமது வகுப்பாராயுள்ள ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் இது விஷயத்தை மிகவுஞ் செவ்வையாகக் கவனித்துவருதல் வேண்டும். பேப்பர்களுக்கு வரைதல் வேண்டும். உபந்நியாஸஞ் செய்தல் வேண்டும். இது விஷயங்களை நம்முடைய நகரங்களெங்கணும் பரவச்செய்தலும் வேண்டும். பல தேயவியற்கைகள் செவ்வையாக நமக்குத் தெரியாததென்பதூஉமில்லை. கவனியுங்கள். எல்லாம் வல்ல இறைவனுந் திருவருள் புரிவான்.

சுபம்! சுபம்!! சுபம்!!!

48-வது அத்தியாயம்.

சுற்றந்தழுவலும், ஒருமைப்பட்டு வாழ்தலும்.

மால் திருமார்பினன் மலரடி தொழுது நண்பர்காள்! இங்ஙனம் சுற்றந்தழுவலும், ஒருமைப்பட்டு வாழ்தலும் என்னும் அங்கத்தை வரையத்தொடங்கி முதன்முதலாகச் சுற்றந்தழுவலைப் பற்றிக் கவனிப்பாம். அஃதாவது தங்கள் தங்களின் பந்துக்களை

எந்தவாற்றானும் எவ்வித முகாந்தரங்களைக்கொண்டும் தங்கள் தங்களில் நின்றும் விலகாமல் அணைத்துக்கோடலேயாம். சகோதரர்களை பொதுவாகக் கவனிக்குமிடத்துப் பந்துக்கள் அஃதாவது அச்சுற்றத்தார் ஐந்து வகைப்படுவர். எங்ஙனமெனின்? சுற்றந்தழீஇச் சுகமுடன்வாழும் இஞ்ஞாலத்தில் வம்மிசம் அஃதாவது கொடிவழியாற் பந்துக்கள், வருணத்தாற் பந்துக்கள், பாஷையாற் பந்துக்கள், தேசத்தாற் பந்துக்கள், கண்டத்தாற் பந்துக்கள் என்பனவேயாம். இன்னுஞ்சில மேதாவிகள் உலகத்திற்றோற்றப்படுகிற மனிதவர்க்கமெல்லாம் ஒரே பந்துத்வம் உடையவர்களே என்றுங் கூறுகிறார்கள். இங்ஙனம் நாமெடுத்துக்கொண்டது கொடிவழியாற் பந்துக்கள், வருணத்தாற் பந்துக்கள் என்னும் இரண்டைமட்டுமேயாம். ஏனைய மூவகைப் பந்துக்களையும் சமயம் நேர்ந்துழி அணைத்துக்கோடல் ஆவசியகம் எனப்படும். இங்ஙனம் பலவகைப்படும் பந்துக்களுள் வம்சத்தாலேற்படும் பந்துக்களும், வருணத்தாலேற்படும் பந்துக்களுமே உயர்ந்ததாகும். பெரும்பான்மையும் நம்முடைய செந்தமிழ் நாடு நகரங்களுள் இவர்களைத்தான் சுற்றத்தாரெனக் கொண்டாடப்படுகிறது. பெரும்பான்மையும் ஆய்ந்து நோக்குமிடத்து நம்முடைய வேதாகம புராணேதிகாசங்களெல்லாம் தோற்றப்படுகிற ஒவ்வொரு ஆன்மகோடிகளும் மாறிமாறிப்பிறந்துழலும் இயற்கையுடையதேயெனச் சித்தாந்தப்படுத்தினும், மனித வர்க்கமாய்ப் பிறந்திருந்தவர்கள் திரும்பவும் மனிதவர்க்கமாகத்தான் பிறப்பார்களென்றும், மாட்டு வர்க்கமாய்ப் பிறந்திருந்தனவெல்லாம் திரும்பவும் மாட்டு வர்க்கமாகத்தான் பிறப்பனவென்றும், தாவர வர்க்கமாய்ப் பிறந்திருந்தனவெல்லாம் திரும்பவும் தாவர வர்க்கமாகத்தான் பிறப்பனவென்றும் சித்தாந்தப்படுத்தவில்லை. பெறுதற்கரிதான இம்மனித யாக்கை நழுவிவிடுமானால் "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என நமது தாயுமானார் வாக்குத்தான் நிச்சயமாகும். பின்னர் இன்ன சரீரத்தினுட்டான் சென்று நுழைவோமென்பது கூறற்கியையாது. இன்னும் இதற்குச் சான்றாக,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்

கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என, நம்முடைய மணிவாசகப் பெருமான் திருவாக்கினையும் உணர்க. நண்பர்காள்! இத்தகைய பெருமைவாய்ந்த நம் மனித வாழ்க்கையில், செல்வவந்தர்களான பலரும், உத்தியோகஸ்தரான சிலரும் நாம் இன்ன கொடிவழியைத்தான் சார்ந்தவர்கள் என்பதூஉம், இன்ன வருணத்திற்றான் பிறந்தோம் என்பதூஉம், எவ்வளவுந் தெரியாது, தங்களைத் தாங்களே மறந்தவர்களாய்த் தங்களின் அருமையான பந்து வர்க்கங்களில் நின்றும் பிரிந்து கொள்கிறார்கள். சிலர் நல்வினை, தீவினை முதலிய பல விசேஷ காலங்களில் அழைப்புப் பத்திரிகை கொடுப்பதற்குக்கூட நாணுகிறார்கள். சிலர் இன்னார் எமது பந்துவென்று சொல்லவுங் கூசுகிறார்கள். தங்களின் இனபந்துவல்லாத ஒரு செல்வவந்தரோடும் உத்தியோகஸ்தரோடும் நட்புக்கொண்டு அவர்களோடுங் கூடிக் கலந்து, உண்டுறங்கித் துஞ்சப்படுகிறார்கள். இவர்களின் அறியாத தன்மையைப்பற்றி ஈங்கு வரைவதானால் சாத்தியமாகாது.

"பொற்கலத்துப் பெய்த புலியுகிர்வான் புழுக்க
லக்காரம் பாலோடமரார் கைத்துண்டலின்
உப்பிலிப் புற்கையுயிர்போற் கிளைஞர்மாட்
டெக்கலத்தானும் இனிது"

என்ற முனிவர் வாக்கினை யிவர்கள் உணர்ந்திலார்போலும். அருமையான பந்து வர்க்கங்களையுடையவர்களாயிருந்தும், இல்லாதவர்களாய் நேர்ந்ததற்கு முற்பிறப்பில் என்ன தீவினையைச் செய்தார்களோ? இனியிவர்கள் எந்தப்பிறப்பில் தங்களுக்கு இப்பிறப்பில் பந்துக்களாய் வந்து பிறந்துள்ளார்களோடும் கூடிக்கலந்து, உண்டுறங்கி ஆனந்தமாக வாழப்போகிறார்கள். அந்தோ! இவர்களின் செயற்கை இயற்கைகளைப்பற்றி நினைக்குமிடத்து எம்முடைய குளிர்ந்த நெஞ்சமானது காய்ந்த மரக்கட்டையைப் போன்றுமன்றோ வேறுபடுகிறது. "நேயவாழ்வு உற்றாருடன்போம்" என்ற நமதௌவைப்பாட்டியின் வாக்கையுங்கூடக் கேட்டிலார்போலும்.

2. நண்பர்காள்! இக்கொடிதான பழக்கம் நம்முடைய நாடு நகரங்களினும் வந்து நுழைந்துகொண்டனபோலுந் தெரிகிறது. மனித வர்க்கத்தாருள் ஒரு குடும்பத்தாருக்கும், பந்துவாயுள்ள மற்றொரு குடும்பத்தாருக்கும் ஏதோ ஒருகாலத்தில் மனஸ்தாபம் நிகழ்வதும் இயற்கைதான், இதற்காகச் சாகும்நாள்வரை நன்மை தீமையின்றி, பந்துத்வத்தை யொழித்து, விலகியிருப்பதூஉம், இயற்கையன்றாம். நீரோடு நீரடித்து விலகிக்கொள்ளாதென்பதை நாம் உணரவில்லையா? "நீர்கிழியவெய்த வடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம்" என்றறைமறை மொழியினை நாமேவன் படிக்கவில்லையா? ஆன்றோர் என்ற பெயரினை யேற்றுக் கொள்ள நமக்கேன் பிரியமில்லையா? எத்துணைதூரம் அளவுகடந்த மனவருத்தமே ஏற்படினும் அம்மனமானது தான் நினைத்த தன்மையிலேயே பன்னெடுங்காலம் நிற்றற்கு அஃதெவன் கல்லோ? அல்லது இரும்போ? அல்லது கனிவயிரக்கட்டியோ? அப்பெரும் பொருள்களைக் கூடவன்றோ நம்மவர் நீராக உருக்கிவிடுகிறார்கள். இம்மனத்தைத் திருப்பிக்கொள்வதென்றால் பெரும்பிரயாசையோ? "கற்பிளவோடொப்பர் கயவர் கடுஞ்சினத்துப் பொற்பிளவோடொப்பாரும் போல்வரே" என்றதை நாமேன் கவனித்து நினைத்துக்கொள்ளுதல் வேண்டாவோ? கயவர் கூட்டத்துட் சேர்க்க நாமும் சம்மதிக்கலாமோ? ஒன்றான பந்துக்களின் விசேஷ காலங்களில் நாம் அயலூர்களுக்கு வேண்டுமென்று வண்டிகட்டிச் செல்வதும் நியாயமாகுமா? "பற்றற்ற கண்ணும் பழமை பாராட்டுதல் சுற்றத்தார் கண்ணேயுள" என்ற தேவர் கருத்தையும் நாம் கவனித்தல் வேண்டாமா? ஆனதுபற்றி நண்பர்காள்!

"விருப்பறாச் சுற்றமியையின் அருப்பறா
ஆக்கம் பலவுந் தரும்" என்றும்,

"சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்ற பயன்" என்றும்,

"காக்கைகரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கேவுள" என்றும்,

"கொடுத்தலு மின்சொலு மாற்றினடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப்படும்" என்றும்,

"அடுத்தடுத்து, வன்காய் பலபலகாய்ப்பினுமில்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு" என்றும்,

"வயாவும் வருத்தமு மீன்றக்காலேனவும்
கவாஅன்மகற்கண்டு தாய்மறந்தாஅங்
கசாஅத்தானுற்ற வருத்தம் உசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்" என்றும் வரும் ஆன்றோர்

களின் அருங்கருத்துக்களையெல்லாம் ஓர்ந்து, சுற்றந்தழுவுதல் வேண்டும் முறைகளையெல்லாம் ஒருங்கே செவ்வையாகத்தெரிந்து, தங்கள் தங்களின் பந்துக்களைச் செவ்வையாகப் பாதுகாத்துக் கொள்ளலும் வேண்டும். நீர்கிழிய வெய்தவடுப்போல மாறுமே சீரொழுகு சான்றோர் சினம் என்பதை பந்துவர்க்கங்களினிடத்து நிகழும் மனவருத்தகாலத்தில் நினைத்துக்கொள்ளலும் வேண்டும். வைராக்கிய சாதனத்தை கடவுளைக்காணும் வகையிற்றான் தாக்கல் செய்தலும் வேண்டும். உலகத்திற்காக வேண்டும் பல சீர்திருத்தங்களைச் செய்யப்புகுவதினும் தாக்கல் செய்தலாம். சுற்றத்தாரை யிழந்துவிடுவதில் தாக்கல் செய்தல் கூடவே கூடாது. நம்முடைய ஒவ்வொரு பந்துக்களையும் நம்மைப்போன்ற பெரும் பணக்காரர்களாகச் செய்வதே நம்முடைய முதற் கடமையாக வைத்துக்கொள்ளல்வேண்டும். அவர்களுக்கு வருந்துன்பங்களைத் துடைப்பதே அதற்கு முதற்கடமையாக வைத்துக்கொள்ளலும் வேண்டும். நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு குடும்பத்தார்களின் கொடி வழிகளையெல்லாம் மிகச் செவ்வையாய் வரைந்து வைத்திருத்தலும் வேண்டும்.

"விருப்பில்லா ரில்லத்து வேறிருந்துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம்—விருப்புடைத்
தம்போல்வா ரில்லுட் டயங்குநீர்த் தண்புற்கை
யென்போடியைந்த வமிழ்து" என்றும்,

"கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ் பைங்கூழ்போல்
கேளீவதுண்டு கிளைகளோதுஞ் சுப
வாளாடு கூத்தியர் கண்போற்றடுமாறுந்
தாளாளர்க் குண்டோ தவறு" என்றும் வரும் இவ்விரண்டு

பாக்களையும் மிக நன்றாகத் தெளிதலும் வேண்டும். நம்முடைய

விட்டு விசேடங்களுக்கு ஒருவாறு அவர்கள் வரத்தவறியிருப்பினும், அவர்கள்விட்டு விசேடங்களுக்கு நாம் ஞாபகமாக முன்னதாகவே சென்று வேண்டும் வேலைகளைச்செய்து தீருதலும் வேண்டும். சுற்றத்தார்கள் நீங்கிவிடாதிருத்தற்காக வேண்டும் ஒவ்வொரு வான்முறைச் சட்டங்களையும் பூர்த்திசெய்து கோடலும் வேண்டும். நிகழ்காலவியற்கைகளுக்குத் தக்கவாறு சீர்திருத்திக் கோடலும்வேண்டும். எந்த விசேடங்களினும் மொய், சுருள் எழுதிச் செய்யும் பழக்க வழக்கங்களை எவ்வகை முகாந்தரங்களைக் கொண்டும் நிறுத்திவிடுதல் கூடாது. சுற்றத்தார்களுக்குச் செய்யவேண்டும் பலவகையுதவிகளையும் செய்து முடித்துத்தான் பின்னர் தருமத்தைக் கவனித்தல் வேண்டும். அதுதான் தருமம் என்பதையுமுணர்தல் வேண்டும். நம்மைச்சார்ந்த ஒவ்வொரு சுற்றத்தார்களும் நம்மைப்போன்று ஆனந்தமாக வாழ்தல் வேண்டுமென்பதை எந்தவாற்றானும் நாம் மறத்தல் கூடாது. சுற்றத்தார்களால் நிகழும் எவ்வகைப்பிழைகளையும் நாம் செவ்வையாப் பொறுத்துக்கொள்ளலும் வேண்டும். சுற்றத்தார்களுக்கு வந்த எந்தவொரு ஆபத்துக்களும் நமக்கு வந்தனவாகவே பாவித்தல் வேண்டும். வருணத்தால் நமது வகுப்பு ஒவ்வொரு சகோதர சகோதரிகளையும் ஒரே தாயின் வயிற்றிற் பிறந்தவர்களாய்க் கவனித்தலும்வேண்டும்.

3. சகோதரர்களே! இனி ஒருமைப்பட்டு வாழ்தலைப்பற்றிக் கவனிப்போம். அஃதாவது பெரும்பான்மை எவர்களுக்குந் தெற்றென விளங்குமே எனினும், முதன்முதலாக ஒருவனாகிய தானும், தன் மனையாளும் கூடி எந்தவிதமான சண்டை சச்சரவுகளும், மனக்கலக்கமும், பொறாமையும், ஒருவருக் கொருவர் பொய் சொல்லிக்கொள்ளுதலும், புரட்டுருட்டுப் பண்ணிக்கொள்ளுதலும், விலகியிருந்துகொள்ளுதலும், இன்னும் இவைபோன்ற பல கெட்டவியற்கைகளுமின்றி, மன அமைதியோடும், சமாதானத்தோடும், அன்பு ஆதரவோடும் ஒரே சரீரமாக வாழ்ந்து வருதலாம். பின்னர் தம்மக்களும், தம் தாய் தந்தையர்களும் மேற்கண்டவாறு ஒருமைப்பட்டு வாழ்ந்துவருதலாம். பின்னர் தம்முடைய நாதிக்காரர்களும், தம் கொடிவழிப் பந்துக்களும் ஒருமைபெற்று வாழ்ந்து வருதலாம். பின்னர் தம் வருணத்தவர்களெல்

லாம் மேற்கண்டவாறு ஒரே குடும்பமாக ஏகாங்கமாய் வாழ்ந்து வருதலாம். பின்னர் தம், தேயத்தாரெல்லா மொருங்கே ஏகாங்கமாக ஒரே குடும்பத்தார் போன்று வாழ்ந்து வருதலெனவிரியும். சகோதரர்காள்! ஏதோ சில காலங்களுக்கு முன்னர் நமது வகுப்பாருள் நிகழ்ந்துவந்த ஒருமைப்பாடுகள் தற்காலவரை யாங்கோ சென்று மறைந்து கொண்டனவாக மிகவுஞ் செவ்வையாகக் காணப்படுகிறது. ஆங்காங்குடைத்தான பெரியவர்களின் அழகான திருவாக்குகள் எல்லாம் தள்ளுண்டு போகிறது. பெரும்பான்மையுங் கோவிற்கூட்டங்கள் நின்றுபோய்விட்டது. நமது வகுப்பானது பல கட்சிகளாகப் பிளவுபட்டுங்கொண்டன. இவைகளெல்லாமுந்தான் நிகழ்கால நாகரீகங்களோ? நமது நாடு நகரங்களிலே பேரறிவாளர்கள் நிறைந்திருக்குந் தன்மையோ? ஐயயோ? நமது வகுப்பைச் சார்ந்த பெருந்தொகையான பணக்குவியல்களெல்லாம் அநாவசியமான சில வழிகளுக்குஞ் செல்லுகின்றனவே! இவைகளைக் கவனிப்பார் ஒருவருமில்லையோ? ஏகாங்கமான ஒரே சமுகமாகப் பாடுபடுவாரில்லையா? நமது ஜாதியக்கட்டுகள் நெகிழ்ந்து வருவதைக் காணாதார் யாவர்? முழுவதும் நெகிழ்ந்து அவிழ்ந்து கயிறொன்றுங் காணாமலொழிந்ததன் பின்னர் கட்டுவதென்றால் கயிறு அகப்படுவதே மிகக்கடினமன்றோ! இம்மாதிரி கயிறுகள் முறுக்குவது மிக அசாத்தியமாயிற்றே? ஸ்ரீமான். சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களோடும், ஸ்ரீமான். மு. சின்னையா செட்டியாரவர்களோடுங் கூடவன்றோ மானாபிமானம் போராடுகிறது. தாங்கள் வலிதுவலிதாக நகரத்துக்கு நகரஞ்சென்று பல அரிய பெரிய உபந்நியாசங்களைப்புரிந்து, நாட்டுக்கோட்டை வைசிய மகாசங்கமென ஒரு பெரிய நகரக்கூட்டத்தைக் கூட்டுகிறார்களில்லையே! அவ்வாறு கூட்டியதில் ஒருமைப்பட்டு வாழ்வதற்குரிய பல அரிய பெரிய விஷயங்களையும் பகர்ந்துபேசித் தீர்மானிக்கிறார்களில்லையே! வியாசரைப் போன்றும், கர்னனைப் போன்றும், புகழேற்றுநிற்கிறார்களே! நகரத்துக்கு நகரம் வலிது வலிதாகச்சென்று திருத்தஞ்செய்தால் அதனாற் பெரும் புகழும், பெரும்புண்ணியமும் மேன்மேலும் வளர்ந்தோங்குவதாமன்றோ! அவர்களோடு இன்னுமோர் 3, 4 பேர் சார்ந்து ஒருமையுற்றாற் போதுமே! ஒருமையாக வாழ்தல் வேண்டுமென்னுஞ் சொல்,

சொல்லளவாக நின்றுவிடாமல் வினைசெயல் வகையானும் பூர்த்தியாய்விடுமே! வைதிகவிஷயத்திற் சிறந்து, ஞானப்பிரகாச நிலையத்திலே நின்று சொக்கித் தூங்காமற்றூங்கும் பேரானந்தத்தைவிட்டு எழுந்திருக்கமுடியவில்லையாயினும் நண்பர்காள்! இதனையுஞ் சற்றுக்கவனியுங்கள். இறந்த காலங்களிலே நிகழ்ந்த சில சரித்திரங்களினும் நமது அறிவினைச்செலுத்தி மயங்கிக்கிடப்பதுவும் நியாயமாகுமா? தற்காலக் தோற்றப்படுகிற ஒவ்வோரவைகளினும் சமய நூன்முறைகளைப்பற்றி யுபந்நியாஸங்கள் செய்துவருவதைப் போன்று, நம்முடைய நாடுநகரங்களெல்லா மொருங்கே ஒருமைப்பட்டு வாழ்வதற்குரிய பலவிஷயங்களையும்பற்றி யுபந்நியாஸித்து வந்தாலல்லவா நமது சைவ சமயத்தின் வைதிக விஷயங்களெல்லாம் மிகச்செவ்வனே இயலுமென்பதையும் நாம் தெளிதல் வேண்டாமா? இங்ஙனம் கூறப்படுகிற பல விஷயங்களும் நுங்களுக்குத் தெரியாதன வென்றெண்ணி யாங் கூறத்துணியவில்லை ஞாகப்படுத்துகிறேம் என்பதையும் உணர்தல்வேண்டும். ஒருமைபெற்று வாழ்வதாலுண்டாம் ஒவ்வொரு பயனிலைகளையும் நாம் செவ்வையாகத் தெளிதல்வேண்டும். எப்படிப்பட்ட பெரிய விவகாரங்களே எனினும் நம்முடைய மகாசங்கத்தைவிட்டு வெளிப்போதல் கூடவேகூடாது. நம்முடைய வகுப்பாருக்குள்ளாகவே ஒருவருக்கொருவர் கோர்ட்டில் வியாச்சியம்போட்டு ஒருவர் சொத்தையொருவர் சப்திசெய்துகொள்வதென்றால் நம்முடைய ஒருமைப்பாடுகள் எந்தத்தன்மையி லுளதென்பதை நாம் நன்குணர்தல் வேண்டும்.

4. நண்பர்காள்! நமக்குள்ளே ஒருவருக்கொருவர் எந்த விஷயத்தைப்பொறுத்தே எனினும் போட்டி போட்டுக்கொள்ளுதல் கூடவே கூடாது. முதன் முதலாக ஆசிரியன்மார் விஷயமாய் இரண்டு மூன்று பிளவுகளாக நம்முடைய நாடு நகரங்கள் பிளவுபட்டுக்கிடப்பதை ஒன்றாகப் பொறுத்திக்கோடலும் வேண்டும். கற்றவர்களுக்கும், பெரியவர்களுக்கும் அடங்கியொழுகுதலே ஒருமைபெற்று வாழ்வதன் இலக்கணங்களாம். பெரியவர்களின் வார்த்தைகளை வேத வாக்குகளாக ஒப்புக்கொள்ளுதல் வேண்டும். நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும், நம்முடைய மகாசங்க சபாநாயகரவர்கள் வெளி

வருஞ் சீர்திருத்தமுறை யுத்தரவுகளுக்கு அடங்கியொழுகுதலும் வேண்டும். ஒருமைபெற்று வாழ்வதற்குரிய புத்தகங்களையும், மாதாந்தப் பத்திரிகைகளையும், பேப்பர்களையும் செவ்வையாகப் படித்துவருதலும் வேண்டும். ஒருமைப்பட்டு வாழும் பலதேயச் சரித்திரங்களையுங் கவனித்தல்வேண்டும். எந்தவிதமான குற்றங்களையும், குறைகளையும் ஆங்காங்குடைத்தான சபைகளிலே சொல்லித் தீர்த்துக்கோடலும் வேண்டும். நம்முடைய நகரக் கட்டுப்பாடுகளுக்குக் கட்டுப்படாதவொருவர் அவர் எவராயிருப்பினும் நமது வகுப்பைவிட்டு விலக்கிவைத்தலும் வேண்டும். சிறு பிராயமிருந்தே ஒருமைப்பட்டு வாழ்வதற்கும், சுற்றத்தைத் தழுவிக்கோடற்கும் நமது சிறுவர் சிறுமிகளைப் பழக்கிக்கொண்டு வருதலும் வேண்டும். ஒருமைப்பட்டு வாழ்வதாலும், சுற்றத்தாரைப் பாதுகாத்துக்கோடலாலும் உண்டாம் நன்மைகளைப்பற்றிக் கவனிக்கப்புகுந்தால் அஃதொரு கடல்போற் பெருகும், எனினுஞ் சிலவற்றைக்கூறிமுடிப்பாம். முதன்முதலாக உயர்தரமான புண்ணிய நிலயம் ஒன்று சித்திக்கும். அதற்கடுத்தாற்போல புகழ் நிலயம் ஒன்றுஞ் சித்திக்கும். எந்தவிதமான பெரிய முயற்சிகளும் மிகச் செவ்வையாக நடைபெறும். ஏனைய எந்தப் பகுதியார்களோடும் பல வர்த்தகங்களையும்பற்றி வேண்டும் ஒப்பந்தங்களையுஞ் செய்துகொள்ளலாம். நம்முடைய மகாசங்கமானது நமதரசியன் வகுப்பார் சங்கம்போன்றும், நம்முடைய முதற்சங்கத்தைப்போன்றும் மிகுதியுஞ்சிறந்த மகோன்னத நிலைமையில் விளங்கும். சீர்திருத்தங்களெல்லாம் முறையே நடைபெறும். நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு குடும்பத்தார்களும் ஒரே தன்மையதாகப் பெரும் பணக்காரராவார்கள். அஃதே மாதிரியாகக் கல்விச்செல்வமும் பெருகும், நாகரீகங்களும் வளரும். இறந்தகால வழக்கியல்களும், நிகழ்கால வழக்கியல்களும் மிகச் செவ்வையாகத்தெரியும். நம்முடைய பரதகண்டத்துக்கெல்லாம் நம்முடைய நாடுநகரங்கள் ஒரு பெரிய தலைநகரமாக விளங்கும். நம்முடைய பரதகண்டத்துள் பஞ்சமென்பதே நாடமாட்டாது. நண்பர்காள்! நன்றாகக் கவனியுங்கள். நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும், இவ்வங்கத்திற்காகவேண்டும் பலவிஷயங்களையும் பற்றிச் சிந்தித்தல்வேண்டும். ஆங்காங்கு பல சிற்றூர்களுக்குஞ்

சென்று பிரசங்கஞ்செய்தலும் வேண்டும். ஒருமைப்பட்டு வாழ்தலும் வேண்டும். அங்ஙனமாற்றான் நம்முடைய நாடுநகரங்கள் சீர்திருத்தம் அடையும். எந்தவிதமான ஒரு பெரிய காரியத்தையுங் கொண்டுமுடிக்கக்கூடும். இவைகளை யெல்லாம்பற்றி மிக நன்றாக உணர்தலும் வேண்டும். ஏனைய வகுப்பாருள் எந்தவிதமான யாதொரு கட்டுப்பாடுகளுமின்றி, எந்தவிதமான வரன்முறைகளுமின்றிக் கெட்டொழிந்து கிடப்பனபோன்று ஆய்விடாதவண்ணம் நண்பர்காள்! நாம் முன்னதாகப் பாதுகாத்துக்கோடலும் வேண்டும். தேங்காய் மட்டையின் தும்பு எவ்வளவு சிறியதென்பது சாதாரணமாக எவர்களுந் தெரிவார்கள். அதனை யொவ்வொன்றாகச்சேர்த்து முறுக்க அஃதொரு சிறு கயிறாயிற்று. அதனை மும்மூன்றாகச்சேர்த்து முறுக்க அதில் நின்றும் ஒரு சிறு பெறுங்கயிறாயிற்று. அதனை மூன்று நான்கு ஒன்றாக்கி முறுக்க அதினின்றும் ஒரு பெருங்கயிறாயிற்று. அங்ஙனம், அங்ஙனமாகச் சேர்த்து முறுக்கிய ஒரு பெருங்கயிற்றால் தற்காலம் நாம் "தேர்" அச்சிற்கட்டி அத்தேரினை யிழுக்கவும், பெரிய ஸ்டீம் லாஞ்சி முதலிய கப்பல்களைக் கட்டியிழுக்கவும் பார்க்கின்றோம் அல்லவா? நண்பர்காள்! நன்றாகக் கவனித்துக்கொள்ளுங்கள். எல்லாம் வல்ல இறைவனுந் திருவருள் சுரப்பாகுக. சுபம்! சுபம்!! சுபம்!!!

49-வது அத்தியாயம்.

பரத்தையர் கேண்மை விலக்கு.

எம்முடைய ஆப்த நண்பர்காள்! அத்திமுதல் எறும்பு ஈறாகக் கூறப்படும் எண்பத்துநான்கு நூறாயிர சீவராசிகளோடும், பிருதிவு, அப்புத், தேயு, வாயு, ஆகாயம் எனக்கூறப்படுகிற ஐந்து பெரிய பூதங்களோடும், சூரியசந்திராதிகளோடும் பரிபூரணமாக நிறைந்து விளங்கும் பராபரப்பழம்பொருள் எதுவோ அதனையே அடியேம் உளத்திடையிருத்தி இங்ஙனம் பரத்தையர் கேண்மை விலக்கென்னும் அங்கத்தை வரையத்தொடங்கி முதன்முதலாக பரத்தையரெனப்படுவார் யாவரென்பதைப்பற்றிக் கவனிப்பாம். அஃதாவது பெரும்பான்மை விலைமாதர்களாயுள்ள வேசை தாசிகளையே குறிக்

கப்படுகிறது. இன்னும் ஆய்ந்து நோக்குமிடத்து ஒரு கொழுந னோடுங்கூடி இல்லறமரீஇ வாழ்ந்துவருபவளே எனினும், ஏனைய வொரு புருஷனைக் கவனிப்பாளேயாயின் அவளையும் பரத்தையர் என்றுதான் குறிக்கப்படுகிறது. பொதுவாகக் கவனிக்குமிடத்து இன்னும் இன்பம் கருதியோ? செல்வங் கருதியோ? வரன்முறை யின்றி பல புருஷர்களைச்சேரும் ஸ்திரிகளையே பரத்தையர் என்று கொள்ளப்படுகிறது. இனிக்கேண்மையெனப்படுவது யாதெனின்? அவர்களோடு கொண்டிருக்கும் நட்பு என்பதேயாம். இனி விலக் கெனப்படுவது யாதெனின்? அப்பரத்தையர்களோடு கொண்டிருக் கும் நேயத்தை நீயிர் விலக்கி யொழுகுமின் என்பதேயாம்.

2. இப்பரத்தையர் கேண்மையால் நிகழும் தீயகுணங்களை யும், தீயசெயல்களையும்பற்றிக் கவனிக்கப்புகுந்தால் அஃதொருவ ரைக் கடந்ததேயாகும். எனினும் ஆவசியகமாகச் சொல்லியுந் தீரவேண்டியதாகலின், முதன்முதலாகக் கொண்ட மனையாட்கு இரண்டகஞ் செய்ததாலுண்டாங் கொடியவோர் மாபாதகக்கொடி யானது தங்கால்களிரண்டையும் வந்து எந்தவாற்றானும், எவர்க ளாலும் அவிழ்க்கமுடியாதவண்ணம் சுற்றிக்கொள்ளும். பொய், களவு, சூது, பொறாமை, பழி, பாவம், மித்துரு துரோகம், குருத் துரோகம். எய்திய கருப்பத்தையழித்தல், சிசுவதைசெய்தல், கடி, கட்குடித்தல், புலாலுண்ணல், மனைவி மக்கண் முதலாய செல்வங் களையிழத்தல், கெட்டபெயரேற்றல், கள்ள ரிக்கார்டுகளைச் செய் தல், ஏனைய பந்து மித்திராதிகளோடு சண்டை சச்சரவுகளை யுண் டாக்குதல் முதலாய பல கெட்ட வியற்கைகளும் ஆம். இன்னும் இப்பரத்தையர் கேண்மையால் நிகழுங் கேட்டைப்பற்றிக் கவனிக் கப் புகுந்தால் கோவணாண்டியாகச் செய்துவிடினும் விடும்.

3. இனி இப்பரத்தையர்களோ டநுபவிக்கப்படும் இன்பாதி போகங்களைப்பற்றிக் கவனிக்கப்புகுந்தால் அஃதாவது எந்தவாற் றானும் ஆய்ந்து நோக்குமிடத்து, இன்பாதி போகங்களேயாக மாட்டாது. யாங்ஙனமெனின்? அவர்கள்பாற்செல்லும் ஆராய்த லிலா அறிவின் மயக்கத்தால் அஃதினை இன்பாதி போகங்களாக நினைக்கப்படுகிறதன்றி ஆராய்தலுடைய மெய்யறிவாளர்களுக்கு அஃதொருங்குந் துன்பாதி போகங்களாகவே முடியும். இதற்காக

வேண்டும் நியாயங்கள் யாங்ஙனமெனின் முதன் முதலாக அவர் களுக்குக் கொடுக்கப்படும் பொருளவாவானே ஒருவரை யணைதற் குடன்படுதலின்றி எத்துணைதூரஞ் சிறந்த மன்மதனென்பான் ஒருவனும் நாணத்தகுந்த வனப்பு வாய்ந்தவர்களாயிருந்து ஆங்கு சென்று தங்களின் முப்பஃதிரண்டுபற்களையும் ஈ எனமிகச்செல்வை யாக விரித்துக்காட்டினும், உடன்படமாட்டார்கள் என்பதூஉம், அவர்கள் ஆட்டியலைத்து, நீட்டிநெளித்து உட்கார்ந்துகொண் டிருந்த ஆசனத்தின்மீதாவது சற்றுநேரங் குந்தி யங்ஙனமுடைத் தாய நாற்றத்தைக் கொஞ்சம் மோப்பவுங்கூடச் சம்மதிக்கமாட் டார்கள் என்பதூஉம் வெள்ளிடைமலைபோற் றெள்ளிதிலெவர்களுக் குந் தெரிந்த வாய்மையேயாம். இஃதுபற்றித்தான்

"பொருட்பெண்டிற் பொய்ம்மை முயக்கம்
இருட்டறையில், ஏதில் பிணந்தழீ இயற்று" என்றும்,

"அன்பின் விழையார் பொருள் விழையு மாய்தொடியா
ரின்சொ லிழுக்குத்தரும்" என்றும்,

"அங்கண் விசும்பி னமரர் தொழப்படூஉஞ்
செங்கண்மாலாயினுமாகமற்—றங்கை
கொடுப்பதொன்றில்லாரைக் கொய்தளிரன்னார்
விடுப்பர் தங்கையாற்றொழுது" என்றும்,

"விளக்கொளியும் வேசையர் நட்புமிரண்டுந்
துளக்கற நாடின் வேறல்ல—விளக்கொளியும்
நெய்யற்ற கண்ணேயறுமே யவரன்புங்
கையற்ற கண்ணேயறும்" என்றும்,

"புதுப்புனலும் பூங்குழையார் நட்புமிரண்டும்
விதுப்பற நாடின்வேறல்ல—புதுப்புனலும்,
மாரியறவே யறுமே யவரன்பும்
வாரியறவேயறும்" என்றும்,

தெய்வத்தன்மைவாய்ந்த தேவர் முதலாய பல முனிவர் களும் நம்மவர்களின் பாதுகாப்புக்காகவே, தங்களின் பேரானந் தமயமான நிட்டையையொழித்துப் பெருங்கருணைகூர்ந்து சொல்லியு மிருக்கிறார்கள். இன்னும் கவனிக்குமிடத்து இவர்கள் அநு போகத்தால் அரையாப்பு, தொடைவாழை, சூலைக்கட்டு, சொரி,

இரத்தமேகம், கிரந்தி, கல்லடைப்பு, நீரிழிவு முதலிய பல வியாதிகளுந்தானே நிகழும். இன்னும் ஆய்ந்து நோக்குமிடத்து இப்பரத்தையர்களோடு அனுபவிக்கும் இன்பமே இன்பமெனக் கருதி அவர்களுக்கடிமைகளாகி அவர்களின் காலைக் கட்டிக்கொண்டாடுகின்ற சில பேரறிவாளர்களின் கருவானது அப்பரத்தையர்களின் [illegible]ங்கி, புத்திரோற்பத்தியுண்டாகிறது. அப்புத்திரர்கள் அப்பரத்தையர் புத்திரர்களென்று யாவராலும் இகழப்படுவதன்றி தங்களின் சொத்துக்களுக்கும், கருமங்களுக்கும் உரித்தாகாமல் ஜாதிப்பிரஷ்டர்களாகியும் விடுகிறார்கள். ஆகவே புத்திரத்துரோகமும் சம்பவித்துவிடுகிறது. நிற்க தங்களின் மனைவிமார்கள் கருநாடக வர்க்கங்களாய் நாமே கற்புடையவர்களென சும்மா குந்திக்கொண்டிருந்தாற்றான் நல்லதாயிற்று, அல்லாதவரையவர்களைப்பற்றியும் ஈங்கு வரைவது நியாயமாகாது. வரைந்து முடியாது.

4. இனி இவர்களின் இயற்கையாதி குறைகுணங்களைப்பற்றியும் கொஞ்சங் கவனிப்பாம்.

"நாவார வேண்டுமிதஞ் சொல்லுவாருனை நான் பிரிந்தாற்
சாவேனென்றே யிருந்தொக்க வுண்பார்கள் கைதான் வரண்டாற்
போய்வாருமென்று நடுத்தலைக்கே குட்டும் பூவையர்"

எனப் பட்டினத்து முனிவரும்.

"முகத்துலக்கிக ளாசாரவீனிகள்
விலைச்சிறுக்கிகள் தோராத நாரிகள்
முழுச்சமர்த்திகள் காமவிகாரிகள்—முந்து சூது
மொழிப்பரத்தைகள் காசாசையான் முலை
பலர்க்கும் விற்பவர் நாணாத நாரிகள்
முழுத்த பெட்டிகள் மோக மூதேவிகள்—செஞ்சொலாலே
செகத்திலெத்திகள் கூசாது பேசிகள்
திருட்டு மட்டைகள் மாயா சொரூபிகள்
சிரித்துருக்கிகளாகாவெனு நரை—சிந்தைமாய
மயற்புகட்டிகள் கோலாலமாய் நட
நடித்த சட்டைகள் மாபாவியருடன்
இணக்கமற்றிரு சீர்பாததாமரை
என்று சேர்வேன்" என்றும்,

'காலன்வேற் கணையீர்வா ளாலமும்
நேர்கணாற் கொலைசூழ் மாபாவிகள்
காமசாத்திர வாய்பாடேணிகள்—எவரேனும்
காதலார்க்கும் வினைவாய்க்கூறிகள்
போகபாத்திரமா மூதேவிகள்
காசு கேட்டிடும் மாயாரூபிகள்—அதிமோக
மாலை மூட்டிகள் வானூடே நிமிர்
ஆனைபோற்பொர நேரே போர் முலை
மார்பு காட்டிகள் நாணு பேதகம்—என மாயா
மாபாரக்கிகளோடே சிரிய
போது போக்குதலாமோ நீ யினி
வாவெனப்பரிவாலே யாள்வதும்—ஒரு நாளே என்றும்,
"மேகலை நெகிழ்த்துக்காட்டி
வார்குழல் விரித்துக்காட்டி
வேல்விழி புரட்டிக்காட்டி—யழகாக
மேனியை மினுக்கிக்காட்டி
நாடகம் நடித்துக்காட்டி
வீடுகளழைத்துக்காட்டி—மதராசன்
ஆகமமுரைத்துக்காட்டி
வாரணி தனத்தைக்காட்டி
யாரோடும் நகைத்துக்காட்டி—விரகாலே
ஆதர மனத்தைக்காட்டி
வேசைகள் மயக்கைக் காட்ட
ஆசையை யவர்க்குக்காட்டி—யழிவேனோ
என நமது அருணைகிரி நாதரும்,

விலைமாதர் வீடு சவுளிக்கடை
படுக்கையது மேவுமனை பொதுவம்பலம்
மெத்தையது சந்தியிற் பாறை
யவராங்கமோ மேவிய படித்துறையதாம்
கலைமருவு மவரல்கு லோடமாம்
இருகொங்கை கடையிலெலுமிச்சம்பழம்
கனிவாய் படிக்கம்
இரு துடைகள் தண்ணீர்ப்பாற்கல் கட்டு கதலிக்கம்பமாம்

முலை மார்பு வாடகைக்குதிரை, யிடையேணி
அவர் மோகமெனி லெட்டிக்கனி
மொழி முயற் கொம்பு
சேரின்பு வெந்நீராமை முறைமை"
இவையெனத் திருவேங்கட சதகத்தாரும்,

"புருடனைக் கண்டவுடனே கதவிடுக்கினிற்
போயொளித்திடுவர் பின்பு
பொல்லாத தாய்க்கிழவி தன்னையவர்பாலினிற்
போக்கி வசனிக்கவிடுவர்
மருடருங் கண்ணினுற் சற்றருகிலே வந்து
மயல்வினைத் துறவுசெய்வார்
மன்னரின்னடிக ளிச்சிறு குடிலில் வைத்ததெம்
மாதவமெனச் சொல்லுவா
ரருணிறைந்தவர்போல விருகையினுற்றழுவி
யாவலொடு முத்தமிடுவா
ரையநீ பிரியிலெமதுயிர் பிரியுமென்றவர்க
ளாவி முழுதும் பரிப்பார்"
எனக் கைலாசநாதர் சதகத்தாரும்,

"கண்ட பேச்சினிற் காளையர் தங்கள்பான்
மண்டிபேச்சுணு மாதரைச் சேராதே"
எனத் திருநாவுக்கரசு நாயனுரும்,

"தோளு மென்முலையு மல்குற்பாரமும்
நாளு நாளு நவின்று பருகிலாக்
கேள்வன்மார்க்கும் பகைஞர்க்குமொத்தலால்
வாளும்போல்வ ரவ்வாணெடுங் கண்ணினுர்"
எனப் புறத்திரட்டாரும்,

"நாயும்போல்பவர் பல்லெச்சிலு நச்சலால்
நோயும்போல்வர் நுகர்தற்கருமையால்
தீயும்போல்வர் செய்நன்றி சிதைத்தலான்
வேயும்போல்வ ரிவ்வேனெடுங் கண்ணினுர்"

"நுண்பொருளானை நுகர்ந்திட்டுவான்பொரு
ணன்குடையானை நயந்தனர் கோடலின்
வம்பிளிமென்முலை வாணெடுங் கண்ணவர்
கொம்பிடைவாழுங் குரங்கும் புரைகுப"
என வளையாபதியாரும்,

"ஓட்டங் கடியதா லுள்ளவரை மேவுதலால்
சேட்டை யெவரிடத்துஞ் செய்தலால்—நாட்டமுடன்
காத்திரத்திற் குட்டியுறக் கட்டுதலாற் றெட்டுதலால்
கூத்தியர்க்கு நேராங் குரங்கு"
என்ற தனிப்பாடலும்,

தேடித்தம் வீட்டிற் பணக்காரர் வந்திடிற்
றேக சீவன் போலவே
சிநேகித்தவும்மையொரு பொழுதுகாணுவிடிற்
செல்லுருதன்னமென்றே
கூடிச்சுகிப்ப ரென்னுசையுன்மேலென்று
கூசாமலாணையிடுவோர்
கொங்கையை வெடிக்கப் பிடிக்கக்கொடுத்திதழ்
கொடுப்பர் சும்பன முகப்பர்
வேடிக்கை பேசியே கைமுதல் பறித்தபின்
வேறுபட நிந்தைசெய்து
விடவிடப்பேசுவார் தாய் கலகமூட்டியே
விட்டுத்துரத்திவிடுவார்
வாடிக்கையாயிந்த வண்டப்பரத்தையர்
மயக்கத்தை நம்பலாமோ"
எனக்குமரேச சதகத்திலும்,

"இருமனப்பெண்டிருங் கள்ளுங்கவறும்
திருநீக்கப்பட்டார் தொடர்பு"
என நமது தேவபெருமானுங் கூறிவந்ததே போதுமானது. யாமொன்றும் மிகையாகக் கூறவேண்டுவதில்லையாயிற்று.

5. சகோதரர்களே! இவ்வளவு தீயகுணங்களை யாபரணமாகப் பூண்டுள்ள பரத்தையர்களைத் தூயவர்களென நாடி அன்னவர்களின் மையல் என்னும் வலையிற்சிக்கி, தங்கள் முன்னோர்கள் சேகரித்துவைத்த திரவியங்களையெல்லாந் தத்தஞ்செய்து, அவர்களின் சப்ரமஞ்சத்திற்குச்சென்று இரதியும், மதனும்போல விசித்திராலங்கார பஞ்சணைமீதிருந்து, சாஸசல்லாபங்களுடன் கூடிக் குலாவித் துக்கங்களையெல்லாஞ் சுகங்களாகவநுபவித்து தாம்பூலம், பால் பழமுதலானவையுடன் வஞ்சனையாகக்கலந்திட்ட மருந்தை

யும் உட்கொண்டு அதன் பெருமயக்கத்தினல் மோகப்புணரியில் மூழ்கியிருந்து சின்னுட்களுக்குப்பின்னர் தேகாரோக்கியங்குன்றிச் சயரோகமுங்கொண்டு மருந்தீட்டிஞலன்றோ நாம் இத்துணை தூரம் துன்பப்படுகின்றோமென மீளாக்கவலையுற்று அம்மம்மாவென்று அரற்றி ரௌரவாதி நரகத்துன்பத்தையும் அடைவோர் எத்துணையோ பலர். இன்னும், இரும்புத்தூணிற் கறையான் ஏறுமோ? நெருப்பிற் புழுப்பற்றுமோ? கடல்நீரும் வெய்யிலால் வற்றுமோ? வீட்டெலியும் பூனையைக் கெலிக்குமோ? பெரும்புலியையும் புல்வாய் கொல்லுமோ? எங்களை மயக்க இவர்களாலாகுமோ? என்று தீரமும், வீரமும்பேசி இவர்கள்பாற் பொருள் சம்பாதித்து மேன்மையடைவதன்றோ புகழென்று இந்நாரிகளுக்கு ஆடல், பாடல், பிடில், வீணை, ஆர்மோனியம் முதலிய சங்கீதத்தொழில்களையும், வடமொழி, தென்மொழி, ஆங்கிலம் முதலிய சில முதற்பாஷைகளிலுடைத்தாய சில அரிய நூற்களையும் கற்றுக்கொடுக்கச் சென்ற எத்துணைபேர், பரதசாஸ்திர வல்லுநர்கள் எத்துணைபேர், மகாவித்துவான்கள் எத்துணைபேர், தமிழ்வல்ல பிரபுக்கள் எத்துணைபேர் இவர்கள் விழிவலையிற்சிக்கி இவர்களிடத்திற் சம்பாதிப்பதென்பதுபோய், தாங்கள் அதுவரையிற் சம்பாதித்துவைத்திருந்த பொருள்களும் போதாமல், தங்கட்குரிய பூர்வீகச்சொத்துக்களையும் இவர்களின் பாதகாணிக்கையாகச் செலுத்திவிட்டு முடிவாகத் தங்களையும் அடமானம்வைத்துக் கடன்வாங்கிக்கொடுத்தும், இப்பாவிகள் மனையின்கண் உண்டும், தின்றும், மதுமாமிஷங்களைப் புசித்தும், ஆசார சீலங்களையெல்லாங் கெடுத்தும், உடுக்கவுடையும், படுக்கப்பாயுமற்று, அன்னமில்லாது, பிண்டம் பெருங்காயமாய் அவதிப்பட்டு பெண்டு பிள்ளைகளெல்லாங் கதறியழத் தீராத பழிபாவங்களையும், ஆறாத நோய்களையும், மாறாத தரித்திரத்தையும் அடைந்து யாவராலும் இகழப்பட்டு வருந்துமவர்களையும் எந்தக்காலத்தும் பிரத்தியக்ஷமாகக் காணலாம்.

௬. சாதாரணமாக இவர்களைக் கற்புடையவர்களெனக்கருதி மாதச்செலவுகளுக்காக ஒவ்வொரு மாதமும் தவறாது 50, 100 கொடுத்துவரும் சில பிரபுக்களின் ஏமாந்த தன்மையைப்பற்றி யீங்கு கூறவேண்டுவதே யில்லையெனினும், சிலவற்றைமட்டுஞ் சுருக்கமாகக்கூறிமுடிப்பாம். சில கனவான்கள் சில வேசை தாசி

களை வைப்பாகவைத்து அவர்கள் மனதிற்கிசைந்தபடி வேண்டியவற்றைக்கொடுத்துத் தங்களைத்தவிர வேறு யாரையும் அவர்கள் அங்கீகரிப்பதில்லையென்று பூரணமாக நம்பித் தங்கட்கியல்பாயுள்ள உத்தியோகமோ, வர்த்தகமோ, விவசாயமோ பகலெல்லாம் போய்ப் பார்த்துவிட்டு இரவு 8, 9 மணிக்கு அவர்கள் வீடுசென்று இன்பநாயகியைக்கண்டு, கண்குளிரத்தரிசித்து, மிகவினிதான வார்த்தைகளாடிச் சிரமபரிகாரஞ் செய்துகொள்கின்றனர். அந்த இவர்களின் மதியீனத்திற்கு யாவர்தான் நொந்துகொள்கிறது. இக்கபடிகளுக்கோ வைப்புநாயகன் வருங்காலம் இன்ன மணிக்குத்தான் என்பதும், அவர்களின் மனமானது இத்தன்மைத்தென்பதும் மிக நன்றாகத்தெரியும். அந்த நாயகன் வருவதற்குள் எத்துணையோ பெயர்களோடுங் கூடுகிறார்கள். ஒன்றிரண்டைக் கொடுத்துவிட்டு ஓரடி, யீரடி, மூவடி யடித்துக்கொண்டுபோகிறவர்களுக்கெல்லாம் பகற்பொழுதே யுடைத்தாயிருக்கிறது. சிலர் முற்றிலும் பணங்கொடுத்தாதரிக்கவல்ல பிரபுக்களை மறைந்துநின்று அநுபவிக்குங் களவுப்புணர்ச்சிக்குப் பெரும்பாலும் ஒருவனை வரவழைக்காவிடினும், தாங்கள் காமச்சுவையின் நலங்கண்டு கூடிமகிழ்வதற்கு தங்கள் சுயஜாதியில் இதமாயும், தருணமறிந்து நடக்கக்கூடியவோர் வாலிபனைத் தங்களின் இன பந்துவென்று நம்பும்படிகாட்டி யமர்த்திக்கொண்டு பகலெல்லாம் தங்கள் சுகத்தை அவ்வாலிபன்பாலாக்கிக் களிக்கின்றார்கள். அவ் வாலிபனோ தன் தமக்கை, தங்கையைப்போல பாவனைகாட்டி பொய் நடிப்பு நடித்து அன்போடுகூடிய ரஸமெல்லாந் தன்னுடைய தாக்கிக்கொண்டு சக்கையைவைப்பு நாயகராகிய பிரபுவுக்கு வைத்துவிடுகிறான். அப்பிரபுவோ 8, 9 மணிக்குமேல் வந்தஉடன், ஏ கண்மணி! ஏ ஜீவரத்தினம்! ஏனோ சாய்ந்துகொண்டிருக்கிறாய், உடம்பென்ன அசதியாகவிருக்கிறதோ? முகமேன் வாடியிருக்கிறது? பகற்பொழுதொருந்தும் இரவு இதுகாறும் எமது இன்முகம் காணாது நின்மனம் மயங்கி வாடிற்றோ? யாம் நின்னையல்லாது மற்றொரு தேவரம்பையே எனினும் கடைக்கண்கொண்டும் பாரேன் என்பது நினக்குத் தெரியாததாமோவெனக்கூறித் தமது வலக்கரத்தாலே தழுவி முத்தமிட்டு, இன்றிரவு வேண்டுமானால் வெறுமெனே படுத்துக்கொள்ளலாம், விஷயம் வேண்டாமடி யென் கண்

மணியென முகமன்கூறிய சக்கையை மோந்து தம் சுக்கிலம் ஒன்றைமட்டுங் கழிப்பதனால் ஆய பேரானந்தத்தையடைகின்றார். இவ்வளவேயன்றி மனதொன்றாக ஆசைகொண்டு சேர்ந்து நிகழும் போகத்தையிருவருஞ் சமமாயனுபவிப்பதென்பது முயற்கொம்பேயாம்.

7. சகோதரர்களே! நமது நாடு நகரங்களுக்குள் இப்பரத்தையர் கேண்மையையும், இவர்களாலாடப்படுஞ் சதிராட்டங்களையும் வந்து நுழையவிடாதவண்ணம் நாம் பாதுகாத்துக்கொள்ளல்வேண்டும். சதிராட்டங்களால் வரும் தீமைகளைப்பற்றிக் கவனிக்கப்புகின் இயல்பான குற்றங்களை மறைத்து இல்லாத அழகை பெருக்கிக்காட்டுவது இரவின் சுபாவம் என்பதற்கு பகலிற் கோரமாய்த்தோன்றும் வேஷமே இரவில் அழகாய் விளங்குவது யாவருக்குந் தெரிந்தவிஷயம். குரூபிகள் விஷயத்திலேயே இப்படியாயின், அழகானும், பகட்டானுஞ்சிறந்து, மெய்யாபரணங்களையணிந்து, விலையுயர்ந்துள்ள ஆடையையுந் தரித்து, குயிலையிகழுங் குரலுடன், மதனைமயக்கும் அபிநயங்களுடன் வேசியாய்த் தோன்றிவரும் மாயா சொரூபிகளைப்பற்றிக் கூறவும் வேண்டுமோ? இவர்கள் வலையிற்சிக்காமற் பிழைப்பது விசுவாமித்திரரைப்போன்ற முனிவர்களுக்கே அருமையானால் சதிர் சபைகளையலங்கரிக்க வரும் வெறும் பெரியமனிதர்கள் படும் பாடுதான் என்னவென்று கேட்கவும் வேண்டுமோ? சதிர் சபைக்கு வருவோரில் உண்மையான பெரியமனிதர் இல்லையோவென்றால் அவர்களும் படிப்படியாக மோசம்போய் விடுவார்களென்பதிற் சந்தேகமில்லை.

8. நண்பர்காள்! நன்றாகவுணருங்கள். டாப்பர்மாமாக்களின் கேண்மையையுந் தொலையுங்கள். நமது தாதை மூதாதைகள் பெரும்பாடுபட்டுத் தேடிவைத்த பொருள்களை யொழித்து விடாதேயுங்கள். இனிமையான இளமைப்பருவத்தை வீணாக்கிவிடாதேயுங்கள். மனத்தை ஒரு பெருஞ்சக்தியாக வோம்புங்கள். சதிராட்டங்களை கனவினுங்கூட நினையாதேயுங்கள். இப்பரத்தையர் கேண்மை இதுவரையுளவாகவிருப்பினும் இதினின்றுந்தொலைத்து விடுங்கள். இவர்களின் ஏமாற்றுக்குள் அகப்படாதேயுங்கள். போறிவாண்மை, யா? வென்பதைத் தெளியுங்கள். 100, 200

வலிதாக நமக்குத்தந்து அவர்கள் நம்மை விரும்பினும், கடைக்கொண்டும் நோக்காது விலகுங்கள். இம்மை, மறுமையிரண்டிற்கும் ஆதாரமான நம்முடைய மனைவி மக்களுக்கு யாதொரு துரோகமுஞ் செய்யாதேயுங்கள். செய்வோமாயின் இவைகளுக்குப் பிராயச்சித்த மில்லையென்பதையுமுணருங்கள். இவர்கள்பால் நம் மனமானது செல்லாதிருக்கும்பொட்டு எல்லாம் வல்ல இறைவனுந் திருவருள் புரிவானாக. சுபம்! சுபம்! சுபம்!!!

50-வது அத்தியாயம். புகழ்.

ஓ எமதன்பார்ந்த நண்பர்காள்! மனமொழியாய, பன்மொழியுள்ளுந் தென்மொழியே, மிக நன்மொழியாமென, எந்தவாற்றானுஞ் சீர்சிறப்போடு கூடிச்சிறந்து விளங்கும், எந்நாட்டவருள்ளும் மிக்கவுயர்தர நாகரீகம்பெற்று தோற்றப்படுகிற முச்சகங்களுக்கும் வெள்ளிடைமலைபோற்றெள்ளிதிற் புலப்பட்டு நிற்கும் நம் கோனாட்டவர்களும் உச்சிமேலேற்றிப்புகழ்ந்து கொண்டாடத்தக்க உயர்தர நன்னிலையாமாறு மிகச் சீர்திருத்தநிலையோடுமீஇ நமக்கு வளர்த்துத்தந்தகுப்பதேவன் திருவடிபணிந்து இங்ஙனம் புகழ் என்னும் அங்கத்தை வரையப்புகுவாம்.

1. அஃதாவது கல்வியாலோ, அறிவாலோ, செல்வத்தாலோ, சிவயோகஞானத்தாலோ, கொடையாலோ, வீரத்தன்மையாலோ, ஊழ்வினைவயத்தானிகழ்ந்தவோர் கட்டநட்டத்தாலோ, இயற்கையான நன்னடக்கையாலோ, இன்னும் ஏனைய பிறவழிகளாலோ ஒருவன், அல்லது ஒருத்தியின், ஊர், பெயர், ஆண்மை, குலம், காலம், வம்மிசவிலக்கண முதலிய அவனின் அல்லது அவளின் பல சரித்திரங்களையும், தோற்றப்படுகிற எத்தேயத்தவர்களானும், நாவாரப்புகழ்ந்து கொண்டாடத்தக்கவாறு நிகழப்படுகிற எந்தக்காலத்தும், எந்தவாற்றானும், எத்தனை கற்பகோடிகாலம் மாறுபட்டுச்செல்லினும், மாறுபடாதவண்ணம் நின்று கர்ண பரம்பரையாயும், சிலாரூபமாயும், புத்தகரூபமாயும், எவர்களுக்கும் தெற்றென விளங்கச்செய்வதெதுவோ? அதனையே புகழ் எனச் சொல்லப்பெறுகிறது.

2. இப்புகழானது இருவகைப்படும். அஃதாவது கீர்த்தி யாயிரவருடம், அபகீர்த்தி பதினாயிரவருடம் என்ற பழமொழி போன்று, இராமரின் புகழையும், இராவணன் புகழையும் ஆராய்ந்துகொள்க. ஆனாலிங்கு புகழென்றது எவரும் உவப்பத் தகுந்த நல்லவிதமான கீர்த்தியையேயாம்.

3. இப்புகழின் மாட்சியைப்பற்றிக் கவனிக்கப்புகின் எவரா னும் வரையறுத்துக் கூறமுடியாததாமென்க. தோற்றப்படுகிற சூரிய, சந்திராதிகள் அழியினும், தேவமுனிவர்கள் அழியினும், பஞ்சபூதங்கள் அழியினும், பல்லாயிரங்கோடியண்டங்களும் அழிந்து பாழ்பட்டு ஒழியினும், இப்புகழென்னும் பொருளானது எந்தவாற்றானும் அழிபத்தக்கதல்லவென்பது எவர்களுந் தெற்றெனத்தெளிந்த வாய்மையேயாம், இஃதுபற்றித்தான் நமது குமரகுருபர ஸ்வாமிகளும்,

"கலைமகள் வாழ்க்கை முகத்ததெனினும்
மலரவன் வண்டமிழோர்க்கொவ்வான்—மலரவன்செய்
வெற்றுடம்பு மாய்வனபோன் மாயாப்புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு"

என்ற நம் செந்தமிழ்க்கல்வியுடையாரை எவ்வுலகங்களை யுங் கற்பிக்கப்படுகிற நான்முகனினும், மிக்கவோர் நான்முகனா மெனக் கற்பித்தனர். மனிதவர்க்கமாய்ப் பிறந்தார் ஒவ்வொரு வரையும் இலகுவிலே ஆனந்தசாகரத்தில் மூழ்கச்செய்யும் பேராற் றலுடையது இஃது ஒன்றேயாம். இப்புகழை யேற்றுக்கொண் டார், எவரினும் மிகச் சிறந்தாரேயாம்.

"ஒன்றா வுலகத்துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன்றில்" என்றும்,

"நிலவரை நீள்புகழாற்றிற் புலவரைப்
போற்றாது புத்தேளுலகு"

அஃதாவது உலகில் அழியாப்புகழைச் செய்வானாகில் தேவலோகம் தேவர்களைத் துதியாது என்பதாம், என்றும் வரப்

படுகிற தேவர் வாக்குகளையுமுணர்க. இத்தகைய பெரும்புகழ் படைத்தார் சிலரை யீங்கு எடுத்துக்காட்டுகவெனின் அஃதாவது,

4. எண்ணில் அடங்காது. எழுதித்தொலையாது. ஸ்ரீ இராமபிரானின் சரீரமும், அவர் தம் மனைவியார் சீதையம்பிராட்டி யார் சரீரமும், தசரத சக்கரவர்த்தியார் சரீரமும், அவரைச்சார்ந்த மனைவிமார்கள் புத்திரர்களின் சரீரங்களும், மறைந்தொழிந்து எத் தனை காலமாயிற்றென்பதையுணருங்கள். பஞ்சபாண்டவர்களும் திரியோதனாதிகளும் இருந்து இறந்தொழிந்து எத்தனை காலமா யிற்றென்பதையும் உணருங்கள். இன்னும் சற்றுக் கவனிக்கு மிடத்து அகத்தியர், தொல்காப்பியர் முதலாய முச்சங்கங்களையும் ஆண்ட சங்கப்புலவர்களென்ன, மகா மேதாவிகளான பாண்டியர் களென்ன, இன்னும் நம்முடைய மணிவாசகப்பெருமான், சுந்தர மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் முதலிய சமய குரவர்களென்ன, நாயன்மார்களென்ன, தருமகர்த்தர் களென்ன, நண்பர்காள்! இவர்களைப்போன்ற பல பெரும்புகழாளர் களையும் ஆய்ந்து நோக்குங்கள். தேயச் சரித்திரங்களையும் நன்றாக உணர்ந்து பாருங்கள். வேதாகம புராணேதிகாசங்களையெல்லாம் மிகச்செவ்வையாக நமக்குச் செய்து தந்த பாஷாகர்த்தர்களின் புக ழையும், ஞான கர்த்தர்களின் கீர்த்தியையும் நன்றாகத் தெளிந்து நோக்குங்கள். இந்நாள்வரை யவர்களெல்லாம் யாங்கு வீற்றிருக் கிறார்களென்பதை நன்றாகத் தெளியுங்கள். அவர்களைப்பற்றி நாமேன் புகழ்ந்து பேசப்படுகிறோமென்பதையும் உணருங்கள்.

இவைகளையெல்லாமாய்ந்து நோக்கித்தான் நம்முடைய தேவ பெருமானும்,

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் றோன்றாமை நன்று"

அஃதாவது இஞ்ஞாலத்தில் மனிதவர்க்கமாகத் தோற்றப் படும் ஒருவர் புகழோடு கூடித்தோற்றக்கடவர், அவ்வாறில்லாத வர்கள் தோற்றப்படாமையே நல்லதென்றும்,

"புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
யிகழ்வாரை நோவதெவன்" அஃதாவது புகழுண்டாக

வாழாதவர் தம்மை இகழ்ந்தவரை நோந்துகொள்வதென்னவென்றும்,

“வசையென்ப வையத்தார்க்கெல்லாம்
இசையென்னும் எச்சம்பெறாஅவிடின்” அஃதாவது ஒருவன் கீர்த்தியென்னும் பிள்ளையைப் பெறுமலிருப்பானாயின், உலகிற்கு வசையென்றும்,

“வசையிலாவண்பயன் குன்றும்
இசையிலா வாக்கை பொறுத்த நிலம்” அஃதாவது கீர்த்தியில்லாத உடலைச் சுமந்த நிலத்தில் விளைவு குறையும் என்றும்,

“வசையொழிய வாழ்வாரே வாழ்வார்
இசையொழிய வாழ்வாரே வாழாதவர்” அஃதாவது கீர்த்தியோடு வாழ்பவரே உயிரோடு வாழ்பவரென்றுங் கூறினர் இத்தேவபெருமான் கீர்த்தியையும், இவர் தம் மனைவியார் பெரும் புகழையும் மிகச்செவ்வையாகக் கவனித்தலும் வேண்டும்.

5. தற்காலவரை நம் இந்திய நாடு நகரங்களையாய்ந்து நோக்குமிடத்து தெய்வத்தன்மையோடுகூடிப் பெரும்புகழ் படைத்தார் இல்லையென்பதாகத்தான் முடியும்போலும்! காலம் கணத்துக்குக்கணம் மிக மாறுதலடைந்துகொண்டே வருகிறது. பெரும்புகழ் வாய்ப்பத்தகுந்த பெருங்காரியங்களைக் கொண்டு முடிக்கத்தக்க சில மேதாவிகள் வெகு சீக்கிரத்திலே மறைந்து கொள்கின்றார்கள். அஃதாவது நம்முடைய பெரும்பாக்கியமோ? அவர்களின் துர் அதிர்ஷ்டமோ தெரியவில்லை. உதாரணமாக ஸ்வாமி விவேகாநந்தர் மீண்டும் 20, 30 ஆண்டுகள் வரையேனும் இருக்கும் பருவத்தவரன்றோ? ஓயாமலுண்டுறங்கித் துஞ்சும் எம்போல்வார் எதற்குக்கவையாவேம். காலந்தோறும் பெரும்புகழ் படைத்தார் பலர் இருந்து வந்தாலன்றோ நாடு நகரங்கள் மிகச் செழிப்பாயும், மிக வளப்பமாயும், மிகச் சீர்திருத்தமாயும், மிக நாகரீகமாயும், நீதி திறம்பாமலும், உயர்தரப் பெருஞ்செல்வங்களோடும் இயலும் என்னலாம். எனினும் தற்காலவரையில்லாமலும் இல்லை. பெருப்புகழ் படைப்பத்தகுந்த சக்தி வாய்ந்தவர்களாய்க் காணப்படவில்லை என்பதொன்றுதான்.

6. நண்பர்காள்! நண்பருங்கூட நன்றாக யோசித்துப் பாருங்கள்.

“மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும் மாசில்சீர்
பெண்ணினுட் கற்புடையாள் பெற்றானும்—உண்ணும் நீர்
கூவல் குறைவின்றித் தொட்டானுமிம்மூவர்
சாவாவுடம்பெய்தினார்”

என்பதுபோன்று நமது வகுப்பைச்சார்ந்த பெரும்பான்மையோர் சிவாலயத்திருப்பணிகளாலும், கூவல்களாலும், பலவிதத் தருமச்செய்கைகளாலும், சாவாவுடம்பினையெய்து வருகின்றார்களெனினும், தோற்றப்படுகிற உலக முழுவதுந் தெரிந்த ஒருவராக வேண்டும் புகழினை நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளுந் தேடமுயலுதல் வேண்டும். எத்துணையோ தாரம் பெரும் பிரயாசைகளைக்கொண்டாயினும், அளவு கடந்த கஷ்ட நஷ்டங்களைப்பெற்றாயினும் பெரும்புகழ் படைத்தல் வேண்டுமென்பதை எந்தவாற்றானும் மறத்தல் கூடாது. பெரும் புகழைத் தேடுவதையே! நம்முடைய பெருஞ்செல்வங்களாலும், பேரறிவாண்மையாலும் பெரும்பயனென்பதை நாம் நன்றாகத் தெளிதல் வேண்டும். பெரும்புகழ் படையாதவொருவர் நாமெய்து கொண்ட மனிதச்சரீரத்தால் யாதொரு பிரயோஜனத்தையும் நாம் அடைந்திலேம் என்ற உண்மையையும் நன்றாகச் சிந்தித்தல் வேண்டும். ஏனைய மனிதவர்க்கத்தார்க்கும், நமக்கும் என்னையோ? வித்தியாசம் என்பதை நன்றாகத் தெளிதல் வேண்டும். தோற்றப் படுகிற முச்சகங்களிடத்தும் ஆங்காங்கு அஃதாவது எங்கணும், நமது பேரறிவாண்மையாலே ஒரு பெருங்கீர்த்தியைப் பரப்பி நிலை நாட்டாதவரை யாமிந்த மனிதச்சரீரத்தைவிட்டு நீங்கேம் என வயிரஞ்சாதித்துக்கொண்டு அதற்குத் தக்கதக்கவாறு இயலுதல் வேண்டும். எம்போலியறியாதார் சிலர் பழகுதலும் வேண்டும். பெரும்புகழ் படைக்கிறேம் எனப்புகுந்து, பெருஞ்செல்வத்தைக் குறைத்துக்கொள்ளுதலுங் கூடாவாம். ஒரு பெரிய மேதாவியாலே பல பேப்பர்களுக்கும் நாட்டுக்கோட்டை நகரத்தாருள் இன்னார் இன்னார் இத்துணை கோடிக்கு உடையாரென வரைந்தனுப்புவதற்கு ஏற்றவாறு பெரும்பொருள் படைத்திருத்தலும் ஓர் புகழ் நிலையமாம் என்பதை நாம் கனவினும் மறத்தலாகாது.

"புருஷராய் ஜெனனமெடுத்த பேர் மெய்ஞ்ஞான
போதத்தையறிவதொன்று,
பூமியொடு மிக்க தனவானாவதொன்றலது
பூவலஞ்செய்வதொன்று,
தருமவானென்று, மிகு கீர்த்திவானென்று
நற்சற்குண விவேகியொன்று,
சகலரும் புகழ்கின்ற வித்துவானென்று
ரணசங்கர்ம வீரனென்று,
கருணையாலிந்த வகையில்லாத மனித
ரைக் காசினியிலேன் படைத்தாய்
கருதுதாயுதரமும் பார்க்கின்ற பேர்களிரு
கண்களுஞ் செய்த வினையோ? என்ற திருவேங்கட சதகத்தைக் கவனித்தலும் வேண்டும்.

7. புகழ் ஈட்டவேண்டுமாற்றை மிகச்செவ்வையாக ஆராய்ந்து தெளிந்து நம்முடைய செல்வ நிலையத்திற்கும், கல்வியறிவிற்கும், நம்முடைய சரீர சக்திக்கும், பழக்கவழக்கத்திற்கும் ஏற்றவாறு உலகமுழுவதுந் தெரிந்த வொருவராக வேண்டும் பெரும்புகழினை ஈட்டற்குரிய பல மார்க்கங்களையும் அஃதாவது புதிது, புதிதான தொழின்முறைகளைக் கண்டுபிடித்தலால் பெரும்புகழீட்டலாகுமோ? உயர்தரப்பட்ட பல பாஷைகளானும், ஆங்காங்கு உலகமெங்கணும் ஓடித்திரிந்து பல அரிய பெரிய விஷயங்களையெல்லாம் மனிதவர்க்கத்தார் மிகச்செவ்வனேயுணருமாறு பெரிது பெரிதான பல வுபந்நியாஸங்களைப்புரிந்து பெரும்புகழீட்டலாகுமோ? இயற்கையாக உள்ள பொருட்செல்வத்தோடு மீண்டும் மீண்டும் பொருள் படைத்தலால் பெரும்புகழீட்டலாகுமோ? பெரியவோர் பத்திரிகையை வைத்துக்கொண்டு நடாத்துதலால் பெரும்புகழீட்டலாகுமோ? நமது பாரத கண்டத்துக்கே ஒரு பெருந்தலைவராக நின்று, தமக்கொப்பாரும் மிக்காரும் இல்லையெனப்பெற்று, பலவகைச் சீர்திருத்தங்களையுஞ்செய்து, பெரும்புகழீட்டலாகுமோ? ஐந்தாறு கண்டங்களையுமுடைத்தாகப்பெற்ற எந்த வுலகங்களையும் மிகச்செவ்வையாகக் கால்நடையானும், சைக்ளானும் சுற்றித்திரிந்து பார்வையிட்டுப் புதிதாக வுலகச்சரித்திரத்தையும், பூகோள சாஸ்திரங்களையும் வரைந்துவைத்தலாற்

பெரும்புகழீட்டலாகுமோ? தங்களுக்குரிய பெருஞ்செல்வங்கள் ஒருங்கையும் தருமஸ்தாபனங்களுக்காக்கி வைத்தலாற் பெரும்புகழீட்டலாகுமோ? அட்டாங்கயோகத்தமர்ந்து தன்னையுணர்ந்து அணிமா, மகிமா, இலகிமா, கரிமா, பிராத்தி, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமாசித்துக்களைப்பெற்று, தோற்றப்படுகிற முச்சகங்களினும் ஆநந்தக்கூத்துக்களாடி எவரையும் பிரமிக்கச்செய்தலாற் பெரும்புகழீட்டலாகுமோ? நம்முடைய சமய நூன்முறை யாசார சீலங்களிலே எற்றானுங்கூடி வழுவற்று வைராக்கிய சாதனத்துட்டங்கி நம்முடைய பரசிவப்பெருமான் திருவடிகளைக் காணுவதற்காக வேண்டும் பக்திகளையாற்றி நாயன்மார்களைப்போன்று முத்தியடைதலாற் பெரும்புகழீட்டலாகுமோ? கும்பகோணம் ஸ்ரீ மௌனஸ்வாமிகள்போன்று யாமே பிரமமாமென எந்த விதமான யாதொரு சலனத்துள்ளுஞ்சிக்காமல் சும்மாவிருந்த இடத்திற்றானே இருந்து விடுதலாற் பெரும்புகழீட்டலாகுமோ? சமயாச்சாரியர்களாய்த் தெய்வத்தன்மை யெய்து இலக்ஷக்கணக்குகளிலே அருட்பாமழை பொழிந்து எச்சமயங்களும் உச்சிமேலேற்றிப் புகழ்ந்து கொண்டாடி மெச்சத் தகுந்த மெய்ச்சமயமானது எங்களின் சைவ சமயமேயாமென்று எண்திக்குகளினும் உடைத்தாய பல தேயங்களினும் பெரும்புகழ் பரக்கக் காட்டி, வெட்சிமாலைசூடி நம் சமயத்தை வளர்த்தலாற் பெரும்புகழீட்டலாகுமோ? அகத்தியர், தொல்காப்பியர், நச்சினார்க்கினியர் பாணினி முதலிய தெய்வத்தன்மை வாய்ந்த சங்கப்புலவர்களைப் போன்று மனிதவியற்கைக்கு மிஞ்சி நெடுங்காலமிருந்து பெருஞ்சங்கங்களை ஸ்தாபித்து வடமொழி, தென்மொழி முதலிய சில பாஷைகளையும் வளர்த்துவருவதால் பெரும்புகழீட்டலாகுமோ? என்பது முதலிய எல்லா மார்க்கங்களையுங் கவனித்தே பெரும்புகழீட்ட யென்று பெரும்புகழ் படைத்துக்கோடலும் வேண்டும். இயற்கையில் வந்தமைந்துகொண்டாற்றான் நம்முடைய தன வாளாவிருத்தல் வசையைத் தருவதாகுமன்றோ? ஓ எமதன்பார்ந்த நண்பர்காள்! நன்றாக வாலோசித்துப்பாருங்கள். பெரும்புகழையல்லாமல் நிலைநிற்கக்கூடியதோர் ஒண்பொருள். செல்வச்செருக்கானும், கல்விச்செருக்கானும், பயனற்ற கெர்வத்தானும் பெரும்புகழீட்டுவதை மறந்துவிடுதல் எந்தவாற்றானும் நியாயமாகாது.

8. இனி இப்படிப்பட்ட பெரும்புகழீட்டுவதற்கும், படைத்தற்கும் ஊழ்வினைப்பயன்வேண்டுவதும் ஆவசியகந்தானோவெனின்? ஆம், ஆம், ஆவசியகந்தான். அஃதாவது நம்முடைய மனோசக்திகள் பெரும்புகழ்படைத்தலினும், பெரும்புகழ் படைத்தல்வேண்டுமென்னும் பேராவினும் எந்தஞான்றும், எந்தக்கணமும் இடைவிடாமற்றங்கி வேலைசெய்துவருமேயானால் நம்மில் நின்றும் உற்பத்தியாகும் ஒவ்வொரு சிறுவர் சிறுமிகளுக்கும், எந்தத்தொழில்களையாரம்பஞ்செய்யினும் பெரும்புகழோடு செய்துமுடிக்கத் தகுந்த பூரணதத்துவமான ஊழ்வினைப்பயனும், நவக்கிரக நிலைகளும் அமைந்துகொள்ளுமென்பதில் சந்தேகம் எட்பிளவுமின்றாம். நம்முடைய தாய்தந்தையர்களின் மனோசக்தி நமக்கமைவதும், நம்முடைய மனோசக்திகள், நம் மக்களுக்கமைவதும் மனிதவர்க்கமாய்ப்பிறந்தார் எவர்களும் தெற்றெனத்தெளிந்த வாய்மையேயாம். ஆகலின் எந்தவிதமான ஊழ்வினைகளும் நமக்குள் அன்னியில், அன்னியதாய் வேறோர் பக்கமாகவிருந்து வந்ததில்லையென்பது மட்டும் மிகத்தெளிவாகிறதன்றோ? ஆகலின் நம்முடைய பெரும்பிரயாசையையே முதற்காரணமாகக் கொள்ளுதல்வேண்டும், 'ஊழையும் உப்பக்கங்காண்பர் உலைவின்றித்தாழா அதுஞற்றுபவர்'' என்ற வேதவாக்கையுமுணர்க. செந்நெல்லாய செழுமுளைமற்றும் அச்செந்நெல்லேயாகி விளைதலால்—அந்நெல், வயல்நிறையக்காய்க்கும் வளவயலூர மகன் அறிவு தந்தையறிவு'' என்ற முனிவர் வாக்கையுமுணர்க.

9. நண்பர்காள்! இப்பெரும்புகழ் இலக்கணங்களையும், பெரும்புகழ் ஈட்டவேண்டும் பல மார்க்கங்களையும்பற்றி நமது மகாசங்கத்தில் பல மேதாவிகளும் ஒன்றுகூடி மிகச்செவ்வையாகப் பகர்ந்துபேசுதலும் வேண்டும். நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளின் மனத்தின்கண் மிகச்செவ்வையாய்ப் பதியுமாறு அடிக்கடி துண்டுப்பத்திரிகைகள் மூலமாயும், வாரப்பேப்பர்கள், மாதப்பேப்பர்கள் மூலமாயும், பல உபந்நியாசிகள் மூலமாயும் பிரசுரப்படுத்திவருதலும் வேண்டும். நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு நாடுநகரங்களையும் பெரும்புகழ் நிலையத்துள் தங்கச்செய்தலும் வேண்டும். எத்துணைதூரந் தாழ்ந்த

வொரு சிறிய தொழிலையே செய்யினும் உலகமுழுவதும் பிரசித்தமாமாறு துணிவுறச்செய்தலும் வேண்டும். பெரும்புகழ் படைத்தலிற் பேராவாவுடையவர்களா யிருத்தலும் வேண்டும். சோம்பற்றன்மையிற் சிக்காமல் எந்த மார்க்கத்தில் நுழைவோமாயினும் பெரும்புகழ் நிகழுமென்பதும் வாய்மையே. பெரும்புகழ் படையாத நம் மனிதச்சரீரத்தைச் சுமக்கப்படும் நிலங்களிலே விளைவு குன்றுமென ஆன்றோர்கள் பரிகசிப்பதையுமுணர்க. அவர்களும் நம்போன்றவர்களாயிருந்துதான் ஆன்றோர்களெனப் புகழேற்றுக்கொண்டார்கள் என்பதையும் தெளிக. பெரும்புகழ் படைத்தார் சரித்திரங்களையாவது, சிலாரூபங்களையாவது காலவியற்கைகளால் மாறுபட்டு இறந்தொழிந்து அழிந்துபோகாத வண்ணம் எந்தக்காலத்தும் பாதுகாத்துவருதலும் வேண்டும். பொதுவாக நமது பரதகண்டத்துள் பெரும்புகழ் படைத்தார் பலர்மீதும் பேரபிமானம் வைத்துவருதலும் வேண்டும். புகழ்ந்தாரைப் போற்றிவாழ் என்ற வேதவாக்கை எந்தவாற்றானும் மறந்துவிடுதல் கூடாது. எல்லாம் அவன் செயலேயென சும்மா குந்திக்கொண்டிருப்பினும் பெரும்புகழ் விளையத்தக்க மார்க்கத்தை மிகச் செவ்வையாய்த் தெரிந்துகொண்டிருத்தலும் வேண்டும். பெரும்பான்மை புகழைத் தருதற்குரியதல்லாத எந்தத் தொழின்முறைகளினும் புகுதல்கூடாது. புகுவாரோடு உடன்படுதலும் கூடாவாம். மிகவருமையாக நமக்குக்கிடைத்த நம் வாழ்நாட்களை பெரும்புகழ் படையாதவண்ணம் ஒழிந்துபோமாறு செய்தல் கூடாது. நன்றாகக் கவனித்தல்வேண்டும். எமதர்மன் இயற்கைகளையும் அடிக்கடி ஞாபகத்திற்கெடுத்துக்கோடலும் வேண்டும். பெருந்தன்மையோடு வாழமுயலுதல் வேண்டும். கொன்னே உண்டுறங்கித்துஞ்சுவது எந்த ஜெந்துக்களுக்கும் இயற்கையேயாமென்பதை நாம் நன்றாகத் தெளிதல்வேண்டும். ஈங்கு காணப்படுகிற எந்த விஷயங்களும் ஞாபகக்குறிப்புகளேயாமென்பதையும் ஞாபகப்படுத்துகிறேன். நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளுக்கும் பெரும்புகழைக் கொடுக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பன்முறை இறைஞ்சுகின்றோம். சுபம்! சுபம்!! சுபம்!!!

Registered No. M. 1111.

உ

திருச்சிற்றம்பலம்.

Nattukkottai Vaiciyam.

நாட்டுக்கோட்டை வைசியம்.

ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

21 SEP 1915

தொகுதி ௧. | ௲௯௱௰௫ ஆடி மீ. | பகுதி ௨௩.

51-வது அத்தியாயம்.

களவு.

“கற்றுக்கொள்வன வாயுள நாவுள
விட்டுக்கொள்வன பூவுள நீருள
கற்றைச் செஞ்சடையானுள னாமுளோ
மெற்றுக்கோ நமனான் முனிவுண்பதே”

“மனிதர்கா ளிங்கேவம் மொன்று சொல்லுகேன்
கனிதந்தாற் கனியுண்ணவும் வல்லீரே
புனிதன் பொற்கழலீச னெனுங்கனி
யினிது சாலவு மேசற்றவர்கட்கே”

எனக்கூறிய நமது சைவசமயக் குரவர் பெருமானாகிய ஸ்ரீ திருநாவுக்கரசு ஸ்வாமிகளின் மரைமலர்போன்ற இரண்டு திருத்தாள்களையும் அடியேஞ் சிரமேற்கொண்டு நண்பர்காள்! இங்ஙனம் “களவு” என்னும் அங்கத்தை வரையத்தொடங்குவாம்.

1. அஃதாவது பெரும்பான்மை எந்தச் சிறுவர் சிறுமிகளுக் குங்கூட மிகத்தெளிவாக விளங்குமே எனினும் பிறத்தியார்க்

குரிய எந்தப் பொருள்களையும் அவர்களுக்குத் தெரியாதவண்ணம் நின்று அபகரித்தலேயாம். ஒரு பொருட்குச் சொந்தமாகிய வொருவர்க்குத் தெரியாதவண்ணம் எந்த மார்க்கத்தால் அபகரித்தாலும் அஃதேயாம்.

2. பொதுவாகக் கவனிக்கப்புகுந்தால் களவு என்பதன் பொருள் ஒருவர் இருவராய் நின்றோ! அல்லது நாலைந்து பெயர்களாய் நின்றோ! இரவிற் கன்னக்கோல் முதலிய ஆயுதங்களாலே வீடுகளிலோ ஏனைய கட்டிடங்களிலோ பிரவேசித்து பிறத்தியார்க்குரிய பொருள்களை யள்ளிக்கொண்டுபோதலும், ஜனங்கள் போக்குவரத்துப் பாட்டைகளிலே நின்று அடித்துப்பிடித்து வழிப்பறி யறித்தலுமே என பெரும்பான்மையோர்களின் அபிப்பிராயங்கள் ஆம். அஃதோடு சிறுவர்களையும் அறியாதவர்களையும் ஏமாற்றல், கள்ளக்கணக்கு வரைதல், பொய்மையான ரிக்கார்டுகளை யுண்டாக்கல், நம்பிக்கைக்குத் துரோகஞ்செய்தல், மோசஞ்செய்தல், வஞ்சித்தல், நியாயத்துக்கு விரோதமான வழக்குகளை நியாயமாகச் செய்து கைக்கூலி வாங்குதல், புரட்டு உருட்டாகப் பொருளீட்டல், வேசை தாசிகளை ஏமாற்றல், சகோதரர்களுக்குந் தாய் தந்தையர்களுக்குந் துரோகஞ்செய்தல், பாகக்காரரை வஞ்சித்தல், ஆசிரியன்மார்களுக்குத் துரோகஞ்செய்தன் முதலியனவும் பொருந்தும்.

3. மாபாதகம் ஐந்தனுள் இஃதும் ஒன்று. ஏனைய நான்கு பாதகங்களுக்கும் இதனையே தலையாயதெனவுங் கூறலாம். இதன் காரணமாக ஏனைய தீயொழுக்கங்கள் பலவும் ஒருவர்பால் தானே நிகழும்.

“களவு அழகைக் கெடுக்கும்”
“கள்வருக்கு வீடு கல்வீடு”

“கள்வன் மனையாள் கைம்பெண்ணே”

என்ற பழமொழிகளையுங் கவனிப்போமாக.

4. இக்களவியலானது ஒருவர் மனத்திடை தோற்றியவுடன் அவர் எத்துணை தூரம் அளவு கடந்த இலக்குமிகரம் வாய்ந்தவராக இருப்பினும் அந்தக்கணமே அத்துணையுமாறி கொலை புரிந்தாரைப்

போன்றே காணப்படுவார். இல்லற தருமத்தைச்சார்ந்த வொருவர்பால் இஃது நிகழுமாயின் அஃது நல்ல மரத்திற் புல்லுருவு படர்ந்தேறுவதையே யொக்கும். இல்லற தருமமானது எற்றும் பயன்படாதனவாகவே முடியும். விளையாட்டைக்கருதியும் இப்பழக்க வழக்கங்கள் நமது சிறுவர் சிறுமிகளிடத்து வந்தணுக வொட்டாமற் பாதுகாத்துக்கொள்ள வேண்டுவதும் நமது வகுப்பைச்சார்ந்த பெரியார் ஒவ்வொருவரையுஞ் சார்ந்த முதற் கடமையேயாம். நாளிதுகாறும் நமது வகுப்புள் இக்களவியலான பழக்க வழக்கங்கள் வந்து நுழைந்துகொள்ளவில்லையென்பது எவர்களுந் தெற்றெனத்தெளிந்த வாய்மையேயாம். எனினும், மீண்டும் மீண்டும் வந்தணுகவொட்டாமற் பாதுகாத்துக்கொள்வதற்காகவே இவ்வங்கத்தை நமது வைசியத்திலும் எடுத்துக்கொண்டதாமென்க. என்றாலும், நமது தாதை மூதாதைகளின் தன்மையையும், வன்மையையும், பேரறிவாண்மையையும், தங்கள் நாடு நகரங்கள் ஒருங்கையும் ஒற்றுமையென்னுங் கயிற்றாலும், பொதுக்கூட்டமென்னுங் கயிற்றாலும், ஜாதியக்கட்டுகளென்னுங் கயிற்றாலும், கட்டியாண்டுவந்த தந்திரத்தையும்பற்றிக் கவனிக்கப்புகுந்தால் மிகப் பேரானந்தமே நிகழும். யாங்ஙனமெனின்? நமது வகுப்பாருள் சிறைக்களம் புகுந்தாரை நமது ஜாதியக்கட்டுப்பாடுகளில் நின்றும் அவர்கள் குடும்பம் மனைவி மக்களில் நின்றும், நன்மை தீமை முதலியவைகளில் நின்றும் வேறுபடுத்தி விலக்கிவைப்பதென்னும் கட்டாயக்கட்டான சட்டமானது எத்துணை நல்லொழுக்கங்களென்னும் கற்பகதருக்கள் நிலைபெற்று வளர்வதற்குரியவோர் நன்னீர் நிலையாக நின்றனவென்பதையும், சாதாரண இவ் ஒரு விஷயத்தில் எவ்வளவு பல நல்ல நீதிமார்க்கங்கள் அடங்கிக்கிடக்கின்றனவென்பதையும் எண்ணி நோக்கிக் கவனியுங்கள். தற்காலம் அச்சட்டமானது யாங்கோ வோடிவொளித்து மறைந்துகொண்டனவே கொஞ்சம் ஊன்றி நோக்கிக் கவனிக்கப்புகுந்தால் நாளிதுகாறும் இக்களவியலான பழக்க வழக்கங்களை நமது மாகாணத்துள் வந்து நுழையவிடாமல் பாதுகாத்துக்கொண்டது இச்சட்டமேயாமன்றோ! கள்ளக்கையொப்பமிட்டு உண்டியல் எழுதி நமது வகுப்பைச்சார்ந்த வொருவருக்கொருவர் ஏமாற்றிக்கொள்கிறதென்றால் ஐயையோ! இக்காலம் எத்துணை கொடிய மாபாதகம் உடையதாகக் காணப்படுகிறது. ‘இளமழியானது குழையறியாது”

என்னும் பழமொழிக்கிணங்க நாகரீகம் இன்னது, அநாகரீகம் இன்னது, ஆசாரச் சீர்திருத்தம் இன்னது, நியாயம் இன்னது, அநியாயம் இன்னது, நமது வகுப்பின் மாட்சியின்னது, நமது தாதை மூதாதைகளின் தன்மைகள் இன்னது, அவர்கள் போட்டு வைத்த அடிபீடங்கள் இன்னது, அவர்கள் உண்டாக்கி வைத்த வான்முறைச்சட்டச் சீர்திருத்தங்கள் இன்னது, அவைகளைப் பின்பற்றி யியலுவதாலுண்டாம் நன்மைகள் இன்னது என்பவைகளில் ஒரு சிறு துளியளவுகூடத்தெரியாது உண்டுறங்கிக் காலத்தைப்போக்கும் இக்காலத்து எமதருமையான பால்ய சகோதரர்களே! ஓ பெரியவர்களே! ஓ செல்வவந்தர்களே! ஆரியம், செந்தமிழ், ஆங்கிலத்தானுஞ் சீரிய நாவலர் பாவலர் சிலரும் போற்றத்தகுந்த பேரருந்தன்மை வாய்ந்த ஓ மகா மேதாவிகளே! பெரிது பெரிதான பட்டங்களைப் பெற்றும்,

"தங்குறை தீர்வுள்ளார் தளர்ந்து பிறர்க்குறூஉம்
வெங்குறை தீர்கிற்பார் விழுமியோர்—திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகின்
நிறையிருளை நீக்குமே நின்று"

என்ற ஆன்றோர் வாக்கிற்கிணங்க பிற பகுதியார்களுக்கு இன்றியமையாது வேண்டும் பல நன்மைகளைப் பயந்தும், பல வித்தியாதர்மங்களை நிலைநிற்கச்செய்தும், பல திருப்பணித்தருமங்களை யாற்றியும், பல சத்திர தருமங்களைச்செய்தும், பல முனிசிப்பல் டவுண்களுக்குச் சென்று தாங்கள் வலிதாகத் தலைமைவகித்து ஆங்கு வேண்டுஞ் சீர்திருத்தங்களைச்செய்தும், சட்ட சபையில் ஒரு மெம்பராக நின்றும் பெரும்புகழ் படைத்துவரும் ஓ தனவைசிய ரத்தினமணிகளே! நமது ஜாதியக்கட்டுப்பாடுகளைக் கவனிக்காதவண்ணம் நீங்கள் செய்யும் எந்தக்காரியங்களையும் நல்லதல்லவென்று யாங் கூறவரவில்லை. காலவியற்கைகளுக்குத் தக்க தக்கவாறு ஞாலவியற்கைகள் தலைகீழுங் கான்மேலுமாக மாறிக்கொண்டுதான் இயலுமென்பதை யாமும் நன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறோம். மேலும் காலவியற்கையைப் பின்பற்றியியலுதலே மனித வர்க்கத்தாரின் முதற் கடமையேயாமென யாமும் ஒவ்வோரங்கங்களிலும் வரைந்தும் வருகிறோம். மேலும் நீங்கள் எவ்வித நாகரீக விஷயத்திலும், எவ்விதச் சீர்திருத்த

விஷயங்களிலும் வெகு பரபரப்புடன் மிகச்சுறுசுறுப்பாக முன்னேற்றமடைகிற நுங்களுக்கு நமது வகுப்புக்குரிய நமது ஜாதியக் கட்டுப்பாடுகளெல்லா மிகச்செவ்வனே "இறந்தது விலக்கல் எதிர்ந்தது போற்றல்" என்னும் உத்தியின் பற்றுக்கோட்டிற்கிணங்கச் சீர்திருத்தமாவதற்காகவேண்டும் ஒரு பெரிய மகாசங்கத்தைக் காலக்கிரமத்தில் கூட்டுவதென்றால் அஃதொரு முடியாத பெருங் காரியமாமோ? அஃதெவன் மிகுதியுந் துர்லபமாமோ? அதற்கென்றால் ஒரு திருப்பணிக்கு செலவாகிற தொகையைவிட மிகுதியாக வேண்டுமோ? அதற்கென்றால் நமது பேறிவாண்மை இன்னுமிகையாக வளர்தல் வேண்டுமோ? அதற்கென்றால் நாம் எழுதும் உண்டியல்கள் செல்லாகமாட்டாதோ? அதற்கென்றால் நமது மோட்டார்கார்களை நமது ட்ரைவர்கள் ஓட்டமாட்டேனென்கிறார்களோ? நுங்களின் நுண்ணிய அறிவும், செவ்விய மனனும் இதன் பால் வந்து புகுதாத காரணம் என்னே? உபதேச சமயத்தில் நிகழ்ந்த வீராவேசமானது இப்பொழுதும் நுங்கள் மனத்திடையமிழ்ந்து கிடக்கிறதோ அல்லவோ? அடடா! தங்களின் கட்சியைப் பலப்படுத்திக்கொள்ளுதற்கும், தங்களாசிரியருக்குப் புள்ளிகள் சாஸ்தியெனப் பெரும்புகழ் படைத்தற்கும் ஆக, நகரத்துக்கு நகரஞ் சென்று, நட்பினர்களையும், நட்பல்லாதவர்களையும் நல்லவர்களையும், கெட்டவர்களையும், நாடியைத்தாங்கி, மிக நல்ல வார்த்தைகளையுஞ் சொல்லி, அவர்களுட் சிலருக்கு வேண்டியிருந்த பணமுடைகளையுந் தீர்த்து அவ்விஷயத்தைப் பூர்த்திசெய்தற்குப் பட்டவோர் பெரும்பாடு நுங்களின் ஞாபகத்திலில்லையோ? அப்பெரும் பாட்டை நமது மகாசங்க விஷயத்துக்கும் எடுத்துக்கொண்டால் அஃதெவன் மிகக்கேவலமாமோ? நண்பர்காள்! நன்றாகக் கவனித்துப்பாருங்கள். நமது ஜாதியக் கட்டுக்களை அவிழ்த்துவிடாதிருங்கள். அவிழ்ந்து கிடக்கும் சில கட்டுக்களையும் திரும்பவும் பலமாகக்கட்ட முயலுங்கள். நம்மை இவ்வளவு பெரிய செல்வவந்தர்களாகசெய்ததும், இவ்வளவு நாகரீக நிலையத்திற்குக் கொணர்ந்ததும், இரம்பை, மேனகை, திலோத்தமை, ஊர்வசிபோன்ற பரத்தையர்களோடும், பார்ப்பனத்திகளோடும், சைவச்சிகளோடும், பிறன் தாரங்களோடும் பிரமானந்தமயமாக ஆனந்தசாகரத்திலே மூழ்கச்செய்ததும் நமது

முன்னோர்கள் கட்டிவைத்த ஜாதியக்கட்டுக்களே என்பதை நீங்கள் நன்றாகவுணருங்கள். நம்மை பூரண நியாயஸ்தர்களென்றும் பூரண சத்தியவந்தர்களென்றும், மிகப்பூரணமான வாக்குநாணயம் உடையவர்களென்றும், ஐயம் புகுவார் முதற்கொண்டு வைய்யங்காப்பார்வரை எட்டுணைவு சந்தேகமுமின்றி நம்பச்செய்ததும், ஒரு அணு ஸ்டாம்பில் ஆயிரக்கணக்கு இலக்ஷக்கணக்குகளிற் பற்றுவரவு செய்து நிர்வகித்துக்கொள்ள இடங்கொடுத்ததும் அரைக்கால், கால், அரை, வட்டிகளுக்காகப் பிற பகுதியார்களின் பணக்குவையல்கள் நம்மிடங்கிடந்து புரளச்செய்ததும், நமது ஜாதியக்கட்டுக்களே என்பதை நீங்கள் நன்றாக வுணருங்கள்.

நண்பர்காள்!

> "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார்
> எவ்வெவர் தீங்கையு மேற்கொள்ளார்—செவ்வி
> அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார்
> கருமமே கண்ணாயினார்"

என்ற நமது குமரகுருபரர் திருவாக்கிற்கிணங்கி நமது சொந்த விஷயத்திலும் நுங்களின் மேலான கவனத்தைச் செலுத்துங்கள். என்னடா! களவென்னும் விஷயத்திற் கொணர்ந்து இவ்வளவு பிற விஷயத்தை வரைந்துவிட்டாரே! நமக்கு ஞாபகப் படுத்த வந்தவர், இவர்தம் ஞாபகத்தை யிழந்துவிட்டார் போலும் என நீங்கள் நினைத்தல் வேண்டாம். நம் முன்னையவர்களாலே களவியற்கைகளை நமது நாடு நகரங்களில் வந்து நுழையவிடாதவண்ணம் உண்டாக்கி வைத்திருந்த ஒரு அபூர்வச் சட்டத்தைக் கவனித்து நினைத்துப்பார்த்தமாத்திரத்தே இவ்வளவுதூரஞ் சொல்ல வந்ததெனத் தெளியுங்கள்.

5. இக்களவியற்கை இல்லற தருமத்தார் எட்டுணையும் நாடுதல் கூடாதென்பது விளங்குமாறு கள்ளாமையென்னு மதிகாரத்தை அறப்பாலிலும், பலவிடத்துஞ்சென்று தமதுடம்பின் பொருட்டு யாதொரு பொருளையுங் கவனித்தலின்றித் தம் மனத்தைப் புறத்தே போகவொட்டாமற்றடுத்து ஓரிடத்தை யுற்று தமதான்மாவை நோக்கச்செய்ய வேண்டியதான துறவற தருமத்தார் இதனை நினைத்தமாத்திரத்தே யவர்க்குப் பெரும்பாதகமாக முடிகிறதாகலின் துறவறவியலிலும் நமது தேவபெருமான் வரிசைக்கிரமமாய் வைத்தனராம் என்க. கள்ளாமை, வெகுளாமை, இன்னாச்செய்யாமை, வாய்மை, கொல்லாமை, புலான் மறுத்தல் முதலிய விஷயங்கள் துறவற தருமத்தார்க்குமட்டுமே உரியனவென்றும், இல்லற தருமத்தாருக்கு உரியனவல்லவென்றும் சில சகோதரர்கள் ஊகிக்கிறார்கள். அஃது பெரியவோர் தவறேயாகும். எங்ஙனமோ தட்பித்தவறி ஒருவர் இருவர் முக்கி மொணமொணத்து நிலைநிற்கக்கூடியவோர் சிறிய வியலுக்காக அறப்பாலென ஒரு முழுப்பால் நிகழ்ந்ததாக நமது வகுப்பைச் சார்ந்த சகோதர சகோதரிகள் நினைத்தல் வேண்டாம். அறப்பாலென்பது பெரும்பான்மை இல்லற தருமத்தையும் சிறுபான்மை துறவற தருமத்தையுமே குறிப்பிக்குமென்பதையு முணர்க.

6. இனி இக்களவியலுடையார்க்கு நிகழும் துன்பங்களையும், இன்பங்களையும், தன்மைகளையும் பெயர்கள் முதலிய பல விஷயங்களையும்பற்றிச் சிறிது கவனிப்போம். களவுசெய்ய நினைக்கும் ஒருவர் ஒவ்வொருநாளும் தங்கள் மனையாள் அல்லது கொழுநன், தந்தைதாயர்கள், சுற்றத்தார்கள், குழந்தைகுட்டிகள் முதலானவர்களாலே வாய்க்கரிசி வாங்கிப்போட்டுக்கொள்ளல் வேண்டும். அவர்தம் மனமானது எந்தக்காலத்தும் அச்சத்துளமர்ந்து கிடத்தல் ஒன்று. கால்கைகள் ஒடிவது ஊழ்வினைப் பயன் வேண்டாமலே அவர்க்கு நிகழும். அரச தண்டனையவர்க்கே உரியதாகும். அவர்க்குச் சொந்தவூர், சொந்தவீடு வாயில்களிருப்பினும் இல்லாதனவாகவே முடியும். கள்ளர், கள்ளர் என எவராலும் எள்ளவும் பெறுவர். இன்பமென்பது ஒரு சிறிது மில்லவேயில்லை. இன்பமெல்லாம் அவர்க்குத் துன்பமாகவே முடியும். அவருண்ணும் உணவு மலத்தையே யொக்கும். அவர் சரீரம் நாயின் சரீரத்தையே யொக்கும். அவர் வார்த்தைகள் கண்டார் எவர்களும் சீச்சீயென வோட்டப்பெற்ற அந்நாய்க் குரைத்தலையேயொக்கும். அவர் இருந்தும் இறந்தவரேயாவர். அவர்க்குக் கிடைக்கும் ஒரு சிறப்புப்பெயர்போல் ஏனைய எவர்க்குங் கிடையாவாம்.

ஆய்ந்துநோக்குமிடத்து அக்கள்வர் மனித வர்க்கமாயிருந்தும் மனித வர்க்கத்துட் படாரே எனக் கொள்ளப்பெறுவர். எந்தஞான்றும் எந்த விதமான சுதந்தரமும் அற்றவரே யாவர். ஸ்ரீ இராமபிரான் மனைவியாகிய சீதைப்பிராட்டியை இராவணன் தூக்கிக்கொண்டுபோய் அவனும் அவன் கொடிவழியாரும் பட்டபாடு உலகப்பிரசித்தமேயாம். களவினால் கிட்டிய பொருள் ஒருவருக்குச் சொந்தமாக நிலைத்திராமல் எந்த மார்க்கத்தாலும் நீங்கிப் போய்விடும். ஒருசமயம் நிரம்பவுள்ளனபோல காணப்படினுஞ் சின்னாட்களில் இல்லாதனவேயாகும். இஃது பற்றித்தான் நமது தேவபெருமான்,

"களவினாலாகிய வாக்கமளவிறந்
தாவதுபோலக் கெடும்" என்றார்.

இன்னும் "களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண், வீயாவிழுமம் தரும்" என்றுங் கூறினார். இன்னுங் கவனிக்குமிடத்து இம்மையில் அரச தண்டத்தோடுமட்டும் நில்லாமல் மறுமையில் நரகத்துன்பத்தையும் அடைவர். பாவச்செயல்களுக்கெல்லாம் இஃதொருதலையாதல் பற்றித்தான் ஆன்றோர்கள் இதனை பஞ்சமாபாதகத்துள் ஒன்றாகச் சார்த்திக் கூறியிருக்கிறார்கள்.

7. நண்பர்காள்! இக்களவியற்கைகளானது முந்திய காலத்து மிகத்தாழ்ந்த வருணத்தாரிடத்தே மாத்திரம் பெரும்பான்மையாக நிகழ்ந்துவந்தன. இக்காலத்து எந்த வருணத்தாரிடத்தும் அஃது சாதாரணமாகக் காணப்படுகிறது. பெண்பாலாரிடத்துங்கூட காணப்படுகிறது. கள்வரைப்போன்று காணப்படுஞ் சிலர் யோக்கியராயும், யோக்கியரைப்போன்று காணப்படுஞ் சிலர் கள்வராயுங் காணப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சிலரைத் தெரிந்து கள்வராயுள்ளவர்களைக் கண்டுபிடித்து அவர்கள் எவர்களாயிருப்பினும், அவர்களை, நமது கவர்ன்மெண்டாரவர்களோடு நாமுஞ் சார்ந்து நமது நாடுநகரங்களில் இல்லாமற் செய்வதே மிகவுத்தமமாகும். அவர்களை எந்தஞான்றுஞ் சிறைக்களத்திலிருந்து நீங்கவிடாமற் செய்வதும் ஒரு நல்ல நெறியாகும். தன் விளக்கென்று முத்தினும் அஃது முகத்தைச் சுட்டுவிடுவது யாவ

ரும் பிரத்தியக்ஷமாகக்கண்டகாட்சியாம். இவைகளையெல்லாம் மிகச்செவ்வனே தேர்ந்துதெளிந்து இக்களவியல்களை நமது நாடுநகரங்களிலே வந்து நுழையவிடாமல் வேண்டுஞ் சட்டங்களை இந்தக்கணமே பூர்த்தியாக்கிக்கொள்வது நமது மகா சமூகத்தின் முதற்கடமையாகும். பேரறிவாண்மையுடையார் பலர் கவனிக்க வேண்டிய இஃதொரு முக்கிய விஷயமாகும். திருத்தஞ்செய்யப் புகுவார் சிலர் மேற்கண்ட சட்ட மசோதாவொன்றைத் தயார் செய்து நமது மகா சங்கத்திற்கனுப்புதலும் வேண்டும். நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் இக்களவியலைக் கடிந்து ஏனைய பலர்க்குந் தெற்றனவிளங்கப் பேசப் பழகியும் பழகியவண்ணம் தாங்கள் இயலவும் எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிவானாக. சுபம்! சுபம்!! சுபம்!!!

52-வது அத்தியாயம். ஊழ்.

'புனலிலே ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார் தலை தத்தெனத் தத்துமே
கனலிலேடிடப் பச்சென்றிருக்குமே
கதவுமாமறைக் காட்டிலடைக்குமே
பனையிலாண்பனை பெண்பனையாகுமே
பழையவென்பு பொற்பாவையதாகுமே
சினவராவிடந்தீரெனத்தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப்பாடலே''

என அற்புதத் திருவிளையாடல்களைப்புரிந்து நம் சைவசமயத்தை வளர்த்த நமது சைவசமயக்குரவர் பெருமானாகிய ஸ்ரீ திருஞானசம்பந்தஸ்வாமிகளின் இரண்டு திருத்தாள்களையும் அடியேஞ் சிரமேற்கொண்டு நண்பர்காள்! இங்ஙனம் "ஊழ்" என்னும் அங்கத்தை ஏதோ அடியேமுடைய சிற்றறிவிற்கு எட்டிய ஒருவாறு வரையத்தொடங்குவாம்.

I. அஃதாவது, உடலோடுகூடிநிற்கும் எந்த ஆன்மாவையும், அவ்வான்மாப் பிறக்கும்பொழுதே தாமும் 'வினைப்போகமே ஒரு தேகங்கண்டாய்" என்பதற்கிணங்க தாம்வேறு, ஆன்மாவேறு என்பதற்கின்றி அஃதோடே தோன்றிப் பின்னர் இறுதிக்காலம் வரை நல்வினை தீவினைப்பயன்களை எட்பிளவும் இடையிற் கூடுதல் குறைவின்றி நுகரச்செய்விக்கும் "நியமமென்கிற விதிமுறையாகும்,, என்ற பிங்கலந்தைச் சூத்திரத்தையொப்ப எல்லாம் வல்ல நமதிறைவனால் நியமிக்கப்படுகிற விதிமுறையேயாம்.

II. இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதலாகிய நியதியே "ஊழ்" என்பர் பரிமேலழகர். இஃது எல்லா நூலாசிரியர்க்கும் ஒப்பமுடிந்ததொன்றாம். ஆகவே இந்நியதியும், இந்நியதியை நியமிக்கும் ஒரு தலைவனும் நாம் தோன்றியக்காற் றொடங்கியே நம்மோடுடன்தோன்றி நம்மை யவ்விருவினைப்பயன்களாகிய சாகரத்தில் அமிழ்த்துதலேயல்லாமல், நம்மில் நின்றும் வேறொன்றாகப் பிளவுபட்டு நின்று இருவினைப்பயன் செய்தாரை இடையிடையே வந்தடைந்து இன்பதுன்பங்களென்னுஞ் சாகரத்திலமிழ்த்துவதாக இதனைப் பார்வையிடும் எந்தச் சகோதர சகோதரிகளும் எண்ணுதல் வேண்டாம்.

III. "பல்லாவுளுய்த்துவிடினுங் குழக்கன்று
வல்லதாந்தாய் நாடிக்கோடலை—தொல்லை
பழவினையு மன்னதகைத்தேதற்செய்த
கிழவனை நாடிக்கொளற்கு"

என்ற இம்முனிவர் திருவாக்கால் இருவினைப்பயன்கள் எவரையும், அஃதாவது எத்தகைய தேவாதி தேவர்களையுங்கூட விட்டு விடாதென்பதை நாம் நன்கு தெளிதல்வேண்டும். எத்தகைய அபூர்வ சக்திகளமைந்த எந்தவொரு தொழிலை எவரே செய்யினும் அஃதும் அவர்தம் ஊழே என்பதை நாம் நன்குணர்தல் வேண்டும். ஊழ்வினையைக்கடந்து செய்ததாக நினைத்தல் வேண்டாம். ஊழே முந்தியதென மிகச்செவ்வையாக நீங்கள் தெளிதல் வேண்டும். "ஊழிற் பெருவலியாவுள மற்றொன்று சூழினுந்தான் முந்துறும்" என்ற நமது தேவபெருமான் திருவாக்கைத் தெளிதலும்வேண்டும். சாதாரணவொரு மனிதன் தேவேந்திரப்பட்டமே பெற்று யாவருங்

கண்டு ஏ! ஏ! இஃதெவன்! இக்கலியின் தன்மையேபோலும்! என்று வியப்புற வாழினும் அஃதும் அவனின் ஊழேயாம். நமது பரசிவப்பெருமானுக்கு மேலொரு பரசிவப்பெருமானே ஒருவன் ஆயினும் அஃதும் அவனின் ஊழேயாம். ஊழ் என்பது யாது? அஃதுடன் தொடர்ந்துவரும் வினை என்பதுயாது? அவ்வூழ்வினையின் பயனாவது யாது? என்பவைகளை மிகச்செவ்வனே ஆராய்ச்சி செய்து நல்லூழ் அல்லாதவொருங்கையும் நமதூழி நிகழாதவண்ணம் விலக்குதல் கூடுமாவெனக்கவனித்து மிகுதியும் முழுமன வன்மையோடு மேற்சொல்லும் ஒருவர்க்கும் அஃதும் அவரின் ஊழேயாம். இன்னுங் கவனிக்குமிடத்து,

"ஆழவமுக்கி முகக்கினும் ஆழ்கடல்நீர்
நாழி முகவாது நால் நாழி—தோழி
நிதியுங் கணவனும் நேர்படினும் தம்தம்
விதியின் பயனே பயன்" என்றும்,

"எழுதியவாறேகா ணிரங்கு மடநெஞ்சே
கருதியவாறாமோ கருமம்—கருதிப்போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காயீந்ததேன்,
முற்பவத்திற் செய்தவினை" என்றும்,

"வருந்தியழைத்தாலும் வாராதவாரா
பொருந்துவனப் போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம் புண்ணாக நெடுந்தூரந் தானினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்"

"ஈட்டும் பொருண் முயற்சி யெண்ணிறந்த வாயினுமூழ்
கூட்டும்படியன்றிக் கூடாவாம்—தேட்டம்
மரியாதைகாணும் மகிதலத்தீர் கேண்மின்
தரியாதுகாணுந் தனம்" என்றும்,

ஆவாரையாரே யழிப்பரதுவன்றிச்
சாவாரையாரே தவிர்ப்பவர்—ஓவாமல்
ஐயம்புகுவாரே யாரே விலக்குவார்
மெய்யம்புவியதன்மேல்" என்றும்,

"ஒன்றை நினைக்கி னதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றியனுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாதமுன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளும் ஈசன்செயல்" என்றும்,

தாம்தாமுற் செய்தவினை தாமேயனுபவிப்பார்
பூந்தாமரையோன் பொறிவழியே—வேந்தே
ஒறுத்தாரை யென்செயலா மூரெலாமொன்றா
வெறுத்தாலும் போமோ விதி" என்றும்,

"தானே புரிவினையாற் சாருமிருபயனும்
தானேயனுபவித்தல் தப்பாது—தானூறு
கோடிகற்பஞ்சென்றாலும் கோதையீர் செய்தவினை
நாடிநிற்குமென்றார் நயந்து" என்றும்,

"நுண்ணிய நூல்பல கற்பினு மற்றுந்த
னுண்மையறிவே மிகும்" என்றும்,

"பரியினுமாகாவாம் பாலல்ல வுய்த்துச்
சொரியினும் போகாதம" என்றும்,

"வகுத்தான் வகுத்த வகையல்லாற்கோடி
தொகுத்தார்க்குந் துய்த்தலரிது" என்றும்,

"ஆழியெல்லாம் வயலாகி யவனியெல்லா மன்னமயமானாலென்ன, சூழவந்தேயிறப்பவர்க்குப் பசிதீரவுண்டிருக்குஞ் சுகந்தானுண்டோ, ஏழுலகுந் தொழுதேத்துந் தண்டலையாரே சொன்னேன் எந்தநாளும், காழிநெல்லுக்கொருபுடவை விற்றாலும் நிருவாணம் நாய்க்குத்தானே" என்றும்,

"அழுதாற் பயனென்ன நொந்தாற் பயனென்ன ஆவதில்லை, தொழுதாற் பயனென்ன நின்னையொருவர் சுடவுரைத்த, பழுதாற் பயனென்ன நன்மையுந் தீமையும் பங்கயத்தோன், எழுதாப்படி வருமோ சலியாதிரு என் ஏழைநெஞ்சே" என்றும்,

"பேராசையாலீனர் பின்சென்றுழன்றுந்
தீராதமிடியாளர் சிலர் பாரினுண்டே
நேராகவரில் வாழ்வு நினையாமல் வருமால்
வாராததார்தாம் வருந்தினும் வாராதே" என்றும்,

"அதிசயமொருவரா லமைக்கலாகுமோ,
துதிபறுபிறவியி னின்பதுன்பந்தான்
விதிவசமென்பதை மேற்கொளாவிடின்
மதிவலியால் விதிவெல்லவல்லமோ" என்றும்,

"மக்களுக்கிரங்கிவாடு மடத்தகை யணங்குகேட்டி
தக்கமுற்பவத்திலான்ற தருமம் நன்கியற்றினோர்கள்
ஒக்கவிப் பவத்திலின்ப மொருங்கனுபவிப்பரின்றேன்
மிக்கவெந்துயரத்தாழ்வர் இதற்குளம் மெலிதலென்னே"

"துப்பிதழ் மடந்தை நல்லாய் தோன்றிய சீவரெல்லாம்
இப்புவியிடத்துச்சால வெண்ணுவ ரெண்ணிபாங்கே
அப்படிமுற்றிற்கீழ்மேலாம்பகுப்பிரண்டுண்டாமோ" என்றும்

வரப்படுகிற ஆன்றோர் திருவாக்குகளை நாம் நன்குணர்தல்வேண்டும். எத்துணைதூரந் தாழ்ந்த கட்டநட்டங்கள் ஒருவர்க்கு நிகழினும் அஃதும் அவர்தம் ஊழேயாம். ஊழ்வலியை விலக்கியொழுக எவர்க்கே எனினும் முடியாவாம். ஸ்ரீ அரிச்சந்திரபூபதி என்ன, ஸ்ரீராமபிரான் என்ன, ஸ்ரீஇராவணேசுரவரன் என்ன, பஞ்சபாண்டவர்கள் என்ன, நளச்சக்கரவர்த்தி, தமயந்தி என்ன, இத்தகைய மகாமேதாவிகளெல்லாம் அவர்களுக்கு நேர்ந்த தீயூழ்வினைப்பயன்களை வெல்லமுடியாமல் அவர்கள் பட்ட பெரும்பாடுகள் இவ்வுலகப் பிரசித்தமேயாமன்றோ. எத்தகைய மகா பலவந்தர்களாலும், செல்வவந்தர்களாலும், மகா பேரறிவாளர்களாலும், மகா சிவஞானயோகச் செல்வர்களாலுங்கூட தங்களுக்கு இயற்கையிலேற்பட்ட எவ்வித வூழ்வினைப்பயன்களையும் விலக்கிக்கொள்ளவாவது, மீண்டும், மீண்டும், மிகுதியாக வருவித்துக்கொள்ளவாவது முடியாவென்பதை நன்றாக நாம் கவனித்தல்வேண்டும். தெய்வமயமே ஊழ் என்பதை நாம் நன்றாகத்தெளிதலும் வேண்டும். எல்லாம் வல்ல இறைவன் ஒருவனால், தோற்றப்படுகிற எல்லாவுலகங்களும் ஊழ்வினை என்னுங் கயிற்றாலே கட்டப்பெற்று ஆட்டப்படுகிற ஒரு பொம்மலாட்டமென்பதை நாம் நன்றாகவுணர்தலும் வேண்டும். ஊழ்வினையை மறுத்துப்பேசுகிறவொருவர் நமது பரசிவப்பெருமானை மறுத்துப்பேசியவரேயாவர். ஊழ்வினையின் மாட்சிமையைத் தெள உணராதவருமாவர். தங்களால் முடியாதவொரு காரியத்

கை வூழ்வினையின் பயனே என்றும், தங்களால் யாதொருவிதப் பிரயாசையும் மிகுதியாகவின்றி யிலகுவிலே முடிந்த மற்றெல்லாக் காரியாதிகளையும் யாமே முடித்தேம் எனக்கூறும் சில அறியாச் சிறுவர்களின் தன்மையைக்கண்டு நாம் சந்தோஷப்படலும் வேண்டும். சமயம் நேர்ந்துழியவர்களுக்கு மிகச்செவ்வனே ஞாபகப் படுத்தலும் வேண்டும். அஃதும் அவர்களின் ஊழே எனத் தெளிந்து வாய்திறவாதிருத்தலும் ஆன்றோர் கொள்கையாம். "விதியினாலாவதன்றி வேதத்தார் தங்கண் மதியினாலாவதொன் றில்லை" என்ற நமதௌவையம்பிராட்டியார் திருவாக்கையுணர்தலும் வேண்டும். ஆம் ஐயா! நும்மைக் கொஞ்சமும் அறியாதவரென்றே நினைக்கிறேன்? காலவியற்கைகள் இஃதெனக் கொஞ்சமுந் தெரியாதவரென்றே எண்ணுகிறேன்? நாகரீக மார்க்கமும், தத்துவ ஆராய்ச்சியும் நுமது நிழலைத் தீண்டினவர்களுக்குக்கூட விளங்காதெனக் காண்கிறேன்? ஒரு கருநாடகத் தாத்தாவைப் போன்றே காணப்படுகிறீர்? பௌராணிகக் கட்டுக்காரர்களோடு நீயிருஞ் சார்ந்துகொண்டீரோ? காலத்துக்கேற்ப நூல் நூற்பது சாதாரணமாக எவர்களுக்கும் எளிதென்றோ நீயிரும் இத்தொழிலின்கண் வந்து புகுந்துகொண்டீர்? புகுந்தவரை கவனித்தல்லவா வரைதல் வேண்டும்? நுமதூர்ப்பக்கத்தார் சிலர் வில்லடிப்பதைப் போன்று வில்லடித்துக்கொண்டு செல்கின்கிறீரே என்ன பிரயோசனம்? ஒருவர்பின் ஒருவராய், ஒன்றைப்பார்த்தொன்றாய் சாதாரண எவர்களுக்கும் விளங்காமற்போகக் கட்டிவைத்த செய்யுட்களை மேற்கோள்களாகக்காட்டி மயங்குகின்றீரே? அடடா! நும்முடைய கல்வித்திறன் என்னே? இக்காலத்தில் மேனாட்டார் ஊழ்வினையைக்கடந்தே எந்தத் தொழில்களையுங் கொண்டுமுடிக்கிறார்கள் என்பதை நீயிர் வார்த்தையளவிலுந் தெரியீர்போலும்! நமது பரதகண்டத்துள் முழுச்சோம்பேறிகளான சிலரின் நாமிசை நிகழும், வினையின் பயன், ஊழ் விதி, எல்லாமவன்செயல், என்கிற வார்த்தைகளை நமது தமிழ் பாஷையில் நின்றும் எடுத்துவிடுவதன்றோ பேரறிவாளர்களின் கடன். இடையறா முயற்சியுடையார் எவர்க்கும் இவ்வூழ்வினைப்பயனால் யாது பிரயோசனம்? ஊழ், ஊழ் என்று ஒருவர் வெறுமனே வெறும்வாயை மென்னிக்கொண்டு குந்தியிருந்தாலவர் கதியென்னவாகும்? அவர் மனித வர்க்கத்தா

ரோடுஞ் சார்வாரோ? அவர் தம் வயிறும் நிறைந்துபோய்விடுமா? ஊழேபவர்க்கு வந்து படிபளக்குமோ? அந்தோ! அவரைப் பித்தனென்றன்றோ பரிகசிப்பார்கள்! ஆ! ஆ! நுமது வியாச விஷயங்கள் மிகநன்றாய் இருக்கிறது! எம்மை மிகச்சிறுவனே என்றெண்ணி வாயடியடித்துவிடாதிரும்! மிகச்செவ்வனே கவனித்து பதிற்கூறுமின். எவர்களுக்கும் விளங்குமாறு சொன்மின் பாக்களைக் கொணர்ந்து ஊடே கலவன்மின். காலதருமத்திற்கேற்றவாறு வரையப்புகுமின். ஆ! எம் அருமைச் சகோதரா! நீயிதுகாறும் எமக்குக் கூறிவந்த புத்திமதிகளும், எச்சரிக்கைகளும், சில ஞாபகக்குறிப்புக்களும் கவனிக்குமிடத்து மிக நன்றாயிருக்கிறது, எவர்களும் ஒப்பத்தக்கதேயாகிறது, தாம் நினைத்தபடிப்பில் வரையச்செல்வார் எம்போன்ற சிலர்க்கும் இஃதொரு நல்ல துணையுமாகிறது. நீ! மிக நல்லபிள்ளையாகவும் தெரிகிறது. நின்னுடைய களங்கமற்ற பளிங்கம்போன்ற மனத்துக்கு மிகப்பூரணமான சமாதானஞ் சொல்லவேண்டுவதும் எம்முடைய கடமையேயாமன்றோ? கொஞ்சம் படபடப்பின்றிச் சிறிது நிதானமாகக் கேட்கவேண்டுகிறேன். அமரிக்கையான நல்ல புத்தியோடு நியாயாநியாயங்களைக் கவனித்து ஆலோசித்துப்பார். ஒரு நூலெழுதப்புகுந்தவன் பெரும்பான்மை ஒழுங்குள்ள கல்வியுடையவனாகவும், அறிவுள்ளவனாகவுமே இருப்பானென்பதை மறந்துவிடாதே. அவசியமல்லாததும், நன்மையைப் பயவாததுமான ஒருவிஷயத்தை இஞ்ஞாலத்தில் நிலைநாட்டவேண்டுமென முன்வருவானென்று நின் கனவினும் நினையாதே. இஞ்ஞாலமானது அவனுக்கு விரோதமானதன்று. நின்போன்ற அறியாதசிறார் சிலர் தங்கள் மனக்கோட்டத்தாற் கோலாற்புடைப்பினும் அஃதும் நமது ஊழேயெனக் கவனித்துப் பொறுத்துக்கொண்டு மீண்டும் அவர்களுக்கு நல்லபுத்தியே கூறி தம் வயப்படுத்திக்கொள்வான் என்பதையும் நீ மறந்துவிடாதே. எந்த விஷயத்தையுஞ் சமன்செய்து சீர்தூக்கிப்பார்க்கும் ஆற்றலை நின்மனத்திடை வளருமாறு செய். ஊன்றிநோக்கியே ஒருவரோடு வார்த்தையாடப் பழகு. மனம்போனவழியே நேர் என நினையாதே! காலவியற்கைகள் இஃதெனத் தெரிந்து எம்மைக் கொஞ்சமும் அறிந்துகொள்ளாதவர் என்னும் நினது நாவிற்குச் சர்க்கரை கொடுக்கலாம். எம்மையே யாம் பார்க்குந் தன்மையில் யாமிருந்தால் இந்நூல் யாம் வரையப்போகிறதில்லை. அதனை

மறந்துகிடந்த எமக்கு நின்னை ஞாபகப்படுத்தச்செய்ததும் எம்முடைய நல் ஊழேயாம். நாகரீக மார்க்கமும், தத்துவ ஆராய்ச்சியும் நமது நிழலைத் தீண்டினவர்களுக்குக் கூட விளங்காதெனக் காண்கிறேன் என்றாய்! அஃது வாய்மைதான், எம்மோடு இத்துணைதூரம் வியவகாரம் பேசத்தெரிந்த வன்மையோடு கூடிய நினக்கே அஃது விளங்காமற் கிடக்கும்பொழுது சாதாரணமும் ஒருவர்க்கு யாங்ஙனம் விளங்கக்கூடும். ஆனால் அங்ஙனம் கூறச்செய்தது நின்னுடைய நல்லூழேயாம். யாங்ஙனம் எனின் உயர்தர நாகரீக நிலையத்திற்றங்கி நீ! தத்துவ ஆராய்ச்சி செய்யப்புகுந்தால் முடிவான ஒருநிலை ஊழ்வயமென்றே நினக்கு விளங்கும். இதனை எம்மான் மனமார ஞாபகப்படுத்தச் செய்ததேயாமென்க. ஒரு பெரிய தாத்தாவாகவேண்டுமென்பதுதான் அடியேமுடைய முதற்கருத்தாம். பௌராணிகர்கள் கட்டிவைத்திருக்குங் கட்டுக்களை நீ நன்றாகக் கவனித்தல்வேண்டும். அக்கட்டுக்களையவிழ்க்க நின்னாற்கூடுமா? நீயதற்கு முயற்சி செய்கின்றாயா? அங்ஙனமானாலும் நினக்கு ஊழ்வினை இன்னதென்பது மிகத்தெளிவாக விளங்கும் இதுசமயம்வரை நீயவிழ்க்கக்கூட முடியாதவனாய் விளங்குந் தன்மைபற்றி நினக்கு அவ்வூழ் இல்லையென்பதை நீ! நன்கு உணர்ந்துகொள். காலத்துக்கேற்ப நூல்நூற்பதென்றால் அஃது எவர்க்குமே எளிதன்று. ஒருவர்க்கு நல்லூழ்வலியுளதானால் மாத்திரமே மிகவெளிதாகமுடியும். அதனைப்பற்றி முன்னதாகவுங் கூறியிருக்கிறேங் கவனித்துக்கொள். எமதூழ் இங்ஙனமாகத்தான் யாம் இத்தொழிலின்கட் புகுந்தேம். புகுந்தவரை மிகச் செவ்வனே கவனித்துத்தான் வரைந்துவருகிறேம். எல்லாம்வல்ல தெய்வத்தன்மையோடு கூடிய மனுஷ்யவர்க்கமாய்த் தோற்றப்படுகிற ஒவ்வொரு சரீரமும் வரிசைக்கிரமமாய் ஒன்றன்பின் ஒன்றாய் வந்ததுதான் என்பதை நீ! இதுகாறுந் தெரிந்துகொள்ளவில்லையா? அடோ! பைத்தியக்காரரா! ஈங்கு தோற்றப்படுகிற எதுவுமே ஒன்றன்பின் ஒன்றாகவே வந்ததென்பதை நீ! நன்றாகக் கவனித்தல்வேண்டும். உயர்தரமான எந்தப்பாஷைகளும், எந்தத் தத்துவ நூற்களும், எந்தச்சட்டங்களும், எந்த வேதாகமங்களும், எந்தக் கல்விகளுமே ஒன்றைப்பார்த்தொன்றாய் நிகழ்ந்தனவென்பதையும் நீ நன்கு தெளிதல்வேண்டும் எந்தத் தத்துவ சாஸ்திரிகளும், எந்த மகா மேதாவிகளும், வியப்பைத்தரக்கூடிய நின்

போல்வார் சிலரும், ஆய்ந்து நோக்குமிடத்து எவ்விதப் படிப்பாளிகளுமே ஒருவரைப்பார்த்தொருவராய், ஒருவரைக்கேட்டொருவராய்த்தான் வந்தனரென்பதையும் நீ! நன்றாகத் தெளிதல்வேண்டும். சாதாரணமாக எவர்களுக்கும் விளங்காமற்போகக் கட்டிவைத்த செய்யுட்களை மேற்கோளாகக்காட்டி மயங்குகின்றீரே என்றும், அடடா! நம்முடைய கல்வித்திறன் என்னை என்றும் பரிகசிக்கிறாய். நீயும் கொஞ்சம் விளங்காதவன் அன்று. வன்மையுள் வன்மைமடவார் பொறை என்றதை நினைந்தே நின் பரிகசிப்புக்கு மிகக்கடூரமான பதிற்கூறுவதை விடுத்து மிகச் சாதாரணமாகக்கூறி விஷயத்தின்மேற் செல்லுகிறேம். எவர்களுக்கும் விளங்காமற் போகவேண்டுமென்று பண்டைக்காலத்துப் பெரியார் எவரே என்கினும் செய்யுட்கள் நிறைய நூல் நூற்கவில்லை. அஃது இக்கரைக்கு அக்கரை பச்சையென நினைத்து சில நுனிப்புல்லையே மேய்ந்து திரிகின்ற நின்போன்ற மாட்டுவர்க்கத்தார்க்கு விளங்கவில்லையென்றால் இதற்காக யாவர்தான் என்செயக்கூடும்? எம்முடைய கல்வித்திறனாவது இத்துணைச் சிறுநூலொன்றை வரைதற்குதவியதென்பது நினக்கே விளங்கும் அடா! முழுமுட்டாளே! நின்னுடைய கல்வித்திறன் நமது முன்னையவர்களையும், நமது பெரியவர்களையும், நமது வேதாகம புராணேதிகாசங்களையும், நல்ல மார்க்கங்களையும் பழித்தற்கே உதவியதென்பதை நீயே கவனித்துக்கொள்.

"ஆலைப் பலாவாக்கலாமோ அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்கலாமோக் கருணையிலா
மூர்க்கரைச் சீராக்கலாமோ"

என்ற நமதௌவையம்பிராட்டியார் திருவாக்கையுந் தெளி. நினதூழ்வினைப்பயனை நீயேயனுபவிப்பாய். பேரறிவாண்மையை வார்த்துக்கொள்ளத்தெரியாதவ! எம் அருமைத்தம்பியே! யாம் இவ்வளவுதூரம் நின்னை இழித்துக்கூறினேம் என்று வருத்தப்படாதே, என்செய்கிறது? வந்த வியவகாரத்துக்குப் பதிற்சொல்லவேண்டும் ஆவசியகமும் ஏற்படுகிறது. நிற்க, மேல்நாட்டார் ஊழ்வினையைக்கடந்தே எந்தத் தொழில்களையுங் கொண்டுமுடிக்கிறார்

கள் என்கிறாய்! அவர்கள் ஊழ்வினையைக் கடந்தார்கள் என்பதை நீ எப்படிக்கண்டாய்? ஏ! அறிவற்ற முழு மூண்டாசாமே! அபூர்வ சக்திகளமைந்த சில வேலைகளைச் செய்துவிட்டாலவர்களை ஊழைக்கடந்தவர்களென்றோ கூறல்வேண்டும்? அங்ஙனஞ் செய்துமுடிக்கத்தக்க வல்லமையவர்களுக்கு எல்லாம் வல்ல இறைவனால் நியமிக்கப்பட்டதென நீயேன் நினைத்துக் கவனித்தல் கூடாது? அங்ஙனங் கவனித்துக்கூறின் நின் நன்றுவென்னை? அழுகிப்போய்விடுமோ? நம் இந்தியப் பெரியவர்களின் தன்மையை இஃதென நீ! நன்றாகக் கவனித்துப்பார். பரசிவப்பெருமான் பட்டமேபெறினும் அஃதும் அவன்தன் ஊழே என்பதை நீ நன்றாகத் தெளி. ஊழ், வினை, விதி என்னும் வார்த்தைகளை நின் வன்மையால் எடுத்துவிட்டாலும், அவ்வூழ் இல்லாமற் போய்விடமாட்டாதே. அதனை ஏடுத்துவிடுதற்கு எவராலும் முடியாதென்பதையும், எப்பெரிய வல்லாராலும் எடுத்தற்குரிய ஒரு எளிய பொருள் அல்லவென்பதையும் நீ! நன்குணர்தல்வேண்டும். இடையறு முயற்சியைக் கொடுக்கிறதும் அவ்வூழே என்பதையுந் தெளி. ஊழ், ஊழ், என்று ஒருவர் வெறுமெனே வெறும் வாயை மென்னிக்கொண்டு குந்தியிருந்தாலவர் கதி என்னவாகும் என்றும், அவர் மனித வர்க்கத்தாரோடு சார்வாரோ என்றும், அவர் தம் வயிறு நிறைந்துபோய்விடுமோவென்றும், ஊழே அவர்க்கு வந்து படியளக்குமோ என்றும், அந்தோ அவரை பித்தரென்றன்றோ பரிகசிப்பார்களென்றும், நுமது வியாச விஷயங்கள் மிக நன்றாய் இருக்கிறதென்றும் இயற்கையிலேயே எல்லாந் தெரிந்துகொண்டு வந்த ஒரு பெரிய மனிதனைப்போன்று பரிதாபப்படுகின்றாய். சிறுவனே என்றெண்ணி வாயடியடித்துவிடாதிரும் என்றும் சொல்லிக்கொள்கிறாய். மேற்கொண்டுஞ் சில நல்ல புத்திகளுங் கூறுகிறாய். இருக்கட்டும். ஒருவருக்கு ஊழ், ஊழ் என நினைந்து உட்கார்ந்துகொண்டிருத்தற்குரியவூழ் இருக்குமானால் அவர் அங்ஙனமே இருப்பர். அவர்க்கும், "இருக்குமிடந் தேடி யென்பசிக்கே அன்னம், உருக்கமுடன் கொண்டுவந்தாலுண்பேன், பெருக்க அழைத்தாலும் போகேன் அரனே என் தேகம் இளைத்தாலும் போகேன் இனி" என்று குந்திக்கொண்டிருந்த பட்டினத்துஸ்வாமியவர்களுக்குப் பொற்கும்பாவிற் கொணர்ந்து

அமுதூட்டிய எமதன்னையான பராசக்தியே கொணர்ந்தூட்டுவாள் என்பதை அடே! முழுமடையனே நன்றாகவுணர். அடே! கல்லாது நீண்ட கயவனே! அவர்கதி தேவகதியேயாகும் என்பதையுந்தெளி. வானுலக வர்க்கத்தாரே என்பதையும் நீ! மறந்துவிடாதே! அவர் தம் வயிறு நம்போன்று நரகத்தைக்காணாமல் அமுதத்தையே காணும். அவர்தம் ஊழே அதனையளிக்கும். சுந்தரமூர்த்தி ஸ்வாமிகளைத் தடுத்தாளவந்த பித்தரேயாவர். எமது வியாசவிஷயங்களெல்லாம் மிக அற்புதமான வேதவாக்குகளினும் மிக உயர்ந்தனவாகவே ஆராய்ச்சி செய்கிறவர்களுக்கு விளங்கும். அடே! எமதருமைச் சகோதரனே! நினக்கு அவ்வூழ் இருப்பினும், இல்லாதொழியினும் எங்கே! சற்றுநேரம் அங்ஙனம் குந்திக்கொண்டிரு பார்ப்போம். எம்மை வாயடியடித்துவிடாதிருமெனக் கூறினாயே! நீயடித்த வாயடியன்றோ மிகப் பயங்காப்படுத்தியது. நினக்குஅவ்வூழ் இருக்குமானால் நீ இப்பொழுதே மகா சாந்தகுணசீலனாய் எவர்க்குந் தெற்றென விளங்கமாட்டாயோ? ஆன்றோர் வாக்குகளுக்கு அனர்த்தம் பேசுவாயோ? ஆழ்ந்த யோசனையின்றி வார்த்தையாட வருவாயோ? பழையோரைப்பழித்துப் பாவியாவாயோ? ஆம்! ஐயா! தற்கால நாகரீகத்தால் கொஞ்சம் அதிகப்படித்தார் போன்று திரிகிற சிலர் கூட்டரவாலே நுமதிடம் சில வார்த்தைகளைச் சொல்லவுந்தேன். நீங்கள் பெருவாரியாகப் பேசிவிட்டீர்கள். என்னுடையவூழே நுங்களை இவ்வளவுதூரம் பேசச்சொல்லிற்று என நினைக்கிறேன். நியாயக்கட்சியை நிலைநாட்டுவது சாதாரண எவர்களுக்குஞ் சாத்தியமேயாகும். என்றாலும்! நீங்கள் சொல்லியதைக்குறித்து மிகவுஞ் சந்தோஷப்படுகிறேன். இதற்கு மேலும் நீங்கள் என்னைக்குறித்தே கவனிப்பீர்களாயின் நீங்கள் எடுத்துக்கொண்ட இவ்விஷயம் மிக விரிவாகும். நுங்களின் மனமானது என் மூலமாய்க் கொஞ்சம் புண்பட்டனபோலுங் காணப்படுகிறது. அங்ஙனம் வைத்துக்கொள்ளக்கூடாது "சிறியோர் செய்த சிறுபிழையெல்லாம், பெரியோர் ஆயிற் பொறுப்பது கடனே" என்ற அதிவீரன் வாக்கு நுங்களுக்குத் தெரியாததில்லை. என் மீது நிகழ்ந்த மனவருத்தம் ஒருங்கையும் மன்னித்துக்கொள்ளுங்கள். "இன்னாச்செய்தாரை யொறுத்தலவர் நாண, நன்னயஞ் செய்துவிடல்" என்ற தேவர் திருக்குறளை நீங்கள் தெரியாதவர்

களுமன்று, ஐயா! நான் போய்வருகிறேன் தங்கள் விஷயத்தின்மேற் செல்லுங்கள்.

IV. இவ்வூழானது எவர்கள்பாற்றும், எந்தக்காலத்தும் ஒரேதன்மையாக நிகழாதென்பது சாதாரணமாக எவர்களும் கண்ட வாய்மையேயாம். பொருளுடைமையும், பொருளின்மையும், இவைகளாலுண்டாம் இன்பதுன்பங்களும் ஒரே இடத்தில் நிற்பனவல்லவாம். பதினாறு கலைகளும் நிறைந்த பூரணச்சந்திரனால் விரிக்கப்படுகிற ஒள்ளிய கிரணங்கள் பொருந்தும் முச்சகங்களையுஞ் செங்கோல் நடாத்தும் வன்மைத்தன்மை எம்முடையதே எனத் திக்குவிஜயம்செய்து பல்லக்குகளின்மீதும், இரதங்களின்மீதும், குஞ்சரங்களின்மீதும், நான்கு புரவிகள் பூட்டிய சகடங்களின்மீதும், ஆகாயவிமானங்களின்மீதும், சவ்வாரிசெய்தும், அளவுகடந்த இன்பாதி போகங்களைத் துய்த்துக்கொண்டிருந்தும் வணங்காமுடி மன்னர்களாய் மிகவாழ்ந்துவருவோராகிய மன்மக்கள் ஒருக்கால் நடத்தலான் மெலிந்து, வாடிவதங்கி ஒரு சிறு கிராமத்தைச் சேர்தலுங்கூடும். உயர்வும், ஐசுவரியமும், மானமும் உடையவர்கள் தருமச்சோறு தரும் சத்திரங்களை யடைந்தாலும் அடைவார்கள். அம்மோ! தருமத்தைக்கருதி பிச்சைகொடுங்களென வோலமிட்டு யாசிப்பவர் ஒருக்கால் அரசுக்கேற்ற பல அங்கங்களோடு கூடியிருந்து அரசாட்சி செய்யினுஞ் செய்வர். மலையவ்வளவு மிக்க தனத்தைப்பெற்றவர்கள் அன்றைத்தினமே அப்பொருள்களை இழப்பினும் இழப்பர். ஏழு அடுக்குகளையுடைய மாளிகைகள் அடியோடே சாய்ந்து நொறுங்கி கழுதைகள் மேய்கின்ற பாழ்நிலங்களானாலும் ஆகும். மணக்கோலத்தைப்பூண்டவோர் இளமகளிர் அந்த மணப்பந்தலிலேயே பிணக்கோலத்தைப் பூண்டு தமது கணவரைத் தழுவிக்கொண்டு முன் மணக்கோலத்துக்காகக் கட்டிக்கொண்டிருந்த கோடிச்சேலையையே அப்பிணக்கோலத்துக்கும் உதவியதாகக்கொண்டு சீவிமுடித்த தலைமயிரை விரித்துப்போட்டுப் புலம்பினும் புலம்புவர். மாடுகளும், கழுதைகளும் மேய்ந்துகொண்டிருந்த அந்தப் பாழ்நிலமானது ஒருக்கால் பொன் வளையல்களையணிந்த மாதர்களும், புருடர்களும் நெருங்கி நெல்லினது அம்பாரங்களையுடைய பெரிய நகரமானாலும் ஆகும்.

தேயங்களெல்லாம் வனாந்தரமாக மாறினும் மாறும் வனாந்தரங்களெல்லாம் தேயங்களாக மாறினும் மாறும். தற்காலம் நடைபெறும் ஐரோப்பாக்கண்டத்து யுத்தமே ஊழ் நிலையின் வன்மை இத்தகையதென்பதைத் தெளிவாகக்காட்டும். எத்துணையோ சிறந்த தத்துவசாஸ்திரிகளின் சமாதான மார்க்கங்களை எல்லாங் கடந்து இயலப்படுகிறதென்பதும் மிக வெளிப்படையேயாம். நாம் நினைத்ததுபோன்று முடிவுபெறச்செய்யலாம் என்ற சுத்தவீரர்களெல்லாம் இப்பொழுது பொய்த்தூக்கந் தூங்க ஆரம்பஞ்செய்துகொண்டார்கள்.

V. ஒன்றன்மேல் ஒன்றாக அடுக்கப்பெற்ற எல்லாவுலகங்களும் ஊழ்நிலை வயத்ததே என்பதும் வாய்மையேயாம். ஊழ்நிலை மார்க்கமாகவே எவர்களும் இயங்கப்படுகிறார்களாமென்க. அண்டம் பெரிதாகவும், பிண்டஞ்சிறிதாகவும் விளங்கப்படுகிறதையுங் காண்க. பண்டைக்காலத்து நமது பெரியவர்களாலே வரைந்து வைக்கப்பட்டிருக்கிற ஊழ் விஷயங்களொருங்கும் நிச்சயமேயாமென்க. ஊழ் என்றுசொல்லி யுட்கார்ந்துகொண்டிருக்கும் ஒருவர் மகா வல்லுநரேயாமென்க. அவர்தம் மனமென்னுங் குரங்கை பற்காட்டவொட்டாமற் கட்டினராமென்க. தோற்றப்படுகிற ஐந்து பெரிய பூதங்களும் ஊழ் வயத்ததேயாமென்க. ஊழைப்பற்றிச் சிந்தியாத சிலர்க்கும் அஃது அவர் தம் ஊழேயாம். நவக்கிரகங்கள், நக்ஷத்திரங்கள் முதலியனவும் ஊழ்நிலை வயத்ததேயாமென்க. எல்லாப்படிப்பிலும் இதனை எண்ணி நோக்குவார்க்கு இஃது மிகத்தெளிவாக விளங்குமாமென்க. அல்லார் அறியாராமென்க. ஊழ் அல்லாதவொருகாலத்திற் பிரளயம் ஏற்படாதாமென்க. ஆகவே தோற்றப்படுகிற மூவுலகங்களும், ஐந்து பெரிய மகாபூதங்களும், பகலவன், மதியம் முதலான உபகரணங்களும் ஊழ்நிலைவழியே இயங்கப்படுகிறதென்பதை எந்தச் சகோதர சகோதரிகளும் மறத்தல்கூடாது.

"ஆலமது நல்குமவ ராரமுதம் உண்ணும்
பாலுடையாரவது படிக்கண் உளதாமோ
சாலு மதுரக்கனிகள் தாம் நுகருவாரோ
ஞாலமிசை எட்டிமரம் நட்டவர்கள்தாமே"

எல்லாம் வல்ல இறைவன் திருவருள்புரிவாராக. சுபம்! சுபம்!! சுபம்!!!

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ நாட்டுக்கோட்டை வைசிய மகாசமூகத்தின் நறும்புகழ்நிலைகள்.

கடவுள் வாழ்த்தும் நூன்முகமும்.

“அண்டப்பகுதியின் உண்டைப்பிறக்கம்
அளப்பருந்தன்மை வளப்பெருங்காட்சி
ஒன்றனுக்கொன்று நின்றெழில்பகரில்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன்னணுப்புரையச்
சிறியவாகப் பெரியோன் தெரியின்
வேதியன் தொகையொடு மாலவன் மிகுதியும்
தோற்றமுஞ் சிறப்பும் ஈற்றொடு புணரிய
மாப்பேரூழியும் நீக்கமும் நிலையும்
சூக்கமொடு தூலத்துச் சூறைமாருதத்து எறியதுவளியின்
கொட்கப்பெயர்க்கும் குழகன் முழுவதும்
படைப்போற் படைக்கும் பழையோன் படைத்தவை
காப்போற் காக்கும் கடவுள் காப்பவை
கரப்போன் கரப்பவை கருதாக்
கருத்துடைக்கடவுள் திருத்தகும்
அறுவகைச்சமயத்து அறுவகையோர்க்கும்
வீடுபேறாய் நின்ற விண்ணோர் பகுதி
கீடம்புரையும் கிழவன் நாள்தொறும்
அருக்கனிற்சோதி அமைத்தோன் திருத்தகும்
மதியிற்றண்மை வைத்தோன் திண்திறல்
தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானிற் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் என்றென்று
எனைப்பலகோடி எனைப்பல பிறவும்
அனைத்தனைத்து அவ்வயின் அடைத்தோன் அஃதான்று
முன்னோன் காண்க முழுதோன் காண்க
தன்னேரில்லோன் தானே காண்க
ஏனத்தொல் எயிறு அணிந்தோன் காண்க
கானப்புலியுரி அரையோன் காண்க
நீற்றோன் காண்க நினைதொறும் நினைதொறும்
ஆற்றேன் காண்க அந்தோ கெடுவேன்
இன்னிசை வீணையில் இசைந்தோன் காண்க
அன்னதொன்றவ்வயின் அறிந்தோன் காண்க
பரமன் காண்க பழையோன் காண்க
பிரமன் மால் காணாப் பெரியோன் காண்க
அற்புதன் காண்க அநேகன் காண்க
சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க
சித்தமுஞ் செல்லா சேட்சியன் காண்க
பத்திவலையிற் படுவோன் காண்க
ஒருவன் என்னும் ஒருவன் காண்க
விரிபொழில் முழுதாய் விரிந்தோன் காண்க
அணுத்தருந் தன்மையில் ஐயோன் காண்க
இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க
அரியதில் அரிய அரியோன் காண்க
மருவி யெப்பொருளும் வளர்ப்போன் காண்க
நூல் உணர்வு உணரா நுண்ணியோன் காண்க
மேலொடு கீழாய் விரிந்தோன் காண்க
அந்தமுமாதியும் அகன்றோன் காண்க
பந்தமும் வீடும் படைப்போன் காண்க
நிற்பதுஞ் செல்வதும் ஆனோன் காண்க
கற்பமும் இறுதியுங் கண்டோன் காண்க
யாவரும் பெறவுறும் ஈசன் காண்க
தேவரும் அறியாச் சிவனே காண்க

பெண் ஆண் அலி எனும் பெற்றியன் காண்க
கண்ணால் யானுங் கண்டேன் காண்க
அருள் நனி சுரக்கும் அமுதே காண்க
கருணையின் பெருமை கண்டேன் காண்க
புவனியிற் சேவடி தீண்டினன் காண்க
சிவனென யானுந் தேறினன் காண்க
அவனெனை ஆட்கொண்டு அருளினன் காண்க
குவளைக்கண்ணிக் கூறன் காண்க
அவளுந் தானும் உடனே காண்க
கருமாமுகிலிற் றோன்றி
திருவார் பெருந்துறை வரையிலேறித்
திருத்தகும் இன் ஒளி திசைதிசை விரிய
ஐம்புலப்பந்தனை வாள் அரவு இரிய
வெந்துயர்க்கோடை மாத்தலை கரப்ப
நீடெழில் தோன்றி வாளொளி மிளிர
எந்தம் பிறவியிற் கோபம் மிகுத்து
முரசெறிந்து மாப்பெருங் கருணையின் முழங்கிப்
பூப்புரையஞ்சலி காந்தள் காட்ட
எஞ்சா இன் அருள் நுண் துளிகொள்ள
செஞ்சுடர் வெள்ளம் திசைதிசை தெவிட்ட வரையுறக்
கேதக்குட்டம் கையுறவோங்கி
இருமுச்சமயத்து ஒரு பேய்த்தேரினை
நீர்நசை தரவரும் நெடுங்கண்மான் கணம்
தவப்பெரு வாயிடைப் பருகித் தளர்வொடும்
அவப்பெருந்தாபம் நீங்காதசைந்தன
ஆயிடை வானப்பேர் யாற்று அகவயின்
பாய்ந்தெழுந்து இன்பப் பெருஞ்சுழி கொழித்துச்
சுழித்தெம் பந்தம் மாக்கரை பொருது அலைத்திடித்து
ஊழ் ஊழ் ஓங்கிய நங்கள்
இருவினை மாமரம் வேர்பறித்தெழுந்து
உருவ அருள் நீர் ஓட்டா அருவரைச்
சந்தின் வான் சிறை கட்டி மட்டவிழ்
வெறிமலர்க்குளவாய் கோலி நிறைஅகில்

மாப்புகைக் கரைசேர் வண்டுடைக் குளத்தின்
மீக்கொள மேன்மேன் மகிழ்தலின் நோக்கி
அருச்சனை வயலுள் அன்பு வித்திட்டுத்
தொண்ட உழவர் ஆரத்தந்த
அண்டத்துஅரும் பெறன் மேகன் வாழ்க
கரும்பணக் கச்சைக் கடவுள் வாழ்க
அருந்தவர்க்கருளும் ஆதி வாழ்க
அச்சந் தவிர்த்த சேவகன் வாழ்க
நிச்சலும் ஈர்த்தாட் கொள்வோன் வாழ்க
சூழ் இருந்துன்பந் துடைப்போன் வாழ்க
எய்தினர்க்கு ஆரமு தளிப்போன் வாழ்க
கூரிருட் கூத்தொடு குனிப்போன் வாழ்க
பேரமைத் தோளி காதலன் வாழ்க
ஏதிலர்க்கு ஏதில் எம்மிறைவன் வாழ்க
காதலர்க்கு எய்ப்பினில் வைப்பு வாழ்க
நச்சரவு ஆட்டிய நம்பன் போற்றி
பிச்செமை ஏற்றிய பெரியோன் போற்றி
நீற்றொடு தோற்ற வல்லோன் போற்றி நாற்றிசை
நடப்பன நடாஅய் கிடப்பன கிடாஅய் நிற்பன நிறீஇச்
சொற்பதங் கடந்த தொல்லோன்
உள்ளத்துணர்ச்சியிற் கொள்ளவும்படாஅன்
கண்முதற் புலனாற் காட்சியும் இல்லோன்
விண்முதற் பூதம் வெளிப்பட வகுத்தோன்
பூவில் நாற்றம் போன்றுயர்ந் தெங்கும்
ஒழிவற நிறைந்து மேவிய பெருமை
இன்று எனக்கு எளிவந்தருளி
அழிதருமாக்கை ஒழியச்செய்த ஒண்பொருள்
இன்று எனக்கு எளிவந்து இருந்தனன்போற்றி
அளிதருமாக்கை செய்தோன் போற்றி
ஊற்றிருந்துள்ளங் களிப்போன் போற்றி
ஆற்றாவின்பம் அலர்ந்து அலைசெய்யப்
போற்றாவாக்கையைப் பொறுத்தல் புகலேன்
மரகதக்குவாஅன் மாமணிப்பிறக்கம்

மின்னொளிகொண்ட பொன்னொளி திகழத்
திசைமுகன் சென்று தேடினர்க்கொளித்தும்
முறையுளி போற்றி முயன்றவர்க்கொளித்தும்
ஒற்றுமைகொண்டு நோக்கும் உள்ளத்து
உற்றவர் வருந்த உரைப்பவர்க்கொளித்தும்
மறைத்திறம் நோக்கி வருந்தினர்க்கொளித்தும்
இத்தந்திரத்திற் காண்டுமென் றிருந்தோர்க்கு
அத்தந்திரத்தின் அவ்வயின் ஒளித்தும்
முனிவறநோக்கி நனிவரக்கெளவி
ஆணெனத்தோன்றி அலியெனப்பெயர்ந்து
வாணுதற் பெண் என ஒளித்துஞ் சேண்வயின்
ஐம்புலன் செலவிடுத்து அருவரைதொறும்போய்
துற்றவை துறந்த வெற்றுயிராக்கை
அருந்தவர் காட்சியுள் திருந்தவொளித்தும்
ஒன்றுண்டில்லை என்றறிவொளித்தும்
பண்டே பயில்தொறும் இன்றே பயில்தொறும்
ஒளிக்குஞ் சோரனைக் கண்டனம்
ஆர்மின் ஆர்மின் நாள்மலர்ப்பிணையலின் தாள்தளையிடுமின்
சுற்றுமின் சூழ்மின் தொடர்மின் விடேன்முன்
பற்றுமின் என்றவர் பற்று முற்றொளித்தும்
தன்னேரில்லோன் தானேயான தன்மை
என்னேரனையோர் கேட்கவந்தியம்பி
அறைகூவி ஆட்கொண்டருளி.
மறையோர்கோலங் காட்டியருளலும்
உளையாவன்பு என்புருகவோலமிட்டு
அலைகடல் திரையின் ஆர்த்தார்த்தோங்கித்
தலைதடுமாறா வீழ்ந்து புரண்டலறிப்
பித்தரின் மயங்கி மத்தரின் மதித்து
நாட்டவர் மருளவும் கேட்டவர் வியப்பவும்
கடக்களிறு ஏற்றாத் தடப்பெரு மதத்தின்
ஆற்றேனாக அவயவம் சுவைதரு
கோல் தேன் கொண்டு செய்தனன்
ஏற்றார் மூதூர் எழில் நகையெரியின்

வீழ்வித்து ஆங்கு அன்று
அருட்பெருந்தீயின் அடியோம் அடிக்குடில்
ஒருத்தரும் வாழாமை ஒடுக்கினன்
தடக்கையின் நெல்லிக் கனி எனக்காயினன்
சொல்லுவதறியேன் வாழிமுறையோ
தரியேன் நாயேன் தானெனைச்செய்தது
தெரியேன் ஆவா செத்தேன் அடியேற்கு
அருளியதறியேன் பருகியும் ஆரேன்
விழுங்கியும் ஒல்லகில்லேன்
செழுந்தண் பாற்கடல் திரைபுரைவித்து
உவாக்கடல் நள்ளுநீர் உள்ளகந் ததும்ப
வாக்கிறந்தமுதம் மயிர்க்கால்தோறும்
தேக்கிடச்செய்தனன் கொடியேன் ஊன் தழை
குரம்பைதோறும் நாயுடலகத்தே
குரம்பைகொண்டு இன்தேன் பாய்த்தி நிரம்பிய
அற்புதமான அமுததாரைகள்
எற்புத்துளைதொறும் ஏற்றினன் உருகுவது
உள்ளங்கொண்டோருருச் செய்தாங்கெனக்கு
அள்ளூறாக்கை யமைத்தனன் ஒள்ளிய
கன்னற் கனிதேர் களிறெனக் கடைமுறை
என்னையு மிருப்ப தாக்கினன் என்னில்
கருணை வான் தேன் கலக்க
அருளொடு பராவமுதாக்கினன்
பிரமன் மாலறியாப் பெற்றியோனே''

எனக்கூறிய நமது சைவசமயக்குரவர் பெருமானாகிய ஸ்ரீ மாணிக்கவாசக ஸ்வாமிகளின் மரைமலர்போன்ற இரண்டு திருத்தாள்களையும் அடியேம் சிரமேற்கொண்டு இங்ஙனம்,

''பஞ்சிதன் சொல்லாப் பனுவலிழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா—எஞ்சாத
கையே வாயாகக் கதிரே மதியாக
மையிலா நூன்முடியுமாறு''

என்பதற்கிணங்கி "ஸ்ரீநாட்டுக்கோட்டை வைசிய மகா சமுகத்தின் நறும்புகழ்நிலைகள்" என்னும் நன்னூலை முடிக்கத் தொடங்கி அச்சமுகத்தைச்சார்ந்த வொருவரல்லாத யாங் கூறுவதற்குரிய சில காரணங்களை முதன்முதலாக வரையத்தொடங்குவாம். அஃதாவது, எவரேனும் ஒருவர்மீது பொறாமைகொண்டேனும், ஒரு பெரிய தனவந்தரிடம் சில தொகைளைப் பெற்றுக்கொண்டேனும், ஒரு பெரியார் வேண்டுகோளுக்கிணங்கியேனும், எற்றுனுந்தாழ்ந்த சிற்றறிவுடையேமாகிய எம்முடைய கல்வித்திறத்தைக் காட்டவேண்டுமென்றேனும் வசையப்புகுந்ததாக இந்நூலைப் பார்வையிடும் இச்சமுகத்தைச்சார்ந்த எந்தச் சகோதர சகோதரிகளே எனினும், ஏனையவொரு வகுப்பைச்சார்ந்த எந்தச் சகோதர சகோதரிகளே எனினும் நினைத்தல்கூடாது. பின்னர் யாது காரணமாமோவெனின்? எம் அருமைச் சகோதரர்காள்! எம்முடைய இருபஃதாவது ஆண்டிலிருந்து இற்றையஞான்று (அஃதாவது முப்பஃதொன்பான் ஆண்டுகள்) வரை நமது ஏசியாக் கண்டத்தின் ஒருபுறமான நம் இந்தியா, பர்மா, இலங்கை முதலிய தேசயாத்திரைவாசியாகவே இருந்துவருகிறேம். இதில் நின்றும் எமக்குச் சொந்தமான செந்தமிழ்ப்பாஷையொன்றன்றியில் ஏனையவொரு எந்தப்பாஷையும் எமக்குத் தெரியவும் வராது. மேலும் மிகக்கவனமாக எம்முடைய மனமானது ஏனைய பலபாஷைகளிடத்துஞ் சென்று மிகப்பூரணமாக வருமாமென்கப் பழகிக்கொள்ளவும் இல்லை. ஆகலின் யாம் சென்றிருந்த ஒவ்வொரு நாடுநகரங்களிலும் எமக்கு இப்பெரிய சமுகத்தைச்சார்ந்த பல பேரறிவாளர்களின் கூட்டுறவும், சிநேகமும், ஆதரவுமே கிடைத்தன. ஆங்காங்கு நிகழ்ந்த எல்லாச் சம்பவங்களையும், எம்மை இன்னரென்று கூடத் தெரிந்துகொள்ளாத முகலினும், எம்முடைய எவ்வித வேண்டுகோளுமில்லாத வொருகாலத்திலும் இப்பெரிய சமுகத்தைச் சார்ந்தார் சிலரின் பேருபசாரங்களையும், மிக அருமையான முகமனேடு கூடியவர்கள் விசாரணை செய்தவோர் பேருந்தன்மைகளையும்பற்றி ஈங்கு ஒருங்கே வரைதலென்றால் அஃதொரு பெருங்கடலைப்போற் பெருகுமாகலின் அவைகளின் சில முக்கிய விஷயங்களை மட்டுமே மிகச்சுருக்கமாகக் கூறிமுடிப்போம். அஃதாவது எம்முடைய இருபஃதாவது ஆண்டில் யாம் காந்தருவ விவாகஞ்

செய்துகொண்ட மனையாளோடு எங்களின் இனபந்துக்கள் ஒருவருக்குந் தாக்கலின்றி அயல்நாடு செல்லுவதற்கு யோசித்து இரங்கோன் போவதுதான் மிக உத்தமமெனத் தீர்மானித்து சுமார் ஆயிர ரூபாய் பெறுமதியான ஆடையாபரணதிகளோடு இரங்கோன் நமது பிள்ளையார்கோவிலிருக்கும் 24-ஆம் நம்பர் (கல்லி) தெருப் போய்ச்சேர்ந்தோம். 25 ரூபாய் வாடைகையில் ஒரு மேல்வீட்டிற் குடியிருப்பும் வைத்துக்கொண்டோம். நாளாரம்பத்தில் ஒவ்வொரு நகைகளாக விற்றுச் செலவுசெய்துகொண்டு வந்ததில் ஒரு 6, 7, மாஸத்துக்குள் ரூபாய் ஆறு நூறுக்குமேல் நகைகள் காலியாய்விட்டன. அந்தத் தருவாயில் எமது அம்மனையாளின் தந்தை எந்தவிதமாயோ துப்பறிந்து அவ்விடம் வந்து சார்ந்து தாதருமைக்குழந்தையைக் கட்டிக்கொண்டு கோவென்று கதறி நிலத்தில் வீழ்ந்து புலம்பினர். அதனைக்கண்ட யாம் எம்முடைய அறியாத்தன்மையையும், எவர்களும் சீச்சீயென இகழத்தகுந்த இயற்கையையும் நினைந்து, மனமிறக்க நாணி ஏ கண்மணி நாகம்மாள்! நீ! இனி என்னைவிட்டுப்பிரிந்து, நின் தந்தையோடுகூடச் செல்லுவதுதான் மிகவும் பொருத்தமே என நன்மதி பல கூறியும் அவளின் சம்மதியின்றி அவளின் தந்தையின் பூரண சம்மதியோடு அவர்களில் நின்றும் பிரிந்து கையில் ஓரைக்காசுமின்றி இன்னதுதான் செய்வோம் என்பன ஒன்றுந் தோன்றாமல் இரங்கோனுக்கு ஆறுவது மயிலிலுள்ள கம்பை போய்ச்சார்ந்து நமது இப்பெரிய சமுகத்தின் நகரவிடுதியில் உட்கார்ந்தேம். இரண்டு நாளாயிற்று. "உண்டானபோழ்து உடைந்துழிக்காகம்போல், தொண்டாயிரவர் தொகுபவே, வண்டாய், திரிதருங்காலத்துத் தீதிலிரோவென்பார், ஒருவரும் இவ்வுலகத்தில்." என்பதற்கிணங்க உண்டீரோவெனக் கேட்பார் ஒருவரையும் ஆங்கு கண்டிலேம். அப்பொழுதுதான் எல்லாம் வல்ல நமது ஷண்முகநாதனை மிக நன்றாகத் தியானித்துக் கொண்டிருந்தேம். மூன்றாவது நாள் சோமவாரம். அன்று காலை $8\frac{1}{2}$-மணிக்கு இரட்டைப்புரவிகள் பூட்டிய நான்கு சக்கர வண்டியில் ஸ்வாமி தரிசனத்திற்காக ஒரு செட்டியாரவர்கள் வந்தார்கள். அவர்கள்தான் சா. அ. வீரப்ப செட்டியாரவர்களாம். அவர்கள் வந்ததும் நகரவிடுதியில் இறங்கினவுடன் உள்ளே சென்றதும் திண்ணையில் இருக்கிற ஒருவர் யாரென ஆங்குடைத்தான

பண்டாரமிடம் கேட்க அப்பண்டாரம் அவர் எங்கோ! திருநெல்வேலியாம், சைவராம். இரண்டு மூன்று நாளாக இங்ஙனமேதான் இருக்கிறாரெனவும் கேட்டுக்கொண்ட கொஞ்சநேரம் கழித்து வெளியே வந்தவர்கள் ஏன்? ஐயா! நீங்கள் எந்தவூர்? சாப்பிடாதவர்கள்போற் காணப்படுகிறதே? கோவிற்பிரசாதம் தரச்சொல்லுகிறோம் சாப்பிடுங்கள் என மிக உள்ளன்போடுங் கூறினார்கள்.

"பொற்கலத்துப்பெய்த புலியுகிர்வான் புழுக்க
லக்காரம் பாலோடமார்கைத்துண்டலின்
உப்பிலிப்புற்கை யுயிர்போற் கிளைஞர்மாட்
டெக்கலத்தானுமினிது" என்றும்,

"அன்பு நாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையோடு
ஐந்து சால் பூன்றிய தூண்" என்றும்,

"குணநலஞ் சான்றோர் நலனே பிறநலம்
எந்நலத்துள்ளதூஉமன்று" என்றும்,

வந்த வேதவாக்குகள் எம்முடைய அநுபவத்தில் அங்ஙனந்தான் பயனுடைத்தாயிற்று. அச்செட்டியாரவர்கள் அங்ஙனங்கூறிய இன்மொழிகள் யாவும் எம்முடைய காதன் மனையாண் மிகச்சாதனமாக எமக்குக்கூறும் பல நன்மொழிகளினுஞ் சிறந்த இன்மொழிகளாகவே தெரிந்தன. ஏதோ ஒரு வீரத்தான் மறந்து பிரிந்த மனையாளை மீண்டும் அங்ஙனம் நினைக்க நேர்ந்தன. அங்ஙனங் கூறி முடியவே அக்கம்பை ஸ்ரீ பாலசுப்பிரமணியஸ்வாமிகோவில் அர்ச்சகரான ஒற்றைக்கண்ணிற் பூவிழுந்த நமது பிள்ளையார்பட்டி நாராயணபிள்ளை என்பவர் அக்காரம் பாலோடுகூட மிகப்பாகமாக அமைத்து ஸ்வாமிக்கு நைவேதனஞ்செய்த பஞ்சாமிர்த முதலிய சில தேவவுணவுகளை ஒரு வெள்ளிக்கமலத்திற்கொணர்ந்து செட்டியாரவர்களின் உத்தரவின்பேரில் எம்மையும் ஒரு மனிதனைப் பாவித்து எம் முன்னேவைத்து ஐயா! உண்ணுங்களென நன்னீரும் ஒரு செம்பு நிறையக்கொணர்ந்து தந்தார். எல்லாம் வல்ல நமது ஷண்முகநாதன் திருவருள் இஃதே எனவுணர்ந்து உண்டுகளித்தேம். அன்று மாலை செட்டியாரவர்கள் இரங்கோனுக்குப்போக

வண்டியில் ஏறும்பொழுது எம்மையழைப்பித்து எந்தவிதமான விசாரணையும் இன்றி நீங்கள் இங்கு இருக்கும் நாள்வரை மிக வசதியான வுணவுதருமாறு நாராயண பிள்ளையிடஞ் சொல்லியிருக்கிறேன். வேறு எங்கும் போகவேண்டாம். சௌகரியமாக இக்கம்பையிற்றானே இருங்களெனக்கூறி ஏதேனுஞ் செலவுவந்தால் இருக்கட்டும் எனப் பத்து ரூபாய் கரன்ஸி நோட்டையும் எமதிடம் தந்துவிட்டுச்சென்றார்கள். அன்றுமுதல் ஒரு வருஷம் வரை நமது தேவபெருமான் திருக்குறளைப் பாடஞ்செய்துகொண்டு அங்ஙனமே இருந்தேம் பின்னர் ஒருநாள் நகரவிடுதியிலிருந்து தப்புந்தவறுமாக இரண்டொரு தேவாரப்பாக்களைப் பாடிக்கொண்டிருந்தேம். அதுசமயம் ஆங்கு ஒரு செட்டியாரவர்கள் வந்தார்கள். அவர்கள்தான் தாக்களா அழகப்ப செட்டியார் என்பவர்கள். அவர்கள் வந்து சிறிது நேரம் கேட்டுக்கொண்டிருந்தபின்னர் நீங்கள் யார்? ஈங்கு யாது செய்துகொண்டிருக்கிறீர்கள் எனக் கேட்டார்கள். அதற்கு யாம் எமக்கு யாதொருவிதமான சோலியும் ஈங்கில்லை. எமது சொந்தவூர் திருநெல்வேலியைச்சார்ந்த ஓர் சிற்றூர். வருணத்திற் சைவ வேளாளன். எமது பெயர் ப. சொ. ஆண்டியப்பன். தற்காலம் எமக்கு வேண்டிய ஆகாராதிகண் முதலிய செலவுகளுக்கெல்லாம் இன்ன செட்டியாரவர்கள் இவடத்தில் தக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதுசமயம் ஆகாராதிகளைத்தவிர வேறு ஒன்றுந் தேவையில்லை என்றேம். அதற்கு அச்செட்டியாரவர்கள் நுங்கள் ஊரில் நுங்களுக்குரியார் ஒருவருமில்லையோ? வெனக்கேட்டார்கள். அதற்கு யாம் தாயாரும், சகோதரர்களும் இருக்கிறார்கள் அவர்களைப்பற்றியுங் கவலை எனக்கில்லை என்றேம். அங்ஙனமானால் எம்முடன் தாக்களாவிற்கு வரலாமோ? எங்கிருந்தாலும் நுங்களுக்குச் சாப்பாடுதானே தேவை. நாம் நாளைக்காலையிற் போகிறேம் எம்முடன் வாருங்கள். அங்குஞ் சிலகாலம் மிகச் சௌகரியத்தோடு கழிக்கலாம் என்றார்கள். அங்ஙனமானால் இரங்கோனில் செட்டியாரவர்களிடம் கேட்டுக்கொண்டு வருகிறேம் எனக்கூறி அச்செட்டியாரவர்களிடமுங் கேட்டுக்கொண்டு தாக்களாவிற்கு அச்செட்டியாரவர்களோடு சென்றேம். அங்கு போய்ச்சேர்ந்ததும் சரீர சௌக்கியத்திற்கு வேண்டும் பலவித ஏற்பாடுகளும் மிகச்செவ்வையாய்ச் செய்து

வைத்தார்கள். அங்கும் ஒரு வருஷம் வரை வாசஞ்செய்தேம். ஆங்கு வசித்த நாட்கள் ஒருங்கும் மிக நன்னாட்களாகவே கழிந்தன. யாங்ஙனமெனின்? திருக்குறள், நாலடி முதலிய சில நீதிநூற்களை நெட்டுருச்செய்துகொண்டதுடன், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், இராமாயணம், மகாபாரதம் முதலிய புராணேதிகாசங்களையும் வசனரூபமாகவுள்ள புத்தகங்களைத்தந்து நாள்தோறும் ஒவ்வொரு மணிக்கூறு படித்துவரும்படியுஞ் செய்தார்கள். அங்ஙனம் நிகழ்ந்துவந்த ஒருநாள் இவ்வளவு பெரிய நூற்களையெல்லாம் வாசிக்கிற எமக்கு இலக்கணமென்பது கொஞ்சமுந் தெரியாது, அங்ஙனந் தெரிந்துகொள்ளாமலிருக்கிறது, அஃது எமக்கு ஒரு பெருங்குறையாகக் காணப்படுகிறதென்றேம். அதற்குச் செவிகொடுத்திருந்த அச்செட்டியாரவர்களும் ஆம்! ஆம்! அஃது வாய்மைதான் "எழுத்தறியார் கல்விப்பெருக்கமனைத்தும் எழுத்தறிவார் காணின் நிலையாவாம்" என நமது நன்னெறியினுங் கூறப்படுகிறதல்லவா, எழுத்துச், சொற், பொருள், யாப்பு, அணி என்னும் ஐம்பேரிலக்கணங்களையும் தெரிந்துகொள்வது ஒருவாறு மிக அசாத்தியமே எனினும், "எழுத்துஞ் சொல்லும்" உளதான நன்னூலை மட்டுமாவது மிகச்செவ்வனே தெரிந்தார்மாட்டு நீங்கள் ஆவசியமாகப் பாடங்கேட்டுக்கொள்ளல் வேண்டுமெனக்கூறி அவிடம் பெ. மா. மதுரைப்பிள்ளையின் பிரதம வித்வான்களில் ஒருவராகிய பு. த. செய்யப்ப முதலியாரவர்களிடம் எம்மையும் இட்டுக்கொண்டுபோய் இவர் மிக நல்லபிள்ளை, இவர்க்கு நன்னூலைப் பாடஞ்சொல்லிவையுங்கள் எனக்கூறி மாஸாமாஸம் இருபத்தைந்து, இருபத்தைந்து ரூபாய்கள் எமக்கு இரண்டுவருஷக்காலம் கொடுத்துவந்தார்கள். அம்முதலியாரவர்கள் நன்னூற்கு மிகத்தெளிவாகப் பாடஞ்சொல்லியுஞ், பிங்கல நிகண்டை நெட்டுருச்செய்துவரும்படியுஞ் செய்தார்கள். "வித்தைக்குச் சத்துரு விசனந் தரித்திரம்" என்னும் இரண்டுமின்றி இரண்டு வருஷக்காலம் மிகச் செவ்வையாகக் கற்றுவந்தேம். அங்ஙனம் அச்செட்டியாரவர்களால் யாம் தெரிந்துகொண்ட அக்கல்வியின் தன்மையையெண்ணிநோக்குங்கால் அஃதொரு பெரிய புதையலெடுத்த தனம் போலவே காணப்படினும்,

"அள்ளிக்கொடுக்கின்ற செம்பொன்னு மாடையு மாதரவாற்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்குமென்னைக் குறித்ததல்லாற்,
துள்ளித்திரிகின்ற காலத்திலே என் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தையாகிய பாதகனே"

என்ற இச்செய்யுளிற் கண்டவாறு எமது தந்தையின்மீது உடைத்தாயிருந்த ஒரு பெறுங்குறையையும் நிவர்த்தித்து,

"கல்வியே யாவர்க்கும் ஒளிகொண்ட வடிவமாம்,
கல்வியே புதையலாகும்,
கல்வியே பரதேச கமனவினமாகும், அக்
கல்வியே துணையதாகும்,
கல்வியே திசைகொண்ட கனகீர்த்தியைத் தரும்,
கல்வியே பெருமையாக்கும்,
கல்வியே வேண்டும் நற்போகங்களைத் தரும்,
கல்வியே யின்பமாக்கும்,
கல்வியே நிலைகொண்ட கற்பகத்தருவதாம்,
கல்வியே செல்வமாகும்,
கல்வியே யரசராற் பூசை செய்விக்கும், அக்
கல்வியே கடவுள் காட்டும்,
கல்விக்கு நிகரான பொருளொன்று மிம்மையிற்
கருதிடினு மில்லையில்லை,
கல்லான் எனைத்தொன்றுமில்லான்
நடக்குமிருகால் பசுவதென்பர் மாதோ" என்றும்,

வெள்ளத்தாலழியாது, வெந்தழலால் வேகாது, வேந்தராலுங் கொள்ளத்தான் முடியாது, கொடுத்தாலும் நிறைவன்றிக் குறைவுறாது, கள்ளர்க்கோ பயமில்லை, காவலுக்கோ மிகவெளிது, கல்வியென்னும், உள்ளபொருள் உள்ளிருக்கப்புறம்பாகப் பொருள்தேடியுழல்கின்றீரே" என்றும்,

"அறம்பொருளின்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்று,
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியினூஉங்கில்லைச்
சிற்றுயிர்க்கு உற்றதுணை" என்றும்,

அழிவுறும் உடம்பையென்றும் ஆசையாற் பேணலின்றி,
அழிவுறாப் புகழைத் தேடி யன்பொடு பேணார் மூடர்,
விழுமிய கல்விகேள்வி மிகுகொடை செய்துதேடிக்,
கழிபெரும் புகழேநாளுங் காப்பர் நல்லறிவினோரே'' என்றும்,

மேற்கண்ட இச்செய்யுட்களிற் கண்டவாறு எப்பொருட்கும் இறைவனைக்காட்டும் மெய்ப்பொருள் யாமே என்றும், எந்தஞான்றும் அழியக்கூடாத வொண்பொருள் யாமே என்றும், எந்தவிதமான இடையூறுகள் நேர்ந்தபொழுதும் கைகொடுத்துதவும்பெருங்கொடை வள்ளல் யாமே என்றும், பெரியவோர் புகழுடம்பைக் கற்பிக்கும் நான்முகத்தேவன் யாமே என்றும், மனிதவர்க்கமாய்ப் பிறந்தார் ஒவ்வொருவருக்கும் இன்றியமையாத துணைவி, துணைவன் யாமே என்றும், காரியாதிகளைக் கொண்டுமுடிக்கத்தகுந்தவோர் மேல்நாட்டியந்திரம் யாமே என்றும், அறிவினது சொரூபம் இத்தன்மையதென விளக்கிக்காட்டத்தகுந்த அறிவுடைப்பொருள் யாமே என்றும் கூறி எம்முன் சிறந்தும் நின்றன. அங்ஙனமாக ஒருநாள் தாக்களாவிற்கு வந்துபோமாறு அச்செட்டியாரவர்கள் குமாரருள் ஒருவரான சிதம்பரஞ்செட்டியாரவர்களால் ஒரு கடிதம் வந்தது. உடன் தாக்களாவிற்குப்போனேம். அப்பெரிய செட்டியாரவர்கள் இல்லை. ஊருக்குப் போய்விட்டார்களாம். எமக்கும் சில இடங்களைச் சுற்றிப்பார்த்துக்கொண்டு ஊருக்குப்போதல் வேண்டுமென நோக்கமும் பிறந்தன. அந்நோக்கம்பிறக்கவே அச்சின்னச்செட்டியாரவர்களிடம் யாமும் ஊருக்குப்போதல் வேண்டும். போகிற மார்க்கம் கல்க்கத்தாபோய் காசிக்குப்போய் ஊருக்குப்போவதாயிருத்தல் வேண்டுமென்றேம். 10 நாள் சென்று புறப்படுங்கள் என்றார்கள். 10, 15 நாட்கழியவே 10 10 ரூபாய் கரன்ஸி நோட்டாக 60 நோட்டுத் தந்து மிக அன்போடு போய்வாருங்களென அனுப்பினார்கள். நான் பெற்றுக்கொண்டு மோல்மேன், மாண்டலே, புரூம், நதிமார்க்கங்களிலுள்ள சிலவூர்களையுஞ் சுற்றித்திரிந்து பார்த்துக்கொண்டு கல்க்கத்தா மார்க்கம் காசிக்குப்போய் அதினின்றும் கால் நடையாகத் திரும்பி சென்னைக்குவந்து நுங்கம்பாக்கத்தில் இரண்டு வருஷம் தாமசஞ்செய்து அதற்குமேற்கும், தெற்கிலுமுள்ள ஒவ்வொரு பெரிய ஸ்தலங்களிலும், 6 மாலகாலத்துக்குக் குறையாமல் வாசஞ்செய்து

நமது நாட்டுக்கோட்டை வைசிய நாடுநகரங்களையும் ஒரு சுற்றுச் சுற்றிக்கொண்டு இராமேஸ்வரம்போய் அதினின்றுந் தூத்துக்குடி மார்க்கம் கால்நடையாக எங்களூர் போய்ச்சேர்ந்தேம். இதன் மத்தியில் நாட்டுக்கோட்டை வைசியம் என ஒருநாமம்புனைந்து ஒரு பெரியநூலை வரைதல் வேண்டுமென்ற ஞாபகம் எம்மனத்திடைத் தோன்றிவிட்டன. அதுமுதற்கொண்டே நாளாரம்பத்தில் ஒவ்வொரு அத்தியாயமாக எழுதத்தலைப்பட்டு நாளிதுவரை யிருநூறு அத்தியாயம் முடிவுபெற்றிருக்கிறது. இன்னும் ஒருநூறு அத்தியாயங்களுக்குமேற் பாக்கியாகக்காணப்படுகிறது. நிற்க, எமது சொந்தவூர் போய்ச்சார்ந்து சின்னாட்கழித்ததும் எமது சகோதரர்களுடன் பாகமும் பிரிந்தன. விவாகமும் நடந்தேறியது. அப்பால் சின்னாட்கழித்து நாட்டுக்கோட்டை வைசியம் கொஞ்சக் கையெழுத்துக் காப்பிகளோடு கானாடுகாத்தான் வந்து அறிவாலும், கல்வியாலும், குணத்தாலும், கொடையாலும் சிறந்து நிறைந்த ஸ்ரீமத் ஐயா! கு. எ. மா. சிதம்பரஞ்செட்டியாரவர்களைச் சார்ந்து இரண்டு மூன்று வருஷங்களாக அவர்கள் சொந்தத்தினின்றுமே எமது செலவுக்குத் தரப்பெற்று 110 அத்தியாயங்கள் வரை எழுதிமுடித்தேம். அங்ஙனமாக ஒருங்கேமுடித்து ஒரு பெரும் புத்தகமாக்கி வெளியிடுவதற்கு நெடுநாள் பிடிக்குமெனக்கருதி மாதச்சஞ்சிகையாக வெளியிடுமாறு வேண்டும் ஏற்பாடும் அச்செட்டியாரவர்களே செய்தார்கள். அதுசமயம் நமது மாகாணத்தில் 15 நகரங்களில் 500 சந்தாவரை சேர்த்தேம். அதுகாறும் அவர்களோடு 5, 6, வருஷப்பழக்கத்திற்கு மேலாகவே ஏற்பட்டன. எம்மைச்சார்ந்த எந்த வகையான செலவுகளுக்கும் மேற்கண்ட அச்செட்டியாரவர்களும், புதிய நாகரீகம், உலக வியவகாரம், ஆரியஞ்செந்தமிழ், நற்குண விவேகம், அடைந்தோரைக்காத்தல், அடக்கமுடைமை, பேரறிவாண்மை, தத்துவ ஆராய்ச்சி, கடவுள் பக்தி, முதலியவைகளிலே சிறந்து நிறைந்த டைபூர் ஸ்ரீமத் ஐயா! வ. யி. சு. ஷண்முகஞ் செட்டியாரவர்களுந் தான் இத்துணைத்தன்மையுடையதெனச் சிறப்பித்துக்கூறற்கியையாத பேரருந்தன்மையோடு எட்பிளவேனும் மனக்கோட்டமென்பதுமின்றித் தந்துவந்தார்கள். சென்ற பிரமாதீச வருஷம் தைமாஸத்திருந்து மாதாந்தச்சஞ்சிகையாக வெளிப்படுத்தியும் விட்டேம். எதோ ஈசன் கிருபையால் நாளிதுவரை மிகச்செவ்வனே நடந்தும்வருகிறது, இதற்கிடை

யில் ஒரு வருஷம்போய் அடுத்த வருஷத்தில் எல்லாச் சந்தாதார்களும் கவனிப்பின்றி வி. பி. கள் ஒருங்குந் திரும்பிவிட்டன. ஒரு அச்சியந்திரசாலை விஷயமாய் கடன்களும் அளவுக்கு மிகையாக ஏறிக்கொண்டன. அதுசமயம் இதன்கீழ் காணப்படும்,

ஆனைமுகற்கும், அறுமாமுகவற்கும்,
ஏனையவர் தாதைக்கு மீங்கு—ஞானமிகு
முத்தர்க்கும், பத்தர்க்கும், மோனமிகு பெத்தாச்சி
அத்தர்க்கும் அஞ்சலியேயாம்.

பூமலிந்துகும் தூவாநற்றீம்,
அமிழ்தினுமினிய தமிழ்மலி நிலத்து,
மதிமலி புரிசடை மாடக்கூடற்,
பதியினைச்சார்ந்த பதியாம் பலவுளும்,
சீர்தரு கல்வியுஞ் செந்தமிழ் விருத்தியும்,
தொன்னூற்றெறிதரு நன்னூல் வழக்கும்,
திருந்திய வொழுக்கமுந் தெய்வத்தன்மையும்,
அணிபல புனைந்த வழகுஞ் சீலமும்,
பொருந்திய மாக்களுஞ் சிறுருங் குறைவறு,
நிறைதரு செல்வமும் நீண்மாடகூடமும்,
கருங்கற் பணியணி காட்சிச்சாலையும்,
மணந்தெரி குமிழிடை கணைவிரனட்டி,
யாஅரேனினுஞ் சூழ்ச்சியுட்டங்கி,
மெய்நிலை மறந்து பின்னரேவட்கி,
ஏ! ஏ! இஃதொரு வியப்பேயாமென,
பலபடவார்த்த பளிங்குமாளிற்களும்,
பூமாஞ்சோலையும் பொய்கையுஞ் சிதம்பர,
விநாயகர் கோவிலும் விளங்கு கல்லூரியும்,
சீதப்புனன்மலி சூழ்தருபழனமும்,
ஒருங்கே சிறந்த ஒண்ணகரிருக்கா,
ணாடுகாத்தானெனு நன்னகரத்துள்,
அணிதரு நாட்டறன் மணிநகர் வணிகக்
கோத்திரமதனிற் காத்திரமமைந்த,
பன்னலப்பேறும் பவமறு செல்வமும்,
சத்தியவாக்குந் தயாகுண சீலமும்,

தொன்மையதான தொடர்ச்சியும் வான்குடித்,
தோற்றமுமாயின் ஆற்றன் மிகுந்த,
அதிகார முறைமையுமாகிய இன்னோரன்ன,
மாட்சியு மாட்சியளவிற் றெரிதரு,
கற்பிற்சிறந்த கற்பின் மரீஇயச்,
சிதம்பரப்பூபன் செய்தவப்பேற்றான்,
வந்தவாண்மக்களிருவருள்,
முத்தையற் கிளையோன் பெத்தையாமென,

இவ்வியாசத்துடன் லோகோபகார வள்ளலென்றும், கர்னனென்றும் பெரும்புகழ்படைத்து வாழ்ந்துவருகிற ஸ்ரீமான் சா. ராம.மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களைப்போய்க் கண்டேம். அவர்கள் மிக இனிமையும், நீர்மையும், அன்பும், தயையும் நிறைந்த பெருந்தன்மையோடுகூடித் தங்களின் அந்தஸ்துக்கு எத்துணையோ பங்கு மேம்பாடான ஒருவராக எம்மைக்கருதி பல இனிய வார்த்தைகளாலேயும் முகமன்கூறி இரண்டு மூன்று நாள் நான் அதுகாறும் உண்டுணர்ந்து அறிந்திராத நல்விருந்தளித்து (250) இருநூற்றைம்பது ரூபாயுந்தந்து இன்னும் சிலநாட்கழியட்டும், இதற்கு வேண்டுஞ் சில ஏற்பாட்டைச் செய்வோமென்றுங் கூறியனுப்பினார்கள். பின்னர் எம்முடைய சோம்பற்றன்மையால் நான் அவர்களைப்போய்க் காணவில்லை. கடன் மிகுதியால் எமக்கு ஆஸ்தியாகவிருந்த 1500 ரூபாய் பெறுமதியான நஞ்சைநிலமுங் காலியாய்விட்டன. 7, 8, மாஸம் பத்திரிகையும் நடைபெறாமல் நின்றுகொண்டன. அதுசமயம் கானாடுகாத்தான் வந்திருக்கும்பொழுது கோட்டையூர் ஸ்ரீ இலக்குமிவிலாஸம் ரீடிங்ரூம் செக்ரட்டேரியான ஸ்ரீமத் ஐயா! வெ. அ. ராம. வெ. ஸ்வாமிநாதன் செட்டியாரவர்களைச் சந்தித்தேன். ஏன் பத்திரிகை 5, 6, மாஸமாக வரக்காணவில்லையே என்ன காரணம் என்று கேட்டார்கள். விஷயம் இவ்வாறு எனச்சொல்லவே இரண்டு நூறு ரூபாய் ரொக்கமாகத்தந்து பத்திரிகையைவிடாது நடந்துவருமாறு செய்யுங்கள் 4, 6, மாஸம் முன்பின்னாகவாவது சில பெரிய மனுஷியாள்களைக்கண்டு சரிக்கட்டித்தந்தால் வாங்கிக்கொள்ளுகிறேன் அல்லது ஷண்முகநாதன் விட்டவழிவிட்டும், பத்திரிகையைமட்டும் ஒழுங்காக நடப்பதற்குரிய ஏற்பாட்டைச் செய்துவாருங்களெனக் கூறியனுப்பினார்கள். ஆகவே இதுகாறும் யாம் கூறிவந்த பல விஷயங்களாலும் எம்

முடைய உடல், பொருள், ஆவி மூன்றையும் இப்பெரிய சமூகத்திற்கே தத்தஞ்செய்தற்குரியதாம் என்பதை மறுப்பார் யாவரே யாவர். "செய்தார்க்குச் செய்வது செத்துமிறகோ" என்ற பழமொழியைத் தெரியாதவர் யாவரேயாவர். எம்முடைய கல்வியறிவு, அநுபவம் முதலிய வொருங்கு இப்பெரிய சமூகத்திற்கே வுழைக்கவேண்டுங் கடப்பாடுடையதென்பது யாங் கூறும்மேலே நன்கு விளங்குகிறதன்றோ? இன்னும் இரண்டாவது காரணம் சிலவற்றைக் கவனித்துக்கூறி இவ்விஷயத்தைப் பூர்த்தியாக்குவோம்.

இரண்டாவது காரணம்

II. நண்பர்காள்! இந்நாட்டுக்கோட்டை வைசிய மகா சமூகமானது, மலர்தலை வையத்து நம் ஆசியாக்கண்டத்தின் தென்திசையிலே கிழக்கில் வங்காளக்குடாக்கடலையும், மேற்கில் அராபிக்கடலையும், வடக்கில் இமயமலையையும், தெற்கில் இந்துமகாசமுத்திரத்தையும் எல்லைகளாகப்பெற்ற எமக்குச் சொந்தமான இப்பரத கண்டத்திலே யுடைத்தானதென்பதை எவர்கள்தான் மறுக்கக்கூடும்?

III. அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் நான்கு புருஷார்த்த விலக்கணங்களையும் மிகச்செவ்வையாய் விளக்கிக் காட்டப்படுவதும், மிகமேலான வினிமையும், உயர்தரமான நல்ல நீர்மையும், எழுத்துச் சொற்பொருள் யாப்பு அணி எனப்படுகிற கல்முறைகளும், தன்னையடைந்தோர் எவருக்கும் பேரின்பங் கொடுக்கும் பெரியவோர் வன்மையும், தெய்வத்தன்மை வாய்ந்ததும், சுமார் இரண்டுகோடி மக்கட்கூட்டத்தார்க்குத் தாய்மொழியாகவுடையதும் ஆன எம்முடைய தாய்மொழிப்பாஷையான செந்தமிழ்ப்பாஷைக்கே இந்நாட்டுக்கோட்டை வைசிய மகாசமூகம் உரியதென்பதையும் எவர்கள்தான் மறுக்கக்கூடும்?

1. கரும்புதின்னக் கைக்கூலியா? என்னும் பழமொழி நிகழுமாறு தன் தோட்டத்திலிருந்த கரும்பையெல்லாம் எவரும் நாணுதுவந்து தின்னுகவென்று யாவரையு மழைத்தபோது சிலர் மறுக்கவே அவர்க்குக் கூலிகொடுத்து அருந்தின கரும்பனென்னும் ஓர் தொண்டைநாட்டுப்பிரபுவும்;

2. தமிழ் நாவலர்களுக்குப் பொன்மாரி பொழிந்து பெரும்புகழ் படைத்தவனும், தொண்டைமண்டலச்சதகத்தைப் பாடச்செய்தவனுமாய கருப்பனென்னும் ஓர் வள்ளலும்,

3. தொண்டைநாட்டினைச் சார்ந்த முதிர மலைச்சூழலிலேயுள்ள நாட்டில் அரசுபுரிந்த ஓர் அரசனும், தமிழ்க்கலை விநோதனும், தமிழ்ப்புலவர்களுக்குப் பொன்மாரி பொழிந்த ஓர் வள்ளலும், தன், தம்பி, இளங்குமணன் என்பவன் தன் நாடு நகரங்களை வஞ்சனையாற் கவர்ந்து கொண்டு தன்னையுங்கொல்ல வகை தேடின போது அஃதுணர்ந்தோடிக் காடுபற்றியிருந்தவனும், புலவர் திருமாக்கள்பலராலும் காட்டகத்தேயும் பெரும்புகழ் படைத்தவனும், பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர், நீ காடுகொண்டபின் நான் அநுபவிக்குந் துன்பங்களைக் கேளெனத் தமது துன்பங்களை எடுத்துப் பாடினபோது அப்பாடலைக்கேட்டு மனமுருகி ஐயீர்! நீயிர் ஒன்றுக்குங்கவலன்மின் யாங்கூறுவது கேண்மின். எம் தலையைக் கொய்துசென்று கொடுப்போர்க்குப் பெருநிதி வழங்குவேன் என நம் தம்பி முரசறைவித்திருத்தலின் இவ்வாட்படையாலே எம் தலையைக் கொய்துசென்று அவன்பாற்கொடுத்து நுமது வறுமையைத் தீர்த்துக்கொள்வீராக வென்று தலையுங்குனிந்த குமணமன் மகனும்;

4. தன்மீது ஒரு பிரபந்தம் பாடி பாற்பசு கேட்ட ஒருபுலவர்க்கு ஒவ்வொரு கவிக்கும் ஒவ்வொரு பசுவும், அவ்வப்பசுவுக்கு மேய்ப்பவனும், கறவையாளும் பால்காய்ச்சுபவனுமாக மும்மூன்றுளும் உடன்கொடுத்துப் பொன்மாரியும் பொழிந்த காளத்தியப்பன் என்னும் தொண்டைநாட்டிலே வல்லமென்னும் ஊரிலே விளங்கியவோர் பிரபுவும்;

5. தியாகசமுத்திரம் எனக் காரணப்பெயர்பெற்ற கூவமென்னும் ஊரிலே விளங்கியவோர் பெருங்கொடையாளனும், தமிழ்ப்புலவர்களுக்குச் சலியாது கொடுத்துவந்த வோர் வள்ளலும், அவ்வூர் சிற்றேரியில் தூண்டிலிட்டு மீன்பிடித்துக் காலக்கழிவு செய்துவந்தவோர் ஏழை வலைஞன் வெறுமைநோயைத் தீர்க்க வெண்ணி பொன்னினாலொரு மீன் செய்து அதனைக்கொண்டுபோய்

அவ்வேவரிபிவிட்டு அவ்வலைஞன் தூண்டியிலகப்படும்படி செய்தவோர் கருணாகரவள்ளலும், கூவத்து நாரணன் எனப்பெரும்புகழ் படைத்த ஓர் பிரபுவும்;

6. இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்திருநூறு வருஷங்களுக்குமுன்னே மாளவதேசத்தரசனைகத் தாராநகரத்திலிருந்து அரசுபுரிந்தவோர் பிரபலஅரசனும், சங்கரகவி என்னும் ஓர் புலவர் பெருமான் சொன்னவோர் அற்புத சுலோகத்துக்காக ஏககாலத்தில் பதினாறிலக்ஷம்பொன் பரிசுகொடுத்தவோர் பெருங்கொடை வள்ளலும், முற்காலத்தில் பூரணசந்திரன்போற் பிரகாசித்து பிற்காலத்தில் அபரபக்ஷ சந்திரன்போல் ஒளியிழந்த கலைஞானங்களெல்லாம் இவன் காலத்திலே மீளவும் பூர்வபக்ஷத்துச் சந்திரன்போல நாளுக்குநாள் விருத்தியடையச் செய்தவோர் சீர்திருத்த கர்த்தாவும், கலைமகளுக்குத் தந்தையெனப் பெயர் ஏற்றுக்கொண்டவனும், சர்கலாவல்லவனும், வோர்அரிய வைத்திய நூற்செய்த மகா பண்டிதனும், காளிதாசன் முதலிய பல வித்வமணிகளுக்குப் பொன்மாரி பொழிந்த குபேரனும், ஆன போஜ மகாராஜனும்;

7. தன்னிடம் ஓடிவந்து அடைக்கலம்புகுந்த புறாவிற்காக தன் சரீரத்திலே கொய்யத்தக்க தசைகளையெல்லாங் கொய்து கொய்துவைத்தும் ஆற்றாது ஈற்றில் தானே முழுதும் இரையாக துலாத்தட்டிலேறிய சிபிச்சக்கரவர்த்தியும்;

8. தன்னைப்பாடும் புலவர்க்கு பிறரிடத்தே சென்று பாடியிராதபடி பெரும்பொருள் வழங்கும் ஓர் பெருங்கொடை வள்ளலும், நம்முடைய நாடு நகரங்களெல்லாம் தேவருலகத்தையே நிகர்க்கும் என வுலகத்தார் புகழ அரசாண்டவனும், ஆனவோர் சேர மகாராஜனும்;

9. வச்சிராயுதத்துக்கு முனையாக்கிக்கொள்கவென்று தமது முதுகெலும்பை இந்திரனுக்குக் கொடுத்துத் திருவருள்புரிந்த ததீசிமகமுனிவரும்;

10. பாணபத்திரனுக்காக சேரமான்பெருமாள் நாயனாருக்கு திருமுகம் அனுப்பியக் கூடற் கடவுளும்;

Registered No. M. 1111

THE REGISTRAR OF BOOKS OCT 1916 MADRAS.

உ

திருச்சிற்றம்பலம்.

Nattukkottai Vaiciyam.

நாட்டுக்கோட்டை வைசியம்.

ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

தொகுதி ௧.	௧௯௧௬ ஆவணி, புரட்டாசிமீ.	பகுதி ௨௪, ௨௫.

ஸ்ரீ நாட்டுக்கோட்டை வைசிய மகா சமூகத்தின் நறும்புகழ் நிலைகள்.

(23-வது புத்தகம் 537-வது பக்கத்தொடர்ச்சி.)

ஆனைமுகற்கும், அறுமாமுகவற்கும்,
ஏனையவர்தாதைக்குமீங்கு—ஞானமிகு
முத்தர்க்கும், பத்தர்க்கும், மோன மிகு பெத்தாச்சி
அத்தர்க்கும் அஞ்சலியேயாம்.

பூமலிந்துகும் தூவாநற்றீம்,
அமிழ்தினுமினிய தமிழ் மலி நிலத்து,
மதிமலிபுரிசடை மாடக்கூடற்,
பதியினைச் சார்ந்த பதியாம் பலவுளும்,
சீர்தரும் கல்வியுஞ் செந்தமிழ் விருத்தியும்,
தொன்னூற்றெரிதரு நன்னூல் வழக்கும்,
திருந்திய வொழுக்கமுந் தெய்வத்தன்மையும்,
அணிபல புனைந்த வழகுஞ் சீலமும்,

பொருந்திய மாக்களுஞ் சிறுருங் குறைவரு,
நிறைதரு செல்வமும் நீண்மாடகூடமும்,
கருங்கற்பணியணி காட்சிச்சாலையும்,
மணந்தெரி குமிழிடை கணைவிரனுட்டி,
யாஅரேனனினுஞ் சூழ்ச்சியுட்டங்கி,
மெய்நிலைமறந்து பின்னரேவுட்கி,
ஏ ஏ இஃதொரு வியப்பேயாமேன,
பலபட வார்த்த பனிங்குமாவிற்களும்.
பூமாஞ்சோலையும் பொய்கையும் சிதம்பர,
விநாயகர் கோவிலும் விளங்கு கல்லூரியும்,
சிதப்புனன்மலி சூழ்தருபழனமும்.
ஒருங்கே சிறந்த ஓண்ணகிருக்கா
ணடுகோத்தானெனு நன்னகரகத்துள்,
அணிதரு நாட்டரண் மணிநகர் வணிகக்,
கோத்திரமதனிற் காத்திரமமைந்த,
பன்னலப்பேறும் பவமறு செல்வமும்,
சத்தியவாக்குந் தயாகுண சீலமும்,
தொன்மையதான தொடர்ச்சியும் வான்குடித்
தோற்றமுமாயின் ஆற்றன்மிகுந்த,
அதிகாரமுறைமையு மாகிய இன்னோரென்ன,
மாட்சியு மாட்சியளவிற் றெரிதரு,
கற்பிற்சிறந்த கற்பின்மரீஇயச்,
சிதம்பரப்பூபன் செய்தவப்பேற்றான்;
வந்தவாண்மக்களிருவருண்,
முத்தையற் கிளையோன் பெத்தய்யாவென,

கரும்புதின்னக் கைக்கூலியா? என்னும் பழமொழி நிகழுமாறு தன் தோட்டத்திலிருந்த கரும்பையெல்லாம் எவரும் நாணுது வந்து தின்னுக வென்று யாவரையுமழைத்தபோது சிலர் மறுக்கவே அவர்க்குக் கூலி கொடுத்து அருத்தின கரும்பனென்னும்; ஓர் தொண்டை நாட்டுப்பிரபுவும்;

2 தமிழ் நாவலர்களுக்குப் பொன்மாரி பொழிந்து பெரும்புகழ் படைத்தவனும், தொண்டைமண்டலச்சதகத்தைப் பாடச்செய்தவனுமாய கருப்பனென்னும் ஓர் வள்ளலும்,

3. தொண்டைநாட்டினைச் சார்ந்த முதிரமலைச்சூழலிலேயுள்ள நாட்டில் அரசுபுரிந்த ஓர் அரசனும், தமிழ்க்கலை விநோதனும், தமிழ்ப்புலவர்களுக்குப் பொன்மாரி பொழிந்த ஓர் வள்ளலும், தன் தம்பி இளங்குமணன் என்பவன் தன் நாடு நகரங்களை வஞ்சனையாற் கவர்ந்துகொண்டு தன்னையுங்கொல்ல வகை தேடினபோது அஃதுணர்ந்தோடிக் காடுபற்றியிருந்தவனும், புலவர் திருமாக்கள் பலராலும் நாட்டகத்தேயும் பெரும்புகழ் படைத்தவனும், பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர், நீகாடுகொண்டபின் நான் அனுபவிக்குந் துன்பங்களைக் கேளெனத் தமது துன்பங்களை எடுத்துப் பாடினபோது அப்பாடலைக்கேட்டு மனமுருகி ஐயிர்! நீயிர் ஒன்றுக்குங் கவலன்மின் யாங்கூறுவது கேண்மின். எம் தலையைக் கொய்து சென்றுகொடுப்போர்க்குப் பெருநிதிவழங்குவேன் என எம் தம்பி முரசறைவித்திருத்தலின் இவ்வாட்படையாலே எம் தலையைக் கொய்து சென்று அவன் பாற்கொடுத்து நுமது வெறுமையைத் தீர்த்துக்கொள்வீராக வென்று தலையுங்குனிந்த குமணமன் மகனுட்;

4. தன்மீது ஒரு பிரபந்தம் பாடி பாற்பசு கேட்ட ஒரு புலவர்க்கு ஒவ்வொரு கவிக்கும் ஒவ்வொரு பசுவும், அவ்வப்பசுவுக்கு மேய்ப்பவனும், கறவையாளும் பால்காய்ச்சுபவனுமாக மும்மூன்றாளும் உடன்கொடுத்துப் பொன்மாரியும் பொழிந்த காளத்தியப்பன் என்னும் தொண்டைநாட்டிலே வல்லமென்னும் ஊரிலே விளங்கியவோர் பிரபுவுய்;

5. தியாகசமுத்திரம் எனக் காரணப்பெயர் பெற்ற கூவமென்னும் ஊரிலே விளங்கியவோர் பெருங்கொடையாளனும், தமிழ்ப்புலவர்களுக்குச் சலியாது கொடுத்துவந்தவோர் வள்ளலும் அவ்வூர் சிற்றேரியில் தூண்டிவிட்டு மீன்பிடித்துக் காலக்கழிவுசெய்துவந்தவோர் ஏழை வலைஞன் வெறுமைநோயைத்தீர்க்க வெண்ணி பொன்னினுலொரு மீன் செய்து அதனைக்கொண்டுபோய் அவ்வேரியிலிட்டு அவ்வலைஞன் தூண்டியிலகப்படும்படி செய்தவோர் கருணாகர வள்ளலும், கூவத்து நாரணன் எனப் பெரும்புகழ் படைத்த ஓர் பிரபுவுய்;

6. இற்றைக்குச் சற்றேறக்குறைய ஆயிரத்திருநூறு வருஷங்களுக்கு முன்னே மாளவதேசத்தரசனுகத் தாராநகரிலிருந்து

அரசுபுரிந்தவோர் பிரபல அரசனும், சங்கரகவி என்னும் ஓர் புலவர் பெருமான் சொன்ன வோர் அற்புத சுலோகத்துக்காக ஏககாலத்தில் பதினாறுலக்ஷம் பொன் பரிசுகொடுத்த வோர் பெருங்கொடை வள்ளலும், முற்காலத்தில் பூரணசந்திரன்போற் பிரகாசித்து பிற்காலத்தில் அபரபக்ஷசந்திரன்போல் ஒளியிழந்த கலைஞானங்களெல்லாம் இவன் காலத்திலே மீளவும் பூர்வபக்ஷத்துச் சந்திரன்போல நாளுக்குநாள் விருத்தியடையச் செய்தவோர் சீர்திருத்த கர்த்தாவும், கலைமகளுக்குத் தந்தையெனப் பெயர் ஏற்றுக்கொண்டவனும், சர்வகலாவல்லவனும், வோர் அரிய வைத்திய நூற்செய்த மகா பண்டிதனும், காளிதாசன் முதலிய பல வித்வமணிகளுக்குப் பொன்மாரி பொழிந்த குபேரனும், ஆன போஜமகாராஜனும்;

7. தன்னிடம் ஓடிவந்து அடைக்கலம் புகுந்த புறாவிற்காக தன் சரீரத்திலே கொய்யத்தக்க தசைகளையெல்லாங் கொய்து கொய்துவைத்தும் ஆற்றாது ஈற்றில் தானே முழுதும் இரையாக துலாத்தட்டிலேறிய சிபிச்சக்கரவர்த்தியும்;

8. தன்னைப்பாடும் புலவர்க்கு பிறரிடத்தே சென்று பாடியிரவாதபடி பெரும்பொருள் வழங்கும் ஓர் பெருங்கொடை வள்ளலும், தம்முடைய நாடு நகரங்களெல்லாம் தேவருலகத்தையே நிகர்க்கும் என வுலகத்தார் புகழ அரசாண்டவனும், ஆனவோர் சோமகாராஜனும்;

9. வச்சிராயுதத்துக்கு முனையாக்கிக்கொள்கவென்று தமது முதுகெலும்பை இந்திரனுக்குக் கொடுத்துத் திருவருள்புரிந்த ததீசிமகமுனிவரும்;

10. பாணபத்திரனுக்காக சேரமான்பெருமாள் நாயனாருக்கு திருமுகம் அனுப்பிய கூடற் கடவுளும்;

11. "கொடுக்கிலாதானைப்பாரியே" என்று கூறினும் என்னும் திருப்புகலூர்ப்பதிகமாகச்சுந்தரமூர்த்திசுவாமிகளாற் புகழப்பெற்றவனும், பெருங்கொடை வள்ளலிலொருவனும், கொடையாளரைப் புகழ்வோர் யாவராலும் ஞாலம் உள்ள நாள்வரை பாரியேஎன உவ

மித்துக்கூற நின்றவனும், மன்மக்களிலொருவனும், தன் காலத்திலிருந்த சேரசோழ பாண்டியர்களுடைய கீர்த்திப்பிரகாசத்தை எல்லாம் தன் கொடைக்கீர்த்திப் பிரகாசத்தால் மழுங்கச்செய்தவனும், பாரி என்னும் ஓர் அரசனும்;

12. தனது இளமைப்பருவத்தைத் தன் தந்தைக்குக் கொடுத்து தந்தையினது முதுமைப்பருவத்தைத் தான்பெற்று தந்தையை மகிழ்வித்தவனான பூரு வென்னுங் குருகுலத்தரசரிலொருவனும்;

13. புலவர்களுக்குப் பொன்மாரி பொழிந்துவந்த பேராவூரான் என்னும் ஓர் பிரபுவும்;

14. தமிழ்வல்லோர்க்குப் பெருநிதி வழங்கிப் பெரும்புகழ் படைத்த குன்றத்தூர் எல்லப்பன் என்னும் பிரபுவும்;

15. தமிழ்ப்புலவர்களுக்குப் பரமோபகாரியாயிருந்து தமிழை வளர்த்த அவதார புருஷனும், ஒரு கவிக்கு ஆயிரம் பொன்னாகத் தொண்ணூற்றொன்பது கவிக்குக் கொடுத்து நூறாவது கவிக்கு நூறாயிரம் பொன் கொடுத்து ஒரு பிரபந்தங்கொண்ட பிரபு சிகாமணி என பலமேதாவிகளாலும் புகழ்ந்துகொண்டாடப்படுகிற மாதை வெங்கடேசுரன் என்னும் ஓர் வள்ளலும்;

16. "கனந்தந்தான் கனகாபிஷேகந் தந்தான் களங்கமிலாக் கரும்பொருளை யமைத்துத்தந்தான், மனந்தந்தான் முடிசூட்டு மாலைதந்தான் வாணிசிங்காசனத்திருத்தி வரிசைதந்தான், இனந் தந்தானிராமர்கதை எவர்க்குந் தந்தான் என ராமாயணக்கவிஞனெனப் பேர்தந்தான், அனந்தந்தான் மணவிமுத்துக் கிருஷ்ணப்பூபன் அகந்தந்தானிருமையினுஞ் சுகந்தந்தானே" என்னும் பாடலைப் பெற்ற மணவிமுத்துக் கிருஷ்ணன் என்னும் பிரபுவும்;

17. தன் சம்பத்துக்களை எல்லாம் வறிஞர்க்குக் கொடுத்துவிட்டு வனத்திற்போய் வசிக்கும்போது ஒருநாள் பசியால் வருந்தி கிடைத்த அற்பவுணவை யுண்ணத்தொடங்கும்போது ஓரந்தணனும் பசியால் வாடித் தன்னிடம் வரவே அவ்வுணவிற் பாதியை

அவ்வந்தணனுக்குக் கொடுக்க அந்தச்சமயத்தில் மற்றொரு அந்தணனும் பசித்துவந்தான் அவனுக்கும் எஞ்சிய பாகத்திற் பாதியைக் கொடுக்க அப்போது மற்றொருவனும் வரவே மிச்சமாயிருந்த தன் பாகத்தையுங் கொடுக்க இங்ஙனமாகப் பின்னுமோர் அதிதி வந்து தாகத்திற்காக வைத்திருந்த நீரையுங் குடித்துவிட்டுப்போக இதுகண்ட தேவர்கள் தன்னுடைய வுபகார குணத்தை மெச்சி தனக்குவேண்டிய பல வரங்களைத் தரப்பெற்றவனும், அளவற்ற யாகங்கள் செய்தவனும், யாகபலித்தோலின் உதிரத்தால் சர்மணவதியென்னும் ஓர் நதியுண்டாகப்பெற்றவனும், பூருவமிசத்தைச் சார்ந்த ஒரு மகமுனிவனும்;

18\. தமிழ்ப்புலவர்களுக்குத் தாதாவென்று தன் வாயிலிலே கொடிக்கட்டித் தன்னிடம் வரும் புலவர்க்கெல்லாம் பெரும்பொருள் வழங்கிவரும் ஒருநாளில் ஒரு புலவன் போய்த் தனது நுண்புலமை நிலைநாட்ட அதனைக்கண்டு அவனைப் புகழ்ந்து மெச்சி நுமக்கு வேண்டுவதைக் கேட்டருளுமென்ன புலவன் நுமது பிரிய நாயகியை எனக்குத் தரல்வேண்டுமென்க அதுகேட்டுச் சற்றும் மனம் வருந்தாமல் கற்பிற்சிறந்த தம்மனையாளை யழைத்து உன்னை இப்புலவர்பெருமானுக்குக் கொடுத்துவிட்டேன் இன்றுமுதலாக நீ எமக்கு மனைவியல்லை தாயாகினாய் என்க அதுகேட்ட புலவன் நெஞ்சம் துணுக்குற்று புருஷசிகாமணியே உன்மனதைச் சோதிக்கும்பொருட்டு நான் கேட்டதேயன்றி வேறல்ல என் குற்றத்தைப் பொருத்தருளி, என் புத்திரியாகிய இவ்வுத்தமியை பழயபடியே மனைவியாக அங்கீகரித்துக்கொண்டு இன்றுமுதலாக என்னை உமது மாமனாகக்கொண்டு எம்மீது அன்புசெய்துவரக்கடவீர் இதுவே நீயிர் எனக்குச் செய்யவேண்டிய வுபகாரமும் பரிசிலும் ஆகுமென்கப் பெரும்புகழ் படைத்தவனும், பெருங்கொடை வள்ளலும்,

"போதாருந் தண்பொழில் வீடூர்க்கதிபன் புலவர்க்கெல்லாந்
தாதாவெனக் கொடிகட்டுதலா லவன்றன்மனையை,
நீதாவெனவொரு பாவாணன் கேட்ப வந்நேரிழையை
மாதாவென அழைத்தான் எனகொலாந் தொண்டைமண்
[டலமே"

எனப் புகழ்பெற்றவனுமான வீடூர்க்கிறைவனும்;

19\. வெளிமான் என்னும் பெருங்கொடை வள்ளலும்,

20\. அரசருள் ஒருவனும், நமது தேவபெருமான் தமயனாகிய அதிகமானை எடுத்து வளர்த்தவனும், வள்ளலுள் ஒருவனாக எண்ணப்படுகிறவனும், தன்னூர் மலைப்பக்கத்து நின்று அழகுபெற்ற கருநெல்லியினது அமிழ்து விளையும் பழத்தை ஔவையாரும் விரும்பிக்கேட்பக் கொடுத்து அக்கல்வியின் முதியாட்கு என்றைக்கும் அழியாத சிரஞ்சீவித்தன்மையையும் கொடுத்த உயிர்த்துணை வள்ளலுமான அதிகன் என்னும் மன்மகனும்;

21\. தொண்டைநாட்டுக்குஞ் சேரநாட்டுக்கும் இடையேயுள்ள மலைநாட்டைக் கோவலூரிலிருந்தாண்டவோர் சிற்றரசனும்கொடையாலும், புஜபலத்தாலும் வரையிற்சிறப்புடையவனும், போரிற் புறங்கொடுத்தோடும் வேந்தர்க்குத் துணைபுரிந்து வெற்றிமாலை சூடுவித்தலைத் தொழிலாக வுடையவனும், குளிர்காலத்திலே காட்டகத்திலே ஒரு மயிலைக்கண்டு அது குளிரால் வாடுகின்றதே என்றிரங்கித் தான் போர்த்திருந்த போர்வையை அதன்மேற் போர்த்திச்சென்றவோர் பேரன்புடையாலும், முல்லைக்கொடியிற் சிக்கிய தேரை அக்கொடியைச் சிதைத்துமீட்காது அக்கொடி படர்ந்துலகுக்குப் பயன்படும்படி அத்தேரையங்ஙனே நிறுத்திவிட்டுச்சென்ற கருணைக்கடல்போன்ற வள்ளலும்,

"முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்,
எல்லைநீர் ஞாலத்திசைவிளங்கத்—தொல்லை
இரவாமலீந்த விறைவர் போனீயும்
கரவாமை யீதல் கடன்" என பின் பலராலே புகழப்

பெறுகிறவனும் ஆனமலையமான் திருமுடிக்காரி யென்னும் வள்ள
[லும்,

22\. தோற்றப்படுகிற மூவுலகங்களுக்குந் தெற்றெனத் தெரிந்த பெரும்புகழாள வள்ளலான கன்னமகாராஜனும், இன்னும் ஏனைய பெருங்கொடை வள்ளல்களும் கூடித்திரண்டு ஒருருவாக இற்றைய ஞான்றுவரை நம்போல்வார் ஒருவருமிலரே நம் செந்தமிழ் நிலத்துப்புலவர் திருமாக்கள் சில்லோர் நம்மைநாடி ஆநிரை துறந்த குழக்கன்றே போன்று அம்மா, அம்மாவென்று கடைக்கண்கொண்டுங் கவனிக்குங் கருணைத்தாயின்றி கதறுகின்றனரே. அந்தோ! இஃதென்னை? பெரும் பரிதாபம், நம் செவிகளிரண்டும்

என்கொற் பாவம் புரிந்தனவோ. இம்மொழி கேட்டும் யாம் மீண்டும் இப்பொன்னுலகிற் குந்திக்கொண்டிருப்பதுஉம் என்கொல் நியாயமாகுமோ. இக்குழக்கன்றே போன்று கதறுவார் பல்லோரின் வெறுமை நோயைத் தீர்த்தலில் நின்றும் நமது பிறவித் துன்பம் என்கொற் பெரிதாமோ. நரை திரை மூப்பும், நல்வினை தீவினையும் சம்பந்தமின்றி நாமெவன்கொற் பயன் கண்டோம். ஓ! எம் அருமைப்புலவர் திருமக்காள் நின்மின் சற்றே பொறுமின்! கொன்னே கதறன்மின் எற்றிற்கும் அஞ்சன்மின். நுங்களின் வெறுமை என்னும் பெரிய வோர் பிணியைப் போக்குவதற்காக நாங்கள் யாவரும்,

அளகைப்பதியோனும் நாணமுறத்தகுந்தவும், கொடுக்கக் கொடுக்கக் குறைவற்றனவுமாய அளவுகடந்த பெருஞ்செல்வமென்னும் ஒப்புயர்வற்ற வோர் பெரிய அமிழ்தமும், கண்டார் எவருங்களிப்புறுமாறு களங்கமற்ற இன்மொழிகூறும் கருணையாய அநுபானமென்னுமோர் பெரிய மூலிகையும், எஞ்ஞான்றும் வரையாதுகொடுக்கும் வள்ளன்மை என்னும் ஓர் பெரிய தருமச்சிந்தையும், வெறுமைநோயின் அளவைக்கண்டு தக்கவாறு அமிழ்தங்கொடுக்கும் சர்வகலா சக்தியும், நீடுழிகாலம் நிலைநின்று நமது புலவர் திருமாக்கள் பல்லோரையும் புரத்தல்வேண்டுமே என நினைந்து அதற்குறிய வோரமிழ்தமான சிவஞான யோகச்செல்வமும், பெத்தாச்சி என்னும் பெரிய வோர் திருநாமமுங்கொண்டு பூமிற்கு வந்தோம், வந்தோம் என அருண்மலி ஆசிகூறி வந்தவதரித்த வள்ளலோய்! இரவலர் புரத்தலிற்றாயினுஞ் சிறந்தமையோய்! அற்றார் பலரோடும் நற்றவம் புரியும் அரியோய்! ஆன்றோர் பலரையும் அகமகிழச் செய்யும் அன்போய்! செல்வத்தியலும் நீம்புகழியற்கையும் தெற்றெனத்தெளிந்த மேலோய்!

"ஊருணிநீர் நிறைந்தற்றேயுலகவாம்
பேரறிவாளன்றிரு"

"பயன்மர முள்ளூர் பழுத்தற்றூர் செல்வம்
நயனுடையான்கட்படின்" என்ற தேவர் திருவாக்கிற்கு இலக்காக நிற்குந் தேவோய்!

"பிறக்கும்பொழுது கொடுவந்ததில்லைப் பிறந்துமண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோவதில்லை யிடைநடுவில்
குறிக்கும் இச்செல்வம் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்கும் குலாமருக்கென்சொல்லுவேன் கச்சியேகம்பனே"

என்ற பரம வேதாந்தப்பழம்பொருள் தெரிந்த பட்டினத்தடிகள் அருமைத்தொன்மரபில் வந்துதித்த மேற்குலவோய்! மிகத்தொன்மையதான பண்ணலம்புணர்ந்த நன்னூற்களோடும், ஆன்றோர்களோடுங் காலம்போக்குங் கதிரோய்! எத்துணை கல்பகோடிகாலங் கழியினும் என்றைக்கும் அழியாப் பெரும்புகழேற்றுக்கொண்ட பெரியோய்! செந்தமிழ்க் கழகங்கள் பலவற்றையுஞ் சீர்திருத்தத் தொடங்கிய திருவோய்! புலவர்தம் வெறுமையைப் போக்குதற் குற்றவொண் புலவோய்! நன்னகரிகங்களிலே சிறந்த நல்லோய்! நமதாசியன் வகுப்பாரும் அரசெனக்கூறும் அரசோய்!

காரிகர் கூந்தலும் கயனிகர் விழியும்,
கருஞ்சிலை நாணுங் கண்மேற் கோடும்,
பிறைகவிழ் நுதலும் மதிகவிழ் வதனமும்,
முருக்கிகழ் தோற்கும் தருக்கவிழ் இதழும்,
பான்மொழி பிறக்கும் பவளச்செவ்வாயும்,
முத்தமிழொண்பான் ரத்தினமிழைத்த,
அட்டியுங்கொடியுங் கட்டியவைர,
பதக்கமுதலாம் பலவணியாரமும்,
பங்கலம் புனைந்த நன்கலமிடறும்,
ஏலப்பனிநீர் சாலவுந்தோய்ந்த,
மல்லிமென்முல்லை மலர்மலிமாலையும்,
முத்தந்தாரும் சந்தனக்குழம்பும்,
தேமற்கொடியும் காமக்கிளைகளும்,
அழுந்தப்படர்ந்து இடையினெருங்கி,
பணைத்த மார்பும் இணைத்தவொண்டோளும்,
மாந்தளிரன்ன பூந்தளிர் மேனியும்,
ஞாயிறுந் திங்களும் ஆயிருந்தேவரும்,
காண்டற்கினியர நாண்டருமியற்கையும்,

உடைத்தாம்

ஓங்கிய நன்னெறி தாங்கிய நன்னூல்,
சீலத்தமர்ந்த பால்யத்திருபனை,
யாரிடத்தமர்ந்து சீரிய மதநூல்,
பலவாராய்ந்து கலவியிற்கினிதாம்,
சின்னூன்முறைப்படி மன்னுபூமடிளியில்,
யாழுங் குழலும் மணிமிடற்றொலியும்,
ஓர்புறம் ஓதுங்கி நின்றுநாடோறும்,
வாழ்த்துக்கூறிக் காதலும் விழைப்ப,
பன்னலந்துய்க்கும் பழயவேட்குமரோய்,

நுங்களின் பேருந்தன்மைவாய்ந்த குணகுணங்களைப் பற்றியும், பெருப்புகழ் நிலையத்தைப்பற்றியும், இனிய நெஞ்சத்தைப்பற்றியும், செல்வமாகிய செல்வாக்குகளைப்பற்றியும், அடைந்தோர் புரத்தலின் ஆண்மையைப்பற்றியும், லோகோபகாரத் தீரத்வத்தைப்பற்றியும், சர்வகலாநிபுண வல்லுநத்தன்மையைப் பற்றியும், எவ்வளவும் வரையறுத்துக்கூற அடியேமான் முடியாதவோர் காரியமே ஆகும். ஆனால் அடியேமும் தோற்றப்படுகிற இஞ்ஞாலத்தில் எந்த ஞான்றும் அழியாததாயவோர் பெருப்புகழுடம்பைப் பெறுவதற்குரிய வோர் மனித ஜென்மமாக இயலுதல் வேண்டுமென இற்றைக்கேறக்குறைய வோர் 5, 6, ஆண்டுகளாகச் செய்துவந்த வோர் நல்வினைப்பயத்தால் 2300 ரூபாய் (இரண்டாயிரத்துமுன்னூறு) கடனே நிகழ்ந்தன. இக்கடனைத் தீர்க்குமாறு இரத்தற்றொழிலுக்கெஞ்சிய வோரிழிதொழில் இஞ்ஞாலத்தில் எதுவுமே இல்லையென உண்மையிற்றெரிந்த அடியேம் எடுத்துக்கொண்ட தொழில்வருவாயில் நின்றும் தீர்த்துவிடலாமென எத்துணைப் பிரயாசை எடுத்தும் முடிவுபெறுமாறில்லாது போயிற்று. அதுகாரணம்பற்றி நிகழ்ந்தவோர் வெறுமைநோயைத் தீர்க்கத்தக்கதோர் வைத்தியநாதன் யாங்குளானென இச்செந்தமிழ் ஞாலமொருங்குந் திரிந்தோடித் தேடியலைந்து தாங்களே எனவோர்ந்து இங்குற நேர்ந்தகாலத்து தக்கதோர் அவிழ்தப் கொடுத்து ஏககாலத்தில் தீர்க்கும் அளவுகடந்த மாட்சிதங்கிய பெரியவோர் வைத்தியநாதரிடத்து வெறுமை என்னும் பிணிக்காக அவிழ்தம்பெறச் செல்லுமிடத்து வெறுமெனே போதலாகாதெனவெண்ணி நமது செந்தமிழ் என்னுங் கடவுள் எமது பேறி

வென்னும் பரவனை பன்னெடுநாளாக மூழ்கச்செய்து ஆராய்ந்து தேர்ந்தெடுத்துக்கொணர்ந்து தரப்பெற்ற உயர்தர நன்முத்துக்களாலே மிகவழகியதோர் இச்சொன்மாலை யொன்றைப் புனைந்து எற்றுனுஞ் சிறந்த நுங்களின் புகழுடம்பின் திருவடிகளிற் சாற்றினேம். எந்தஞான்றும் அழியாததேயாம். விலைமதிப் பற்றதேயாம். மிகவிரித்துக்கூறுவதால் யாதொரு பயனுமில. குபேரனிடம் சென்று,

பல்லெலாந் தெரியக்காட்டிப் பருவரன் முகத்திற்கூட்டிச்
சொல்லெலாஞ் சொல்விநாட்டித் துணைக்காம் விரித்துநீட்டி
மல்லெலா மகலவோட்டி மானமென்பதனைவிட்டி” இரந்

தும் குறையுளதென நிகழ்தல் ஆகாது. அடியேமையும் சாதாரண இரவலர்களோடு சேர்த்து எண்ணிவிடுதலும் கூடாது. அடியேம் எற்றிருக்கும் பெரியவோர் பொதுவாய நற்றொழிலின் நிலைமையை மிகச்செவ்வையாய்க் கவனித்தல்வேண்டும்.

ஒருதிசை யொருவனை யுள்ளி நாற்றிசைப்
பலரும் வருவர் பரிசின் மாக்கள்
வரிசையறிதலோ வரிதே பெரிது
மீதலெளிதே மாவண்டோன்ற
லதுநன்கறிந்தனையாயிற் பொதுநோக்
கொழிமதி புலவர்யாட்டே” எனக் கபிலரென்னும் புலவர்

பெருமான் மலையமான் திருமுடிக்காரி என்னும் வள்ளலை நோக்கி வரிசையறிந்து கொடுத்தலே கொடையாகுமெனக் கூறியுள்ளார்.

23. ஆகவே எமதன்பார்ந்த ஐயிர்! எக்காரணத்தானும் அடியேமை அக்கடனென்னும் ஆபத்தில் நின்றும் விலக்கிப் பாதுகாத்தல் வேண்டுவதுதான் அடியேமுடைய பிரார்த்தனை. இப் பேருதவியானது அடியேம் எடுத்துக்கொண்ட வோர் நற்றொழிலுக்கு யாண்டும் பருவத்தே பெய்யும் வோர் வான்மாரியுமாகும். அடியேமுடைய குடும்பத்தை எமதாயுள்பரியந்தம் புரத்தலினும் பெரிதேயாம். சுபம்! சுபம்!! சுபம்!!!

I. இவ்வியாசத்துடன் லோகோபகார வள்ளலென்றும், கர்னனென்றும் பெருப்புகழ்படைத்து வாழ்ந்து வருகிற ஸ்ரீமான் சா.

ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்களைப் போய்க்கண்டேம். அவர்கள் மிக இனிமையும், நீர்மையும், அன்பும், தயையும் நிறைந்த பெருந்தன்மையோடுகூடித் தங்களின் அந்தஸ்துக்கு எத்துணையோ மடங்கு மேம்பாடான ஒருவராக எம்மைக்கருதி பல இனிய வார்த்தைகளாலேயும் முகமன் கூறி இரண்டு மூன்று நாள் நான் அதுகாறும் உண்டுணர்ந்து அறிந்திராத நல்விருந்தளித்து 250 இருநூற்றைம்பது ரூபாயுந்தந்து இன்னும் சில நாட்கழியட்டும், இதற்குவேண்டுஞ் சில ஏற்பாட்டைச் செய்வோமென்றுங் கூறியனுப்பினார்கள். பின்னர் எம்முடைய சோம்பற்றன்மையால் நான் அவர்களைப் போய்க்காணவில்லை. கடன் மிகுதியால் எமக்கு ஆஸ்தியாகவிருந்த 1500 ரூபாய் பெறுமதியான நஞ்சை நிலமுங் காலியாய்விட்டன. 7, 8 மாஸம் பத்திரிகையும் நடைபெறாமல் நின்றுகொண்டன. அதுசமயம் காரைக்குடிக்குத்தான் வந்திருக்கும் பொழுது கோட்டையூர் ஸ்ரீ இலக்குமி விலாஸம் ரீடிங்ரூம் செக்ரட்டேரியான ஸ்ரீமத் ஐயா! வெ. அ. ராம. வெ. ஸ்வாமிநாதன் செட்டியாரவர்களைச் சந்தித்தேன், ஏன் பத்திரிகை 5, 6 மாஸமாக வரக்காணவில்லையே என்ன காரணம் என்று கேட்டார்கள். விஷயம் இவ்வாறு எனச்சொல்லவே இரண்டு நூறு ரூபாய் ரொக்கமாகத்தந்து பத்திரிகையைவிடாது நடந்துவருமாறு செய்யுங்கள், 4, 6 மாஸம் முன்பின்னுகவாவது சில பெரிய மனுஷியாள்களைக் கண்டு சரிக்கட்டித்தந்தால் வேண்டிக்கொள்கிறேன். அல்லது ஷண்முகநாதன் விட்டவழி விடட்டும், பத்திரிகையைமட்டும் ஒழுங்காக நடப்பதற்குரிய ஏற்பாட்டைச்செய்து வாருங்களெனக் கூறியனுப்பினார்கள். ஆகவே இதுகாறும் யாம் கூறிவந்த பல விஷயங்களாலும் எம்முடைய உடல், பொருள், ஆவி மூன்றையும் இப்பெரிய சமூகத்திற்கே தத்தஞ்செய்தற்குரியதாம் என்பதை மறுப்பார் யாவரேயாவர். "செய்தார்க்குச் செய்வது செத்த பிறகோ" என்ற பழமொழியைத் தெரியாதார் யாவரேயாவர். எம்முடைய கல்வியறிவு, அனுபவம் முதலிய வொருங்கு இப்பெரிய சமூகத்திற்கே வுழைக்கவேண்டுங் கடப்பாடுடையதென்பது யாங்கூறாமலே நன்கு விளங்குகிறதன்றோ? இன்னும் இரண்டாவது காரணம் சிலவற்றைக் கவனித்துக் கூறி இவ்விஷயத்தைப் பூர்த்தியாக்குவோம்.

இரண்டாவது காரணம்.

II நண்பர்காள்! இந்நாட்டுக்கோட்டைவைசிய மகாசமூகமானது, மலர்தலைவையத்து நம் ஆசியாக்கண்டத்தின் தென்றிசையிலே கிழக்கில் வங்காளக்குடாக்கடலையும், மேற்கில் அரபிக்கடலையும், வடக்கில் இமயமலையையும், தெற்கில் இந்துமகாசமுத்திரத்தையும் எல்லைகளாகப் பெற்ற எமக்குச் சொந்தமான இப்பரதகண்டத்திலே யுடைத்தானதென்பதை எவர்கள்தான் மறுக்கக்கூடும்?

III. அறம், பொருள், இன்பம், வீடு எனப்படும் நான்கு புருஷார்த்த விலக்கணங்களையும், செவ்வையாய் விளக்கிக்காட்டப்படுவதும், மிக மேலான வினிமையும், உயர்தரமான நல்ல நீர்மையும், எழுத்துச் சொற்பொருள்யாப்பு அணி எனப்படுகிற நல்ல முறைகளும், தன்னையடைந்தோர் எவருக்கும் பேரின்பங்கொடுக்கும் பெரிய வோர் வன்மையும், தெய்வத்தன்மை வாய்ந்ததும், சுமார் இரண்டுகோடி மக்கட் கூட்டத்தார்க்குத் தாய்மொழியாகவுடையதும் ஆன எம்முடைய தாய்மொழிப் பாஷையான செந்தமிழ்ப் பாஷைக்கே இந்நாட்டுக்கோட்டைவைசிய மகாசமூகமும் உரியதென்பதையும் எவர்கள்தான் மறுக்கக்கூடும்?

IV. "காடுங்கரையும் மனக்குரங்கு கால்விட்டோட வதன்பிறகே, ஓடுந்தொழிலாற் பயனுளதோ வொன்றாய்ப் பலவாயுயிர்க்குயிராய், ஆடுங்கருணைப் பரஞ்சோதி யருளைப் பெறுதற் கன்புநிலை, தேடும்பருவ மிதுகண்டீர் சேரவாருஞ் செகத்தீரே"

"சைவசமயமே சமயம் சமயாதீதப் பழம்பொருளைக்
கைவந்திடவே மன்றுள் வெளிகாட்டுமிந்தக் கருத்தைவிட்டுப்
பொய்வந்துழலுஞ் சமயநெறி புகுதவேண்டா முத்திதருந்
தெய்வசபையைக் காண்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"

"தாகமுறவு கலந்துண்ணக்கண்டீ ரகண்டாகார சிவ [மாய்]
போகமெனும் பேரின்பவெள்ளம் பொங்கித்ததும்பிப் பூரண
ஏகவுருவாய்க் கிடக்குதையோ வின்புற்றிட நாமினியெடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாருஞ் செகத்தீரே"

எனக் கூவியழைத் தப்பெருங்கருணைத்தடங்கடலுருவமாகிய நமது தாயுமானஸ்வாமிகளின் திருவாக்கால் வெளிப்படும்

நம் சைவசமய மாட்சியானது வோர்புறமிருப்பினும், தோற்றப்படுகிற மிகவும் பெரிதான இச்செகமிசையுடைத்தாயிருக்கும் ஏனைய பல சமயங்களும் தங்கள் தங்களுக்குரிய பாஷைகளானும் மொழிபெயர்த்தெடுத்துத் தெரிந்துகொள்வதற்குத் தகுந்த உடர்தரமாட்சியுட் டங்கிக்கிடக்கும் எமக்குச் சொந்தமான எம்முடைய சைவசமயமே இந்த நாட்டுக்கோட்டைவைசிய மகா சமுகத்திற்கும் உரித்தென்பதையும் எவர்கள்தான் மறுக்கக்கூடும்?

V. "யாதொரு தெய்வங்கொண்டீ ரத்தெய்வமாகியாங்கே, மாதொருபாகனார்தாம் வருவர்" என்ற வேதவாக்குப்போன்று தோற்றப்படுகிற முச்சகங்களுக்கும், பஞ்சபூதங்களுக்கும், பகலவன் மதியம் முதலியவைகளுக்கும் ஏக நாயகனாகவும், மாதொருபாகனாகவும், எல்லாம் வல்ல முழு முதற்கடவுளாகவும், எமக்குச் சொந்தமாகவும் விளங்கப்படுகிற பரசிவப்பெருமானே இப்பெரிய நாட்டுக்கோட்டைவைசிய மகாசமுகத்திற்கும் உரித்தென்பதையும் எவர்கள்தான் மறுக்கக்கூடும்.

VI. கலியுகவருடம் மூவாயிரத்து, எழுநூற்று, எழுபத்தைந்தில் பூவந்திச்சோழனால் நிகழ்ந்த கொடுங்கோன்மையால் தங்களின் தங்கை, தமக்கை, தாய், தாதை, மூதாதை முதலானவர்களையெல்லாம் ஒருங்குமிழந்து, ஆத்மநாத சாஸ்திரியாரவர்களின் பாதுகாப்பிலே வாழ்ந்துவந்த நமது வகுப்பு ஆயிரத்தைந்நூற்றிரண்டு பால்யர்களும், இற்றைக்காலஞ் சுமார் இருபஃதாயிரங் குடும்பங்களாகப் பெருகுவதற்கும், ஏராளமான பெருஞ்செல்வந்தர்களாவதற்கும், அதி முக்கிய தருமகர்த்தர்களாவதற்கும், முதன்முதற் "பானை பிடித்தவள் பாக்கியவாட்டி" என்ற பழமொழிக்கிணங்க எந்தவாற்றானுஞ் சிறந்த வேளாளர் வகுப்பிலிருந்தே விவாகஞ்செய்துகொண்டார்கள் என்பதையும் எவரேனும் மறுக்கக்கூடுமா?

VII. நண்பர்காள்! "சமன்செய்து சீர்தூக்குங் கோல்போலமைந்தொருபாற் கோடாமை சான்றோர்க்கணி" என்பனபோன்று நியாயக்கோடின்றிக் கவனிக்கப்புகுந்தால் வருணம் இருவேறு பிரிவினதாகும். அஃதாவது பிரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரர் என்பன ஒருவேறு பிரிவும், தேவர், மனிதர், விலங்கு, புள்,

ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் (ஆகிய எழுவகைத்தோற்றம்] என்பன மற்றொரு பிரிவும் ஆம் இவ்விருவேறு பிரிவுள், தொழிற்பேதத்தால் ஒருவேறு வகையும், சிருஷ்டிபேதத்தான் மற்றொரு வகையும், ஆமென்பது அறிஞர்கள் எவரும் ஒப்பமுடிந்ததேபாம். தொழிற்பேதத்தால் நிகழ்ந்த வருணபேதத்தினும், சிருஷ்டிபேதத்தால் நிகழ்ந்த வருணபேதமே மிக வாய்மையுடைத்தென்பதையும், மிக்கச் சிறப்புடைத்தென்பதையும் எவர்தான் மறுக்கமுன் வருவார். எத்துணைச் சிறந்தவொரு எவரானும் மறுத்தற்கியலாத (இபற்கையில்) சிருஷ்டிபேதத்தால் நிகழ்ந்த வருணபேதத்தைக் கவனிக்கப்புகின் இந்நாட்டுக்கோட்டைவைசிய மகாசமுகமும், எம்மோடுடன்பிறந்த எம் அருமைச் சகோதர சகோதரிகளான மனித வகுப்பைச்சார்ந்த ஒரு பெருஞ்சமுகமே என்பதை எவர்கள்தான் மறுங்கக்கூடும்.

VII. நண்பர்காள்! அபேதக்கட்சியை யொழித்தும், பேதக் கட்சியிற் கொஞ்சம் விழித்தும் சிறிது கவனிப்போம். நமது வைசிய சமுகமானது பொருளீட்டும் வன்மையையும், தன்மையையும், அதற்காக வேறுபடுந் துன்பங்களையும்பற்றிக் கவனிக்கப் புகுந்தால் அஃதொரு பேராச்சரியத்தையே விளைவிக்கும். அவைகளையெல்லாம்பற்றி மிகச்செவ்வையாக விரித்துரைப்பதும் ஈங்ஙனம் பொருத்தமாகாது. எனினும் தம்முடைய பால்மணமாறாப் பாலர் முதலாய மனைவிமக்களையும், பந்துமித்திரர்களையும் விடுத்து, "வைசியர்க்கழகு வளர்பொருளீட்டல்" "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்ற வேதவாக்கியங்களுக்கிணங்கி பல்லாயிரம் மயிற்றூரம் மிகுதியும் பயங்கரமான கடல்யாத்திரை புரிந்து பல அயல் நகரங்களுக்குச்சென்று, மூன்று நான்கு வருஷம் ஒரே கணக்காக ஆங்கு தங்கி ஏனைய பல வகுப்பாரோடும் பழகி பெருநட்புக்கொண்டு மிகுதியும் இதமாகத் தொழில்களைக் கொண்டு நடாத்தி இலக்ஷக்கணக்குகளிற் பொருள்களை மீத்துத் தம்முடைய தாய்நாடாகிய இவ்விடத்திற்குக்கொணர்ந்து தங்களின் சுயநலங்களைக்கூட மிகுதிபாகக் கவனியாது, நமது சைவசமயத்தை எவ்வாறு வளர்ப்போம், வேதாகமங்களை யெவ்வாறு அந்தணைக் தமர்கள்பால் விளங்கச்செய்வோம்,

"தேவர்குறளும் திருநான்மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும்—கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவாசகமென் றுணர்"

என்றவாற்றையுணர்ந்து தமிழ் மறையாகிய திருக்குறள், தேவாரம், திருவாசகம், திருக்கோவையார், திருமந்திரம், வேதாந்த முதலியவைகளையெல்லாம் நமது செந்தமிழ்ச் சகோதர சகோதரிகள்பால் மிகச்செவ்வையாக எவ்வாறு பரவச்செய்வோம் தமிழ்ப்பாஷையை எவ்வாறு வளர்ப்போம், ஏழை எளியவர்களை எவ்வாறு பாதுகாப்போம், அறக்கூழ்ச்சாலை எங்கு எங்கு அமைப்போம், வேதபாடசாலைகள், தேவாரபாடசாலைகள் எங்கு எங்கு அமைப்போம், குருபூஜை மடங்கள் எங்கு எங்கு கட்டுவோம், நமது பூர்வீகத் தேவாலயங்களை எவ்வாறு பன்னெடுங்காலம் நிலைநிற்கச்செய்வோம், எந்த மார்க்கத்தாற் பெரும்புகழீட்டுவோம், பல நல்ல நீதிமார்க்கங்களையும் எவ்வாறு நிலைநிற்கச்செய்வோம், எங்கு எங்கெல்லாம் ஊருணிகள் அமைப்போம், எங்கு எங்கெல்லாம் நந்தனவனங்கள் அமைப்போம், பேரறிவாண்மையைப் பறிகொடுத்த சில மடாதிபதிகளையும் சில ஜமீன்களையும் எவ்வாறு சீர்திருத்தஞ்செய்வோம், என்பனவாய பல நல்ல மார்க்கங்களையுந் தம்முள்ளே மிகச்செவ்வையாகச் சிந்தித்து, தீரத்தெளிந்து "நீரிற்குமிழியிளமை, நிறைசெல்வம் நீரிற்சுருட்டும் நெடுந்திரைகள், நீரில் எழுத்தாகும் யாக்கை" என்பனவற்றையோர்ந்து, நமது பரதகண்டத்துள் தமது பகுதியல்லாத பிற பகுதிகளிலே எத்தனைச் சத்திரங்களைக்கட்டி யதற்குவேண்டும் பொருள்களையும் நிலைநாட்டி வைத்திருக்கிறது. எத்தனை (எழுபத்தைந்து நாயன்மார்கள்) குருபூஜை மடங்களை நடாத்திவருகிறது. எத்தனை யாலயங்களுக்குத் தர்மகர்த்தர்களாயிருக்கிறது. எத்தனைப் பசுமடங்களைக்கட்டி எத்தனைச் சிவாலயங்களுக்குப் பால் கொடுத்துவருகிறது. எத்தனைச் சிவாலயங்களுக்குப் பத்துலக்ஷக்கணக்கு ரூபாய்களையளித்துத் திருப்பணிகளாற்றி மகா கும்பாபிஷேகம் நடத்தியிருக்கிறது. எத்தனைப் பாடசாலைகளை வைத்துக்கொண்டு நடாத்திவருகிறது. எத்தனை ஊருணி நந்தனவனங்களையமைத்து வைத்திருக்கிறது. எத்தனைத் தருமங்களைக் கையாண்டுவருகிறது.

எத்தனைச் சங்கங்களுக்குத் தலைமைவகித்து நிற்கிறது. எத்தனைச் சங்கங்களுக்குப் பெரும்பொருள் கொடுத்து நிற்கிறது. எத்தனை கன்னிகாதானஞ்செய்து வைக்கிறது. எத்தனை அகரங்கள் கட்டியந்தணர்களுக்குத் தானஞ் செய்திருக்கிறது. எத்தனையாலயங்கள் புதிதாகக் கட்டியிருக்கிறது. திருவிழாக்களை எத்தனைச் சீர்சிறப்போடு நடாத்திவருகிறது. எத்தனை நகரங்களைச் சீர்திருத்தஞ்செய்து நிற்கிறது. இன்னும் இவைபோன்ற எண்ணிலடங்காத பல நன்மைகளையுஞ் செய்துவருகிறது. இவைகளையெல்லாமுணராத அயல் வகுப்பார் எவரேனும் உளரா? அறிவு நிரம்பாத சிறுவர் சிறுமிகளுக்குக்கூட இஃது மிகத்தெளிவாக விளங்குமே! இப்பெரிய வைசிய சமூகமானது ஏனைய வகுப்பாருக்கென்னை அடிமைப்பத்திரமா வரைந்து கொடுத்திருக்கிறது? இவ்வாறு செய்துதான் தீரல்வேண்டுமெனக் கட்டாயச்சட்டமா கடவுள் கற்பித்திருக்கின்றான்? அடடா! என்ன கருணை! என்ன தன்மை! என்ன வன்மை! என்ன கீர்த்தி! என்ன அடக்கம்! என்ன சாந்தம்! என்ன விவேகம்! என்ன கௌரவம்! எத்தனை தூரம் ஆழ்ந்த கருத்துடையதென்பதைக் கவனியுங்கள்!

"கைமாறுவேண்டா கடப்பாடுமாரி
மாட்டென்னாற்றுங் கொல்லோவுலகு"

என்ற தேவபெருமான் திருவாக்குக்கிலக்காகவன்றோ காணப்படுகிறது. கல்வியபிவிர்த்திக்காக எத்தனை இலக்ஷக் கணக்குகளிலுதவிவருகிறது. நமது சைவசமயத்தையும், எல்லாம் வல்ல நமதிறைவன் திருவருட் குமாரனை முருகக்கடவுளையும் வெகு விமரிசையாகப் பலவயனகரங்களிலும் நிலைநாட்டி எத்தனைச் சீர்சிறப்போடு திருவிழாக்களையும் நடாத்திவருகிறது. ஆனால் இத்தனை யபாரமான வள்ளற்றன்மை பூண்டு நமது பாரத மாதாவிற்கும், நமது சைவசமயத்திற்கும், பெருந்தொண்டு புரிந்து மலையிலக்காக இஞ்ஞாலத்திற்கே ஒரு அழகுவாய்ந்த திருமுகம் போன்று இலங்குவதான இந்நாட்டுக்கோட்டை வைசிய மகாசமுகத்தின் மாட்சியைப்பற்றியும், இச்சமுகத்தை நாளுக்குநாள் மேன்மேலும் அபிவிர்த்தியாகி வளர்ந்தோங்கி வளர்ந்து நீடூழிகாலம் நிலைநிற்கவேண்டும் சில திருத்தங்களைப்பற்றியும் ஏனைய

வகுப்பைச்சார்ந்த எவரேனும் ஒருவர் ஞாபகப்படுத்தலாவது முன் வந்ததுண்டா? எற்றானுஞ் சிறந்த இந்நாட்டுக்கோட்டை வைசிய மகாசமுகமானது தம்முடைய மாட்சியைத் தாமே புகழ்ந்து வரைந்துகொள்ளுமா? தாமே புகழ்ந்துபேசவுஞ் செய்யுமா? இப்பெரிய மகா சமுகத்தைச்சார்ந்த சிறுவர் சிறுமிகளிடத்துங்கூட இவ்வழக்கம் எட்பிளவுங்கூடக் கிடையாதே? இச்சமுகத்தினின்றும் எத்தனை வித்வான்கள் ஆயிரக்கணக்காய் கொள்ளையடித்துக்கொண்டு போகவில்லை? தற்கால நாகரீக நிலையம்பெற்று சீர்திருத்தக் கர்த்தர்களைப்போன்று நடித்து "பிச்சைக்கு மூத்த குடிவாழ்க்கை பேசுங்கா லிச்சைபலசொல்லி யிடித்துண்கை" என்பதற்கிணங்கி எத்தனை பெயர்கள் செல்வவந்தர்களாகவில்லை? எத்தனை பெயர்கள் தொலைக்குக் கடிதங்கள் பெற்றுக்கொண்டுபோகவில்லை? எத்தனை பெயர்கள் பிள்ளையார்கோவில் கட்டுகிறோமென்றும், குருபூஜைமடம் கட்டுகிறோமென்றும், திருப்பணி செய்கிறோமென்றும், சங்கங்கள் ஸ்தாபிக்கப்போகிறோமென்றும் பொய்க்கதை கூறிப் பொருள் சேகரித்துக்கொண்டு போகவில்லை? நியாயத்துக்கு விரோதமாகவே நிரம்ப மிகுதியான பீஸ் வாங்குகிறோமெனத் தங்களுடைய மனமே தங்களை வாதிக்க எத்தனை வக்கீல்கள் இலக்ஷாதிபதிகளாகவில்லை? பகற்கொள்ளைக்காரர்களாய் எத்தனை உத்தியோகஸ்தர்கள் கொள்ளையிட்டுக்கொண்டு போகவில்லை? கல்வியும், அறிவும் நிரம்பப்பெற்ற எத்தனை யந்தணோத்தமர்கள், எத்தனை சைவர்கள் சமுசாரசகிதமாய்ப் பெருஞ்செல்வங்களையும் பெற்று வாழ்ந்துவரவில்லை? இந்நாட்டுக்கோட்டை வைசிய மகாசமுகத்திற்கு ஏனைய பகுதிகளால் எந்தவிதமான வுபகாரமில்லாதொழியினும் உபத்திரவமில்லாமலும் இல்லை. யாங்ஙனமெனின்? பொதுவாகத் திருப்பணிகளாற்றப் புகுவதில் ஆங்காங்குடைத்தாய சில செல்வவந்தர்களாலும், தர்மகர்த்தர்களாலும், அதன்மேல் நிற்கும் கமிட்டியார்களாலும் அளவுகடந்த கட்ட நட்டங்களை ஏற்படுகிறது. அவைகளையெல்லாம் விரிக்கப்புகின் மிகுதியும் பெருகும். முக்குணவயத்தோடுகூடிய மனிதவர்க்கத்தாமொருங்கும், யாமே பேரறிவாண்மையுடையேம்; யாமே பெருஞ்சிறப்புடையேம், யாமே எற்றானுஞ் சிறந்த கல்வியுடையேம், யாமே பல காரியாதிகளையுங்கொண்டு முடிக்கத் தகுந்த வன்மை

யுடையேம், யாமே சமயப்பற்றுடையேம், யாமே நாகரீகமுடையேம், யாமே காருண்யமுடையேம் என இவ்வாறு வெறுமனே நினைப்போடுங்கூட மீண்டும் இஞ்ஞாலத்தில் நடைபெறக்கிடக்கும் ஒவ்வொரு விஷயங்களுக்கும் யாமே வல்லமையுடையேமென நினைந்து கிடந்து துஞ்சும் இயற்கை வழக்கத்தையுடைத்தாகவே காணப்படுகிறது. மனிதவியற்கையும், தன்மையும், வாழ்நாளும் இத்தனை வன்மையுடையதென நினைத்துப் பார்க்குமியற்கை கொஞ்சமுங்கிடையாது. இப்படிப்பட்டவர்களால் நிகழும் கட்ட நட்டங்களைப்பற்றி நாமொரு பொருட்படுத்துவதும் நியாயமாகாது. சாதாரணமாக நாளிது வருஷம் சென்ற ஆனிமாஸம் இருபத்தேழாம் தெய்திபன்று நடந்தேறிய திருவிடைமருதூர் மகா கும்பாபிஷேகத்தாலும், அவ்வாலயத்திருப்பணியாலும் இந்நாட்டுக்கோட்டைவைசிய மகாசமுகத்திற்கு நிகழ்ந்த மனவருத்தத்தைக்கவனிக்கப்புகுந்தால் அதற்கோர் அளவு சங்கையில்லாதனவாகவே காணப்படுகிறது. அதற்குக்காரணம் திருவாவடுதுறை மடத்தாரேயாகின்றனர். அம்மடத்தார் அவ்வாலயத்திற்கு அதிபதி நாமே என்கின்றனர். அவர் கூறுமாறுபோல் அவ்வாலயத்திற்கு அதிபதியவராக இருப்பின் அவ்வாலயம் முதற்காரணமாக இந்நாட்டுக்கோட்டைவைசிய மகாசமுகத்தினிடம் 7, 8 லக்ஷ ரூபாய்களை இறைமாகப்பெற்றுக்கொண்ட ஒரு யாசகர் கொஞ்சமும் தமது பேரறிவாண்மையை யிழந்து இப்பெரிய மகாசமுகத்திற்கு இத்தனை மனவருத்தத்தை யிழைத்திருப்பாரா? மேலும் அவ்வாலயத்திற்கு அதிபதி நாமே என்கிற வார்த்தையின் பொருள் என்னவென்பதைத் தம்முள்ளே யோர்ந்து நினைந்து ஊகித்துக் கவனிக்கப் புகுந்திருப்பாரேயாயின் அதிபதி நாமே என்னும் வார்த்தை யாங்ஙனம் நிகழ்ந்திருக்கும்? மேலும் அவ்வாலயத்துக்கு அதிபதி நாமே நாமே என உண்மையில்லாத பொய்மொழியொன்றைப் பகர்ந்து இவர்க்கு முந்திய எத்தனை மடத்தவர் மறைந்தொழிந்து கொண்டார்களென்பதையும், அவ்வாலயமானது யாம் ஒரு மடத்தவருக்குஞ் சொந்தமல்லேம் அங்ஙனஞ் சொந்தமானால் யாம் அம்மடத்தவரோடே மறைந்தொழிந்து போயிருக்கமாட்டோமா? யாம், எமதென்னும் அகங்காரமமகாரங்களை யொழித்த சைவசமயிகட்கே யாம் சொந்தமாவேம் எனப் பன்னெடுங்காலமாக நிலைநின்று

வருவதையும் இவர் உணர்ந்திலர்போலும்! இம்மடத்தாரை கல்வியறிவு நிரம்பப்பெற்றவரென்றும், இரண்டு பாஷையில் மகாவல்லுநரென்றும், வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், தர்க்கம், வியாகரணம் முதலியவைகளிலெல்லாம் கரைபோகக்கண்ட மிகு சமர்த்தரே என்றும், காமானுபவத்தில் ஸ்ரீ கிருஷ்ணபகவானையே ஒப்பாரென்றும், சிவஞான யோகப்பெருஞ்செல்வரேயாமென்றும் அறிவிலார் சில்லோர் கூறுவதையும் எம் செவிகளிரண்டுங் கேட்க மனமானது மிகவுஞ் சந்தேகப்படுகின்றது. என்னை? அங்ஙனமானால் அம்மடத்தவர் அம்மடத்தைவிட்டு இதுகாறும் நீங்காதிருப்பரோ? காணப்படுகிற ஆன்மகோடிகளெல்லாம் தாமான தன்மையைத்தெரியாதும் விழிப்பரோ? அவ்வாலயத்திற்கு அதிபதி நாமே என அறியாதுங் கூறுவரோ? சைவசமயத்தை வளர்த்தற்கும், அச்சமயக்கொள்கைகளைப் பரவச்செய்தற்கும் தாமொரு அடிமைக்காரரென்பதையும் மறப்பரோ? அவ்வாதீனத்தின் மகத்துவத்தையும் தன்மையையுங் கெடுப்பரோ?

"அங்ஙனமே நின்வடிவமானசுகர் கூப்பிட நீ,
எங்கும் ஏன்! ஏன்! என்றது என்னே பராபரமே"

என்றதைத் தெரியாதுந் திகைப்பரோ?

"முத்தனைய மூரலும் பவளவாயின் சொலு
முகத்திலகு பசு மஞ்சளும்
மூர்ச்சிக்க விரகசந்ததமேற்ற விருகும்ப
முலையின் மணிமாலை நால
வைத்தெமை மயக்கி யிருகண் வலையை வீசியே
மாயாவிலாசமோக
வாரிதியிலாழ்த்திடும் பாழான சிற்றிடை
மடந்தையர்கள் சிற்றின்பமோ
புத்தமிர்த போகம்புசித்து விழியிமையாத
பொன்னாட்டும் வந்ததென்றாற்
போராட்டமல்லவோ பேரின்பமுத்திப்
பூமியிலிருந்து காண
எத்தனைவிகாதம் வருமென்று சுகர்சென்றநெறி
இவ்வுலக மறியாததோ?

என்ற நம் தாயுமானார் திருவாக்கையோர்ந்து அம்மடத்தினின்றுந்துறந்து இமாலயம், பொதிகை முதலிய பருவதங்களை நாடிச்செல்லாதும் உழல்வரோ? அறிவிலார் பலரோடுஞ் சார்ந்திக் கூறவும்படுவரோ? இவ்வைசிய மகா சமூகமானது பல சிவஞான யோகச் செல்வர்களையுமுடைத்தாகப் பெற்றதென்பதைத் தெரிந்து மதியாதும் விழிப்பரோ? எந்தக்காலமோ ஒரு சமயம் நிகழக்கூடிய ஒருபெரிய மகா கும்பாபிஷேகத்திற்காகமிகுதியும் பேராவலோடு நிகழ்ந்த ஒரு பெருங்கூட்டத்தில் உத்தியோகத்தன்மையும், செல்வத்தின் வன்மையும், அந்தஸ்தும் உடைத்தான சிலர்க்கு அக்கும்பாபிஷேகத்தெரிசனம் வேண்டியும், மற்றைய பலர்க்கு வேண்டாமலும் இருக்குமோ? அடடா! என்ன அறிவின்மை! இதற்காகத் தெரிசனச்சீட்டும் (டிக்கட்டுகளும்) ஏற்படுத்துவரோ நாம் யார்? நம்முடைய மடம் யாது? நம்முடைய வேடம்யா? இவ்வாதீனத்தின் முந்தையோர்களின் மாட்சியும் நிலைமையும் என்னை? ஒரு பெரிய வைதீக சமூகத்தின் மனத்துக்குத் தீங்கிழைப்பார் பெறுங்கதி என்னை? மீண்டும்

"சென்றது கருதார் நாளைச் சேர்வது நினையார் கண்மு
னின்றது புசிப்பார் வெப்பினிலவாய் விண்விழுது வீழ்ந்து
பொன்றின சவம்வாழ்ந்தாலும் புதுமையா வொன்றும்பாரார்
நன்று தீதென்னார் சாட்சி நடுவான சீவன்முத்தர்"

"கூடுதலுடன் பிரிதலற்று, நிர்த்தொந்தமாய்க் குவிதலுடன் விரிதலற்று, குணமற்று, வரவினொடு போக்கற்று, நிலையான குறியற்று, மலமுமற்று, நாடுதலுமற்று, மேல்கீழ் நடுப்பக்கமென நண்ணுதலுமற்று, விந்துநாதமற்று, ஐவகைப பூதபேதமுமற்று, ஞாதுருவின் ஞானமற்று, வாடுதலுமற்று, மேலொன்றற்று, இரண்டற்று, வாக்கற்று மனமுமற்று மன்னுபரிபூரணச் சுகவாரி தன்னிலே வாய்மடுத்துண்டவசமாய்த் தேடுதலுமற்றவிடம் நிலையென்று மௌனியாய்ச் செத்தசவம்போலிருப்பதன்றோ! நம்முடைய பேரிலக்கணம் என்பது முதலியவைகளைக் கொஞ்சமுங் கவனிக்கும் உணர்ச்சியற்றொருமாவரோ? இத்தகைய மடத்தாரை இம்மடாதீனத்திற்கு அதிபதியாக்கிய நல்லூழும் இவரால் எள்ளவும் பெறுகிறது. கும்பாபிஷேகத் தெரிசனங் கிடைக்காமற்

போன ஜனங்களின் மனத்திடை நிகழ்ந்த கொடுந்தீயானது இம்மடத்தாரின் சரீரத்திற் பற்றுமோ அல்லது இம்மடத்தாற் அந்தப் புரஸ்திரீகளின்மீது பற்றுமோ? அந்தோ! இலக்ஷக்கணக்குகளிற் பெரும்பொருளளித்துத் திருப்பணிகளாற்றி இலக்ஷக்கணக்கான ஜனங்கள் இஃதையல்லாமல் நம்முடைய வாணாளிறுதிக்குள் இம்மாதிரியான ஒரு பெரும்புண்ணியப்பேற்றைக் கொடுக்கும் மகா கும்பாபிஷேகம் ஒன்று நிகழ்வது என்னை கொனிச்சமென நினைந்து ஏககாலத்தில் ஒன்றுகூடித் தெரிசித்து மகிழ்ந்து ஆனந்த சாகரத்தில் மூழ்குவதற்கான பெரியவோர் விசேஷக்காரியத்தை முடித்த நம் சைவசமயத் திருத்தொண்டரான ஒரு பெரியார்க்கும் இக்கும்பாபிஷேகத் தெரிசனம் உரித்தாகாமற் போமாறு செய்வரோ! இப்பெரிய வைசிய மகா சமுகத்தைச்சார்ந்த அப்பெரியாரை உண்மையான சிவனடியாருள் ஒருவரேயாம் என்றும், நம்போன்ற வேடதாரியல்லவென்றும், உணராது போவரோ?

"ஈசனடியாரிதயங் கலங்கிடத்
தேசமும் நாடும் சிறப்பும் அழிந்திடும்
வாசவன் பீடமும் மாமன்னர் பீடமும்
நாசமதாகுமே நம் நந்தியாணையே"

என்ற திருமூலதேவர் திருவாக்கையுணராதும் ஒழிவரோ?

"முகத்திற் கண்கொண்டு காண்கின்ற மூடர்காள்,
அகத்திற் கண்கொண்டு காண்பதேயாநந்தம்"

என்றதை மறந்து, கொஞ்சமும் மானவெட்கமின்றி, எல்லாம் வல்ல இறைவன் திருவீடு கும்பாபிஷேகம் நிகழுங்கால்

"விடக்கே பருந்தின் விருந்தே கமண்டல வீணனிட்ட
முடக்கே புழுவந்துறையிடமே நலமுற்றுமிலாச்
சடக்கே கருவி தளர்ந்துவிட்டால் பெற்றதாயுந்
தொடாதத் துடக்கே" என்ற முண்டத்தை நகர்வலஞ் செய்யவும் சம்மதிப்பரோ? அடடா! இஃதென்னை யறிவின்மை! ஏ! ஏ! இஃதென்னை வியப்பு! ஏ! அம்மே! ஏ! எம் அருமைத்தாயான ஏ! பாரதமாதே! நீயும் இப்பிள்ளையைப் பெற்றாயே! எவ்

வாறு தாங்கி வளர்த்தாயோ! நின்னுடைய சுரோணிதமானது இத்துணைக் கேவலத்தன்மையையுடையதோ! குலத்தைக் கெடுக்குங் கோடரிக்கொம்பு போன்றன்றோ காணப்படுகிறது. இப்பிள்ளையை நீ! மிகச்செவ்வையாக அடக்கி யாண்டுகொள்வாயேல் நின் பெருந்தன்மைக்கு மிக நல்லதாயிருக்குமே. நின்னுடைய இம்மடப்பிள்ளையானது தான் இருக்கவேண்டுந் தன்மையிலிருந்திருக்குமானால் இப்பெரிய வைசிய மகாசமுகமானது நவரத்தினங்களாலிழைத்தவோர் சிவிகையிற்றூக்கிவைத்து நகர்வலஞ்செய்யுமே. சம்பந்த மூர்த்தியை அப்பர்ஸ்வாமிகள் சுமந்ததுபோலும் ஆகுமே. நினக்குப் பிள்ளையும், எனக்குச் சகோதரனும் ஆனவோர் பாசமன்றோ இத்துணைதூரம் மீண்டும், மீண்டும் இடித்து இடித்துச் சொல்லவேண்டும் ஆவசியகம் நேரிடுகிறது. அப்பா! ஏ! அருமைக்குழந்தாய்! நினக்கு அவன் எத்துணை இளையவனாக இருப்பினும் அவன் மிக்க விவேகசாலியேயாவான். நினக்குக்கூறும் நன்மதிகளை நீ! நன்றாகக் கவனித்துப்பார். அவன்மீது வீணாக அஹங்காரங்கொள்ளாதே. அவன் சொல்வன ஒருங்கும் மிக நியாயமாகவே காணப்படுகிறது. நீ! எத்துணைச் சிறப்புவாய்ந்தவனாகவிருப்பினும், வனப்புவாய்ந்தவனாக இருப்பினும், வருஷம் ஒன்றுக்கு இலக்ஷக்கணக்கான பொருள் வருவாய்க்குரிய அதிபதியாக தற்காலம் விளங்கினும் நீ தரித்துக்கொண்டிருக்கும் வேடத்துக்குத் தக்க நன்னிலையிலே நிற்காதொழிவையேல் அந்தோ! எற்றும் பயன்படமாட்டாய்.

"வேடநெறி நில்லார் வேடம்பூண்டென்பயன்" என்றும்,

"தன்னையறிந்திடுந் தத்துவஞானிகள்
முன்னைவினையின் முடிச்சையவிழ்ப்பார்கள்
பின்னைவினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனருளாலே"

என்றும் வந்த திருமந்திரத்தை நன்றாகவுணர். பாமர வர்க்கத்தாரோடு ஒட்டிய சித்துவிளையாட்டை மறந்துவிடு. வேசை தாசிகளின் தூமையைப்பருகித் தொலையாத பிறவியைத் தொலைத்துவிடாதே. சைவசமயத்துக்கும், செந்தமிழ்ச் சமுகத்துக்கும் எவ்வளவும் விரோதஞ்செய்யாதே. நீ! எவ்வளவு தெரிந்தவனாக

விருப்பினும் இங்ஙனங் காணப்படும் எந்த விஷயங்களினும் மனத்தை மடிமிசை தாக்கல்செய்யாமல் கவனித்துப்பார். பரதாரங்களின்மீது செல்லும் நின்மனத்தை ஒரு பழஞ்செருப்பாற் புடை. அதற்கிணங்கித் தலைநீட்டும் நின் ஆண் கருவியில் கெரோசின் ஆயிலில் (மண் எண்ணையில்) நனைத்த கந்தையைச் சுற்றி நெருப்பினைக் கொளுத்து. அடா! ஏ! அதர்மசண்டாளா! வேண்டுமானால் ஒரு லக்ஷரூபாயுடன் அப்பட்டத்தினின்றும் விலகி விவாகத்தைச் செய்துகொள். அடா! கெடுவாய்! ஆதீனத்தை அசங்கியம் பண்ணாதே. நினக்குப் பெரியோர் செய்துவைத்திருக்கும் நான்முறைச் சட்டத்திற்கு மாற்றமாக வியலாதே. நீ! செய்கிற எவ்விதச் செயல்களும் எனக்கு நன்றாகத்தெரியும். நின் சித்துக்களையெல்லாம் இஞ்ஞாலம் எதனைக் கெட்டசெயல் என்று கருதப்படுகிறதோ அதனிற் செலுத்தாதே. "மழித்தலும் நீட்டலும் வேண்டாவுலகம் பழித்த தொழித்துவிடின்" என்ற எமதருமைப் புதல்வனின் திருவாக்கை நன்றாகவுணர். சரீரத்தோடு கூடித் தோற்றப்படுகிற எந்த ஆன்மாவுக்குந் துன்பஞ்செய்யாதே. உழைத்துத்தின்னச் சங்கடப்பட்டு ஆங்கு வோடிவரும் எந்தச் சிறுவர்களுக்கும் காவித்துணியைக் கட்டிவிடாதே. அடா!. ஏ! சிவசிவாமுண்டாகாரமே! காவிவஸ்திரத்தின் மகத்துவத்தைக் கெடுத்துவிடாதே. நாயோட்டும் மந்திரத்தை யுச்சரித்து எவர்களானும் வெறுக்கப்பெறாதே, விபூதியையும், ருத்திராக்ஷத்தையும் நீ தீண்டாதே. மடாதிபதி என்னுஞ் சமுசாரத்தைவிட்டு நீங்கு. நீ! ஒரு அவதார புருஷனாக முன் வரக்கருது. உண்டுண்டுறங்கித் துஞ்சிப்போகாதே. வைசிய சமுகத்திற்கிழைத்த தீங்கிற்காக நல்லவோர் பிராயச்சித்தஞ்செய். இவ்வவகீர்த்தியை விட்டு நல்ல கீர்த்தியை நாடு. நாட்டுக்கோட்டை வைசிய மகா சமுகம் வேண்டுகோளுக்கிணங்கி இஃது வரையப்பட்டதென நின் கனவினும் நினையாதிரு. நின்நல்லூழே இவ்வாறு வரையச் செய்ததெனத்தெளி. அங்ஙனமானால் வாய்மையானது வெறும் வெளி. அஃதன்றோ காட்டுந்தூயவெளி. அதற்கெல்லாங் காரணம் இரண்டுவளி அப்பொழுதன்றோ நீ துய்ப்பதுங்களி. அல்லாதவரை நின் தோற்றம் வீண் பழி. ஆகலின் நின் கெடுமதியொழி. இதற்காக எமதப்பன் கூறுவதுதான் வழி. இவ்வருமையான இந்நல்ல வியாசத்தைக்கண்டு நின்மனம் புழுங்குமேல்,

"இன்னாசெயினும் இனியவொழிகென்று
தன்னையே தானோவினல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானகநாட
விலங்கிற்கும் விள்ளலரிது" என்றும்,

"காதலாற் சொல்லுங் கடுஞ்சொலுவர்த்துரைக்கு
மேதிலா ரின்சொலிற்றீதாமோ—போதெலா
மாதர்வண்டார்க்கு மலிகடற்றண் சேர்ப்ப
வாவதறிவார்ப்பெறின்" என்றும்,

"எள்ளிப்பிறருரைக்கு மின்னாச்சொறன்னெஞ்சிற்,
கொள்ளிவைத்தாற்போற் கொடிதெனினும்—மெள்ள
அறிவென்னு நீற்றாலவித்தொழுகலாற்றிற்,
பிறிதெனினும் வேண்டாந்தவம்" என்றும்,

நீர்கிழியவெய்த வடுப்போலமாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்" என்றும்!
"வந்தவர் வாழ்த்தினும் வசையுரைக்கினும்
சந்தனம் பூசினும் தசையைக் கொய்யினும்
முந்துறும் வினையினான் மூண்டதாமெனச்
சிந்தையிலுன்னியான் சினத்தை வெல்வனே" என்றும்,

காணப்படுகிற மேலோர் திருவாக்குகளை மிக நன்றாகக்கவனித்துத் தெளிந்து, அறிவின்மையானிகழ்ந்த வப்புழுக்கத்தையொழித்து எம்மைப்போன்றடங்கு. இஃதொரு நல்லார்தங் கூற்றே எனக் கண்டு மடங்கு. இதுமுதற்கொண்டேனும் நினக்குரியவோர் நல்லொழுக்கத்திற் பயிலத்தொடங்கு. இஃதேயாம் நின்போன்ற மடமடத்தார்க்குரிய சடங்கு. "இன்னாச்செய்தாரை யொறுத்தலவர் நாண நன்னயஞ்செய்துவிடல்" "இன்னாச்செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோசால்பு" என்ற தேவன் வாக்கைத்தெளி. சைவசமயத்துக்கும், தமிழ்ச்சமுகத்துக்கும் பொதுவான செல்வத்தைத் துர்வினியோகஞ் செய்யாதே. வேலையாட்களுக்குக் கொடுமை செய்யாதே. நின்னுடைய கடமையை நன்றாகச்செய்வதில் எவ்வளவும் மறந்துவிடாதே. என்பனவாய பல நல்ல நியாயங்களையும் ஏ! எம் அம்மே! நின் பான்மடமாரு அம்மடப்பிள்ளைக்கு எடுத்துக்கூறி நல்ல மார்க்கத்திற் றிருப்புவா

யாக. அஃதே நற்றாயின் கடமையாம். இன்னும் நின் மடப்பிள்ளையின் பார்வையிலிருக்கும் நினக்கும் நின் அருமைக் காதற் கொழுநனுக்கும் உரித்தாய சிவாலயங்களை நமது நாட்டுக்கோட்டை வைசிய சமூகத்தார் திருப்பணிகளாற்றப் புகுந்துவிட்டால் அச்சமூகத்தார்க்குக் கொஞ்சமும் மனவருத்தம் நிகழாதவண்ணம் இயன்றுகொள்ளல்வேண்டும் பல நல்ல மார்க்கங்களையும் போதனை செய். அம்மே நின் திருவடி நீடுவாழ்க. எம் அருமைச் சகோதரர்காள்! இம்மாதிரி பிறபகுதியார்கள் இப்பெரிய வைசிய மகா சமூகத்துக்கு அளவுகடந்த கட்டநட்டங்களைக் கொடுக்கிறார்கள். யாமும் அவர்களோடு சார்ந்தேமேயன்றி மற்றில்லை. ஆகலின் இவ்வைசிய மகா சமூகத்துக்கு அவர்கள் செய்யக்கடனாக நிற்கும் பல நன்மைகளையும் வட்டியோடுகூட யாமே செய்கிறேம் என்பதன் அறிகுறியாக இந்நாட்டுக்கோட்டை வைசியமகாசமூகத்தின் நறும்புகழ்நிலைகள் வரையப்புகுந்ததென்கினும் யாங்ஙனம் இழுக்காகும்? அதற்காகவே நாட்டுக்கோட்டைவைசியம் என்ற ஒரு பெரிய நூல் வரையப்புகுந்ததென்கினும் யாங்ஙனம் இழுக்காகும்?

IX. எம் அருமைச் சகோதரர்காள்! ஏதோ கொஞ்சம், யாம் விவேகசாலி என்பது அடியேமுடைய கருத்தாம். அதினின்றும் எம்முடைய பரதகண்டத்துக்கும், எம்முடைய சைவசமயத்துக்கும், எம்முடைய தமிழ்ச்சங்கத்துக்கும் வேண்டும் நன்மைகளையும், வேண்டுஞ் சீர்திருத்தங்களையும் எம்மாற் கூடுமானவரை செய்தல்வேண்டுமென்றும், அவ்வாறு செய்தற்கு எஞ்சியவோர் நல்லறச்செயல் எதுவுமே இல்லையென்றும் மிகச்செவ்வையாகத் தெரிந்ததாம். அதினின்றும் மிக ஆழ்ந்த கருத்தோடும், ஆறிய சிந்தையோடுங்கூட ஓர் நிலைநின்று யோசிக்கப்புகுந்தவேளையில் நமது நாட்டுக்கோட்டை வைசிய மகா சமூகமானது நமது பாரத மாதாவிற்கு முகம்போல்வதாயும், நமது சைவசமயத்திற்கு ஒரு சிறந்த நால்வர்களாற் பாடல்பெற்ற திருவருட்டன்மை நிரம்பிய சிவாலயம்போல்வதாயும் உடையதென்றும், இந்நாட்டுக்கோட்டை வைசிய மகா சமூகத்தின் நறும்புகழ்நிலைகளை அணிபெற வரைவது நமது பாரத மாதாவின் வதனத்தை அணிபெறச்செய்தலையே ஒக்குமென்றும், இப்பெரிய வைசிய மகா சமூகத்துக்குச் செய்யுஞ் சில திருத்தங்கள் ஒரு பெரிய சிவாலயத் திருப்பணியே

யாகுமென்றும், நிர்மாணிக்கக்கண்டாம். இந்நாட்டுக்கோட்டை வைசிய மகாசமூகம் என்னும் சிவாலயத்திருப்பணிக்காகவே "நாட்டுக்கோட்டை வைசியம்" என்னும் ஓர் யந்திரம் தேவவுலகத்தில் நின்றும் அளவிடற்கரிதான பெரும்பொருள் கொடுத்து தருவித்திருக்கிறேம். நமது சைவசமயத்தைச் சார்ந்து நமது பரதகண்டத்துள்ளும், ஏனைய பாகங்களினும் காணப்படும் ஒவ்வொரு சிவாலயங்களும் இந்நாட்டுக்கோட்டை வைசிய மகா சமூகம் என்னும் சிவாலயத்தின் கிளைகளாகவே காணப்படுகிறதாகலின் இச்சிவாலயத் திருப்பணியை அடியேம் எடுத்துக்கொள்ள நேர்ந்தது. அதற்குத்தக்க பெரும்பொருட்குவையும் எமதிடம் இருக்கிறது. என்றாலும், அதற்குரிய தர்மத்தானாதிபதிகளும், கமிட்டி மெம்பர்களும் எம்முடன் கொஞ்சம் அநுகூலமாய் முன்னிற்கவேண்டியும் வருகிறது. அங்ஙனமானாற்றான் மிகச்செவ்வனே அத்திருப்பணி மிகத்திறமான வேலைப்பாடாக முடியும் என்பதையும் அவர்கள் மிகநன்றாகத் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். அதிலும் அச்சிவாலய தர்மகர்த்தர்களிற் சிலர் இத்திருப்பணி இலகுவில் நுங்களால் முடிக்கக்கூடாததோர் காரியமாகும் என்றும் ஏனைய சில தர்மகர்த்தர்களும், கமிட்டி மெம்பர்களும் முடிக்கவொட்டார்களென்றும், மிகப்பொல்லாதவர்களென்றும், அளவு சங்கையில்லாமல் தோத்திரப்பொருளையும், வணக்கப்பொருள்களையும், கைக்கூலியாக வாங்கக்கூடியவர்களென்றும், நீங்கள் அவ்வளவு பொருள் கொடுக்கக்கூடியவர்களல்லவென்றுஞ் சொல்லுகிறார்கள். பொறுமை என்னும் பொருள் மிகுதியும் வேண்டுமென்கிறார்கள். நாம் எவ்வளவு கைக்கூலிகள் வேண்டுமானாலும் கொடுக்கத் தயாராகவிருக்கிறோம். விலை மதிக்கக்கூடாத மரகதம், வைரம் முதலிய ரத்னாதிகளிழைத்த மோதிரங்கள், சங்கிலிகள், மாலைகள் வரை கொடுக்கத் தயாராகவும் இருக்கிறேம். எங்ஙனமாயினும் யாம் ஏற்றுக்கொண்ட இத்திருப்பணியை இடையில் விட்டுவிடுவதாய் எம்முடைய உத்தேசமன்று. எல்லாம் வல்ல இறைவனும் அங்ஙனம் இடையில் நின்றுவிடுமாறு செய்யவுமாட்டான் என்பதும் அடியேற்கு மிகத்தெளிவாம். நிற்க இச்சிவாலயத்தின் மூலத்தானம் மிகக்கிலமாகிவிட்டது. சுற்றுமதில்களெல்லாம் மிகுதியாக ஆடிக்கொண்டிருக்கிறது. மண்டபக் கற்களையெல்லாம் பலர் பிடுங்கிக்கொண்டுபோகிறார்கள். கட்டி நெடுங்காலமாய்விட்டபடியால்

கட்டுக்கள் தளர்ந்து வரிவரியாக வெளிவிழுந்து காணப்படுகிறது, இனிப் பிரித்தேதான் சேர்த்துக்கட்டவேண்டிவருகிறது. இத் திருப்பணிக்காகவே நம் பாரத மாதா எப்பைட்பெற்று வளர்த்து வைத்திருக்கிறாள். இச்சிவாலயத்தின் சிகரத்தைக் கூடியசீக்கிரம் பழுதுபார்த்து புதுப்பிக்கவேண்டிநிற்கிறது. ஒவ்வொரு மூர்த்திகளின் பீடத்துள் ஸ்தாபிக்கப்பட்ட சக்கரங்களமைந்த சுவர்ணத் தகடுகளையெல்லாம் நமது பாரத மாதா சாப்பிட்டுவிட்டாள். ஒவ்வொரு மூர்த்திகளும் தங்கள் தங்களின் எதா சக்தியை இழந்து வெறும் விக்கிரகங்களாய் வாழாநிற்கின்றன. இத்திருப்பணிக்காக அதிமேதாவிகளான சிற்பசாத்திரிகள் பலர் வேண்டியிருக்கிறது. இச்சிவாலயத்திற்காக ஒரு படிகலிங்கம் புதிதாக அமைக்க வேண்டியதாய்போயிற்று. ஆகமப்படி புதிதாகவே யந்திரஸ்தாபனமும், மகா கும்பாபிஷேகமும் செய்யவேண்டியிருக்கிறது. புதிதாக ஒரு சிவாலயங் கட்டுவதைவிடப் பழமையான ஒரு சிவாலயத்தைப் பழுதுபார்த்து அதற்கு வேண்டுஞ் சிறப்புக்களை யமைத்துத் திருப்பணி செய்வதே மிக மேலான அறச்செயலென்பதைத் தெரிந்துதான் இத்திருப்பணியில் அடியேம் இறங்கியிருக்கிறோம். இதற்காகவே மனமென்னுங் கரத்தில் அறிவென்னுங் கங்கணத்தை சுரை, திருகாணி, முகப்பு முதலியன ஒன்றும் வைக்காமற்செய்து பூட்டிக்கொண்டோம். எம்மானும், ஏனைய எவரானும் அதனைக் கழட்டவாவது, ஒடிக்கவாவது, அவிழ்க்கவாவது முடியாது. "ஸ்ரீநாட்டுக்கோட்டைவைசிய மகாசமூகத்தின் நறும்புகழ்நிலைகள் என்னும் ஒரு பெருநூலை வரைதற்கும் இவைகளையே காரணமாமென நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரசகோதரிகளும் மிக நன்றாக வுணர்தல்வேண்டும்.

இங்ஙனம்,

ப. சொ. ஆண்டியப்பன்,

பாளையங்கோட்டை.

53-வது அத்தியாயம்.

மாதர்கண் மாட்சியும், அவர்கள்பா னங்கடமையும்.

சத்தியாய்ச் சிவமாகித் தனிப்பர
முத்தியான முதலைத்துதிசெயச்
சுத்தியாகிய சொற்பொருணல்குவ
சித்தியானைதன் செய்ய பொற்பாதமே

எம் அருமைச் சகோதரர்காள்! "மாதர்கண்மாட்சியும், அவர்கள்பானங்கடமையும்" என்னும் அங்கத்தை எதோ அடியேமுடைய சிற்றறிவுக்கு எட்டியவொருவாறு ஒருவருக்கொருவர் சம்பாஷணையுருவமாக வரையத்தொடங்குவாம். மனித வர்க்கமாகத் தோற்றப்படுகிற நம்முள் ஆண்வர்க்கத்தார்க்கும் ஏனைய பெண்வர்க்கத்தார்க்கும் உடைத்தான ஏற்றத்தாழ்வுகளைப்பற்றிச் சற்று நன்றாகக் கவனித்தல்வேண்டும்.

ஓ! காமக்கொடிபடருங் கண்மணி!

ஏலா! ஏ! மங்கையர்க்கரசி! எதோ எனக்கு முன்னம் திருமணம் அல்லது விவாகம் எனக்கூறப்படுகிற கலியாணத்தை முடித்து வைத்தற்காக எனது தாய் தந்தையர்களாலும், பந்து மித்திராதிகளாலும் முயன்று பல பெண்களைக்குறித்தும் பேசுங்கால் எதோ நின்னைக்குறித்துச் சற்று விசேஷமாகச் சொன்னார்கள். அதினின்றும்,

"தெத்தெயிமெருழிந்த திருமலிமகளிர் தம்
பொற்றோடோய்தனை புகழ்வீடென்ப"

எனவரும் புலவர் வாக்கினைக்கருதியும், கல்வி, அறிவு, குணம், அழகு முதலிய பலவாலும் மிகச்சிறந்தவளென்பதையுங் கேள்வியுற்று நின்னையே விவாஹஞ்செய்துகொளல் வேண்டுமென்று பலவந்தப்படுத்தியுஞ் சம்மதித்தேன். அஃதோடு ஊழ்வினைப்பயனும் ஒட்டி நின்றதுபோலும்! கடவுள் கிருபையால் காலக்கிரமத்தில் விவாகம் நிறைவேறித் தற்காலவரை 5, 6 வருஷம் வரையாகிறது. ஏ கண்மணி! நின்னால் யாதாமோரின்பத்தையும் யான் அடைந்ததாக எனது மனப்பூர்வ

மாய்ச்சொல்லவொன்றுந் தோற்றவில்லை. சாண்பிள்ளையாயினும் ஆண்பிள்ளையல்லவா அவர்களுக்கு எந்தவாற்றானும் யாம் கீழ்ப்படிந்துதான் நடத்தல்வேண்டுமென்ற நன்னினைவும் நின்னிடத்தில் எட்பிளவுங்கூட இருக்கிறதாகவுந் தெரியவில்லை. ஆயுங்கால் அழகாலும், குணத்தாலும், அறிவாலும், கல்வியாலும், மிகச்சிறந்தவளென்னுங் கருத்தானது எனது மனத்திற் பதிந்துகிடக்குந் தன்மையை யுணர்ந்தல்லவா நின் கெருவ புத்தியால் நாளுக்குநாள் தானாகவே வீணாகக் கெட்டுப்போகின்றாய். கண்மணி! அவ்வித கெருவபுத்தியானது தானேயொடுங்கவும், எந்தஞான்றும் எனக்குக் கீழ்ப்படிந்து நீ நடக்கவும், போதுமான வல்லபமளிக்கக்கூடிய வேத சம்மதமான இரண்டொரு வினாக்களை வினவ உத்தேசிக்கிறேன். அதற்கு நின் கெருவத்திற்குத் தகுந்த கல்வித்திறம் நின்னிடமிருக்குமேல் தக்க விடையளிப்பாயாக.

மங்கையர்க்கரசி. II.

என் ஆத்மரத்தினமே! ஏ! பிராணநாதா! என் நெஞ்சமானது பதைபதைப்பச்செய்த நின் மனமானது கல்லோ? இரும்போ? ஊழ்வினைப்பயனால் நும்மை யான் விவாகமுடித்துக்கொண்ட நாளிலிருந்து தற்காலவரை என்னோடும் எத்துணை வருடகாலம் கலந்துவாழ்ந்தாய்? அந்தோ! பரிதாபம்! என்போலும் அறிவில்லாத ஏழைப்பெண் இஞ்ஞாலத்தில் எங்கேனும் இருப்பாளோ? ஓ தெய்வமே! என் மனோரட்சகன் மூன்று பங்கு நாள் கயிறற்ற மகளிரை நம்மவர்கள் மூலையிலிருத்திவைப்பதைப்போல் வைத்துவிட்டுப்போய் அயல் நாடுகளெல்லாஞ் சுற்றித்திரிந்து காலங்களையெல்லாமவமே கழித்துவிட்டு வந்ததும் ஞாபகமில்லையோ? மீண்டுஞ் சின்னாட்களில் பாவியாகிய என் கண்ணிடைநுங்களின் வதனத்தைக் காட்டவந்த அளவிலாவது மங்கலகரமான சில வார்த்தைகளோடும் காலங்கழிக்கலாகாதா? அதினும் தர்க்கமும் வியாகரணமுமாவேண்டும்? "பேதமையென்பது மாதர்க்கணிகலம்" என்னும் பழமொழியை யறியீரோ? கேவலம்! பெண்பாலிடத்தில் வீண்வாதமா கூறவந்தீர்? இத்துணைக்காலமாக நம்மைக் காணாதிருந்த நம் காதன் மனையாளோடுங்கூடி மிகு உல்லாசமாகப்பாடி, கைகோர்த்து ஆனந்தக்கூத்துகளாடி, பேரன்

போடும் ஒருவர்மேலொருவர் சாடி, பன்முறை முத்தாடி, சந்தானச்செல்வத்தை நாடி, இன்பாதிபோகத்தைத் தேடி, கலவாதொழிந்த நாட்களை நினைந்து வாடி, அதற்காக இப்பெருஞ்சாகரத்திலோடிச்சென்று கண்டுகளித்து எந்த நாட்டுப்போமெனப் பேராவலோடும் ஈங்கு வரவில்லையா? ஓ! அதர்மசண்டாளத்தெய்வமே! என் மனோரட்சகன் என் வயம் வந்து ஏறக்குறைய வொருவாரங்கூடப் பூர்த்தியாகவில்லையே. அதற்கிடையிலா இவ்விதமான விவாதம் ஏற்படல்வேண்டும்? இதற்கு யான் யாது விடையளிக்கப்போகிறேன். காமரசமான லீலாமிர்த விஷயங்களில் ஏதேனும் இரண்டொரு வினாக்களை வினவ உத்தேசிக்கிறேன். என அவர் நாவிலிருந்தும் வந்திருக்கலாகாதோ? வேத சம்மதமான வினாக்களென்றா வரல்வேண்டும்? அடா! என் கண்மணி! அடா என் கட்டிக்கரும்பே! அடா! என் மயக்கினையொழிக்கும் மன்மதா! காமக்கலவியிற்கினிய கண்ணாளா! என் மார்பினை தூங்கும் மணவாளா! பெண்பான்மினை வஞ்சமிந்நாளா! என் மனத்திடை வசிக்கும் மாதவா! என் உடல் வர்க்கத்தைக் காக்கும் ஓர் அறிவே! ஏதோ விளையாட்டாக எதிர்த்துச் சில வார்த்தைகளாடுந் தன்மையைக் கருதியோ நமக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறாளில்லையென நினைக்கிறீர்?

"எறியென் றெதிர் நிற்பாள் கூற்றம்
சிறுகாலை யட்டிற் புகாதா ளரும்பிணி
யட்டதனை யுண்டி யுதவாதா ளில்வாழ்பேய்
இம்மூவர் கொண்டானைக் கொல்லும் படை"

"தன்பங்கு தாவென்ற தம்பியும் தம்பியோடு
இன்புற்று வாழாத் தமையனும்—முன்னின்று
வல்லாண்மை பேசு மனையாளும் இம்மூவர்
கொல்லாமற் கொல்லவந்த கூற்றுவன்"

என்றும், இன்னும் இவைபோன்ற நமது வர்க்கத்தாருக்கே மிகச்சார்பாகக் கூறப்படுகிற பல நூற்களையும் அறியாத சிறுமியோநும் அடியினை ஆயினும், நும் அடியாள்மீது இத்துணைதூரம் வீண் கெர்வம் ஏன் பாராட்டுகிறீர்? எந்த நாளாயினும் நுமது நோக்கங்களைக்கடந்து தாறுமாறாக நடந்திருப்பதுண்டா? அன்

றென மிகத்திண்ணமாகவுங் கூறுவேன். நிற்க நமது தேயத்தின் பண்டைக்காலத்து, ஆசாரங்களைக்கருதி இக்காலத்தும் தங்களின் மனைவிமார்களை ஏதோ! நம்மையெல்லாம் ஆண்டவராகக் கருதி அடிமைகளாக வியங்கும் சில பஞ்சமர்களின் மகளிரைப் போன்று பெருங்கேவலமாகப் பாவிக்குந் தன்மையையொழித்து எம்மையுந் தர்க்கத்திற்குரிய ஒரு வல்லாளாக மதித்து வேத சம்மதமான இரண்டொரு வினாக்களை வினவ உத்தேசிக்கிறேன் என்று மிக ஆனந்தமாகக் கலந்தாடிக் களிக்கக்கிடக்கும் இன்பத்தை மறந்து நம்முடைய நுனி நாவிலுதயமானதிலிருந்தே நும்மோடு தர்க்கஞ்செய்யும் நும்மினுஞ் சிறந்த ஒரு புருஷனைப் போன்று நும்முன்னர் தோற்றப்படுகிறேன். அஃதாவது ஈங்ஙனம் குறிக்கப்படும் வியவகாரம் முடிவுபெறும் வரையிற்றான். ஓய்! அத்தன்மீர்! என்னுடைய மனக்குரங்கானது மீண்டும் மீண்டும் தன்னுடைய பற்களை விரித்துக்காட்டுகிறது. நேற்றனுபவித்த இன்பத்தை இன்றைக்கும் நினைக்கிறது. நாம் இங்ஙனம் பேசிக்கொண்டிருக்கும் வியவகாரமானது ஓர் புறமிருக்கட்டும். மிகுதியும் வனப்புவாய்ந்த நின் சந்திரவதனத்தில் ஓர் முத்தந்தா? இன்றேல் காமப்பித்தமானது கிறுகிறுவென்று எம் சிரத்துக்கேறி எம்மைக் கீழே தள்ளிவிடும்போற் காணப்படுகிறது. நான் இதுகாறும் மனம் ஒன்றாய் நிற்க வாக்கொன்றாகவே பேசிவந்தேன்.

ஞானசம்பந்தன்! III.

அடி கழுதாய்! அடி பேதாய்! என்னே? நின் புத்தி! மிக ஆநந்தமான இவ்வியவகார சமயத்தில் நினக்கேன் இக்கெட்ட நினைப்பு. ஆன்மாவையழிக்க ஆவல்கொண்டுவிட்டாயே! நாதத்தையிழக்க நாடிவிட்டாயே! முத்தத்திற் கிடங்கொடுத்தால் மோகப்பேய் தலைவிரித்தாடாதோ? இலகுவிலே விட்டுவிடுமா? நான் அதற்கு உடன்படேன். என்னுடைய நாதத்தையிழக்க எனக்கு நாள்தோறும் பிரியமில்லை. நின் பேரிழவுக்காக ஒருமாதத்துக்கொருமுறை போதாதா? கொஞ்சம் வாசிச்ச இழவுகளுக்கெல்லாம் இம்மாதிரி நின்ற நின்ற வாக்கில் நினைப்பு வந்துவிடும்போற் காணுகிறது. இதற்காகத்தான் நான் நின்னைப் பிரிந்திருக்கவே நினைப்

கிறது. ஏ! கண்மணி! அந்நினைப்பை மறந்து நாம் எடுத்துக்கொண்ட நல்ல வியவகாரத்திலே நின் மனத்தைச் செலுத்து. அவ்விஷயம் பின்னர் கவனிப்போம். என் சரீரத்தினும் காமத்தீயைப் பற்றவைத்துவிடாதே! சிற்றின்பமென்பதை மறந்துவிடாதே!

4. மங்கையர்க்கரசி:

ஏ! என் மனத்துக்கியைந்த மணவாளா! காமக்கொடி படர்ந்த கண்ணாளா! தேமற்கொடி திழைத்த திண்டோளா! எம் மாமக்கொடி வளர்க்க வந்த மைத்துனா! ஆ! என் ஆன்மநாயகமே அடா என் கண்மணி! அடா! வேதாந்த ரத்தின விளக்கே! நின் திருவாக்குகளனைத்தும் அமிர்தப்ரவாகமாகவே காணப்படுகிறது. மிகவுமாநந்தமடைந்தேன். என்றாலும், இப்பொழுது என் மனத்திடை நிகழ்ந்த கவலையை ஒழியாயேல் நின்போன்ற பாமரன் இந் நிலவுலகில் எவனுமே இரான். நின்படிப்பொருங்குந் தடிப்படிப்பேயாம். என் மனம் நினைத்த அங்ஙனமே அக்குறிப்பினையுணர்ந்து அதற்கிணங்காதொழிவையேல் நின்னைக் கற்புடையானென இந்நிலவுலகில் எவருமே கூறார். அடா என் அரசே! இங்கும் அங்கும் ஓடியொழித்துக் கதவினைத் தாழிட்டுக்கொண்டு என் நெஞ்சினைப் புண்படுத்தாதே. நின்போன்று யான் ஒரு தடிஜென்மம் அன்று. இளமுலைமானார் வலியவணைத்த சுகம் இன்னதென்பதை மிகத்தெளிவாகக் காட்டுகிறேன். நில். நில். நில்லு. என் சரீரத்திற் பற்றிக்கொண்டெரிகிற காமத்தீயைக் கொஞ்சம் தணி. ஒரே ஒரு முத்தந்தா?

5. ஞானசம்பந்தன்.

கண்மணி! இஃதென்னே? அசங்கியமான வேலை. சீ! என்னை விட்டுவிடு! கட்டாதே. தூரப்போ! ஆ! என் பிராணநாயகா! எனக்கு என்னவோ ஒரு மாதிரியாக வருகிறதே! கிறுகிறுவென்று என் சிரம் சுழலுகிறதே! ஆ மன்மதா நினக்கே அபயம்!

6. ஞானசம்பந்தன்.

ஏ! கண்மணி! ஏ! மங்கையர்க்காசி! இஃதென்னே வியப்பு! ஐயோ! என் கீழே விழுந்துவிட்டாய்! ஆ! ஆ! காமவின்பத்தை

நினைந்து இப்படியும் மயங்கிக் கீழே வீழ்கிறவர்களும் உண்டா! ஏ என் பிராணநாயகி இதோ என் முகத்தைப்பார்! ஆ! என் கண்மணி என்னடி பேசுகிறாயில்லை. சரீரமெல்லாஞ் சில்லென்றிருக்கிறதே! கண்மணி! கண்மணி! ஆ! ஐயோ! பேச்சு மூச்சு ஒன்றையுங் காணவில்லையே! ஆ! தெய்வமே! ஏ! மன்மதா! கொஞ்சம் பொறு. ஒரே ஒரு முத்தந்தாவென எத்துணையோதரங் கெஞ்சிக் கேட்டும் உடன்படாத நீ! இப்பொழுது என் முகத்தோடு முகமாக அழுந்தப் பிணைத்துவைத்துக்கொண்டு காவிரியாறு கரைபுரண்டதொப்பக் கண்ணீரை தாரைதாரையாகச் சொரிகிறாய்! அடா! என் அரசே! நினக்கு என்மீது இத்துணை பாசம் இருக்கிறதா? எட்பிளவும் பாசமற்றான்போன்று நடித்தாயே! அடா என் கண்மணி! இப்பொழுதன்றோ என் தேக்கந் தெளிந்தது. கொடிய விஷம்போன்று என் சிரத்துக்கேறிய காமப்பித்தானது தீர்ந்தது. இப்பொழுதன்றோ என் மனமானது என் வசமாக இருக்கிறது. அடடா! என்னே? கடவுளின் தன்மை எத்துணை வியப்பு! இவ்வின்பத்திற்குச் சிற்றின்பமெனப் பெயர் வைத்துள்ளார் மிகச்சிறியவராகவே இருந்திருத்தல்வேண்டுமென யூகிக்கிறேன். அன்றேல் இதனையே பேரின்பமெனக் கூறியிருப்பர். இவ்வின்பத்தை மிகச்செவ்வனே கண்டுதான்,

> "கன்னலன்றி வேம்புநுகர் காமத்துரோகிகள்போற்,
> பின்னையொரு தெய்வத்தைப் பேசாமே—என்னாளும்,
> சாற்றுவதுங் காமகலை சாதிப்பதுங்கரணம்,
> போற்றுவதுங் காமனடிப்போது"

என ஒரு பெரியார் கூறினர்போலும்! மனித வர்க்கங்களையெல்லாம் ஒரே ஜாதியாகப் படைத்துவிடாமல், மனித வர்க்கத்துள் ஆண்ஜாதியென்றும், பெண்ஜாதியென்றும் படைத்த நான்முகத்தேவனுக்கு நாமென்னை கைமாறுகொடுப்பேம். அடடா! அத்தேவனை யாம் இந்நாள் இங்ஙனங்காணின்! பெரியவோர் ராவ் சாஹேப், வாவா சாஹேப், மதார்சா சாஹேப், அப்துல்கான் சாஹேப் முதலிய பட்டங்களில் எதனை வேண்டுமானாலும் கொடுத்துவிடலாம். நமதுழி வேறு எதனைக் கேட்கப்போகிறான். இன்னும் ஏ! அத்தன்மீர்!

> ஒவ்வொருந் தவமியற்றிய முனிவரில், உலகத்துத்
> தேவர் தங்களில் பாதலத்தோர்களில், சிறந்த
> மூவர் என்று பேர்பெற்றிடு முதல்வர்கள் தம்மில்
> எவர் மங்கையர் முலைத்தலை போகம் விட்டிருந்தோர்?

> "ஆக நோவுற வருந்தியே யைம்புலனவித்தூ
> மோகமாதிய மூவிருகுற்றமு முருக்கி
> யோகுசெய்திடு மேலையோர் பெறும் பயனுரைக்கில்
> போகமன்றி யொன்றில்லைகாண் எல்லைதீர் புகழோய்"

> "காண்டகும் புலனைந்துமாம் காரணமுமிலையாம்
> மாண்ட செய்கையு மொழியுமாம் யாக்கையும் போமாம்,
> ஆண்டோர் பேரின்பமுண்டென்பரதனை யாரறிந்தார்?
> ஈண்டு கண்டதே மெய்யென்ப ருலகுளோர் யாரும்"

> "பொய்மையுற்றிடு கானலைப் புனலெனவிரும்பிக்
> கைமிசைக்கொண்ட வயிழ்தினை கமருகுத்தாக்கு
> மெய்மையிற் சிலருண்டெனும் வீடுபேறுன்னி
> யிம்மையிற் பயனிழக்குதி நன்று நின்னெண்ணம்"

> "மங்கையரிடத்தின்பமே இன்பம், மற்றவரோடு
> இங்கு வாழ்வுறும் வாழ்க்கையே யியல்புறும் வாழ்க்கை
> யங்கவர்பெறு செல்வமே செல்வம் மற்றவர்கள்
> கொங்கை புல்குறா வறுமையே கொடியதோர் வறுமை"

> "மறுவிலாதவாண் மதிமுக மடந்தையர் புணர்ப்பைச்
> சிறியவின்பமென் றுரைசெய்வரென்ன தன் சிறப்பை
> யறிவரேயெனின் ஆங்கதே பேரின்பமாகும்
> இறைவநீயது கேட்டியேன் மொழிகுவலென்றான்"

> "மணிநகையாரே தெய்வம், வாக்குபதேசம், கொங்கை
> துணைக்குரு பீடம், பாதத்துணை வருடுவதே பூசை,
> அணைவது முத்தியாசான் இன்னமுமறியாய்போலும்"

> "எண்ணுவது மதனகலை, எழுதுவது முலைத்தொய்யில்
> உண்ணுவது வாயமுதம், உறங்குவது தனதடமேல்
> பண்ணு செபமந்திரமும் பாவை செவிமந்திரமே
> தண்ணளியான் குளிக்கும் நீர் சந்தமுலைப்பனிநீரே"

மாதர்கண் மாட்சியும், அவர்கள்பா
ணங்கடமையும்,

"உண்டார் கண்ணல்ல தடு நறுக்காமம்போற்
கண்டார் மகிழ்செய்தலின்று"

"கண்டுகேட் டுண்டுயிர்த்துற்றறியு மைம்புலனும்
ஒண்டொடிக் கண்ணேயுள"

"பானிலாக் கடவுளுங் குருவின் பன்னியை
மானமற் றின்புற மணந்த தன்மையாற்
கூன்முது கிளம்பிறை முடித்தகோன் அன்றி
வேனில்வேள் பகழியார் விலக்கவல்லரே"

இத்துணை யமுதவாக்குகளை நீவிர் இதுகாறும் படித்து வந்திருக்கிற எந்தப் புத்தகங்களிலாவது பார்த்ததுண்டுமா? எவரேனுங் கூறக் கேள்விப்பட்டதாவதுண்டுமா? இங்ஙனம் மிகத் தெளிவாக நல்லின்பம் இன்னதென்பதைக்கண்டுகொண்டீரல்லவா? இன்னும் கவனிக்கப்புகின்,

"அம்புமழ லு மவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச்சுடினும் புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினும் அஞ்சப்படும்"

"ஊருளெழுந்த வுருகெழுசெந்தீக்கு
நீருட்குளித்து முயலாகும்—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்"

"தொடிற் சுடின் அல்லது காமத்தீபோல
விடிற் சுடலாற்றுமோ தீ"

என்ற முனிவர் வாக்குகளை யானும் இப்பொழுதுதான் அனுபவத்திற் கண்டேன். இத்தகைய வின்பாதி போகங்களையெல்லாம் மறந்து எதனையோபற்றிக் கேள்விகேட்கப் புகுந்துவிட்டீர். ஆ! ஆ! மிக நன்றாயிருக்கிறது! நீர் வேதசம்மதமானதென்று சொல்லப்புகுந்த இரண்டொரு பெருந்தகவான வினைக்களைவிட அறிவாலும், கல்வியாலும், அனுபோகத்தாலும் முதிர்ச்சியடை

யாத சிறுமியாகிய யான் வினவும் இரண்டொரு சாதாரண வினைக்களுக்குத் தகுந்த விடையளிப்பீராக. ஏ! நாயகா! உலகமானது உற்பத்திக்குக் காரணம் யாது?

7. ஞானசம்பந்தன்.

ஆயுங்கால் வியவகாரஸ்தானத்தில் இத்துணை தூரம் பெருந்தன்மையான நல்லறிவு, நற்குணம், நற்கல்வி, நற்றைரியம், முதலிய பல நன்னெறிகளும், "காணிற் குவளை கவிழ்ந்து நிலன் நோக்கும் மாணிழைகண் ஒவ்வேம்" என்றதுபோன்ற விழி முதலாய ஒவ்வொரு அவயவங்களும் அழகிற் சிறந்தனவாய்ப்பெற்ற இம்மகளிரை மனைவியாகக்கொண்ட பாக்கியமே பெரும்பாக்கியம். இத்தகைய மேலான ஒரு பாக்கியம் ஏனைய எவரேனும் ஒருவர் எளிதிலடையற்பாலதோ! ஏ! கண்மணி! பாசக்கொடிபடரும் பாவாய்! "பாலொடு தேன் கலந்தற்றே பணிமொழிவாலெயிறூறிய நீர்" எனக்கூறிய தெய்வப்புலவர் திருவாக்கு என்னைப் பொய்மையாமோ? நீ கூறிவருகிற வார்த்தைகளிலுண்டாம் விஷயங்களெல்லாம் ஒருங்கும் நினக்கு என்மீதுடைத்தாயிருக்கும் பேரன்பின் காரணமாக மிகக் கோரமானவைகளேயாயினும் செவ்விய பவழம்போன்ற இதழ்களோடுங்கூடி யமிழ்தினைச் சுரக்கும் நின் நாமிசை யுதித்தோடிவரும் செந்தமிழ் முத்துக்களான இனிய வசனங்களைக்கேட்டே மிகவும் களிப்படைகிறேன். கண்மணி! உலகம், உலகம் என வழங்கும் வார்த்தையின் தாற்பரியம் இன்னதெனத் தெரிந்துகொண்டாயோ? உலக உற்பத்திக்குக்காரணம் வினவ முற்பட்டாய்?

8. மங்கையர்க்கரசி.

அத்தன்மீர்! எழுவகைத்தோற்றங்களான தேவர், மனிதர், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பவைகளாம். உடல் வர்க்கங்களோடுங்கூடிய உயிரின்மேல் நிற்றலாம். இன்னும் "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" எனக் கூறுவாருமுளர்.

9. ஞானசம்பந்தன்.

கண்மணி! மனித வர்க்கத்தாருக்கெல்லாம் எவ்வாறு தாங்கள் தாங்கள் நுகரப்படுகிற உணவின் மயமே முதன்மையாகப்படு

575 மாதர்கள் மாட்சியும், அவர்கள்பா லுங்கடமையும்.

கிறதோ? அஃதே தன்மையதாக ஏனைய உலக வர்க்கங்களுக்கும் ஒருங்கே தாங்கள் தாங்கள் நுகரும் தன் உண்வே முதற்காரண மாக நின்று தங்கள் தங்களை உற்பத்தியாக்கத் தோற்றப்படுகிறார் கள்.

10. மங்கையர்க்கரசி.

அத்தன்மீர்! யான் வினவிய வினவிற்கு முறையான பதி லுத்தரமிதுதானோ? ஆயினுஞ் சரி. அவ்வுணவுகளெல்லாம் உற் பத்திக்குக் காரணம் யாது?

11. ஞானசம்பந்தன். கண்மணி யஃதாவது நிலம்.

12. மங்கையர்க்கரசி.

அத்தன்மீர்! கைமாறு வேண்டாக் கடப்பாடு மாரியென பொய்யாமொழிப்புலவர் திருவாய் மலர்ந்தருளிய மேகாதிகளாலே யும், ஏனைய நான்கு பூதங்களாலேயும், ஒளிமயமாகத் தோற்றப் படுகிற சூரிய சந்திரர்களாலும், ககனவாசிகளான தேவர்களாலும், மாநிலவாசிகளாகத் தோற்றப்படுகிற நம் மனித வர்க்கத்தாராலும், அவ்வுணவுகளுண்டாவதற்கு எட்பிளவும் ஆதாரம் வேண்டுவ தில்லையோ? மாநிலம் ஒன்றாலேயே எல்லாம் முடிந்ததுபோலும்! அத்தன்மீர் யாது விடையளிக்கிறீர்?

மாநிலமென்று சொல்லப்படுகிற பெரிய மாபூதத்தினிடையே காற்றென்னும் பூதமானது தன் மாத்திரை கடந்து புகுமாயின் அல்லது புகுந்து சற்றுக் கொர்வங்கொண்டு சுழற்றுமாயின் மேற் கூறிய நிலமும், அதன் காரணமாக வாழக்கூடிய உலகங்களும் எக்கதியாகும்?

இன்னும் நீர்மிசை மிதக்கும் நிலன் என்றும் சிலவான் றோர்களாலே கூறப்படுகிறது. அப்படிப்பட்ட நீர்மிசை புகுந்து சற்றுக் கொர்வங்கொண்டு சுழற்றுமாயின் அந்நீரோடு நிலனுங்கூடி யெக்கதியாகும்?

ஏனைய பூதங்களைவிட யாமே பெரியேம் என்னுங் கொர்வங் கொண்ட அக்காற்றானது "மாரியல்லது காரியமில்லை" என்ற நம தெளவையம்பிராட்டியார் கூறிய மாரிபாற்சென்று அளவுகடந்து புகிலோ! அத்தன்மீர் உலகத்துக்கு யாது நன்மைகளைப் பயக்கும்?

(இன்னும் வரும்)

மாட்சிமை தங்கிய நமது H. E. கவர்னரும், நாட்டுக்கோட்டை வைசிய மகா சமூகமும்.

நமது கவர்ணர் லார்டு பென்லெண்ட் அவர்களையும், அவர் தம் பரிவாரங்களையும் நமது நாட்டுக்கோட்டைவைசிய மகாசமு கமானது மிகத் திருப்திகரமாயும், அரச பக்தியோடும், அன்பு மிகுந்த ஆர்வத்தோடும், அளவுக்குமிஞ்சிய ஆநந்த உற்சாகத் தோடும், சீர்திருத்தமான நாகரிகத்தோடும் 19—9—16 முதல் 21—9—16வரை நல்வரவேற்றதன்மை பெரியார் எவர்களும் வியப்பத்தக்கதாகவே காணப்பெற்றன.

II. தேவநகரம், காரைமாநகர், கோட்டைநகரம், பள்ளத் தூர், கானடுகாத்தான் முதலிய நகரங்கள் புதிய தேவேந்திர நகரங்களாகவே ஜோடிக்கப் பெற்றிருந்தன. இலக்ஷக்கணக்கான தொகைகளைப் பொருள்களாக நினையாமல் விரையஞ்செய்து அழ காக அலங்கரிக்கப்பெற்றிருந்தன. எங்குபார்த்தாலும் நகரத் தார்களும், ஏனையவர்களும் கும்பல் கும்பலாய் மிகக்கொந்தளிப்பு டன் மனோகரமான நூதன உடைகளோடுங்கூடப் போய்க்கொண் டும் வந்துகொண்டுமிருந்தார்கள். நூற்றுக்கணக்கான மோட்டார் கள் தங்கள் தங்களின் காட்டுக்கூரலாலே வருகிறோம்! வருகிறோம்! விலகுங்கள்! விலகுங்கள்! என ஓலமிட்டுக்கொண்டும் ஓடித்திரிந் தன. ஏகமுழக்கமாய் ஒரே ஆர்ப்பாட்டமாக பெரிய வோர் மகோற்சவமாகவே கொண்டாடப்பெற்றன. கண்படைத்தார் எவர்களும் காணத்தகுந்த காட்சியாகத்தான் இருந்தனவென் பதை எவர்களும் மறுக்கமுடியாது.

III. நமது கவர்ணரவர்களின் சுற்றுப்பிரயாணத்தில் இதுகாறும் இம்மாதிரி விசேஷச் சம்பவங்கள் நிகழ்ந்திராதென்ன லும் பொருந்தும். இவர்தம் ஆயுளாரோக்கியத்தையும், புத்திர பௌத்திரங்களையும், செல்வமாதிகளையும் குறித்துப் பெருவாழ்த் துக் கூறுவான்பொருட்டு ஆங்காங்குடைத்தான சிவாலயங்களி லும் மகோற்சவங்களும் நடைபெற்றன. ஒரு லக்ஷ ரூபாய்கள் வரை யுத்தச்செலவுகளுக்காக உதவப்பெற்றதாயுந் தெரி கிறது.

IV. "முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்
சிறையென்று வைக்கப்படும்"

"தக்தஞ்சமயத்துத் தகுதிநில்லாதாரை
அத்தன் சிவன்சொன்ன ஆகமநூல்நெறி
எத்தண்டமும் செயும் அம்மையிலிம்மைக்கே
மெய்த்தண்டஞ் செய்வதவ் வேந்தன் கடனே"

என்ற நுங்களின் வேதவாக்குகள் போன்று யாம் கவனிக்கப் புகின் நுங்களின் தொண்ணூற்றாறு நகரப்பொதுக்கூட்டங் கூடாமலும், அது விஷயங்களை முற்ற மறந்தும் நீங்கள் இயலுகிறது நுங்களின்மீது மிகத்தவறானவோர் காரியமேயாகும் என்றும், அப்பொதுக்கூட்டத்தை மிகக்கூடியசீக்கிரம் கூட்டப்பெறல் வேண்டுமென்றும், நுங்கள் வருணத்தார்க்குரிய எந்த வியவகாரங்களையும் சின்னாட்களுக்கு முன்னர் நடந்தேறிவந்ததைப்போன்று நுங்களின் கோயிற்கூட்டத்தில் நீங்களே பேசித்தீர்மானித்துக் கொள்ளுங்களென்றும், நுங்கள் வருணத்தாருக்குள் ஒருவர்க்கு ஒருவர்பால் நிகழும் எந்த வியவகாரங்களையும் நமது நியாயஸ்தலங்களில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாதென்றும் இன்னும் அதற்கான சில முக்கிய விஷயங்களையுங் கூட்டிய ஓர் சட்டத்தை நமது கவர்னர் லார்டு பென்லெண்ட் அவர்களின் நாட்டுக்கோட்டை வைசிய ம கா நா ட் டி ன் சுற்றுப்பிரயாண ஞாபகச்சின்னமாக நமது கவர்ன்மெண்டு ஏற்படுத்திவிடுமானால் நமது பிரிட்டிஷ் இராஜாதிபத்தியத்துக்கே பெரியவோர் கௌரவத்தையும், பெரியவோர் புகழையும் மீண்டும் மிகையாகக் கற்பித்துக்கொண்டதாகவும் முடியும்.

சிவபிரகாசம்.

குறிப்பு:— ☞ முன் 23-வது புத்தகம், 534-வது பக்கம் இவ்வியாசத்துடன் என்பதிலிருந்து, 535-வது பக்கம் III-வது பாரா எவர்கள்தான் மறுக்கக்கூடும் என்பதுவரை வாசியாதுவிடுக.

Registered No. M. 1111.

உ

திருச்சிற்றம்பலம்.

Nattukkottai Vaiciyam.

நாட்டுக்கோட்டை வைசியம்.

ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

நல்லவர்க்கழகு கல்வியும் நிலையும்.
புத்தகம் படித்தல் மெத்தவும் நன்று.
ஏடதுபடிக்கின் வீடும் பெறலாம்.

தொகுதி க.	நள௵ ஐப்பசி, கார்த்திகைமீ.	பகுதி உசு, உஎ.

(முன் 25-வது புத்தகம், 575-வது பக்கத்தொடர்ச்சி).

மாதர்கண் மாட்சியும், அவர்கள்பால் நம் கடமையும்.

இன்னும் அக்காற்றானது தீயிடை புகுந்து தமது தொழிலை சற்று வேகத்துடன் செலுத்துமாயின் தோற்றப்படுகிற உலகமொருங்கும் ஒருகணப்போழ்தில் எக்கதியாகும் என்பதையுணர்ந்தீரா? நிற்க, ஏனைய பூதங்களுக்கும், சூரிய சந்திராதிகளுக்கும், தோற்றப்படுகிற முச்சகங்களுக்கும், உயிரினுக்குயிராயும், உணவினுக்குணவாயும் நிற்பதைக் காட்டிக்கொண்டும், அவைகளையெல்லாம் அல்லோல கல்லோலப்படுத்தித் தத்தழிக்கச்செய்துகொண்டும், எங்கண்ணும் உள்ளியவிடமெல்லாம் உலாவித்திரியும் காற்றென்னும் பெரிய பூதமானது பகலவன் முதலாய ஒவ்வோரண்டங்களுக்கும் உயர்ந்தனவாக விளங்கப்படுகிற பரம், ஆகாயம், என்று கூறப்படுகிற இருண்ட பெருவெளி முகட்டின்கண்ணே பல்லாயிரங்கோடியண்டங்களினும், ஏனைய பூதங்களோடும் ஆங்காங்கு சிதறுண்டுலாவித்திரியும் தம் இனமாய வாயுக்களையெல்லாம் ஒருங்கே ஒன்றுகூடத்திரட்டி ஒருருவானாற்போல தமது முழுப்பலத்தோடும் புகுந்து கொர்வங்கொண்டு எமக்கு மேம்பட்டதோ இந்தவாகாயம்! இதோ காட்டுகிறேன் இதனது முகட்

டைப்பாரென மேல்நோக்கிப் பல்லாயிரங்கோடி கற்பகாலங்களும், அதற்குமேற்கொண்டு எந்தஞான்றுமே சுழன்று நோக்கினும் ஆங்கேதுண்டு? அத்தன்மீர் அங்கு எந்த முகட்டினைக் காணக் கூடும்? அதனாலே எந்தவுலகத்துக்கு நன்மை? எந்தவுலகத்துக்குத் தீமை? மிக்கக்கெர்வங்கொண்ட அக்காற்றினுடைய மிகையான வல்லபமும், அதன் தீரத்தன்மைக்குக் காரணமான தன்னுடைய மனநெகிழ்ச்சியும் எந்த நிலையைப்பெறும்? ஓ! என் மனத்திற் கியைந்த மன்மதா ஈரெண்கலையுங்கூடிய பூரண மதியம்போன்ற நின் வதனமானது ஏனோ வெட்கிற்று? யான் இதுகாறுங் கூறி வந்த விஷயத்தால் நீவிர் தெரிந்துகொண்டதென்னை?

13. ஞானசம்பந்தன்.

அடி கண்மணீ! தோற்றப்படுகிற எந்தப் பொருள்களுக்கும், எந்தப் பூதங்களுக்கும், எந்த அண்டங்களுக்கும் தோற்றப்படாத ஆகாயத்தைப் பெரிதெனத் தெரிந்துகொண்டேன்.

14. மங்கையர்க்கரசி.

அத்தன்மீர் அங்ஙனந் தெரிந்துகொண்ட நீவிர் அதன்காரணமாயும், பிரமாதி முதலான தேவாதி தேவர்களின் மனோரதத்திற்கும் எட்டாதனவாயும், எந்த எந்தச்சமயத்தார் எந்த எந்தவாறாக நினைந்து கொண்டாடப்படுகிறார்களோ அந்த அந்தச் சமயத்தார்களுக்கும் அந்த அந்தச் சமயத்தார்களுக்குரிய வநுட்டான நியமனங்களோடுங்கூடி அந்த அந்த வழிகளாக ஆங்காங்கு பூரணமயமாகவும் நின்று தங்கள் தங்களின் மனோரதத்திற்குத் தகுந்தவாறாக இறையியல், இல்லியல், அறவியல், பொருளியல், இன்பியல், வீட்டியல் என்னும் அறுவகைத்தான மார்க்கங்களையும், அம்மார்க்கங்களால் நிகழும் இன்பாதி போகங்களையும் அளிக்கத்தகுந்த நான்கு கரங்களும், எட்டுத்தோள்களும், கருணைவடிவங்களான மூன்று கண்களும் உடைத்தாகத் தோற்றப்படுகிற நம்முடைய பரசிவக்கடவுளே லோகோற்பத்திக்கு முதற்காரணமாமென்று மிகச் சுருக்கமாகச் சொல்லத்தெரியாது வேறு எது எதனையோ காரணமெனச் சொல்லப்புகுந்த நீவிரோ வேத சம்மதமான இரண்

டொரு வினாக்களை வினாவ உத்தேசிக்கிறேன் எனச் சொல்லி வினாவ முற்பட்டீர்? ஓ! பாழான பரதெய்வமே இவரையோ எனக்குக் கொழுநனாகவமைத்தல்வேண்டும்? "நுண்மாண் நுழை புலம் இல்லான் எழில்நலம் மண்மாண் புனை பாவையற்று" என்றுஞ் சொல்லப்படுகிறதே! ஏதோ தொழில் நிமித்தியமாய்த் தங்களின் பால்மணமாறாப்பாலர் முதலாய மனைவிமக்களோடும் ஆயிரக் கணக்கான மயில்தூரங்களையும் கடல் யாத்திரையாகக் கடந்து நமது நாட்டின்கண் வந்து நம்மையெல்லாங் கேவலம் பஞ்சைகளாகவும், கூலிகளாகவும் ஆக்கிவிட்டு வருஷந்தோறும் கோடிக் கான நமது திரவியங்களையெல்லாந் திரட்டிக்கொண்டு போகும் அயல்நாட்டாரை நன்றாக நோக்கில்லாதவர்போலும்! ஏதோ நமது தேயத்துப் பூர்வீகச் சரித்திரங்களையெல்லாம் நன்றாகத் தெரிந்து கொண்டிருக்கிறீர்போலும்! சில முரட்டுத்தன்மையான வைதீகச் சட்டங்களைக் கவனிப்போமாயினும் பெண்மக்கள் கடல் யாத்திரை செய்யக்கூடாதென்றும், கல்வி கற்றுக்கொள்ளக்கூடாதென்றும், தங்களின் செவிகளை ஒருச்சாண் நீளந்தான் வளர்த்துக்கொள்ள வேண்டுமென்றும், அவைகளிற் சில மண்ணாங்கட்டிகளைப்போன்ற அணிகளைத்தான் மாட்டிக்கொள்ளல் வேண்டுமென்றும், இரண்டாவது விவாகம் முடித்துக்கொள்ளக்கூடாதென்றும், இன்னும் இவைபோன்ற கட்ட நிட்டூரங்களான பைத்தியகாரப் பழக்க வழக்கங்களெல்லாம் எந்தச் சட்டத்தில் கூறப்படுகிறதோ? ஓய் அத்தன்மீர் பெண்மக்களுக்கும் ஆண்மக்களைப் போன்று ஆன்மா, புத்தி, சித்தம் இருக்கிறதென்பதை யுணர்ந்தில்லீர்போலும்! ஆண்மக்களுக்கிருக்கும் ஆசாபாசங்களெல்லாம் பெண்மக்களுக்கும் உண்டென்பதையும் உணர்ந்தில்லீர்போலும்! அத்தன்மீர்! அவ்வாறுணராத அநேக நம்மவர்களும், சில மகம்மதிய நேயர்களும் மனித வர்க்கத்தாரைப்போன்றும் காணப்படுகிறார்கள். இவர்களைத்தான் காட்டுமிராண்டிகளென திருத்தமுடையார் கூறுவது. இவர்கள் தமதருமை நாயகிகளைத் தமது சிற்றின்பம் நிறைவேறுகிறதற்கு கடவுளாலாக்கப்பட்ட சாதனங்களாகவும், பிள்ளைகளைப்பயக்கும் ஒருவித யந்திரங்களாகவும் பாவித்துத் தமதிச்சைகள் நிறைவேறுகிற வரைக்கும் அவர்களிடம் சற்றுப்போலியான அன்பு பாராட்டுகிறார்கள். அவ்வாறே நீயிர்! நிற்க, இல்லறவொழுக்கமறிந்த உயர்தரமான நற்குண விவேகிகள்

அவ்வாறு பாராட்டுகிறதையொழித்துத் தமது பத்தினிமார்களைத் தமது அருமைச்சரீரமாகப்பாவித்து, அவர்களுக்கு நேரிடும் இன்ப துன்பங்களையெல்லாந் தமக்கே நேர்ந்தனவாகத்தெரிந்து தமது கண்முதலிய வுறுப்புக்களை எவ்வளவு பத்திரமாகப் பாதுகாத்துவருகிறார்களோ அவ்வாறே பாதுகாத்தேவருகிறார்கள். ஏனெனில்? கடவுள் ஓர் நாயகியை அவள் தன் கணவனுக்கு உயிர்த்துணையாகவும், கிரஹநாயகியாகவும், அவனுக்கு உதவியான பிரியாச்சிநேகியாகவும், அவனுடைய வீட்டுக்காரியங்கள் யாவையுங் கொண்டு நடாத்தும் ஓர் அதிகாரியாகவும், ஆபத்துக்காலங்களில் ஒரு சிறந்த ஆலோசனைக்காரியாகவும் இப்பூமியின்கண் சந்திராதித்தருள்ளளவும் அவன் பெயர் நிலைக்கத்தக்கதாக சற்புத்திரரைப்பெற்று வளர்க்கும் மாதாவாகவும், இகபர சாதகியாகவும் நியமித்திருக்கிறாரென்பதை மனதில்வைத்து தன்னைப்போலவளையும் மதித்து நேசித்துவருகிறார்களென்பதையும் உணர்ந்தில்லீர்போலும்! இவ்வாறு பாலோடுங்கலந்த நீரைப்போன்று ஒருமைப்பட்டு வாழ்வதற்காகவேண்டும் ஆற்றை மிகச்செவ்வையாக விளக்கிக்காட்டும் பொருட்டே மங்கைபாகனென்னும் நமது பரசிவப்பெருமான் தனது மனைவியான உமாதேவியை ஓரரைக்கணப்போழ்தும் விட்டுப்பிரியாது எந்தஞான்றும் தமதிடப்பக்கத்திலேயே வைத்துக்கொண்டியங்கும் அன்னவர் திருக்கோலத்தை நமது இந்திய தேயத்துள் எங்கேனும் ஓரிடத்திலுங் கண்டில்லீர்போலும்! கங்கை என்னுந் தேவியைத் தமது சடாபாரத்தில் தரித்துக்கொண்டிருக்கிறார் என்பதையுங் கேட்டில்லீர்போலும்! இம்மட்டோ எனின்? திருமால் தன் பாரியை மார்பினும், தேவேந்திரன் தன் பாரியைத் தொடையினும், வேதன் தன் பாரியை நாவினும் வைத்து மிகவன்போடும், ஆதரவோடும், மிகுமனப்பாசத்தோடும், திருப்திகரமான நேசத்தோடும், அத்தியந்த விசுவாசத்தோடும் பாதுகாத்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதையாவது நீவிர் கேட்டில்லீர்போலும்! இவ்வாறு திரிமூர்த்திகளின் திருக்கோல வடிவங்களையே நிறையப்பெற்றுள்ள நமது இந்திய தேயத்துட்பிறந்த நீவிர்! என்னை? என்னையிவ்வாறு வைத்துச்சென்றீர்! ஏ! அத்தன்மீர்! நம்முடைய அறிவின்மையைப்பற்றி யான் யாது புகலுவேன். நிற்க,

ஏனைய தேயத்தார் தங்களின் மனைவி மக்களை எத்துணையன்போடும், எத்துணை மரியாதையோடும், எத்துணை பாசத்தோடும் நேசித்து நடாத்தி முன்னுக்கு வந்திருக்கிறார்களென்பதையும் நன்கு உணர்ந்தில்லீர்! நம்முடைய இந்திய தேயத்து நம்முடைய செந்தமிழ்நாட்டு நம்மவர்கள்மட்டும் நும்மோடுங்கூடி யடிமைகளாகப்பாவித்து நடாத்தி மிகக்கீழோராய்ப் போவதற்குக்காரணம் நம்மவர்களுக்குள் குடிகொண்டிருக்கும் நும்முடைய வர்க்கத்தாரின் ஒருவகை மடத்தன்மையான சுயநலப்பிரியமென்றே சொல்லலாம். இன்னும் ஏ! அத்தான்! ஒரு புருஷனுக்குத் தன்மனைவியின்மேலிருக்கவேண்டும் அன்பையும், ஆசையையும், நேசத்தையும் காரணமாகவைத்து அவனுக்கு அன்பன், ஆர்வலன், உரியோன், காதலன், நேசன், பிரியன், புருஷன் எனப் பலபெயர்களும் உண்டாயிருக்கின்றன. ஆதலால் என்னை எந்தவாற்றானும் ஆதரணை செய்யவேண்டிய கடமை நும்முடையதென்பதை மறந்துவிட்டீர்போலும்! இன்னும் இஃது இவ்வாறு நிற்க, நம்முடைய இந்திய தேயத்துள் எம்மவர்களின் கதியைப்பற்றிச் சற்றுப் பொதுவாகக் கவனிப்போமாயின், "ஏழையைக்கண்டால் மோழையும் பாயும்" என்பதுபோல் ஏழையான பெண்மக்களிடத்து தமது கையின் பலத்தைக்காட்டுகிற வீரசூரப்புலிகளும், தமது கவிச்சாதுரியத்தைக் காட்டுகிற மகா வித்வசிரோமணிகளும் அநேகருளர். அவர்கள் முக்காலத்தும் உளராயிருக்கிறார்கள். அவர்கள்,

"நன்மனைதோறும் பெண்களைப் படைத்தும்
நமனையும் என்செயப் படைத்தாய்" என்றும்,

"ஆலகால விஷத்தையும் நம்பலாம், ஆற்றையும் பெருங்காற்றையும் நம்பலாம், கோலமாமதயானையை நம்பலாம், கொல்லும் வேங்கைப்புலிகளை நம்பலாம், காலனார்விடு தூதரை நம்பலாம், கள்ளர் வேடர் மறவரை நம்பலாம், சேலைகட்டிய மாதரை நம்பினால் தெருவில் நின்று தியங்கித்தவிப்பரே" என்றும்,

"வெப்புவாள் விழுவாள் பொய்யே! மேல்விழுந்தழுவாள் பொய்யே! தம்பலந் தின்பாள் பொய்யே! சாகிறேன் என்பாள்

பொய்யே! அப்பினுங் கொடிய கண்ணாள் ஆபிரஞ் சிந்தையாளை,
நம்பினபேர்களெல்லாம் நாயினுங் கடையாவாரே" என்றும்,

இன்னுஞ் சில சிவஞானயோகிகளுங்கூட

"இல்லாள் கட்டாழ்ந்த வியல்பின்மை யெஞ்ஞான்றும்,
நல்லாருணாணுத்தரும்" என்றும்,

"மனையாளையஞ்சும் மறுமையிலாளன்
வினையாண்மை வீறெய்தலின்று" என்றும்,

"பெண்ணேவல் செய்தொழுகுமாண்மையி
னாணுடைப்பெண்ணே பெருமையுடைத்து" என்றும்,

"நட்டார் குறைமுடியார் நன்றாற்றார் நன்னுதலாள்,
பெட்டாங்கொழுகுபவர்" என்றும்,

"எறியென்றெதிர்நிற்பாள் கூற்றம் என்றும்,
சிறுகாலையட்டிற் புகாதாளரும்பிணியென்றும்,
அட்டதனையுண்டி யுதவாதாளில்வாழ்பேயென்றும்,
இம்மூவர் கொண்டானைக்கொல்லும் படையென்றும்,

"தையல்சொற்கேளேல்" என்றும்,

"பேதைமையென்பது மாதர்க்கணிகலம்" என்றும்,

இவ்வாறு பலவிதங்களாக பெண்மக்களை நம்பக்கூடாதென்றும், அவர்கள் ஒருங்கையும் மிக இழித்துக்கூறிப் பாட்டுமன்றோ பாடியிருக்கிறார்கள். இஃதோதான் நம் பாதகண்டத்து நீதிமார்க்கங்களின் நடுநிலைக்கோடுபோலும்! இவ்வாறு அளவுகடந்த மாட்சிமை தங்கிய வாய்மையுணர்ந்த மெய்ஞ்ஞானிகளாலுங்கூடப் பாடியதற்குக் காரணம் யாதோ? ஒருக்கால் அந்தந்தக்காலத்திய தற்கால நிலைகளைக்கருதியே பாடியுள்ளார்கள் என்னலும் பொருந்தும். வேசை தாசிகளைக்குறித்தாக்கும் பாடியிருக்கிறார்கள் எனச் சொல்லித் தப்பித்துக்கொள்ளவும் முடியாது. வீணாகப் பெண் பழிகளை யேற்றுக்கொள்வதில் என்ன பிரயோசனம்? பொதுவாகக் கற்புநிலை தவறாத சில தூயகுணமுள்ள மாதுசிரோமணிகளும் அப்பாடல்களை நோக்குங்கால் அன்னவர்களின் நெஞ்சமானது அந்தோ! பரிதாபம் எந்த நிலைமையிற்றயங்குமோ? யாவர்

உணர்வார்களோ? அறியேம். இஞ்ஞாலத்தில் இன்ப சௌக்கியத்திற்கே உறையிடமாகச் சிருஷ்டிக்கப்பட்ட எமது வர்க்கத்தாரைக் கண்ணியப்படுத்துகிற ஒவ்வொரு ஆடவர்களும் கண்ணியத்தையேயடைவார்கள். தாழ்த்தப்படுகிற ஒவ்வொரு ஆடவர்களும் தாழ்வையுமே அடைவார்களென்பதற்கு எட்பிளவேனுஞ் சந்தேகமின்றாம் அத்தன்மீர்! ஒருவாறு எண்ணிநோக்குங்கால் தீக்குணத் தீச்செய்கைகளமைந்த ஏனைய சிலர் தாறுமாறுமாகத் தூறுவதைப்போன்று யானும் மேற்கண்ட செய்யுட்கர்த்தர்களைக் குறைகூற வந்ததாக நினைக்கவும் வேண்டாம். தன்னைத்தான் நேசிப்பதுபோல் தன் பத்தினியையும் நேசிப்பவன் எந்நாளுமே அவளுக்கிதமான காரியங்களையே செய்வானேயன்றி, அஹிதமான காரியங்களை ஒரு நாளுமே செய்யமாட்டான். ஒருவன் தன் மனைவியை யெவ்வளவு பிரியமாக நேசிக்கிறானோ அவ்வளவு பிரியமாக அவளும் அவனை நேசிப்பாளாகையால் மனைவியை நேசிக்கப்படுகிற வொரு புருஷன் தன்னைத்தானே நேசிக்கப்பட்டவனாகின்றான். ஒருவரையொருவர் நேசிக்கப்படுகிற காதலனும் காதலியும் ஏனைய எவர்களாலும் மதிக்கப்படுவதுமன்றி, அவர்களிலொருவருக்குண்டாகிற ஆநந்தத்தை இருவரும் சமமாக அநுபவிப்பதால் அவர்களுடைய ஆநந்தமானது இரட்டிப்பாகவும் படுகிறது.

15. இப்பிரபஞ்சத்தில் தன்னுடைய புருஷனுக்கு நேரிடும் கவலை, துன்பம், ஆபத்து முதலிய சமயங்களில் அன்னவனுக்கு வேண்டுந் திடஞ்சொல்லித்தேற்றி அவனுடைய துக்கபாரத்தைக் குறைக்கவும், சந்தோஷகாலத்திற் கூடவே இருந்து சுகிக்கவும் ஒருவனுக்குத் தன் மனைவியைவிட உற்றதுணையானவர் யாவரோவுளர்? ஆதலால் நல்ல புருஷன் தன் மனைவி தன்னை விரும்பும்படிக்கான ஏதுக்களையே தேடிக்கொள்வான். சாதாரணமாய்ப் புருஷன் வெளியே வேலைக்குப் போயிருக்கும்பொழுது அவன் மனைவி அவனைப் பிரியப்படுத்தும்படியான அவன் விரும்பும் விஷயங்களை அதிகக் கவலையோடும், கட்டத்தோடுஞ் செய்கிறாள். அவன் வேலையிலிருந்து வீட்டுக்கு வந்தவுடன் மிகச்சந்தோஷகரமான வார்த்தைகளினாலும், புன்னகையினாலும் அவளைப் புகழ்ந்து பேசினால் அவள் மிகவும் உற்சாகத்தோடு தன் வீட்டுக்காரியாதி

களை மிகவும் நன்றாகக் கவனிப்பதோடுங்கூடத் தன் புருஷன்மீது மிகுந்த பாசமுள்ளவளும் ஆவாள். ஏனெனில்? இப்பிரபஞ்சத்தில் சிறுவர்கண்முதற்கொண்டு யாவரும் புகழ்ச்சியை விரும்புவார்களேயன்றி இகழ்ச்சியை விரும்பமாட்டார்கள். ஆதலால் ஒவ்வொரு புருஷனும், தன்னாலியன்றமட்டும் தன்மனைவிக்கு இதமான வார்த்தைகளையே பேசி அவளுக்கிருக்கும் வீட்டுப்பாரத்தில் பாதியைத் தானும் பெற்று, அவளுடைய சந்தோஷத்திற்காகவும், நன்மைக்காகவும் தம்மனத்திடை கிடக்கும் உண்மைக் கவலைகளை எடுத்துத் தானுங் கவலை கொள்வதாக அவளறியும்படி செய்கிறதினால் அவ்வீட்டிற் சந்தோஷமும், இன்பமும், தங்களிருவருக்கும் மிகுதியான மேன்மையும் உண்டு. ஒருவன் மனைவி இயற்கையாகவே நல்லவளாயிருந்தபோதிலும், அவளுடைய புருஷன் செய்யும் உதவியும், பாராட்டும் நேசப்பாசமும், செய்யும் பல நன்மைகளும், அவள்மேலவனுக்கிருக்கும் அன்பை பகிரங்கமாகக்காட்டுவதால் அவளை மேன்மேலும் நல்ல குணசாலியாகவும் அவனையவள் அதிகமாய் நேசிக்கவும் இடம்பண்ணும். ஒருவன் பலவிடங்களிலும் விசாரித்து நன்றாகப் பரிசீலனைசெய்து தெரிந்து, தனக்கு இட்டமான ஓர் பசுவை வாங்கியபின் அது நல்ல பசுவென்று, அதற்குச் சரியான தீனிபோடாமலும், மேய்ச்சலுக்கு விடாமலும், ஒன்றுவிட்டு ஒருநாளேனும் நன்றாகத் தேய்த்துக் குளிர் நீராட்டிச் சுத்தஞ்செய்யாமலும அவையெல்லாம் அவசியமில்லையென்றும் விட்டுவிடின் அது சரியான மாதிரி பால் கொடுக்குமோ? அப்பாலினை எங்குமுகமாக வுட்கார்ந்துகொண்டு நீயிர் பருகுவீர்? அதனைப்போலவே ஒருவன் பல நகரங்களும் சுற்றித்திரிந்து தன் மனதிற்கியைந்தவோர் நல்ல மனைவியைச் சம்பாதித்துக்கொண்டபின், அவள் நல்லவளாதலால் அவளைப் பிரியப்படுத்தவேண்டிய தவசியமில்லையென்று நினைத்து அவளை அசட்டைபண்ணி, அவள் மிகச் சிரமத்தோடு செய்த வேலைகளைப்பற்றிப் புகழ்ந்துபேசாமலும், அவளுடைய நன்மைக்காகக் கவலைப்படாமலும் இருந்தால் அவளுடைய அன்பு நாளுக்குநாள் குறைந்துபோவதற்கு இடமாகுமாதலால், அன்பே அன்பை வளர்க்குமென்பதையுணர்ந்து, ஒவ்வொரு புருஷர்களுந் தங்கள் தங்கள் மனைவி

யின்மேல் அதிகமான அன்பு பாராட்டுகிறதை அவள் நன்கு உணர்ந்துகொள்ளும்படிக்கும் செய்தல்வேண்டும். ஓர் காதலி தன் புருஷனைப் பிரியப்படுத்தும்படி செய்யும் சகல வேலைகளிலும், குற்றங்கண்டுபிடித்து குறைகூறுவது சில பாமர புருஷர்களின் இயற்கையாகவும் விளங்குகிறது. அவ்வாறு குறை கூறுவதனாலும், சீறிச்சினந்து பேசுவதினாலும், கூக்குரலிட்டு சண்டை சச்சரவு செய்வதனாலும், கள்ளர், மறவர், கனத்த வகம்படியார், மிக்க வல்லம்பர், குறலர், பள்ளர், பறையர், முதலிய கீழ்மக்கள்போன்று அடித்துப்பிடித்து, மிதித்துக்கடித்து, உதைத்து தொந்தரவு செய்வதனாலும்,ஓர் ஸ்திரீயானவள் மிகவும் சீருக்கு வந்துவிடுவாள் என்றெண்ணுவது பெரும்பிழையேயாம். அப்படியே யவள் ஒருவாறு சீர்பட்டாலும் அஃது பூரண மனத்தோடு கூடிய சீர்பாடின்றாம். அவ்வித நடக்கையினால் அவள் சீர்படுவதற்கு பதிலாய் அவள் புருஷன்மேலிருக்கும் அன்பானது நாளுக்குநாள் படிப்படியாகக் குறைந்துவிடும் என்பதில் எட்பிளவுஞ் சந்தேகமில்லை. அப்படிச் செய்வதற்குப் பதிலாக ஒருவருக்கொருவர் மிகுந்த உள்ளன்போடு நேசித்தும், ஒருவர் குற்றத்தை ஒருவர் பொறுத்தும், இனிய சொற்களோடும், சாந்தத்தோடும், பொறுமையோடும், ஞானமாய்ப் புத்திசொல்வதே மேலாகும். அம்பட்டன் குப்பையைக் கிளரக்கிளர மயிர் வந்துகொண்டேயிருப்பது போல் குற்றங் கண்டுபிடிக்கவேண்டுமானால் ஓர் ஸ்திரீ செய்கிற ஒவ்வொரு விஷயமும் குற்றமாகவேதான் தோன்றும். ஆகாத பெண்டாட்டி கால் பட்டாற் குற்றம், கைபட்டால் குற்றம் என்பதுபோல் மனம் நன்றாயிராவிட்டால் எல்லாங் குற்றமாகவேதான் தெரியும். அப்படிப்பட்ட புருஷர்களிடத்தில் ஸ்திரீகள் திருப்தியாயிருப்பது வருத்தமாதலால் ஒவ்வொரு புருஷர்களுந் தங்கள் தங்களின் மனைவியை விசனப்படுத்தாமல் அவள் தன் குறைகளைப் பார்த்தும் பார்க்காதவன் போலவும், கேட்டும் கேட்காதவன்போலவும், நடந்துகொண்டும் குறிப்பினால் மட்டும் சாந்தமாய்ச் சுட்டிக்காட்டி யவளைத் திருத்துவதே மிக்க மேலான வன்மையாம். வேலையிலிருந்து வீட்டுக்குத் திரும்பும்பொழுது தன் வேலைகளுக்குரிய கட்ட நட்டங்களையும், கவலைகளையும் கட்டிச் சுருட்டித் தாங்கள் வேலைபார்த்த இடங்களிலே வைத்துவிட்டு

வீட்டிற்குள் நுழையும்பொழுது மலர்ந்த முகத்தோடும் அன்பு நிறைந்த இருதயத்தோடும், இனிய வார்த்தைகளோடும், அப்பா எனவோடிவரும் தமது அருமைக் குழந்தைகளுக்குக் கொடுக்கத் தகுந்த சிலகனிகள், சிற்றுண்டிகள் முதலிய பதார்த்தங்களோடும் அவன் மனையாளைச் சந்தித்தான் மட்டுமே அந்தவீட்டில் இன்பமும் சுகமும், சகல பாக்கியமும் இயற்கையாகவே தோன்றும்.

16. சில புருஷர் தமது மனைவியின் குற்றங்களையும், தவறுதல்களையும்பற்றி மற்றவர்களிடத்தினுஞ் சொல்லி யவர்களை வெட்கப்படுத்துவதும் உண்டு. இப்படிச் செய்வதால் புருஷனுக்கு நன்மையில்லை. தன் மனைவிக்கு மனச்சந்தோஷமுமிராது. அவளைப்பற்றி மற்றவர்களுக்கிருக்கும் மதிப்புங் குறைந்துபோம். ஆதலால் எச்சமயத்திலும், தன் மனைவியை இகழாமலும், அவளைப்பற்றித் தங்களின் மனத்திடை எட்பிளவும் சந்தேகம் கொள்ளாமலும் புகழ்ந்துகொண்டே வருவானாயின் அவளை மற்றவர்கள் மதிக்கவும், அதன்மூலமாய்த் தனக்கே மதிப்புண்டாகவும், அவன் மனைவி யவனை யதிகமாய் நேசிக்கவும், அவன் வீட்டிலின்பாதி போகங்களதிகரிக்கவும் ஏதுவாகும். சில புருஷர்கள் தங்கள் மனைவிமார்களைப் பூரணமாக நம்பாமலிருப்பதோடும், அவர்கள் கையில் தங்களின் உடைகளமைந்திருக்கும் பெட்டியின் திறவுகோலைக்கூடக் கொடுக்காமலும், தங்களின் இரகசியங்களை யவர்களிடம் சொல்லாமலும் இருப்பதே நம்மவர்களின் பெரிய வழக்கமாகவிருக்கிறது. அஃதாவது மிகவும் தப்பிதம். தன் புருஷன் தன்னைப் பூரணமாக நம்புகிறானென்று அவளறியத்தக்கதாக வீட்டுச்செலவுகளுக்காகவேண்டும்பணங்களையெல்லாம் அவள்கையிலே ஒப்புவிப்பதுடன், எந்த விஷயத்திலும் தன் மனைவிக்கொளித்த காரியம் ஒன்றுந் தானுஞ் செய்கிறதில்லையென்பதை அவள் தெளிவாயறியும்படி செய்யின் தன்மேல் தன் புருஷனிடத்திருக்கும் நம்பிக்கை அவமாய்ப் போகாதபடிக்குத் தன்னாலியன்றவரைக்குப் பிரயாசைப்படுவாளென்பதற்கு எந்தவாற்றானும் சந்தேகமே இல்லை. தங்களை முற்றினும் நம்பின புருஷருக்கு நம்பிக்கைத் துரோகஞ்செய்ய எத்துணைச் சிறுமிக்கும் மனம் வாராது.

ஆனால் புருஷன் தன்னை நம்புகிறதில்லை என்றறிந்த பெண்கள் தங்களின் புருஷருக்குத்தெரியாமல் சில சிறு தேட்டைத்தேட ஆரம்பிக்கிறார்கள். சில புருஷர்கள் தங்கள் மனைவிமார் தங்களுக்குத்தெரியாமற் பணஞ்சேர்த்து வைத்திருப்பதை வியந்து பேசுவதையும் நாம் கேட்டிருக்கிறோம். இது மகா பிசகு. இதுவே கெடுதல்களுக்கெல்லாம் ஆதிமூலமாம். எமது வர்க்கமல்லவா என சில வாண்மக்களிடுக்கிக் கூறுவதைப்போன்று நடுநிலைக்கோடாக யான் ஒன்றனையுங் கூறத்துணியவில்லை. புருஷனறியாமற் சிறுதேட்டைத் தேடத்தொடங்கினவள் புருஷனறியாமல் அநேக காரியங்களைச் செய்யவும் ஆரம்பிப்பாள். அதையுங் கவனிக்காமல் விட்டுவிடுவானானால் அவள் சகலவிதத்திலுங் கெட்டுத் தன் கற்பு பிரமாணிக்கத்தையு மீறிவிடுவாளென்பதற்குச் சந்தேகமுமில்லை. நம்மவர்களிற் சில வகுப்பாரும், மகம்மதிய வகுப்பாரும் "ஆலகால விஷத்தை நம்பினும், பெண்மக்களை மட்டும் நம்பக்கூடா"தென்றும், அவர்களைக் கைதிகளைப்போன்று வீட்டுக்குள் அடைத்துவைப்பதுடன் அவர்கள் வெளியே போகும்பொழுதும் மூச்சு வாங்கக்கூட இடம்விடாதபடி முக்காடிட்டுமூடி வதைசெய்கிறார்கள். "அறக்காத்தான் பெண்டிழந்தான்" "அறுகாத வழியுந் தூக்கிச்சுமந்து கொடுத்தான்" என்ற பழமொழியாதலால் அப்படிப்பட்ட குடும்பங்களிற்றான் அதிகக் கேடுண்டாவதியற்கை எனச்சிலர் நம்புவதோடுங்கூடச் சில நாடுகளில் ஆண்மக்களும் அதேவிதமாய் முக்காடிட்டு அந்தரங்க அரைக்குள் செல்வதாகக் கேள்வியும்படுகிறோம். மேலும் இவ்வித நிர்ப்பந்தஞ் செய்யும் புருஷர்கள் தம்மைவிட்டகன்றவுடன், ஸ்திரீகள் தாம் சுயாதீனத்துக்கு வந்ததுபோல் எண்ணித் தம் புருஷருக்கு முன் செய்யத்தோற்றாத அநேக காரியங்களைச் செய்யத்துணிவார்கள். சந்தேககுணமுள்ள ஒரு புருஷன் எந்த இடத்திலிருந்தாலும், மனக்கலக்கத்தையும், சஞ்சலத்தையும் உடையவனாகவே இருப்பான். தன் மனைவி எவரிடத்திற் பேசினாலும் சமுசயங்கொள்வதால் அவனிடத்தில் ஆறுதல் என்பதே இராமல் அவன் மனமானது கொடிதான நரகவேதனையிலழுந்துமென்பதிற் சந்தேகமில்லை. ஆதலால் ஒவ்வொரு புருஷர்களும் சந்தேகத்தையும் அவநம்பிக்கையையும் அறவே ஒழித்தல்வேண்டும். ஆனால் புருஷர்கள் சந்தேகிக்கத்தக்க மெய்யான காரணமிருக்கும்போது அவ்வித சந்தேகத்தால்

தனக்குண்டாயிருக்கும் மனக்கட்டத்தைத் தன் மனைவிக்கு மிக்க இதமாகவும், பரிவாகவும், மிகுந்த அன்பாகவும் தெரிவித்துத் தகுந்தவிதமாகப் புத்திமதிகளைக் கூறுவானேயாயின் அவள் அவ்வித சந்தேகத்துக்கு இடம் வைக்காமல் நடந்துகொள்வாள்.

17. நல்ல குணமும், சம்பாத்தியத் திறமையும் வாய்ந்த சில பெண்களை மணந்த அதிர்ஷ்டசாலிகளான சில புருஷர்கள் தங்கள் மாமியார் வீட்டில் நல்ல போஜனங் கிடைக்கிறதினாலோ? அல்லது தங்கள் மனைவிமார் இடைவிடாத உழைப்பினாலும், பிரையாசத்தினாலும், சம்பாதிக்கும் பொருள் போதுமானதாயிருப்பதனாலோ? சோம்பேறிகளாய்த் திரிந்து, வீதிகளில் உட்கார்ந்துகொண்டு ஓரவஞ்சமான பஞ்சாயத்துக்கள் பேசுவதும், அவள் அப்படி, இவள் இப்படி, அவளுக்கு வட்டமாயும், பெருமனாயும் இருக்கிறது, இவளுக்கு மிகநீளமாயும், சுரக்காயைப்போன்றும் இருக்கிறது, இவள் குட்டை, அவள் நெட்டை, எனப்பல போக்கிரி வார்த்தைகள் பேசுவதும், இல்லாத கட்டுக்களைக் கட்டிவிடுவதும், அக்கப்போர்மணியம் பண்ணுவதும், என்னுடைய மனைவியென்னைக்கண்டால் கிடு, கிடுவென்று நடுங்கவேண்டுமடா! கையில் விளக்குமாற்றை எடுத்தால் விட்டைபோட வேண்டுமடா! தாயோளி! நீ! என்னடா சுத்தச்சும்பன் பெண்டாட்டியாத்தாள் பெரியாத்தாள் பிழைக்கமதியைச் சொல்லாத்தாள் என அவள் கான்மாட்டிலே விழுந்து நமஸ்காரம் பண்ணிக்கொண்டும், அவள் சொன்னபடியெல்லாங் கேட்டுக்கொண்டும், அவள் முகத்தையே ஈ எனக் குந்திப்பார்த்துக்கொண்டும், பெண்டாட்டிக்குப் பெண்டாட்டியாகத் தொண்டுசெய்துகொண்டும், அவள் கொடுக்கைப் பிடித்துங்கொண்டுந் திரிகிறாய்! சீ! நீயொரு மனிதனா! ஆண்பிள்ளை மாதிரி முச்சந்திக்குப் பேசவந்துவிட்டாய்! குளத்துக்குப்போக நான்கு மணிநேரம், குண்டிகழுவ நான்கு மணிநேரம், அடுத்த வீட்டுக்காரியுடன் அக்கப்போர் மணியப்பேச்சு அடடடா! சொல்லிமுடியாது என்ன பேச்சு! அவளைக் கட்டிக்கொண்டு அழுகிறாயே! கழுதையைவிட்டு வோட்டடா என்றும், இன்னும் இவைபோன்ற சில துன்மார்க்க வார்த்தைகளால் காலத்தைக் கோலமாக்குகிறார்கள். இஃதோடு தங்கள் தங்களின் மனம்போன போக்கின்படி

யெல்லாம் வீண்வழக்குகள் பேசி ஏழைகளின் வாயில் மண்போடுவதற்கான நியாயந் தீர்ப்பதுமே அவர்களின் வேலைகளாக இருப்பதையும் நாம் பார்த்திருக்கிறோம். ஆனால் இவர்கள் மனித ஜென்மமாவரோ? தன் பிரையாசத்தின் பலனைப் புசிக்காமல் மற்றவர்களின் உழைப்பால் காலந்தள்ளும் மனிதன் யோக்கியனாவானோ?

"கருதியநூற் கல்லாதான் முடவனாகும்
கணக்கறிந்து பேசாதான் கசடனாகும்
ஒரு தொழிலுமில்லாதான் முகடியாகும்
ஒன்றுக்கு முதவாதான் சோம்பனாகும்,
பெரியோர்கண் முன்னின்று மாத்தைப்போலும்
பேசாமலிருப்பவனே பேயனாகும்,
பரிவுசொல்லித் தழுவினவன் பசப்பனாகும்
பசிப்பவருக்கிட்டுண்ணான் பாவியாமே"

எனவுமிருக்கிறதே! இவ்வயோக்கியர்கள் கொஞ்சமும் மானவெட்கமின்றி நடுத்தெருக்களில் நின்றுகொண்டும், குந்திக்கொண்டும் பல பெண்மணிகளின் வதனங்களை இமை கொட்டாமற் பார்த்துத் தங்களின் அருமையான நெஞ்சத்தைப் புண்படுத்திக்கொள்கிறார்களே! அந்தோ! இஃதென்னை! அறிவின்மை! நிற்க, நமதுநாடு நகரங்களில் பரம்பரையான நல்ல வழக்கமொன்றேற்பட்டு வருகிறது. அஃதாவது, எப்படியெனின் ஓர் பசுமாடுங்கூட கன்றுக்குட்டிகளை ஈன்று பால் தயிர், நெய், மோர் முதலிய உபயோகமான வஸ்துக்களைக் கொடுக்கிறபடியினால் அதற்கு யாதொருவிதமான எந்த வேலையுங்கொடாமல், அதற்கு மிக நன்றாகப்பாடுபார்த்து வீட்டிலேயே கட்டிவைத்துக்கொண்டும் தீனி போடுகிறார்கள். பசுவிடத்தில் வேலை வாங்குவது மகா பாவமென்கிறார்கள். எண்ணிநோக்குங்கால் மேற்கண்ட பசுமாட்டின் வர்க்கத்தை விட பசும் பெண் வர்க்கத்தை எத்துணையோ கீழ்மையாகவும் பாவிக்கிறார்கள். அந்தோ! நம்மவர்களின் அறிவின்மையையும், அறிவின் தன்மையையும் கண்டீரா? எந்தத்தன்மையை யுடையதோவென நீயிரே எண்ணி நோக்குமின். பன்னாள் தவம் கிடந்து, பத்தியங் காத்து, பத்துமதியுங்கழிந்து, பாலர், பாலிகை என மிகவும் பக்குவமாய்ப் பெற்றெடுத்து, பாலூட்டி பத்திரமாகப் பேணிக்காத்து, வரு

வதுடன் தம் வீட்டுவேலைகளையும் மிகச்செவ்வனே கவனித்துப் பார்த்துவருகிறார்கள். அப்படிப்பட்டவர்களிடத்தில் தங்களின் தரத்துக்கெஞ்சிய வேலைகளை வாங்குவதும், வாயில் வரக்கூடாத கொடிய வார்த்தைகளாலே சுடுவதும், அன்னவர்களையெல்லாம் ஒருங்கே மிருகவர்க்கமாகப் பாவித்தலும், எதோ ஒரு சமயத்தில் நிகழும் அற்பச்சினத்தைப் போக்கும்வழியாகக் கோலாற்புடைத்தலும், அவர்களின் சம்பாத்தியத்தையே செலவு செய்துகொண் டிருத்தலும் தர்மமாமோ? இவைகள்தான் வேதாகம புராணேதிகாசங்களின் ஒழுக்கங்களோ? தன் வீட்டுச்செலவுக்குமட்டுமாவது வேண்டியதை சரீரப் பிரயாசையோடு சம்பாதித்து, தன் மனைவியையும் அன்போடு நேசித்து, நம்பியாதரித்து வருவோனையவன் மனைவியும் அன்போடு நேசித்து, மதித்துவருவாள். அந்தவீட்டிற்றான் சகலவின்ப சுகபாக்கியங்களும் நிறைந்திருக்கும். நமது பரதகண்டத்துள்ளே பெரும்பாலும் நூல் செய்யவல்லோர் ஆடவர்களேயாதலால் ஸ்திரீ ஜாதியைத் தங்களின் அடிமைகளாக இயங்கவேண்டுவதற்காக வேண்டும் நூன்முறைச்சட்டங்களையெல்லாம் ஒருங்கே நன்கு உருவமாக்கிக்கொண்டார்கள். அஃதாவது எப்படியெனின்? இல்லறத்திற்காக வேண்டும் முதற் கருவியானது நற்குண நற்செய்கைகள் நிறைந்த பல நல்லொழுக்கங்களோடுங் கூடியவோர் பெண்பாலே எனவும், இல்லற தருமத்திற்குரிய புண்ணியங்களை யனுசரித்து நல்லொழுக்கத்தினுங் கற்பு நெறியினும் நிலைதவறாதிருந்து, தமது சுற்றத்தாரெவரையும் இனிமையாயுபசரிக்கும் ஸ்திரி சகலரிடத்தினும் புகழ்ச்சியையும், கீர்த்தியையும், மகிமையையும் பெறுவாள் எனவும், ஓர் குடும்பத்தின்மனைக்கிழத்தி பக்தியும் விவேகமும், துறவோர் முதலிய எவர்பாற்றும் இனிமையான உபசரிப்புமுடையவளாயிருந்தால் அவள் மூலமாய்க் குடும்பமுழுவதுஞ் சீரடைந்து, ஒழுக்கத்திற்கும் சமாதான வாழ்க்கைக்கும் உரித்தாகி யாவராலும் புகழ்ந்தேற்றப்படுமெனவும் இன்னும் இவைபோன்று சில மெய்மையானவும், பெரும்பான்மை போலியான அநேகக் கட்டுக்கதைகளாலும் பெண்வர்க்கத்தாரின் வாயில்களில் இன்னமும் மண்போடக்கிடக்கும் சில நூன்முறைச்சட்டங்களை எதோ காலரையாகப் பார்த்தும்பாரா

மற் றெறிந்துகொண்டும் ஓ! கொண்ட மனையவட்கு இரண்டகம் செய்வார் குலக்கொழுந்தே! ஓயத்தன்மீர்! நாலைந்து வருஷக்காலமாய் நீவிர் அயல் நாடுகளுக்குத் தனியாகச்சென்றதுமின்றி யாங்கு தேடிய பொருள்களையெல்லாம் அவமே சில மிருகவர்க்கத்தைப் போன்று வரன்முறையின்றி வேசைகளுக்கும், சூதாட்டத்திற்கும் தொலைத்துவிட்டு திடுதிண்டாயிநமாவெனவந்து உட்கார்ந்துகொண்டு வீண்காலம்போக்கும் விருதாவாகத் தப்புந்தண்டும், தாறுமாறுமான வாதங்கள் கூறுகிறீர்? எனது அடிவயிற்றைப்பற்றியன்றோ! எரிகிறது! ஓ! காமத்துரோகக் கயக்கொழுந்தே! ஓ! நிர்மூடவர்க்க நிதியமே! ஓ! கெர்வக்களஞ்சிய கேசரியே! ஓ! மாயாவிகார மதகரியே! "பல்லாரறியப் பறையறைந்து நாட்கேட்டுக் கலியாணஞ்செய்து கடிப்புக்க, மெல்லியன், காதன்மனையாளுங் காதலனும்" எனவரும் சில அரியபெரிய நீதிவாக்கியங்களை யறியீர் போலும்! ஆசையென்னும் பாசக்கயிற்றாலே ஆர்க்கப்பட்ட இந்த நிலவுலகத்தின்கண் மனிதவர்க்கமாகத் தோற்றப்படுகிற ஒருவர் இறந்துபோவது நிச்சயமேயானால் தங்கள்தங்களுக்கென்று, இளமையான ஒரு ஆண்மகனுக்கு ஒரு பெண்மகளையும், ஒரு பெண் மகளுக்கு ஒரு ஆண்மகனையும், தங்கள் தங்களின் தாய்தந்தையர்கள், பந்துமித்திராதிகள், குலருரு முதலிய பல பெரியோர்கள் வரை தெரியும்படித்தான பறையல்லது, நிருபம், அல்லது தூது என்பவைகளாலும் விளங்கச்செய்து, பிரம்மாதி முதலாய தேவர்களையுஞ் சாட்சியமாக்கொள்ளப்படுகிற சில கிரியை முதலான திருவாசகங்களென்னும் ஆஞ்ஞையுருவங்களாலே விவாகஞ்செய்து கொள்ளப்பெற்றவொரு ஆண்பாலும், பெண்பாலும், அனுபவிக்கும் காம லீலாம்ர்த வின்பத்தைத்தவிர,

கடியெனக்கேட்டுங் கடியான், வெடிபட
ஆர்ப்பதுகேட்டுமதுதெளியான், பேர்த்துமோர்
இற்கொண்டினிதுறாஉமென்பவே ஏமுறுதல்
கற்கொண்டெறியுந் தவறு" என்றும்,

"கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென்றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார் கண்டு—மணங்கொண்டீண்டு,
உண்டுண்டுண்டென்னு முணர்விற் சாற்றுமே
தொண்டொண்டொடென்னும் பறை" என்றும்,

"நிட்டையிலே யிருந்துமனத் துறவடைந்த
பெரியோர்கணிமலன்றுளைக்,
கிட்டையிலே தொடுத்து முத்தி பெறுமளவும்
பெரியசுகங் கிடைக்குங் காம,
வெட்டையிலே மதிமயங்கிச் சிறுவருக்கு
மணம்பேசி விரும்பித்தாலி,
கட்டையிலே தொடுத்து நடுக்கட்டையிலே
கிடத்துமட்டுங் கவலைதானே" என்றும்,

"செய்கொண்டாருங் கமலச் செம்மலுடனே யரவப்,
பாய்கொண்டானும் பணியும் பட்டீச்சுரத்தானே,
நோய்கொண்டாலுங் கொள்ளலாம் நூறுவயதாமளவும்,
பேய்கொண்டாலுங் கொள்ளலாம் பெண் கொள்ளலாகாதே"

என்றும்,

"முதற்சங்கமுதூட்டும் மொய்குழலார் தம்மை,
நடுச்சங்கு நல்விலங்கைப்பூட்டும்—கடைச்சங்கம்
ஆம்போதெனவூதும் அம்மட்டோ இம்மட்டோ
நாம் பூமி வாழ்ந்த நலம்" என்றும்,

"தெரிவிளமையும், தீப்பிணியும், மூப்பும்
பிரிவுந் துயிலும் ஒரீஇப்—பருவந்து
பத்தெட்டுநாளைப் பயனிலா வாழ்க்கைக்கு
வித்துக்குற்றுண்பார் பலர்" என்றும்,

இல்வாழ்க்கையைக் கீழ்ப்படுத்தி முனிவர்களாலே குறிக்கப்படும் பேரின்பம் எந்த மார்க்கத்தானும் பெரிதாமோ? எட்பிளவுங் கூடக் கருணையில்லாத ஓ! காட்டுமாட்டு வர்க்கமே! எந்தஞான்றும் நம்மிருவருக்குள் ஒருவருக்கொருவர் ஐக்கியமாக இயங்கும் பொருட்டுத் திருமணஞ் செய்துகொண்டமோ? அந்தஞான்று முதலாக நீயிர் எமக்கு அடிமையானதும், யான் நுமக்கு அடிமையானதும் உணர்ந்தில்லீர்போலும். அஃது நும்மனத்திடை யேனோ பதியாதுபோயிற்று? 'கொஞ்சமும் நல்லுணர்ச்சியில்லாத ஏ! முழு

முட்டாளே! நீயுண்பதென்னை உப்பற்ற கூழோ? ஓ! அத்தன்மீர்! எனது சரீரதத்துவ பூதாதி முதற்கொண்டு அறிவுவரை ஒன்று கூடித் தினைத்துணையாலும் வேறுபாடின்றி யனுபவித்து ஆநந்த மெய்து களித்தற்கு உரிய மன்மதனுங்காணில் நாணத்தகுந்த, மிகுதியும் வனப்புவாய்ந்த எமக்குச் சொந்தமான நுமது சரீர பூதாதி தத்துவ நாதம் முதலாய சத்துக்களையெல்லாம் எவ்வளவும் எம்முடைய உத்தரமின்றி ஆங்குள்ள வேசை தாசிகளுக்கு எப்படிப் பல்லையிழித்துக்கொண்டு பறிகொடுத்தாய்? அடா! பரம தடிப்பையா! அங்ஙனம் பறிகொடுத்து கொஞ்சமும் நாணமின்றி யிங்கும் ஏன் வந்தாய்?

"மயிர் நீப்பின் வாழாக் கவரிமாவன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்" என்னும்,

தேவர் திருவாக்கை நீ யென்னை யறியாய்போலும்! மானுபிமானத்தையொழித்த ஏ! காட்டுக்கடாப்பையா! ஒருச்சாணளவில் கயிறு ஒன்று ஆங்கு கிடையாது போயிற்றோ ! அடோ! அதர்ம சண்டாளா!

"கண் மூன்றுடையானுங் காக்கையும் பையரவும்
என்னீன்றதாயும் பிழைத்ததென்—பொன்னீன்ற
கோங்கரும்பன்ன முலையாய் பொருள்வயிற்
பாங்கனார் சென்ற நெறி"

என்ற அமுதவாக்கிற்கிணங்கிய மகளிர் ஒருவரும் இப்பூமியின்கண் இருக்கமாட்டார்கள் என்றோ! நினைத்தாய்? ஏடோ! ஏ வெட்கமும்கெட்டு வெளிப்பட்ட முண்டாய்! நின் கல்வி, அறிவு, ஒழுக்கம், ஆண்மை முதலாய நன்னெறிகளையெல்லாம் எங்கடோ தவறவிட்டாய்? இதற்காகத்தானோ நீ தொலைக்குக்கொண்டு விற்கச் சென்றாய்? அடா! படுபாவிப்பையா! ஆங்கிருந்து ஈங்குற்ற கடிதங்கள் சிலது நீ வைத்த இடத்திலிருக்கிறதோவென்று பார்! அதில் தாங்கள் எப்பொழுது வருவீர்கள், எங்கள்செலவுக்கு மிகக் கஷ்டமாயிருக்கிறது, ஏனைய சிலர் இப்பொழுது வரத்துப்போக்கில்லை என்றுங் கண்டிருக்கிறதே! இன்னும் அவர்கள் தூமையைக்குடிக்க நீதான் போதல்வேண்டுமோ? அடா! ஏ மைத்துனா! நமது வகுப்

பாருள் சில பெண்மக்கள் ஏனைய ஒரு புருஷன் வதனத்தை ஏதோ அறியாமற் சற்றுக் காமமயக்கத்தால் கடைக்கண்கொண்டு நோக்கியதைக் கண்டாலுங்கூட ஒருவன் இருப்புலக்கையாற் புடைத்துக் கொலைபுரிகிறானே! மற்றொருவன் மண்வெட்டி, அரிவாள், கத்தி, கடப்பாரை முதலியவைகளாற் கொலை செய்துவிடுகிறானே! மற்றொருவன் தானே தன் குரல்வளையில் கயிறிட்டுக் கொல்கிறானே! ஒருவன் அவள் வியபிசாரியாய் போய்விட்டாளென பெருங்கூக்குரலிட்டு வேசையர் தெருவில் விடுக்கிறானே! ஒருவன் இஃதே நல்ல சமயமென்று போலி வேதாந்தியாகின்றானே! மற்றொருவன் கொஞ்சமும் நன்மதியின்றி மற்றொரு விவாகம் முடித்துக்கொள்கிறானே! மற்றொருவன் காசியாத்திரைசெய்யச் சென்றுவிடுகிறானே! அந்தோ! பரிதாபம்! அடா! மட்டி மடப்பயலே நின்னை யான் என்செய்கிறது! அடடா நின் கெடுமதிக்கு யான் என்செபவல்லேன். இன்னும் அவர்களுடன் கடிதப்போக்குவரவு வைத்துக்கொண்டிருக்கின்றாயே. பாரத மாதாவின் செந்தமிழ் புத்திரிகளான எமது வர்க்கத்தின் சுதந்தரம் இவ்வாறாகவோ இறைவன் எழுதினான். முந்தியகாலத்தும் ஔவையம்பிராட்டி, மங்கையர்க்கரசி, காரைக்காலம்மையார், தமிழறியும்பெருமாள், உப்பை முதலிய ஞானசிரோமணிகளும், வித்வசிரோமணிகளுமாயிருந்திருக்கிறார்களென மிகத்தெளிவாகவும் விளங்குகிறதே. அன்னவர்களும் சிவஞ்ஞானயோகச் செல்வத்தால் மறந்து தூங்கிவிட்டார்கள்போலும்! ஓ அம்மணி! பாரதமாதா! நமக்குப் பதியும், எமக்குத் தந்தையுமான பரசிவப்பெருமானால் தற்காலத்திலும் தோற்றப்படுகிற நாகரிகம், கல்வி, அறிவு, ஞானம், ஒழுக்கம், நடுநிலை முதலிய பல நன்னெறிகளாலுந் தேர்ச்சியடைந்த சகோதரிகளைக்கொண்டேனும் செந்தமிழ் வழங்கும் பல நாடுகளுஞ் சென்று ஆங்கர்ங்கு வேண்டும் சங்கங்களைக்கூட்டி மாதுவர்க்கங்களுக்கான நாமகரணங்கள் சூட்டப்பெற்று, நமது வர்க்கத்தார்க்கு வேண்டும் சுதந்தரங்களையும், கல்வியறிவுகளையும் இந்தச் சண்டாள ஆண் வர்க்கங்களோடு சமமாகவாவது ஒப்பச்செய்யவேண்டும் நடுநிலை முதலிய நீதிகளை எடுத்தோதி நடையுடைபாவனை முதலிய சீர்திருத்தங்களோடுகூடி வாழ்வதற்குரிய வருள் கொடுக்கச் செய்வாயாக.

18 அத்தன்மீர்! ஏ அத்தான்! ஓகோ! ஈதென்ன விநோதம்! யாதாமொரு பேச்சு, மூச்சொன்றையுங் காணவில்லையே! கல்விமிகுதியான வீராவேசத்தால் இத்துணைதூரம் இன்னதுதான் புலம்பினேன் என்பதுந் தெரியவில்லையே. அத்தன்மீர் தூங்கிவிட்டீர் போலும்! அடா! என் கண்மணி! என் ஆவற்கினிய ஆண்கோவே! ஈதென்ன? தலையணையெல்லாம் ஒரே ஈரமாகவிருக்கிறது? அடடா! இஃதென்னை? நின் அங்கவஸ்திரமெல்லாந் தொப்பல் தொப்பலாய்க் காணுகிறது? ஓகோ! இஃதென்னை? மெத்தையுங்கூடவா இத்துணை ஈரமாயிற்று அடடா! இவ்வளவு கண்ணீரா சொரிந்துவிட்டாய்! ஆ தெய்வமே! எத்துணை பாவத்திற்கு ஆளாய்விட்டேன்! என் முகத்தைப்பாரடா! இந்தா! எழுந்திரு! இஃதென்ன கோலம் இன்னும் முகமெல்லாம் கண்ணீர் மாலை மாலையாகவோடுகிறதே! யான் சண்டாளி என்ன மோசம் செய்தேன். இவரோடு இத்துணை தூரம் ஏனோ நாவாடத்துணிந்தேன். சுவரை வைத்தன்றோ சித்திரம் எழுதல்வேண்டும். இவருடைய மனமானது மிகவும் புண்பட்டன்றோ போய்விட்டன. ஓ என் பிராணநாதா! அறியாமையால் விபவகாரஸ்தானத்தில் ஏதோ இரண்டொரு வார்த்தைகள் அளவுகடந்து வரவுந்தான்கூடும். அதனைப் பொறை செப்பலாகாதா? கண்ணீரைத் துடையின் விடியற்காலம் ஆய்விட்டனபோலுந் தெரிகிறது. எனக்கு நித்திரையானது மிகவும் கண்ணை மிரட்டுகிறது. ஏதோ வேண்டுமானதைச் சாப்பிட வாருங்கள். இரவு வெறுமனே படிக்கலாகாது! என்மீது கோபம் வைத்துக்கொள்ளவேண்டாம். நீரடித்து நீர் விலகிக் கொள்ளுமா?

19. ஞானசம்பந்தன்.

அடி கண்மணி! என் பிராணநாயகி! ஏ! என் ஆத்மரட்சகி! "கற்பனைக் கல்லைப்பிளக்கும்" எனச்சில ஆன்றோர்களால் கேள்வியுற்றிருக்கிறேன். அஃதாவது இன்றுதான் என்னுடைய பரிசீலனைக்கு வந்தது. நமது இந்தியநாட்டின்கண் சில பகுதிகளில் ஆண் வர்க்கத்தார் பெண்மக்களுக்குக் கொடுத்திருக்கும் சுதந்தரங்களையும், அவர்களுக்காற்றும் கட்டநட்ட நிட்டூரம் ஆன கொடிய சில நியாயங்களையும் நினைக்க, நினைக்க எனது நெஞ்சமானது

உருகிக் காவிரியாறானது கரைபுரண்டாற்போல கண்ணீரானது ஓடத்தலைப்பட்டுவிட்டன. கண்மணி நின்மீது எனக்கு எட்பிளவேனும் மனவருத்தமின்று. பசிப்பிணி எங்கோ பறந்தோடிப் போயிற்று. நின் போதனை எனக்குவோர் பெரும்போதமாயிற்று. சரி, நாளைப்பேசிக்கொள்வோம்.

20. ஞானசம்பந்தன்.

கண்மணி! நின்னோடு தர்க்கம் செய்வதற்காவது, நடுநிலை முதலிய ஞானமார்க்கங்களை நாவாரப்பகர்ந்து பேசுவதற்காவது போதுமான கல்வியறிவு எமதிடமில்லை. நிற்க, நினது வர்க்கத்தார்க்கு இன்றியமையாத முக்கிய சாதனங்கள் உள்ளதாயும், தற்கால நாகரிகங்களுக்குப் பொருத்தமாக வேண்டும் சில அரிய பெரிய விஷயங்களையெல்லாம் பகுதி பகுதியாகத்தொகுத்து மிகச் செவ்வனே வரைந்து தருவாயாயின், நமது மித்திரன் ஒருவர் "நாட்டுக்கோட்டை வைசியம்" என ஒரு நூல் எழுதுவதாக முன்னம் இலங்கையில் வைத்துச் சொல்லியிருக்கிறார். அந்நூலைச் சார்ந்த சகோதர சகோதரிகளுக்கும் மிக உபயோகமாகும்பொருட்டும் சேர்த்துப் பிரசுரம் செய்யும்படிக்கும் வேண்டும் ஏற்பாட்டைச் செய்துவிடுகிறேன்.

21. கமலம்.

அங்ஙனமாயின்? நுமது வர்க்கத்தார் படிப்படியாகக் கற்க விரும்பும் கல்விகளொருங்கும், இறந்தது விலக்கல் எதிரது போற்றல் என்னும் உத்தியோடிணங்கி நமக்குத் தற்கால நாகரிகங்களைக் காட்டிவரும் ஆன்றோர்களானும் புகழ்ந்து கொண்டாடப்படுகிற கலைமகள் என்பாள் நும்முடைய வர்க்கமோ? அல்லது எம்முடைய வர்க்கமோ? நுமது வர்க்கத்தார் சரீராதியந்தம் ஒருங்கையும் ஆய்ந்துநோக்குமிடத்து எமது வர்க்கத்தின் சத்தன்றோ? நுமது வர்க்கங்களோடும் ஏனைய வுலக வர்க்கங்களும் துய்த்தற்குரிய பலமாதிரியான உணவுகளையும், ஏனைய பலவித உபகரணங்களோடுங் கூடிநின்று பயக்கும் பூமாதேவி என்னுந் தாயாரவள் எமது வர்க்கமோ? அல்லது நுமது வர்க்கமோ?

22. கமலம்.

அத்தன்மீர்! நும் தந்தையானவர் நும்மை,

"குழல் இனிது யாழ் இனிது என்பதம்மக்கள்
மழலைச்சொல் கேளாதவர்"

"மக்கள் மெய்தீண்டல் உடற்கின்பம் மற்றவர்
சொல் கேட்டல் இன்பம் செவிக்கு"

என்ற தேவர் திருவாக்கிற்கிணங்க மகவாகக்கோடற்கு அந்தோ! பரிதாபம்! எத்துணைதூரம் பிரயாசைப்பட்டார் என்பதை நீயிரே கவனித்துப்பாரும். கேவலம் சிற்றின்பம், சிற்றின்பமென்று எச்சமயங்களினும் எவரானும், எள்ளப்படுகிற காமாதிமோக மயக்கினுட் சிக்கி, மதியினையிழந்து, சிறிய புல்நுனிமிசை யுடைத்தாயிருக்கும் பனிநீர்போன்ற ஒரு சிறுதுளியளவான சுக்கிலம் என்னும் வித்தினை, கருப்பை என்று சொல்லப்படுகிற தங்களின் அரிய நிலத்திலே எய்து, நாளாரம்பத்திலேயே தங்களின் சரீரத்திலுள்ள சத்துக்களைக்கொண்டு பாகித்துக் கால், கை, மெய், வாய், கண், மூக்குச், செவி என்னும் உறுப்புக்களோடும், ஏனைய பிரமாதி மூவர்களானும், செய்தற்கு அருமையான மனித வர்க்கமாக உருப்படுத்தத் தனது ஆலிலைபோன்ற அடிவயிற்றின்பால், ஆ! ஆ! என்கொல்! நினைதொறும், நினைதொறும், நெஞ்சம் அஞ்சப்படுகிறதே! கேவலம் ஒரு நாளோ இரண்டு நாளோ? 280, 300 நாள் வரை, வேறு எவரானும் மாற்றிக்கொள்ள இயலாத பெரும்பாரமாகத் தாங்கி, உருப்படுத்திப், பின்னர் ஒரு கணப்போழ்தில் உயிர்வேறு, உடல்வேறு ஆயினும் ஆய்விடுமாம் என்று, அம்மா, அம்மாவென்று ஏனைய பல மாதர்களுங்கூட அலறத்தகுந்த துன்பத்துட்பட்டு நும்மையீன்ற அன்னையானவள் நுமது வர்க்கமோ? அல்லது எந்தவாற்றானும் மாட்சிமைதங்கிய எமது வர்க்கமோ? "அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்ற நமதௌவையம்பிராட்டியர்க்கு, அன்னையைப் பின்னதாகவும், பிதாவை முன்னதாகவும் வைத்து அமைத்து ஒரு சூத்திரம் செய்யத் தெரிந்தாரில்லையென்றோ நினைக்கிறீர்? "பெற்றவட்கே தெரியும் அந்த வருத்தம் பிள்ளை பெறுப்பேதை யறிவாளோ" என்றாற்போல, ஒருபெண்பாலானவள் ஒரு மகவினைப்பெறும் பேறுகாலத்தில் தாம் அநுப

வித்த துன்பத்தை நினைந்து ஏனைய ஆண்வர்க்கங்களான நம்மவர் நன்கு தெளியும்பொருட்டுக் கூறவேண்டுமாயின், இன்ன துன்பத்தைப்போன்றது என ஈடுகொடுத்துக்கூறற்கு இந்த நிலவுலகின்கண் எந்தத் துன்பமும் இல்லை என்றேதான் சொல்லத்துணிய வேண்டுமேயன்றிக் கலைமகளானும் பிறிது ஈடுகொடுத்துக்கூறற்கு இயலாது.

உ

திருச்சிற்றம்பலம்

ரீடிங் ரூமும், பாட்மிண்டனும்

எம் அருமைச் சகோதரர்களே! மேற்கண்ட இவ்விரண்டு விஷயத்தையும் பற்றிச் சில நல்ல வார்த்தைகள் சொல்லவேண்டுவது ஆவசியகமென யாம் கூறுமலே அறிவாளிகளாயுள்ள ஒவ்வொருவருக்கும் மிகச்செவ்வனே நன்கு விளங்கும். இக்காலம் நமது வைசிய மகாசமுகத்தைச்சார்ந்த ஒவ்வொரு நகரங்களினும் பெரும்பான்மை இவைகள் மிகச்சிறப்பாகக் காணப்படுகின்றன. ஆனால்,

வினா. இவைகளை ஏற்படுத்தினவர்கள் யார்?

விடை. நாம்.

வினா. இவைகளுக்கு மெம்பர்களாயிருப்பவர்கள் யார்?

விடை. நாம்.

வினா. இவைகளுக்குப் பிரசிடெண்டாயிருப்பவர் யார்?

விடை. நம்மனோருள் ஒரு சிறந்தார்.

வினா. இவைகளுக்கு செக்ரட்டேரியாக விருப்பவர் யார்?

விடை. நம்மால் நியமிக்கப்பட்ட ஒருவர்.

வினா. இவைகளுக்கு வேண்டும் சட்டங்களை நிருமாணித்தவர்கள் யார்?

விடை. நாம்.

வினா. இவைகளுக்கு மெம்பர்களாக யிருப்பவர்களெல்லாம் நமது ஒரே வருணத்தவர்கள்தானே?

விடை. சிறுபான்மை அயல் வருணத்தவர்களும் உண்டு.

வினா. இவைகள் எதற்காக ஏற்படுத்தியிருக்கிறோம்?

விடை. நல்ல மார்க்கத்தால் நல்ல மார்க்கத்தில் மனோதிடமாகவும், பேரறிவாண்மை நாளுக்குநாள் வளர்ந்தோங்கவும், நாடோறும் செய்யுந் தேகாப்பியாசத்தால் திடகாத்திர தேகமாகவும், இவ்வுலக வியவகாரங்களை மிக நன்றாகத் தெரிந்துகொள்ளவும், எட்டுத் திக்குகளினும் உடைத்தாய பலதேசங்களில் நடைபெறும் பல புதிய விஷயங்களை உடனுக்குடன் பத்திரிகை வாயிலாகத் தெரிந்துகொள்ளவும், நல்ல புத்தகங்களைப் படிக்கவும், நற்காலம் போக்கவும், ஒருமைபெற்று வாழ்வதற்குரிய சில முக்கிய விஷயங்களைத் தெரிந்துகொள்ளவும், நமது நகரங்களுக்கும், நமது சமூகத்துக்கும், நமது சமயத்துக்கும், நமது பாஷைக்கும் வேண்டும் பல நன்மைகளை நம்மாலியன்றவரை செய்யவுமே ஆம்.

வினா. இதில் ஒன்றும் சந்தேகமில்லையே?

விடை. இல்லை.

வினா. நாம் ஏற்படுத்திய ஒரு காரியத்திற்கு நாமே தீங்கு செய்யலாமோ?

விடை. அப்படியொருவருந் தீங்குசெய்வாரில்லையே. அங்ஙனம் எவ்விதத்தீங்கு யாவர் செய்ததாக நுங்களுக்கு யார் சொன்னது?

வினா. எமக்கு ஒருவருஞ் சொல்லவில்லை. சில நகரங்களில் முதன்முதல் ஒன்றாக ஏற்பட்டு, பின்னர் சின்னாட்களுக்குள் அவ்வொன்றில் நின்றுஞ் சிலமெம்பர்கள் பிரிந்து மற்றொன்று, மற்றொன்றாகக் காணப்படுகிறதே. அஃதென்ன காரணம்?

விடை. ஓகோ! அஃதா! நமது சிறுவர்களுக்குள் ஒருவருக்கொருவர் சிறிது மனஸ்தாபம் செய்துகொண்டு அறியாமையினால் விலகி வேறுவேறு தனித்தனியாக ஏற்படுத்திக்கொண்டார்கள்.

மேலும் இதில் என்ன தீங்கிருக்கிறது? ஒரு நகரத்தில் இரண்டு மூன்று ரீடிங்ரூமும், நான்கைந்து பாட்மிண்டன் கிளப்பும் இருக்கிறதென்றால் அந்நகரத்திற்கு மிகப்பெருமையுங்கூட அல்லவா?

வினா. அடடா! தம்பி! மிக்கச்சரி. நீர் மிக நல்ல பிள்ளையாகக் காணப்படுகிறீர். ஆங்கிலத்திற் சிறிது பயிர்ச்சியுள்ளார் போன்றுந் தோற்றுகிறீர். பதிலுத்தரம் மிக நன்றாகப் பகருகிறீர். கல்லுக்குக்கல், அணைகொடுத்தாற்போற் காணுகிறது. இருக்கட்டும். நீர் முதன்முதலாகக் கூறியதுபோன்று அச்சிறுவர்களும் "நாம்" என்ற பன்மைப் பெயர்ச்சொல்லின்பொருட்டு உடன்பட்டவர்களோ? அன்றோ?

விடை. ஆம், ஐயா! அக்காலம் உடன்பட்டவர்களாகத்தான் இருந்தார்கள். மேலும் ஒரு பாஷையின் இலக்கணம் ஒருங்குந் தெரிந்துகொள்ளாமல் வியாசம் வரைதற்காவது, ஒரு பத்திரிகைக்கு ஆசிரியராகவாவது முன்வரலாமோ? "நாம்" என்றது இருதிணை யிருகூற்றுப்பன்மைப் பொதுப்பெயர்ச்சொல் என்பதை மறந்து பன்மைப்பெயர்ச்சொல் என்று மாத்திரம் குறித்தீரே அஃதென்ன?

ஆம். தம்பி! கொஞ்சம் மறதிதான் தயைசெய்து மன்னித்துக் கொள்ளுங்கள். "கற்றது இறையளவு கல்லாதது உலகளவு உற்ற கலைமடந்தை யோதுகிறாள்" என்ற முதுமொழியையுங் கவனியுங்கள். மேலும், "கல்வி கரையில கற்பவர் நாள்சில மெல்ல நினைக்கிற் பிணி பலவாய்" என்றுங் கூறப்படுகிறது. ஆகலின் சிற்சில பிழைபாடுகள் எத்துணை பெரியராகவிருப்பினும் நிகழத்தான்கூடும்.

ஆம் ஐயா! இது விஷயத்திற்காக இப்பொழுது பிரம்மவாதமாக யான் ஒன்றையுஞ் சொல்லவரவில்லை. மகாபெரியவர்கள் மாதிரி நும்போல்வார் சிலர் வார்த்தையாடுகிறார்கள். காரியாதிகளைக் கவனிக்கப்புகுந்தால் மிக மோசமாகவே காணப்படுகிறது. "ரகர" "றகர" பேதங்கூட விளங்காமலா வியாசம் வரையப் புகுதல்வேண்டும்? அதனைத் திருத்தத்தெரியாதவரும் ஒரு பத்

திரிகைக்கு ஆசிரியராயிருக்கக் கருதலாமோ? நமது தமிழ் பாஷையில் நடைபெற்றுவரும் எந்தப் பத்திரிகைகளுமே கொஞ்சமும் நன்றாகவில்லை. எழுத்துச்சொற்களில் நிறைந்திருக்கும் பிழைபாடுகளை ஒருவகையாகக் கவனியாது விடுவோமாயினும், விஷயப் பிழைபாடுகளுமன்றோ நிரம்பக் காணப்படுகின்றன. "செய்வன திருந்தச்செய்" என்ற அமுதவாக்கை எந்த வியாச கர்த்தர்களும், எந்த அதிபர்களும், ஆசிரியன்மார்களும் கவனிக்கிறார்களோ இல்லை. முதன்முதலாகத் தாங்கள் திருந்தப்படிக்கவும், படித்த முறையாக வியலப்பழக்கவும், அற்றவொருவர் பிறரை எவ்வாறு திருத்துவர்?

இவர்களின் இயற்கை,

"குருடும் குருடும் குருட்டு ஆட்டமாடிக்
குருடும் குருடும் குழிவிழுமாறே"

என்பதுபோன்றன்றோ முடியும். இப்படிப்பட்ட வியாச கர்த்தர்களும், ஆசிரியன்மார்களும் ஏதோ தங்களான் முடியக்கூடியவொரு சிறிய தொழின்முறைகளைப் பார்த்துக்கொண்டு அதிகப்பிரசங்கமற்று வேர்பக்கத்திற் குந்திக்கொண்டிருக்கலாகாதா? இப்படிப்பட்ட பேறிவாளர்களைக்கண்டோ எம்முடைய வைசிய மகாசமுகம் கூவியழைத்தன. எந்தப் பத்திரிகைகளும், எந்தச் சஞ்சிகைகளும் முதன்முதற் பார்வைக்கு நன்றாயிருந்தாலல்லவா அதனை விரித்துப்பார்க்க மனஞ்செல்லும். எத்துணை எழுத்துக்கள் கான்மாறிக்கிடக்கிறது. எத்துணை ககரவொற்றுக்கள் சகரவொற்றாகக் கிடக்கின்றன. எத்துணை எழுத்துக்களுக்குக் கை கால் ஒடிந்துகிடக்கின்றன. எத்துணை லயன்கள் கோட்டமாய்க் கிடக்கின்றன. எத்துணை எழுத்துக்கள் தமது அழகிய சிரத்தில் மையைக் கொட்டிக்கொண்டிருக்கின்றன. எங்கள் ரீடிங்ரூமுக்கு வருகிற தினசரி பேப்பர்களை நீங்கள் கண்டீர்களா? வெறும் மண்தரையில் 50, 60 தரம் மெழுகிய சாணைத்துணிபோன்றே காணப்படுகின்றன. இதன் ஆசிரியன்மார்கள்தான் சுயஆட்சிக்கு மாரடிக்கிறவர்கள். சுயஆட்சிக்கு முதற்காரணமாக விளங்கும் சமாசாரப் பத்திரிகையையும், அதற்குரிய அச்சியந்திரசாலையையும், அதிலுடைத்தான வேலையாட்களையும் சரிவரக்கொண்டுநடத்தத் தெரியாதவொருவர் சுயஆட்சியைப்பற்றி வரை

யப்புகுவதும், பேசப்புகுவதும் ஆ! ஆ! எத்தனை வியப்பைத் தருகிறது. இவர்களின் சோம்பற்றன்மையால் சில அருமையான விஷய வியாசகர்த்தர்களின் தன்மையுமன்றோ குறைந்துவிடுகிறது. 20, 30 என சந்தா ரூபாய்கள் பெற்றுக்கொள்வதினுஞ் சந்தேகமில்லையே. மிகப்பழமையான எழுத்துக்களை உடனுக்குடன் உருக்கி வார்த்துக்கொள்வதற்கென்ன? சுதேசக்கலகமாவது, யுத்தமாவது அல்லாதகாலத்தில் நட்டம் வருகிறது, நட்டம் வருகிறதென்று ஏனோ உட்கார்ந்து அழுதுகொண்டிருக்கிறார்கள். பத்திரிகைகளை ஆதரிப்பாரில்லையோவென ஏனோ சிலர் கதருகிறார்கள். அடடா என்ன அறிவின்மை! சண்டையிட்டுக்கொள்வதற்கென்றால் சில பத்திரிகைகளும் தயாராகின்றன. நாம் இன்ன காரியத்திற்காகத்தான் பத்திரிகை நடத்த ஆரம்பித்தோம் என்பதைக்கூட நினைந்து கவனிக்கிறார்களில்லையே! ஒருதேசப் பொது நன்மைக்குப் பாடுபடப்புகுந்த வொருவனுக்கு பேரறிவாண்மை உலகானுபவத்தினும், காலவியற்கையினும், திருத்த மார்க்கங்களினும், பெருந்தன்மையோடுகூடிய கல்விப்பயிர்ச்சியினும், பலதேச சஞ்சாரத்தானும், தத்துவ ஆராய்ச்சியினும் எத்தனைதூரம் ஓங்கி வளர்ந்ததா யிருத்தல்வேண்டும். கோபமென்பது கொஞ்சமும் நிகழலாகுமோ? அழுக்காறென்னுங் கொடுந்தீயிடைப்பட்டு அவிந்துவிடலாகுமோ? வஞ்சமான நெஞ்சத்தில் ஐந்தாறு உப்புக் கல்லை வைத்துச் சுடுதல்வேண்டாமோ? திராசு நுனியைப்போன்று நடுநிலைகோடாமல் நிற்றல்வேண்டாமோ?

"வானின்றிடிக்கிலென் மாகடற்பொங்கிலென்"
கானின்ற செந்தீக் கலந்துடன் வேகிலென்
தானொன்றி மாருதஞ் சண்டமடிக்கிலென்
நானொன்றி நாதனை நாடுவனே"

என்ற வேதமந்திரம்போன்று, தாங்கள் எடுத்துக்கொண்ட காரியாதிகளில் எத்தனை இடையூறுகள் நிகழ்ந்தாலும் எட்பினவுங்கூட மாறுபடாதவண்ணம் ஒருநிலையாக நின்று மிகத்தெளிவாகச் சீர்தூக்கி நாடிமுடித்தல் வேண்டாமோ? பூமாதுபோன்ற பொறையுடையவராயும் இருத்தல் வேண்டாமோ? எல்லாம் வல்ல இறைவனால் நியமிக்கப்பட்ட நாமொரு பெரிய கௌரவசீல காரிய

தரிசி என்பதை யுணர்தல்வேண்டாமோ? கருணைபங்கடல்போன்று விளங்கல்வேண்டாமோ? ஆன்மாவை நாடியறிதல்வேண்டாமோ? தேசவூழியமானது ஒரு சிறந்த பிரம்மக்ஞானியின் செயலாமென்பதைத் தெளிதல்வேண்டாமோ? நும்போன்ற காலரைப் படிப்பாளிகளும், அறிவாளிகளும் ஒரு நன்னூற்கும், பத்திரிகைக்கும் ஆசிரியராக வரலாமோ? தேச க்ஷேமத்தைப்பற்றிச் சதாகாலமும் சிந்தித்தல்வேண்டாமோ? எந்தக்காலமும் மனைவிமக்களின் மூஞ்சியையும், வேசை தாசிகளின் மூஞ்சியையும் பார்த்துக் கொஞ்சிக் குலாவி மந்திமாதிரி குந்திக்கொண்டிருக்கும் ஒருவர் தேச க்ஷேமத்தைக்குறித்து நினைக்கவும் அருகராவரோ? ஒரு ஆசிரியராகவும் அருகராவரோ? அடித்த முளையையும், ஆணியையும் போன்றன்றோ முன்பின் விலகாமல் நின்று ஒரு பெருங்காரியத்தை முடித்தல்வேண்டும். மனோவன்மையானது இமயகிரி போன்று வளர்தல் வேண்டாமோ? நிற்க, நும்முடைய சென்ற மாதச்சஞ்சிகை 557-வது பக்கத்தில்

"அங்கமே நின்வடிவமான சுகர் கூப்பிடநீ
எங்கும் ஏன்! ஏன்! என்றது என்னே பராபரமே"

என்று அச்சாகவேண்டியதிருக்க,

"அங்ஙனமே நின்வடிவமான சுகர் கூப்பிடநீ
எங்கும் ஏன்! ஏன்! என்றது என்னே பராபரமே"

என்று அச்சாகியிருக்கிறதே அதன் காரணம் என்னை? நும்முடைய ஆசிரியத்தன்மை இதுதானோ? இன்னும் எத்தனையோ எழுத்துக்கள் பிழைகாணப்படுகின்றதே? நீயிர்! அச்சாபீசுக்குப், கிளர்க்குக்கும் ஒழுங்காகப் பணஞ்செலுத்திக்கொண்டு வந்தாலல்லவா அவர்கள் வேலையை ஒழுங்காகச் செய்துவருவார்கள். நும் போல்வார்க்கெல்லாம் பத்திரிகை எதற்கு? வீண் ஆடம்பரந் தானே? இஃதெல்லாம், பெரும்பணக்காரர் செய்யவேண்டுந் தொழில் அல்லவா? தரத்துக்குத்தக்க வேலை செய்யாமல் நும் போல்வார் பலர் திண்டாடுகிறார்கள். தமிழ்ப்பத்திரிகைகள் எல்லாமுமே நிரம்ப ஊழல்களேயாம். எங்கள் நாட்டில் நடைபெற்றுவரும் வைசியமித்திரனும், வித்தியாபாநுவும் ஒருபக்கம் இருக்

கட்டும். பட்டினக்கரையல்ல வென்பது எவர்களுந் தெரிந்த வாய்மை. சென்னையிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளைப் பற்றிக் கவனிக்கப் புகுந்தால் நிரம்ப அதிசயமேயாம். அஃதாவது சுதேச மித்திரன், இந்து நேசனைப்பற்றிச் சொல்லவேண்டுவதே இல்லை. அதனைப்பற்றிப் பேசுவதற்கு என்னுடைய அறிவும், கல்வியும், போதாது. லோகோபகாரியைக் கொஞ்சம் நல்ல பத்திரிகை என்றும், ஆன்ம தரிசனத்திற்கு வொரு நல்லாசிரியன் போல் விளங்குகிறதென்றுஞ் சிலர் பேசிக்கொள்கிறார்கள். வாய் ஞானம் வியவகாரவாயலாகப் பேசிக்கொள்வதற்கு மிகவுதவியாயிருக்கிறதென்றுஞ் சொல்லிக்கொள்கிறார்கள். அதுவும் எங்கள் ரீடிங் ரூமுக்கு வருகிறது. அதன் ஆபாசத்தை வெளியிட்டுச் சொன்னால் வெட்கத்தினும் வெட்கமேயாகும். அந்த வழுக்கு மண்டைத் தாத்தா என்தான் செய்வாரோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம். ஆசிரியர் காலத்திலேயே அநேக பிழைகள் காணப்படுகின்றன. ஒவ்வொன்றையுங் குறிக்கிறதென்றால் மிகப் பெருகவே செய்யும் என்றாலும் ஒன்றிரண்டைக் காட்டவேண்டுவதும் ஆவசியகந்தான். அஃதாவது நளிது நள வருஷம் கார்த்திகை மாஸம் 13ஆம் தெய்தி திங்கட்கிழமை பத்திரிகை ஒன்றாவது பக்கம் இரண்டாவது லயனில் பாவனை யென்பது பானையாகப் போயிற்று. அதே தெய்திப் பத்திரிகை ஆறாவது பக்கம் மூன்றாவது லயனில் தொல்காப்பியமும் என்பது தொல்பியமும் எனவாயிற்று. மேலும் தொல்பியமும், ஆங்கில மொழிபெயர்ப்பும், எனத் தலைப் பெயர் அமைந்த வியாசத்தில் "பெருந்தருமஞ் செய்பவர்களென்று பிரசித்திபெற்றுவரும் நாட்டுக்கோட்டைச் செட்டிமார்களும், பாஷாபிவிர்த்தி, மதாபிவிர்த்திகளில் சிறிதுங் கவலைகொள்ளாதிருக்கின்றனர்" என்று கூறப்படுகிறது. கவனிக்குமிடத்து இஃது எனக்கொரு பேராச்சரியத்தையே தருகின்றது. "பத்தா பூலோகம் இதுதானோ" என்றது போற் காணப்படுகிறது. லோகோபகாரிக்கு உலகமே இன்னதென விளங்கவில்லைப் போலும்! நமது இந்திய தேயம் ஒன்றோடு மட்டும் நில்லாமல் இலங்கை, பர்மா, மலாய் முதலிய அன்னிய தேயங்களிலும், எங்கள் வகுப்பாரால் நமது சைவ சமயப் புகழொளி முழங்குவது ஐந்தாண்டுச் சிறுவர் சிறுமிகளுக்குங் கூட

மிகத்தெளிவாக விளங்குமே. எந்தக்காலமும் சமாதி நிலையத்தைக் கவனிக்க விரும்பும் ஒருவருக்கு உலக வியவகாரம் என்ன விளங்கப்போகிறது? எங்கள் பகுதியார் கவலை கொள்ளாதிருந்திருப்பார்களானால் இதுகாறும் தேவாரம், திருவாசகம் முதலிய தமிழ் வேதம் எந்தச் சமாதுக்குள் நிட்டைபுரியுமோ இறைவனுக்குத்தான் வெளிச்சம். மேலும் இராமாயணம், மகா பாரதம் பெரிய புராணம், திருவிளையாடற் புராணம் முதலிய புராணேதிகாசங்களெல்லாம் தற்காலவரை மேனாட்டு நாகரீகங்களென்னுஞ் சூறாவளியால் யாங்கனம் ஒதுங்கிக்கிடக்குமோ ஈசனுக்குத்தான் தெரியும். எத்துணைச் சிவாலயங்கள், எத்துணைச் சத்திரங்கள், எத்துணைக் குருபூசை மடங்கள், எத்துணைப் பாடசாலைகள், எத்துணைத் தேவார பாடசாலைகள், ஆக்கப்பெற்றும், திருத்தப்பெற்றும், ஆதரிக்கப்பெற்றும், நடைபெற்றும் வருகின்றன. எத்துணைத் தமிழ் வித்வான்களையும், நாவல்லவர்களையும் ஆதரித்து வருகின்றன. இவைகளெல்லாம் பாஷாபிவிர்த்தியும், மதாபிவிர்த்தியும் அல்லவா? இன்னும் கண்டுங்காணாததற்கு எங்கள் தேவநகரம் ஆகமங்களையுங் கூடவன்றோ உருப்படுத்த முன் வந்திருக்கிறது. ஏ! பத்திராதிபர்களே! ஏ! பத்திராசிரியர்களே! ஏ! வியாச கர்த்தர்களே! நுங்களுக்கு நோற்கத்தெரியாதொழியினும், நீங்கள் கொணக்காமலாவது குந்தியிருந்தாலாகாதா? ஏனோ அறிவையிழந்து பேறு நாட்டுகிறீர்கள். ஏ! லோகோபகாரியே நினக்கு நல்லுணர்ச்சியிருக்கிறதா? தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதினால் நமது தமிழ்ப்பாஷை யபிவிர்த்தியாய் விட்டதோ? ஆங்கில பாஷைக்குரிய வொருவர் அவர் தம் ஆங்கில பாஷையில் ஒரு பெரிய மேதாவியாகவிருந்து அவர் தமிழ்ப் பாஷையில் விருப்பங்கொண்டு அடிமுதற்கொண்டு தமிழ்ப்பாஷையைக்கற்று அதில் நின்றும் தொல்காப்பியமென்னும் அமுத சாகரத்தின்கண் மூழ்குவாரானாலன்றோ அவர்க்கு அக்காப்பியத்தின் இன்சுவை இஃதென விளங்கும். மேலும் முப்பதுகோடி ஜனங்களுக்கு மேலாகவே வுடைத்தாகப்பெற்ற மிகவும் பெரிதான நமது பரதகண்டத்துக்கே ஒரு சுதேஷ பாஷையாகி விளங்க முன்வந்திருக்கும் ஆங்கில பாஷைபோன்று ஆனாலன்றோ நமது தமிழ்ப் பாஷையையும் அபிவிர்த்தியாகிறதெனக் கூறுவதும் நியா

யமாகும். ஏ லோகோபகாரியே நீ நன்றாகக் கவனித்துப்ப நின் ஆசிரியரை நன்றாக விழித்திருக்கும்படி சொல்லு. நின் அக கத்தில் எட்பிளவும் பழுதேற்றுக்கொள்ளாதே. நின்மீது மிக கருணைகூர்ந்தே இவ்வளவுதூரம் பேசினேன். எந்தப் பகுதியா களின் மனத்தையும் புண்படுத்தும் பொருள்களை அள்ளிக்கொண் வராதே. நின் பெயர் மாத்திரைக்குத் தகுந்த பொருள்களைக் கொண்டுவந்து தா. மேலும் ஏனைய எவர்கள்மீதுங் குறைகூ வேண்டும் என்ற அபிப்பிராயமும் எனக்கில்லை.

> "பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான் யாண்டும்
> மறவாமே நோற்பதொன்றுண்டு—பிறர்பிறர்
> சீரெல்லாந் தூற்றிச் சிறுமை புறங்காத்து
> யார் யார்க்குந் தாழ்ச்சி சொலல்"

என்ற நீதிநெறி விளக்கமும் பள்ளிக்கூடப் பாடந்தான். எத்து னும், பேச நேர்ந்தகாலம் பேசாமலிருக்கவுங் கூடவில்லை. அம்ம ளவுதூரம் மனத்தை யடக்கிக்கொள்ளக்கூடிய சக்தி யென்பாள் னும் வளரவில்லை.

உ

திருச்சிற்றம்பலம்.

.attukkottai Vaiciyam.

நாட்டுக்கோட்டை வைசியம்.

ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

> "சந்திரன்பாம்பொடுசூடும்சடாதரன்
> வந்தென்னையாண்டமணிவிளக்கானவன்
> அந்தமும்ஆதியும்இல்லா அரும்பொருள்
> சிந்தையின்மேவித்தியக்கறுத்தானே." (திருமந்திரம்)

குறி க. | நள வருட மார்கழி, தை, மாசிமீ. | பகுதி உஅ, உகூ, ௩௰.

(முன் 25 வது புத்தகம், 565-வது பக்கத்தொடர்ச்சி).

முதல் அத்தியாயம். மரபும், சமயமும்.

அன்பார்ந்த ஐயா! இதுகாறும் "ஸ்ரீ நாட்டுக்கோட்டை ிய மகா சமூகத்தின் நறும்புகழ் நிலைகள்" என்னும் இந்நூலை வைதற்கு நிகழ்ந்த சில முக்கிய காரணங்களைக் கவனித்து ரைந்து வந்தேம். இனி இவ்வைசிய மகா சமூகத்தின் மரபின் ட்சியையும், சமயக்கொள்கையையும் பற்றிச் சிறிது கவனிப் போம். நண்பர்காள்! அஃதாவது தொன்றுதொட்டு (வரைய றுத்துக் கூறுவதற்கு இயலாத நெடுங்காலத்துக்கு முன்னரே இருந்து).

> "எப்பொருள் எச்சொலின் எவ்வாறு உயர்ந்தோர்
> செப்பினர் அப்படிச் செப்புதன் மரபே"

என்பதுபோன்று ஒரு வகுப்பின் அல்லது ஒருவகுப்பாரின் கொடிவழியான வமிச பரம்பரையின் இலக்கணங்களையும், கொள்கைகளையும் வருண பேதம் முதலிய எழுவகைத்தோற்றங்களின் வேறுபாடுகளையும் மிகத்தெளிவாக விளங்க ஆன்றோர்கள் எவ்வாறு சொல்லியும், எவ்வாறு அநுட்டித்தும் வந்தார்களோ அவ்வாறு சொல்லியும், அவ்வாறு அநுட்டித்தும் வருதலே மரபாம்.

2 இனிச் சமயம் என்பதன் பொருள் பெரும்பான்மை எவர்களுக்குந் தெற்றென விளங்குமாதல்பற்றி அதனை அத்துணை விவரியாது விடுத்தாம். மேலும் நமது நாட்டுக்கோட்டை வைசியம் என்னும் நூலில் ஒருகலை அங்கமாக வரைந்திருப்பதையுங்காண்க.

3 செந்தமிழ்க் கல்வியும், திருவருட்சீலமும்,
சிந்தையினிறைகச், சந்ததமன்பொடு
அந்தமிற்குமரன், அடிதொழுமாற்றலும்
வந்தவர்க்கேதும் வரையாது உதவும்
பந்தமும் கருணையும் பழமையாயுடைத்தென
இந்தவோரன்ன எழின்மிகுவொழுக்கம்
பலநிறைந்துள்ள பான்மையோய்!

எப்பாலவரும் வியப்பத்தருந்த பெரும்புகழ் படைத்து வாழ்ந்துவரும் பெரியோய்! மகுட வணிக மணிகளாகத் தோற்று எமதன்பார்ந்த ஐயோய்! இங்ஙனஞ் சிறிது கவனியுங்கள். நமது மகா சமூகத்தின் மாட்சிகளை பிறபகுதியார்கள் கண்டு மனங் கமழ் குமிழ்நடு கணைவிரல் நாட்டி வியப்பத்தோடும் நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு மாணவர்களும், ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் மிக நன்றாகத் தெரிந்துகொண்டிருத்தல் வேண்டுவதும் இக்காலத்து ஆவசியகத்துள் ஆவசியகமேயாம். மலையின் தோற்றம் மலைக்குத் தெரியாததுபோல் நமது மாட்சி நமக்குத் தெரியாது நிற்றல் கூடாது. கால வர்த்தமானத்தை மிகக்கவனமாகக் கவனித்தலும் வேண்டும். நமது வைசிய மகா சமூகத்தின் மாபியன் மாட்சிகளைப்பற்றிக் கவனிக்கப்புகுந்தால் அஃதொரு பெருஞ் சாகரம்போன்றே பெருகுவதாகும். யாங்ஙனமெனின்?

"வெள்ளாறது வடக்காம் மேற்குப் பிரான்மலையாம்
தெள்ளார்புனல்வைகைதெற்காகும்—ஒள்ளியநீர்
எட்டிக்கடல் கிழக்காம் இஃதன்றோ நாட்டரண்சேர்
செட்டிநாட்டெல்லையெனச் செப்பு"

இப்பாவானது, சற்று ஏறக்குறைய 80, 90 ஆண்டுகளுக்கு முன்னர் நமது நகரங்களோடு சார்ந்த கீழச்செவற்பட்டியில், நேமங்

கோவிற்கொடிவழியாராயும், சர்பாநுக்கிர சீலராயும் நல்லதசையிற் பெரும்புகழ்படைத்து வாழ்ந்துவந்தவருமான ஸ்ரீ மகாவித்வான் பாடுவான் முத்தப்ப செட்டியாரவர்களின் திருவாக்கு. அஃதாவது,

"சந்தனப் பொதிகைச் செந்தமிழ் முனிவனும்
சௌந்தர பாண்டியன் எனுந்தமிழ் நாடனும்
சங்கப்பலகையும் தழைந்தினிதோங்கு
மங்கலப்பாண்டி வளநாடென்ப" எனப்புகழப்படுவதான

பாண்டிவள நாட்டின் கீழ்திக்கில் மேற்குப் பிரான் மலையும், தெற்கு வைகையாறும், வடக்கு வெள்ளாறும், கிழக்குக் கடலும் ஆக இந்நான்கும் நமது நாட்டுக்கோட்டை வைசியமாகாணத்தின் எல்லைகளாம். இவ் எல்லைகளைக்கடந்து ஏனையவோர் நாடு நகரங்களுக்கு நமது மனையாண்மக்களோடுஞ்சென்று இல்லறம் நடாத்துதல் கூடாதென்பது நமது மகா சமூகத்தின் மரபு ஆகும். இதற்கு என்னையோய் காரணம்? ஏனைய வருணத்தார்களுக்கு இக்கட்டுப்பாட்டைக் காணவில்லையே? நமது வைசிய வருணத்தார்க்கு மட்டும் இக்கட்டுப்பாடு யாது காரணம்பற்றி யுடன்பாடாயிற்று? நமது மனைவி மக்களோடுங்கூடி அயல் நகரங்களுக்குச் சென்று அறநெறி வழாது நமது இல்லற தருமத்தை மிகவொழுங்காக நடாத்திவரின் அதனாலுறுங்கேடென்னை? கால தருமத்தை யுற்றுநோக்காமல் நமது சமூக முன்னேற்றத்திற்கு மிகுதியும் முரணக்கூடிய சில பழயகாலத்து வழக்கங்களை நீவிர் என்னை? மாட்சிமைப்படுத்திக் கூறத்துணிகின்றீரோ? "சொன்ன சொற்களை மாற்றினும் மாற்றுவர் வன்கணாளர்கள், கூற்றினும் பாவலர் கொடியராவரே" என்பதற்கு இணங்காதிரும். தெரிந்தவரையுள்ள காரணங்களை ஒழியாது கூறும். எங்களின் புகழையும், பெருந்தன்மையையும், எங்களின் ஒருமைப்பாட்டையும், தருமச் செயல்களையும், ஏனைய பல நல்லொழுக்கங்களையும்பற்றி எவர்களும் வியந்து பேசிக்கொள்ளல்வேண்டுமென்ற பேரவா எங்கள் சமூகத்தார்க்கு எந்தக்காலத்தும் நிகழாது. நும்போல்வார் ஒருவர் வரைதல் வேண்டும் என்ற விருப்பமும் இல்லை, எதோ நீயிராச் செய்யப்புகுந்த வொரு செய்கையில் வெறும் பெயரேற்றுக்கொள்

ளாதிரும் நம்போன்று நூலெழுதப்புகுந்த சில சாதாரணப் புரட்டர்களும், முந்திய நூற்களையும், வேதாகம புராணேதிகாசங்களையும், காவியங்களையும், தேவார திருவாசகங்களையும் ஆராய்ச்சி செய்யப்புகுந்த சில அண்டப்புரட்டர்களும், பழைய நூற்பிரதிகளைப் பிழையறப் பரிசீலனைசெய்து, மிகத்தெளிவாக அச்சிடத் துணிந்த சில ஆகாயப்புரட்டர்களும் தங்களுக்கு ஏதோ சிறிது கல்வியறிவு கிடைத்த நல்லூழையும், பரமகருணாநிதியாகிய எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளையும்பற்றிக் கொஞ்சமுஞ் சிந்தியாது அருட்பெரும் புலவராயும், சாபாநுக்கிரக சீலராயும், சிவஞான யோகப் பெருஞ்செல்வராயும், சமயாபிவிருத்தி பாஷாபி விருத்திகளிற் பேரபிமானமுடையராயும்உள்ளபெரியார் பலரின் மாட்சிமையையும், கல்வித்திறனையும், பேரறிவாண்மையையும் ஒரு சிறிதளவுங் கனவினுங்கூட நினையாது அவர்களில் நின்றும் தாங்கள் எத்துணையோ பன்மடங்கு பெரியராகக்கருதி, நான் எனதென்னும் அகங்கார மமகாரங்களிற் சிக்கித் தங்களைத் தாங்களே முற்றமறந்து, ஒரு சிறிதளவும் நன்மை பயவாத பலமார்க்கங்களினும் நுழைந்து தாங்களுந்தங்களின் அருமையான அறிவும்பாழ்பட்டதுமின்றி பரபியல்களைச்சார்ந்த சிலகொள்கைகளை அப்படியே தலைகீழும், கான்மேலுமாக மாற்றிக் கால கதியாமெனக் கண்டார் யாவரும் வியப்பவனைந்து, அதற்காகவேண்டுஞ்சில நற்கரி பத்திரங்களையும்பெற்று அச்சடித்துப் புத்தகங்களாக்கியும்விடுகிறார்கள். இனி ஏனையசிலர் ஆராய்ச்சி யென்னுஞ்சாகரத்திலே மூழ்கிச் சாதாரண நம்போன்ற மனிதவர்க்கத்தார் மனத்திடைப்பதிந்துகிடக்கும் சிலபுராதனமான கொள்கைகளும், பலவிஷயங்களும் பொய்மையோ, அல்லது மெய்மையோ, எனக்கவனித்து உண்மையுணர்த்துவான்பொருட்டு பெரும் பிரயாசைப்பட்டுப் பலவிதமான எல்லா நூற்களையும் ஒன்றாகப்போட்டுப்புரட்டிப்புரட்டி, இரவென்றும் பகலென்றும் இன்றி, இங்ஙனமோ! அங்ஙனமோ!வென, மருண்டுமருண்டு மிகத் தெளிவாகக்கண்டு, மிக்கப் பழமையும், மிக்கச் செல்வமும், மிக்கக் கீர்த்தியும்' மிக்கத் தெய்வத்தன்மையும், மிக்க அலங்காரமும்

உடையதாயும், பாண்டிநாட்டுக்கு முகம்போல்வதாயும், பாண்டியர்களுக்கு இராஜதானியாக நெடுங்காலம் விளங்கியதாயும், உமாதேவியாரது திரு அவதாரமாகிய தடாதகைப்பிராட்டியாராலும், சோமசுந்தரமூர்த்தியாலும், உக்கிரப்பெருவழுதியாகியக் குமாரக கடவுளாலும் உண்மையாகத் திருமுடிசூடி அரசாளப்பட்டதாயும், பல்லாயிரம் வருஷங்களாகப் பல்லாயிரம் புலவர்சிகாமணிகளிருந்து பல்லாயிரம் நூற்களை இயற்றியும், ஆராய்ந்தும் நம் தாய்மொழியான தமிழ்பாஷையை வளர்க்கப்பட்டதாயும், பல அரிய பெரிய திருவிளையாடல்கள் இயலப்பெற்றதாயும், உடைத்தான "மதுரைமாநகரம்" இஃதல்லவென்றும், மணிவாசகப்பெருமான் திருவிளையாடல்களுக்கு உரித்தாயிருந்த திருப்பெருந்துறையும் இஃதல்லவென்றும், சங்கங்களெல்லாம் ஈங்கு நடைபெற்றனவல்லவென்றும் அவைகளையெல்லாஞ் சாகரமே விழுங்கிவிட்டனவென்றும், ஈங்குடைத்தான மதுரைமாநகரமும், திருப்பெருந்துறையும், இடையில் எவனோ ஒருபுரட்டனால் போலியாக அமைக்கப்பட்டனவென்றும், தற்காலவரை நம்மவர்கள் நினைத்துக்கொண்டிருக்கும் மணிவாசகர் எவரோ அவரால் திருவாசகம் திருக்கோவைபாடப்பட்டன அல்லவென்றும் அந்தமணிவாசகர் வேறு, இந்தமணிவாசகர் வேறு, அந்த நக்கீரர் வேறு, இந்தநக்கீரர்வேறு, அந்தநச்சினார்க்கினியார்வேறு, இந்தநச்சினார்க்கினியார்வேறு, அந்தஔவையார்வேறு, இந்த ஔவையார் வேறு, அந்தத் திருமால்நாய்க்கர் வேறு, இந்தத்திருமால்நாய்க்கர்வேறு, அந்த ராமன் வேறு, இந்தராமன் வேறு, அந்தஇந்தியாவேறு, இந்த இந்தியாவேறு என்றும், பாரதம் என்பது நடந்ததேயில்லை வெறுங்கட்டுக்கதையே என்றும் சில அபூர்வயந்திராதிகண் முதலியதொழின் முறைகளை சில மேனாட்டு தத்துவ சாஸ்திரிகள் புதிது புதிதாகக் கண்டுபிடித்து ஏனைய பலர்க்குந் தெற்றென விளங்க பத்திரிகைகளினும் பிரசாரஞ் செய்துவருவது போன்று, நமது நாட்டு ஆராய்ச்சி வல்லுனர்களும் கண்டுபிடித்து வரைந்து வருகிறார்கள். இவர்களின் ஆழ்ந்த கருத்தும், அபூர்வத்தன்மையும், எவர்களும் மெச்சத்தக்கதேயாகும். ஆ! ஆ! என்னே? இவர்களின் வல்லுனத்தன்மையை என்னென்று

புகழ்வது? எப்படிப்பட்ட பட்டங்களை இவர்களுக்குக் கொடுப்பது? இவர்கள் பார்த்த வேலைக்காக எவ்வளவு வேதனம் கொடுக்கலாம்? இவர்களை மகா வல்லுனர்களென்று பலராலுங் கொண்டாடப்படுவதொன்றே போதுமானதா? கவனித்தல் வேண்டும். இனி பழய நூற்பிரதிகளைப் பிழையறப் பரிசோதித்து மிகத்தெளிவாக அச்சிடத்துணிந்த ஏனைய சிலர் சுலோகங்களிலும், பாக்களிலும் உடைத்தான சில பாகங்களை அப்படியே அடியோடு பெயர்த்து எடுத்தெறிந்துவிட்டுத் தங்களின் மடத்தன்மையாலும், குயுக்தியாலும் நிகழ்ந்த சில வார்த்தைகளை அவைகளுக்குப்பதிலாகப்புகுத்தி அச்சிட்டும், சில அறிகுறிகளைக்காட்டி யஃதாவது (பூவெண்டுஞ்சொல்லலாம், புய்ப்பமெண்டுஞ்சொல்லலாம், அப்பி சொன்னுப்போலும் சொல்லலாம்) என்பதுபோன்று இப்படியும்பாடம், அப்படியும்பாடம் என அச்சிட்டும், தங்களின் சமயத்துக்கும், கொள்கைக்கும் அபிப்பிராயத்துக்கும் முரணான பாக்களுக்கு முரணான பாக்களை இபற்றி நூலாசிரியனாற் செய்யப்பட்ட பாக்களைப்பெயர்த்தெறிந்துவிட்டு அவைகளிருந்தவோர் இடத்துத் தங்களின் கற்பிதப்பாக்களை நிலைநிற்கச்செய்து அச்சிட்டும்வருகிறார்கள் அந்தோ! பூர்வீகப்பெரியார்செய்த பாசுரங்கள் எத்தகையனவாயிருந்தால் இம்மடக்கயவர்களுக்காவதென்னை? அஃது எம்மதத்தைச் சார்ந்ததாயிருப்பின் இவர்களுக்காவதென்னை? அவர்களின் தன்மையை இக்காலத்து அறியாதார் சிலர் இழிந்ததாய் நினைப்பினும், உயர்ந்ததாய் நினைப்பினும் அதனால் இக்கயவர்களுக்கு நிகழ்ந்தகேடென்னை? அப்பாக்கள் இக்கயவர்களின் மாயாமனத்துக்குஅசங்கியமாகக்காணின் இக்கயவர்கள் அப்புத்தகத்தைத்தொடாமலிருந்துவிட்டாலென்னை? இயற்கையிற் பிழையாகக்காணின் நமது சீத்தலைச்சாத்தனார் எழுத்தாணிக்கொண்டையைக்கொண்டு தன் சிரத்திற்கொட்டிக்கொண்டதுபோன்றுதாங்கள் தங்களின் சிரத்தையோர் கற்றூணின் மோதிக்கொள்கிறதுதானே? பூர்வீகப்பெரியார் செய்துவைத்த பாசுரங்கள் எதுவாயிருப்பினும் அதனைப்பின்னுள்ளார் உருக்குலைப்பாமற் பார்க்கக்கொடுத்துவைக்காமலாபோதல்வேண்டும்? இவ் அகர்ம

சண்டாளக்கயவர்கள் பண்டைக்காலத்துப் பெரியார் பலர்க்கும் கொடிய மாபாதகர்களானதோடுங்கூட இனிவருங்காலத்து நமது மனிதவர்க்கத்தார்க்குங் கொடிய மாபாதகர்களாயன்றோமுடிகிறார்கள். அந்தோ! இவர்களின் தன்மையும், கல்வியறிவின் மகத்துவமும் இருந்தவாறென்னே? ஏ! ஏ! இஃதெவன்வியப்பு!

"வஞ்சித்தொழுகும்மதியிலிகாள் யாவரையும்
வஞ்சித்தேமென்றுமகிழன்மின்—வஞ்சித்த
எங்கும்உளன்ஒருவன்காணுங்கொல் என்றஞ்சி
அங்கங்குலைவதறிவு"

என்ற இக்குமரகுருபரசுவாமிகளின் திருவெண்பாவைத் திரும்பத்திரும்பநெட்டுருச்செய்த மாபாதகர்களாயிருந்தும் கொஞ்சமும் அஞ்சாமல் வஞ்சித்த இவர்களின் நெஞ்சத்தை எல்லாம் வல்ல இறைவன் எவ்வாயுதத்தாற்பிளப்பானோ? ஏ ஈஸ்வரா! வெய்யவேற்சூலம் பாசமங்குசம் மான் விரிகதிர் மழுவுடன்தரித்த ஐயனோரா யாமென்பதைநீ அக்கயவர்கள் கண்டஞ்சுமாறு தெரிவித்தல் வேண்டாவோ! நின்னருட்புலவர் பெருமக்களின் திருவாக்குகளைச் சிதைத்த இக்கயவர்களின் கரத்தையும், மனத்தையும், நாவையும், விழியையும், நினது வெய்யவேற் சூலாயுதத்தாற்குத்தி ஒடித்தும், சிதைத்தும், கிழித்தும்,

"குத்திமுறித்துக் குடிப்பரத்தமும்
வெட்டியழித்துக்கனக்களிப்பொடு
கொக்கரியிட்டுத்தெரித்தடுப்பன வொருகோடி

பட்டபிணத்தைப்பிடித்திழுப்பன
சச்சரிகொட்டிட்டடுக்கெடுப்பன
பற்கள்விரித்துச்சிரித்திருப்பன வெகுபூதம்"

என்பதற்கிணங்க நினது படையாட்களான வெங்கொலைப்பூதங்கட்கும், பேய்கட்கும், அக்கயவர்களின் சரீரமானது கிடுகிடுவென்று நடுங்க, அம்மம்மவென்று திடுக்கிட்டு ஆற்றுமாறு பலிகொடுக்க மாட்டாயோ! ஏ அம்மே! ஏ பாரதமாதோ நின் அழகுவாய்ந்ததிரு

வாயினைத்திறந்து விழுங்கிவிடமாட்டாயோ! வானுலாவுங்கொண்டலே! இக்கயவர்களின் தலையிற்பேரிடியை வீழ்த்தாயோ!

தவத்துறைமாக்கண் மிகப்பெருஞ்செல்வர்,
ஈற்றிளம் பெண்டிர் ஆற்றுப்பாலகர்,
முதியோரென்னாதும், இளையோரென்னாதும்
கொடுந்தொழில் புரியும் ஏ! வெங்கொடுங்கூற்றே!
நீ யாங்கோ மறைந்தொழிந்து போய்விட்டாய்!

எத்தகையாரும் பொறுத்தற்கருமையான ஏ! கொடிய வெம்பிணிகளே! ஏ! நோய்களே! நீங்களேனும் இக்கயவர்கள்பாற் கொஞ்சந் தயவுபுரிந்து வாழ்ந்துவரலாகாதா! இவ்வதரும சண்டாளக்கயவர்கள் திரும்பத் திரும்பப் பிறந்தும், சின்னாட்களிருந்தும், பொருள்வயிற்சிறந்தும், வாழ்ந்துவருதலாலுண்டாம் நன்மை என்னே!

ஐயா! சாதாரணமாகக் கவனிக்கப்புகுந்தால் சின்னாட்களுக்கு முன்னர் மதுரை கந்தசாமிக்கவிராயரவர்களால் பதிப்பிக்கப்பெற்றிருக்கும் திருப்புகழ் புத்தகம் ஒன்றை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அதிலுடைத்தான பாடல்களில் "முலை" எனவருஞ்சொற்களையெல்லாம் "முகை" என்பதாக மாற்றிவிட்டார்கள். அதற்கு அறிஞர்கள் பொறுத்துக்கொள்ளல்வேண்டுமென்றும், தற்கால நாகரிகம் நோக்கியும், எவர்களும் நாணாது பாராயணஞ் செய்தற்காகவுமே என்றும் முகவுரை முடிவிற் கூறியுமிருக்கிறார்கள். இவர்களேனும், இனிப் பதிப்பிக்கும் ஏனைய வொருவரேனும் அம்மாற்றத்தைப்பற்றிய உண்மையை பிரசுரஞ் செய்தல் அசங்கியமெனக்கண்டு அதனைப்பற்றிய ஒன்றையும் வரையாது அச்சிடுவாராயின் அப்பால் அத்திருப்புகழை நோக்கும் எவர்க்கும் "முகை" என்னும் கற்பிதச்சொல்லும் ஸ்ரீ அருணகிரிநாதர் திருவாக்கில் நின்றும் எழுந்தனவாகத்தானே விளங்கும். இங்ஙனமே இனி வரும் ஒவ்வொரு வித்வான்களும் பூர்வீகப் பெரியார் இலக்கியங்களை மாற்றத் தலைப்படுவார்களானால் நமது செந்தமிழ் பாஷையின் தன்மை எத்தகையனவாய் முடியும். மேலும் இரண்டு கோடி ஜனங்கட்கு உரித்தான ஒரு பொது விஷயத்தில் ஒருவர் அபிப்

பிராயத்தை ஏனைய எவர்களுக்குந் தெரியாமலும், பல பெரியார் அபிப்பிராயங்களை வினவாமலும் தாமாகவே நிறைவேற்றிக்கொள்ளுதல் படித்தவோர் பெரியார்க்கு யாங்ஙனம் அழகாகும்? யாங்ஙனம் நியாயமாகும்? கவனிக்குமிடத்து

"கல்லாதான் சொற்காமுறுதன் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற்றற்று" என்றும்,

"குத்துமுலைச்சி குழைந்த மருங்கினள்
துத்திவிரிந்த சுணங்கினள் தூமொழி
புத்தகச்சீறடிப் பாவையுணர்வினைத்
தொத்த கருத்தது சொல்லகிலேனே" என்றும்,

"கலைத்தலை நெற்றியோர் கண்ணுடைக் கண்ணுண்
முலைத்தலை மங்கை முயங்கியிருக்கும்
சிலைத்தலையாய தெரிவினைநோக்கி
யலைத்தபூங்கொம்பின ளங்கிருந்தாளே" என்றும்,

"தலைவி தடமுலை மேனின்ற தையல்
தொலைவிற் றவஞ்செயுந் தூநெறித்தோகை
கலைபல வென்றிடுங் கன்னியென்னுள்ளம்
நிலைபெறவிங்கே நிறைந்துநின்றாளே" என்றும்,

"கொம்பனையாளைக் குவிமுலை மங்கையை
வம்பவிழ் கோதையை வானவர் நாடியைச்
செம்பவளத் திருமேனிச் சிறுமியை
நம்பியென்னுள்ளே நயந்துவைத்தேனே" என்றும்,

"நச்சுக்கட்டியும் நல்லமுதும்மிக
வச்சுக்கட்டிய மாமுலையாலுலகு
அச்சுக்கெட்டழியும் அழியும் எனக்
கச்சுக்கட்டி மறைத்தனர் கண்களை" என்றும்,

"மூலைத்தடஞ்சேதகம்பொறிப்பமற்றவர்
குலைத்துடன்பதித்தலிற்குதித்தவாட்கயல்
புலத்திடைக்கவரிகன்றூட்டப்போந்தபால்
நிலத்திடைப்பாய்ந்தவைபிறழுநீரவே" என்றும்,

"வாருருவப்பூண்முலையீர்வாயாரநாம்பாடி
யேருருவப்பூம்புனல்பாய்ந்தாடேலோரெம்பாவாய்"

என்றார், இன்னும்இவைபோன்றுஅரியபெரியபலநூற்களிடத்தும் "முலை" என்னுஞ்சொல் வெளிப்படையாகக் காணப்படுகின்றதே. அவைகளினும் நமது கவிராயரவர்கள் தங்களின் திருக்கரத்தைச் சாற்றிவிடுவார்கள்போலும்! அந்தோ! இஃதென்ன அறிவின்மை. பொதுவாக இவர்கட்கு பேரருட் புலமையும்; வன்மையும் உளதாயின் நமது தமிழ்ப்பாஷையிலுடைத்தாக விளங்கும் மு. லை. பு. சு. ணி. டை. தி கூ. மூ. ர். ம. ண். முதலிய எழுத்துக்களுக்குப்பதிலாகப் புதிதாகப் பல கற்பித எழுத்துக்களைக் கொணர்ந்து சுவடிகளினும், புத்தகங்களினும் புகுத்திவிடுவார்களானால் ஆ! ஆ! மிகப்பொருத்தமாகக் காணுமே. இவர்களின் புன்மனம் அங்ஙனஞ் செல்லவில்லைப்போலும்! ஐயோ! நம்பாஷையைச் செய்தவன் பைத்தியகாரன்போலும்! "முலை" என்னுஞ்சொல்லை வெளிப்படையாகவைத்து யாப்புகள் செய்த பல பெரியாரும் அறிவிலார்போலும்! மேலும், சரீரங்களையெல்லாம் வெறுமெனே காய்ந்த மரக்கட்டைபோன்று சிருஷ்டிசெய்துவிடாமல் ஆண் சரீரம் என்றற்கும், பெண்சரீரம் என்றற்கும் ஒருவகைவேறுபாட்டையமைத்து சிருஷ்டித்துவிடுகிற "குயவனும்" குயவன்போலும்! மேலும், நமது குமரகுருபரசுவாமிகள்கவிராயரவர்கட்கே "கமண்டல வீணன்" என்னும் பட்டத்தைக் கொடுத்தார்போலும்! என் செய்வது, மனிதவர்க்கமாகத் தோற்றப்படுகிற ஒவ்வொருசரீரமும் நமது கவிராயரவர்கள் கண்ணிற்கு மரக்கட்டைபோன்று விளங்க வேண்டுமானால் அவர்களிறந்தாலொழிய யாங்ஙனம் விளங்கக்கூடும். இன்றேல்,

"ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருட் குளித்தும் உயலாகும்—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமே குன்றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும்" என்பதை நமது கவிராயரவர்கள் மறந்துவிட்டார்கள்போலும்! மேலும் இக்கவிராயவர்கள் தற்கால நாகரிகம் நோக்கியும், எவர்களும் நாணாது பாராயணஞ் செய்தற்காகவும் என்கிறார்கள். சரீரத்திற்குத் தளர்ச்சிவந்துவிட்டபொழுதே அதைச்சார்ந்த மனத்துக்கும், கல்விநிறைந்த அறிவுக்கும் பேதம் நிகழ்ந்துவிட்டன்போலும்! நாமாகச்செய்கிற ஒரு நூலையல்லவா தற்கால நாகரிகம் நோக்கிச்செய்தல்வேண்டும். முந்தையப் பெரியார் மொழிந்தவாகமத்திற் பிந்தையப்பெரியாரான நாம் நம்முடைய அகங்கார மமகாரத்தைச் செலுத்துதல் யாங்ஙனம் நியாயமாகும் என்னும் உண்மையை உணராது போய்விட்டார்களே. எவர்களும் நாணாது பாராயணஞ்செய்தல் வேண்டுமானால் அஃதரும் பேரருட்பாக்களே என்பது ஏனைய ஒருவர் கூறுமலே நன்கு விளங்குகிறதன்றே. அங்ஙனமானால் திருப்புகழாசிரியரான ஸ்ரீ அவ் அருணகிரிநாதர் திருவாய்மலர்ந்தருளிய சொற்கள் நிறைந்த பாக்களைப் பாராயணஞ் செய்கிறதா? அவைகளிற் பல சொற்களை நாமாக மாற்றிவைத்துக்கொண்டு பாராயணஞ் செய்கிறதா? பாராயணஞ் செய்தற்குரிய நூல் என்றால், "தேவாரம்", "திருவாசகம்" முதலிய வேதநூற்போன்றதன்றே? மேலும்,

"காவியுடுத்துந் தாழ்சடைவைத்துங் காடுகள் புக்குந்தடுமாறி
காய்கனி துய்த்துங் காயமொறுத்துங் காசினிமுற்றுந்திரியாதே

சீவவொடுக்கம் பூதவொடுக்கந் தேறவுதிக்கும்பரஞானத்
தீப விளக்கங் காணவெனக்குன் சீதளபத்மந் தருவாயே

பாவநிறத்தின் தாருகவர்க்கம் பாழ்பட உக்கிரம் தருவீரா
பாணிகள்கொட்டும் பேய்கள்பிதற்றும்பாடலைமெச்சும் கதிர்வே
[லா
தூவிகள் நிற்கும் சாலிவளைக்கும் சோலைசிறக்கும் புலியூரா
சூரர்மிகக்கொண்டாடநடிக்கும் தோகை நடத்தும் பெருமாளே"

ஸ்ரீ நாட்டுக்கோட்டைவைசியமகாசமூகத்தின் நறும்புகழ் நிலைகள்.

இத்திருப்புகழைக் கண்டீர்களா? இதில் "பாணிகள் கொட்டும் பேய்கள்பிதற்றும் பாடலைமெச்சுங் கதிர்வேலா" எனக்காணப்படுப்படுகிறபடி கொஞ்சம் ஊன்றிநோக்கிக் கவனிக்கப்புகுந்தால் ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய்மலர்ந்தருளிய திருப்புகழ் பாடல்கள் ஒருங்கும் மானாபிமானத்தையொழித்து, தன்னைத்தான் இன்னானெனக்கண்டு தெளிந்து, ஆனந்தத்திருக்கூத்தாடும் அன்பர்கட்கே பெரும்பான்மை உரியதாகும். இஃதன்றி ஏனைய இசைத்தமிழ் வித்வான்களையும், தாசி நேயர்களையும்பற்றி இங்ஙனம் கவனிக்கவேண்டும் ஆவசியகம் கொஞ்சங்கூட ஏற்படவில்லை. நிற்கக் காஞ்சீபுரம் மகாவித்வான் இராமசாமி நாயுடுகார் என்பவர் நமது ஔவையம்பிராட்டியார் சரித்திரத்தையும் பாடல்களையும் செய்திருக்கும் ஆபாசத் தன்மையை கவனிக்கப்புகுந்தால் அஃது எவராலும் நாவெடுத்துச்சொல்லுந்தரத்தன்றாம். நிற்க யாழ்ப்பாணம் சுவாமிநாதப்பண்டிதர் என்பவர் மூவர் தேவார அடங்கன்முறையிற்செய்திருக்கும் கோட்டம் அப்புத்தகத்தைப் பார்வையிடும் அறிவாளிகளாயுள்ள ஒவ்வொருவருக்கும் நன்கு விளங்குவதேயாகும். திருமந்திரத்துக்கும் ஔவை குறளுக்கும், உரை எழுதப்புகுந்த மேதாவிகளைப்பற்றிக் கவனிக்கப்புகுந்தால் அஃதொருங்கும் விடாநகைப்பை உண்டுபண்ணும் வியப்பேயாகிறது. இன்னும் சில கிறிஸ்தவக் கயவர்கள் தாங்கள் முழுத்த தமிழ்மக்களாயிருந்தும் நமக்கும் இத்தமிழ்ப்பாஷை சொந்தமான தாய்ப்பாஷையே என்பதைச் சிறிதுங் கனவினுங்கூட நினையாது முற்ற மறந்து, நமது தமிழ்ப்பாஷையிலுடைத்தான யாப்பு நூற்கள் பலவினுந் தங்களின் அறிவின்மையைக்காட்டி அருமையான சொற்களையும், அடிகளையும், சிலநூற்களிற்முழுயாப்புகளையும் வேரோடு களைந்துவிட்டு பாடப்புத்தகங்களாக அமைத்துக்கொண்டிருக்கிறார்கள். அவ்வறிவிலிகள் அந்நூற்களியற்றிய ஆசிரியர் பெயர்களை மட்டும் மாற்றிப் பதிப்பித்துக்கொள்ளவில்லை. அங்ஙனஞ் செய்வார்களாயின் அவர்கள் சிரந்தான் கோடையிடி குமுக்கென்றுவீழ்வதற்கு இலக்காக நிற்கும். பெரும்பான்மை இக்கயவர்கள் கீழ்

மக்களாயிருத்தல்பற்றியே இவர்களின்பால் பூரண அறிவுதயமாகிறதில்லை. இவர்கள் நூதன வாசக புத்தகங்களையும், யாப்புகள் நிறைந்த நூன்முறைகளையும் இவர்கள் வகுப்பாருக்கென வேறு தனியாக இயற்றியமைத்துக்கொண்டாலென்னை? முந்தையப்பெரியார் நூன்முறைகளைப் பாடமாக அமைத்தல் வேண்டுமானால் அதனைக் கொஞ்சமும் மாற்றிக்கொள்ளாமல் அமைத்துக்கொண்டால் அதனாலிவர்களுக்கு உறுங்கேடென்னை. வான சாஸ்திரப்பயிர்ச்சி ஒரு சிறிதளவேனும் இவர்கள்பாலுளதாயிருப்பினும் "சனிநீராடு" என்னுஞ் சூத்திரத்தைப் பாடப்புத்தகத்தில் நின்றும் நீக்கியிருக்க மாட்டார்கள். காலகதியால் வேலியேபயிரைத்தின்னுமானால் மற்றைய யாவர்தான் என்செய்கிறது. மேற்கண்ட இவ்வொரு சூத்திரத்திற்காக நான் இவ்வளவு தூரம் சொல்லவரவில்லை. அதர்ம சண்டாளர்கள் அநேக குழப்பங்கள் செய்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம் ஈங்குவிவரித்தலென்றால் கொஞ்சமும் நியாயமாகாது. நிற்க, எஸ். சாமிவேல் பி. ஏ. என்பவர் செய்திருக்கும் "மானிடமர்ம சாஸ்திரம்" என்னும் நூலை சாதாரணமாகப் பெரும்பான்மை நமது தமிழ்மக்களாயுள்ளார் எவர்களும் பார்த்திருப்பார்களென்றே கூறலாம். அதில் இரண்டாவது புத்தகத்தில் "தேவாரம்" எனத் தலைப்பெயர்கொடுத்து இந்துக்களுக்குள் தேவாரமுதலியன அனந்தம் உண்டு, கிறிஸ்துமார்க்கம் மேனாட்டவர் மூலமாய் இந்தியாவுக்கு வந்தமையால் கிறிஸ்தவர்களிலனேகருக்குத் தேவாரத்தினருமை தெரியாது, வேதநாயக சாஸ்திரியார் இவ்விஷயத்தில் செய்திருப்பது வியப்புக்குரியதே. திருவருட்பா முதலியவற்றிலுள்ள சில பாடல்களை கிறிஸ்தவர்களினுபயோகத்திற்காக வேண்டியவண்ணம் திருத்தி அமைத்துப்பாடியிருக்கிறோம். எனக்கூறி

"பொன்னார் மேனியனே புலித்தோலையரைக்கிசைத்து
மின்னார் செஞ்சடைமேன் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுண் மாணிக்கமே
அன்னே நின்னையல்லா லினி யாரை நினைக்கேனே."

என நமது சைவசமயக் குரவருள் ஒருவர் திருவாய்மலர்ந்தருளிய தேவாரப்பாசுரமொன்றைச் செய்திருக்குங் கோட்டத்தைப்பாருங்கள் அஃதாவது,

"பொன்னார் மேனியனே புவிவானைப் படைத்தவனே
மின்னார் செங்கரத்தில் மிளிர் ஆணி அணிந்தவனே
மன்னே மாமணியே, மகிழ்மாமறை மாணிக்கமே
அன்னே நின்னையல்லா லினியாரை நினைக்கேனே." நிற்க,

"பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துளுணர்ந்தாலும்,
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டியணைத்தாலு
மித்தனைக்குந் தித்திக்கு மினித்தசுவைக் கரும்பே,
வேர்த்தாவி மயங்காது கனிந்த நறுங்கனியே
மெய்ம்மை யறிவானந்தம் விளக்கு மருளமுதே,
தீர்த்தாவென் றன்பரெலாந்தொழ பொதுவில் நடிக்கும்
தெய்வநடத்தரசேயென் சிறுமொழியேற்றருளே."

"கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே,
வல்லார்க்கு மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே
யெல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற சிவமே
யென்னரசே யான்புகலு மிசையுமணிந்தருளே."

"பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துளுணர்ந்தாலும்,
ஈர்த்தாலும் பிடித்தாலும் கட்டியணைத்தாலு
மித்தனைக்குந் தித்திக்கு மினித்தசுவைக் கரும்பே,
வேர்த்தாவி மயங்காது கனிந்த நறுங்கனியே
மெய்ம்மை யறிவானந்தம் விளக்கு மருளமுதே,
தீர்த்தாவென் றன்பரெலாந் தொழுது தொழுதேற்றும்
தெய்வசிகாமணியேயென் சிறுமொழி யேற்றருளே."

"கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே,
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கும் மதியே,
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கும் நலமே,
யெல்லார்க்கும் பலவிதமா யீவருளும் பரமே
யென்னரசே யான்புகலு மிசையுமணிந்தருளே."

சாதாரணமாக ஒருமதத்தின் உண்மை ஐயந்திரிபற ஒருவர்க்குத் தெரிந்தாலொழிய மத விஷயத்தைப்பற்றிப் பேசவாவது, எழுதவாவது முன் ஓடிவருவது பெருந்தவறான காரியமே ஆகும். நமது தேவாரத்தின் அருமை கிறிஸ்தவர்களுக்குத் தெரியவேண்டியதற்காகவும், கிறிஸ்தவர்களின் உபயோகத்திற்காகவும் திருவருட்பா முதலியவற்றிலுள்ள சில பாடல்களை வேண்டியவண்ணம் திருத்தியமைத்துப்பாடியிருக்கிறோமென்றும் ஷெடி சாமிவேல் கூறியிருக்கிறார். அந்தோ! இவர் தம் மதிஹீனத்திற்காக என்கூறி யிரங்குவேம். தேவாரத்தின் அருமை கிறிஸ்தவர்களுக்குத் தெரியவேண்டுமானால் அவைகளிலுள்ள முதன்மையான சில விஷயங்கள் நிறைந்த அருள்பழுத்தொழுகும் அமுதம்போன்ற வார்த்தைகளை எடுத்துவிட்டுத் தாமாகச் சிலவார்த்தைகளைப்புகுத்தி அச்சிட்டுக் கொள்வதுதானோ? இதுதான் அவர்களுக்கு உபயோகம்போலும்!

"பொதுவில் நடமிடுகின்ற சிவமே"

"அன்பரெலாந் தொழப்பொதுவில் நடிக்குந்தெய்வ நடத்தரசே"

மேற்கண்ட இவ் விரண்டு வாக்கியங்களின் உண்மையான தத்துவார்த்தங்கள் இஃதென விளங்கியிருக்குமேல் இப்பெரும் மடக்கயவர் கிறிஸ்தவராயிருப்பினும், முகம்மதியராயிருப்பினும், நாஸ்திகராயிருப்பினும், இன்னும் ஏனைய ஒரு எவராயிருப்பினும் அவ்வாக்கியங்களை மாற்றியிருக்கமாட்டார் என்பது உண்மையிலும் உண்மையே. மேலும், இஃதுபோன்ற திருவருண்மொழிகள் அந்நூற்களில் இல்லையேல் அந்நூற்களுக்கு திருவருட்பா, தேவாரம் என்னும்பெயர்கள் நிகழ்ந்திருக்கவுமாட்டாது.

மேலும், தேவாரம், திருவாசகம், திருவருட்பா எனின், கேவலம் சாதாரண நூற்கள் போன்றதாமோ? போலிமத வாசகங்கள் போன்றதும் ஆமோ? மனித இயற்கையுடையார்செய்த நூற்களும் ஆமோ?

"புனலிலேயெதிர் செல்லெனச்செல்லுமே
புத்த ரோர்தலை தத்தெனத் தத்துமே
கனலி லேடிடப் பச்சென்றிருக்குமே
கதவு மாமறைக் காட்டிலடைக்குமே
பனையிலாண்பனை பெண்பனை யாகுமே
பழைய வென்புபொற் பாவைய தாகுமே
சினவ ராவிடந் தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே."

"தலைகொ ளஞ்சமு தாக விளையுமே
தழலி னீறு தடாகம தாகுமே
கொலைசெ யானை குனிந்துபணியுமே
கூரரா விடந் தீரெனத் தீருமே
கலைகொள் வேத வனப்பதி தன்னுள்ளே
கதவு மீண்டு கடுகத் திறக்குமே
அலைகொள் வாரியிற் கல்லுமி தக்குமே
அப்பர் போற்று மருந்தமிழ்ப்பாடலே.

"வெங்கரா வுண்ட பிள்ளையை நல்குமே
வெள்ளை வாரண மீதிலிருத்துமே
மங்கை பாகனைத் தூது நடத்துமே
மருவி யாறு வழிவிட்டு நிற்குமே
செங்க லானது தங்கம தாகுமே
திகழு மாற்றிட்ட செம்பொ னளிக்குமே
துங்க வாய்பரி சோற்கு நல்குமே
துலங்கு நாவலூர்ச் சுந்தரர் பாடலே."

"பெருகும்வையைதனையழைப்பிக்குமே
பிரம்படிக்குப்பிரான்மேனிகன்றுமே
நரியெலாம்பரியாகநடத்துமே
நாடிமூகைதனைப்பேசுவிக்குமே
பரிவிற்பிட்டுக்குமண்சுமப்பிக்குமே
பரமனேயெழுதக்கோவைபாடுமே
வருகும்புத்தரைவாதினில்வெல்லுமே
வாதவூரர்வழங்கியபாடலே."

இத்தகைய அற்புதங்கள் நிகழ்ந்த பேருஞ்சக்திகளே ஆமன்றே. இத்தகைய பாசுரங்கள், எந்த ஆசிரியரின் திருவாக்கில் நின்றும் எத்தகைய வுருவமாகப் பிறந்ததோ அத்தகைய வுருவத்தை எவ்வகை முகாந்தரங்களைக்கொண்டும் வேறுபடாதவண்ணம் எக்காலத்தும் நிலைநிற்கச்செய்யவேண்டும் ஆற்றல் தமிழ் மக்களாயுள்ளார் ஒவ்வொருவரின் முதற்கடமையே யாமன்றே. இங்ஙனமாக இரண்டு மூன்று பாஷைகளில் வல்லுநரெனப்பெயர்காட்டும் ஒருவரே இது விஷயத்தில் தமது பேரறிவாண்மையை யிழந்து அத்தகைய வுருவத்தைமாற்றத் தலைப்படுவரேல் நமது செந்தமிழ் பாஷையின் அபிவிருத்திக்கு வேறெவரோ காரணமாவர். இந்தப்பெரியார் செய்திருக்கும் சாஸ்திரத்துக்கு சாற்றுக்கவிகளைச் சாற்றியிருக்கும் எந்தப்பெரியாரும் அச்சாஸ்திரம் ஒருங்கையும் படித்துப்பார்த்திரார் போலும்! இன்றேல் அப்பெரியார்மீதேற்பட்ட கண்ணோட்டம்போலும்! இன்றேல் மிகத்தளிர்த்துநிற்கும் நுனிப்புல்லையேமேயும் சில ஆவினம்போன்று மேற்போக்காகச் சில விஷயங்களைமட்டும் பார்த்து முடித்தனர்போலும்! இது நிற்க. நிகண்டு, பாரதம் முதலிய இலக்கியங்களிலும் சுபவர்கள் சிலவற்றை மாற்றியிருக்கிறார்கள் எனவுந்தெரிகிறது. இன்னும் நமது தமிழ்ப்பாஷையினுடைத்தாகவிளங்கும் ஒவ்வொரு பெரிய நூற்களையும், காவியங்களையும் சமயம் நேர்ந்தபொழுதெல்லாம் மிகத் தெளிவாகக் கவனித்துப் பின் ஒரு முறையும் மிகச் செவ்வனே வரைதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் சுரப்பானாக. மேலும், இக்காலத்து நமது செந்தமிழ் நாடு நகரங்களிடத்தும்,

எத்தனையோ வாசக சாலைகள், எத்தனையோ சங்கங்கள் நிறைந்திருக்கவில்லையா? எத்தனையோ மகாவித்வான்கள், எத்தனையோ நாவல்லவர்களில்லையா? நமது செந்தமிழ்ப் பாஷையிற் பேரபிமானமுடைய எத்தனையோ பலரில்லையா? நமது பூர்வீகப்பெரியார் திருவாய்மலர்ந்தருளிய இலக்கியங்களை மாற்றுவதற்கு ஏனோ உடன்பாடாயிருத்தல்வேண்டும்? அவைகளைப்பற்றி யொன்றும் பேசாமலும், வரையாமலும் வாளாயிருத்தல் அங்ஙனம் மாற்ற நூற்செய்யும் பெரியார் பலரின் இகல் நேரிடுமென்றோ? இன்றேல் நமது புகழ் குறைந்துவிடுமென்றோ? இன்றேல் ஞாபகமின்மையோ? மதுரைத்தமிழ்ச்சங்கத்தில் கல்விச்செல்வம், பொருட்செல்வம் நிறைந்த தலைவர்களும், அங்கத்தினர்களும் பலர் காணப்படுகிறார்களே. அம்மகான்களேனும் இதற்காகவேண்டும் ஓர் நல்லமார்க்கத்தை உண்டாக்கலாகாதோ? நமது பூர்வீகப்பெரியார் பலர்,

"இரவும்பகலுமிலாதவிடத்தே
குரவஞ்செய்கின்றகுழலியையாடி
பரவஞ்செய்யாமலருளுடன்றூங்க
பருவஞ்செய்யாததோர்பாலனுமாமே."

என்னுந் திருமந்திரம்போன்று, அருட்சக்தியோடுங்கூட கூடிப்புணர்ந்து ஆனந்த சாகரத்திலே மூழ்கித் தூங்காமற்றூங்கும் தங்களின் போக நிட்டையைத்துறந்து, நம்மீது பெருங்கருணைகூர்ந்து அவர்களின் திருவருட்சக்திகளை நமக்கு பாகித்துக்கருவான் கருதி செய்துவைத்திருக்கும்யாப்பு நூற்கள் பலவும் இங்ஙனம் மாறுபடுமேல் அந்தோ? நமது தமிழ்ப் பாஷையின் மாட்சி நிகழ்ந்தவாறென்னே? என ஒரு சிறிதளவும் நினையாதிருத்தலும் என்கொல்! நியாயமாகுமோ? நிற்க, கரந்தைத் தமிழ்ச்சங்கத்துச் சட்டப்புத்தகம் ஒன்றை சின்னாட்களுக்குமுன்னர் தேவகோட்டை வைசியசிவானந்த சபையில்வைத்துப் பார்வையிட்டோம். அதில் ஒரு பக்கத்து நமது செந்தமிழ்ப்பாஷையில் மிகுந்த பேரபிமானமுடையார் ஒருவர்

"சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து
தரணியொடுவானாளத்தருவரேனும்
மங்குவாரவர்செல்வம்மதிப்போமல்லேம்
மாதேவர்க்கேகாந்தரல்லராகில்
அங்கமெலாங்குறைந்தழுகுதொழுநோயராய்
ஆவுரித்துத்தின்றுழலும்புலையரேனும்
கங்கைவார்சடைக்கரந்தார்க்கன்பராகில்
அவர்கண்டீர்யாம்வணங்குங்கடவுளாரே."

இத்தேவாரப்பாசுரத்தை

"சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து
தரணியொடுவானாளத்தருவரேனும்
மங்குவாரவர்செல்வம்மதிப்போமல்லேம்
மாதமிழுக்கேகாந்தரல்லராகில்
அங்கமெலாங்குறைந்தழுகுதொழுநோயராய்
ஆவுரித்துத்தின்றுழலும் புலையரேனும்
தங்குபுகழ்செந்தமிழ்க்கோரன்பராகில்
அவர்கண்டீர்யாம்வணங்குங்கடவுளாரே"

இம்மாதிரியாக மாற்றி அச்சடித்திருக்கிறார். தமிழ்ப்பாஷையின் சிறப்புகள் அமைந்த பாசுரங்கள் எத்தனையோ அளவு சங்கையின்றி நமது புராணேதிகாசங்களிலும் ஏனைய நூற்களிடத்துங் காணக்கிடக்கின்றன. அவைகளில் வேண்டியமட்டும் எடுத்துப் பிரசுரிக்கலாம் அவ்வாறுசெய்தலை விட்டுவிட்டு, இம்மாதிரி பிரசுரஞ்செய்திருப்பதைநோக்க அஃது ஓர்வித நகைப்பையே தருகின்றது. நிற்க, இப்பாசுரத்தை நோக்கும் ஒருவர் இஃது திருநாவுக்கரசர் திருவாக்கென்று ஒருவாறு நினைப்பரோ? இன்றேல் வேறு என் நினைப்பரோ? எவர் எவ்வாறு நினைப்பினும் இவ்வாறு மாற்றியச்சடித்தார்மீது எமக்கு ஓர்வித சந்தோஷம் உண்மையில் மிகுதியினும், மிகுதியினும், மிகுதியினும், மிகுதியினும், மிகுதியேயாகும். அஃது எதற்காகவோ எனின்? நமது தமிழ்ப்பாஷையினிடத்தான அவர் தம் பேரபிமானத்தைக்கருதியேயாமென்க.

இங்ஙனம் மாற்றும் பெரியார் ஒவ்வொருவரும் விகடன் அல்லது மகா விகடன் என்னும் பெயரை நமது கவர்ண்மெண்டறிய ஸ்தாபனம் செய்துகொண்டாலும் மிக உத்தமமாகயிருக்கும். இன்றேல், அறிவிலார் என்னும் பட்டம் பெற்றுக்கொளினும் மிக வுத்தமங்தான்.

இன்னும்வரும்.

விண்ணப்பம்.

அமிழ்தினும் இனிய தமிழ்மலிநிலத்து அன்புநிறைந்த ஐயா! நாளிதுவருஷமுதற்கொண்டு நமது வைசியத்திற்கு வருஷம்ஒன்றுக்குத் தபாற்செலவு, வி. பி. செலவுள்பட ஒருரூபாய்ச்சந்தாவாக ஏற்படுத்தியிருக்கிறோம். ஆகலின், இதனைப்பார்வையிடும் ஒவ்வொரு சகோதரர்களும், ஒவ்வொரு மாணவர்களும், படிக்கத்தெரிந்த ஒவ்வொருசகோதரிகளும் ஆர்டர்கொடுக்கவேண்டுமாய் மிகத் தாழ்மையாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

நமது வைசியமானது நமது மகாசமூகத்துக்கு இன்றியமையாதுவேண்டும் பல முதல்விஷயங்களொருங்கையும் மிகச்செவ்வையாக ஞாபகப்படுத்தும் ஓர்நற்போதமென்பது இதனைப்பார்வையிட்டாலே நன்கு விளங்கும்.

நமது நாட்டுக்கோட்டைவைசியத்தின் அபிவிருத்திக்காகவும், அதற்காகவேண்டும் ஒரு அச்சியந்திரசாலைக்காகவும், அதற்காக என்றைக்கும் அழியாதுநிற்கவேண்டும் ஒரு முதற்பொருளுக்காகவும் தாங்கள் ஒருகௌரவசீலபோஷகராய்நின்று ஒவ்வொருவருஷமும் பத்துபத்து ரூபாய் நன்கொடையளிப்பதாக வாக்களித்து இவ்வருஷத்துக்கு முதன்முதலாக ரூபாய்தந்தும், கையொப்பந்தந்தும் உதவிய கனவான்களின் பெயர்விலாசங்களை மற்றவோர் பக்கத்துக் காண்க.

வாசகசாலை, கல்விச்சாலை, சங்கமுதலியபொதுவிற்குவிலாஸம் பெயர்முதலியவைகளைத்தெரிவித்தால் எவ்விதச்செலவுகளுமின்றி முந்தியபுத்தகங்களிருப்பின் அஃதோடும் நடைபெறுமாதத்திலிருந்தும் புத்தகம் அனுப்பிவருவோம்.

புத்தகமானது பிரிண்டிங்டிம்மி 8 பக்கங்கொண்ட 3 பாரத்துக்குக் குறையாமலும், பெரும்பான்மை 5 பாரம் அஃதாவது 40 பக்கங்கொண்டதாகவே வெளிவரும்.

நமது நாட்டுக்கோட்டைவைசியத்தின் கௌரவசீலபோஷகர்களான எமதாப்த நண்பர்களின் திவ்வியசமுகத்துக்கு எமதுமனப்பூர்வமாய்த்தெரிவித்துக்கொள்ளும் இரண்டொரு முக்கியவிஷயங்களாவன. நாம் நேரிற் பேசிக்கொண்டதுபோல் நமதுவைசியத்தை நாளிது வருஷம் சித்திரைமாஸம்முதற்கொண்டே காரைமாநகரத்தில்வைத்து நடாத்துவதற்கு சில அசந்தர்ப்பங்களும், இவிடம் நமது வைசியம் பிரிண்டாகிற சாரதா அச்சியந்திரசாலைக்குக்கொடுக்கவேண்டிய கடன் நிமித்தமுமகாத் தற்சமயம் கூடாதகாரியமாகக் காணுகிறது. இரண்டொரு மாசம் முன்பின்னாக சிலசௌகரியத்தோடும் அவ்விடத்துக்குமாற்றிக்கொள்ளல்வேண்டும். அதன் காரணமாக எம்மீதுநிகழ்ந்த பிழைபாட்டைப்பொறுத்துக்கோடல் வேண்டுமென மிகத்தாழ்மையோடும், அன்போடும்கேட்டுக்கொள்கிறோம். முந்தியமாதத்துச் சஞ்சிகைகள் சரிவர இல்லாததனால் யாம் ஊர்போய் அனுப்புவதாகச்சொல்லிவந்த எந்த நண்பர்களுக்கும் அனுப்பக்கூடவில்லை. ஒரே புத்தகமாகப் பிரிண்ட்பண்ணிபின்னுற்றான் கொடுக்கப்பெறும்.

மூன்று சந்தாச்சேர்த்து அவர்களின் பெயர் விலாஸங்களுடன் மூன்று ரூபாயும் மணியார்டர்செய்து அனுப்புகிற ஒரு நண்பருக்கு நன்றியறிதலோடு அவர்களின் உபகாரத்திற்காக எவ்விதமான ஸ்டாம்புச்செலவுகள்கூட இல்லாமல் மாஸாமாஸம் அவர்களுக்கும் புத்தகம் அனுப்பிவருவோம். சாஸ்திச் சந்தாதார்களைச் சேர்த்து நமது வைசியத்தை அபிவிருத்திசெய்யக்கூடிய நண்பர்கள் நமக்கு கடிதம் எழுதினால் சாஸ்தியான கமிஷன் கொடுக்கக்கூடிய விவரந்தெரிவிப்போம்.

மிகுதியும் விலையேறப்பெற்ற சில ரத்னாதிகள் சாதாரணமாக எல்லாமாந்தர்களிடத்தும் காணப்பெறாமல் பெருஞ்செல்வமுடையார் சிலரிடத்தே மாத்திரம் காணப்பெறுவதுபோன்று, நமது "நாட்டுக்கோட்டை வைசியம்" என்னும் மரகதத்தைத் தங்களுக்கு

உரித்தாகப்பெற்ற ஒவ்வொரு பெரியாரும் ஒருமாதத்துக்கொரு முறையேனும் கட்டாயமாகப் பார்வையிடல்வேண்டும் ஆவசியகம் பற்றித் தாங்கள் எந்தத்தொலைநகரங்களுக்குச்சென்றாலும், வேறு எவ்வித யாத்திரையாக அயல் நகரங்களுக்குச் சென்றாலும், அங்ஙனஞ் செல்லுங்காலுள்ள மற்றைய வேலைகளோடு தாங்கள் செல்லும் இடம், பெயர் விலாலங்களையும் குறித்து அங்ஙனமே ஒரு கார்டு நமது ஆபீசுக்கு அனுப்புதல்வேண்டுமாய் மிகத்தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறோம். இங்ஙனம்.

ப. சோ. ஆண்டியப்பன்,
புதுப்பேட்டை நடுத்தெரு,
பாளையங்கோட்டை.

கல்கத்தா
ஸ்ரீ சிங்காரமுருகன் திருவிழா வைபவம்.

அன்பார்ந்த ஐயா! ஸ்ரீ பார்வதி புத்திரராகிய பாலசுப்பிரமணியக்கடவுள் பக்தகோடிகள் துதித்துய்யுமாறு திருக்கோவில் கொண்டெழுந்தருளிய பல திவ்ய க்ஷேத்திரங்களுள் நமது பாரதமாதாவின் திருமுகத்திலகும் திலகம்போன்று, பாகீரதி முதலிய தெய்வநதிகளால்ச் சூழப்பெற்றதும், பார்ப்பவர் அளகையோ, அமராவதியோவென ஐயுறும்படிக்கான அளவில்லாத செல்வமும், சீரும், சிறப்பும் பெற்றோங்கிச் செழித்து வளரப்பெற்றதுமான கல்கத்தா நகரின்கண் சிவபக்த சிரோமணிகளாகிய நம் பாண்டிநாட்டு நாட்டுக்கோட்டை தனவைசியமகாசமுகத்தாரின் குலதெய்வமாகிய குமாரக்கடவுளுக்கு நடந்த பங்குனி மாதம் 23-உ காலையில் அபிஷேக ஆராதனைகள் சாஸ்திரோக்தமாக நடாத்துவித்து சிங்காரக்கேடகத்தில் பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புடைசூழவும், அநேகவிதமான வாத்திய கோஷத்துடனும் திருவோலக்கமாய் காளிக்காட்டு நகரமடத்துக்கு எழுந்தருளச்செய்து அங்கு மற்றைநாள் 24-உ உத்திர நக்ஷத்திரத்தில் கெங்கையில் தீர்த்தங்கொடுத்து, மூன்றாம் நாள் காவடி அபிஷேகம்யேற்று, நான்காம் நாள் காளிகாதேவிப்பிரீதியாகக் கன்னிகைகளுக்குச் சிற்றுண்டி

வஸ்திரதானமும் மேற்படி நான்குதினமும் வேதியர்களுக்கும், சாதுக்களுக்கும், ஆயிரக்கணக்கான ஏழைகளுக்கும் அன்னதானமும் வழங்கி ஐந்தாம் நாளாகிய 27-உ திங்கட்கிழமை மாலை 3 மணிக்கு காளிக்கட்டத்திலிருந்து விஜயஞ்செய்து கல்கத்தா திருக்கோவிலுக்கு எழுந்தருளி வந்துசேர்ந்த வைபவம் ஆயிரம் நாவினைப் படைத்த ஆதிசேஷனேயல்லாமல் சாமான்ய எம்போல்வார்புகழுந்தரமன்றாம்.

மேலும், இந்நாட்டிலுள்ள பெங்காலி, இந்துஸ்தான் ஜனங்கள் ஸ்நானம் செய்தானவுடன் கெங்கைமண், செந்தூரம், சந்தனம் தரித்துக்கொள்ளுகிற வழக்கம். நமது முருகேசன் காளிகாட்டிலிருக்கும் ஐந்துதினமும் அந்த ஜனங்கள் பூராவும் விபூதி சந்தனம் பெற்றணிந்து எங்கு பார்த்தாலும் சிவப்பிரகாசமாயிருந்தன.

மேலும், அவ்வைந்துதினங்களில் இரண்டாவது தினம் காஞ்சி, பிரம்மஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி பாகவதரவர்களால் இயற்பகை நாயனார் சரித்திரமும், நான்காவது தினம் நந்தனார் சரித்திரமும், வள்ளியம்மையார் திருமணச்சரித்திரமும் கைதேர்ந்த வித்வான்களுடைய பிடில், ஹார்மோனியம், தப்ளா முதலிய வாத்திய கோஷத்துடனும், வடமொழிக் கிரந்த ஆதாரங்களுடன் கீர்த்தனை ரூபமாகவும் இடையிடையே சமயோஜித ஹாஸ்ய சம்பாஷணையுடனும் ஸத்காலக்ஷேபம்செய்து திரளாகக்கூடியிருந்த பக்தர்களைக் களிப்பிக்கச்செய்தது மிகவும் மெச்சத்தக்கதே.

திருவிழாக்கால ஒவ்வொரு நாளிலும் திருக்கோகர்ணம் நாகசுரம் சபாபதியால் மேளவாத்தியக் கச்சேரி வெகு விமரிசையாகவும் நடைபெற்றது.

கண்டுகளித்தோன்.
CALCUTTA.

மாதர்கண்மாட்சியும், அவர்கள்பால் நம் கடமையும்.

முன் 27-வது புத்தகம் 599-வது பக்கத்தொடர்ச்சி.

23. ஆகவே பெண்வர்க்கங்களின் உயர்வும், ஏனைய ஆண் வர்க்கங்களின் தாழ்வும், மிக்க விரித்துக்கூறுமலே நன்கு விளங்குகிறதன்றோ? இன்னும் நமது செந்தமிழ்நாட்டுக்கண் மிகச்சிறந்து விளங்கும் அரிய நூற்களின் தலையான நான்முகங்களிலெல்லாம் காப்பாகக்கூறும் சில செய்யுட்களில், சத்தியைமுன்வைத்தே பல ஞானிகளாலுங் கூறப்படுகிறதையும் உணர்க. ஆயுங்கால் மேல் நாட்டார் சத்தியின் வடிவங்களான எமது பெண் வர்க்கத்தாரை, தங்களின் ஆண்வர்க்கத்தில் நின்றும் உயர்ந்த வர்க்கத்தார் என்பதை மிகச்செவ்வனே தெரிந்து, எமது வர்க்கத்தாருக்குக் கொஞ்சமும் வஞ்சகமின்றித் தாழ்ந்து இயலுவதோடும், ஏனைய பகுதியார்களும் மிக நன்றாகத்தெளியும்பொருட்டு வெளிப்படையாகவும் அதனைக்காட்டுகிறார்கள். அஃதாவது யாங்ஙனமெனின், அவர்களோடுபழகிய நம்மவர் பலர்க்கும் அஃது மிகத்தெளிவாக விளங்கியிருக்கும் என்பதில் எவ்வளவும் சந்தேகமில்லை. அதனாற்றான் அவர்கள் சுயேச்சையாய் வாழ்ந்துவருகிறார்கள். மேலும் சத்தியைக்கொண்டாடுகிறவர்கள் சாமான்யர்களாயிரார்கள்.

24 பஞ்சபூதங்களாலே சூழப்பட்ட விசாலமான இந்த நிலவுலகின்கண் குடும்பம் அல்லது இல்வாழ்க்கையெனச் சொல்லப்புகுவதற்கு முதற்காரணமாகவேண்டும் பாச்சியென்றும், சோச்சியென்றும், கூழென்றும் மழலைச்சொற்கூறித் தவழ்ந்து விளையாடப்படுகிற குழவிகளாதலால், அக்குழந்தைகள் பிறந்தஞான்று நமது பந்துமித்திராதிகள் முதல் நமது கோத்திரமொருங்கேயுந் தெரியச்செய்வதற்கான நிருபம், வாத்தியம், தேவபூசனை முதலியசிறப்புக்கள் ஒருங்கும் அவரவர்கள் செல்வ நிலையத்துக்குத் தகுந்தாற்போல செய்துகொள்வோமாயினும், குழந்தையானது பிறந்த அந்தக்கணமே ஆங்குற்ற நமது பந்துமித்திராதிகளுக்கு விளம்பும் பண்டங்கள் மிக்க நுண்ணியதாயும், செல்வவந்தர்களும், செல்வவந்தரல்லாத நமது கோத்திரத்தைச்சார்ந்த எத்துணை வறியவர்களுக்கும் எளிதிற் கிடைக்கக்கூடியதாயும், தாழ்ந்த கிரையப்பேறுள்ளதாயும், அங்ஙனே நுகரக்கூடியதாயும், எந்தஞான்றும் நாட்

டுக்கோட்டை வைசிய வகுப்பாரென்றால் இன்ன பண்டங்களைத்தான் முதன்முதலில் குழந்தையைப்பெற்ற இல்லத்தில் வழங்குவார்களென ஏனைய எவர்களும் புகழ்ந்துபேசக்கூடியதாயும் உள்ள இரண்டொரு தின்பண்டங்களை நமது கோத்திரம் ஒருங்குங் கட்டாயச்சட்டவழக்கமாக வழங்கும்படி ஓர்வித கட்டாயமான தீர்மானத்தைச் சட்டமாக்கிக்கோடலும் வேண்டும். ஈங்கு செவ்வையான குழந்தைகளை ஈற்றவேண்டுங்கருவி இரண்டனுள்,

> "சமன்செய்துசீர் தூக்குங்கோல்போலமைந்தொருபாற்குக்
> கோடாமை சான்றோர்க்கணி"

என்னுங் கருத்தான சட்டத்தின்படி தீர்மானஞ் செய்யப்புகின், பெண்கருவியானது மிக்க வுயர்ந்தனவாதலால் ஒரு குடும்பத்தில் ஒரு பெண் குழந்தையானதுபிறக்குமாயின், அன்றுதினம் மிகுந்த களிப்படைகிறதோடுங்கூட ஆண் குழந்தைகள் பிறந்தஞான்று விளம்புகிற தின்பண்டங்களைவிட ஏதேனும் ஒருவிசேஷமான தின்பண்டத்தை மிகுதியாகவும் விளம்புதல் வேண்டும். எந்தக் குழந்தையைப் பெற்றாலும், அந்தக் குழந்தையானது குறைந்தபாகம் ஈரைந்தாண்டுகள்வரை தன் தாயின்பக்கமே மிகுந்த சார்பாகவும் மிகுந்தஅன்பாகவும்பற்றிநிற்குமாகையால், நமது ஔவையம்பிராட்டியாரும் "இளமையிற் கல்" எனச்சொன்னாற்போல குழந்தைகளுக்கு மிக நாகரிகமான வார்த்தைகளையும், உலக வியவகாரங்களையும், அரசியன் முறைகளையும், வர்த்தகத் தொழில்களின் கருத்து முதலாய கணக்கியன் முறைகளையும், இன்னும் ஏனைய கல்விமுறைகளையும், கல்விச்சாலைகளில் உபாத்தியாயர் கற்பிக்கும் சட்டமுறைகளோடும் ஒட்டி அம்மா, அம்மாவென்று, தங்களின் இல்லம்வந்த காலங்களினும், கல்விச்சாலைவிடுமுறை நாட்களினும் தங்கள் குழந்தைகளின் மனோ இச்சையின்படி உணவு முதலாய பண்டங்களை கொடுத்து, கல்லின்மேலெழுதிய எழுத்துக்களைப்போன்று அக்குழந்தைகளின் மனத்திற் பதியும்படியாகவும் கற்பித்து வளர்க்க வேண்டும். கருவியானது, பெண்பாலே ஆகையால் சகோதரர்களே! அப்பெண்குழந்தைகளையும், ஆண்குழந்தைகளைப்போலவே பிறந்த மூவாண்டுமுதற்கொண்டே கல்விச்சாலைக்குக்கட்டாயமாக அனுப்பி மிகச்செவ்வனே கற்பிக்கப்படல்வேண்டும். பெண் குழந்தைகள்

கல்வி கற்கக்கூடாதென்னும் கெட்ட எண்ணமானது பூர்வகன்மத்தால் எதோ ஒருபொழுது தோற்றப்படுமாயின், அக்கெட்ட எண்ணத்தை அடியோடே வேரறத்தொலைத்தலும் வேண்டும். ஆண் சிறுவர்கள் செய்யும் தேகப்பயிர்ச்சிகளைப்போலவே பெண் சிறுவர்களுஞ் செய்துவரல்வேண்டும். ஆண் சிறுவர்கள்போன்று தேகப்பயிர்ச்சிக்குப் பெண் சிறுவர்களும் ஆவார்களோ எனச் சில நண்பர்கள் நினைக்கவுங்கூடும். சிறிது ஊன்றிநோக்கிக் கவனிக்குமிடத்து அந்நினைப்பு விருதாவாகவேதான் முடியும். ஆண் சிறுவர்களுக்கு ஈரெண்வயது நிறைந்ததில் நின்றும், அவர்கள் தங்களின் இல்லத்தைவிட்டுத் திருமணம் முடிகிறவரை வெளியேறக்கூடாதென்னும் அடக்குமுறைச்சட்டம் உண்டாயின் பெண் சிறுவர்களும் ருதுவானதின்பின் திருமணம் முடிகிறவரை கல்விச்சாலைக்கு செல்லாவண்ணம் தங்களின் இல்லத்திலிருந்தே கற்றுவரலும் வேண்டும். பரிசீலனையிற்றேர்ந்த பெண் சிறுவர்களுக்கு ஆண் சிறுவர்களுக்குக் கொடுக்கும் சம்மானத்தைவிட மிகுதியாகவே கொடுக்கும் வழக்கம் ஒவ்வொரு கல்விச்சாலைகளினும் இருந்துவரல் வேண்டும்

25. ஞான சம்பந்தன். அடி கண்மணி! எமதன்பார்ந்த ஏ கமலம்! நீ கூறும் சில வார்த்தைகள் மிகுதியும் வியப்பாகவன்றோ காணப்படுகிறது. பெண் சிறுவர்களெல்லாம் நின்னுடைய வர்க்கமானால் என்னை? வியவகாரங்களைக் கொஞ்சமும் கவனியாமல் அபிமானம் ஒன்றையேபற்றித் தன்னை மறந்த வார்த்தைகளையும் இங்ஙனம் உபயோகப்படுத்தலாமோ? பெண் சிறுவர்கள் தங்களின் யௌவன காலத்தில் தங்களின் குடும்பத்தைச்சார்ந்த எவரானும் அடக்குமுறையின்றி இயலுவார்களாயின் சில ஆண் சிறுவர்களைப்போன்று "காமத்திற்கு கண்மூக்கு உண்டோ" எனச்சில தாறுமாறுகட்குட்படின் ஆண் வர்க்கங்களைப்போன்றல்லாமல் ஏனைய எவர்களுங்கண்டு நகைக்கத்தகுந்த வழியாக இன்ன புருஷன்தான் எனத் தெளிவாக வெளிப்படுத்தக்கூடாமலும், வயிற்றில் மிகப் பழுவாகக் குழந்தையையும் எய்துகொள்வார்களே? பின்னர் அப்

பெண் சிறுமிகளை யாவர் திருமணம்முடித்துக்கொள்வார்கள்? அந்தக்கருவிற்பிறக்கும் குழந்தைகளை யாவருடைய குழந்தைகளெனப் பெயரிட்டழைக்கிறது? சில அதர்ம சண்டாளக் கன்னிகைகளைப்போன்று, அக்கருவில்வைத்தே சில மருந்துக்களால் கொலைசெய்துவிடுகிறதா? மேலும், பெண்பால்களுக்கு எந்தஞான்றும் சுதந்தரம் கிடையாதே என்றும், சிறு வயதில் தந்தைபாலடக்கமும், விவாஹமானதின்பின் கொழுநன்பாலடக்கமும், கொழுநனை யிழந்து விதவையாவார்களாயின் தங்களின்மக்கள்பால், அல்லது சுற்றத்தார்கள்பாலடக்கமுமாகமுடிகிறதே என்றும், அஃது பரம்பரையானவழக்கமேஎன்றுஞ்சொல்லுகிறார்களே! இவைகளையெல்லாம் கவனியாதவண்ணம் என்னவோ சொல்லவந்துவிட்டாயே?

26 கமலம். ஓ! அத்தன்மீர்! நீயிர் மிக விவேகசாலியே ஆகின்றீர்! இத்தருணம் நோக்கி நல்லவோர் ஞாபகத்தை மூட்டினீர்! விஷயங்கவனிக்கத்தக்கதுதான். இதற்காக நுமக்கு யாம் என்னை கைமாறு இறுப்பேம். இருக்கட்டும். விஷயங்களைக் கவனிப்போம். இங்கு கூறப்படுகிற விஷயங்கள் ஒருங்கும் மனிதவர்க்கமாய்ப் பிறந்தார் எவர்களுக்குமேபொதுவானதென்பதையும் ஒருவகுப்பாருக்குமட்டும் உரித்தானதல்லவென்பதையும் இதனைப் பார்வையிடும் ஒவ்வொருவரும் மறந்துவிடுதல் கூடாது. எந்தக்காலத்தும் ஒரு சட்டமுறையை வகுக்கும் ஒருவர் எல்லாம் வல்ல இறைவன்பிரதிநிதியேயாவர் என்பதையும் மறந்துவிடுதல்கூடாது. எல்லாம் வல்ல இறைவன் பிரதிநிதியாகவந்து அவதரித்த ஒருவர் ஒரு சிறிதளவும் வஞ்சநெஞ்சோடுங்கூடக்கூடி எந்த நூன்முறைச்சட்டங்களையும் வகுக்கமாட்டார். நியாயக்கருதியும், கால வர்த்தமானம் நோக்கியுமே வரையப்படும். வருங்காலத்துக்கு மிகப் பொருத்தமாகவே இருக்கும். பொருள்கருதியேனும், தமது வர்க்கத்தார் என்னும் அபிமானம்பற்றியேனும் ஒருக்காலும்கோட்டமாக வரையத்துணியவே மாட்டார். பொதுவாகக் கவனிக்கப்புகுந்தால் எந்தக்காலத்தும்முறையானஒழுக்கங்களைவிட்டுத்தவறிக்கெட்டலையும் சிறுவர்களும், கயவர்களும் சுருக்கமாகவேதான்காணப்படுவார்கள். அங்ஙனங் கெட்டலையவேண்டும் ஊழ்வயத்தோடுகூடிவந்தவர்எவராயிருப்பினும், அவர்எத்துணைக்கட்டுப்பாட்டோடு

கூடியவராயிருப்பினும், அவர் கட்டாயமாகக்கெட்டலைந்தேதீருவர் இஃதுபற்றித்தான் நமது தேவபெருமான்,

"சிறைகாக்குங்காப்பெவன்செய்யுமகளிர்
நிறைகாக்குங்காப்பேதலை" என்றார்,

மேலும், ஏதோ அறியாமல் ஒருபெண்சிறுமி கொஞ்சம் தாறுமாறுமாக நடப்பாளே ஆனால் அவள் தன் நடத்தையைக்கண்டு நகைக்கக்கூடிய எவர்களும், நகைப்புக்குரியவர்களே ஆவார்கள். பெண்பால்களுக்குச் சுதந்தரம் இல்லையென்னும் கோட்பாடு இறந்தகால வழக்கியல்களாகிக் கழிந்துபோய்விட்டன. மேலும், 24-வது பாராவில் அடக்குமுறைச் சட்டத்தைப்பற்றிக் கவனிக்கப்புகுந்ததில் ஆண் சிறுவர்களுக்கு ஈரெண்வயது நிறைந்ததில் நின்றும், அவர்கள் தங்களின் இல்லத்தைவிட்டுத் திருமணம் முடிகிறவரை வெளியேறக்கூடாதென்னும் அடக்குமுறைச்சட்டம் உண்டாயின், பெண்சிறுவர்களும் ருதுவானதின்பின் திருமணம் முடிகிறவரை கலவிச்சாலைக்குச் செல்லாவண்ணம் தங்களின் இல்லத்திலிருந்தே கற்றுவரலும் வேண்டுமெனக் கூறினனே அல்லாமல் அவசியமில்லாத எந்த வார்த்தைகளையும் நான் கூறவில்லை. என்றாலும் சந்தேகம் உண்டானமட்டில் நான் பதிற்கூறித்தான் தீரவேண்டியதாயிருக்கிறது. அஃதாவது ஒரு குழந்தையை கற்புடையவொரு மகளிரும் அவர்தம் கொழுநனுமான கற்புடைய வொரு புருஷனுமாகவே ஈன்றதுநோக்குங்கால் உண்மையே எனினும், தமதருமையான ஆலிலைபோன்ற அடிவயிற்றினை நாளாரம்பத்திற் சிறுகச்சிறுக வீங்கவைத்து நோக்குவார் ஊனகண்ணிற்கு மிகச் செவ்வனே புலப்படும்படிக்காட்டியும், பின்னர் பத்தாவது திங்களில் அம்மா அம்மாவென அரற்றி இஃதென கூறற்கு இயையாத துன்பத்துட் சிக்கியும் தங்களின் கொழுநன் முதலிய பந்துமித்திராதிகள் யாவருக்கும் கொஞ்சமேனும் சந்தேகமில்லாதவண்ணம் இன்னாளே இக்குழந்தையைப் பெற்றாளென தெள்ளிதில்விளங்கும்படிக்கும் ஈன்ற அருமைத்தாயான, அஃதாவது சங்கரவடிவம்மாள், அல்லது மாணிக்கத்தம்மாள் புதல்வன் புதல்வி இன்னாரென உலகமெங்கும்

புகழ்ந்து கூறற்கு இடமின்றி, ஒரு பெண்பாலானவள் சோர புருஷனோடு சேர்ந்து ஒரு குழந்தையைப் பெற்றதற்கும், அல்லது தன்னுடைய கொழுநனுடைய வித்துக்கே அக்குழந்தையைப் பெற்றுக்கொண்டாளென்பதற்கும் சாட்சியம் என்னையிருக்கிறதோ? ஓய் அத்தன்மீர்! எவ்வாறுணர்வீரோ? ஏதோ குறிப்புமாத்திரையாற்றானேயுணர்தல்வேண்டும். ஏதோ மனத்திடையொன்றும், வாக்கிடையொன்றுமாக, இயற்கையிற் பொம்மையைப்போன்ற, இன்னாளுடைய கொழுநன், இன்னாருடைய புதல்வர்தான் இன்னாரெனப் பெயர்களும், தலையெழுத்து விலாஸங்களும் அறிவின்மையால் வைத்து வழங்கிவரும் ஆண்தன்மையும், ஆண்தன்மையோ? அப்படி வழங்கும் நீதியும் நீதியோ? அத்தன்மீர்! அப்படிப்பட்ட கெட்ட வழக்கங்களையெல்லாம் வேரறத் தொலைத்துவிட்டு, ஒரு பெண்பாலானவள் விவாகம் நடத்தற்குமுன்னர் ஏதோ ஒருவாறு தவறுதலாக ஒரு குழந்தையைப்பெற்றுக்கொண்டிருந்தாலும் அக்குழந்தையோடே ஒரு புருஷனுக்கு விவாகம் நடத்துஞ் சட்டத்தையும், பெண்பாலானவர்கள் தங்களின் மனோவிச்சையின் பிரகாரம், அவர்களின் இறுதிக்காலத்துக்குள் எத்தனை புருஷனை விவாகம் முடித்து, முடித்து, விலக்கி, விலக்கி முடித்துக்கொள்ளல் வேண்டும் சட்டத்தையும், அத்தனை புருஷர்களுக்கும் பிறந்த குழந்தைகளெல்லாம் ஒருங்கே தங்களின் (அப்பெண்பால்களின்) குழந்தைகளே ஆதலால் அக்குழந்தைகளெல்லாம் அப்பெண்பால்களோடே இருந்து வரும்படிக்கான சட்டத்தையும் மிகவொழுங்காகப் பூர்த்திசெய்து, தற்காலவரை ஒரு புருஷன் விவாகம்செய்துகொண்டதிலிருந்து சிலவாண்டுகள்வரை சந்ததியுண்டாகாமலிருக்கிறதைக்கருதி மற்றொரு மகளிரையவனுக்கு இரண்டாவது மனையாளாக விவாகம் செய்துவைப்பதை ஒழித்து, அம்மனையவளுக்கு மற்றொரு புருஷனை இரண்டாவது கொழுநனாகத் தீர்மானஞ்செய்து விவாகம் முடித்துக்கொள்ளல்வேண்டுஞ் சட்டத்தையும், தற்காலம் தங்களின் பெண்குழந்தைகளுக்குத் தங்களின் குடும்பத்திலாவது தங்களின் தாவர சங்கமச் சொத்துக்களிலாவது எட்பிளவானும் சம்பந்தமில்லாமல் உயிரோடே எமனுக்கு இரை கொடுத்தாற்போல் கால வர்த்தமானத்தைக் கொஞ்சமுங்கூடக் கவனியாமல் தாரை வார்த்துக்கொடுக்கும் அநாகரீகமான பழக்க வழக்கங்களை

றும், அதனாலே கற்புக்கு கெடுதலேற்படுமென்றும், கல்வி கற்றால் கணவருக்கு கீழ்ப்படிந்து நடவார்களென்றும் சிலர் அறிவின்மையாலே சொல்லுகிறார்கள். அப்படிச்செய்வதெல்லாம் தங்களின் இயற்கை குணமேயன்றி கல்வி கற்றதனால் வரும் கெடுதலன்றாம்.

"பொருந்துநற்கலைதெரிபூவைகற்பது
திருந்தியேமிகுமலாற்றேய்ந்துபோமெனல்
வருந்திடாதுயிர்தருமருந்தைமானிடர்
அருந்திடிற்சாவரென்றறையலொக்குமே".

எனச் சில மேதாவிகளின் வாக்குகளுமிருக்கிறது. சர்க்கரையினிப்பென்பது யாவரும் தெரிந்த விஷயம். ஒருவன் சர்க்கரைக் கட்டியை வாயிலிட்டுக்கொண்டு கசக்கிறதென்றால் அஃது சர்க்கரைக்கட்டியின் குணமோ? அல்லது அவன் தன் நாவின் குணமோ? அல்லது அவன் தன் மனத்தின் கோட்டமோ? என்பதை ஐயா! தாங்களே உணருங்கள். இதுபோல தங்களின் இயற்கை குணத்தாலே கெட்டுப்போகிற சில பெண்களை முன்னிலையாக வைத்துக்கொண்டு பெண்களுக்கு கல்வி பயில்விக்கக்கூடாதென்று சொல்லுகிறார்களேதவிர, அதில் உண்மையில்லையென்பது நன்கு விளங்குகிறதன்றோ? முற்காலத்தில், திரௌபதை, சீதை, சாவித்திரி, நளாயினி, தமயந்தி முதலிய பெண்மணிகளும் இன்னும் இவர்களைப்போன்ற அநேக பெண்மணிகளும் கல்வி பயின்று பல செய்யுட்களையியற்றியும், தங்களாலியன்றவளவு தங்களின் கணவர்களைப் போற்றிசெய்தும், குடும்பக்காரியங்களைச் சரிவரநடத்தியும் வந்தார்களென்றும் பலநூற்களும் முறையிடுகின்றனவே. கல்வி கற்ற பெண்கள்தான் கற்புடைய பெருமாட்டிகளாவரோ? கல்வி கல்லாமலும் கற்புடையாராயிருக்கின்றனரன்றோ? எனவும் சிலர் சொல்லலாம். அஃது எப்படியெனின் முடவன் ஆட்டத்தை குருடன் நோக்கி களிப்புற்றதுபோலுமேயாம். சிலர் பெண்கள் படிக்கவும்வேண்டாம், கற்புடையவராயிருக்கவும் வேண்டும் என நினைக்கிறார்கள். அஃதாவது மீசைக்கும் ஆசை, கூழுக்கும் ஆசை என்றாற்போல இருக்கிறது. பெண்கள் கல்வி கற்பதனால் வரும் நன்மைகள் பலவுண்டு. புருஷனுடைய விதமறிந்து வேண்டும் வேலைகளைச் செய்வாள். வீட்டுப்பொருள்களையும் ரூட்சித்துக்கொள்

வாள். மிக மதுரமான பாடல்களைப்பாடி புருஷனுடைய வருத்தங்களைத் தீர்ப்பாள். தமதில்லத்தைச்சார்ந்த கணக்குகளையும் வரைந்துகொள்வாள். பிள்ளைகளையும் செவ்வனே படிப்பிக்கக்கூடும். இன்னும் ஏனைய எவ்விதமான இன்பாதிகளையும் துய்த்தற்கு போதிய முதற்கருவியாகவுமிருப்பாள். ஆதலால், மேலே கூறப்படுகிற இருவகுப்பினரிடத்தும் கல்விப்பயிர்ச்சியானது மிகச் செவ்வையாய் விளங்குமாயின், ஒவ்வொருவரும் தங்கள் தங்களின் துணைக்கருவியான ஒவ்வொருவருக்கும் போதிய இன்பமாதிகளை எந்த எந்த வழிகளாக எண்ணப்படுகிறார்களோ அந்த அந்த வழிகளாக ஆங்காங்கு ஐம்புலன் அறிவு முதலாய தத்துவங்களெல்லாம் ஒருங்கே தங்கான்மிசை வீழ்ந்து தலைசாய்த்து கைகூப்பி தன்வயப்படும்படி காட்டி தாங்களே அநுபவித்துக்கொள்வார்கள் அல்லது ஏதிலார் துய்த்தற்கு யாங்ஙனம் ஏதுவாகும்? நோக்குங்கால் ஆண்வர்க்கங்களுமே நமது செந்தமிழ் நாட்டின்கண் செவ்வையான கல்வியற்றவர்களென்றேதான் சொல்லுதல் வேண்டும். நானாவிதமான உலக வியவகாரங்களினும், கல்விப்பயிர்ச்சியினும் தேர்ச்சியடைந்திருப்பார்களாயின் தங்களுக்கு இன்றியமையாத துணைக்கருவியாக ஒரு பெண்பாலை எய்துகொள்ளவேண்டுமாற்றில் யாதொரு பரிசீலனைகள் செய்யாமலும், கேவலம் தாங்களும் சில பெண் சிறுவர்களைப்போன்றும் கவிழ்ந்தகண் வேறு எஃதேனுமொன்றை நோக்காதவண்ணம் சித்திரப்பாவையைபொப்ப அத்திருமணக்கோலங்களை ஏற்றுக்கொள்வார்களோ? பின்னர் சில ஞான்றுகளுக்குள்ளே பாம்பும் கீரியும் ஒற்றுவாழ்ந்தாற்போலவுமாய்விடுவார்களோ? ஆகவே கல்விமாத்திரையானும், அறிவுமாத்திரையானும் தாழ்ந்த ஒரு புருஷன் செல்வமாத்திரையாலே எத்துணைதூரம் ஒரு பெரியவனாகத் தோற்றப்படினும் அஃதினை ஒரு பெரும்பொருளாக மதித்து அன்னவனுக்கு மேலே கூறப்படுகிற இரண்டுமாத்திரையானுமுயர்ந்த ஒரு பெண்பாலை எந்தமார்க்கத்தானும் ஓர் காரணங்காட்டி திருமணமார்த்தல் எந்தஞான்றும் கூடவே கூடாவாம். செல்வம் பற்றுக்கோடாக ஒரு வயோதிகனுக்குத் தங்களின் இளம்பருவமான மகளிரை இழத்தலும் கூடாவாம். மணமகளின்னாள், மணமகனின்னான் என குறிக்கப்பட்டிருக்கும்

இடையே அம்மணமக்களின் மனோவபிப்பிராயமிருந்தென பூராவாகத் தெரிந்துகொள்ளாமல் எவ்வித முகாந்தரங்களைக்கொண்டும் தாய் தந்தையர்களாவது பந்துமித்திராதிகளாவது பலவந்தமாகத் திருமணமுஞற்றலும் கூடாவாம். (இன்னும் வரும்.)

உ

திருச்சிற்றம்பலம்.

தேவநகரமும், வைசியமித்திரனும்

அன்புநிறைந்த ஐயா! "தேவநகரம்" என்பது, நமது நாட்டுக்கோட்டை வைசிய மாகாணத்துக்கு மிகச்சிறந்ததோர் தலைநகரமேயாமென்பது யாம் கூறாமலே நன்கு விளங்குவதாம். இந்நகரத்து, "வைசிய சிவாநந்த சபை"யின், நான்காம் வருஷப்பூர்த்தி திருவிழா நிகழ்ந்த மகரமதியிற் சின்னாள் யாமும் ஆங்கு சென்றிருந்தேம். அதில்நின்றும் அந்நகரத்து எமதநுபவத்திற்கண்ட சில முக்கிய விஷயங்களைப்பற்றி நமது வைசியத்திற் கொஞ்சம் வரையப்புகுவாம்.

2. அஃதாவது எமதாப்த நண்பர்காள்! இத்தேவநகரம், தேவலரானும், பாவலரானும், நாவலரானும், காவலரானும், இன்னும் ஏனைய யாவலரானும் புகழ்ந்துகொண்டாடத்தகுந்த மேம்பாடுடையதென்பதை அந்நகரத்தின் இயற்கையாதிய குணங்களை சிறிது ஆய்ந்தோய்ந்து கவனித்தார் எவரும் மறுக்கமுன்வரமாட்டார். நமது செந்தமிழ் நாடு நகரங்கள் பலவுள்ளும் இனித்த ஒண்சுவை தரு தனித்தமிழ் நகரம் இஃதென மொழிதலும் பிழையாகமாட்டாது. மேலும் நமது சைவசமயத்துக்குச் சிரம்போல்வதாயும், சிவாகம சித்தாந்தத்துக்கு நேத்திரம்போல்வதாயும், நமது தாய்மொழியான செந்தமிழ்ப்பாஷைக்கு அழகிய வதனம்போல்வதாயும் காணப்படுகிறது. கல்வியறிவினும், நாகரீகநிலையத்தினும், ஏனையவியவகாரத்தேற்றத்தினும், அநுபவமார்க்கத்தினும் அளவுகடந்தவன்மையுடையதென்னலும் பொருந்தும், திருமகள்வாசம் தேவநகரமேயாகும். நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும், ஒவ்வொரு ஞானிகளாகவே காணப்படுகிறார்கள்.

புராணேதிகாசங்கள் ஆங்குதான் பிறந்தனபோற்காணுகிறது. ஆங்குடைத்தான ஒவ்வொரு நண்பரும் இசைத்தமிழ்ப்பயிர்ச்சியில் வசையறத்தேர்ந்தே விளங்குகிறார்கள். அகத்துறவுபூண்ட அடியார்கள் பலரேவிளங்குகிறார்கள். ஒவ்வொரு செல்வவந்தர்களும் ஒவ்வொரு அவதாரபுருஷர்களாகவே சிறிதூன்றி நோக்குமிடத்துக் காணப்படுகிறார்கள். அடக்கமும் பொறையும் ஆங்குதான் குடிகொண்டிருக்கிறது. "இம்மியரிசித்துணையானும் வைகலும் நும்மிலியைவகொடுத்துண்மின்" என்றமுனிவர் திருவாக்கு ஆங்குதான் நடமாடுகிறது. திருத்தவிஷயத்தில் மிகு பரபரப்புடன் முன்னேற்றமடைந்துவருகிறது. மேலும் இந்நகரத்து "வைசிய சிவாநந்த சபை" "சிவாகமசித்தாந்த பரிபாலன சங்கம்" தர்ம வித்யாஞானோதய சங்கம்" முதலிய நான்கைந்து சங்கங்களும், மூன்று நான்கு வாசகசாலைகளும் மிகச்செவ்வனே நடைபெற்றுவருகின்றன.

3. இத்தகைய மாட்சிமைபெற்ற இப்பெரிய தேவநகரமானது, தங்கட்குரிய முதன்மையான ஒரு விஷயத்தில்மட்டும் கொஞ்சம்மறதியுட்சிக்கியதாகக் காணப்படுகிறது. அஃதாவது, வரையறுத்துக்கூறுவதற்கு இயலாத நெடுங்காலத்துக்குமுன்னரே இருந்து மிகு சீர்சிறப்புடன் நடந்தேறிவந்த நமது நாட்டுக்கோட்டைவைசிய மகாசங்கத்தை (அஃதாவது நமது வருணாச்சிர தருமத்துக்குரியவும், வருணாச்சிர தருமக்கட்டுப்பாட்டுக்குரியவுமான நமது தொண்ணூற்றாறு நகரக்கூட்டத்தைத்) தற்காலம் இழந்து நிற்பதுதான், என்னை ஆச்சரியகரம்! அளவுசங்கையில்லாத எத்துணையோ செல்வவந்தர்கள் நிறைந்த, இப்பெரியதேவநகரமே இதனை மறந்திருக்குமானால் ஏனைய எந்த வோர் நகரத்தின்மீது யாங்குறைகூறத்துணிவேம். "தேவகோட்டை ஜமீந்தார்" எனப் பெயரேற்றுநிற்கும் ஒரு பெரிய ஸ்ரீமானும் தங்களின் நாட்டுக்கோட்டைவைசிய மாகாணம் ஒருங்கிற்கும் ஒரு தலைவராய் (ஒரு ஜமீந்தாராய்) புகழேற்றுவாழ்தற்குரிய ஒரு சுதந்தரம் முன்னரே இயற்கையிலமைந்துகிடக்க அச்சுதந்தரத்தை இழந்து மறந்திருப்பதும் வியப்புக்குரியதேயாகிறது. ஏ! சண்முகா! நீயே அதனை ஞாபகப்படுத்தி அவ்விளக்கினைத்தூண்டுவாயாக. ஓ! தேவநகரத்து

எம் அருமைச் சகோதரர்காள்! நாம் இத்துணைப் பெருஞ்செல்வவந்தர்களானதற்கும், நமது வர்த்தகமுறைகள் இத்துணை முன்னேற்றமடைந்து வந்ததற்கும் முதற்காரணம் நம்முடைய மகோன்னதமான நமது ஜாதியக்கட்டுகளேயாமன்றோ? நமது ஜாதியக் கட்டுக்கள் கொஞ்சமும் நழுவாமல் நிலைநின்று வந்ததற்கு முதற் காரணம் நகரக்கூட்டம், கோவில்வாசற்கூட்டம், மடத்துவாசற் கூட்டம், தொண்ணூற்றாறு நகரக்கூட்டம் முதலியன அன்றோ? அக்கூட்டங்களெல்லாம் ஒருங்கே நிலைநின்று வந்ததற்கு முதற் காரணம் கல்வியாலும், அறிவாலும், செல்வத்தாலும், தன்மையாலும், நல்லார் கூட்டுறவாலும் சிறந்த பெரியவர்களேயாமன்றோ? ஆதலின் ஓ பெரியவர்களே! ஓ கல்வியறிவிற் சிறந்த பேரறிவாளர்களே! ஓ செல்வவந்தர்களே! நீங்கள் நுங்களை மறந்திருக்கலாகுமா? நமது வைசிய மகாசங்கத்தை இளந்திருக்கலாகுமா? நுங்களின் அருங்கடமையைச் செய்து தீரல்வேண்டாமா? நம்மையறியாமல் திடீரென்றுவரும் ஒருவிஷயத்துக்கு இலக்ஷக்கணக்காக நுங்களின் செல்வம் விரையமாகவில்லையோ? நீங்கள் நமது பொதுவிஷயத்தைப்பற்றி கொஞ்சம் யோசித்துப்பார்த்தல்வேண்டாமா? எந்த யார்க்கத்தாலும் ஒய்க்கக்கூடாத மாயாமயக்கப் போகத்தால் நமது நாட்டுக்கோட்டை வைசியமென்னும் புத்தகத்தை மிகச் செவ்வனே படித்துப்பாராதிருத்தலும் மிக நன்றாமோ? ஓ சகோதரர்காள்! எம்முடைய வயிறு கொழுந்துவிட்டன்றோ பற்றியெரிகிறது. ஏன் ஐயா? எம்முடைய பாரதமாதாவின் தேகத்திலுடைத்தான அநேக அறப்பெரும்பணிகளெல்லாம் ஒருங்கே நம்முடைய வைசிய மகாசமுகத்ததன்றோ? நம்முடைய மகாசமுகமானது தமக்குரிய ஒவ்வொரு அபாரசக்திகளையும் காளாரம்பத்தில் ஒவ்வொன்றாக நழுவவிட்டு இழந்துவிடுமானால் எமதன்பார்ந்த பாரதமாதாவின் தேகம் மிக அலங்கோலமாயன்றோ காணப்பெறும். எந்தவாற்றாலும் வனப்புவாய்ந்த யௌவனத்தோடு கூடிய எமதன்னையின் சரீரத்தை அங்ஙனம் காண அவளின் அருமைப்புதல்வர்களான நம்போல்வார் யாவருக்குத்தான் சம்மதியாகும். அந்தோ! அதனை ஆய்ந்து நோக்குமிடத்து எந்தக் கன்மனமுடையாரும் அழன்மிசையிட்ட மெழுகேபோல் இளகிவிடமாட்டாரோ?

(இன்னும் வரும்.)

OFFICE OF THE REGISTRAR OF ...
13 JUN 1917
MADRAS

உ

திருச்சிற்றம்பலம்.

Nattukkottai Vaiciyam

நாட்டுக்கோட்டை வைசியம்

ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

தொகுதி ௧.	நளஸு பங்குனிமீ, பிங்களஸு சித்திரை, வைகாசிமீ	பகுதி ௰௧, ௰௨, ௰௩.

கடவுள் வணக்கம். அப்பர் தேவாரம்.

மாசில்வீணையுமாலைமதியமும்
வீசுதென்றலும்வீங்கிளவேனிலு
மூசுவண்டறைபொய்கையும்போன்றதே
ஈசனெந்தையிணையடிநீழலே.

வாழ்த்தவாயும்நினைக்கமடநெஞ்சுந்
தாழ்த்தச்சென்னியுந்தந்ததலைவனைச்
சூழ்த்தமாமலர்தூவித்துதியாதே
வீழ்த்தவாவினையேனெடுங்காலமே.

விறகிற்றீயினன்பாலிற்படுநெய்போன்
மறையநின்றுளன்மாமணிச்சோதியா
னுறவுகோனட்டுணர்வுகயிற்றினான்
முறுகவாங்கிக்கடையமுன்னிற்குமே.

வலைத்துநின்றைவர்கள்வர்வந்தெனைநடுக்கஞ்செய்யத்
தலைத்துவைத்துலையையேற்றித்தழலெரிமடுத்தநீரிற்
றிளைத்துநின்றாடுகின்றவாமைபோற்றெளிவிலாதே
னிளைத்துநின்றாடுகின்றேனென்செய்வான்றோன்றினேனே.

நடுவிலாக்காலன்வந்துநணுகும்போதறியவொண்ணு
வடுவனவஞ்சபூதமவைதமக்காற்றலாகேன்
படுவனபலவுங்குற்றம்பாங்கிலாமனிதர்வாழ்க்கை
கெடுவதிப்பிறவிசீசீகிளரொளிச்சடையினீரே

காயமேகோயிலாகக்கடிமனமடிமையாக
வாய்மையேதூய்மையாகமனமணிலிங்கமாக
நேயமேநெய்யும்பாலாநிறையநீரமையவாட்டிப்
பூசனையீசனார்க்குப்போற்றவிக்காட்டினோமே.

உடம்பெனுமனையகத்துவுள்ளமேதகளியாக
மடம்படுமுணர்நெய்யட்டியுயிரெனுந்திரிமயக்கி
யிடம்படுஞானத்தீயாலெரிகொளவிருந்துநோக்கிற்
கடம்பமர்காளைதாதைகழலடிகாணலாமே.

வானந்துளங்கிலென்? மண்கம்பமாகிலென்? மால்வரையுந்
தானந்துளங்கித்தலைதடுமாறிலென்? தண்கடலு
மீனம்படிலென்? விரிசுடர்வீழிலென்? வேலைநஞ்சுண்
டூனமொன்றில்லாவொருவனுக்காட்பட்டவுத்தமர்க்கே.

திருமந்திரம்.

பெறுதற்கரியபிறவியைப்பெற்றும்
பெறுதற்கரியபிரானடிபேணார்
பெறுதற்கரியபிராணிகளெல்லாம்
பெறுதற்கரியதோர் பேறிழந்தாரே.

புண்ணியஞ்செயவார்க்குப்பூவுண்டுநீருண்டு
வண்ணலதுகண்டருள்புரியாநிற்கு
மெண்ணிலிபாவிகளெம்மிறையீசனை
நண்ணறியாமனழுவுகின்றாரே.

தீயினும்வெய்யன்புனலினுந்தண்ணியன்
ஆயினுமீசனருளறிவாரில்லை
சேயினுநல்லனணியனல்லன்பர்க்குத்
தாயினுநல்லநற்றாழ்சடையோனே.

கங்காளன்பூசுங்கவசத்திருநீற்றை
மங்காமற்பூசமகிழ்வீரேயாமாகிற்
றங்காவினைகளுஞ்சாருஞ்சிவகதி
சிங்காரமானதிருவடிசேர்வரே.

சிவசிவவென்கிலர்தீவினையாளர்
சிவசிவவென்றிடத்தீவினையாளுந்
சிவசிவவென்றிடத்தேவருமாவர்
சிவசிவவென்னச்சிவகதிதானே.

மாதர்கண் மாட்சியும் அவர்கள்பால் நம் கடமையும். முன் 30-வது புத்தகம் 641-வது பக்கத்தொடர்ச்சி.

இரண்டொருஆண்டுகள்தானே முன்பின்என பல்லோராலும் ஒப்பத்தகுந்ததல்லாத வயதுமுதிர்ந்த ஒரு பெண்பாற்கும், வயது குறைந்த ஒரு ஆண்மகனுக்கும் திருமணமுஞற்றலும் கூடாவாம். அம்மணமக்கள் ஒருவரையொருவர் நன்கு தெரிந்துகொள்ளாத வரையிலும், கல்வி, அறிவு, குணம், அழகு, பொறை, அடக்கம் ஒழுக்கம், கருணை, மனோதிடம், சுற்றந்தழுவல் முதலிய பல நன்னெறிகளைப்பற்றியும் நேரிற்பரிசீலனை செய்துகொள்ளாத வரையிலும், "குறிப்பிற்குறிப்புணர்வாரை வுறுப்பினுள் யாதுகொடுத்துங் கொளல்" என்றாற்போன்று மாக்களியினுள்ளே வண்டானது கலந்துமயங்கிக்கிடத்தலாம் அன்ன காமாதி போகங்களை துய்த்தற்குத் தேகாதி மாத்திரைகளான உறுப்புக்களெல்லாம் ஒருங்கே குறிப்பு மாத்திரையினாலாவது நேரொப்பவருமெனத் தெரிந்துகொள்ளாத வரையிலும் அவ்விருவரையும் பலவந்தமாகத் திருமணமுஞற்றிக் கொள்ளச் செய்தலும் கூடாவாம்.

28. தற்காலவரை தங்களின் புதல்விக்கு ஒரு புருஷனை மணமகனாகக்குறித்து ஆயுங்கால் எத்துணைதூரம் பரிசீலனை செய்கிறார்களோ அஃதேதன்மையதாக தங்களின் புதல்வனுக்கும் ஒரு இளமகளிரை மணமகளாகக்குறித்து நோக்குங்கால் அன்னவளுடைய சரீரவிலக்கணங்களை நன்றாகத்தெளிவதோடுங்கூட கல்விப் பயிர்ச்சியிலும் தேர்ச்சியடைந்தவள்தானோவென்பதையும், ஏதோ சிலஞான்றுகளாவது தங்களின் கொழுநன்செய்துவந்த தொழில்களைத் தாங்களும் செய்து காப்பாற்றிக்கொள்வாளா அதற்குத்தகுந்த வல்லமையுடையவள்தானோவென்பதையும் நன்கு தீரத்தெளிந்தே அவ்விருவரின் மனோவபிப்பிராயம்போன்று திருமணமுடித்தலும் வேண்டும். ஆயின் அத்தன்மீர்! திருமணமுடித்தற்கு போதிய வயதுவந்த நமது இளையசகோதரர்கள் திருமணக்காலங்களுக்கு ஒன்றிரண்டாண்டுகளுக்கு முன்னர் தெரிந்து செய்துகொள்ளல்வேண்டும் இரண்டொரு விஷயங்களைப்பற்றி ஈண்டு சற்று கவனிப்போம்.

29. ஆய்ந்துநோக்குமிடத்து திருமணமுடித்தற்கு போதிய வயதுவந்த காலங்களில் நமது சகோதரர்களெல்லாம் ஒருங்கே கல்வியறிவில் தேர்ச்சியடைந்தவர்களாகத்தான் இருத்தல்வேண்டும். ஆகலின் ஈண்டு யாம்கூறும் நன்மொழிகளையெல்லாம் அங்கீகரிக்கவேண்டும். அறிவினையுடையவர்களாகவேதான் இருப்பார்களென்பதில் எட்பிளவேனும் சந்தேகமில்லை.

30. முதன் முதலாக திருமண வியவகாரங்களுக்காக தாய் தந்தையர்களின் கருத்தை எட்பிளவேனுஞ்சிதறவிடாமல் அனுசரித்தல்வேண்டும். அன்னவர்களின் நெஞ்சத்து இன்னும் இரண்டொரு ஆண்டுகள் கழித்துத்தான் திருமணமுடித்தற்கு ஆரம்பித்தல்வேண்டுமெனத் தோற்றுமாயின் அக்குறிப்பினையோர்ந்து எமக்கு இன்னும் இரண்டு மூன்றாண்டுகள் கழித்துத்தான் திருமணமுடித்தல்வேண்டுமென முன்னதாகவே தங்களின் முகமலர்ச்சியோடும், இனிய சொற்களோடும் அதற்கதற்கு வேண்டும் காரணங்காட்டிப் போதித்தலும் வேண்டும்.

31. நாம் நமது தாய் தந்தையர்களாலேயல்லவோ இப்பெரிய உலகங்களையும், மிக அருமையான கல்வியறிவு ஞானங்களையும் கண்டோமெனும் உண்மையை நினைந்து அன்னவர்களின்முன்னிலையில் தாறுமாறும், தண்டுமுண்டுமான கொடுங்கூற்றுக்களாலும், காமப்பேய்கொண்ட சில மிருகவர்க்கங்களைப்போன்றும், எமக்கு இப்பொழுதே இன்னாருடைய மகள் இன்னாளையென்றாவது, இன்னாருடைய மகன் இன்னானையென்றாவது திருமணமுடித்தல்வேண்டுமல்லது எமது பாகங்களைப் பிரித்துவிடுமென்றும் இன்றேல் நமது சிரத்தில் இவ்வுலகைத்தடியாற்புடைப்பேனென்றும் அறிவீனமாகப் பகருவதையொழித்து நற்குணம், நற்கல்வி, நல்லினம்சார்தல் என்னும் பழக்கத்தோடு ஒட்டி இயல்பாகவே தங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொழின்முறைகளைச் செய்வதோடுங்கூட மிக்க உயர்ந்த நூற்களை ஆராய்ச்சிசெய்வதோடும் தங்களுடைய இல்வாழ்க்கைக்கு முதற்காரணமாகவேண்டும் முதற்கருவி ஆண்பாலோ அல்லது பெண்பாலோ அஃதினைப்பற்றி நாளாரம்பத்திலேயே நன்கு கவனித்தும் வரல்வேண்டும்.

32. அங்ஙனம் கவனிக்கப்பெறும் ஒவ்வொரு வழிகளையும் தங்களின் தாயின் வாயிலாகவே தங்களின் தந்தைக்குத் தெரிவித்தல்வேண்டும்.

33. அவ்விதம் கவனித்து ஆராய்ந்து தெரிந்து குறிக்கப்படும் ஒருத்தி அல்லது ஒருவன்பால் இலகுவாய்ச் சில வார்த்தைகளாடி பின்னர் தங்களுக்குப்போதிய பொழுதுகிடைத்த காலங்களில் கல்வித்திறமையான வினாக்களிரண்டொன்றை வினவலும், அதற்குப்போதிய விடையளித்தலும் முதலாய பரிசீலனைகளும் செய்துவரல்வேண்டும். அஃதோடும் பொருள்வலியான பல திரிபுகளையும் ஒவ்வொன்றிற்கு ஒவ்வொன்றை நேரொப்பச் சீர்தூக்கி தமக்குள்ளாகவே நன்கு கவனித்துக்கொள்ளலும் வேண்டும்.

34. ஆகவே இந்நோக்கங்களெல்லாந் தெரிந்து இஃது சரியெனத்தங்களின் தாய் தந்தையர்கள் ஒப்பாதவரை அன்னவர்கள் ஒப்பாததற்கு போதிய காரணங்களையும் வினவி, ஒப்பத்தகுந்ததற்கு போதிய காரணங்களையுங்காட்டி எஞ்சிய வியவகாரப்பகுதிகளில் நின்றுகொள்ளலும் வேண்டும். தங்களின் இனம் என்பதிலும், தகுந்த முறைதானென்பதிலும் எந்தக்காரணங்களாலும், எந்தஞான்றும் தவறாதிருத்தலும்வேண்டும். "கடைக்கால் தலைக்கண்ணதாகிக் குடைக்கால்போற் கீழ்மேலாய் நிற்குமுலகு" என நமது செந்தமிழ்நாட்டு முனிவர் திருவாக்கையும் நன்குகவனித்து தங்களுக்கு இனமல்லாதவர்களை இனங்களாகவும், முறைமையல்லாதவர்களை முறைமையாகவுங்கருதித் திருமணஞ்செய்துகொள்ளல்வேண்டும்போதிய காரணங்காட்டிய காலங்கள் ஏனைய பகுதிவர்க்கங்களுக்கெல்லாம் ஒருங்கேநேரொப்ப நிகழுமாயினும் அஃதோடும் ஒட்டியொழுகுமாற்றிலும் எட்பிளவானும் பின்வாங்காதிருத்தலும் வேண்டும். நம்முடைய ஆலயங்களினுள் பூக்கட்டி வைத்துப் பார்த்துப் பொருந்தியதுணரும் மனவழுக்கற்றகாலமும் இதுவல்லவென்பதையும் நன்கு உணர்தல்வேண்டும்.

35. தங்களிருவருக்குள் ஒருவருக்கொருவர் சில வியவகாரங்களைப்பற்றி பரிசீலனைசெய்யுங்காலங்களில் ஏதோ சில காட்டுவர்க்கங்களைப்போன்று காமாதிபோகவிச்சையுட்சிக்கி தவறாதிருத்தல்வேண்டும்.

36. அஃதா எஞ்சி இருமனநேரொப்பின் களிப்பு மேலீட்டால் திருமணமென்று சொல்லும் எல்லைஞான்றின் வரையைக் கடந்து தாங்களிருவரும் சந்தித்துக்கொண்டஞான்றே காமசாந்த திருமணமுகூர்த்தஞான்றாகக்கருதி தவறுவீர்களாயின் ஏ சகோதரர்காள்! மிகுதியும் இன்சுவையான நுங்களின் அவ்வின்பத்தைத் தடுப்பது எல்லாம்வல்ல இறைவர்க்கேயெனினும் அஃதமுகாகமாட்டாவாகலின் அந்தக்கணமே உலகமானது மேலகீழாகப்பிறழினும் கிழக்கேயெழுகிற கதிரவன் மேற்கேயெழினும் 'தாங்களிருவருமே ஒருவருக்கொருவர் திருமணம் செய்துகொள்ளவேண்டுவது

"பதியாபவெட்டவெளி பாடுறுமா றீற்றுத்தம்
விதியொட்டிநிற்கும் மதி".

என்றாற்போல தங்களின் கருவிலமைப்பான விதியின் கடமையேயாதலால் தாங்களிருவருமே, ஒருவருக்கொருவர் நாமிருவருமே ஒருவருக்கொருவர் ஆதாரதாரமாக திருமணஞ்செய்துகொள்வோமாகவென பஞ்சபூதங்களையும் சாட்சியாகக்கோரி அறிவென்னும் கடவுளின்மீதாக ஆணையிட்டுக்கொள்ளுதலும்வேண்டும்.

37. பண்டைஞான்றில் சில மெய்ப்புலவர்களாலேயே சில நன்மையான வரன்முறைகளை வகுக்கப்பட்டிருக்கிறது என்பதையும், அதனாலேயே மனிதவர்க்கமாகத் தோற்றப்படுகிற யாம் அடையத்தகுந்த பயனிலைகள் இன்ன இன்ன என்பதையும், வரன்முறையென்பதை எட்பிளவேனுங்கவனியாமல் விலகியவனுதலானது சில மிருகவர்க்கங்களோடே யொப்பாகுமென்பதையும் நன்குணர்தலும்வேண்டும். அத்தன்மீர்! கற்பென்னும் வரம்பானது இருபகுதியாருக்கும் இன்றியமையாதுவேண்டும் உரித்தானதென்பதுதான் உத்தமசீலர்களின் கொள்கை. அதற்காக பண்டைக்காலத்தில் நிகழ்ந்த ஒருசிறிய சரிதையொன்று எமது ஞாபகத்திற்கு எட்டுகிறது. தலைகூர்ந்து சற்று கவனித்துக்கேண்மின்.

38. காமநகரமென்னும் பட்டினத்தை படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் ஆறுமுடையான் அரசருளேறு என எவ்வாற்றானும் பலவாயவுறுப்புக்களும் அமையப்பெற்று செங்கோலோச்சிவந்த மன்மதலதனனென்னும் மன்னவன் லீலாவதியென்

னும் தனது மனைவியோடும் இளவரசப்பட்டமேற்று வாழ்ந்துவந்த சிலஞான்றுகளுக்குள்ளே எதோ தெய்வவயத்தால் கொடும்பிணிகளாலே தனக்கு மரணகாலம்நேர்ந்து ஒருவிதமான துன்பத்துட்பட்டு உடலினைவிட்டு உயிர்நீங்காவண்ணம் வருந்திக்கொண்டிருக்குந்தருவாயில் தன் அமைச்சர்கண்முதலாய பல செல்வவந்தர்களும், கல்வியறிவிற்சிறந்த பல பெரியோர்களும் கூட்டங்கூட்டமாக ஒருங்கே துக்கமயமாகநின்று அரற்றிக்கொண்டிருப்பதன் நடுவாக முகிலைப்போன்ற கருங்கூந்தலானது தானே நெகிழ்ந்து தரையின்மோதவும், களங்கமற்ற பூரணமதியம்போன்ற வதனமானது முற்பகலொளியின்கட்பட்ட தாமரை இதழைப்போன்று வாடவும், கண்ணீரானது காவிரியாறு கரைபுரண்டாற்போல தாரைதாரையாக ஓடவும், கல்வியறிவுஞானமே சத்தாகப்பெற்ற தத்துவாதியறிவுமுதல் ஆன்மாவரையுடைத்தான மனிதவர்க்கத்தின் பசும்பொன்னையொத்த தன்சரீராதிபுறுப்புக்களெல்லாம் ஒருங்கே அசைவற்று அடியற்ற கொன்மரம்போன்று தானே சாய்ந்து கீழ்விழக்கூடிய நிலைமையிலும் தன்காண்மாட்டு நின்றுகொண்டிருந்த தம்மனைவியான லீலாவதியை எதோசற்று மயக்கந்தெளிந்து கண்ணுற்றான் ஓ பெண்பாவாய்! அடி என்காதற்கியைந்த கண்மணி! ஏ என் அருமைக்காதலி! அந்தோ! என்செய்வேன்! என் ஆவியானது இனி ஓர் அரைக்கணப்பொழுதும் ஈண்டுதரிக்காது போலுமன்றோ தெரிகிறது. எனது நாவானது மிகவும் குழறுகிறதே. ஈண்டும் ஒருகணம் செல்லுமாயின் என் நாவெழாவண்ணம் நின்றுவிடும்போலும் அந்தோ! என் அறிவானது மிகவும் மயங்குகிறது. இதோ ஒரு புட்பவிமானம் வந்து நெடுநேரமாக உட்கார்ந்துகொண்டிருக்கிறதே நினக்குத்தெரிகிறதோ? ஆயினும் ஓ என் ஆத்மரட்சகி! நின்னைவிட்டு யான் பிரியுங்காரணமாக இரண்டொரு சுருக்கமான வார்த்தைகளை நின்னுடன் பகரும்வரையிற்றான் எமதூதர்கள் என்னை ஈண்டு நிறுத்திக்கொண்டிருக்கிறார்கள்போலும்! அஃதாவது நமக்குச்சந்ததியென்னுஞ் செல்வமின்மையால் அரசாங்கமுறைகளையெல்லாம் ஒருங்கே நமதுவமைச்சர்முதலாய பல பெரியோராலும் நடுநிலைக்கோடின்றி நின்னையே பட்டத்தரசியாக்கி செங்கோன்முறைகளின் நூன்முறைச் சட்டப்படி எல்லாமொருங்கே எட்பிளவேனும் வரைதவறின்றி

போச்சப்படுவார்கள். அதனைப்பற்றித் தினைத்துணையேனும் நின் மனதில் கவலைவேண்டுவதில்லை. நிற்க, நீ! மிக்க இளம்பருவமாதலால் என்னோடும் துய்த்த காமாதி போகங்களைத் துய்த்தற்கு என்னைப்போன்றொருவாண்மகனை இரண்டாவது திருமணமாகமுடித்துக்கொள்ளவேண்டுவது இன்றியமையாததுவாகும். எந்தஞான்றும் பெண்பால்கள் திருமாங்கல்யதாரணியென்னும் பெயரினையிழத்தலும், தங்களின் கொழுநனிறந்துபோய்விட்டால் தாங்களுமிறந்துபோய்விட்ட தன்மையதாக சாகாப்பிணமென்ன பலவகைத்தான போகங்களையிழத்தலும் ஆய்ந்துநோக்குமிடத்து அநீதியேயாகலின் கண்மணி! அஃதினைப்பற்றி என்மனமானது மிகவும் வருந்துகிறது. ஆகலின் யாம் கூறும் கூற்றுக்களை வேதவாக்கியங்களாகக்கருதி இரண்டாவது திருமண முடித்துக்கொள்வாயாக. அதற்காகவேண்டும் மிக்கவுயர்ந்த வருங்காலவிஷய போதனையொன்றை நன்று யாம் கூறுவாம். அப்போதனையைக்கடந்து ஏனையவொரு புருஷனை தனக்குக்கொழுநனாக மதித்து நீ திருமண முடித்துக்கொள்வாயேல் அத்திருமணம் தனக்கு போதிய இன்ப போகங்களைத்தாராது. துன்பங்களையே பயக்கும். இஃது நின் நெஞ்சத்து கல்லின்மேலெழுத்தாகப் பதித்துக்கொள். அஃதாவது எனக்குச்செய்யவேண்டிய சடங்குகளையெல்லாம் ஒருங்கே முறையாக நடாத்தி பின்னர் சின்னாட்கழிந்தபின் நமது அரண்மனை மேன்மாடியின்மீது உதயகாலமுதற்கொண்டு ஒரு முகூர்த்தகாலவரை அங்குநின்று இதோ யான் தருகிற தூரதிருஷ்டிக் கண்ணாடியைவைத்து நான்குதிக்குகளையும் நோக்குவாயாயின் அநேக புருஷர்கள் கையிற்செம்புநீர்கொண்டு நமது நகரவெல்லைகளைக்கடந்து தங்களின் மலநீருபாதையை நிவர்த்தித்துக்கொள்ளும் பொருட்டு வெளியே செல்லுவார்கள். அதில் எந்தத்திக்குகளிலாவது மக்கள்காற்றுமே எட்டாத மிகுந்ததூரத்தை நோக்கி எந்தப்புருஷன் செல்லுகின்றனோ அன்னவன் யாவனாயிருப்பினும், அவனையேயழைப்பித்துவந்து நீ திருமணம் செய்துகொள்வாயாக. அவனே நின் அறிவு, கல்வி, அழகு முதலிய பல நெறிகளுக்கும் ஒப்பத்தகுந்தவனும், வரைகடந்த காமாதிபோக இன்பங்களைத் தரக்கூடியவனுமுள்ள மன்மதனுக்கொப்பான தகுந்த மணமகனான புருஷனாயிருப்பானெனக் கூறிமுடித்து இஃதல்லாமல்

யான் கூறவேண்டும் போதனைகள் ஒன்றுமில்லையெனக்கூறி, நங்குடைத்தான நீங்கள் எல்லீரும் பரம சுகமாகப் பன்னெடுங்காலம் வாழக்கடவதாக எனக்கூறிப் பின்னர் சற்றுவபர்ந்தமாத்திரையிலேயே அம்மன்னவன் பரலோகபதவியை அடைந்தான், பின்னர் லீலாவதியென்னும் அப்பெண்பாலானவள் தன்கொழுநனுக்குத் தான் செய்யவேண்டும் சடங்குகளையெல்லாம் ஒருங்கே நடாத்திப் பின் சிலநான்றுகழித்து அம்மன்னவன் வாக்கின்படி தங்களின் மேன்மாடியின்மீதினின்று அன்னவர் கூறியவாறு நோக்குங்கால் ஒன்றும் சரிவரத்தெரியவில்லை. இவ்விதம் இரண்டு மூன்று ஆண்டுகளாகக் காலுமோய்ந்துவிட்டன. கண்களும் பூத்துப்போய்விட்டன. மனமும் தளர்ந்து அயர்ந்தன. அந்தோ! நமது கொழுநன் காமப்பேய்கொண்ட கள்ளியென நினைத்தார்போலும்! ஓ பிராணநாதா! யானாக நும்பால் ஒன்றையும் வினவவில்லையே? இவ்விதம் பயித்தியகாரக்கோலமேன் செய்துவைத்துச்சென்றீர்? தற்காலவரை ஒரு புருஷரேனும் அவ்விதம் செல்லக்காணவில்லையேயெனத் துக்கித்துக்கொண்டிருக்கும் ஒருநாள் அவ்விதம் ஒரு புருஷனைச் செல்லக்கண்டனள். மீண்டும் அரைமுகூர்த்த காலம் நன்கு செவ்விதாகவும் நோக்கினாள். அன்னவர் உத்தரதிசையின்பால் அந்நகரவெல்லையைக்கடந்து வெகுதூரம் சென்று ஆங்கு ஓர் பெரியதிட்டின்மீது தம்கரத்திலிருந்த நீர்ச்செம்பை வைத்துவிட்டு அத்திட்டின் மறைவாக மலங்கழித்துக் கால்கழீஇ திரும்பினார். அஃதினைக்கண்ணுற்ற லீலாவதி தமது வேலையாட்களிருவரை உடனேயழைப்பித்து அன்னவரை நன்குதெரியும்படிகாட்டி வருகிறவைகலின் வைகலிற்றுங்களிருவருமெழுந்து அன்னவரின் பின்சென்று அரண்மனையிற்றங்களையழைத்துவரச்சொன்னார்களெனத்தெரிவித்து அழைத்துவரும்படி கட்டளையிட்டாள். அதன் பிரகாரம் அவ்விருவரும் மறுநாட்காலையிற்றுயிலைவிட்டெழுந்து வடக்கே செல்லுகிற வீதியாகச்சென்று அன்னவரையினங்கண்டு அவரின்பின்சென்று செல்ல அன்னவர்களிருவரும் பின்றொடர்ந்து வருவதைநோக்கி மீண்டும், மீண்டும் தான் வழக்கமாக மலங்கழிக்குமிடத்தைவிட்டு வெகுதூரஞ் செல்வதைத்தெரிந்த அவ்விருவரும் ஓகோ! யாம் எவ்வளவுதூரம் வந்துவிட்டோம் மீண்டுமிவர் ஆங்கேயே செல்லுகின்றாரே இதன்காரணமின்னதெனத் தெரிய

வேண்டுமென நினைத்து ஒரு கால்முகூர்த்தகாலம் அங்ஙனேநின்று ஆலோசித்துக்கொண்டிருக்குமளவில் அன்னவர்மீண்டுங்கொஞ்சத் தூரம் சென்றுவிட்டாராகையாலும், இவர்களிருவரும் பின்றொடர்ந்து வாராமையாலும் ஆங்கோர் கல்லின்மீது அந்நீர்ச்செம்பை வைத்துவிட்டு மறைவானவிடத்து மலநீருபாதையைக் கழித்தற்பொருட்டு உட்கார்ந்துகொண்டிருந்தார். அதன்வரையாகக் கண்ணுற்ற அவ்விருவருளொருவன் திடீரெனவோடி அக்கல்லின்மீதிருந்த நீர்ச்செம்பை தூக்கிக்கொண்டு ஒன்றும் எதிர்க்கூற்றின்றி இருவரும் அரண்மனையைநோக்கித் திரும்பிவிட்டார்கள். பின்னர் அவரெழுந்து நோக்குங்கால் நீர்ச்செம்பை இவ்விருவர்கள் எடுத்துச்செல்வதைக் கண்ணுற்று கூடியமட்டும் தம்மாலியன்றவரை கூச்சலிட்டுக் கூப்பிட்டும் பார்த்தார். இடையே ஒன்றும் நடவாமல் அவர்கள் மூவருமே முன்னும்பின்னுமாக அரண்மனைக்குச்சமீபமாக வந்துவிட்டார்கள். அம்மூவரின் வரவையுமெதிர் நோக்கிநின்ற லீலாவதி நமது கொழுநனின்வாக்கு பிரம்மனுடைய வாக்குப்போலும்! எத்துணைகருணையோடும் இவ்வாற்றினை நமக்குக்காட்டிச்சென்றனர்! மூன்றுகாலங்களையுமுணரத்தகுந்த பிரம்மஞானியாயிருந்தனர்போலும்! ஆஹா! நாம்பெற்ற பாக்கியமே மிக மேலான பாக்கியம்! அந்தோ! அன்னவரின் சரீரத்தை நோக்குங்கால் மன்மதன் என்னுமோர் புருஷன் வேறு எங்கேனுமுளனோ! அன்னவர் எவ்வகுப்பினையுடையவரோ! அன்னவரின் நடையுடை பாவனையழகு முதலியவற்றிற்கு ஈடுகொடுத்துக்கூறற்கு தேவருலகத்தும் ஒரு புருஷனை பிரமன் படைத்துள்ளானோவென காமப்பித்தானது சிரத்துக்கேறி தானே தானாகப் புலம்பிக்கொண்டு மேன்மாடியைவிட்டுக் கீழேவந்து தமது சித்திரக்கூடத்திலமர்ந்தனள். அம்மூவரும் அரண்மனைவந்து சேர்ந்தார்கள். அவ்விருவருள் ஒருவன் ஏ அம்மே! இதோ நீர்ச்செம்பு இவ்வாறெடுத்துக்கொண்டுவாராதவரை இவரீண்டு வரமாட்டார்போலும் தெரிந்தது. அதன்காரணமாகத்தான் அன்னவரை இவ்வாறழைத்து வந்தோமெனப் பகரவும் லீலாவதியென்னும் அப்பட்டினத்தின் பட்டத்தரசியானவள் அன்னவர் வதனத்தை நோக்கி ஓ ஐயன்மீர்!

இதன்கண் அமருகவெனத் தாமெழுந்தனள். அதனைக்கண்ணுற்ற அன்னவர் ஓ பெண்பாவாய்! ஓ அம்மணி! யான் நித்தியானுட்டான கருமங்களையெல்லாம் ஒருவாறு முடியாதிருப்பினும் இன்னும் கால்கழீஇயுமில்லையெனக் கூறினர், அதனைக்கேட்ட லீலாவதி மிக்ககோபங்கொண்டு அவ்விருவரையும்பற்றி பின்னர் விசாரணை செய்வோம். அடோ மாணிக்கம்! ஒரு பொற்செம்பில் நீர் கொண்டுவந்துவை. ஓ ஐயன்மீர்! எடுத்துச்செல்லுங்கள். தங்களின் நித்தியாநுட்டான கருமங்களையெல்லாம் முடித்துக்கொண்டு ஈண்டுற்றுச் சிறுமியைச் சற்று நோக்குக எனவும் கூறினள். அன்னவர் ஓ பெண்பாவாய்! எனது நீர்ச்செம்பையே தருதல்வேண்டும் இன்றி ஏனைய இரத்தினத்திழைவிழைத்த செம்பேயெனினும் அதில் நீர்வைத்து யான் கால்கழீஇ கொள்கிறதில்லையெனவும், நின்னோடு எஞ்சிய வார்த்தையாடற்குப் போதிய பொழுதில்லையெனவும், காலதாமதமின்றி எனது செம்பையே தந்து அனுப்புவாயெனவும், நின்னை இந்நகரத்தின் பட்டத்தரசியென்பது எனக்கு நன்கு விளங்குகிறதெனவும், நின்னெஞ்சத்துத் தோற்றப்படுகிற கருத்துக்களொருங்கும் எனது நெஞ்சத்தும் நன்கு விளங்குகிறதெனவும், சற்று கோபக்குறியோடும் கூறினர். அதனையோர்ந்த லீலாவதி இன்னவரின் கோபாக்கினைக்கு யாம் தகுதியன்றென்னும் அறிவினை மேற்கொண்டு சுருங்கிய வினாக்களையே வினவுதல் வேண்டுமென்றெண்ணி ஓ ஐயன்மீர்! நுமது பித்தளைச் செம்பை அல்லது வேறே இரத்தினத்திழைவிழைத்தசெம்பேயெனினும் அதனில் நீர்வைத்து கால்கழீஇ கொள்கிறதில்லையென்றும் நீவிர் கொண்டிருக்கும் வைராக்கியச்சட்டத்திற்கு காரணம் யாது? ஓ மன்மணி! அரசாட்சி நின்னுடையதாயினும் இம்மாதிரியநீதியானது எவர்க்கேனும் நீதியாகுமோ? எனக்குத்தெரிந்த யாதொரு காரணமுமின்றி வழியே மலநீருபாதைக்குட்பட்டு அதனைக்கழித்தற்பொருட்டு சென்ற ஒரு புருஷனின் நீர்ச்செம்பையும் பறித்து வைத்துக்கொண்டும் இத்துணை தூரம் அனாவசியமான வினாக்களுமா வினவுதல்வேண்டும்? அடா இஃதென்ன புதுமை! இதுதான் செங்கோன்முறைமையோ? யான் காரணங்கூறித்தீரவேண்டுவதே சட்டம்போலும்! காலமும் உச்சிக்கு வரப்போகிறதே! ஒருவாறு சிறுகக்கூறுவாம் கேண்மின். யான் கொண்டியலும் வைராச்சட்-

டத்திற்கு காரணமிதுவெனக் கூறப்புகின் நின்போலிகளுக்கு மிகுந்த நகைப்பையே தருமென எண்ணுகிறேன். ஆயினும் இந்த ஞாலமானது எந்நாளும் வான்முறையென்னுஞ் சட்டத்தினுள்ளே அடங்கியியலவேண்டும் இயல்பினையுடையதுதான் என்னும் உண்மையைத்தெரிந்த மிக்கஉயர்தரமான மேலவர்களுக்கும், ஆண்வர்க்கமேனும் பெண்வர்க்கமேனும் மானபிமானமென்னும் வீரத்தன்மையோடு பொருந்திய அறிவுடையவர்களுக்கும் யான் கொண்டியலும் வைரத்தன்மையானது நினைக்கும்போழ்தெல்லாம் மிக்க களிப்பையும் அளவுகடந்த வீரத்தன்மையையுமே விளைவிக்குமென்பதிற் சந்தேகமிராது. ஓ பெண்கொடி! யான் பிறந்து தற்காலவரை முப்பஃதாண்டுகள் கழிந்தன. என் பெயர் கருணாகரக் கமலக்கண்ணனெனக் கூறுவார்கள். என்னுடைய சுதேசமானது உத்தரதிசையின்பால் ஓர் சிற்றூராகும். தற்காலம் யாத்திரைவாசியாக இருக்கிறேன். நிற்க, நமது செந்தமிழ் நாட்டின்கண்ணும் கற்பின் பாகுபாடுகளைப்பற்றி அறிவுடையவர்களாலே விசேடித்துக் கூறுங்கால் அக்கற்பினின்றுமெட்டுணையேனும் வழுவாது மிகச்சிறந்த நல்லொழுக்கங்களெல்லாமொருங்கே நிறையப்பெற்று பெரும்புகழெய்திய மாதசிரோமணி அருந்ததி அம்மையார் ஒருவரென்றேபுகழப்படுகிறார்கள். எனக்கோ அம்மாதசிரோமணியைப்பற்றி யான் கற்றுக்கொண்ட சில பெரிய நூற்களாலேயுங்கூட தெரியவாராது. ஓ மன்மணி! கல்வி, அறிவு, அழகு, பொறை, குணம், கருணை முதலாய பலநல்லொழுக்கங்களும் இயல்பாகவேவாய்ந்த ஓர்பேரிளம்பருவமான பெண்பாலானவள் என்னை ஈரொன்பான்வயதில் "பல்லாரறியப் பறையறைந்து நாட்கேட்டுக் கல்யாணம் செய்து கடிப்புக்க" என்றாற்போலத் திருமணமென்று சொல்லப்படுகிற வான்முறையாலே தினைத்துணையாலும் கோடின்றி தனக்கு இன்றியமையாது வேண்டும் கொழுநனைப் பெற்றாள். யானும் அன்னவளை மனைவியாகப்பெற்றேன். அன்னவளின் கற்புமுதலாய பலநற்குணங்களைப்பற்றியும், கண்டு யான் கூறவேண்டுமாயின் இந்த நிலவுலகின்கண் எந்த மாதினை ஒப்பிட்டுக்கூறுவேன். அந்தோ! என்னெஞ்சமானது தாமரைத்தளிரின் மேனுற்ற நீரைப்போன்றன்றோ மிகவும் தயங்குகிறது. ஏதோ

ஓரைந்தாறு ஆண்டுகளாக முன்னம் யான் செய்த நல்வினைப்பயனால் அன்னவளெனக்கு மனையாளாகித் தந்துகொண்டிருந்த சரீராதியின்ப போகங்களையுள்ளுங்கால் அன்னவளோடே இந்தப்பாழான சரீரத்தையும் தீயுழியுய்த்துவிடுதற்கானஉடன்கட்டையேறுதலென்னும் வைராக்குணத்தினையே உறுதியாக்கி அங்ஙனே உயிர்நீத்திருத்தல்வேண்டுவதொன்றேதான் தகுதியாகும். அஃதல்லாமலீண்டுட்கி வருந்துவனவொருங்கும் ஏழையறிவின்தன்மையேயாகும். அவ்வாறு தாணுந்துய்த்துக்கொண்டிருந்த எனது ஆத்மசாட்சியான அப்பெண்பாலொருத்திக்கே உரித்தானவிந்தச்சரீரத்தை நின்னைப்போலேனையவொரு பெண்பாலேறெடுத்துநோக்கவும், சரீராதியங்கங்களைக்கண்டு தங்களின் மனமென்னும் காந்தத்தாலே இழுக்கச்செய்யவும் விடுத்த எனது அறிவின் தன்மையை என்னவெனக்கூறுவேன். ஓ மன்மணி! ஏ அறிவிற்சிறந்த அரசி! நின் அரசியற் சட்டங்கட்குட்பட்டு குடிகளொருங்கும் இயலவேண்டுந் தன்மையையுடையதாகலின்யானும் நின்னோடு இத்துணைதூரமீண்டும் நாவாடற்கிடமாயிற்று. எண்ணிநோக்குங்கால் முன்வினைப்பயனென்றேதான் மொழிதல்வேண்டும். அநேகமாயிந்த சரீராதியுறுப்புகளொருங்கேயும் ஏனைய பெண்பால்கள் நோக்கற்கிடமாற்றுது ஓம்பிக்கொள்வது மிகக்கடினமாயினும் காமாதிபோகங்களைத் துய்த்தற்கு முதற்காரணமாயுள்ள ஆண்குறி, பெண்குறி என சொல்லாமற் சொல்லப்படுகிற சில விரகஸ்யமான உறுப்புக்களையும், அவைகளுடைத்தான இடங்களையுமட்டுமாவது கட்டாயமாக ஓம்பிக்கொள்ளத்தான் வேண்டுமென்பது சில மிருகவர்க்கங்களைப்போன்ற காட்டுமனிதர்களுக்குங்கூட இன்றியமையாததுவாகுமென நன்குதெரியவரும். இவ்வாறு நிற்க, ஓ மன்மணி! யான் இந்த ஞாலத்தில் தோற்றப்படுகிற எந்தப்பிறவிகளுக்கும் உயர்தரமான மனிதவர்க்கத்திலே தோற்றியும், சில நுட்பமான நூற்களிலே ஆராய்ச்சியுடையவனாக இருந்தும் சில ஞானமற்ற காட்டுவர்க்கங்களைப்போன்று நாடோறும் ஒவ்வொருசெம்புகளில் நீர்வைத்து அவ்வொவ்வொரு செம்புகளும் என்னுடைய ஆண்குறியைநோக்க யான் கால்கழீஇக்கொள்ளும் அறிவினையுடையவனாவேனோ, அங்ஙனம் என்னுடைய மானபிமானத்தையும் இழப்பேனோ, நிற்க எனது மனையவளிருக்குங் காலத்தும் இந்தப்பித்தனைச்செம்பிலே

தான் நீர்வைத்து கால்கழீஇக் கொள்ளுகிறதேயல்லாமல் வேறு எந்தச்செம்புகளிலேனும், எந்த நதிக்கரையோரத்திலேனும், எந்தக்குளக்கரையோரத்திலேனும் எந்தக் குட்டங்களிலேனும் யான் கால்கழீஇக்கொண்டதில்லை. என் மனையாளையின்றி இந்தப்பித்தளைச்செம்பொன்றிற்குத்தான் என் மானம் அழிந்தது. இஃதுண்மை. இச்செம்பொழியுமேல் யான் கால்கழீஇக்கொள்ளும் வழக்கத்தை நிறுத்திவிடுவேம். இதனையல்லாமல் இனியொரு இரட்டைக்கொம்புமுளைத்தசெம்பினைககனமார்க்கமாய் கடவுளே அனுப்பினும் அதனை யான் வேண்டேன். என்னுடைய மானம் அழியில் உயிர் நீப்பேன் ஆகலின் இந்தச்செம்பின்றி எனக்கு வேறு எந்த வைரச்செம்புகளேயெனினும் நீ தரில் யான் வேண்டிலேன். நின் சிரமிசைபுனையும் மகுடத்தை என் சிரமிசைபுனையினும், ஏனையவொரு செம்பில் நீர்வைத்துகால்கழீஇக்கொள்ள வல்லனல்லேன். எனக்கு என்னைக்காத்துக்கொள்ளவதே சிறந்த சுவர்க்காதிபோகமாகும். யான் கொண்டிருக்கும் வைரச்சட்டத்திற்கு காரணம் வேறொன்றுமில்லை. ஆகலின் எனது செம்பினைத்தந்து உடனே விடையளிப்பாயாக. மேலும் என்னுடைய நித்தியாநுட்டான கருமங்கள் இத்துணைதூரம் காலங்கடந்ததோடு இன்றைய நாள் ஒருங்குங்கொன்னேகழியினும் நினக்காகவேண்டுஞ் சில நன்மொழிகளை மிகக்கருணையோடும் பகர்ந்துவிட்டே செல்லுவேன். ஓ மன்மணி! கொஞ்சங்கவனித்துக்கேண்மின். என்னுடைய சரீரமானது எத்துணையோதூரம் வனப்புவாய்ந்தனவாய் காணப்பெறுவதற்கும், நான் கொண்டியலும் பலவிதமான வைராக்கிய சட்டங்களெல்லாம் ஒருங்கேநிலைத்துநிற்கவும், என்னையான் இன்னனெனத் தெரிந்துகொள்ளற்கு ஏதுவாயிருந்ததும் கவனிக்குமிடத்து எமதிடம் காமக்கேடில்லாமையேயாகும். மேலும்,

உள்ளினுஞ்சுட்டிடுமுணருங்கேள்வியிற்
கொள்ளினுஞ்சுட்டிடுங்குறுகிமற்றதைத்
தள்ளினுஞ்சுட்டிடுந்தன்மையீதினாற்
கள்ளினுங்கொடியதுகாமத்தீயதே.

சுட்டுறுபிறவியும்வினைகள்யாவையும்
காட்டியதினையதோர்காமமாதலின்
வாட்டமில்புந்தியான்மற்றந்நோயினை
விட்டனரல்லரோவீடுசேர்ந்துளார்.

நெஞ்சினுநினைப்பரோநினைந்துளார்தமை
யெஞ்சியதுயரிடையீண்டையுய்த்துமேல்
விஞ்சியபவக்கடல்வீழ்த்துமாதலா
னஞ்சினுந்தீயதுநலமில்காமமே. கந்தபுராணம்.

காமமேகொலைகட்கெல்லாங்காரணங்கண்ணோடாத
காமமேகளவுக்கெல்லாங்காரணங்கூற்றமஞ்சுங்
காமமேகள்ளுண்டற்குங்காரணமாதலாலே
காமமேநரகபூமிகாணியாக்கொடுப்பதென்றான். திருவிளையாடல்.

கொடுங்கனன்மதுவிடங்குறுகினுண்டிடிற்
சுடுங்கருத்தழித்திடுந்தொலைவுசெய்யுமால்
கடுந்துயர்க்காமமோகருதினன்னசெய்
திடும்பினுந்தொடர்ந்துவெந்நிரயத்திட்டிடும். திருக்கூவப்புராணம்.

காமமேபிறவிவித்தாகுங்கண்ணிலாக்
காமமேசிவனடிக்கலப்புநீக்கிடுங்
காமமே யவத்தைபிற்கலக்கச்செய்திடுங்
காமமேநரகெலாங்காணியாக்குமே. காசிரகசியம்.

பாவமும்பழியுநல்கும்பல்வகைப்புகழறங்கள்
யாவையுமழிக்குமெய்துமின்பமுமதனுமல்லது
நோவுநன்மரபுஞ்செய்யுநோன்புநல்லொழுக்கமேன்மை
சாவுமெண்ணுறுமனிற்குந்தயங்குபுன்காமமென்பார். பி-ஆ.

கொலையஞ்சார்பொய்நாணார்மானமுமோம்பார்
களவென்றேவேனையுஞ்செய்வார்—பழியோடு
பாவமிஃதென்னார்பிறிதுமற்றென்செய்வார்
காமங்கதுவப்பட்டார். நீதிநெறிவிளக்கம்.

திறந்திறம்பியகாமச்செருக்கினன்
மறந்துதத்தமதியின்மயங்கின
பிறந்திறந்திழிந்தேறுவதேயலா
லறந்திறம்பினாருளராயினர். இராமாயணம்.

முடிபொருளுணர்ந்தோர்முதுநீருலகிற்
கடியப்பட்டனவைந்துளவவற்றிற்
கள்ளும்பொய்யுங்களவுங்கொலையுந்
தள்ளாதாகுங்காமந்தம்பா
லாங்கதுகடிந்தோரல்லவைகடிந்தோரென
நீங்கினரன்றேநிறைதவமாக்க
ணீங்காரன்றேநீணிலவேந்தே
தாங்காநரகந்தன்னிடையுழப்போர்.

சிறையுமுண்டோசெழும்புனன்மிக்குழீஇ
னிறையுமுண்டோகாமங்காழ்கொளின். மணிமேகலை.

அம்புமழலுமவிர்கதிர்ஞாயிறும்
வெம்பிச்சுடினும்புறஞ்சுடும்—வெம்பிக்
கவற்றிமனத்தைச்சுடுதலாற்காம
மவற்றினுமஞ்சப்படும். நாலடியார்.

தூபமணித்திங்கள்சுடுவதெனப்பித்தேற்று
மாபமடவார்மயக்கொழிவதென்றுகோ. தாயுமானவர்.

என மிகத்துரிதமாய்க்கூறிமுடித்தார். உடனே அங்ஙனம் சித்தி ரப்பாவையைப்போன்று செவிகொடுத்திருந்த லீலாவதியானவள் அன்னவரின் திருவடிகளிலே அடிபற்றிகொண்மாமாமன்ன சாய்ந் துவிழ்ந்து அஞ்சலிசெய்து அடியவண்மீதுற்ற பிழைகளொருங் கையும் ஏ ஆண்டவா! பொறைசெய்தல்வேண்டுமெனப் பிரார்த் தித்து அவர்தம்செம்மையுங்கொடுத்து, சிலநிரவியங்களும் அவர்க் கேற்றி ஓ பெண்மீர்! செல்லுக என அனுப்பிவிட்டு ஓ தெய்வமே! இப்படிப்பட்ட கற்புடை மாதரும் இஞ்ஞாலத்தில் உளராதல்பற் றியன்றோ எல்லாம் வல்ல பஞ்சமா பெரியபூதங்களும் கதிரவன் மதியம்முதலிய ஏனைய கருவிகளும் தங்கள் தங்களின் இயற்கை நிலைமையின்றும் எட்டுணையும் தவறின்றி இயங்குகிறது. இத்த கைய பெரியோரை எம்மைத் திருமணம் செய்துகொள்ளப் பெருந்தும் மாத்ரியற்கை புடைத்துமையரோ என அளவுடைத் தாணமெய்தி காமாதிபோகங்களையே முற்றத்துறந்துமமறந்தனராகி நானது செங்கோன்முறைதனை யொழுங்காக நடத்தவேண்டுமாற்றி

லும், பலவித ஞானநூற்களை பயிலவேண்டுமாற்றிலும் முறையே செல்லத்தொடங்கினள்.

39. ஆகவே ஆண்மக்களுக்கும் கற்பியலென்று சொல்லப் படுகிற பலவிதமான நன்னெறிகளும் இன்றியமையாதுவேண்டு மென்பதை நன்கு செவ்வையாய் விளக்கிக்காட்டுகிற பண்டைக்கா லத்துச் சரிதைகள் அநேகமிருந்தும் அவைகளையெல்லாம் ஒருங் கே வரன்முறையாகக் கற்றுக்கொள்ளாத சில காட்டுமாட்டு வர்க் கங்கள் யாங்களாண்மக்கள் சிம்மக்குட்டியன்றோ, கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருஷன் அன்றோ, சாண்பிள்ளையாயி னும் ஆண்பிள்ளையன்றோ, யாங்கள் தாயைப் புணர்ந்தாலும் என்? தங்கை, தமக்கையைப் புணர்ந்தாலும் என்? யாங்கள் எத்தனை தாரம் திரும்பத்திரும்பத் திருமணம் செய்துகொண்டாலும் என்? யாங்கள் விடிய விடிய வேசையரில்லத்தையே காத்துக்கொண்டி ருந்தாலும் என்? பெண்மக்கள்தான் எந்த ஞான்றும் ஓர் நிறையி லே நிற்றல்வேண்டுமென்றும், கற்புநிலையென்பது அன்னவர்களுக் குமட்டுந்தான் முக்கியசாதனமாகவேண்டும் உரித்தென்றும், எந்த ஞான்றும் அன்னவர்கள் ஆண்மக்களைப்போன்று சுதந்தரமுடை யவர்களாகார்களென்றும், அப்படிச் சுதந்தரமுடையவர்களாகச் செய்தற்கு வேதங்களாலுமே புகழப்படுகிற மனுதர்மமுதலாய சில பெரிய நூற்களினுங்கூட விதியில்லையென்றும், பெண்களுக்குச் சகல சுதந்தரங்களையும் கொடுத்து மேனாட்டு நாகரீகங்களென புக ழேற்றுவந்த ஐரோப்பாக் கண்டமானது அன்னவர்களாமேல் எவ் வாறு தப்புவோம், அன்னவர்களை எவ்வாறு அடக்குவோமென சுமார் எழுபட்டாண்டுகளுக்கு முன்னர் பரக்கப்பரக்க விழித்துக் கொண்டிருந்ததையும் கண்டீர்களோ என்றும், அப்பெண் சிம்மங் களின்ற ஆண்சிம்மக்குட்டிகள்தாமே யாமென்னும் பேரறிவாண் மையை இழந்து கூறுகிறார்கள். அந்தோ பரிதாபம்! அன்னவர் கள் உலக வியவகாரங்களினும், பலதேய வர்த்தமானங்களினும், பலதேய சஞ்சாரங்களினும், பலவிதமான இன்பதுன்பங்களினும், வெல்லக்கட்டியென்றால் தித்திக்குமென்பதைப்போன்றும், சில்காய் கறிகளொன்றால் உண்ணற்கினிய பதார்த்தம் சமைத்திற்காமென் றாங்கு அவைதைப்போன்று சில புத்தகவாசிலாக படித்திருந்தவர்க

போகுமாறிருக்குஞ் சமயத்தில், இன்னுமதிகமான பிரியத்துடன் ஆதரிப்பதற்குப்பதிலாய்ப், பரிதாபமில்லாமடியோடே நீக்கிவிட்டு அவர்களுடைய திரமான நகைகளையும் சேலைகளையும் பிடுங்கிக் கொண்டும், அவர்களுடைய ஆவிக்குச்சமானமாய்ப் பாவிக்கப்பட்ட தலைமயிரை வெழுமெனச் சிரைத்துவிட்டும், ஒருவேளைச் சோறும் ஒருவேளை பலகாரமுமாய்ச்செய்தும்பட்டினிகளுக்கு உடன்படுத்தியும், அவர்களைச்சர்வசவுக்கியங்களுக்கும் தொலைவிட்டுச்சொல்லமுடியாத துன்பங்களுக்காளாக்குகிறார்கள். ஐயோ! இது எவ்வளவு குரூரம்! எவ்வளவு அநியாயம்! அவர்களுடைய நடவடிக்கை குற்றமற்றிருக்கவேண்டுமென்று அவர்களை மேன்மேலும் அதிகமான நிர்ப்பந்தங்கட்குட்படுத்துகிறார்கள். இதுவேயன்றி, அவர்களை மகா பாதகிகளாய்ப் பாவித்துச், சுபகாரியங்களின் சோலிக்கு வரவொட்டாமல் தடுத்து அவர்களுடைய முகங்களைப் பார்த்தமாத்திரத்திலேயே அமங்கலம் சம்பவிக்குமென்று, அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தத்தரித்திரமுண்டையை மணந்து தங்கமான புருஷன் யமலோகஞ்சேர்ந்தானென்றும் பலர் நிந்திக்கிறார்கள். எங்கேயோ ஓரோரிடத்தில்தவிரப், பாலவிதவைகளனைவரும் இப்படிப்பட்ட பொறுக்கரிய கொடுநிலைமையில் போடப்பட்டு, இக்கேடுகெட்ட பிழைப்பைக்காட்டிலும் மரணமே நலமென்று கருதவேண்டிய அகத்தியமுள்ளவர்களாயிருக்கிறார்கள்.

46. கேளுங்கள்—நமது தேசத்தில்விதவைகளுக்காகக் கபிலஸ்மிருதியில் விதிக்கப்பட்டிருக்கும் கடமைகள். சுலோகத்தின் பொருளை ஏற்றக்குறைவுகளின்றி உள்ளதுள்ளதுபோல வெளியிடுகிறோம். "நாயகன் காலஞ்சென்றுவிட்ட பெண்சாதி தயிர் குடிக்கக்கூடாது; பால் குடிக்கக்கூடாது; சுகந்தப்பொருள்களை யண்டக்கூடாது; நல்லசேலை யுடுக்கக்கூடாது; அலங்காரம் பண்ணிக்கொள்ளக்கூடாது; பாட்டுக்கேட்கக்கூடாது; தாம்பூலம் போட்டுக்கொள்ளக்கூடாது; மையிட்டுக்கொள்ளக்கூடாது; பூக்களின் வாடையிலேயே நிற்கக்கூடாது; கட்டில்முதலிய சுகசைய்யைகளின்மேல் படுக்கக்கூடாது; உடம்புக்கு நலுங்கு இட்டுக்கொள்ளக்கூடாது; எண்ணெய் தேய்த்துக்கொண்டு முழுகக்கூடாது; வெந்நீரில் குளிக்கக்கூடாது; பல்லக்கு வண்டிமுதலியவற்றின்மேல் ஏறக்கூடாது; இப்படிப்பட்ட இதரமான பதார்த்தங்களெவற்றினையும் இச்சிக்கக்கூடாது; ஒருவர்மேல் தயைகாட்டக்கூடாது; கோபப்படக்கூடாது; புண்ணியகாரியங்களைச் செய்யக்கூடாது; சுபகாரியங்களைச் செய்யக்கூடாது; இந்தக் காரியங்களில் எவற்றைச்செய்தாலும் தாய்தந்தையர்களின் கையினாலும் உற்றார் சுற்றார் கையினாலும் அடிபடவேண்டியது; உப்பு தின்னக்கூடாது; புளி தின்னக்கூடாது; தித்திப்பு தின்னக்கூடாது; அறுபதுவயதுவரும்வரைக்கும் ஒருவேளை பகுதி வயிற்றுக்கே யுண்ணவேண்டியது." இவ்விதப்பட்ட விதிகளை நியமிப்பதைக்காட்டிலும், ஒருதரமாய் அவர்களுடைய தலைகளைத் தறித்துப்போடவேண்டுமென்று விதிப்பதே நலமாயிருக்கும்.

47. இவ்விதக் குரூரகொடுமைக்குக் காரணம் நம்மவர்களுடைய அவிவேகத்தைத்தவிர மற்றேதும் தெரியவராது. விதந்துக்களுக்கு விவாகஞ்செய்யக்கூடாதென்னும் கெட்ட ஆசாரத்தை எவ்வாறோ ஒருவாறு தொடர்ந்துவந்து; அவர்களைத் தீயவொழுக்கத்தினின்று விலக்குவதற்காக இப்படிப்பட்ட நிர்ப்பந்தங்களை நியமித்திருக்கிறார்கள். ஆயினும் இது எவ்வளவு பைத்தியகாரத்தனம்! காமசாந்திக்காக ஏற்பட்டிருக்கும் நியாயவழியாகிய விவாகபந்தத்தை விலக்கிவிட்டு, நமது சிறு கைம்பெண்களை எவ்விதப்பட்ட கட்டுத்திட்டத்தில் வைத்தாலும், அவர்களை எவ்விதப்பட்ட துன்பங்கட்கு உட்படுத்தியபோதிலும், அவர்களுடைய சௌந்தரியத்தை எவ்வித வுபாயங்களினால் கெடுத்துவிட்டாலும், அவர்களுடைய சரீரங்களை எவ்வளவு இளைக்கச்செய்தாலும், எத்துணை நற்போதனைகள் செய்தபோதிலும், அவர்களைச் சரிவரக்காப்பாற்றிக்கொள்வது என்றைக்கும் சாத்தியமாகாது. சர்வ இந்திரிய சேஷ்டைகளையும் துறந்துவிட்டு அடவிகளில் கந்தமூலபலங்களைப் புசித்துத் தலைகீழாய்த் தவம்புரியும் மகாமுனிகள்கூட, அப்பொழுதப்பொழுது காமவிகாரத்தினால் விவேகத்தைத் துறந்து ஆகாத காரியங்களைச்செய்து அவஸ்தைப்படுகிறார்கள். அப்படியிருக்க உப்பும் புளியும் காரமும் சாப்பிட்டு, எங்குகண்டாலும் சமுசாரசுகங்களைக்கண்ணாரக்கண்டு, யௌவனப்பருவமுள்ளவர்களாகிய சுந்தரபுருஷர்களினடுவிலும், மாயோபாயங்களைத்தொடுக்கும் தீயவர்களடுவிலும் திரிந்துகொண்டு, நல்லயௌவனதசையிலிருக்கும் இளங்கைம்பெண்டுகளுக்கு இந்திரிய நிக்கிரகணமெவ்வாறு சாத்தியப்

டும்? சாத்தியப்படாமதென்பதற்குத் திருஷ்டாந்தம் சிற்றமங்கலைகளுளனேகரது நடவடிக்கையேயாகும். மன்மதனால் வருத்தப்பட்டு விபசாரநடத்தையில்வீழ்ந்து எவ்வுபாயத்தினாலாவது சோரபுருஷர்களுடன் புணர்ந்து; அவர்கள் அனேகமான அனர்த்தங்களை யுண்டுபண்ணுகிறார்கள். இது அனைவருக்கும் தெரிந்த இரகசியமேயல்லவா?

48. ஆசாரியர்களென்றும், சாஸ்திரிகளென்றும், சோதிடர்களென்றும், வேதாந்திகளென்றும், விதைவைப்பெண்களிடத்துச் சேர்வார் அனேகர், அவர்களுக்குக் காமோபதேசங்களைச் செய்து அவர்களுக்குக் காமத்தைத்தீர்த்துத்தாமும் திருப்தியடைகிறார்கள், அனேககுடும்பங்களில் அமங்கலைகள் வீட்டுவேலைக்காரர்களுக்கும் சமையல்பிராமணர்களுக்கும் ஐக்கியமாகிறார்கள். கொஞ்சம் ஸ்திதி கிடைத்துச் சுதந்தரம்பெற்ற கைம்பெண்டுகள், தங்களுடைய நிலவள விவகாரங்களைச் சரிவரப்பார்த்துக்கொள்வதற்காக யாரையாவது காரியஸ்தர்களை நியமித்துக்கொண்டு, அவர்களுடன்கூடிப் பகிரங்கமாய் மனம்போனபடிச் சஞ்சரித்துக் களிக்கிறார்கள். வீட்டிலுள்ள நிர்ப்பந்தங்களைப் பொறுக்கச் சக்தியற்றவர்களாய் அனேகர் தற்கொலைசெய்துகொள்ளத் துணிகிறார்கள். சிலர் தங்களுக்கெதிர்ப்பட்ட எந்தத்தட்டானையோ, வண்ணானையோ, அம்பட்டனையோ, துலுக்கனையோ, பட்டுநூல்காரனையோபிடித்துக்கொண்டு விட்டுவிட்டோடிப்போகிறார்கள். மேலும் திருட்டுவிபசாரத்தினால் கருத்தரிக்கும் பட்சத்தில், அனேகர் மருந்துகள் சாப்பிட்டுக் கருவழித்துக்கொள்ளுகிறார்கள். அப்படிப்பட்ட மருந்துகள் விகற்பமாய் முடிவதினால் சிலர் உயிர்களையே யிழந்துவிடுகிறார்கள், சிலர் சிசுவத்திகளைச் செய்கிறார்கள், சிலர் தாம்பெற்ற பிள்ளைகளைக் கண்டு கண்டு கையினால் கொல்ல மனமொப்பாமல், குளக்கரைமீதிலோ, ஸ்நானமண்டபங்களிலோ, மரத்தடிகளிலோ, சாவடித்திண்ணைகளின்மேலோ படுக்கவைத்துப்போகிறார்கள். இன்னுஞ் சிலர் தேவடியாட்களுக்கோ, வண்ணார்களுக்கோ, பரியாரிகளுக்கோ, பறையர்களுக்கோ, தட்சிணையோடுகூடத் தானஞ்செய்கிறார்கள். இதையெல்லாம் நினைத்தமாத்திரத்திலே, எப்படிப்பட்டவருக்கும் உரோமம் சிலிர்க்கின்றது.

49. ஐயையோ! நமது தேசமுழுவதும் விபசாரத்துடனும், கள்ளக்கணவர்களுடனும், கூட்டிக்கொடுப்பவர்களுடனும், பிண்டஹத்தி செய்வோர்களுடனும், சிசுவத்தி செய்வோர்களுடனும் நிறைந்து அழுகி ஊழ்த்துப்போகின்றது. தகுந்த பரிகாரத்தைச் செய்யாமல் அசட்டையாயிருப்பதினால் நல்லவிடங்கள்கூட மண்ணடித்துக்கொண்டு போகின்றன. விபசார நடவடிக்கைகளில் தலையிட்டுக்கொண்ட முண்டைச்சிகளின் தோழமையினால் கணவர்களுடன் இல்லற நடத்திவரும் இல்லாட்கள்கூட விபசாரச்சுவைகண்டு பொல்லாதவர்களாய் விடுகிறார்கள். தான் கெட்டதுமல்லாமல் சந்தனபுஷ்கரணியுங் கெடுத்தானென்னும் உலகநீதியானது வீண்போகாதல்லவா! ஏ மூடசனங்களே! ஏ கல்விபயின்ற சான்றோர்களே! சாஸ்திரங்களையுணர்ந்த சாஸ்திரோத்தமர்களே! தேசாபிமானிகளே! இவ்விதத் தீநிலைமையைக்கண்டு எவ்வாறு மனஞ்சகிக்கிறீர்கள்? எவ்வாறு உங்கள் வீடுகளில்நடக்கும் அவமானகரமான காரியங்களைக்கண்டும், காணாதவர்களைப்போலச்சஞ்சரித்துக்கொண்டு அபிமானத்தை விலக்கிவிடுகிறீர்கள்? உங்கள் பெண்களுக்கும், மாட்டுப்பெண்களுக்கும், தங்கை தமக்கைகளுக்கும், அண்ணி மைத்துனிகளுக்கும் முண்டை முக்காடுகள்போட்டு, அவர்கள் செய்யுங்கெட்டகாரியங்களை நன்குணர்ந்தும், எந்த முகத்துடன் நால்வர் நடுவில் வெட்கங்கெட்டுத் தலையெடுத்துக்கொண்டு திரிகிறீர்கள்? ஓடிப்போன சிறுக்கிகளைக்கூடத் திரும்பவும்போய்க் கூட்டிவந்து, உறவினர் வீட்டுக்குப்போயிருந்தார்களென்று போக்குச்சொல்லி வீட்டிவிட்டுக்கொண்டு எப்படி வெட்கங்கெட்ட பிழைப்புப்பிழைக்கிறீர்கள்? விட்டுவிட்டோடிப்போகவேண்டாமென்று மன்றாடி அவர்களுக்கு இன்னுங்கொஞ்சம் அதிகமான சுதந்தரத்தைக்கொடுத்து வீட்டிலேயே விபசரித்துக்கொண்டிருக்க எப்படிச் சம்மதிகொடுக்கிறீர்கள்? பெண்களுக்குப் பிள்ளை குளிப்பாட்டிப் பிள்ளைகளை வளர்ப்பதற்குப்பதிலாய்க் கருவழிப்பதற்கும், சிசுவத்தி செய்வதற்கும் பெற்றோர்கள் எப்படி உடன்படுகிறார்கள்? உங்களுடையபெருமை பிரதிஷ்டையெல்லாம் எங்கே பாழாய்ப்போயின? உங்களுடைய மானமரியாதைகள்எங்கேமண்ணாய்ப்போய்விட்டன? உங்களுடைய கருணையெல்லாம்எங்குகரியாய்ப்போய்விட்டது? உங்களுடைய ஆண்மையெல்லாம் எங்கே அழிந்து சாம்பலாய்ப்போய்விட்டது? நீங்கள்

பெரிய பெரிய உத்தியோகஸ்தர்களானாலென்ன, மந்திரிகளானாலென்ன, ராஜாக்களானாலென்ன, மகா தனவான்களானாலென்ன, சமஸ்த விதமான சண்டாள நடத்தைகளையும் வீட்டில்கூட்டி வைத்துக்கொள்ளும் உங்களுடைய பிழைப்பு மொரு பிழைப்பென்றே யெண்ணுகிறீர்களா? இனி நீங்கள் பகுத்துக்கொடுக்கும் பணத்துக்காசைப்பட்டு உங்களுடைய சந்தர்ப்பனைகளிலும் சமாராதனைகளிலும் போசனஞ்செய்யும் பிராமணோத்தமர்களையும், உங்களுடைய பிட்சைகளை யங்கீகரிக்கும் குருசுவாமிகளையும் என்ன பெயரிட்டுக் கூப்பிடுவது? இப்படிப்பட்ட மகா புருஷர்களா குலத்தைக்கெடாமற் காப்பாற்றுபவர்கள்?

50 அடக்கமுடியா அகங்காரத்தினால் இப்படி ஏசிக்காட்டினேனேயன்றிப், பாவம்! அனேகர்பெற்றோர்களும் உற்றோர்களும் தமது பாலவிதந்துக்களின் துன்னிலைமையை உன்னியுன்னி அளக்காலத்துயரக்கடலிலாழ்ந்து, அதனால் விளையும் அனர்த்தங்களினால் பொறுக்கரிய துயரத்தில் மூழ்கியே புத்தி பிறழ்ந்துகிடக்கிறார்கள். விதவைகளுக்கு விவாகம் செய்யக்கூடாதென்று எத்தனை சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருப்பினும் சட்டைசெய்யாமல், செய்வதே சிரேயஸ்கரமென்று திடவபிப்பிராயங்கொண்டு துணிவுற்றிருக்கிறார்கள். ஆனால், குலத்துக்கு அப்புறம் விலக்கப்படுவோமென்னும் பயத்தினால் கலக்கமுற்று உலகத்திற்கு உட்பட்டு, ஒன்றும் செய்ய முடியாதிருக்கிறார்கள். வித்தை பயின்றவர்களாய்ப் பரோபகாரார்த்தம் பாடுபட மனமுள்ளவர்கள்கூடக், கைம்பெண்டுகளின் கதியைக்கண்டு அத்தியந்தபரிதாப முள்ளவர்களாயினும், தம்முடைய மூடப்பெண்சாதிகளுக்கும் பெற்றோர்களுக்கும் உற்றோர்களுக்கும் கஷ்டவிசாரங்களைக்கொணர்ந்து சுமத்த இஷ்டமற்றவர்களாய்ப், பாழும்பஹிஷ்காரத்துக்குப் பயப்படுகிறார்கள். பிறத்தியருடைய நன்மைக்காக எத்தனை வருத்தங்களையாயினும் தாமனுபவிக்கச் சம்மதித்தவர்களாயினும், தமர்களனைவரையும் சிரமத்துக்குள்ளாக்குவது நியாயத்துக்கு விரோதமென்றெண்ணிக், தமது அபீஷ்டங்களின் பிரகாரம் நடந்துகொள்ளச் சக்தியற்றவர்களாயிருக்கிறார்கள். எவ்வளவு படித்தவர்களாயினும் இவர்களும் மானிடப்பிறப்பினர்களேயல்லா? ஒவ்வொருவர் மிகுந்த துணிச்சலுற்றவர்களாய் கைம்பெண் மணங்களை நடத்தியபோதிலும், அவர்களுக்கனேகர் தோழமைப்படாதவர்களானார்கள். மேலும் தோழமைப்படுவோமென்று முதற்றுணிச்சல்காட்டி வாக்குத்தானஞ்செய்தவர்கள், முன்னே யிறங்குங்களென்று சாகசிகளைத்தூண்டித் தள்ளியவர்களனேகர் பின்னுக்குத்திரும்பி நல்லதருணத்தில் பின்வாங்கி ஓடிப்போய்விட்டார்கள். ஆகா! தோழர்களென்றால் இவர்களேயல்லவா? முதலிலெடுத்தெறியவேண்டியது? இந்த

மகானுபாவர்கள், அவிவேகிகளோ, அதைரியஸ்தர்களோ, காலத்திற்கேற்ற கோலக்காரர்களோ, குத்சிதர்களோ, குடிலர்களோ, குட்சிம்பார்களோ நிருணயிக்கச் சக்தியற்றிருக்கிறோம்.

51. விதந்து விவாகங்கள் சாஸ்திரவிரோதமென்றும், இவ்யுகத்தில் அவற்றை நடத்துவது பாபகாரணமென்றும் வாதிப்பவர்களும் சிலர் உளர். ஆனால், அவர்கள்கூடக் கைம்பெண்களின் கெடுநிலைமையைக்கண்டு மனத்தினில் துயரமுற்றவர்களாய் அவர்களுக்குக் கலியாணஞ்செய்தாலே பற்பலவிதமான அனர்த்தங்கள் நிலைபெயர்ந்தோடுமென்று நம்புமவர்களாயிருக்கிறார்கள். சாஸ்திரவிரோதமெனுங்கூற்று இவர்களுடைய வாயிலிருந்து வெளிப்படும்பொழுது உடம்பு பகீரென்று கொழுந்துவிட்டெரிகின்றது. சாஸ்திரவிரோதமாமே? ஆமாம்! இக்காலத்தில் பிராமணோத்தமர்களென்று சொல்லிக்கொள்பவர்களுடைய பிரவர்த்தனையெல்லாம் சாஸ்திர சம்மதமாகவே யிருக்கின்றதல்லவா? முண்டைகளிடம் சென்று விபசரிப்பது சாஸ்திரசம்மதமேயல்லவா? முண்டைகள் கருவழித்துக்கொள்வது சாஸ்திரசம்மதமே யல்லவா? ஓய் இராமாயண சாஸ்திரிகளே! உங்களைத்தான் கேட்கிறேன்! விபசாரம் சாஸ்திரசம்மதமேயல்லவா? சோரபுருஷர்களுடன் ஓடிப்போனவர்களை மீளவும் பிடித்துவந்து வீட்டிலிட்டுக்கொள்வது சாஸ்திர சம்மதமேயல்லவா? கன்னிகாதானமென்று மந்திரங்களையோதிப்பொன்னுக்காக ஆசைப்பட்டு விக்கிரயஞ்செய்வது சாஸ்திரசம்மதமேயல்லவா? பொய்பேசுவது, பித்தலாட்டம் பண்ணுவது, கள்ளு, கபடு, சூது, மாயம், அநியாயம், பிறர்பொருளபகரிப்பது, பொய்ச்சாட்சி சொல்லுவது, இவையெல்லாம் சாஸ்திரசம்மதமேயல்லவா? கள்குடிப்பது, சாராயபானம் பண்ணுவது, மாமிசம் சாப்பிடுவது சாஸ்திரசம்மதமேயல்லவா? வெட்கங்கெட்டுப்போய்ச் சாஸ்திரமென்னும் வேஷமேன் போடுகிறீர்கள்? சாஸ்திரங்கள் உங்களைப்போலக் குரூரமானவையல்ல. இக்கலியுகத்தில் பிரதான பிரமாணமாகிய பாராசரஸ்மிருதியில் என்னவென்று கூறியிருக்கிறதோ சற்றுக் கவனியுங்கள், "புருஷன் தேசாந்திரஞ்சென்று போனபோக்கின் வரலாறு தெரியாமலிருப்பினும், இறந்துபோய்விட்டாலும், சந்நியாசியானாலும், நபுஞ்சகனானாலும், பதிதனானாலும், பெண்ணுக்குப்

புனர்விவாகஞ் செய்யலாம்." என்று திருத்தமாய் விதிக்கப்பட்டிருக்கிறது. இனி மனுஸ்மிருதியைப் படித்துப்பாருங்கள். அதில் கூட ஸ்திரீயின் புனர்விவாகம் அங்கீகரிக்கப்பட்டேயிருக்கிறது. ஓய் பண்டிதர்களே! உங்களுடைய பாண்டித்தியம் யாவற்றினையும் பயனில் வழிச்செலுத்திச், சாஸ்திரங்களுக்கு இல்லாப்பொருள்களைக் கற்பியாதேயுங்கள். கணவர்கள் மாண்டுபோன பெண்மணிகள்மேல் வெங்கோல் செலுத்துவது பெருஞ்சாம்பிராச்சியமல்ல. தேசக்ஷேமத்தைத்திறந்த கண்களுடன் பாருங்கள். இன்றைக்குப் பிறத்தியருக்கு உண்டாயிருக்கும் துன்பங்களை நாளைக்கு உங்களுக்குக்கூடச் சம்பவிக்கப்போகுது காணுங்கள்! இந்தச் சொல்லை மனத்திலேற்றிவையுங்கள்.

52. ஒருவேளை, விதந்துக்களின் விவாகங்கள் சாஸ்திரத்துக்கு விரோதமென்றே உங்களுக்கு நம்பிக்கையிருக்குமாக. அப்படியிருப்பின் நீங்கள் மணக்கவேண்டாம். உங்களுடைய விதவைகளுக்கு விவாகஞ்செய்யாதிருங்கள். அப்படிக்கன்றி மற்றவர்கள் எவராவது அவ்வித விவாகங்களைச் செய்தாலும், செய்துகொண்டாலும் அவர்களையேன் சங்கடப்படுத்துகிறீர்கள்? உங்கள் வீட்டில் போசனஞ்செய்வதற்குஅவர்கள்தகார்களா? அவர்கள்வீட்டில்போசனஞ்செய்தால் உங்களுக்கேதாவது பாவம்வந்து சுற்றிக்கொள்ளுமா? ஏதாவது வியாதிவந்துசேருமா? ஜாரசோர்களும், சுராபானவேலவர்களும், பரமபாவனர்களாகியிருக்க, அநாதைகளான விதவைகளுக்கு விவாகஞ்செய்தவர்களும், அவர்களை விவாகஞ்செய்துகொண்டவர்களும் வெறும்உதவாக்கரைகளாய்விட்டார்களல்லவா? தோன்றியவர்களுடனெல்லாம்கூட விபசரிக்கும் கைம்பெண்டாட்டிகள் வீட்டில் நீங்கள் போஜனஞ்செய்யலாம். அவர்கள்கையினல் சமைக்கப்பட்டதை நாக்குகளை நீட்டிக்கொண்டு உதடடித்துச்சாப்பிடலாம். ஆனல் கெட்டவழிகளில் புகுவதற்கு இடமற்று பர்த்தா ஒருவனைச்சேர்ந்து மணந்துகொண்டு நியாயமார்க்கத்தை பத்து சரித்துவரும் விதந்துக்களின் வீட்டுவாயிலையாவது நீங்கள் உங்களுடைய திவ்வியபாதங்களைவிட்டு மிதிக்லாகாதல்லவா? அப்படிப்பட்டவர்களின் வீட்டில் போசனஞ் செய்தவர்கள்கூட உபயோகமற்றவர்களாய்ப் பஹிஷ்காரத்திற்குப் பாத்திரமானர்களல்லவா?

இது எப்படிப்பட்ட நியாயம்? உங்களைக்கடவுளெப்படிப் பெருமைபடுத்துவான்? சங்கராசாரிகள் ஒப்புக்கொண்டால் நாங்களுமொப்புக்கொள்ள யாதொரு தடையுமில்லையென்று சொல்லுகிறீர்களோ? சங்கராசாமிகள் யார்? நீங்கள்செய்யும் அக்கிரமங்களைக்கண்டு அவரால் உங்களையென்னசெய்யக்கூடியதாயிற்று? நீங்களெல்லாம் கிரமமான காரியங்களைச் செய்ய உடன்பட்டால் அவர் வேண்டாமென்பரா? என்னர், என்னக்கூடார் ஓய் சங்கராசாரியவர்களே! ஓய் மதாசாரிய சுவாமியாரே! நீரெங்கிருக்கிறீர்? உமது அதிகாரம் நாமத்தில் மாத்திரம் மிகுந்திருக்கின்றது. அதைச் சர்வஜனசம்மதமாய்ப் பலப்படுத்திக்கொள்வதற்கு இதுவே நல்ல சமயம், கைம்பெண் மணமுதலிய நல்லகாரியங்களுக்குக் கையோடு கட்டளைகொடுங்கள். அவ்வித மணங்களைச்செய்பவர்களுக்கும் செய்துகொள்பவர்களுக்கும் பஹிஷ்காரமில்லையென்று பகிரங்கப்படுத்துங்கள். அவர்கள் வீட்டில் பிட்சைசெய்வதற்கு அங்கீகாரஞ்செய்யுங்கள். மூடர்கள் சொற்களைச் சட்டைசெய்யாதேயுங்கள். உங்களதிகாரம் நிலைபெற்றோங்கி உண்மையாய் நீங்கள் ஜகத்குருக்களாவீர்கள். முதலில் தூஷிப்பவர்களே கடைசியில் பூஷிப்பார்கள் நீங்கள்ஞானசொரூபிகள். விவேகத்திற்குறைவிடங்கள். முன்னுளில் பராசரர் முதலிய பரமமகானுபாவர்களைப்போலவே இந்நாளில் நீங்களும் பெரும்பெயர் படைத்துக்கொள்ளுங்கள். இந்த விண்ணப்பத்தைக்கேளுங்கள். சுயபுத்தியைக்கொண்டு தீர்க்காலோசனை செய்யுங்கள். இதோ, அனேக கோடி நமஸ்காரங்கள். இதோ லட்சாலட்ச இளந்தலைக் கைம்பெண்களின் சாஷ்டாங்க வந்தனங்கள்!

53. இது எவ்விடத்து நியாயம்? பெண்சாதி மரணமடைந்தால் புருஷன் மறுபடியும் மணம்புரியலாம்; பெண்சாதி பிழைத்திருக்கையிற்கூடப், பின்னுமொரு பெண்சாதியைக் கட்டிக்கொள்ளலாம். பசும்பிராயத்தில் பர்த்தாவை யிழந்துபோன பாலவிதவைகள் மாத்திரம் கலியாணம் செய்துகொள்ளக்கூடாதாம்! ஆசையெல்லாம் அடிமாண்டுபோய்க் கால்மேல் கால்நீட்டிக்கொண்டு சாய்ந்துபோன வற்றலாயிருக்கும் கிழப்பிணங்கட் வெகு சிறு பெண்களைக் கலியாணஞ்செய்து கொள்ளலாமாயினும், புதிதாய்ப் பூத்த முகுலமாகிய பாலவிதவை மாத்திரம், சீவிதகால முழுவதும் மணமில்லாது வணங்கிக்கிடக்கவேண்டுமல்லவா? என்னகோ

மம்! இவ்வொரு இளந்தலைக் கைம்பெண்ணுக்குள்ள சகஜமான அளவற்ற சௌந்தரியம் எவ்வளவு மனக்கவர்ச்சியுள்ளது! எவ்வளவு விசாரத்தை யுண்டுபண்ணுகின்றது!

"வண்டோவிழி நுதல் வான்பிறையோ வல்குன்மான் குளம்போ
செண்டோமுலை நித்திலமோ நகையிடை சேர்துடிகற
கண்டோமொழி குழல்காரோ முகங்கமலம்பவளத்
துண்டோவிதழ் கன்னித்தண்டோ தொடையிந்தத் தோகையற்
கே."

"பாதிமதிகேசர் முதலாயிவளைப் படைத்தமலர்
வேதாவருங்குல வெளிவைப்பனோ விரிபூதலத்துள்
ஆதாரமின்றி பிரண்டினவீ சந்தரமிருக்குமோ
வேதாகிஞ்சற் றங்கில்லா திராதிடை யேந்திழைக்கே."

அப்பப்போ! இப்படிப்பட்ட நவமோகனாங்கிகளின் அளவிலாச் சவுந்தரியமெல்லாம் காட்டி லுலாவிய நிலவுபோல் பயனிலதாகின்றதல்லவா?

54. ஐயோ பாவம்! கெட்ட நடவடிக்கைகளில் பிரவேசிக்காமல் தங்களுடைய கொடிய நிலைமையைத் துயரத்துடன் எண்ணியெண்ணிச் சிந்தித்துப் பொறுமையுடன் ஏங்குகின்ற இளங்கைம்பெண்டுகள் எவ்வளவு வருந்திப் பரிதவிக்கிறார்களோ? திவ்விய நிறமான விலையுயர்ந்த அணிகளையும் ஆடைகளையும் தரித்துச்சுகப்பட்டுவாழும் தம்முடைய சுமங்கலிப் பெண்டுகளைக்கண்ட பொழுதெல்லாம் தமக்கப்படிப்பட்ட நற்பாக்கியமில்லாமற்போயிற்றேயென்று அவர்களுடைய மனங்கள் எவ்வளவு ஏங்கி யேங்கி நொந்து கொதிப்புண்டுபோகின்றனவோ! தோழிகளும், உடன்பிறந்தவர்களும், தம்மீடானவர்களும் கலியாண முதலிய சுபகாரியங்களிலும், பண்டிகை விழவுதினங்களிலும் சந்தோஷமாய் புன்சிரிப்புள்ள முகங்களுடன் களித்துத்திரிவதும், மங்கலிப்பெண்டுகள், சமாராதனைகள் முதலியவற்றிற்குப் போசனங்களுக்குப்போவதுங்கண்டு, தங்களுக்கு அவ்வித நல்லதிருஷ்டம் பாழ்பட்டுப் போயிற்றென்று எவ்வளவு அளக்காலாத்துயருடன் நினைத்து மனமுருகிக் கொதிக்கிறார்களோ? தம்மீடானவர்கள் கணவர்களுடன் சுகமாய்ச் சமுசாரஞ்செய்துகொண்டு பிள்ளைகளைப் பெற்றுவளார்த்துக் கொஞ்சிக் களிப்பதைப் பார்த்துப்பார்த்துத், தங்களுடைய நிர்ப்பாக்கியத்தைப் பலகாலு மெண்ணி வருந்துவதினால், அவர்களுடைய நெஞ்சங்களெவ்வாறு கொதித்துப் படபடத்து வெடித்துப்போகின்றனவோ? ஓ தாய்களே! தந்தைகளே! தம்பிகளே! தமையர்களே! உறவோர்களே! உங்கள் வயிற்றிற் பிறந்த அழகிய செல்விகளையும், தங்கை தமக்கைகளையும், மாட்டுப்பெண்களையும், இவ்வித இடுக்கண்களுக்கிரையாக்கி, அவர்கள் ஆவிதவித்துக் கொண்டிருக்க நீங்களெவ்வாறு ஏற்றவழியொன்றுஞ்செய்யாமல் சகித்துச் சும்மாவிருக்கிறீர்கள்? அவர்களுடைய சுந்தரவடிவங்கள், நடுவெயிலிற் பூங்கொடிகள்போல் வாடித்தினமுகங்களுடன் தினதினமும் வதங்கிச்சுருண்டுபோவது உங்கள் கண்களில்படடுக் கொண்டிருக்க எப்படிக் கன்னெஞ்சங்களுடன் பார்த்துச் சகிக்கிறீர்கள்? அவர்கள் காட்டுத்தரைமீது ஒன்றியாய்ப்படுத்துத் தூக்கித்துக்கொண்டிருக்க, நீங்கள் மாத்திரம் கட்டில்களின்மேல் மெத்தை பரப்பி ஹாயியாகச் சயனித்துச் சமுசார சுகங்களை எப்படி யனுபவிக்கிறீர்கள்! உங்களுடைய நெஞ்சங்களை உறையவிட்டு எப்படி நிர்விசாரமாய்க் குறட்டையிட்டுறங்குகிறீர்கள்? ஐயோ! ஈதென்ன குரூரம்! கொடுங்குரூரம்!

55. இனி, இத்தேசத்துக் கைம்பெண்டுகளுக்குத் திக்கெவரிருக்கிறார்கள்? எவருண்டு அவரைக் கருணையுடன் காப்பவர்கள்? பரலோகத்திலிருக்கும் ஓ பரமேசுவரனே! உன்னுடைய கருணைக் கண்களைத்திறந்து, இந்தத்தீன அநாதைகளின் கதியைக்கடாட்சித்தருளுவாய். என்னபாவஞ்செய்தார்களென்று அவர்களுக்கிப்படிப்பட்ட கொடுந்துயரங்களைக் கொடுத்துப் படுத்துகிறாய்? ஏனிப்படிக் கருணைகெட்டிருக்கிறாய்? புருஷர்கள்போலவே பெண்களும் உன்னுடைய பெருஞ்சிருஷ்டியில் சேர்ந்த படைப்புகளன்றோ? பட்சபாதம் உனக்கு நியாயமா? தீனபந்தோ! அநாதரட்சகா ரட்சி, ரட்சி. பரமதயாளோ! அருள்புரிவாயாக.

56. ஓய் அத்தன்மீர்! இவ்விந்தத் தோஷத்தமரின் நெஞ்சமென்றும் எத்தகைய வெண்பதை கவனித்தீரா? இவர் தம் ஈர நெஞ்சமே நெஞ்சம். இவர்தம் கருணையே கருணை. இவர்தம் கல்வியே கல்வி.

இவர்தம் அறிவே அறிவு. இவர்தம் ஞானமே ஞானம். இவர்தம் சென்மமே சென்மம். இவர்தம் வாழ்நாளே வாழ்நாள். இவர்தம் புகழே புகழ். இவரல்லோ நாவலர். இவரல்லோ பாவலர். இவரல்லோ காவலர். இவரல்லோ சர்வகலா நிபுணர். இவரல்லோ மேதாவி. இவரல்லோ புலவர். இவரல்லோ முனிவர். இவரல்லோ நம்முடைய சமய குரவர். இவரல்லோ லோககுரு. இவரல்லோ நம்மிந்தியநாட்டுத் தலைவர். இவரல்லோ மாதர்வர்க்கத்தின் தந்தை. இவரைப்பொறுத்தேதான் "தெய்வம் மனுஷியரூபேணும்" என்னும் மகா வாக்கியமும் ஈங்ஙனம் உலாவித்திரிகிறதுபோலும்! இன்னும், "மாந்தருட்டேவருடைத்து" என்பதூஉம் ஈங்குதான் உண்மையாயிற்று. தோற்றப்படுகிற மூச்சகங்களும் மாயாவடிவங்களென்பது உண்மையேயாகும். இவ்வந்தணோத்தமரே கருணாகரக்கடவுளாமென்பதை எற்றானும் உணர்ந்துகொள்ளாது இஞ்ஞாலம் எங்குதேடினும் கண்டுகொள்ளமுடியாத ஒன்றை கருணாகரக்கடவுளெனப் புகழ்ந்துகொண்டாடப்படுகிறது. இஃதும் ஓர் வியப்பேயாகும். இம்மகானுபாவரைப்போன்று ஒரு நாலைந்து அவதாரபுருஷர்களை நம்முடைய செந்தமிழ் நாடு நகரங்கள் பெறுமாயின் நம்முடைய பாதகண்டத்துக்கு பெரியவோர் புதச்சுக்ரயோகமுமாம். ஆனால் ஓய் அத்தன்மீர்! தற்சமயத்தும் நம்முடைய நகரத்தாருள் அம்மகானுபாவரைப்போன்று அவதார புருஷர்கள் இல்லையென்பதாகக் கூறற்கும் ஒருதலையாக இடமில்லை. நம்முடைய ஆராய்ச்சிக்குறைவால் நமக்குத் தெரியாமலிருப்பினுமிருக்கலாம். அல்லது ஒருக்கால் பூர்வ காலத்து பழக்க வழக்கங்களொ இக்காலத்துள்ள மகோன்னதமான சர்வகலா நிபுணர்களும் புகழ்ந்துகொண்டாடத்தக்க வன்னிலைமையோடு அக்காலத்துள்ள பாம்போகஞானிகளாலே வகன்முறையென்னும் பெட்டிகளில் தொகுத்தமைந்துகிடக்கும் கன்னாணிகளைப் பிடுங்கி எறிவதற்கு கொஞ்சமும் சக்தியற்றவர்களாயுமிருக்கலாம். நிற்க, பொதுவாகக் கவனிக்கப்புகின் திருச்சிராப்பள்ளியிலிருந்து தெற்கு வரவர அவ்வந்தணோத்தம வகுப்பாருக்குள் அவ்விதவாவிவாகச் சட்டமானதுப் பூர்த்தியாய் அமுலுக்கு கொண்டுவரப்பட்டதாயும் தெரியவில்லை.

57. அத்தன்மீர்! "தளிர்மேலேநிற்பினுந்தட்டாமற்செல்லா உளியனையர் மாதோ கயவர்" என்றாற்போல எந்நாட்டினும் சிறந்ததென்றுடென்று புகழப்படுகிற நமது தென்னாட்டின்கண் உலக வியவகாரங்கள், நடுநிலையான நீதிமார்க்கங்கள், பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவலகால வகையினாலெனும் இலக்கண இலக்கியங்களினும், தற்காலம் மிக்கப் புகழ்ந்துகொண்டாடப்படுகிற ஆங்கிலத்தினும்தேர்ந்த நிபுணர்களெனப் பெயரேற்றுக்கொண்ட அநேக வேதியர்களையும், சைவ வேளாளர்களையும், இன்னும் ஏனைய அநேக நாகரீகமுடையவர்களையும் நம்முடைய செந்தமிழ் நாடுநகரங்கள் உடைத்தாகப்பெற்றிருந்தும் தங்கள் தங்களுடைய இனத்தாருக்கெல்லாம் நடுநிலையாகநின்று ஏனைய பகுதியர்க்கங்களைப்போன்று அளவுகடந்த நன்மைகளையும், இன்பங்களையும் பயக்கும் வினைகளை தங்களின் சிரமிசை ஏற்றுக்கொள்ளாவிடினும் கேவலம் ஒரு பெண்பால் வாலிப வயதில் தங்கொழுநனை யிழந்துவிட்டால் அச்சிறுமியை, அந்தோ பரிதாபம்! (உள்ளுங்கால் நெஞ்சமானது காய்ந்தமரக்கட்டையைப்போன்றன்றோவேறுபடுகிறது) தங்களின் கொழுநனிறந்தனான்றே அன்னவளுடைய அணி முதலாயச் சிறப்புக்களையெல்லாம்மாற்றி, கருமேகம்போன்ற கூந்தலையும்விரித்து, கஞ்சிப்பசை நிறைந்த வெள்ளைக்கோடியைக் கொணர்ந்து அச்சிறுமியின் உருவந்தெரியாமல் மூடி ஆங்கிறந்து கிடக்கும் பிணத்தின் கான்மாட்டிலே பலவந்தமாகத் தள்ளிக்கிட்டுக்கொண்டு பலமாதர்களும் அவள் சரீரத்தின்மேல்விழுந்து ஒப்பாரென்னும் பல பாட்டுகளும்பாடி அழுகிறார்களே. அந்தோ! இதுவும் வேதசம்மதமாமோ? எந்த ஆகமாதி சாஸ்திரங்களிற் கூறப்படுகிறதோ? எந்த வேதத்தினும் எந்த ஆகமாதி புராணங்களினும் முதற்சுலோகம், முதல் வாக்கியம், முதற்செய்யுளாகவே கூறப்படினும் அவைகள் அத்துணைப் பெருமையுடையதுமாமோ? இதுதான் நடுநிலையான நீதியோ? இதுதான் பன்னூற்களானும் கற்றுத்தேர்ந்த நிபுணர்களின் இல்வாழ்க்கையின் அறிகுறிகளோ? இதுவுமல்லாமல் பிந்திய ஞான்றுகளிலோரில்லத்துள் அச்சிறுமியை கேவலமொரு பாவையைப் போன்றெண்ணி "மெத்தெனப் படுத்தல் நித்திரைகழகு" என்னும் வேதவாக்கியத்தை அவண்

மாட்டொழிந்து அவள் படுக்கைக்கு யாதொரு விரிப்புத்தலையணை யொன்றும் கொடுக்காமல் அவளின் முன்றானை யென்று சொல்லப் படுகிற அவள் தரித்திருக்கும் ஆடையின் ஓர் நுனியை விரித்துக் கொண்டும், கண்ணீரானது தாலை தாரையாக ஓடிப்பெருகும்படிக் குமுள்ள நிலைமையில் நித்திரைபோகிறவளைப்போன்று படுக்கச் செய்துகொண்டும், தாங்களும் தங்கள் மனைவியும் சரசவுல்லாச மாக விளையாடிப்பேசிக்கொண்டும்,

"கரியகுழல்சரியமுகம்வேர்வாடவுரசமுறு
களபமுலைபுளகமெழநேரானவேல்விழிகள்
குயல்பொருதுசெயலழிதனநீள்பூசலாடநலகனிவாயின்
கமழ்குமுதஅதரவிதழ்தேனூறல்பாயமிகு
கடலமுதமுதவியிருதோண்மாலைதாழவளை
கலகலெனமொழிபதறமாமோககாதலதுகரைகாணது
எரியணுகுமெழுகுபதமாய்மேவிமேவியணை
இருவருடலொருவரெனநாணதுபாயல்மிசை
இளமகளிர்கலவிதனிலேமுழ்கி" என ஸ்ரீ அருணகிரிநாதர்

கூறியதுபோன்று காமலீலாபர்த மயக்கமான போகங்களை முடித் துக்கொண்டதன்பின்னும் அவ்வாலிபச் சிறுக்கியின் மனமானது ஐயோ! எமக்குமட்டுமா இந்த விதி வரல்வேண்டும்? இவ்விதியினை கடவுள் நியமித்தாரோ? இன்றேல் அறிவுடையவர் நியமித்தாரோ? வென எண்ணி நெக்குநெக்காக வுருகும்படிக்கும், அன்னவள் காதிற் சலசலவென்று ஒலிக்கும்படிக்கும் ஏதோ ஒரு செம்புநீ ரைக்கொண்டு தங்களின் சரீரத்தை சுத்திசெய்கிற அதர்மசண்டா ளக்கொடிய விஷம்போன்ற நீதியையும், கருணையையும் இன்னும் இவைபோன்ற சில குறைவான சட்டதிட்டங்களையும் ஒருங்கே மாற்றி பெண்பாலர்களுக்கும் இரண்டாவது திருமணம் செய்து கொள்ளவேண்டும் சட்டவினையைமட்டுமாவது நிலைநிறுத்திக்கோ டற்கு பேரறிவு அறிவென்னும் பாரத்தை தங்களின் சிரமிசை தாங்கிக்கொள்ளவியலாத ஏனைய நம் சகோதரர்களைப்போன்றல்லா மல் நேயர்கான்! வேறு எந்தெந்த வினைகள் எவ்வாறெவ்வாறொழி யினும்ஒழியட்டும்அதனைப்பற்றிக்கவனியாமல் விதவை, அமங்கலி அறுதலி கைம்பெண் என்னும்வார்த்தைகளையே நமதுவர்க்கத்துள்

இன்னும்வரும்.

உ

திருச்சிற்றம்பலம்.

Nattukkottai Vaiciyam

நாட்டுக்கோட்டை வைசியம்

ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

தொகுதி க. | பிங்களஞு ஆனிமீ | பகுதி ௬௪.

12 OCT 1918

கடவுள் வணக்கம், தாயுமானவர்.

அங்கிங் கெனாதபடி யெங்கும் ப்ரகாசமா
யானந்த பூர்த்தி யாகி
அருளொடு நிறைந்ததெது? தன்னருள் வெளிக்குளே
யகிலாண்ட கோடியெல்லாந்
தங்கும் படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது? மன வாக்கினிற்
றட்டாம னின்றதெது? சமயகோடிகளெலாந்
தந்தெய்வ மெந்தெய்வ மென்
றெங்குந் தொடர்ந்தெதிர் வழக்கிடவு நின்றதெது?
வெங்கணும் பெருவழக்காய்
யாதினும் வல்லவொரு சித்தாகி யின்பமா
யென்றைக்கு முள்ள தெது? மேற்
கங்குல்பக லறநின்ற வெல்லையுள தெது? வது
கருத்திற்கிசைந்த ததுவே
கண்டன வெலாமோன வுருவெளிய தாகவுங்
கருதியஞ்சலி செய்குவாம்.

பாருடுதர்க்கந்தொடுக்கவறிவார் சாண்
வயிற்றின்பொருட்டதாக
மண்டலமும் விண்டலமுமொன்றாகி மனதுமல
மாலாகிநிற்கவறிவார்
வேறுபடுவேடங்கள் கொள்ளவறிவார் ஒன்றை
மெனமெனென்றகம்வேறதாம்

வித்தையறிவாரெமைப்போலவேசந்தைபோன்
மெய்ந்நூல் விரிக்க வறிவார்
சீறுபுலிபோற்சீறி மூச்சைப்பிடித்துவிழி
செக்கச்சிவக்கவறிவார்
திரமென்றுதந்தம்மதத்தையேதாமுதச்
செய்கைகொடுமுள்ளறவறிவார்
ஆறுசமயங்கடோறும்வேறுவேறாகிவிளை
யாடுமுனையாவரறிவார்?
அண்டபகிரண்டமுமடங்கவொருநிறைவாகி
யானந்தமானபரமே.

மாவுரியுடுத்தும், மலைவனநெற்கொறித்தும், உதிர்
வனசருகுவாயில்வந்தால்
வன்பசிதவிர்த்தும், அனல்வெயிலாதிமழையால்
வருந்தியும், மூலவனலைச்
சிரமளவெழுப்பியும், நீரினிடைமூழ்கியும்,
தேகநமதல்லவென்று
சிற்சுகவபேக்ஷையாய்நின்னன்பர்யோகஞ்
செலுத்தினர். இயம்பாவியேம்
இரவுமறுசுவையினொடுவேண்டுவபுசித்தணையில்
வேண்டுவவெலாமுடுத்து
மேடைமாளிகையாதிவீட்டினிடைவைகியே
வேறொருவருத்தமின்றி
இரவுபகலேழையர்கள்சையோகமாயினேம்
எப்படிபிழைப்பதுரையாய்?
இகபரமிரண்டினிலுமுயிரினுக்குயிராகி
யெங்குநிறைகின்றபொருளே.

பன்முகச்சமயநெறிபடைத்தவரு
மியாங்களேகடவுளென்றிடும்
பாதகத்தவரும்வாதத்தர்க்கமிடு
படிறருந்தலைவணங்கிடத்

தன்முகத்திலுயிர்வரவழைக்குமம
தருமனும்பகடுமேய்க்கியாய்த்
தனியிருப்பவடநீழலூடுவளர்
சனகனாதிமுனிவோர்கடஞ்
சொன்மயக்கமதுதீரவங்கைகொடு
மோனஞானமதுணர்த்தியே
சுத்தநித்தவருளியல்பதாகவுள
சோமசேகரகிர்பாளுவாய்த்
தென்முகத்தின்முகமாயிருந்தகோலு
மெம்முகத்திலும்வணங்குவேன்
றெரிவதற்கரியபிரமமேயமல
சிற்சுகோதயவிலாசமே.

தெட்டிலேவலியமடமாதர்வாய்வெட்டிலே
சிற்றிடையிலேநடையிலே
சேலொத்தவிழியிலேபாலொத்தமொழியிலே
சிறுபிறைநுதற்கீற்றிலே
பொட்டிலேயவர்கட்டுபட்டிலேபுனைகந்த
பொடியிலேயடியிலேமேற்
பூரித்தமுலையிலேநிற்கின்றநிலையிலே
புந்திதனைநுழையவிட்டு
நெட்டிலேயலையாமலறிவிலேபொறையிலே
நின்னடியர்கூட்டத்திலே
நிலைபெற்றவன்பிலேமலைவற்றமெய்ஞ்ஞான
ஞேயத்திலேயுனிருதாள்
மட்டிலேமனதுசெலநினதருளுமருள்வையோ
வளமருவுதேவையரசே
வரராசனுக்கிருகண்மணியாயுதித்தமலை
வளர்காதலிப்பெண்ணுமையே.

பொய்யுணர்வாயிந்தப்புழுக்கூட்டைக்காத்திருந்தேன்
உய்யும்வகையுமுளதோபராபரமே.

முன் 33-வது புத்தகம் 675-வது பக்கத்தொடர்ச்சி.

எந்தவாற்றாலும் உலைவிடாமல் எந்த ஞான்றும் மாங்கல்யதாரணி யென்னும் அழகான மங்கலகரமொளிக்கும் வார்த்தையையே நடமாடும்படி பெண்பால்களுக்கும் இரண்டாவது திருமணம் முடிக்கலாமென்னும் சட்டத்தை இந்தக்கணமே பூர்த்திசெய்வோமாக. இன்றேல் நிகழ்கால ஒருங்கால இயற்கைகளுக்கு பொருந்தும் கல்வியற்றவர்களாவோம். கருணையற்றவர்களாவோம். நீதியற்றவர்களாவோம். ஆண்மையற்றவர்களாவோம். அறிவுமற்றவர்களாவோம். நேயர்காள்! ஏனையவர்க்கங்கள் நம்மை எள்ளற்கிடம் வைத்து இயலலாகாது. எந்த ஞான்றும் நமதிடம் கருணையே குடிகொள்ளல்வேண்டும்.

58. தென்னாடு நாகமென பழையகாலத்துச் சில ஆன்றோர்களின் கருத்தையும் அன்னவர்களின் வாக்கையும் காலவியற்கை பற்றி மாற்றிவிடுதலே கல்வியறிவுநிறைந்த நல்லவாண்மக்களின் கடமையாம். இங்கேயாம் கூறும் விஷயங்களனைத்தையும் உற்றுணர்ந்து நோக்குக. நன்றாகப் பகுத்துநோக்குக. எவர்க்கும் விளங்காத கொடுந்தமிழாக யாம் ஒன்றையும் கூறத்துணியவில்லை. ஒருபெண்பாலின் கொழுநன் இறந்துபோயினானாயின் அந்தோ! இவட்கு வாலிபத்தில் இந்கவிதியா வந்தது என்னும் துக்ககரமான வார்த்தையை யொழித்துவிடுவோமாக. மதனும் இரதியையும்போன்று வாழ்ந்துகொண்டுவந்த நாட்களின் இடையே யாவர் இறந்துபோயினும் கூசலிட்டிரங்கலையும் ஒழித்துவிடுவோமாக. தாரைதாரையாகக்கண்ணீர்வடிப்பனவுமாகாவாம். ஒருபெண் சிறுமியின் மங்கலகாமான கோலத்தை மாற்றாதிருப்போமாக. பிணத்தின் கான்மாட்டில் பலவந்தமாக தள்ளாதிருப்போமாக. அன்னவட்கு நிகரான புதியவோர் மணமகன் இன்னாரென பகர்வோமாக. அன்னவளேதேனும் சிறிது கவலையுறுவாளாயின் அன்னவள் மறுமணமுடித்துக்கொள்ளவேண்டுவதற்குரிய சில நல்ல வார்த்தைகளை கூறுவோமாக. அன்னவளை ஒருகணப்போழ்தும் பட்டினி போடாதிருப்போமாக. இன்னும் மாரடித்தல், ஒப்பாறுவைத்தழுதன்முதலிய கேடான பழக்க வழக்கங்களையெல்லாம் கட்டோடே சட்டமாக நிறுத்திவிடுவோமாக. அன்னவர்களும் நம்

போன்ற மனிதவர்க்கந்தானே என்னும் உண்மையை நன்றாக உணர்வோமாக. கொடுங்கூற்றுக்களையும், கோலாற்புடைத்தலையும் நாமும் மனிதவர்க்கங்களாயின் இதனைக்கண்ணுற்ற இந்தக்கணமே ஒழித்துவிடுவோமாக. பலவிதமான சர்வ சுதந்தரங்களையும் மனப்பூர்வமாக ஒருங்கே கொடுத்து காமாதிபோகப்பாசக்கடற்கண் மூழ்குவோமாக. உயர்தர நாகரீகங்களாலும், இனிய சொற்களாலுங்கூடி வாழ்தற்துப் பயிலுவோமாக.

“உண்ணுமல்இரவலர்க்குப்ஈயாமல்புமிதனிலொளித்தபொன்னைக்
கண்ணுளன்தனக்கீயவேண்டியதாய்த்தோண்டுகின்றகாலந்தன்னில்
மண்ணுளன்னைநோக்கிஎனக்கீந்பொருளையினிவாங்காநின்ற
பெண்ணுளன்னையுன்வாய்கொப்பவனென்றேநகைத்துப்பேசினனே.”

“முனங்காலைவருமெவன்கரங்கோபோன்முதுகின்மேன்மோதப்பூமேல்
அனங்கானமயிலென்னாடஞ்செககழல்நம்மேலாடித்தாக்கத்
தினங்கானாசமுதவுவாயேசியுமிழ்ந்தச்செய்கைகண்டு
மினங்காதலாயவனில்எகுதியோதிற்றியோ? வியம்பாய்நெஞ்சே.”

“சாமியுனைப்பிரியேனென்றுரைத்ப்பின்னகன்றபின்றான்தன்னைநோக்கித்
தோமிலாநின்மாற்றந்திறம்பியதேதென்றேனிதொகுப்பாற்றந்த
சாமியைநீங்கேனென்றேன்டினைச்சான்னதன்றுநீசாமியாறற்
பூமியிலுன்மாற்றென்ன? கேடென்ன? விலையென்ன? புகல்வாயென்றான்.”

“ஒருவனுண்டகலத்துண்ணவொருவனுடையினையுடுக்கவொருவன்றாங்கும்
திருவமளிதுயிலமனம்பொருந்தாரபலரெச்சஞ்சேர்படிக்கம்
பொருவவேசியர்வாபெசிலையுண்ணப்பலபேரைப்புணர்ந்தசுத்தம்
உருவுகொண்டாலனையர்தோள்சரவேயெவர்க்குமனமொன்றுங்கொல்லோ.”

“கலவிசெய்தமாதென்னைவிலைகேட்டாளுடனெக்கக்கலந்துகாம
நலமுண்டினக்குவிலையதென்னேசவமனையநான்சுகிக்க
விலையொன்றுன்பொய்யென்றேன்வளவர்கூறியகுறனாயினியறவில்
விலைமாதைச்சேர்தல்கைத்தழுவிதைபொக்குமென்றார்வீணேயென்றான்.”

“தையநில்லம்புகும்பாதென்சுதந்தானைக்கேட்டொதுங்கித்தாழ்வாரத்திற்
பையவொன்றிச்செகொடுத்தேன்லகனைப்பார்த்தக்கோதப்பணமீயென்றான்
ஐயனிறந்திடிலெல்லாமுனதென்றுவன்றாங்குஞ்சமையம்பார்த்தோர்
கையமெடுத்தவன்னைமேற்போடுவெய்போடுமுன்னன்றழுவேனென்றான்.

“இரவினிலென்னுன்றயின்றகோமையடிக்கடிவெளியேயேகிமீண்டான்
கரவதிவான்பின்றொடர்ந்தேன்கொல்லையிலேகானையோடுங்கலந்துநின்றான்
அரவமெனச்சீறிவ்வாண்மேல்வீழ்ந்தாக்கவுயிரற்றுவீழ்ந்த
அருவையுற்றுப்பார்க்கவென்றன்ஒருமையென்றதிர்துநெஞ்சமுருகினேனே.”

இத்தகைய இயற்கையாதிகுணங்களைக்கொடிய பரத்தையர்கேண்மையை கனவிலுங்கூட நினையாதிருப்போமாக. ஏ பிசாசே! அடோ பேயே! ஏ கழுதையே! குதிரையே! நாயே! குரங்கே என மடத்தனமாகப்பாவிக்கும் கெட்ட வார்த்தைகளையும் ஒழித்துவிடுவோமாக. செல்வர்களில்லத்துப் பெண்மக்களேனும் வறியோரில்லத்துப் பெண்மக்களேனும் சிறிதும் ஏற்றத்தாழ்வின்றி சில நுட்பமான கைத்தொழில் கல்வி முதலியவற்றினும் தேர்ச்சியடையச்செய்வோமாக உண்ணுவதற்காக வேண்டும் உணவுகளை சமைத்தற்குரித்தானவர்கள் பெண் மக்கள்தான் என்னும் கட்டாயச் சட்டத்தை ஓர்புறம் நிறுத்திவிட்டு நாமும் அக்கைத்தொழில்களை நன்கு தெரிந்துகொள்வோமாக. ஒரு கணப்போழ்தும் ஒருவரைவிட்டொருவர் பிரியாதிருக்கச்செய்வோமாக. நாமெல்லாம் ஒருங்கே வீரத்தன்மையையுடையவர்களானால் ஒவ்வொரு பெண் மக்களையும் நம்போல்வார்க்குரிய கல்வியிவு நாம்செய்யும்தொழில் நடையுடை பாவனைமுதலிய சகலவிதமான பல நெறிகளினும் நம்போல்வார்க்கு நேரொப்பச் சீர்திருத்திக்கொண்டு வந்ததின் பின்னரே அன்னவர்களை அடக்கியாள முயல்வோமாக. தற்கால நிலையில் அன்னவர்களை அடக்கியாளுந்தன்மை பேடித்தன்மையேயாமென்பதை நாம் நன்கு தெளிவோமாக. நாம் ஒரு வேசையரில்லத்தை நோக்கிச்செல்ல விரும்புவோமாயின் நமது மனையாட்டும் தக்கவாறழகுநிறைந்து சிறந்த வீண் தன்மைபொருந்திய ஓர் இளம்புருடனை மிக நன்றாகத் தேர்ந்தெடுத்து அவன் கேட்குந் தொகையையும் கொடுத்து அன்றிரவு அவள் துய்த்தற்காகவேண்டும் கொழுநனைத் தீர்மானித்து அவ்விருவரையும் ஆங்கு நன்கு துய்த்தல்வேண்டும் வினைகளை பொருமிக யுக்திசெய்துவிட்டு நாம்கோரிய வேசையரில்லம் செல்வதுதான் தக்கநிலையான நீதியாமென்பதையும் நன்கு தெளிவோமாக. பெண்மக்களான எமது வர்க்கத்தார்க்கு விரோதமாயும், வஞ்சமாயும், உலவிவரும் சில நூற்களும் நமது பாவிக்கடவுளாலே ஆக்கப்பட்டனவேனினும் அவர் மையமாகத் தோற்றப்படுமிறை அக்கினிபகவற்கு இரையாகக்கொடுத்துவிடுவோமாக. தற்கால புதிய நாகரிகங்களையும், பழயகாலத்து [illegible]யவகைச்சட்டங்களையும் சீர்செய்வனே துக்கி நிகழ்

கால வருங்கால வாழ்க்கைக்காகவேண்டும் சில முதல் நாகரீகங்களை நமது நாடெங்கும் பரப்பப் பயிலுவோமாக, ஒரு ஆண்மகன் தானாகவே ஒரு மகளிரை பலதாரம் வலிதாகவிரும்பி அவ்விருவரும் துய்த்த காமாதிபோகத்தில் இன்பம் மிகுதியாவருக்கென்பதையும், ஒரு பெண்பாலானவள் ஒரு புருஷனை பலதாரம் தானாகவே வலிய விரும்பி அவ்விருவரும் துய்த்த காமாதிபோகத்தில் இன்பமிகுதி யாவருக்கென்பதையும் நன்கு தெரிவோமாக. ஒரு பெண்பாலானவள் தன் கணவனையேயெனினும் தானாக வலிதாகவிரும்பி பலவித இன்மொழிகளாலே அழைத்து காமாதி இன்பத்தை கொடுக்கவேண்டுமாயின் பெண்வர்க்கங்கள் எந்த நிலைமையிலிருக்கவேண்டுமென்பதையும் நாம் நன்கு உணர்வோமாக. எய்தற்கரிதான மனிதச்சரீரத்தை எய்திய இந்த ஞான்றே உயர்தர நாகரீக நிலயத்திற்றங்குவோமாக. ஒருகணப்போழ்தேனும் வீண்காலம்போக்காதொழுகுவோமாக. பெண் வர்க்கங்களுக்கு சர்வசுதந்தரங்களையும் கொடுக்காதவரை நமக்குரித்தான சர்வசுதந்தரங்களும் எத்துணைப்பிரையாசைப்படினும் அமையாதாமென்க. நம்மையும் நமது நாட்டையும் பிடித்துக்கொண்டாடும் (அறிவின்மையென்னும்) பிசாசுகளை ஓட்டுவதற்கு இஃதொரு மந்திரோபாயமெனத் தெளிவோமாக.

59. ஓய் அத்தன்மீர்! நமதுவர்க்கத்தாருள் பெரும்பான்மையோர் வர்த்தக விஷயமாய் நம் இந்தியத்தலைநகரங்கள் ஒவ்வொன்றினும் இலங்கை, பர்மா, மலாய் முதலியவைகளைச்சார்ந்த ஏனைய ஒவ்வொரு பெரிய நகரங்களினும் வருஷக்கணக்காய் ஆங்காங்கு வாசஞ்செய்துவந்தவர்களே யாவர். அங்ஙனமாக ஆங்காங்குடைத்தான போஸ்ட்டாபீஸ் முதலிய பல கவர்ன்மெண்ட் ஆபீஸ்களினும் பெருந்தகையான பல வர்த்தகச்சாப்புகளினும் சில மேனாட்டுப் பெண்மக்கள் எந்த மாதிரியான நடையுடை பாவனைகளோடும் உத்தியோகம் புரிகிறார்களென்பதை நன்கு செவ்வையாக ஒளிமழுங்காத நுமது இரண்டுகண்களினாலும் பார்த்திருக்கிறீரல்லவா? ஆங்காங்குடைத்தான ரெயில்வேத் துறைமுகங்களினும், கப்பற்றுறைமுகங்களினும், கடற்கரையோரங்களினும் அன்னவர்கள் எம்மாதிரியாக உலாவுகிறார்களென்பதையும் நீர் நன்றாக கண்டிருக்

கிறீரல்லவா? ஆங்காங்கு மேனாடுகளிலிருந்துவரும் சில கப்பல்களையும், அதனில் யாத்திரையாக வாசஞ்செய்யும் அந்நாட்டு ஆண்மக்களோடு பெண்மக்களையும் நன்கு தெரிந்திருக்கிறீரல்லவா? அச்சமயத்தில் நமதுநாட்டு எருமைக்கன்றுகள்போன்ற நமது தாய்வர்க்கத்தாரையும்பற்றி ஆலோசித்திருக்கிறீரல்லவா? எந்தக்காலமும் அன்னவர்களின் கைகளில் பேப்பர்களும் சில புத்தகங்களும் தங்கியிருப்பதையும் பார்த்திருக்கிறீரல்லவா? அறிவின்மையும், வீண்கர்வமும், பொறாமையும் குடிகொண்ட ஏ முழுமுண்டாகாரமே! அன்னவர்கள்தான் மனிதவர்க்கமோ யாமுந்தான் மனிதவர்க்கமோ? அன்னவர்கள்தான் உயர்ந்த வருணமோ யாமுந்தான் உயர்ந்தவருணமோ? நமது நாட்டுப் பெண் சகோதரிகள் தங்களின் பழக்கவழக்கத்தால் கேவலம் ஒருநாள் புகைவண்டி யாத்திரை செய்யினும், குடரொருங்கும் வெளியுறுமாறு குடங்குடமாக வாந்திகொட்டுவார்கள் போலுமன்றோ காணப்படுகிறது. அந்தோ நமது இந்தியத் தமிழ்நாட்டின் பெண்வர்க்கத்தின் கதி இவ்வாறோ!

60. ஐயீர்! போனது போகட்டும் கழிந்த வியவகாரங்களை எண்ணித் துக்கிப்பதில் பயனில்லை. இனிமேலாவது பெண்மக்களை உயர்ந்த நாகரீகநிலையத்துக்குக் கொண்டுவாருங்கள். தற்காலவரை ஆண்மக்களில் எந்த விதமாக யோக்கியர்களும் அயோக்கியர்களுமாக தோற்றப்படுகிறார்களோ அஃதே தன்மையதாகத்தான் பெண்மக்களும் கற்றுத்தேர்ந்து ஆண்மக்களைப்போன்று சர்வ சுதந்தரங்களையும்பெற்று நடிக்க முன்வருங்காலத்திலேற்படுவார்கள். அதனைப்பற்றி தற்காலவரை யொன்றும் கவலைவேண்டுவதில்லை. ஆகலின் பெண்மக்கள் தக்க பருவகாலங்களினுங்கூட வாசிக்கவும், சில கைத்தொழில் முதலியவற்றைக் கற்றுக்கொள்ளவும், கணக்கு முதலிய உத்தியோகங்கள் செய்யவும், பல அயல் நகரங்களுக்கும் தங்களின் புருஷரோடுசென்று வர்த்தகங்கள்செய்யவும் உடைத்தான கல்விகளைக்கற்றுக்கொள்ளப்போதிய சட்டங்களையும், விதி விலக்குகளையும் தீர்க்க ஆலோசனை செய்வதற்குத் தகுந்த மீட்டிங்குகள் கூட்டி இந்தக்கணமே தீர்மானம் செய்யுங்கள். மேனாட்டுப்பெண்மக்கள் யுத்தஞ்செய்யவுங்கூடப் பயின்று

வருகிறார்கள். இன்னும் சில ஞான்றுகளுக்குள்ளே பெண்வர்க்கங்களுக்கு எந்த வாற்றானும் நவீனக்கல்விமுதலிய நாகரீகங்களொருங்கும் அபிவிருத்தியாகிச் செழித்து சிறப்படைவார்களென்பதிற் சந்தேகமில்லை. அங்ஙனமானால் அந்தந்தக்காலங்களில் ஏதோ சில விஷயங்களைக்கருதி சபை அல்லது மீட்டிங்குகள்கூடிப் பேசப்புகுவார்கள். அப்பொழுது நமது பெண் வர்க்கத்தாரை சின்னாட்களுக்கு முன்னர் நமது ஆண்வர்க்கத்தார் இன்ன இன்ன விதங்களில் கேவலப்படுத்தியும், தங்களின் அடிமைகளாக இயங்கச்செய்தும், சில விலங்கினங்களாகக்கருதியும் அடக்கியாண்டுவந்தார்கள். அதில் நின்றும் நம்மில் இன்னாரின்னாரால் இவ்வித நாகரீக தசைக்கு வந்தோமென தங்களைத்தாங்களே புகழ்ந்துகொள்வதற்கிடமின்றி இன்ன இன்ன காலங்களில் இன்ன இன்ன விதமாக நமது ஆண் வர்க்கத்தாராலேயே இவ்வித நாகரீகங்களை அடைந்தோமென (அவர்கள் பூரணமாக நிறைந்த நாகரீகதசைக்கு வந்த) அந்தக் காலங்களினுங்கூட நுங்களையே புகழ்ந்துகொண்டாடவேண்டும் வழிகளை முன்னதாகத் தேடிக்கொள்ளுங்கள்.

61. அத்தன்மீர்! என் அருமைச் சகோதரிகளுக்காகவேண்டும் கற்பென்னும் விஷயத்தைப்பற்றி சிறிது கவனிப்போம். அஃதாவது "கற்பு" எனப்பெறும் சொல்லின்பொருளை நமது ஔவையம்பிராட்டியார் "சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருளைசெவ்வனாடிச்செறித்தினிதுவிளக்கித் திட்பநுட்பம் சிறந்தன சூத்திரம்" என்பதற்கிணங்க "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என சில்வகை எழுத்துக்களடங்கிய இவ்வொரு சிறிய சூத்திரத்தால் எத்தகைய சிறியார்க்கும் தெற்றெனவிளங்குமாறு மிகச்செவ்வனே நன்கு விளங்கக் காட்டியிருக்கிறார். எனினும் கற்புயென்பதற்கு, கல்வி, கற்பனை, நீதிநெறி, மகளிர் நிறை, மதிலுண்மேடை, மதில், முல்லைக்கொடி, முறைமை, விதி என்னும் பல பொருள்களையும் குறிக்கிறதென்பது அறிஞர்களெவரும் உணர்ந்த விஷயமாகும். இதில் "மகளிர் நிறை" ஒன்று தவிர ஏனையவெல்லாம் யாவர்க்குறியது? ஆண்பாற்கும் பெண்பாற்கும் பொதுவாகவேண்டற்குறியதா? அல்லது பெண்பார்க்கு மாத்திரமுரியதா? மேற்கண்ட பல பொருள் குறித்த கற்பென்னும் ஒரு வார்த்தையை பெண் வர்க்கங்களுக்கு

மட்டுமே உரியதென எவருமெளிதில் உணரத்தக்கதாக நம்முடைய செந்தமிழ் ஞாலமெங்கணும் பரவச்செய்து, தற்காலமதனைவிட்டு சிறிது விலகி நிற்கும் இறந்தகால வழக்கியல்களையும் அதன் மகத்துவங்களையும் ஆய்ந்துநோக்குமிடத்து மிகுதியும் வியப்பேயுறுகிறது. நமது வகுப்பைச்சார்ந்த எந்த நூற்களை நோக்கினும் கற்பென்னும் பதத்திற்குக் கீழ் பெண்வர்க்கங்களைக்குறித்தே (பல விஷயங்களை அடக்கி) வசன வடிவமாயோ செய்யுள் வடிவமாயோ ஒருங்கும் வரைந்துகிடக்கிறது. கற்பென்னும் பதமானது மகளிர் நிறையென்ற ஒருபொருட்டன்மையாற்றானே பெண்வர்க்கத்தாரை மட்டும் தனியாக பாதித்து நிற்கிறது. ஏனைய எண்வகைச்சொற்களும் ஆண்பால் பெண்பாலென்னும் இருபாற்கும் பொதுவைத் தானே பாதித்து நிற்கிறது. இங்ஙனம் கற்பென்னும் பதமானது இவ்வாறு நிற்க, நம்முடையதொல்லாசிரியன்மார்கள் யாதுகாரணம் பற்றியோ அவ்வவர்களாலே ஆக்கிவைக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு நூற்களினும் கற்பென்னும் அங்கத்தில் பெண்வர்க்கங்களை குறித்தே பூரணமாக பல நியாயங்கள் வரைந்துகிடப்பனவற்றைக் காணப்படுகிறோம். ஆனால் கற்பென்னும் பதமானது இன்ன இன்ன பொருள்களையெல்லாம் தழுவிநிற்கிறதே நாம் பெண்பாற்கு மட்டும் உரியதாக்கிவிடுகிறோமே என்பதையும், "சமன்செய்து சீர்தூக்குங்கோல்போலமைந்தொருபாற்கோடாமைசான்றோர்க்கணி' என்பனவாதிய நடுநிலைகளையும் கவனியாது எந்த நூற்களையும்செய்திருக்கமாட்டார்களென்றே மிகத்துணிவாகக்கூறவும் செய்யலாம். எந்தவாற்றானும் பெண்பால்களைப்பற்றி கவனிக்கப்புகின் ஆயிரத்துக்கொருவர்கூட உயர்தரக் கல்வி கற்றவர்கள் தற்காலத்திற்காண்பது மிக அரிதாகவிருக்குங்கால் இறந்தகாலத்துள்ள நம்முடைய செந்தமிழ்நாட்டுப் பெண்மக்கள் எவ்வாறிருந்திருப்பார்களென்பதைப்பற்றி எற்றும் கவனிக்கவேண்டியதில்லவேயில்லையாயிற்று. இன்னும் சிலர் வரன்முறையின்றி யியனும் சில காட்டுமாட்டு ஆண்களைப்போன்று தங்களைத் தாங்களே கன்னிலையழியாவண்ணம் பாதுகாத்துக்கொள்ளும் வன்மையை இழந்தவர்களாகவேதான் தோற்றப்படுகிறார்கள். ஆனதுபற்றியே அவர்கள் தங்களைத்தாங்களே பாதுகாத்துக்கொள்வதற்காகவேண்டும் பலமார்க்கங்களையும்

மிகச்செவ்வனே வலியுறுத்துவான் "மகளிர் நிறை" என்ற பதம் ஒன்றேயாதல்பற்றி அதன் உயர்வான சிறப்புக்கொண்டே கற்பு என்னும் பதமானது ஏனைய பொருள்களை விளக்கும் எண்வகைச் சொற்களையும் யாம் ஏற்றுக்கொள்ளமாட்டேமென விடுத்து,மகளிர் நிறையென்ற ஒருபெரும்பொருளே யாமாவேமென உரித்தாக்கிக் கொண்டும், இன்னும் மங்காத புகழேற்றும், நம்முடைய புராணேதிகாசங்களானும், பெருந்தகையான நாவல்லவர்களானும், பெரிய மேதாவிகளானும், இன்னும் ஏனைய பல நூற்களானும் உலாவி நம்முடைய செந்தமிழ் ஞாலமெங்கணும் பரந்து வியனுகிறதாம் என்க. ஆய்ந்து நோக்குமிடத்து இக்கருத்தினைக்கொண்டேதான் நம்முடைய தொல்லாசிரியன்மார்களும்பெண்பால்களுக்குமட்டுமே உரியதாக்கினார்களாமென்க. அவர்களின்மீது எந்தவாற்றானும் எவரானும் குறைகூறமுடியாதாமென்க. ஆனால் தற்காலம் அக்கற்பென்னும் பதத்தை ஆண்பால் பெண்பாலென்னும் இரு பகுதியாரின்மீதும் தாக்கல் செய்யவேண்டுவதும் நிகழ்கால வருங்கால உலகவழக்கியல்களை யொட்டி நூல் நோற்க புகுந்தார்மேற் கடமையாயிற்றாமென்க. "இறந்தது விலக்கல் எதிரது போற்றல்" என்னும் உத்தியைத் தழுவியாமென்க.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவலகால வகையினானே" என்றும்

"முன்னோர் நூலின் முடிபொருங்கொத்துப்
பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி
யழியா மரபினது வழிநூலாகும்" என்றும்

வரும் நன்னூற் சட்டத்தையும் உணர்க. இங்ஙனம் பெண்பால்களுக்கே கற்புநிலை இன்றியமையாதுவேண்டும் சாதனமாமென்று நம்முடையபல நூற்களினுமாக கிடந்தனவற்றையெல்லாமாராய்ந்து ஒருங்குசேரத் திரட்டி ஸ்ரீமான் பொ. பாண்டித்துரைத்தேவரவர்களாற் றொகுத்துக்கிடக்கும் பன்னூற்றிரட்டென்னுந் தொன்னூற் திரட்டின்மிசை யோரங்கமாகக்கண்ட கற்பென்னும் அங்கத்தை பெண்பகுதியார் கவனித்துக்கொள்க. அஃதேமாதிரியாக ஆண் பகுதியார்களும் கவனிக்கவேண்டுமாறு சில செய்யுட்களை யானே செய்து இதன்கீழ்தருகிறேன். சகோதரர்கள் கவனித்துக்கொள்க.

தக்கநன்மனையாடிருந்தாணிதம்
பக்கனின்றுபணிந்தவர்பான்மொழி
யொக்கக்கேட்டுவந்திறசகடோட்டுவார்
மிக்கவானுலகேத்தவிருப்பரே

வம்பியாயினுமாதவியாயினும்
நம்பிக்கற்புடைநாயகனுவது
வம்பர்சூழுலகத்திடைவாழினும்
அம்புவிக்கொளிராதவன்போலுமே

பாவியாயினும்பாதகியாயினும்
ஆவிபோதற்கவள்குறியாயினும்
சாவியாயினும்சாம்பவியாயினும்
ஓவியநிறையோம்புதலாண்மையே

ஆண்மையீதென்றறையப்புகுவமேல்
நானுகற்புடைநாயகியிற்பலர்
ஊணளித்தவொருத்தியென்றுன்னிடும்
ஆண்மையாண்மகன்கற்புடையாண்மையே

மக்கண்மைத்துனர்மாமியர்மாமனர்
தக்கதன்மனைதாயர்சகோதரர்
மிக்கதந்தைவிழுமியின்மற்றுளார்
ஒக்கவுண்பித்துத்தானுணற்கற்பரோ

வையங்காணவகுத்ததிருமனைத்
தெய்வமாமெனத்தேர்ந்துவணங்குவான்
வையநீடுவளர்ந்துசெழித்திடப்
பெய்யெனப்பெய்யும்பேராருள்வானமே

வானம்பெய்யும்வழிமுறையின்படித்
தானமல்குந்தவங்களுநல்குமே
ஆனதன்மனையாணையினிற்குமோர்
வானமன்மகன்வாழுநன்னாட்டிலே

கற்புடையவன்வாய்ச்சொல்லைக்கடவுளுங்கனிந்துகேட்கும்
கற்புடையவன்வாய்ச்சொல்லைக்கயவருங்கடக்கமாட்டார்
கற்புடையவன்வாய்ச்சொல்லேகருணையாகமங்களாகும்
கற்புடையவன்வாய்ச்சொல்லேகாரிருணீக்குமன்றே

கற்புடையவனேகர்மகர்த்தனும்ஞாலம்வாழ்கக்
கற்புடையவனேதர்மகர்த்தனும்யோகமாகக்
கற்புடையவனேயோககர்த்தனும்ஞானமாகக்
கற்புடையவனேஞானகர்த்தனுங்காணின்மாதோ

கற்புடையவன்காற்பட்டகளர்நிலநிலமதாகும்
கற்புடையவன்காற்பட்டகங்கையுங்கங்கையாகும்
கற்புடையவன்காற்பட்டகால்கணீர்க்கால்களாகும்
கற்புடையவன்காறுங்குங்காயமுங்கயிலையாமே

கற்புடையவன்பாற்பட்டகல்வியேகல்வியாகும்
கற்புடையவன்பாற்பட்டசெல்வமுங்கனகமாகும்
கற்புடையவன்பாற்பட்டகருணையுங்கருணையாகும்
கற்புடையவன்பீற்பட்டகணவியுங்கணவியாமே இ—ம்.

ஸ்ரீ நாட்டுக்கோட்டைவைசியமகாசமுகத்தின்நறும்புகழ்நிலைகள்
முன் 30–வது புத்தகம், 627–வது பக்கத்தொடர்ச்சி.

இங்ஙனமாக, இனி நமது தேசச்சரித்திரத்தையும்பற்றி ஒரு சிறிது கவனிப்போம். அஃதாவது டவுண்பக்கங்களில்நமது சிறுவர்கள் "இந்து தேசச்சரித்திரம்" என்றதலைப்பெயரோடுகூடிய புத்தகம் ஒன்றைத்தங்களின் அழகியகரங்களிலேந்திக் கல்விச்சாலைக்குச் செல்லுகிறார்களே கண்டீர்களா? அதில் பூர்வகாலத்தில் நம் தேயத்தவர்கள் அனைவரும் யானை, பாம்பு, ஆடு, மாடு, மீன், ஆமை, முதலிய மாம்சங்களையே புசித்துவந்தார்களென்றும், அக்காலத்தில் பட்டினமாவது, கிராமமாவது, பாட்டையாவது, வீடாவது,ஒன்றுங்கிடையாதென்றும்; இங்கும் அங்கும் சில காட்டுமனிதர்கள் காடிகளைப்போல குகைகளிலேவசித்து வந்தனரென்றும்; சிலர் குரங்குகளைப்போன்று மரங்களிலே படுத்துத்தூங்கிக்கொண்

டிருந்தனரென்றும்; அவர்கள் மிகக் குள்ளமாகவும், கருப்பாகவும்,
விகாரமாகவும், நிருவாணமாகவும் அழுக்குப்பிடித்திருந்தனரென்
றும்; அவர்கள் காய், கனி, கிழங்குகளையும் மான் பன்றி மாமிசங்
களையுங்கூடத் தின்றுவந்தார்களென்றும், அக்காலத்தில் கத்தி,
கோடரி, மண்வெட்டி முதலிய ஆயுதங்களில்லையென்றும்; அவை
களைச் செய்யத்தெரியாதென்றும்; கூர்மையாயுள்ள சக்கிமுக்கிக்கற்
களால் நெருப்பினையுண்டாக்கிக்கொள்வதென்றும், அவைகளாலே
யே அறுத்தல் வெட்டுதல் முதலிய தொழில்களைச் செய்வார்க
ளென்றும்; இன்னும் இவைபோன்ற பலவிதமான கீழ்த்தர நாக
ரீகங்களிலேயே நம்முடையநாடுகள் இருந்தனவென்றும் ஆராய்ச்
சிவல்லுநர் கூறுகிறார்கள் என நமது மாணவர்கள் பாடமோதிப்
பயின்றுவருகிறார்களே அதனையுங் கேட்டீர்களா? பொதுவாகக்
கவனிக்குமிடத்து ஒருதேசச்சரித்திரத்தைவரையப்புகுவார் ஒரு
வர்க்கு அத்தேசத்தின் சரித்திரவரலாறு சரிவரத்தெரிந்திருந்தா
லும், அல்லது தெரியாது ஏதோவொருவாறு கண்டமட்டில்வரை
யப்புகுந்தாலும், பூர்வம் இத்தேசத்தில் பட்டினமாவது, பட்டை
யாவது, கிராமம் வீடுகளாவது இல்லாது வெறுங்கட்டாந்தரையா
கவே இருந்தனவென்றும், மனிதவர்க்கத்தார் ஒருங்குநிருவாண
மாகவிருந்தார்களென்றும், மரத்தூறுகளிலும், மரக்கொம்புகளிலும்,
குகைகளிலும் ஒருவகைக்குரங்கினங்களைப்போன்றும், கரடிகளைப்
போன்றும், ஆடுமாடுகளைப்போன்றும் வசித்தும் தூங்கியுங் காலங்
கழித்து வந்தார்களென்றும், உண்ணத்தகாத மாமிசவுணவுகளை
யும் உண்டுவந்தார்களென்றும், கல்வியறிவு, பாஷாஞானம், சமயக்
கொள்கை, கடவுள்பக்தி, ஆசாரத்திருத்தமுதலியனவொன்றுமே
இல்லாதிருந்தனரென்றும், சாதாரணம் இக்காலத்திலுங்காணப்
படுகிற வேடர்வில்லியர், குறவர் முதலானவர்களைப்போன்றேமனி
தவர்க்கத்தாரொருங்குங்காணப்பட்டார்களென்றும் இன்னும்
இவைபோன்ற பலகீழ்த்தரவியற்கைகளிலேதான் இத்தேசம் இய
ங்கிக்கொண்டிருந்தனவென்றும் வரைந்து வருகிறார்கள். இங்ஙனம்
வரைந்து வந்தாற்றான் அவர்களை ஆராய்ச்சி வல்லுநரென்று பல
ரும் புகழப்படுவார்கள்போலும்! அங்ஙனம் வரைந்திருப்பிற்
றான் அத்தேசச்சரித்திரத்திற்கு அழகாம்போலும்! அங்ஙனமானற்

றான் அதனைக்கற்கும் மாணவர்களுக்கும் அறிவுவிளக்கமாம்போ
லும்! காலக்கிரமத்தில் வானரமே நரராகமாறுகிறார்களெனக்கூறு
வார் சிலரின் கூற்றுப்போலுமன்றோ காணப்படுகிறது. இத்தகை
ய அறிவுளார் சிலரின் பயனிற் கூற்றுக்களோ நமது பாரதமாதா
வின் சிறார்களுக்குப்பாடமாதல்வேண்டும்? இஃதெவன் காலகதி
யாம்போலும்! தங்களின் சிற்றறிவுக்கு எட்டாத சில விஷயங்க
ளில் நுழைந்து ஏனோ சங்கடப்படுதல்வேண்டும்? பூர்வகாலமென்
றால் ஒருவாறு எத்தனைவருடகாலங்களுக்குமுந்தியதெனநிருண
யிக்கலாம்? கால அளவைக்கவனித்து தீர்மானிக்கப்புகுவோமானா
ல் ஒருவாறு அஃது சாத்தியமாகிற காரியமாகவுந்தெரியவில்லையே.
யாங்ஙனமெனின்? காலத்தையளவுபடுத்திய நம் பரதகண்டத்துப்
பெரியார், நாழிகை, நாள், வாரம், மாஸம், வருஷம், யுகம் இங்ஙன
மாகப்பிரித்திருக்கிறார்கள், நாழிகை மாறிமாறிவருவதைப்போன்
றும், நாள் மாறிமாறி வருவதைப்போன்றும், வாரம் மாறிமாறி
வருவதைப்போன்றும், மாஸம், வருஷம் மாறிமாறி வருவதைப்
போன்றும், பதினேழிலக்ஷத்து இருபத்தெண்ணாயிரம் வருஷங்க
ளாகிய காலவட்டத்தைக்கொண்ட கிரேதாயுகமும், பன்னிரண்டு
லக்ஷத்துதொண்ணூற்றாறாயிரம் வருஷங்களாகியகாலவட்டத்தைக்
கொண்ட திரேதாயுகமும், எட்டுலக்ஷத்து அறுபத்துநாலாயிரம்
வருஷங்களாகிய காலவட்டத்தைக்கொண்ட துவாபரயுகமும், நா
லுலக்ஷத்துமுப்பத்திராயிரம் வருஷங்களாகிய காலவட்டத்தைக்
கொண்ட கலியுகமும் ஆக மொத்தம் 43 லக்ஷத்து 20 ஆயிரம்
வருஷங்களாகிய காலவட்டத்தைக்கொண்ட எத்தனையோ சதுர்
யுகங்கள் மாறிமாறி நிகழ்ந்திருக்கிறதாக தற்கால நாகரீகதசையுட்
டங்கிக்கிடக்கும் எத்தனையோ பலபெரியார் ஒப்பத்தகுந்த அநேக
ரிக்கார்டுகள் காணக்கிடக்கின்றன. மேலும் இக்காலத்தை யளவு
செய்திருக்குந்தன்மையொன்றிலிருந்தே நமது பாரதகண்டம்
எந்தக்காலத்தும் நாகரீகமான தன்மையினுடைத்தானதென்பதை
எவர்கள்தான் மறுக்க முன்வருவார்கள்? இக்காரணங்கொண்டே
தான் இப்பெரியவோர் தீபகல்பத்துக்கு இதற்குமுன்னுள்ள எந்
தப்பெரியாரும் உண்மையான ஒரு சரித்திரமுறையைக்கண்டு
பிடித்து எழுதிவைக்க முன்வாராமற்போனது. கவனிக்கப்புகுந்
தால் அஃது எவர்களாலும் சாத்தியமாகாதவோர் காரியந்தான்.

மிகச்சுருக்கமான வோர் கால அளவைக்குள் எந்த தேசம் நாகரீகதசைக்கு வந்திருக்கிறதோ அந்தத்தேசத்திற்குத்தான் அத்தேசச்சரித்திரமும் மிகநன்றாகஎழுதப்பட்டிருக்கும். எந்தத்தேசத்துக்குத் தேசச்சரித்திரம் முறையாகக்காணப்படவில்லையோ அந்தத் தேசந்தான் பூர்வகாலமென எந்தக்காலத்தை எந்தமேதாவிகள் குறிக்கப்படுகிறார்களோ அந்தக்காலமுதற்கொண்டே நாகரீகதசையில் வாழ்ந்து வருகிறதாக ஒவ்வொரு பேரறிவாளர்களுந்தெரிதல் வேண்டும். மேலும், ஒவ்வொரு யுகங்களின் சரித்திரத்தையும்பற்றிக் கவனிக்கப்புகுந்தால் அஃதும் ஒரு சாகரம் போன்றே பெருகுவதாகும். ஆகவே காலஅளவையைக் கணக்கிட்டுக்கொண்டு பூர்வகாலச்சரித்திரத்தைக் கவனிக்கப்புகுவது அஃதோர் பெரிய மடத்தன்மையேயாகும். அங்ஙனம் கவனிக்கப்புகும் ஒருவனும் அறிவுடைப்பெரியானென ஆகவுமாட்டான். இது நிற்க

ஐயீர்! இவ்வுலகந்தோன்றிய காலமென நிருணயிக்கலாமா? அங்ஙனமானால் ஒவ்வொரு ஆன்மாவும் சரீரத்தோடு கூடிப்பிறக்கும்பொழுது நமது ஆராய்ச்சிவல்லுநர் கூறுவது போன்றுதான் காணப்படுகிறது. அதுதான் மிகப்பொருத்தமாயுமிருக்கிறது. நமது ஆராய்ச்சி வல்லுநரும் இந்த மார்க்கத்தில் வல்லுநரேயாகின்றார். அதனைப்பற்றி ஒருசிறிதுவூன்றி விவரிக்கப்புகுவோம். அஃதாவது ஒரு மனுஷியக்குழந்தை பிறந்த காலத்தில், எவ்விதநாகரீகமுமின்றி, எவ்விதமானஞானமுமின்றி ஒருசிறிதளவுபேசும்பழக்கமுமின்றி, உயர்தரமான எவ்விதவுணர்ச்சியுமின்றி, மானாபிமானமுதலிய மனிஷியத்தன்மை கொஞ்சங்கூட இல்லாது விலங்கினக் குட்டிகளைபோன்று காணப்பட்டார்களென்பதை எவர்கள்தான் மறுக்கக்கூடும்? அக்காலத்தையே இஞ்ஞாலத்துக்கு பூர்வகாலமெனக் கூறல் எந்த மார்க்கத்தாற்றான் இழுக்காகும்? ஒரு சரீரத்தைவிட்டு ஆன்மாநீங்கியவோர்காலத்தையே அந்தமெனக்கூறின் மிகப்பொருத்தமேயாமன்றோ? இஃதல்லாத மார்க்கத்தால் பூரண அறிவோடுகூடிய பிரமசொரூபமாகத்தோற்றப்படுகிற சர்வாண்டபிண்ட சராசரங்களுக்கும் யாங்ஙனம் ஆதியந்தம் நிகழும்? அங்ஙனம் நிகழுமாமென்று கற்பனை செய்வான் கடவுளேயெனினும் அவனைக் கடவுளேயாமெனக்கருதுவார்

யாவரேயாவர்? செல்லல், நிகழல், வருங்காலமூன்றையுங் கடந்த நித்தியமாமென்பதை எவர்கள்தான் மறுக்கக்கூடும்? இன்னும் இவைபோன்ற பலவிதமான நியாயாநியாயமார்க்கங்களையும் ஒருசிறிதளவுங்கூடத் தங்களின் தூய்மையான பேரறிவாண்மையென்னுந் துலாக்கோற்றட்டுகளிலிட்டுச் சீர்தூக்கிநோக்காதவண்ணம் அருமையான தேசச்சரித்திரங்களைக் குளறுபாடுசெய்யும் மகாபெரியவர்களைப்பற்றி யாமெவன் செய்கிறது. மேலும், நமது மாணவர்களையும், அவர்களுக்குக் கற்பிக்கப்படுங்கல்விகளையும், கற்பிக்கும்முறைகளையும், கல்விச்சாலைகளில் நிலைநாட்டியிருக்குங் காலக்கணக்கையும், அவர்களுக்குப்போதிக்கும் ஆசிரியன்மார்களையும், போதனாசக்திகளையும் பற்றிக் கவனிக்கப்புகுந்தால் அஃதோர் அளவுசங்கையில்லாத நிருத்தமார்க்கங்களையே வேண்டிநிற்கிறது. அவைகளையெல்லாம்பற்றி ஈங்ஙனம் எடுத்துக்கொள்ளல்வேண்டும் ஆவசியகமுமில்லை. நிற்க, எத்துணையோ சீலம், கௌரவம், பொறை, நாகரீகம், பேரறிவாண்மை, தயை, அரசபக்தி, கடவுள்பக்தி, சர்வமதசகோதரத்துவம், ஒருமைப்பாடு முதலிய பலவித நல்லொழுக்கங்களும் இயற்கையிலேயே நிறைய பெற்றுப் பெரிய தேவர்கல்பகதரு காமதேனுவைநிகர்ப்ப ஆயிரம் நாவினைப்படைத்த ஆதிசேஷனாலும் வரையறுத்துக் கூறுவதற்கியலாத பெரும்புகழோடுகூடிய நமதுபாரதமாதாவின் வதனம்போல்வதான எங்களின் நாட்டுக்கோட்டைவைசியமகாசமுகமானது எத்துணையோ பன்னெடுங்காலங்களுக்கு முன்னரே இருந்து உயர்தர நாகரீக தசையுட்டங்கிவாழ்ந்து வருகிறதை ஒருசிறிதளவு ஆராய்ச்சிசெய்யாமலும், சைவசமயத்துக்குநேத்திரம்போல்வதாயுள்ள ஒருபெரியமகாசமுகமென்பதை ஒரு சிறிதளவுதெரிந்துகொள்ளாமலும், இயற்கையிலமைந்துகிடக்கும் சரித்திரச்சுருக்கத்தையாவது எங்கள்பாலொருவரிடங்கேட்டேனுந்தெரிந்துகொள்ளாமலும், "இரத்தின தனமகுட வைசியர்" என நிகழ்ந்த காரணப்பெயரின் காரியத்தை ஒருசிறிதளவு வூன்றிநோக்காமலும், வரன்முறையான கட்டுக்களையெல்லாம் ஒருசிறிதளவுகூட எண்ணிநோக்காமலும், நகரக்கூட்டம், கோயில்வாசற்கூட்டம், மடத்துவாசற்கூட்டம், சர்வநகரக்கூட்டம் முதலிய மிகுதியும் அங்கமான சங்கங்களின் மகத்துவங்களைத் தங்களின் உலக்கைக்கொழுந்து

போன்ற நுண்ணறிவின்பாற் சேர்த்துக்கோக்காமலும், எத்தனை தாஞ்சிறந்த மனுஷியத்தன்மை பொருந்தியாரிடத்து சத்திய மார்க்கம் நிலைநிற்குமென்பதைத் தங்களின் கனவிலுங்கூட நினையாமலும், "நகரத்தார்" என்ற பெயர் யாதுகாரணம்பற்றி வந்ததென்பதை நன்கு சிந்தியாமலும், எவ்விதமான பலவித வியவகாரங்களையும் ஏனைய வொருவகுப்பாரிடம்போய்த் தீர்த்துக்கொள்ளாமல் இப்பெரிய மகாசமுகமே தீர்த்துக்கொள்ளும் இயற்கை வன்மையை ஒருசிறிதளவு எண்ணிநோக்காமலும், வர்த்தக மார்க்கத்தில் நமது வகுப்பாரினும் மாட்சியுடையாரே எனமதியாமலும், இப்பெரிய மகாசமுகமானது ஏனையவோர் சமுகத்தாரிடத்து அடிமைத்தொழில் புரியாதென்பதை யுணராமலும், தருமகைங்கரியத்திற்றக்கவோர் சமுகமென்பதை தக்கவாறுநினையாமலும், சரித்திரம்வரையவேண்டுமுறையைச் சற்றுந்தெரியாமலும் "நெல்ஸன்மேனுயல்"(Nelson Manuel)"மெதுராக்கண்ட்ரி" (Madura Country) "சதர்ன்இண்டியா" (Southern India) ஆகிய சில நூற்களில் எங்களின் மகாசமுகத்தைப்பற்றிப் படிக்கவும், கேட்கவும், பார்க்கவும், நினைக்கவுங்கூடாத சில அசங்கியமான வார்த்தைகளைப் புகுத்திக் கொஞ்சங்கூட முன்பின் யோசிக்காமல் வரைந்து வைத்திருக்கிறார்கள். காரணம் அவர்களின் மௌட்டிகத்தன்மையே. பொதுவாகக்கவனிக்குமிடத்து நமது பாரதமாதாவுதரத்திலே ஜெனித்துசாத்விகக்குணபதார்த்தங்களையேயுண்டுவளர்ந்துபல அரியபெரிய நூற்களிலேபயின்று,பெரியமேதாவிகளெனப்பெயரேற்றுக் கொண்ட சிலருக்குங்கூட நமது பூர்வீகச்சரித்திரங்களின் இயற்கையாதியகுணாகுணங்கள் இஃதெனவுண்மையில் விளங்காமற்கிடக்குமேல், காலக்கிரமத்திற்பிள்ளைபூச்சிகளெல்லாஞ்சுண்டெலிகளாகமாறிற்று. சுண்டெலிகளெல்லாம்பின்னர், எலிகளாகமாறிற்று. எலிகளெல்லாம்பின்னர் மூஞ்சூறுகளாகமாறிற்று. மூஞ்சூறுகளெல்லாம்பின்னர் பெருச்சாழியாகமாறிற்று. பெருச்சாழிகளெல்லாம்பின்னர் பூனைகளாக மாறிற்று. பூனைகளெல்லாம்பின்னர் நாய்களாக மாறிற்று. நாய்களெல்லாம்பின்னர் ஓநாய்களாக மாறிற்று. ஓநாய்களெல்லாம்பின்னர் நரிகளாக மாறிற்று. நரிகளெல்லாம்பின்னர் சாதாரணக்குரங்குகளாகமாறிற்று. சாதாரணக்குரங்குகளெல்லாம்

பின்னர் ஆஸ்திரேலியாக் குரங்குகளாகமாறிற்று. ஆஸ்திரேலியாக்குரங்குகளெல்லாம்பின்னர் நம்போன்ற மனுஷியர்களாகமாறியிருக்கிறோம் என ஆராய்ச்சிசெய்யும் மேனாட்டுத் தத்துவசாஸ்திரிகள்பின்னர் எப்படித்தான் வரைந்துவைப்பார்கள்! அடடா! என்னைவியப்பு. எல்லாம்வல்ல இறைவனால் வகுத்து நமக்குத் தந்தருளப்பெற்ற பஞ்சமாபூதங்களில் ஒன்றாகிய "தண்ணீர்" எந்தவிதமான அசுத்தத்தையும்போக்குமென்ற வுண்மையுணர்ச்சி ஒருசிறிதளவுங்கூட இல்லாது மலம்வந்ததுவாரத்தை ஏனையவொரு வஸ்துவாற் சுத்தஞ்செய்யும் மேற்கண்ட தத்துவசாஸ்திரிகள் பின்னர் என்னதான்செய்யார்கள்? இச்சாஸ்திரிமார்கள் "மேருவைச்சார்ந்த காகமும் பொன்னிறம்"என்பதுபோன்றும், "பூவோடுகூடியநாரும் மணம்பெறும்" என்பதுபோன்றும்,

விடமும்வந்தீசன்கோலமிடற்றினீலவண்ண
வடிவுபெற்றணியதாகிவயங்கிற்றுப்பெரிதுமென்றாற்
கொடியரும்பெருமையோரைக்கூடின்வெங்கோதுநீங்கி
யொடிவறுநலம்பெற்றுப்தனுரைப்பதென்னுலகினம்மா எ-ம்

ஊரங்கணநீருரவுநீர்சேர்ந்தக்காற்
பேருப்பிறிதாகித்தீர்த்தமா—மோருங்
குலமாட்சியில்லாருங்குன்றுபோனிற்பர்
நலமாட்சிநல்லாரைச்சார்ந்து என்பதுபோன்றும்

ஒண்கதிர்வாண்மதியஞ்சேர்தலாலோங்கிய
வங்கண்விசும்பின்முயலுந்தொழப்படூஉங்
குன்றியசீர்மையராயினுஞ்சீர்பெறுவர்
குன்றன்னார்கேண்மைகொளின் என்பதுபோன்றும்

பாலோடளாயநீர்பாலாகுமல்லது
நீராய்நிறந்தெரிந்துதோன்றாதாந்—தேரிற்
சிறியார்சிறுமையுந்தோன்றாதாநல்ல
பெரியார்பெருமையைச்சார்ந்து என்பதுபோன்றும்

கொல்லையிரும்புனத்துக்குற்றியடைந்தபு
லொல்காவேயாகுமுழவருழுபடைக்கு
மெல்லியரேயாயினுநற்சார்வுசார்ந்தார்மேற்
செல்லாவாஞ்செற்றார்சினம் என்பதுபோன்றும்

எற்றானுஞ்சிறந்த நமதாசியன்வகுப்பார் மாபியிலைச்சார்ந்து தோற்றப்டுகிறதேயவர்கள் பெற்றவோர் பெரும்புண்ணியமாகக்காணுகிறது. மேலும் ஐயீர்! பொதுவாகக்கவனிக்குமிடத்து,

> கடமாகொலைச்சியகாலுறைவேங்கை
> யிடம்வீழ்ந்ததுண்ணாதிறக்கு—மிடமுடைய
> வானகங்கையுறினும்வேண்டார்விழுமியோர்
> மானமழுங்கவரின்.

இதன்பொருள். யானையைவெற்றிகொண்டகாட்டில்வாழ்கின்ற புலியானது தன்னுலைறையுண்டு இடப்புறத்தில்விழுந்தமிருகத்தை உண்ணவிரும்பாமல் செல்லும். அதுபோலக் குடிப்பிறப்பு முதலியவற்றில் சிறந்தோர் பரந்தஇடத்தையுடைய சுவர்க்கம் முயற்சியில்லாமல் கிடைப்பதாயினும் தம் மானம்கெடும்படி கிடைப்பதாயின் பெறவிரும்பார்.

> நச்சியார்க்கீயாமைநாணன் றுநாணுநே
> மச்சத்தானானுதனுணன்று—மெச்சத்தின்
> மெல்லியராகித்தம்மேலாயார்செய்தது
> சொல்லாதிருப்பதுநாண்

இதன்பொருள். மானமுடையார்தம்மிடத்தொன்றைவிரும்பிவந்தேற்போர்க்குஉதவப்பெறாமையாலாகும்நாணம்நாணமன்று. தினதினமும் இல்லாமைபற்றித் தீயவற்றைச் செய்தற்கு அஞ்சுதலால் நாணுதல் நாணமன்று. சந்ததியில் ஒருவர் கல்வியறிவு ஒழுக்க முதலியவற்றில் எளியராயிருந்து தம்தாதை மூதாதை முதலியோரால் செய்யப்பட்ட மேலானகாரியத்தைத் தம் கல்விமுதலியவற்றால் பிறர்க்கு உணர்த்தாதிருத்தலாலாம் நாணம் நாணமாம்.

> நல்லர்பெரிதளியர்நல்கூர்ந்தாரென்றெள்ளிச்
> செல்வர்சிறுநோக்குநோக்குங்கால்—கொல்ல
> னுலையூதுந்தீயேபோலுள்கனலுங்கொல்லோ
> தலையாயசான்றோர்மனம்.

இதன்பொருள். இவர்யாவர்க்கும்நல்லவர். மிகுதியாகயாவரிடத்தும் அன்புடையார், இதுபோழ்து வறியராயினரென்று அவமதித்துப்பேசாநின்றுசெல்வர்கள் அருகுபார்வையால்பார்க்குங்காலத்தில்

முதன்மைபெற்ற குடிப்பிறப்புக்கல்வி முதலியவற்றால் குறைவில்லாதுமனம் கருமானுல் உலைக்களத்தில் ஊதப்படுதலா லெரிகின்ற நெருப்பைப்போல உள்ளே கொதியாநிற்குமோ? யாம்துணியோம்.

> கடையெல்லாங்காய்பசியஞ்சும் மற்றேனை
> யிடையெல்லாம் இன்னாமையஞ்சும்—புடைபரந்த
> விற்புருவவேல் நெடுங்கண்ணாய்! தலையெல்லாஞ்
> சொற்பழியஞ்சிவிடும்.

இதன்பொருள். தமக்கு மேற்புறத்தில் பரவியுள்ளவில்போலும் புருவங்களையுடைய வேல்போலும் நெடிய கண்களையுடையாளே! குடிப்பிறப்பு முதலியவற்றால் கடையாயினரெல்லாரும் தம்முடம்பிளைத்தற்குக்காரணமாகிய பசியை அஞ்சி உயிர்வாழ்வர். அவரல்லாத இடையாயினரெல்லாரும் அரசனால் செய்யப்படும் தண்டத்தினை அஞ்சி உயிர்வாழ்வர். தலையாயினரெல்லாரும் பிறரால் கூறப்படும் பழிச்சொல்லை அஞ்சியே உயிர்வாழ்வர்.

எமதன்பிற் சிறந்த ஐயீர்! இம்மகாமுனிவர்களின் அரிய திருவாக்குகள் எத்தகையவென்பதை நீயிர் நன்கு கவனித்தல் வேண்டும். என்னுடைய தேயத்தைப்பற்றியும், என்னுடைய தேயத்துப் பூர்வீகப் பெரியாரைப்பற்றியும், என்னுடைய சமயத்தைப்பற்றியும், என்னுடைய சமுகங்களைப்பற்றியும், என்னுடைய சுதேசப்பாஷைகளைப்பற்றியும், அவைகளைச்சார்ந்த அரிய பெரிய நூற்களைப்பற்றியும் சாதாரணமாக ஏனைய ஒருவர் இழித்துக் கூறுவதற்குரிய நிலைமையில் அவைகள் இயற்கையிலேயே அமைந்துகிடந்திருப்பினும் நம்போல்வார் எவரும் தலைசாய்த்துக்கொண்டுவாளாயிருத்தலும் ஒருவாறு ஆவசியகந்தான் என்னலாம். அங்ஙனமின்றி, எத்துணையோ பேருந்தன்மைகளும், அபரிமிதமான மாட்சிகளும், இயற்கையிலேயே மாட்சிமைபெற்று நிகழ்ந்துவருவதான இல்லறதருமவியற்கையாதிய நல்லகுணங்களும் உடைத்தான எங்களின் சமுகத்தின் சரித்திராதிகளைப்பற்றி கொஞ்சங்கூட முன்பின் கவனித்த ஆராய்ச்சியுமின்றி

> "நல்லவைசெய்யின் இயல்பாகும், தீயவை
> பல்லவர்தூற்றும்பழியாகும்"

"சக்கரச்செல்வம்பெறினும் விழுமியோர்
எக்காலுஞ்சொல்லார் மிகுதிச்சொல்"

"கற்றறிந்தநாவினர் சொல்லார்
தம்சோர்வஞ்சிமற்றையராவார்பகர்வார்
பனையின்மேல்வற்றியவோலைகலகலக்குமெஞ்ஞான்றும்
பச்சோலைக்கில்லையொலி"

என்ற மூதுரையான அமுதவாக்குகளின் கருத்துக்கள் ஒருசிறிதளவுங்கூடத் தங்களின் மனத்திடை தோற்றாத முழுமூடக் கயவர்சிகாமணிகளாய், எத்துணைச் சிறியவர்களுங்கூட காணின் அருவருக்கத்தக்கவிதமாய் ஒருவர் தெரிந்தோ தெரியாமலோ வரைந்துவைத்திருப்பாராயின் அதனை (அக்குளறுபாட்டைப்) பற்றி யாதொன்றும் கூறாது வாளாயிருத்தல் யாவருக்குத்தான் சம்மதியாகும்? அந்தோ! எத்துணை பேரறிவாளர்களின் மனம்புண்பட்டுப் போயிற்றோ! காட்டுமிராண்டிகள் வசிக்கும் ஏனைய தேயங்கள் போன்றதோ நம்முடைய இந்திய தேயம்? அக்குளறுபாடான நூற்களையெல்லாம் திருத்தியமைக்குமாறு வேண்டும் கட்டளையிடுவதும் நமது காருண்ய கவர்ண்மென்றாவர்களின் முதற்கடமையேயாம். என்றாலும் அவர்களுக்கு ஞாபகப்படுத்தவேண்டுவதும் நம்முடைய முதற்கடமையேயாம். இஃது இங்ஙனமாக மானாபிமானமும், பேரறிவாண்மையும் உடைத்தான ஒருவர்க்கு இதனைப் பார்க்கினும் ஏனைய எந்தத்தொழிலோ பெரிதாகும்? எங்களின் மகாசமுகத்தின் கொள்கை பெரும்பான்மை "திங்கள்

கறையிருளை நீக்கக்கருதாதுலகில்
நிறையிருளை நீக்குமேனின்று" என்பதுபோன்றதன்றோ!

என்றாலும் மேற்கண்ட ஆன்றோர் தூக்குநோக்கியே எங்களின் மகாசமுகத்தைப்பற்றி யான் இத்துணைதூரம் பேசப்புகுந்ததாமென்க. நிற்க, ஐயா நூலாசிரியரே! தமதிடம் ஏதோ இரண்டொரு வினாக்களை வினவ உத்தேசித்ததிலிருந்து எத்துணையோ பலவிஷயங்களைப்பற்றி பேசிமுடித்துவிட்டேன். யோசிக்குமளவில் அஃதொருங்கும் கூடாதகாரியந்தான். என்றாலும், நீவிரும் இந்

நூலெழுதப்புகுந்தவொருவராதலால் நுமக்கும் நல்லறிவுச்சுடர்கொளுத்துவான்பொருட்டே இத்துணைதூரம் பேசிமுடித்தேன் என்பதை நீவிரும் நன்குணர்தல்வேண்டும். இதுகாறும் யான் பேசிவந்தவொருங்கும் நியாயம் அல்லது நியாயத்தப்பு என்பதை நீவிரேநன்றாகத் தெளிந்துநோக்கும். என்னடா! இவன் ஒரு பைத்தியக்காரன்போலும்! எதனையோ கேட்கப்புகுந்து அதனை முற்றமறந்து வேறு எதனையெல்லாமோ பேசிமுடித்துவிட்டானே என நீயிர் ஒருமாதிரியாக நினைத்தல்வேண்டாம். நான் ஞாபகம் வைத்துக்கொண்டுதானிருக்கிறேன். அஃதாவது, நமது வைசியவருணத்தார்க்குமட்டும் இக்கட்டுப்பாடு யாதுகாரணம்பற்றியுடன்பாடாயிற்று? நமது மனைவிமக்களோடுங்கூடி அயல்நகரங்களுக்குச் சென்று அறநெறிவழாது நமது இல்லறதருமத்தை மிக வொழுங்காக நடாத்திவரின் அதனாலுறுங்கேடென்னை? ஐயிர்! மிக நன்றாக பதிற்கூறுமின். ஆம் ஐயா! அதுவிஷயத்தைப்பற்றி மிகச்சுருக்கமாகக் கூறுதல்வேண்டுமா இன்றேல் மிகவிரிவாகக்கூறுதல்வேண்டுமா? மிகச்சுருக்கமாகவும், மிகவிரிவாகவுமின்றி மிகநிதானமாகக் கூறுங்கள். நல்லது அங்ஙனமே ஆகட்டும். அஃதாவது நமது தாதை மூதாதைகளின் வன்மைத்தன்மையைப்பற்றிக் கவனிக்கப்புகுந்தால் அஃதொரு பேராச்சரியத்தையே விளைவிக்கும். மேலும் அவர்களின் வல்லுநத்தன்மை எவராலும் அளவிட்டுக்கூறுவதற்கியலாததாகவேமுடியும். பொதுவாகக்கவனிக்குமிடத்து, மனிதவர்க்கத்தாரின் இயற்கையமைப்பில் ஜாதிவித்தியாசமாவது, தமையன் தம்பி, தங்கைதமக்கை, தாய்தந்தை, மாமன்மாமி, மனைவி, கொழுநன் முதலிய வரன்முறைக்கட்டுக்களாவதுண்டா? ஆலயதெரிசனம், கடவுள்பக்தியுண்டா! கல்வியறிவுமுதலிய பல நல்லொழுக்கங்களுண்டா? சுவர்க்கநரகமுண்டா? செல்வந்தரித்திரமுண்டா? சமயக்கொள்கையுண்டா? தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம், ஜனாபிமானம், இவர்பெரியர், இவர்சிறியர் இவருறவர், இவர்பகைஞர் என்பதாவதுண்டா? இஞ்ஞாலத்தை ஆள்வதற்காமெனச்செங்கோலேந்தியும், கிரீடந்தாங்கியும் எவரேனும் பிறந்ததுண்டா? இவைகளையெல்லாஞ் செயற்கையமைப்பில் யாவராலமைக்கப்பட்டது? நமது தாதை மூதாதைகளால் ஜனசமுகத்தின் சௌக்கியத்தையும், நன்மையையும், அமைதியையுங்கருதி

ஏனைய அறுவகைத்தோற்றங்களுக்கும், நம்முடைய மனிதத்தோற்றத்திற்கும் இடையிலுடைத்தான ஏற்றத்தாழ்வையும் விளங்க விளக்கியமைக்கப்பட்டதல்லவா? இன்றேல் விலங்கினங்களுக்கும் மனிதவர்க்கத்தார்க்கும் என்னவோபேதம் நிகழ்ந்திருக்கக்கூடும்? மேலும், இஞ்ஞாலத்தில் தோற்றப்படுகிற எந்தவிதமான ஒவ்வொரு வரன்முறைக்கட்டுப்பாடுகளும், நம்மனிதவர்க்கத்தார் க்ஷேமத்தைக்கருதியே ஆங்காங்குடைத்தான ஒவ்வொரு பெரியவர்களாலே அமைக்கப்பட்டு பூர்வீக வழக்கமாமென்றும், அவ்வவ் வகுப்பாருக்குரிய மரபியலாமென்றும் சொல்வதற்குரிய நூன்முறைச்சட்டங்களாக நமது வழக்கத்திலிருந்துவருகிறது. இயற்கையமைப்பில் இடையிற் கௌபீனத்தோடுங்கூடவாவது எவரே என்கினும் பிறந்தாரிலர். எல்லாவரன்முறைக் கட்டுக்களும் இடையில் நிகழ்ந்ததேயாகிறது. இதுவிஷயங்களைப்பற்றி மீண்டும் மீண்டும் விரித்துக்கொண்டுபோவதில் எவ்விதப்பயனுமில்லையாம். பொதுவாக ஈங்கு தோற்றப்படுகிற ஒவ்வொரு பகுதியாரும் தங்கள் தங்களுக்குரிய மரபியலாமென்று புகழ்ந்து கொண்டாடிக் கொள்வதற்குத்தக்கவாறு ஆங்காங்கு அமைக்கப்பட்டுக்கிடக்கும் வரன்முறைச்சட்டங்களையும், நமது வைசிய மகா சமூகத்தின் வரன்முறைக்கட்டுக்களையும், சிறிது ஊன்றிநோக்கிக் கவனிக்கப் புகுந்தால் மிகுதியும் அரியபெரிய நூன்முறைச்சட்டங்கள் இஃதாமென்பதை மிகத்தெளிவுறக் காணலாம். பொதுவாக நான் வேண்டுமென்று ஒன்றை உயர்த்தியும், ஒன்றைத் தாழ்த்தியுங் கூறவரவில்லை. உண்மையும், நியாயமும் எதுவோ அதனையே மிக விளக்கமாகக்கூறுவாம். கவனியுங்கள்.

I. அஃதாவது ஈங்கு தோற்றப்படுகிற எந்த சமூகத்தார்களுக்காவது, சிவாலயங்களை அடிபீடமாகவமைத்துக் கொடிவழிக் கோத்திராதிகளையமைத்துக்கொள்ளப்பட்டிருக்கிறதா?

II. அறிவிற்சிறந்தஐயீர்! ஏனையசமூகத்துள் ஒரேகுடும்பத்தைச்சார்ந்த சிலருள் ஒருவர் வைணவராயும், மற்றொருவர் கிறிஸ்தவராயும், மற்றொருவர் மகம்மதியராயும், மற்றொருவர் நமது சைவசமயத்தைச்சார்ந்தவராயும், பூர்வீகச்சுதந்தரமான ஒருவித

வரன்முறைக்கட்டுக்குலைந்துகாணப்படுவதுபோன்று, நமது வைசிய மகாசமூகத்தைச்சார்ந்தஎந்தக்குடும்பத்திலாவதுகாணப்படுகிறதா?

III. பான்மணமாருப்பாலர்முதலாய மனைவி மக்களோடுங் கூட ஆயிரக்கணக்கான மயிற்றூரங்களையுங்கடல்யாத்திரையாகக்கடந்து ஏனைய அயல்நகரங்களுக்குச்சென்றுநாங்களேஉயர்தரநாகரீக நிலைமைபெற்றவர்களாமென்ன ஒரு சிறிதளவுகூட நாணமற்ற வெற்றிப்பறைகொட்டி வாழ்ந்து தங்களின் இல்லற தருமத்தை நடாத்திவரும் எந்தச்சமூகத்தாரும் தங்கள் அருமைக் குடும்பத்திற்பிறந்த அருமைச்சகோதரிகளை எந்தமார்க்கத்தானும் எட்டினவும் தங்கட்குச் சம்பந்தமுமில்லாத (பேச்சளவிற்கூட ஒரு பாஷை சுதந்தரமல்லாத) எவனோ ஒருவனுக்குக் கட்டிக்கொடுத்து தங்களின் அருமையான மரபியன் முறைகளைக் கெடுத்துக்கொண்டதுபோன்று, நமது மகாசமுகத்தின் மரபியன் முறைகளையுங் கெடுத்துவிடாமல் ஒருநிலைநிற்கச்செய்ததும், எற்றானுஞ்சிறந்த நமது பாண்டிவளநாட்டின்கண் பிரான்மலைக்கு மேற்கும், வைகையாற்றுக்குத் தெற்கும், வெள்ளாற்றுக்கு வடக்கும், கடலுக்குக் கிழக்கும் நமது வருணத்தார் மனையாண் மக்களோடுஞ் சென்று எவ்வகை முகாந்தரங்களைக்கொண்டும் இல்லறம் நடாத்துதல்கூடாதென்று, நமது தாதை முதாதைகள் கட்டிவைத்த பேரறிவாண்மையான ஒருவித வரன்முறைக்கட்டுப்பாடேயாமன்றோ?

IV. நமது நாட்டுக்கோட்டை வைசிய மகா சமூகமானது எற்றானுஞ் சிறந்த நமது பாரதமாதாவின் அழகிய வதனம் போல்வதாமென்று, எத்தகையாரானும் புகழ்ந்துகொண்டாடத் தகுந்த அஃதாவது (குன்றின்மேலேற்றிய தீபம்போன்று) உயர்தர நிலையத்துக்குக் கொணர்ந்ததும் மேற்கண்ட அக்கட்டுப்பாடேயாமன்றோ?

V. நமது பாரதமாதாவின் தேகத்திலுடைத்தான பலவிதமான அறப்பெரும்பணிகளையெல்லாம் மிகச்செவ்வனே எந்தக்காலத்தும் நிலைநிற்கச்செய்ததும் மேற்கண்ட அக்கட்டுப்பாடேயாமன்றோ!

VI. நமது குடும்பங்கள் காலாபக்கங்களுக்குஞ் சென்று, ஆங்காங்குடைத்தானவர்களோடு சம்பந்தஞ்சாவடிகள்செய்து, ஒரேமொத்தமாக இத்துணையாயிரங் குடும்பங்களாம் இவவரு ணத்தாரெனச் செப்பமாகச்செப்புவதற்குரியமார்க்கத்தையொழித் துச்சிதறுண்டுபோகாத வண்ணம் பாதுகாத்துக் கொண்டதும் மேற்கண்ட அக்கட்டுப்பாடேயாமன்றோ!

VII. நமது குடும்பத்தைச்சார்ந்தஒருவரைப்பார்த்தொருவ ராய் எல்லாரும் பெருஞ்செல்வந்தராதல்வேண்டுமென்ற பேர வாவோடு பெரிய செல்வவந்தர்களாகத் தோற்றப்படுவதற்கும் கா ரணம் மேற்கண்ட அக்கட்டுப்பாடேயாமன்றோ!

VIII. நமது சகோதரிகளிடத்து, கற்பியன்மாட்சியை மிகஅற்புதமாக நிலைநிற்கச்செய்ததும் மேற்கண்ட அக்கட்டுப்பா டேயாமன்றோ!

IX. ஏனைய வகுப்பார்போன்று தங்களின் பூர்வீகப் பெரி யார் எவர்களையும் அலட்சியம் செய்யாமல் இலட்சியமே செய்து, அவர்களியல்வழி நம்மையும் இயன்றுவருமாறு செய்ததும் மேற் கண்ட அக்கட்டுப்பாடேயாமன்றோ!

X. ஒன்றுக்கும் உதவாத பாலைவனத்தை இத்துணைதூரம் சிறந்த குபேரநகரமாகச்செய்ததும் மேற்கண்ட அக்கட்டுப்பாடே யாமன்றோ!

XI. "செல்லாமையுண்டேலெனக்குரை, மற்றுநின்
வல்வரவுவாழ்வார்க்குரை"

"தொடிற்சுடினல்லதுகாமநோய்போல
விடிற்சுடலாற்றுமோதீ"

"காமக்கடும்புனல்நீந்திக்கரைகாணேன்
யாமத்தும்யானேயுளன்"

"வாராக்காற்றுஞ்சா, வரிற்றுஞ்சா, வாயிடை
ஆரஞர் உற்றன கண்,,

"விளக்கற்றம்பார்க்குமிருளேபோற்கொண்கன்
முயக்கற்றம்பார்க்கும்பசப்பு"

"புல்லிக்கிடந்தேன்புடைபெயர்ந்தேன் அவ்வளவில்
அள்ளிக்கொள்வற்றேபசப்பு"

"தெங்கங்காய்போலத்திரண்டுருண்டபைங்கூந்தல்
வெண்கோழிமுட்டையுடைத்தன்னமாமேனி
பஞ்சனத்தன்னபசலைதணிவாமே
வங்கத்துச்சென்றார்வரின்"

"நாங்காதல்கொண்டார்நமக்கெவன்செய்பவோ
தாங்காதல்கொள்ளாக்கடை"

"உள்ளினுந்தீராப்பெருமகிழ்செய்தலாற்
கள்ளினுங்காமமினிது"

"காதலர்தூதொடுவந்தகனவினுக்
கியாதுசெய்வேன்கொல்விருந்து"

"காலைக்குச்செய்தநன்றென்கொல் எவன்கொல்யான்
மாலைக்குச்செய்தபகை"

"கலந்துணர்த்துங்காதலர்க்கண்டாற்புலந்துணராய்
பொய்க்காய்வுகாய்தியென்னெஞ்சு"

"பன்மாயக்கள்வன்பணிமொழியன்றோநம்
பெண்மையுடைக்கும்படை"

"ஊடலிற்றோற்றவர்வென்றாதுமன்னுங்
கூடலிற்காணப்படும்"

"ஊடிப்பெறுகுவங்கொல்லோநுதல்வெயர்ப்பக்
கூடலிற்றோன்றியவுப்பு"

"ஊடுகமன்னோவொளியிழையாமிரப்ப
நீடுகமன்னோவிரா"

எற்றானுஞ்சிறந்த கல்வியொழுக்கத்தால் நிறைந்த ஐயா? கற்பியன் மாதர்கணவரைப்பிரிந்து, சின்னாள், அல்லது பன்னாள் தனியிருந்து வாழ்தல் எந்தவாற்றானும் பிழையாகமாட்டா தென்பதையும், அங்ஙனம் தனித்திருந்துவாழ்தலும் காமாதிபோக வின்பத்துள் மிகச்சிறந்ததேயாம் இன்பமாமென்பதையும் இங்ஙனம் நமக்கு மிகச்செவ்வனே விளங்கக்காட்டி 'நிற்பதூஉம், இஃது நமது பூர்வீகக்கொள்கையேயாமென்பதூஉம், இத்தகைய இன்பாதிபோகங்களுக்குக் காரணமாக நிற்பதூஉம் மேற்கண்ட அக்கட்டுபாடேயாமன்றோ! இது நிற்க.

XII. அன்பிற் சிறந்த ஐயீர்! இன்னுங்கவனிக்குமிடத்து இவைபோன்ற அநேக நல்ல மார்க்கங்களுக்கும், உயர்தரமான நமது வருணாச்சிரமதருத்துக்கும் அக்கட்டுப்பாடு காரணமாகத் தான் இருக்கும், இதனைவாசிக்கும் நமதுவகுப்பைச்சார்ந்த ஒவ்வொருசகோதரசகோதரிகளும்கவனித்துக்கொள்ளல்வேண்டும். ஆனால்இனி வருங்காலவியற்கைநோக்கி அக்கட்டுப்பாட்டை உடைக்கலாமோவெனின் அதுவிஷயங்களைப்பற்றி ஈங்குவரைந்து முடித்தல் சாத்தியமாகாது. ஒருவாறு கவனித்து முடிவுசெய்யப்புகுவோமானால் சர்வநகரக்கூட்டம் (அஃதாவது நமது தொண்ணூற்றாறு நகரக்கூட்டமாகிய மகா சங்கம்) ஒன்றைக்கூட்டி அதில் நமதுவகுப்பைச்சார்ந்த பல விஷயங்களையும் காலவியற்கைநோக்கி "பல்லும் நாவும் உள்ளபேர் பகர்ந்து பேசி மகிழுவார்" என்பதற்கிணங்கி, "இறந்ததுவிலக்கல் எதிரதுபோற்றல்" என்னும் உத்தியைத் தழுவி, ஆராய்ந்து புதிதாகச்சேர்க்கவேண்டும்நூன்முறைகளைப் பற்றியும், பூராவாக விலக்கிவிடவேண்டிய நூன்முறைகளைப்பற்றியும், மாற்றவேண்டும் நூன்முறைகளைப்பற்றியும் எற்றானுஞ்சிறந்த ம்காவல்லுநர்களாகக்கூடி எந்தவிதமான துவேஷங்களையும், பொறாமையையும் ஒழித்து சாத்வீகக்குணத்தோடுகூடிய தெய்வீகத் தன்மையோடுபொருந்தி பகர்ந்துபேசி கூடியபக்கத்தார் அபிப்பிராயம்போன்று தீர்மானங்கள் செய்வதோடுங்கூட மேற்கண்ட இக் கட்டுப்பாட்டையும்பற்றி பகர்ந்துபேசி தீர்மானித்து நமக்குப்பின்னுள்ள நம் சந்ததியார் இஃதுபூர்வீகவழக்கமாமென்று உச்சிமேலேற்றிப் புழ்ந்துகொண்டாடத்தக்க நல்ல ரிக்கார்டுகளாகச்செய்து வைத்துவிடல்வேண்டும். இன்னும் வரும்.

1

கௌரீ பஞ்சாங்கம்

நாள் க-க்கு முகூர்த்தம் க-க்கு நாழிகை கஉ

பகல்

ஞாயிறு.	திங்கள்	செவ்.	புதன்	வியா.	வெள்.	சனி
உத்யோ	அமிருத	ரோகம்	விஷம்	உத்யோ	ரோகம்	விஷம்
லாபம்	விஷம்	உத்யோ	அமிருத	விஷம்	சோரம்	அமிருத
விஷம்	உத்யோ	சோரம்	சுகம்	சோரம்	அமிருத	ரோகம்
அமிருத	லாபம்	லாபம்	உத்யோ	லாபம்	விஷம்	உத்யோ
சுபம்	சோரம்	அமிருத	சோரம்	அமிருத	லாபம்	சுகம்
தனம்	சுகம்	உத்யோ	லாபம்	ரோகம்	சுகம்	லாபம்
அமிருத	லாபம்	விஷம்	தனம்	கலகம்	தனம்	தனம்
ரோகம்	தனம்	தனம்	அமிருத	சோரம்	அமிருத	லாபம்

நன்மையான காலத்திற்குச் சுபகாரியங்கள் செய்ய உத்தமம்

இரவு

ஞாயிறு	திங்கள்	செவ்	புதன்	வியா	வெள்	சனி
தனம்	ரோகம்	சோரம்	லாபம்	சுகம்	அமிருத	விஷம்
சுகம்	லாபம்	உத்யோ	ரோகம்	ரோகம்	சோரம்	உத்யோ
சோரம்	உத்யோ	விஷம்	விஷம்	கலகம்	விஷம்	சுகம்
விஷம்	தனம்	லாபம்	உத்யோ	லாபம்	லாபம்	அமிருத
கலகம்	ரோகம்	சோரம்	சுகம்	உத்யோ	சுகம்	கலகம்
அமிருத	அமிருத	தனம்	அமிருத	சோரம்	தனம்	ரோகம்
லாபம்	லாபம்	சுகம்	தனம்	தனம்	அமிருத	அமிருத
சோரம்	ரோகம்	அமிருத	லாபம்	லாபம்	ரோகம்	லாபம்

வாரசூலை

திங்கள்—சனி ...கிழக்கு	வியாழன்—சனி ...தென்கிழக்கு
செவ்வாய்—புதன்...வடக்கு	வெள்ளி-திங்கள் ...வடமேற்கு
வியாழன் ...தெற்கு	செவ்வாய்ஞாயிறு..தென்மேற்கு
வெள்ளி—ஞாயிறு...மேற்கு	புதன் ...வடகிழக்கு

சுப சகுனம்

கன்னிகை, சுமங்கிலி, வேசி, இரட்டைப்பிராமணர், மங்களவாத்தியம், சங்குநாதம், மங்கள திரவியம், கனிவர்க்கங்கள், புஷ்பம், பால், தயிர், பசு, ரிஷபம், எரிநெருப்பு, சிபிகை' குதிரை, யானை, பூர்ணகும்பம், துவஜம், அன்னம், மாமிசம், இரத்தினம், பட்டுவஸ்திரம்: அரிசி, பொரி, குடை, கட்டுடம், பிரேதம், இவை

கள் எதிராகவந்தாலும்; விருந்தோடுகூடிய இராஜ தெரிசனம்; கருடன், பக்ஷிக்கூட்டம், தேன் வெழுத்த வஸ்திரம், மீன், இவைகளைக் கண்டாலும்; மங்களகோஷம், வேதத்தொனி, மூஞ்சூறுத் தொனி, பிரியவசனம், இவைகளைக் கேட்டாலும், சுபபலன். வலியன், கருடன், காடை, கலைமான், கழுகு, மூஞ்சூறு, பூனை, பாம்பு, எலி, கோட்டான், குரங்கு, நாய், உடும்பு, கீரி, அணில் ஆந்தை, இவைகள் இடமானாலும்; காகம், நாரை, செம்போத்து நரி, கிளி, கொக்கு, மயில், கோழி, புலி, முயல், ஓணான், புள்ளிமான், பசு, எருமை, புனுகுப்பூனை, இவைகள் வலமானாலும் சுபபலன்.

அசுப சகுனம்

ஒற்றைப்பிராமணன், இரண்டு சூத்திரர், மூன்று கோமுட்டிகள், மயிர்விரித்தவன், விதவை, நிர்வாணஸ்திரீ, வெறுங்குடம், பசித்தவன், காவிவஸ்திரதாரி, மொட்டைத்தலையன், ஆயுததாரி, விறகு, புகைநெருப்பு, மோர், பாம்பு, புதுப்பானை, எண்ணெதேய்த்தவன், வாணியன், சிவப்பு புஷ்பம் பதிதன், எள், ஈரவஸ்திரந் தரித்தவன், அகாலவருஷம், ஜடாதாரி, வீட்டுக்கலகம், தூரஸ்திரீ ஜந்துக்கலகம், வீடுபற்றி எரிகை, வஸ்திரம் நழுவுதல் கல் தட்டுதல், தலைதட்டுதல், மேகத்தொனி, இடிவிழுதல், அதைரியம், சுழல் காற்று, பெருங்காற்று, உண்டுபோகலாமென்று சொல்லுதல், ஒற்றைத்தும்மல், க்ஷவரகன், மூக்கறையன், இவைகள் அசுபம்.

யாத்திரை

திங்கள், புதன், வியாழன், வெள்ளியாகிய வாரங்களும்; துதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, திரயோதசியாகிய திதிகளும்; அசுபதி, மிருகசீரிஷம், புனர்பூசம், பூசம், அஸ்தம், அனுஷம், மூலம், திருவோணம், அவிட்டம், இரேவதியாகிய, நக்ஷத்திரங்களும் உத்தமம். உரோகணி, உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதி சதயமாகிய நக்ஷத்திரங்கள் மத்திமம். இடபம், கடகம், சிங்கம், துலாம், தனுசு, மீனமாகிய, லக்கினங்கள் சுபம், வாரங்களும், மங்களவாரத்தன்று, கீழ்திக்கில், பிரயாணமானால், லாபமும், சோமவாரம்—சனிவாரங்களில் தெற்கு திக்கில் பிரயாணமானால் அர்த்த சித்தியும், புதவாரம்—குருவாரங்களில், மேல் திக்கில் பிரயாணமானாலும், ஆதிவார—சுக்கிரவாரங்களில் வட திக்கில் பிரயாணமானாலும், காரியசித்தியும் உண்டாகும். திதிகளில் கிருஷ்ணப் பிரதமை மங்களத்தைக்கொடுக்கும். யாத்திரைக்குமுட்டும்யோகினி, வாரசூலை, ராகுகாலங்கள் பார்க்கத்தகுந்தன.

கோடிவஸ்திரம் தரித்தல்

அசுபதி, உரோகணி, புனர்பூசம், பூசம், உத்திரம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், உத்திராடம், அவிட்டம், விசாகம், உத்திரட்டாதி, இரேவதி, இந்த நக்ஷத்திரங்களும், சதுர்த்தி, அஷ்டமி, நவமி, சதுர்த்தசி, அமாவாசை, இந்த திதிகள் தவிர மற்றத்திதிகளும், புதன், வியாழன், வெள்ளி இவ்வாரங்களும்; இடபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், மகரம், கும்பம் இந்தலக்கினங்களும் நூதன வஸ்திரந்தரித்துக்கொள்வதற்கு உரியனவாம்.

கரிநாள்.

சித்திரைமீ ௬, ௧௫	ஐப்பசிமீ ௬, ௨௰
வைகாசிமீ ௭, ௧௬, ௧௭	கார்த்திகைமீ ௧, ௰, ௧௭
ஆனிமீ ௧, ௬	மார்கழிமீ ௬, ௯, ௰௧
ஆடிமீ ௨, ௰, ௨௰	தைமீ ௧. ௨, ௩, ௧௧, ௧௭
ஆவணிமீ ௨, ௯, ௨௮	மாசிமீ ௧௫, ௧௬, ௧௭
புரட்டாசிமீ ௧௬, ௨௯	பங்குனிமீ ௬, ௧௫, ௧௬

ஸ்வப்பன பலன்.

சக்ஷுஸ்ஸு முதலிய சகல இந்திரியங்களின் சலனமில்லாத காலத்தில் மனதினுடைய பிரவிர்த்திதானே ஸ்வப்னமென்றேற்படும். அந்த ஸ்வப்னம் நடக்கப்போகிற சுபாசுப பலன்கள் இருவகைக்கும் காரணமாயிருக்கிறது.

☞ சுபவிஷயமான ஸ்வப்னங்களின் விவரம்

நதிதாணம். சமுத்திரதாணம். ஆகாயத்தில் சஞ்சாரம் சூரிய தரிசனம். சந்திரதரிசனம், ஜ்வாலையுள்ள அக்கினி, குஜன் முதலிய கிரஹங்கள், நக்ஷத்திரங்கள், பிராசாதா ரோஹணம், இவை முதலான ஸ்வப்பனங்களைக் கண்டால் நினைத்த காரியம் சித்தியடையும்.

சாராயங்குடித்தல் மாமிசம் புசித்தல், இரத்தாபிஷேகம், தயிர் புசித்தல், வெள்ளை வஸ்திரந்தரித்தல், ரத்னாபரணம், இவைகளின் ஸ்வப்பனங்களைக் கண்டால் மிகவும் கீர்த்தியுண்டாகும். பிராமணர்கள், தேவதைகள், பக்ஷிகள், குடை, உமி, தாமரை புஷ்பம், ரோஜா, வெள்ளை புஷ்பம், ஆபரணம்பூண்ட ஸ்திரீ, ரிஷபம், மலை, பால், கனியுள்ள விருக்ஷம் ஏறுதல், புஷ்ப விருக்ஷம், கண்ணாடி, மாமிசம், தடாகதாணம், இவை முதலிய ஸ்வப்பனங்களைக் கண்டால் வியாதி நாசமுண்டாகும். மாதா,

பிதா, ஸ்திரீ, கொக்கு, கோழி மான் இவைகளை ஸ்வப்னத்திற் கண்டால் சுபபலனுண்டாகும்.

அசுபவிஷயமான ஸ்வப்பனங்களின் விபரம்.

பூபல்தம்பம் எட்டிமரம், புத்து மொட்டைமரமேறுதல், எண்ணை, பருத்தி, இரும்பு, கழுகு, குரங்கு, கிருஷ்ண சர்ப்பம், கழுதை, குறைத்தலை, மாலின்யமுள்ள ஸ்திரீ, இரத்த வஸ்திரந் தரித்தல், விளையாடுதல், இவை முதலான ஸ்வப்பனங்களைக்கண்டால் வியாதி முதலானதுண்டாகும். வெள்ளை வஸ்துக்களில் பருத்தி, சாம்பல், அன்னம், மோர் இவைகளைத்தவிர மற்றது சுப பலனென்றும் கருப்புவஸ்துக்களில் பிராமணர் தேவாள், குதிரை, பசு, யானை இவைகளைத்தவிர மற்றது அசுப பலனென்றும் அறிய வேண்டியது. மேற்கண்ட ஸ்வப்னங்கள் முதலாவது யாமத்தில் காணப்படுமாகில் அதின் பலனை அதுமுதல் ஒரு வருஷத்திற்குள்ளாகவும், இரண்டாவது யாமமாயிருந்தால் எட்டு மாதத்திற்குள்ளாகவும், மூன்றாவது யாமமாயிருந்தால் மூன்று மாதத்திற்குள்ளாகவும், நான்காவது யாமமாயிருந்தால் ஒரு மாதத்திற்குள்ளாகவும், அருணோதயமாயிருந்தால் பத்து தினத்திற்குள்ளாகவும் சூரிய உதயமாயிருந்தால் தக்ஷணத்திலும் அந்தந்த பலனை அடைவார்கள். இந்த ஸ்வபனங்கள் தோஷபலனைக் கொடுக்கக்கூடியதாயிருக்குமாகில் அதற்கு சாஸ்திரப்படி சொல்லியிருக்கிற பரிகாரங்களைப் பண்ணுகிற விஷயத்தில் அந்த தோஷத்திற்கு சமனமுமேற்படும்.

க்ஷௌரம்;- திங்கள் புதன், வியாழன், வெள்ளியாகிய வாரங்களும், துதியை, திருதியை, பஞ்சமி, சப்தமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரயோதசி திதிகளும், பரணி, கார்த்திகை, திருவாதிரை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம் முதல் ரு; பூரட்டாதி தவிர மற்ற நக்ஷத்திரங்களும் பலத்துடனிருக்கிற ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, துலாம், மீன லக்கினங்களும், க்ஷௌரம் பண்ணிக்கொள்வதற்கு நன்று. ஜன்மானு ஜன்மத்திரு ஜன்மங்களும், பகல் கரு நாழிகைக்குப் பின்னும் இராக்காலமும், விரத தினம், சிராத்ததினம், பிரயாண தினங்களும், போஜனனந்தரமும் ஆடி, புரட்டாசி, மார்கழி மாசியாகிய மாதங்களும் விலக்கப்பட்டன. ஷை மாதங்களில் மார்கழி மாசியில் முற்பாதியும் ஆடி-

யின் பிற்பாதியும் புரட்டாசி முழுதுங் கூடாது. கும்ப லக்கினம் எப்போதும் கூடாது லக்கினத்தில் ரவியிருந்தால் பிராமணருக்கும் குஜனிருந்தால் க்ஷத்திரியருக்குப், சனியிருந்தால் வைசிய சூத்திராருக்கும் நன்று.

எண்ணையிட்டுக்கொள்ளல்.

ஞாயிறு, செவ்வாய், வியாழன், வெள்ளியாகிய வாரங்களும், பிரதமை, ஷஷ்டி, அஷ்டமி, ஏகாதசி, துவாதசி, சதுர்த்தசி, பௌர்ணமி, அமாவாசையாகிய திதிகளும், திருவாதிரை, உத்திரம், கேட்டை, திருவோணமாகிய நக்ஷத்திரங்களும் ஜன்ம, அனுஜன்ம, திருஜன்ம தினங்களும், இராக்காலமும். சங்கிரமகாலமும், தைலாப்பியங்கனத்துக்கு விலக்கப்பட்டன. மற்ற நக்ஷத்திரங்களும், புதவாரம், சனிவாரமும், உத்தமம், திங்கள், மத்திமம். ஆதிவாரத்தன்று அப்பியங்சனஞ்செயதால் அழகுபோகும். திங்கள் பொருள்சேரும். செவ்வாய் ஆகாது. புதன் புத்தியுண்டாகும். வியாழன் அறிவழியும். வெள்ளி பொருள் நஷ்டம், சனி சம்பத்துண்டாகும். தீயநாட்களில் அவசியம் நேரிடில் ஆதிவாரத்தில் அலரியும், செவ்வாய்க்கிழமையில் மண்ணும், குருவாரத்தில் திருநீறும், சுக்கிரவாரத்தில் கோமயமும், எண்ணையிட்டு முழுகவும். பாலர், விருத்தர், வியாதியஸ்தர் இவர்கட்கு விலக்கப்பட்ட தினங்களால் தோஷமில்லை.

ரிது பலன்.

வாரபலன்:—ஆதிவாரம்—வியாதி, சோமவாரம்—கன்னடக்கை. மங்களவாரம்—துக்கமுடைமை, புதவாரம்—புத்திரவதி, குருவாரம்—பாக்கியவதி, சுக்கிரவாரம்—பதிவிரதை சனிவாரம் தரித்திரி.

திதிபலன்:—பிரதமை—விதவை, துதியை—சுகி திருதியை—தனவதி, சதுர்த்தி—பொருளழிவு, பஞ்சமி—புத்திரவதி, ஷஷ்டி—தரித்திரி, ஸப்தமி—புத்திரவதி, அஷ்டமி—புத்திரநாசம், நவமி—துக்கி, தசமி—தர்மசாலி ஏகாதசி—பதிசிநேகி, துவாதசி—ரோகி, திரயோதசி—வெகுமானி, சதுர்த்தசி—விதவை, அமாவாசை—புத்திரநாசம், பௌர்ணமி—புத்திரவதி.

நக்ஷத்திர பலன்:—அசுவதி—விதவை, பரணி—புத்

திரவதி, கார்த்திகை—புத்திரநாசம், உரோகணி—சுகி, மிருகசீரிடம்—நாயகானுகூல்யம் திருவாதிரை—பர்த்தாவினிடம வெறுப்பு புனர்பூசம்—சுகி, பூசம—சுகி, ஆயில்யம்—புத்திரபீடை, மகம பர்த்தாபீடை, பூரம—புத்திரபீடை, உத்திரம—பிரயோஜனவதி ஹஸ்தம்—இராஜபோகி, சித்திரை—அறிவுள்ளவள், சுவாதி குடும்பியாவாள், விசாகம்—அமங்கிலி அனுஷம்—போகவதி, கேட்டை—பாஸ்திரீ, மூலம்—மூடம் உடையவள், பூராடம்—அமங்கிலி, உத்திராடம்—தர்மமுடையவள், திருவோணம்— பாக்கியவதி, அவிட்டம—பொருளுடையவள், சதையம்—சுமங்கிலி,பூரட்டாதி—மலடி, உத்திரட்டாதி—தம்பதிசுகம், ரேவதி—நல் புத்திரனுடையவள்

இலக்கின பலன்:—மேஷம்-நேத்திரபீடை, விருஷபம்-பதிவிரதை, மிதுனம்-பதியோகி, கடகம்-ஆயுள், தீர்க்கம், சிங்கம்-புத்திரலாபம், கன்னி-பொருளுடையவள், துலாம்-தொழில் வலிமையுடையவள், விருச்சிகம்-விபசாரி, தனுசு-தன் மார்க்கமுடையவள், ஷை பிறபாதி-பதிவிரதை, மகரம்-அவமானம், கும்பம்-தனவதி, மீனம்-சமர்த்தி

பல்லி விழும் பலன்

சிரசு நடுவில்-பிதா மாதாபீடை, சிரசின்வலதுபுரம்-சேஷ்டசகோதரபீடை, இடது பாரிசம்-கனிஷ்ட சகோதரபீடை, பிடரியில்-மாதுலபீடை, நெற்றியில்-தனவிருத்தி, நேத்திரம், மூக்கு, காது, முகங்களில்-பீடை, காது புரங்களில்-சகோதரபீடை, பசுபீடை புஜங்களில்-ஸ்திரீபீடை, மார்பில்-தன் சரீரபீடை, இடது கையில்-அபமிருத்தியுபயம, வலதுகையில்-பாதாபீடை, வலது கைவிரல்களில்- இராஜ தெரிசனம், இடது கைவிரல்களில்-ஞாதி நாசம், உதரத்தில்-தான்யநாசம் இடுப்பில்-வஸ்திரநாசம், முதுகில் தனநாசம், பின்தட்டில்-அதிக தனலாபம், வலது தொடையில்-புத்திரபீடை, இடது தொடையில்-புத்திரபீடை, முழங்கால்களில் பொருள் செலவு, பாதத்தில்-விலங்கு, நகங்களில்-பந்தனம்,இடது கட்டைவிரல்களில்-இராஜபயம், வலது கட்டைவிரல்களில்-பந்தனம், கால் விரல்களில்-விவாதம், உள்ளங்கை உள்ளங்கால்களில் -ஐஸ்வரிய விருத்தி மேற்சொல்லிய அவயவங்களில் ஆரோஹணமாக விழுந்தால் அசுபபலனும் சுபமாயிருக்கும். அவரோஹணமாக விழுந்தால் தோஷ பலன் தோஷமாகவும், குணபலன் குணமாகவுமிருக்கும். திங்கள், புதன், வியாழன், வெள்ளி, இடது பக்கங்களில் விழுந்தால் சுபபலன். அதற்குப்பரிகாரம் ஸ்நானஞ் செய்யவும், ஞாயிறு, செவ்வாய், சனி வாரங்களிலும் விழுந்தாலும சாந்தி செய்யவும்.

பல்லி சொல்லுக்கு பலன்.

திக்கு	ஞாயிறு.	திங்கள்.	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி.	சனி.
கிழக்கு	பயம்	திரவ்ய லா	ஸம்பத்து	ஸந்தோஷ	அசுபம்	சுபம்	வெகுவார்
தென்கிழக்கு	தீமை	கலஹம்	பந்துவரவு	திரவ்ய லா	பந்துமரண	அலங்கார	திரவ்யம்
தெற்கு	சுபம்	சத்துருவா	வியசனம்	சரீரபீடை	திரவ்ய லா	பந்துதரிச	ராஜதரிச
தென்மேற்கு	பந்துவரவு	விரோதம்	சத்துருபய	பந்துமா	காரியசித்தி	நல்வார்த்தை	ரோகம்
மேற்கு	சண்டை	ராஜதரிசனம்	அனுகூலம்	பயம்	கஷ்டம்	ஸந்தோஷ	வஸ்திரம்
வடமேற்கு	வஸ்திரலா	துக்கம்	தூரக்கேள்வி	செலவு	நல்வார்த்	வீட்டில் கல	ஸ்திரீபோ
வடக்கு	லாபம்	வஸ்திரவா	சத்துருபய	சுகம்	தீமை	கலஹம்	பிரியவார்
வடகிழக்கு	லாபம்	மங்களம்	வாஹனம்	நஷ்டம்	போஜனம்	சத்துரு பய	திருட பீ
ஆகாயம்	ஜெயம்	கெடுதி	பிரயாணம்	நல்வார்த்தை	கலஹம்	தனம் வரவு	காரிய நஷ்
பூமி	காரிய கெ	திரவ்ய லா	திரவ்ய லா	ஐசுவரியம்	கலஹம்	சூதக ஸ்நா	காரியசித்

யோகங்கள்.

இதனடியிற்கண்ட யோகங்கள் சூரிய உதயமுதல் நாழிகை ௩௰-வரையே பலன் கொடுக்கும். அதற்கப்பால் பலன் கொடாது. அமி—அமிர்தயோகம், சித்—சித்தயோகம்; மர—மரணயோகம் என்றறியவும்.

நக்ஷத்திரங்கள்	ஞாயிறு	திங்கள்	செவ்வாய்	புதன்	வியாழன்	வெள்ளி	சனி
அசுபதி	சித்	சித்	சித்	மர	அமி	அமி	சித்
பரணி	சித்	சித்	சித்	சித்	சித்	சித்	சித்
கார்த்திகை	சித்	மர	சித்	அமி	மர	சித்	அமி
உரோகணி	சித்	அமி	அமி	சித்	மர	மர	அமி
மிருகசீரிடம்	சித்	அமி	சித்	சித்	மர	சித்	சித்
திருவாதிரை	சித்	சித்	மர	சித்	மர	சித்	சித்
புனர்பூசம்	சித்	அமி	சித்	சித்	அமி	சித்	சித்
பூசம்	சித்	சித்	சித்	சித்	அமி	மர	சித்
ஆயில்யம்	சித்	சித்	சித்	சித்	சித்	மர	மர
மகம்	மர	மர	சித்	சித்	அமி	மர	அமி
பூரம்	சித்	சித்	சித்	அமி	சித்	சித்	சித்
உத்திரம்	அமி	சித்	அமி	அமி	மர	சித்	மர
ஹஸ்தம்	அமி	சித்	சித்	மர	சித்	அமி	மர
சித்திரை	சித்	சித்	சித்	சித்	சித்	சித்	மர
ஸ்வாதி	சித்	அமி	சித்	சித்	அமி	சித்	அமி
விசாகம்	மர	மர	மர	சித்	சித்	சித்	சித்
அனுஷம்	மர	சித்	சித்	சித்	சித்	சித்	சித்
கேட்டை	மர	சித்	சித்	சித்	சித்	மர	சித்
மூலம்	அமி	சித்	அமி	மர	சித்	அமி	சித்
பூராடம்	சித்	சித்	சித்	அமி	சித்	சித்	சித்
உத்திராடம்	அமி	மர	சித்	அமி	சித்	சித்	சித்
திருவோணம்	அமி	அமி	சித்	சித்	சித்	மர	சித்
அவிட்டம்	மர	சித்	சித்	மர	சித்	சித்	சித்
சதயம்	சித்	சித்	மர	சித்	மர	சித்	அமி
பூரட்டாதி	சித்	மர	மர	அமி	சித்	சித்	மர
உத்திரட்டாதி	அமி	அமி	அமி	சித்	சித்	சித்	சித்
ரேவதி	அமி	சித்	சித்	மர	சித்	அமி	மர

இராகுகாலம். ஞாயிறு, ௨௬¼க்குமேல் ௩௰ வரை. திங்கள், ௩¾க்குமேல் ௭½ வரை. செவ்வாய், ௨௨½க்குமேல் ௨௬¼ வரை. புதன், ௰௫க்குமேல் ௰௮¾ வரை. வியாழன், ௰௮¾க்குமேல் ௨௨½ வரை. வெள்ளி, ௰௧¼க்குமேல் ௰௫ வரை. சனி, ௭½க்குமேல் ௰௧¼ வரை.

திருச்சிற்றம்பலம்.

11 DEC 1918

Nattukkottai Vaiciyam

நாட்டுக்கோட்டை வைசியம்

ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

தொகுதி ௧. | பிங்களஹு ஆடி, ஆவணிமீ, | பகுதி ௫, ௬.

கடவுள்வணக்கம், இராமலிங்கசுவாமி.

ஒருமையுடன்நினது திருமலரடிநினைக்கின்றவுத்தமர்தம்உறவு வேண்டும், உள்ளொன்றுவைத்துப்புறம்பொன்றுபேசுவார்உறவு கலவாமைவேண்டும், பெருமைபெறுநினதுபுகழ்பேசவேண்டும், பொய்மைபேசாதிருக்கவேண்டும், பெருநெறிபிடித்தொழுகவேண்டும், மதமானபேய்பிடியாதிருக்கவேண்டும், மருவுபெண்ணாசையை மறக்கவேவேண்டும், உனைமறவாதிருக்கவேண்டும், மதிவேண்டும், நின்கருணைநிதிவேண்டும், நோயற்றவாழ்வில்நான்வாழவேண்டும், தருமமிகுசென்னையிற்கந்தகோட்டத்துள்வளர்தலமோங்கு கந்தவேளே, தண்முகத்துய்யமணியுண்முகச்சைவமணிசண்முகத்தெய்வமணியே.

எந்தைநினைவாழ்த்தாதபேயர்வாய்கூழுக்குமேக்கற்றிருக்கும் வெறுவாய், எங்கள்பெருமானுனைவணங்காதமூடர்தலைபிகழ்விறகெடுக்குந்தலை, கந்தமிகுநின்மேனிகாணாதகயவர்கண்கலநீர்சொரிந்தவழுகண், கடவுள்நின்புகழ்தனைக்கேளாதவீணர்செவிகைத்திழவு கேட்குஞ்செவி, பந்தமறநினையெண்ணாப்பாவிகள்தம்நெஞ்சம்பகீரெனநடுங்கும்நெஞ்சம், பரமநின்திருமுன்னர்குவியாதவஞ்சர்கைபலியேற்கநீள்கொடுங்கை, சந்தமிகுசென்னையிற்கந்தகோட்டத்துள்வளர் தலமோங்குகந்தவேளே, தண்முகத்துய்யமணியுண்முகச்சைவமணிசண்முகத்தெய்வமணியே.

ஐயநின்சீர்பேசுசெல்வர்வாய்நல்லதெள்ளமுதுண்டுவந்ததிருவாய், அப்பநின்திருவடிவணங்கினோர்தலைமுடியணிந்தோங்கிவாழுந்தலை, மெய்யநின்திருமேனிகண்டபுண்ணியர்கள்கண்மிக்கவொளி

மேவுகண்கள், வேலநின்புகழ்கேட்டவித்தகர் திருச்செவிமிழாச்சுபங்கேட்குஞ்செவி, துய்யநின்பதமெண்ணுமேலோர்கள்நெஞ்சமெய்ச்சுகரூபமானநெஞ்சம், ? தோன்றலுன் திருமுன்குவித்தபெரியோர்கைகள்சுவர்ன்னமிடுகின்றகைகள்,; சைபமுயர்சென்னையிற்கந்தகோட்டத்துள்வளர்தலமோங்குகந்தவேளே, தண்முகத்துய்யமணியுண்முகச்சைவமணிசண்முகத்தெய்வமணியே.

வாழையடிவாழையெனவந்ததிருக்கூட்டமரபினில்யானொருவனன்றோ? வகையறியேன் இந்தஏழைபடும்பாடுனக்குத்திருவுளச்சம்மதமோ? இதுதகுமோ? இதுமுறையோ? இதுதருமந்தானோ? மாழைமணிப்பொதுநடஞ்செய்வள்ளால்! யானுனக்குமகனலனோ? நீயெனக்குவாய்த்ததந்தையலையோ? கோழைபுலகுயிர்த்துயரமினிப்பொறுக்கமாட்டேன், கொடுத்தருள் நின் அருளொளியைக் கொடுத்தருளிப்போதே.

விண்படைத்தபுகழ்த்தில்லையம்பலத்தானெவர்க்கும்மேலானன் அன்பருளமேவுநடராஜன்,பண்படைத்தவெனையறியாவிளம்பருவந்தனிலேவபரிந்துவந்துமாலையிட்டான்பார்த்தறியான்மீட்டும், பெண்படைத்த பெண்களெலாம்அவமதித்தேவலதுபேசுகின்றார்கூசுகின்றேன்பிச்சியெனலானேன், கண்படைத்துங்குழியில்விழக்கணக்குமுண்டோ? அவன்தன் கணக்கறிந்தும்விடுவேனோ? கண்டாயென்தோழி.

துப்பாடுதிருமேனிச்சோதிமணிச்சுடரே, துரியவெளிக்குள்ளிருந்தசுத்தசிவவெளியே, அப்பாடுசடைமுடியெம்ஆநந்தமலையே, அருட்கடலே, குருவே, என்னுண்டவனே, அரசே, யிப்பாடுபடவெனக்குமுடியாதுதுரையே, இரங்கியருள்செயல்வேண்டுமிதுதருணங்கண்டாய், தப்பாடுவேனெனினும்என்னைவிடத்துணியேல்தனிமன்றுள்நடம்புரியும்தாண்மலர்எந்தாயே.

அருள்விளக்கே, அருட்சுடரே, அருட்சோதிச்சிவமே, அருளமுதே, அருள்நிறைவே, அருள்வடிவப்பொருளே, இருள்கடிந்தென் உளம் முழுதும் இடங்கொண்டபதியே, என்னறிவே, என்னுயிரே, எனக்கினியஉறவே, மருள்கடிந்தமாமணியே, மாற்றறியாப்பொன்னே, மன்றில்நடப்புரிகின்றமணவாளாவெனக்கே,தெருளளித்ததிருவாளா ஞானவுருவாளா தெய்வநடத்தரசே நான்செய்மொழியேற்றருளே.

கோடையிலேயிளைப்பாற்றிக்கொள்ளும்வகைகிடைத்தகுளிர்தருவே, தருநிழலே, நிழல்கனிந்தகனியே, ஓடையிலேயூறுகின்றதீஞ்சுவைத்தண்ணீரே, உகந்ததண்ணீரிடைமலர்ந்தசுகந்தமணமலரே, மேடையிலேவீசுகின்றமெல்லியபூங்காற்றே, மென்காற்றில்விளைசுகமே, சுகத்திலுறும்பயனே, ஆடையிலேயெனைமணந்த மணவாளா பொதுவிலாடுகின்றவரசே என்னலங்கல் அணிந்தருளே.

தனித்தனிமுக்கனிபிழிந்துவடித்தொன்றாக்கூட்டிச் சர்க்கரையுங்கற்கண்டின்பொடியுமிகக்கலந்தே, தனித்தநறுந்தேன்பெய்துபசும்பாலும் தேங்கின்தனிப்பாலும்சேர்த்து ஒருதீம்பருப்பிடியும்விரவி, இனித்தநறும்நெய்யளைந்தேஇளஞ்சூட்டினிறக்கி எடுத்தசுவைக்கட்டியினும் இனித்திடும்தெள்ளமுதே, அனித்தமறத்திருப்பொதுவில் விளங்கும்நடத்தரசே அடிமலர்க்கென் சொல்லணியாம் அலங்கலணிந்தருளே.

பார்த்தாலும்,நினைத்தாலும், படித்தாலும், படிக்கப்பக்கம்நின்றுகேட்டாலும், புரிந்துணர்ந்தாலும், ஈர்த்தாலும், பிடித்தாலும், கட்டியணைத்தாலும், இத்தனைக்குந்தித்திக்குமினித்தசுவைக்கரும்பே, வேர்த்தாவிமயங்காதுகனிந்தநறுங்கனியே,மெய்ம்மையறிவானந்தம்விளக்குமருளமுதே, தீர்த்தாவென்று அன்பரெலாந்தொழப்பொதுவில்நடிக்கும்தெய்வநடத்தரசேஎன்சிறுமொழியேற்றருளே.

கையாததீங்கனியே, நயக்காதவமுதே, கரையாதகற்கண்டே, புரையாதகரும்பே, பொய்யாதபெருவாழ்வே, புகையாதகனலே, போகாதபுனலே, உள்வேகாதகாலே, கொய்யாதநறுமலரே, கோவாதமணியே, குளியாத பெருமுத்தே, ஒளியாதவெளியே, செய்யாதபேருதவி செய்தபெருந்தகையே, தெய்வநடத்தரசே என்சிறுமொழியேற்றருளே.

குணமறியேன் செய்தபெருங்குற்றமெலாங்குணமாகக்கொண்டருளியென்னுடைய குறிப்பெல்லாமுடித்து, மணமுறுபேரருளின்பவமுதமெனக்களித்து, மணிமுடியுஞ்சூட்டி, எனைவாழ்கவெனவாழ்த்தித், தணவிலாதென்னுளத்தேதான்கலந்துநானுந்தானுமொருவடிவாகித்தழைத்தோங்கப்புரிந்தே, அணவுறுபேரருட்சோதியரசுகொடுத்தருளி ஆடுகின்றவரசே என்னலங்கலணிந்தருளே.

முன் 30-வது புத்தகம் 643-வது பக்கத்தொடர்ச்சி.

கல்வி, அறிவு, செல்வம், நல்லொழுக்கம் முதலியவைகளிற் சிறந்து, தெய்வீகத்தன்மையால் நிறைந்து அளகைபம்பதியையே நிகர்ப்பவிளங்கும் ஏ தேவநகரமே! நமது, "நாட்டுக்கோட்டை வைசிய" மரபார்க்குரிய மற்றைய எல்லா நகரங்களுக்கும் நீயொரு சிறந்த தலைநகரமாக விளங்குவதை நீ! நன்றாக உணர்தல்வேண்டுமல்லவா? அதற்குவந்தாற்போல"தேவநகரம்"என்னும் தெய்வீகத் தன்மையோடுகூடிய எவர்களும் வியப்பத்தகுந்த உயர்தரப்பெயர் இயற்கையாகவே அமைந்திடத்தலையும் நீ! நன்றாகத்தெரிதல் வேண்டுமல்லவா? திருத்தமாகவேண்டும் எவ்விதக் காரியாதிகளையும்பற்றி ஏனைய எல்லா நகரங்களும் நின்னையே எதிர்பார்த்து நிற்கிறதென்பதை நீ எவ்வித மார்க்கத்தாலும் மறவாதிருத்தல்வேண்டுமல்லவா? எவ்வித முகாந்தரங்களைக்கொண்டும் நின்னையே நீ! மறந்திருத்தல் நியாயமாகாதல்லவா? நினது அழகான பெயரோடு கூடிய வன்மைத் தன்மையால் நீ! செய்துமுடிக்கவேண்டும் ஒவ்வொரு காரியாதிகளையும் எண்ணி மிக நன்றாக கணக்கெடுத்திருக்கின்றாயா? நினக்குக் கிடைத்திருக்கும் அழகிய திருநாமமானது, அழகும், சீலமும், செல்வமும், வள்ளற்றன்மையும் உடைத்தான ஒருவனை கருப்பன் என்பதுபோன்றும், எந்த இடத்திலும் காணக்கூடாத ஒருவனை எங்கும் உள்ளவன் என்பதுபோன்றும், காசிநகரத்தையே ஒருநாட் கனவிற்கூட கண்டிராத ஒருவனை காசிநாதன் என்பதுபோன்றும், ஏக முகமுடையான் ஒருவனை ஷண்முகம் என்பதுபோன்றும், இரண்டுகண்ணுந்தெரியாதகுருடன் ஒருவனை நல்லகண்ணு என்பதுபோன்றும், அறத்தின்மார்க்கம் இஃதென ஒரு சிறிதளவுகூடத் தெரிந்திராத ஒருவனை அறம்வளர்த்தநாதன் என்பதுபோன்றும், கருணையென்பது கருணையாக இருக்கும் ஒருவனை கருணாகரதாசன் என்பதுபோன்றும், கடவுள்பக்தியென்பது ஒருசிறிதளவுமில்லாத ஒருமுழுமூடசிகாமணியை சிவகுருநாதன் என்பதுபோன்றும், எழுத்துவாசகமென்பது எட்பிளவும் அறியாத ஒருத்தியை சரஸ்வதியென்பதுபோன்றும், பிள்ளைப்பேற்றையேயறியாத ஒருத்தியை தாய் அம்மாளென்பதுபோன்றும், ஐயம்புகுந்துண்பாளொருத்தியை இலக்குமியென்பதுபோன்றும், ஒரு மணமும் வீசாத ஒரு துண்டுக்காகிதத்தை திருமணப் பத்திரிகை

என்பதுபோன்றும்உடைத்தானதல்லவே? நமது குலதெய்வமாகிய "சேந்திலம்பதியை" முன்னிலையாகவைத்துச்செய்துகொண்ட சத்தியத்துக்கு மாறுதலாக நின் அருமைக் குழந்தைகளை இயலுமாறுசெய்தல் நினது பேருந்தன்மைக்கும் அழகாகுமோ? சத்தியவந்தர்களென்னும் உத்தமத்திருவாக்கு நமது வகுப்பாருக்கு இக்காலத்துக் கிடைத்ததல்லவே? எத்துணையோ பன்னெடுங்காலங்களுக்கு முன்னரேயிருந்து கிடைத்த ஓர் பெரும்பாக்கியமல்லவோ? ஒருதலைக்காக ஒன்பது தலைவர்கள் துணிந்தோடி முன்னின்று சத்தியத்தை நிலைநாட்டியதும் நின்னுடைய தெய்வீகசமூகந்தானென்பதையும் நீ! மறந்துவிட்டனையோ? காலவியற்கையால் எமதருமைச் சகோதரர்கள் நமது பூர்வீகக்கொள்கைகளைச்சிறிது மறப்பார்களாயினும் அதனை ஞாபகம் வருமாறு போதனைசெய்யவேண்டுவதும் நினது பேருங்கடமையேயாம். அல்லவோ? தாயினும் சிறந்தோய்! என ஆன்றோர்களாற் "கடவுளை"ச் சிறப்பித்துக்கூறுவதற்கும் இணையாகநின்ற தாயின் தன்மையை நீ! வகித்துக்கோடல் வேண்டாவோ? ஏ அம்மே! ஏ எம் அருமைத்தாயான ஓ! தேவநகரீ! நின் பிள்ளைகளொருங்கும் மிக நல்லவர்களேயாம். காலவியற்கைக்குத்தக்கவாறு இயலத்தெரிந்தவர்களேயாம். மிக மேலான அபூர்வசக்திவாய்ந்தவர்களேயாம். கல்வி அறிவு முதலிய பல நல்லொழுக்கங்களிலும் மிகச் சிறந்தவர்களே யாம். ஒருமை பெற்றுவாழ்வதில் மிகுதியும் பேரவாவுடையவர்களேயாம். பூர்வீகவாசனையிற பெரும்பற்றுடையவர்களேயாம். நமது ஜாதியக் கட்டுக்களை அவிழ்க்க பிரியப்படாதவர்களேயாம். சத்தியத்தை நிலைநாட்டுவதற்குத்தகுந்த பத்தியம் காப்பவர்களே யாம். என்றாலும் "அரியகற்று ஆசற்றார்கண்ணும் தெரியுங்கால் இன்மையரிதே வெளிறு" என்பதற்கிணங்க சில முக்கிய விஷயங்களில் ஞாபகமின்மையும் இருக்கத்தான்கூடும். இன்னும் "நெல்லுக்கு உமியுண்டு, நீர்க்கு நுரையுண்டு, புல்லிதழ் பூவிற்கும் உண்டு" என்றும் ஆன்றோர் திருவாக்குகள் காணப்படுகின்றன. ஆகலின் ஒரு ஜனசமூகத்து சிற்சில குறைபாடுகள் காணப்படுவதும் சாதாரண வியற்கைதான். என்றாலும் அக்குறைபாடுகளை நிவர்த்திசெய்யவேண்டுவதும் கல்வியறிவு செல்வத்தாற்சிறந்த பெரியார் பலரின் கடமையேயாகின்றது. ஆகலின் ஏ அம்மே! இதன்கீழ்வரும் சில முதல்,

விஷயங்களை எம் அருமைச்சகோதரர்களுக்கு ஞாபகப்படுத்துவா யாக. அஃதெனக்கு பேராபரணங்களாகும்.

நகரக்கூட்டம் அகரமதாகும்
ஒருமைப்பாடு இருமைக்கும் நன்றே
பொதுநலம்புரிவார் யாதானும் பெரியரே
நன்மையுணண்மை தன்னினம் புரத்தல்
பெரியார்க்கழகு பேதமையொழித்தல்
செல்வர்க்கழகு தலைவராய் நிற்றல்
கல்வியுநிலையும் செல்வமதாகும்
அடக்கமும்பொறையும் ஆள்வினைக்குறுப்பாம்
அபேதத்தன்மை ஆண்டவனுக்கும்
ஆழ்ந்தசிந்தை யாவர்க்கும் உரித்தே
புகழ்நிலைபோன்றது ஒருநிலை பிறவில
கடமையைச்செய்தல் உடைமையதாகும்
அப்பன்வாக்கு யாவர்க்கும் நன்றே.

"இடிக்குந்துணையாரையாள்வாரையாரே
கெடுக்குந்தகைமையவர்" என்றும்,
"இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்
கெடுப்பாரிலானுங்கெடும்" என்றும்,
"செருக்குஞ் சினமுஞ் சிறுமையுமில்லார்
பெருக்கம் பெருமிதநீர்த்து" என்றும்,
"எதிரதாக் காக்கும் அறிவினார்க்கில்லை
யதிரவருவதோர்நோய்" என்றும்,
"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து
அகநக நட்பது நட்பு" என்றும்,

வரும் தேவர் திருவாக்குகளை நன்றாகச்சிந்தித்து ஞாபகத்தி லிருத்திக் கோடலும் வேண்டும், என்றும்,

II. நமது வகுப்பைச்சார்ந்த பலபெரிய செல்வவந்தர்கள் ஏனையபலதருமகைங்கர்யங்களையும், மிகுந்த பக்திசிரத்தையோடும், அன் பேரடும் கையாண்டுவருவதைப்போன்று, நமது சமூககைங்கர்

யத்தையும் ஒருபெரியார் கையாண்டுவருதல் தற்கால ஆவசியக மான பல முதல் விஷயங்களினும் ஆவசியமான வொரு முதல்விஷ யமேயாமென்றும், அங்ஙனமானல் நமது மகா சமூகமானது அழ குஞ் சீலமுஞ் செல்வமுங்கூடிய ஒரு சிறிய இராஜதானியாக விளங் குமாமென்றும், அதற்காக அந்தப்பெரியார் அளவுக்குமிஞ்சிய பெரும்பிரையாசை யெடுத்துக்கொள்ளல்வேண்டாமாமென்றும், அங்ஙனமெடுத்து ஒருபெரியார் கொண்டுமுடிப்பாரானல் அஃதே நமது சமூகத்தைச்சார்ந்த மற்றெல்லாக் கைங்கரியங்களுக்கும் அடி பீடமாமென்றும், அதற்குரிய நாகரீக தசையில் தற்காலம் விளங் கப்பெறுகிறது நமது தேவநகரம், காரைமாநகர், கண்டனூர் கோ ட்டையூர் பள்ளத்தூர் கானடுகாத்தான் முதலிய பெரியநகரங்களே யாமென்றும், அதற்கெல்லாம் முதல் அடிபீடமாக நிற்பது நமது வைசிய சிவானந்த சபையேயாமென்றும், அங்ஙனமாக நமது மகா சமூகத்துக்கு முதன்முதலாகச் செய்யவேண்டும் கைங்கர்யம்(சர்வ நகரக்கூட்டம்) அஃதாவது நமது தொண்ணூற்றாறு நகரக்கூட் டமேயாமென்றும், அக்கூட்டத்தை எவ்விதக்கட்டமும், பெரும் பிரையாசையுமின்றிக் கூட்டுதல் வேண்டுமாயின்,

ஸ்ரீமான், சோமசுந்தரஞ் செட்டியாரவர்கள்,
,, அருணசலம் செட்டியாரவர்கள்,
,, வைரவன் செட்டியாரவர்கள்,
,, பெத்தாச்சி செட்டியாரவர்கள்,
,, இராமநாதன் செட்டியாரவர்கள்,
,, இலக்குமணஞ் செட்டியாரவர்கள்,
,, அண்ணமலை செட்டியாரவர்கள்,
,, முத்தய்யா செட்டியாரவர்கள்,
,, வீரப்ப செட்டியாரவர்கள்,
,, சுப்பிரமணியஞ்செட்டியாரவர்கள்,
,, சிதம்பரஞ் செட்டியாரவர்கள்,
,, சுவாமிநாதன் செட்டியாரவர்கள்,
,, இராமஸ்வாமி செட்டியாரவர்கள்,
,, சண்முகஞ் செட்டியாரவர்கள்,
,, மைனர் செட்டியாரவர்கள்,

ஸ்ரீமான் நாராயணஞ் செட்டியாரவர்கள்,
,, நடேஷன் செட்டியாரவர்கள்,
,, முருகப்ப செட்டியாரவர்கள்,
,, இராமன் செட்டியாரவர்கள் ஆகிய இப்பெரியார் பலருள் ஐவர், அல்லது மூவர், அல்லது இருவர் ஒருவரே என்கினும், இவ்விஷயத்தை முடிக்கற்காகவே நாமொரு அவதார புருஷராகப் பிறந்திருக்கிறோம் எனப்பூரண மனத்தோடுகூட நிச்சயித்துக்கொண்டு, நமது மற்றெல்லாக் காரியங்களிலும் இதுவேமுதன்மையானதெனத் தீர்மானித்துக்கண்டு, டம்பம் அல்லது ஆடம்பரம் என்பதை அறவே யொழித்துவிட்டு, கோர்வம், கௌரவம என்பதைச் சாம்பராக்கி நெற்றியிலிட்டுக்கொண்டு, சினம், பொறாமை, வஞ்சம், துவேஷம், ஸ்திரிபோகம்முதலிய தீச்செயல்களை வேரறக் களைந்துவிட்டு நமது சமூககாவலன், சமூக ஊழியன், சமூகத்தலைவன், சமூக மித்திரன், சமூக தர்மகர்த்தன் முதலான அழகியதிருநாமங்களை கங்கணமாகக் கட்டிக்கொண்டு, இன்னகால அளவைக்குள் இன்னதுசெய்து முடிக்கேனேல், இன்னவிதமாவேன் என தனக்குள்ளேதான் ஜபதஞ்செய்துகொண்டு பெரியவோர் பசுமையான அரசமரத்தடியில் பெரியவோர் ஆணியையறைந்துவிட்டு, மேல்வேஷ்டி, போர்வை முதலானவைகளை யெல்லாம் எடுத்து கச்சையாக இடுப்பிலார்த்துக்கொண்டு மிக மனவூக்கத்தோடு தமது சித்திரசாலை, சாவடி. இல்லங்களைவிட்டு வெளியிறங்குதல் வேண்டும் என்றும், அவ்வாறு இறங்கியிருக்குந்தன்மையை நமது மித்திரன்மூலம் அல்லது துண்டுப் பத்திரிகைகள்மூலம் விளம்பரப்படுத்திவிடல்வேண்டுமென்றும்,

III. நமது ஒன்பது ஆலயங்களையுஞ்சார்ந்த எல்லாநகரத்தும்,, கல்வியாலும், அறிவாலும், செல்வத்தாலும் நிறைந்த தலைவர்களில்லங்கடோறும், புதிய பணக்காரர், பழைய பணக்காரர் என்பதை ஒரு சிறிதளவு கனவிலுங்கூட நினையாது சென்று, சென்று, ஆழ்ந்தகருத்தோடும் ஆறியசிந்தையோடுங்கூடத் தெளிந்து பகர்ந்து பேசி ஒருங்கே ஒரே சங்கமாக நமது வகுப்பைச் சார்ந்த எந்த ஆலயத்திலாவது. நமது தேவநகரத்தின் வைசிய சிவானந்த சபையிலாவது நம்முடைய வகுப்புள்ளே சிறந்த ஒரு

பெருந்தகையவாய மேதாவியின் தலைமையின் கீழ்க்கூட்டி நமது சமூகத்துக்காகவேண்டும் பலவழிகளையும் பற்பல மார்க்கங்களாக எவ்வகைத்தானுந்தேர்ந்தநமதுவகுப்பைச்சார்ந்த சர்வகலாநிபுணர்களாலேயுந்தீரத்தெளிந்துபகர்ந்துபேசிவருங்கால நாகரீகங்களுக்கு நேரொப்ப இன்றியமையாது வேண்டுஞ் சிற் சில சட்டங்களை ஒருங்கேவான்முறையாக நமது செந்தமிழ்ப்பாஷையாலேவரைந்து பூர்த்திசெய்துகோடலும் வேண்டும் என்றும்,

IV அங்ஙனம் பேசிமுடித்துத் தீர்மானிப்பதில் ஒரு நூறு பெயர்களுக்கு மேற்போகாமல் நமது மகாசமூகத்து அங்கத்தினர்களாகவமைந்து கோடலும்வேண்டும் என்றும்,

V அந்த நூறுபெயர்களுக்குள் சம்மதிச்சீட்டுக்கொடுத்து இரண்டு பிரசிடெண்டுகளையும், இரண்டு செக்ரட்டேரிகளையும் தீர்மானித்துக்கோடல்வேண்டும் என்றும்,

VI அவர்களின் மாதவேதனத்தைப்பற்றி மகாசங்கத்தில் நிதானமாகத் தீர்மானித்துக்கொள்ளலாமென்றும்,

VII நமது கவர்னமெண்டாரவர்கள் தங்களின் ஆளுகைக்குட்பட்ட உலககைங்கர்யங்களை எவ்வாறு முனிசிப்பல் டிபாற்றுமென்று, ரெவினியூ டிபாற்றுமென்று, போலீஸ் டிபாற்றுமென்று, என்றும் இன்னும் இவைபோன்று பலவித டிபாற்றுமென்றுகளாகத் தானே எந்தக்காரியாதிகளையும் பகுதி பகுதிகளாக வகுத்துக்கொண்டு நடாத்துந்தன்மையைப்போன்று நமது மகாசமூகத்தின் திருத்தமார்க்கமான பலவிஷயங்களையும் ஒவ்வொரு டிபாற்றுமென்றுகளாகத்தானே பிரித்துத் தக்கவாறு கொண்டுநடாத்துதல் வேண்டுமாமென்றும்,

IIX வைத்தியசாலைகளுக்காக ஒரு வீசமும், கல்விச்சாலைகளுக்காக ஒரு வீசமும், திருப்பணிகளுக்காக ஒரு வீசமும், நம்முடைய நகரங்களுக்குள் பொதுவாகவேண்டும் போக்குவரத்துப்பாட்டைகளையும், கிணறுகுளங்களையுஞ் சீர்திருத்துவதற்காக ஒரு வீசமும், இன்னும்பொதுவாகவேண்டும் அச்சியந்திரசாலை சுகாதாரமுறைப் பாதுகாப்புக்காக ஒருவீசமும், இன்னும் ஏனையசில விஷயங்களுக்காக ஒருவீசமும் ஆக நம்முடைய வகுப்பைச்சார்ந்த

எந்தப்பெரிய வர்த்தகர்கள் முதற்கொண்டு மாதம் ஒன்றுக்கு 10 15 விராகன் வருவாயுள்ள எந்தச்சிறியவேலைக்காரர்கள் வரை ஒவ்வொரு சிற்றூர்களிலும், ஒவ்வொரு நகரங்களிலும், ஒவ்வொரு தொலைநகரங்களிலும் ஒரு வருஷாந்தத்திலோ அல்லது மூன்று வருஷாந்தத்திலோ தங்கள், தங்களின் ஆதாயக்கணக்கு வரவு செலவுகளைப்பார்த்து எஞ்சியமொத்தத்தில் காலேயரைக்கால் பாகத்தையும் நம்முடைய வகுப்பின்மகாசங்கத்தாரால் குறிப்பிடப்பெற்றதெய்திக்குள் நமது வகுப்பின் பொதுப்பணச்சாலைக்கு அவ்வவர்களே மிக்கவொழுங்காயும், சத்தியத்துக்குக்கட்டுப்பட்டுச் சரியாயும் அனுப்பிக்கொடுத்தல்வேண்டும் என்றும்,

IX இம்மாதிரியாக ஒவ்வொரு விஷயங்களையுங் கவனித்து நமது ஜனசமூகத்துக்கு நம்மாற் செய்யக்கடனாகக்கிடக்கும் ஒவ்வொரு குறைபாடுகளையும், குறைபாடில்லாதவண்ணம் பூர்த்தியாகத் திருத்தியமைத்தல் வேண்டுமாமென்றும், இதற்குமிஞ்சியவோரறச்செய்கைஎதுவுமேஇல்லையாமென்றும், காலதர்மம்நோக்கி நாமும் நன்னாகரீகமார்க்கத்தில் முன்னேற்றமடைதல்வேண்டுமாமென்றும், இவ்விஷயங்கட்கு இக்காலமேமிக உயர்ந்ததாமென்றும், இது விஷயங்களைப்பற்றிப் பெரியார் எவர்களும் நன்றாகச்சிந்தித்தல்வேண்டுமாமென்றும், ஏ! அம்மே! ஏ! தேவநகரீ! நீ! மிகச் செவ்வனே நின் அருமைச்செல்வ குழந்தைகளுக்கு ஞாபகப்படுத்துவதோடுங்கூட,

"இரும்பனைவெண்டோடுமலைந்தோனல்லன்
கருஞ்சினைவேம்பின்றெரியலோனல்லன்
நின்னகண்ணியும்ஆர்மிடைந்தன்றே, நின்னொடு
பொருவோன்கண்ணியும்ஆர்மிடைந்தன்றே
ஒருவீர்தோற்பினுந்தோற்பதுங்குடியே
இருவீர்வேறல்இயற்கையும்அன்றே
குடிப்பொருள் அன்றுநும்செய்திகொடித்தேர்
நும்மோரன்னவேந்தர்க்கு
மெய்மலியுவகைசெய்யுமிவ்விகலே"

ஒருகுடிப்பிறந்த இருவர்கலாய்த்துழி அவரையடுத்து ஏற்பனகூறிச் சமாதானஞ்செய்யுமுறை இக்கவியில் வெகு அழகாக

அமைந்துள்ளது. அஃதாவது, ஒருகுடிப்பிறந்த நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்னும் சோழமன்னரிருவர் அந்நாட்டரசுரிமை தமக்குரியது, தமக்குரியது என முரணிப்பெருங்கலாம் விளைத்துப் பொருதனர். அதுகண்டு நடுநிலைகோடா நாவலர்திலகம்போன்ற "கோவூர் கிழார்" என்னும் புலவர்பெருமான் தம்மனம் எற்றும் பொறாது அம்மன்னரிருவர்பாலும் சென்று அரசர்களே! பகைத்து நிற்கும் நும்மிருவருள் ஒருவராவது சேரபாண்டியரல்லர். நீங்களிருவீரும் சோழமன்னரே. நும்மில் யாவர்தோற்பினும் தோற்பது நமது குடியேயன்றிவேறில்லை. இருவருள் ஒருவர்தோற்பது உறுதியே. இதனால் நுங்கள்செய்கை நும்குடிப்பெருமைக்கேற்றதன்று. வேற்றுவேந்தர்க்கு நகைப்பைத் தரத்தக்க இப்போரையொழிமின் எனக்கூறி யாற்றினர் என்பது. ஏ! அம்மே! மேற்கண்ட கோவூர்கிழார் அமுதவாக்கையும், அதன் அருங்கருத்துக்களையும் நினதொருகருப்பத்திலுதித்த நின் அருமைப்புதல்வர்களுக்கு மிகநன்றாக ஞாபகப்படுத்தி ஏ! எம் அருமைமக்காள்! நீங்கள் ஒருவருக்கொருவர், நாமெல்லாம் ஒருகுடிப்பிறப்பாளரே என்பதை ஒருசிறிதளவும் நினையாது, மறந்து கொன்னேவெறுங்கலாம் விளைத்து ஏனைபோர் பலரும் ஏ! ஏ! இஃதெவன் என்றுநகைப்ப அடித்துக்கொள்ளன்மின். நுங்களின் தாதை முதாதைகள் பெரும்பிரையாசைப்பட்டுத் தேடிக்கொணர்ந்து, நுங்கள்பாலொப்புக்கொடுத்திருக்கும் பெரும்பொருட்குவையை நன்மையும், அவசியமுமல்லாத பலமார்க்கத்தானும் சிதைத்துவிடன்மின். வெறும் மனக்கோட்டத்தாற்கோடேறன்மின். பயனுடைத்தல்லாதபலமார்க்கங்களில் நுங்களின்மனத்தையும், பரிசுத்தமான அறிவையும் அருமையான செல்வத்தையும் பாழ்படுத்தன்மின். நமதுசமூகம் ஒருங்கிற்கும் தீங்குநிகழக்கூடிய ஒருகாரியம், ஒருவருக்கு அஃது எத்துணைநன்மைகளைப்பயப்பதாயினும் அதனைச் செய்யன்மின். "எல்லாரும் வாழ்க, எம்மகளும் வாழ்க" என்று நுங்களின் தாய்வர்க்கத்தார் ஆசீர்வதிக்குந் தன்மையை நினைமின். மிகுதியும் உள்ளன்போடு எடுத்துக்கூறுவார் வடித்தநூற்களைத்தடுத்துக்கூறன்மின். இச்சகம்பேசும் கொச்சைமக்கள்மீது பச்சம்வையன்மின். வள்ளியமின்றிக் கள்ளக்கும்பிடுபோடும் எவரையும் வெள்ளைமாக்களென நினையன்மின். வேசையரில்லத்துக்குத் தூது செல்லுவார் எவரோடும் நேசம்வையன்மின். செல்வவந்தரான ஒவ்

வொருவரும் தங்களின் மோட்டார்க்கார், சித்திரசாலை சில கோர்ட்டுவிஷயங்கள் முதலியன தெரிந்துகொண்டதோடுமட்டும் நின்றுவிடாமல் ஒவ்வொருநாள் காலைமாலையும் ஒவ்வொருமணிக் கூறு கட்டாயமாக வாசகசாலை, சங்கம், சாவடிமுதலிய பொது ஸ்தானங்களுக்குச்சென்றிருந்து ஆங்குடைத்தான நமது சமுகத்தைச்சார்ந்த சாதாரண எல்லாச்சகோதரர்களோடும் தங்களின் ஆடம்பரத்தையும், கர்வத்தையும், கௌரவத்தையும், கெட்ட எண்ணங்களையும், ஒருவித சங்கூச்சத்தையும், வெட்கத்தையும், நம்முடைய பெருந்தன்மைக்குஉரியதல்லவென்பதையோர்ந்து அவைகளை ஒருமூட்டையாகக்கட்டிச் சுருட்டி மற்றவோரிடத்தி லெறிந்துவிட்டு, புலர்ந்தசிந்தையும், மலர்ந்தவதனமும், கனிந்த மொழிகளும் விளங்கக்காட்டி அளவளாவி, பொதுக்காரியங்களையும், சமுக நன்மைகளையும், தேசக்ஷேமங்களையும், சமயக்கொள்கைகளையும், வியாபாரமுறைகளையும், தொலைச் சமாசாரங்களையும், ஏனைய உலகவியவகாரங்களையும், பத்திரிகைகளையும்பற்றி மிகநன்றாகக்கலந்துபேசி கூடுமானால் மனோ உல்லாஸமாக சில முக்கிய விஷயங்களைப் பிரசங்கம்செய்தும் நுங்களின் இல்லத்துக்குச்செல்மின். சாதாரண உடுக்கையுடன் நுங்களின்நகரத்தை வலமாகவோ இடமாகவோ கால்நடையாகச்சென்று நகரபரிபாலன விஷயங்கள் பலவற்றையும்பற்றிக் கவனித்துத்தெளிமின். நாமாயூனியன்சேர்மென் எனநினையன்மின். ஷெடிசேர்மென்நாமாகநியமிக்கப் பெற்ற ஓர் அதிகாரியேஎன்பதை நன்றாகவுணர்மின். பெரியார்பலரும் பெரியாராயிருமின். எக்காரணத்தாலும்இதனைமறவன்மின். இன்னும்நமது மகாசமுகத்துக்கு, பெரியாராயுள்ளார் ஒவ்வொருவரும் நாம் செய்யவேண்டுங் கடப்பாடு என்ன என்னவென்பதையும், அதற்காக நமது எல்லாநகரங்களையும் ஒரு சுற்றுப்பிரையாணயாத்திரைசெய்து கணக்கெடுமின். ஏகாங்கமான ஒரு குடும்பம்போன்றுவாழ்வதற்காகவேண்டும் பலமார்க்கங்களையும் ஆங்காங்கு உபந்நியாசங்கள் செய்மின். பிரபுக்களாயுள்ளார் ஒவ்வொருவரும் தனியாக ஸ்பெஷல் மீட்டிங்கொன்றுகூடுமின். நமது சமுகத்திருத்த விஷயங்களிலேயே நுங்களின் அரிய சிந்தையைச் செலுத்துமின் எனஇம்மாதிரியாக ஏ! அம்மே! நமதுமகாசமுகத்துக்காக வேண்டும் பலமுதல்விஷயங்களையும் மிகச்செவ்வனே ஞாபகப்படுத்துவாயாக. ஏ! அம்மே! நின்தேகம் நீடூழிவாழ்க.

X ஆம், அப்பா! ஏ! கண்மணி! என் அருமைப்புதல்வர்களுக்கு அருமையான இத்துணை விஷயங்களையும் மிகச்செவ்வையாக ஞாபகப்படுத்தும்படி நீ! என்னை மிகவும் மன்றாடிக்கேட்டுக் கொள்கிறாய். அஃதிருக்கட்டும். ஞாபகப்படுத்தவேண்டும் ஆவசியகம் உடையதுதான். அதற்குமுன்னதாக நினக்குச் சில முக்கிய விஷயங்களை நான் ஞாபகப்படுத்தவேண்டியதாயிருக்கிறது. அஃதாவது நீ! என்னுடைய அருமைப்புதல்வர்களின் சமுகத்தைச் சார்ந்த ஒருவனல்லவே? நின்னுடையமனதில் தானே கொஞ்சம் விவேகசாலி என்றஞாபகம் இருக்குமேல் தரித்திரதசையில்குசேல முனிவரின் அண்ணனாகக்காணப்படுவாயோ? சாதாரணமாக நின்னுடைய நல்குரவை நிவிர்த்தித்துக்கொள்ள வியலாதநின்னுடைய விவேகத்தன்மையா என் அருமைப்புதல்வர்களின் ஒருபெரியமகா சமுகத்தைத்திருத்த முன் ஓடிவந்தது? அடோ! பைத்தியகாரா! அஃதெங்ஙனம் சாத்தியமாகப்போகிறது? நின்போன்ற அறிவிலி இஞ்ஞாலத்தில் எவனோஉளன்? காலவியற்கையும், உலகவியவகாரமும் ஒருசிறிதளவும் விளங்காத நீயோ? எங்களின் மகாசமுகத்தைத்திருத்தமுயல்வது? தன்காரியம்பார்க்காதவன்ஸ்வாமிகாரியம் யாங்ஙனம் கவனிப்பான். சாதாரணமாகக்கவனிக்கப்புகுந்தால் இக்காலம் தலைகீழும், கான்மேலுமாகவன்றோ மாறிக்கொண்டியலுகிறது. என்னஸார் நேற்றிரவெல்லாம் வங்காளக்குடாக்கடலில் (அதன்மிசையுடைத்தான வடவாமுகாக்கினி) நெரிப்புப்பற்றிக்கொண்டெரிந்து தண்ணீரெல்லாம் வற்றிப்போய் வெறுங்கட்டாந்தரையாகக்காணுகிறதாமே? ஆம்ஸார் நானும் அப்படித்தான் கேள்விப்பட்டேன். எனஒத்துக்கூடி ஐந்தாறுபிரபுக்களையடுத்து ஒருஐயாயிரம்பதினாயிரம் ரூபாய்களை தட்டிக்கொண்டுபோய்நினது மனையாண்மக்களோடுஞ் சௌகரியமாகக் காலக் கழிவுசெய்யத் தெரிந்து கொள்ளாமல் அடோமுட்டாளே! ஏனோ சங்கடப்படுகிறாய்? ஒரு ஜனசமுகத்தைத்திருத்துவதென்றால் அஃதொருசாத்தியமாகிற சாதாரணக்காரியமல்லவே? அதற்கான அவதாரபுருஷனோநீ? சமுகவூழியம்எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்படுவதாமோ? நின்னுடைய மனோராச்சியம் எவர்களும் நகைப்பத்தகுந்ததாயன்றோ காணப்படுகிறது. முடவன் கொம்புத்தேனுக்கு இச்சை வைத்ததுபோலுமன்றோ காணப்படுகிறது. எங்களின் மகாசமுகத்

இல் நின்போன்ற அறிவாளியொருவர் இல்லையென்பதோ நின் கருத்து? அல்லது நின்னைபார்க்கினும் ஒருபெரியசெல்வமுடை யார் இல்லையென்பதோ? போடா! போடா! கொஞ்சங்கூட அறி வில்லாத வெறுஞ்சிறுபயலே! நினக்கு ஒரு சிறுதினையளவுகூட மானவெட்கம், உளுக்குச்சளுக்கு இல்லைப்போற்காணுகிறது "நல்ல மாட்டுக்கு ஒருசூடு" என்றபழமொழி நினக்குஞாபகமில்லையா? நீ! இன்னாட்களுக்குமுன்னர் எமதிடம் வந்திருக்குங்கால் எமதரு மைப்புதல்வருள் ஒருவரான பழ, சேவுகன்செட்டியார் என்பார் என்னையோ! ஏனையபத்திரிகைகளெல்லாம் எத்துணை ரெகுலராய் (ஒழுங்காக) ஒவ்வொருநாளும், ஒவ்வொருவாரமும், ஒவ்வொரு மாதமும் வந்துகொண்டிருக்கிறது. நுங்களின்பத்திரிகை ஏனோ இரண்டுமாதத்தொருமுறை, நான்குமாதத்தொருமுறைவந்தும் வராமலும் இயங்குகிறது? மேலும் நும்போன்றோ ஏனைய பத்திரா சிரியர்கள் ஊர்ஊராகச்சென்று சந்தாச்சேர்த்தும், போஜகர்களைச் சேர்த்தும் வருகிறார்கள்? இம்மாதிரிவீணே திரிந்தலைந்து காலத்தை போட்டுவதைவிட வெறுமெனேவாளாக்குந்திக்கொண்டிருக்கலா மே எனப் பரிகசித்ததோன்று போதாதா? இன்னுமா "நாட்டுக் கோட்டை வைசியம்" என்னும் பத்திரிகையைக்கொண்டு நடாத்த அவாவைத்துக்கொண்டிருக்கிறாய்? மேலும், நின்னுடைய வியால விஷயங்களை வைசியமகாசமூகத்துள் யாவரோ கவனிக்கப்படுகிற வர்? அதன்படி பியலப்பிரியப்படுகிறவர் ஈங்கு எவருமேஇலரே? நின்னுடைய உத்திசனொருங்கும் ஆகாயத்தில் கோட்டைகட்டி யது போன்றன்றோ காணப்படுகிறது! மேலும், இனவுள்ளவர் களன்றோ பறகுபறகு எனச் சொறிந்துகொள்ளல்வேண்டும். மகா, 'மகாசங்கம்" கூடுதல்வேண்டும், கூடுதல்வேண்டுமென நீயேன் 'வீண்பறைகொட்டித்திரிந்தலைகிறாய்? நின்னையும், நின்பத்திரிகை யையும் கவனிக்குமிடத்து ஒரு சிறிதளவும் அசைதலில்லாது குந் திக்கொண்டிருக்கும் மலையைநோக்கி நாய், குரைத்ததுபோன்றன் றோ காணப்படுகிறது. "மதியாதார்முத்தம் மதித்தொருக்காற்சென்று மிதியாமைகோடிபெறும்" என்றவேதவாக்கு நினக்கு ஞாபகமில் லையா? சாண்வயிற்றின் பொருட்டு ஏனோஇத்துணைப்பாடுபடுகிறாய்? முடிவுக்குவருகிறவிஷயமாயிருந்தாலும் குற்றமில்லையே? போது

மான சந்தாதார்களும் இன்றிச், சரிவரப்பாதுகாக்கும் ஒரு போஜ கரும் இன்றி இதனையோர் பெரிய நல்லகாரியமெனநினைத்து, பய னடையக்கூடாதவொரு அசாத்திய விஷயத்தில் மற்கடப்பிடி பிடித்துச் சாதாரணமாக நினக்கு உள்ளது, உரியதை யொருங் கும் இழந்து, கடனுக்குட்பட்டும, நீயும், நின்மனமும் இதுவிஷ யத்திற்படும் பாட்டைக் கவனிக்கில் மிகப்பரிதாபமாயன்றோ காணுகிறது. என்றாலும், நினைத்தகாரியம் முடிவுக்குவந்தால் நல் லதாமே. மேலும், எமதருமைப்புதல்வருள் ஒருவரான.

ஸ்ரீமான் அரு. அரு. சோம. என்பார் ஒருவர் மாத்திரம் தனக்குச்சொந்தமான பலகாரியாதிகளோடும் நமது மகாசங்கத்தை கூட்டுவதும், நமது மகாசமூகத்தைத்திருத்துவதும் ஒருகாரிய மாகக் கவனிப்பாராயின் நாடோறும் ஒவ்வொருமகாசங்கம் கூடு மே. எத்துணையோ திருத்தங்கள் ஒருகணப்போழ்தில் நிறை வேறுமே. இஃதிருக்கட்டும்.

ஒரு சிற்றாசனாக விளங்கும் எமதருப்புதல்வன் கவனிப் பானாயினும் இக்காரியம் எத்துணையோ இலகுவில்முடிந்துவிடுமே. இஃதிருக்கட்டும்,

வரையாதுகொடுக்கும்வள்ளற்றன்மைபூண்ட எமதரும்புதல்வனை ஸ்ரீமான் "மைனர்" கவனித்தாலும்போதுமே. இஃதிருக்கட்டும்,

எமதருமைப்புதல்வன் ஸ்ரீமான் கீழவீடு முருகப்பன் நினைத் தாலும் போதுமே இஃதிருக்கட்டும்,

எமது வைசியசிவானந்தசபை பிரசிடெண்டு, போஜகர்களாய் நிற்கும் எமதருமைப்புதல்வன் ஸ்ரீமான். வைரவன், ஸ்ரீமான் நடே சன், ஸ்ரீமான் அருணாசலம் முதலான பேரறிவாளர்கள் கவனித் தாலும் இக்காரியம் எத்துணையோ சிறப்பாக முடிவுபெறுமல்லவா?

மேலும், வணிகமக்களாய்ப் பிறந்தார் ஒருவர் சிரமேற்றுக்கொள் ளின் இஃதொரு பெரியகாரியமாகக்காணுமோ? மேலும் எமது சமூகத்தாருள் வித்தியாசாலைகளுக்கு இரண்டுலெக்ஷம், நான்கு லெக்ஷம் என உதவுகிறவர்கள் கவனித்தாலும் இஃதொருபெரிய காரியமாகவாதோன்றும்? இஃதிங்ஙனமாக எமதுதங்கை புதல் வருள் ஒருவரான ஸ்ரீமான் பெத்தாச்சி கவனித்தாலும்போதுமே.

இத்தகையாரெல்லாம் "மௌனம் சர்வார்த்தசாதகம்" என நீ கூறுகிற விஷயத்தில் யோகநித்திரைசெய்யும்பொழுது நீ! வெறுங்கூச்சலிடுவதின் பயன் என்னே? இன்னும் எத்தனையோ பல மேதாவிகள் உடைத்தாக விளங்கும் எமது ஒரு பெரிய மகாசமூகத்துக்கு எங்கோ ஒரு பக்கத்திற்கிடக்கும் நீ யேன் நான், நான் எனமுன்னோடி வருகிறாய்? மேலும், எங்களின் மகாசமூகத்துக்கு "வைசியமித்திரன்" ஒருவனேபோதும். இனிமேல் நீ! இங்கு திரும்பிப்பார்க்கவேண்டாம். நின்னூர்ப்பக்கமே திரும்பிக்கொள். நின் சமூகத்துக்கு ஏதேனுங் குறைபாடுகள் உளதாயின் அதனைக்கவனித்துத்திருத்தப்புகுவாயாக. நின்னால் ஆகக்கூடாதகாரியத்துக்குட்சிக்கிச் சங்கடப்படாதே. "எடாதவெடுப்பெடுத்தால் படாதபாடு படவேண்டும்" என்பதை மறந்துவிடாதே.

XI ஏ! அம்மே! ஏ! தேவநகரீ! நின் திருவடிகளுக்கு அநேக கோடி நமஸ்காரம். நின் திருவாக்குகள் ஒருங்கும் அமுதப்பிரவாகமாயிருக்கின்றன. சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினியனவாய்க்காணுகின்றன. உண்மையொன்றையும் ஒளியாமல் உள்ளதை உள்ளபடியே புகன்றாய். மிக அருமையான சில கேள்விகளும் கேட்டாய். தரித்திரதசையிற் குசேலமுனிவருக்கு அண்ணனாகத்தான் விளங்குகிறேன்.

"பேராசையாலீனர்பின்சென்றுழன்றும்
நிராதமிடியாளர்சிலர்பாரிலுண்டே
கோரகவரில்வாழ்வுநினையாமல்வருமால்
வாராததார்தாம்வருந்தினும்வாராதே"

"ஆலமதுநல்குமவராரமுதமுண்ணும்
பாலுடையராவதுபடிக்கணுளதாமோ
சாலுமதுரக்கனிகள்தாமநுகருவாரோ
ஞாலமிசையெட்டிமரம்நட்டவர்கள்தாமே"

இத்தகையவேதவாக்குகளைக் கடக்கமுடியவில்லை. என்செய்கிறது? ஏ! அம்மே! மேலும், இந்நல்குரவே எம்மைஇத்துணைதூரம் ஆன்றதன்மைக்குக் கொணர்ந்ததெனக் கூறினும் இழுக்காகாது. இன்னும், எம்மை பெரியவோர் புகழ்நிலையத்தில் நிறுத்தக் காத்துக்கொண்டிருப்பதூஉம் இந்நல்குரவேயாகும். இன்னும், அமரருலகத்துக்கு அழைத்துக்கொண்டு போவதற்கும் இந்நல்குரவுதான் எமது உயிர்த்தோழனாய் ஒருகணப்போழ்தும் எம்மைவிட்டுப்பிரியாது எம்முடன்கூடிவாழ்ந்துவருகிறது. இன்னும், ஏ!

அம்மே! இந்நல்குரவின் சிறப்பைப்பற்றி வருணித்து வரையப்புகின் நமது வைசியத்திலிடம்போதாதாகவேமுடியும். என்றாலும், இந்நல்குரவு எமக்குச்செய்திருக்கும் நன்மைகள் அனந்தம் உண்டு. மேலும், நிராதாரமானவொருவரைப்பாதுகாப்பதுதான் பேரறிவாளர்களின் கடன். அடைந்தோரைக்காத்தலுக்கு எஞ்சிய ஓரறச்செயல் பிறஎதுவுமேஇல்லை. மேலும், இன்மையின் சக்தி எளிதல்ல. சிறிது அறிவாளிகளிடத்து அஃதுகுடிபுகுமானால் இந்நிலவுலகத்து அநேக பல நன்மைகளைப்பயக்கும் ஒரு அவதார சக்தியாக விளங்கும். சிறிது விவேகசாலிகளுக்கு இஃது கடவுளைக்காட்டுங் கருவியாகவேமுடியும். மேலும்,

"கதிரவனால்ஒளிரும்பல்வகைக்கல்லைமணியென்றுங்காமர்
மண்ணை,நிதிவெள்ளியுலோகமென்றும், பெயரிட்டும், விலையிட்டும்,
நிகழும்மண்ணார், சதியானகாசுபணமெனச்செய்துதரையின்மிடி
தனையமைத்தோர், மதியில்லாநாரின்றிக்கடவுளோசொல்லுவாய்
மருள்சேர்நெஞ்சே"

அம்மே! இஃதும், ஆன்றோர் கவனிக்கத்தக்கதுதான். மேலும், பேரறிவாண்மையென்னும் தறியின்மீது, சாதனைஎன்னுங் கயிற்றாலே இறுகப்பிணைக்கப்பட்டுக்கிடக்கும் மனமென்னுங்குரங்கை, செல்வவன்மையாலும், செல்வமின்மையாலும் நிகழும் இன்பதுன்பங்களென்னும் வாட்படைகளானது ஒருசிறிதளவேதுஞ் செய்யமுடியாது. ஏ! அம்மே! நல்குரவை நிக்ரகஞ்செய்யப்புகுவதென்றால் அதன் இலக்கணத்தையும், அதன்வரலாற்றையும் இஃதென மிகச்செவ்வனே விளங்கத்தெரிந்துகொள்ளுதலேசாலும். இன்மையை இன்மையாகச் செய்தற்கு எந்தப்பலசாலியோ வரல் வேண்டும்? "பிறக்கும்பொழுதுகொடுவந்ததில்லைப்பிறந்துமண்மேலிறக்கும்பொழுதுகொடுபோவதில்லை" என்னும்வேதவாக்கை மிக நன்றாகத்தெரிந்துகொண்டிருக்கும் எம்முடையபேரறிவாண்மையோ இதனையோர்பொருட்படுத்தி இதனை நிவர்த்திக்க முன்னோடிச்செல்லும்?

"வைததனைஇன்சொல்லாய்க்கொள்வானும்,
நெய்பெய்தசோற்றைக்கூழென்றுமதிப்பானும்—ஊறிய
கைப்பதனைக்கட்டியென்றுண்பானும், இம்மூவர்
மெய்ப்பொருள்கண்டுவாழ்வார்"

இத்தகைய அமுத வாக்கின் மேன்முறைக்கண்ணே யாம் எந்நாளும் மிக நன்றாகப்பயின்றுதான் வருகிறேம். இஃதிங்ஙனமாக, எமது ஆப்த நண்பர்! சேவுகன்செட்டியாரவர்கள் கூற்று எமக்கொருஞாபகார்த்தமான நற்கூற்றுக்களேயாகும். இந்நாட்டுக்கோட்டைவைசியம் ஆரம்பகாலத்துச் சந்தாக்கையொப்பத்துக்காக கானாடுகாத்தான் ஸ்ரீமான் க. வெ. சித. அவர்களைச் சந்தித்தபொழுது என்னை ஐயா! நுங்களை, நாட்டுக்கோட்டைவைசியம் என பத்திரிகையை நடத்தும்படியாக நாங்கள் என்ன ஆளனுப்பினோமா? கடிதம் எழுதினோமா? டில்லைகிராம் கொடுத்தோமா? எங்களுக்குஉள்ளவேலையே பார்க்கமுடியவில்லையே பத்திரிகையை யார் படிக்கப்போகிறார்கள்? போம்! போம்! எனக்கூறினார்கள். அந்தக் காலத்துங்கூட நமது வைசியம் நின்றுகொள்ளவில்லை ஏ அம்மே இந்நாட்டுக்கோட்டைவைசியம் என்னும் நூல்வரையப்புகுந்து இற்றைக்கு ஏறக்குறைய சுமார் பத்துவருஷங்களுக்குமேலாயிற்று. இருநூறு அத்தியாயங்கள்வரை வரைந்துமுடிந்திருக்கிறது. அறுபது அத்தியாயங்கள்வரை இதுகாறும் பிரிண்டிங்காகி வெளிவந்திருக்கிறது. இந்நாட்டுக்கோட்டைவைசியத்தின்முழுக்கருத்தும் நமது தொண்ணூற்றாறு நகரக்கூட்டத்தைப் பழமைபோல் அனுபவத்துக்குக்கொண்டுவரவேண்டுவ தொன்றையே கருதியதாகும். இதற்கெல்லாங்கூடிய முதற்காரணம் எம்முடைய நிராதாரமான யாத்திரையில் இவ்வைசியமகாசமுகம் எமக்குச்செய்திருக்கும்பல நன்மைகளேயாகும். அவைகளையெல்லாம்பற்றி ஈங்கு விவரிக்கப்புகின் அஃதொருபாடு சாத்தியமாகாது. அவைகளில் ஒன்றிரண்டைமட்டுங்கூறி விஷயத்தைக்கவனிப்போம். எமது உயிர்த்துணையாகிய கல்விகற்றுக்கொள்வதற்குக் கிடைத்தபேருதவி இம்மகாசமுகத்திலிருந்துதான். பின்னர், நெடுகக் கால்நடையாகச்சுற்றிக்கொண்டு வருகிறமார்க்கத்தில் காஞ்சீபுரத்தில் ஒருவருஷம் தாமதித்திருந்தேம். அப்பொழுது பெரியகோவில் திருப்பணிநடந்துகொண்டிருந்தது. ஸ்ரீமான். மெ. லெ. லெக்ஷ்மணஞ்செட்டியாரவர்கள் அவ்விடத்திற்றான் வசித்துக்கொண்டிருந்தார்கள். அதுசமயம், அவ்வொருவருஷக்காலமும், அவர்களுக்குச்சொந்தமான பாடசாலையினும், குருபூசைமடத்தினும் யாமுண்டிருக்கும் உண

வினை நினைக்கின்எத்துணையோ பல ஜென்மமெடுத்து இப்பெரிய வைசியமகாசமுகத்துக்கு பல அரிய பெரிய தொண்டுகளைப்புரியினும் அஃது, சமமாகமாட்டாது. அதினும், நாமொருபெரிய சாப்பாட்டுராமன். ஒருநாள் அவர்கள், இல்லத்திலிருக்கும்பொழுது, இரண்டொரு தேவாரம்படிக்கும்படி சொன்னார்கள். அதற்கு இரண்டொரு திருத்தாண்டகம் சொன்னதின் பிறகு ஸ்வாமிக்கு அபிஷேகம் ஆகிறபாலில் 5, 6 நாளைக்குக் கொஞ்சம் பால் கொடுக்கவேண்டுமாய் உத்தரவுசெய்தல் வேண்டுமென்றேம். உடன் தெய்வசிகாமணிஓதுவாரவர்களைக் கூட்டிவரச்செய்து எம்மையும் ஷையார்களிடங்காட்டி உத்தரவுசெய்தார்கள். அப்பால் ஷைவோதுவாரவர்கள் காலைமாலை அபிஷேகம் ஆகிற பாலை பின்புறம்போய் நுமக்குவேண்டியமட்டும் பிடித்துக்கொள்ளும் என்றார்கள். அதற்கு, அங்ஙனமாயின் எமக்குப்பால்வேண்டியதில்லை, அதில் எண்ணெகலந்துவரும், எண்ணெ ஒருதுளியளவு கூட எமக்கு ஆகாது, நான் செட்டியாரவர்களிடம்போய்ச்சொல்லி நல்லபாலுக்கு உத்தரவுகொண்டுவருகிறேன் எனத்திரும்பினேன் உடன் ஷை ஓதுவாரவர்கள் கூப்பிட்டு நீர்! திருநெல்வேலிக்காரர் என்பது சரியாகவன்றோகாணுகிறது. நமது பூசையறையில் பெரிய செம்பு ஒன்றிருக்கிறது அதில் அபிஷேகம் ஆகிறதற்கு முன்னதாக நுமக்குவேண்டியபாலை வேறாக எடுத்துவைத்துக்கொள்ளுமென வோர் ஆர்டர்கொடுத்தார்கள். அதிலிருந்து பத்து மாசம்வரை, நாள் ஒன்றுக்கு காலை மாலை பெரியபடிக்கு இரண்டுபடி பால் வீதம் பெரிய வாயடியடித்துக்கொண்டு மனமாற, வயிறாற, மதிமயங்கப் பருகினேன். நந்தநவனத்துக்கு மேல்பார்க்கிற ஒரு பெரியபாதேசி யொருவரும் அங்கிருந்தார். அவரையும் செட்டியாரவர்கள் பெயரைச்சொல்லிப் பயங்காட்டி ஆங்கு பழுத்துக்கிடக்கும் மலைப்பழம் ஒருங்கையும் நானே தின்றுவளர்ந்தேன். ஆ! ஆ! அந்தகுபேரசெல்வத்திற்கிடந்து புரண்டனுபவித்து நீந்தியவோர் இன்பத்தைநினைக்க, நினைக்க இப்பெரிய வைசியமகாசமுகத்துக்கு என்னையோ யாம் கைமாறுஇறுப்பேம்! அதற்குரியவோர் பொருள் நமதிடம் இருக்கிறதாவெனவே முடிகிறது. மேலும், இந்தக்காலத்தும், ஏ அம்மே! நினது நகரங்களுக்கு யாம் வந்திருக்கும்பொழுது எமது ஆப்த நண்பர்கள்! காபிக்கிளப்பில், அதன் சொந்தக்

எங்களுக்கும் சம்மதமேயாமெனத் தலையசைக்கும்படி பாடக்கடவீர் என்றான், உடனே இப்புலவன்.

"உங்களிலேயா ரொருவன் ஒவ்வேனை வல்லேனே
இங்கட் குலனறியச் செப்புங்கள் — சங்கத்துப்
பாடுகின்ற முத்தமிழ்க்கென் பைந்தமிழும் ஒக்குமோ
ஏடவிழ்தா ரேழெழுவீரே"

என்னும் வெண்பாவைப்பாடினன். உடனே அந்த விக்கிரகங்களெல்லாம் மிக நன்றாகத் தலையசைத்தன. அந்த அற்புதத்தைக் கண்டும் அவ்வணங்காமுடிப்பாண்டியன் இவனது விண்ணப்பத்தைப் பொருட்படுத்தானாயினான். அதுகண்டு, எமது நண்பன் அப்பாண்டியனையும் ஓர் பொருட்படுத்தாமல் ஒரு சிறு துரும்பாக மதித்தொழித்துவிடுத் தமது சோணாட்டை நோக்கி பல்லக்கேறி மீண்டனன். ஏ! எமதாப்த நண்பனே! இப்புலவனின் தெய்வீகத்தன்மையைக்கண்டாயோ! கற்சிலைகளெல்லாம் ஒருங்கே தலையசைக்குமாறு பாடக்கூடிய ஒரு பெரிய பொய்யாமொழிப் புலவன் திருவாக்கினையே அப்பாண்டிநாட்டு மன்னன் அலட்சியஞ் செய்தானென்றால் சாதாரண மனுஷிய இயற்கையோடு கூடிய நின்வார்த்தைகளையோ அப்பாண்டிநாட்டுப் பிரபுக்கள் லட்சியஞ் செய்து சங்கங்கூடப்போகிறார்கள்.

மேலும், இப்புலவனின் உத்தம குணங்களைப்பற்றி வியந்து கூறுவதெனின் அஃதொருபெரியார் எவராலுஞ்சாத்தியப்படாததோர் காரியமேயாகும். அங்ஙனமீளவே, பாண்டியன்மனைவியார் தமது பல்லக்கேறித் தொடர்ந்துபோயிறங்கி இவனுடையபல்லக்கு சுமப்போருள் ஒருவராயினர், அதையறிந்த புலவன் நீ எமது பல்லக்குத்தாங்கப்புகுந்தகருத்தையறிந்தேம். யாம்வெகுண்டு அரசனை சபிப்பேமல்லேம். அதற்கு நீ! அஞ்சற்க. என்று அவ்வுத்தமியைத் தடுத்து. *"உமையாளும் நீயும் ஒருங்கொப்பே யொப்பே
உமையாளுக்கங்குண்டோ ரூனம் — உமையாள் தன்
பாகந்தோய்ந்தாண்டான் பனிக்குழன்றான் பாண்டியனின்
ஆகந்தோய்ந்தாண்டான் அரசு"

என்று வாழ்த்திப்போயினர். இப்புலவன் சோழராஜனது மந்திரியாகிய சீனக்கராயனுக்குப்பிரியாநண்பன். ஒருநாள் சீனக்கராயன்

* கம்பர்கூறியதெனக்கூறுவாருமுளர்.

கட்டிலிலே அவனும், புலவனுமாகவிருந்து, பொழுதுபோய் பின்பு நெடுநேரம் அளவளாவிக்கொண்டிருக்கையில் புலவன் தமக்கு நித்திரைவந்ததென்று கூறி ராயனைப் போஜனத்துக்குப் போகும்படி சொல்லி அனுப்பிவிட்டு தான் அந்தக்கட்டிலின் ஒரு பக்கத்தில் நித்திரைசெய்தனன், ராயன் அங்ஙனமெழுந்துசென்று போஜனஞ்செய்துகொண்டு நிலாமணி மேடையிற்போய்ச் சிறிது நேரங்கழித்து மீளும் முன்னே ராயன்மனைவியும் அந்தக்கட்டிலிற் படுத்து உறங்குகிறவனைத்தன் கணவனென்றெண்ணி ஒருபுறத்திற் படுத்துறங்கினாள், அதன்பின்பு ராயனும் போய் ஒருபுறம் படுத்துறங்கினான் வைகறையிலேபுலவன் முன்னேயெழுந்தான், புலவன் தம்மருகே ராயன் மனைவி படுத்துறங்குவதைக்கண்டு துணுக்குற்று ராயனை நோக்கி என் செய்தாய் என்றனன், ராயன் அவனைநோக்கி "அஞ்சாதீர் இப்போளழுந்திருக்கவேண்டாம் செல்லக்கிடமின்" என்றான். மனைவி அவ்வொலிகேட்டு பதைத்தெழுந்தோடி அந்தப் புறஞ்சேர்ந்தாள். ராயன் புலவரை நோக்கி என்மனையாளை மாத்திரமன்று உலகத்துப்பெண்களெல்லாரையும் தாய்மாராகக்கொண்டு போற்றுகின்ற வுமது பக்கத்திலே யென்மனையாள் படுத்துறங்கினதை எனது பெரும்பாக்கியமாகக்கொண்டேன் என்றான்.

அன்று முதலாகப் புலவனும், ராயனும் ஈருயிரும், ஒருடலும் போன்று ஒழுகினார்கள். இப்புலவன் சீனக்கராயன் இறந்தபொழுது சோழன் தடுக்கவுங்கேளாமல் மேல்வருங்கவிகளைக் கூறி உடன்கட்டையேறினான்

"வாழிசோழவென் வாய்மொழிகேண்மோ
ஊழிநிலவெறி மாளிகையின்வயிற்
கட்டிளங்கணவன் கவின்பெறுசேக்கை
என்றறிமனைவி நெடிதுதுயில்கொளச்
செல்லக்கிடமின் எனக்கிடந்தருகெனச்
சொல்லியநண்பன் தனிச்செல்பவனே
நானுமேகுவன் நற்றுணையவற்கே"

"அன்றுநீசெல்லக்கிடவென்றாயாயிழையோ
டின்று நீ வானுலகமேறினாய் — மன்றல்கமழ்
மானேக்கும் வேல்விழியார் மாரனேகண்டியூர்ச்
சீனக்காசெல்லக்கிட"

XII. நண்பர்காள்! இந் "நாட்டுக்கோட்டைவைசியரும்" வைசியமித்திரனும் கவனிக்குமிடத்து ஓரினமாதல்பற்றி மித்திரனைப்பற்றி இவர்கூறும் எந்தவிஷயங்களும் உண்மையல்லாத வெறும்புகழ் மொழிகளாகத்தானிருக்கும் என்றும், இஃது, நமது இந்தியச்செந்தமிழ்நாட்டுச் சிறிது தமிழ்தெரிந்தார் சிலரின் கொள்கையே என்றும் நீங்கள் நினைத்தல்வேண்டாம். மேலும், நமது மித்திரனைப்பற்றி யிதன்மேல் வரும் எந்த விஷயங்களையும் நீங்கள் நடுநிலைகோடாதவண்ணம், தங்களின் தூய்மையான அறிவினிடத்தே எடுத்து அலக்கலக்காகப்பிரித்துச் சீர்தூக்கிப் பார்ப்பீர்களாயின் அஃதொருங்கும் மிக நியாயமாகவே தங்களுக்கு விளங்கும். அல்லாத விஷயங்களை ஆமென்று புகழ்ந்தேனும், அல்லது இகழ்ந்தேனும் வரைதற்குரிய எவ்விதத்தொடர்பும் எமக்கும்மித்திரனுக்கும் கிடையாது. மேலும், சமூக நன்மைக்குப் பொருந்தாத சில விஷயங்கள் ஒரு பத்திரிகையிற் காணப்படுமாயின் அங்ஙனமே அப்பத்திரிகையை வேண்டாமென நிறுத்திவிடுவது அத்துணை நன்மையாகாது. ஏனெனில்? மேலும், அப்பத்திரிகை எந்தத்தன்மையிற்சரியாக நடைபெறுகிறதென்பதையும், சமூக நன்மைகளைக்குறித்து மீண்டும், மீண்டும் என்ன கூறிகொண்டுவருகிறதென்பதையும் தெரிந்துகொள்ளமுடியாது. சமூக நன்மைகளைக் கருதும் ஒருவர் அவ்வாசிரியருடன் தக்கமுகாந்தரங்களோடு கூடிய ஒழுங்கான நடவடிக்கைகள் வைத்துக்கொள்வதே மிகப் பொருத்தமாம். அழுக்காறென்னுந்தீயிடைமூழ்கித் தானுஞ்சாம்பராய்ப் பத்திரிகைக்கும் நாசத்தைத்தேடுவது அஃதொரு நல்ல காரியமென்று எந்தச்சிறியாரும் ஒப்புக்கொள்ளமாட்டார். பொதுவாகக்கவனிக்குமிடத்து "நமது மித்திரன்" ஒரு பெரிய நமது மகாசமூகத்தைச்சார்ந்த எல்லா நகரங்களுக்கும் ஒருவனேயல்லவா? மகுடவணிகமணிகளின் இரத்தக்கலப்போடு கூடிப்பிறந்தானல்லவா? "காதலார்சொல்லுங்கடுஞ்சொல் உவந்துரைக்குமேதிலார் இன்சொல்லில் தீதாமோ" என்பதற்கிணங்க, உரித்தான ஒருவனேயல்லவா? "கோடிகொடுத்துங்குடிப்பிறந்தார்தம்மோடு கூடுதல்கோடிபெறும்" என்ற அமுதவாக்கு நமக்குப் பழம்பாடமேயல்லவா? இன்னும், கவனிக்குமிடத்து நண்பர்காள்

"இன்றுசெயினும்விடுதற்கரியாரைத்
தின்னார்துறத்தல்தகுவதோ—துன்னருஞ்சீர்
விண்குத்துநீள்வரைவெற்ப! களைபவோ?
"கண்குத்திற்றென்றுதம்கை"

நண்பர்காள்! இத்தேவவாக்கியத்தை நீங்கள் சற்று நன்றாகத்தெளிந்துநோக்குங்கள். மேலும், எத்துணையோ அன்போடும், எத்துணையோ அவாவோடும், எத்துணையோ ஆதரவோடும் நாம்பாதுகாத்து வளர்த்துவரும் மிக வனப்பான நம்முடைய சரீரமே நாம் செய்த எவ்வித நன்றிகளையும் ஒழித்து, மறந்து, தினைத்துணையளவும் நமக்குப் பயன்படாதவண்ணம் ஒரு காலம் நம்மைவிட்டுப்பிரிந்துவிடுகிறதல்லவா? அது விஷயத்தைப்பற்றி நாம் நன்குதெரிந்தவர்களேயாம். , அல்லவா? அங்ஙனம் ஒன்றுக்கும் உதவாமற்றீக்கிரையாக நிற்கும் பாழான இப்பச்சைமண் சரீரத்துக்கு இங்ஙனமிருந்தே நாமேன் தொண்டு செய்தல்வேண்டும்? ஒன்றுக்கும் உதவாதெனத்தெரிந்த இங்ஙனமே அதனைத்துண்டம்துண்டங்கண்டங்கண்டமாகவெட்டி, என்பு, நரம்புகள் வெவ்வேறும்படியறுத்து, நாய், நரி, பேய் கழுகு, காகம் முதலியவைகளுக்கு மிகுதியும் உள்ளன்போடுகூடி ஒரு டீபார்ட்டி வைத்துவிட்டாலென்னே? அஃதொரு அறத்தாறாகாதோ? நம்முடைய பாழான மனக்குரங்கேன் அதற்கு உடன்படுவதில்லை? அஃதொருமாயையின் கட்டேயல்லவா? அக்கட்டானது நம்முடையமித்திரனைமட்டும் விட்டு நீங்கிவிடுமோ? நமது மித்திரன் ஏதோ ஒருகாலத்தில் சில தவறுதல்களுக்கு உள்ளாயிருப்பின் அதனை நாம் எந்தக்காலத்தும் நம்மனத்திடை யிருத்தித்திரும்ப நோக்காதிருத்தல் எவன்கொல் நியாயமாகுமோ? நம்முடைய சரீரம் நமக்குச்செய்யுந் தீங்கைப்பார்க்கினுமா, நமது மித்திரன் நமக்குத்தீங்கு செய்துவிட்டான்? நம்மோடுகூட உடன் உட்கார்ந்து கொண்டே நரைதிரைமூப்பையும், கிழப்பருவத்தையும் நமக்குத் தருகிற இப்பாழான சரீரத்தையோம்புகிற நாமா நமதருமையான மித்திரன்பால் வைராஞ்சாதித்தல்வேண்டும்? ஏ எம் அருமைச் சகோதரர்காள்! ஏ எமது ஆப்த மித்திரர்காள்! ஏ தனவைசியரத்தினமணிகளின் தலைவர்காள்! ஓ இலக்குமிவிலாசப் பிரபுக்காள்! நீங்கள் ஒரு சிறிது இதனைத்தயவுசெய்து நினையுங்கள். தங்களின் நண்பராயுள்ளார் பலருக்கும் இதனைக்காண்பியுங்கள். படித்துப்

பார்த்தற்கு அவர்கள் சிறிது சோம்பின் நீங்களே இதனைக் கொஞ்சம் படித்துக்காட்டுங்கள். இதற்காக நுங்களின் அழகுவாய்ந்த தாமரை இதழ்போன்ற இரண்டு திருத்தாள்களுக்கும் எம்முடைய மனப்பூர்வமான அநேக வந்தனங்களைத்தருகிறேம். நமது மகாசமுகத்தின் பாட்சியையும், நமது தாதைமூதாதைகளின் பெரியதன்மையையும், ஏனைய, கொள்கைகளையும்பற்றிய வுண்மைகள் நமக்கே சிலது விளங்காமற் கிடக்குமேல் பிறவருணத்தார்க்கு யாங்ஙனம் விளங்கக் கூடும். நாளிதுகாறும் நமது வகுப்பைச்சார்ந்த எந்தப்பெரிய செல்வவந்தர்களிடத்தும் எந்தப் பெரிய மேதாவிகளிடத்தும் "ஆர்" விகுதியைக் கூட்டிக் கையொப்பமிடுகிற வழக்கம் இல்லாததன் காரணம் என்னை? 7-8-10 எழுத்துக்கள் விலாசமும், அஃதோடுகூடிய தங்களின் முழுப்பெயரையும் எழுதத்தெரிந்த ஒருவர்க்கு "ஆர்" விகுதியைமட்டும் அஃதுடன் கூட்டிவரையத்தெரியாதிருத்தலும் கூடுமோ? இதனைப்பற்றி நினையுங்கள்! அஃதாவது தமதுவகுப்பைச்சார்ந்ததம்மினும் பெரியார் எவர்க்கும் மிக நன்றாக அடங்கியொழுகவேண்டும் ஆறு தம்முள்ளத்து அடங்கிக்கிடக்குந்தன்மையை வெளியே எவர்க்கும் விளங்கக்காட்டும் ஒருஅறிகுறியான 'மரியாதைப்பன்மைத்தன்மை'யேயாகும். அல்லவா? இதனைத்தெரிந்துகொள்ளாதபிறபகுதியைச் சார்ந்த சில கற்றறிமூடர்கள் நாம் அங்ஙனம் கையொப்பமிடுவதைக்கண்டு அதன் ஆழ்ந்த கருத்தின் தன்மையை இஃதெனவோர்ந்து சிறிது லூன்றிநோக்கித் தெரிந்துகொள்ளாமலும், தங்களைத்தாங்கள் தாழ்த்திக்கொள்வது எந்தவாற்றானும் கவனிக்குமிடத்து பெரியார்கொள்கையே என்பதையுணர்ந்துகொள்ளாமலும், ஒருவரைக்கண்ட ஒருவர் "அடியேன் நமஸ்காரம்" என்றால் அதனைப் பார்த்துக்கொண்டிருந்த ஒரு பத்திராதிபர் இன்னுரைக்கண்டு "அடியேன்" நமஸ்காரம்செய்தான் எனத் தமது பத்திரிகையில் பிரசுரம் செய்யலாமா என்பதை தம்மனத்திடைத் தூக்கியோசிக்காமலும், கடிதக்காரர் அல்லது நிருபர்கள், தங்களின் அறிவின்மையால் ஒருக்கால் "செட்டி" என வரைந்திருப்பினும் அஃதுடன் "ஆர்" விகுதியைச்சேர்த்து செட்டியார், செட்டியார் என வரைதற்குரிய கடமை நமதென்னும் வொரு பெரிய தன்மையைக் கவனியாமலும், நமது மகாசமுகத்தைச்சார்ந்த நல்

வர்களைப்பற்றித் தமது பத்திரிகைகளில் ஏதோ ஒரு சமயம் வரையப்புகுந்தக்கால் ஒருசிறிதளவுகூட முன்பின் யோசனையின்றி "செட்டி" "செட்டி" என "மரக்கரம்" போன்ற தங்களின் திருக்கரங்களால் எழுதுகோல்பிடித்துவரைந்து கொண்டுநடாத்தும் சில மட்டிப்பத்திரிகைகளின்மீதன்றோ நம்மனங்கோட்டமாதல்வேண்டும். எந்தவாற்றானும் அதனை நமதெல்லைக்குள் வாவொட்டாமற்றடுத்தற்குரியவைரஞ்சாதித்தலும்வேண்டும். வருஷம் ஒன்றுக்கு ரூபாய் இருபஃது, முப்பஃது என அப்பத்திரிகைகளுக்குச் சந்தாச்செலுத்துங் கௌரவத்தால் நமக்குறும் நன்மை என்னை? அப்படிப்பட்ட பத்திரிகைகள்

"அறிமின் அறநெறி, அஞ்சுமின்கூற்றம்,
பொறுமின்பிறர்கடுஞ்சொல், போற்றுமின்வஞ்சம்,
வெறுமின்வினைதீயார்கேண்மை, எஞ்ஞான்றும்
பெறுமின்பெரியார்வாய்ச்சொல்"

என்பதுபோன்ற அமுதவாசகங்களையே நமக்கு ஞாபகப்படுத்துவதாயிருப்பினும்,

"வானகங்கையுறினும்வேண்டார்விழுமியோர்
மானம் மழுங்கவரின்"

எனவுங்காணப்படுகிறதே? அல்லவா? மேலும்,

"முட்டிகைபோலமுனியாதுவைகலும்
கொட்டியுண்பாருங்குறடுபோற்கைவிடுவார்
சுட்டுக்கோல்போலஎரியும்புகுவரே
நட்டாரெனப்படுவார்"

என்ற முனிவர்திருவாக்கிற்கிணங்கிய நட்டார் நமது மித்திரனோ? ஏனையபத்திரிகைகளோ? நண்பர்காள்! சற்று நன்கு கவனியுங்கள்

"பற்றற்றகண்ணும்பழமைபாராட்டுதல்
சுற்றத்தார்கண்ணேயுள"

என்ற தேவர்திருவாக்கை நாம் நன்கு தெளிதலும்வேண்டும். நமது தேவபெருமான் திருவாய்மலர்ந்தருளிய திருக்குறளின்கண் உடைத்தாய "சுற்றந்தழால்" என்னும் அதிகாரத்துக்கே நமது வகுப்பன்றோ இலக்காகநிற்பது. அதன் இலக்கணத்

இல் நின்றும், காலவியற்கைபற்றிச் சிறிது மறந்து நழுவுதல் எவ்வளவும் நியாயமாகாது. சகோதரர்களே! பொதுவாகக் கவனிக்குமிடத்துப் பந்துக்கள் அஃதாவது அச்சுற்றத்தார் ஐந்து வகைப்படுவர். எங்ஙனமெனின்? சுற்றந்தழீஇச் சுகமுடன்வாழும் இஞ்ஞாலத்தில் வம்மிசம் அஃதாவது கொடிவழியாற் பந்துக்கள், வருணத்தாற் பந்துக்கள், பாஷையாற் பந்துக்கள், தேசத்தாற் பந்துக்கள், கண்டத்தாற் பந்துக்கள் என்பனவேயாம். இன்னுஞ்சில மேதாவிகள் உலகத்திற்றோற்றப்படுகிற மனிதவர்க்கமெல்லாம் ஒரே பந்துத்வம் உடையவர்களே என்றுங் கூறுகிறார்கள். இங்ஙனம் பலவகைப்படும் பந்துக்களுள் வம்சத்தாலேற்படும் பந்துக்களும், வருணத்தாலேற்படும் பந்துக்களுமே உயர்ந்ததாகும். பெரும்பான்மையும் நம்முடைய செந்தமிழ் நாடு நகரங்களுள் இவர்களைத்தான் சுற்றத்தாரெனக் கொண்டாடப்படுகிறது. பெரும்பான்மையும் ஆய்ந்து நோக்குமிடத்து நம்முடைய வேதாகம புராணேதிகாசங்களெல்லாம் தோற்றப்படுகிற ஒவ்வொரு ஆன்ம கோடிகளும் மாறிமாறிப்பிறந்துழலும் இயற்கையுடையதேயெனச் சித்தாந்தப்படுத்தினும், மனித வர்க்கமாய்ப் பிறந்திருந்தவர்கள் திரும்பவும் மனிதவர்க்கமாகத்தான் பிறப்பார்களென்றும், மாட்டு வர்க்கமாய்ப் பிறந்திருந்தனவெல்லாம் திரும்பவும் மாட்டு வர்க்கமாகத்தான் பிறப்பனவென்றும், தாவர வர்க்கமாய்ப் பிறந்திருந்தனவெல்லாம் திரும்பவும் தாவர வர்க்கமாகத்தான் பிறப்பனவென்றும் சித்தாந்தப்படுத்தவில்லை. பெறுதற்கரிதான இம்மனித யாக்கை நழுவிவிடுமானால் "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என நமது தாயுமானார் வாக்குத்தான் நிச்சயமாகும், பின்னர் இன்ன சரீரத்தினுட்டான் சென்று நுழைவோமென்பது கூறற்கியலாது. இன்னும் இதற்குச் சான்றாக,

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்"

என, நம்முடைய மணிவாசகப் பெருமான் திருவாக்கினையும் உணர்க. நண்பர்காள்! இத்தகைய பெருமைவாய்ந்த நம் மனித வாழ்க்கையில் செல்வவந்தர்களான பலரும், உத்தியோகஸ்தரான சிலரும் நாம் இன்ன கொடிவழியைத்தான் சார்ந்தவர்கள் என்பதுவும், இன்ன வருணத்திற்றான் பிறந்தோம் என்பதுவும், எவ்வளவுந் தெரியாது, தங்களைத்தாங்களே மறந்தவர்களாய்த் தங்களின் அருமையான பந்து வர்க்கங்களில் நின்றும் பிரிந்து கொள்கிறார்கள். சிலர் நல்வினை, தீவினைமுதலிய பல விசேஷ காலங்களில் அழைப்புப்பத்திரிகை கொடுப்பதற்குக்கூட நாணுகிறார்கள். சிலர் இன்னார் எமது பந்துவென்று சொல்லவுங் கூசுகிறார்கள். தங்களின் இனபந்துவல்லாத ஒரு செல்வவந்தரோடும் உத்தியோகஸ்தரோடும் நட்புக்கொண்டு அவர்களோடுங் கூடிக் கலந்து, உண்டுறங்கித் துஞ்சப்படுகிறார்கள்.

"பொற்கலத்துப் பெய்த புலியுகிர்வான் புழுக்கல்
அக்காரம் பாலோடமரார் கைத்துண்டலின்
உப்பிலிப் புற்கையுயிர்போற் கிளைஞர்மாட்டு
எக்கலத்தானும் இனிது"

என்ற முனிவர்வாக்கினை யிவர்கள் உணர்ந்திலார்போலும். அருமையான பந்து வர்க்கங்களையுடையவர்களாயிருந்தும், இல்லாதவர்களாய் நேர்ந்ததற்கு முற்பிறப்பில் என்ன தீவினையைச் செய்தார்களோ? இனி இவர்கள் எந்தப்பிறப்பில் தங்களுக்கு இப்பிறப்பில் பந்துக்களாய் வந்து பிறந்துள்ளார்களோடும் கூடிக்கலந்து, உண்டுறங்கி ஆனந்தமாக வாழப்போகிறார்கள்? அந்தோ! இவர்களின் செயற்கை இயற்கைகளைப்பற்றி நினைக்குமிடத்து எம்முடைய குளிர்ந்த நெஞ்சமானது காய்ந்த மரக்கட்டையைப் போன்றுமன்றோ வேறுபடுகிறது. "நேயவாழ்வு உற்றாருடன்போம்" என்ற நமதௌவைப்பாட்டியின் வாக்கையுங்கூடக் கேட்டிரார்போலும்.

நண்பர்காள்! இக்கொடிதான பழக்கம் நம்முடைய நாடு நகரங்களிலும் வந்து நுழைந்துகொண்டனபோலுந் தெரிகிறது. மனித வர்க்கத்தாருள் ஒரு குடும்பத்தாருக்கும், பந்துவாயுள்ள மற்றொரு குடும்பத்தாருக்கும் ஏதோ ஒருகாலத்தில் மனஸ்தாபம் நிகழ்வதும் இயற்கைதான். இதற்காகச் சாகும்நாள்வரை நன்மை

தீமையின்றி, பந்துத்வத்தை யொழித்து, விலகியிருப்பதூஉம், இயற்கையன்றும். நீரோடு நீரடித்து விலகிக்கொள்ளாதென்பதை நாம் உணரவில்லையா? "நீர்கிழியவெய்த வடுப்போல மாறுமே சீரொழுகுசான்றோர் சினம்" என்றதைபறை மொழியினை நாமே வன் படிக்கவில்லையா? ஆன்றோர் என்ற பெயரினை யேற்றுக் கொள்ள நமக்கேன் பிரியமில்லையா? எத்துணை தூரம் அளவுகடந்த மனவருத்தமே ஏற்படினும் அம்மனமானது தான் நினைத்த தன்மையிலேயே பன்னெடுங்காலம் நிற்றற்கு அஃதென்ன கல்லோ? அல்லது இரும்போ? அல்லது கனிவயிரக்கட்டியோ? அப்பெரும் பொருள்களைக் கூடவன்றோ நம்மவர் நீராக உருக்கிவிடுகிறார்கள். இம்மனத்தைத்திருப்பிக்கொள்வதென்றால்பெரும்பிரையாசையோ? "கற்பினவோடொப்பர் கயவர் கடுஞ்சினத்துப் பொற்பினவோடொப்பாரும் போல்வரே" என்றதை நாமேன் கவனித்து நினைத்துக்கொள்ளுதல் வேண்டாவோ? கயவர் கூட்டத்துட் சேர்க்க நாமும் சம்மதிக்கலாமோ?

"விருப்பறாச் சுற்றமியையின் அருப்பறா
ஆக்கம் பலவுந்தரும்" என்றும்,
"சுற்றத்தாற் சுற்றப்பட வொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் பெற்றபயன்" என்றும்
காக்கைகரவா கரைந்துண்ணும் ஆக்கமும்
அன்ன நீரார்க்கேவுள" என்றும்,
"கொடுத்தலு மின்சொலு மாற்றினடுக்கிய
சுற்றத்தாற் சுற்றப்படும்" என்றும்,
"அடுத்தடுத்து, வன்காய் பலபலகாய்ப்பினுமில்லையே
தன்காப் பொறுக்கலாக்கொம்பு" என்றும்,
"வயாவும் வருத்தமு மீன்றக்காலேனவும்
நவாஅன்மகற்கண்டு தாய்மறந்தாஅங்
கசாஅத்தானுற்ற வருத்தம் உசாஅத்தன்
கேளிரைக் காணக் கெடும்" என்றும்,
"விருப்பில்லா ரில்லத்து வேறிருந்துண்ணும்
வெருக்குக்கண் வெங்கருனை வேம்பாம்—விருப்புடைத்
தம்போல்வா ரில்லுட் டயங்கு நீர்த் தண்புற்கை
யென்போடியைந்த வமிழ்து" என்றும்,

"கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ் பைங்கூழ்போல்
கேளீவதுண்டு கிளைகளோதுஞ்சுப
வாளாடு கூத்தியர் கண்போற்றடுமாறுந்
தாளாளர்க் குண்டோ தவறு" என்றும்,

சுற்றத்தார் மாட்சியைப்பற்றிக் கூறும் ஆன்றோர் திருவாக்குகள் அனந்தமே காணப்படுகின்றது. மேலும், ஒருவிஷயத்தை அளவுக்கு மிகைபாக விரித்துக்கொண்டு போவதும் அத்துணை நியாயமாகாது. மேலும், எங்கள் மித்திரன்மீது எங்களுக்கில்லாத அன்பும், பற்றும், பாசமுமா நமக்கேற்படப் போகிறது? நீவிர்சொல்லத் துணிந்தமட்டில் சுருக்கமாயும், மிக அழகாயும், எவர்களுக்கும் மிகத்தெளிவாகவிளங்குமாறுவெளிப்படையாயும், முடிவுரையாகச் சிற்சிலவிஷயங்களைக்கூறி நுமது வியாசத்தைபூர்த்தியாக்குமின். பார்ப்பவர்களின் மனம் சலிப்படையாதிருத்தலும் வேண்டும். கண்டமட்டிலும் ஒருவாறு நீவிர்! காட்டைக்கட்டி மலையைக்கட்டி வரையத்தான் செய்வீர். என்றாலும், பார்ப்பவர்களுக்கும் அதில் மனம்பற்றுதலுண்டாகவேண்டாயா? பெரும்பான்மை, எங்கள் மித்திரன்மீது எங்களுக்கு சின்னாட்களுக்கு முன்னிருந்தமாதிரி வெறுப்பு இக்காலமில்லையென்பது சிறிது நுமக்கும் விளங்கித்தானிருக்கும். தற்காலவரை எங்களின் மகாசமுகம் "மித்திரன்" மீது மிக விருப்புடையதாகத்தான் காணுகிறது. ஆகலின், நீவிர் அதுவிஷயத்தில் மிகுதியும் பிரையாசையெடுத்துக்கொள்ளாமல் காலதாமதமும், விஷய நீட்டமுமின்றிக் காரியாதிகளை ஒழுங்காக நடத்துமின். விஷயத்தைச்சுருக்கமாகச் சொன்மின். எனில்? எமதாப்த நண்பர்காள்! முடிவுரையைப்பற்றிச் சிறிது ஞாபகமாக கவனியுங்கள்.

I. நமது மித்திரன்மீது சென்றநாளிருந்த மனஸ்தாபத்தை இந்நாள் நமது மகாசமுகத்தைச்சார்ந்த ஒவ்வொருசகோதரர்களும் மனப்பூர்வமாக நீக்கிவிடுதல்வேண்டும்.

II. நமது வைசியமகாசமுகத்தைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் நமது மித்திரனைத் தன்னுடன்பிறந்த தனது ஒன்றான சகோதரனைக்கவனித்து நினைத்துப்பாவித்தல் வேண்டும்.

III. நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும் ஒரு சிறிதளவுகூட மனக்கோட்டமென்பதின்றிச் சந்தாரூபாயை முன்னதாகவே மணியார்டர்மூலமாக அனுப்பி பத்திரிகையைத் தருவித்து ஒவ்வொருநாளும் பார்த்துவருதல்வேண்டும்.

IV. நமது வகுப்பைச்சார்ந்த எந்தப் பெரியமேதாவிகளும் தமிழிலோ, அல்லது ஆங்கிலத்திலோ ஆவசியகமாக வேண்டும் பல வியாசங்களை உடனுக்குடன் வரைந்து நமது மித்திரன்மூலமாகவே வெளிப்படுத்தலும் வேண்டும்.

V. ஸ்ரீமான் சா. ராம. மு. சித. பெத்தாச்சி செட்டியாரவர்கள் நமது மித்திரன் அபிவிருத்தியைக் கருதி வருஷா 'வருஷம் நமது மித்திரன் வேண்டுகோளில்லாமலே 50, 50. ரூபாய் அனுப்பிக்கொடுத்தல்போன்று நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு செல்வவந்தர்களும் முறையே கட்டாயச்சட்டமாக அனுப்பிக் கொடுத்துவரலும்வேண்டும்.

VI. நமது மித்திரனைப்பற்றிய எந்தவிதமான புகழ்ச்சியும் இகழ்ச்சியும் நமது மகாசமூகத்தையே சார்ந்ததென்பதை எந்தச் சகோதர சகோதரிகளும், எந்தச்சிறுவர், சிறுமிகளும் மறத்தல் கூடாது.

VII. நமது சமூகமுன்னேற்றத்துக்கும், ஒருமைப்பாட்டுக்கும், சமூகத்தைக்குறித்த எவ்வித நன்மைகளுக்கும் நமது மித்திரன் ஆவசியகம் என்பதை எந்தச் சகோதரர்களும் மறத்தல் கூடாது.

VIII. "தன்னவன்பகையும்" "அன்னியன் உறவும்" சமம். என்பது ஞாபகமிருத்தல்வேண்டும்.

IX. "தனக்குப்போகத்தானமும் தருமமும்" என்பதையுணர்ந்து, நமது மித்திரனையும், அதன் ஆசிரியரையும் மிக நன்றாக ஆதரித்து வரலும் வேண்டும்.

X. நாம் நமது மித்திரனுக்குச்செய்யும் எவ்வித நன்மையும், எவ்விதத்தீமையும், நமக்குச்செய்துகொண்டதே எனத்தெளிதலும்வேண்டும்.

XI. "கொஞ்சிப்பேசுங் கழுவிசொற்குற்றத்தால்
வஞ்சித்தன்னைவனமூலைப்பாலினில்
நஞ்சிட்டாலதைநாடிவிலக்கும் நன்
னெஞ்சத்தாருளரோ? இந்நிலத்திலே"

என்ற முதுரையைக் கவனித்து நினைத்து, "வைசியமித்திரன்" என்னும் பத்திரிகையை வைசியர்களாகிய நாம் கவனித்து ஆதரிக்காது, விடுவோமாயின், ஏனைய எந்தப்பகுதியார், அல்லது எந்த வருணத்தார் ஆதரிப்பார்கள், கவனிப்பார்கள். பார்ப்பார்கள் என்பதையுணர்ந்து, நமது மித்திரனுக்கு நாம் இழைக்குந் தீங்கை ஏனையவொரு எவராலும் விலக்கமுடியாததென்பதையுந் தெரிந்து, எவ்விதக்கெடுதலும், எவ்விதக்காரணங்களை முன்னிட்டும் நமது மித்திரனுக்கு நிகழாத வண்ணம்பாதுகாத்து நாளொருமேனியும், பொழுதொருவண்ணமுமாக வளர்ந்து நீடூழிநிலைத்து வருமாறு வேண்டும் ஒவ்வொருமார்க்கங்களையும், நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும் செய்துவரலும்வேண்டும்.

XII. "செட்டி" "செட்டி" என வரைதற்குரித்தல்லாது வரையும், பட்டிப்பத்திரிகைகள் தேவவுலகத்திலே இருந்து ககனமார்க்கமாகத்தானேவந்து நமது திருக்கரங்களிலுட்கார்ந்துகொண்டிருப்பினும் அதனைநோக்காதிருத்தலும்வேண்டும்.

XIII. நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு நகரங்களினும் உடைத்தாய ஒவ்வோரில்லங்களினும் நமது மித்திரன் காணப்படுதலும்வேண்டும். படிக்கப்பெறுதலும்வேண்டும். நாள்தோறும் பிரசுரமாகவேண்டும்மார்க்கத்தையும்பூர்த்தியாக்குதலும்வேண்டும் நமது மித்திரனை இந்நிலவுலகில் ஏனைய பலபாகங்களினும் உடைத்தாய பல மேதாவிகளும் தாங்களே விரும்பித் தருவித்துப் படித்துப்பார்ப்பதற்குரிய நிலையில் வைக்கவேணடுங் கடமைநம்முடையதே என்பதைமறத்தலும் கூடாது.

XIV ஏதேனும் ஒரு விசேஷ மீட்டிங்கு கூடினல் அதனைப்பற்றிய பலவிஷயங்களையும் சென்னையிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளுக்குத் தந்தி (டில்லேக்கிராம்) தட்டுவதை நிறுத்திவிட்டு நமது வைசியமித்திரன் ஆபிசுக்குத்தெரிவித்தலும் வேண்டும்.

XV நமது மித்திரனைப்பற்றி நமது வகுப்பைச்சார்ந்த எவரோடேனினும், ஏனைய எவ்ரோடேனினும்

"புறங்கூறிப்பொய்த்துயிர்வாழ்தலிற்சாதல்
அறங்கூறும்ஆக்கந்தரும்"

என்றதேவர் திருவாக்கைநினைந்துபுறங்கூறாதிருத்தலும்வேண்டும்

XVI நமது மித்திரனுக்கு வியாசம் எழுதப்புகுந்த எந்த மேதாவியும் "மண்போற்பொறுமையுடையராய்" இருத்தலும் வேண்டும். யாவரொருவர்முச்சந்தியிலுட்கார்ந்து மணல் வறுத்துக் கொண்டிருப்பினும் அஃது ஏனென வினவுதலுங்கூடாது. நமது மகாசமுகத்தைப் பிளவு படுத்துந்தன்மையிலாவது, நமது மகா சமுகத்துக்கு மனவருத்தத்தையுண்டுபண்ணுந்தன்மையிலாவது, ஒரு சிறிதளவேனுங்கலகத்தைமூட்டுந்தன்மையிலாவது, எவ்விதக் காரணத்தை முன்னிட்டும், செல்வவந்தர்கள் அல்லது ஏனைய ஒரு எவரையும்இழித்துக்கூறுந்தன்மையிலாவது, "நீ பெரியன்" "நான் பெரியன்" என போட்டி போட்டுக்கொண்டு நியாயஸ்தலம் செல்லுந்தன்மையிலாவது, சாதாரணமாக எல்லாச்சகோதரர்களுக்கும் விளங்கக்கூடாத சில பெரிய விஷயங்களை (அஃதாவது "சிவஞான போதம்" "திருமந்திரம்" "தேவாரம்" "திருவாசகம்" "கோவை" "இறையனார்அகப்பொருள்" "புறப்பொருள்" "தொல்காப்பியம்" முதலிய இலக்கிய இலக்கண வேதாந்த சித்தாந்தச்சூத்திரங்களை) இழுத்துக்கொண்டு மிருதியும் காடுமுரடான வியாசங்களை வரையுந்தன்மையிலாவது, கவர்ன்மென்றுக்கு விரோதமான தன்மையிலாவது, சமயவரன்முறை, ஜாதிவரன்முறைகளை ஒரு சிறிதளவுங் கூட கெடுக்குந்தன்மையுலாவது கட்டாயம் இதனைவரைந்துதான் தீரல்வேண்டுமென அகப்பேயானது எத்துணைதூரம் சரீரத்தை மேலுங்கீழுந்தூக்கிப் போட்டாட்டினும் அழகுவாய்ந்த தமது திருக்கரமானது எழுதுகோலைத் திரும்பப்பிடித்தல் கூடவேகூடாது. தாம் நினைத்தமுப்பில் வரைந்த வியாசங்கள் மித்திரனில் பிரசுரமாகாததைக்கண்டால்பல நல்லநியாயங்களைக்கூறி மனத்தை சமாதானப்படுத்திக்கோடலும்வேண்டும். அதற்காக மற்றொரு பத்திரிகைமூலமாக அதன்ஆசிரியரை இழித்துக்கூறித்திட்டுதலுங் கூடாது. ஆழ்ந்தகருத்தும் ஆறியசிந்தையும் அல்லாத எவர்களும் வியாசப்வுரையத் தலையிடுதல் கூடாது.

XVII. "வைசியமித்திரன்" என்றால், செல்வவந்தர்கள் நிறைந்த ஒருபெரிய வகுப்பைச்சார்ந்ததாயிற்றே, பத்திரிகை இவ்வளவு கேவலத்தன்மையில் நடைபெறுவதற்குரிய காரணமென்னை என பிறவகுப்பைச்சார்ந்த எவர்களும் நினைத்தற்கிடமில்லாததன்மையில் மிகு சீர்சிறப்புடன் நடைபெறச்செய்யவேண்டுவதும் நமது மகாசமுகத்தைச்சார்ந்ததேயாமென்பதை நமது வகுப்பைச்சார்ந்த எந்தச்சகோதரசகோதரிகளும் மறத்தல்கூடாது. அவ்வாறு நடைபெறச்செய்வதற்கு மேம்பட்டபெரிய வோர் அறச்செயல் எதுவுமே இல்லையென்பதாகத் தெளிதலும்வேண்டும். இதற்காக இதுசமயம் நாம் என்னசெய்தல்வேண்டுமெனின்? உலகவிவகாரமும், நாகரீகமும், சுயாபிமானமும் உடைத்தான எமதன்பார்ந்த ஒவ்வொருசகோதரர்களும் நமதுமித்திரன் வளர்ச்சியைக்கருதி மன ஊக்கமென்னும் கங்கணத்தை அறிவென்னுங்கரத்திலார்த்துக் கொண்டு நாளைக்குப்பார்ப்போமென நினையாமல் 5, 5 சந்தாச் சேர்த்து விலாசம் பெயரோடு மணியார்டரும் நமது மித்திரன் ஆபீசுக்கு அனுப்பிக்கொடுத்தலும்வேண்டுமாய் மிகத்தாழ்மையாயும், அன்பாயும் கேட்டுக்கொள்கிறேன். எல்லாம்வல்ல இறைவனும் திருவருள் புரிவானாக சுபம்! சுபம்!! சுபம்!!!

நாவல்.

அன்பார்ந்தபியா! மேற்கண்ட "நாவல்" என்னும் திருப்பெயர் புனைந்த மாதாந்தப்புத்தகம் ஒன்று சின்னாட்களுக்கு முன்னர் நமது காரைமாநகரில் பிரசுரமாகிக்கொண்டிருந்தது சிறுபான்மை நமது மகாசமுகத்தைச்சார்ந்த எந்தச்சகோதரர்களுக்குந் தெரிந்த விஷயம். இப்பொழுது அப்புத்தகம் நடைபெறவில்லைப்போல் தெரிகிறது. வருஷம் ஒன்றுக்குச் சந்தா 3 ரூபாயோ நான்குரூபாயோ வைத்து முன்னதாக 1000புள்ளிகளிடம் ரூபாய்கள் வாங்கியிருக்கிறதாயும் ஷை புத்தகத்தைச்சார்ந்தாரொருவர் தேவநகரத்தில் வைத்து என்னிடம் சொன்னார். தற்சமயம் ஆளையுங்காணவில்லை, புத்தகமும் நடைபெறவில்லை என்றால் சந்தாசெலுத்திய நமது நண்பர்களுக்கு அளவுபங்கையில்லாத மனவருத்தந்தான் இருக்கக்கூ

டும். தற்சமயம் நமது மகாசமுகத்தைச்சார்ந்த ஒவ்வொரு நகரங்களிலும் "அயோக்கியர்கள்" சாங்கோபாங்கமாய்ப் பெருகிவிட்டார்கள். அவர்களின் விஷயத்தைப்பற்றி ஒரு சிறிது விவரிக்கப்புகுந்தாலும் அஃதொரு சாகரமாகத்தான் முடியும் ஒருவாறு சாகரமாக முடிந்தாலும் குற்றமில்லை வரைந்துவிடுவோமென்றால் அவர்கள் நமது மகாசமுகத்தைச்சார்ந்த நகரங்களிலே யுள்ளவர்களாயுமிருக்கிறார்கள் "பிள்ளையாரைப்பிடித்தசனியன்" அரசமரத்தையும் அசைத்து விடுகிறான். நமது வைசியத்துக்கு ஆர்டர்கொடுக்கும் நண்பர்கள்பலரும் நாவல் விஷயத்தையே சொல்லுகிறார்களென நமது ஏஜண்டு கோபாலபிள்ளையவர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால், நாட்டுக்கோட்டைவைசியம் அந்தயாதிரி நின்றுகொள்ள மாட்டாது. ஒருமாசம் இரண்டுமாசம் முன்னும்பின்னுமாகவாவது புத்தகம் முறையாக பிரசுரமாகிக்கொண்டுதான்வரும். நாளிது ஆடி, ஆவணிமாசப் புத்தகம் இவ்வளவு சுணக்கமானது, காகிதக் காரணமும், எட்பிளவும் உருட்டுப்புரட்டற்ற வுண்மைக்காரணமுமேயாகும். நல்லகாரியத்துக்கு நாணூறுவிக்கினம்.

II. மேலும், நாவலுக்கு எவ்விதக்காவலுமில்லாத காரணமும் ஒன்று. நமது வைசியத்துக்கு "நாட்டுக்கோட்டைவைசியம்" என்ற செல்வப்பெருக்குள்ள பெயரொன்றே பெரியோர் அரண் ஆகும். நண்பர்காள் சற்று நன்கு கவனியுங்கள்.

III. இந்நாட்டுக்கோட்டைவைசியம் என்னும் புத்தகம் வரையத்தொடங்கி இற்றைக்கு ஏறக்குறைய 10 வருஷங்களுக்கு மேலாகிறது. மாதாந்தச் சஞ்சிகையாக நடத்தத்தொடங்கி இற்றைக்கு நான்குவருஷங்கள்வரையாகிறது இதுநாளைக்குள் நமது மகாசமுகத்துள் ஒருவரை மோசஞ்செய்து நான் பொருளைச் சேகரித்துக்கொண்டு ஒரு டக்கத்திலுட்கார்ந்துவிடவேண்டுமென்று நினைத்தால் குறைந்தபாகம் ஒரு இருபஃதாயிரத்துக்குச் சேர்த்து வைத்துக்கொண்டிருப்பேன்.

ஆனால், ஒருவிதசங்கடத்துக்குட்படாமலிருந்துகொள்ளவுங்கூடும். மேலும், ஒருவரையோ பலரையோ மோசஞ்செய்து கொஞ்சம் பொருளை ஈட்டிக்கொள்வதற்காக நமது "நாட்டுக்கோட்டைவைசியம்" நடைபெறவுமில்லை. இன்னகாரணத்துக்காகத்தான் இஃது

நடைபெறுகிறதென்பது இந்நூலைத் தொடக்கமுதற்கொண்டே படித்துவந்தார் ஒவ்வொருவருக்கும் மிகத்தெளிவாக விளங்கும். என்னுடைய மனோவன்மையோடுகூடிய அறிவின் பிரையாசையோடு சரீரப்பிரையாசையுங்கூடி வரைந்துமுடிந்திருக்கிற கையெழுத்துக்காப்பியே இன்னும் 5, 6, வருஷங்களுக்குமேற்காணும் எஃது எங்ஙனமாயினும் அஃதொருங்கும் பிரிண்டாகித்தீருவதற்குள் ஒருவர் எத்துணை இலக்ஷம் ரூபாய்களைக்கொணர்ந்து தந்து இவ்வைசியம்என்னும் நூலை பிரிண்ட்பண்ணாமல் நிறுத்திக்கொள்ளுமென வேண்டிக்கொளினும் அஃது எல்லாம் வல்ல இறைவன் திருவருணோக்கத்தால் நிறுத்தப்பெறமாட்டாது. மேலும், என்னுடைய ஆப்த நண்பரும், இந்நூற்றொடக்கமிருந்து சின்னாட்கு முன்வரை ரூபாய் ஆயிரத்துக்குமேலாக இந்நூற் செலவினை அச்சாகவேண்டுங் காரணங்கருதியுதவி புரிந்து வந்து சின்னாட்களுக்கு முன்காலஞ்சென்ற பரோபகாரவள்ளலுமான கானாடுகாத்தான் ஸ்ரீமான் கு. எ. மா. சிதம்பரஞ்செட்டியாரவர்கள் எவ்விதகாரணங்களை முன்னிட்டும் இந்நூலை பூர்த்தியாக அச்சேற்றாமல் இடையில் நிறுத்திவிடக்கூடாதென பன்முறைப் பலவந்தமாகவும் கூறியிருக்கிறார்கள். தற்காலவரை நமது மகாசமுகத்து நண்பர்களுட் சிலர் போஷகராயுமிருக்கிறார்கள். இங்ஙனமாக நமது மகாசமுகத்துக்கு எவ்விதகாரணங்களை முன்னிட்டும் நமது வைசியமானது தனைத்துணையளவும் மோசஞ்செய்யக்கருதும் என்பதாக எந்தச் சகோதரர்களும் மறத்தலோடுகூடியும் நினைத்தல்வேண்டாம்.

IV. மேலும் எமது ஆப்த நண்பர்காள்! நீங்கள் சிறிது ஞாபகமாகக்கவனித்து, முன்னதாக ஓடிவரும் நினைப்பை ஒருபக்கம் உட்காரச்செய்து பின்னர்வரும் ஆலோசனையோடு சிறிது நியாயாநியாயங்களைப் பகுத்துவிவகரித்துப்பாருங்கள் நம்முடைய மனமானது களங்கமற்ற பளிங்கம்போன்ற நல்லவிஷயங்களையே காட்டும். இந்நூற்றொடக்கமாதமிருந்து ஒரு பதினைந்துமாதம் வரை ஒவ்வொருமாசமும் மிகுதிமிகுதியாகச் சந்தாசேர்ந்துகொண்டே வருமென எண்ணி அறிவின்மையால் மாதம்ஒன்றுக்கு 1500, 1500 காப்பிகள் அடித்துவைத்து பின்னர் 1000காப்பிகள் வீதம் 15 மாதத்துக்குள்ள மொத்தகாப்பிகள் ஒருங்கையும் காகி

தக்கிரயத்துக்கு கோட்டையூர் லோகப்பர் காப்பிக்கிளப்புக்குத் தான் கொடுத்தேன். ஷை கோட்டையூர் ஸ்ரீ இலக்குமிவிலாச ரீடிங்ரூம் ஒவ்வொரு சகோதரர்களுக்கும் அஃது தெரியும். அது சமயம், என்னுடைய தரித்திரதசையைக்கண்டு ஷை ரீடிங்ரூம் சகோதரர்கள் 300ரூபாய்க்குமேல் போஷகர்கள் என்னும் வார்த்தையைக்கூட நினையாமல் இனாமாகக்கருதியே தந்திருக்கிறார்கள். நான் சரீரத்தோடுகூடி ஈங்கு நடந்துதிரிகிறவரை என்னபாடுபட்டாவது புத்தகம் அனுப்பித்தீரவேண்டியதல்லவா. காகிதக்கிரயத்துக்குவித்ததிலிருந்து என்னுடையதாத்துக்குமிஞ்சியநட்டமே ஏற்பட்டது. அதிலிருந்தும் சந்தா நண்பர்களுக்குமட்டுமே புத்தகம் கணக்காக அடிக்கிறதைத்தவிர மீதமாய்ப்படியடிக்கிறதில்லை ஆகலின் ஒருமாசம்பூராவும் வந்த ஆர்டர்களுக்கு மற்றையமாதந்தான் சேர்த்துப் புத்தகம் அடிக்கப்பெறும். ஆகலின், தேவநகரத்தில் சில நண்பர்களுக்கும், காரைமாநகரில் ஆடர்கொடுத்த நண்பர்களுக்கும், புரட்டாசி ஐப்பிசிமீ இரண்டுக்குஞ்சேர்த்து புத்தகம் பிரிண்டிங்காவதால் கார்த்திகைமாசம் 4-5 தெய்தியிற்றான் புத்தகம் கிடைக்கும். அதிலிருந்துதான் ஒருவருஷத்துக்கு கணக்கும் ஏற்படும். அட்டரசுகளையெல்லாம் தவறிவிடாமல் பத்திரமாகத்தான் பிரிண்டுபண்ணி வைத்திருக்கிறேன். இதற்காக ஆர்டர் வாங்க வந்திருக்கிறவர் மிகையாகவிரித்துமடித்துப்பேசத்தெரியாதவராகையால் அவரை எவ்விதத்தொந்தரவுஞ்செய்யாமல் இதனைபார்வையிடும் ஒவ்வொரு சகோதரர்களும் தங்கள், தங்களின் பெயர் விலாசங்களையும், ரூபாய் ஒன்றையும் கொடுத்து நமதுவைசியத்தைஆதரித்தல்வேண்டுமாய் மிகக்கீழ்ப்படிதலுடன் கேட்டுக்கொள்கிறேன். இங்ஙனம் தங்கள் நண்பன்,

ப. சொ. ஆண்டியப்பன்,

பாளையங்கோட்டை.

திருச்சிற்றம்பலம்.

OFFICE OF THE ... MADRAS 7-DEC 1918

Nattukkottai Vaiciyam

நாட்டுக்கோட்டை வைசியம்.

ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

தொகுதி க | பிங்களஹூ புரட்டாசி, ஐப்பசிமீ | பகுதி கூஎ,கூஅ.

கடவுள் வணக்கம், பதி பசு பாச விளக்கம்.

"மூலமாயெவைக்கும்அறியொணாவுருவாய், மும்மலங்களைந்தவர்க்கெளிதாய், ஆலபோஜனஞ்செய்தழிவிலாதவனாய், அருமறைச்சிரத்தொளிர்பவனாய்ப்,பாலலோசனனாய்ப், பசுதொறும்பதியாய்ப், பக்குவசனகனாதியர்க்காய், ஆலமாநீழலமர்ந்துறைபவனையகத்தவிசிருத்தியின்படைவாம்"

"முன்னைநான்மறைமுடிவினில்வீற்றிருப்பவனை
அன்னையத்தனாயுலகெலாமமர்ந்திடுபவனை
என்னையாளுடையிறைவனையிருண்மலங்கிழியப்
பொன்னினம்பலத்தாடியபுனிதனைத்தொழுவாம்"

"பாசமைந்தையுந்தனித்தனிபறிந்திடநீக்கி
நேசமாகியவறிவுருநீயெனக்காட்டிப்
பேசுமேழ்வகைப்பிறப்புனக்கிலையெனப்பேசித்
தூசுநீக்கியகுருசூபரப்ரகாசனைத்தொழுவாம்"

"தாரணியவர்க்குநாலாஞ்சத்தினிபாதமெய்த
வாருணிபோலத்தோன்றியொருமொழியாலெனக்குக்
கோரணிகாட்டுமாறுசமயத்தின்கோளைநீக்கிப்
பூரணசொருபங்காட்டும்புண்ணியன்பொலன்றாள்போற்றி"

"நிராமயமாய், நிஷ்களமாய், நித்தியமாய், நின்மலமாய்ப்
புராதனமாய், சஞ்சலமாய்ப், பூரணமாய்ப், புனிதமாய்ச்
சராசரமாய்ச், சாட்சியாய், சத்தியமாய்ச், சித்துருவாய்
பராபரமாய், வெறுவெளியாய், இருக்குமந்தப்பரமசிவம்"

"சொல்லாலுமனனாலுந்தொடாரதசூக்குமமாய்ப்
பல்லான்றகேள்வியருமீதென்றுபகர்வரிதாய்
ஒல்லாதபாஞ்சுடராயுயிர்க்குயிராயுண்மையுமாய்
எல்லாமாயல்லவுமாயிருக்குமந்தப்பரமசிவம்"

"தூலத்தனுவுநானல்லேன்சூக்கத்தனுவுநானல்லேன்
மூலத்தனுவுநானல்லேன்மும்மைத்தனுவும்பொய்யன்றோ
ஞாலத்தனுவைநானென்றேநம்பிக்கெட்டேனெடுங்காலம்
சாலத்தெளிந்தேனினிஞானத்தனுவேயெனக்குத்தனுவென்றே"

"அறிவிலறிவாயகண்டிதமாயனந்தானந்தமயமாகிச்
செறியும்பரமசிவந்தன்னைத்தன்னுட்கண்டுதியானித்துக்
கறவையருந்தப்பால்சுரக்குங்காலமேனுங்கடைப்பிடிப்போர்
பிறவிக்கடலைக்கடந்தோர்களவரேயுலகிற்பெரியோரே"

ஸ்ரீ நாட்டுக்கோட்டை வைசிய மகாசமூகத்தின் நறும்புகழ் நிலைகள்.

முன் 34-வது புத்தகம் 703-வது பக்கத்தொடர்ச்சி.

இனி, நண்பர்காள்! நமது மரபினர்க்கு "நகரத்தார்" என்னும்பட்டப்பெயரினைப்பற்றிச் சிறிது கவனிப்போம். அஃதாவது, (நகரத்தார்என்பது) ஏனையொரு எந்தவருணத்தாருக்கும், எந்த வகுப்பாருக்கும், எந்த நகரவாசிகளுக்கும், எந்த நாகரீகமுடையாருக்கும், உரித்தானதாகவின்றி நமது நாட்டுக்கோட்டைவைசிய வகுப்பாருக்கே உரித்தான சொந்தமாமென்பதும், காரணம்பற்றியோ, இடுகுறியாயோ, நமது சமூகத்தாரிடமே தொன்றுதொட்டு இஃது நமது வருணத்தார் எங்கள் மரபார்க்குரியதாமென்க வழங்கிவருகிறதாமென்பதும் இரவலர் முதற்கொண்டு புரவலர் ஈறுகளவர்களுக்கும் தெற்றெனத்தெளிந்த வுண்மையேயாகும். இஃது இந்நாட்டோடங்கியாக்கும் இவ்வகுப்பாருக்கு உரியதாக வழங்கிவருகிறதாமென எத்தகைய ஆராய்ச்சிவல்லுநர்களாலும் வரையறுத்துக் கூறமுடியாததொன்றேயாகும். இதன்பூர்வத்

தைப்பற்றிச் சிறிது ஊன்றி நோக்கிக் கவனிக்கப்புகுந்தால் எவர்களும் அதிசயிக்கத்தகுந்த நமது மகாசமூகத்தின் மூலபலத்தையும், நமது தாதைமுதாதைகளின் மாட்சியையும், பரம்பரையாக நமது மகாசமூகம், எச்சமயங்களாலும் புகழ்ந்துகொண்டாடப்படுகிற மெய்ச்சமயமான நமது சைவசமயம் ஒன்றில்மாத்திரமே ஈடுபட்டுச்சார்ந்து வருகிறதென்பதையும் எந்தக்காலத்தும் வைசியவருணத்தாரே என்பதையும், மிகத்தெளிவாக விளங்கக்காட்டும். யாங்ஙனமெனின்? "செட்டியிருப்பிடம் பட்டினமாகும்" என்பது நமது தாய்வர்க்கத்தாரின் பழமொழி. எவ்வித நாகரீக மார்க்கத்துக்கும், எவ்விததிருத்தமார்க்கத்துக்கும் எவ்விதத் தொழிலபிவிருத்திக்கும், வியாபார வகுப்பாரே காரணமாவர். இஃது இந்நிலவுலகின்கண் உள்ள பலதேயசரித்திரங்களையும் ஊகித்துணர்வார் ஒவ்வொருவருக்கும் மிகத்தெளிவாக விளங்கும். எவ்வளவு கேவலமான ஒரு சிறு கிராமமாகவிருப்பினும் அதில்வைசியர் பலர் குடியேறுவார்களேயாயின் அஃதொரு பெரிய நகரமாகும் என்பதில் எட்பளவும் சந்தேகமில்லை. நாட்டை நகரமாக்க வேண்டும் பேருஞ்சக்தியானது நமது நகரத்தாரவர்களிடமே பெரும்பான்மையமைந்துகிடத்தலாற்றான் நமது நாட்டுக்கோட்டைவைசிய மகாசமூகத்துக்கு "நகரத்தார்" என்னும் பட்டப்பெயர்ஒன்றும் இயற்கையிலேயே அமைந்துகிடக்கின்றன. மேலும் எந்தக்காலத்தும் நகரங்களிலே வாசஞ்செய்து வருவதூஉம் ஒன்று.

மேலும், பட்டினமென்பதும், நகரம் என்பதும் பொருள் ஒன்றுதானென்பது நமது முன்னையவர்களுக்குத் தெரிந்திராததன்று. அங்ஙனமாயின் நமதுமுன்னையப்பெரியார்"பட்டினத்தார்" "பட்டினத்தார்" என்ற பட்டத்தை காலக்கிரமத்தில் வழக்கத்திற்குக்கொண்டுவந்திராமல், நகரத்தார், நகரத்தார் என்ற பட்டத்தை வழக்கத்திற்குக்கொண்டுவந்திருப்பதன் காரணம் என்னை? ஆம்! ஐயா! அதிற்றான் நமதுமுன்னையவர்களின் ஆன்ற தன்மையும், சைவசமயப்பெரும்பற்றுடைமையும், இனித்தவொண்சுவைதரு, தனித்தமிழன்னையின், கனித்தலைப்பருவத்து நித்த, நனித்தவமாக்கள் நமது மகாசமூகத்தாரே என்பதையும் மிகத்தெளிவாகக்காணக்கிடக்கின்றன. அஃதேதன்னை? எவராலும் விலைமதிக்கக்கூடா

தவும், வரைந்து முடியக்கூடாதவுமான மாட்சியமைந்த நவரத்னங்களாலிழைத்த சைவசமயமென்னும் பேரம்பலத்தில் இரவு பகலின்றி பல்லாயிரங்கோடி மங்கைப்பருவம் வாய்ந்த தேவகணிகைகள் யாவரும் ஆனந்தசாகரத்திலே மூழ்க ஆனந்தத்திருநடனமாடிக்கொண்டிருக்கும் "சஞ்சீவினி"யை மாந்தாரய்ப் பிறந்தார் எவர்களுக்கும் எளிதிற்காட்டத்தகுந்த ஆசிரியன்மார்கள் இவரேயாவர். மேற்கண்ட பேரம்பலத்திற்குரியவர்களும் அவர்களேயாவர். அப்பேரம்பலக்காவலாளர்களும் அவர்களேயாவர். அவர்கள் தான் யாரென்னின்? நமதுசைவசமயத்துமுதற்குரவரான ஸ்ரீ திருநாவுக்கரசசுவாமிகள் தம்மைப்பெரியவோர் பாரமாங்கல்லோடே சார்த்திக்கட்டிச்சாகரத்திலே பாண்டிமன்மகனால் அமிழ்த்தப்பட்டபோழ்து தங்களின் அரியதிருவாக்கால்

"சொற்றுணைவேதியன் சோதிவானவன்
பொற்றுணைதிருந்தடி பொருந்தக்கைதொழ
கற்றுணைப்பூட்டியோர் கடலிற்பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே"

எனத்திருவாய் மலர்ந்தருளிய மாத்திரம் கண்டார் யாவரும் ஏ! ஏ! இஃதென்ன வியப்பு? இஃதெல்லாம் எல்லாம் வல்ல இறைவனின் திருநாமமாகியஐந்தெழுத்துண்மையின்மகாத்மியமேயாமென்று அஞ்சலியத்தராய் நின்று அதிசயிக்குமாறு அக்கல்லையோர் ஆதனமாக அச்சாகரத்தில் மிதப்பச்செய்தவர்களேயாவர். அபயம்புகுந்தாரை அஞ்சாமற்காக்குங் கருணாகர பிரபுக்களேயாவர். இவ்,ஐவர்களின் மாட்சியைப்பற்றிச் சாதாரணமாகக் கவனித்து வரையப்புகுந்தாலும் இவ், அகலிடமே போதாததாகமுடியும். மேலும் நமது சைவசமயமே இவ், ஐந்தெழுத்தான தம்பங்களின்மீது நிலைநிறுவபெற்றதாகவும் முடியும். எனினும் சிலபெரியார் திருப்பாசுரங்களை மேற்கோள்களாக எடுத்துக்காட்டி மேற்செல்வேம்.

"நாவினுக்கருங்கலம் நமச்சிவாயவே"

"அரியதோர் நமச்சிவாயம் ஆதியந்தமானது"

"சிவாயநமவென்று சிந்தித்திருப்போர்க்கு
அபாயம் ஒருநாளுமில்லை"

"செம்பு பொன்னாகுஞ்சிவாயநமவென்னிற்
செம்பு பொன்னாகத்திரண்டது சிற்பரம்
செம்பு பொன்னாகும் ஸ்ரீயுங்கிரீயுமெனச்
செம்புபொன்னான திருவம்பலமே"

"திருவம்பலமாகச் சீர்ச்சக்கரத்தைத்
திருவம்பலமாக வீராறுகீறித்
திருவம்பலமாக விருபத்தஞ்சாக்கித்
திருவம்பலமாகச் செபிக்கின்றவாறே"

"வாறே சிவாய நமச்சிவாய நம
வாறே செபிக்கில் வரும்பேர் பிறப்பில்லை
வாறே யருளால் வளர்கூத்துக்காணலாம்
வாறே செபிக்கில்வருஞ்செம்புபொன்னே"

"பொன்னனமந்திரம் புகலவுமொண்ணாது
பொன்னன மந்திரம் பொறிகிஞ்சுகத்தாகும்
பொன்னான மந்திரம் புகையுண்டு பூரிக்கிற்
பொன்னாகும் வல்லார்க்குடம்பு பொற்பாதமே"

"அஞ்சுளவானையடவியுள் வாழ்வன
அஞ்சுக்கும் அஞ்செழுத்தங்குசமாவன
அஞ்சையுங்கூடத்தடுக்க வல்லார்கட்கே
அஞ்சாதியாதி யகம்புகலாமே"

"செகம்படைத்ததுமைந்தெழுத்தாம்
சிவன்படைத்ததுமைந்தெழுத்தாம்
யுகமுடிந்ததுமைந்தெழுத்தாம்
உற்பனமானதுமைந்தெழுத்தாம்

ஐயீர்! மிக ஞாபகமாகக் கேண்மின், எல்லையிற் பெரிய அவர்கள்தான் நகரத்தார், மகரத்தார், சிகரத்தார் வகரத்தார், யக

ரத்தார், எனப்பெறும் பேராசிரியன்மார்கள். இவ்வாசிரியன்மார்களைவரும் ஒருவற்கு ஆவசியகமாக வேண்டுங்காரணம்பற்றித்தான் இவர்களைவரின் முதல் எழுத்தாய நகரம், மகரம், சிகரம், வகரம், யகரம் ஆகிய ஐந்தையும் ஒன்றுகூட்டி "நமசிவய" என ஆன்றோர்கள் அமைத்துவைத்திருக்கின்றனர். இவ்வைந்து ஆசிரியன்மார்களினும் இருஞ்ஞாலவாழ்க்கைக்கும் முதன்மை அல்லது தலைமை பெற்றவர் நகரத்தாரேயாவர் ஆகலின்றான் நமது மகாசமூகத்தைச்சார்ந்த முன்னையப்பெரியார், "நகரத்தார்" என்ற பட்டத்தை நமது வகுப்புக்கே வுரித்தான பட்டமாக வமைத்துக்கோடல் வேண்டுமென நமது சைவசமயத்தின் உண்மை தெற்றன விளங்கவமைத்துக்கொண்டார்களாமென்க.

மேலும், உயிர் பன்னிரண்டும்ஆணெழுத்தென்றும், ஒற்றெழுத்தொருங்கும்அலியாமெனவும், உயிர்மெய்யெல்லாம்பெண்எழுத்தென்றும், எழுத்தின்கிழத்திநாமகளாதலிற் "செய்யுள் அல்லது சொன்முதலிலே" பெண்எழுத்தல்லது முன்வைத்துரையார் என்றும், ஒகரம்நீங்கியஉயிர்க்குறில்நான்காகிய அகரம், உகரம், இகரம், எகரம் ஆகியநான்கும், "கசதபநமவ" ஆகியஉயிர்மெய்யெழுத்துக்கள் ஏழும் அமுதவெழுத்தாமென்றும் நமது செந்தமிழ்ப்பேராசிரியன்மார்களாற்கூறப்படுகிறதாகலின் அவைகளிலேபெரும்பயிர்ச்சியும், பேரபிமானமுமுடைய நம்முன்னையப்பெரியார் நகரமாகிய அமுதவெழுத்தை முன்வைத்தே "நகரத்தார்" என அமைத்துக்கொண்டார்கள் என்னலும் மிகப்பொருத்தமாம். ஆகலின் எமது ஆப்தநண்பர்காள் எவ்விதமுகாந்தரங்களைக்கொண்டும் "நகரத்தார்" என்னும் பட்டப்பெயரினை மறத்தலைப்பொருந்தியும் நமது சகோதரசகோதரிகளான ஒவ்வொருவரும் தங்கள் தங்களின் பழக்கவழக்கத்தில் நின்றும் விலகிவிடுமாறுசெய்தல் கூடவேகூடாது. இதற்கு முன் அனுட்டானத்திலிருந்து வந்தது போல் இனிமேலும் எவ்விதக்கூட்ட நாட்டங்களினும், எவ்விதரிக்கார்டுகளினும், எவ்விதப் புத்தகம், பத்திரிகை, பேப்பர்கண் முதலிய பொதுவிஷயங்களினும், நமது மகாசமூகத்தைச்சார்ந்த எவ்விதச்சங்கம், மகாசங்கங்களினும் "நகரத்தார்" என்ற பட்டப்

பெயரினை நமது மகாசமூகத்தின் பொதுமைக்குரித்தான ஒருபெரு பொருட்சுவையாமென்பதைக்கருதி நமது பழக்கவழக்கத்தில் இயலச்செய்துவராலும்வேண்டும். இதுவிஷயத்தில் மிகஞாபகமாக இருத்தலும்வேண்டும்.

"நிறைமொழி மாந்தராணையிற் கிளந்த
மறைமொழிதானே மந்திரமென்ப"

என்பது போன்று "நகரத்தார்" என்ற அமுதவார்த்தையை ஒரு பெரிய மகாமந்திரமாகக்கருதுதலும்வேண்டும். நமது முன்னையப் பெரியார் வல்லுநத்தன்மைகளை மிகநன்றாக ஊகித்துணர்தலும் வேண்டும். மனக்கோட்டத்தைத்திருத்தியமைத்துநிவர்த்திசெய்துகொண்டு நமதுபூர்விகக்கொள்கைகளையும், அமுதவாசகங்களையும் ஆராய்ச்சிசெய்வார்க்கல்லது, எத்துணைதூரஞ்சிறந்தகல்வியறிவால் ஆராய்ச்சிசெய்வார் எவர்களேனினும் அவர்களுக்கும் ஒருசிறிதளவானவுண்மையும் விளங்கமாட்டாது. இதில்த்தானென்னையிருக்கிறது? அதில்த்தான் என்னையிருக்கிறதென ஒருசிறிதளவும் ஆராய்ச்சியின்றி அலட்சியம்செய்தல் கூடவேகூடாது மேலும் நமது தாதைமுதாதைகளின்மாட்சியைக்கவனிக்கப்புகின்,

"ஈன்றுவளர்த்த தாய்தந்தைக்கெவரேகைமாறியற்றிடுவார்
ஆன்றமதலைநூறுவயதளவும் அடிமைத்திறம்பூண்டு
மூன்றுபுவனத்துள்ளபொருள் முற்றுமளித்துமுறைமுறையே
ஏன்று வழிபாடியற்றிடினும் ஒருநாள்வளர்த்தற்கியையாதே"

என்றவாறு நமது தாதை முதாதைகளுக்கு எவ்விதமானகைமாறு நாம் செய்யினும் அஃது ஒருநாள் வளர்த்தற்கு சமமாகாதென்பது அறிவாளிகளாயுள்ள ஒவ்வொருவரும் நன்குணர்ந்தவிஷயமேயாம். எனினும், நம்மை, மிக உள்ளன்போடும் பெற்றுவளர்த்து, வாலிபமாக்கிவிடுத்து, அவர்களுக்குச்சொந்தமான செல்வமாதிகளையும் நமதுழியொப்புக்கொடுத்த ஒருநன்றியைநினைத்து அவர்களின்செல்வமாதிகளெல்லாம் நமக்கு எவ்வாறு சுதந்தரமாயிற்றோ அஃதேமாதிரி அவர்களால் தீர்மானிக்கப்பெற்ற ஆசாரசீலங்களும், வரன்முறைக்கட்டுக்களும், லௌகிகக்கொள்

காணுவார்கள் எனக்கூறினும் மிகப்பொருத்தமாகத்தான் இருக்கும். மேலும் உயர்ந்த பொருட்கள் சுருக்கமாகத்தான் காணப்படும். அஃதே மாதிரியாக உயர்ந்த கொள்கைகளையுடைய மனிதக்கூட்டத்தார் மிகச்சுருக்கமாகத்தான் காணப்படுவார்கள். எந்தப்பட்டி, எந்தப்பட்டினம், எந்தத் தேயத்திலுடைத்தானவர்களை கணக்கெடுத்து நோக்கினுஞ் சரிதான் உயர்ந்த கொள்கைகளையுடையார் சுருக்கமாகத்தான் காணப்படுவார்கள். ஆகலின் சிரமுண்டிதத்தின் மாட்சி இததனைத்தென்பது ஒருவர் கூறாமலே நன்கு விளங்குவதாகும். எற்றானுஞ் சிறந்த கொள்கை என்பதை எத்தகைய பெரியராலும் மறுக்கக்கூடாததொன்றுமாகும்.

ஆனால், எதுவிஷயத்தையும்பற்றி, உண்மையொன்றையும் ஒழிக்காமல், ஒருசிறிதளவுங்கள்ளமின்றி, உள்ளதையுள்ளபடியே வரைந்துமுடிக்கும் எம்முடைய இயற்கைக்குணத்தையே பின்பற்றி இயலும் கடப்பாடுடையேமாகவேயிருக்கிறேம். சிறிது நய வஞ்சகத்தைப்பொருந்திவரைந்து முடித்து யாதானும் ஒருவலுவான கட்சியிற் சார்ந்துகொள்ளல்வேண்டுமென்பதுதான் எம்முடைய பேறறிவாண்மையோடுகூடிய போலா. எனினும்,

"தன்னெஞ்சறிவதுபொய்யற்கப்பொய்த்தபின்
தன்னெஞ்சேதன்னைச்சுடும்"

"எல்லாவிளக்கும்விளக்கல்லசான்றோர்க்குப்
பொய்யாவிளக்கே விளக்கு"

"தவமறைந்தல்லவைசெய்தல்புதன்மறைந்து
வேட்டுவன்புட்சிமிழ்த்தற்று"

"வலியில்நிலைமையான்வல்லுருவம்பெற்றம்
புலியின்றோல்போர்த்துமேய்ந்தற்று"

"வஞ்சமனத்தான்படிற்றொழுக்கம்பூதங்கள்
ஐந்தும்அகத்தேநகும்"

"வானுயர்தோற்றமெவன்செய்யுந்தன்னெஞ்சந்
தானறிகுற்றப்படின்"

என்ற இன்னவோரன்ன ஆன்றோர்திருவாக்குகளை நினைக்கப் பாழான எம்மனம் இடங்கொடேன் என்கிறது. கண்ணுங்கருத்தும் உளதாயிருந்தும், மண்ணிற்பிறந்தார்மதிகெடலாமோ? என ஒவ்வொரு நிமிஷமும் போராடுகிறது. ஒருசமூகத்தை இரண்டு மூன்று கட்சிகளாகப் பிளவுபடுத்துங் காலவியற்கையைக்கவனித்து நினைதொறும், நினைதொறும், நெஞ்சம் நெக்குநெக்காக இளகி நீறு நீறாக நீறுகிறது. அந்தோ! என்செய்கிறது? காலவியற்கையை ஜெயிக்கமுடியவில்லையே. ஒரு சிறிதளவுகூட பேதமில்லாத நமது மகா சமூகமானது மூன்று நான்கு பிளவுகளாகப் பிரிந்துகொண்டதும் ஒருவித நன்மைக்கென்றேதான் கூறுதல் வேண்டும். மேலும் இந்தக்காலத்தும் நமது சகோதரர்கள் சிகை வைத்துக்கொள்ளவேண்டும் விஷயமாய்ப்பலமானபல கட்சிகள் ஏற்பட்டுப்பிரிந்தும், புத்தகம்,பத்திரிகைகளினும் தாறுமாறாகவரைந்தும் வருகிறார்கள். அஃதுடன் எம்முடைய அபிப்பிராயமும் வெளிவரவேண்டும் ஆவசியகம் உள்ளதுதானே என்பதை யாமும் சிறிதுகவனிக்கப்புகுந்த தன்மையில் "ஸ்ரீ நாட்டுக்கோட்டை வைசிய மகா சமூகத்தின் நறும்புகழ்நிலைகள்" என்னும் பெயர் இந்நூற்குப் புனைந்திருக்கிறோமாகலின் முதன்முதலின் சிரமுண்டிதத்தின் மாட்சியை ஒருவாறு சுருக்கமாக வரைந்து முடித்தே பின்னர் கவனிப்போம். அஃதாவது (சிரமுண்டிதத்தின் மூல காரணத்தைப்பற்றி) பலர் பலவித அபிப்பிராயப்படுகிறார்கள். அஃதொருபக்கம்இருக்கட்டும். ஈங்கு பொதுவாகக் கவனிக்குமிடத்து இது விஷயத்தைப்பற்றி ஆழ்ந்து யோசிக்கவேண்டியதாய் ஒன்றுந்தோற்றவில்லை சாதாரண எவர்களுக்கும் எளிதில் விளங்கக்கூடியதாகத்தான் இருக்கிறது. அஃது எங்ஙனமெனின்? நமது இந்து தேயத்திலுள்ள ஒவ்வொரு ஆசாரசீலங்களும் மத சம்பந்தத்தை ஒட்டியதாகவே இருக்கும். அதினும் நமது மகா சமூகம் எந்தக்காலத்தும் நமது சைவ சமயத்துப் பெரும்பற்றுடையதென்பதை எவர்களும் மறுக்கமுடியாத வுண்மையல்லவா? நமது சைவ சமயத்து முதன்மையான நான்கு ஆச்சிரமங்களினும், சன்னியாசியாச்சிரமமே மிக்கச் சிறந்ததாமென்ப

தை எவர்கள்தான் மறுக்கக்கூடும்? அச்சன்னியாசி ஆச்சிரமத்தார்க்குரிய இலக்கணங்களில், சிரமுண்டிதம் முதலாக சர்வாங்கவபனமே எற்றானுஞ் சிறந்ததென்பதை சாதாரணச் சிறுவர் சிறுமி முதற்கொண்டு எத்தகையப் பெரியாரும் ஒப்பத்தகுந்த ஒரு மேலான விஷயம் அல்லவா? நமது மகா சமுகத்து முன்னையப்பெரியார் நியமித்திருக்கும் ஒவ்வொரு விதமான "லௌகிக" வான்முறைச் சட்டங்களையும் சிறிது ஆராய்ந்து சீர்தூக்கிப்பார்க்கப் புகுவமேல் நமது மகா சமுகத்துக்கு அரண்களாய் நிற்கும் ஒவ்வொரு வான்முறைகளும் மத சம்பந்தத்தை ஒட்டியதாகவே காணப்பெறும். மிகவும் பெரிதான நமது பரத கண்டத்துள் உடைத்தான எந்தப் பகுதியாருக்காவது சன்னியாசி ஆச்சிரமத்தார் நமது மகா சமுகத்துக்கு ஆசிரியன்மார்களாயிருத்தலைப்போன்று ஆசிரியன்மார்களாயிருத்தலை நாம் கண்டிருக்கிறோமா? நமதுமுன்னையப்பெரியார் தங்கள்தங்களின் பான்மணமாறுப் பாலர்முதலாய மனைவி மக்களோடுங்கூடச் சுற்றத்தார் ஈறாக தங்களின் வருணத்தைச் சார்ந்த எல்லாச்சகோதரசகோதரிகளும் சன்னியாசிகளாவதற்குரிய விருப்பமில்லாதவர்களாயின் முற்றத்துறந்த முனிவர்களின்பால் உபதேசம்பெற்றுக்கொள்ளவும் விரும்புவார்களோ? வரையறுத்துகூறுவதற்கு இயலாத நெடுங்காலத்துக்குமுன்னரே இருந்து நமது மகாசமுகம் எற்றானுஞ்சிறந்து, பேருணிறைந்து முற்றத்துறந்த முனிவர்களே ஆசிரியன்மார்களாய் உபதேசிக்கப்பெற்றுவருகிறதென்பதே ஒரு பெரிய சாட்சியமன்றோ? மேலும், அவ்வாசிரியன்மார்களால் உபதேசிக்கப்பெறும் "மகாமந்திரத்தைப்" பற்றி சிறிது ஊன்றிநோக்கிக் கவனிக்கப்புகுந்து வியாக்கியானம் செய்யப்புகுந்தால் சன்னியாசிக்கும், கிரகஸ்தனுக்கும் உரித்தான இருவிதப்பொருள்களையும் எவ்விதச் சந்தேகவிபரீதங்களும்ஒழிய மிகத்தெளிவாகவிளங்கப் போதிப்பதொன்றேயாகும் ஆனால் அதனைப்பற்றி வெளிப்படையாக விரித்துக்கூறும் சுதந்தரம் எமக்கில்லையாகலின் விடுத்தேம். மேலும், நமது மகாசமுகத்தைச் சார்ந்த ஒவ்வொருநகரங்களினும் இல்லறதருமத்தோடுகூடிய சன்னியாசிகளான உத்தமஞானிகள் பலிருந்துவருகிறார்களென்ப

தாகும் இதற்கு நல்லதோர் சாட்சியமன்றோ? ஈண்டுஞ்சிறிது கவனிக்கப்புகுந்தால் மிகுதியுஞ் சிறப்பான ஒரு பெரிய காரணம் ஒன்றுங்காணப்பெறுகிறது. அஃதாவது, நமது வகுப்பாரைப் போன்று, அநேகவகுப்பார்கள் நமது சைவசமயத்துக்கு உரித்தானவர்களாய் காணப்படினும், எல்லாம்வல்ல இறைவனின் திருவருட்குமாரனை "தண்டாயுதபாணி" நமது வருணத்தார்க்கு குலதெய்வமாய் நம்முன்னிலையிலும், நாம் கொண்டுநடாத்தும் எவ்விதத்தொழில்களாதி முன்னிலையிலும் முன்னிற்பது போன்று ஏனைய எந்தப்பகுதியாருக்காவது அவர்கள் தங்களின் குலதெய்வமாக அவர்களின் முன்னிலையிலாவது, அவர்கள் கொண்டுநடாத்தும் எவ்விதத்தொழில்களாதி முன்னிலையிலாவது, முன்னிற்பதை கண்டிருக்கிறோமா? கண்டிலமாகலின், அவனும் சிரமுண்டிதத்தோடு கூடினவனாகலின் அவன்தன் திருத்தொண்டர்களாகிய நமதுவகுப்பாருக்கும் அஃது உரித்தாயதென்னலும் மிகப்பொருத்தமேயாகும். "பிரமத்திற்குமேம்பட்டது, சுப்பிரமமல்லவா" அச்சுப்பிரமமேமுண்டாகாரமாயிருத்தலால், அச்சுப்பிரமமே சுப்பிரமணியமாமெனக் காணப்படுகிற எந்தவுலகத்துக்குந் தோற்றப்படுகிறதாகலின் சன்னியாசிகளுக்குச் சிரமுண்டிகமே மிகமேலான சுதந்தரமாகமுடிந்தது. அங்ஙனமாக அச்சுப்பிரமணியமே நமக்குக்குலதெய்வமாக நமது முன்னையப்பெரியார் புண்ணியவசத்தால்வந்தமைந்திருக்கிறதாகலின், சிரமுண்டிதமும் நமதுமரபிற்குப்பூர்வீகச் சுதந்தரமாகமுடிந்தனவாமென்க. ஆனால் இதனையல்லாத வேறு எவ்விதக்காரணங்களும் சிரமுண்டிதத்திற்குப் பொருத்தமாகாது. பொருத்தமாமாறு எதோசிலர் தங்களின் கல்வியறிவாற்கூறியிருப்பினும் அஃது உண்மையுமாகாது யாம் கூறிவருகிற ஒவ்வொரு நியாயங்களும உண்மையென்பதும், உண்மையல்லவென்பதும் நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு பெரியார்க்கும் மிகத்தெளிவாக விளங்கும். நமது மகாசமுகத்துள் தியான யோகத்திலமர்ந்த எத்துணையோ பெரியார் "மௌனம்சர்வார்த்தசாதகம்" என்பதையுணர்ந்து

"இருந்தார்சிவமாகியெங்குந்தாமாகி
இருந்தார்சிவன்செயலியாவையுநோக்கி
இருந்தார்முக்காலத்தியல்பைக்குறித்தங்கு
இருந்தாரிழவுவந்தெய்தியபேசாமே"

"சோம்பரிருப்பது சுத்தவெளியிலே
சோம்பர்கிடப்பது சுத்தவெளியிலே
சோம்பருணர்வு சுருதிமுடிந்திடம்
சோம்பர்கண்டாரச்சுருதிக்கட்டூக்கமே"

"தூங்கிக்கண்டார்சிவலோகமுந்தம்முள்ளே
தூங்கிக்கண்டார்சிவயோகமுந்தம்முள்ளே
தூங்கிக்கண்டார்சிவபோகமுந்தம்முள்ளே
தூங்கிக்கண்டார்நிலை சொல்வதெவ்வாறே"

"சொல்லெல்லாம்நாதமென்னவும்பெற்றோம்
"சும்மா" இருக்கைதொழிலாகப்பெற்றோம்"

இம்மகாமந்திரங்களைப்போன்று வாளாயிருக்கிறார்கள். அவர்களுக்கு "செல்லல் நிகழல், வருங்காலமூன்றினையுஞ்சொல்லும் மௌனத்தொழில்" என்ற எமதரும்பாட்டியின் திருவாக்குப்போன்று முக்காலத்தும்நிகழ்வன ஒருங்கும்மிகச்செவ்வனேவிளங்கும். அவர்களுக்கு நமது ஞாலவாழ்க்கைபொருந்தும் நாடகமாகலின் வேடிக்கை பார்த்துக்கொண்டுதானிருப்பார்களே அல்லாமல் ஒன்றினுந் தலையிட்டுக்கொள்ளமாட்டார்கள். ஆனால், வேடிக்கைபார்ப்பதில் இன்ன, இன்ன "பார்ட்" நல்லாயில்லையே எனக்களங்கமற்ற பளிங்கம்போன்ற அவர்களின் மனக்கண்ணாடியிற் பதிந்ததொன்றே எம்மையோர் "அயன்ராஜபார்ட்" போடும்படி கற்பித்துவிட்டன. மேலும், சந்தாச்செலுத்தி தபால்மூலமாக நமது புத்தகத்தைத் தருவித்து அவர்கள் பார்க்காதொழியினும் நமது புத்தகத்திலுள்ள விஷயங்கள் ஒருங்கும் அவர்களின் அகக்கண்ணாடியில் பதியப்பட்டேயிருக்கும். இங்ஙனமாக சிரமுண்டிதத்தின் மாட்சி அளவு கடந்தனவேயாகும். இதனைப்பற்றி மறுப்புக்கூறுவார் எத்தனை பெரியாராகவிருப்பினும், அவரையுமடக்கி, அவர்தம் கூற்றையுமறுத்து சிரமுண்டிதமே மிக மேலாகச் சிறந்ததென பசுமரத்தாணிபோல் எவர்க்கும் விளங்கத் தெற்றென நிலை நாட்டவுங்கூடும்.

என்னேபோய் ஐயீர்! நீயிர் மிகவும் நல்லீர்போலும்! ஊமையுனிடத்தில் உளறுவாயன் சண்டைப்ரசண்டஞ் செய்ததுபோலன்றோ

காணப்படுகிறது. கேள்வி கேட்பாரில்லையெனின் நீயிர், கூறுவதொருங்குஞ் சட்டமேபோலும்! வேதமேபோலும்! சற்றேபொறும். நும்முடைய மனம்போகிற போக்கிலே அடித்து முழக்கிக்கொண்டுபோகாதிரும். நமது மகா சமூகத்து கிழவர்களுக்குப் பொருத்தமான விஷயங்களாகவே நீயிர்வரைந்துகொண்டுபோனால் அஃது யாவருக்கு நன்மை? எங்களுக்குப் புகழ் வேண்டியதில்லையென்று நான் முன்னொரு முறையும் கூறியிருக்கிறேனல்லவா? நமது இளைய சகோதரர்களுக்கும், நமது மகா சமூகத்துப்பின் சந்ததியார்களுக்கும் பொருத்தமில்லாதொழியின் நும்முடைய புத்தகத்துக்கு எவ்வித மதிப்பும், எவ்விதப் பெருமையும் ஒரு சிறிதளவு கூட ஏற்படமாட்டாது. அக்கிழவர்கள் கண்ணாடி போட்டுக்கொள்ளாமற்கூட நுமது புத்தகத்தை விரிப்பதுமில்லை. எங்களின் வைசிய மகா சமூகத்தை முழு மொட்டையடிக்கும் பழங்கதையை நீயிரும் தூக்கிக்கொண்டீரா? ஆ! ஆ! பேஷ்! மிக நல்லாயிருக்கிறது! கொஞ்சங்கூட பகுத்தறிவில்லாத ஓய் பத்திராதிபரே! ஒரு சிறிதளவுகூட விசுவாசமற்ற ஓய் வெறு மனிதரே! நான் பிடித்த முயலுக்கே மூன்று காலென்னும் ஓய் மூர்க்கரே! காலதருமத்தைக் கருதிப் புத்தகம் வரையத்தெரியாத ஓய் கயவரே! கால தருமத்தின் இயற்கையையும், அதன் வன்மையையும்பற்றி ஒரு சிறிது ஞாபகப்படுத்துவாம் கேண்மின். அஃதாவது,

கால பேதத்தாலுண்டாகும் சீர்திருத்த நாகரீகம், பற்பல உலகவியவகாரங்கள், நடையுடை பாவனை முதலியவைகளுக்குத் தருமம் என்னும் பெயர் வருவானேன்? அவ்வாறு எதற்காக நம் பண்டைக்காலத்தான்றோர்கள் வகுத்துவைத்திருக்கிறார்களென்பதை ஓய் ஐயீர்! கவனித்தீரா? காலங்களுக்கேற்ப நூன்முறைச் சட்டங்களும், நடையுடை பாவனைகளும், இன்னும் ஏனைய பற்பல உலக வியவகாரங்களும், ஒருங்கே மாறுதலடைந்து, எத்தனை தூரங்கடந்த தத்துவ ஞானிகளுங்கூடக்கண்டு அதிசயிக்கத்தக்கவாறு புதிய புதியனவாகத் தோற்றப்படினும், அவைகளுந் தருமவழியேயாமென்பதை எவர்களுந் தெற்றெனத்தெளிதற்பொருட்டேயாம். எந்த யுகம் அல்லது எந்தக்காலத்தை நாம் நல்லனவாகக்கருதப்படுகிறோமோ அல்லது கெட்டனவாகக்கருதப்படு

கிறோமோ? அந்த யுகம் அல்லது அந்தக்காலத்திலுண்டாம், நடையுடை பாவனை முதலிய வியற்கைகளுக்கும், யுகதருமம் என்றுதானே பெயர் வைத்திருந்ததாகக் காணப்படுகிறது. அப்படியாயின் பழைய முறைகண் மாறி, புதிய முறைகளைக்கையாண்டுவந்த உயர்தரமான எந்த மேதாவிகளும் தலைகொண்டிருந்திருப்பார்களென்பது யாங்கணும் விளங்குகிறது. எத்தனை தூரம் யுகதருமங்கள் தலைகீழுங் கான் மேலுமாக மாறுதலடையினும், ஈசனென் பானொருவன், நேற்று, இன்று, நாளை அல்லதாவது மூன்று காலங்களுக்கும், அதனைச்சார்ந்த பற்பல யுகங்களுக்கும், எற்றானும் மாறுதலடையாது, ஒரே தன்மையதாக நடுவு நிலைமையிலேயே நின்று, அந்த, அந்த யுகங்கள் அல்லது அந்த அந்தக் காலங்களிலும், நல்வழக்கம் ஒன்றால் குவலயம் கேடுறாவண்ணம் தம் சங்கற்பத்தை பற்பல வழிகளாலும், நிறைவேற்றிவருகின்றானென்பது அறிஞர்கள் எவரும் தெள்ளிதினுணர்ந்த விஷயமேயாம். இன்னும், ஏகமாயும், அகண்டமாயும், என்றுமாறாத நித்தியமாயும், ஆத்மஸ்வரூபியாயும் விளங்கப்படுகிற நம்முடைய பரசிவப்பெருமான் எற்றேனும் பூரணமாக நிறைந்திருக்கிறானென்பது நிச்சயமேயாயின், காலதருமமாய் விளங்குகிறதும் அவனேயாமென்பதிற் சந்தேகமென்னை?

கால தருமமானது எவ்வாறு நிகழ்கிறதென்பதைக் கவனியுங்கள். நமது பரதகண்டத்துள் பெருந்தகையான எந்த எந்த மேதாவிகளின் தூய்மையான அறிவினிடத்தே புகுந்து வேலை செய்கிறதென்பதையுங் கவனியுங்கள். கால தருமகர்த்தாவென்னுங் கதிரவன் தோற்றப்படுகிற முச்சகங்களுக்கும் ஒருவனே என்பதூஉம், அவன்றன் கிரணங்கள் தோற்றப்படுகிற எந்த ஒவ்வொரு வஸ்துக்கள், அல்லது ஒவ்வொரு பொருள்களின் உள்ளும், புறமும், ஒருங்கே எங்கணும் தோய்ந்துகொண்டிருக்கிறதென்பதூஉம், அறிவாளிகளாயுள்ள ஒவ்வொரு சகோதரர்களும் நன்குணர்ந்த விஷயமேயாம். கால தருமத்தை ஏற்றுக்கொண்டியலும், ஏனைய கண்டங்களையும், அதன் பாற்றோற்றப்படுகிற பலதலைநகரங்களையும், நமது ஏசியா கண்டத்தையும், இதன்பாற் றோற்றப்படுகிற ஒவ்வொரு தலைநகரங்களையும், நமது நாட்டுக்கோட்டை நாடு

நகரங்களையும் மிகச் செவ்வையாகச் சீர்தூக்கிப்பாருங்கள். கால தருமமானது எற்றானும் வஞ்ச நெஞ்சமற்றதாமென்பதை யுணருங்கள். மிகுந்த சீர்சிறப்போடும், அறம், பொருள், இன்பம் வீடு என்னும் நான்குபுருஷார்த்தங்களோடும் பொருந்தி, பற்பல சீர்திருத்தங்களிலும், நானாவிதநாகரீகங்களிலும், முச்சகங்களும் மெச்சத்தகுந்த வியாபார முறைமைகளிலுமளவிலாத் தேர்ச்சியடைந்து காலத்துக்கேற்ப வியலுமாற்றலில் மீசுரமான ஆண்டகையுட்டங்கி வாழ்தற்குரிய தேசாபிமானம், பாஷாபிமானம், மதாபிமானம் ஜனாபிமானம், ஜாதிய ஐக்கிய உணர்ச்சி, பொதுக்காரியத்திலக்கரை, கூட்டுறவு, அடக்கமுள்ள நன்னடக்கை, விடாமுயற்சி, தளர்ச்சியின்மை, மனோதைரியம், அன்பு, தயை, பொறை, ஆண்மை அடைந்தோரைக் காத்தல், இந்தியதேயத்துட்பிறந்த எந்தமனிதரும் நம்மோடுடன் பிறந்த நம் சகோதரரேயாமென்னும் உண்மையுணர்ச்சி, நம் நகரத்தாரெல்லாம் ஏகாங்கமான ஒரே குடும்பமாக வாழ்தல் வேண்டுமென்ற ஞாபகசக்தி, இன்னும் இவைபோன்ற பலவிதமான நற்குணங்களையும் தானே நம்முடைய நாடுநகரங்களிற் கொணர்ந்து பரப்புஞ் சக்தியுள்ளதாமென நினையுங்கள். எற்றானுந் தூக்கமின்றி உயர்தரப்பட்ட எந்த நாகரீகங்களையும், எந்த வினைசக்திகளையும், ஏந்தத்தேவவுலகத்திலே உள்ளனவாக இருப்பினும், ஒருவருடைய வேண்டுகோளின்றித் தானே ஆங்காங்கு சென்று நமக்கு வேண்டுவனவற்றையெல்லாம் ஆராய்ந்து தெளிந்து பொறுக்கியெடுத்து, பெரிது, பெரிதான மூட்டைமூட்டைகளாகக் கட்டிக்கொணர்ந்துநம்முடையநாடுநகரங்களிலே அவிழ்த்துக்கொட்டிப்பரப்பும்ஓர்விதநீராவியந்திரமாமெனநம்புங்கள். காலதருமத்தை எதிர்க்க எவரானும் முடியாதாமென்க. அதனையொட்டி ஒழுகுவதே நமது கடமையாமென்க. எந்தபகுதியார்களாலும், எந்த அரச வகுப்பார்களாலும், எந்தமேதாவிகளாலும் அதனை அடக்கி வைத்துக்கொள்ளமுடியாதாமென்க. தற்காலவகையை ஆய்ந்துநோக்குமிடத்து நம்முடைய கலியுகதருமத்தின் காலக்கிரமமானது, வளர வளர பாரதமாதாவின் புத்திரர்களாகிய நம்மவர்களின் கருத்துக்களும், நடையுடைபாவனைமுதலிய சுகாதாரங்களும், வெறுப்பு விருப்புக்களும், நானாவிதமான கல்வியபிவிருத்தியும், ஒற்றுணர்ச்சி முதலிய ஆசாரச்சீர்திருத்தங்களும், முற்காலத்து நிலைமையைப்

திரும்புகழ் நிலைகள்.

போவிராமல், நாளுக்கு நாள் ஏனைய பகுதிவர்க்கங்களை நேரெப்பப் புதிய, புதியனவான நுண்ணியநாகரீகங்களாயும், தோன்றி வளர்ந்து வருவதே போதியசான்றும். காலதருமத்தின் தன்மையை இற்றென நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும், தெரிந்துகொள்ள வேண்டியதும் ஆவசியகமேயாம். அவ்வாறுதெரிந்து கொண்டாற்றான் இஞ்ஞால வாழ்க்கையானது நமக்கு இன்பத்தைக் கொடுக்குமாம். கடந்த மூன்று யுககாலதருமத்திய நூன்முறைச் சட்டங்களையும், அக்காலத்திய மனிதவியற்கை முதலிய உலக வியற்கைகளையும், அக்காலத்தியவர்களின் அற்புத சக்திகளையும், ஆயுட்பிரமாணங்களையும், அரசியன் முறைகளையும், அவ்வரசர்களின் வல்லுநத் தன்மையையும் இங்ஙனமியலும் கலியுககால தருமத்தின் மேற்கண்ட எல்லா விஷயங்களையும் நன்கு சீர்தூக்கிப் பார்த்தலும்வேண்டும். காலவியற்கை மாறுதல்களைப்பற்றி மிகச்செவ்வையாயுணர்தலும்வேண்டும். அவைகளைப்பற்றி நமது நெஞ்சிடை எற்றும் பயங்கரம் வேண்டாம். காலதருமத்தால் நம்மனதில் பிறக்கவேண்டுமென்று கருதப்படுகிற குறை குணங்களைக் கவனித்தல் வேண்டும். அதனை நாம் எதிர்க்க வேண்டாம், ஒருவாறு கவனிக்குமிடத்து அஃது முடியாததொரு காரியமுமாகும். அதுகொண்டு வந்து பரப்பும் எந்த வியற்கைகளையும், எந்த விஷயங்களையும் நாம் உபயோகப்படுத்துதலே நலம். காலதருமமாகியபுதிய நூன்முறைச் சட்டங்களில் ஆராய்ச்சியோடு புகுங்காற்றடுக்கும், முட்டுச்சுபாவங்களைச் சிதைத்தலும் வேண்டும். கழிந்துபோன மூன்று யுகதர்மகால வர்த்தமானங்களையும், அரச கர்த்தர்கள், வேத கர்த்தர்கள், ஆகம கர்த்தர்கள், இதிகாச கர்த்தர்கள், தர்க்க கர்த்தர்கள், தர்ம கர்த்தர்கள், அற்புத கர்த்தர்கள்; கீர்த்தி கர்த்தர்கள் பாஷா கர்த்தர்கள், ஞான கர்த்தர்கள், வீர கர்த்தர்கள் முதலிய பெருந்தகையாளர்களின் இலக்கணங்களையும், தற்காலத்திய 5000 வருஷத்துக்குள்பட்ட காலவர்த்தமானங்களையும், மேற்படி கர்த்தர்களின் இலக்கணங்களையும், எவர்க்கும் எளிதில் விளங்குமாறு சர்வகலாநிபுணரான ஒருவரையேனும் அல்லது பலரைக்கொண்டு ஒப்பத்தக்கதாயுள்ள நமது செந்தமிழ் நாட்டுச்சரிதம் ஒன்றைத்தயார்செய்து வைத்தலும் வேண்டும்.

ஆம் ஐயா! இத்தகைய காலதருமத்தைப்பற்றி ஒரு சிறிதளவுகூட நீயிர் சிந்திக்காமல் முன்னையப்பெரியார், முன்னையப்பெரியார் என்று வில் அடித்துக்கொண்டு போகிறீர். இந்தக்காலத்திய நிலைமையைப்பற்றி ஈண்டுஞ் சிறிது விவரிக்கப்புகுந்தால் அஃதொருபாடு சாத்தியமாகாது. நமது புத்தகமும் இடம் கொடுக்காது. காலதருமத்தைக் கவனித்துப் பலதேயவர்த்தமானங்களையும், நவீன சக்திகளையும், திருத்தமார்க்கங்களையும், பொது ஜனமனோநிலைகளையும், சமுகமுன்னேற்றத்தையும்தீரத்தெளிந்துதெரிந்தல்லவா ஒரு நூல் நோற்கப் புகுதல்வேண்டும். Home Rule, Home Rule, அஃதாவது "சுய ஆட்சி, சுய ஆட்சி" என இக்காலம்நமது பாதகண்டம் எங்கெங்கு பார்த்தாலும் வெகு ஆட்டபாட்டம், அழகிய கொண்டாட்டமாகவும், மிகு தடபுடலாகவும் காணப்படுகிறதே? அது விஷயத்தில் நீயிரென்னை தலையிட்டுக்கொள்கிறதில்லையோ? மேலும், பூர்வீக கொள்கைகளில் நீயிர் பெரும்பற்றுடையவர் போலுங்காணுகிறது. நமது மரபார் சிகை வைத்துக்கொள்ளவேண்டும் விஷயமாய் நுமக்கேன் நல்ல அபிப்பிராயமில்லையோ? நமதுமரபார் காவிரிப்பூம் பட்டினத்தில் வாசஞ்செய்துகொண்டிருந்தகாலத்தில் சிகைவைத்துக்கொண்டிருந்தார்களென்பதற்குப்போதிய ரிக்கார்டுகள் காணக்கிடக்கிறதல்லவா? சமீபத்தில் முன்னேற்றமடைந்து தற்காலம் குன்றின்மேலெழுந்த செங்கதிரவன் போன்று பிரகாசிக்கும் ஜப்பான் தேயத்தை நீயிர் கண்டிராதொழியினும், அத்தேயச் சரித்திரத்தையாவது படித்துப்பார்த்திருக்கிறீரோ இல்லையோ? பூர்வீகக்கொள்கைகளில் ஒரு சிறிதளவு (அஃதாவது அணுவளவு) கூட விலகியியலுவதற்கு இடங்கொடுக்காத பழைவன்மையோடு கூடிய சீனர்களும், ஜப்பானியர்களும் தாங்கள் மிகு அன்போடும், பக்தி சிரத்தையோடும், பூர்வீகக்கொள்கையாமெனக்வும், அழகாமெனவும் நினைந்து வழக்கத்தில் வைத்துக்கொண்டு வந்த நீட்டமான சிகையை (அஃதாவது நீண்டு வளர்ந்திருந்த உரோமங்களை ஒரேதன்மையதாக ஒவ்வொரு ஆண்மக்களும் Crap (கிராப்) அஃதாவது கத்தரித்துச் செயற்கையமைப்பில் ஒருவித அழகாயிருக்கும்படி மிகுதியும் நாகரீக நிலையம்பெற்ற நமது ஆரியன் வகுப்பாரான மேனாட்டார் பழக்கவழக்கத்

திற் கிணங்கச்செய்து அது விஷயமாய் எவ்வளவு சீக்கிரத்தில் முன்னேற்றமடைந்திருக்கிறார்கள். மேலும், சிறிது கவனிக்கப் புகுந்தால் மேனாட்டு நாகரீகங்கள் இந்நிலவுலகம் முழுதினுமே பரவியிருக்கிற தென்னலும் மிகையாகாது. இஃது பல தேயசஞ்சாரஞ்செய்தார் பலர்க்கும் மிகத்தெளிவாக விளங்கும். மேலும், நமது பாரதகண்டத்தும் சிறிது நினைக்கில் தோட்டி முதற்கொண்டு தொண்டைமான்வரையும் அந்நாகரீகம் மிக அழகாகப் பரவியிருக்கிறதே? காலதருமத்துக்கேற்ற வெளிப்படையான இத்தகைய ஒரு பெரிய திருத்த மார்க்கத்தை கூடியபாகத்தாரல்லாத ஒரு சிறிய பகுதியார் எம்மாதிரி மறுத்து விடக்கூடும்? உலகமே இன்னதெனத் தெரியாத நம்போல்வார் சிலர் பூர்வீகக்கொள்கை, பூர்வீகக் கொள்கை எனத் தப்பட்டை கொட்டத் தயாராய் வெளிக்கிளம்பி ஒரு சிறிதளவுகூட நாணவெட்கமின்றி முன்னோடி வந்து விடுகிறார்கள். அஃது "நூற்றைக்கெடுக்குங் குறுணி" என்பது போன்றும், "முடப்புல் முக்குறுணி தண்ணீரைச்செறுக்கும்" என்பதுபோன்றும், "ஒருகுடம் பாலுக்கு ஒரு துளி விஷம் போதும்" என்பது போன்றும் ஆய்விடுகிறது. குற்றமெனக்கூறல்குற்றமே எனத் தாம் பெரியாரென நினைத்துக்கொண்டிருக்கும் எத்தகையாரும் நினைக்கிறார்களில்லை. ஏனையோரைக்குறித்துப் பிழையெனக்கூறும் ஒருவன் தான் பிழையெனக்கூறுதலே தனக்கொரு பெரிய பிழையாமே எனத்தெளிவானேயாயின் ஆ! ஆ! இஞ்ஞாலம் எத்துணைத் திருத்த முடையதாகக் காணப்பெறும். மேலும், ஆய்ந்து நோக்குமிடத்து இஞ்ஞாலத்தைச் சீர்திருத்தஞ்செய்வதற்காவது, நானாவித நாகரீக மார்க்கங்களைப் பரவச்செய்வதற்காவது, இன்னும் ஏனையபொது நன்மைகளை நிலைநாட்டுவதற்காவது எத்தகைய பெரியாரும், எத்தகைய சிறந்தாரும், எத்தகையமேதாவிகளும் நான், நான் என்று வெறும்பறை கொட்டித்திரியவேண்டும் ஆவசியகமில்லை. முன்னோடிகளாய் நின்று பல பிரசங்கங்கள் செய்யவேண்டுவதுமில்லை. கவனிக்குமிடத்துப் பல பத்திரிகைகள் நடாத்த வேண்டும் ஆவசியகமுங்கூட ஏற்படவுமில்லை. இவைகளுக்குத்தான் அக்கப்போர் மணியமென்று பெயர். சாதாரணமாக சிகையைக்

கத்தறிக்கும் பழக்க வழக்கம் உயர்ந்த நாகரீகமார்க்கமாக இக்காலங் கொண்டாடுவதற்கு உரிய மகோன்னத நிலையில் விளங்குவதற்கு ஆதியாரம்ப முதற்காலத்தில் இக்காரியம், இத்துணை நன்மையையுடையதாக்கும், இத்துணைச்சிறந்த நாகரீகத்தன்மைவாய்ந்ததாக்கும், நிறைந்த சுகாதார முடையதாக்கும், நவீன வனப்பு வாய்ந்ததாக்கும் என எந்தப் பெரியராவது, எந்த மேதாவியாவது, எந்தப் பத்திராதிபராவது, உபந்நியாசம் செய்ததாவது, வியாசம் வரைந்துத் துண்டுப்பத்திரிகைகளாக விளம்பரப்படுத்தியதாவது, பத்திரிகை நடத்தியதாவது உண்டா? யாவருடையபிரயாசையினால் அப்பழக்க வழக்கம் நமது பாரதகண்டத்தும் வந்து வேரூன்றி முளைத்துச் செடி கொடிகளாகிப் படர்ந்து, அழகிய பூம்பிஞ்சுகளாய்க்காய்த்து இக்காலம் நறுங்கனிகளாய் (கொம்பிற் பழுத்த மல்கோவா மாம்பழம்போன்று ஜாதி மத வித்தியாசமென்பது ஒரு சிறிதளவுமின்றி நமது இந்தியதேயம்ஒருங்கும் ஓரே ஜனங்கமாவதற்குறிய அறிகுறியோடும் பெரும்பான்மை ஒவ்வொருவரிடத்தும்) உபயோகப்படுகிறதல்லவா? இம்மாதிரியாகவே ஒவ்வொரு நவீன சக்திகளும், ஒவ்வொரு புதிய நூன்முறைகளும், ஒவ்வொரு திருத்தமார்க்கங்களும் ஒருவருடைய வேண்டுகோளின்றியும், தூண்டுகோளின்றியும், எவ்விதப் பிரஸ்தாபங்களுமின்றிச் சிறிது அறிவு விளக்கமாகிய மனிதக்கூட்டத்தார் வசிக்கும் ஒவ்வொருதேயம், ஒவ்வொரு நாடுநகரம், ஒவ்வொரு பட்டிதொட்டி, கவனிக்குமிடத்து ஒவ்வோரில்லங்களினும் வலிது வலிதாகத்தானே நுழைந்து அடிமைகளாக்கிக்கொள்ளுமென்பதில் ஒரு சிறிதளவும் சந்தேகமின்றாம். மேலும், ஒரு ஜனசமூகத்துப் பெரும்பான்மையோருக்குப் பிரியமாயுள்ள ஒரு விஷயத்தை மறுத்துக் கூறுவான் யாவனேனினும், அவனொரு பெரியமடயனேயல்லவா? இவ்வித மேலான உணர்ச்சியற்ற நம்போன்ற காவோலை,கருக்குமட்டைகளெல்லாம், பத்திரிகைகள் நடத்தவும், உபன்னியாசங்கள் செய்யவும், வியாசங்கள் வரையவும் வெளிக்கிளம்பிவிடுகிறார்கள். ஐயா! நீயிர் மனவருத்தமடையாதிரும். அந்தோ! நுங்களின் அறிவின்மைக்காக நானே மனவருத்தமடைதல் வேண்டும்? என்செய்கிறது. நியாயஞ்சொன்னால் ஆமெனத் தெளிமின். வீண்கொர்வங்கொள்ளன்மின். காலதருமத்தின்கணக்கைநன்றாகக்கணக்கெடுத்துக்காண்மின்.

765 ஸ்ரீ நாட்டுக்கோட்டைவைசிய மகாசமூகத்தின் நறும்புகழ் நிலைகள்.

நாட்டுக்கோட்டை வைசியமென்னும் நம்முடைய மாதாந்த நூலானது எந்தக்காலத்தும் மிக ஒழுங்காக நடந்துவருமாறு கவனித்து எவ்வித அசங்கியமான வார்த்தைகளுமின்றி "குன்றக்கூறன், மிகைபடக்கூறன்" முதலிய பத்துக்குற்றங்களில் நின்றும் நீங்கி, "சுருங்கச்சொல்லல், விளங்கவைத்தல்" முதலிய பத்து அழகோடுங் கூடப்பொருந்தி, "உலகத்தோடொட்டவொழுகல்பலகற்றும், கல்லாரறிவிலாதார்" என்ற தேவர் திருவாக்கையுங்கருதி வரைந்துவம்மின். "நன்றாற்றலுள்ளுந்தவறுண்டு, அவரவர், பண்பறிந்தாற்றாக்கடை" என்ற அமுதவாக்கை நமது ஞாபகத்தில் வைமின். இந்நூலைச் சாதாரணமாக தற்கால நாகரீகந்தங்கிய பெரியார் பலரும் பார்த்துவரல்வேண்டுமேயென நினைமின். எத்தகையாருக்கும் எளிதில் விளங்கக்கூடிய தெளிவான தமிழ் வார்த்தைகளாற் கோமின். நம்முடைய பத்திரிகையின்மீது நமது மகா சமூகத்து பொதுஜனங்களின் மனோநிலை எவ்வாறிருக்கிறதென்பதை மிக நன்றாகத் தெளிந்தே பல நல்ல வியாசங்களை வரையப்புகுமின். எந்தக்காலத்தும் எவ்விதக்கட்சியாருக்கும், எப்பாலவருக்கும், எவ்விதச் சகோதர, சகோதரிகளுக்கும், மாணவன், மாணவிகளுக்கும் தான் மாறுதலடையாதுநின்று ஒவ்வொருவர்களின் அறிவையும் பலகோடி சூரியப்பிரகாசம்போன்று விளங்குவதற்குரிய பல நல்ல மார்க்கங்களையே வரைமின். நமது பத்திரிகைக்கு போஷகராயுள்ளார் எத்தகையப் பெரிய செல்வவந்தர்களாகவிருப்பினும் அவர்களின் தாட்சண்யத்திற்குட்பட்டு நியாயத்துக்கு விரோதமாகவும், பொதுஜனங்களுக்கு விரோதமாகவும், வருங்கால வியற்கைக்கு விரோதமாகவும் எவ்வித விஷயங்களையும் கோட்டமாக வரையப்புகன்மின். என்னுடைய மனோபீஷ்டம்போல் நும்மை நூல்வரையுமாறு இவ்வளவு தூரம் சொல்லுகிறேனென நினையன்மின். மேலும் ஒரு சிறிதளவுகூட நமக்கு ஞாபகமில்லையென்று நினைக்கிறேன். தற்கால நாகரீகத்துக்குத் தக்கபடி உரோமங்களைக் கத்தரித்து செயற்கையமைப்பில் ஒருவித அழகாயிருக்கும்படி செய்துகொள்வதை நமது மகா சமூகமும் ஆமோதிக்கும்படி நீயிரும் ஆமோதித்து ஏன் வரைதல் கூடாது? அதன் மாட்சிமையைப்பற்றி மிக நன்றாக விவரித்து நமது நறும்புகழ் நிலையினும் ஏன் வரைதல் கூ-

டாது? வருங்கால வியற்கையின் அறிகுறியான இவ்விஷயத்தை மறுத்துவிடக்கூடுமா? நமது நாட்டுக்கோட்டை வைசியத்திற்கு சந்தா நேயர்களாயிருப்பவர்களையும், கௌரவ சில போஷகர்களாயிருப்பவர்களையும் கவனித்திருக்கிறீரா? ஸ்ரீமான் வைரவன் செட்டியாரவர்கள், ஸ்ரீமான் பெத்தாச்சி செட்டியாரவர்கள், ஸ்ரீமான் அருணாசலஞ் செட்டியாரவர்கள், ஸ்ரீமான் நடேஷன் செட்டியாரவர்கள், ஸ்ரீமான் சண்முகஞ்செட்டியாரவர்கள், ஸ்ரீமான் நாராயணன் செட்டியாரவர்கள், ஸ்ரீமான் சுவாமிநாதன் செட்டியாரவர்கள், ஸ்ரீமான் ஸ்ரீனிவாசன் செட்டியாரவர்கள், ஸ்ரீமான் கருப்பன் செட்டியாரவர்கள், ஸ்ரீமான் ராமசுவாமி செட்டியாரவர்கள், ஸ்ரீமான் முத்தய்யா செட்டியாரவர்கள், ஸ்ரீமான் வீரப்ப செட்டியாரவர்கள் முதலிய நாகரீகம்வாய்ந்த ஒவ்வொரு பெரியாரும், பெரும்பான்மை ஒவ்வொரு சகோதரர்களுமல்லவா நமது பத்திரிகையை நடக்குமாறு செய்கிறவர்கள். அவர்கள் யாவருமகிராப்செய்துகொண்டவர்களேயல்லவா? பொதுவாக கவனிக்குமிடத்து நிகழ்கால வருங்கால நாகரீகத்தையொட்டி "பழையன கழிதலும், புதியன புகுதலும், வழுவல காலவகையினானே" என்பதற்கிணங்கியும், "எதிரது போற்றல்" என்னும் உத்தியின் பிரகாரமும் நூல் நோற்கவேண்டுவதும் நமது கடமையேயல்லவா? ஐயா! யாம் கூறிவந்ததொருங்கையும் கவனித்து நமது வைசியம் நீடூழி நடந்து நிலைபெறவேண்டுமாற்றையும் தீரத்தெளிந்து புத்தகத்தை நடத்துங்கள். இறைவனும் திருவருள் செய்வான்.

ஆம், தம்பி அழகு வாய்ந்த நுங்களின் திருவடிகளுக்கு அநேக கோடி நமஸ்காரம். நீங்கள் கூறிவந்ததொருங்கும் எவர்களும் ஒப்பத்தக்கதாயுள்ள மிக மேலான நல்ல நியாயங்களேயாகும். நியாயக்கோட்டமென்பது ஒரு சிறிதளவுகூடவின்றி பல நல்ல புத்திமதிகளையே கூறிவந்தீர்கள். அதற்காக என்றைக்கும் மறவாத நன்றியறிதலுடையேமாகவிருக்கிறேம். பிசாசம் பிடித்தான்போன்று வியாசம் வரையப்புகுவான் யாவர்க்கும் அஃதொருங்கும் ஞாபகக்குறிப்புகளேயாகும். எமதிடத்தும் சிற்சில சமயத்து அப்படிப்பட்ட குணங்கள் நிகழப்படுவது வழக்கமாகத்தானிருக்கிறது. தாங்கள் தரையிட்ட சன்னாணிகளே போதுமானது. முன்னையப்

பெரியாரென்றும், பூர்வீகக்கொள்கைகளென்றும் யாம் கூறிவந்ததை வில்லடித்துக்கொண்டுபோவதாயிழித்துச்சொன்னீர்கள். என் செய்கிறது. யாவரைத்தான் நொந்துகொள்கிறது. நுங்கள்போல் காலதருமத்திற்கேற்றவாறு மனோ சக்தியைமாறிக்கொள்ளச்செய்வது எவர்களிடத்தும் சாதாரணமல்ல கவனிக்குமிடத்து,

"அன்னை தந்தையரிருவரும் ஆங்கொருமித்து
என்ன செய்தனர்? நமையுருச்செய்தனர் இறைவன்
தன்னை முன்னிலைப்படுத்தியே யாதலாற்றரணி
அன்னை தந்தையர் குணத்தியலாதியென்றறிமின்"

என்றவாறுபோல் எத்தனையோ ஜென்ம ஜென்மங்களாய் அருமையான தாய் தந்தையர்களின் ஆனந்த சாகரத்தில் நின்றும், நான், நான் என்று கருப்பிடித்துக்கொண்டுவந்த நாதத்தோடு கூடிய பூர்வீக வாசனையாதலால் அப்பற்று திடீரென்று நீங்கேன் என்கிறது. மேலும், தாட்சண்யத்திற்குட்பட்டுச் சிலவியாசங்கள் வரைகிறதாயுங் குறிப்பித்தீர்கள். அவ்விதமாக நமது வைசியம் தொடக்கமுதற்கொண்டு நாளிது காறும் இல்லவே இல்லை இனி மேலும்;நமது சண்முகநாதன் நியாயக்கோட்டமென்னும் நரகிடை எம்மை எவ்விதக்காரணம்பற்றியும் அமிழ்த்திவிடமாட்டான். அது விஷயம்பற்றி நீங்கள் ஒன்றுக்கும் யோசித்தல் வேண்டாம். மேலும், இனி வருங்கால தருமம் நோக்கி நம்முடைய ஆன்மபாதுகாப்புக்காக அழகிய ஒரு சரீரமும்,அச்சரீரத்தில் முதன்மைபெற்ற கண்களின் பாதுகாப்புக்காக இமைகளும் இயற்கையமைப்பிலேயே ஏற்பட்டிருத்தல்போன்று, நமது சிரத்தின் பாதுகாப்புக்காக எல்லாம் வல்ல இறைவன் கிருபையால் முளைத்தெழும் உரோமங்களை முன்னைய நாண்மாதிரி நீட்டமாக வளர்த்து முடிபோட்டுக்கொள்ள விருப்பமில்லையாயினும் க்ஷவரம் செய்துகொள்ளல் வேண்டும் பழக்க வழக்கத்தைக் கட்டாயச் சட்டமாக ஒவ்வொரு ஆண்மக்களும் அஃதாவது நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களும் அங்கீகரித்தே தீரல் வேண்டும். எதிரது போற்றலென்னும் உத்திக்கு இதுவே முதல் அறிகுறியாதல் வேண்டும்.

மேலும், "ஹோம்ரூல்" விஷயமாய் நீயிரென்னை தலையிட்டுக்கொள்வதில்லையோ என்றீர்கள். ஆம் தலையிட்டுக்கொள்வதில்லைதான். அஃதோடு நமது மகாசமூகமும் தலையிட்டுக்கொள்ளக்கூடாதுதான். அஃதோடு நமது மகாசமூகத்தைச்சார்ந்த எந்தச்சங்கங்களினும், எந்தவாசகசாலைகளினும், எந்தப்பெரிய மகா மேதாவியாயிருப்பினும் அதுவிஷயத்தைப்பற்றிப் பகர்ந்து பேசுதலுங்கூடாதுதான். பத்திரிகைகளில் வரையப்புகுதலுங்கூடாதுதான். ஏனெனில்? கதிரவன்உதயமானால் இயற்கையில் வெளிச்சம் எங்கணும் பூரணமாக உண்டாவதுபோல் மாந்தராய்ப்பிறந்தார் ஒவ்வொருவரிடத்தும் சுயாபிமானமும், தேசபக்தியும், உயர்தரக்கல்வியும், பலவிதநாகரீகமும், ஆள்வினையாற்றலும், ஒருமைப்பாடும், சகோதரபான்மையும், வஞ்சமின்மையும், பொறாமையின்மையும், பொறையுடைமையும் விளங்குவதற்குரித்தானபேரறிவாண்மையென்னுங் கதிரவன் உதயமாய்விடுமானால்,எவ்விதக்கலகமும்,எவ்வித அக்கப்போர்மணியமுமின்றி, ஒருவரின் வேண்டுகோளில்லாமலே "ஹோம்ரூல்" கொடி நமது பாரதகண்டத்தும் தானேபரக்குமல்லவா? பின்னிரவு 3, 4. மணிக்கெல்லாம் ஒருவர் இருவர் மட்டும் எழுந்து ஒன்றிரண்டு மெழுகுவர்த்திகளைக் கொளுத்தி நீட்டிக்கொண்டு இதோபாருங்கள் கதிரவன் உதயமாகி நாலைந்து நாழிகைக்குமேலாயிற்றே சகோதரர்காள்! இன்னும் தூங்கன்மின். யாவரும் எழுமின். எல்லீரும் விழிமின் எனத்திரிந்தலைந்து புலம்பிக்கொண்டு நிற்பின் யாங்ஙனமோ ஹோம்ரூல்க்கொடி பரக்கக்காணலாம்? "அறிவுடையார் எல்லாமுடையார் அறிவிலார் என்னுடையரேனுமிலர்" என நமது தேவபெருமான் ஒன்றும் விளங்காமலோவரைந்துவைத்துவிட்டார். உண்மையில் கதிரவன் உதயமாகி ஒன்றிரண்டு நாழிகையானாலே ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் தங்கள்தங்களின் நித்தியவனுட்டான கருமங்களை முடித்துக்கொண்டு தங்கள்தங்களின் சொந்தச்சோலியில் தாங்கள்தாங்களே தலையிட்டுக்கொள்வார்களல்லவா? மேலும், ஆழ்ந்தகருத்தும், எடுத்தகாரியத்தைக் கொண்டுமுடிக்குமாற்றலும்,

"சொல்லுதல்யார்க்குமெளிய அரியவாம்
சொல்லியவண்ணஞ்செயல்"

"பொருள், கருவி, காலம், வினை, இடனொடைந்தும்
இருள்தீரவெண்ணிச்செயல்"

"முடிவும், இடையூறும், முற்றியாங்கெய்தும்
படுபயனும்பார்த்துச்செயல்"

"வினைபகையென்றிரண்டினெச்சம்நினையுங்கால்
தீயெச்சம்போலத்தெறும்"

"வன்கண்குடிகாத்தல்கற்றறிதலாள்வினையோ
டைந்துடன்மாண்டதமைச்சு"

"கருவியும், காலமும், செய்கையும், செய்யும்
அருவினையுமாண்டதமைச்சு".

"ஐயறிவுந்தம்மையடையவொழுகுதல்
எய்துவதெய்தாமைமுற்காத்தல்—வைகலும்
மாறேற்குமுன்னர்நிலையறிதல்இம்மூன்றும்
வீறுசால்பேரமைச்சர்கோள்"

"ஆக்கமுங்கேடுமதனால்வருதலாற்
காத்தோம்பல்சொல்லின்கட்சோர்வு"

என்பதுபோன்ற ஆன்றோர் திருவாக்குகளான மகாமந்திரங்களிலே தேர்ந்தவுணர்ச்சியும் ஒருசிறிதளவுமில்லாத சில கற்றறிமூடக்கயவர்கள் தங்களுடைய வியாசங்களினும், உபன்னியாசங்களினும் இரும்பானது பழுக்கக்காய்ந்துகொண்டிருக்குந் தருணத்திற்றான் நமக்குவேண்டியவண்ணஞ் சம்மட்டியால் மடங்கப்பிடித்தடித்து வளைத்துக்கொள்ளவேண்டுமென வரைந்தும், பேசியும் விடுகிறார்கள். அவ்வார்த்தையானது அறியாமாந்தரின்சரீரத்தையும், மனத்தையும்புண்படுத்திவிடுகிறது. ஒருஇரும்புத்துண்டத்துக்குத் தானேபழுக்கக்காய்ந்துகொண்டிருப்பதற்குரியஒருசக்தியுண்டுமா? ஒருகருமான் வேண்டுமல்லவா? அதற்குரியபல்வகைத்துணைக்கருவிகளும் வேண்டுமல்லவா? எவ்விதக்கருமானால் எவ்விதவஸ்துவை

உண்டாக்கவேண்டுமென்றுஎவ்விதஆலோசனையுடன்பழுக்கக்காய்ச்சப்பட்டதோ அவ்விதக்கருமானாலேயேயல்லவா அங்ஙனம் பழுக்கக்காய்ந்துகொண்டிருக்கும் அவ்விரும்புத்துண்டத்தை வேண்டியவண்ணம் சம்மட்டியாலடித்து வளைத்து நினைத்தவாறு பூர்த்திசெய்தல்வேண்டும்? கருத்தொழில்களில் தேர்ந்த ஒரு கொல்லனால் பழுக்கக்காய்ந்துகொண்டிருக்கும் நெரிப்பு இருப்புத்துண்டத்தை அத்தொழில்களில் ஒருசிறிதளவுகூட பயிர்ச்சியற்ற நம்போல்வார் சம்மட்டி தூக்கியடித்துவளைக்குந்தொழிலை மேற்கொள்வோமானால் அந்தோ! நமது கரங்கள்தான் என்னபாடுபடும்? அவ் அக்கினித்துண்டங்கள் நம் மேற்படின் நாம் எதற்காவோம்? ஒருவாறு அங்ஙனம், எடாத எடுப்பெடுத்து, படாதபாடுபட்டு அதனையடிப்பினும் எந்தவஸ்துவைச் செய்தற்காமென்று வளைப்போம்? எவ்விதவஸ்துக்களையுண்டாக்குவோம்? பழுக்கக்காய்ச்சுகிற கருமான் ஒருவனையும், வஸ்துக்களையுண்டாக்குகிற கருமான் ஒருவனையுமிருக்கலாமா? ஆம், இருக்கலாம். அங்ஙனமானால் அவ்விருகருமான்களும் ஓரிடத்திலல்லவா கலந்து அமைந்திருத்தல்வேண்டும். இன்றேல் பழுக்கக்காய்ச்சிக்கொண்டிருந்தகருமான்நினைத்திருக்கும்நினைப்புகளொருங்கும் அதனையடித்து வளைக்கப்புகும் கருமான் ஒருவனுக்கு அஃது யாங்ஙனம் விளங்கும்? ஆகவே கவனிக்குமிடத்து ஒரு இரும்புத்துண்டத்தைப் பழுக்கக்காய்ச்சப் புகுந்த கருமான் எவனோ அவன் தன்னாலேயே அதனைப்பற்றிய எவ்விதக்காரியாதிகளும் முடிவுபெறவேண்டுமேயல்லாமல் ஏனையவொரு எவருக்கும் அஃது சங்கடத்தையேயுண்டாக்கிவிடும். எவ்விதத்தொழில்களும் பூர்த்தியாகமாட்டாது. நம்மாற்காய்ச்சப்படுமிரும்பு நம்மால் வளைக்கவும்பெறும். அறியாத்தன்மையால், நமது இந்துதேயத்துக்கும், ஜன சமுகங்கட்கும், மாட்சியிற்சிறந்த நமது அரசாங்கத்துக்கும் கேட்டை விளைவிக்கலாமா? மேலும், அரசபக்தியுள்ள ஒரு தேயத்துக்கு அஃது நியாயமும் ஆகுமா? மேலும், தற்சமயம் நமது அரசாங்கத்தார் ஒருசிறிதளவுஞ் சந்தோஷமற்ற பலமான கவலைச்சாகரத்திலே நீந்திக்கொண்டிருக்குந்தருவாயில் நமது தேயத்தும் பொதுஜனங்களின் அமைதியைக்கெடுக்கத்தகுந்தவாறு குட்டிக்கலகங்களை விளைவிக்குங் குறும்பர்களை என்னதான் செய்தலாகாது? இஃதொருங்கும் காலவியற்கையேபோலும்! இறை

வனுக்குத்தான் அற்புதம்! மேலும், நமது அரசாங்கத்தாற்குரிய எவ்வித அல்லல்களும் தீர்ந்து எதாஸ்தானம் அமர்ந்தபின்னரே ஹோம்ரூல் விஷயத்தைப்பற்றிப் பேசுவதுதான் நமது திராவிட மாதாவின் பூர்வீகக்கொள்கையாகும். அதுதான் மிகஉத்தமம். மேலுங்கவனிக்குமிடத்து, நமது மகாசமூகத்துக்கு இயற்கையாகவே பரம்பரையிற்கிடைத்து நமது மகாசமூகத்தார் கையாண்டுவந்த "சுயஆட்சிச்சங்கம்" அஃதாவது நமது "சர்வநகரச்சங்கம்" சுமார் 50, 60, வருஷங்களாகச்சாத்தப்பட்டிருக்கிறதல்லவா? நமது மகாசமூகத்து எவரேனும் எற்றானுஞ்சிறந்த மகா வல்லுநர் ஒருவர் உளராயிருப்பின் மேற்கண்ட நமது சுயஆட்சிச்சங்கத்தைப் பழமைபோல் அனுபவத்துக்குக் கொண்டுவருவதைப்பார்க்கினும் தற்காலம் வீண் அக்கப்போர்மணியமாகவிளங்கும் "ஹோம்ரூல்" விஷயம் என்னை அத்துணைப்பெரியதாகவா முடியும்?

"வருந்தித்தான்கற்றனவோம்பாதுமற்றும்
பரிந்துசிலகற்பான்றொடங்கல்—கருந்தனம்
கைத்தலத்தவுய்த்துச்சொரிந்திட்டரிப்பரித்தாங்
கெய்த்துப்பொருள்செய்திடல்"

என்பதாயன்றோ முடியும். இதனைப்பற்றி நமது மகாசமூகத்தைச்சார்ந்த ஒவ்வொருசகோதர சகோதரிகளும் நினைத்தல் வேண்டும். மேலும், வரையறுத்துக்கூறுவதற்கியலாதஎத்துணையோ நெடுங்காலங்கட்குமுன்னரேயிருந்து நம்முடன்சார்ந்து, நம்முடைய பாரதமாதாவிற்கு முதற்புத்திர, புத்திரிகளைப்போன்றும, நமக்கு மூத்த சகோதர சகோதரிகளைப்போன்றும், நம்முடைய சொந்தப்பாஷையோடு பயின்றும், நம்முடன் மிக அன்னியோன்னியமாய்ப் பழகியும், அன்பானுஞ்சிறந்த நமதுபந்துமித்திரர்களைப் போன்றுஇயன்றும், நாம்கொடுக்கும்பூரிமுதலிய தானதருமங்களைப் பெற்றும், கருமாதிகல்லெடுப்புச்சிரார்த்தமுதலியவைகளிலெல்லாம் நமதிடமிருந்து வருவாய்க்கரிசிபெற்றும், நமது அறக்கூழ்ச்சாலைகளிலெல்லாம் மிக ஆனந்தமாக விலாப்புடைக்கஉண்டுவளர்ந்தும், இன்னும், நம்முடன் எத்துணையோ நேசமாய்நடந்தும் வந்தபிரா

மணர்களும், ஏனைய நமது இந்துதேயமும் ஒரு சிறிதளவுகூட நல்லுணர்ச்சியின்றி "ஹோம்ரூல்" என்ற வார்த்தைமாத்திரத்துக்கே இத்துணைதூரம் போட்டியும், வேறுவேறனத் தடபுடல் பிட்டிங்குகளும்போட்டுக்கூடிக் கூக்குரலிட்டுநமதுகவர்ன்மெண்டுக்குப்பலவிதமாய் மஹஜர்களனுப்பியடித்துப்பிடித்து இழுத்துக்கொண்டு நிற்குமாயின் சாதாரணமாக நமது அரசாங்கத்தார் சுயஆட்சிக்கொடியையே ஒருவிதகருணைகூர்ந்து நமது பாரதமாதாவின் சிரமிசை பரக்கக்காட்டி நாட்டிவிடுவார்களானால் அந்தோ! நமது பாரதகண்டத்து எவ்விதமான கெடுதல்கள் நேரிடுமோ இறைவனுக்குத்தான்தெரியும். மேலும், இப்பொழுது நடக்கும் குழப்பங்கள் இவ் இந்துதேயத்துக்குச் சுயஆட்சிப்பத்திரம் கொடுப்பதற்குரியகாலம் இன்னும் வரவில்லையெயென நமது அரசாங்கத்தார்க்குத்தெரிவிக்கும் ஓர் அறிகுறியேயாகும். இன்னும்வரும்

ஓர் பிரயாணிக்கு, அநேகநமஸ்காரம்.

அன்பார்ந்த ஐயா! எங்களின் மகாசமூகத்தைச்சார்ந்த சண்முகநாதபுரத்து ஸ்ரீ சண்முகவிலாஸ சபையில் மாதாந்தக்கூட்டத்தன்று "ஹோம்ரூல்" விஷயமான பிரசங்கம் ஒன்றைத்தடுத்து அன்றுவெளியான அழைப்புப் பத்திரத்தில் அப்பிரசங்கத்தின் பெயரையும், அப்பிரசங்கஞ்செய்யப்புகுந்தார் பெயரையும் விளம்பரப்படுத்தாமலிருந்ததுபற்றித் தாங்கள் மிகுந்த கவலையோடு ஒரு சிறிது இழிவுசிறப்புக்கொடுத்துவருணித்து வரைந்துள்ள சிற்றுரையொன்றைநாளிதுஐப்பசிமீ 20உ நமதுமித்திரனில்பார்த்தேம். தாங்கள் எங்களின் மகாசமூகத்தைச்சார்ந்தவர்களாயிருப்பின் இது விஷயத்தில் தலையிட்டிருக்கமாட்டீர்கள். ஏனைய ஒருவர் என்பது மிகத்தெளிவாக விளங்குகிறது. தற்சமயம் தாங்கள் யாதுகாரணம் பற்றி பிரயாணியாக இருக்கிறீர்களோ? மேற்கண்ட ஸ்ரீ சண்முகவிலாஸ சபையில் இம்மாதாந்தக் கூட்டத்தன்று என்ன, என்ன பேசிக்கொள்கிறார்கள் என்பதைத்தெரிந்து வருவதற்காக பிரயாணஞ்செய்தீர்களா? அங்ஙனமானால் மேற்கண்ட அச்சபைக்கு எத்துணைமெம்பர்கள் என்பதும், அந்நகரத்து எங்களின் வைசியமகா

சமூகத்தார் எத்தனை புள்ளிகள் வாசஞ்செய்கிறார்கள் என்பதும், மேற்கண்ட விஷயத்தை மறுத்தார் எத்தனைபெயர்கள் என்பதும் நுங்களுக்கு மிக நன்றாகத்தெரியவருமா? அங்ஙனம் தெரிந்திருப்பீர்களானால் "சண்முகநாதபுரம் தனவைசியரின் தைரியம்" என பொதுமகுடம்புனைந்தீர்களே? காரணம் என்னை? ஒருவாறு அங்ககரத்து எங்களின் வைசியமகாசமூகத்தார் ஒருங்குமே கூடி மறுத்திருந்தார்களானால் அவர்கள் ஒருகூட்டத்தாருக்குப்பிரியமற்றவொரு விஷயத்தைப்பற்றி நீங்கள் இத்தனைதூரம் அழுத்திக்கூறுவதற்கு நீங்கள்என்னை எங்கள் சமூகத்தைச்சார்ந்த ஒரு பெரியீரா? இன்றேல் எங்கள் சமூகத்தைச்சார்ந்த ஒரு பெருஞ்செல்வம்வாய்ந்ததலைவரா? இன்றேல்எங்கள் வைசியமித்திரனின் ஆசிரியரா? இன்றேல் ஒருபெரிய பட்டதாரியா? இத்தனைச்சிறப்புவாய்ந்தவர்களாயிருப்பினும், ஒரு சபையாருக்குவிருப்பமில்லாத ஒரு விஷயத்தில் தாங்கள் தலையிட்டுக்கொள்வார்களோ? மேலும், பிரயாணிக்கு இந்த அக்கப்போர்மணியம் எதுக்குவேண்டும்? மேலும், தாங்கள் எங்கள் மகாசமூகத்தைச்சார்ந்தவர்களாயிருப்பின் சுமார் 50, 60. வருஷங்களாகச் சாத்தப்பட்டிருக்கும் நமது சுயஆட்சிச்சங்கம், அஃதாவது நமது சர்வநகரக்கூட்டத்தைப்பற்றி நமது வகுப்பைச்சார்ந்த ஒவ்வொரு நகரத்தும் தெருத்தெருவாக நின்று அதன் பூர்வீகச் சிறப்பையும், அதனாலுறும் நன்மைகளையும், தற்சமயம் அதுகூட்டவேண்டுமுறைகளையும் மிகச் செவ்வையாக எடுத்துக்காட்டிப் போதித்தால் அதனால் நுங்களுக்குறுங்கேடன்னை? ஏனையவொருவராயிருப்பின் நுங்களுக்குரியவேலையைப்பார்த்தாற் போதாதா? இன்றேல் சும்மா குந்திக்கொண்டிருந்தாலாகாதா? எங்களின் மகாசமூகத்தார் தைரியத்தைப்பற்றி நீங்கள்தான் மெச்சிக்கொள்ளல்வேண்டுமோ? மேலும், "நாளையத்தினம் விநோதார்த்தமாய் உத்யோகஸ்தனைப்போல மாறுவேடந்தரித்த எவனேனும் மேற்படியார்களிடத்தில் வந்து நீங்கள் ஓம்ரூலம்பற்றிப் பேசினதாய் சொல்லிக்கொண்டார்களாமே, என்று அதட்டிக்கேட்டால் மேற்படியார்கள் என்னசெய்வார்களோ விளங்கவில்லைஎனக்" கவலைப்பட்டுக்கொண்டீர்கள். அடடா! இக்காலத்

திய நுங்களின் நுட்பமதியை என்னென்று புகழ்வேம்! அது சமயம் நுங்களுக்கு வேண்டுமானால் ஒரு தந்தியைக்கொட்டுகிறோம். கட்டாயமாகத் தாங்கள் வந்து உதவி செய்துதான் தீரல்வேண்டும். "ஓர் பிரயாணி, தேவகோட்டை, ராமநாட் டிஸ்டிரிக்ட்" என தந்தியைத்தட்டினாற்போதுமா? நுங்களுக்குவந்துகிட்டுமா? இன்றேல் சரியானவிலாசத்தைச்சொல்லியனுப்புங்கள் எங்கிருந்து எங்கோ சென்ற ஓ! பிரயாணியவர்களே! நுங்களைப்போன்ற அநேக பிரயாணிகளை நாங்கள் பார்த்திருக்கிறோம். அவர்களைப் பாதுகாத்துமிருக்கிறோம். பிரயாணஞ்செய்யவேண்டுமார்க்கங்கள் பலவற்றைக் காட்டியுங் கொடுத்திருக்கிறோம். மேலும், எங்களின் மகாசமூகத்தின் நற்குணமொன்று எப்படியெனின் எங்களின் அறக்கூழ்ச்சாலை, சாவடி, குருபூசை மடங்களுக்கு எத்தனை கெட்டவர்களாயிருந்தவரினும் அவர்களுக்குங்கூட உண்டிகொடுத்து இரவாயிருப்பின் உறங்குவதற்கும் ஆங்கு இடங்கொடுத்தல் ஒரு சிறந்த மேலான நற்குணமாகும். ஆதலினாற்றான் தாங்கள் ஊர்விட்டு ஊர்செல்லும் ஒரு பிரயாணியென்பதைத்தெரிந்து எங்களின் மித்திரனும் நுங்களுக்கு ஒரு சிறிதளவு இடங்கொடுத்திருக்கிறான். இன்றேல் நுங்கள்போல்வார் சிலருக்கு இடங்கொடுத்திருக்கவே மாட்டான் மேலும், சுயாபிமானம் முதிர்ந்த ஒரு மேதாவி சுயஆட்சி சுயஆட்சி யென்று வெறும்பறை கொட்டாமலும், இராஜத்துரோகமெனச் சிறைச்சாலையிற்புகுதாமலும், ஜனசமூகங்களும் பத்திரிகைகளும் அன்போடு கொண்டாடத்தக்கவனாகவும் நின்று தாம் நினைத்தவாறு பலன்களைக் கொடுக்கத்தகுந்த வைரம்பாய்ந்த நல்லவிதைகளைத் தங்களின் சகோதர சகோதரிகளின் நெஞ்சமென்னும் பூமியில் நன்றாகமுளைக்குமாறுவிதைத்து, முளைத்தபின்னரும் எவ்வித நோய்களும் அணுகி அம்முளைகளையரித்துக்கெடுத்துவிடாமற் பாதுகாத்து வளர்த்துப் பின்னர் அதனாலுறும் பலன்களைத்தாமும், தங்களின் சமூகத்தாரும் எவ்வித நடுக்கமும், அச்சமுமின்றித் துய்க்கச்செய்வானேயல்லாமல், நுங்கள்போற் பேசத்தெரியாமற்பேசி, எழுதத்தெரியாமலெழுதி, பத்திரிகைகளிற் கையொப்பமிடத்தெரியாமற் கையொப்பமிட்டுபின்னர் ஒருசமயம் ஓர்பிரயாணிஎன்ற கையொப்பக்காரரின் உண்மைப் பெ

யர்விசாசங்களை உடன்வரைந்தனுப்புகவென மேலாளிலிருந்து ஒரு ஆர்டர் நமது மித்திரன் ஆபீசுக்கு ஓடிவரின் அதுசமயம், ஓடியொளிக்கத் தலைப்படவுமாட்டான். முன்னமொருமுறை "சோணாசலம்" எனக்கையொப்பமிட்டு ஒருபெரியார் சிலவியாசங்களை வரைந்து நமது மித்திரனையும், அதன் ஆசிரியரையும் இன்றைக்கும் ஞாபகம் இருக்கும்பொருட்டும், என்றைக்கும் மறவாதிருக்கும்பொருட்டும் பலவிதகட்டநட்டங்களுக்குட்படுத்திவிட்டார். ஓ! எமதன்பார்ந்தஓர்பிரயாணியவர்களே! நுங்கள்போற்சில்லோர்தெரியாச் செய்கையால் "ஒருத்தி பிள்ளைப்பெற ஒருவன் மருந்து குடித்தது போலும்" "தென்னைமரத்தில் தேள்கொட்ட பனைமரத்தில் நெறிகட்டியது போலும்" அன்றோ ஆய்விடுகிறது மேலும், எங்களின் ஸ்ரீ சண்முகவிலாஸ சபையார் ஒவ்வொருவரும்.

"எதிரதாக்காக்குமறிவினார்க்கில்லை
அதிரவருவதோர்நோய்" என்பதையும்,

"அறிவுடையாராவதறிவார் அறிவிலார்
அஃதறிகல்லாதவர்" என்பதையும்,

"அஞ்சுவதஞ்சாமைபேதைமை அஞ்சுவது
அஞ்சலறிவார்தொழில்" என்பதையும்,

"சென்றவிடத்தாற்செலவிடாது தீதொரீஇ
நன்றின்பாலுய்ப்பதறிவு" என்பதையும்,

"வெட்டெனவைமெத்தனவைவெல்லாவாம்வேழத்திற்
பட்டுருவுங்கோல்பஞ்சிற்பாயாது—நெட்டிருப்புப்
பாரைக்குநெக்குவிடாப்பாரைபசுமரத்தின்
வேருக்கு நெக்குவிடும்"

என்பதையும், மிகத்தெளிவாகவுணர்ந்து தெரிந்து, மிகச்சாதாரணமாக நின்று நிலைத்து ஒருகாரியத்தைக் கொண்டுமுடிக்கும் பேராற்றலுடையவர்களேளென்பதைநீங்கள்நன்றாகத் தெளியுங்கள். தாங்கள் நமது மித்திரன்மூலமாக வெளிவந்ததுபற்றி நுங்களைப் பொறுத்து மிகைபடக்கூறாது விடுத்தாம். எமதாப்த நண்பரே!

இதன் மேல்வரும் விஷயங்களைச்சிறிது நன்கு கவனியுங்கள். இத்துணைதூரங் கூறினேமென்று, மனவருத்தப் படாதேயுங்கள். நியாயத்தையுணர்ந்து மனமடங்கப் பழகுங்கள். ஒருவர் வேண்டுகோட்கிணங்கி இவர்வரைந்திருக்கிறாரென நினையாதேயுங்கள். நமது சுதேசத்துக்காகத் தன்னலமறுப்போடு பாடுபட்டுவந்தார் பலரையும், வருகிறபலரையும் நுங்களுக்கு நன்றாகத் தெரியுமல்லவா? அவர்களில் "ஸ்ரீமான் கோபாலகிருஷ்ண கோகேல்" என்பவரைப் பற்றியுந்தெரிவீர்களல்லவா? நமது சுதேசத்துக்கு அவர்கள் செய்திருக்கும் ஊழியத்தையும், ஏனைய பலபெரியார் செய்திருக்கும் ஊழியத்தையுஞ் சீர்தூக்கி பார்த்திருக்கிறீர்களா? எவ்விதசம்பந்தம் பற்றியாவது "ஸ்ரீமான், கோகேல்" அவர்கள் நமது சுதேசத்துக்கும், நமது அரசாங்கத்துக்கும், நியாயத்துக்கும் ஒருசிறிதளவும் விரோதமானவரெனப் பெயரேற்றுக் கொண்டதுண்டா? எந்த ஜனசமூகத்தையாவது ஓரெழுத்து ஒருமொழியாலேனும் இழித்துக் கூறியதுண்டா? அவர்கள்தம் சரித்திரத்தை நீங்கள் நன்றாகப் படித்துப் பார்த்திருக்கிறீர்களா? போலீஸ் சம்பந்தமாய் எவருக்காவது பதிற்கூறியதுண்டா? நமது கவர்ண்மெண்டோடு அவர்கள் எத்துணைதூரம் நட்புக்கொண்டவர்களென்பது நுங்களுக்குத் தெரியவருமா? ஏனையபல்லோர் செய்திருக்கும் நன்மைகளினும் ஸ்ரீமான், கோகேல்அவர்கள் செய்திருக்கும் நன்மைகள் எத்துணைதூரஞ் சிறந்து நிறைந்து பெரியவைகளாயிருக்கின்றனவென்பதை நீங்கள் ஆராய்ந்திருக்கிறீர்களா? தேயவூழியத்துக்கென ஒருவர் கங்கணங்கட்டிக்கொண்டால் அவர்களின் உருவத்தை வைத்தன்றோ பூஜித்தல் வேண்டும். "நுணலுந்தன்வாயாற்கெடும்" என்பது போன்று, வீண்பறை கொட்டியகப்பட்டுக் கொள்வதிற் பயன் என்னை? ஆழ்ந்தகருத்தோடு தேயவூழியஞ்செய்யப்புகுந்த ஒருவன் "இருட்டறை" புகுவானேல் அவன் தன் ஆழ்ந்தகருத்தும், பேரறிவாண்மையும் ஏனைய பல சிறியாராலுங்கூட எள்ளப்படுமன்றோ? மேலும், "சுய ஆட்சி" "சுய ஆட்சி" எனப்புலம்பித்திரிவான் ஒருவன், அவன்எதைநினைந்துகொண்டு அங்ஙனம் புலம்புகிறானோ அதற்குபிரதிகூலத்தைத்தான்செய்யுமேதவிர, அப்புலப்பமானது அவன் நினைத்துப் புலம்புகிறதற்கிணங்க அனுகூலத்தைச்செய்துவிடவே

மாட்டாது. ஆகலின், எமதாப்த நண்பரே! தாங்கள்எவ்விதமுகாந்தரங்களைக்கொண்டும் இனி, எங்களின்மித்திரனில்அவ்விதவியாசங்களையும், எங்களின் மகாசமுகத்தைச்சார்ந்த எந்த சகோதர சகோதரிகளுக்கும் ஒருசிறிதளவானமனவருத்தத்தையே எனினும்உண்டுபண்ணக்கூடியஎவ்விதவியாசங்களையும், தாங்கள் வரையாதிருக்க வேண்டுமாய் தங்களின் அழகுவாய்ந்த இரண்டுதிருவடிகளுக்கும் எம்மனப்பூர்வமானவநேகநமஸ்காரங்களைத்தருகிறேம்.மேற்கண்ட விஷயங்களையெடுத்து எந்தச்சங்கங்களினும், எந்த வாசகசாலைகளினும் தாங்கள் பேசாதிருக்க வேண்டுமாயுங்கேட்டுக்கொள்கிறேம். கொடுங்கூற்றுக்களையும், பயனிற்கூற்றுக்களையும், இழிந்த சொற்களையும் விளையாட்டைக்கருதியும் உபயோகப்படுத்தாதேயுங்கள். "ஹோம்ரூல்" விஷயமாய் ஏதேனும் கலவரையுண்டுபண்ணவேண்டுமென்று நினைப்பிருக்குமேல் எங்களின் மகாசமுகத்தின் எல்லைகளைவிட்டு வெளியேறிவிடுங்கள். எங்களின் உறன்முறை மகாசங்கம் அஃதாவது எங்களின் 96 நகரக்கூட்டத்துக்குவேண்டும் அநேக பல நன்மைகளை நமது காருண்ய கவர்ன்மெண்டாரிடம் பெற்றுக்கொள்ளவேண்டியனவாயிருக்கின்றன. அவைகளுக்கு நேர்விரோதத்தை உண்டுபண்ணிவிடாதேயுங்கள். எங்களின் மகாசமுகத்துக்கு ஹோம்ரூல் பேச்சே வேண்டியதில்லை.

"புருஷராய்ஜெனனமெடுத்தபேர் மெய்ஞ்ஞானபோதத்தையறிவதொன்று, பூமியொடுமிக்கதனவானுவதொன்றலது பூவலஞ்செய்வதொன்று, தருமவானென்று, மிகுகீர்த்திவானென்று, நற்சற்குணவிவேகியொன்று, சகலரும்புகழ்கின்றவித்துவானென்றுரணசங்கர்மவீரனென்று, கருணையாலிந்தவகையில்லாதமனிதரைக்காசினியிலேன்படைத்தாய்? கருதுதாயுதாமும்பார்க்கின்றபேர்களிருகண்களுஞ்செய்தவினையோ? மருவுலாவியதுளபமாலையணிமார்பனேமணவாளநாராயணா!மனதிலுறையலர்மேலுமங்கைமணவாளனேவரதவேங்கடாராயனே" இங்ஙனம் தங்கள் நண்பன்.

ப. சோ. ஆண்டியப்பன்,

நகரத்தார் அடிமை. நாட்டுக்கோட்டைவைசியம்.

பாளையங்கோட்டை.

54-வது. அ—ம். 4-வது துறவறவியல்.

"ஒருகணமிருப்பன்றேயவுருவினிலீசன்றான்மற்
றிருகணஞ்செங்கோலோச்சுமிறையவன்பாலிருப்பன்
அருமறையவர்குழாத்துளம்புவீழுளவிருப்பன்
துரியஞானிகளுளத்திற்றூங்குவனிருந்தெப்போதும்"

என்றவாறு, எற்றையுமறத்தல் அற்றமென்றுட்கி, முற்றத்துறந்தார் நற்றவநேஞ்சத்துப், பற்றியாங்குறங்கும் பற்றிலான்றிருவடி, பற்றுகவேமதுளஞ் செற்றத்தோரீஇ, மற்றீண்டுவோரா வானெறியுணர்ந்து, கற்றீண்டுகண்டார்கழல்தொழுதெழுந்து எமதன்பார்ந்த நண்பர்காள்! இங்ஙனம், முறையே அஃதாவது வரிசைக்கிரமமாகத் துறவறதருமத்தைப்பற்றி ஏதோ அடியேமுடைய சிற்றறிவுக்கு எட்டிய ஒருவாறு பாகுபடுத்தி வரையத்தொடங்குவாம். அஃதாவது, முற்கூறப்பட்ட இல்லறதருமத்தின் வழுவாது நடந்து, பேரறிவுடையராய்ப் பிறப்பினையஞ்சி வீடுபேறடைவான்கருதி,

"அறந்தானியற்றுமவனிலுங்கோடியதிகமில்லந்
துறந்தான், அவனிற்சதகோடியுள்ளத்துறவுடையோன்
மறந்தான், அறக்கற்று, அறிவோடிருந்திருவாதனையற்
றிறந்தான்பெருமையையென்சொல்வேன்கச்சியேகம்பனே"

"துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று"

"துறவேயறங்களெவற்றினுக்கும்பெரிதாம், விடையூர்தோன்றனுக்குந், துறவேயுவகைவரச்செய்யும், துறவேயயன்மாலுலகளிக்கும், துறவேயீசனிடத்திருத்தும், எவருமேலாச்சொல்லுவதுந், துறவேயாமென்றெழுந்துநின்றுசொற்றான்சைவத்துருவர்சன்"

"உடலினைப்பேணல்விட்டாரொன்றியசெல்வம்விட்டார்
விடலருஞ்சுற்றம்விட்டார்வேட்கைவேரோடும்விட்டா
ரிடனுடைக்குலமும்விட்டார்யானெனதறவேவிட்டார்
கடனுடைக்கல்விவிட்டார்கற்பனைமுழுதும்விட்டார்"

என்றும்,

"ஊரொடும்பேரும்விட்டாருலகியன்முழுதும்விட்டா
ராரொடுமார்வம்விட்டாரதனினுஞ்செற்றம்விட்டார்
பாரொடும்விண்ணுந்துன்பமெனப்பழுதறவேவிட்டார்
தேரியவெவையும்பொய்த்தேரெனநகைசெய்துவிட்டார்"

"அந்தக்கரணமடங்கத்துறப்பதே
யெந்தத்துறவினுநன்றெந்தாய்பராபரமே"

"நித்திரையிற்செத்தபிணநேருமுடற்கிச்சைவையாச்
சுத்தர்களேநல்லதுறவோர்பராபரமே"

"சொல்லெல்லா நாத மென்னவும் பெற்றோஞ்
சும்மா விருக்கை தொழிலாகப்பெற்றோ
நல்லவ னன்பரு ளுஞ்சேரப் பெற்றோ
நாயனார் தாந்தந்த வாழ்விது பெண்ணே"

"படுக்கை படுதரை யாகவும் பெற்றோம்
பாணியி லேபலி கொள்ளவும் பெற்றோம்
உடுக்கையுங் கோவண மாகவும் பெற்றோம்
ஒன்றுங் குறைநமக் கில்லைகாண் பெண்ணே"

"எல்லாரு நம்மை யிகழ்ந்திடப்பெற்றோம்
மிம்மை மறுமையச்சங்கெடப் பெற்றோ
நல்லான் மலரடி நாஞ்சூடப் பெற்றோ
நாயனார் தாந்தந்த வாழ்விதுபெண்ணே"

"வேண்டாமை யென்னும் விழுச்செல்வம் பெற்றோம்
வேண்ட லெனும்பிணி வேரறப் பெற்றோம்
ஆண்டவனென்றுகு மன்பினைப் பெற்றோம்
ஐயோ விதென்ன தவஞ்சொல்லாய் பெண்ணே"

"எய்ப்பற்ற சீரை யுடுக்கவும் பெற்றோ
மெங்கணு முள்ளானை யென்னெனப்பெற்றோம்
பொய்ப்பத்தி மெய்ப்பத்தியாகவும் பெற்றோம்
புண்ணிய னார்தந்த வாழ்விது பெண்ணே"

"சிவனைவழிபட்டாரெண்ணிலத்தேவர்
அவனைவழிபட்டங்காமாறொன்றில்லை
அவனைவழிபட்டங்காயாறுகாட்டும்
குருவைவழிபடிற்கூடலுமாமே"

"ஆரேயறிவாரடியின்பெருமையை
யாரேயறிவாரங்கவர்நின்றது
வாரேயறிவாருபத்தோடாக்கையை
யாரேயறிவாரடிக்காவலானதே"

"தானேதனக்குப்பகைவனுநட்டானும்
தானேதனக்குமறுமையுமிம்மையும்
தானேதான்செய்தவினைப்பயன்றுய்ப்பானும்
தானேதனக்குத்தலைவனும்ஆமே"

"ஐம்புலனடக்கலானும் அறவினையறிதலானும்
இன்பதுன்பங்களெல்லாம் இயல்பெனவொறுத்தலானும்
செம்பொருளறைதலானுஞ்சிவோகம்பாவித்தலானும்
நம்பனையகத்துணர்ந்தஞானியென்றறியலாமே"

"வேதநாலுணர்தலானும்விதிவழியொழுகலானும்
சூதகந்துறத்தலானுஞ்சுகமயமாதலானும்
பேதமற்றிருக்கையானும்பெரியவர்கூட்டத்தானும்
நாதனையகத்துணர்ந்தஞானியென்றறியலாமே"

"மண்போற் பொறுமை யுடையோரு மதிபோற்சாந்தமுடையோரும், புண்போலுடலைப் புனைந்தோரும் புனல்போலொழுக்கம் பூண்டோரும், கண்போலிரக்க முடையோருங் கனல்போற்புசிக்குங்கதியோரும், விண்போலறிவை யறிந்தோரும் பிறவாரிந்தமேதினிக்கே"

"சாத்திரஞ்சமயம்வேண்டார் தத்துவக்கத்தும்வேண்டார்
கோத்திரங்குலங்கள்வேண்டார் கூறுமால்விரதம்வேண்டார்
மூர்த்திசேவையுமேவேண்டார் முன்னவன்பூசைவேண்டார்
தீர்த்தமும்வேண்டார்ஞான சின்மயமானமேலோர்"

“உம்பர்வாழுலகம்வேண்டா ருலகரசாட்சிவேண்டார்
பொன்புனைமகளிர்வேண்டார் புண்ணியபாவம்வேண்டார்
இன்பொடுதுன்பம்வேண்டாரிறப்பொடுபிறப்பும்வேண்டார்
ஐம்புலப்பகையைவேண்டா ரறிவினையறிந்தமேலோர்”

“தூலத்தனுவுநானல்லேன் சூக்கத்தனுவுநானல்லேன்
மூலத்தனுவுநானல்லேன் மும்மைத்தனுவும்பொய்யன்றோ
ஞாலத்தனுவைநானென்றே நம்பிக்கெட்டேனெடுங்காலம்
சாலத்தெளிந்தேனினிஞானத் தனுவேயெனக்குத்தனுவென்
றே”
“அன்பனைவிட்டுமற்றோ ரவலனைவிரும்பிப்பின்னர்த்
துன்புறுவார்கள்போலச் சுயம்பிரகாசனாரும்
நண்பனைவிட்டுப்பொல்லா ஞாலத்தைவிரும்பிப்பின்னர்த்
துன்புறுவார்களந்தத் துயரினுக்கொழிவுமுண்டோ”

“கானலைநீரென்றுன்னிக் காதலித்திடுவார்போல
ஊனுடனானென்றுன்னி யுணர்வினைப்பிரிந்துநின்றேன்
கானலைநீரன்றென்று கைவிடுவார்கள்போல
ஊனுடனானன்றென்று வுணர்வொடுமுறங்கினேனே”

“மாசறப்படித்தானேனு மயலறத்தெளிந்தானேனும்
ஆசறத்துறந்தானேனு மஞ்செழுத்தறிந்தானேனும்
ஈசன்வேறியான்வேறென்னு மிருமையுங்கழலானாகில்
பாசமுமகல்வதின்றாம் பதித்துவந்தானுமின்றே”

“மாயையேயுடலமாகு மாயையேகரணமாகும்
மாயையேபுவனமாகு மாயையேபோகமாகும்
மாயையேபொறிகளாகு மாயையேபுலன்களாகும்
மாயையேயண்டபிண்ட மியாவையுமாயையாமே”

“காணுறுபுலன்கள்போகக் கரிசறுமனம்போம்போனால்
ஆணவம்போகும்போனா லாருயிர்ப்போதம்போகும்
சேணுறுமொளிக்குமேலாஞ் சிவப்பிரகாசந்தோன்றும்
மாணனேயிதுவேமுத்தி நிலையெனமதித்திடாயே”

“சாக்கிரசொப்பனங்க ளிரண்டையுந்தாண்டிப்போனால்
சூக்கமாஞ்சுழுத்திவந்து தொல்லிருளாகிமூடும்
ஆக்கமுமழிவுமில்லா வறிவினாலதுவும்போனால்
போக்கொடுவரவுமில்லாப் பூரணப்பொருள்வந்தெய்தும்”

“கருப்பமென்னுமக்காரிருட்சிறையினிற்கதுவு
நெருப்பில்வெந்துளநிலைகெடத்தலைதகர்ந்திடவே
பொருப்பினின்றுவீழ்பவனெனப்போந்தமைநினையா
விருப்புநெஞ்சினர்க்கென்னையாமினியியம்புவதே”

“குழவியிலறியாத்துன்பங்குரவராற்குமாரந்துன்பங்
கழிதருகாமநோயாற்களையாம்பருவந்துன்பம்
விழைவுறுபோகஞ்சுட்டிவெறுக்கையைவிரும்பிமேவுந்
தொழிலினாற்றுன்பமந்தத்தொழிலிடையூறாற்றுன்பம்”

“அல்லலாற்செல்வந்துன்பமதினுநல்குரவுதுன்பங்
கல்வியாங்காலந்துன்பங்கற்றிலனாயிற்றுன்ப
மல்லன்மாஞாலந்தன்னில்வலிமிகுமதத்தாற்றுன்ப
மில்லையேல்வலியோர்தம்மாலீடழிவுறலாற்றுன்பம்”

“சிறப்பறுநோயாற்றுன்பஞ்செடிகொண்மூப்பதனாற்றுன்ப
மறப்புறத்துயக்கஞ்செய்யுமரணவேதனையாற்றுன்பம்
பிறப்பவரெக்காலத்தும்பெறுவதுதுன்பமானாற்
துறப்பதேகருமந்துன்பப்பிறவியாந்துயரநீங்க”

“ஞானக்கரும்பின்றெளிவைப்பாகை
நாடற்கரியநலத்தைநந்தாத்
தேனைப்பழச்சுவையாயினானைச்
சித்தம்புகுந்துதித்திக்கவல்ல
கோனைப், பிறப்பறுத்தாண்டுகொண்ட
கூத்தனைநாத்தழும்பேறவாழ்த்தி”

“வையகமெல்லாமுரலதாக
மாமேருவென்னுமுலக்கைநாட்டி

மெய்யெனுமஞ்சனிறையவட்டி
மேதகுதென்னன்பெருந்துறையான்
செய்யத்திருவடிபாடிப்பாடிச்
செம்பொனுலக்கைவலக்கைபற்றி
யையனணித்தில்லைவாணனுக்கே
யாடப்பொற்சுண்ணமிடித்தநாமே"

"தாமேதமக்குச்சுற்றமும்
தாமேதமக்குவிதிவகையும்
யாமார் எமதார் பாசமார்
என்னமாயமிவைபோகக்
கோமான்பண்டைத்தொண்டரொடும்
அவன்றன்குறிப்பேகுறிக்கொண்டு
போமாறமைமின்பொய்நீக்கிப்
புயங்கனாள்வான்பொன்னடிக்கே"

வேதோபநிடதங்களெல்லாவற்றையும் ஒருங்கேஅளக்குந்துணைத்தாம், அருள்பழுத்தொழுகும்பேரின்பக்கனிகளாம், மெய்ஞ்ஞானபோதகற்பனைசத்திகணிறையப்பெற்றதாம், பார்ப்போர்மனத்தைபக்குவப்படுத்தக்கூடியதாம், படிப்போர்மனத்தை பரவசப்படுத்தக்கூடியதாம், கேட்போர் மனத்தை கிருதார்த்தமாக்கக்கூடியதாம், என்னும்பற்பலஆன்றோர் திருமந்திரங்களுக்கிணங்க ஈண்டுகாணப்படும் எவ்விதப்பொருள்களில் நின்றும் அகமும், புறமும் ஒன்றுபோல் நீங்குவதற்குரித்தான முதல் அஸ்திவாரங்களாய் நிற்குஞ்சில நல்லமார்க்கங்களோடு சார்ந்த பல நல்லவியற்கைகளேயாம். ஆகலின் அச்சிலநல்லமார்க்கங்களில் முதன்முதல்நிலையின்மையைப் பற்றிச்சிறிதுகவனிப்போம். அஃதாவது அந்நிலையின்மையை "இளமைநிலையின்மை" "ஆக்கை நிலையின்மை" செல்வ நிலையின்மை" என மூவகையாகப்பிரித்து முதலில் இளமை நிலையின்மையைப் பற்றிஅடுத்த அத்தியாயமாகச் சிறிது விளக்கத்தொடங்குவாம்.

12 OCT 1918

திருச்சிற்றம்பலம்.

Nattukkottai Vaiciyam

நாட்டுக்கோட்டை வைசியம்.

ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

தொகுதி க | பிங்கள௵ கார்த்திகை, மார்கழிமீ | பகுதி ௯, ௰

கடவுள்வணக்கமும், காலவன்மையும்.

"எங்குந்திருமேனி எங்குஞ்சிவசத்தி
எங்குஞ்சிதம்பரம் எங்குந்திருநட்டம்
எங்குஞ்சிவமாயிருத்தலாலெங்கெங்கும்
தங்குஞ்சிவனருட்டன்விளையாட்டதே"

"சிற்பரஞ்சோதிச் சிவானந்தக்கூத்தனைச்
சொற்பதமாமந்தச்சுந்தரக்கூத்தனைப்
பொற்பதிக்கூத்தனைப் பொற்றில்லைக்கூத்தனை
அற்புதக்கூத்தனையாரறிவாரே" (திருமந்திரம்)

ஓ! எமதாப்தநண்பர்காள்! நுங்கள்பால், நீங்களாய் விளங்கும் நுங்களின் பொன்போன்ற மனத்தைப் புலன்கலங்குமாறு பொறிவழிமீஇ மற்றொருவிஷயத்திற்செலுத்தாமல் ஒரு சிறிதளவுகாலம் இதன்மேல்வரும் விஷயத்தில் அமைதியாகத் தாக்குங்கள். மிகுதியுந் தூய்மையான நுங்களின் பேரறிவின்பாற்றாக்கிப் பகுத்துணருங்கள். சிறிது நன்றாக ஆலோசித்துப்பாருங்கள். அநேக நுட்பங்கள் மிக நன்றாயும், வெளிப்படையாயும் விளங்கும். அஃதொருங்கும் மனத்துக்குப் பேரானந்தமாயுமிருக்கும். இந்நூலானது, எல்லாம்வல்ல நமதிறைவன் திருவருட்குமாரரும், நமது குலதெய்வச்சிரேட்டருமான "குமாரகுருபரன்" திருவருட்சத்தியை முன்னிட்டே வரையப்பெறுகிறது. நிலையிலாப்பொருளின்

மேல் அவர்கொண்டு வரையப்பெறுகிறதென நுங்கள் கனவினுங் கூட நினைத்தல்வேண்டாம். மேலும், எற்றானுந்தாழ்ந்த மனிதவியற்கைபோடுகூடிய அடியேமுடைய மனமொழி மெய்களாதி குலன், அருட்டெய்வக்கோள்கை, மேன்மை, கலைபயில்தெளிவு, கட்டுரைவன்மை, நிலம் மலை நிறைகோல் மலர் நிகர்மாட்சி, உலகியலறிவு, ஆகியஉயர்குணமினையவும் ஒருசிறிதளவுகூட பொருந்தாது, மொழிகுணமின்மை, இழிகுணவியல்பு, அழுக்காறு, அவா, வஞ்சம், அச்சமாடல், கழற்குடம் மடற்பனை பருத்திக்குண்டிகை முடத்தெங்கு இவைகளைநிகர்த்தமுரண்கோள்சிந்தை, சினம் ஆதிய கீழ்த்தரவியற்கைகளோடு பூரணமாகப்பொருந்தியுள்ளதே எனினும், விஷயத்தைச்சிறிது அன்போடு படித்துப்பாருங்கள். கூடியசீக்கிரம் நமது வைசியமானது நமதுமகாசமுகத்தைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரசகோதரிகளின், ஒவ்வொரு மாணவர் மாணவிகளின் "அகக்கண்" "முகக்கண்" ளாகிய இரண்டு கண்ணாடிகளிடத்தும் நிலைபெற்று நிற்கிறதென்பதை நீங்கள் தெரிவீர்கள். அப்பொழுதுதான் நமது நாட்டுக்கோட்டைவைசியமென்னும் ஒப்புயர்வற்று, எற்றானும்சிறந்து, பேரருணிறைந்த பூரணசத்தியோடு கூடிய ஒரு பெரிய மகா மந்திர யந்திரமென்பது நுங்கள் ஞாபகத்துக்குவரும். நண்பர்காள்! இங்ஙனம் வரையப்புகுந்த விஷயம் "கடவுள் வணக்கமும், காலவன்மையும்" என்பதே. அதனைப்பற்றிச்சிறிது ஆய்ந்துநோக்கிக்கவனிக்கப்புகுந்த தன்மையில் காலத்தின்வன்மை கடவுளிற்பெரிதே, அடியார்வன்மை யதனினும் பெரிதே என்பதாகக்காணப்பெறுகிறது. அஃதாவது, யாங்ஙனமெனின்? ஆசிரியர் பரிமேலகழர் நமது நாயனார் முதற்குறள் விசேட வுரையில் காணப்பட்ட வுலகத்தைக்கொண்டு காணப்படாத கடவுளுக்கு இருப்பைச்சொல்லவேண்டுமென்று ஆதலின் அஃதே மாதிரியாகக் காணப்பட்டவுலகத்தைக்கொண்டுதான் காணப்படாத காலத்தையும் நிருமாணிக்கவேண்டியதாயிருக்கிறது. இந்நிலவுலகமின்றேல், இக்காலத்தின் வன்மையாதாகமுடியும்? எதன் காரணமாகவெளிவந்து தனது முழுபலத்தை நிலைநாட்டும்? வெளிப்படையாகக்காணப்படாத காலவன்மையானது, வெளிப்படையாகக்காணப்படும் இஞ்ஞாலத்தைக்கவசஞ்செய்துகொண்டிருக்கிறதாமென்க. இக்காலவன்மையின் அபூர்வசக்தியைப்பற்றி வரை

யப்புகுவதென்றால், அஃதொரு ஆதிசேடனாலும் முடியாதவோர் காரியமாகும். இக்காலவன்மையென்னும் ஏகச்சக்கராதிபதியினிடம் இஞ்ஞாலமானது அகப்பட்டுக்கொண்டு படும் கட்டநட்டங்களையும், இன்பதுன்பங்களையுங்குறித்து அந்தோ! ஐயய்யோ! யாவர்தான்என்னசெய்கிறது. இக்கோமகன் ஒருசிறிதளவுகூட சோம்பலற்றவனாயன்றோ காணப்படுகிறான். தான் நினைத்தபடியன்றோ நியாயத்தைச்செலுத்துகிறான் ஆனால் இக்கோமகன் அரசாட்சியில் "ஹோம்ரூல்" முதலிய கட்சிகளொன்றுக்குமிடமில்லைப்போலும். "பார்லிமெண்டு" சபைமுதலியன ஒன்றுகூட இல்லையேபோலும். நியாயா நியாயங்களை ஒருசிறிதளவுகூட ஊகித்துணரவு மாட்டானேபோலும். என்செய்கிறது. எல்லாம்வல்லஇறைவனுங்கூட இக்கோமகனுக்கு அஞ்சப்படுகிறானேபோலும். அடடா! இக்காலவன்மையென்னும் இக்கோமகனின் வன்மையானது எத்துணைச்சிறப்புவாய்ந்தனவாய்க்காணப்படுகிறது. ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டுயுகம் ஏகச்சக்ராதிபதியாயசாண்டுகொண்டிருந்த மாவீரசூரன்முதலிய எத்துணையோ மன்மக்களெல்லாம் பட்டுப்போய்விட்டார்களே! இக்கோமகனென்ன! என்றைக்கும் அழியாவரம்பெற்றவனோ ஆவன்? சிரஞ்சீவிப்பட்டம்பெற்றானையுங் கூடக் காணவில்லையே. இவன் செய்கிற கோட்டம் மிகப்பெரிதாயும், பரிதாபத்திற்கு இடமாயுமன்றோ காணப்படுகிறது. ஏ! இக்காலவன்மையென்னுங் கோமானே நீபிடித்திருக்குங்கோலானது, செங்கோலோ? கொடுங்கோலோ? இன்றேல் வெறுங்கோலோ? நீ! பெரியவனோ? எல்லாம்வல்ல எங்களின் இறைவன் பெரியவனோ? அடே! முட்டாமன்மகனே! "நடுவு நிலைமை" என்பது அரசர்கட்குரிய முதலங்கமல்லவா? அந்தவகையில் நீ! ஒருசிறிதளவு கூட ஞானமற்றவன் போலுமன்றோ காணப்படுகிறாய். காலத்தின் வன்மை கடவுளிற்பெரிதே என யாதுகாரணம்பற்றிக் கூறினேன் நினக்கு அஃதுவிளங்குமா? நின்னால் நடத்தப்பெறுங்கோலையுந் தாங்கி, நின்கொடுமைகளையும் பொறுத்து, நின் அக்கப்போர்மணியங்களையுஞ் சகித்து, சாட்சி மாத்திரையாக எங்கணும் பரிபூரணமாக நிறைந்து, சம்பூரணமான விவேகத்தன்மையோடுகூடத்

தானே புணர்ந்து,எட்பிளவளவுகூடஎற்றந்தாழ்வின்றி கடவுள் வானாவுட்கார்ந்துகொண்டிருத்தலினாற்றான். நீசெய்யும்அக்கப்போர்மணியத்தின் கோடியில்ஒருபாகம்எல்லாம்வல்ல எங்களின் இறைவன் செய்யப்புகுவானேல் நின்சரீரம் சாம்பராயன்றோ நீறிவிடும். நின் வஞ்சகச்செயலும், கொடுங்கோன்மையும், கெர்வமும், அகங்காரமும், பொறாமையும், இன்னும், நின்னைச்சார்ந்துகொண்டிருக்கும் அவைபோன்ற கீழ்த்தர வியற்கைகள் யாவும் கதிரவனைக்கண்ட புன்னுனிப்பனிநீர் போன்று காய்ந்து, காணமற் பறந்துபோய் விட மாட்டாவோ! நீ செய்யும் அக்கப்போர்மணியம்பற்றி நீ கடவுளிற்பெரியானெனப்பட்டாயே தவிர அடோ! கயவனேமற்றில்லை. பொதுவாகக்கவனிக்குமிடத்து நின்பால் நிகழும் தீக்குணங்களையெல்லாம் வேறறத்தொலைத்துவிட்டு பலவிதமான நற்குணங்களோடும் பயின்று, "கற்கக்கசடறக்கற்பவைகற்றபின் நிற்கவதற்குத்தக" என்ற தேவர் திருவாக்குப்போன்று, ஈங்கு தோற்றப்படுகிற மனிதக்கூட்டத்தாருக்கும், ஏனைய இஞ்ஞாலத்திற்கும் பலவித நன்மைகளையுமேசெய்துவந்தால் நினக்கு அதனாலுறுங்கேடென்னை? காலம், காலமென நீயேன்கெட்டபெயரேற்றுக்கொள்கிறாய்? நாளுக்கு நாள் இயற்கைகளைமாற்றவேண்டுமென்ற கோரிக்கை நினக்கென்னவதியந்தருகிறது? அங்ஙனமேன்செய்கிறாய்? சிறிது அறியாப் பெரியார் மனத்தையேன் புண்படுத்துகிறாய்? மிகக்கொடிதும் பயங்கரமுமான, மகாபெரிய யுத்தத்தை எதற்காக இஞ்ஞாலத்தில் விடுத்தாய்? பெரிதுபெரிதான கொடியநோய்களையும், நரைதிரை மூப்புக்களையும், ஏனோ என்மனிதவர்க்கத்தார்பால் அடோ! மடக்கோமகனேவிடுக்கிறாய்? உண்மையாயும், சீக்கிரமாயும், அன்பாயும் ஆதரவாயும், மிகத்தெளிவாயும், வெளிப்படையாயும் கடவுளைக் காட்டப்படும் பல அரியபெரிய மதங்களையெல்லாம் நித்திரைசெய்யக் கிடத்திவிட்டு ஒரு சிறிதளவும் பலன் கொடுக்கமாட்டாத சில போலிமதங்களையேன் மயிர்விரித்துக் கூத்தாடச்செய்கிறாய்? அவைகளுக்கேன் பூரணசுதந்தரத்தைக்கொடுத்திருக்கிறாய்? இஞ்ஞாலத்தைத் தலைகீழுங் கான்மேலுமாக எதற்காகவோ அடிக்கடி மாற்றி வைத்துவிடுகிறாய்? இந்தக்குழப்படிதான் நினக்கு ஆனந்தத்தைத் தருகிறதோ? மேலும், நமது இந்துதேயத்துளுடைத்தான ஒவ்வொரு மனிதக்கூட்டத்தாரையும் மிக நன்றாகச் சீர்திருத்தி ஜாதி

மதவித்தியாசங்களையும் வேறறத்தொலைத்து, பேரறிவாண்மை என்னும்வித்தினையாங்காங்குளங்களனுட் விதைத்துபலனுக்கு வருமாறு ஒரேஜனங்களாகச்செய்யப்புகுந்தநீயே, திராவிடர்கள் வேறென்றும், பிராமணர்கள் வேறென்றும் ஏனோ பிரிக்கத்தலைப்பட்டுவிட்டாய்? அதுவும்நமது சென்னைமாகாணத்துள்மட்டுந்தானோ? அடடா! நின்னுடைய விவேகம் எத்துணைச்சிறப்புவாய்ந்தனவாய்க் காணப்படுகிறது. அந்த நாட்டொடங்கி இந்நாள்வரை எற்றானுஞ்சிறந்து, தோற்றப்படுகிற இஞ்ஞாலம் ஒருங்குமே புகழ்ந்துகொண்டாடப் பெற்றதும், தேவபாஷையெனத்திகழப்பெற்றதும், ஒப்புயர்வற்றதுமான வடமொழிப்பாஷையிற்பிறந்த ஆகமாதிகளெல்லாம் எங்கோ ஒருபக்கந் தூங்கிக்கொண்டிருக்க, ஆகமமென்றபெயரேற்றுக் கொள்வதற்கே ஒரு சிறிதளவுகூட யோக்கியதையற்றதாயும், ஒழுங்கான வான்முறையற்றதாயும், உண்மையிற்கடவுளைக்காட்டுஞ்சக்தியற்றதாயும், மெய்ஞ்ஞானமற்றதாயும், கிருபையற்றதாயும், அருளற்றதாயும், காருண்யமற்றதாயும், நேற்றையத்தினம்பிறந்த எதோ ஒரு சிறியமதத்துக்கு அரசாங்க சுதந்தரத்தை எவ்வாறு கொடுத்தாய்? அங்ஙனம் கொடுத்ததுமன்றி 409 பாஷைகளில் அம்மதத்திற்பிறந்த சில நூன்முறைகளையும், அம்மதச் சரித்திரத்தையும் அச்சிட்டு வுலகமுழுவதிலும் உடைத்தாய பற்பல பாஷைகளும், அவைகளைச்சார்ந்த பற்பல மதங்களும், அவைகளைச்சார்ந்த பற்பல ஆகமங்களும், அவைகளைச்சார்ந்த பல மனிதக்கூட்டங்களும் தங்களின் புகழ் ஒளி மழுங்குமாறு ஆங்காங்கு பிரசித்தப்படுத்துமாறும், ஸ்தாபிக்குமாறும் எவ்வாறுசம்மதித்தாய்? மேலும், பௌத்தமதமே அரசாண்டுகொண்டுவந்த சைனா தேசத்தில் வருஷம் ஒன்றுக்கு 10, 12 லக்ஷம் காப்பிகளும் ஜப்பான்தேசத்தில் 7, 8, 10 லக்ஷம் காப்பிகளும், மகாமேருபருவதத்தையே சிகரமாகக்கொண்ட புண்ணியபூமியான பாரதகண்டமென்னும் நமதுசிவாலயத்தின்கண் 7. 8 லக்ஷம் காப்பிகளும் விலையாகுமாறும் செய்துவிட்டனையே. வன்மையுள், வன்மை இக்காலவன்மையென்னும் ஏ! மன்மகனே ஏ! அதர்மசண்டாளக் கொடியவிடம்போன்ற மாபாதகக்காலமே! நீ, காலனாகமாறியிருத்தலை அருமையானஎம்மனிதக்கூட்டத்தார் ஒரு சிறிதளவுகூடத்தெரிந்துகொள்ளாமலன்றோ விழிக்கிறார்கள். ஏ! காலமே! நின்னைக்காலாலுதைத்த காலன் ஒருவனை நீ

எவன்சொல் மறந்துவிட்டனையோ? அவன் உண்டென்பதையும், இருக்கிறானென்பதையும் நீ எவன்சொல் தெரியாது விழிக்கின்றனையோ? வல்லவனுக்கு வல்லவன் ஒருவன் உளனென்பதெவன் சொல் பொய்மையாமென நினைக்கின்றனையோ? அடடா! நின் கொடுமை எவராலும் எடுத்துரைக்குந் தரத்தனவாய்க்காணவில்லையே. அருமையான இஞ்ஞாலத்தைப் பாழாக்கும் வாந்திபேதியும், மாமாரியம்மனும், நின்பால்வரவில்லையா? எத்தகையதொத்து வியாதிகளும் நின்னைக்கண்டாற் பறந்தோடியாவிடுகிறது? நினக்கொரு நரைதிரைமூப்பில்லையா? நின்னைப்பற்றி எவ்விதமான ஒரு கேள்விகூட கேள்ப்பாரில்லையா? எத்தனையோ அக்கப்போர்மனியங்களுக்கெல்லாம் நான், நான் என்று மேதாவிகள் முன்னோடி வந்துவிடுகிறார்களே! அந்தோ! நினக்கு ஒரு சிறிதளவுகூட கருணையில்லையா? நியாயா நியாயமில்லையா? பூர்வீகக்கொள்கைகளையும், பூர்வீகமதங்களையும், பூர்வீகப்பாஷைகளையும் கொன்னே நாசப்படுத்துகிறாயே. அருமையான சாஸ்திரங்களையும், மதக்கிரந்தங்களையும், ஒழுங்கான ஆகமாதி நூன்முறைச்சட்டங்களையும் எங்கெங்கோ மறைத்துவைத்துவிட்டனையே. மிகவுயர்வான எங்களின் தமிழ்ப்பாஷையின் முன்னேற்றத்தையுங்கெடுக்க முயன்றுவிட்டாயே. ரகர, றகரபேதமும், ழகர, ளகரபேதமும் எழுத்து வாசகமுறைகளும் ஒரு சிறிதளவுகூடச் சரியல்லாத வாக்கியங்கள் நிரம்பிய கிறிஸ்துமதப்புத்தகங்களைக்கொணர்ந்து எங்களின் இந்து தேயச்சகோதர சகோதரிகளின் கரங்களினும், சிறுவர், சிறுமிகளின் கரங்களினும் நிரப்பிவிட்டனையே. ஏற்றந்தாழ்வென்பதை ஒரு சிறிதளவுகூட நினையாமல் ஒருங்கே மட்டந்தட்ட ஆரம்பித்துவிட்டாயே எத்தேயத்தவர்களாலும், நற்றேயமெனப்புகழ்ந்து கொண்டாடப்படுகிற புண்ணிய பூமியான எங்களின் பாரதகண்டத்துக்கதிபதிகளான அமரர், சித்தர், அசுரர், தைத்தியர், கருடர், கின்னரர், நிருதர், கிம்புருடர், காந்தருவர், இயக்கர், விஞ்சையர், பூதர், பசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசியர், போகபூமியர், ஆகிய பதினெண் கூட்டத்தாரையும் எங்கோமறைந்து கொள்ளச்செய்துவிட்டனையே, நாங்கள் எத்தனையோ அருந்த

வர்களாக விளங்கினும் அவர்களைக்காணக் கிடைக்காமற்செய்து விட்டனையே. அவர்களால் எங்களின் புண்ணியபூமிக்குக் கிடைக்கும் நன்மைகளையுங் கெடுத்துவிட்டனையே. மெய்ஞ்ஞானபோதப் பொய்யாமொழிப்புலவர்களையெல்லாம் எங்கோ ஓடியொழிந்துக்கொள்ளச் செய்துவிட்டனையே. தொழிலினாலேற்பட்ட ஏற்றந் தாழ்வை நின்னால் விலக்கிவிடக்கூடுமாயினும், செல்வத்தாற் பெரியர் சிறியரென்பதையும் அடோ! முட்டாக்காலனே நின்னால் விலக்கிவிடக்கூடுமோ? மேலும், சிறிது வூன்றி நோக்கிக் கவனிக்கப் புகுந்தாலும், அச்சமின்றிச்சிலதைப்பேசப்புகுந்தாலும், வஞ்சமின்றிவரையப்புகுந்தாலும், தோற்றப்படுகிற எல்லாவுலகங்களுக்கும், எல்லாமதங்களுக்கும், எல்லாப்பாஷைகளுக்கும், எல்லாமனிதக் கூட்டத்தார்களுக்கும், எல்லாத்தேவவர்க்கத்தார்களுக்கும் கடவுள் ஏகமேயென்பதும், சுவர்க்க, நரகம்ஏகமேயென்பதும், செல்வம், ஒன்றேயென்பதும், மனிதக்கூட்டத்தாரெல்லாம் ஒன்றேயென்பதும், பசிப்பிணியொன்றேயென்பதும், ஆன்மம் ஒன்றேயென்பதும், எத்தனைச்செல்வமுடையவர்களுக்கும், இரவு,பகல்ஒன்றேயென்பதும் ஆகாரம், நித்திரை, சிற்றின்பம் ஒன்றேயென்பதும், ஏ! கொடிய மாபாதகக்காலனே நினக்கு நன்றாக விளங்கியதேயல்லவா? மேற்கண்ட இந்நூன்முறைச்சட்டங்களை ஒரு சிறிதளவுகூட ஏற்றந்தாழ்வின்றித் தோற்றப்படுகிற ஒவ்வொருமனிதச்சகோதர சகோதரிகளிடத்தும், ஒவ்வொரு மன்மக்களிடத்தும், ஒவ்வொரு செல்வந்தர்களிடத்தும், "மனக்குரங்கைக்கட்டிவைத்தாலுங்காட்டும் பல்லை" எனக்காணப்படும் முதுரைக்கிணங்க நிகழும் ஒவ்வொரு மனத்திடையும் புகுத்தி, அரசாங்கமுறையினும் பிரவேசித்து அமுலுக்குக்கொண்டுவந்துவிட நின்னாற்கூடுமோ? உள்ளவர்கள் யாவரும் இல்லாதவர்கள்யாவருக்கும் பாகித்துக்கொடுக்கச்சம்மதித்துவிடுவாரோ? செல்வமுடையவர்களையும், செல்வமற்றவர்களையும், ஓராதனத்திலிருத்திவிடுவாரோ? கல்வியறிவுடையவர்களையும், அஃதல்லாதவர்களையும் ஒன்றாக்கிவிடுவாரோ? நெடுமரம்போலோங்கிவளர்ந்தும் அறிவற்ற ஏ! முழுமுட்டாக்காலனே நின்னுடைய தீக்குணங்கள்யாவும், நின்போன்ற பாமரவர்க்கத்தாரிடம் செல்லுமேதவிர பேரறிவாண்மை நிறைந்துததும்பும் மேதாவிகளிடத்து ஒரு சிறிதளவுகூடச்சென்று விடச்செய்வாரோ? மேலும்,

அளவையிற்குறைந்த சிறிய அணுவாயும், அண்டமாயும், அகண்டமாயும், எங்கணும் நிறைந்து விளங்கும் ஏ! இக்கால வன்மையே மிக வொழுங்காக நீ செய்யக்கடனுக்கிடக்கும் அநேக பல நல்ல விஷயங்களையெல்லாம் மிகச்செவ்வையாக நின்வன்மையாற்செய்து முடிக்கமுடியாமல் மிகக்கொடியதும், கீழ்த்தரமுமான பலவிஷயங்களிலே தலையிட்டுக்கொண்டு இஞ்ஞாலத்தை ஏனோபாழ்படுத்துகிறாய்? வீணாக எமது இந்து தேயத்துள் பெருங்கலகத்தையுமூட்டிவிடுவாய் போலுங்காணுகிறதே. கலகம் பிறந்தாற்றான் நியாயம் பிறக்குமென்பதோ நின்கருத்து? நின்னுடைய இயற்கைக்குணம் இன்னதென்பதை இஞ்ஞாலத்தில் எவர்களும் அறிந்துகொள்ள மாட்டார்களென நின்கனவிலுங்கூட நீ நினைத்தல் வேண்டாம். ஒரு சிறிதளவும் பாவமற்றபுண்ணிய பூமியான எங்களின் பாரத கண்டத்து மெய்ஞ்ஞான முனிவர்களாலே 4-5 ஆயிரம் வருஷங்களுக்குமுன்னரே கண்டு பிடித்துக் கணக்கிட்டுவரைந்து வைத்திருக்கிறார்கள் அஃதாவது தொன்றுதொட்டு உடையதாகிய பெருஞ்செல்வத்தினரும், திருந்தியதொல் குடியான் மாண்டதொடர்ச்சியமைந்தவுயர்தரமனிதக்கூட்டத்தாரும், கல்வியறிவு கேள்விகளால் நிறைந்த மேலோரும் தாழ்ந்த தன்மையுடையாராயும், வறியராயும், வேசையருடைய புத்திரர்களும், கீழ்மக்களும் செல்வராயும், உயர்தரமாக்களாயும், குடையின்கொம்புபோல கீழிடத்திருத்தற்குரிய பொருள் மேலிடத்திருத்தற்குரிய பொருளாகும்படி, கீழ்மையுள்ளது மேன்மையுள்ளதாயும், மேன்மையுள்ளது கீழ்மையுள்ளதாயும் காலவேறுபாட்டாலே இஞ்ஞாலவியற்கைகள் மாறி, மாறிப், பிறழ்ந்து, பிறழ்ந்து இயங்கும் இயல்பினையுடையதே இவ்வுலகம் என்னும் அருங்கருத்துக்களையமைத்துக் கட்டியிருக்கும்,["உடைப்பெருஞ்செல்வருஞ் சான்றோருங்கெட்டுப், புடைப்பெண்டிர்மக்களுங்கீழும் பெருகிக், கடைக்கால் தலைக்கண்ணதாகிக், குடைக்கால் போற்கீழ்மேலாய் நிற்குமுலகம்"]இச்செய்யுளொன்றை ஏ! இக்காலவன்மையே நீ நன்றாகக்கவனித்துப்பார் இதற்குமேம்பட்ட எந்தச்சிறியவோர் செய்கைகளையாவது நீசெய்துவிடக்கூடுமோ? இவ்விதக் கீழ்த்தரத்தன்மைகளாற்றான் நீ கடவுளினும் பெரியையெனப்பட்டாய். இஃது நினக்குநன்றாக ஞாபகமிருக்கட்டும். நின்னுடைய

இலக்கணம் ஒருங்கையுந்தெரிந்து நின்வயப்படாமற்றடுத்து, நின்னில்நின்றுங்கடந்து, எத்துணையோ தூரம் இஞ்ஞாலம் கீழ்மேலும், மேல்கீழுமாக வேறுபடினும், தாங்கள்வேறுபடாமல் காலனாகிய நின்னையும்வென்று, நரைதிரைமூப்புக்கண்முதலியயமகண்டங்கள் ஒன்றுமின்றித் தங்களைத்தாங்களேயுணர்ந்து, அடியார்க்கெளியவன் அம்பலவாணன் என்னும் சிறந்தபெயரினையும்பெற்று, எந்தஞான்றும் இரவுபகலற்றவிடத்தேயிருத்தலினாற்றான்,

பெரிது, பெரிதுபுவனம்பெரிது; புவனமோநான்முகன்படைப்பு; நான்முகனோகரியமாலுந்தியில்வந்தோன், கரியமாலோ அலைகடற்றுயின்றோன்; அலைகடலோகுறுமுனிகையிலடக்கம்; குறுமுனியோ கலசத்திற்பிறந்தோன்; கலசமோபுவியிற்சிறுமண்; புவியோ அரவினுக்கொருதலைப்பாரம்; அரவோஉமையவள்சிறுவிரன்மோதிரம்; உமையவளோ இறைவர்பாகத்தொடுக்கம்; இறைவரோதொண்டருள்ளத்தொடுக்கம்; தொண்டர்தம்பெருமையைச்சொல்லவொண்ணாதே" என அன்பார்ந்தஐய்யா நமது ஔவையம்பிராட்டியாரும்,

சிவனைவழிபட்டாரெண்ணிலாத்தேவர், அவனைவழிபட்டங்காமாறொன்றில்லை, அவனைவழிபட்டங்காமாறுகாட்டுங், குருவைவழிபடிற்கூடலுமாமே" என நமது, தேவர்க்குழாத்துக்குத்திலகம் போன்றிலங்குந்திருமூலரும்,

"சங்கநிதிபதுமநிதியிரண்டுந்தந்து தரணியொடுவானாளத்தருவரேனும் மங்குவாரவர்செல்வம் மதிப்போமல்லேம்மாதேவர்க்கேகாந்தரல்லராயின், அங்கமெல்லாங்குறைந்தழுகுதொழுநோயராய் ஆவுரித்துத்தின்றுழலும்புலயரேனும், கங்கைவார்சடைக்கரந்தார்க்கு அன்பராயின் அவர்கண்டீர் நாம்வணங்குங்கடவுளாரே" என நமது சமயகுரவரும் திருவாய்மலர்ந்தருளினராம் என்க. ஆகலின் கடவுள் வணக்கத்திலும் அடியார்வணக்கமே மேம்பாடுடையதென்பது யாங்கூறாமலே நன்கு விளங்குவதொன்றாகும்.

I. எல்லாம்வல்ல ஏ! இக்காலவன்மையே! இதுகாறும் நாங் கூறிவந்ததினின்றும் நின்னினும்பெரியான் இறைவனென்பதும், அவனினும்பெரியார் அடியாரென்பதும் நினக்கு நன்றாக விளங்குகிறதல்லவா? என்றாலும், அஃதிருக்கட்டும். நின்னுடையதிருவடிகளுக்கு அநேககோடி நமஸ்காரம். ஒரு சிறிதளவும் நீ! மனவரு

த்தப்படாதே. எற்றாலும் பெரிய நின்னுடைய மனமானது அடியேன்மீது மிகச்சாந்தமுடையதாகவிருக்கட்டும். நான் கேட்கும் சிற்சில வரங்களை நீ! நின் அகமகிழ்ச்சையோடும், முகமலர்ச்சியோடும் தந்தருளுவாயாக.

II. அஃதாவது சைவசமயத் திருவடியார்கணிறைந்துவிளங்கும்எங்களின்நாட்டுக்கோட்டைவைசியமகாசமுகத்தைப்பற்றி எத்துணையோ பன்னெடுங்காலங்களுக்கு முன்னரேயிருந்துநீதெரிந்துகொண்டிருக்கிறாயல்லவா? இம்மகாசமுகம் தோன்றிய தொடக்க நாண்முதற்கொண்டு நாளிது காறும் பலசமயக்கலப்பு ஒருசிறிதளவுகூடஏற்படாததென்பதும், எங்களின் சைவசமயம் ஒன்றையேவுரித்தாகப்பெற்றதென்பதும், மிகவும் இனிமையான எங்களின் தமிழ்ப்பாஷையொன்றையேதாய்ப்பாஷையாகக்கொண்டதென்பதும், ஏனைய எந்தவகுப்பாரிடத்தும் அடிமைத்தொழில்புரியும் கீழ்மையோடுகூடாததென்பதும், "சுய ஆட்சிச்சங்கம்" அஃதாவது உறன்முறைமகாசங்கத்தைஞான்றும்உரித்தாகப்பெற்றதென்பதும், இம்மகாசமுகத்தைச்சார்ந்த எத்துணைப்பெரியவோர்வியவகாரமாக இருப்பினும் தங்களையல்லாத ஏனையபிற வகுப்பைச்சார்ந்த ஒருவர்பாற்சென்றுதீர்த்துக்கொள்ள உடன்படாதபெரியவோர்வன்மையுடையதென்பதும்,வாத்தகத்தொழிலேயே முதன்மையாகக்கொண்டதென்பதும், "நகரத்தார்" என்னும், எந்த வாற்றாலும் உயர்தரப்பட்டம் பெற்றிலங்குவதென்பதும், சத்தியவந்தர்களாமென்னும் பெரும்புகழ் படைத்ததாமென்பதும், பேரறச்செயல்களில் ஒருசிறிதளவும் பின்னடையாமற் செய்து முடிக்கும் பேராற்றலுடையதென்பதும், இன்னும் இவைகள் போன்ற அநேகபல நல்லவிஷயங்களையும், மார்க்கங்களையும், இயற்கையிற் பரம்பரையாகவே பெற்றிலங்குவதாமென்பதும் நினக்கு நன்றாகத்தெரிந்திருக்கிறதல்லவா? மேலும், பெருஞ்செல்வப்பேறுடையதென்பதும் நினக்குத்தெரியாததன்று. இத்தகைய நல்ல விஷயங்களையும், பல நல்ல மார்க்கங்களையும், பெருஞ்செல்வங்களையும் பற்றி வளர்க்குந்தன்மையொன்றின் மாத்திரமேயல்லாமல் எத்துணைக் கற்பகோடிகாலங்களை கழியினும் அவைகளைக்குறைக்குந்தன்மையிலாவது, மார்க்கங்களை ஒரு சிறிதளவேனும் மாறுபடுத்துந்தன்மையிலாவது நின் வன்மையானது புகுதாதிருக்கும்படி மிகவும் மன்றாடிக்கேட்டுக்

கொள்கிறேன்.

III. நீ! காலனாகமாறுந்தன்மையை, எங்களின்மகாசமுகம் ஒன்றின்மாத்திரம்கட்டாயமாகநிறுத்திக்கொள்ளத்தான்வேண்டும்.

IV. சாத்தப்பட்டிருக்கும்எங்களின்உறன்முறைச்சுயஆட்சிச் சர்வநகரச்சங்கத்தைக் கூடியசுருக்கில் நீ! திறந்துவைத்து அதனை முறையே நடைபெறச்செய்தல்வேண்டும். அந்தவகையில் எங்களின் மகாசமுகத்தலைவர்களின் மனத்தை நீ! வேற்றுமைப்படுத்தாதிருத்தலும்வேண்டும். அந்தவகைக்காக நீ! பெருந்தயவு கூர்ந்து வேண்டுமென்றே அவர்களின் மனத்திடைபோய் புகுந்து அதற்குரிய ஒவ்வொரு மார்க்கங்களையும் வெகு பரபரப்புடன் முன்னுக்குக்கொண்டுவருதலும்வேண்டும். அங்ஙனமானாற்றான் நின்னுடையவன்மை வன்மையெனப்பெறும்.

V. எந்தமுறைகளைப்பற்றியும்எங்களின்மகாசமுகத்தைப்பல பிரிவுகளாகக் கூடியவிதமான கட்சிகளை நீ! உண்டுபண்ணுதலுங் கூடாது. அதுவிஷயத்தைப்பற்றி நமது மகாசமுகத்தைச்சார்ந்த ஒவ்வொரு சகோதரசகோதரிகளிடத்துஞ் சென்று நல்லவார்த்தைகளைச்சொல்லிவைத்தலும்வேண்டும். எங்களின் மகாசமுகம் பிரிந்துகொள்ளாதிருக்கச் செய்யவேண்டிய வகையில் நீ!ஒரு காவலனாக, இருத்தலும்வேண்டும்.

VI. எங்களின்மகாசமுகத்தைச்சார்ந்தசகோதரசகோதரிகளையும் குழந்தைகளையும் இலக்ஷக்கணக்குகளாகப்பெருகச்செய்தலும் வேண்டும். அந்தவகையில் எங்களின் "வேலங்குடிக்கோவிற்" கொடிவழியார்மீதும் ஞாபகம்வைத்துக்கோடலும்வேண்டும்.

VII. எங்களின்வருணாச்சிரமதருமத்தைச்சார்ந்தஆசாரங்களில் ஒரு சிறிதளவுகூடக் கெட்டுப்போந்தன்மையில் நீ! பிரவேசித்தல் கூடவேகூடாது. திருத்தமார்க்கத்திற்புகுந்தாலும் உயர்தரமார்க்கங்களையே நிலைநாட்டச்செய்தலும்வேண்டும்.

VIII. ஆரியம்,செந்தமிழ், ஆங்கிலம்ஹிந்தியாகியநான்குபாஷைகளாலும் உயர்தரக்கல்வியொருங்கையும்எங்களின்மகாசமுகத்துக்குக் கட்டாயக்கல்வியாக நிலைநாட்டிவிடுதலும்வேண்டும். அஃதுடன் உயர்தரமான வாத்தக கலாசாலையொன்றையுமுறையாக

ஸ்தாபித்துவிடுதலும்வேண்டும். வரத்தகதொழிலேயே நிலைநாட்டிவிடுதலும்வேண்டும்.

IX. எங்களின்மகாசமுகத்தைச்சார்ந்தஎந்தச்சகோதரர்களின் மனத்திடையும், நாம், அன்னியவகுப்பைச்சார்ந்த ஒருவரிடம், அல்லது, ஒருகம்பெனியிடம், எவ்வித முகாந்தரங்களைக்கொண்டும் அடிமைத்தொழிற்புரிதல் எற்றனுங்கூடி இழிந்தஓர்காரியம் எனப்பதிந்துகிடக்கும் வைரத்தன்மையை இனிவருங்காலத்தும் வளர்ந்துவருமாறு செய்தலும்வேண்டும்.

X. எங்களின்மகாசமுகத்தைச்சார்ந்த அறிவானுங்கல்வியானுஞ் செல்வத்தானுஞ்சிறந்ததலைவர்களுக்கு, நாம அடங்கியொழுகுதலே பேரறிவாண்மையாகும் என்பதை எங்களின் மகாசமுகத்தைச் சார்ந்த ஏனைய ஒவ்வொரு சகோதரர்களின் மனத்திடையும் மிக நன்றாகப் பதியச்செய்தலும்வேண்டும். பால்யசகோதரர்களிடத்து அமைதியையும், ஆழ்ந்தகருத்தையும் நிலைநாட்டுதலும்வேண்டும்.

XI. வட்டித்தொழிலேநமதுமகாசமுகத்துக்குளந்தவாற்றானுஞ் சிறந்த செட்டுத்தொழிலாம் என்பதோடும் மிக நேர்மையானகெட்டித்தொழில் என்பதையும் நீ! நன்றாக ஞாபகப்படுத்தலும்வேண்டும். எவ்வகை முகாந்தரங்களைக்கொண்டும் எங்களின் மகாசமுகத்தைவிட்டு அத்தொழிலைநீ! விலக்கிவிடக்கூடாது. அத்தொழிலின் மகத்துவத்தை நீ! நன்றாகத்தெரியச்செய்தலும்வேண்டும்.

XII. ஏ! இக்காலவன்மையே! இன்னுமொருவிஷயமும்நின்னிடம் இரகசியமாகக்கேட்டுக்கொள்கிறேன். இதனை நீ! அவர்களிடஞ் சொல்லவேண்டுமென்பதுகூட இல்லை. நீயாகச்செய்துகொள்ளவேண்டுங்காரியந்தான். அஃதாவது எங்களின் மகாசமுகத்தைச்சார்ந்த பெரிய செல்வவந்தர்களின் குமாரர்களான பால்யசகோதரர்களிடத்து, பிறவருணத்துச் செல்வக்குமாரர்களிடம் நிகழ்ந்துவருகிற அக்கப்போர்மணியங்களையும், கீழ்த்தரச்செயல்களையும் புகுந்துகொள்ளவிடாமற் பாதுகாத்துக்கொள்வதோடும், தொலைநகரங்களையும், வரத்தகத்தொழின்முறைகளையும் மிக நன்றாக அவர்கள்பால், எவ்விதவஞ்சமுமின்றி நீ! ஒப்புக்கொடுத்தலும் வேண்டும்.

XIII நல்ல விஷயங்களையும், நல்லமார்க்கங்களையும், பெருஞ் செல்வங்களையும் எங்களின், மகாசமுகத்துக்குக் கொண்டுவந்து நிரப்புவதில் நீயொரு அடிமைக்காரனாயிருந்தலும் வேண்டும்.

XIV. எங்களின்பூர்வீகக்கொள்கைகளைப் பாதுகாப்பதில் நீயொருகாவலனாகஇருக்கலும்வேண்டும். நின்னுடையகோட்டத்தை ஒருசிறிதளவுகூட ஆங்குகாட்டுதல் கூடவேகூடாது. நின்னுடைய கெட்டவன்மையானது நாளிதுகாறும் எங்களின் மகாசமுகத்துள் பிரவேசியாமல் நின்றதுபோல் இனிமேலும் நீ ஞாபகமாகப் பாதுகாத்துக்கொள்ளலும் வேண்டும். இவைகள்தான் நான் மேலே கேட்டுக்கொண்ட வரங்களாகும்.

XV. மேலும் ஏ! காலவன்மையே! என்னுடையவார்த்தைகளுக்கு மிஞ்சி ஏதேனும் குறும்புசெய்யப்புகுவாயேல் எங்களின் மகாசமுகம் ஒரு சிறிதளவுகூட நின்னை அங்கீகரிக்கவேமாட்டாது. நீ! பின்னர் வெட்கித்தான் போகவேண்டிவரும். சிறிது சுமாராகத்தெரிந்தவளவில் 10,000 வருஷங்களுக்கு முன்னரேயிருந்து எங்களின் மகாசமுகம் ஒரே தன்மையிலியங்கி வருகிறதென்பதை நீ மறந்துவிடாதே. ஏ! இக்காலமே நீ சென்று வருகிறாயா? விஷயம் இவ்வளவுதான். மிகையாகவிரித்துக்கொண்டு போவதினும் பயனில்லை. கவனிக்கின் மேலும், எங்களின் வைசியமும் இடந்தரமாட்டாது. இருக்கட்டும் நீ சென்றுவா. அநேக நமஸ்காரம் நின் நற்றிருவடி நீடுவாழ்க.

XVI காலவன்மைசொல்லும்பதிலுத்தரம்.

ஆம், அப்பா! நின்னைமிகவுயர்தரமான விவேகசாலியென்றல்லோ நினைத்தேன். நீ! பெரியவோர் மடயனாகவன்றோ காணுகிறாய். நீ! கேட்ட வரங்களுக்கு ஓம் என்றுநான் ஒப்புக்கொண்டு பதிலுத்தாந்தருகிறதற்கு முன் நீ! என்னை எப்படியனுப்பமுற்பட்டாய்? அடோ! கிறுவனே! மெத்தப்படித்தவர்களுக்கன்றோ புத்திமட்டாய்ப் போவது. நினக்கேன் அங்ஙனம் ஏற்பட்டது? நீ கேட்ட நல்ல வரங்கள் ஒருங்கையும் எம்மனப்பூர்வமாகத்தந்தேம். தந்தேம். தந்தேம். எந்தக்காலத்தும் நின்னுடைய வைசியமகாசமுகத்துக்கு

எவ்விதத்திங்கும் நிகழாத வண்ணம் நான் மிகநன்ருகப் பாதுகாத்துக்கொள்வேன். இஃது என்சிரமேலாணையாகச் சத்தியம். இது விஷயம்பற்றி நீ யொன்றுக்கும் யோசித்தல் வேண்டாம் மேலும், நின் நாட்டுக்கோட்டை வைசியமகாசமுகத்துள் என்னுடைய சாமர்த்தியம் ஒரு சிறிதளவுகூடச் செல்லமாட்டாது. சிறிது சம்பந்தம் உடையதானவைணவசமயத்தையாவது ஒரு சிறிதளவு கலக்கச்செய்து விடுவோமென்று என்னாற்கூடிய வரைபார்க்கிறேன் சாத்தியமாகவில்லை. என்றாலும், ஒன்றிரண்டு சகோதரிகளைமட்டும் வெளிப்படையாக நாமமிட்டுக்கொள்ளுமாறு என்னுடைய கெடுமனத்தை ஞாபகமின்றிநிலைநாட்டிவிட்டேன். மேலும், நின்போன்று இதற்குமுன் ஒருவரும் என்னைக்கண்டு கேட்டுக்கொள்ளவுமில்லை. அதுகூட நினக்குச் சம்மதமில்லைப்போற்காணுகிறது. அவர்களுடைய மனத்தையுங் கூடியசீக்கிரம் மாற்றிவிடுகிறேன். அச்சமயப்பற்றானது, நின்னுடைய மகாசமுகத்தைச்சார்ந்த ஒவ்வொரு சகோதர சகோதிரிகளின் மனத்திடையும் எழாதவண்ணம் என்னுடைய வன்மையை நிலைநாட்டிவிடுகிறேன். மனத்தில் எழுந்தாலல்லவா வெளிப்படையினும் அஃது காணப்படும். இனி எச்சரிக்கையாக இருக்கிறேன். மேலும், இன்னுமொருவிஷயமும் உளது அஃதாவது, இச்சமுகம் ஒருங்கிற்குமாகக்கூடி நீ கேட்பதுபோன்று இச்சமுகத்தைச்சார்ந்த ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குப் பிரியமான ஒன்றைக்கேட்பின் நான் அதற்குமறுப்புக்கூறவும் முடியாது. வேண்டுமானால் நானாக ஒன்றையும் செய்யக்கூடாமலிருக்கலாகுமே தவிர, ஒருவர் கேட்பனவற்றிற்கு உடன்படாமலிருக்கவும் முடியாது. என்றாலும் எமதாப்த நண்பனே! பெரும்பான்மையாக நினது நாட்டுக்கோட்டை வைசியமகாசமுகத்தாருள் கொடிய மார்க்கங்களை வந்துநுழையவிடாமல் எந்தக்காலக்கிரமத்துந்தடுத்து கொள்கிறேன்.

XVII மேலும்இனிவருங்காலத்து நமதுமனிதவுலகம்படும்பாட்டைச்சிறிது விளங்கச்சொல்லிவிட்டு நான் சென்றுவருகிறேன் அஃதாவது, எவர்களாலும்விக்கிரகங்களை வணங்கப்படமாட்டாது. மனிதக் கூட்டத்தாரொருங்கும் ஒரே ஜாதியாகத்தான் விளங்குவார்கள், எல்லாச்சமயங்களுங்கூடி ஒரே சமயமாகும். கற்பிய

லென்பது கருநாடகமாய்விடும். பெண்மக்களுக்குள் ஆண்மக்களடங்கிவாழ்வார்கள். ஒவ்வொரு மனிதரும ஒவ்வொரு பெரியாராகவே விளங்குவார்கள். கோரமானயுத்தங்கள் அடிக்கடி நேரிடும் உண்டுறங்கித்துஞ்சுவதே மோக்ஷமாக முடியும் ஒருவரை யொருவர் அச்சங்காட்டியடக்கியாள முடியாது. இக்காலம நடைபெறும் வான்முறைகள்யாவும் நேர்மாற்றமாக மாறுதலடையும். பழய நூற்களிலெல்லாம் ஒன்றுமில்லையாக விளங்கும். எல்லாமனிதரும் வறியராய் விளங்குவார். எல்லாமாந்தரும் செல்வராய்த்துலங்குவார். எல்லாருந்தெரிந்தவராகவேகாணுவார். எல்லாருந்தெரியாதவராகவே விளங்குவார். இயற்கையிற் பெரியார் எவருமே இல்லாமற்போவார். ஆளுக்கு ஆள் நாட்டாண்மையாவார்கள். எந்தக்கூட்டத்தும் எல்லாரும் பேசுவார். பட்டிக்காடுகளொருங்கும் பட்டினக்கரைகளாகமாறும். "இராமராண்டாலென்ன, இராவணனாண்டாலென்ன வென்று, நமது இந்தியாவானது இதற்குமுன் அமைதியாக இருந்ததுபோன்று இனிமேலிருக்கமுடியாது அருமையான உயர்தரக்கிரந்தங்களெல்லாம் எரியுண்டுபோகும். இங்லீஷ்ப்பாஷையொன்றுதான் நமது இந்துதேயத்திற்குத் தாய்ப்பாஷையாகவிளங்கும். மேலும், என்னுடைய குணநிசயங்களைப்பற்றி 4, 5. ஆயிர வருஷங்களுக்கு முன்னரே முனிவர்கள் வரைந்துவைத்திருக்கிறார்களெனக்கூறினாய் அதற்கும்முன்னதாக அநேகஞானிகள் பலநூற்களிற்கூறித்தானிருக்கிறார்கள். அந்தநூற்களெல்லாம் காலஅளவையோடு நினக்கு தெரியாதுபோனால் நாலைந்தாயிரம் வருஷங்களென நீ எப்படிக்கணக்கை முடித்துவிடலாம்? அஃது நின்மீதேற்பட்டபெரியவோர் குற்றமுமாகும். மேலும், இந்தக்காலத்தும் என்னுடையவன்மைகளைத்தெரிந்து நாமொருவன்றான்கூறுகிறோம் என நீ நினைந்துகொள்ளல்வேண்டாம்.

XVIII தாய்புத்திசொன்னன்மறுத்திடுங்காலமுயர்தந்தையைச்சீறுகாலஞ்,சற்குருவைநிந்தைசெய்காலமெய்க்கடவுளைச்சற்றுமெண்ணுதகாலம், பேய்தெய்வமென்றுபசரித்திடுங்காலம்புரட்டருக்கேற்றகாலம், பெண்டாட்டிவையினுங்கேட்கின்றகாலநற்பெரியர்சொல்கேளாதகாலம், தேய்வுடன்பெரியவன்சிறுமையுறுகாலமிகுசிறியவன்பெருகுகாலஞ், செருவில்விட்டோடினோர்வரிசைபெறுகாலம்

வசைசெப்புவோர்க்குதவுகாலம், வாய்மதம்பேசிவிடுமனியாயக்காரர்க்குவாய்த்தகலிகாலமையா, பயிலேறிவிளையாடுகுதனைபுல்வயனிருபஙேபவருகுமவேசனே.

இந்தச்செய்யுளொன்றைக்கண்டாயோ? இம்மாதிரி அநேகமெஞ்ஞானிகளுக்கும் எனக்கும் நட்புரிமை பண்டைக்காலந்தொடங்கியே ஏற்பட்டிருந்தான் வருகிறது. மேலும், என்னைப்பற்றியிழித்துக்கூறுதமாந்தர்கள் எவருமே இரார். இதற்தாக நான் ன்னஞ்செய்கிறது. எங்கேனும் ஓடிப்போய்விடலாமா எனநினைத்தாலும் நான் இல்லாதவோர் இடத்தையுங்காணவில்லை மேலும் என்னுடையவலமையானது எவர்களிடத்துச் சாத்தியமாகாதென்பதை நான் கூறப்புகுந்தால் நினக்குப்பேராசிரியரானதேவபெருமானைநோக்கி ஒருவர் எந்தவூர் என்று வினவியதற்கு அவர் "எந்தவூரென்றீர், இருந்தவூர் நீர்கேளீர், அந்தவூர்ச்செய்தியறியீரோ, அந்தவூர், முப்பாழும்பாழாய் முடிவிலொரு சூனியமாய் அப்பாலும்பாழாயறும்" எனப்பதிற்கூறினர். அஃதுபோன்று வெறும்பாழான, (அஃதாவது பஞ்சபூதாதிகள் நாற்றமென்பதே இன்றிச் சூரியசந்திராதியக்கினி நட்சேத்திராதிகள் இயக்கங்கள் ஒரு சிறிதளவுகூட எட்டாத அத்துணைக்கும் மேம்பட்ட) வெட்டவெளியினிடத்தே வீற்றிருக்கும் எவரையும் அல்லாத, ஏனையவர்களும் என்வயப்பட்டுத் துன்புறவேண்டியவர்கள்தான். இதனைமறுக்க எவர்க்குஞ் சாத்தியமாகாது. மேலும், இயற்கையில் சிவஞானயோகச்செல்வர்கள் எவரும் மகாமேருபருவதத்தைவிட்டும், சந்தனப்பொதிகையைவிட்டும் வெளியேறவேமாட்டார்கள். வைதிகமார்க்கத்தைச்சார்ந்த சகல ஆசாரசீலங்களும் மறைந்து ஒழிந்துபோகும். ஞானசாஸ்திரம், வானசாஸ்திரம் யோகசாஸ்திரம், சித்தர்நூல்கள் எவைகளையும் பொய்யாமென்று அறியாத மூட்டாள் ஒருவன் பிரசங்கம்செய்ய அதனை மனிதராய்ப்பிறந்தார் ஒவ்வொருவரும் ஒப்புக்கொள்வார்கள். அங்ஙனமல்லவென்று மறுக்கக்கூடிய பெரியார் ஒருவர், இருவர் உளராயிருப்பினும் நமக்கென்னவெனவாளாக்குந்திக்கொண்டுதானிருப்பார்கள். அடிக்கடி பூமியதிர்ச்சியுண்டாகும். நின்றநின்றவாக்கில் பெரியதேயங்களில் நெருப்புப்

பற்றிக்கொள்ளும். திடீர், திடீரென்று உயிர்ச்சேதங்கள்நேரிடும். மனிதவியற்கைக்கும், மிருகவியற்கைக்கும் வித்தியாசங்காணப்படமாட்டாது. மேனாடுகளொருங்கும் கீழ்நாடுகளாகவும், கீழ்நாடுகளொருங்கும், மேனாடுகளாகவும் மாறுதலடையும். ஒவ்வொருவருமே சுயேச்சையாய் வாழ்தற்குவிரும்புவார்கள். நாளாரம்பத்தில் காணப்படுகிற எழுவகைத்தோற்றமுமே சுயேச்சையாகத்தான்வாழும்.பயனிலாக்கல்வியே,இஞ்ஞாலம்முழுவதிலும்பரவும்.காணவும், கேட்கவும்அதிசயமான அநேகசம்பவங்கள் நடைபெறும். இந்தியாவிலுடைத்தான ஒவ்வொருபஞ்சமர்களும், ஒவ்வோரந்தணராவார்கள். ஒவ்வொருஅந்தணைத்தமர்களும், பிறக்கும்பொழுது பூணநூலோடும், உச்சிக்குடுமியோடுமா பிறந்தோம், இவைகளென்ன அசங்கியமானகொள்கைகளெனநினைந்தும், "ஒட்டியர், மிலேச்சர், ஊணர், சிங்களர், இட்டிடைச்சோனகர், யவனர், சீனத்தர்" முதலியவனைய பற்பல நாட்டினும் நம்போன்ற பார்ப்பாரிலேயே என்பதைநினைந்தும், காலக்கிரமத்தில் ஒவ்வொருவராய் பூணநூலையறுத்தெறிந்துவிடுவார்கள். அவர்களைச்சார்ந்துகொண்டிருக்கும் சகல ஆசாரசீலங்களையுங்கூடியசீக்கிரம் நழுவவிட்டுவிடுவார்கள்.

'மாரிதான்சிலரைவரைந்துபெய்யுமோ? காற்றுஞ்சிலரைநீக்கிவீசுமோ? மானிலஞ்சுமக்கமாட்டேனென்னுமோ? கதிரோன்சிலரைக்காயேனென்னுமோ?வாழ்நான்குசாதிக்குணவுநாட்டிலும்,கீழ்நான்குசாதிக்குணவுகாட்டிலுமோ? திருவும்வறுமையுஞ்செய்தவப்பேறும்சாவதும்வேறிலேத்தரணியோர்க்கே, குலமுமொன்றே, குடியுமொன்றே, இறப்புமொன்றே, பிறப்புமொன்றே, வழிபடுதெய்வமுமொன்றேயாதலால், முன்னோருரைத்தமொழிதவறாமல், எந்நாளாயினுமிரப்பவர்க்கிட்டுப், புலையுங்கொலையுங்களவுந்தவிர்ந்து, நிலைபெறவறத்தினிற்பதையறிந்து, ஆணும்பெண்ணுமல்லதையுணர்ந்து, பேணியுரைப்பதுபிழையெனப்படாது, சிறப்புஞ்சீலமுமல்லது பிறப்புநலந்தருமோபேதையீரே"

இக்கபிலமகரிஷியின் திருவாக்குஇனிமேற்றான்சர்வசாதாரணமாய்ஜனங்களிடத்து அனுபவத்துக்குவரும். ஈங்குதோற்றப்படுகிற நிலவுலகம் எந்தப்பாகங்களினும் உடைத்தாயசிலமுரட்டுத்தேவதைகளுக்குச்செய்யுங் கிரியைகளையும், ஆடு, கோழி, பன்றி,

எருமைக்கடா, முதலிய சிலமிருகங்களை பலியிடுதலையும் அநாகரீகமாமென நினைந்து கூட்டங்கள்கூடி பிரசங்கங்கள்செய்து நிறுத்திவிடுவார்கள். அதற்குப்பதிலாக ஆங்காங்குடைத்தான பூமாதேவியேயொருபெரிய அபாரசத்தியாகக்காணப்படுவாள். அவட்குச்சர்வசாதாரணமாகக் கோடிக்கணக்குக்ளாய் ஆங்காங்குடைத்தான நரர்கள் தாங்கள் தாங்களே அன்போடும், பக்திசிரத்தையோடும், ஆனந்தத்தோடும், வீராவேசத்தோடும், உற்சாகத்தோடும், சுதேயத்துக்குப்பாடுபடுகிறேன், சுதேயத்துக்குப்பாடுபடுகிறேன் என வைராக்கியத்தோடும் தங்கள்தங்களின் சுத்தமான இரத்தமாமிஸாதிகளைத் தங்கள்தங்களின் மனமாரசிந்தச்செய்தும் பலியாவார்கள். நமது வைசியமகாசமுகம் ஒன்றுதவிர ஏனையஇந்தியதேயம்ஒருங்கும் நாளாரம்பத்திற் கிறிஸ்துமதக்கொள்கைகளையே கையாளுவதாகமுடியும். எழுதவும், சொல்லவும், கேட்கவும் அசங்கியமான அநேகக்கீழ்த்தர விஷயங்கள், மிக்கவுயர்தரமான விஷயங்களாக நடைபெறும். இன்னும் விரிக்கிற்பெருகும். எ ஏமதாப்தநண்பனே நான் சென்றுவருகிறேன். எவ்வித மாட்சியினுஞ்சிறந்தநின்னுடைய வைசியமகாசமுகமும், செல்வப்பெருக்குள்ள நமதுஇந்துதேயமும், ஏனைய இஞ்ஞாலமும் நீடூழிவாழ்க. சுபம்.

நமது, இந்தியாவும் அந்தணரும்.

எமதாப்தநண்பர்காள்! நமது, "நாட்டுக்கோட்டைவைசியம்" என்னும் இம்மாதாந்தப்பத்திரிகையில் "நமது இந்தியாவும், அந்தணரும்" என்றவியாசம் ஒன்றுவரவேண்டுவதும் ஆவசியகந்தானோ? நமது மகாசமுகத்துக்குரிய எந்தவிஷயங்களையும் விட்டுவிட்டு, இதனைப்பற்றியெல்லாம் எதற்காகவரைந்துகொண்டிருக்கிறார்? இவரும், அக்கப்போர்மணியத்தில் தலையிட்டுக்கொண்டார்போலும்! என நீங்கள்! ஒருசிறிதளவுகூட நினைத்தல்வேண்டாம். இதன்மேல்வரும் விஷயங்களொருங்கும் நமது மகாசமுகத்தைச்சார்ந்த ஒவ்வொருசகோதரர்களுக்கும் மிக நன்றாகஞாபகத்துக்குவரவேண்டும் ஆவசியகம்உள்ளதே என்பதை நீங்கள் படித்துப்பார்த்ததன்பின்னரே ஒப்புக்கொள்வீர்கள். சாதாரணமாகக் கவனிக்கப்புகுந்தால் நமது சுதேயமும், நமது சுயகண்டமும் அல்லாத எங்கோவோர் பக்கத்தில் யுத்தம்நடக்க அதனாலுண்டாகும் கட்டநட்டங்கள் நம்முடைய மகாசமுகத்தையும் வந்துபாதித்து நிற்குமானால், நம்முடையசுதேயமும், நமக்குத்தாய்நாடுமாகிய இவ் இந்தியதேயத்துக்கு நிகழும் எவ்வித லாபநட்டங்களும், எவ்வித இன்பதுன்பங்களும் நமது மகாசமுகத்துக்கும் பாத்தியதையுடையதேஎன்பதை எவர்கள்தான் மறுக்கமுன்வருவார்கள்.

I. நமதுதாய்நாடாகிய இவ் "இந்தியதேயத்துதாத்தாபாய் நௌரோஜி" ஊன்றிய "சுயஆட்சி" என்னும் கற்பகவித்தானது, தற்காலவரை எத்துணைதூரம், முளைத்துச், செழுமையும், வளப்பமும் அமைந்த சிறுகன்றாகி, அழகியகிளைகளையும் விடுத்து நிற்கிறதென்பது அறிவாளிகளாகிய ஒவ்வொருசகோதரசகோதரிகளுக்கும் மிக விளங்கியதொன்றாகும்.

II. அன்பர்காள்! மேற்கண்ட அக்கற்பக தருவின் இளங்கன்றை மிகவொழுங்கான ஒருபெரிய மகா விருட்சமாக வளர்க்கவேண்டுமென்று நாம் நினைத்தால் முதன்முதலாக அதனிலுண்டாகும் சில வொழுங்கற்ற கிளைக்கிளைகத்தறித்துத் துடைத்துப் பின்னரும் அதில் நின்றும் அக்கிளைகள் வெடிக்காதவண்ணம், வேண்டும் வேலைகளைப் பூர்த்தியாக்கிவிடல் வேண்டும். இன்றேல் மிகப்பருத்து நீண்டு வோங்கி வளரவேண்டும் முறையான அங்கங்கள் குன்றிப்போமென்பது ஒருவர் சொல்லவேண்டுவதில்லை.

III. அவ்வித்தினை ஊன்றிய மகரிஷியோ, அவர்தம் மாணாக்கரோடு கைலையங்கிரிக்குச்சென்றுவிட்டார். அக்கன்றோ கற்பகதருவின் இளங்கன்றாக இருக்கிறது. எவ்வெவர்கள், எம்மாதிரி, எம்மாதிரிக் கிளைகள் வெடிக்கவேண்டுமென்று நினைக்கிறார்களோ அம்மாதிரி, அம்மாதிரிக் கிளைகளை, அவ்விளங்கன்று வெளிக்கிளப்பிவிடுகிறது. கற்பக விருட்சத்தைப் பெற்றார் எவர்களுக்கும் நன்னினைப்பே உதயமாதல் வேண்டும். அவ்வித்தினை விதைத்த மகரிஷிமட்டும் உளராயிருப்பின் அக்கன்றின் அடிப்பாகத்து நானே நினக்குச்சுதந்தர முடையவன்.எனக்குந்திஎன்னுடைய நன்னினைப்புப்போன்றே என்னுடைய தாய்நாட்டிற்கு பலன்களை கொடுக்கவேண்டுமேதவிர ஏனையோர்நினைக்குந்தீச் செயல்களுக்கு நீ! உடன்

படக்கூடாதென்று பெரிய தருவாகிறவரை பிரார்த்தித்துக்கொண்டும், அறியாப்பருவத்தோர் எவர்களும் அதன்பக்கத்து, நெருங்காதவண்ணம் காவல் புரிந்து கொண்டும் இருப்பார்.

IV. அங்ஙனமில்லாமற் போகவே, அக்கன்றும் இளமையாயிருக்கவே, அதன்பாலிருந்து பலன் அநுபவிக்கவேண்டிய பலரும் அறியாப்பருவத்தாயிருக்கவே, நம்முடைய தாய்நாட்டிற்கும் அவ்விளங்கன்றுக்கும் எவ்விதக்கெடுதல்கள் நேரிடுமோ? இறைவனுக்குத்தான் தெரியும். ஆனாலவ்வித்தினை, நமது, தாத்தாபாய் நௌரோஜியாரவர்கள் பன்னெடுங்காலம் மேலுலகத்துக்குச்சென்று தவங்கிடந்தே பெற்றுவந்து ஈங்கு ஊன்றினர். அஃது ஒருவாறு முளைத்து மிகஅழகான பசுங்கன்றாயும் வந்து விட்டது. இனியதனைப்பெரிய விருட்சமாக வளர்க்கவேண்டுங்கடப்பாடு நம் இந்துதேயத்துளுடைத்தான பல சமூகங்களின் மீதும் உடைத்தாயிருக்கிறது. எந்தச் சமூகமானது தங்களுக்கு வேண்டாமெனச் சொல்லுமோ? அந்தச்சமூகத்துக்கு அஃது காணப்படாமல் மறைந்துகொள்ளவுஞ்செய்யும். அங்ஙனமின்றி, நமது இந்துதேயத்துளுடைத்தான ஒவ்வொரு சமூகத்தாருக்கும் அஃது உரித்தாயிருக்கும் ஆற்றையும் அவ்விளங்கன்றானது பெரியதோர் தருவாக வளரவேண்டும் ஆற்றையும், அதனால் நிகழும் பலன்களைப் பூரணமாக நமது தாய்நாடு அநுபவிக்கவேண்டுமாற்றையும் மிக நன்றாகச் சீர்தூக்கிக் கவனிக்கப்புகுந்தால் "இந்தியர்வேறு" "அந்தணர் வேறு" என வெளிக்கிளம்பி வந்திருக்கும், அக்கிளையினையடியோட்டக் கத்தறித்து விடவேண்டுவதொன்றன்றிமற்றில்லை. இக்கிளை யொன்று கிளம்பவேண்டுமென்று, நினைத்தவோர்மாபாதகனை, மாபாதகனென்று சொல்லுதல் எட்பிளப்பும் பொருந்தாத காரியமேயாகும். ஏனெனில்? அக்கன்றின்மீது எச்சமூகத்தாரும் பின்னும், ஞாபகமாயிருக்குமாறு தூண்டியதோர் தூண்டுகோளேயாம், ஆகலினுமென்க. மேலும், அத்தகையாரை ஓர்புண்ணிய சீலரெனவும் கொள்ளப்பெறும். ஆக்கப்பொறுத்தவர் ஆறப்பொறாதே போவார. நாளைக்கழித்து வரும் கலவரை இன்றைக்கேவந்து ஒழிந்துபோமேல் மிகநல்லதுதான்.

V. "இந்தியர்வேறு" "அந்தணர்வேறு" என்னும் கிளர்ச்சியானது நமது இந்தியதேயம் ஒருங்கும் பரவினதாயிருக்கிறது. இக்கிளர்ச்சியானது இஃதுடன் நசுக்குண்டுபோகாமல், இன்னுங் கொஞ்சம்வளருமானால், நமது இந்துதேயத்திலுடைத்தான, பூர்விகக்கொள்கைகளெல்லாம் மிகமேலான உயர்தரநாகரிகம் அமைந்ததாமெனச் சாட்சியம்பகரத்தகுந்த பல நல்லஆசாரசீலங்களுக்கும், பலநல்ல, நல்லொழுக்கங்களுக்கும், வரன்முறைச்சட்டங்களுக்கும் அடிபீடங்களாயுள்ள எவைகளும்பிடுங்கியெறியப்பட்டும், கொளுத்தப்பட்டும, மாற்றப்பட்டும்போகும். இக்கோரத்தன்மைக்கு எவர்களும் ஒப்புக்கொள்ளவேண்டியதேயாகும். ஆன்றோர் எவர்களுக்கும் அசங்கியமான அநேக கலவரைகளும் நேரிடும். கோரமும், மிகப்பயங்கரமுமான கொடுந்துன்பங்களும், பழிகளும், முற்றியகொலைகளும்நேரிடும், இரத்தவெள்ளமும்பெருகுவதாகும் இதற்குக்காரணம் என்னை? பிராமணர்கள்மட்டும்வேறாயும், நமது, இந்தியதேயத்துள் உடைத்தான ஏனையஎல்லாவருணத்தார்களும் ஒன்றுகூடி அவர்களொருங்கும் ஒரே ஜாதியராய் வேறாயுங் கூடித்திரளுமேல் நம், இந்துதேயத்துக்கு எத்துணையோ பல நன்மைகளல்லவா நிகழும், நீயீர்! கூறுகின்றபடி பலவிதத்தீங்குகள் நேரிடுமென்பதற்கு போதுமான காரணங்கள் உளதாயிருப்பின் கூறுக?

6. சகோதரர்களே! சிறிது ஊன்றிநோக்கிக்கவனியுங்கள். பார்ப்பார், அந்தணர், வேதியர், மறையவர் என்பன ஒருபொருட்சொற்கள். அஃதாவது, உயர்தரமான எவ்விதத்தொழின்முறைகளையுங் கொண்டுமுடிக்கத்தகுந்த நல்லதோர் சமயத்தை பார்ப்பாராதலால் அவ்வகுப்பாருக்குப் பார்ப்பாரென்றும், அழகிய தன்மை வாய்ந்தவர்களாதலின், அந்தணரென்றும், சிறிது மறைவாகநின்றே எவ்விதக்காரியாதிகளையுங்கொண்டு முடித்துக்கொள்வார்களாதலின் மறையவர்என்றும், பூர்விகத்தில் வேதம் ஓதுகிறதொழிலையே இவ்வகுப்பார் தங்களுக்கென ஏற்படுத்திக்கொண்டதால் வேதியர் என்றும் காரணங்கள் ஏற்பட்டிருக்கின்றன. இவ்வகுப்பார் பன்னெடுங்காலங்களுக்கு முன்னரே இருந்து நமது இந்துதேயத்து உயர்தர ஆட்சிகளைக்கையாண்டே வந்திருக்கிறார்கள். உயர்தரமான எவ்விதப்பதவிகளும் இவர்களுக்கு ஏற்பட்டிருக்கின்

றன. நமது, இந்துதேசத்திலுடைத்தான ஐயா எந்தவருணத்தாரும் இவர்களைக்கண்டவுடன் ஸ்வாமி நமஸ்காரம் என இன்றைக்கும் கைகூப்பிவருகிறார்கள். இஃது சாதாரணமாக எத்துணைச்சிறுவர், சிறுமிக்குமிக நன்றாகத்தெரிந்த விஷயம். இவ்வகுப்பார்காலதருமத்துக்கேற்றவாறு எந்த, எந்தக்காலத்து, எந்த, எந்த முறைகளில் முன்னேற்றமடைந்திருத்தல்வேண்டுமோ அந்த, அந்த முறையாக முன்னேற்றமடைந்துவந்திருக்கிறார்கள். இத்தக்காலத்தும், தற்காலவியற்கைகளுக்கு ஏற்றவாறு முன்னேற்றம்பெற்று உயர்தரமான எந்தப்பதவிகளிலும் அவர்கள் குந்திக்கொண்டிருக்கிறார்கள். இதற்தாக யாவர்தான் என்செய்கிறது. இவ்வகுப்பாரை எங்கோ ஒருபக்கமிருந்து 600, 700 வருஷங்களுக்கு முன்றான் நமது, இந்துதேயத்துக்கு வந்தவர்களென ஒரு சிறிதளவு கூட வாய்கூசாமல் சில அதிகப்பிரசங்கிகள் உபன்னியாசஞ்செய்கிறார்கள். நமது பாரதகண்டந்தோன்றிய நாண் முதற்கொண்டே இவ்வகுப்பாரும் ஈங்கு உடைத்தானவர்களென்பதற்கு அநேகரிக்கார்டுகள் காணக்கிடக்கின்றன. சிறிது அறிவாழிகளாயுள்ளவர்களுக்கும் இஃது தெற்றெனவிளங்கியதேயாகும். இவ்வகுப்பார் தங்களைத்தாங்களே உயர்த்திக்கொண்டார்களெனச்சிலர்சொல்லுவது நியாயமாகக்காணப்படினும் அஃது எல்லாம்வல்ல நமதிறைவனுக்கும் சம்மதிபெற்றனவாகவே காணக்கிடக்கின்றன. அவைகளையெல்லாம்பற்றி விரிக்கிற் மிகப்பெருகுமானாலும், தில்லையில் மூவாயிரவரோடுகூடியிருந்தவர்யாவர்? செந்தில் இரண்டாயிரவரோடு கூடியிருந்தவர்யாவர்? கூடலில் சங்கத்தலைவராயிருந்தவரும் யாவர்? மேலும்,

"அன்பிலைந்திணைக்களவெனப்படுவது
அந்தணருமறைமன்றமெட்டினுள்
கந்தருவவழக்கமென்மனார்புலவர்"

எனச் சூத்திரம் செய்தவரும் யாவர்? இத்தகையனவாய் இன்னும் அநேகம் காணக்கிடக்கின்றன. மீண்டிங்கவனிக்குமிடத்து நமது மணிவாசகப்பெருமான், ஞானசம்பந்தப்பிள்ளையார், சுந்தரமூர்த்திநாயனார், கிருஷ்ணபகவான் முதலியோர்காலங்களுக்கு முன்னமே இருந்தும் இவ்வகுப்பார் நமதுஇந்துதேயத்துக்காணப்

படுகிறார்களென்பதற்கும் அநேகரிக்கார்டுகள் காணக்கிடக்கின்றன. இவ்வகுப்பார் காரணம்பற்றியே அநேகஆசாரசீலங்களும் நிலைநின்றுவருகின்றன. எந்தக்காலத்தும் நமது இந்ததேயம் இவ்வகுப்பார்களாலேதான் நடத்தப்பட்டுவருகிறது. இக்காலத்தும் கவர்ன்மெண்டு அவர்களுடையதாகத்தானிருக்கிறதென்பதை எவர்களும் மறுக்கமுடியாது. மேலும், எந்தக்காலத்தும் லௌகிக விஷயங்களிலும், வைதீக விஷயங்களிலும் மேம்பாடுற்றவர்களாயுங் காணப்படுகிறார்கள். மேலும், நமது பாரதமாதாவிற்கு முதற்புத்திரர்களென்றுஞ் சொல்லலாம். எந்தவாற்றானும், நமது பாரதமாதாவின் சரீரத்தை நன்கு அலங்கரிக்கக்கூடியவர்களாயும் இருக்கிறார்கள். மேலும், நமது, இந்துதேயத்திலுடைத்தான அநேக சமூகங்களுக்கு ஆசிரியன்மார்களாயுமிருக்கிறார்கள். இன்றைக்குங்காணலாம் பல மன்மக்களும் அவர்கள்கையிற்றான் அடங்கிநிற்கிறார்கள். மேலும், ஒருசிறிதளவுகூடக் கலப்பற்ற ஒரு தனிவகுப்பாராயுங் காணப்படுகிறார்களல்லவா? மேலும், எந்தநாளோ அந்நாட்டொடங்கித் தந்திர, மந்திரங்களோடுகூடிய முன் ஏற்றமும். கௌரவமும், சிறப்பும், ஆசாரசீலங்களும், வைதீக, லௌகீக வரன்முறைச்சட்டங்களும், சிவஞானயோகச்செல்வங்களும், உயர்தரவகுப்பார் என்னுங் கொள்கைகளும் பூரணமாக நிரம்பப்பெற்றவர்களாயும் இந்நாள்வரை காணப்படுகிறார்கள். அவர்கள் அறைந்திருக்குஞ் சுள்ளாணிகளை ஏககாலத்தில் திடீரென்று ஒன்றில்லாமற் பிடுங்கியெறிந்துவிடவேண்டுமென்று நினைத்தால் நமது இந்தியாவென்னும் பெட்டியானது ஒருசிறிதும் பூர்வீகமற்றதாய்ப் போய்விடும். மேலும், இத்தகைய ஒரு கூட்டத்தாரைப்பற்றி அவர்களல்லாத பலர் செய்யும் உபந்நியாசங்களொருங்கும், தோற்றத்தில் அவர்களையிழித்தும், அவர்களுக்குத் தீங்கிழைப்பதும் போன்று காணப்படினும், செயற்கையில் அவர்களிடத்துச் சிறிது குறைந்து நிற்குஞ்சக்திகளையும் வளர்த்துக் கொள்ளச்செய்யுந்தன்மையுடையதேயாகும். அவர்களல்லாத பலர் எத்துணையோ கூக்குரலிட்டுக்கொண்டுதிரியினும், அவர்கள் அந்தணவகுப்பார்க்குரிய தன்மையில், ஒவ்வொரு நகரங்களிலும் அடங்கியிருத்தலே அவர்களின்பெருந்தன்மைகளை மிக நன்றாகக்காட்டுகிறது. மேலுங்கவனிக்குமிடத்து, இவ்வகுப்பாரையே தெய்வமெனக்கூறும் நூற்களுமுள.

7. எமதாப்த நண்பர்காள்! சின்னாட்களுக்கு முன்னர், நமது இந்து தேயத்துளுடைத்தான ஒவ்வொரு பெரிய நகரங்களினும், அமைதியின்மையான பல வுபந்நியாசங்களும், கையொப்பங்களும் நடந்தேறியதென்பது பெரும்பான்மை நமது மகா சமுகத்தைச் சார்ந்த ஒவ்வொரு சகோதரர்களுக்குந் தெரிந்தேயிருக்கலாம். அவ்வுபந்நியாசங்கள் நமது திருநெல்வேலி, பாளையங்கோட்டையினும், திராவிட மகாஜனக்கூட்டமென ஒன்றும், சென்னை மாகாணக்கிளைச் சபையெனக்கூட்டம் ஒன்றுமாக இரண்டுவிதமாய் பல வுபந்நியாசங்கள் நடந்தேறியது. அவ்வுபந்நியாசங்களின் சாராம்சமொருங்கும் நமது இந்தியாவையும், அந்தணரையும்பற்றியதாகவுமே இருந்தனவாகலின், அங்ஙனங்காணப்பட்ட துவேஷவிஷயங்கள், நமது நாடுநகரத்தும்வந்து நுழைந்துகொள்ளக்கூடாதென்னும் நல்லஅபிப்பிராயங்கொண்டே அதன் சாராம்சம் ஒருங்கையும் இதன் கீழ்வரைந்திருக்கிறேன். நண்பர்கள், நியாயாநியாயங்களைக் கவனித்துச் சீர்தூக்கிப்பாருங்கள். மேலும், வருகாலவியற்கைகள் ஒரு வாறு மாறும்போற்காணுகிறதாகலின் "நமது, தேவநகரம் சிவாகமசித்தாந்த பரிபாலன சங்கத்தார் 28 ஆகமங்களும் எட்டுப்பிரதியாக விருப்பினும், புத்தகரூபமாக விருப்பினும் வெகுசாக்கிரதையாகப் பத்திரப்படுத்திவைத்தலும்வேண்டும். என்னவோ! பைத்தியகாரத்தன்மையாக வரைந்து கொண்டு வருகிறான் என நீங்கள் நினைத்தல் வேண்டாம். சண்முகநாதன் உத்திரவின் பேரிற்றான் வரைந்துவருகிறேன். மேலும், ஆரியந்தமிழிலுள்ள உயர்தர எந்த நூற்களையும்பத்திரப்படுத்தத்தான்வேண்டும். மேலும், ஆரியவகுப்பாரல்லாத நமது இந்தியாவின் ஒரே விதமான திருநோக்கம் தற்காலம் எப்படியிருக்கிறதென்றால் இமாலயந்தொடங்கி பொதிகைவரையுடைத்தான, இந்துமத சம்பந்தமான ஒவ்வோராலயங்களினுமுடைத்தாய விக்கிரகங்களையெல்லாம் பிடுங்கியப்புறப்படுத்திவிடவேண்டுமென்பதும், சர்வசாதாரணமாய் மாந்தருருவமாய்த் தோன்றும் எவர்களும் எவ்விதநிபந்தனைகளுமின்றி அவ்வாலயங்களின் உட்சென்று கடவுளை வணங்கவேண்டுங் காலியிடமாகமட்டும் இருத்தல்வேண்டும் என்பதும், சத்திரங்களொருங்கையுந் தொழிற்சாலைகளாக்கிவிடவேண்டுமென்பதும், அங்ஙனமானாற்றான் மதவித்தியாசம், ஜாதி வித்தியாசம் என்பது அறவே ஒழிந்ததாகமுடியும் என்பதும். ஒரே ஜனங்கமாக ஒருமை பெற்று வாழ்வதற்கு சாத்தியமாகும் என்பதும், அந்தணவகுப்பாராலேயேதான் அவ்வித்தியாசங்கள் நிலை நின்று வருகின்றன வென்பதும், அந்தணவகுப்பாருக்குக் கொடுக்கும் எவ்விதக் காணிக்கையும் அறிவின்மையென்பதுவுமே ஆகும். இத்தகைய நோக்கம்பற்றியே சில இரகசியார்த்தமான மீட்டிங்குகள் அந்தண வகுப்பாரல்லாத ஏனைய பல வருணத்துப் பேரறிவாளர் பலராலும் ஆங்காங்கு நடைபெற்றுவருகின்றன. நமது, மகா சமுகத்து, முன்னையப்பெரியார், எத்தனையோ கட்டநட்டப்பட்டுத் தேடியத் திரவியமூட்டைகளையெல்லாம் பத்திரப்படுத்திவைத்திருக்கும் பொக்கிஷ சாலைகளான, நமது பாரதகண்டத்துக் காணப்படும் ஒவ்வொரு சிவாலயங்களையும், அதனதன் உண்மைகளையும், மகத்துவங்களையும், தத்துவார்த்தங்களையும், அவ்வாலய மூலத்தானங்களிலே யோக நித்திரைபுரியும் சிவஞான யோகச்செல்வர்களையும், யந்திராதிகளையும்பற்றி ஒரு சிறிதளவுகூட நல்லுணர்ச்சியற்று, அவ்வாலயங்களுக்கு நாசத்தைக் கருதும், வாலற்ற வானரர்களைப்பற்றி யிங்ஙனம் இன்னவாறாகத்தான் வரைதல் வேண்டுமென்பது ஒரு சிறிதளவுகூட எமக்கு விளங்கவில்லையே. ஏ! எல்லாம் வல்ல ஞான குருபரா! ஏ! சண்முகநாதா! ஏ! சக்ரதான்மார்பகத்தில் உக்ரமுடனே தரித்த சத்தியடையாளமிட்ட பெருமானே! ஒரு சிறிதளவு ஞாபகப்படுத்த மாட்டாயோ! நமது, சைவ சமயத்துக்கும், ஆகமாதிகளுக்கும், சிவாலயங்களுக்கும் தீங்கு நிகழுமாறு நீயும்! எவன்கொல்பார்த்துக்கொண்டிருப்பாயோ? அஃது எவன்கொல் நினக்கும் சம்மதிதானோ? நமது, பாரதகண்டம் இந்த வகையிற்றான் "நியூ இண்டியா" ஆகல் வேண்டுமோ? நமது, பூர்வீகப்பெரியார்களுக்கும், சிவஞானயோகச்செல்வர்களுக்கும், நமது பூர்வீகக்கொள்கைகளுக்கும், நல்ல மார்க்கங்களுக்கும் விரோதிகளாய் அக்கயவர்கள் ஈங்கு எத்தனை நெடுங்காலம் வாழப்போகிறார்களோ தெரியவில்லையே? அந்தோ!

"கட்டுவித்தார் மதிற்கல்லொன்று வாங்கிடில்
வெட்டுவிக்கும் அபிடேகத்தரசரை
முட்டுவிக்கும் முனி வேதியராயினும்
வெட்டுவித்தேவிடும் விண்ணவனாணையே"

"தாவரலிங்கம் பறித்தொன்றிற்றாபித்தால்
ஆவதன்முன்னே யரசுநிலை கெடும்
சாவதன்முன்னே பெருநோயடுத்திடும்
காவலன்பேர் நந்திகட்டுரைத்தானே"

"ஆற்றரு நோய்மிகும் அவனிமழை குன்றிப்
போற்றருமன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத்தான் றிருக்கோயில்களானவை
சாற்றிய பூசைகள் தப்பிடிற்றானே"

"முன்னவனார் கோயிற் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரிவளங்குன்றும்
கன்னங்களவு மிகுத்திடும் காசினிக்கு
என்னருள் நந்தி எடுத்துரைத்தானே"

"பேர்கொண்ட பார்ப்பான் பிரான்றன்னையர்ச்சித்தால்
போர்கொண்ட வேந்தர்க்குப் பொல்லா வியாதியாம்
பார்கொண்ட நாட்டுக்குப் பஞ்சமும் ஆம் என்றே
சீர்கொண்ட நந்தி தெரிந்துரைத்தானே"

நமது, சிவாலய மதிற்கல் ஒன்றைப் பிடுங்கிடினும், ஒரு சுயம்புலிங்கத்தைப் பிடுங்கி மற்றொரு சிவாலயமாக ஸ்தாபித்தாலும், ஆகமாதி நூன்முறைகளின்படி ஒரு சிறிதளவு பூசைமுறைகள் தப்பிப்போயிடினும், பிரம்ம ஞானியல்லாத பிராமணனொருவன் அர்ச்சித்தாலும், அரசாங்கத்துக்கும், தேயத்துக்கும் இத்துணை தீங்குகள் நேரிடுமென்று, வேதாகம, புராணேதிகாசங்களாலும் புகழ்ந்துகொண்டாடப்படுகிற நமது, திருமூலர், திருமந்திர முதலிய ஆன்றோர் திருவாக்குகளை ஒரு சிறிதளவுகூடக் கவனியாமல் சர்வ சாதாரணமாய் சிவாலயங்களையே வேரோடு பிடுங்கிவிட நினைத்தால் அடடா நமது பாரதகண்டம் எக்கதியாகுமோ தெரியவில்லையே. சர்வாண்ட பிண்ட சராசரங்களொருங்கும் வியாபித்துப் பரிபூரணமாக நிறைந்து விளங்கும் உத்தம ஞானிகளின் கொள்கைகளன்றோ விக்கிரகாராதனம். அந்தோ! அவர்களின் திருவுளம் சிறிது புழுங்குமேல் "மைந்தரோடும், மனையோடும் மாளா

திருந்த நிதியோடும், எந்தையடியார் மனங்கலங்கின் ஈரேழுலகுங் கலங்காவோ? என்ற வேதவாக்கும் பொய்த்துப்போகுமா? எமதாப்த நண்பர்காள்!* நமது பூர்வீக மதக்கொள்கைகள் ஒரு சிறிதளவுகூட மாறுதலடையாதவண்ணம் நமது அந்தண வகுப்பார் வேறாயும், ஏனைய இந்தியர்களெல்லாம் ஒன்றாகி வேறாயும் இயங்கக்கூடாதோ எனின்? நண்பர்காள்! அங்ஙனம் இயங்கச்செய்வதுதான் உயர்தரமான உத்தமக்கல்வியறிவோடு கூடிய பெரியவர்களின் தன்மையாக முடியும். நண்பர்காள்! இனி, மேற்சொல்லிய உபந்நியாசங்களின் முக்கிய சாராம்ஸங்களையெல்லாம் ஒருங்கே தொகுத்துக்கூறிப் பின்னர் இவ்விஷய பாக்கியையும், முடிவுரையையும் முறையாகக் கூறி முடிப்போம்.

8. ஆசியாகண்டத்தில் தென்திசையில், கிழக்கில் வங்காளக் குடாக்கடலையும், மேற்கில் அரபிக்கடலையும். வடக்கில் இமயமலையையும், தெற்கில் இந்து மகா சமுத்திரத்தையும் எல்லையாகவுடைய பரியாயதீபமே இந்து தேசம் என்னப்படும்.

9. இவ்விந்துதேசமானது உருவத்தில் பெரியதும் சிறியதுமான பல நதிகளையும், வனங்கள் அடர்ந்தமலைத்தொடர்களையும் உடையதாயும். பூசாரமுள்ளதாயும், மானிட தேகத்திற்கு மிகு அனுகூலித்த சீதோஷ்ணங்களையுடையதாயுமிருப்பதன்றி, மானிடரின் போஜனத்திற்கு வேண்டிய கனிவர்க்கங்களும், தானியவகைகளும் ஏராளமாய் அகப்படுவதுமாக இருப்பதனால், மனிதர் இத்தேசமெங்கும் படர்ந்து அடர்ந்து வசிக்கின்றனர். இவ்வாறு வசிக்கும் இச்சனங்களுக்கு இந்துக்கள் என்று பெயர்.

10. இவ்விந்துக்கள் இத்தேசத்தின் பூர்வக்குடிகளெனவும், இதர தேசங்களினின்று இத்தேசத்தில் குடியேறினவர்களெனவும் இருவகுப்பினராகப் பிரிக்கப்படுகின்றனர்.

11. இவ்விருவகுப்பினருள் இத்தேசத்தவர்கள் நிறத்திலும், சாயலிலும், பாஷையிலும், நடையுடைகளிலும், ஆசாரத்திலும், போசனத்திலும், பேதப்பட்டிருந்தாலும், இமயமலைச்சாரலிலுள்ள காஷ்மீரம், பாஞ்சாலம் நேப்பாளம், பங்காளம், அயோத்திமுதல் கன்னியாகுமரிவரையிலுள்ள க்ஷத்திரியர், வணிகர், வேளாளர், கவரைகள், பள்ளிகள், சான்றோர், குறவர், மறவர், வேடர், வில்லி

யர், பள்ளர், பறையர், புலையர், இருளர், தொம்பரவர், சக்கிலியர், மராட்டியர், பங்காளியர், சீக்கியர் முதலிய பலவகைப் பிரிவினையுடையவர்களாய்த் தற்காலம் பிரிந்துள்ளவர்கள் யாவரும் இத்தேச பூர்வக்குடிகளின் பின் சந்ததியாரெனவும், பிராமணர், மகமதியர், பாரசீகர், ஐரோப்பியர், பர்மியர், சிங்களர், அராபியர் முதலியோர் இதரதேசங்களினின்று இத்தேசத்திற் குடியேறியவர்களின் பின் சந்ததியாரெனவுங் கூறப்படும்.

12. இத்தேசப் பூர்வக்குடிகள் பேசும் பாஷைகளில் பிரதானமானவை:—பங்காளி, இண்டி, அஸ்ஸாம்பாஷை, நேபாளபாஷை, காஸ்மீர்பாஷை, பஞ்சாபிபாஷை, குஜராத்திபாஷை, கச்சி, சிந்துபாஷை, மகாராஷ்டிரம், தமிழ், தெலுங்கு, ஒரியா, கன்னடம், மலையாளம் முதலியவையே. இப்பாஷைகள் யாவும் சங்கிலியைப் போல ஒன்றிற்கொன்று சம்பந்தப்பட்டிருக்கின்றன. இங்கிலீஸ் மொழிகளில் அனந்தம் இத்தேச பாஷைகளுடன் கலந்து வருவது போல, சமஸ்கிருத மொழிகளிலும் அனந்தம் இத்தேச பூர்வபாஷைகளுடன் கலந்துவருவதேயன்றி. சமஸ்கிருதத்திற்கும் இத்தேச பூர்வபாஷைகளுக்கும் சிறிதேனும் சம்பந்தமேயில்லை. சமஸ்கிருத மொழிகள் வடஇந்தியாவில் வழங்கிவரும் பூர்வபாஷைகளில் 100-க்கு 15-ம், மத்திய இந்தியாவில் வழங்கிவரும் பூர்வபாஷைகளில் 100-க்கு 10-ம், தென்தேச பாஷையாகிய தமிழில் 100-க்கு 2-மாகக் கலந்திருப்பதால், பிராமணர் வட இந்தியாவில் முன்னர்க் குடியேறி, நாளடைவில் தென்கோடி வரைக்கும் வந்து பரவியிருக்கவேண்டுமென்று தெளிவாக விளங்குகின்றது.

13. பூர்வகாலத்தில் இத்தேசத்தவர்கள் அனைவரும் யானை, பாம்பு, ஆடு, மாடு, மீன், ஆமை முதலிய பலவகைப்பிராணிகளுடைய மாமிசங்களையும் புசித்துவந்தனர். பௌத்தமதம் தோன்றியபின் சிலர் மரக்கறி போஜனர்களாகவும், சிலர் ஆடு கோழி மீன் வகைகளைமட்டும் புசிப்பவர்களாகவும் மாறிவிட்டனர். நாடோடிகளாக இருக்கும் அநாகரீகர்களாகிய குறவர்; தொம்பரவர், மறவர் முதலியோர்மட்டும் இன்னமும் முன்போலவே பலவகைப் பிராணிகளுடைய மாமிசங்களையும் புசித்து வருகின்றனர்.

14. இத்தேசத்தவர்கள் தங்கள் அம்மான் மகளையும், அத்தையின் புத்திரியையும், தமக்கையின் புதல்வியையும் மணம் புரிவார்கள். பூர்வகாலத்தில் இத்தேசமாதர்கள் தத்தம் அரைகளில் ஒவ்வோர் சிற்றாடையைமட்டும் உடுத்தி இருந்தனர். இத்தகைய மாதர்களை பவானி, ஆற்றூர், சங்கலித்துருக்கம், மலையாளம் முதலிய பலவிடங்களில் இப்போதும் காணலாம். இத்தேசத்து மாதர்கள் தத்தம் சத்திக்குத்தக்கபடி ஒரு கணவன்முதல் ஏழு கணவர் வரையிலும் புருஷர்கள் ஒருமனைவிமுதல் நூறு இருநூறு மனைவியர் வரையிலும் விவாகம் புரிந்துவந்ததுமன்றி, புருஷர் வைப்பாட்டிகளையும் வைத்துக்கொண்டு வந்தார்கள். இவ்வழக்கம் இக்காலத்தில் பெரும்பாலும் மாறிவிட்டது.

15. இத்தேச பூர்வக்குடிகளாகிய மங்கோலிய ஜாதியார் ஆரியர் இத்தேசத்தில் குடியேறுவதற்குமுன்; நாகரிகமடைந்திருந்தனரா அல்லராவென ஆராய்ந்து பார்ப்போம். உறவினர் உறவினரல்லாதவர் யாவரையும் அன்னியராகப் பாவித்திருக்கும் மிலேச்சரைப்போல் இராமல் உதிர சம்பந்தமுள்ள ஒவ்வொருவருக்குரிய தந்தை, தாய், தங்கை, தமக்கை, தமயன், தம்பி, மருமகன், மருமகள், அம்மான், அத்தை, மாமனார், மாமியார், அத்தான், மைத்துனன், கொழுந்தன், கொழுந்தி முதலிய சுற்றத்தாருடைய பெயர்கள் ஆரியர் இத்தேசம் வருவதற்கு நெடுங்காலத்திற்கு முன் தொடங்கியே இத்தேசத்தவர்களுக்குள் வழங்கிவருவதாலும், இவர்கள் தங்கள் சுற்றத்தவர்களுடன்கூடி வசிக்கப்பிரியப்படுவதாலும், இளையோர், மூத்தோர் வாக்குக்கு ஒரு சிறிதும் எதிர்வாக்குரையாமல் அவர்களுக்கு அடங்கி ஒழுகுவதாலும், இளையோர் மூத்தோருடன் முறை பிறழாது மரியாதையாகச் சம்பாஷிப்பதாலும், அங்குமிங்குந்திரியும் நாடோடிகள்போல இத்தேசத்தவர்கள் திரியாமல் ஓரிடத்திலேயே தங்கி தங்கள் குடும்பத்தாரோடும், சினேகரோடும், வசித்து, பூமியைச் சீர்திருத்தி, ஏருவிட்டு, விதை விதைத்து நீர்பாய்ச்சி, பயிர்செய்து அதனல் ஜீவித்து வருவதாலும், ஆரியர் இத்தேசம்வர நெடுங்காலத்திற்கு முன்னமே இத்தேசத்தவர் நாகரீகமடைந்திருந்தனரெனத் தெளிவாக விளங்குகின்றது.

16. பூலோகத்தாரனைவரும் மிலேச்சத் தன்மையுடையவர்களாகவிருந்த காலாரம்பத்தில் தங்கள் நெருங்கிய குடும்பத்தவர்களுக்குள்ளே யாவரேனும் வியாதியால் பீடிக்கப்பட்டு இனி உயிர்த்தெழாரெனக் காணப்பட்டால் அவ்வியாதியஸ்தர்களைக் கொன்று பிடுங்கித் தின்றுவந்தனர். இப்படிச்செய்து வந்தவர்களுக்குள் அறிவு சற்று விருத்தியான காலத்து, தம்குடும்பத்தினரைக் கொன்று தின்னலாகாதென வுணர்ந்து, தம்மிலும் பலவீனராக இருந்து தமக்கெதிர்ப்படுவோரை மாத்திரம் பிடித்துக்கொன்று தின்று வந்த அநேக வருஷங்களுக்குப் பின் இதுவுந்தகாதகிரியையென உணர்ந்து நரமாமிச போஜனத்தைத் தவிர்த்து, தாழ்ந்த ஜீவஜெந்துக்களை மாத்திரம் புசித்து வந்தனர். இப்படியாக ஜீவஜெந்துக்களைத் தீயில் பாகப்படுத்தாமல் உதிரத்துடன் புசித்துவந்த அநேகமாயிர மாண்டுகளுக்குப்பின், அம்மாமிசாதிகளை உப்பு, புளி, காரம் முதலியவற்றுடன் கலந்து சமைத்துப்புசிப்பதே தகுதியென அறிந்து, அவ்வாறே நெடுங்காலமாகப் புசித்துவந்தனர். இவ்வாறு மானிடர் மாமிசபோஜனம் செய்துவருவதை பௌத்தமதத்தை ஏற்படுத்திய கௌதமர் கண்ணுற்றுப் பார்த்து, மனிதர் தம் உடலைப் போஷிப்பதற்காக ஜீவஜெந்துக்களைத் துடிக்கப் பதைக்கக் கொன்று அவற்றின் மாமிசாதிகளைப் புசிப்பது தகாத கிரியையெனவும், மனிதர் ஒருவரையொருவர் பலவிதங்களால் வஞ்சித்துப் பிறருடைய கஷ்டார்ஜ்ஜிதங்களைக் கவர்ந்து அதனால் ஜீவிப்பதும் அநீதியெனவும் உய்த்துணர்ந்து இத்தேசத்தின் பெரும்பாலாரை மரக்கறி போஜனர்களாகச் சீர்திருத்தினர். இங்ஙனம் இப்பூலோகத்தில் ஜீவ இம்சை செய்யலாகாதென்று ஏற்படுத்தி முதல்முதல் போதித்தவர் இத்தேசத்தவரான கௌதமரேயன்றி மற்றெவருமல்லர். ஆகையால் ஆரியர் இத்தேசம் வருவதற்கு நெடுங்கால முன்னந் தொடங்கியே இந்துக்கள் ஜீவ இம்சை செய்யாமல் நாகரிகமடைந்திருந்தனரென்று தெளிவாக விளங்குகின்றது.

17. ஆரியருக்குச் சுரர் என்னும் ஓர் பெயர் இருப்பதால் அது இடுகுறிப்பெயரோ காரணப்பெயரோவெனப் பரியாலோசிக்குமிடத்துக் காரணப்பெயராகவே இருக்கிறது. எவ்வாறெனின், சுரர் என்னுமொழியின் பொருள் சுராசம்பந்தமுடையரெனப்புலப்படுகின்றது. சுரா என்பது கள், மது எனப்பட்ட பலபொருள்

குறித்த ஒரு மொழி ஆதலால் சுரர் என்பதற்குக் கட்குடியரென்பதே பொருளாம். சுரரல்லாதவர் அசுரராதலால், அசுரரென்னும் மொழியின் பொருள் சுரா சம்பந்தமில்லாதவர்; அதாவது கட்குடியாதவர் எனப் பொருள்படுகின்றது. இவ்வாறாக சுரர் அசுரர் என்னும் இவ்விரு வகுப்பினருள் சுரரெனப்படுவோராகிய அவ்வாரியரால் அசுரரென அழைக்கப்பட்டவர்கள் இவ்விந்துதேசக் குடிகளேயாதலால் இத்தேசக்குடிகள் மதுபானஞ் செய்யாதவர்களென்பது பூர்வபட்சமாய் விளங்குகின்றது. ஆகையால் ஆரியர் இத்தேசம் வருவதற்குமுன்னமே இத்தேசக்குடிகள் மதுபானஞ்செய்யாமல் இருந்தமையால் இந்துக்கள் பூர்வந்தொடங்கி நாகரீகமுடையவர்களாயிருந்தனரென்பதற்குச் சிறிதேனும் ஐயமில்லை.

18. மக்கட் குழாங்களுள் வஞ்சநெஞ்சமுடையோரும், வருந்தி முயன்று பிழைக்க வகையறியாத பெருஞ்சோம்பேறிகளும் அயலவர்களுடைய கஷ்டார்ஜ்ஜிதங்களை வஞ்சனைகளால் அபகரித்து ஜீவிக்கவும் அவ்வயலார்களால் பெருமையடையவுமே பூலோகத்தில் கட்டுக்கதைகளைக் கற்பித்துப் பொய்நூல்கள் யாவும எழுதப்பட்டன. இங்ஙனம் எழுதி பிரஜைகளை வஞ்சித்துப் பிழைக்கும் பிழைப்பு மிலேச்சருக்குரிய தன்மையேயன்றி வேறன்று. இத்தகைய வஞ்சப் பொய்க்கதைகளே பொதிந்துள்ள மனுஸ்மிருதி, புராணம், சோதிடம், சதுர்வேதம் முதலிய வஞ்சநூல்களைப் புனைந்துரைத்து (Mythology) அவற்றால் இதுகாறும் வஞ்சித்துவரும் ஆரியர்போல் இவ்விந்துதேசத்தவர் வஞ்சக நூல்களை மறந்தும் செய்யாது, நீதிசாஸ்திரம், தர்க்கசாஸ்திரம், கணிதசாஸ்திரம், தாவரவர்க்கசாஸ்திரம் பாக சாஸ்திரம், சங்கீத சாஸ்திரம் முதலிய உண்மையும் பயனுள்ளதுமான நூல்களை எழுதி மக்களுடைய அறிவு அபிவிருத்தியடையும்படிச் செய்தமையால் இவ்விந்துக்களே அவ்வாரியரினும் நாகரீகமுடையவர்களென்று தெளிவாகவிளங்குகின்றது. ஆரியர் இத்தேசம் வந்து சேராத நெடுங்காலத்திற்கு முன்னமே சீன தேசத்தார் நீங்கலாக ஏனைய எல்லாத்தேசத்தாரினும் இத்தேசத்தவர்களே ஆகாயத்தையளாவிய கோபுரங்களையுடைய கட்டடங்களைக் கட்டுவதிலும், கருங்கற்களில் கொத்துவேலை செய்வதாகிய சிற்பத்தொழிலிலும், படமெழுதுவதிலும், நவரத்தினங்களைத் தங்கத்துடன் சேர்த்துப் பலவித ஆபரணங்கள்

செய்வதிலும், பட்டு, பருத்தி இவைகளால் விதம்விதமான ஆடைகள் செய்வதிலும், அவ்வாடைகளுக்கு விதம்விதமான சாயமூட்டுவதிலும், செம்பு, பித்தளை முதலியவைகளை உருக்கி விக்கிரகங்கள் வார்ப்பதிலும், சந்தனமரம் தந்தமாகிய இவற்றில் கொத்துவேலை புரிவதிலும், மாமரப்பலகையின்மீது அரக்கையுருக்கியூற்றி அவ்வரக்கின்மீது கொத்துவேலை செய்வதிலும், விநோதம் விநோதமான ஆட்டங்கள் (Circus) ஆடுவதிலும் தேர்ச்சியுள்ளவர்களாயிருந்ததினால் ஆரியர் இத்தேசத்தில் குடியேறுவதற்கு நெடுங்காலத்திற்கு முன் தொடங்கியே இத்தேசப் பூர்வக்குடிகள் நாகரீகமடைந்திருந்தனரென்று தெளிவாக விளங்குகின்றது.

19. மனித உணர்ச்சிக்குரிய பிரதான அடையாளங்கள் உருவடையாளமெனவும், உணர்வடையாளமெனவும், ஒலிவடிவடையாளமெனவும், வரிவடிவடையாளமெனவும் நான்கு வகைப்படும். இவற்றுள் சிலா ரூபங்களும், படங்களும் உருவடையாளமெனவும், மகோதரத்தைப்போல இருப்பனவற்றை உணர்த்த ஏற்படுத்திய குறிப்படையாளங்கள் உணர்வடையாளமெனவும், செவிப்புலனால் மட்டும் அறியத்தக்கது ஒலிவடிவடையாளமெனவும், செவிப்புலனால் அறியத்தக்கதைக் கட்புலனாகச் செய்வது வரிவடிவடையாளமெனவும் சிற்ப நூலாசிரியர் கூறுவர். லிங்க மதத்தினரும் துர்க்கை மதத்தினருமாகிய பூர்வ இந்துக்கள், மேலைநால்வகை அடையாளங்களுள் ஒலிவடிவு நீங்கலாக ஏனைய மூவகை அடையாளங்களையும் கோவிலாக இருக்கும் சமாதிச் சுவர்களிலும், கற்கம்பங்களிலும், மண்டபங்களிலும், நெடுங்காலம் நிலைபெற்று விளங்கும்படியாக அவற்றில் அமைத்து வைத்தனர். ஒலிவடிவடையாளம் வாயினின்றெழுந் தன்மையுடையதாதலால் அதைமட்டும் சமாதிகளில் காணக்கூடாது. காளி முதலிய தேவதா சிலா ரூபங்கள் உருவடையாளத்திற்கும், ஆண் பெண் குறிகளான லிங்கமும் ஆவுடையாரும் உணர்வடையாளத்திற்கும், தற்காலத்தில் தேவாலயங்களாக எண்ணி வழிபடப்பட்டிருக்கும் சாசனம் முதலியவை வரிவடிவடையாளத்திற்கும், உதாரணங்களாக அச்சமாதிகளில் அமைத்திருக்கின்றன.

20. கைம்மாதரான க்ஷத்திரியகுல இராஜ பத்தினிகள் ஆரியரது போதனையினால் தங்கள் கணவர்கள் சம்பாதித்த நகை நட்டு திரவியமனைத்தையும் ஆரியருக்கே தானஞ்செய்து அதன்பின் 'மரித்த தங்கள் கணவர்களுடன் உடன்கட்டை யேறினவர்கள் வெந்தெரிந்த சாம்பரான இடங்களின்மீது ஆரியர் அவர்கள் புத்திரரைக்கொண்டு சமாதி ஆலயங்களைக் கட்டுவித்தனர். அங்ஙனம் கட்டுவிக்கப்பட்டுள்ள ஆலயங்கள் 1116-இருக்கின்றன. அவ்வாலயங்கள் அனைத்தும் ஆரியர் முறைப்படி கட்டுவிக்கப்படாமல், டியூரேனிய முறைப்படி கட்டுவிக்கப்பட்டிருப்பதால், இந்துக்கள் பூர்வகாலந்தொடங்கி கல்வியும், செல்வமும், நாகரீகமும் உடையவராயிருந்தனரென்றும், ஆரியர் வந்ததன்பின்னரே தங்கள் சிறப்பையும், செல்வத்தையும், நாகரீகத்தையும் ஒருங்கே இழந்து சீரழிந்தனரென்றும் தெளிவாக விளங்குகின்றது. இவ்வாறு இந்துக்கள் சீரழிவதற்குக் காரணமாயுள்ள இவ்வாரியரின் கொடிய நயவஞ்சகத்தைக்குறித்து "முப்பிரிநூல் பாப்புப்பெருத்தல்லவோ சமஸ்தானங்கள் பாழ்பட்டவே" என்று பண்டைக்காலத்து ஓர் வித்துவான் பாடிய பாட்டினாலும் பிராமணர்களால் சமஸ்தானங்களெல்லாம் அழிந்தனவென்று தெளிவாக விளங்குகின்றது.

21 ஆரியர் இத்தேசத்திற்கு வருவதற்குமுன் இத்தேசமாதர்கள் புருஷரினும் இழிந்தோராக எண்ணப்படாமல் புருஷருக்குச் சமானஸ்தராகவே கருதப்பட்டு வந்தனர். மகமதியரின் வரவுக்குமுன் இத்தேச மாதருக்குள் அந்தப்புரமென்னும் கோஷா ஏற்பாடு இருந்ததில்லை. இம்மாதர் தங்கணவரை இழந்து கைம்பெண்ணவரேயாயின் அவர்தம் கொழுந்தனுக்கு மனைவியாய் வந்தனர். ஆண் பெண்ணாகிய இருபாலாருக்குள்ளும் பூர்வகாலத்தில் புநர்விவாகம் புரிந்துகொள்ளுவது வழக்கமாயிருந்தது. இவ்வனுஷ்டானங்களில், கைக்கோளர், குறவர், இருளர், சான்றார், பறையர், முதலிய ஜாதியாருள் பெரும்பான்மையோர் தவிர சிறுபான்மையரும் மற்றைய ஜாதியார் அனைவரும் ஆரியரது போதனைகளால் மாதர்களின் புநர் விவாகத்தைமட்டும் நிக்கிரகித்துவிட்டனர். இத்தேசக் கன்னிகைகள் எந்தப் புருஷர்மேல் இஷ்டப்படுவார்களோ, அவர்களுக்கே அக்கன்னிகைகளை விவாகஞ்செய்துகொடுப்பது இத்

தேச பூர்வகுடிகளின் வழக்கம். இதற்கே சுயம்வர, என்று பெயர். இதற்கு மேற்கோள், விஷ்ணு புராணத்தில் மாந்தாதா என்னும் அரசன் சௌபரி முனிவரை நோக்கி, "சௌபரி முனிவரே, எங்கள் பெண்கள் எவர்கள் மேல் இஷ்டப்படுவார்களோ அவர்களுக்கே அப்பெண்களை விவாகஞ்செய்துகொடுப்பது எங்கள் குலாசாரம்" என்றான். நைடதம் சுயம்வரப்படலத்தில், தமயந்தி சுயம்வர மண்டபத்திற்குச்சென்று தனக்கு இஷ்டமுள்ளவனை நளமகாராஜனுக்கு மாலையிட்டதாகக் கூறியுள்ளது. இவ்வாறே திரௌபதையும், காசிராஜாவின் புத்திரிகளாகிய அம்பிகை, அம்பாலிகை என்ற இராஜ புத்திரிகளும், மற்ற எல்லா வகுப்பு ஸ்திரீகளும் தங்களுக்குத் தகுந்த வயது வந்தபின் தாங்களிஷ்டப்பட்ட புருஷரையே தங்களுக்குக் கணவராக எண்ணி அவர்களுக்கு மணமாலை இட்டு வந்தனர். இதன்றி, லீலாவதி, ஔவை, காரைக்காலம்மை, தமிழறியும்பெருமாள், பாண்டியன் மனைவி, உப்பை முதலிய மாதர்கள் கல்வியில் நன்கு பயின்றவர்களாக இருந்தனர். பூர்வகாலத்தில் அல்லி அரசாணி என்ற மாதும், பவழக்கொடி என்ற மாதும், இன்னும் அனந்தமாதர்களும் ஆண்மக்களைப்போலவே இத்தேசத்தின் பலவிடங்களில் அரசாண்டதாக இதிகாசங்களினால் தெரியவருவதுமன்றி, மலையாளத்தில் நாளிதுவரையில் இராச்சிய உரிமை ஆண்பால்வழிக்குச்செல்லாமல் பெண்பால் வழிக்கு உரித்தாகிய 'அம்மான் சொத்திற்கு மருமகன் கர்த்தா' என்று அவர்களுக்குள் நியாயப்பிரமாணம் ஏற்பட்டு, ஆஸ்தி பெண்பால்வழியிற் சென்று வருகின்றது. ஆரியர் இத்தேசம் வருவதன்முன் இத்தேசத்தவர் யாவருக்குள்ளும் தாய் தந்தைகளின் ஆஸ்தியில் புத்திரருக்கும் புத்திரிகளுக்கும் சமபாகமான பாத்தியமிருந்தது. இவற்றால் ஆரியர் இத்தேசம் வந்து சேர்வதன்முன் இத்தேச மாதர் இராச்சிய பாரஞ்செய்யுஞ் சுதந்தரமும் பெற்றிருந்தனரென்றும், ஆரியர் இங்குவந்து சேர்ந்தபின்னரே சர்வசுதந்தரங்களையும் சிறப்பையுமிழந்து ஆண்மக்களினும் இழிவுடையரென்றும், தேவவழிப்பாட்டிற்கு அருகரல்லரென்றும், அவர்கள் விதவையாகச் சம்பவிக்கின் புநர்விவாகஞ்செய்துகொள்ளாது உடன்கட்டை யேறல் வேண்டுமென்றும், ஆரியர் ஏற்படுத்தி அவர்களை மிகு இழிவுபடுத்தி வந்தமையால், அவர்கள் வரவர அறிவுகுன்றி அறிவீனராய்விட்டனர்.

22. நாணய நிர்ணய சாஸ்திர (Nuinismatology) த்தில் இத்தேசப் பூர்வ நாணயங்களுள் அநேக நாணயங்களின் விவரமும், அந்நாணயங்களில் அமைந்துள்ள படங்களும் எழுதப்பட்டிருக்கின்றன. அந்நாணயக் காசுகளுள் சில காசுகளில் காளி சிங்கவாசனத்தின்மீது ஆரோகணித்திருக்கும் பாவனை அமைந்திருப்பதாக எழுதப்பட்டிருக்கிறது. இதனால் வீரபராக்கிரமம் பொருந்திய காளியென்ற மாது நெடுங்காலத்திற்குமுன் இத்தேசத்தின் பலவிடங்களை வென்று இராஜரீகஞ் செய்துவந்தனளென்றும், அவர் மரித்தபின் பூர்வ வழக்கத்தின்படி பராக்கிரமத்துடன் அரசாண்ட அவளை அவளது பராக்கிரமத்தைக் குறிப்பிக்க அவளது பின்சந்ததியார் மிருகேந்திரனாகிய சிங்கத்தை அவளுக்கு வாகனமாக ஏற்படுத்தி வணங்கிவந்தனரென்றும் விளங்குகிறது. ஆகையால் காளி இத்தேசத்தவரின் தெய்வமேயன்றி ஆரியரின் தெய்வமன்று. மேலே நாணயக்காசுகளிலுள்ள முத்திரைகளால் இத்தேசத்தவர்கள் ஆரியர் இத்தேசம்வந்து சேர்வதன் முன்னமே நாகரீகமடைந்து இராஜரீகஞ் செலுத்திவந்தனரென்று தெளிவாக விளங்குகின்றது. (காளிகோவிலுக்கு அளவிறந்த திரவியம் இத்தேசத்தவரால் வருவதைக்கண்ட ஆரியர் அத்திரவியங்களைத் தாங்கள் அபகரிக்கக்கருதி அக்காளியைப்பற்றிச் சில வாக்கியங்களைத் தங்கள் வேதாகமங்களில் எழுதிக்கொண்டு, அதை இவரிடங்காண்பித்து, அக்காளியைத் தாங்களும் வணங்குவதாகச்சொல்லி, வஞ்சித்து அவ்வாலயங்களைத் தங்கள் வசப்படுத்திக்கொண்டனர்.)

23 இந்துக்களின் நூல்களுள் ஒன்றிலேனும் ஆரியமதத்தைக் கண்டித்து எழுதப்பட்டிருக்கவில்லை; ஆனால், ஆரிய வேதாகமங்களிலோவெனில், இந்துமதங்களை இழிவுபடுத்தி எழுதியிருப்பதோடு இந்துக்களை ஆரியர் பகைத்து, அவர்களை வெல்ல ஆரியர் அவர்களுடன் யுத்தஞ்செய்து வந்ததாகவும், இத்தேசப் பூர்வகுடிகளும், அவர்கள் ஆரியர்களும் நாசமடைந்துபோகவேண்டுமென்றும், பூர்வகால ஆரியர் தங்கள் கடவுளைப் பிரார்த்தித்ததாகவும், இருக்கு முதலிய வேதங்களாலும், இதிகாச புராணங்களாலும் தெரியவருகின்றது. இதனால் இந்நூல்கள் எழுதப்பட்ட காலத்தில் ஆரியர் இத்தேசத்தில் இருந்தபோதிலும் என்றும், அவர் இத்தே

சம் வந்து சேர்வதற்குமுன்னமே இந்துக்கள் நாகரீகமடைந்திருந்தனரென்றுந் தெளிவாக விளங்குகின்றது.

21. இந்து தேசத்திலுள்ள பெரும் சிவாலயங்களும், விஷ்ணுஆலயங்களும் இத்தேசப் பூர்வகுடிகளாகிய டியூரேனிய முறைப்படி கட்டப்பட்டிருப்பதாகவும், ஆரியரின் சுவாதீனத்திலிருக்கும் அவ்வாலயங்களில் இடிந்துபோனவற்றை ஆரியர் தங்கள் முறைப்படி நவீனமுறையாகக் கட்டவில்லை என்றும், பெர்கூசன் என்னும் சிற்பசாஸ்திரி கூறியுள்ளார். இத்தேச வியாபாரச் சரக்குகள் ஐரோப்பா கண்டத்தில் மிகச் சிறப்போடும் மதிக்கப்பட்டு மிகு ஏராளமாகப் பலதேசங்களுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டுவந்தன. இக்காரணத்தால் இந்துக்கள் பூர்வகாலத்தில் நாகரீகமடைந்திருந்தனரென்று ஐரோப்பாமுதலான கண்டத்தவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

25. வேதம் ஓதுபவர்களை வேதியரெனவும், க்ஷாத்திரஞ் சாதிப்பவர்களை க்ஷத்திரியரெனவும், வேளாண்மை வாணிபம் முதலியவற்றைப் புரிவோரை வைசியரெனவும், மற்றைய தொழில்களை இயற்றுவோரைச் சூத்திரரெனவும் இவ்வாறு தொழிலினாலே வருணபேதம் ஏற்படுத்தப்பட்டதெனின், இந்நாற்கிரியைகளையும் இயற்றுவோர் மற்றெல்லாதேசங்களிலும் இருக்க, அவ்விடங்களில் வருணபேதம் ஏன் ஏற்படுத்தப்படவில்லை? மேலும் வேதங்களை ஒழுங்குபடுத்தின வலைச்சியின் புத்திரராகிய வியாசரும், இந்திரலோகத்துப் பொதுமகளாகிய ஊர்வசியின் கெர்ப்பத்தினின்று உதித்த அருந்ததியென்னும் மாதை மணம்புரிந்த வசிட்டமுனியும், க்ஷத்திரியகுல மரபினருக்குச் சண்டாளச்சி கெர்ப்பத்தினின்றுஉதித்துத் தமது தபோபலத்தினால் திரிசங்கு மகாராஜனைத் தூலதேகத்துடனே சொர்க்கத்திற்கனுப்ப அங்ஙனமே அவன் தன் தூலதேகத்துடனே செல்ல, அச்சொர்க்கவாசிகள் மண்ணுலகினின்று இவ்விடம் வருகின்றவன் யாரெனச்சினந்து அவனைத் தலைகீழாகத்தள்ள, தள்ளுண்ட அவன் அபயம் அபயமென ஓலமிட்டுக்கொண்டு அந்தரத்தில் வருவதை நோக்கிக் கோபித்து அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் ஆகிய தேவர்களென்னும் இந்நக்ஷத்திரங்களைப் பிடுங்கித் தென்றிசையில் நாட்டித் திரிசங்கு சொர்க்க

மென்னும் ஓர் நவீன சொர்க்கத்தை யமைத்த விஸ்வாமித்திரரும் தொழிலினால் பிராமணரானதுபோல், சூத்திரராகச் சமையல் செய்யும் பிராமண சுயம்பாகிகளும், கள் விற்கும் பிராமணர்களும் சூத்திரர்களாகவேண்டுமே. மேலும் பிராமணர் மது மாம்சங்களருந்தாதிருப்பதனால் உயர்த்தப்பட்டார்களெனின், பூர்வகாலத்தில் அநேக பசுக்களைக்கொன்று விற்றுஜீவனஞ்செய்துவந்த பிராமண குலத்திற்றோன்றிய அஜிகர்த்தனென்னும் முனியும், நாயின் மாமிசத்தைப் புசித்த பிராமணராகிய வாமதேவரும், விருதுவென்னும் தச்சனிடத்தில் அநேக பசுக்களை விலைக்குவாங்கியுண்ட பிராமணராகிய பாரத்வாஜமகா முனியும், சண்டாளன் வீட்டில் செத்துக்கிடந்த நாயின் மாமிசத்தைக்கேட்டு வாங்கிப் புசித்த விஸ்வாமித்திரரும் சூத்திரர்களாகவேண்டுமே. பூர்வ காலத்திலுண்டுவந்தார்களையன்றி இக்காலத்திலுண்பதில்லையெனின், இக்காலத்தில் இங்கிலாந்தினின்று செய்துவரும் மீனெண்ணெயையும், மாட்டின் மாமிசத்தால் செய்துவரும் பானங்களையும் உண்ணுகிறார்களே. அன்றியும், மாமிசத்தின் சாரமாகிய பால், தயிர், வெண்ணெய், நெய் முதலியவற்றை உண்பதுமன்றி யாகஞ்செய்து அஸ்வம் முதலியவற்றின் உடலையும் உண்டுவருகிறார்களே. பிராமணர் பால் கறந்துகொள்வது ஜீவவதையல்லவென்றும், மாமிச போஜனஞ் செய்வது ஜீவவதையென்றும், பால் ஊனினத்தைச் சேர்ந்ததல்லவென்றும் சொல்லின், கன்றுக்காகவே சுரக்கும் பாலை, கன்றை வஞ்சித்துக் கறந்துகொள்வதும், தங்கள் சுகத்தையேயன்றி மற்றப்பிராணிகளின் சுகத்தைக் கருதாது வனங்களில் சுயேச்சையாகத் தன்னிஷ்ட ஆகாரத்தையுண்டு ஓடி உலாவித் திரிந்துவரும் விலங்குகளைப் பிடித்துத் தங்களிஷ்டப்படி ஒழுக வண்டியிற் பூட்டித் தங்களைச்சுமந்து செல்லும்படி வருத்தி நடத்துவதும் ஜீவஇம்சையல்லவா? பால் கறந்துகொள்வதற்கும், சுமைகளைச் சுமப்பித்துக்கொள்வதற்கும் பிரதியாக அவற்றிற்கு வேண்டிய ஆகாரத்தை வருந்திச் சம்பாதித்து அளிப்பது, கறந்துகொண்ட பாலுக்கும் பெற்றுக்கொண்ட வருத்தத்திற்கும் அவ்வாகாரம் பிரதிபலனாவதால், அது குற்றமல்லவெனின், அவ்விலங்குகள் தங்கள் பாலையும் வருத்தத்தையும் பெற்றுக்கொண்டு தங்களுக்கு ஆகாரமளிக்கும்படி வேண்டிக்கொள்ளவில்லையே. மேலும், பால் ஊன் இனத்

வதைச்சேர்ந்ததுமல்ல. தாவர இனத்தைச் சேர்ந்ததுமல்லவெனின், அது பின்னென்ன இனத்திற்சேர்ந்தது? அதனில் ஜீவனில்லையெனின், கோழி முதலியவற்றின் அண்டங்களிலும் ஜீவனில்லையே! ஆகவே அவற்றினையேன் உண்பதில்லை? ஆகையால், அமிர்தம் அவற்றின் ஆகாரத்தினாலேயே அதிகரித்துங் குறைந்துமிருப்பதால் அது மாமிசத்தின் ஓர் கூறென்றும், பிராமணரும் மாமிசபோஜனர்களென்றும், தெளிவாக விளங்குவதுமன்றிப் பூர்வகாலந் தொடங்கிப் பிராமணர் சோமபானமும் செய்துவருவதாக அவர்கள் வேதாகமங்களிலேயே தெளிவாவதால், அவ்வதுப்பினைமட்டும் போஜனத்தில் உயர்ந்த சாதியாரென விசேஷித்துப் பேசவேண்டியதென்ன?

26. புளிப்பும் காறுமுள்ள சிறு மாங்கொட்டையை நாட்டி, அது மூன்று நான்கு அடி உயரம் வளர்ந்தபின் அதனை மற்றொரு மரத்துடன் ஒட்டுவதனால், அக்கனியின் நிறம், மணம், பருமன் முழுவதும் மாறி வேறுபடுவதுபோலப் பிராமணர் உதித்த ஐந்தாம்வயது வரையில் சூத்திரராக இருந்து, ஆறாம் வயதில் செய்விக்கப்படும் உபநயனத்திற்குப்பின் பிராமணர்களாகிறார்களெனின், ஒட்டுமாங்கனியின் குணங்கள் யாவும் வேறுபட்டிருப்பதுபோல, சூத்திரருக்கும் உபநயனம்பெற்ற பிராமணருக்கும் புலன்பொறிகளிலும் அக்கருவி புறக்கருவிகளிலும் ஏதேனும் பேதமிருக்கவேண்டுமே. அதன்றி, ஐந்து வயதுவரையில் சூத்திரராக இருக்கும் பிராமணப்பிள்ளைகள் உபநயனத்திற்குப்பின் பிராமணராகிறார்களெனின், ஆறு வயதிற்குட்பட்ட சூத்திரப்பிள்ளைகளையும் உபநயனஞ்செய்து ஏன் பிராமணராக்குவதில்லை? பிராமணச்சிறுவர்களை உபநயனஞ்செய்து பிராமணராக்கப்படுவரெனின், அது ஜாதியபிமானமன்றோ? சூத்திரகுலத்தினராக உதித்த ஆண்பாலருக்கு உபநயனஞ்செய்து பிரமகுலத்தினராக்குவதுபோல, பிராமணஸ்திரீகளுக்கு உபநயனஞ்செய்து பிரமகுலத்தினராக்குவதில்லையே. ஆகையால், அவர்கள் சூத்திரகுலத்தினராகவேண்டுமே. பிராமணஸ்திரீகள் உபநயனத்தினாலல்ல; பிரமகுலத்தினராகவே உதித்து, மாதருதகமாகுங் காலத்தில்மட்டும் 4-5 நாள் சூத்திரகுலத்தினராக மாறி மாதருதகமான ஐந்தாநாள் செய்யும் ஸ்நாநத்தினால் சூத்திரத்துவம் மாறி மீளவும் பிராமணர்களாகிறார்களெனின், ருதுவதியான நாள் முதல் முப்பது வருஷகாலம் அல்லது, ஸ்திரீத்து சசநிறை வரைக்கும் வியக்கத்தக்க கிரமமாய் ஒவ்வொரு மாதமும் மாதருதகங்கண்டுகொண்டேயிருக்கும் இம்முப்பது வருஷகாலமும் நகமும் தசையும்போல, சூத்திரத்துவம் பிராமணஸ்திரீகளைவிட்டுப் பிரியாதிருக்கின்றதே. மேலும், பிரமகுலத்தினராகவே உதித்த பிராமணஸ்திரீகளுக்குப் பாவசம்பந்தமாகிய சூத்திரத்துவம் பற்றினதெவ்வாறு? மாதருதகமாகிய இழிவு பிராமணஸ்திரீகளிடத்தில் அபின்னமாகவே இருக்கிறதெனின், அசுத்தமும் ஈனமும் பொருந்திய மாதருதகத்தையுடைய பிராமணஸ்திரீகளைப் பரிசுத்த தேகத்தையுடைய பிராமணர் அங்கீகரித்துக்கொள்வதெப்படி? ஆகையால் பிராமணர் அவர்களைத் தீண்டாமலும் அவர்கள் பாகஞ்செய்யும் போஜனத்தை உண்ணாமலுமல்லவோ இருத்தல் வேண்டும். அவ்வாறின்றிப் பிராமணர் மாதரைத் தங்களுக்குச் சமப்படுத்தியிருப்பதால், (யாதொரு பொருளின் கூறுகள் தம் முதற்பொருளின் இலட்சணமுடையனவாயிருப்பது பிரத்தியக்ஷமாக இருப்பதுபோல), உபநயனத்திற்குமுன் பிராமணரும், மாதந்தோறும் பிராமணஸ்திரீகளும், சூத்திரர்களாகவே இருப்பதால், அவர்களையும் சூத்திரர்களென்றே அங்கீகரிக்கவேண்டும். அல்லவெனின், சூத்திரராகவிருக்கும் பிராமணஸ்திரீகளுடன் பிரமகுலத்தைச்சேர்ந்த பிராமணர் சேர்ந்திருப்பதெங்ஙனம்? நீரோடு நீர் சேர்வதன்றி நெய் சேராதே.

27. பருத்தி நூலை முப்பிரிவாகத் திரித்துப் பூண்டிருக்கும் பூணூலினால் உயர்த்தப்பட்டார்களெனின், வள்ளுவர், கோமுட்டிகள், வணிகர், கம்மாளர் முதலியவரும் பூண்டிருக்கிறார்களே! ஆகவே, பிராமணருக்குமட்டும் பூணூலினாலுயர்வு எப்படி உண்டாகும்? பிராமணர் வேதமோதுதலினால் உயர்த்தப்பட்டார்களெனின், இக்காலத்தில் பறையர்முதலிய சர்வ ஜாதியாரிலும் அநேகர் கற்றிருப்பதுமன்றிப் பிரபலர் மாக்ஸ்முல்லர், சர் உவில்லியம் ஜோன்ஸ் முதலியவரும், சதுர்வேதங்கள் முழுவதையுங் கற்றிருக்கிறார்களே. "பிரம்மக்ஞானந்து பிராமண:" என்னும் வாக்கியத்தின்படி பிரம்மக்ஞானமுள்ளவர்களாக இருக்கும் மற்றைய முனித்தவரையும்

என் பிராமணரெனவும், பிரம்மக்கியானமற்றவர்களாக இருக்கும் பிராமணரைச் சூத்திரரெனவும் மொழிவதில்லை? ஆகையால் பூலோகத்திலுள்ள சமஸ்த மாந்தரும் ஏக ஜாதியாராக இருக்க இத்தேசத்தவர்கள்மட்டும் தொழிலினால் ஏற்றத்தாழ்வான நால் வகைச்சாதியாராகக் கடவுளால் வகுக்கப்பட்டார்களெனச் சாதிப்பது, தாஷ்டாந்த திருஷ்டாந்த வழுவாய் சமரசப்படாததலின், அச்சாதனையைக்கொண்டு வருணபேதமுண்டென்று சாதித்தல் கூடாது. ஆகையால், அது சாதனைவழுவேயாம்.

28. பிரம்மாவின் முகத்தினின்று பிராமணரும், புஜத்தினின்று க்ஷத்திரியரும், தொடையினின்று வைசியரும், பாதத்தினின்று சூத்திரரும் உதித்தார்களெனின், இந்நால்வகைச் சாதியாருக்கும் உட்படாத குறவர், மறவர், இருளர், மலையர் முதலியோர் பிரம்ம தேகத்தின் எப்பகுதியினின்று உதித்தவர்கள்? மேலும் மாதரினும் புருஷர் தேகமே பரிசுத்தமுடையதென்றும், அதனினும் பிரமாவானவர் அதிக பரிசுத்தமுடையவரென்றும், அதனினும்அவர் நாபிக்குமேலிருக்கும் சிரசு மிகவும் பரிசுத்தமுடையதென்றும் அத்தகைய சிரசினின்று பிராமணன் உதித்தமையால் அவன் நியாயமாக உயர்ந்திருக்கிறனெனின், சமஸ்த பிராமணரும் முறையே பிரம்மாவின் சிரசினின்று உதித்துவாராது அப்பரம்பரையார் பறையர் முதலியவர்களைப் போலவே மானிடரில் கடையாராகிய மாதரின் அசுத்தமும் ஈனமும் பொருந்திய யோனியினின்று உதித்து வருவது பரிசுத்தமாகுமா? அப்பின் சந்ததியார், யோனியினின்று உதித்துவரினும், ஆதிபிராமணன் பிரம்மாவின் சிரசினின்று உதித்தமையால் யோனிசம்பந்தமான குற்றம் சூரியனைக்கண்ட பனியைப்போல் அகன்றுவிடுகிறதெனின், பாவத்தினால் யோனியினின்று உதித்த பறையர் முதலியவர்களைப்போலவே பிராமணரும் அசுத்தமும் ஈனமும் பொருந்திய பகுதியினின்று உதித்து, பசி, தாகம், நோய், காமக்குரோதாதிகள் முதலியவைநிறையும், உலக துன்பங்களையுமடைந்து இறுதியில் மரணவேதனைக்குள்ளாகிஇறக்கவேண்டியதென்ன? மேலும், ஓர் அத்திமரத்தின் அடிநடுமுடியாகிய பல இடங்களில் கனிக்கும் பல கனிகளுக்குள் ஏதேனும் பேதம் உண்டா? இல்லையே. (இன்னும் வரும்.)

12 OCT 1918

உ

திருச்சிற்றம்பலம்.

Nattukkottai Vaiciyam

நாட்டுக்கோட்டை வைசியம்.

ஒரு மாதாந்தத் தமிழ் நூல்.

தொகுதி ௧ | பிங்கள ஹூ தை, மாசி மீ | பகுதி ௪௧, ௪௨.

கடவுள்வணக்கம் திருநாவுக்கரசர்.

நல்லான்காண், நான்மறைகளாயினான்காண், நம்பன்காண், நணுகாதார்புரமூன்றெய்தவில்லான்காண், விண்ணவர்க்கும்மேலானான்காண், மெல்லியலாள்பாகன்காண், வேதவேள்விச்சொல்லான்காண், சுடர்மூன்றுமாயினான்காண், தொண்டாகிப்பணிவார்க்குத் தொல்வான் ஈய வல்லான்காண், வானவர்கள்வணங்கியேத்தும் வலிவலத்தான்காண், அவன் என் மனத்துளானே.

ஊனவன்காண், உடல்தனக்கோருயிரானான்காண், உள்ளவன்காண், இல்லவன்காண், உமையாட்கென்றுந்தேனவன்காண், திருவன்காண், திசையானான்காண், தீர்த்தன்காண், பார்த்தன்தன் பணியைக்கண்டானவன்காண், கடலவன்காண், மலையானான்காண், களியானையீருரிவைகதறப்போர்த்தவானவன்காண், வானவர்கள் வணங்கியேத்தும் வலிவலத்தான்காண், அவன்என்மனத்துளானே

உய்த்தவன்காண், உடல்தனக்கோருயிரானான்காண், ஓங்காரத்தொருவன்காண், உலகுக்கெல்லாம்வித்தவன்காண், விண்பொழியும்மழையானான்காண், விளைவவன்காண், விரும்பாதார்நெஞ்சத்தென்றும்பொய்த்தவன்காண், பொழிலேழுந்தாங்கினான்காண், புனலோடும்வளர்மதியும்பாம்புஞ்சென்னிவைத்தவன்காண், வானவர்கள்வணங்கியேத்தும்வலிவலத்தான்காண் அவன்என்மனத்துளானே.

பெண்ணவன்காண், ஆணவன்காண், பெரியோர்க்கென்றும் பெரியவன்காண், அரியவன்காண், அயனானான்காண், எண்ணவன்காண், எழுத்தவன்காண், இன்பக்கேள்வி இசையவன்காண், இப்லவன்காண், எல்லாங்காணுங்கண்ணவன்காண், கருத்தவன்காண் கழிந்தோர்செல்லுங்கதியவன்காண், மதியவன்காண், கடலேழ்சூழ்ந்தமண்ணவன்காண், வானவர்கள்வணங்கியேத்தும் வலிவலத்தான்காண், அவன் என்மனத்துளானே. திருத்தாண்டகம்

கங்கையாடிலென் காவிரியாடிலென்
கொங்குதண்குமரித்துறையாடிலென்
ஓங்குமாகடலோதநீராடிலென்
எங்குமீசனெனாதவர்க்கில்லையே

பட்டராகிலென் சாத்திரங்கேட்கிலென்
இட்டமட்டியுமே தொழில்பூணிலென்
எட்டுமொன்றுமிரண்டுமறியிலென்
இட்டமீசனெனாதவர்க்கில்லையே

கானநாடுகலந்து திரியிலென்
ஈனமின்றியிருந்தவஞ்செய்யிலென்
ஊனையுண்டலொழிந்து வானோக்கிலென்
ஞானமென்பவர்க்கன்றிநன்கில்லையே

கோடிதீர்த்தங்கலந்துகுளித்தவை
ஆடினாலுமரனுக்கன்பில்லையேல்
ஓடுநீரினையோட்டைக்குடத்தட்டி
மூடிவைத்திட்டமூர்க்கனொடொக்குமே. திருக்குறுந்தொகை

தம்மானங்காப்பதாகித் தையலார்வலையுளாழ்ந்து
அம்மானையமுதன்றன்னையாதியையந்தமாய
செம்மானவொளிகொண்மேனிச் சிந்தையுளொன்றிநின்ற
வெம்மானை நினையமாட்டேன் என்செய்வான்றோன்றினேனே.

வென்றிலேன்புலன்களைந்தும் வென்றவர்வளாகந்தன்னுட்
சென்றிலேனாதலாலே சிந்தெநியதற்குஞ்சேயேன்
நின்றுளேதுளும்புகின்றேனீசனேயீசனேயோ
இன்றுளென்நாளையில்லேன் என்செய்வான்றோன்றினேனே.

கால்கொடுத்திருப்பமூட்டிக் கதிர்நரம்பாக்கையார்த்துத்.
தோலுடுத்துதிரமட்டித் தொகுமயிர்மேய்ந்தகூரை.
யோலெடுத்துழைநர்கூடி யொழிப்பதற்கஞ்சுகின்றேன்.
சேலுடைப்பழனஞ்சூழ்ந்த திருக்கொண்டீச்சரத்துளானே
திருநேரிசை

ஓதவண்ணனுமொண்மலர்ச்செல்வனும்
காதணம்மருளாமென்றுநாடொறும்
காதல்செய்துகருதப்படுமவர்
பாதமேத்தப்பறையுநம்பாவமே.

இளமைகைவிட்டகறலுமூப்பினோர்.
வளமைபோய்ப்பிணிபோகுவருதலால்
உள்ளமேலாமொளியாய்மதியாயிலுன்
கிளமையேகினையாகநினைப்பனே. திருக்குறுந்தொகை

நமது இந்தியாவும், அந்தணரும்.

முன் 40-வது புத்தகம் 823-வது பக்கத்தொடர்ச்சி.

அதுபோல, மாந்தர் பிரம்ம தேகத்தின் பல இடங்களில் ஜனித்திருப்பினும் ஜாதிபேதம் இல்லாதிருக்கவேண்டும். யானை, குதிரை, மாடு, புலி முதலியவற்றின் சப்தமும், சிரசும், பாதங்களும் ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருப்பதுபோலப் பிராமணருக்கும் மற்றைய ஜாதியாருக்கும் ஏதேனும் பேதாபேதக்குறிகள் காணப்படுகின்றனவா? இல்லையே! மேலும் ஓர் ஜாதி பாதத்தின் இலை, காய், பூ, பட்டை, ரசம், மண முதலியவை மற்றொரு ஜாதிமரத்திற்குப் பேதப்பட்டிருப்பதுபோலப் பிராமணருக்கும் சூத்திரருக்கும் என்பு, தோல், உதிரம், தசை, நிணம், மணம், புத்தி காமக்குரோதாதிகளில்ஏதேனும் பேதப்பட்டிருக்கின்றனவா? இல்லையே. சாதிபேதத்தைக் கடவுளே ஏற்படுத்திப் பிராமணரை உயர்ந்த வருணத்தாராக விதித்தாரெனின், கடவுளின் அபிமான புத்திரர்களாகிய பிராமணரைத் தீ சுடாமலும், சர்ப்பம் கடியாமலும், சூரியவெப்பம் அவர்கள்மேற் படாமலும், மரணமும் வியாதியும் அவர்களை யணுகாமலுமல்லவா இருத்தல்வேண்டும்? அவ்வாறின்றி, இவையனைத்தும் மற்றைய ஜாதியாருக்கு அமைந்து

கடந்தேறுவதுபோலவே பிராமணருக்கும் அமைந்து கடந்தேறிவந்தும் அவ் வகுப்பினரைமட்டும் உயர்ந்தஜாதியாரெனச் சாதிப்பதெங்ஙனம்? அன்றியும், மாடுடனாடும், புலியுடன் பூனையும், பன்றியுடன் குதிரையுஞ் சேருமா? சேர்ந்தாலுஞ் சூலாகுமா? ஆகாதே. ஆகவே, ஜன்மத்தினால் வருணபேதம் தோன்றியதெனின், ஒருஜாதி பெண்பாலருடன் மற்றொருஜாதி ஆண்பாலர் சேராமலுஞ் சேர்ந்தாலும் கெர்ப்பமாகாமலுமல்லவா இருத்தல்வேண்டும். மேலும், பிராமணராகஇருக்கும் வஷிஷ்டர் தூர்த்தஸ்திரீயின் வயிற்றினின்றும், விஸ்வாமித்திரர் சண்டாளச்சி கெர்ப்பத்தினின்றும் உதித்தார்களே! அஃதென்ன? அன்னையர்கள் எச்சாதியர்களாக விருப்பினும் தந்தையர்கள்மட்டும் பிராமணர்களாக விருப்பின் அவர்களுக்கு உதிக்கும் மைந்தரைப் பிராமணராகவே அங்கீகரிக்கவேண்டுமெனின், பிராமணருக்கு விலைமாதர் கெர்ப்பத்தினின்று உதிக்கும் வேசிமக்களை ஏன் பிராமணரெனப்படுவதில்லை? மேலும், தந்தையருடைய குலத்தையே நோக்கவேண்டுமெனின், சில பிராமண விதவைஸ்திரீகள் சூத்திரர்மீது காதல்கொண்டு, அவர்கள் காம உல்லாசத்தைக்கவர்ந்து மைந்தரைப் பெறுகின்றனரே! அம்மைந்தரை ஏன் பிராமணரெனப்படுவதில்லை?

28. மேலும், பிராமணர் மது, ஊன், அரக்கு, உப்பு. பால் இவற்றை விற்றால் அவர்களது ஜாதி தவறிவிடுமென மனுகூறியுள்ளார். ஒருஜாதி விலக்கு கிரியையினால் மற்றொருஜாதி விலங்காவதை ஒருவருங் கண்டதுங் கேட்டதுமில்லையே! அதுபோல், அநேக பிராமணர் அவிள்தக்கடைகள் வைத்துக்கொண்டு அதில் மாமிசம் பால் முதலியவற்றை விற்றுவருவதால், மது மொழிவது போல அவர்கள் வேறொரு ஜாதியினராயிருக்கவேண்டியதுமன்றி அவர்கள் ஜாதி இழந்தவர்களென்று ஒருவரும் மொழிவதுமில்லையே! ஆகையால், ஜன்மத்தினால் ஏற்பட்ட வருணபேதம் உப்பு முதலியவற்றை விற்பதினால் எவ்வாறு கெடும்? கெடாதே! மாந்தர் பூர்வகர்மத்தினால் அந்த ஜாதியாராய் உதிப்பதெனின், அது அனுபவ பிரத்தியக்ஷ பிரமாணங்களுக்கு மாறுபட்டிருப்பதுமன்றி, கலியுகத்தின் புண்ணிய மிராதென்று இந்து வேதாகமங்கள் முறையிடுவதால், இக்காலத்தில் பிராமணர் இல்லாதிருக்கவேண்

டியதுமன்றி இப்பொழுதிருக்கும் பிராமண சனனம் புண்ணியஜனனமென்ப தெங்ஙனம்? அன்றியும், பிராமணர் நற்குணத்தினாலுயர்த்தப்பட்டார்களெனின், ஒற்றுமைப்பட்டிருந்த இத்தேச பூர்வகுடிகளை ஐக்கிய சம்பந்தத்தினின்று பலவாறாகக் கலைத்து ஒருவரையொருவர் பகைக்கச்செய்ததும், பிராமணஸ்திரீகளைமட்டும் எவர்களும் இச்சிக்கலாகாதெனவும், மற்ற மூவினத்தவரின் மாதரைத் தாங்கள் சையோகிக்கலாமெனவும், தங்களுக்கே தானங்கொடுக்கவேண்டுமெனவும், தாங்களே உயர்ந்தஜாதியாரெனவும், தம்மவரில்சிறிது வாசித்திருப்பவர்களை மிகவும் புகழ்ந்து, இதர ஜாதியாரில் வாசித்திருப்பவர்கள் எவ்வளவு கலைவல்லவர்களாக இருப்பினும் அவர்களைப்பற்றி மிகு இழிவாக இகழ்வதும், தங்கள் சமயக் கோட்பாடுகளில் குற்றங்கள் இலக்ஷக்கணக்காக இருப்பினும் அவற்றை மறைத்து இதரசமயக் கோட்பாடுகளிலுள்ள குற்றம் அற்பமாக இருந்தாலும் அதனைப்பிரம்மாண்டமாக்கிப் பேசுவதும், உத்தியோகத்திலிருக்கும் இதர ஜாதியாரின் நாசத்தையே கருதி அதற்கு வேண்டிய பலமுயற்சிகள் எடுத்துக்கொள்வதும் நற்குணமாகுமா? ஆகாதே! நல்லொழுக்கத்தினாலுயர்த்தப்பட்டார்களெனின், பிராமணரில் அநேகர் வேசிமார்க்கராகி அநேக கொடியவியாதிகளை யடைந்து வருவதை நாம் தினந்தோறும் பார்த்து வருவதுமன்றி, மதுபானஞ்செய்தும், இளம்பிராயமுடைய செல்வப் புத்திரர்களை வேசையர்பால் விட்டு அவ் விருவரிடத்தும் திரவியங் கிரகித்தும் வருவதால் ஒழுக்கத்தினாலும் இவர்களில் அநேகரை உயர்ந்த ஜாதியாரென அங்கீகரிப்பது எப்படி?

29. பிராமணர் நிறத்தினால் உயர்த்தப்பட்டார்களெனின், அவர்களினும் சூத்திரர் சிவந்த நிறத்தையுடையவர்களாக இருப்பதுமன்றி, தென்தேசப்பிராமணர் அனைவரும் இருண்டநிறத்தையுடையவர்களாக இருக்கின்றனரே. சூத்திரரைப் போலவே இருண்டிருக்கும் இவர்களைமட்டும் உயர்ந்த ஜாதியாரென அங்கீகரிப்பதெப்படி? பேசும் வசனங்களினால் உயர்த்தப்பட்டார்களெனின், அவர்கள் தங்கள் தாய் தமக்கை தங்கை தமயன் முதலியவர்களை மரியாதையின்றிவாடி போடி, வாடா போடாவென்றுபறைபறும் வசனியாத விதமாக வசனிப்பதால் இவ்வாறுவசனிக்கும்

இவர்களை எங்ஙனம் சாதியிலுயர்ந்தவர்களாக அங்கீகரிப்பது? சூத்திரர் முதலியவர்கள் அசுசியுள்ளவர்களென்றும், ஆகையால் அவர்களால் தீண்டப்படும் போசனமும் அசுசிபடுமென்றும் அப்படி அசுசிபான்னத்தைப் பிராமணர் உண்ணாதிருப்பதனால் உயர்த்தப்பட்டார்களெனின் (சுசி என்பது ஸ்நானத்தினா லுண்டாவது.) ஸ்நானஞ்செய்வதற்குமுன் பிராமணரும் அசுசியுள்ளவர்களென்றும், அசுசியுள்ள பிராமணரால் தீண்டப்படுவதும் அசுசிபடுமெனின், ஸ்நானஞ்செய்திருக்கும் சூத்திரராலும் தீண்டப்படுவது அசுசிபடாதிருக்கவேண்டுமே. ஆகவே அவற்றினை ஏன் உண்பதில்லை?, மேலும், அவர்கள் உண்ணும் போசனத்தை மற்றெவ்வகுப்பினருக்குங் காண்பியா துண்பதனால் உயர்த்தப்பட்டார்களெனின், அப்போசன பதார்த்தங்களாகிய அரிசி, கோதுமை, நெய், பால், காய், கிழங்கு முதலியவை பறையர் முதலிய கீழ்குலத்தவரிடத்தினின்றுபெறுவதுதானே; அவற்றில் தீட்டில்லையா? பாகஞ்செய்தபின் இதர சாதியாரால் பார்க்கப்படுமானால் தீட்டாகுமேயன்றி, சமைப்பதற்குமுன் அவை தீட்டாவதில்லையெனின், இதர சாதியாரால் பார்க்கப்படும் போசனத்தில் என்ன வேறுபாடு நவீனமாக உதிக்கும்? எவ்வித மாறுபாடுமுண்டாவதில்லை; தீட்டாகிறதெனின் தீட்டெனினென்ன? அம்மொழிக்குப் பொருளுண்டா? இல்லையே! பொருளில்லாத அப்பிரயோசன மொழியை வழங்குவது வீணருக்குரிய கிரியையல்லவா? ஆகையால் வருணபேதம் பயனற்றவர்களுக்குரிய கொள்கையாம் என்பதில் என்ன ஆக்ஷேபம்?

30. பிராமண சிறுவர்கள் உபநயனத்திற்குப் பின் எப்படி பிராமணர்களாகிறார்களோ அப்படி, பிராமண ஸ்திரீகள் தங்கள் கணவரை ஆலிங்கனஞ் செய்துகொண்டபின் அவர்கள் சூத்திரத்துவம் தங்கள் கணவரது சுக்கிலத்தால் நிவாரணமாய் பிராமண ஸ்திரீகளாகிறார்களென்பது அவர்கள் கோட்பாடு. அதுவரையில் அவர்கள் பாகஞ்செய்யும்போசனத்தைப் பிராமணர் தீண்டார்கள். புருஷருக்கு உபநயனத்தினால் பிராமணத்துவம் வருவதுபோல் ஸ்திரீகளுக்குச் சையோகத்தால் பிராமணத்துவம் வருகின்றதாம். சையோகத்தால் பூர்வசனனம் நிவாரணமாய், நவீனசனனப்

உண்டாகிறதெனின். பிராமணஸ்திரீகளில் சிலர் சூத்திரச் சாதியாருடன் சையோகிக்கிறார்களே! உதிக்கும்போதே சூத்திர ஸ்திரீகளாக உதித்து, சையோகத்தால் பிரம்ம குலத்தினராக மாறிய பிராமண ஸ்திரீகள் சூத்திர சாதியாருடன் சேர்ந்தபின் மீளவும் சூத்திர ஸ்திரீகளாக வேண்டும் அவ்வாறன்று, முதல் சையோகத்தால் மட்டும் கீழ்குலம் உயர்குலமாகுமே யன்றி முதல் சையோகத்திற்குப் பின் செய்யும் புணர்ச்சியினால் குலம் மாறுமெனின். மலையாள ஸ்திரீகள் ருதுவதியானவுடன் முதலில் பிராமணருடன் சேர்ந்து, பின்பு தங்கள் சுயசாதி கணவருடன் சையோகிக்க வேண்டுமென பிராமணர் ஏற்படுத்தி, அவ்வாறே முதலில் தாங்களே சையோகித்து வருகிறார்களே. பிராமண ஸ்திரீகள் சையோகத்தால் பிரம்ம குலத்தினரானதுபோல, மலையாள ஸ்திரீகளும் பிரம்ம குலத்தினராகவேண்டுமே. இதன்றி, வைஷ்ணவ பிராமண ஸ்திரீகள் விவாகமாய் ருதுவதியாவதற்குமுன் விதவையாகச் சம்பவித்தால் சக்கராங்கிதம் செய்துகொள்ளின் அவர்கள் சூத்திரத்துவம் விலகி பிராமணத்துவம் வருகிறதென்றும், சைவபிராமண ஸ்திரிகள் ருதுவதியாவதற்குமுன்விதவையாகச்சம்பவிப்பின் தலைமயிரைச்சௌளஞ்செய்துகொள்ளின் சூத்திரத்துவம் விலகி பிராமண ஸ்திரிகளாகிறார்களென்பதும் அவர்கள் கோட்பாடு. வைஷ்ணவ பிராமண விதவை ஸ்திரிகளின் சூத்திரத்துவம் சக்கராங்கிதத்தினால் நீங்குமெனின், விஷ்ணு கோவிலில் தேவதாசிகள் அனைவரும், அநேகம் சூத்திரர்களும் சக்கராங்கிதம் செய்துகொள்ளுகிறார்களே! அவர்களேன் பிரம்ம குலத்தினரெனப்படுவதில்லை? விஷ்ணு தேவாலய ரிஷபங்களுக்கும் சக்கராங்கிதம் செய்கிறார்களே அவ்விரிஷபங்கள் சக்கராங்கிதம் பெற்றவுடன் ஏன் மானிட உருவை அடைவதில்லை? தென்கலை பிராமண ஸ்திரீகள் ருதுவதியாவதற்கு முன் விதவையாகச் சம்பவித்தால் தலைமயிரைச் சௌளஞ்செய்யாமல் மாட்டுச்சாணம், மூத்திரம் முதலியவற்றால்செய்யும் பஞ்சகவ்விய மென்பதையுண்ணின், அவர்களது சூத்திரத்துவம் விலகிப் பிராமணத்துவம் வருகிறதெனின், சாச்சடங்குசெய்யும் சூத்திரர் முதலிய சமஸ்த சாதியாரும் பஞ்சகவ்வியத்தை யுட்கொள்ளுகின்றனரே! பஞ்சகவ்வியத்தை உட்கொள்ளும், ஒவ்வொரு சூத்திரர் முதலிய விதவை

ஸ்திரீகளும் பிராமண ஸ்திரீகளாக வேண்டுமே. (தென்கலை பிராமண விதவைஸ்திரீகளின் சூத்திரத்துவத்தைப் போக்கிப் பிராமணத்துவத்தை உண்டாக்குவது யாட்டு சாணமும், மூத்திரமும் போலும்!) மேலும், சைவ பிராமணவிதவை ஸ்திரீகள் தலைமயிரைச் சௌளம்செய்வதனாலேயே சூத்திரத்துவம் விலகிப் பிராமணத்துவம் வருகிறதெனின், அநேகசூத்திர விதவை ஸ்திரீகளும் சௌளம் செய்துகொள்ளுகிறார்களே. மயிரினாலேயே விலகின சூத்திரத்துவம் மயிர் வளரும்போது மீளவும் மயிருடன் வளர்ந்தேவருமே!

31. பிராமண ஜனனம் புண்ணிய ஜனனமெனின், துக்கமும் கொடிய நோய்களும், பிரசவவேதனையும் பிராமணருக் கில்லாதிருக்கவேண்டுமே. அவ்வாறின்றி. பாவிகளாகிய பறையரையே பற்றி வருத்தவேண்டிய பாவசம்பந்தமாகிய குஷ்ட முதலிய கொடிய நோய்கள், புண்ணியத்தினால் புண்ணிய ஜனனமெடுத்த பிராமணரையும் பற்றி வருத்துவதால், பிராமணஜனனம் புண்ணிய ஜனனமென்பதெங்ஙனம்? மேலும், பாவத்தினால் பாவஜனனமெடுத்த பறையரினும் நூறுமடங்கு அதிகமான பிராமணஸ்திரீகள் அமங்கலிகளாகிய தங்கள் இச்சைகளை மனக்களிப்போடு நிறைவேற்றத்தக்க கணவரை இழந்து, தங்கள் உயிர் உள்ளளவும், மனக்கொதிப்பை யடைந்து, தீராத துக்கக்கடலில் முழுகியிருக்கிறார்களே! அம்மாதருடன் அம்மாதரின்பெற்றோரும் சகோதரரும், சகோதரிகளுமாகிய அக்குடும்பத்தாரனைவரும் அந்நிர்ப்பாக்கிய மாதரைக்கண்டு என்று மொழியாத துக்கத்தில் முழுகி இருப்பதால், துக்கக்கடலில் முழுகி இருக்கும் பிராமண ஜனனம் புண்ணிய ஜனனமென்பதெங்ஙனம்? இதன்றி, பிரசவநோ யெனும் கொடிய நோய் கீழ்க்குலமாதரை மட்டும் வருத்தி, உயர்குல மாதராகிய பிராமணஸ்திரீகளை வருத்தாதிருக்க நாம் காண்கின்றோமில்லையே! ஆகையால் இவர்களை மட்டும் உயர்ந்த ஜாதியாரென்பதென்ன? மேலும் பாபத்தினால் சம்பவிக்கும் மலடு, சூத்திரர் முதலிய பாவகுலமாதரில் சம்பவிப்பது போலவே புண்ணியகுல மாதாராகிய பிராமண ஸ்திரீகளிலும் சம்பவித்துத் தங்கள் வமிசம் தங்களோடு அஸ்தமித்துப்போவதை எண்ணி எண்ணி துக்கித்து பூலோக பிரயாணத்தை மனக்கொதிப்புடன்

கழிந்து. மலடிகளாக விருக்கும் பிராமண ஜனனம் புண்ணிய ஜனனமென்பதெங்ஙனம்? சூத்திர ஜாதியார் தங்கள் பிள்ளைகளின் மரணத்தைக் காண்பதுபோலவே, பிரம்மாவின் அபிமான புத்திரராகிய பிராமணரும் தாங்கள் பெற்று வளர்த்த தங்கள் அருமையான மக்களை மசானத்திற்கு இரையாக்கி, முறையோவென்று அலறி துக்கிக்கும்படி சம்பவிப்பதால் அவர்களைமட்டும் பிரம்மாவின் அபிமான புத்திரரென்பதென்ன? மேலும் இந்து சமயக்கொள்கையினின்று வேறு சமயக்கொள்கையைக் கைப்பற்றிய பிராமணன் சமயபேதி யானானேயன்றி ஜாதிபேதியாகவில்லையே! ஆகையால், அவனைப் பிராமணனென்று கூறாது, இழிகுலத்தவனென்றும் ஜாதி இழந்தவனென்றுங் கூறவேண்டியதென்ன? ஆதியில் பிராமணர் முதலிய நால்வகை வருணத்தவரும் ஏககாலத்தில் வகைக்கு ஒவ்வொருவரே பிரம்மாவினால் சமைக்கப்பட்டனரென இந்து சமய நூல்கள் கூறுகின்றமையால், இந்நால்வகைச் சாதியாரும் எவ்வளவு அபிவிருத்தியாயினும் ஒரு ஜாதியாருக்கு மற்றொரு சாதியார் எக்காலத்தினும், எவ்வளவேனும் ஏற்றத் தாழ்வின்றி, சமஎண்ணிக்கையினராகவே இருத்தல் வேண்டும். அவ்வாறின்றி 1881-ம் வருஷம் எடுத்த குடிமதிப்பில் சூத்திரர்கள் பிராமணரினும் அதிகமாக விருக்கின்றார்களே! உலக சிருஷ்டிகாரன பிரம்மாவின் அபிமான புத்திரரும் சேஷ்ட புத்திரருமாய பிராமணர் மற்றைய சாதியாரினும் சமஎண்ணிக்கையினராக இராது குறைந்து போனதற்குக் காரணமென்ன? அன்றியும் பிராமணர் அனைவரும் ஆதியில் பிரம்மாவின் சிரசினின்று உதித்த ஒரே மனிதனின் பரம்பரையினின்று தோன்றிய ஒரே குடும்பத்தாரெனின், அவ்வகுப்பினர் அனைவரும் ஏகோபித்து சமரசப்பட்டல்லவோ இருத்தல் வேண்டும்? அவ்வாறின்றி விந்தியமலைக்கு வடக்கிலிருப்பவர்கள் காசிய பிராமணரெனவும் விந்தியமலைக்குத் தெற்கிலிருப்பவர்கள் திராவிட பிராமணரெனவும் பிரிந்து, இவ்விருவகுப்பினரில் ஒவ்வொருவகுப்பினரும் ஐவைந்து உட்பிரிவினராகவும். அவ்வைந்தில் ஒவ்வொரு வகுப்பினரும் அனந்தம் உட்பிரிவினராகவும் பிரிந்து, ஒருவகுப்பினர் மற்றொரு வகுப்பினர் மனையில் போசனஞ்செய்யாதும், ஒருவருக்

கொருவர் கொள்வனை கொடுப்பனை செய்யாதும், ஒருவரையொருவர் பகைக்கின்றமையால், பிரம்மா தேகத்தின் பல இடங்களில் உதித்த இடபேதத்தினால் வருணபேதம் தோன்றிய தென்பது வழுவான கோட்பாடென்று தெளிவாக விளங்குகின்றது. வருணபேதமென்னுங் கொடிய கரம் நீண்டது உங்கள் பழுதான செய்கைகளைக்காட்டி. நொறுக்குவதற்கே யன்றி, ஆதரித்து வழி காட்டவல்ல. வருணபேதத் தீங்கால் விளையுந் தீமைகளை உங்களைச் சூழ நான்கு திக்கும் தேசாத்தியந்தம் நாசமடைந்து வரும் க்ஷீணதசையினாலும், செல்வ அழிவினாலும் திருஷ்டாந்த பூர்வமாய் காணலாம். ஆகையால் உங்கள் அனைவருக்கும் சமுதாய க்ஷேமம் தடையறப் பெருகும்வண்ணம் உங்கள் சாமர்த்தியத்திற்கும் திறமைக்குந் தக்கபடி வழுவான கோட்பாடுகள் எதேதுண்டோ அதையெல்லாம் அவலம்பித்து முக்கியமான கால்வாய்களை வெட்டிவிடுவீர்களாக.

32. வருணபேதமென்னுங் கோட்பாடு கவிவாந்தரத்தில் செய்யப்பட்ட மனுநூலிற் கூறியிருப்பதேயன்றி, அதனை மெய்ப்படுத்தத்தக்க யாதொரு சாக்ஷியுமில்லை யாதலால், அது அங்கீகரிக்கப்படத்தக்கதல்ல. அக்கோட்பாடு கடவுளால் சமைக்கப்பட்டதெனின், மற்றைய தேசத்தவர்களின் சமய நூல்களில் அதனைப்பற்றி ஓர் வாக்கியமாவது கூறியிராததென்ன?

33. இத்தேசத்தவர்களின் குலாசார மதாசாரங்களின் பேதாபேதங்களையும், உத்தியோகத் தொழில்களையுங் காட்டும் "வருண" மென்னும் வடமொழி, விதம் வகை, இனம், குலம், சாதி, வர்க்க மென்னும் பலபொருள் கொள்ளும். இது 'பூலோகத்தில் எத்தேசத்தாராலும் வழங்கப்படாமல் இவ்விந்துதேசத்தாரால் மட்டும் வழங்கப்படுகின்றது.

34. ஆரியர் பூர்வ அரசரிடத்தில் மந்திரிகளாகவும் கல்விச் சங்கத்தாராகவும் அமர்ந்து, இதிகாச மெழுதியவரால் எழுதப்பட்ட சரித்திரங்கள் அரசர்முன்பாகக் கொண்டுவரப்பட்டு அரங்[illegible]ல் செய்விக்கப்பட வேண்டுமென நியமித்து, முறையே

கொண்டுவரப்பட்ட இதிகாசங்களில் தங்களைப் புகழ்ந்திருப்பவையை யங்கீகரிக்கச்செய்தும், தங்கள் பூர்வோத்தரங்களில் உள்ளதை உள்ளபடி எழுதியிருப்பினவற்றை யழிக்கச்செய்ததனாலும் தங்களுக்கு முனனிருந்த பூர்வசரித்திரங்களை ஒளிக்கச்செய்ததனாலும் இப்பரியாய தீபத்தின் பூர்வசரித்திரம் இல்லாது போயிற்று. இமயமலைக்கு வடமேற்கிலுள்ள பாரசீகக்குடிகள் தீயை வணங்குவதுபோல பிராமணர்களும் வேள்வி, யாகாதி கிருத்தியங்கள், தீபாலங்காரம், சூரியநமஸ்காரஞ்செய்து தீயை வணங்குவதாலும்; பாரசீகரும், மகம்மதியரும் ஆத்திகருக்குள் வழங்கும் ஆன்மாவென்னும் மிசிரமற்ற தனிப்பக பதார்த்தம் ஆண்பாலாருக்கேயன்றிப் பெண்பாலாருக்கில்லையென்றும், ஆகையால் அவர்கள் வேதங்களை ஓதவும் கடவுளை வணங்கவும் படாதென்று தடுத்திருப்பதுபோல் பிராமணரும் மாதரை வேதம் ஓதுதலினின்றும், தேவ வழிபாட்டினின்றும் விலக்கி யிருப்பதாலும், அவர்களது பாஷையும், நடையுடைபாவனைகளும் இத்தேசத்தவர்களின் நடை யுடை முதலியவற்றிற்கு முற்றும் பேதப்பட்டிருப்பதாலும், ஒரு தேசத்தினின்று மறுதேசத்தில் குடி ஏறி இருப்பவர்கள் அத்தேச பூர்வ குடிகளைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்துவது போல, பிராமணர் இத்தேசத்துப் பூர்வ குடிகளைத் தங்களுக்குக் கீழ்ப்படுத்தியிருப்பதாலும், மகம்மதியர் தங்கள் ஊழியங்களை இயற்றுவித்துக்கொள்ள அடிமைகளை வாங்குவதுபோலவும், விற்பதுபோலவும், ஆரியர் இத்தேச பூர்வகுடிகளிடத்தில் தங்கள் கிரியைகளை இயற்றுவித்துக்கொள்ளவும், அவர்கள் செல்வத்தைக் கிரகித்துக்கொள்ளவும் சாதிபேதங்களை நிருபித்திருப்பதாலும் இத்தேசத்தின் பூர்வ இதிகாசமில்லாவிடினும், மேற்கண்ட காரணங்களால் அவர்கள் இத்தேச பூர்வகுடிகளல்லவென்றும், பாரசீக தேசத்தினின்று இத்தேசத்தில் குடியேறியவர்களென்றுந் தெளிவாக விளங்குகின்றது,

35. உலகடல்சூழ்ந்த இப்பூலோகத்தின்கண்ணே சிறந்து விளங்காநின்ற இத்தேசம் எக்காலத்திலுங் குறைவுபடாத நீர்வளமுள்ள கங்கை, சிந்து, யமுனை, காவேரி முதலிய பெரியதும் சிறியதுமான பல நதிகளை அடுத்தடுத்துடையதாயும், வரைது,

பலா, மா, தெங்கு, கரும்பு முதலிய பலனுள்ள பலசோலைகளையும், சண்பகம், பாதிரி முதலிய விருக்ஷங்களால் நெருங்கி வண்டுகள் பாடுகின்ற மலர்ச்சோலைகளையும், நறுமணம் வீசும் அழகிய நானாவித மலர்கள் மலர்ந்திருக்கும் செடிகளில் அம்மலர்களுக்கேற்ற பலவித வர்ணங்களையுடைய சிறிய புள்ளினங்கள், காண்போரெவருங் களிக்கும்படி யம்மலர்களில் ஒழுகும் மதுரத்தை அருந்த அருணோதயங்களில் மலர்கள்தோறும் பறந்துதிரியும் வண்டினங்களையுடைய நந்தனவனங்களையும், தாமரைத்தடாகங்களையும் நீர்நிறைந்து அல்லி நீலம் முதலிய புட்பங்கள் மலர்கின்ற ஓடைகளையும், ஏரி, குளம் முதலிய பல நீர்நிலைகளையும், செந்நெல் முதலிய பலவித பயிர்கள் மாறாது முப்போகமும் விளைகின்ற குறைவற்ற விளைவையுடைய புலன்களையும், அரசமண்டபங்கள், விசித்திரமண்டபங்கள், விநோதமண்டபங்கள், சித்திரமண்டபங்கள், நியாயஸ்தலங்கள், கல்விச்சாலைகள், ஆயுதசாலைகள், சிலம்பக்கூடங்களு முடையதாய் எத்தேசத்திலும் இதுவே சிறந்ததென்று விளங்கிய இக்கண்டத்தின் வடகோடியிலுள்ள பஞ்சாப மாகாணத்தில் ஊடுருவிச்செல்லும் சிந்துநதிவரையில் வந்து போன பூர்வ இதிகாசமெழுதிய ஹெரோடெட்சுக்கும் இதனை யாண்டுவந்த சந்திரகுப்தனென்னும் சக்கரவர்த்திக்கு முன்னும் அறமுறை வழுவாது செங்கோல் நடாத்திவந்த பௌத்தமதபரபில் தோன்றிய பரமேசுபரனென்னும் சக்கரவர்த்திக்கு சுமார் 3000-வருஷங்களுக்கு முன் மகாதபசியாகிய விருஷபதீர்த்தங்கருடைய காலத்தில் தன்னாணையைச்செலுத்திச் சத்துருக்களை நாசஞ்செய்து சான்றோருக்குத் துணைபுரிந்து வந்தார், அப்போது இந்தியாவின் வடமேற்கிலுள்ள பாரசீகக்குடிகள். தங்கள் தேசத்திலுண்டான பஞ்சத்தால் அன்னவஸ்திராதிகளுக்கு வருவழியின்றி வருந்தியிருக்கையில் கீழ் கண்டமாகிய இவ்விந்துதேசத்தை வந்துபார்க்க, இது சகல சுகானுபவங்களிலுங் குறைவற அமைந்திருப்பதுமன்றி இத்திசைக்குடிகளில் பெரும்பான்மையோர், என்பு பலகறை முதலியவற்றை ஆபரணங்களாக அணிந்தும் தோல், இலை, மரப்பட்டைகளை ஆடைகளாக உடுத்தியும், பல பாஷைகளைப்பேசியும், நானாவித மாம்சாதிகளைப் பாகஞ்செய்

யாதுண்டும் வந்ததைக்கண்ட அப் பாரசீகர் களிப்புற்று, முதலில் சிந்துநதிவரையில் குடிபுகுந்து பின்பு கங்காநதியோரமுழுவதும் வியாபித்தார்கள்,

36. பூர்வகாலத்தில் ஆரியரே வான்சாஸ்திரம் தெரிந்தவர்களாயும் இத்தேசத்தவர்கள் அச்சாஸ்திரம் சிறிதேனினும் தெரியாதவர்களாயும் இருந்ததனால், அவர்கள் இத்தேசமன்னவரிடத்தும் பிரஜைகளிடத்தும் எதிர்காலத்தில் சம்பவிக்கும் சூரிய சந்திரகிரணங்களைப்பற்றி முன்னறிவித்து, அவ்வாறே சூரிய சந்திராதிகள் மறைபட்டுப் போவதைக் காண்பித்து அதிசயிக்கும்படிச்செய்து தங்களிடத்தில் ஒன்றுமில்லாத மதிப்பையும், கௌரவத்தையும், அச்சத்தையும் வருவித்துக்கொண்டபின், ஆகாயவீதியில் தோற்றும் வியாழன் முதலிய கிரகங்கள் தங்கள் சுயகுலத்தைச் சேர்ந்த பிராமணர்களெனவும், அவர்கள் கடவுள் தயவை அதிகமாகப்பெற்றதனால் சுடரொளி தேகத்தைப்பெற்று நக்ஷத்திரமண்டலத்தில் கிரகங்களாக உயர்த்தப்பட்டார்களெனவும், அக்கிரகங்களின் சுயகுலத்தவர்களான தங்களால் செய்யப்படும் கிரியைகளை அக்கிரகங்கள் அங்கீகரித்துக்கொண்டு தங்கள் வேண்டுதலை அளிக்கின்றனவென்வு மொழிந்து, மாந்தருக்கு நேரிடும் மனவருத்தம், பிணியாதிகளை நிவர்த்திக்க நவக்கிரக சாந்தி முதலிய கிரியைகளைத் தங்களைக்கொண்டு செய்விக்கப்படவேண்டுமெனவும், மந்திரவல்லமையினாலும், யாகாதிகிருத்தியங்களினாலும் மழை பெய்விக்கத் தங்களுக்கு வல்லமையிருக்கிறதெனவு மொழிந்து, முறையே தங்களைக்கொண்டு செய்வித்தும், இறந்தோர் ஆன்மா மிகுந்த பசியால் வருத்தமடைந்திருக்குமெனவும் அவற்றின் பசியைத் தணிக்கப் பிராமணரைத்தவிர மற்றொருவராலுமாகாதெனவு மொழிந்து தங்களைக்கொண்டு அப்பசியைத் தணிக்கச் சாச்சடங்காகிய தர்ப்பணம் செய்விக்கப்பட வேண்டுமெனவும், யாகத்தால் வேந்தர்குல பாபினருக்குப் புத்திரபலனும், வெற்றிச்சிறப்பும் உண்டாகுமென வேந்தருக்கு ஆசைவார்த்தைகளூட்டி, தங்களைக்கொண்டே அக்கிருத்தியங்கள் செய்விக்கப்படவேண்டுமெனவும், தங்களுக்குப்பின் அக்கிருத்தியங்களை

இயற்றுவிக்கத் தங்கள் புத்திரர் பௌத்திரர்களை பரம்பரை முறையாக வரவேண்டுமெனவும் நியமித்து, யாகசாலைக்கு வேதியரும், வேந்தரும் வித்தியாசமின்றிவந்து, ஒன்றுசேர்ந்து, ஒரு பந்தியில் கலந்துண்பதனால் தீட்டென்று எண்ணாது உண்டுவந்ததுமன்றி, க்ஷத்திரியபுத்திரிகளை மணந்தும் க்ஷத்திரியமன்னர் மனைகளிலும் யாகசாலைகளிலும் பாகஞ்செய்யும் நவ நவமான மாம்சாதிகளையுண்டுவந்தும், தூதர்களாக ஸ்தானாபத்தியம் போயும், தூரதிருஷ்டிசக்தியுடையவர்கள்போல் பின் நடப்பவைகளை முன் குறிப்பிக்கும் சோதிடத்தையும், சுப அபசகுனங்களை உணர்த்துகிறதென்று பகரும் சகுனங்களையும் தங்களைக்கொண்டு தெரிந்துகொள்ள வேண்டுமெனவும் புத்திரசந்தானமில்லாதவர்கள் தங்கள் ஆரியகுருக்களைக்கொண்டு செய்வித்துக்கொள்ளலாமெனவும் விதித்து அவ்வாறே தசரதன் முதலிய மகுடவர்த்தனர்களின் பட்டபஸ்திரீகளுடன்புணர்ந்தும், கணவரை இழந்த க்ஷத்திரியவைசிய சூத்திரவிதவை ஸ்திரீகள் தாங்கள் அணிந்திருக்கும் ஆபரணங்கள் அனைத்தையும் பிராமணருக்குத் தானஞ்செய்து, இறந்த தங்கள் கணவருடன் உடன்கட்டை ஏறுபவர்க்கும் அவர்பொருட்டு அக்குடும்பத்தாரனைவருக்கும் மோக்ஷங்கிடைக்குமென் றேற்படுத்தியும் அவ்வாறே அவர்கள் அணிந்திருக்கும் ஆபரணங்கள் அனைத்தையும் கிரகித்து, அவர்களைத்துடிக்கப் பதைக்கத் தீயிற்பாய்ந்து உயிருடன் வெந்தெரிந்து சாம்பராகும்படிச் செய்தும், வியாதியில் வருந்தும் க்ஷத்திரிய வைசிய சூத்திரர்கள் தங்கள் மனைவிமக்களுடன் திருப்பதிக்குச்சென்று சிரமுண்டிதஞ் செய்வித்துக்கொண்டு காணிக்கை செலுத்தில், அவர்கள் வியாதிசொஸ்தப்படுமெனப் பிராமணர் வதந்தி பிரப்பித்து முறையே அதனை நம்பி வருபவர்களைச் சிரமுண்டிதஞ் செய்வித்துக்கொள்ளச்செய்து, அவர்கள்கொண்டு வந்த காணிக்கையையும், அவர்கள் அணிந்திருக்கும் மங்கிலிய முதல் சமஸ்த வெள்ளி பொன்னாபரணங்களையுந் தங்களுக்கு முன்னிலைச்சுட்டாக இருக்கும் அவ்வாலய தெய்வத்திற்குச் சமர்ப்பிக்கச்செய்தும், கொச்சி திருவாங்கூர் முதலிய மலையாள மாகாணங்களில் நம்பூரிகளாகிய அப்பிரமேத பிராமணர் "அறுபத்து

நான்குவகை சையோகபேதங்கள் முற்றுமறிந்த கன்னிகைகளை இறந்தவர்கள்" எனவதந்திபிறப்பித்து அவ்வாறே உயர்குலத்திலுதிக்கும் செல்வக்கன்னிகைகளை அவர்கள் பெற்றோரால் சம்பளமும் வெகுமதியும்பெற்று, ருதுவதியாவதற்குமுன்னமே அக்குலமகளிருக்குச் சையோக விதங்கள் கற்பிப்பவர்களைப்போல் அவர்களைச் சையோகித்தும், அத்தேச எக்குலமகளிரும் பிராமணர் தங்களை இச்சித்துத்தங்களை ஆலிங்கனம் புரிபவரில், அம்மாதர் தங்கள் கணவருடன் சயனித்துக்கொண் டிருப்பினும் அக்கணவனை அப்புறப்படுத்தி, வந்த பிராமணனின் சாதலை நிவர்த்தித்து அவர் சென்றபின் தங்கள் நாயகருடன் சயநிக்கவேண்டுமென ஓர் ஏற்பாடும் ஏற்படுத்தி அவ்வாறே அம்மாதலரைப் புணர்ந்தும் இவ்வாறு தங்கள் எண்ணத்தைப் பலவற்றாலும் நிறைவேற்றினார்கள்.

37. இராமன் கிருஷ்ணன் முதலிய குருநிலமன்னர்களையடுத்து நீங்கள் எங்கள் ஜீவனுள்ளவரையில் எங்களைக் கடவுளைப் போலெண்ணி கடவுளுக்குச் செலுத்தும் வழிபாடனைத்தையும் எங்களுக்குச்செலுத்தி வேண்டிய பொருளை எங்களுக்குத் தந்து வருவீர்களானால், நீங்கள் இறந்தபின் உங்கள் உடலை க்ஷேபித்த இடத்தின்மீது உங்கள் பெயரால் ஆலயங் கட்டுவித்து உங்களை நாங்கள் கடவுளாக எண்ணி வணங்குகிறோமென மொழிந்து. அவ்வரசர் ஜீவித்திருக்கும் வரையில் எண்ணிறந்த பிராமணர்கள் அவ்வரசரைச் சூழ்ந்து, விலாப்புடைக்க உண்டு உடுத்து வந்தார்கள். அவ்வரசர் இறந்தபின் அவர்கள் மைந்தரைக்கொண்டு முறையே ஆலயஞ் சமைப்பிக்கச்செய்து. இவரே பிரத்தியக்ஷமான தேவதை என வதந்தி பிறப்பித்து அவர்கள் மைந்தரைக்கொண்டும் மற்றவர்களைக்கொண்டும் அக்கடவுளுக்கு விவாகமென்றும் சோபனமென்றும், காலை போசனமென்றும், மாலை போசனமென்றும் நகர்சோதனை வருகிறாரென்றும். இன்று பள்ளியறைக்குப் போகிறாரென்றும். ஏற்படுத்தி. இன்னின்னகிரியைகளுக்கு இன்னின்ன பதார்த்தங்கள் வேண்டுமெனவும் இவ்வி வளவு பொருள் காணிக்கையாகக் கொடுக்கவேண்டுமெனவும் ஏற்படுத்தி அவர்கள் பொருளைக் கிரகித்தார்கள்.

38. ஆரியர் தங்கள் வாக்கு அணுவுந்தவறாமல் காளடைவில் அனைத்தும் நிறைவேறுமென்று அரசர் உள்ளத்தில் வழுவான நியாயத்தால் உறுதி பிறப்பித்ததனாலே. இதம் சொல்லும் இயற்கையுள்ள ஆரியர் வாக்குறுதியை நம்பித் தங்கள் மாதலரையும் பொருளையும் அவர்களுக்குச் சமர்ப்பித்து, அவர்கள் வசமாகி அவர்கள் சொன்னபடி எல்லாம் ஆடினார்கள். ஆனதனால் ஆரியர் கிருஷ்ணன்முதலிய அரசர்களைத்தேவர்களென்றும், தெய்வப்பிறப்பென்றும், தெய்வீகத்தன்மை யுடையவர்களென்றும், அவர்கள் புரிந்த துர்க்கிரியைகள் முதலிய குற்றங்களைப் பாரதமுதலிய இதிகாசங்களில் புகழ்ந்து பேசுகிறார்கள், குலத்தினாலும் குணத்தினாலும் சிறந்து தம் நிலத்தில் வாழுங் குடிகளின் ஜீவனையும், சொத்தையும், தம் ஜீவனெனவும் சொத்தெனவும் பாவித்துரக்ஷிக்கும்மாக்ஷிமையுள்ளவர்களும் சிறிதாயினும்நெறிமுறை தவறாமல் தயாள சிந்தையுடன் ராஜாதிகாரம் செலுத்துபவர்களும் பிறர் சுக துக்கங்களைத்தம் சுகதுக்கம்போல எண்ணி நடப்பவர்களும், தம்மனதிற்கு ஒவ்வாதனவற்றை நாடாதவர்களுமாகிய இராவணன் இரண்யன் முதலிய பௌத்தமத பட்டவர்த்தனர்களை வரம்புகடந்தபேராசையால் நாள் ஏற ஏற, அவ்வாசை எனும் பேயின் வசப்பட்டு, அடுத்து, தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ள முயன்றார்கள் அயல் உடைமைக்குப்பேயாய்ப் பறந்து அகத்தில் ஒன்றும், புறத்தில் ஒன்றும செய்யும் குணமுடைய இவ்வகுப்பினர் செய்த வாக்குபசாரம். மாயகட்டு, ஒப்பாச்சாரங்களால் ஆனந்தமடையாமல் இவர்களுககு அடிநாக்கு நஞ்சு, நுனிநாக்கு அமுதமென்று யுத்திபூர்வமாய்க் கண்டறிந்து இவர்களைத் தமதுநாட்டினின்று அப்புறப்படுத்தினர். இராவணன் இரணியன் சாமான்யமானவர்களல்ல. கல்வியாதி நாகரீக ஒழுக்கங்களில் சிறந்தவர்களானதால், ஆரியர்பிடற்றினின்றுடைக்கும் சித்திரப்பேச்சுகளுக்கு மனமகிழ்ந்து ஏமாற மதிகேடர்களல்லவே. இக்காரணத்தினாலேயே ஆரியர் ஆக்ரமித்து இவர்களை இராக்ஷதரென்றும், அரக்கரென்றும் மிகு இழிவாகப்பகர்ந்து, தமக்கு வசப்பட்ட மகுடவர்த்தனரைக்கொண்டு கெடுநினைவால் இவ்வரசனையும், அவர்கள் குடிகளையும், நகரங்களையும் அக்கினிக்கு இரையாகும்படிப் பருகா

ணம்செய்வித்தும், கிரீடம்தரித்த சிரசில் க்ந்தையும், சிறந்த நவரத்தினங்கள் இழைத்த தங்கச் சரிகைப் பட்டாடைதரித்த இடையில் கம்பளிப் புடவையும் அலங்கோலமாய்ச் சுற்றிக்கொண்டு மலரினும் மிருதுவான அடிகள் வருந்த பாதரக்ஷையின்றிப் பதைத்துத்துடித்துத் திரியும்படிச்செய்து தங்கள் எண்ணத்தைப் பலவற்றாலும் நிறைவேற்றியபின், (மநு நூல் 21-22-23 அத்தியாயங்கள்) இமயமலை முதல் விந்தியமலை வரையிலும், யமுனை நதிமுதல் கங்காநதிவரையிலும் தங்கள் வசமாக்கி, இமயமலை முதல் விந்தியமலைவரையில் ஆரியவர்த்தமெனவும், அவர்கள் பலங்கொண்ட இடமாகிய சிந்துநதிமுதல் சரஸ்வதியாறு வரையில் பிரமவர்த்த மெனவும். விந்தியமலைக்குத் தெற்கிலிருப்பவையனைத்துந் தண்டகாரண்ய மெனவும், அவ்வாரண்யத்தில் ஆரியர் குடியேறலாகாதெனவும் விதித்தனர். ஆரியரினின்று இத்தேசமன்னவரும், மன்னவரினின்று ஆரியருந்தோன்றி இருப்பதைக்கருதாது தங்கள் சுயஜாதியார் விர்த்தியான அநேகவருஷங்களுக்குப்பின் இடங்கொண்டு, பூர்வ இந்துக்களுக்குள் பக்ஷபாதமின்றி நானு சமயத்தாரையுந் தற்காக்குந்தன்மையுள்ள சட்ட திட்டங்களைற் றட்டு அவனவன் தன்தன் மதநிபந்தனைகளையும் கிரியைகளையும் திண்டாட்டமின்றி அனுஷ்டித்துவரும்படி விதிக்கப்பட்டிருந்த சட்டதிட்டங்களை ஆரியர் ஒழிக்கச்செய்து, தங்கள்சட்டதிட்டங்களையே சார்ந்தொழுகும்படி நயத்திலும் பயத்திலும் பலவந்தஞ்செய்து தங்களுக்குக் கீழ்ப்படுத்திக்கொண்டு, தங்களை மந்திரிகளாகவும் சேனாதிபதிகளாகவும் உயர்த்தவேண்டுமென மகுடவர்த்தனர்களைக் கேட்டமைந்து எங்கும் வியாபித்துப் பரவினார்கள் இவர்கள் தங்கள் சுயகுலத்தவர்கள் விர்த்தியடைந்த அநேக நூற்றாண்டுகளுக்குப் பின்னர் நிரக்ஷரேகைக்கு அதிதொலையில் இருந்ததனால் சிவந்திருக்குந் தங்களை ஆரியரெனவும், சூரியவெப்பத்தால் கறுத்திருக்கும் இத்தேச பூர்வகுடிகளைத் தாசியரெனவும் இரு வகுப்பாகப் பிரித்து, இத்திசைக் குடிகளைக் கீழ்ப்படுத்தித் தாங்கள் மேன்மையடையக் கருதிச் சர்வதேச காலங்களிலும் மிகு பூர்வீகமாயுள்ள தெனவும், எதனினும் சிறந்ததெனவும், இவர்கள் நாய், மாடு, குதிரை, பசுக்களை யுண்டு வந்தகாலத்திற்கு முந்தியே கொல்லாவிரதத்தைப்பெற்றதெனவும், (மநு நூல் 364-வது புறம்

105-வது சுலோகம்,) "அஜீகர்த்தனென்னும் முனி பசியினால் வருத்தப்பட்டு சுனச்சேபன் என்னும் தன் சொந்தப்பிள்ளையைக் கொண்டு நூறு பசுக்களைக்கொல்வித்து அவற்றின் மாம்சத்தைத் தானே விற்றார்." 106" தருமத்தையும் அதருமத்தையும் நன்றாக அறிந்த வாமதேவர் பசியினால் கஷ்டப்பட்டுத் தன் பிராணனைக் காப்பாற்றும் பொருட்டு நாயின் மாமிசத்தைப் புசித்தார்." 107-" தவத்தில் முதிர்ந்த பரத்வாஜமகாமுனி தன் புத்திரனுடன் நிர்மானுஷ்யமான காட்டில் விருதுவென்னுந் தச்சனிடத்தில் அநேக பசுக்களை வாங்கினார்." 108—" தருமாதருமங்களை யறிந்த விஸ்வாமித்திரர் பசியினால் துன்பப்பட்டு சண்டாளன் கையிலிருந்த நாயின் மாமிசத்தை வாங்கினார்." (மநு நூல் 23-வது சுலோகம்.) "கிருஷ்ணாஜமென்னும் மானானது எந்தவிடத்தில் சுபாவமாய் சஞ்சரிக்கின்றதோ அந்த விடந்தான்யாகஞ் செய்வதற்குரியது. மற்ற விடம் சூத்திரர்வசிக்கும் அசுத்தமான மிலேச்ச தேசமென்று சொல்லப்படும். " 24-இப்படிப்பட்ட புண்ணியதேசங்களை இருபிறப்பாளராகிய ஆரியர் வேறுதேசத்திற் பிறந்தவராயினும் (வேறுதேசமென்பது பாரசீகம்) வந்தடையவேண்டியது. அல்லது சூத்திரர் ஊழியத்தொழிலவிட வேறு விருத்தியை எந்தவிடத்தில் அடையமாட்டார்களோ அந்தவிடத்தில் வசிக்கத்தக்கது (பிராமணர் தங்களுக்கு கிருஷ்ணாஜமென்னும் மானின் மாம்சத்தில் அதிப்பிரீதி எனக் குறிப்பிக்க அதன் தோலில் சிறிது துண்டித்து ஆவணியாவட்டம் அல்லது ஸ்ராவத்தில் பூணூலில் கட்டிக்கொள்வதுமன்றி, அதன் தோலின்மீது உட்கார்ந்து ஜபதபங்கள் செய்து, தங்கள் தேவாராதனை சாமான்களை அதன் தோலால் செய்த பையில் வைத்துக்கொள்ளுகிறார்கள்.) கௌத்தமபௌத்தரென்பவர் இரண்டு கோடியே தொண்ணூற்று மூன்று இலட்சத்து அறுபத்தெண்ணாயிரம் எழுத்துக்களுடன் பிடகாகியமென்னும் முப்பத்திரண்டு பிரிவுகளாக எழுதிய தர்மபாடா (Dkammapada) வென்னும் வேதத்தினின்றும் இவ்வேதத்திற்குப் பின் ஜோராஸ்டர் (Zoroaster) எனும் பாரசீக வேதியன் எழுதிய ஜின்டவஸ்டா (Zendevesta) என்னும் வேதத்தினின்றும் சிலவற்றை நீக்கி சிலவற்றைத் தழுவி இல்லாதன சிலவற்றை

ஞாதனமாகச் சேர்த்து, முதலில் நவீனமாக ருக் வேதத்தை எழுதினார்கள். இச்சுயதேசத்தவரான பௌத்தமத இறைவர்களிடத்தில் அவ்வேதந் தாங்கள் கடவுளால் பெற்ற வரப்பிரசாதமெனவும் அதனை ஓதத் தாங்களே உரியவர்களெனவும் இனி இத்தேசம் தங்களால் நற்சீருங்குவா எதிர்நோக்கிக்கொண்டிருக்கிறதெனவு மொழிந்து, அதனை யாவரும் அங்கீகரிக்கும்படி உபாயதந்திரஞ் செய்தார்கள். அதனை யாவரும் அங்கீகரித்தபின் தாங்கள் உயர்ந்த ஜாதியாரெனவும், க்ஷத்திரியர் முதலானவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களெனவும், இத்தேசப் பூர்வ குடிகளைத் தொடுவதனால் தீட்டெனவுஞ் சாதித்து, இத்தேச மன்னர் முதலானவர்களுடன் கலந்திருந்த பாரசீகராகிய ஆரியர் தங்கள் சுயகுலத்தவர்களுள் ஓர் சங்கங்கூடி, வேதம் ஓதுபவர்களை வேதியரெனவும், புஜபல பராக்கிரமத்தை க்ஷாத்திரத்துடன் சாதிப்பவர்களை க்ஷத்திரியரெனவும், வாணியம் செய்வோரை வைசியரெனவும், மற்றையத் தொழில்களை இயற்றுவோரைச் சூத்திரரெனவும் வகுத்து, தொழிலினாலே ஜாதி வகுப்புப் பிரித்தார்கள். மநு என்பவர் அச் சங்கத்திற்குச் சபாநாயகராக இருந்ததனால் அச் சபையில் எழுதப்பட்ட நூலுக்கு மநுதருமநூலென்று பெயரிடப்பட்டது. அம்மநுவுக்குச் சுவாயம்பு, சுவாரோசிஷன், தேபஸ, சூரிய, ரைவதன், சாக்ஷுஷன், வைசுவதன் என்ற ஏழு பெயர் தவிர, வேறு ஏழு பெயர் உபயலமாக இருந்து உதவி புரிந்தனர். இவர்களுக்கும் இவர் பின் சந்ததியாருக்குமே பிராமணரெனவும், வேதியரெனவும், அந்தணரெனவும் பெயராம்.

இவர்கள் பெரும்பாலும் பொருளாசையும், பொய்யும், வஞ்சனையும், தந்திரமும், தற்புகழ்ச்சியும், சுயஜாதியாரிடத்து விசுவாசமும் உள்ளவர்கள். இவர்களே இத்தேசத்தவர்களை ஐக்கிய சமபந்தத்தினின்று கலைத்து, பல பிரிவினராகப் பிரிந்து ஒழுகும்படிச் செய்து, தற்கால சீர்கெட்ட நிலைமைக்குக் கொண்டுவந்தவர்கள். இவர்கள் அந்நூலில் கண்டவண்ணம் உயர்ந்த வருணத்தாராக இருப்பதால், மற்றைய மூவினத்தவரும் வருந்தி சம்பாதிக்கும் பதார்த்தங்களில், உயர்ந்ததும் நல்லதுமான சமஸ்த பதார்த்தங்களையும் தமக்கே அளித்து. தாழ்வனவற்றிலும் தங்களுக்கு வேண்

மெல்லனவுமட்டும் எடுத்துக்கொண்டு மற்றதையும் தம்மவருக்கே அளித்துவிடவேண்டுமெனவும், கடவுளை வணங்கத் தாங்களே உரியவர்களெனவும், மற்ற மூவினத்தவரும் அக்கடவுளைத் தங்கள் முன்னிலையிலன்றி வழிபடலாகாதெனவும், தங்களைக் கடவுளாக வழிபடவேண்டுமெனவு மேற்படுத்தி போதித்து வந்தமையை, (மநுநூல் 122-ம் சுலோகம் சூத்திரன் சுவர்க்கத்திற்காகவாவது, ஜீவனத்திற்காகவாவது அல்லது, இரண்டிற்குமாகவாவது பிராமணனையே தொழவேண்டும். இவன் பிராமணனையடுத்த சூத்திரனென்று ஒருவனுக்குப் பெயர் வந்தால் அதுவே அவனுக்குப் பாக்கியம். ஆதலால் பிராமணனை யுபசரிப்பதே சூத்திரனுக்கு எல்லாத் தொழிலையும்விட மேலான தருமமென்று கருமகாண்டத்தில் சொல்லியிருக்கிறது.) நாலுதிக்குகளிலுமுள்ள இத்தேசகனவான்கள், தனவான்கள், மன்னர், மகுடாதிபதிகள், பட்டவர்த்தனர்கள் யாவரும் ஒப்பாமல் ஆட்சேபித்ததனால், மநுநூல் எழுதிய பிராமணரும் மற்ற பிராமணரும் ஒருங்குகூடி ஆலோசித்துத் தங்கள் எண்ணத்தை நிறைவேற்றத் தங்கள் குலத்திற் பிறந்த பரசுராமனை *மகுடவர்த்தனனாக்கினார்கள். (தன் தாயைப் படுகொலை செய்தவனும், ஜமதக்கினி புத்திரனுமாகிய பரசுராமனென்பவன் க்ஷத்திரிய வம்சத்தைக் கருவறுக்கப் பன்னிரண்டு தடவை படையெடுத்து அநேகரைச் சங்கரித்தவன்.) அவன் அகமகிழ்ந்து முகமலர்ந்து சிங்காசனத்தைப் பெற்றுக்கொண்டான். அவன் தாமரை மலர்போல் முகமும், செவிக்கினிய மொழியும், கடுவிஷங்கக்கும் அகமும், எவர் குடி கெடுத்தும் என்னென்ன துரோகஞ் செய்தும், தானுந் தன் இனத்தவருமட்டும் பெருவாழ்வு வாழும் அபிலாசமுள்ளவன். அவன் தனக்கும் மநுநூலாசிரியருக்கும் நற்சமயம் வாய்த்ததென்றெண்ணி தங்கள் சட்ட திட்டங்களுக்கு எதிர்த்து நிற்பவர்களை அமர்க்களத்திற்கு வரவழைத்து படுகொலை செய்தும், அச்சுறுத்தியும் தங்கள் சட்ட திட்டங்களில் ஓரக்ஷரமேனுந் தவறிப்போகாமல் யாவும் எழுத்தெழுத்தாக இத்தேச பூர்வ குடிகளின் அநுஷ்டானத்திற்கு வருமளவும் தங்கள் ராக்ஷஸ மன வலிமையால் தங்கள் கோட்பாட்டிற்குச் சிறந்த சின்னமாக வருணபேதத்தையும், தங்கள் சமயாசாரங்களையும் பின்பற்றுபவர்

தன் எவர்களும் சமயச்சின்னங்களாகிய திருநீறெனும் வெண்குறியையும், நாமமெனும் செங்குறியையும் முகத்தில் பதிந்துகொள்ளவேண்டுமெனவும், வருணபேதக்குறிகளாகிய முதலியார் நாயடு முதலிய மொழிகளையும் அவரவர் பெயர்களுக்கு இறுதியில் அழியா முத்திரையாகக் கூட்டிக்கொள்ளவேண்டுமெனவும் விதித்தனர். (மநுநூல்-சாதகர்மாதி சமஸ்காரம். 30-31-32-வது அத்தியாயங்கள். "பிராமணருக்கு உதிக்குங் குழந்தைக்குப் பத்து அல்லது பன்னிரண்டாவது தினத்தில் புண்ணியதிதியில் நல்ல முகூர்த்தத்தில் நல்ல நக்ஷத்திரத்தில் நாமகரணஞ் செய்யவேண்டியது. பிராமண குழந்தைக்கு மங்களத்தையும், க்ஷத்திரிய குழந்தைக்குப் பலத்தையும், வைசிய குழந்தைக்குப்பொருளையும், சூத்திர குழந்தைக்குத் தாழ்வையும் பிராமணருக்கு அடிமையெனப் பொருள்படும் பெயரையும் இடவேண்டியது. பிராமண குழந்தைக்கு ஐயர்-ஐயங்கார்-ஆசாரி என்பதையும், க்ஷத்திரிய குழந்தைக்கு ராவ்-உடையவர் என்பதையும், வைசிய குழந்தைக்கு செட்டி என்பதையும், சூத்திரக்குழந்தைக்கு முதலியார்-நாயடு-நாயக்கன், கௌண்டன்-பிள்ளை-கிராமணி என்பதையும் அவரவர் பெயர்களுக்கு இறுதியில் தொடர்மொழியாக வரவேண்டியது.") இதர ஜாதியாரையும், மதங்களையும் ஜென்மப் பகையாகப் பகைத்துக் கிஞ்சித்தும் இரக்கமின்றி வருத்தும் உருகாத இருப்பு நெஞ்சுடைய இதர மதத் துவேஷிகளாகிய ஆரியர் அவ்விரு முத்திரைகளையும் பதித்துகொள்ள விருப்பமில்லாத பௌத்தர்களைத் தங்களுக்கு ஐக்கியப்பட்டவர்களைக்கொண்டு இவர்களையும் உடனுமுள்ளாருமெலித்திருக்கும் மெல்லியர்களாகிய அவர்கள் ஆடவர்களையும் எவ்வித பழி பாதகமும் அறியாத அவர்கள் பசுங்குழந்தைகளையும் சிறிதுந் தயாள சிந்தையின்றித் துடிக்கப் பதைக்கக் கழுமரங்களிலேற்றியும், கற்காணங்களில் கழுத்திறுகப் பிடித் தரிப்புக் தாட்டியும், இன்னும் சொல்லிமுடியாதவிதங்களால் மானிட உதிரப்பிரவாகத்தைப் பெருக்கிச் சைவ வைணவசமயம் வருணபேதமென்னுமிருவித விதைகளையும் இத் தென் கண்டத்தின் பல திசா முகங்களிலும் நாட்டி, அவை ஓங்கி வளர்ந்து தழைக்கச் செய்தார்கள். அதன் பின் பூர்வ மதநூலுக்கு உபபலமாக வதிஷ்

டர், கௌதமர், கசியபர், உசனர், அத்திரி, காத்தியாயனர், பராசரர் முதலியவர்கள் இடங்கொண்டு ஜாதிவகுப்புத் தங்களால் வகுக்கப்பட்டதாக இருக்கலாகாதெனக் கருதி. பிரம்மாவின் முகத்தினின்று பிராமணரும் புஜத்தினின்று க்ஷத்திரியரும், தொடையினின்று வைசியரும், பாதத்தினின்று சூத்திரரும் உதித்ததாக ஏற்படுத்தித் தம்மவர்களாகிய பிராமணரின் ஜீவன விருத்திக்காகவே சதுர்த்தருக்குத் தனித்தனியான கிரியைகள் பிரித்தனர். அவற்றில், பிராமணருக்கு வேள்வி செய்தல், வேள்விசெய்வித்தல், வேதமோதுதல், வேதமோதுவித்தல், தானம் வாங்குதல், தானங்கொடுத்தல் என்னும் அறுவகைக் கிரியைகளையும்; க்ஷத்திரியருக்கு வேதமோதுதல், வேள்வி செய்தல், தானங்கொடுத்தல், பிரஜைகளைக் காத்தல், மன அடக்கம் என்றைவகைக்கிரியைகளையும், வைசியருக்கு வேதமோதுதல், தானங்கொடுத்தல், பசுவைக்காத்தல், வாணிபஞ்செய்தல், வட்டிவாங்குதல், வேளாண்மைசெய்தல் என்னும் அறுவகைத் தொழில்களையும், சூத்திரருக்கு பிராமணர் அடிமைத்தொழில் செய்வதென்னும் இழிதொழில்களையுந் தனித்தனியாகப் பிரித்தனர். க்ஷத்திரிய வைசியருக்குக் கற்றுக்கொடுத்து அவர் திரவியத்தைக் கிரகிப்பதற்காகவே பிராமணர் தங்கள் பிராமணகுருவுக்குச் சிறிது பொருளளித்து வேதமோதவும் வேள்வி செய்யவுங் கற்றுக்கொள்ளவேண்டுமெனவும், உலகத்திலுள்ள சமஸ்தபதார்த்தங்களும் தம்பொருட்டே பிரம்மாவினால் படைக்கப்பட்டனவெனவும் ஆகையால் அவை எவர்களிடத்திலிருப்பினும் தங்களுக்கே பாத்தியமுள்ளவைகளாக இருப்பதாயும் அவற்றைத் தாங்கள் தானமாக வாங்கப் பாத்தியப்பட்டிருப்பதாயும் தங்களுக்கே சமஸ்த ஜாதியாருந் தானங்கொடுக்கவேண்டுமெனவும் விதித்தனர். (பிராமணர் தானம் வாங்குவதைமட்டும் நாம் தினந்தோறுங் கண்டுங்கேட்டும் வருவதேயன்றி, அவர்கள் தானங் கொடுப்பதைக் கண்டதுங் கேட்டதுமில்லையே!) க்ஷத்திரியர் பிராமணருக்குத் திரண்ட திரவியமளித்து வேதமோதவும், வேள்விசெய்யவுங் கற்றுக்கொள்ளவேண்டுமெனவும், தம்மவருக்கே தானங்கொடுக்கவேண்டுமெனவும் தம்மவருக்கே ஏதுந் தீங்கு வாராவண்ணங் காக்கவேண்டுமெனவும் பிராமணஸ்திரீகளை மட்டும் விரும்பியிருக்க வேண்டுமெனவும் ஏற்படுத்தினர். வைசியர் க்ஷத்திரிய

ரினும் திரவியக் குறைவுள்ளவர்களானதனால் வேள்விசெய்வதை இவர்களுக்கு நிவர்த்தித்து இவர்களும் பிராமணருக்குத் திரவியமளித்து வேதமோதக் கற்றுக்கொள்ள வேண்டுமெனவும், தம்மவருக்கே தானங்கொடுக்க வேண்டுமெனவும், பசுவைக்காப்பாற்றி அதன்பாலைப் பிராமணருக்குத் தானமாக அளித்துத் தாங்கள் ஆடு எருமை இவற்றின் பாலை உண்ணவேண்டுமெனவும், வியாபாரத்தால் கிடைக்கும் பொன் இரத்தினவகைகளைப் பிராமணருக்குச் சமர்ப்பித்துத் தாங்கள் தாழ்ந்தனவற்றை எடுத்துக்கொள்ளவேண்டுமெனவும், க்ஷத்திரியர் முதலியவர்களிடத்தினின்று நெருக்கி வட்டிபெற வேண்டுமெனவும், வேளாண்மையால் கிடைக்கும் நெல் கோதுமை முதலிய உயர்ந்தனவற்றைப் பிராமணருக்குத்தானமாக அளித்துத் தாங்கள் கேழ்வரகுமுதலிய தாழ்ந்தனவற்றை உண்ண வேண்டுமெனவு மேற்படுத்தினர். சூத்திரர் வறியர்களானதனால் இவர்கள் தங்களுக்கு உயர்ந்த குலத்தாராகிய மூவினத்தோருக்குரிய எக்கிரியையும் புரியலாகாதெனவும், மூவினத்தோருக்கும் அடிமைத்தொழில் புரியவேண்டுமெனவும்; முக்கியமாகப் பிராமணருக்கே அடிமைத்தொழில் செய்யவேண்டுமெனவும் ஏற்படுத்தினர். கலியுக தரும நூலாசிரியராகிய பராசரரென்பவர் கிரேதாயுகத்தின் தவமே சிறந்ததென்றும், துவாபரயுகத்தில் வேள்வி உயர்ந்ததென்றும், கலியுகத்தில் தானமே சிறந்ததென்றும், அப்படிச் செய்யுந் தானம் சூத்திரருக்குச்செய்தால் செய்ததத்தனைபலனும், வைசியருக்குச் செய்தால் இருமடங்கு பலனும், க்ஷத்திரியருக்குச் செய்தால் மூவத்தனை பலனும், பிராமணருக்குச் செய்தால் ஆறத்தனை பலனுங் கிடைக்குமென்றேற்படுத்தினர். [மநுநூல்-காலத்தின் கணக்கை யுணர்த்தல். 92-"புருஷன் தேகமே பரிசுத்தம். அதில் நாபிக்குமேல் அதிக பரிசுத்தம். ஆகையால், அந்த பிரம்மாவின் முகம் மிகவும் பரிசுத்தமாக இருக்கிறது. பிராமணன் அந்த பிரம்மாவின் முகத்திற் பிறந்ததால் பிராமணன் நியாயமாக உயர்ந்திருக்கின்றான்." 87 "அந்த பிரம்மாவானவர் இந்த உலகத்தைக் காப்பாற்றுவதற்காகத் தன் முகம்-தோள்-தொடை-பாதம் இவற்றினின்றுமுண்டான பிரம்ம-க்ஷத்திரிய-வைசிய-சூத்திர வருணத்தருக்கு இம்மை மறுமைக்கும் உபயோகமான கருமங்களைத் தனித்தனியாக வகுத்தன."

இதன்பின் இவர்கள் தாங்கள் தங்கள் முன்னோரால் குடியேறலாகாதென்று தடுக்கப்பட்டிருந்த தண்டகாரண்யமெனும் விந்தியமலையின் தென்பாகத்திலும் குடியேற ஆரம்பித்து, எவரெவருக்கு எந்தெந்த மாகாணம் அல்லது கிராமங்கள் அனுகூலித்தனவோ அவரவர் அந்தந்த மாகாணம் அல்லது கிராமத்தில் குடிபுகுந்தனர். மநுநூல், 2-வது அத்தியாயம் 21 [இமோத்பர்வதத்திற்கும் விந்திய பர்வதத்திற்கும் நடுவாயும், ஸரஸ்வதி நதிமறைந்த விசனச தேசத்திற்குக் கிழக்காயும், பிரயாகைக்கு மேற்காயும் இருக்கிற இடமானது மத்திய தேசமென்று சொல்லப்படுகிறது. 22—கிழக்கு சமுத்திரந்தொடங்கி மேற்கு சமுத்திரம்வரையில் முன்சொன்ன மலைகளின் நடுப்பிரதேசமானது சாதுக்களாகிய பிராமணர் வசிக்கிற ஆரியவர்த்த தேசமென்று சொல்லப்படுகின்றது. எவரெவர் எந்தெந்த மாகாணம் அல்லது கிராமத்தில் குடி புகுந்தனரோ அந்தந்த கூட்டத்தாருக்கு அந்தந்த மாகாணம் அல்லது கிராமத்தின் பெயரே இந்நாள் வரையில் வழங்கிவருகின்றது. வட இந்திய பிராமணருக்கு காரசிபரெனவும், தென்னிந்திய பிராமணருக்குத் திராவிடர் எனவும் பெயராம். காரசிப பிராமணர்-கேனோஜியர், ஸாரஸ்வாத், கோராட, அட்கல, மதில என ஐவகைப் பிரிவினராகவும், திராவிட பிராமணர்-ஆந்த்ரர், மராட்டியர், திராவிடர், கர்னடகர், கூர்ச்சிரர் எனும் ஐவகைப் பிரிவினராகவும், இவர்களில் ஒவ்வொரு பிரிவினரும் அனந்தம் உட்பிரிவினராகவும் பிரிந்திருப்பதுமன்றி, அநேகங் கோத்திரத்தாராகவும் பிரிந்திருக்கின்றனர். இவர்கள் கோத்திரங்களை வழுவற எடுத்துரைப்பது சாத்தியமல்ல. இவர்கள் கோத்திரங்களைப்பற்றிச் சிலர் 155 என்றும், சிலர் 39-16-9-19 என்றும் மொழிகின்றனர். ஆனால், இவர்கள் பூர்வ கோத்திரங்கள் சிறந்த ஏழு இருஷிகளின் பெயர்களால் வழங்கிவருகின்றன. இவர்கள் கோத்திரங்களாவன :— கசிப, பாரத்வாஜ, வசிஷ்ட, கௌதம, விஸ்வாமித்திர, ஆத்ரிய, பத்ராயண, அகஸ்திய, ஜமதக்கினி, சுவாதாத்ரகாபிச, கௌசிக, ஸ்ரீவாட்ச, பார்க்கவ, பராசர, கான்வத்த, மித்திரிய என்பவையன்றி இன்னும் அநேக இருஷிகளின் பெயர்களைக் கோத்திரங்களாக வைத்துப் பிரிந்திருக்கின்றனர். இதன்றி வைஷ்ணவ பிராமணர் தங்களில் தாங்களே வடகலை தென்கலை எனும் பிரிவினையை உண்-

டாக்கிக்கொண்டு பிரிந்திருக்கின்றனர். இவ்வாறே மற்ற ஜாதியாருக்குள்ளும் வலங்கை இடங்கை எனும் பிரிவினையை உண்டாக்கி ஒருவரையொருவர் பகைக்கச்செய்து, பொய்யை மெய்யென்றும், மெய்யைப்பொய்யென்றும் பகருந் தங்கள் கொள்கையை இத்தேசமெங்கும் வியாபிக்கும்படிச்செய்தபின் தங்களுக்கு ஐக்கியப்பட்டிருந்த அந்த க்ஷத்திரியரையே அழிக்கப் பிராமணர் அனந்த பிரயத்தனங்கள் செய்ததனால், இத்தேசபூர்வ பிரஜைகளின் உள்ளம் விக்கினத்தால் நிறைந்து, வாடிவதங்கி இருப்பதைக்கண்ட இராஜ இராஜாக்கள் கடுஞ்சினமடைந்து. அவர்களை யடக்க பல முயற்சிகள் செய்ததனால் விரோதம் முதிர்ந்து, இவர்களுக்கு இடையில் பெரும்பிளப்புண்டாய், அன்பின் கட்டுவிட்டு ஐக்கிய சம்பந்தத்தின் ஆதாரம் அவிழ்ந்தது. இந்தியாவில் அப்போதப்போது ஆண்ட அதிபதிகள் இவ்விடத்திய நிஷ்கலக ஸ்திதியை நிலைநிறுத்த வல்லவர்களல்லாது போனார்கள். க்ஷத்திரிய வைசிய சூத்திரருக்கும் ஆரியருக்கும் பிணக்கு எப்பொழுதும் பற்றறாது நடந்து வந்தது மெலியோர் வலியோருக்குப்பலியானார்கள். வலியாராகிய ஆரியர் தம்ஆசைப் பெருக்கத்திற்கும் பக்ஷணமானார்கள். ஆகவே மகத்தான இராமன் முதலிய இராஜ வம்சத்தார் ஆரியருக்கு அனுகூலமாகச் சாய்ந்து, அரசுரிமைக்குரிய நெறிதவறி அபரிமிதமாகப் பெருக்கிய உதிரப்பிரவாகத்தால் பலங்குன்றி இந்து பிரஜைகளுக்குள் நேர்ந்த பெரும்பிணக்கால் ஐக்கிய சம்மந்தம் நிலையற்று அசைவுற்றது. கீழ்கண்டமாகிய இந்தியாவின் சீர்தேற்றத்திற்கு இவ்வாறு இடையூறு நேர்ந்ததனால், இமயமலைத் தொடர்களுக்கு வடதிசையில் சஞ்சரிக்கும் மிலேச்சராகிய மகம்மதிய கொடுங்கோன்மன்னர் இப்பரியாய தீபத்தின்மீது படையெடுத்துவந்து இதன் அநேக பாகங்களைவென்று இத்தேசத்தவர்களைக் கீழ்ப்படுத்தி வதைத்து, உலர்த்திக்கருக்கி உதிரப்பிரவாகத்தைப் பெருக்க அனுகூலித்தது. பிராமணர் தங்களால் கல்வியாதி நாகரீக ஒழுக்கங்களினின்றும், சுகாதார ஏதுக்களினின்றுந் தடுக்கப்பட்டிருக்கும் இத்தேசத்தவர்களின் க்ஷேமலாபங்களை நாடாது தங்கள் க்ஷேமலாபங்களையே நாடி, அம்மூர்க்கரிடத்தில் சேர்ந்து முகமாட்டமாடி. மிகு இழிவான செய்கையால் அவர்கள் தயவை

பெற்று, உயர்பதவியி லமர்ந்து, மகம்மதியர் இத்தேச பூர்வ குடிகளுக்குச்செய்துவரும் பெருஞ் சங்காரத்திற்கு மனஸ்தாபப்பட்டுத் தங்கள் கொரூரச்செய்கையை அவ்வளவோடு நிறுத்திவையாது இவர்களும் வதைத்து வந்ததனல் வயோதிகத்தை யடைந்த இத்தேசமுதியோரும், இளையோரும், இறைவரும், வறியோரும், கற்றோரும், கல்லாதவரும், ஆடவருமாகிய யாவரும் இவர்களால் தங்களுக்கு இடையறாது நேர்ந்த பெரும் உபத்திரவங்களைச் சகிக்கலாற்றாது எண்ணி எண்ணி துக்கித்துக் கண்ணருவிபெருகப் புலம்பி, என்று தாங்கள் இந்தவஞ்சகரின் துரோகச்சிந்தையினின்று விடுவிக்கப்படுவோமென்று எண்ணமிட்டிருந்த ஏக்கம் முதிர்ந்து வருகிற காலத்தில், இந்தியாவின் அதி தொலைவில் வேறுபாஷைபேசி வேறுமதத்தை அனுசரித்து வேறு தேசாசாரங்களைச் சார்ந்தொழுகும் மற்றொரு நூதன தேசத்தாராகிய மகாபிருத்தானியரின் சிங்காசனத்தைப் பிராமணர் முதல் பறையர் ஈறாக உள்ள சமஸ்தஜாதியாரும், பெரியோர் முதல் சிறியோர்வரையிலுள்ள யாவருஞ் சூழ்ந்து, சுகத்தைப்பெருக்கி, செல்வத்தை விர்த்திசெய்து, சமுதாயக்ஷேமத்தை முதிர்வித்து, அச்சிங்காசன நிழலில் ஓதுங்கி சுயாதீனமெனும் விருதுக்கொடியைக் கரத்திலேந்தி ஏக்கமற்று, அச்சமற்றிருக்கிறார்கள். விவேகிகளாகிய லௌகிக சங்கத்தார் ஆரியரால் உணர்த்தப்படும் வருணபேதத்தோடு பகைத்து, எதிர்த்து, அதன்வலிமையைக்குறைத்து, பிராமணமாய்கையில் அகப்பட்டு வாடி வதங்கி அழுங்கிக்கிடக்கும் சூத்திரர் முதலிய வகுப்பினருக்குத் தேறுதலையூட்டத் தங்கள் பத்திரிகைகளில் "வஞ்ச நெஞ்சினராகிய பிராமணரை நீணிலத்து மாந்தர்காண்க" என விளக்கத்தீட்டி வருவதனல் இத்தேசத்திற்பிரிவினையையும் இழிவையும் காட்டிய மநுவினது அசப்பிய வாக்கியங்களில் அனந்தம் மாறியும், பிராமணரிடத்தில் முன்னிருந்தமதிப்பு சிறிது சிறிதாக அற்றும், சூத்திரர்முன்போல் இழிகுலத்தாராக எண்ணப்படாமலும், வருணபேதம்சீக்கிரத்தில் அழிந்து நாசமடைவதற்கு முற்சின்னமாக அந்நாளிற்கண்டவண்ணமே இராது ஒவ்வொரு வகுப்பும் அனந்தம் உட்பிரிவாகப் பிரிந்தும், அவ்வருணபேதந் தன்னைச் சாராத ஜனங்கள் உண்டாய்க்கொண்டும் வருவதுமன்றி

அவ் வளவேலந்திகளுடைய மேன்மையும், மும்முரமும் அடங்கி அவர்கள் கையிலிருந்த தீ அவிந்து, அவர்கள் வாழ்த்து தலுக்குப் பிரியப்படுவாரும், சாபத்திற்குப் பயப்படுவாரும் இல்லா தொழிந்து வருகிற இப்பத்தொன்பதாம் நூற்றுண்டின் இறுதியில் அவர்களால் கற்பிக்கப்பட்டு ஓர் இயல்பினையுடையதாய், நிலைபெற்றுப் பூரணசந்திரனைப்போல் பிரகாசித்துக்கொண்டிருந்த அசற்சமயமாகிய பிராமண சமயமும், வருணபேதமும் சென்னை லௌகிக சங்கத்தாரால் பலவாற்றானுங் கண்டிக்கப்பட்டு, வரவர வலியிழந்து, ஒளிமழுங்கி இருண்டுவருகின்றன.

சூத்திரர் தீண்டின குளத்து ஜலத்தை ஒருங்கே இறைத்து அதில் ஜனிக்கும் ஊற்று நீரை எடுத்துப் பானஞ்செய்வது மிகு வருத்தமானதனல் அது தீட்டல்லவெனவும், முகந்துவைத்த கடத்தின் ஜலத்தை அச்சூத்திரர் தீண்டின் அதைக் கொட்டிவிட்டு மீண்டும் சுலபத்தில் முகந்துகொள்ளக்கூடுமாதலால், அதைமாத்திரந் தீட்டெனவும் பிராமணர் கூறுகின்றனர். ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்.

பிரம்மாவின் முகத்தினின்று உதித்த பிராமணர்தாம் கருதிய விடத்திற்குச்செல்ல இருப்புப்பாதை முதலிய ஸ்தானங்களில் சீட்டு (டிக்கெட்) வாங்குங் காலையில் அங்ஙனமே செல்லக் கருதிவந்திருக்கும் பறையர், சக்கிலியர் முதலிய ஏனைய வருணத்தவருடன் ஒன்று சேர்ந்து உட்கார்ந்தும், ஒருவரையொருவர் நெருக்க நெடுங்குண்டு ஒருவர்மீ தொருவர் விழுந்தும், ஒருவரது சுவாசத்தை மற்றொருவர் ஆக்கிராணித்தும் கிரமத்துடன் விரைந்து டிக்கெட்டு வாங்கி வண்டியின்மீதுட்கார்ந்தபின் அப்பிராமணர் தம் பக்கம் உட்கார்ந்துள்ள அப்பறையாதி வருணத்தவரை நோக்கி "அடா ஈனஜாதிப்பயலே விழாதேயடா! தொடாதேயடா" எனத் தமது ஜாதியினை மேம்படுத்திக்கொள்வதை நாம் பன்முறையும் பார்த்து வருகிறோமே. ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்.

பிராமணரில் பெரும்பான்மையோர் தாம் ஸ்நான செய்தபின் அங்ஙனம் ஸ்நானஞ் செய்யாதிருக்கும் தம்பி

வரையே தீண்டலாகாதெனவும், ஒருகால் தீண்டின் மீண்டும் ஸ்நானஞ் செய்யவேண்டுமெனவும், அவ்வண்ணஞ் செய்யாவிடின் தீட்டெனவும் ஏற்படுத்தி ஒழுகுமவர்களே எவர்களினும் இழிந்தோராகிய விலைமாதர் மனைகளுக்குச் சென்று ஸ்நானஞ்செய்யாது அங்குபோஜனம் அருந்துவதும், அக்கீழ் மக்களுடன் சுகித்திருத்தலும் தீட்டல்லவென எண்ணுகின்றனர் ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்.

வண்ணான் வஸ்திரங்களைச் சலவை செய்து கஞ்சிட்டுத் தமது மனைகளுக்குக் கொண்டுவந்தபின் அவ்வண்ணானை மீண்டும் அவற்றைத் தீண்டுவனேல் தீட்டாகிறதாம். ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்.

துரைத்தன வைத்திய சாலைகளில் பறையரினுங் கடையரெனப் பகரும் தோட்டிகள் கொண்டுவந்த ஜலத்தில் மிசிரித்துப் பண்படுத்திக் கொடுக்கும் ஔஷதத்தைப் பானஞ்செய்வது அநாசாரமல்லவாம். அவன் கையால் சுத்த ஜலம் வாங்குவது மாத்திரம். அநாசாரமாம். ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்.

பாகஞ்செய்யும் மட்பாத்திரங்கள் மிகவும் அற்பக்கிரயமுடைமையினால் சூத்திரர் பார்ப்பதனாலேயே அவை தீட்டாயினவெனமதித்து அம்மட்பாத்திரங்களைத் தகர்த்து விடவேண்டுமாம் அம்மட்பாத்திரங்களினும் விலை மிகுந்த செப்புபித்தளை பாத்திரங்களோ அச்சூத்திரர் தீண்டத் தீட்டாயினும் அவற்றைமாத்திரம் தகர்க்காது புளி சாம்பாதி வஸ்துக்களால் தேய்த்து அலம்புவதே போதுமானதாம். அவ்விலையினும் மிகுந்த வெள்ளிபாத்திரங்கள் சூத்திரரால் தீண்டப்படினும் புளிசாம்பராதிகளால் தேய்க்கின் தேய்ந்து நஷ்டமாகுமெனக் கருதி சுத்தஜலத்தினால் சுத்தி செய்தலேபோதுமானதெனவும், அதனினும் விலையுயர்ந்த பொன் இரத்தினாபரணங்கள் ஜலம்படுமாயின் அவற்றின் மெருகு போய்விடுமென எண்ணி அவற்றிற்குத் தீட்டே இல்லை எனவும், வீதிகளிலும், வர்த்தகசாலைகளிலும், உத்தியோகசாலைகளிலும் ஜலம் [illegible] சுத்தஞ்செய்து வாங்கவேலாததாக இருக்கும் ரூபாய் அணா [illegible]சாக்களுக்கும் ஜலம்பட்ட அ[illegible]மே பயன்படா தழிந்து

போகும், (மட்பாத்திரங்களினும் அற்பக் கிரயமுடைய) காகிதத்தினால் அமைந்துள்ள நோட்டுகளுக்கும் தீட்டே இல்லையாம். ஆசாரம் அல்லது தீட்டென்பது இதுதான்

இங்கிலாந்தினின்று செய்துவரும் மீன் எண்ணெயையும் பர்ரோஸ், பிரான்ஸ் முதலியவர்கள் மாட்டின் மாமிசத்தால் செய்து அனுப்பும் பானங்களையும், கோழி முட்டையைச் சேர்த்து செய்தனுப்பும் தின் பண்டங்களையும் பிராந்தி முதலிய இலாகிரி வஸ்துக்களையும் கொஞ்சமேனும் நெஞ்சு அஞ்சாது அருந்தும் இவர்கள் இத்தேசத்தில் கொல்லா விரதத்தை நிலைநாட்டியவர்களெனத் தம்மைத்தாமே புகழ்ந்துகொண்டு தம்மை நன்கு மதிக்கும்படிச் செய்துகொள்பவராதிய ஒழுக்கத்தைப் பாருங்கள்! இவ்வகுப்பினரைப் பின்பற்ற உங்கள் உள்ளம் உடன்பட்டதெப்படி?

ஒருஜாதி ஸ்திரீயுடன் மற்றொருஜாதி புருஷன்சேரின் அவ்விருபாலாருக்கும் உதிக்கு மக்கள் சூத்திரரினுங்கடையரான சங்கராஜாதியினராவரெனவும், அச்சங்கராஜாதி மரபினரில் உதிக்கும் பெண்சந்ததியார்களும், சூத்திர ஸ்திரீகளும் ஏழு தலைமுறை பரியந்தம் பிராமணருடன் சையோகிக்கச் சையோகிக்க (பொன்னைப் புடம் போடப்போட அதன் மாற்று உயர்வதுபோல) அவர்களது இழிவு நிவாரணமாய் பிராமணராகின்றனரெனவும் கூறும் தீச்செய்கையுடைய இப்பிராமணரைப் பின்பற்றியொழுக உங்களது மனம் துணிந்ததெவ்வாறு?

துரைத்தனத்தார் நம்மிடம் நிலவரி, ஜலவரி. தீபவரி என்று வாங்குவதுபோல, பிராமணர் நம்மிடத்தில் விவாகவரி, சோபனவரி, சீமந்தவரி, புண்ணியாவசன மென்னும் பிரசவித்தவரி, நாமகரணவரி, வித்தியாப்பியாசவரி, மரணவரி, கருமாந்தவரி அமாவாசை தர்ப்பணமென்னும் மாதாந்தவரி, ஸ்ராத்தமென்னும் வருடாந்த வரிகளுடன் தீபாவளிவரி, தைமாதவரி, ஆடிமாதவரி, புதுவருடவரி, நோன்புவரி, நவராத்திரி பூசைவரி, விநாயகசதுர்த்திவரி, கிரகப்பிரவேசவரி, ஆலயங்களில் விக்கிரகங்களின் அபிஷேகவரி, அர்ச்சனைவரி, ஆராதனைவரி, விக்கிரகங்களை அலங்கரித்து வீதிகள்தோறும் புஜங்களில் சுமந்து திரிந்து வாங்கும்வரி,

221579

தின் சேயனவரி என்றிப்படி அளவிறந்த வரிகளையும் வாங்குகின்றனரே! துரைத்தனத்தார் நம்மிடம் வாங்கும் குடி இறைக்கு பிரதியாகக் கல்விச்சாலைகள், நியாயஸ்தலங்கள், வைத்தியசாலைகள் முதலியவற்றை ஏற்படுத்தியிருப்பதுமன்றி, மாந்தருக்குத் தீங்கு செய்யும் சர்ப்பம், புலி, காடை முதலிய துஷ்ட பிராணிகளைச் சங்கரித்தும், அடர்ந்த வனங்களையழித்தும், நவீன ஆரண்யங்களைப் புதுப்பித்தும், கால்வாய்கள் வெட்டி ஜலமில்லாதவிடங்களில் ஜலங் கொண்டுவந்துவிட்டும் அனந்த நன்மைகளைச் செய்து வருகின்றனரே. பிராமணர் நம்மிடத்தில் பெற்றுக்கொள்ளும் எண்ணிறந்த வரிகளுக்குப் பிரதியாக ஏதேனும் ஒரு நன்மையாவது செய்திருக்கின்றனரா? இல்லையே! நமது செல்வத்தை இவ்வாறு கிரகித்து நமக்கு இடறையே சதாகாலமும் விளைத்துவரும் பிராமணரால் யாதொரு குறையும் நேராதென்று அச்சமற்றிருக்கின்றீர்களே! இஃதென்ன ஆச்சரியத்தினும் ஆச்சரியம்! கபடும், சூதும், கெடுமதியும் நிறைந்துள்ள இவ்வகுப்பினர் பந்தித்தபந்தனைக்குட்பட்டு அழியாதிருக்க முயலுங்கள். முயலுங்கள்.

பிராமணர் மன்னர்களையடுத்து எவ்வாறு அவர்கள் பொருளைக்கிரகித்தனரோ அவ்வாறே சூத்திர தனவான்களையடுத்து அவர்களது மனம் எவ்வெவ்வற்றில் நாடுமோ அவ்வவ்வற்றிற்குத்தக்க சமயோசிதமான யுக்திசொல்லி அவ்வவற்றை நடப்பித்துத் தம்மிடத்து மிக்க அன்பை வருவித்து சூத்திரகுல மாயினை விருத்தி செய்விப்பவர்களைப்போல் நடித்து அவர்களது பொருளைக் கிரகித்து அக்குடும்பத்தாருக்கே தீராவசையை நிலைநாட்டி வருகின்றனர். எந்த தனவான்மனையும் அவர்களன்றி வீராது. மாதர் தங்கள் நாயகர்கள் எதேது மொழியினும் அவ்வனைத்தையும் நம்பி அவர்களுக்குக் கீழ்ப்படிவது அவர்களது இயற்கை. அதுபோல நீங்கள் பிராமணர் மிடற்றினின்று உதிக்கும் சித்திரப்பேச்சுகளை அவலமொழியெனக் கருதாது அமுதவாக்கெனக் கருதி இருக்கிறீர்களே; இதென்ன விபரீதம்!

[illegible]த்திலே வியாபகமாயிருக்கும் எக்தெந்த மாக்[illegible] [illegible]றதைக்[illegible] [illegible]கதுவோ அது எப்போதும் மாறாது [illegible]பாரம்பரியாக [illegible]தைப் பிரத்தியக்ஷமாகப்பார்த்துவருகி[illegible]